T. Veera Kumanda Vijaya Pillay

உ

கடவுள் துணை.

திருவள்ளுவநாயனாருளிச்செய்த

திருக்குறள்

மூலமும் - உரையும்.

திண்டிக்கல்

முத்துவீரப்பிள்ளை

அவர்கள் உத்தரவின்படி
மதுரை-புதுவை-சென்னை- இச்சங்கங்களில்
தமிழ்த்தலைமைப் புலமைநடாத்திய - களத்தூர்

வேதகிரி முதலியாரால்

பதவுரையும், கருத்துரையும், விசேடவுரையும், செய்து
பலவிலக்கணமேற்கோள் கொடுத்தபின்பு

மதுரை-ம-ள-ள-ஸிவில் சேஷன் கோர்ட்டு
ஹெட் ரையிட்டர்

முத்துக்கிருஷ்ணபிள்ளையவர்களால்

சிந்தாத்திரிப்பேட்டை
சண்முகவிலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டன.
இப்புத்தகம்

மேற்படி முதலியார் குமாரர்கள்

ஆறுமுகமுதலியாராலும்

கந்தசாமிமுதலியாராலும்,

நிறைவேற்றப்பட்டது.

சாதாரண௵ - பங்குனிமீ

1850



திருவளளுவநாயனார்

உ

கடவுள் துணை.

சாற்றுகவி

பெருங்கருணை - சோடசாவதானி மூத்
தழையைங்கார்வர்கள்பாடியது.

அணியார்கன்மணிவாகனயபோகன்கனயோக - *
னருண்மோனதிவிவேகன் - - - *
அதிகாரன்சயவீரன்மிகுதீரனெழின்மார - *
னடல்சேரனிதிகுபேரன் -
- *
திணிதேவனடிதாசன்விசுவாசன்பிரகாசன்
- *
நேசன்மகராசபோசன் -
- *
சீர்மேவுபிரதாபன்பார்மேவுமொருதீபன்
- *

சீலவநுகூலரூபன் - -
தணியாதகொடையாளன்வளாதோளன்வடிவாளன்
- *
*
சாந்தமிகுசற்குணாளன் - - *
தனிமுகவைநகர்வாழுமுத்துக்கிருஷ்ணேந்திர *
தாருமகபேருசிங்கம் - - *
மணிமகுடர்புகழ்துங்கம்வேதகிரிபுலவரால் - *
வண்குறட்குரைசெய்வித்தே - *
மண்டலமதித்திடவச்சிற்பதிப்பித்து *
மன்னுபுகழ்நாட்டினனே. - *

மதுரைமீனாட்சிசுந்தரே

ச்சுரர்கோயிலர்ச்சகர்

க

வீராசபட்டர்வர்களாலியற்றிய

தென்னனின்சமமானதிண்டிநகர்க்கதியினான் - *
செப்புகுலைசறுண்டதியினான் - *
திக்கெட்டிறுங்கீர்த்திசெறியுமிகுதூதியினான் - *
திரளானநவநீதியினான் - - *

சாற்று, கவி.

மன்னுமிகுதிருவினானுருவினானெங்குஞ்செல் - *
வாக்கினான்கிள்வாக்கினான் - - *
வாய்மையான்றூய்மையான்வாளினான்றோளினான் *
வாகையான்பொருளீகையான் - *
கன்னியர்கணமடலெழுதுபொற்பினான்கற்பினான் - *
கரியினான்வாம்பரியினான் - - *
கனத்தினானினத்தினான்கலையினானிலையினான் - *
கவிகையான்பொற்சிவிகையான் - - *
பன்னுதமிழ்முத்துவீரப்பதுரைகட்டளைப் - *
படிவேதகிரிநாவலன் -

*

பகர்குறட்குரைசெயமுத்துக்கிருஷ்ணேந்திரன்
பதிப்பித்துவிட்டனனலோ

*

*

புதுவை-தமிழ்ப்புல[illegible]
பொன்னுசாமிமுதலியாரவர்கள
ாற்செய்யப்பட்டது.

அணிதிகழுலகில்வள்ளுவர்குறட்பா
வனைத்தும்வீறிடவுயர்பரிமே

*

*

லழகர்முற்றந்தவுரைபுலவோர்க்கே
யன்றிமற்றோர்தமக்கியலாப்

*

*

பிணிப்புடைத்தாயிருத்தலின்யாரும்
பொருளுணர்ந்துய்ந்திடவெண்ணிப்

ஏடுடையுமையொன்றியற்றுகவென்னப்
பிறங்கியபுகழெலாமொருங்கே
நணியதாமெனவேயோருருக்கொடுவிந்
நாட்டினில்வந்திடுகுமுண
ஐவையிதினடிக்கன்றேத்துவீரப்ப
நரேந்திரனுரைத்தனறுகத்
திணிகொளுருங்கல்வித்திறனணிவிளங்கச்
செய்தனன்செய்ம்மலிகளத்தூர்ச்
செம்மலாம்வேதகிரியெனுமுரவோன்
செகமெலாமதித்திடவம்மா!

மதுரைவித்துவான்-
சுப்பராயபிள்ளையவர்கள்பாடியது.

வேதமுதலாகமபுராணசாத்திரமெலாம்

சாற்று கவி.

வீறுதென்முகவைவாழ்முத்துக்கிருஷ்ணேந்திர
விற்பனன் மனமகிழ்ந்தே
மாதவனகத்தியமுனிக்குநிகர்வேதகிரி
வாணன்திருக்குறட்கு
வகுத்தபதவுரையொடுகருத்துரைவிசேடவுரை
மண்டலந்தனில்வயங்கப்
போதவும்பொருளுதவிசெய்தச்சடிப்பித்துப்

பூமியோர்க்குதவிசெய்தான்.
பொழிகின்றமழையினிற்கெவர்கள்கைம்மாறு

புரிகிறவரிவ்வுலகிலே
பாதலந்தன்னிலும்மீதலந்தன்னிலும்

பகருமெத்தலந்தம்மிலும் -
பாவலன்காவலன்முத்துக்கிருஷ்ணேந்திரன்
பரிசுபோற்கண்டதிலையே -

\- *
\- *
\- *

பழையநல்லூர்- மங்கைப்பாகப்புல
வர்குமாரர்

சரவணப்பெருமாளபுலவர்
பாடியது

கன்னனவன்முன்னளிற்கொடுத்தானென்று
கட்டுரைத்தாரிவ்வுலகிற்கண்டோரில்லை

\- *
\- *

பன்னுமெழிலைந்தருவுங்கொடுக்குமென்றே -
பாவலர்கள்பகர்வரல்லாற்பார்த்தோரில்லை

*

※

பொன்னிகம்விளைந்தகலத்தூர்வாழ்சிங்கம்

புலமைசெறிவேதகிரிபுலவனுக்கு ※
மன்னன்முத்துவீரப்பன்பொருளைவாரி ※
மாருமலளித்துவரும்வளங்கண்டோமே. ※

சேதுபதியாதீனவித்துவான்

சுப்பிரமணியக்கவிராயர் பாடிய து

திக்கனைத்தும்புகழ்ந்தேத்துந்திண்டிநகர்த்தனிச்செங்கோல்... த்தும்வேந்தன்- முக்கனிநேர்மொழிமடவார்மடலெழுதருமுத்... ரப்பசிங்கம்- தக்கமறைத்திருக்குறட்குத்தெளிவுரையெழுவகை... தருவாயென்னப்- பக்குவமாவேதகிரிசெப்பமுத்துக் கிருபை... ள்பதிப்பித்தானே.........

விளம்பரம்.

☞ இப்புத்தகவுரை- தமிழ்ப்புலவர்- வேதகிரிமுதலியார் சொற்படிக்குஇவர்சிரேஷ்டபுத்திரன்,சுந்தரமுதலியாரால்எழுதப்பட்டது

இத்னடியிற் கண்டிருக்கிற புத்தகங்கள் வேண்டியவர்கள்சென்னப்பட்டினத்தைச்சேர்ந்த- சூளையில்- காளத்திமுதலியார்வீதியில்-மகூ-வது நெம்பர்வீட்டில், தமிழ்ப்புலவர் - வேதகிரிமுதலியாரிடத்தில்-வாங்

கிக்கொள்ளலாம்

இவராற் பதிக்கப்பட்ட புத்தகங்கள்.

விரிவானபெயரகராதி - விரிவானதொகையகராதி - விரிவான பதிஞோராவதுநிகண்டுரை - நைடதவுரை - நாலடியுரை - குறளுரை - பெரியபுராணவசனம் - திருவிளையாடற் புராணவசனம் - தொன்னூல்விளக்கவுரை - பேரகத்தியமூலமுமுரையும்.

இப்பொழு தச்சிற்பதிப்பிக்கிற புத்தகங்களாவன.

அரிச்சந்திரபுராணமூலமும்உரையும் - காசிகாண்டமூலம்.

இனிப்பதிப்பிக்கும்புத்தகங்களாவன.

உபதேசகாண்டம் - பிரமோத்திரகாண்டம்.

இப்பொழுதச்சிற்பதிப்பித்து முடிந்திருக்கிற-ஞானவாசிஷ்ட மூலமும் உரையும் - வேண்டியவர்கள் - சிந்தாத்திரிப்பேட்டையில் [illegible]பேர்- சாமிநாயகர்வீதியில்-௫௰௯-வது, நெம்பருடையவீட்டில் ஸ்தாபித்திருக்கும்- பிரபாகர அச்சுக்கூடத்துத் தலைவராகிய- ளா-ளா- ஸ்ரீ, சி-நாராயணசாமி முதலியாரவர்களிடத்தில் வாங்கிக் கொள்ளலாம்.

T. Veera Wiswanda Raja Pillay

தற்சிறப்புப்பாயிரம்.

முதலதிகாரம்- கடவுள்வாழ்த்து.

அஃதாவது-கவி தான்வழிபடுகடவுளையாயினும், எடுத்துக்கொ

ள்ளப்பட்ட பொருளுக்கு- எற்புடைக் கடவுளேயாயினும், வாழ்த்து தலாம். அவைகளுள்- இவ்வாழ்த்து எற்புடைக்கடவுளேயென்றறிக. எப்படியென்றால்- சத்துவ முதலாகிய முக்குணங்களாலே அறமுதல்மூன்றாகிய உறுதிப்பொருளுக்கு அக்குணங்களாலே மூவராகிய முதற்கடவுளோடு சம்பந்தம் உண்டா யிருக்கையால் அம்மூன்று பொருள்களேயும் சொல்லத்தொடங்கிய இவர்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாதலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும்பொதுப்படச் சொல்லினரென்று அறிக..*

அகர முதல வெழுத்தெல்லா மாதி...........................*
பகவன் முதற்றே யுலகு.......................................*

(இதனது பதப்பொருள்.) எழுத்தெல்லாம்- எழுத்துக்க ளெல்லாம்|—அகரமுதல- அகரமாகிய முதலையுடையன,—(அதுபோல)-உலகு-உலகம்-ஆதிபகவன்முதற்று- ஆதிபகவனாகிய முதலையுடைத்து. எ-று.) (கருத்துரை) எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாகவுடையன. அதுபோல உலகங் கடவுளே முதலாக வுடையது என்பதாம். ❋ஏகாரம்-தேற்றத்தில் வந்தது.— தமிழெழுத்துக்களுக்குமாத்திரமல்லாமல் வடவெழுத்துக்களுக்கும் முதலாதலேநோக்கி-எழுத்தெல்லாமென்றார்.—ஆதிபகவனென்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகைவட நூன்முடிபாதலின் இயல்பாயிற்று.—உலகென்றது-இங்கே உயிர்களின்மேலேநின்றது.—காணப்பட்ட உலகத்தை

க்கொண்டு காணப்படாத கடவுளுக்கு இருப்பைச்சொல்லவேண்டு தலின் ஆதிபகவன் முதற்றேயென்று உலகின்மேல் வைத்துச்சொல் வினர். அப்படிச்சொல்லினராயினும்உலகிற்குமுதல்ஆதிபகவனெ[illegible] பது கருத்தாகக்கொள்க.— † நாதமாத்திரையான இயல்பா[illegible] த்தலால் அகரத்திற்குத்தலைமையும், செயற்கை யறிவாலன்றி [illegible] கையறிவால் முழுதும் அறிதலால் ஆதிபகவனுக்குத் தலை[illegible] கொள்க.—தலைமைபற்றிவந்த அகரத்திற்கும்,ஆதிபகவனு[illegible] பிம்பப்பிரதி பிம்பபாவம் சொல்லுதலால் எடுத்துக்காட்[illegible] ணி) [இப்பாட்டால் முதற்கடவுளி னிருப்புச்சொல்லப்[illegible]]

† நாதம் உயிர் முயற்சியால் எழுகிற உதானவாயுவால் ஆவ[illegible] பி[illegible] பபாவம்ஓப்புமையால் பிம்பமும் பிரதிபிம்பமுமெனத்தோன்றல்.

[க]

(உ) முதல்-அறி-கடவுள்வாழ்த்து.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ........................*
னற்றா டொழா அரெனின்...*

(இ-ள்.) வாலறிவன்- மெய்யறிவினையுடையவனது—நற்றாள்-நல் லவடிகளை }தொழா அரெனின்-வணங்காராயின்- கற்றதனால்-யாவுங் கற்றதனால்— ஆய-உண்டாகிய-பயன்-பிரயோசனம்[-என்-யாது. எ று.) (கருத்துரை) மெய்யறிவுடைய கடவுளை வணங்காராகில் கற்ற தனாற் பயனில்லை என்பதாம். ❋ எவனென்னும் வினைப்பெயர் என் னென்றாய் இல்லையென்னும் பொருளைக்குறிப்பித்துநின்றது. கொ ல்-அசைநிலை. பிறவிப்பிணிக்கு மருந்தாகலின் நற்றாளென்றார். [ஆ கமவறிவுக்குப் பயன் அவனடிகளை வணங்கிப் பிறவியை அறுத்த லென்பது இதனாற் சொல்லப்பட்டது.] (உ)

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்........................*

நிலமிசை நீடுவாழ் வார்.............. .....

....*

(இ-ள்.) மலர்மிசை- (அன்பாகுநெஞ்சமாகிய) தாமரைமலரிடத்து—ஏகினான்-சென்றவனது- மாணடி - பெருமைபொருந்தியவடிகளை} சேர்ந்தார்-சேர்ந்தவர்)-நிலமிசை- எல்லாவுலகங்களுக்குமேலாகிய வுலகத்திலே— நீடுவாழ்வார் - அழிவில்லாமல் வாழ்வார். எ,று.) (கருத்துரை) கடவுளடிகளைச் சேர்ந்தவர்கள் மோட்சத்தில்வாழ்வார்கள் என்பதாம். ❋ மலர்போலுநெஞ்சை மலரென்றது உவமையாகுபெயர். அன்பினாலே நினைப்பவரது நெஞ்சில் அவர் நினைத்தவடிவோடு விரைந்துசெல்லுதலினாலே- ஏகினனென இறந்தகாலத்தாற் சொல்லினார். இது விரைவுபற்றி வந்தகால வழுவமைதி. சேர்தல்-இடைவிடாது நினைத்தல். (௩)

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்.......*

கியாண்டு மிடும்பை யில............... ....

.......*

(இ-ள்.) வேண்டுதல்- (யாதொருபொருளையும்) விரும்புதலும்- வேண்டாமை-வெறுத்தலும்- இலான்- இல்லாதவனது—அடி- அடிகளை} சேர்ந்தார்க்கு- சேர்ந்தவர்க்கு- யாண்டும்-எக்காலத்திலும்-இடும்பை-பிறவித்துன்பங்கள்|-இல-உண்டாவனவல்ல.எ,று.) (கருத்துரை) கடவுளடிகளைச் சேர்ந்தவர்களுக்குப் பிறவித்துன்பங்களில்லையாம் என்பதாம். ❋ பிறவித்துன்பங்களாவன - தன்னைப்பற்றிவருவதும், பிறவுயிரைப்பற்றிவருவதும் - தெய்வத்தைப்பற்றி வருவ

முதல்-அதிகாரம் கடவுள்வாழ்த்து. (௩)

தும் எனமூவகையால் வருகிற துன்பங்களாம். அடிசேர்ந்தார்க்கு உவ்விருப்பு வெறுப்புக்கள் இல்லாமையால் அவைகாரணமாகவரு கிற மூவகைத் துன்பங்களும் இல்லையாயின. (ச)

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்............ *
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.................... *

(இ-ள்.) இறைவன்-தலைவனது-பொருள்சேர்-மெய்மைசேர்ந்த-
புகழ்-கீர்த்தியை} புரிந்தார்மாட்டு-விரும்பினவரிடத்து-இருள்சேர் மயக்கத்தைபற்றிவருகிற- இருவினையும்- (நல்வினை தீவினை யென் று)யிரண்டுவினைகளும்|-சேரா-உண்டாகாவாம்.எ,று.) (கருத்துரை) கடவுளுடைய கீர்த்தியைவிரும்பினவரிடத்து நல்வினை தீவினையென் னுமிருவினைகளு மடையாவாம் என்பதாம். ❋ இப்படிப்பட்டதெ ன்று ஒருவராலும் சொல்லப்படாமையால் அஞ்ஞானத்தைஇருளெ ன்றும், நல்வினையும் பிறத்தற்கு ஏதுவாகலால் இருவினையும் சேரா வென்றும், சொல்லிரு° தலைமைக்குணங்க ளில்லாதவரா உடைய ரொன்றுநினைத்து அறிவிலார்சொல்லுகிற புகழ்பொருள் சேராதாக லின் அவைமுழுதுமுடைய தலைவனது புகழ்பொருள் சேர்புகழெ னப்பட்டது. புரிதல்-எப்பொழுதும் சொல்லுதல். (ரு)

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க.......*

நெறிநின்றார் நீடுவாழ் வார்.......................... *

(இ-ள்.) பொறிவாயில்- (மெய் வாய் கண் மூக்குச்செவியென்னு ம்) ஐம்பொறிகளை வழிகளாகவுடைய—ஐந்து- ஐந்தாசைகளையும்- அவித்தான்- அறுத்தவனது- பொய்தீர்- மெய்யான- ஒழுக்கநெறி- ஒழுக்கவழியிலே—நின்றார்- (வழுவாது)நின்றவர்|-நீடுவாழ்வார்-பி றப்பில்லாமல் எக்காலத்திலும் - ஒருதன்மையராய்வாழ்வார். எ-று.) (கருத்துரை) கடவுள்வழியிலேநின்றவர்கள் நீடூழிவாழ்வார்கள் என் பதாம். ❋ ஊறு-சுவை-ஒளி-நாற்றம்-ஓசை-எனப்புலன்கள் ஐந்தா கவின் அவற்றிலே செல்லுகிற ஆசையும் ஐந்தாயிற்று. ஐந்தவித்தா னது ஒழுக்கவழி அவனாற்சொல்லப்பட்ட வேதமார்க்கம். [இவை நான்குபாட்டாலும்- கடவுளை நினைத்தோரும், வாழ்த்தினோரும், அ வன்வழி நின்றோரும், மோக்ஷத்தைப் பெறுவரென்பது சொல்லப் பட்டது.] (சு)

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்.........*
மனக்கவலை மாற்ற லரிது.....................................

(௪) முதல்-அதி-கடவுள்வாழ்த்து.

(இ-ள்.) தனக்கு-தனக்கு-உவமையில்லாதான்- (ஒருவிதத்திலும்) நிகரில்லாதவனது - தாள்- அடிகளை} சேர்ந்தார்க்கல்லால்- சேர்ந்தவர்க்கல்லது—மனக்கவலை- நெஞ்சிலே தோன்றுகின்ற துன்பங்களை-மாற்றல்-நீக்குதல்|-அரிது-உண்டாகாது. எ,று.) (கருத்துரை) கடவுளுடைய திருவடியைச் சேராதவர்களுக்கு மனக்கவலை நீக்குதலில்லை என்பதாம். ❋ இங்கே அரிது இல்லையென்னும் பொருளில்வந்தது அடிகளைச்சேராதவர் பிறவிக்கு ஏதுவாகிய காமவெகுளி மயக்கங்களை நீக்கமாட்டாமையினாலே பிறந்தும் இறந்தும் அவற்றால்வருகிற துன்பங்களுள் அழுந்துவாரென்பதாம். (எ)

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்........ ❋
பிறவாழி நீந்த லரிது........................ ❋

(இ-ள்.) அறவாழியந்தணன்- தருமக்கடலாகிய கடவுளது-தாள்- அடியாகிய (மரக்கலத்தை)} சேர்ந்தார்க்கல்லால் - சேர்ந்தவர்க்கல்லாமல்- பிறவாழி- (அதனின்) வேறாகியகடல்களை} நீந்தல்-கடத்தல்| அரிது-கூடாது. எ,று.) (கருத்துரை) கடவுளடிகளைச் சேராதார்க்குப் பொருளும் இன்பமுமாகிய கடல்களைக்கடத்தல் கூடாது என்பதாம். ❋ அறம்பொரு ளின்பமென வுடனெண்ணப்பட்ட மூன்றுள் அறத்தைமுன் பிரித்ததனால் மற்றைப்பொருளும் இன்பமும் பிறவெனப்பட்டன. பலவேறுவகைப்பட்ட அறங்களெல்லாம் கடவுளுக்கு வடிவாகலின் அறவாழியந்தணனென்றார். அம்மரக்கலத்தைச் சேராதவர் கரைகாணாது அவற்றுள்ளே அழுந்துவாராகலின் நீந்தலரிதென்றார். தாட்புணையென்னாமையால் ஏகதேசவுருவகம்.

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான் .. ❋
றாளை வணங்காத் தலை.................. ❋

(இ-ள்.) கோளில்- (தத்தமக்கேற்றபுலன்களைக்) கொள்ளுகையில்லாத-பொறியின்- பொறிகள்போல்- எண்குணத்தான் - எண்வகைப்பட்ட குணங்களையுடையவனது —தாளை-

அடிகளை} வணங்காத்த
லை-மேத ாழாததலைகள்|-குணமிலவே -
பயன்படுதலுடையன வல்லவே யாம். எ-று.)
(கருத்துரை) கடவுள்பாதங்களை
வணங்காததலைகள் ப
யன்படாவாம் என்பதாம். ❋ எண்குணங்களாவன- தன்வயத்தனாத
ல்-தூயவுடம்பினனாதல்- இயற்கைபுணர்வினனாதல்- முற்றுமுணர்த
ல்-இயல்பாகவே பாசங்களி னீங்குதல்-பேரருளுடைமை-முடிவிலா
ற்றலுடைமை- வரம்பிலின்பமுடைமை-என்பனவாம். இவைசைவா

முதல்—அதிகாரம்—கடவுள்வாழ்த்து.

(கூ)

கமத்திற் சொல்லப்பட்டன. காணாதகண்முதலானவைபோல்வணங்
காததலைகள் பயனிலவெனத் தலைமேல்வைத்துச் சொல்லினும் இன
ம்பற்றிவாழ்த்தாத நாக்களும் அப்படியே பயனில்லா மென்பதுங்
கொள்க. [இவைமூன்றுபாட்டாலும் அவனை நினைத்தலும் வாழ்த்த
லும் வணங்கலும் செய்யாவிடத்தே உண்டாகிற குற்றஞ் சொல்லப்
பட்டது.] (க)

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்................................❋
றிறைவ னடிசேரா தார்...❋

(இ-ள்.) இறைவன் - தலைவனது - அடி- பாதமாகிய- (மரக்கலத்
தை)-(சேர்ந்தவர்)' பிறவிப்பெருங்கடல்-பிறவியாகியபெரியகடலை}
நீந்துவர்- கடப்பார். - சேராதார்- (அதனைச்)சேராதவர்-நீந்தார்-
கடக்கமாட்டார். எ-று.) (கருத்துரை) கடவுள்பாதங்களைச் சேர்ந்த
வர்கள் பிறவிக்கடலைக்கடப்பார்கள்.சேராதவர்கள்பிறவிக்கடலைக்க

டக்கமாட்டார்கள் என்பதாம். ❋ சேர்ந்தவரொன்பது வருவிக்கப்படுதலாற் சொல்லெச்சம். பிறவி ஒன்றுக்கொன்று காரணகாரிய சம்பந்தப்பட்டுக் கரையில்லாமல் வருதலால்- பிறவிப்பெருங்கடலென்

ருர் [கடவுளடிகளேயே நினைப்பவர்க்குப் பிறவி நீங்குதலும், உலகியல்பை நினைப்பவர்களுக்கு அது நீங்காமையும் ஆகியவிரண்டும் இதனால்நியமிக்கப்பட்டன.] (ய).

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

உ-ஆம், அதி-வான்சிறப்பு.

அஃதாவது கடவுளது ஆணையால் உலகமும், அதற்கு உறுதியாகிய அறம்பொருளின்பங்களும்,நடத்தற்கு ஏதுவாகிய மழையினது சிறப்பைச்சொல்லுதலாம் — அதிகாரமுறைமையும் இதனுல்விளங்கும்.

வானின் றுலகம் வழங்கி வருத லாற்...

....❋

றனமிழ்த மென்றுணரற் பாற்று...

.................❋

(இ-ள்.) வான்-மழையானது- நின்று- (நடுவேநீங்காது) நிற்க— உலகம்-உயிர்களானவை- வழங்கிவருதலான்- நிலைபெற்றுவருகையினுலே—தான்-(அம்மழை) தான்|-† அமிழ்தமென்று-(உயிர்களுக்

† அமிழ்தமென்பதற்கு மரணத்தை ஒழிப்பதென்பதுபொருள் அது அமிர்தமென்னும் வடமொழித்திரிந்தது.

கு) அமிர்தமென்று—உணரற்பாற்று - அறியப்படுந்தன்மையையுடைத்தாம். எ,று.) (கருத்து) மழையானது நீங்காமற் பெய்துதிற்கஉயிர்களானவை நிலைபெற்றுவருகையால் அம்மழையுயிர்களுக்கமிர்தம். என்பதாம். ❋ நிற்கவென்பது நின்றெனத்திரிந்தது- உயிர்கள் நிலைபெற்றுவருதலாவது - பிறப்பு நடுவேநீங்காமையால்- அவை எந்நாளும் உடம்போடுகாணப்பட்டுவருதல். அமிர்தமுண்டார் சாவாது நிலைபெறுதலின் உயிர்களை நிலைபெறச் செய்கிற மழையை அமிழ்தமென்றார். (௧)

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்......❋
துப்பாய தூஉ மழை..❋

(இ-ள்,) துப்பார்க்கு-உண்பவர்க்கு- துப்பாய- நன்மையாகிய-துப்பாக்கி-உணவுகளையுண்டாக்கி- துப்பார்க்கு-(அவ்வுணவுகளை)உண்பவருக்கு- துப்பாயதூஉம்- (தானும்) உணவாய்நிற்பதும்- மழை- மழை|- எ,று.) (கருத்து) உண்பவர்க்கு நன்மையாகிய உணவுகளையுண்டாக்கி அவ்வுணவை உண்பவர்க்குத் தானும் உணவாக நிற்பது மழை, என்பதாம். ❋ தானும் உணவாதலாவது- தண்ணீராயுண்ணப்படுதல்.—சிறப்புடையமனிதர்மேல் வைத்துச் சொல்லுதலால் மற்றையுயிர்களுக்கும்| இஃது ஒக்கும்.- இப்படி உயிர்களது பசிதாகங்களை நீக்குதலால் அவ்வுயிர்கள் வழங்கி வருதலும் உடையவாயின வென்பதாம். (௨)

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்............❋
துண்ணின் றுடற்றும் பசி.......................................❋

(இ-ள்.) விண்-மழையானது-நின்று-(பெய்யவேண்டுங்காலத்தில்) பெய்யாமல்-பொய்ப்பின்-பொய்க்குமாயின்-விரிநீர்-கடலாலேசூழப்பட்ட-வியனுலகத்துள்- பரந்தவுலகத்தினுள்-பசி-பசியானது|-நின்று-நிலைபெற்று-உடற்றும்-(உயிர்களை}) வருத்தும். எ,று.) (கருத்து) மழைபெய்யாது பொய்க்குமாகில் உலகிற்பசியானது உயிர்களைவருத்தும் என்பதாம். ❋ கடலுடைத்தாயினும் அதனாலே பயனில்லையென்றற்கு விரிநீர் வியனுலகத்தென்றார்.— உணவில்லாமையினாலே பசியால் உயிர்கள் இறக்குமென்பதாம். (ரு)

ஏரினுழாஅ ருழவர் புயலென்னும்............................*
வாரி வளங்குன்றிக் கால் ....*

உ-ஆம்- அதி,வான்சிறப்பு.

(எ)

(இ-ள்.) புயலென்னும்வாரி-மழையென்கிறவருவாய்-வளங்குன்றிக்கால்-(தன்) பயன்குறையின். உழவர்-பயிரிடுமாந்தர்கள்- ஏரின்-ஏரினால்- உழாஅர்- உழமாட்டார்கள். எ,று.) (கருத்து) மழைவளங்குறைந்தால் பயிர்செய்மாக்கள் ஏருழார் என்பதாம். ❋ குன்றியக்காலென்பது-குறைந்து நின்றது.-உணவில்லாமைக்குக்காரணஞ்சொல்லியபடி. (சு)

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே ....*
யெடுப்பதூஉ மெல்லா
மழை.............. . ... *

(இ-ள்.) கெடுப்பதூஉம் - (பூமியிடத்து வாழ்வாரைப்பெய்யாது நின்று) கெடுப்பதும்-கெட்டார்க்கு-(அவ்வாறு)கெட்டவர்க்கு-சார்வாய்-துணையாய்ப் (பெய்து)- மற்றாங்கே- முன்கெடுத்ததுபோல்- எடுப்பதூஉம்- எடுப்பதும்-எல்லாம்- (இவை) யெல்லாம்(வல்லது|) மழை- மழையாம். எ-று.) (கருத்து) கெடுப்பதுங்கெட்டவரைக்காப்பதுமழை என்பதாம். ❊ மற்று - வினைமாற்றில்வந்தது- கேடும் பெருக்கமும் பெறுதற்குரியவர் மனிதராதலால்- கெட்டார்க்கென்றார்.— எல்லாமென்றது - அம்மனிதர் முயற்சிவேறுபாடுகளால் கெடுத்த லெடுத்தல்கள் பலவாகுதலைநோக்கி.-வல்லதென்பது- † அவாய்நிலையால் வந்தது.-மழையினது வல்லமையைச் சொல்லியபடி. (ரு)

விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே........❊
பசும்புற் றலைகாண் பரிது ... . . .
....❊

(இ-ள்.) விசும்பின்- மேகத்தினின்றும்-துளி- துளிகள்- வீழினல்லால்- விழிற்காண்பதல்லது- மற்றாங்கே- வீழாதாயின் அப்பொழுதே-பசும்புற்றலை-பசும்புல்லினது தலையையும்-காண்பு-காணுதல்|- அரிது- அரிது. எ-று.) (கருத்து) மழைபெய்யாவிடில் புல்லின்தலையைக்காணுதலரிது என்பதாம். ❊ விசும்பு - ஆகுபெயர். —மற்று- வீழாதாயி னென்னும் வினைமாற்றில்வந்தது- தலையுமென்னும் இழிவுசிறப்பும்மை-விகாரத்தால்தொக்கது.— ஓரறிவுயிரும் இல்லாமற்போமென்பதாம். (சு)

நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி .... ❊
தானல்கா தாகி விடின்..................................❊

(இ-ள்.) நெடுங்கடலும் - நெடியகடலும்| —தன்னீர்மைகுன்று

† அவாய்நிலை ஒருசொல்மற்றொருசொல்லைக்கொள்ளுதற்கு அவாவிநிற்றல்.

ம்-தன்னியல்புகுறையும்.- எழிலிதான்- மேகந்தான்-தடிந்து-(அதனைக் குறைத்து- நல்காதாகிவிடின் - (அதனிடத்துப் பெய்யாதாகிவிடின். எ-து.) (கருத்து) மழைபொழியாவிட்டால் நெடியகடலும் வளங்குறையும் என்பதாம். ❁ உம்மை-உயர்வுசிறப்பு. தன்னியல்பு குறைதலாவது- நீர்வாழுமுயிர்கள் பிறவாமையும், மணிமுதலானவை உண்டாகாமையும், ஆம்.— இங்கேகுறைத்தலென்றது- முகத்தலை.-மழைக்குமுதலாகிய கடலுக்கும்-மழைவேண்டுமென்பதாம் [இவை எழுபாட்டாலும் உலகம் நடத்தற்கு மழை ஏதுவாதல்சொல்லப்பட்டது.] (௭)

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்..................... *
வறக்குமேல் வானோர்க்கு
மீண்டு.............................. *

(இ-ள்.) வானம்வறக்குமேல்-மழைபெய்யாதாகின்- வானோர்க்கும்-தேவர்களுக்கும்-ஈண்டு-இவ்வுலகலத்திலே-சிறப்பொடு-(மக்களாலே செய்யப்படுகிற) திருவிழாவுடனே-பூசனை- பூசையானது|-செல்லாது-நடவாது. எ-து.) (கருத்து) மழைபெய்யாவிட்டால் இவ்வுலகில் தேவர்களுக்கும் பூசைநடவாது என்பதாம். ❁ உம்மை- உயர்வுசிறப்பு.— விழாவோடு கூடிய பூசையெனலால் - செல்லாதென்று ஒருமையாகச் சொன்னார்.- பூசையிலேதாழ்வுதீரச் செய்யப்படுவதுவிழாவாதலின் இதனைமுன்வைத்தார். (௮)

தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்..................... *
வானம் வழங்கா தெனின்..................... *

(இ-ள்.) வானம்-மழை-வழங்காதெனின்-பெய்யாதாகின்-வியனு
லகம்-விரிந்தவுலகத்திலே- தானந்தவமிரண்டும்-தானமுந் தவமுமா
கியவிரண்டறமும்|-தங்கா- உளவாகாவாம். எ-று.) (கருத்து) மழை
பொழியாவிடி னுலகத்தில் தருமமுந் தானமுண்டாகாவாம் என்ப
தாம். ❊ தானமாவது - தருமவழியால்வந்த பொருள்களைப்பெரி
யோர்க்குமகிழ்ச்சியோடுகொடுப்பது. தவமாவது மனம் பொறிவ
ழிபோகாமல் நிற்கும்பொருட்டு விரதங்களால் உண்டிசுருக்கல் மு
தலானவை. மிகுதிபற்றி- தானம் இல்லறத்தின்மேலும், தவம்- துற
வறத்தின்மேலும், நின்றன. (௯)

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்...... .... ❋
வானின் றமையா தொழுக்கு........................❋

(இ-ள்.) யார்யார்க்கும்-எவ்வகைமேன்பாட்டோர்க்கும்-நீர்-நீரை

உ-ஆம்-அதி-வான்சிறப்பு.

(௯)

இன்று-இல்லாமல்-உலகு-உலகியலானது-அமையாதெனின்-பொரு
ந்தாதாயின்-ஒழுக்கு-(அந்நீரினது நடுவேநீங்காத (வொழுக்கமும்|
வான்-மழையை-இன்று-இல்லாமல்-அமையாது- பொருந்தாது. எ-
று.) (கருத்து) எவ்வகை மேன்மையுடையோர்க்கும் நீரையல்லாம
லுலகியலானது நடவாது அதுபோல மழையையல்லாமல் நீரொ
ழுக்கங்கிடையாது என்பதாம். ❊ இம்மையிலே அநுபவிக்கப் படு
வனவாதலிற் பொருளின்பங்களை யுலகியலென்றார். நடுவேநீங்காத
வொழுக்கமாவது-எக்காலங்களிலும், எவ்விடங்களிலும், நீருண்டா
யிருத்தல். நீரினாலேபொருளின்பங்கள் பொருந்துதல்போல்-மழை
யினாலே அந்நீரொழுக்கம் பொருந்துதல், எல்லாராலும் தெளியப்
படுமென்பதைக் காட்டுதற்கு நீரின்றமையா துலகெனினென்றார்.

இவைமூன்றுபாட்டாலும் அறம்பொருளின்பங்கள் நடத்தற்கு மழை ஏதுவாதல் சொல்லப்பட்டது. (௰)

௩-ஆம்-அதி-நீத்தார் பெருமை.

அஃதாவது முற்றத்துறந்த முனிவரது பெருமையைச் சொல்லுதலாம். அவ்வறமுதலாகிய பொருள்களை உலகத்துக்கு உள்ளவாறுஅறிவிப்பவர் அவராதலால் இது வான்சிறப்பின்பின் வைக்கப்பட்டது.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை
விழுப்பத்து..................✱ ✓ வேண்டும்
பனுவற் றுணிவு.... .... ✱

(இ-ள்.) பனுவல்-நூல்களது- துணிவு-நிச்சயமானது|—ஒழுக்கத்து- (தமக்குரிய) வொழுக்கத்திலேநின்று- நீத்தார்- துறந்தவரது பெருமை-மகிமையை}—விழுப்பத்து-மேலானபலபொருள்களுள்ளும்-வேண்டும்-(இதுவேமேலானதென்று) விரும்பும். எ-று.) (கருத்து) நூல்களதுநிச்சயமானது துறந்தவர்மகிமையை மேலானதென்றுவிரும்பும் என்பதாம். ❋ தமக்குரிய வொழுக்கத்திலேநின்று துறத்தலாவது- தங்கள்தங்கள் வருணாசிரமங்களுக்கு உரிய ஒழுக்கங்கள் தப்பாமல் நடக்கப் புண்ணியம்வளரும், அதுவளரப் பாவம் தேயும், அதுதேய அறியாமைநீங்கும், அதுநீங்க இதுநித்தியம்இது அநித்தியம் என்கிறபகுத்தறிவும்- நிலையில்லாத இம்மைமறுமையின்பங்களில் வெறுப்பும் - பிறவித்துன்பங்களும் தோன்றும், அ

-வைதோன்ற மோக்ஷத்தில் ஆசைஉண்டாம், அது உண்டாகப்பிறவி க்குக்காரணமாகிய வீண்முயற்சிகளெல்லாம் நீங்கி மோக்ஷத்துக்கு க்காரணமாகிய யோகமுயற்சி உண்டாம், அது உண்டாகத் தத்துவ ஞானம்பிறந்து எனதென்பதாகிய மமகாரமும்- நானென்பதாகிய அகங்காரமும்-விடும், ஆதலின் இவ்விரண்டு பற்றுக்களையும் இம்மு றையேவெறுத்து விடுதலாம். நூல்செய்தவாறு அவ்விவுநூலின்மே லிவறற்றப்பட்டது. (௪)

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்.... ....*
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.....................*

(இ-ள்.) துறந்தார்-.(அகங்காரமமகாரங்களை)விட்டவரது—பெருமை- மகிமையை- துணைக்கூறின் - எண்ணிக்கையிலேசொல்லி அறியப்புகுந்தால்—(அளவுபடாமையால்) - வையத்து- இவ்வுலகத் திலே-இறந்தாரை- (பிறந்) திறந்தவரை- எண்ணிக்கொண்டற்று- எ ண்ணி (யிறந்தவர்களென்று) அறியப்புகுந்தாற்போலும். (எ, று.) (கருத்து) துறந்தவர் பெருமையைச்சொல்லில் இறந்தவர்களை யெ ண்ணிக்கொண்டாற்போலும் என்பதாம். ※ கொண்டாலென்பது கொண்டெனத் திரிந்துநின்றது. (௨)

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்.... .... *
பெருமை பிறங்கிற் றுலகு .... *

(இ-ள்.) இருமை- (பிறப்புவீடென்னு) மிரண்டனது.— வகை- (துன்பவின்பக்) கூறுபாடுகளை-தெரிந்து- ஆராய்ந்து- (அப்பிறப்பைநீக்குதற்கு) -ஈண்டு- இப்பிறப்பிலே—அறம்- துறவறத்தை-பூண்டார்-கொண்டவரது-பெருமை-மகிமையே|—உலகு-உலகத்தில் பிறங்கிற்று- உயர்ந்தது. எ-று.) (கருத்து) துறவறத்தைக்கொண்டவரதுபெருமையே யிவ்வுலகிலுயர்ந்தது என்பதாம். ❊ பெருமையே யென்பதினேகாரம் விகாரத்தால்தொக்கது. அது உலகமுழுதாண்ட வரசர்முதலானவருடைய பெருமையைப் பிரித்தலாற்பிரிநிலையேகாரம். [இவைமூன்றுபாட்டாலும் துறந்தவரதுபெருமையேனைல்லாப்பெருமைகளினும் உயர்ந்ததென்பது சொல்லப்பட்டது.]

உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்...... ❊
வரனென்னும் வைப்புக்கோர்
வித்து.................... ❊

(இ-ள்.) உரனென்னுந்தோட்டியான்-
அறிவென்னுமங்குசத்தினாலே-ஓரைந்தும்-
(பொறிகளாகியயானைக) ளைந்தையும்—காப்பான்
கூ-ஆம்- அதி- நீத்தார்பெருமை.

(௰௪)

(தன்தன்புலன்களின்மேல்செல்லாமற்) காப்பவன் | = வரனென்னும் வைப்புக்கு- (எல்லா நிலங்களினும்) மேலானதென்றுசொல்லப்படுகிற மோக்ஷநிலத்துக்கு—ஓர்வித்து-ஒருவித்தாவான். எ,று.) (கருத்து) ஐம்பொறிகளையும், ஐம்புலன்களிற்செல்லாமற் காப்பவன் மோக்ஷநிலத்துக்கொருவித்தாவான் என்பதாம் ❋ அந்நிலத்திற்போய்முளைத்தலின் வித்தென்றார். இங்கே பிறந்தும் இறந்தும் வருகிற மனிதனல்லனென்பதாம், [ஏகதேசவுருவகவணி.] (அ)

ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா, ... ❋
னிந்திரனே சாலுங் கரி... ....❋

(இ-ள்.) ஐந்தவித்தான்- (புலன்களிற்செல்லுகின்ற) வைந்தாசைகளையுமொழித்தவனது-ஆற்றல்-வல்லமைக்கு— 'அகல்விசும்புளார் அகன்றபொன்னுலகத்துள்ளதேவர்க்கு—கோமான் - தலைவனாகிய- இந்திரனே-தேவேந்திரனே |—சாலுங்கரி- போதுமான சாக்ஷியாம். எ,று.) (கருத்து) கௌதமமுனி வல்லமைக்குத்தேவேந்திரனேசாக்ஷியாம் என்பதாம். ❋ ஐந்தாசைகளையும் நீக்காமல் சாபத்தையடைந்துநின்று அவ்வாசைகளை நீக்கினவனாகிய கௌதமமுனிவனது வல்லமையைத் தெரிவித்தானாதலின் இந்திரனே சாலுங்கரியென்றார்.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்...... ....❋
செயற் க ரிய செய்கலா
தார் .... ❋

(இ-ள்.) (ஒத்தபிறப்பினராகியமனிதர்களிலே) —பெரியர் -பெரியோர்|-செயற்கரிய-செய்தற்கரியவைகளை}—செய்வார்-செய்வார்கள்-சிறியர்-சிறியோர்|-செயற்கரிய- அச்செய்தற்கரியவைகளை-செய்கலாதார்-செய்யமாட்டாதார். எ,று.) (கருத்து)பெரியோர் செய்தற்கரியவைகளைச் செய்வார்கள். சிறியோர் செய்தற்கரியவைகளைச்செய்யார்கள் என்பதாம். ❋ எனவே- பெரியோர் செய்தற்கெளியவைகளைச் செய்யாரென்பதும், சிறியோர் அவைகளைச் செய்வாரென்பதும், தோன்றுதல் அறிக. செய்தற்கெளியவை-மனத்தை வேண்டியபடியேபோகவிடுதல்- ஆசைகொள்ளுதல்-கோபித்தல்- இவைமுதலானவையாம். செய்தற்கரியவை-இயமம்-நியமம்-ஆதனம்-பிராணாயாமம்-பிரத்தியாகாரம்- தாரணை-தியானம்-சமாதி-என-எண்வகை யோகங்களாம். (௬)

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்.................❋
வகைதெரிவான் கட்டே
யுலகு..❋ (௰௨)

௩-ஆம்-அதி-நீத்தார்பெருமை.

(இ-ள்.) உலகு-உலகமானது|- சுவையொளியூறோசை நாற்றம்-சு
வையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமும்—என்று-என்றுசொ
ல்லப்பட்ட-ஐந்தின்- பஞ்சதன்மாத்திரைகளது- வகை - கூறுபாட்
டை-தெரிவான்கட்டே- ஆராய்பவனறிவினிடத்ததே. எ-று.) (கருத்
து)உலகமானதுபஞ்சதன்மாத்திரைகளை யறிபவனிடத்ததே என்ப
தாம். ❁ சுவை-ரசமும், ஒளி-உருபமும், ஊறு-ஸ்பரிசமும், ஆம்.-
ஐந்தின்வகையாவன- அவைஐந்தும், அவற்றிலேதோன்றிய பூதங்க
ளைந்தும், அவற்றின் கூறாகிய ஞானேந்திரியங்க ளைந்தும், கன்மே
ந்திரியங்களைந்தும், ஆக இருபதுமாம். வகைதெரிவா னென்றதனு
ல்தெரிகின்றபுருடனும், அவன்தெரிதற்குக் காரணமாகிய- மான்-
அகங்காரம்- மனம்- எனப்பட்டவையும், அவற்றுக்குமுதலாகியமூ
லப்பகுதியும், கொள்ளப்படும். இவ்விருபத்தைந்து தத்துவக் கூட்
டமல்லது உலகென வேறில்லையென்று உலகினது இருப்பை அறித
லால் அறிவினிடத்ததாயிற்று. பூதமைந்து- நிலம்-நீர் -தீ -காற்று-
வான்-ஞானேந்திரியமைந்து- மெய்-வாய்-கண்-மூக்கு-செவி- கன்
மேந்திரியமைந்து- வாக்கு-பாதம்-பாணி-பாயு- உபஸ்தம்-மூலப்ப
குதி-மாயை. [இவைதான்குபாட்டாலும் பெருமைக்குக் காரணங்க
ளும்ஐம்பொறியடக்கலும், யோகப்பயிற்சியும், தத்துவஞானமும்,
ஆமென்பது சொல்லப்பட்டது. (எ)

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து ....*
மறைமொழி காட்டி விடும் .... *

(இ-ள்.) நிறைமொழி- (பய) னிறைந்தசொல்லையுடைய-மாந்தர் முனிவரது-பெருமை-மகிமையை}—நிலத்து-நிலவுலகத்தில்-மறை மொழி- (அவராணையாகச்சொல்லிய) மந்திரங்களே|-காட்டிவிடும்- (பிரத்தியக்ஷமாகக்) காட்டிவிடும். எ,று.) (கருத்து) முனிவரது மகிமையை அவர்கள் மந்திரங்களே காட்டும் என்பதாம். ❁ பயனிறைந்தமொழியாவது அவர் அருளினாலே சொன்னாலும், கோபத்தினாலேசொன்னாலும், அதனதன் பிரயோசனத்தைக கொடுத்தே விடுகிறசொல்-காட்டுதல் பிரயோசனப்பட்டு அம்மகிமையை அறிவித்தல்

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி …………… …❋
கணமேயுங் காத்த லரிது……… ……………………… . …. . ❋

(இ-ள்.) குணமென்னுங்குன்று- (துறவுமெய்யறிவு ஆசையில்லாமைமுதலான) நற்குணங்களாகிய மலையின்மேல்-ஏறிநின்றார்-ஏறிநின்றமுனிவரது—வெகுளி-கோபமானது- கணமேயும்- (காலுள்ள

கு-ஆம்-அதி-நீத்தார்பெருமை.

(௰௯).

வளவு.)

க்ஷணகாலமேயாயினும்-காத்தல்-(கோபிக்கப்பட்டவராலே)

தடுத்தல்|—அரிது-அரிதாம். எ-று.) (கருத்து) முனிவர்கள் கோப
மானது கோபிக்கப்பட்டவராலே தடுத்தல்கூடாது என்பதாம். ❋ அசையாமையும் பெருமையும்பற்றிக் குணங்களை மலையாக உருவகஞ்செய்தார். அநாதியானபழக்கத்தினாலே ஓரோவிடத்துக் கோபம் தோன்றியபோதே அதனை மெய்யுணர்வு அழிக்கும் ஆகலால் கணமேயு மென்றும்; நிறைமொழியாந்தராகலால் காத்தலரிதென்றும் சொல்லினர். [இவை இரண்டுபாட்டாலும் அவராணை சொல்லப்பட்டது.]

(கூ).

அந்தணரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ் ❋
செந்தண்மை பூண்டொழுக லான் ❋

(இ-ள்.) எவ்வுயிர்க்கும்- எல்லாவுயிர்களின்மேலும்-செந்தண்மை செவ்வையானவருளை- பூண்டு-விரதமாகக்கொண்டு-ஒழுகலான்-நடக்கையினாலே—அந்தணரென்போர்-அந்தணரென்று சொல்லப்படுவோர்|-அறவோர்- துறவறத்தினின்றவர். எ-று.) (கருத்து) அந்தணரென்றுசொல்லப்படுவோர் முனிவர்களே என்பதாம். ❋ மற்று-அசைநிலை. அந்தணரென்பது அழகிய தண்மையையுடையவரென்னுங்காரணப்பெயராகலின் அவ்வருளுடையார்க்கல்லது மற்றவர்க்காகாதென்பது கருத்து. [அப்படி ஆணையை யுடையவராயினும் உயிர்களிடத்தே அருளுடையரென்பது இதனாற் சொல்லப்பட்டது.] ம

ச-ஆம்-அதி-அறன்வலியுறுத்தல்.

அஃதாவது-அம்முனிவரால் அறிவிக்கப்பட்ட மூன்றுள் அறமான துமத்தைப்பொருளின்பங்கள்போலாகாமலஇம்மை மறுமைவீடுஎன்கிற மூன்றையும் தருதலால் அவற்றினும் உறுதியுடைத்தென்பதுசொல்லுதலாம்—அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங் ....*
காக்க மெவனோ வுயிர்க்கு ....
..................*

(இ-ள்.) சிறப்பு-மோக்ஷத்தையும்}—ஈனும்-கொடுக்கும்.-செல்வமும்- (சுவர்க்கமுதலாகிய) செல்வத்தையும்}-ஈனும்-கொடுக்கும். (ழச)
[ச]

ஈஆம்-அதி-அறன்வலியுறுத்தல்.

(ஆதலால்)- உயிர்க்கு- (மனித) ருயிர்க்கு- அறத்தினூஉங்கு-தருமத்தின்மேற்பட்ட—ஆக்கம்- பெருகுதலைத்தருவது|- எவன்-யாது. எ-று.) (கருத்து) மக்களுயிர்க்குத் தருமத்தின் மேற்பட்டதில்லை என்பதாம். ❋ ஓ-அசைநிலை- எல்லாப்பேறுகளினும் சிறந்ததாகலின் மோக்ஷத்தைச் சிறப்பென்றார். ஆக்கம்-மேன்மேலுயர்தல். [இதனால் அறத்தினும் அதிகமாகிய உறுதி இல்லையென்பது சொல்லப்பட்டது.] (௧)

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை.................*
மறத்தலி னூங்கில்லை கேடு...................................*

(இ-ள்.) (ஒருவனுக்கு) -அறத்தினூஉங்கு- தருமஞ் (செய்தலின்) மேற்பட்ட- ஆக்கமும்-பெருக்கத்தைத் (தருவதும்|)— இல்லை-இல்லை.-அதனை-அத்தருமத்தை—மறத்தலினூங்கு- (மயக்கத்தால்) மறந்துவிடுதலின் மேற்பட்ட-கேடு-கேட்டைத் (தருவதும்|) இல்லை-இல்லை. எ,று,) (கருத்து) தருமத்தின்மேற்பட்ட செல்வமுமில்லை. அத்தருமத்தை மறத்தலைப்பார்க்கிலும் கேடில்லை என்பதாம். ❋ அறத்தினூங்காக்கமுமில்லையென முன்சொல்லப்பட்டதையே † அநுவதித்தார்- அதனாலே கேடுவருதலைச் சொல்லுதலாகிய பயனோக்கி [இதனால் அது செய்யாதபோது கேடுவருதல் சொல்லப்பட்டது.]

ஒல்லும் வகையா லறவினை யோவாதே.... ; ... . *
செல்லும்வா யெல்லாஞ் செயல். ......,... ....;........*

(இ-ள்.) ஒல்லும்வகையால்- (தமக்குத்தமக்குக்கூடும்) வகையால் அறவினை-தருமமாகிய நல்வினையை-ஓவாதே + இடைவிடாமல்-செல்லும்வாயெல்லாம்- (அது) செல்லுமிடங்களிலெல்லாம்-செயல் செய்யக்கடவர். எ-று.) (கருத்து) மனம்வாக்குக்காய மிம்மூன்றிலுந் தருமஞ்செய்யக் கடவர்கள் என்பதாம். ※ கூடும்வகையாவது-இல்லறம் பொருளளவுக்கு ஏற்கவும், துறவறம் சரீர நிலைக்கு ஏற்கவும் செய்தலாம். செல்லுமிடங்களாவன- மனமும், வாக்கும், காயமும், ஆம். அவற்றிலே செய்யப்படுகிற அறங்களாவன- நற்சிந்தையும் நற்சொல்லும், நற்செயலும், ஆம். [இதனால் அறஞ்செய்யுமாறு சொல்லப்பட்டது] (௨)

மனத்துக்கண் மாசில னாத லனைத்தற...... '...... ....*
னாகுல நீர பிற.... ... . *

+ அநுவாதமாவது முன்சொல்லப்பட்டதையே மற்றொன்றை விதித்தற்பொருட்டுப் பின்னுஞ்சொல்லுதல்.

(இ-ள்.) மனத்துக்கண் (அறஞ்செய்பவன்|—தன்) நெஞ்சினிடத்து-மாசிலனாதல் — குற்றமில்லாதவனாகக்கடவன்.- அறம்- தருமமாவது|-அனைத்து-அவ்வளவே.—பிற-அது ஒழிந்தசொல்லும்வேடமும்| —ஆகுலநீர - (அறமெனப்படுவனவல்ல) - ஆரவாரகுணத்தையுடையனவாம். எ,று.) (கருத்து) தருமஞ்செய்பவன் மனமாசற்றிருக்கக்கடவன் அவ்வளவே யறம் என்பதாம். ✻ குற்றம் தீயவைநினைத்தல். பிறர் அறியவேண்டிச் செயப்படுதலால் ஆகுலநீரபிறவென்றார். மனநிலைகுற்றமுடையவனாகியபோது அதன்வழிப்பட்ட வாகினாலும் காயத்தினாலும் செயப்படுகிற அறங்களினாலே பயன் இல்லையென்பதும் பெறப்பட்டது. (௪)

அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு ....*
இழுக்கா வியன்ற தறம்..........................*

(இ-ள்.) அழுக்காறு-(பிறருயர்ச்சி) பொறாமையும்- அவா- (ஐம்புல) வாசையும்-வெகுளி- (அவைகாரணமாகப் பிறர்மேல் உண்டாகிற) கோபமும்- இன்னாச்சொல்- (அதுபற்றிவருகிற) கடுஞ்சொல்லும்-நான்கும்-ஆகிய இந்நான்கினையும்-இழுக்கா-கடிந்து-இயன்றது- (ஒழிவிலலாமல) நடந்தது|-அறம்-தருமமாவது. எ,று.) (கருத்து) பொறாமை ஆலச கோபங் கடுஞ்சொல் இந்நான்குங் கடிந்து நடந்ததே தருமம் என்பதாம். ✻ இதனால் இந்நான்கோடுகலந்து நடந்தது அறமெனப்படாதென்பதுங்கொள்க, [இவையிரண்டுபாட்டாலும் அறத்தினியல்பு சொல்லப்பட்டது. (௫)

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது..............*
பொன்றுங்காற் பொன்றாத் துணை ....*

(இ-ள்.) (நாம் இப்போது இளையமாகவின்) - அன்று -இறக்குநாளில்-அறிவாமென்னாது- செய்வோமென்று நினையாமல்- அறம்-[தருமத்தை]-செய்க- (தினந்தோறுஞ்) செய்யக்கடவர்.- அது-அப்படிச்செய்யப்பட்ட தருமமானது|-பொன்றுங்கால்-உடம்பினின்றுமுயிர்போங்காலத்து-பொன்றாத்துணை-(அவ்வுயிர்க்கு)அழியாததுணையாம். எ-று.) (கருத்து) இறக்கும்போது தருமஞ்செய்வோமென்னாது இருக்கும்போதே தருமஞ்செய்க அத்தருமமிறக்கும்போதுதவியாம் என்பதாம். ❋ மற்று-அசைநிலை. செய்தவுடம்பழியவும் உயிரோடுகூடி மற்றையுடம்பிலும் செல்லுதலால் அழியாததுணையாயிற்று. [இதனால்அப்படிப்பட்ட தருமத்தை நிலையில்லாதவுடம்பு இருக்கிற போதே செய்கவென்பது சொல்லப்பட்டது](௬)

(௩௭) ௪-ஆம்-அதி-அறன்வலியுறுத்தல்.

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை :
.... ❋
பொறுத்தானோ டூர்ந்தா னிடை...... .
.... ❋

(இ-ள்.) அறத்தாறு-தருமத்தின்பயன்-இதுவென-இதுவென்று (ஆகமவளவையால்) அறிவிக்க-வேண்டா-வேண்டியதில்லை- சிவிகை தண்டிகையை பொறுத்தானோடு-சுமப்பவனோடு-ஊர்ந்தானிடை செலுத்துவோனிடத்துக் (காட்சியளவையினாலேயேஅறியப்படும்) எ,று.) (கருத்து) தருமத்தின்பயன் சிவிகையெடுப்பவனிடத்திலும் ஏறுபவனிடத்திலுங் காணப்படும் என்பதாம். ❋ எனவென்றதனால் சொல்லளவையாகிய ஆகம பிரமாணமும்,பொறுத்தானோ டூர்ந்தானிடையென்றதனால்-காட்சி யளவையாகிய பிரத்தியக்ஷபிரமாணமும், கொள்ளப்பட்டன. அறியப்படுமென்பது குறைந்துநின்றதனால் சொல்லெச்சம்[இதனால்அழியாத துணையாதல்தெளிவிக்கப்பட்டது

வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்.........❋
வாழ்நாள் வழியடைக்குங் கல் ... .❋

(இ-ள்.) ஒருவன்-ஒருவன்-வீழ்நாள்- (செய்யாமற்) கழியுநாள்-படாஅமை-உண்டாகாமல்-நன்று-தருமத்தை ஆற்றின்- செய்வானாயின்-அஃது-அச்செய்கையானது|- வாழ்நாள்- (அவன்சரீரத்தோடு கூடி) வாழுநாளது-வழி-(வரு) வழியை அடைக்குங்கல்-(வாராமல்) லடைக்குங்கல்லாம். எ,று.) (கருத்து) ஒருவன்தருமத்தைச்செய்தால் அத்தருமமவன்பிறப்பைநீக்கும் என்பதாம். ❋ அஞ்ஞானம்-அகங்காரம்-அவா-விருப்பு-வெறுப்பு-என்கிற- ஐவகைக்குற்றங்களால் வருகிற-நல்வினை-தீவினை-என்கிற இருவகை வினைகளும் உள்ளவரைக்கும் உயிர் உடம்போடு கூடிநின்று அவற்றின் பயன்களாகியசுகதுக்கங்களை அநுபவிக்கும் ஆதலால் அக்காலமுழுதும் வாழ்நாளெனப்பட்டது.] (அ)

அறத்தான் வருவதே யின்பமற்
றெல்லாம்.................... ❋
புறத்த புகழு மில.....................
....❋

(இ-ள்.) அறத்தான்-இல்லறத்தோடுபொருந்தி-வருவதே- வருமின்பமே|-இன்பம்-இன்பமாகும்-மற்றெல்லாம்-அதனோடுபொருந்தாதுவருவனவெல்லாம்|-(இன்பமாயினும்) -புறத்த- துன்பத்துட்சேர்வனவாம்- புகழும்- புகழையும்} இலஉடையனவல்ல. எ,று.) (கருத்து) தன்மனைவியொடு கூடுமின்பமே யின்பமாகும் பிறன்மனைவியொடு கூடுமின்பந் துன்பமாம் என்பதாம். ❋ இன்பம்காமத்தின

ச-ஆம்-அதி-அறன்வலியுறுத்தல்.

(ரு)

ருபவம். இன்பத்திற் பறமெனவே

துன்பமாயிற்று பாவத்தால் வரும் பிறனில்

விழைவு முதலானவை அப்போது இன்பமாய்த்

தோ

ன்றுமாயினும் பின்பு துன்பமாய் விளைதலாற் புறத்தவென்றார்.புகழுமிலவெனவே - அறத்தோடு வருவதாகிய வின்பம் புகழுமுடைத்தா மென்பதுபெற்றும். [இதனால் அறஞ்செய்வாரே இம்மையின்பமும், புகழும், பெறுவாரென்பது சொல்லப்பட்டது.] (கூ)

செயற்பால தோரு மறனே யொருவற் .... ❋

குயற்பால தோரும் பழி. .... ❋

(இ-ள்.) ஒருவற்கு-ஒருவனுக்கு-செயற்பாலது- செய்தற்றன்மை யது|-அறனே-நல்வினையே-உயற்பாலது-ஒழிதற்றன்மையது|-பழி(யே)-தீவினையே. எ,று.) (கருத்து) ஒருவனுக்குச் செய்தக்கது நல்வினை செய்யத்தகாதது தீவினை என்பதாம். ❀ தேற்றேகாரம், பின்னுங்கூட்டப்பட்டது. ஒருமிரண்டும்- அசைநிலைகள். பழிக்கப் படுவதாகிய தீவினையைப்பழியென்றார். இதனாற்செய்வதும், ஒழிவதும், நியமிக்கப்பட்டன] (௰)

பாயிரமுற்றிற்று.

இல்லறம்.

இல்லறமாவது - இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லப்படுகிற வழியிலே நின்று அதற்குத் துணையாகிய கற்புடைய மனைவியோடுகூடிச் செயப்படுவதாம்

ஆகலின்

அதனை முதலிலே

சொல்லத்தொடங்கினார்.

ரு-ஆம் -

அதி-இல்வாழ்க்கை.

அஃதாவது மனையாளோடு கூடி

வாழ்தலினது சிறப்பாம். இல்வாழ்க்கை
நிலையானது அறஞ் செய்தற்குரிய இருவகை நிலை
களுள்ளே முதலாதலின்
இது அறன்வலியுறுத்தலின்பின்
வைக்கப்பட்டது.

இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு .... *
நல்லாற்றி னின்ற துணை .... *
[௪]

(யஅ) ரு-ஆம்-அதி-இல்வாழ்க்கை.

(இ-ள்.) இல்வாழ்வானென்பான் - இல்லறத்தோடு கூடிவாழ்பவனென்று சொல்லப்படுவோன் — இயல்புடைய - (துறவறத்) தன்மையையுடைய-மூவர்க்கும்-(மற்றை) மூவர்க்கும்-நல்லாற்றில்-(அவரது) நல் (லொழுக்க) வழிகளில்-நின்ற-நிலைபெற்ற- துணை-துணையாவான். எ,று.) (கருத்து) இல்லறத்தில் வாழ்பவன் பிரமசாரி, வானப்பிரத்தன், சந்நியாசி, இம்மூவர்க்குந் துணையாவான் என்பதாம் ❊ இல்லென்பது அதனறத்தை உணர்த்தலால் ஆகுபெயர். மற்றை மூவராவார்- ஆசாரியனிடத்தே ஓதுகின்றவனும் விரதங்காக்கின்றவனும் ஆகிய பிரமசாரியும், காட்டினிடத்தேபோய்மனைவியோடுதவஞ்செய்கிறவனாகிய வானப்பிரஸ்தனும், எல்லாப்பற்றுக்களையும்விட்டவனாகிய சந்நியாசியும், எனவறிக. இல்வாழ்வான்-பசி-நோய்-குளிர்-முதலானவற்றால் அவரொழுக்கங்களுக்கு இடையூறு வராமல் உண்டி மருந்து முதலானவைகொடுத்து அவரவ ரொழுக்க வழிகளிலே தப்பாமல் நடத்துகையினாலே நல்லாற்றினின்ற துணையென்றார்.

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு.........*
மில்வாழ்வா னென்பான் றுணை..........................*

(இ-ள்.) துறந்தார்க்கும்-(ஆதாரமானவராலே) விடப்பட்டோர்க்கும்—துவ்வாதவர்க்கும்- வறுமைப்பட்டவர்க்கும்-இறந்தார்க்கும்-(ஒருவருமில்லாமல்வந்து) இறந்தவர்க்கும்— இல்வாழ்வானென்பான்-இல்வாழ்வானென்று சொல்லப்படுவோனே|-துணை- துணையாவான். எ-று.) (கருத்து) துறந்தவர்க்கும், வறியவர்க்கும், இறந்தவர்க்கும், இல்வாழ்வான் துணையாம் என்பதாம். ❋ ஆதாரமானவராலே விடப்பட்டவர்க்குப் பாவமொழிய அவர்க்கு ஆதாரமாய்நின்றுவேண்டுவன செய்தலாலும், வறுமைப்பட்டவர்க்கு உணவு முதலானவை கொடுத்தலாலும், இறந்தவர்க்கு நீர்க்கடன் முதலானவைசெய்து நல்லகதியை அடைவித்தலாலும், துணையென்றார். [இவ்விரண்டுபாட்டாலும் இல்வாழ்க்கை எல்லாவுபகாரங்களுக்கும் உரித்தாதல் சொல்லப்பட்டது.] (உ)

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங் .. ❋
கைம்புலத்தா றோம்ப றலை...... .... ❋

(இ-ள்.) தென்புலத்தார்- பிதிரரும்- தெய்வம்-தேவரும்—விருந்து-அதிதியரும்- ஒக்கல்-சுற்றத்தாரும்- தான்- தானும்- என்று-என்றுசொல்லப்பட்ட- ஐம்புலத்து - ஐந்திடத்துஞ் செயப்படுகின்ற—ஆறு-(அற) வழியை- ஓம்பல்- வழுவாமற்செய்தல்|-தலை- (இல்வாழ்

வானுக்குச்) சிறப்புடையவறமாம். எ,று.) (கருத்து) பிதிர்க்குந்தெ ய்வத்திற்கும் விருந்திற்கு மினத்திற்குந் தனக்குந் தருமஞ்செய்தல் தலைமையானதருமமாம் என்பதாம். ❋ ஆங்கு- அசைநிலை. பிதிரர்- ஓர்தேவசாதியார். அவர்க்கு இடம் தெற்காதலின்- தென்புலத்தாரெ ன்றார். தெய்வம்-சாதியொருமை. விருந்து-புதுமை. அது இங்கே புதியவராய்வந்தவரை உணர்த்தவினாலே ஆகுபெயர். தான்செவ்வை யாயிருந்துகொண்டு எல்லாவறங்களையும் செய்ய வேண்டுதலின் த னைக்காப்பாற்றுதலும் அறமாயிற்று. இவ்வைந்துவகையும் தரும ஞ்செய்தற்கு இடங்களாகையால் ஐம்புலமென்றார். இவ்வைந்திடங் களும் ஐந்துபங்குவேண்டுதலால்அரசனுக்குஆறில்ஒருபங்காயிற்று

பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை.... .....❋
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில் ....

.... ❋

(இ-ள்.) (பொருள்சம்பாதிக்கும்போது)—பழி-பாவத்துக்கு-அஞ்சி-பயப்பட்டுச் (சம்பாதித்து)-பாத்து- (அப்பொருளைமுன்சொல்லப்பட்ட பதின்மர்களுக்கும்) பங்கிட்டு— ஊண்- (தான்) உண்ணு தல வாழ்க்கை- (ஒருவனது) இல்வாழ்க்கையானது|— உடைத்தாயின்-உடையதானால்-வழி- (அவனது) சந்ததியானது|- எஞ்சல்- குறைதல-எஞ்ஞான்றும்- எந்நாளும்-இல்-இல்லை. எ,று.) (கருத்து)பாவத்திற்குப்பயந்து பொருளைத்தேடிப் பங்கிட்டுண்ணு மொருவன் சந்ததியானது குறைதலிலலை பொருளைப் பங்கிட்டுண்டால்

என்பதாம். ❋ பாவத்தால்வந்தபிறன்

அறமானது பொருளுடையானையும்,
பாவமானது தன்னையும், அடைந்து சந்ததி அழியுமாதலால் பழிய
ஞ்சியென்றார். வாழ்பவனது உடைமை வாழ்க்கைமேல் ஏற்றப்பட்
டது. (ச)

அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை...... ....*
பண்பும் பயனு மது....... .... *

(இ-ள்.) இல்வாழ்க்கை- (ஒருவனது) இல்வாழ்க்கையானது|- அ
ன்பும்- (தன்மனையாளிடத்துச்செய்யத்தகு) மன்பினையும்}- அறனு
ம்-(பிறர்க்குப்பகுத்துண்ணுதலாகிய) அறத்தினையும்}—உடைத்தா
யின்-உடைத்தானால்-அது-அவ்வுடைமையானது|- (அவ்வில்வாழ்க்
கைக்கு) -பண்பும்-குணமும்-பயனும்- பிரயோசனமும்ஆம். எ-று.
(கருத்து) ஒருவனில்வாழ்க்கை அன்பையு மறத்தையு முடைத்தானா
ல்அவ்வுடைமையானது குணமும் பிரயோசனமுமாம் என்பதாம்.
❋ மனையாளுக்கும் கணவனுக்கும் மனவொருமை இல்லாதபோது

இல்லறம் முடிவுபெறாதாகையால் அன்புடைமை
பண்பும், அறமு
டைமைபயனும், ஆயின. அன்பையும், அறனையும்,முன்வைத்தமு
றைகின்படி அவற்றோடு சம்பந்தமுள்ள பண்பையும், பயனையும்,வை

த்தலால் நிரனிறையணி. [இவைமூன்றுபாட்டாலும்இல்வாழ்வோன்
அறஞ்செய்யுமாறு சொல்லப்பட்டது.] (ரு)

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற் .....*
போஒய்ப் பெறுவ தெவன்...... .... *

(இ-ள்.) (ஒருவன்)-இல்வாழ்க்கை-இல்வாழ்க்கையை}-அறத்தாற்றின்-தருமத்தின்வழியில்- ஆற்றின்- செலுத்துவானாயின்- புறத்தாற்றில்-(அவன் அதற்குப்) புறமாகியவழியிலே—போய்-சென்று-பெறுவது-பெறும்பயன்|-எவன்-யாது. எ-று.) (கருத்து) ஒருவன் இல்வாழ்க்கையைத் தருமவழியாக நடத்துவனாகில் துறவறத்திற்போய்ப்பெறும்பயன் என்ன என்பதாம். ❋ தருமத்தின்வழி-பழியஞ்சிப் பகுத்துண்ணுதலும் அன்புடைமையுமென முன்சொல்லப்பட்டவழியாம். புறத்தாறு- மனையைவிட்டு வனத்திலே செல்லுநிலை. அந்நிலைதரும்பயனை இது தருமென்னும் பொருள் தோன்றற்குப் போய்ப்பெறுவதெவனென்றார். (௬)

:

இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்...........❋
முயல்வாரு ளெல்லாந் தலை.................................❋

(இ-ள்.) இல்வாழ்க்கை- இல்வாழ்க்கையிலேநின்று-இயல்பினான்-(அதற்குரிய) வியல்போடுகூடி- வாழ்பவனென்பான்- வாழ்பவனென்று சொல்லப்படுவோன்|-முயல்வாருளெல்லாம் - (ஐம்புலன்களை விட) முயற்சிசெய்வா ரெல்லாருள்ளும்- தலை-மேற்பட்டவனாவான். எ,று.) (கருத்து) தருமவியல்போடு இல்லறத்தில் வாழ்பவன் தவஞ்செய்வா ரெல்லாருள்ளுந் தலையாவான் என்பதாம். ❋ மூற்றத்துறந்தவராகிய சந்நியாசிகள் ஐம்புலன்களை விட்டமையால, முயல்வாரென்றது- வனத்திலே தவஞ்செய்வோராகியவானப்பிரஸ்தரை. இல்வாழ்வோன் அம்முயற்சி செய்யாமலே பயனைப்பெறுதலினாலே தலையென்றார். (௭)

ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை ....❋
நோற்பாரி னோன்மை யுடைத்து.............................❋

(இ-ள்.) (தவஞ்செய்வோரையும்)- ஆற்றின்- (தமது) வழியிலே-ஒழுக்கி-நடத்தி-அறன்-(தானுந்தன்) னறத்தினின்றும்-இழுக்கா-த

வழுத-இல்வாழ்க்கை- இல்வாழ்க்கையானது|-நோற்பாரின் - அத்தவஞ்செய்வாரது நிலையினும்-நோன்மை- பொறுமையை}—உடைத்து-உடையதாம். எ,று.)(கருத்து)தவத்தோரைத்தவவழிபினடக்கச்செய்து தானுந் தன்னில்லறத்தினின்று தவறுதவாழ்க்கையானது தவஞ்செய்வோர் நிலையினும் பொறுமை யுடையது என்பதாம். ❁ பசிமுதலான இடையூறு தீர்த்தலால்ஆற்றிலொழுகியென்றார் நோற்பாரென்பது அவரது நிலையை உணர்த்தலால் ஆகுபெயர். தவஞ்செய்வோரது நிலை அவருக்குவந்தநோயை அலலது இல்வாழ்வானது நிலைபோல் பிறருக்குவந்த நோயையும் பொறுத்தலில்லாமையால் நோற்பாரினோன்மையுடைத்தென்றார். (அ)

அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்.........❋
பிறன்பழிப்ப தில்லாயி னன்று .... ❋

(இ-ள்.) (இருவகையறங்களுள்)-அறனெனப்பட்டது-(நூல்களால்) அறனென்று சிறப்பித்துச் சொல்லப் பட்டது]- இல்வாழ்க்கை இல்வாழ்க்கையே.-(பற்றைத் துறவறமோ வென்றால்)- அஃதும்-அதுவும்]-பிறன்பழிப்பது -பிறனாற்பழிக்கப்படுவதை;-இல்லாயின்-இல்லாதிருந்தால் நன்று-(அவ்வில்வாழ்க்கையோடு ஒருதன்மையதாக) நன்றாம். எ,று.) (கருத்து)அறனென்று சொல்லப்பட்டது இல்வாழ்க்கையாகும் துறவறமும்பிறனாற்பழிக்கப்படுவதில்லாதிருந்தால் நல்லது என்பதாம். ❊ ஏகாரத்தினாலே இல்லறத்தினின்றும் பிரிக்கப்பட்ட துறவறத்தை அஃதென்பது சுட்டிநின்றது. பிறன்பழிப்பதென்றது கூடாவொழுக்கத்தை. துறவறத்தில்மனத்தையும்பொறிகளையும் அடக்கவேண்டிய வருத்தம் உண்டா யிருத்தலால் அது நிறைவேறுவது அரிது, இல்லறத்திலே அவ்வருத்தம் இல்லாமையால் இது நிறைவேறுவது எளிது, ஆதலால் அப்படிப்பட்ட துறவறம் பழுதுபடாமல் நடந்துவரும் போது இல்லறத்தோடு சேர்த்து எண்ணப்படுவதாயிற்று. [இவைநான்குபாட்டாலும் இல்லறமே பயனுடையதென்று அதன்சிறப்புச்சொல்லப்பட்டது.] (௯)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந். .... ❊
தெய்வத்துள் வைக்கப் படும்..... .....

....†...............❊

(இ-ள்.)வாழ்வாங்கு-இல்லறத்தோடுகூடிவாழுமியல்பினால்-வையத்துள்-மண்ணுலகத்துள்-வாழ்பவன்|-வாழ்பவன்-(மண்ணுலகத்தானேயாயினும்) -வானுறையும்- விண்ணுலகத்திலிருக்கின்ற-தெய்வத்துள்-தேவருள்-வைக்கப்படும்-(ஒருவனாக)வைத்துநன்றாகமதிக்கப்
[௰]

படுவான், எ-று.) (கருத்து) இல்லறத்துவழுவாதுவாழ்பவன்தெய்வ த்துளொருவனாகமதிக்கப்படுவான் என்பதாம். * பின்னேதேவனா ய்ப்பிறந்து அவ்வறப்பயனை அநுபவித்தல் நிச்சயமாயிருக்கையால தெய்வத்துள் வைக்கப்படுமென்றார். [இதனால் இல்லறத்தின் மறு மைப்பயன் சொல்லப்பட்டது.] இம்மைப்பயன் புகழ். அதைஇறு தியிலே சொல்லுகிறார். (ய)

****

சூ-ஆய்-அதி-வா॥

ழ்க்கைத்துணை நலம்.

அமைதாவது
தன்மையாம்.

அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளது இதனாலேயே அதிகார முறைமையும் விளங்கும்.

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்......... *

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை....................... ....*

(இ-ள்.) மனைத்தக்க-இல்லறத்துக்குத்தக்க-மாண்புடையளாகி-ந ற்குண நற்செய்கைகளை யுடையவளாகி- தற்கொண்டான்- தன்னைக் கொண்டவனது-வளத்தக்காள் வாழ்க்கை-வரவுக்குத்தகுந்த வாழ்க் கையையுடையவள்- துணை (அவ்வில்லறத்துக்குத்) துணையாவாள்.எ-று.) (கருத்து) இல்லறத்திற்குத்தக்க நற்குண நற்செய்கையுடையவ ளாகித்தன்னைக்கொண்ட கணவன் வரவுக்குத்தக்க செலவுசெய்பவ ள் இல்வாழ்க்கைக்குத் துணையாவாள் என்பதாம். ❋ நற்குணங்களா வன-துறந்தவரையுபசரித்தலும், விருந்தோம்பலும், வறியவரிடத் தே யருளுடைமையும்,முதலானவையாம்.நற்செய்கைகளாவன- வா ழ்க்கைக்கு வேண்டும் பொருள்களறிந்து காப்பாற்றிவைத்தலும், உண்டிசமைத்தல் வல்லமையும், உபகாரஞ்செய்தலும், முதலான வையாம். வருவாய்க்குத் தக்கவாழ்க்கையாவது-முதலுக்குத்தக்கப டிசெலவுசெய்தல். [இதனால் இவ்விரண்டு நன்மைகளும் சிறந்தன வென்பது சொல்லப்பட்டது.] (க)

மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை..............❋
யெனைமாட்சித் தாயினு
மில் ....❋

(இ-ள்.) மனைமாட்சி- இல்லறத்துக்குத்தகுந்த நற்குண நற்செய் கைகள்-இல்லாள்கண்-(ஒருவனது) மனையாளிடத்தே- இல்லாயின்- இல்லையாயின்-வாழ்க்கை-அவ்வில்வாழ்க்கையானது-எனைமாட்சித்

க-ஆம்-அதி-வாழ்க்கைத் துணைநலம்.
(உரு)

தாயினும்-(செல்வத்தால்) எவ்வளவுபெருமையை உடைய தாயினும்-இல்-அப்பெருமையை உடையதன்று. எ,று.) (கருத்து) இல்லறத்திற்குத்தகுந்தநற்குண நற்செய்கை மனையவளிடத் தில்லாதாயின் அவ்வில்வாழ்க்கை எவ்வளவு சிறப்புடைத்தாயினும் பயனில்லை என்பதாம், ❋ பயன்படாமையால் இல்லையென்றார். (உ)

இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ .. .. ❋
னில்லவண் மாணாக் கடை,........ ....❋

(இ-ள்.) (ஒருவனுக்கு) -இல்லவள்- மனையாள் - மாண்பானால்-நற்குணநற்செய்கையளாயிருந்தால்-இல்லது-இல்லாதது|-என்-யாது.-இல்லவள்-அம்மனையாள்-மாணாக்கடை-அப்படிப்பட்டவளாகாதிருந்தால்- உள்ளது-உள்ளது|- என்-யாது. எ,று.) (கருத்து) மனையவள் நற்குண நற்செய்கையுடையவளாகில் இல்லாதது யாது அம்மனைவி

நற்குண நற்செய்கை யில்லாதவளாகில் உள்ளது யாது என்பதாம். ❋ மாண்பென்னுங் குணப்பெயர் இங்கே அதனை உடையவளுக்கு ஆயிற்று.[இவ்விரண்டு பாட்டாலும் இல்வாழ்க்கைக்குவேண்டுவது மனையாளது நற்குணநற்செய்கையே மற்றவையல்லவென்பது சொல்லப்பட்டது. (ங)

பெண்ணிற் பெருந்தக்க யாவுள

கற்பென்னுந் .. .. ❋

திண்மையுண் டாகப் பெறின்... ...

... ...❋

(இ-ள்.) கற்பென்னுந்திண்மை-கற்பென்னுங்கலங்கா நிலைமை—உண்டாகப்பெறின். உண்டாயிருக்கப்பெற்றால் - (ஒருவன் பெறுதற்குரிய பொருள்களுள்)-பெண்ணின்-மனையாளினும்-பெருந்தக்க-உயர்வாகிய பொருள்கள்-யா-எவை|-உள-இருக்கின்றன. எ-று.) (கருத்து) ஒருவன் பெறும்பேறுகளுக்குள் கற்புடையமனைவியைப் பார்க்கிலும் ஏவையிருக்கின்றன என்பதாம். ❊ கற்புடையாள்போல் அறமுதலாகிய மூன்றுக்கும் ஏதுவாம்பொருள்கள்வேறில்லாமையால்-யாவுளவென்றார். [இதனால் கற்புநலத்தது சிறப்புச் சொல்லப்பட்டது. (ச)

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் .... ❊
பெய்யெனப் பெய்யு மழை.......................❊

(இ-ள்.) தெய்வம்-(பிற) தெய்வத்தை-தொழாள்- வணங்காளாகி-கொழுநன்-(தனது தெய்வமாகிய) கணவனை- தொழுது-வணங்கா நின்று-எழுவாள்- (நித்திரைவிட்) டெழுந்திருப்பவள்- பெய்யென-

(உச)

...-ஆம்-அதி-வாழ்க்கைத் துணைநலம்.

பெய்யென்றுசொல்ல-மழை-மழையானது|-பெய்யும்-பொழியும்.
எ,று.) (க்ருத்து) பிறதெய்வத்தை வணங்காளாகிக் கணவனைத்தொழுதெழுபவள்பெய்யென்றுசொல்ல மழைபெய்யும் என்பதாம். ❉ தெய்வந் தொழுதற்கு மனம் தெளிவது துயிலெழுங் காலத்தாகவின்-தொழுதெழுவாளென்றார். தொழாநின்றென்பது-தொழுதென த்திரிந்து நின்றது. தெய்வமும் ஏவல்செய்யுமென்பதாம். [இதனால் கற்புடையவளது வல்லமை சொல்லப்பட்டது:] (௬)

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற........ ❉
சொற்காத்துச் சோர்விலாள் பெண்...... ....❉

(இ-ள்.) தற்காத்து- (கற்பினின்றும்வழுவாமல்) தன்னைக்காப்பாற்றிக்கொண்டு- தற்கொண்டாற்பேணி - தன்னைக்கொண்டவனையும் (உண்டிமுதலானவற்றால்) உபசரித்து-தகைசான்ற- (தம்மிருவரிடத்தும்) நன்மையமைந்த- சொற்காத்து- புகழை (நீங்காமற்) காப்பாற்றி-சோர்விலாள்- (முன்சொல்லப்பட்ட நற்குணநற்செய்கைகளிலும்) மறவியில்லாதவளே|-பெண் -பெண்ணாவாள் எ,று.) (கருத்து) கற்பிலிருந்துதன்னைக்காத்துத் தன்கணவனைக்காப்பாற்றிநற்குணநற்செய்கைகளைமறவாதவளே மனையவள் என்பதாம். ❉ தன்னிடத்துப்புகழாவது-ஊரார் கற்பினாலே தன்னைப்புகழ்வது. ஆல் தன்னைப் புகழ்தற் சிறப்புச்சொல்லப்பட்டது.

[இத

(எ)

சிறைகாக்குங் காப்பெவன் செய்யு

மகளிர்.... ....❉

நிறைகாக்குங் காப்பே தலை....... ..

.........................✻

(இ-ள்.)மகளிர்-பெண்டிலா-சிறை-சிறையிநுலே-காக்கும்-(தலைவர்)காக்கும்-காப்பு-காவலானது|-எவன்- என்னபிரயோசனத்தை} செய்யும்-செய்யும்-நிறை-(தமது) நிறையால்-காக்கும்-(அவர்)காக்குங்காப்பே-காவலே|-தலை-முதன்மையானகாவல்.எ,று.)(கருத்து) கணவர்வைத்தகாவலென்செயும்பெண்கள்கற்பால்தங்களைக்காத்துக்கொள்ளுங்காவலே த லைமையானகாவல் என்பதாம். ✻ சிறை-மதிற்காவல் வாயிற் காவல் முதலானவை. நிறை- மனதைக்கற்பின் வழி யிலே நிறுத்தல் காவலிரண்டினும் நிறை க்காவல் இல்லாதவிட த்து ச் சிறைக்காவலாலே பயன் இல்லை என்றற்கு நிறைகாக்குங் காப்பே தலையென்றார். [இதனால் பட்டது.]

தன்னைக் காத்தலினது சிறப்புச் சொல்லப் (எ)

கூ-ஆம்-அதி-வாழ்க்கைத் துணைநலம்.

(உ௫)

பெற்றார்ப் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.......... .... *

(இ-ள்.) பெண்டிர்|-மகளிர்-பெற்றார்-(தம்மைக்) -கொண்டகணவனை-பெறின்-(பூசித்தல்) பெறுவராயின் -புத்தேளிர்-தேவர்-வாழும்-வாழ்தற்கிடமாகிய-உலகு-உலகத்தில்- பெருஞ்சிறப்பு- (அவராற் செய்யப்படும்) பெரியசிறப்பினை-பெறுவர்-அடைவர். எ-று.)(கருத்து) பெண்கள் கணவனை வணங்கப்பெற்றால் தேவரால் சுவர்க்கத்திலவணங்கப்படும் பெருஞ்சிறப்படைவர் என்பதாம் ❋ பூசித்தல் வருவிக்கப்படுதலால் சொல்லெச்சம். [இதனால்தம்மைக்கொண்டவனைப்பூசித்தபெண்டிர் தேவர்களாலே பூசிக்கப்படுவரென்பதுசொல்லப்பட்டது.] (அ)

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்..............*
னேறுபோற் பீடு நடை........................ ....*

(இ-ள்.) புகழ்-கீர்த்தியை--புரிந்த-விரும்பிய-இல்-மனையாளை—இலோர்க்கு- இல்லாதவர்க்கு- இகழ்வார்முன்- (தம்மை) யிகழ்ந்து பேசும் பகைவர்முன்-ஏறுபோல்-ஆண்சிங்கம்போலும்- பீடுநடை-பெருமிதநடை|-இல்லை-இல்லை. எ-று.) (கருத்து) கற்பென்னுங்கீர்த்தியை விரும்பியமனையவளில்லாதவர்க்குத் தமது பகைவர்முன் சிங்கம்போலும் பெருமிதநடையில்லை என்பதாம். ❋ புரிந்தவென்பதனீற விகாரத்தால்தொக்கது. பெருமிதநடையானுக்குச் சிங்கவேறு நடையினால் உபமானமாதலால் ஏறுபோலென்றார். [இதனால் புகழைக்காப்பாற்றாத விடத்தே உண்டாகும் குற்றம் சொல்லப்பட்டது.] (கூ)

மங்கல மென்ப மனைமாட்சி மற்றத..................... .... *
னன்கல னன்மக்கட்

பேறு ....*

(இ-ள்.) (அறிந்தோர்)-மனை- மனையாளது- மாட்சி- நற்குணநற்செய்கைகளை}-மங்கலம்-(ஒருவனுக்கு) நன்மையாம்-என்ப-என்று சொல்லுவார்.-நன்மக்கட்பேறு- நல்லபுதல்வரைப்பெறுதலை}-அதன்-அதற்கு-நன்கலன்-நல்லவாபரணம்-(என்ப)-என்றுசொல்லுவார். எ-று) (கருத்து) மனையவள்நற்குணநற்செய்லககளை யொருவனுக்குநன்மையென்றும் நல்லபுத்திரரைப்பெறுதலை அந்நன்மைக்காபரணமென்றுஞ் சொல்லுவர் என்பதாம். * அறிந்தோ ரென்பது

[எ]

(உ-கூ)

கூ-ஆம்-அதி-வாழ்க்கைத்துணைநலம்.

வருவிக்கப்பட்டது. மற்று -அசை- [இதனால்வாழ்க்கைத்துணைக்காவதோரணிகலஞ்சொல்லி அதனால்பின்வருவதாகிய அதிகாரத்துக்குத்தோற்றுவாய் செய்யப்பட்டது] (ய)

எ-ஆம்-அதி-புதல்வரைப் பெறுதல்.

அஃதாவது-முனிவர்கடன் கேள்வியாலும்,
தேவர்கடன் வேள்வியாலும், தென்புலத்தார்கடன் புதல்வனைப்பெ
றுதலாலும், அல்லது செலுத்தக்கூடாமையால்-அக்கடன் செலுத்த
ற்பொருட்டு நல்லமக்களைப் பெறுதலாம்.

முன்பெறப்பட்டது.

அதிகாரமுறைமை

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை

யறிவறிந்த .... *

மக்கட்பே றல்ல பிற...... ....

....*

(இ-ள்.) பெறுமவற்றுள்-(ஒருவன்) பெறும் பேறுகளுள்- அறிவ
றிந்த-அறியவேண்டுமவைகளை அறிதற்குரிய - மக்கட்பேறல்ல-புத
ல்வனைப் பெறுதலையல்லது- பிற-மற்றைப்பேறுகளை- யாம்|-நாம்-
அறிவதில்லை - மதிப்பதில்லை. எ,று.) (கருத்து) ஒருவன் பெறும்பே
றுகளுக்குள் அறியவேண்டியவைகளையறிந்த மக்கட்பேற்றையல்ல
து பிறபேற்றையாமதிக்கவேண்டியதில்லை. என்பதாம். ※ அறிதற்

குக் காரணமாகிய வுரிமை அவ்வறிதலை உண்டாக்கியேவிம்மாதலின்
அத்துணிவுபற்றி அறிந்தவென இறந்தகாலத்தாற்சொல்லினர். அறிவ
றிந்தவென்றதனால்மக்களென்னும்பெயர்பெண்பாலையொழித்து நின்ற
து[இதனாலேபுதல்வனைப்பெறுதலினது சிறப்புச்சொல்லப்பட்டது

எழுபிறப்புந் தீயவை தீண்டா

பழிபிறங்காப்.... ....*

பண்புடை மக்கட்

பெறின்.................. ... ., ...*

(இ-ள்.) பழிபிறங்கா-(பிறரால்) பழிக்கப்படாத- பண்புடை- நற்குணங்களையுடைய- மக்கட்பெறின்- புதல்வரைப்பெறுவாளுயின்-எழுபிறப்பும்- (வினைவசத்தினுலே யுண்டாகிற) எழுவகைப்பட்டபிறப்பிலும்-தீயவை- துன்பங்கள்|-தீண்டா-((சென்று ஒருவனை})படையாவாம். எ,று.) (கருத்து) பழிக்கப்படாத நற்குணமுடையபுதல்வரைப் பெறுவாளுயின் எழுவகைப்பிறப்பிலுந் துன்பங்களணுகா என்பதாம். ❊ தந்தை தாய்களது தீவினை தெய்தம் பொருட்டு அ

எ-ஆம்-அதி-புதல்வரைப்பெறுதல்.

(உஎ)

வரைக்குறித்துப் புதல்வராலேசெய்யப்படும் தான தருமங்களுக்கு அவரது நற்குணம் காரண மாகவின் பண்புடை மக்க ளென்றார். எழுபிறப்பு எழுதலை முறையுமாம். எழுபிறப்பாவன-தேவர்-மனிதர் விலங்கு-பறவை-ஊர்வன-நீர்வாழ்வன-தாவரம்-என்பனவாம். (உ)

தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு ... .*
டந்தம் வினையான் வரும்......................... ....*

(இ-ள்.) தம்மக்கள்- தம்முடையபுதல்வரை- தம்பொருள்-தம்முடையபொருள்கள்-என்ப-என்றுசொல்லுவார். (அறிந்தோர்)- அவர்பொருள்-அப்புதல்வர் சம்பாதித்தபொருள்கள்|-தந்தம்வினையான் தம்மைக்குறித்து அவர்செய்யும் நல்வினையினாலே- வரும்-(தம்மிடத்து) வரும். (ஆதலால்) எ,று.) (கருத்து) தம்புதல்வரைத்தம்பொருளென்று சொல்லுவர் (ஏனெனில்) பிள்ளைதேடியபொருள்பிதாவிற்குவருமாகையால் என்பதாம். ❋ பொருள்சம்பாதித்த புதல்வரைப்பொருளென வுபசரித்தார். [இவைஇரண்டு பாட்டாலும நல்லபுதல்வரைப்பெற்றோர் அடையும் மறுமைப்பயன் சொல்லப்பட்டது.]

அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள் .... ❋
சிறுகை யளாவிய கூழ் ....❋

(இ-ள்.) தம்மக்கள்- தம்முடையமக்களது - சிறுகை - சிறியகைகளால்-அளாவிய-அளேயப்பட்ட-கூழ்-சோறனது|- அமிழ்தினும்-(சுவையினாலேமிகுந்த) அமிர்தத்தினும்---ஆற்றவினிது-மிகவுமினிமையையுடைத்தா யிருக்கும். எ,று.) (கருத்து) தம்மக்கள் சிறுகையாலளாவிய சோறனது அமிர்தத்தினு மிகவினியதாம் என்பதாம். ❋ சிறுகையளாவல் - தாய் தந்தையரோடு உடனிருந்து உண்ணும் போது சோற்றைத்துழாவுகை முதலாயின.] (௮)

மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்.......,.........❋
சொற்கேட்ட லின்பஞ்
செவிக்கு.......................... ❋

(இ-ள்.) உடற்கு (ஒருவனது) உடம்புக்கு- இன்பம் - இன்பமாவது|-மக்கள்-மக்களது-மெய்-உடம்பை-தீண்டல்-தொடுதல்.-செவிக்கு-(அவனது) காதுக்கு-இன்பம்-இன்பமாவது- அவர்- அவரது- சொல்-சொற்களை-கேட்டல்-கேட்குதல். எ,று.) (கருத்து) மக்களுடலைத்தொடுதல் உடற்கின்பம் அவர் சொற்களைக்கேட்டல் செவிக்கின்பம் என்பதாம். ❋ மற்று-அசைநிலை. பிள்ளைகளது மழலைச்

(௨௯)

ள்-ஆம்-அதி-புதல்வரைப்பெறுதல்

சொல்லையன்றி அவர் கற்றறிந்து பேசுஞ்சொல்லும் இன்பமாகவி
ன்-அவையிரண்டுக்கும் பொதுப்படச்சொல்லென்றார். தீண்டல்கே
ட்டல்களினால் உண்டாகும் இன்பங்களைத் தீண்டல் கேட்டலெனவா
ல் ஆகுபெயர்கள்] (௫)

குழலினி தியாழினி தென்பதம் மக்கண்......... *
மழலைச் சொற் கேளா தவர்.......... *

(இ-ள்.) தம்மக்கள்- தம்முடையபுதல்வரது- மழலைச்சொல்-குத
லைச்சொற்களை}-கேளாதவர்-கேட்காதவர்|-குழல்- குழலினிசை}-இ
னிது-இனியது-யாழ்-வீணையினிசை-இனிது- இனியது-என்ப-என்
றுசொல்லுவார். எ-று.) (கருத்து) தம்மக்கள் மழலைச்சொற்களைக்
கேளாதவர்கள் புள்ளங்குழலிசையினிதென்றும் வீணையிசையினி
தென்றுஞ் சொல்லுவர் என்பதாம். ※ குழல்-யாழ்- அவற்றினிசை
யைக் காட்டுதலால் ஆகுபெயர்கள். கேட்டவர் அவற்றினும் மழலைச்
சொல் இனிதென்று சொல்லுவாரென்றதாயிற்று.
இனிமைமிகுதிப
ற்றி மழலைச்சொல்லைச் சிறப்புவகையாற் சொல்லினார்.
றுபாட்டாலும் இம்மைப்பயன் சொல்லப்பட்டது.]

[இவைமூன்
(௬)

தந்தை மகற்காற்று நன்றியவை யத்து.............. ....*
முந்தி யிருப்பச் செயல்.......................... ....*

(இ-ள்.) தந்தை-தகப்பனானவன்-மகற்கு-புதல்வனுக்கு-ஆற்றும் செய்யத்தகும்-நன்றி-நன்மையாவது|- அவையத்து- (கற்றவரது) சபையினிடத்து-முந்தியிருப்ப-(அவரினு) மேற்பட்டிருக்க- செயல்-கல்வியையுடையவ) னாக்குதலாம். எ-று.) (கருத்து) பிதாபிள்ளைக்குச்செய்யும் உதவியானது சபையில்கல்வியில் வல்லவனென முற்பட்டிருக்கச்செயல் என்பதாம். ❋ பொருளுடையவனுக்கல் முதலானவை பின்னே தன்பத்தைத்தரினுந் தரும் ஆதலால் அவை நன்மையாகாவென்பது கருத்து. [இதனால் தந்தைகடன் சொல்லப்பட்டது.] (எ)

தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து.......... ....*
மன்னுயிர்க் கெல்லா மினிது........... ....*

(இ-ள்.)தம்மக்கள்-தம்மக்களது-அறிவுடைமை- அறிவுடையாராயிருக்கையானது|-மாநிலத்து-பெரியநிலத்தில்-மன்- நிலைபெற்ற— உயிர்க்கெல்லாம்-உயிர்களுக்கெல்லாம்-தம்மின்-தமக்கு (இனியதாதலினும்)- இனிது-இனிதாயிருக்கும். எ-று.) (கருத்து) தம்மக்கள்

எ-ஆம்-அதி-புதல்வரைப்பெறுதல்.

(உ௬)

றிவுடையரன்று தம்மைவிட உலகத்துயிர்களுக்கெல்லாமினிதா யிருக்கும் என்பதாம். ❋ இங்கே அறிவென்றது இயற்கையறிவோ டுகூடிய கல்வியறிவை அறிவுடைமை கண்டுமகிழ்தற்குரியவர் அறி வுடையோராதலால் இங்கே மன்னுயிரென்றது அவர்மேல் நின்றது [இதனால் தந்தையினும் உலகத்தார் மகிழ்வரென்பது சொல்லப் பட்டது.] (அ)

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்..... .... ❋
சான்றோ னெனக்கேட்ட
தாய்........................ ❋

(இ-ள்.) தன்மகனை-தன்புத்திரனை- சான்றோனென-(கல்விகேள் விகளினாலே) நிறைந்தோனென்று (அறிவுடையோர்) சொல்ல- கேட்ட தாய் -கேட்டதாயானவள்|—ஈன்றபொழுதின்- பெற்றகாலத்தி னும்-பெரிதுவக்கும்-மிகமகிழ்வாள். எ,று.) (கருத்து) தன்மகனைக் கல்வியில் வல்லவனெனக் கேட்ட தாயானவள் பெற்ற காலத்தினும் பெருமகிழ்ச்சி யடைவாள் என்பதாம். ❋ மடியின்மேலே கண்டத னால உண்டாகியபொழுதுவர்ன மகிழ்ச்சியினும் நிறைந்த கல்விகேள் விகளை யுடையவனெனக் கேட்டதனால் உண்டாகிறசிறப்பானமகிழ் ச்சி பெரிதாகலின் பெரிதுவக்குமென்றும், பெண்மைக்குணத்தினா ல்தானாக அறியமாட்டாமையால கேட்டதாயெனவும், சொல்லினார். அறிவுடையோனென்பது வருவிக்கப்பட்டது- சான்றோனென்று அ றிந்துசொல்லுதற்கு உரியவர் அவராகையால்: [தாய்மகிழ்ச்சிக்கு அ ளவில்லாமையால் அது இதனால் வேறெடுத்துச்சொல்லப்பட்டது.]

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை........ ....❋
யென்னோற்றான் கொல்லென்னுஞ்
சொல்.... .... ❋

(இ-ள்.) தந்தைக்கு- (தன்னைக் கல்வியுடையவனாக்கிய) தகப்பனுக்கு—மகன்-புத்திரன்- ஆற்றும்- செய்யும்- உதவி-எதிர்நன்றியானது-(தன்னறிவையும் ஒழுக்கத்தையுங்கண்டவர்)—இவன்-இவனது-தந்தை-தகப்பன்-(இவனைப்பெறுதற்கு)-என்-என்னதவத்தை-நோற்றான்கொல்-செய்தானோ-என்னும்-என்கிற—சொல்-சொல்லை-(உண்டாக்குதலாம்.). ஏ-று.) (கருத்து) பிள்ளை பிதாவுக்குச் செய்யும் உதவியானது இவன்பிதா இவனைப்பெறுதற்கென்னதவஞ்செய்தானோவென்று பிறர்சொல்லுஞ்சொல்லை யுண்டாக்கல் என்பதாம். ❁ சொல்லென்பது உண்டாக்குதலாகிய தன்காரணத்தைக் குறிப்பித்துநின்றது. உண்டாக்குதல்- அப்படிச்சொல்ல நடத்தல் [இதனால் புதல்வனது கடன்சொல்லப்பட்டது] (ம)

[அ]

❁❁❁❁❁❁❁❁❁❁❁

❁❁❁❁❁❁❁❁❁❁❁

அ-ஆம்-அதி-அன்புடைமை.

அஃதாவது-அம்மனைவி புதல்வர் முதலாகிய சம்பந்தமுடையவரிடத்து ஆசையுடையவனாயிருக்கை. அதிகாரமுறைமையும் இதனால்விளங்கும், இல்லறமினிது நடத்தலும் பிறவுயிர்களின் மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனாதலால் இதுவேண்டப்பட்டது.

அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்....... ※
புன்க ணீர் பூச றரும்.............................. .... ※

(இ-ள்.) அன்பிற்கும்-அன்பினுக்கும்- அடைக்கும்-(பிறரறியாமல்) அடைத்துவைக்கும்-தாழ்-தாழும்|— உண்டோ-உண்டோ- (தம்மால் அன்புசெயப்பெற்றவரது துன்பங் கண்டவிடத்தே பொழிகின்ற)—ஆர்வலர்- அன்புடையாரது-
புன்கணீர்-புல்லியகண்ணீரோ|-
பூசறரும்- (உள்ளேயிருக்கின்ற அன்பினை) எல்லாரும் அறியத் (தூற்றும்.) (ஆதலால். எ,று.) (கருத்து) அன்பு கொள்ளப்பட்டவரது துன்பங்கண்டபோதே அன்புடையவர் கண்ணீரே உள்ளிருந்த வன்பைக்காட்டும் என்பதாம். ※ உம்மை அன்பைச் சிறப்பித்துநின்றது. காட்சியளவையால் அறியப்படாதாயினும்அநுமானவளவையால் வெளிப்படுமென்பதாம். [இதனால் அன்பினது உண்மை உணர்த்தப்பட்டது,] (க)

அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா .. .. ※
ரென்பு முரியர் பிறர்க்கு......................... .... ※

(இ-ள்.) அன்பிலார்-
அன்பில்லாதவர்|-பிறர்க்குப் பயன்படாமை
யால்-எல்லாம்-
எல்லாப்பொருள்களாலும்-தமக்கு-தமக்கே
—உரிய்ர்-உரியவராவார். — அன்புடையார் -
அன்புடையவர்|- (அவைகளா
லேமாத்திரமல்லாமல்) என்பும்- (தம்)முடம்பாலும்- பிறர்க்கு- பிறருக்கு-உரியர்-உரியவராவார். எ,று.) (கருத்து) அன்பில்லாதவர் எல்

லாப்பொருளேயுந் தமக்கே யுரியவராவர். அன்புடையவர் பிறர்க்கு எலும்பையுங் கொடுக்க வுரியராவர் என்பதாம். ❀ தமக்கே யெ ன்றபிரிநிலை யேகாரம் வருவிக்கப்பட்டது. என்பு- உடம்பிற்காதலா

ல்ஆகுபெயர். என்புமுபிராருகை புறவுக்காகத் துலையேறியசிபியும் தன்முதுகெலும்பை இந்திரனுக்குக்கொடுத்த ததீசியுமுதலாயி னோரிடத்தக் காண்க.] (உ)

அ-ஆம்-அதி-அன்புடைமை. (௩க)

அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க் .... *
கென்போ டியைந்த தோடர்பு...... ....*

(இ-ள்.) ஆருயிர்க்கு-பெறுதற்கரியமனிதருயிர்க்கு- என்போடு- உடம்போடு- இயைந்த- உண்டாகிய- தொடர்பு - சம்பந்தத்தை-அ ன்போடு-அன்போடு-இயைந்த-பொருந்துதற்குவந்த-வழக்கு-வழி யின்- பயனாகும்- என்ப-என்று- (அறிந்தோர்) சொல்லுவர். எ,று.) (கருத்து) மக்களுயிருக்குடலோடுண்டாகியசம்பந்தத்தைஅன்போ டுபொருந்தவந்தபயனென்பர் என்பதாம். ❀ மனிதப்பிறப்பி னரு மை அதனையடைந்த உயிர்களின்மேல் ஏற்றப்பட்டது. வழக்கென் பது அதன்பயனை யுணர்த்தலால் ஆகுபெயர். உடம்போடு கூடியல் லாமல் அன்புசெய்யக்கூடாமையால் தொடர்ச்சி யுண்டாயிற் றென்பதாம்

அது செய்தற்பொருட்டு இத்
ஆகவே இத்தொடர்ச்சிக்குப்
பயன் அன்புடைமையென்றாயிற்று.]

(௩)

அன்பீனு மார்வ முடைமைய துவீனு ... . *
நண்பென்னு நாடாச் சிறப்பு. . . .. *

(இ-ள்.) அன்பு-(சம்பந்த முடையவரிடத்தே செய்யப்பட்ட) அன்பானது|- (அத்தன்மையினாலே)-ஆர்வமுடைமை- (பிறரிடத்தே) ஆசையையுடையவனா யிருக்கையை}—ஈனும்- (ஒருவனுக்குத்) தரும்.—அது-அவ்விருக்கையானது|-நண்பென்னும்-(இவனுக்கு யாவரும்) நட்பினரென்று சொல்லப்படுகிற- நாடாச்சிறப்பு- அளவிறந்தசிறப்பை}—ஈனும்-தரும். எ, று.) (கருத்து) அன்பானது ஆசையைத்தரும். அதுசிநேகத்தையுந்தரும் என்பதாம். ❋ எல்லாரும் நட்பினராதல் எல்லாப்பொருளையும் அடைதற்குக் காரணமாதலின் அதனை நாடாச்சிறப்பென்றார்.] (௪)

அன்புற்றமர்ந்த வழக்கென்ப வையகத்...................... *
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு .... *

(இ-ள்.) வையகத்து- இவ்வுலகத்தில்- இன்புற்றார்-(இல்வாழ்க்கையிலேநின்று) இன்பத்தை யநுபவித்தவராகி- எய்தும்- (அதன்பின்னேவிண்ணுலகத்திற்சென்று) அடையும்- சிறப்பு-பேரின்பத்தினை} அன்பு- அன்பை-உற்று- உடையவராகி-அமர்ந்த-(இல்லறத்தோடு) பொருந்திய-வழக்கு-வழியின்பயனாகும். எ,று.) (கருத்து) விண்ணுலகிலடையும் பேரின்பத்தை மண்ணுலகில் இல்வாழ்க்கையிற்பொருந்தியவன்பின்பயனென்பர் என்பதாம். ❋ இல்வாழ்க்கையிலேநின்

(௫௨) ## ௮-ஆம் அதி-அன்புடைமை.

❋

று மனைவியோடும், மக்களோடும், சுற்றத்தோடும்; கூடி இன்பமுற்றவர் தம்மாலே செய்யப்பட்ட வேள்வித் தொழிலினாலே தேவராய்ப் பிறந்து அங்கேயும் இன்பத்தை அநுபவிப்பாராகலின்இன்புற்றாரெய்துஞ் சிறப்பென்றார். தவத்தினாலே துன்பமுற்று அடையப்படுவதாகிய விண்ணுலகவின்பத்தை இங்கேயும் இன்பமுற்று அடைதல் அன்பாலன்றி இல்லையென்பதாம். (௯)

அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்............ .... ❋
மறத்திற்கு மஃதே துணை.... ....

... ❋

(இ-ள்.) அறியார்-அறியாதவர் (சிலர்)—அன்பு-அன்பானது-சார்பு-துணையாவது- அறத்திற்கே- தருமத்துக்கே-என்ப-என்றுசொல்லுவார்.— மறத்திற்கும்- மறத்தை நீக்குதற்கும்— அஃதே- அவ்வன்பே-துணை-துணையாவது. எ-று.) (கருத்து) அறியாதவர்கள் அறத்திற்கே யன்பு துணையென்பர் மறத்தை நீக்குதற்கும் அவ்வன்பே துணையாம் என்பதாம். ❋ ஒருவனாலேசெய்யப்பட்ட பகைகடபற்றி உள்ளத்திலே மறந்தோன்றிய விடத்தே அவனை நட்பாக நினைத்து அவன்மேல் அன்புசெய்ய அது நீங்குமாதலின் மறத்தை நீக்குதற்குந் துணையாமென்றற்கு மறத்திற்கு மஃதே துணையென்றார். மறத்திற்கு மஃதே துணையென்றதற்குப் பெண்டிர் புதல்வர் முதலாயினோரை நல்வழிப்படுத்தும்பொருட்டு அவரைக்குறித்துச் செய்யப்படும் கோபத்துக்கும் அன்பே துணையாமெனப் பொருளுரைப்பினும் ஆம். [இவையைந்து பாட்டாலும் அன்பினது சிறப்புச்சொல்லப்பட்டது.] (௬)

என்பி லதனை வெயிற்போலக் காயுமே...... ....❋
யன்பி லதனை யறம் ....
....❋

(இ-ள்.) என்பிலதனை-எலும்பில்லாதவுடம்பை-வெயிற்போல-வெயிலானதுசுடுதல்போல- அன்பிலதனை- அன்பில்லாதவுயிரை}— அறம்-அறக்கடவுள்-காயும்-சுடுவான். எ-று.) (கருத்து) என்பில்லாப்புழுக்களைச் சூரியன் சுடுதல்போல அன்பில்லாவுயிர்களை யறக்கடவுள் சுடும் என்பதாம். ❋ ஏ-அசைநிலை. என்பில தென்றதனால் உடம்பென்றும், அன்பிலதென்றதனால் உயிரென்றும், கொள்ளப்பட்டன. வேறுபாடில்லாமல் எங்கும் ஒருதன்மைத்தாகிய வெயிலின்முன்னே புழு முதலானவைபோல் அப்படிப்பட்ட அறத்தின்முன்னே அன்பில்லாதவுயிர் தன்னியல்பாற்செனறு கெடுமென்பதாம். (எ)

(௭௮)

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை
வன்பாற்கண்................ *
வற்றன் மரந்தளிர்த் தற்று. . ...
.... *

(இ-ள்.) அன்பகத்தில்லாவுயிர்—மனதிலன்பில்லாதவுயிரானது—வாழ்க்கை—(இல்லறத்தோடுகூடி)வாழ்தலானது— வன்பாற்கண்—வன்பாலென்னுநிலத்திலே— வற்றன்மரம்— உலர்ந்தமரமானது—தளிர்த்தற்று—தளிர்த்தாற்போலும். எ,று.) (கருத்து) அன்பில்லா வுயிர்வாழ்க்கையான து வன்னிலத்திற்பட்டமரந் தளிர்த்தாற்போலும் என்பதாம். ❋ கூடாதென்பதாம்- வன்பால்-கடினநிலம். (அ)

புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும்
யாக்கை .... *
யகத்துறுப் பன்பி லவர்க்கு..... ....
.... *

(இ-ள்.) யாக்கை
யகத்து—உடம்பினகத்திலேநின்று—உறுப்பு- (இ

ல்லறத்துக்கு) அங்கமாகிய-அன்பிலவர்க்கு- அன்பில்லாதவர்க்கு-புறத்துறு- மற்றைப்புறத்திலேநின்று- உறுப்பெல்லாம் - அங்கமாவனவெல்லாம்-எவன்- (அவ்வறஞ்செய்த லிலே) என்னவுதவியை?- செய் யும்-செய்யும். எ-று.) (கருத்து) உள்ளன்பில்லாதார்க்குப் பிறவுறுப்புக்களிருந்து பயனில்லை என்பதாம். ❊ புறத்துறுப்பாவன-இடம் பொருளேவலாதிகளாம். அன்பாகிய துணையோடு கூடாதவிடத்தே

அவைகளாற்பயனில்லாமையால் எவன்செய்யுமென்றார். போலுதலால் உறுப்பெனப்பட்டது.

உறுப்புப்
(கக)

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்...............❊
கென்புதோல் போர்த்த வுடம்பு.......................❊

(இ-ள்.) அன்பின்வழியது-அன்புமுதலாக அதன்வழி நின்ற உடம்பே|-உயிர்நிலை-உயிர்நின்ற உடம்பாகும்.-அஃதிலார்க்கு- அவ்வன்பில்லாத ார்க்குள்ள-உடம்பு- உடம்புகளானவை|-என்பு- எலும்பை- தோல்-தோலினலே-போர்த்த-போர்க்கப்பட்டனவாம்.- (உயிர்நின்றவுடம்பாகா.) எ-று.) (கருத்து) அன்பொடுபொருந்தியவுடலேயுயிருள்ளவுடலாகும் அவ்வன்பில்லாவுடலே யுயிரற்றவுடலாகும் என்பதாம். ❊ இல்லறம்பயன்படாமையால் அப்படிப்பட்ட வுடம்புகளாயின. [இவை நான்கு பாட்டாலும் டாகும் குற்றம்சொல்லப்பட்டது.]

கூ-ஆம்-அதி-விருந்தோ
ம்பல்.

அஃதாவது விருந்தினரை யுபசரித்தல். தென்புலத்தார் - தெய்வம்-
விருந்தினர் - சுற்றத்தார் - தான் - என்கிறஐவகையோரை
உபசரித்தல் களிலே முன்னவை இரண்டும் - கண்ணாற்
காணப்படாதவரை நினைத்துச்செயப்படுவன வாதலா
லும், பின்னவை இரண்டும் பிறர்க்குக் கொடுத்த
லல்லாமையாலும், நடுநின்ற விருந்தோம்பல்
சிறப்புடையதாகி அவ்வில்
லறங்களுக்கு
முதலாயிற்று. வேறுபாடில்லாத
அன்புடையு
டையகணவனு
மனையாளுங்கூடியல்லது
செய்யக்கூடாமையால் இது
அன்பு

டைமையின்பின்

வைக்கப்பட்டது.

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி.....*
வேளாண்மை செய்தற் பொருட்டு...........................*

(இ-ள்.) (மனைவியோடுங்காட்டினிடத்தே செல்லாமல்) -இல்-இல்லினிடத்தே-இருந்து- இருந்து- ஓம்பி-(பொருள்களைக்)காப்பாற்றி வாழ்வதெல்லாம்- வாழுஞ்செய்கை யெல்லாம்- விருந்து- விருந்தினரை}-ஓம்பி-உபசரித்து- வேளாண்மை-உபகாரத்தை}-செய்தற்பொருட்டு- (அவருக்குச்) செய்தற்பொருட்டாம். எ,று.) (கருத்து) இல்வாழ்க்கையில்வாழ்வதெல்லாம் விருந்தினரைக் காப்பாற்றும்பொருட்டு என்பதாம். ❊ எனவே-உபகாரஞ் செய்யாத விடத்தே இல்லிருத்தலாலும், பொருள்காப்பாற்றலாலும், உண்டாகிற துன்பச்செயல்களுக்கெல்லாம் பயனில்லையென்பதாம். (க)

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா.....................*
மருந்தெனினும் வேண்டற்பாற்
றன்று.........................*

(இ-ள்.) (உண்ணப்படும்பொருள்)- சாவாமருந்தெனினும்- அமிர்தமாயினும்-விருந்து- (தன்னைநோக்கிவந்த) விருந்தினர் - புறத்தா-(தன்வீட்டின்) புறத்திருக்க- தானுண்டல்- தானேயுண்ணுதல்{- வேண்டற்பாற்றன்று- விரும்பப்படுமுறைமையையுடையதன்றும். எ,று.) (கருத்து) வந்தவிருந்தினரைப் புறம்வைத்துத் தேவாமிர்தமாகினுமுண்ணப்படாது என்பதாம். ❊ சாவாமருந்து- சாவாமைக்குக் காரணமாகிய மருந்து. [இவை இரண்டுபாட்டாலும் விருந்தோம்பலின் சிறப்புச்சொல்லப்பட்டது. (உ)

௯ -ஆம்-அதி-விருந்தோம்பல். (ரு௫)

வருவிருந்து வைகலுமோம் புவான்
வாழ்க்கை...... ....*
பருவந்து பாழ்படுத லின்று. ...

...., *

(இ-ள்.) வருவிருந்து-(தன்னைநோக்கி) வந்தவிருந்தை-வைகலும் நாளுநாளும்-ஓம்புவான்-உபசரித்துவருபவன்—வாழ்க்கை-இல்வாழ்க்கையானது- பருவந்து- (வறுமையால்) வருந்தி - பாழ்படுதலின்று-கெடுதலில்லை. எ,று.) (கருத்து) வந்தவிருந்தினைக் காப்பாற்றுபவன் வாழ்க்கை கெடுதலில்லை என்பதாம். ❊ தினந்தோறும் விருந்தோம்புவானுக்கு அதனாலே பொருள் குறையாமல் மேலுமேலும் வளருமென்பதாம் (௫)

அகனமர்ந்து செய்யா ளுறையுமுக னமர்ந்து...... .... *
நல்விருந் தோம்புவா னில்............... ....*

(இ-ள்.) செய்யாள்- திருமாதானவள்- முகனமர்ந்து- முகமினியனாய்-நல்விருந்து-தகுந்த விருந்தினரை-ஓம்புவான்-காப்பவனது-இல்-
வீட்டினிடத்தே-அகனமர்ந்து-மனமகிழ்ந்து-உறையும்-வாழ்ந்துகொண்டிருப்பாள். எ,று.) (கருத்து) விருந்தினரைக்காப்பவன்வீட்டில் இலக்குமி வாசம் பண்ணுவாள் என்பதாம். ❊ மனமகிழ்தற்குக் காரணம் தன்செல்வம் நல்லவழிப்படுதலாம். தகுதியாவது-ஞானத்தினாலும், ஆசாரத்தினாலும், உயர்தல், பொருள்வளர்தற்குக் காரணஞ்சொல்லியபடி. (௪)

வித்துமிடல் வேண்டுங் கொல்லோ
விருந்தோம்பி........*

மிச்சின் மிசைவான் புலம். . .....

....*

(இ-ள்.) விருந்தோம்பி-(முன்னே) விருந்தினரையுண்பித்து- மிச்சில்-மிகுதியை}-மிசைவான்-(பின்) உண்பவனது-புலம்-விளைநிலத்துக்கு-வித்தும்- விதையும்- இடல்- இடுதலும்|- வேண்டுங்கொல்- வேண்டுமோ-வேண்டுவதில்லை. எ,று.) (கருத்து) விருந்தினரைக்காப்பவன் விளைநிலந் தானேவிளையும் என்பதாம். ❋ ஓ - அசைநிலை. எனவேதானேவிளையுமென்பதாயிற்று. [இவை மூன்று பாட்டாலும் விருந்தோம்புவார் இம்மையிலே அடையும் பயன் சொல்லப்பட்டது] (௫)

செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா......... *
நல்விருந்து
வானத் தவர்க்கு.......................................* (௬ள்)

௯-ஆம்-அதி-விருந்தோம்பல்.

(இ-ள்.) செல்விருந்து-(தன்னிடத்தே)வந்தவிருந்தை}- ஓம்பி-உபசரித்து-வருவிருந்து-(பின்) வரும்விருந்தை}-பார்த்து-எதிர்நோக்கி-இருப்பான்-(தான்அதனேடுண்ண) விருப்பவன்|- (மறுபிறப்பிலேதேவனுய்)- வானத்தவர்க்கு - வானிலுள்ளவருக்கு- நல்விருந்து- நல்லவிருந்தாவான். எ,று.) (கருத்து) வந்தவிருந்தாளிகளைக் காப்பாற்றி வரும்விருந்தாளிகளுக்கெதிர்பார்த்திருப்பவன் தேவர்களுக்கு விருந்தாளியாவான் என்பதாம். ❋ நல்விருந்து கிடைத்தற்கரிய விருந்து. [இதனலேமறுமையில்அடையும்பயன்சொல்லப்பட்டது

இனைத் துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்........ ... *
றுணைத் துணைவேள் விப்பயன்.................................*

(இ-ள்.) வேள்விப்பயன்-(விருந்தினரையுபசரித்தலாகிய)வேள்வியினது பயன்|- இனைத்துணைத்தென்பது- இன்னவளவினதென்பதாகிய-ஒன்றில்லை-ஓரளவினையுடையதன்று:-விருந்தின்- அவ்விருந்தினரது- துணை-(தகுதி)யளவே|-துணை-(அதற்கு)அளவாம். எ,று.)(கருத்து) விருந்தினராக்காக்கு முதவியிவ்வளவென்பதொன்றில்லைவிருத்தினர் மகிழ்ச்சியளவேயாம் என்பதாம். ❀ தேவயாகம்- பிதிருயாகம்-மனிதயாகம்-பூதயாகம்-பிரமயாகம்- என்கிறஐம்பெருவேள்வியில்மனிதயாகம் என்னப்பட்ட விருந்தோம்பலொன்றாகலின் வேள்வியென்றும்; பொருளளவு சிறிதாயினும் சற்பாத்திரத்திலே சேர்த்ததாயின் மிகப்பெரிதாமாதலின் இனைத்துணைத் தென்பதொன்றில்லை யென்று, சொல்லினார். [இதனால் இருமையும் பயத்தற்குக்காரணம்சொல்லப்பட்டது.] (எ)

பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர்
விருந்தோம்பி....... *
வேள்வி தலைப்படா தார்..........
.... *

(இ-ள்.) விருந்து - விருந்தினரை}- ஓம்பி- (நிலையாப் பொருளைக் கொண்டு)உபசரித்து-வேள்வி-அவ்வேள்விப்பயனை}-தலைப்படாதார் அடையும் அறிவிலாதவர்|-பரிந்தோம்பி-(அப்பொருளை})வருந்திக் காத்து-(பின்பு அதனையிழந்து)-பற்றற்றேம்--(இப்போது)பற்றுக் கோடிலமாயினேம்-என்பர்- என்றிரங்குவார். எ,று.) (கருத்து)விருந்தாளிகளைக் காப்பாற்றார் பொருளைக்காப்பாற்றியிழந்தோமென்பார் என்பதாம். ❀ சம்பாதிக்கப்பட்ட பொருளைக் காத்தலும் கடுந்துன்பமாதலால் பரிந்தோம்பி யென்றார். வேள்வி அதன்பயனையுணர்த்தலால் ஆகுபெயர். (அ)

ௌ-ஆம்-அதி-விருந்தோம்பல்.
(ஈ)

உடைமை யுளின்மை
விருந்தோம்ப லோம்பா ....*
மடமை மடவார்க
ணுண்டு................................ *

(இ-ள்.) உடைமையுள்-(பொரு)ளுடையராயிருக்குங்காலத்து-இன்மை-வறுமையாவது|-விருந்தோம்பல்-விருந்தினரையுபசரித்தலை ஒம்பா-இகழும்-மடமை-பேதைமையாகும்.-(அது| அறிந்தோரிடத்திராது.)-மடவார்கண்-அறிவிலாதவரிடத்து-உண்டு-உண்டு.எ,று.) (கருத்து) செல்வத்துள் வறுமையாவது விருந்தினரை யுபசரியாமை அது அறிவில்லாரிடத்துண்டு என்பதாம். ❊ மடமையானது பொருளாலே கொள்ளும்பயனை இழப்பித்து உடைமையை இல்லாமையாக்கலால் அதைவறுமையாகஉபசரித்தார். பேதைமையால் விருந்தோம்பலை இகழ்ந்தால் பொருளிருந்த விடத்தும் அதனாற்பயனில்லை யென்பதாம். [இவை யிரண்டுபாட்டாலும் விருந்தோம்பா விடத்து உண்டாம் குற்றஞ்சொல்லப்பட்டது.]
(௧௦)

மோப்பக் குழையு மனிச்ச
முகந்திரிந்து.............*
நோக்கக் குழையும் விருந்து................. ....*

(இ-ள்.) அனிச்சம்- அனிச்சப்பூவானது|-மோப்ப- மோந்தவிடத்தே- குழையும்-வாடும்- விருந்து - விருந்து|- முகந்திரிந்து- முகம்வேறுபட்டு-நோக்க-பார்க்க-குழையும்-வாடும். எ,று.) (கருத்து) அனிச்சப்பூ மோந்தவிடத்துவாடும். விருந்துமுகம் வேறுபட்டுப் பார்க்கவாடும் என்பதாம். ❁ தூரத்திலே கண்டவிடத்து முகமலர்ச்சிகாட்டலும், அதுகண்டு சமீபத்திலே வந்தவிடத்து இன்சொற்சொல்லுதலும், அதுகேட்டு உடன்பட்டபோது உபசாரஞ்செய்தலும், ஆகிய- விருந்தோம்புவார்க்கு அவசியமிருக்கவேண்டியமூன்றனுள்- முதலாகிய முகமலர்ச்சி யில்லாதபோது தூரத்திவிருந்தே வாடிநீங்குதலால் தீண்டியவிடத்தல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்லியரா யிருப்ப ரென்பதாம். [இதனால் விருந்தோம்புவார்க்கு முதலிலே முகமலர்ச்சி வேண்டுமென்பது சொல்லப்பட்டது.] (ய)

ய-அம்-அதி-இனியவைகூறல்.

அஃதாவது-மனத்தினுள்ளமகிழ்ச்சியை வெளிப்படுத்துகிற இனிய சொல்லுகளைச் சொல்லுதலாம்-இதுவும் விருந்தோம்புவார்க்கு அவசியம்வேண்டியதாகலின் அதன்பின்வைக்கப்பட்டது.

இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்......................*
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்...... ....*

(இ-ள்.) இன்சொல்-இனியசொற்களாவன|-ஈரமளைஇ- அன்போடுகலந்து-படிறிலவாம்-வஞ்சனையில்லனவாயிருக்கின்ற- செம்பொருள்-அறத்தினை-கண்டார்- அறிந்தவரது -வாய்ச்சொல்-வாய்ச்சொற்களாகும். எ,று.) (கருத்து) அறத்தின்வழியையறிந்தவர்வாய்ச்சொற்களே இனியசொற்களாம் என்பதாம். ❋ ஆல்- அசை-அன்போடு கலத்தல்- அன்புடைமையை வெளிப்படுத்தல். வஞ்சனையில்லாமை மெய்ம்மை. மெய்யுணர்ந்தவர் கருத்துக்கெல்லாம் செம்மையுடையதாய்த் தோன்றலாலே செம்பொருளெனப்பட்டது. இலவாஞ்சொல்லெனக்கூட்டுக. [இதனால் இனியசொல்லுக்கு இலக்கணம் சொல்லப்பட்டது.] (௧)

அகனமர்ந் தீதலினன்றே முகனமர்ந்......................*
தின் சொலனாகப் பெறின்..............................*

(இ-ள்.) முகனமர்ந்து - (கண்டபொழுதே) முகமலர்ந்து - இன்சொலனாக-(அதனோடு) இன்சொல்லையுமுடையவனாக-பெறின்-பெற்றால்-(அது)-அகனமர்ந்து- மனமகிழ்ந்து- ஈதலின்- (ஒருவருக்கு வேண்டிய பொருளைக்) கொடுத்தலினும்-நன்றே- நல்லதாம். எ-று.) (கருத்து) முகமலர்ந் தினியசொற்களைச் சொல்லுவானாகில் அகமலர்ந்து கொடுத்தலினு நல்லது என்பதாம். ❋ முகமலர்ச்சியோடு கூடியவின்சொல்- கொடுத்தல்போல் பொருள்வசத்த தாகாமல் தன்வசத்ததா யிருந்தாலும் தருமசிந்தை யுடையவர்க்கல்லது சுபாவமாக இராதாகையால் அதனினும் அரிதென்னுங் கருத்தால் இன்சொலனாகப் பெறினென்றார். (உ)

முகத்தா னமர்ந் தினிது நோக்கியகத்தானா......... ❋
மின்சொ லினதே யறம்............................ ❋

(இ-ள்.) அறம்- தருமமானது- முகத்தானமர்ந்து- (கண்டபோதே) முகத்தால்விரும்பி-இனிதுநோக்கி- இனிதாகப்பார்த்து-(பின்

௰-ஆம்-அதி-இனியவைகூறல்.

(௩)

சேர்ந்தவிடத்து)- அகத்தானாம்-மனத்துட்டோகிய-இன்சொலினதே இனியசொற்களைச் சொல்லுதலி னிடத்தே எ-று,) (கருத்து) தருமமானது இன்சொல்லினிடத்தே என்பதாம். ❋ அறமானது ஈகையினிடத்தே உள்ளதல்ல வென்பதாம். [இவை இரண்டு பாட்டாலும் முகமலர்ச்சியோடுகூடிய இன்சொல் முன்னகவே பற்றிக் கொள்ளுதலால் விருந்தோம்பலிலே சிறந்ததென்பது சொல்லப்பட்டது.]

துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு......... ❋
மின்புறூஉ மின்சொ லவர்க்கு .... ❋

(இ-ள்.) யார்மாட்டும்- எல்லாரிடத்தும் - இன்புறூஉம் - இன்பத்தைமிகுவிக்கும்- இன்சொலவர்க்கு- இனியசொற்களை யுடையவர்க்கு-துன்புறூஉம்-
துன்பத்தைமிகுவிக்கும்-துவ்வாமை-வறுமையுடை னது-இல்லாகும்-இல்லை. எ-று.) (கருத்து) இன்சொற்களை யுடையவர்க்குத் துன்பமில்லை என்பதாம். ❋ அப்படிப்பட்ட இன்சொல்லையுடையவர்க்கு யாவரும் நட்பினராதலால் துவவொன்பது கருத்து.
எல்லாச்செல்வமும்பெ

(௪)

பணிவுடைய னின்சொ லனாத
லொருவற்.....................❋
கணியல்ல மற்றுப்
பிற...............................❋

(இ-ள்.) ஒருவற்கு-ஒருவனுக்கு- அணி- ஆபரணமாவது|-பணிவுடையன்- (பெரியோரிடத்தே) வணக்கமுடையவனாகி-|இன்சொலனாதல்- (எல்லாரிடத்தும்) இனியசொல்லையுடையவனாயிருக்கையாம்.- பிற-இவ்விரண்டுமல்லாமல் உடம்பில்அணியுமற்றையாபரணங்கள்|- அல்ல-ஆபரணங்களாகாவாம். எ-று.) (கருத்து) ஒருவனுக்கின்சொல்லே ஆபரணமாம் என்பதாம். ❋ வணக்கமும் இன்சொல்லுக்குஇனமாதலால் உடன்கூறினர். மற்று-அசை.— தன்னின் வேறாயிருக்கையால் அணியும் ஆபரணங்களைப் பிறவென்றும், இவைபோல்பே

ரமுது செய்யாமையால் அல்லவென்றும், சொல்லினர். [இவை இரண்டுபாட்டாலும் இன்சொல்லுகளைச்சொல்லுவார்களுக்குஇம்மைப்பயன் சொல்லப்பட்டது.] (௫)

அல்லவை தேய வறம்பெருகு நல்லவை......................*
நாடி யினிய சொலின்...................................*

(இ-ள்.) நல்லவை- (பொருளினாலேபிறர்க்கு) நன்மையைத்தருஞ் சொற்களை}—நாடி-(மனத்தால்) ஆராய்ந்து- இனிய- இனிமையுள் -

ளவாக- சொலின்- (ஒருவன்) சொல்லுவானாயின்— (அவனுக்கு) அல்லவை-பாவங்கள்-தேய-தேய- அறம்-தருமமானது|-பெருகும் வளரும். எ,று.) (கருத்து) ஒருவன் இன்சொற்சொல்லுவானாகில்பாவந்தேயப் புண்ணியம் வளரும் என்பதாம். ❋ தேய்தலாவது- பாவம் தன்பகையாகிய அறம்வளர்தலால் தனக்குஇடமில்லாமல்குறைதல். நல்லசொற்களை ஒருவன் நாடிச்சொல்லுமிடத்தும் கடினமாகச்சொல்லின் அறமாகாதென்பதாம்.[இதனால்மறுமைப்பயன்சொல்லப்பட்டது.] (௬)

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று.......................*
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.......................... *

(இ-ள்.) பயனீன்று-(பொருளினாலேபிறருக்கு)நன்மையைக்கொடுத்து-பண்பின்- (இனிமைக்) குணத்தினின்றும்- தலைப்பிரியா -நீங்.

காத-சொல்-சொற்களானவை|- (ஒருவனுக்கு)நயனீன்று-(இம்மைக்கு) நீதியையும் உண்டாக்கி—நன்றிபயக்கும்- (மறுமைக்கு) அற.

த்தையும்} தரும். எ,று.) (கருத்து)இனியசொற்களானவைநீதியையுந்,தருமத்தையுந் தரும் என்பதாம். ❋ நீதி-உலகத்தோடு பொருந்

(எ)

சிறுமையு ணீங்கிய வின்சொன்
மறுமையு........................*
மிம்மையு மின்பந்
தரும்...................................*

(இ-ள்.) சிறுமையுணீங்கிய- (பொருளினாலேபிறர்க்கு) வருத்தஞ் செய்யாத-இன்சொல்- இனியசொற்களானவை|—(ஒருவனுக்கு) மறுமையு மிம்மையும்- வருபிறப்பிலு மிப்பிறப்பிலும்-இன்பம்-இன்பத்தை}—தரும்-கொடுக்கும். எ,று.) (கருத்து) இன்சொற்களானவையிருபிறப்பிலுமின்பத்தைத்தரும் என்பதாம். ❋ மறுமையின்பம் பெருதாகலின் முன்சொல்லப்பட்டது. இம்மை இன்பமாவது-உலகம் தினக்கு- வசப்படுதலால் நற்பொருள்களை அடைந்து இன்புறுதல். [இவை யிரண்டு பாட்டாலும் இருமைப் பயன்களும் ஒருசேர அடைதல் உறுதிசெய்யப்பட்டது.] (அ)

இன்சொலினி தீன்றல் காண்பா னெவன்கொலோ.......*
வன்சொல் வழங்கு வது...............................*

(இ-ள்.) இன்சொல்- (பிறருடைய) இனியசொற்களானவை|—இனிதீன்றல்- (தனக்கு) இன்பந்தருதலை}- காண்பான்- அநுபவித்தறி

ஒ-ஆம்-அதி-இனியவைகூறல்.

(சக)

இன்றவன்|-(அதுநிற்க)- வன்சொல்- கடுஞ்சொற்களை}- வழங்குவது-(பிறரிடத்தே),சொல்வது|—எவன்- என்னபயனைக்குறித்து. எ,று.) (கருத்து) இன்சொலின்பந் தருதலைக்காண்பவன் வன்சொற்சொல்லுவதென்ன என்பதாம். ❁ கடுஞ்சொல்- பிறருக்கும் இனிதன்றாகையால் அது சொல்லலாகாதென்பது கருத்து. (கூ)

இனிய வுளவாக வின்னாத கூறல்.......................❁
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.......................❁

(இ-ள்.) இனிய-(அறமுண்டாகும்) இன்சொற்களும்- உளவாக-(தன்னிடத்தே) யுண்டாயிருக்க- (அவற்றைச்சொல்லாமல்)- இன்னாத-(பாவமுண்டாகும்) கடுஞ்சொற்களை}— கூறல்-(ஒருவன்) சொல்லுதல்|-கனி-(இனிய) கனிகளும்- இருப்ப- (தன்னிடத்தே) யுண்டாயிருக்க- (அவற்றைத்தின்னாமல்) -காய்-(இனிமையில்லாத) காய்களை}-கவர்ந்தற்று - தின்பதனோடொக்கும். எ,று.) (கருத்து) இன்சொலிருக்க வன்சொற்சொல்லுதல் கனியிருக்க காயைத்தின்றாற்போலும் என்பதாம். ❁ உபமேயத்துக்குச் சொல்லப்பட்ட இனிமையும் இன்னாமையும் உபமானத்துக்கும் கொள்ளப்பட்டன.இனியகனிகள்- ஔவையுண்ட நெல்லிக்கனிபோல் அமிர்தானவை. இன்னாதகாய்கள்- எட்டிக்காய்போல் நஞ்சானவை. கடுஞ்சொற் சொல்லுதல்-முடிவிலே தனக்கே இனிதாகா தென்பதாம். [இவை இரண்டுபாட்டாலும்கடுஞ்சொற்சொல்லுதலின்குற்றம் சொல்லப்பட்டது

௰க-ஆம்-அ

தி-செய்ந்நன்றியறிதல்.

அஃதாவது-தனக்குப் பிறர்செய்த நன்றியை

மறவாமை. இனிய
சொற்களைச்சொல்லி
இல்லறத்தின்வழுவாதவர்க்கு நன்றிமறத்

தல் தீராக்குற்றமாதலின் இதனை நீக்குதற்பொருட்டு
அதன்பின் வைக்கப்பட்டது.

செய்யாமற் செய்த வுதவிக்கு
வையகமும்.............*
வானகமு மாற்ற லரிது.......
...............................*

(இ-ள்.) செய்யாமல்- (தனக்கு முன்னொருதவியும்) செய்யாதிருக்க-செய்த-(ஒருவன் பிறனுக்குச்) செய்த- உதவிக்கு- உதவிக்கு—
[லக]

(சஉ)
யக-ஆம்-அறி-செய்ந்நன்றியறிதல்.

வையகமும்-மண்ணுலகத்தையும்-வானகமும்- விண்ணுலகத்தையும் மாற்றல்-ஈடாகக்கொடுத்தலும்- (ஒத்தல்!) அரிது- அருமை. எ,று.) (கருத்து) ஒருவன் பிறருதவிவேண்டாது செய்தவுதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையுந் தந்தாலுமொத்தலரிது என்பதா

ம். ❋ பிரதியுபகாரங்களுக்கெல்லாம் காரணமிருக்கையால் காரணமில்லாத இவ்வுபகாரத்திற்கு அவை போதாவாயின. (௪)

காலத்தி னாற்செய்த நன்றி
சிறிதெனினு.................... ❋
ஞாலத்தின் மாணப் பெரிது.........
....:......... ... ❋

(இ-ள்.) காலத்தினால்-(ஒருவனுக்கு) முடிவுவந்த வளவிலே- செய்த-(ஒருவன்) செய்த-நன்றி- உபகாரமானது|-சிறிதெனினும்- (தன்னைநோக்கச்) சிறிதாயிருந்ததாயினும்-(அக்காலத்தைநோக்க)-ஞாலத்தின்-நிலவுலகத்தினும் - மாணப்பெரிது- மிகப்பெரிதாயிருக்கும். எ,று.) (கருத்து)ஒருவன்காலத்திற்செய்தவுதவி சிறிதாயினும் அது உலகினும்பெரிது என்பதாம். ❋ அக்காலத்தைநோக்கவேண்டுமேயல்லாமல் பொருட்சிறுமை நோக்க லாகாதென்பதாம். காலத்தினாலென்பது-வேற்றுமைமயக்கம். (௨)

பயன்றூக்கார் செய்த வுதவி
நயன்றூக்கி.................... ❋
னன்மை கடலிற் பெரிது..................
.... ❋

(இ-ள்.) பயன்- (தாம்செய்யும் உதவியைப் பெறுவோராலேதம க்குப் பின்வரும்) பயனை-தூக்கார்-ஆராய்தலிலராய்-செய்த-செய்த உதவி-உதவியாகிய-நயன்-நயத்தை-தூக்கின்-ஆராயின்-நன்மை— (அத)னன்மையானது-கடலின்-கடலினும்-பெரிது-பெரிது. எ,று (கருத்து) பின்வரும் பலனையெண்ணுமல் செய்தவுதவி நன்மைகட லினும்பெரிது என்பதாம். ❊ [இவைமூன்றுபாட்டாலும் முறை யேசெய்யாமற்செய்ததும், ஆபத்துவேளையிற்செய்ததும், பிரயோ சனத்தை ஆராயாமற்செய்ததும், அளவில்லாதவையாகுதல் சொல் லப்பட்டது.]

(௩)

திணைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்.........❊
கொள்வர் பயன்றெரி வார்...........................❊

(இ-ள்.) திணைத்துணை நன்றி-(தமக்குத்) திணையளவதாகிய உபகார த்தை-செயினும்- (ஒருவன்) செய்தானாயினும்- (அதனை அவ்வளவ தாக நினையாமல்)-பனைத்துணையா-பனையளவதாக-கொள்வர்-நினைப்

௧௧-ஆம்-அதி-செய்ந்நன்றியறிதல்.

(௫௩)

பார்.-பயன்- (அந்நினைப்பின்) பயனை- தெரிவார்- அறிபவர். எ,று.) (கருத்து) திணையளவுநன்றிசெய்தாலும்பனையளவு நன்றியாகக்கொ ள்வர் பெரியோர் என்பதாம். ❊ திணைபனையென்பன சிறுமைபெரு

மைகளுக்குங்காட்டும் அளவைகள். அத்திணைப்பின் பயனாவது அப்படிநினைப்பீயார்க்கு வரும் பிரயோசனம். (௪)

உதவி வரைத்தன் றுதவி யுதவி............... .... *
செயப்பட்டார் சால்பி ன்
வரைத்து...............................*

(இ-ள்.) உதவி-எதிர்செய்யும் உதவியானது|-உதவிவரைத்தன்று-(காரணமும்பொருளுங்காலமுமாகிய மூவகையாலு முன்செய்த) உதவியளவினதன்று.-உதவிசெயப்பட்டார்- அவ்வுதவிசெயப்பெற்றுக்கொண்டவரது-சால்பின்வரைத்து-தகுதியளவினதாம். எ,று.) (கருத்து) உதவிக்களவில்லை உதவிசெய்யப்பெற்றுக்கொண்டவர்மகிழ்ச்சியளவேயளவாம் என்பதாம். ❊ சால்பு எவ்வளவுபெரிதாயுள்ளது உதவியும் அவ்வளவுபெரிதாமென்றற்குச்சால்பின்வரைத்தென்றார். [இவை யிரண்டுபாட்டாலும் செய்யாமற் செய்வதுமுதலான மூன்றுமல்லாத உதவியும் அறிவோர்க்குச் செய்தவிடத்துப் பெரிதாமென்பது சொல்லப்பட்டது:] (௫)

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க....... ....*
துன்பத்துட் டுப்பாயார் நட்பு ...
.... *

(இ-ள்.) துன்பத்துள்- துக்ககாலத்தில்- துப்பாயார்-(தனக்கு)உதவியானவரது-நட்பு- சிநேகத்தை}- துறவற்க- விடாதிருக்கக்கடவன்.-மாசற்றார்-(அறிவொழுக்கங்களிற்) குற்றமற்றவரது-கேண்மை உறவாந்தன்மையை}- மறவற்க - மறவாதிருக்கக் கடவன். எ-று.) (கருத்து) குற்றமற்றவர் சிநேகத்தை மறவாதிருக்கக் கடவன். துன்பகாலத்துதவியானவர் சிநேகத்தை விடாதிருக்கக்கடவன் என்பதாம். ❋ இம்மைக்கு உறுதிசொல்லவந்தவர் மறுமைக்கும் உறுதி உடன்சொல்லினார். (௬)

எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண் ....❋
விழுமந் துடைத்தவர் நட்பு.... ... ...
.... ❋

(இ-ள்.) தங்கண்-தம்மிடத்துஉண்டாகிய-விழுமம்- துன்பத்தை}- துடைத்தவர்-நீக்கினவரது-நட்பு- நட்பினை}-எழுமை- (வினைப்பயன்றொடரு) மெழுமையினையுடைய- எழுபிறப்பும்-(தம்) மெழுவ

(௬௪)

௧௧-ம்-அதி-செய்ந்நன்றியறிதல்.

கைப்பிறப்பினும்- உள்ளுவர் (நல்லோர்|) நினைப்பார். எ,று.) (கருத்து) துன்பத்தை நீக்கினவர் சிநேகத்தை யெழுபிறப்பினு நினைப்பர். பெரியோர் என்பதாம். ❋ வினாவுதோன்றத் துடைத்தவொன்றுர். எழுமை யெழுபிறப்புமென்றதற்கு-எழேழுதலைமுறையு மெனினுமாம் [இவையிரண்டுபாட்டாலும் நன்றிசெய்தவாது நட்பைவிடலாகாதென்பது சொல்லப்பட்டது.] (எ)

நன்றிமறப்பது நன்றன்று நன்றல்ல........................❋
தன்றே மறப்பது நன்று......................................❋

(இ-ள்.) நன்றி- (ஒருவன்முன்செய்த) நன்மையை - மறப்பது-மறந்துவிடுவது-நன்றன்று|-(ஒருவனுக்கு) அறனல்ல.- நன்றல்லது (அவன்செய்த) தீமையை}-அன்றே-செய்தபொழுதே-மறப்பது-மறந்துவிடுவது|-நன்று-அறமாம். எ,று.) (கருத்து) பிறர்செய்த நன்றியைமறப்பது தருமமல்ல பிறர்செய்த தீமையைமறப்பது தருமம் என்பதாம். ❋ [இதனுல் நன்மையும் தீமையும் ஒருவனுலேசெய்யப்பட்டவிடத்து அவ்விரண்டிலே மறப்பதும் மறவாததும் வகுத்துச் சொல்லியவாறு.] (அ)

கொன்றன்ன வின்ன செயினு மவர்செய்த..............❋
வொன்றுநன்றுள்ளக்
கெடும்..................................❋

(இ-ள்.) (தமக்கு முன்னொரு நன்மைசெய்தவர்) - கொன்றன்ன- (பின்) கொன்றாற்போலும்-இன்னா- வெறுக்கப்படுமவைகளை}-செயினும்-செய்தாராயினும்-அவர்செய்த-அவர்செய்த-ஒன்றுநன்று-அந்நன்மையொன்றையும்}-உள்ள-நினைக்க -கெடும்- (அவையெல்லாம்) இல்லையாம் எ,று.) (கருத்து) நன்மைசெய்தவர் கொன்றாற்போலுந் தீன்மைசெய்யினு நன்மை யொன்றை நினைக்கத் தீன்மையெல்லாங்கெடும் என்பதாம். ※ தினையளவு பனையளவாகக் கொள்ளப்படுதலினாலே அவ்வொன்றுமே அவைகளையெல்லாம் கெடுக்குமென்பதாம். [இதனால் நன்றல்லதை அன்றே மறக்கும் விதம் சொல்லப்பட்டது.] (௯)

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை.........*
செய்ந்நன்றி
கொன்ற மகற்கு...............................*

(இ-ள்.) எந்நன்றி- எந்தவறங்களை}
[பெரியவறங்களை யென்றப
டி]-கொன்றார்க்கும்-கெடுத்தவர்க்கும்-உய்வு-பாவத்தினீங்கும்வழி|

யக-ஆம்-அறி-செய்ந்நன்றியறிதல்.

(சூ௫)

உண்டாம்-உண்டாகும்- செய்ந்நன்றி- (ஒருவன்) செய்த வுபகாரத்தை}-கொன்றமகற்கு-கெடுத்தமனிதனுக்கு-உய்வு-அப்பாவத்தினீங்கும்வழி-இல்லை-இல்லை: எ,று.) (கருத்து) எவ்வகைத்தருமங்களையழித்தவர்களுக்கு மீடேறும்வழியுண்டாம் செய்ந்நன்றியைக்கெடுத்தவர்களுக்கீடேறும் வழியில்லை என்பதாம் ❋பெரிய அறங்களைச்சிதைத்தலாவது- மகளிர்க்கருவையழிக்கை முதலாகிய பாதகங்களைச்செய்தல். [இதனாலேசெய்த நன்றியைக் கெடுத்தலின் கொடுமை சொல்லப்பட்டது.] (ய)

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

யஉ-ஆம்-அதி-நடுவுநிலைமை.

அஃதாவது-பகைவர் அயலோர் நட்பினர்இம்மூவகையோரிடத்தும் அறத்தின்வழுவாமல் ஒப்பநிற்குநிலைமை. இது நன்றிசெய்தவரிடத்து அந்நன்றியை நினைத்தவிடத்தே கெடுமன்றே அவ்விடத்தும் கெடலாகாதென்றற்குச் செய்ந்நன்றியறிதலின்பின் வைக்கப்பட்டது.

தகுதியெனவொன்று நன்றே பகுதியாற்..........❋
பாற்பட் டொழுக்கப் பெறின்.......................❋

(இ-ள்.) தகுதியெனவொன்றே - நடுவுநிலைமை யென்று சொல்லப்படும் அறமே|-நன்று- நன்றாகும்-பகுதியால்- (பகைவர் அயலோர்நட்பினர் என்னும்) பிரிவுதோறும் - பாற்பட்டு- (தன்)முறைமையைவிடாது - ஒழுகப்பெறின் - நடக்கப்பெறின். எ-று.) (கருத்து) நடுவுநிலைமையென்று சொல்லும் அறமேநல்லதாம் என்பதாம். ❊ ஏகாரம்-ஒன்றுஎன்பதனோடு கூட்டப்பட்டது பெறினென்பது அவ்வொழுக்கத்தி னருமைதோன்ற நின்றது. [இதனால் நடுவுநிலைமையது சிறப்புச்சொல்லப்பட்டது.] (௧)

செப்ப முடையவ னாக்கஞ் சிதை வின்றி................❊
யெச்சத்திற் கேமாப் புடைத்து........................❊

(இ-ள்.) செப்பமுடையவன் - நடுவுநிலைமையை யுடையவனது- ஆக்கம்-செல்வமானது|-சிதைவின்றி-(பிறர்செல்வம்போல்) அழிதலின்றி-எச்சத்திற்(கும்)-(அவன்) சந்ததியார்க்கும்- ஏமாப்பு- உறுதியாதலை - உடையதாம். எ-று.) (கருத்து) நடுவுநிலைமையுடையவன்

[லஉ]

செல்வமானது அவன்சந்ததிக்குறுதி யுடைத்து என்பதாம். ❊ விகாரத்தினாலே தொக்குநின்று வருவிக்கப்பட்ட வெச்சவும்மையால் சாமளவும் அவனுக்கும் உறுதியாதல் பெறப்படும் அறத்தோடுவருதலால் அப்படிப்பட்டதாயிற்று (௨)

நன்றேதரினு நடுவிகந்தா மாக்கத்தை....................❊
யன்றே யொழிய விடல்..❊

(இ-ள்,) நன்றேதரினும்-(தீங்கன்றி) நன்மையேதரினும்- நடுவி கந்து-நடுவுநிலைநீங்கலால்-ஆம்-உண்டாகின்ற-ஆக்கத்தை- செல்வத் தை]-அன்றே-அப்போதே-ஒழிய-நீங்க- விடல்- விடக்கடவன். எ, று.) (கருத்து) நடுவுநிலைமையில்லாதவருஞ் செல்வநன்மையைத்த ரினுமப்பொழுதேவிடக்கடவன் என்பதாம். ❋ நன்மை தாராமை யால் நன்றேதரினுமென்றார். [இவையிரண்டு பாட்டாலும் முறை யே-நடுவுநிலைமையால் வந்தசெல்வம்-நன்மையைத் தருதலும், மற் றைச்செல்வம்-தீமையைத்தருதலும், சொல்லப்பட்டன.] (௩)

தக்கார் தகவில ரென்ப தவரவ.....................❋
ரெச்சத்தாற் காணப் படும்.....................❋

(இ-ள்.) தக்கார்- (இவர்) நடுவுநிலைமையையுடையவர்—தகவிலர் (இவர்) நடுவுநிலைமையையில்லாதவர்-என்பது-என்னும்விசேஷம்|- அவரவர்- அவரவருடைய- எச்சத்தால்- நல்லபுதல்வரது இருப்பினு லும் இல்லாமையாலும்- காணப்படும்- அறியப்படும். எ, று.) (கருத் து) நடுவுநிலைமையை யுடையவர் நடுவுநிலைமை யில்லாதவர் என்ப தைச் சந்ததியாற் காணலாம் என்பதாம். ❋ நடுவுநிலைமையை உ டையவருக்குச் சந்ததி உண்டாதலும், இல்லாதவர்க்கு அது இல்லா மற்போதலும், நிச்சயமாதலின் அவ்விருவகையோர்களையும் அறித ற்கு அவை அடையாளங்களாயின. [இதனால் நடுவுநிலையோரையும், அல்லாதோரையும்; அறியுமாறு சொல்லப்பட்டது.] (௪)

கேடும்பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்.....................❋
கோடாமை சான்றோர்க் கணி.....................❋

(இ-ள்.) கேடும்- (தீவினையினாலே) கேடும்|—பெருக்கமும்- (நல் வினையினாலே) பெருக்கமும்|-இல்லல்ல-(யாவருக்கும்) இல்லாதவை யல்ல. [முன்னமேஅமைந்துகிடந்தனவென்றபடி]—(அவ்வழியை அறிந்து)-நெஞ்சத்து- மனதிலே-கோடாமை- (அவைகாரணமாக

௧௨-ஆம்-அதி-நடுவுநிலைமை.

(௬௯)

ச்) சாய்தலில்லாமையே|- சான்றோர்க்கு- (அறிவால்)நிறைந்தோர்க்கு-அணி-அழகாம். எ,று.) (கருத்து) பெரியோர்க்கு நடுவுநிலைமையே யழகாம் என்பதாம். ❊ அவைகாரணமாகச் சாய்தலாவது-கேடும், பெருக்கமும், பழவினையினாலே வந்துகொண்டிருக்கஇப்போதை முயற்சியால் வருமவையாக நினைத்துக் கேடுவாராமையைக்குறித்தும், பெருக்கம் வருதலைக்குறித்தும்,ஒருபக்கத்திலே சாய்தலாம், அவற்றுக்குக்காரணம் பழவினையே இச்சாய்தலல்ல என உண்மையுணர்ந்து நடுவுநிலையா யிருக்கை அறிவுடைமைக்கு அழகுசெய்தலாலே சான்றோர்க்கணியென்றார். (௫)

கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச................❊
நடுவொரீஇ யல்ல செயின்...........................❊

(இ-ள்.) (ஒருவன்|)—தன்னெஞ்சம்-தனதுமனம்- நடுவு-நடுவுநிலைமையிலிருந்து- ஒரீஇ- நீங்கி- அல்ல- பக்ஷபாதங்களை}- செயின்—செய்யநினைக்குமாயின்- (அந்நினைவை})-யான்-நான்—கெடுவல்-கெடக்கடவேன்-என்பது-என்றுணருமுற்பாதமாக-அறிக-அறியக்கடவன். எ,று.) (கருத்து) நடுவுநிலைமை நீங்குவானாயின் கெடக்கடவனென்றறியக்கடவன் என்பதாம். ❊ உற்பாதம்-பின்வரும் நன்மை தீமைகளை முன்னறிவிக்குங்குறி. நினைத்தலும் - செய்தலோடொக்குமாதலின் செயினென்றார். (௬)

கெடுவாக வையா துலக நடுவாக........................❊
நன்றிக்கட் டங்கியான்
றாழ்வு..........................❊

(இ-ள்.) உலகம்-உயர்ந்தோர்|-நடுவாக-நடுவாக-(நின்று)-நன்றிக்கண்- அறத்தின்கண்ணே- தங்கியான்- தங்கினவனது- தாழ்வு-வறுமையை}-கெடுவாக-வறுமையாக-வையாது- வையார். [நினையாரென்றபடி.] எ,று.) (கருத்து) நடுவுநிலைமைத் தருமத்தி னின்றவன் வறுமையைப் பெரியோர் தாழ்வாகநினையார் என்பதாம். ❊ கெடுதலென்பது விருத்திகெட்டுவந்தது. செல்வமென்றுகொள்ளுவாரென்பதாம். [இவைமூன்றுபாட்டாலும் முறையே-கேடும்-பெருக்கமும்-பக்ஷபாதத்தால் வருவனவல்லவென்பதூஉம். இதனாலேகேடுண்டாமென்பதும், இதுசெய்யாதவனது தாழ்வு கேடாகா தென்பதும், சொல்லப்பட்டன.] (எ)

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற் ❊
கோடாமை
சான்றோர்க் கணி..❊

(சுஅ)

௰உ-ஆம்-அதி-நடுவுநிலைமை.

(இ-ள்.) சமன்செய்து- (முன்னேதன்னைச்) சமனாகச்செய்து-சீர்தூக்கும்- (பின்னேதன்னிடத்து வைக்கப்பட்ட பாரத்தை) அளவு செய்வதாகிய- கோல்போல்- துலாம்போல்-அமைந்து- (இலக்கணங்களாலே) நிறைந்து—ஒருபால்- ஒருபக்கத்திலே-கோடாமை-சாயாமையானது- சான்றோர்க்கு - (அறிவால்) நிறைந்தோருக்கு- அணி- அழகாம். எ-று. (கருத்து) ஒருவர்பக்கமுஞ் சாயாமையே பெரியோர்க்கழகாம் என்பதாம். ❋ கோலுக்குச் சொல்லப்பட்ட- சமன்செய்தலும்- சீர்தூக்கலும் - சான்றோருக்கும், சான்றோருக்குச் சொல்லப்பட்ட -அமைதலும்- ஒருபாற்கோடாமையும்-கோலுக்கும், கூட்டுக. சான்றோர் சீர்தூக்கலாவது- வாதிபிரதிவாதிகளாலே அறிவிக்கப்பட்டவற்றை முறையாலுள்ளபடியறிதல். ஒருபாற்கோடாமையாவது- அவ்வுள்ளவற்றை மறைக்காமல்-பகைவர்-அயலோர்-நட்பினர்-இம்மூவகையோருக்கும், ஒப்பச்சொல்லுதல். (அ)

சொற்கோட்ட மில்லது செப்பமொருதலையா........❋
வுட்கோட்ட மின்மை
பெறின்..........................❋

(இ-ள்.) செப்பம்- நடுவுநிலைமையாவது- சொல்- சொல்லினிடத்தே-கோட்டமில்லது -கோணுதலில்லாததாகும்,— (அதுஅற்மாவது)-உள்-மனத்தினிடத்தே- கோட்டமின்மை- கோணுதலில்லாமையை-ஒருதலையா- உறுதியாக- பெறின்- பெற்றால். எ-று.) (கருத்து) சொல்லினிடத்தே கோணுதலில்லாமையே நடுவுநிலைமையாம் என்பதாம். ❋ [சபையாரைநோக்கி இவை யிரண்டுபாட்டாலும் வாயினாலே தருமத்தின்படியே சொல்லினும் மனது ஒருபக்கத்திலேசாய்ந்திருக்குமாயின் அச்சொல் நடுவுநிலைமையாகாதென்பது சொல்லப்பட்டது.
(கூ)

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்...........❋
பிறவுந் தமபோற் செயின்..........

(இ-ள்.) பிறவும்-பிறர்பொருள்களையும்- தமபோல்- தம்பொருள்களைப்போல்——பேணி-காத்து -செயின்- செய்தால்- (அச்செய்கையானது) வாணிகஞ்செய்வார்க்கு- வியாபாரஞ்செய்வார்க்கு-வாணிகம்-நல்லவியாபாரமாம் எ-று.) (கருத்து) பிறர்பொருளையுந் தமதுபொருளைப்போலக்காத்து வியாபாரஞ்செய்யி லது நல்லவியாபாரமாம் என்பதாம். ❀ பிறவுந்தமபோற் செய்தலாவது- கொள்வதுஅதிகமும், கொடுப்பதுகுறைவும், ஆகாமல் — ஒப்பநாடிச்செய்

௰௨-ஆம்-அதி-நடுவுநிலைமை. (௪௯)

தல். [வணிகரைநோக்கி இதனால் பிறர்பொருள்களையும் தம்பொருள்களைப்போற் செய்யும் நடுவுநிலைமையுடையவர்க்கு வாணிகம் நன்றுமென்பது சொல்லப்பட்டது.
(௰)

௰௩-ஆம்-அதி- அடக்கமுடைமை.

அஃதாவது-காயமும், வாக்கும்,மனமும், தீயவழியிலேசெல்லாமல் அடங்குதலுடையனாயிருத்தலாம். இது-பிறர்குற்றம் போலத் தங்குற்றம் காணும் நடுவுநிலைமை யுடையவனுக்கு உரித்தாதலால்
அந்நடுவுநிலைமையின்பின்வைக்கப்பட்டது

அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை...........................※
யாரிரு ளுய்த்து விடும்..※

(இ-ள்.) (ஒருவனை)-அடக்கம்-அடக்கமாகிய அறமானது-அமரருள்-தேவருலகத்தில்-உய்க்கும்- கொண்டுபோய்விடும்.- அடங்காமை-அடங்காமையாகிய பாவமானது-ஆரிருள்- பொறுத்தற்கரிய நரகத்தில்-உய்த்துவிடும்- செலுத்திவிடும். எ-று.) (கருத்து) அடக்கமானது ஒருவனைத் தேவருலகத்திற் செலுத்தும் அடங்காமையானது நரகத்திற்செலுத்தும் என்பதாம். ※இருளென்பது- நரகவகையிலொன்று. (க)

காக்க பொருளா வடக்கத்தை யாக்க.........................※
மதனினூஉங் கில்லை யுயிர்க்கு..........
.....................※

(இ-ள்.) அடக்கத்தை-அடக்கத்தை)-பொருளா-(உறுதிப்)பொருளாக-காக்க-காக்கக்கடவன்.-உயிர்க்கு- மக்களுயிர்க்கு- அதனினூஉங்கு-அதனின்மேற்பட்ட-ஆக்கம்-செல்வமானது!- இல்லை-இல்லை(ஆதலால்). எ-று.) (கருத்து) அடக்கத்தைக்காக்கக்கடவன்மக்களுயிர்க்கதைவிட செல்வமில்லை என்பதாம். ※ உயிர் இங்கேமனிதருயிரைக் காட்டிநின்றது. அறிந்து அடங்கிப்பயன்கொள்வது அதுவேயாகலின்

செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்..........................※
தாற்றி னடங்கப் பெறின்....
.........................※

(இ-ள்.) அறிவறிந்து - (அடங்குதலேநமக்கு) அறிவாவதென்று அறிந்து-ஆற்றின்- நல்வழியால்- (ஒருவன்)—அடங்கப்பெறின்-அ

[மக]

ட்ங்கப்பெற்றால்- செறிவு- அவ்வடக்கமானது|-அறிந்து- (நல்லோ ரால்) அறியப்பட்டு- சீர்மை- மேன்பாட்டை- பயக்கும்- (அவனுக் குத்) தரும். எ,து.) (கருத்து) ஒருவனடங்கி நடப்பானாகில்அவ்வட க்கமேன்மையைத்தரும் என்பதாம். ❋இல்வாழ்வானுக்குஅடங்கும் வழியாவது- காயமும் வாக்கு மனமும் அவன்வசப்படுதல். (ரு)

நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற..........................❋
மலையினு மாணப் பெரிது.........................❋

(இ-ள்.) நிலையின்-(இல்வாழ்க்கையாகியதன்) வழியில்-திரியாது வேறுபடாது-(நின்று)—அடங்கியான் - அடங்கினவனது- தோற்ற ம்-உயர்ச்சியானது|-மலையினும்- மலையுயர்ச்சியினும்- மாணப்பெரி து-மிகப்பெரிதாம். எ,று.) (கருத்து) அடங்கி நடப்பவ னடக்க ம லையைப்பார்க்கினு மிகப்பெரிது என்பதாம். ❋ வேறுபடாதுநின் று அடங்குதல்- ஐம்பொறிகளாலும், ஐம்புலன்களையும் அநுபவித் துக்கொண்டிருந்தே அடங்குதல். மலை அதனுயர்ச்சியை உணர்த்த லால் ஆகுபெயர். (ச)

எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்....................❋
செல்வர்க்கே செல்வந் தகைத்து.........................❋

(இ-ள்.) பணிதல்-(பெருமைப்பாடில்லா) தடங்குதல்|- எல்லார்க் கும்-யாவருக்கும்-நன்றாம்- (ஒப்ப) நன்றாகும்- (ஆயினும்)— அவ ருள்ளும்-அவருள்ளும்- செல்வர்க்கே-செல்வர்க்கே - செல்வந்தகை த்து-வேறொரு செல்வமாய்த்தோன்றுஞ்சிறப்பினையுடையதாம் .எ, று.) (கருத்து) அடக்கம் யாவர்க்கு நல்லதாகும். அது செல்வர்க்கு வேறுசெல்வம்போலிருக்கும்என்பதாம். ❋ பெருமைப்பாட்டையு

ண்டாக்கும்- கல்வியும், குடிப்பிறப்பும், உடையவர்- அது இல்லாமல் அவைகளாலே அடங்கியவிடத்து - அவ்வடக்கம் சிறந்துதோன்றுதாதலின்-செல்வர்க்கேசெல்வந்தகைத்தென்றார். செல்வத்தகைத்தென்றது - விகாரப்பட்டுநின்றது. [இவ்வையந்து பாட்டாலும் பொதுவகையால் அடக்கத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.(ரு)

ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி............. ... *
னெழுமையு மேமாப் புடைத்து...............................*

(இ-ள்.) (ஒருவன்)—ஒருமையுள்- ஒருபிறப்பின்கண்ணே-ஆமைபோல்-ஆமையைப்போல- ஐந்து-ஐந்தை, அடக்கலாற்றின்-அடக்

௱௩-ஆம்-அதி-அடக்கமுடைமை.

(௫௪)

கவல்லவனாகில்- (அவ்வல்லமை| அவனுக்கு)—எழுமையும்-எழுபிறப்பின்கண்ணும்- ஏமாப்புடைத்து- காவலாதலையுடையதாம். எ,று.) (கருத்து) ஒருவனைம்பொறியடக்க வல்லவனாகில் எழுபிறப்பிற்கும் உறுதியுடைத்தாம் என்பதாம். ஆமை அடக்குமைந்து - கால்கள் நான்கும், தலையொன்றும், ஆகியவுறுப்புக்கள்.அவ்வடக்கம்-துன்பம்சேராதிருத்தற்கு ஒருவன் அடக்கவேண்டுமைந்து-மெய் வாய்-கண்-மூக்குச் செவி யென்னும் பொறிகள். இவ்வடக்கம்- பாவம்சேராதிருத்தற்கு. ஒருபிறப்பிலே செய்யப்பட்ட வினைப்பயன்- எழுபிறப்புந் தொடருமென்பது- இதனாலறிக. [இதனாலே காயத்தினடக்கம்சொல்லப்பட்டது.] (சா)

யாகாவா ராயினு நாகாக்க காவாக்கால்.....................*
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

....*

(இ-ள்.) யா- (காக்கவேண்டுமவை) யாவையும் - காவாராயினும்- காக்கமாட்டாராயினும்-நா-நாவொன்றையும்-காக்க- காக்கக்கடவு ர்.—காவாக்கால் - (அதனைக்) காக்கமாட்டாராயின்- சொல்லிழுக்கு ப்பட்டு- சொற்குற்றத்திலே அகப்பட்டு- சோகாப்பர்- (தாமே) து ன்பப்படுவார் எ,று.) (கருத்து) நாவொன்றே காக்கக்கடவர்காவா விட்டாற் சொற்குற்றம் பொருந்தித் துன்பப்படுவர் என்பதாம். ❋ யாவென்பது- எவையென்னும் பொருளைத்தருகிற அஃறிணைப்பன் மை வினாப்பெயர். சொற்குற்றம்-சொல்லிடத்தே தோன்றுங் குற்ற ம்-சோகாப்பவென்பது ஒருசொல். (எ)

ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி..... ....❋
னன்றாகா தாகி விடும்.................... ....❋

(இ-ள்.) தீச்சொல்- தீயசொற்களது- பொருட்பயன்-பொருள்க ளாலே (பிறருக்குவரும்) பயனானது—ஒன்றானும்-ஒன்றாயினும்-உ ண்டாயின்- (ஒருவனிடத்திலே) உண்டாவதாயின்—நன்று-(அவனு க்குப்பிறவறங்களாலுண்டாகிய) நன்மையானது- ஆகாதாகிவிடும்- தீதாய்விடும். எ,று.) (கருத்து) கொடுஞ்சொல்லொன் றுண்டாயின் அவனுக்கு நன்மையுண்டாகாது என்பதாம். ❋ தீயசொல்- பொய் குறளை-கடுஞ்சொல்-ஆம்-பயன்- துன்பம். (அ)

தீயினாற் சுட்டபு ணுள்ளாறு மாறாதே.......... ....❋
நாவினாற் சுட்ட வடு ....❋

(கூ)

௧௩-ஆம்-அதி-அடக்கமுடைமை.

(இ-ள்.) (ஒருவனையொருவன்)— தீயினால்- நெருப்பால்- சுட்ட-சுட்ட-புண்-புண்ணானது|- (உடம்பினிடத்தேயிருந்தாலும்)-உள்-மனத்தினிடத்தே-ஆறும்-(அப்போதே) ஆறும்.— (அப்படியல்லாமல்) நாவினால்- (தீயசொற்களையுடைய) நாவினாலே -சுட்ட- சுட்ட-வடு-வடுவானது|-(அதனிடத்தும் எப்பொழுதும்) ஆறாது-ஆறாது. எ,று.) (கருத்து) தீயாற்சுட்டபுண்ணாறும். நாவாற்சுட்டபுண்ணாறாது என்பதாம். ❋ ஆறிப்போதலால் தீயினாற்சுட்டதனைப் புண்ணென்றும், ஆறாமையால் நாவினாலே சுட்டதனை வடுவென்றும், சொல்லினார். [தீயாகியஉபமானத்தினும் தீயசொல்லாகிய உபமேயத்திலே ஆறாமையை அதிகமாகச் சொல்லுதலாலேவேற்றுமையணியாகும்.][இவை மூன்றுபாட்டாலும் வாக்கின் அடக்கஞ் சொல்லப்பட்டது.] (கூ)

கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி................ ❋
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.... ......

... . ❋

(இ-ள்.)கதம்-கோபத்தை}-காத்து-(மனத்திலேதோன்றாமல்)காத்து-கற்று-கல்வியுடையவனுகி-அடங்கல்- அடங்குதலில்- ஆற்றுவான்-வல்லவனாயிருப்பவனது-செவ்வி-சமயத்தை}—அறம்-அறக்கடவுளானவர்|- பார்க்கும்- பாராநிற்பான்-ஆற்றில்- (அவனைச்சேரும்) வழியிலே —நுழைந்து-நுழைந்து. எ,று.) (கருத்து) கற்றடங்க வல்லவனாயிருப்பவன் சமயத்தைத் தருமக்கடவுள் பார்க்கும் என்பதாம். ❋ அடங்குதல்- மனம் புறத்திலே பறவாமல் அறத்திலே நிற்றல். செவ்வி- தன்குறைசொல்லுதற் கேற்றகாலம். இப்படிப்பட்டவனை அறக்கடவுள் தானேசென்று அடைவானென்பதாம். னவடக்கம் சொல்லப்பட்டது]

[இதனாலே ம
(ய)

யசு- ஆ ய்-அதி- ஒழுக்க மு டைமை.

அஃதாவது-தங்கள் தங்கள்

வருணாசிரமங்களுக்குச் சொல்லப்பட்ட

ஆசாரத்தை யுடையவனா யிருக்கையாம். இதுகாயமுத லானவை அடங்கினவர்க்கல்லது முடியாதாகலின் அதன்பின்வைக்கப்பட்டது.

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க ..

.......................*

முயிரினு

மோம்பப் படும்.....................................*

யசு-ஆம்-அரி-ஒழுக்க முடைமை.

(௱௩௰)

(இ-ள்.) ஒழுக்கம்-ஆசாரமானது-விழுப்பம்-சிறப்பை-தரலான் (எல்லாருக்கும்) கொடுத்தலால்-ஒழுக்கம்- அவ்வாசாரமானது-உயிரினும்-உயிரைப்பார்க்கிலும்-ஓம்பப்படும்-காப்பாற்றப்படும். எ-று (கருத்து) ஆசாரமானது சிறப்பைத்தரலாலவ்வாசார முயிரினுமேலானது என்பதாம். ❊ உயர்ந்தோர்க்கும் இழிந்தோர்க்கும் சமமாகச் சிறப்பினைத்தருதலால்-விழுப்பந்தரலானெனப் பொதுப்படச்சொல்லினார் சுட்டுப்பெயர்-வருவிக்கப்பட்டது. உயிர்- எல்லாப் பொருளினுஞ் சிறந்ததாயினும் ஒழுக்கம்போற் சிறப்பைத் தாராமையால் உயிரினு மோம்பப்படுமென்றார். (க)

பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்......❊
தேரினு மஃதே
துணை......................................❊

(இ-ள்.) ஒழுக்கம்-ஆசாரத்தை-ஓம்பி-(ஒன்றாலும்அழிவுபடாமற்)பேணி-பரிந்து-வருந்தியும்-காக்க- காக்கக்கடவன்.-தெரிந்து-(பலவறங்களையும்) ஆராய்ந்து-(இவற்றுள் இருமைக்குந் துணையாவது எதுவென்று)-ஓம்பி-(மனத்தை) அடக்கி-தேரினும்-அறிந்தாலும்-துணை- துணையாய்முடிவது- அஃதே- அவ்வாசாரமே. (ஆதலால்) எ-று.) (கருத்து) ஆசாரத்தைக் காக்கக்கடவனவ்வாசாரமே துணையென்பதாம். ❊பரிந்துமென்னும்மை-விகாரத்தால்தொக்கது. [இவையிரண்டுபாட்டாலும் ஒழுக்கத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.]

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க.........................❊
இழிந்த பிறப்பாய் விடும்.................................❊

(இ-ள்.) (எல்லார்க்கும்)- ஒழுக்கமுடைமை- (தத்தம் வருணத்துக்குஎற்ற ஆசாரமுடைமையானது) -குடிமை- குலமுடைமையாம் —இழுக்கம்-(அவ்வாசாரத்தினின்றுந்) தவறுதலானது- இழிந்தபிறப்பாய்விடும்- தாழ்ந்தவருணமாய்விடும். எ-று.) (கருத்து) ஆசாரமேகுலமாம். அவ்வாசார மில்லாமையே குலவீனமாம் என்பதாம். ※ ஒழுக்கத்திலிருந்து தவறுதல் இழிந்தபிறப்பாய் விடுமெனவே ஒழுக்கத்தினுயர்தல் உயர்ந்த பிறப்பாய்விடுமென்பதும் கொள்ளப்படும்.குலம்-குடிச்சிறப்பு. (௩)

மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்.......... *

பிறப்பொழுக்க ங் குன்றக்

கெடும்.........................*

(இ-ள்.) ஓத்து-(கற்ற)

வேதத்தை -மறப்பினும்- மறந்தானாயினும் (௩௪)
[௰௪]

௰௪-ஆம்-அதி-ஒழுக்கமுடைமை.

ம்—கொளலாகும்-(வருணங்கெடாமையினாலே பின்னும்) ஓதிக்கொள்ளலாம்.-பார்ப்பான்-பிராமணனது-பிறப்பு- உயர்ந்தவருணமானது|-ஒழுக்கங்குன்ற-ஆசாரங்குறைய-கெடும். அழியும். எ,று.) (கருத்து) பார்ப்பான்வேதத்தை மறந்தாற் கற்றுக்கொள்ளலாம். ஆசாரங்குறைந்தாலவன் குலங்கெடும் என்பதாம். ❋ மறந்தவிடத்தே இழிகுலத்தானும் ஆதலால் மறக்கலாகாதென்னுங் கருத்தால் மறப்பினுமென்றார். சிறப்புடைய முதல்வருணத்துக்குச் சொல்லுதலினாலே இது மற்றைவருணங்களுக்கும் கொள்ளப்படும். (சு)

அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை............❋
யொழுக்க மிலான்க ணுயர்வு...............................❋

(இ-ள்.) அழுக்காறுடையான்கண்-பொறாமையுடையவனிடத்தே ஆக்கம்போன்று- செல்வமானதுபோன்று- ஒழுக்கமிலான்கண்-ஆசாரமில்லாதவனிடத்தே- உயர்வு- உயர்ச்சியானது|- இல்லை- இல்லை. எ,று.) (கருத்து) பொறாமையுள்ளவனிடத்துச் செல்வமில்லாமைபோல ஆசாரமில்லாதவனிடத்து மேன்மையில்லை என்பதாம். ❋ கொடுப்பதழுக்கறுப்பானென்னுங் குறளிற் சொன்னபடியே இவ்வுபமானத்தினால்-ஒழுக்கமில்லாதவனது சுற்றத்தாருக்கும் உயர்ச்சியில்லையென்பது கொள்ளப்படும். உயர்வு-உயர்குலமாதல். (௫)

ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தி.................❋
னேதம் படு பாக்கறிந்து.......................................❋

(இ-ள்,) உரவோர் - மனவலிமையை யுடையோர்|- (செய்தற்கருமைநோக்கி)- ஒழுக்கத்தின்-ஆசாரத்தில்-ஒல்கார்-சுருங்கார்.-இழுக்கத்தின்-அத்தவறுதலால்-ஏதம்- (இழிகுலமாதலாகிய) குற்றம்-படுபாக்கு-உண்டாதலை- அறிந்து-தெரிந்து. எ,று.) (கருத்து) ஆசாரமில்லாமையால் வருங்குற்றத்தையறிந்து,பெரியோர் அவ்வாசாரத்திற்குறையார் என்பதாம். ❋ ஒழுக்கத்தின் சுருக்கம் அதனை உடையார்மேலேற்றப்பட்டது கொண்டவிரதம் விடாமைபற்றி உரவோ

ரொன்றார். (௬)

ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி..........*
னெய்துவ ரெய்தாப் பழி..........................*

(இ-ள்.) (எல்லாரும்|)-ஒழுக்கத்தின்-ஆசாரத்தினாலே- மேன்மை-மேன்பாட்டை}- எய்துவர்- அடைவார்.- இழுக்கத்தின்- (அதிலிருந்

து) தவறுதலாலே- எய்தாப்பழி- (தாம்) அடைதற்கு உரித்தல்லாத பழியை}-எய்துவர்-அடைவார். எ,று.) (கருத்து) ஆசாரத்தான்மேன்மையடைவர் அவ்வாசாரமில்லாமையா லிழிவடைவர் என்பதாம். ❋ பகைமையால் அடாதபழியைச் சொல்லியவிடத்து அதனையும் அத்தவறுபற்றி அடுக்குமென்று உலகம்கொள்ளுமாகலின் எய்தாப்பழி எய்துவரென்றார். [இவை ஐந்துபாட்டாலும் ஒழுக்க முள்ள விடத்து.உண்டாகும் குணமும் இல்லாதவிடத்து உண்டாகும் குற்றமும்சொல்லப்பட்ட ன.
(௭)

நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க..........*
மென்று மிடும்பை தரும்..........................*

(இ-ள்•) (ஒருவனுக்கு)- நல்லொழுக்கம்- நல்லவாசாரமானது|-நன்றிக்கு-அறத்துக்கு-வித்தாகும்- காரணமாகும்.-தீயொழுக்கம்—தீயவாசாரமானது|-என்றும்-இருமைகளிலும்-இடும்பை- துன்பத்தை}-தரும்-கொடுக்கும். எ,று.) (கருத்து) ஆசாரமானது தருமத்திற்குக்காரணமாகும் தீயவாசாரமானது துன்பத்தைக்கொடுக்கும் என்பதாம். ❁ நல்லொழுக்கம் அறத்துக்குக் காரணமாமென்றதனால்-தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாமென்பதும், தீயொழுக்கம் இருமைகளிலும் துன்பம் தருமென்றதனால்-நல்லொழுக்கம் இருமைகளிலும் இன்பம் தருமென்பதும், கொள்ளப்படும். [இதனாலே பின்விளைவு சொல்லப்பட்டது.] (அ)

ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய........................❋
வழுக்கியும் வாயற் சொலல்...............................❋

(இ-ள்.) வழுக்கியும்-மறந்தும்-தீய- தீயசொல்லுகளை}- வாயாற்சொலல்-வாயினாற்சொல்லல்|- ஒழுக்கமுடையவர்க்கு-நல்லொழுக்கமுள்ளவர்க்கு-ஒல்லா -முடியாவாம் எ,று.) (கருத்து) நல்லொழுக்கமுள்ளவர்களுக்குத் தீயசொற்களைச்சொல்லுதல் கூடாவாம் என்பதாம். ❁ தீயசொல்லுகளாவன-பிறருக்குத் தீங்கைத் தரும் பொய்முதலானவையும், வருணத்துக்கு உரியனவல்லாதவையும், ஆம் நல்லசொற்களிலே பழியதென்னும் பொருள்படுதற்குச் சொலலென்றது வாயாற்சொலலென்றார். (கூ)

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்.................❋

கல்லா ரறிவிலா

தார்...❋ (ருகூ)

டுச-ஆம்-அதி-ஒழுக்கமுடைமை.

(இ-ள்.) உலகத்தோடு-உயர்ந்தோரோடு- ஒட்ட- பொருந்த-ஒழு கல்-நடத்தலை} கல்லார்-கற்றிலாதவர்|-பல-பலநூல்களையும்-கற்றும் கற்றாராயினும்-அறிவிலாதார்- விவேகமில்லாதவராவார். எ,று.) (கருத்து) உலகத்தோடுபொருந்த நடத்தலைக்கல்லாதவர்கள் பலநூலை க்கற்றுங் கல்லாதவர்களே என்பதாம். ❁ உயர்ந்தோரோடு பொருந்த நடத்தலாவது-அவரெப்படி நடந்தாரோ அப்படி நடத்தல்; அறநூலிலேசொல்லப்பட்டவைகளில்-இக்காலத்துக்கு ஏற்காதவைகளை விட்டு-அதிலேசொல்லப்படாதவைகளில் ஏற்குமவைகளைத்தழுவிவருதலால் அவையும் அடங்குதற்கு - உலகத்தோடொட்ட வொழுகலென்றும்; கல்விக்குப்பயன் அறிவும்; அறிவுக்குப்பயன் ஒழுக்கமும் ஆதலின் அவ்வொழுக்கத்தைக் கல்லாதார்பலகற்றும்அறிவிலாதாரென்றும், சொல்லினார். [இவைஇரண்டுபாட்டாலும் சொல்லாலும், செயலாலும்; வரும்ஒழுக்கங்களெல்லாம்ஒருவிதத்திலே தொகுத்துச்சொல்லப்பட்டன.] (௰)

௰௫-ஆம்-அதி-பிறனில்விழையாமை.

அஃதாவது- காமமயக்கத்தினாலே பிறனது மனையாளை விரும்பாமையாம். இது-ஒழுக்கமுடையவரிடத்தே உண்டாவதாகலின் அதன்பின் வைக்கப்பட்டது.

பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத் *
தறம்பொருள் கண்டார்க
ணில்........................... *

(இ-ள்.) பிறன்-பிறனுக்கு-பொருளாள்- உடைமையாந்தன்மைய ளாகிய-பெட்டு-இச்சித்து-ஒழுகும்- நடக்கின்ற- பேதைமை- அறியாமையானது|-ஞாலத்து-பூமியின்கண்-அறம்-அறநூலையும்-பொருள் பொருணூலையும்-கண்டார்கண் ஆராய்ந்தறிந்தவரிடத்தே-இல்-இல்லை. எ,று.) (கருத்து) பிறன்மனைவியையிச்சித்து நடக்குந்தன்மையானது பெரியோரிடத்தில்லை என்பதாம் ❋ அறமும் பொருளும் அவற்றினூல்களைக் காட்டலால் ஆகுபெயர்கள். இன்பமொன்றையே நோக்கும் காம நூலுடையார் இப்பொல்லாத வொழுக்கத்தையும் சொல்லுவாராதலின் அறம் பொருள் கண்டார்கணில்லென்றார். எனவே இப்பேதைமையுடையவரிடத்தே அறமும் பொருளும்இல்லையென்பது பெறப்பட்டது. (க)

௰௫-ஆம்-அதி-பிறனில்விழையாமை.

(௱௪)

அறன்கடை நின்றா ருளெல்லாம் பிறன்கடை.................❋
நின்றாரிற் பேதையா ரில்..................................❋

(இ-ள்.) (காமங்காரணமாக)-அறன்கடை-பாவத்திலே- நின்றாருளெல்லாம்-நின்றவரெல்லாருள்ளும்-பிறன்கடை- பிறனதுவாயிலினிடத்தே-நின்றாரின்- (அவன்மனையாளை யிச்சித்து) நின்றவர்போல்-பேதையார்-மூடர்-இல்-இல்லை. எ,று.) (கருத்து) பிறன்மனைவியையிச்சித்து நடப்பவரைப்போல அறிவீனரில்லை என்பதாம். ❋ பா

வச்செயலிலே நின்ற பெண்வழி நடப்பவரும், பரத்தையளையும் இழிகுலமகளிளையும் அநுபவிப்பவரும், போல் அறம்பொருள்களைமாத்திரம் அல்லாமல் பிறன்மனையாளிடத்துச் செல்வோர் அச்சத்தினுலே இன்பமுமில்லை யென்பது பெறப்பட்டது. (உ)

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்............ *
தீமை புரிந்தொழுகு
வார்.......................................*

(இ-ள்.) மன்ற-ஐயமில்லாமல்-தெளிந்தார் - (தம்மைநல்லவரென்று) தெளிந்தவருடைய-இல்-மனையாளிடத்தே-தீமை- பாவஞ்செய்தலை-புரிந்து-விரும்பி- ஒழுகுவார் - நடப்பவர்|- (உயிருடையவராயிருந்தாலும்)- விளிந்தாரின்- செத்தவரின் - வேறல்லர்- வேறுகார். எ,று.) (கருத்து) சந்தேகமறத் தெளிந்தவர் மனைவியிடத்திற் பாவஞ்செய்தலைவிரும்பி நடப்பவ ருயிரோடிருந்து மிறந்தவரோ என்பதாம். ❋ உயிரிருப்பினும் அவ்வுயிர் அறம்பொருளின்பங்களாகிய பயன்களை அடையாமையால் விளிந்தாரின் வேறல்லரென்றும், அவர்அப்பாவஞ் செய்வது மனையாளையுடையவரது தெளிவுபற்றியாதலின்-தெளிந்தாரில்லென்றும், சொல்லினர். (ஙு)

எனைத்துணைய ராயினு மென்னுந்
தினைத்துணையுந்..........*
தேரான் பிறனில் புகல் ..
....*

(இ-ள்.) (காமமயக்கத்தினாலே)-தினைத்துணையும்-தினையளவும் [சிறிதாயினுமென்றபடி]—தேரான் — (தம்பிழையை) நினையாமல்-பிறனில்-பிறனுடையமனையாளிடத்தே —புகல்-செல்லுதல்| — எனைத்துணையராயினும்-எவ்வளவுபெருமையையுடையவராயிருக்கினும்-என்னாம்-(ஒருவருக்கு) யாதாய்முடியும். எ,று.) (கருத்து) தினையளவுமறியாதவனாகப் பிறன்மனையாளிடத்திற் செல்லுத லெவ்வளவுசிறப்புடையராயினும் பிரயோசனமில்லை என்பதாம். ❋ இந்திரன்போல்

[௰௩]

(௫௮)

௰௫-ஆம்-அதி-பிறனில்விழையாமை.

ஏல்லாப்பெருமைகளையும் இழந்து சிறுமையை அடைவானென்பது குறித்து என்றுமென்றார். இழிவுசெய்தலில் எனைத்துணைய வொன்றும்பன்மை தேரானென்னும் ஒருமையோடு மயங்கிற்று. (ச)

எளிதெனை வில்லிறப்பா னெய்து

மெஞ்ஞான்றும்... ......❋

விளியாது நிற்கும் பழி.. ....

.... ❋

(இ-ள்.) எளிதெனை- (இவளைச்சேர்த)

லெளிதென் றுநினைத்து-(பி

ன் விளைவை நினையாமல்)- இல்- (பிறன்)

மனைவியிடத்தே - இறப்பா

ன்-செல்லுவோன்|-விளியாது- அழியாமல்-

எஞ்ஞான்றும்- எக்கால
மும்- நிற்கும்-நிலைநிற்பதாகிய- பழி-(குடிப்)பழியை3- எய்தும்-அ
டைவான். எ,று.) (கருத்து) பிறன்மனைவியிடத்துச் செல்பவன்பழி
ப்பையடைவான் என்பதாம். ✻ இல்லிறத்தல் -இல்லாளிடத்து வரம்
புகடந்து செல்லுதல்.
(ரு)

பகைபாவ மச்சம்
பழியென நான்கு.........................✻
இகவாவா மில்லிறப்பான் கண்...........
.................✻

(இ-ள்.) இல்-(பிறன்) மனைவியினிடத்தே- இறப்பான்கண்- செல்
லுவோனிடத்து— பகைபாவமச்சம் பழியென நான்கும்- பகையு
ம்பாவமும் அச்சமும் குடிப்பழியும் என்னும் இந்நான்கு குற்றங்
களும்|—இகவாவாம்- (ஒருபோதும்) நீங்காவாம். எ,று.) (கருத்து)
பிறன்மனைவியைச் சேர்பவனிடத்திற் பகை பாவ மச்சம் பழி யிந்
நான்கு குற்றங்களும்விட்டு நீங்காவாம் என்பதாம். ✻ எனவேஇரு
மைப்பயன்களையும் இழப்பானென்றதாயிற்று. [இவை ஆறுபாட்
டாலும் பிறன்மனையாளை விரும்புவோனிடத்துக் குற்றஞ்சொல்லப்
பட்டது.] (சா)

அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்....✻
பெண்மை நயவா தவன்.........................✻

(இ-ள்.) பிறனியலாள் - பிறனுடையவியல்பிலே (அவனுக்கு உரி
மைபூண்டு) நிற்பவளது- பெண்மை- பெண்தன்மையை- நயவாத
வன்-விரும்பாதவன்|- அறனியலான்- அறமாகிய வியல்போடுகூடி-
இல்வாழ்வானென்பான்- இல்வாழ்வானென்று சொல்லப்படுவான்.எ

று.) (கருத்து) பிறன்மனைவியை விரும்பாதவனே இல்வாழ்வானெ ன்னப்படுவான் என்பதாம். ❋ இல்லறம் செய்வானெனப்படுவான் அவனே யாவன் என்பதாம்.

(எ.)

௰௫-ஆம்-அதி-பிறனில்விழையாமை.
(௫௧)

பிறன்மனை நோக்காத பேராண்மை
சான்றோர்க்.......... ❋
கறனொன்றோ
வான்ற வொழுக்கு.................................. ❋

(இ-ள்.) பிறன்மனை-பிறனது மனையாளை}—நோக்காத- உட்கொ ள்ளாத-பேராண்மை- பெரிய ஆண்தன்மையானது|- சான்றோர்க்கு (அறிவால்) நிறைந்தோர்க்கு-அறனொன்றோ- தருமமாவதொன்றோ ஆன்றவொழுக்கு- நிறைந்த வொழுக்கமுமாம். எ,று.) (கருத்து) பி றன்மனைவியை யிச்சியாமையே பெரியோர்க்குத் தருமம் என்பதா ம். ❋ புறப்பகைகளை அடக்கும் ஆண்மையை யுடையோர்க்கும் உ ட்பகையாகிய காமத்தை அடக்குதல் அருமையாகலால் அதனை அ டக்கிய ஆண்மையைப் பேராண்மையென்றார். செய்தற்கரிய- அற மும், ஒழுக்கமும், இதனைச் செய்யாமையினாலேயே உண்டாகுமெ ன்பதாம். (அ)

நலக்குரியார் யாரெனி

ஞமநீர் வைப்பிற்.......................❋

பிறற்குரியா டோடோயா தார்..... ....

....❋

(இ-ள்.) நாமநீர்-அச்சந்தங்குங்கடலாற்

சூழப்பட்ட—வைப்பில்

பூமியினிடத்தே- நலக்கு- (எல்லா) நன்மைகளையும் பெறுதற்கு- உரியார்- உரியவர்|- யாரெனின்- யாரென்றால்-பிறற்கு-பிறனுக்கு-உரியாள்-உரிமையானவளது- தோள்-தோள்களை}- தோயாதார்-சேராதவர்- எ,று.) (கருத்து) நன்மைக்கு[illegible]வர் யாரென்றாற் பிறன்மனைவியைச்சேராதவர்களே என்பதாம். நலத்துக்கென்பது-நலக்கெனவிகாரப்பட்டது. இம்மையிலும் நன்மை அடைவா ரென்பதாம்.

அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்.........❋

பெண்மை நயவாமை நன்று ....❋

(இ-ள்.) (ஒருவன்)-அறம்-அறத்தை}- வரையான்- (தனக்குஉரியதாகக்(கொள்ளாதவனாகி-அல்ல-பாவங்களை}-செயினும்-செய்வானாயினும்- (அவனுக்கு)- பிறன்வரையாள் -பிறனெல்லையிலே நிற்பவளது-பெண்மை- பெண்தன்மையை} – நயவாமை- விரும்பாமை (உண்டாயின்) -நன்று– (அது|)நன்று. எ,று.) (கருத்து) தருமத்தைச் செய்யாதவனாய்ப் பாவத்தைச் செய்யினும் பிறன்மனைவியை விரும்பாமையே நன்மை என்பதாம். ❋

அக்குற்றங்களினும் இக்குண மே மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். [இவை நான்குயாட்டாலும்பிறன்மனையாளை

விரும்பாதவனிடத்துக்குணம்சொல்லப்பட்டது

௰௬-ஆம்-

அதி-பொறையுடைமை.

அஃதாவது-காரணம்பற்றியாவது அறியாமையாலாவது ஒருவன் தம்மிடத்துக்குத் தீங்குசெய்தவிடத்துத் தாமும் அதனை அவனிடத்துச்செய்யாது பொறுத்தலுடையராதல். இதுபிறனில் விழையாமைபோல அவசியம்வேண்டுவதாயிருக்கையால் அதன்பின் வைக்கப்பட்டது.

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை..............❋
யிகழ்வார்ப் பொறுத்த றலை.............................❋

(இ-ள்.) அகழ்வாரை-(தன்னை) வெட்டுவோரை}—தாங்கும்-(வீழாமற்) சுமப்பதாகிய- நிலம்போல- நிலத்தைப்போல}- தம்மை-தம்மை}-இகழ்வார்-நிந்திப்பவரை}—பொறுத்தல்-பொறுத்தல்-தலை-முதலான அறமாம். எ,று.) (கருத்து) வெட்டுவோரைத் தாங்கு நிலம்போல இகழ்வாரைப்பொறுத்துக் கொள்ளுதலே தலைமையானதருமம் என்பதாம். ❋ இகழ்தல்- தீங்குசெய்தலும் சொல்லலுமாம்.

பொறுத்த லிறப்பினை யென்று மதனை.....................❋

மறத்த லதனினு நன்று.................... ✻

(இ-ள்.) இறப்பினை- (ஒருவன்செய்த) மிகையை}—என்றும்-தன்னுலொறுத்தற்குக் கூடியகாலத்திலேயும்- பொறுத்தல்-பொறுக்கக்கடவன்.-மறத்தல்- (அதனை நினையாமல் அப்பொழுதே)மறத்தல்பெறின்)—அதனினும்-அப்பொறுமையினும்-நன்று-மிகநல்லது.எ-று (கருத்து) பிறர்குற்றத்தைப் பொறுக்கக்கடவன். அக்குற்றத்தை மறத்த லப்பொறுமையினு நன்மை என்பதாம். ✻ மிகை-முன் சொல்லப்பட்ட விரண்டு குற்றங்களும். பொறுக்கும் போதும் அக்குற்றம் உட்கொள்ளப்படுதலால் மறத்தலை அதனினும் நன்றென்றார்.

இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்............✻
வன்மை மடவார்ப் பொறை..............................✻

(இ-ள்.) (ஒருவனுக்கு)-இன்மையுளின்மை- வறுமையுள்வறுமையாவது|-விருந்தொரால்- விருந்தினரை ஏற்றுக்கொள்ளாமல்) நீக்குதலாம்.-(அதுபோல்)- வன்மையுள் வன்மை-வல்லமையுள் வல்லமையாவது|-மடவார்- அறியாமையினாலே- தீங்குசெய்தவரை}—பொ

௰௬-ஆம்-அதி-பொறையுடைமை.

(௬௧)

றை-பொறுத்தல். கூடு:) (கருத்து) தரித்திரத்திலே தரித்திரமாவது விருந்தினரைக் காப்பாற்றாமையே வல்லமையிலே வல்லமையாவது அறிவிலார்செய்த குற்றத்தைப் பொறுத்தலே என்பதாம். ❋ உடைமையுளின்மையென்னுங் குறளின்படி எப்படி விருந்தினரை யுபசரியாமை பொருளுடைமை ஆகாதோ அப்படியே அறிவிலாரைப் பொறுத்தல் இளைத்தலாகா தென்பது கருத்து. (எடுத்துக்காட்டுவமையணி.) (ரு)

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை ❋
போற்றி யொழுகப் படும்.............................. ❋

(இ-ள்.) (ஒருவன்) - நிறையுடைமை - நிறைவையுடையனாயிருக்கை-நீங்காமை-(தனைவிட்டு)நீங்காமையை}-வேண்டின்-வேண்டுவானாயின்-(அவனால்|)-பொறையுடைமை- பொறுமையுடையனாயிருக்கை}-போற்றி- (அழியாமற்)காத்து- ஒழுகப்படும்- நடக்கப்படும். எ,று.) (கருத்து) நிறைவைவேண்டுவானாகிற் பொறுமையைக்காக்கக்கடவன் என்பதாம். ❋ பொறுமையிலார்க்கு நிறைவில்லையென்பதாயிற்று [இவைநான்குபாட்டாலும் பொறையுடைமையின்சிறப்புச்சொல்லப்பட்டது.] (சு)

ஒறுத்தாரை யொன்றாக வை[illegible]ரே வைப்பர்.......... ❋
பொறுத்தாரைப் பொன்[illegible]ாற் பொதிந்து................❋

(இ-ள்.) (பிறன்தமக்குத் தீங்குசெய்தவிடத்து) - ஒறுத்தாரை}-(அறிவுடையோர்|)-ஒன்றாக- ஒருபொருளாக- வையார்- மனத்துட்கொள்ளார்-பொறுத்தாரை-(அதனைப்) பொறுத்தவரை}—பொன்போல்-பொன்னைப்போல்-பொதிந்து-இடைவிடாது- வைப்பார் மனத்துட்கொள்வார். எ,று.) (கருத்து) பெரியோர்கள் பொறுமையில்லாரைப்பொருளாக நினையார் பொறுமையுள்ளோரைப்பொருளாக நினைப்பார் என்பதாம். ❋ ஒறுத்தவர் அத்தீங்கு செய்தவர்க்குச்ச

மானமாதலின் ஒன்றாகவையாரென்றார். (௫)

ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்.....*
பொன்றுந் துணையும் புகழ்..................................*

(இ-ள்.) ஒறுத்தார்க்கு-(தமக்குத்தீங்குசெய்தவனை) ஒறுத்தவர்க்கு(உண்டாவது)—ஒருநாளையின்பம்-அவ்வொருநாளையின்பமே.—பொறுத்தார்க்கு-(அதனைப்) பொறுத்தவர்க்கு- பொன்றுந்துணையு

[௰௬]

(௯௨) ௰௬-ஆம்-அதி-பொறையுடைமை.

ம்-(உலக) மழியுமளவும்-புகழ்-கீர்த்தி|- உண்டாம்- உண்டாகும் —
(எ,று.) (கருத்து) பிறர்குற்றங்கண்டு தண்டித்தவர்க் கொருநாளை யின்பம் பொறுத்தவர்க்குலகமழியுமளவும் புகழ் என்பதாம். ❋ ஒருநாளையின்பம்-அந்நாளொன்றிலும் நினைத்தது முடித்தோமே யென்றுசெருக்கியிருக்கும் பொய்யின்பமாம். தனக்கிடமாகிய உலகம் அழியப் புகழும் அழியுமாதலின் ...உலகமென்னுஞ்சொல்வருவிக்கப்பட்டது. (௬)

திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்.................*
தறனல்ல செய்யாமை நன்று..................................*

(இ-ள்.) திறனல்ல-செய்யத்தகாதகொடியவைகளை}-தன்-தன்னிடத்து-பிறர்-அயலார்-செயினும்- செய்தாலும்-நோ- (அவருக்கு அதனால்வருவதாகிய) துன்பத்துக்காக-நொந்து-வருந்தி- அறனல்ல-அறமல்லாதசெயல்களை}-செய்யாமை-செய்யாதிருத்தல்|-நன்று (ஒருவனுக்கு) நல்லதாம். எ,று.) (கருத்து) பிறர்செய்யத் தகாத கொடியவைகளைச் செய்தாலுந்தான்தருமமல்லாதசெயல்களைச்செய்யாமைநல்லது என்பதாம். ※ துன்பத்துக்காக வருந்துதலாவது இப்பாவத்தினாலே இவர்வருபிறப்பிலே எளிவாய்நரகத்திலே வீழ்வாரோவென்றுபரிதல். (எ)

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்.............*
தகுதியான் வென்று விடல்.................................*

(இ-ள்.) மிகுதியால்- மனச்செருக்கினாலே- (தம்மிடத்து)- மிக்கவை-தீயவைகளை-செய்தாரை-செய்தவரை}-தாம்-தாம்|- தந்தகுதியால்-தமதுபொறுமையினாலே-வென்றுவிடல்- வென்றுவிடக்கடவர். எ,று.) (கருத்து) மனச்செருக்காற் பிறர்தீமைசெய்தாலு மவர்க்குத்தீமைசெய்யாமலன்மைசெய்து பொறுமையால் வெல்கஎன்பதாம். ※ தாமும் அவரிடத்தே தீயவைகளைச்செய்து தோற்றுப்போகாமல் பொறுமையால் அவரின்மேற்பட்டு வெல்லுகவென்பதாம். [இவைநான்குபாட்டாலும் பிறர்செய்தகுற்றங்களைப் பொறுத்தல் சொல்லப்பட்டது.] (அ)

துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா............ ....*
யின்னாச்சொ னோற்கிற் பவர்...............................*

(இ-ள்.) இறந்தார்-(நல்வழியைக்)

கடந்தவரது- வாய்-வாயிலுண் டின்-ஆம்-அ

தி-பொறையுடைமை. (கூ)

டாகும்-இன்னாச்சொல்-வெறுக்கப்படுஞ்சொற்களை}- நோற்கிற்பவுர்-பொறுப்பவர்|-(இல்வாழ்க்கையிலே யிருந்தும்)- துறந்தாரின் — துறந்தார்போல-தூய்மை-பரிசுத்தகுணத்தை}-உடையர்-உடையவுராவார். எ-று.(கருத்து) தீயவழியினடப்பவர் கொடுஞ்சொற்களைப்பொறுப்பவர் துறவிகள்போலப் பரிசுத்தகுணமுடையவர் என்பதாம். ❋ தூய்மை-மனவழுக்கில்லாமை.வாயென்புழைதைஅதிகமாகச் சொல்லினார் அதனிழிவு தோன்றுதற்கு. (௯)

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு..........❋
மின்னாச்சொ
ன்னோற்பாரிற் பின்.........................❋

(இ-ள்.) உண்ணாது-(விரதங்களினாலே) உணவைவிட்டு- நோற்பார்-(தம்மை அடைந்தநோயைப்) பொறுப்பவர்|-பெரியர்- (எல்லாரினும்) பெரியவராவார்.— (அவர்பெரியவராவது)- பிறர்- அயலார்-சொல்லும்-(தம்மைச்) சொல்லும்- இன்னாச்சொல்- வெறுக்கப்படுஞ்சொற்களை}-நோற்பாரின்-பொறுப்பவரின்-பின்-பின். எ-று.) (கருத்து) தவத்தர் பசிநோயைப்பொறுப்பர் அவரும் பிறர்கொடுஞ்சொற்களைப்பொறுப்பவர்க்குப் பின்னவர் என்பதாம். ❋ பிறர் இங்கே அறிவில்லாதவர். பொறுக்கக்கூடாமைக்கு ஏதுவாகிய இருவகைப்பற்றுக்களோடிருந்தே பொறுத்தலால்-தவஞ் செய்வாரினும் பெரியராகச்சொல்லலாயிற்று. [இ[illegible] இரண்டுபாட்டாலும் பிறர் சொல்லியகுற்றங்களைப்பொறுத்தல் சொல்லப்பட்டது.] (௰)

௰௭-ஆம்-அதி-அழுக்காறாமை.

அஃதாவது- பிறர்செல்வமுதலானவை கண்டவிடத்துப்பொறாமை ப்படாமை. இப்பொறாமையும் பொறாமைக்கு எதிரியதாத லின் இதனை விலக்குதற்கு இது பொறையுடைமையின் பின்னேவைக்கப்பட்டது.

ஒழுக்காறுக் கொள்க வொருவன் றன் னெஞ்சத்........*
தழுக்கா றிலாத வியல்பு..............................*

(இ-ள்.) ஒருவன்-ஒருவன்|-தன்னெஞ்சத்து- தனது மனதின்கண் ணே-அழுக்காறு-பொறாமையாகியகுற்றம்-இலாத-இல்லாத-இயல்

(சுசு) ஆம்-அதி-அழுக்காறாமை.

பு-தன்மையை}—ஒழுக்கு (தனக்குச்சொல்லப்பட்ட ஒழுக்கத்தின் து-ஆறு- வழியாக - கொள்க- கொள்ளக்கடவன். எ,று.) (கருத்து) ஒருவன்பொறாமையில்லாமையேநல்லவழியாகக் கொள்ளக்கடவன் என்பதாம். ❋ இயல்பு-அறிவோடுகூடியதன்மை. அத்தன்மையும் நன்மையைத்தருதலால்-ஒழுக்கம்விழுப்பமென்னுங் குறளிலேசொ ல்லப்பட்டபடியே ஒழுக்கவழிபோல் உயிரினும் சிறந்ததாகக் காப் பாற்றுக வென்பதாம். (க)

விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு......... *
மழுக்காற்றி னன்மை
பெறின்...............................*

(இ-ள்.) யார்மாட்டும்- யாவரிடத்தும் - அழுக்காற்றின்- பொறாமையினின்றும்-அன்மை-வேறுதலை-பெறின்-(ஒருவன்) பெறுவானாயின்-விழுப்பேற்றின்-(மற்றவன்பெறும்) மேலானபேறுகளுள்—அஃது-அப்பேற்றினை}-ஒப்பது-ஒப்பானது|-இல்லை-இல்லை. எ,று.) (கருத்து) ஒருவன் யாவரிடத்தும் பொறாமையில்லாமையைப் பெறுவானாகில் அதைவிட வேறுபேறில்லை என்பதாம். ❊ பொறாமையைவரிடத்தும் ஆகாதென்றற்கு யார்மாட்டுமென்றார். [இவையிரண்டுபாட்டாலும் பொறாமை யில்லாமையினது குணம் சொல்லப்பட்டது.] (௨.)

அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்........❊
பேணா தழுக்கறுப் பான்...............................❊

(இ-ள்.) அறன்-(மறுமைக்கு) அறத்தையும்}-ஆக்கம்-(இம்மைக்குச்)செவத்தையும்}-வேண்டாதானென்பான்-(தனக்கு)வேண்டாதவனென்றுசொல்லப்படுவோன் —பிறன்-பிறனது-ஆக்கம்-செல்வத்தை}-பேணாது- (கண்டவிடத்து) மகிழாமல் - அழுக்கறுப்பான்-பொறாமைப்படுவான். எ,று.) (கருத்து) பிறன்செல்வங்கண்டு பொறாமைகொள்வோன் மறுமைக்குத் தருமமுமிம்மைக்குச் செல்வமும்வேண்டாதானென்று சொல்லப்படுவான் என்பதாம். ❊ பொறாமைப்படின் தனக்கே துன்பமாம் என்றபடி. (௩)

அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றின்..............❊
னேதம் படுபாக் கறிந்து.................................❊

(இ-ள்.) (அறிவுடையோர்|)- அழுக்காற்றின்-பொறாமையினாலே-அல்லவை-அறமல்லாதவைகளை}-செய்யார்-செய்யார்- இழுக்காற்றி

யின-ஆம்-அதி-அழுக்காறாமை.

(சு௫)

ன்-அத்தியவழியால்-ஏதம்-துன்பமானது-படுபாக்கு-(தமக்கு இரு மையிலும்) உண்டாதலை-அறிந்து- தெரிந்து. எ-று) (கருத்து) பெரியோர் பொறாமையாற்பாவங்களைச்செய்யார் என்பதாம் ❋ அறமல்லாதவையாவன-செல்வம் கல்விமுதலானவை யுடையாரிடத்தே தீங்கை நினைத்தலும், சொல்லலும், செய்தலும் (௪)

அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்......... ...❋
வழுக்கியுங் கேடீன் பது.......................................❋

(இ-ள்.) அழுக்காறு- பொறாமையானது|-ஒன்னார் -பகைவரின்- வழுக்கியும்- ஒழிந்திருந்தும்- கேடீன்பது- கேட்டைத்தருவது.— (ஆதலால்) -உடையார்க்கு- (அப்பொறாமையை) உடையவர்க்கு— (கேட்டைத்தருதற்குப்பகைவர்வேண்டாம்) -அது-அதுவே|-சாலும்-போதும். எ-று.) (கருத்து) பொறாமை கேட்டைத்தரும் என்பதாம். ❋ அதுவேயென்னும் ஏகாரம் வருவிக்கப்பட்டது. (ரு)

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ........... ❋
முண்பதூஉ மின்றிக் கெடும்..........

.... ❋

(இ-ள்.) கொடுப்பது - (ஒருவனாற்) பிறர்க்குக் கொடுக்கப்படும் பொருளைக்குறித்து-அழுக்கறுப்பான் -பொறாமைப்படுபவனது- சுற்றம்-உறவானது|- உடுப்பதூஉம்- உடுக்கப்படுவதும் -உண்பதூஉம்-உண்ணப்படுவதும்- இன்றி-இல்லாமல்-கெடும்-அழியும். எ-று. (கருத்து) கொடுப்பதைக்குறித்துப் பொறாமை கொள்பவன் சுற்றமானது உடுக்கவாடையு முண்ணச்சோறு மில்லாமற் கெடும் என்ப

தாம். ❋ சுற்றம் கெடுமெனவே அவன்கெடுதல் சொல்லவேண்டிய தில்லையாயிற்று. பிறர்பேறுகண்டு பொறாமைப்படுதல் - தன்பேறு மாத்திரமே யல்லாமல் தன்சுற்றத்தின் பேறுகளையும் இழக்கச்செய்யு மென்பதாம்.

(௬)

அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ.......................❋
டவ்வையைக் காட்டி விடும்....... ....❋

(இ-ள்.) அழுக்கா றுடையானை - (பிறர்செல்வங் கண்டவிடத்தே) பொறாமையுடையவனை}- செய்யவள்- திருவானவள்|— அவ்வித்து- (தானும்) பொறாமைப்பட்டு- தவ்வையை- (தனது) தமக்கைக்கு- காட்டி-காண்பித்து-விடும்-நீங்குவாள். எ,று.) (கருத்து)பொறாமை யுடையவனை யிலக்குமியானவள் பொறாமைப்பட்டுமூதேவிக்குக்கா

[௰எ]

(௬௬) ௰எ-ஆம்-அதி-அழுக்காறாமை.

ட்டிவிட்டு நீங்குவாள் என்பதாம். ❋

மக்கம். தவ்வை-மூதேவி.

தவ்வையையென்பது உருபும

(எ)

அழுக்கா றெனவொரு பாவிதிருச் செற்றுத்....... ....❋
தீயுழி யுய்த்து விடும்···............................ ....❋

(இ-ள்.) அழுக்காறெனவொருபாவி-பொறாமையென்றுசொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவியானவன்|—(தன்னையுடையவனை)-திருச்செற்று- (இம்மையிலே அவனது) செல்வத்தைக்கெடுத்து-தீயுழியுய்த்துவிடும்- (மறுமையிலே) நரகத்தினிடத்துச்செலுத்திவிடுவான் எ,று.) (கருத்து) பொறாமையென்னும் பாவியானவன் பொறாமைகொண்டவன் செல்வத்தைக் கெடுத்தவனை நரகத்திற்றள்ளுவான் என்பதாம். ❊ இருமைப்பயன்களையும் கெடுக்கின்ற கொடுமைபற்றிப்பொறாமையைப் பாவியென்றார். [இவை ஆறுபாட்டாலும் பொறாமையுடைமையினது குற்றம் சொல்லப்பட்டது.] (அ)

அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்...... ....❋
கேடு நினைக்கப் படும்....... ....❋

(இ-ள்.) அவ்வியநெஞ்சத்தான்- பொறாமையுள்ளமனத்தையுடையவனது—ஆக்கமும்- செல்வமும்|- செவ்வியான் - பொறாமையில்லாதமனத்தையுடையவனது- கேடும்- வறுமையும்| -(உண்டானால்) நினைக்கப்படும்- (அவை) ஆராயப்படும். எ,று.) (கருத்து) பொறாமையுள்ளவன் செல்வமும் பொறாமையில்லாதவன் வறுமையும் பழையவினையென் றெண்ணப்படும் என்பதாம். ❊ பொறாமையினாலே செல்வமும், பொறாமையில்லாமையினாலே கேடும் உண்டாகுதல்-கூடாமையால் அறிவுடையார் இவை உண்டாதற்கு ஏதுவாகிய பழவினை யாதென்று ஆராய்வாராதலின் நினைக்கப்படுமென்றார். (க)

அழுக்கற் றகன்றாரு மில்லை யஃதிலார்.. .... ❋
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்........ .
.... ❋

(இ-ள்·) அழுக்கற்று- பொருமைப்பட்டு- அகன்றாரும்- பெருகினவரும்|-இல்லை-இல்லை.- அஃதிலார்- அச்செயலில்லாதவருள்- பெருக்கத்தின்- பெருக்கத்திலிருந்து- தீர்ந்தாரும்- நீங்கினவரும்|- இல்-இல்லை. எ,று.) (கருத்து) பொருமைப்பட்டுச் செல்வம் பெற்றாருமில்லை. பொருமைவிட்டுச் செல்வநீங்கினவருமில்லை என்பதாம். ❊ கேடும்பெருக்கமும் வருதற்கு எதுசொல்லியது.[இவையிரண்டுபாட்டாலும் அக்குற்றமும் குணமும் சேர்த்துச் சொல்லப்பட்டன.]

௰௮-ஆம் -அதி- வெஃகாமை.

அஃதாவது- பிறர்பொருளை வெளவுதற்கு நினையாமையாம். பிறருடைமைகண்டவிடத்தே பொருமைப்படுதலேயல்லாமல் அதனைத்தான் வெளவுதற்கு நினைத்தலும் குற்றமென்றற்கு இது அதன்பின்னே வைக்கப்பட்டது.

நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக் ....❊
குற்றமு மாங்கே தரும்........................❊

(இ-ள்.) நடுவின்றி- (பிறர்க்குரிய பொருளைக்கொள்ளுதல் நமக்குஅறமல்லவென்னும்) நடுவுநிலைமையில்லாமல்- நன்பொருள்- (அவரது) நல்லபொருளை- வெஃகின்- (அபகரித்தற்கு) விரும்பினால் (அவ்விருப்பு)- குடிபொன்றி- (அவன்) குடியைக் கெடுத்து- குற்றமும்-பலகுற்றங்களையும்- ஆங்கே- அப்போதே-தரும்-(அவனுக்கு) கொடுக்கும். எ,று.) (கருத்து) நடுவுநிலைமை யில்லாமற் பிறர் பொருளை யிச்சித்தால் அவ்விச்சையானது குடியைக்கெடுத்துக் குற்றத்தையுங் கொடுக்கும் என்பதாம். ❋ குடியை வளரச்செய்து பலநன்மைகளையும் உண்டாக்குந் தன்மையால் நன்பொருளென்றார். பொன்றியென்னுந் தன்வினைபொன்று வித்தென்னும் பிறவினைப் பொருளில் வந்தது. (க)

படுபயன் வெஃகிப் பழிப்படுவ
செய்யார்...................❋
நடுவன்மை நாணு
பவர்...................................❋

(இ-ள்.) நடுவன்மை- (ஒருவன்பொருளுக்குப்பிறன் உரியவனல்லவென்னும்) நடுவுநிலையல்லாமைக்கு- நாணுபவர்- அஞ்சுவோர்-(பிறர்பொருளை வெள்வுதலினாலே)---படுபயன்-(நமக்கு)வரும்பயனை- வெஃகி- விரும்பி-பழிப்படுவ- பழியினிடத்தே பொருந்துஞ்செயல்களை-செய்யார்- செய்யார். எ,று.) (கருத்து) நடுவுநிலைமையக் கஞ்சுபவர் பொருட்பிரயோசனத்தை விரும்பித் தீயசெயல்களைச்செய்யார் என்பதாம். (உ)

சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே...................❋
மற்றின்பம் வேண்டு பவர்.........
.........................❋

(இ-ள்.) மற்றின்பம்- நிலையுடைய

வின்பத்தை3- வேண்டுபவர்-இ ச்சிப்பவர்|- சிற்றின்பம்- (பிறரிடத்தே அபகரிக்கப்பட்டபொருளி (௯-அ) ய அ-ஆம்-அதி-வெஃகாமை.

னாலே தாம் அடைவதாகிய) நிலையில்லாதவின்பத்தை3- வெஃகி-வி ரும்பி-அறனல்ல-அறமல்லாத செயல்களை3- செய்யார். (அவரிடத் தே) செய்யார். எ,று.) (கருத்து) பேரின்பத்தை யிச்சிப்பவர் சிற்றி ன்பத்தை யிச்சித்துத் தருமமல்லாதவற்றைச் செய்யார் என்பதாம். ❊ பாவத்தால் வருதலால் அப்பொழுதே அழியுமென்றற்குச் சிற் றின்பமென்றார். (௩)

இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற...........*
புன்மையில் காட்சி யவர்...............................*

(இ-ள்.) புலம்வென்ற- ஐம்புலன்களையும்வென்ற-புன்மையில்-கு ற்றமில்லாத-காட்சியவர்- அறிவையுடைவர்|- இலமென்று - வறியே மென்று நினைத்து- வெஃகுதல்செய்யார்- (அது தீர்தற்பொருட்டுப் பிறர்பொருளை3) விரும்புதல்செய்யார். எ,று.) (கருத்து) ஐம்புலன் களைவென்ற அறிவுடையவர் வறியோமென்று பிறர்பொருளை விரு ம்பார் என்பதாம். ❊ ஐம்புலன்களை வெல்லுதல்- பாவவழிகளிலே செல்லவிடாமை. குற்றமில்லாதவறிவு- பொருளை உள்ளபடி யறிந்த வறிவாம். அப்படிப்பட்டவர்க்கு வறுமை உண்டாகாமையால் பிறர் பொருளை விரும்புதலும் இலதாயிற்று. (௪)

அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்...............*
வெஃகி வெறிய செயின்..............
...........................*

(இ-ள்.) அஃகி-நுட்பமானதாகி- அகன்ற- (எல்லா நூல்களிலும்) சென்ற-அறிவு-அறிவானது- என்னும்- என்னபடனையுடையதாம்.- வெஃகி-(பொருளை)விரும்பி- யார்மாட்டும்-யாவரிடத்தும்-வெறிய அறிவோடுபொருந்தாத செயல்களை}--செயின் - (அறிவுடையோர்)செய்வாராயின். எ,று.) (கருத்து) யாவரிடத்தும்பொருளை யிச்சித்துத் தீமையைச்செய்தா லறிவின்பயனென்னவாம் என்பதாம்.※ யாவரிடத்தும் அறிவோடு பொருந்தாத செயல்களைச் செய்தலாவது-யோக்கியரிடத்தும், அயோக்கியரிடத்தும், இழிந்தவையுங்கடியவையும் முதலானவைசெய்தல். அறிவுக்குப்பயன் அவை செய்யாமையாகலின் அறிவென்று மென்றார். (ரு)

அருள்வெஃகி யாற்றின் கணின்றான் பொருள்வெஃகிப்...※

பொல்லாத சூழக்

கெடும்.. ※

(இ-ள்.) அருள்வெஃகி-அருளாகிய அறத்தைவிரும்பி}-ஆற்றின்

ல-அ-ஆம்-அறி-வெஃகாமை

(௬௬)

கண்-(இல்லறமாகிய) அதன்வழியிலே- நின்றான்- தங்கினவன்-பொருள்வெஃகி-(பிறர்)பொருளைவிரும்பி}-பொல்லாத- (அழிவைவருவிக்கும்) குற்றவழிகளை}-சூழ-எண்ண-கெடும்- கெடுவான். எ,று.) (கருத்து) அருளையிச்சித்து நின்றவன் பொருளையிச்சித்துக்குற்றவழியைநினைக்கக்கெடுவான் என்பதாம். ❋ இல்லறவழியால் அறிவுமுதிர்ந்தவிடத்தே யல்லது துறக்கக்கூடாமையால்அது துறவறத்துக்கு வழியெனப்பட்டது. கெடுதல்-இரண்டறங்களையும் ஒருசேரவிழத்தல். எண்ணியவளவிலே கெடுமெனவே அபகரித்தாற்கெடுதல் சொல்லவேண்டிய தில்லையாயிற்று. (௬)

வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்..........❋
மாண்டற் கரிதாம்
பயன்..............................❋

(இ-ள்.) வெஃகி-(பிறர்பொருளை) விரும்பிக்கொண்டு-ஆம்-(அதனா)லுண்டாகின்ற-ஆக்கம் -பெருக்கத்தை}-வேண்டற்க-வேண்டாதிருக்கக்கடவன்.— விளைவயின்-(பின்) அநுபவிக்கப்படும்போது- பயன்-(அப்பெருக்கத்தின்) பயன்-மாண்டற்கரிதாம் - நன்றாகுதலில்லை. (ஆதலால்)எ,று.) (கருத்து) பிறர்பொருளை யநுபவிக்கும்போது அதுபயன்படாமையா லப்பொருளை விரும்பாதிருக்கக்கடவன். என்பதாம். ❋ விளை - முதனிலைத்தொழிற்பெயர். [இவ்வேழுபாட்டாலும் பிறர்பொருளை விரும்புதலின் குற்றஞ்சொல்லப்பட்டது.]

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை ....❋
வேண்டும் பிறன்கைப் பொருள் ....❋

(இ-ள்.) செல்வத்திற்கு - (குறைந்துபோந் தன்மையையுடைய) செல்வத்துக்கு-அஃகாமை-குறையாதிருத்தற்குக்காரணம் - யாதெனின்-எதுவென் (றொருவ) ராயின்-(அது)-பிறன்- பிறன்- வேண்டும்-விரும்புகின்ற- கைப்பொருள் - கைப்பொருளை}- வெஃகாமை-(தான்) வேண்டாமையாம்.எ,று.) (கருத்து) குறையாதசெல்வத்திற்குக்காரணமியாதென்றாற் பிறன்பொருளைவிரும்பாமையாம்என்பதாம். ❋ அஃகாமை அதன்காரணத்தை உணர்த்தலால்ஆகுபெயர்.பிறன்பொருளை விரும்பாதவனது செல்வம் குறையாதென்பதாயிற்று.

அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்... ......❋
திறனறிந் தாங்கே திரு.. ❋

(இ-ள்.)

அறனறிந்து-(இது) அறனென்றறிந்து- வெஃகா-
[மல்]

(பிறர் (எழு)

மல்-ஆம்-அறி-வெஃகாமை.

பொருளை) விரும்பாத-அறிவுடையார்-அறிவுடையாரை}-திரு-திருவானவள்,-திறனறிந்து-(தான்சேர்தற்காந்) திறத்தை அறிந்து-ஆங்கே- அத்திறத்தினால்- சேரும் - சேருவாள், எ-று.) (கருத்து) பிறன் பொருளையிச்சியாத அறிவுடையவரையிலக்குமிசேருவாள் என்பதாம். ❄ அடைதற்காந்திறம்- காலமும் இடமும், செவ்வியும், முதலாயின. [இவையிரண்டுபாட்டாலும் பிறர்பொருளை விரும்பாமையின் குணம் சொல்லப்பட்டது.] (௯)

இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும்.................*
வேண்டாமை யென்னுஞ் செருக்கு.... ....*

(இ-ள்.) (ஒருவன்)-எண்ணாது- (பின்விளைவதை) யெண்ணாமல்—வெஃகின்- (பிறன்பொருளை) விரும்புவானாயின்- (அவ்விருப்பம்|)-இறல்-அழிவை}-ஈனும்-(அவனுக்குத்) தரும்.—வேண்டாமையென்னுஞ்செருக்கு-(அப்பொருளை)விரும்பாமையென்னுஞ் செல்வமானது|—விறல்-வெற்றியை}- ஈனும்- தரும், எ-று.) (கருத்து) ஒருவன்பிறன்பொருளை யிச்சித்தாலழிவைத்தரும், இச்சியாமை வெற்றியைத்தரும் என்பதாம். ❄ பகையும் பாவமும் வளர்த்தலால் இறலீனுமென்றும், பொருளாசை கொண்டலேவோர்கள் யாவரையும் கீழ்ப்படுத்தலால் விறலீனுமென்றும், சொல்லினர். செருக்கு அதைத்தருஞ்செல்வத்தைக்காட்டலால் ஆகுபெயர். [இதனால் அக்குணமும் குற்றமும்சேர்த்துச்சொல்லப்பட்டன.] (௰)

௰௯-ஆம்-அதி-புறங்கூறாமை.

அஃதாவது - காணாதவிடத்தே பிறரை
இகழ்ந்துபேசாமையாம். வாக்கின்குற்றம்

மனக்குற்றத்தின் வழியாகத் தோன்றலால்
இது அழுக்காறுடைமை
வெஃகாமைகளின்
பின்வைக்கப்பட்டது.

அறங்கூறா னல்ல செயினு மொருவன்.. .... *
புறங்கூறா னென்ற லினிது.................................. *

(இ-ள்.) ஒருவன்-ஒருவன்-அறங்கூறான் - அறனென்றுசொல்லுவ
துஞ்செய்யானுகி-அல்ல-பாவங்களை 3-செயினும்-செய்தாலும்-புற

௱௩௯-ஆம்-அதி-புறங்கூறாமை.
(௭௧)

ங்கூறான்-(பிறனைக்)காணாதவிடத்தேஇகழ்ந்துபேசான்-என்றல்-என்
று(உலகத்தோராலே) சொல்லப்படுதல்|— இனிது-நல்லது. ௭,று.)
(கருத்து) ஒருவன் தருமத்தைச் செய்யானுகி யதருமத்தைச்செய்யி
னும்பொறுமை சொல்லாமையேநன்மை என்பதாம். * புறங்கூறு
மை-அக்குற்றங்களால்தாழ்த்தப்படாமல்மேற்பட்டுத் தோன்றமெ
ன்பதாம்.] இதனால் அவ்வறத்தினது நன்மைசொல்லப்பட்டது. (க)

அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே.... ....*
புறனழீஇப் பொய்த்து நகை.................... .... *

(இ-ள்.) அறனழீஇ - அறனென்ப

தொன்றில்லையென அழித்தூஉச்
சொல்லி- அல்லவைசெய்தலின் -(அதன்மேற்)
பாவங்களைச்செய்தலி னும்-தீதே-
தீமையையுடையதேயாம். — புறன ழீஇ-
ஒருவனைக்கா
ணாதவிடத்தே இகழ்ந்துபேசி- பொய்த்துநகை -(கண்டவிடத்தே அவனோடு) பொய்த்துமகிழ்தல். எ,று·) (கருத்து) ஒருவன்காணா விடத்திகழ்ந்துகண்டவிடத்துப்புகழ்ந்துபேசுதல தருமத்தையழித்து அதருமத்தைச்செய்தலினுங்குற்றம் என்பதாம். ❊ அறத்தையழித்தலினும் புறங் கூறுதலும், பாவங்களைச் செய்தலினும், பொய்த்து நகுதலும்; தீயனவாம்-என்றறிக. புறனழித்தல் புறங்கூறி ஒளியைக் கெடுத்தல். (உ)

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத..................❊
லறங்கூறு மாக்கந் தரும்..................................❊

(இ-ள்.) புறங்கூறி- பிறனைக்காணாதவிடத்தே இகழ்ந்து- பொய்த்து-கண்டவிடத்தே அவனைப்புகழ்ந்து-உயிர்வாழ்தலின்- (ஒருவன்) உயிர்வாழ்தலினும்-சாதல்- (அது செய்யாமல்) உயிர்விடுதல்;- (அவனுக்கு)-அறங்கூறும்-தருமநூல்களிலேலே சொல்லப்பட்ட-ஆக்கம் பயனை}—தரும்-கொடுக்கும். எ,று.) (கருத்து) ஒருவன்பிறனைமுன் புகழ்ந்தும் பின்னிகழ்ந்தும் பேசியுயிர்வாழ்தலினு மிறத்தலேநலம் என்பதாம். ❊ உயிர்விட்டபின் புறங்கூறிப்பொய்த்தலாகிய பாவம் நீங்கலால்-சாதல் ஆக்கந்தருமென்றார். ஆக்கம்-அப்பாவஞ்செய்யாதவராலே-மறுமையில் அடையப்படும்பயன். அறம்- அதைச்சொல்லு நூலைபுணர்த்தலால் ஆகுபெயர். (ஙா)

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க........❊

முன்னின்று பின்னோக்காச் சொல்..

.......................* (எஉ)

யகூ-ஆம்-அதி-புறங்கூறாமை

(இ-ள்.) (ஒருவனை)—கண்ணின்று- எதிரேநின்று- கண்ணற-கண்ணோட்டமற-சொல்லினும்-சொன்னாலும்-முன்னின்று (அவன்) எதிரில்லாமல்- பின்னோக்காச்சொல்- பின்வருங்குற்றத்தை நோக்காத சொல்லை-சொல்லற்க-சொல்லாதிருக்கக்கடவன். எ-று.) (கருத்து) ஒருவனைமுன்னிகழினும் பின்னிகழாதிருக்கக்கடவன் என்பதாம். ❋ பின் அதில்வருங்குற்றத்தைக்காட்டலால் ஆகுபெயர். சொல்லானது நோக்குற்றொழில-சொல்லின்மேல் ஏற்றப்பட்டது. கண்ணோட்டம்-தாக்ஷிணியம். [இவைமூன்றுபாட்டாலும் புறங்கூறலின்கொடுமைசொல்லப்பட்டது.] (ச)

அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மைபுறஞ் சொல்லும்.. *
புன்மையாற் காணப் படும்.... .... *

(இ-ள்.) (புறங்கூறுவோனொருவன் அறம் நன்றென்று வாயினாலேசொல்லினும்)-அறஞ்சொல்லும்- அறத்தை அப்படிச்சொல்லுதற்கு ஏற்ற-நெஞ்சத்தானன்மை-மனத்தையுடையவனல்லாதவனாயிருக்கையானது-புறஞ்சொல்லும்-அப்புறங்கூறுதற்குக்காரணமாகியபுன்மையால்- (மனப்) புன்மையாலே காணப்படும்- (அறிவுடையோரால்) அறியப்படும். எ-று.) (கருத்து) தருமநன்றென்பவன்மனதிலேதருமமில்லாமையானது புறங்கூறுதலாலறியப்படும் என்பதாம். ❋ மனம்-தீதாயிருக்கையால் அறம் நன்றென்று சொல்லுகிற சொல் அங்கீகரிக்கப் படாதென்பதாம். (ரு)

பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்.................. *
திறன்றெரிந்து கூறப் படும்.... ..
....................*

(இ-ள்.) பிறன்பழி-பிறனொருவனதுபழியை}---கூறுவான் -(அவனைக்காணுதவிடத்தே) சொல்லுவோன் - தன்பழியுள்ளும் - தனது (பல)பழிகளுள்ளும்- திறன்- (வருத்தும்) விசேடமுடையவைகளை}---தெரிந்து-ஆராய்ந்து- கூறப்படும்- (அவனாலே) சொல்லப்படுவான். எ,று.) (கருத்து) பிறன்குற்றத்தைச்சொலலுவோன் தன்குற்றம் பிறனாற்சொல்லப்படுவான் என்பதாம்· ❋ திறமுடையவைகளைத்திறனென்றலால் ஆகுபெயர். காணுதவிடத்துத் தன்னைக்குறித்துப்பிறனாலே சொல்லப்பட்டபழியைக் கேட்டவன் அவன்மிகவும் வருந்தும்படி அதிகமாகியபழிகளை ஆராய்ந்து எதிரேசொல்லுவானாதலால் திறன்றெரிந்து கூறப்படுமென்றார். (௬)

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி ....*
நட்பாட றேற்று

தவர். ....*

௰௯-ஆம்-அதி-புறங்கூறாமை. (எ௬)

(இ-ள்) நகச்சொல்லி- (கூடி)மகிழும்படி (இனியசொற்களைச்) சொல்லி -நட்பாடல்- (அயலாரோடு) சிநேகஞ்செய்தலை- தேற்றாதவர்-(தமக்குஉறுதியென்று) அறியாதவர்-|- பகச்சொல்லி- (தம்மைவிட்டு) நீங்கும்படி புறங்கூறி- கேளிர் - (தமது சுற்றத்தாரையும்)— பிரிப்பர்-பிரியப்பண்ணுவர். சூ,று,) (கருத்து) மகிழும்படி சொல்லிச்சிநேகஞ்செய்தலை யறியாதவர்கள் புறங்கூறி யுறவினரைப்பிரிப்பர் என்பதாம். ❋ உம்மைவிகாரத்தால்- தொக்கது கேளிரையும் பிரிப்பரென்ற கருத்தால் அயலாரோடென்பது வருவிக்கப்பட்டது. தேற்றாதவரென்னும் பிறவினை- தேறாதவரென்னுந்தன்வினைப்பொருளில்வந்தது. புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவரென்பது கருத்து.

(எ)

துன்னியார் குற்றமுந் தூற்று மரபினார் ....❋
என்னைகொ லேதிலார்மாட்டு.................................❋

(இ-ள்) துன்னியார்- (தம்மோடு) நெருங்கினவரது- குற்றமும்- குற்றத்தையும்)- தூற்றும்- (அவரைக்காணாதவிடத்தே) தூற்றும்- மரபினால்- இயல்பையுடையவர்— ஏதிலார்மாட்டு- அயலாரிடத்துச் (செய்வது|) என்னைகொல்- யாதோ. எ,று,) (கருத்து) உறவினர்குற்றத்தையுந் தூற்றுவோர் அயலார்குற்றத்தை யெப்படித் தூற்றார் என்பதாம். ❋ தூற்றுதல்- பலரும் அறியப்பரப்புதல். அத்தூற்றுதலினுங் கொடிய செயல்வேறொன்றுங் காணாமையால் என்னைகொலென்றார். செய்வதென்பது- சொல்லெச்சம். (அ)

அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்......❋
புன்சொ லுரைப்பான் பொறை...........................❋

(இ-ள்.) புறநோக்கி- பிறர்நீங்கினவளவுபார்த்து- புன்சொல்-(அவரது) பழிப்புச்சொல்லை}- உரைப்பான்- சொல்லுவோனது-பொறை-(உடற்)பாரத்தை}—வையம்- பூமியானது|- அறநோக்கி- (இக்கொடியதைச் சுமத்தலே எனக்கு) அறமாவதென்றுநினைத்து- ஆற்றுங்கொல்- சுமக்கின்றது போலும். எ,று.) (கருத்து) பூமியானது பொறுமை கூறுவோனுடலைத் தருமத்தைக் குறித்துச் சுமப்பது போலும் என்பதாம். ❊ பூமிக்கு எல்லாப் பொருள்களையும் சுமத்தல்சுபாவமாயினும் புறங்கூறுவானைச்சுமப்பது தகாதென்னுங் கருத்தால் அறநோக்கியாற்றுங்கொல்வையமென்றார். [இவையைந்துபாட்டாலும்புறங்கூறுவாருக்கு உண்டாகும் குற்றம்சொல்லப்பட்டது.

[௯௬]

(எச) ௰௯-ஆம்-அதி:-புறங்கூறாமை.

ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங்
காண்கிற்பின்...........❊
தீதுண்டோ மன்னு
முயிர்க்கு.......................❊

(இ-ள்.) (புறங்கூறுவோர்| அது செய்தற்கு)-ஏதிலார்குற்றம்போல்-அயலோரது குற்றத்தைப்போல்}—தங்குற்றம் - (அப்புறங்கூறுதலாகிய) தமது குற்றத்தையும்}- காண்கிற்பின் - காணமாட்டுவாராயின்-மன்னுமுயிர்க்கு- (அவரது) நிலைபெற்றவுயிர்க்கு-தீது - (வருவது) ஒரு துன்பம்|-உண்டோ- உண்டாகுமோ. எ-று.) (கருத்து) அயலார்குற்றத்தைப்போலத் தங்குற்றத்தை யாராய்வாராகிற் குற்றமில்லை என்பதாம். ❋ நடுவுநிலையாயிருந்து ஒப்பக்காணுதலருமையாகலின் காணகிற்பினென்றும், கண்டவிடத்தே புறங்கூறாமையால்வருபிறவிகளிலும் துன்பப்படா ரென்பதைக்குறித்து உயிர்க்குத் தீதுண்டோவென்றும், சொல்லினர். [இதனால் புறங்கூறுதலை விடுதற்கு உபாயம் சொல்லப்பட்டது.] (௰)

௨௰-ஆம்-அதி-பயனில்சொல்லாமை.

அஃதாவது-தமக்கும் பிறர்க்கும் அறம்பொருளின்பங்களுள் ஒன்றையும் தாராதசொற்களைச் சொல்லாமையாம். பொய்-குறளை-கடுஞ்சொல்- பயனில்சொல்- என வாக்கினிடத்தே உண்டாம் பாவம்நான்கினுள்- பொய்-துறந்தோர்க்கு அல்லது பற்றறவிடக்கூடாமையால் அதனை ஒழித்து இல்வாழ்வாரால் விடக்கூடுமவையாகிய மற்றைமூன்

றனுள்-கடுஞ்சொல்- இனியவைகூறலாலும்,குறளை-
புறங்கூறாமையாலும்,விலக்கி-நின்றபயனில் சொல்லை இ
தனால் விலக்குகின்றாராகலால் இது புறங்கூறாமையின்பின்
வைக்கப்பட்டது.

பல்லார் முனியப் பயனில சொல்லுவா.......................... *
னெல்லாரு மெள்ளப்
படும்..................................*

(இ-ள்.) பல்லார்- (அறிவுடையோர்)பலரும்-முனிய-(கேட்டு)வெ
றுக்க — பயனில-பயனில்லாதசொற்களை}- சொல்லுவான்|-சொல்ப
வன்- எல்லாரும்- எல்லாராலும்- எள்ளப்படும்- இகழப்படுவான். எ,

உ௰-ஆம்-அதி-பயனிலசொல்லாமை.

(எ௫)

ஞ.) (கருத்து) பயனில்லாச் சொற்களைச் சொல்பவன் யாவராலும்இ
கழப்படுவான் என்பதாம். ※ அறிவுடையோர்பலரும்வெறுக்கவே
மற்றோரும் இகழ்வாராகலால் எல்லாரு மெள்ளப்படுமென்றார். (க)

பயனில பல்லார்முற் சொல்ல னயனில............................*
நட்டார்கட் செய்தலிற் றீது...............................*

(இ-ள்.) பல்லார்முன்- (அறிவுடையோர்) பலர்முன்னே- பயனில
பயனிலாதசொற்களை}-சொல்லல்- (ஒருவன்) சொல்லுதலானது|-ந
ட்டார்கண்- (தன்) நட்பாளரிடத்தே— நயனில - விருப்பமில்லாத
செயல்களை- செய்தலின்- செய்தலினும்—,தீது- குற்றமாம். எ,று.)
(கருத்து) பயன்படாச் சொற்களைச் சொல்லுதல் சிநேகரிடத்து நீ
தியில்லாதவைகளைச் செய்தலினுங் குற்றம் என்பதாம். ✻ விருப்ப
மில்லாதசெயல்கள்-வெறுக்கப்படுசெயலாம். இச்சொல்அச்செயலை
க்காட்டிலும் மிகவும் இகழப்படுதலை உண்டாக்குமென்பதாம். (௨)

நயனில னென்பது சொல்லும் பயனில.......................... ✻
பாரித் துரைக்கு முரை.. ✻

(இ-ள்.)பயனில-பயனில்லாதபொருள்களை}-பாரித்து-விரித்து-உ
ரைக்குமுரை-(ஒருவன்) உரைக்கும்- உரையானது|-நயனிலனென்ப
து-இவன் நீதியில்லாதவனென்பதனை}-சொல்லும்- அறிவிக்கும். எ,
று.) (கருத்து) பயனில்லாப் பொருளைச் சொல்லுஞ் சொல்லானது
நீதியில்லாதனென்பதை யறிவிக்கும் என்பதாம். ✻ இப்படிப்பட்
ட உரையினாலே இவன் நீதியில்லாதவனென்பதை அறியலா மென்ற
ற்கு அதனை உரைமேலேற்றி உரைசொல்லுமென்றார். (௩)

நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்.......................... ✻
பண்பில் சொற் பல்லா ரகத்து.. ✻

(இ-ள்.) பயன்சாரா- பயனோடுபொருந்தாத- பண்பில்சொல் -கு
ணமில்லாதசொற்களை}-பல்லாரகத்து-பலரிடத்தே- (ஒருவன்சொல்
லுவானாயின்)—அவை|அவரிடத்தே)- நயன்சாரா- நீதியோடுபொ
ருந்தாதவையாகிய—நன்மையின்-நற்குணங்களிலிருந்து- நீக்கும்-
(அவனை)நீக்கும். எ,று.) (கருத்து) குணமில்லாச் சொற்களையொரு
வன்சொல்லுவானாகில் அவைநற்குணங்களைவிட்டு நீக்கும் என்பதா
ம். ✻ பண்பு-இனிமை மெய்மை முதலாகிய சொற்குணங்கள்சொ
ல்லுவானாயின் -அவரிடத்தே- என்பவை-சொல்லெச்சங்கள். (௪)

உ௰-ஆம்-அதி-பயனிலசொல்லாமை.

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில..........................❋
நீர்மை யுடையார் சொலின்..............................❋

(இ-ள்.) பயனில-பயனில்லாதசொற்களை 3- நீர்மையுடையார்- குணத்தன்மையையுடையவர்- சொலின்- சொல்லுவாராயின் - சீர்மை- (அவரது) மேன்பாடானது|- சிறப்பொடு- (அதனாலவரும்) நன்கு மதிக்கப்படுதலுடனே- நீங்கும்- (அவரிடத்திருந்து) நீங்கும். எ-று (கருத்து) நற்குணமுடையோர் பயனில்லாச் சொற்களைச்சொன்னாலவர்மேன்மை குறையும் என்பதாம். ❋ சொலினென்பது - அவரது சொல்லாமையைக் காட்டிநின்றது. (ரு)

பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்..................❋
மக்கட் பதடி யெனல்..............
.... ❋

(இ-ள்.) பயனில்சொல்- பயனில்லாத சொற்களை} - பாராட்டுவானை-(பலதரமும்) சொல்லுவோனை} - மகனெனல் - மனிதனென்று சொல்லாதே.—மக்கட்பதடியெனல்- மனிதருக்குள்ளே பதரென்று சொல்லக்கடவாய். எ-று.) (கருத்து) பயன்படாச்சொற்களைச்சொல்பவனை மக்களுக்குள்ளே பதரென்று சொல்லக்கடவாய் என்பதாம். ❄ எப்படிப்பதருக்கு அரிசியாகிய உள்ளீடு இல்லையோ அப்படியே அவருக்கு அறிவாகிய உள்ளீடு இல்லாமையால் மக்கட்பதடியென்றார். [இவையாறுபாட்டாலும் பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றம் சொல்லப்பட்டது.] (௬)

நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்............... *
பயனில சொல்லாமை நன்று............................ *

(இ-ள்.) சான்றோர்-அறிவுடையோர்|-நயனில-நீதியோடு பொருந்தாதசொற்களை}- சொல்லினும்- சொன்னாலும்- சொல்லுக-சொல்லக்கடவர்.—பயனில-பயனில்லாதசொற்களை}-சொல்லாமை-சொல்லாமை (பெறின்)- நன்று- (அது|) நன்று. எ-று.) (கருத்து) அறிவுடையோர் நீதியில்லாச்சொற்களைச்சொன்னாலும் பயனிலாச்சொற்களைச் சொல்லாமை நல்லது என்பதாம். ❄ சொல்லினுமெனவே சொல்லாமை பெறப்பட்டது. நயனில்லாத சொல்லினும் பயனில்லாதசொல் தீதென்பதாம். (௭)

அரும்பய னாயு மறிவினர் சொல்லார்...................... *
பெரும்பய னில்லாத சொல்............................ *

உ௰-ஆம்-அதி-பயனில்சொல்லாமை.

(௭௪)

(இ-ள்.) அருப்பயன்-அறிதற்கரியபயன்களை}- ஆயும்-ஆராயவல்ல-அறிஞர்-அறிவையுடையார்!- பெரும்பயனில்லாதசொல்- மிகுந்தபயனில்லாதசொற்களை}—சொல்லார்- சொல்லார்கள். எ-று) (கருத்து) அறிவுடையார் பயன்படாச் சொற்களைச் சொல்லார் என்பதாம் ❋அறிதற்கரியபயன்களாவன-முத்திப்பேறு-மேற்கதியடைவு-முதலானவை. பெரும்பயனில்லாத சொல்லென்றதனால் சிறிதுபயனுடையசொல்லும் தள்ளப்பட்டது. (அ)

பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த..❋
மாசறு காட்சி யவர்........ ....
....❋

(இ-ள்.) மருடீர்ந்த-மயக்கத்தினீங்கிய-மாசறு-மாசற்ற [பரிசுத்தமாகியவென்றபடி]—காட்சியவர்-அறிவினையுடையோர்!-பொருடீர்ந்த-பயனினீங்கியசொற்களை}-பொச்சாந்தும்- மறந்தும்-சொல்லார்- சொல்லார்கள். எ-று.) (கருத்து) குற்றமற்ற வறிவுடையோர்பயனில்லாதசொற்களை மறந்துஞ் சொல்லார் என்பதாம். ❋ பரிசுத்தமாகியவறிவு-மெய்யறிவு. [இவைமூன்றுபாட்டாலும்பயனில்லாதவை சொல்லாமையின் குணம் சொல்லப்பட்டது. (கூ)

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க..,......❋
சொல்லிற் பயனிலாச் சொல்...................❋

(இ-ள்.)சொல்லில்-சொற்களிலே-பயனுடைய-பிரயோசனமுடையசொற்களை}-சொல்லுக-சொல்லக்கடவர் —சொல்லில்- சொற்களிலே-பயனிலாச்சொல்- பிரயோசனமில்லாத சொற்களை}- சொல்லற்க-சொல்லாதிருக்கக்கடவர். எ-று) (கருத்து) பயனுடைய சொற்களைச்சொல்லக்கடவர். பயனில்லாச் சொற்களைச் சொல்லாதிருக்கக்கடவர் என்பதாம். ❋ [இதனாலே சொல்லத்தகுவனவும் தகாதனவும்நியமிக்கப்பட்டன.] (ய)

௨௧-ஆம்-அதி-தீவினையச்சம்.

அஃதாவது- பாவங்களாயுள்ளவைகளைச் செய்தற்கு அஞ்சுதலாம். இதனால் காயத்தினிடத்தே விளைகின்ற பாவங்களை யெல்லாம் தொகுத்து

விலக்குகின்றாராகலின் இது பயனில்சொல்லா மையின்பின் வைக்கப்பட்டது.

தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்...................... *
தீவினை யென்னுஞ் செருக்கு.............................. *

(இ-ள்.) தீவினையென்னுஞ்செருக்கு- தீவினையென்று சொல்லப்படுமயக்கத்திற்கு}—தீவினையார்- (முன்செய்த) தீவினையுடையோர்|-அஞ்சார்-பயப்படார்.-விழுமியார்|- (அதுஇல்லாத) மேலோர்|-அஞ்சுவர் -பயப்படுவார். எ-று) (கருத்து) பாவத்துக்குத் தீவினையார் பயப்படார். நல்வினையார்பயப்படுவார் என்பதாம். ❁ தீவினையாகியகாரியம் அதன்காரணமாகிய செருக்கெனஉபசரிக்கப்பட்டது.முன்னேதொடங்கிச்செய்து பழகிவந்தமையால் அஞ்சாரென்றும், செய்தறியாமையால் அஞ்சுவாரென்றும், சொல்லினர். (க)

தீயவை தீய பயத்தலாற் தீயவை.................................❋
தீயினு மஞ்சப் படும்.......................................❋

(இ-ள்.) தீயவை-(இன்பத்தின் பொருட்டுச்செய்யுந்) தீவினைகள்-(பின்னே)-தீய-துன்பங்களை}-பயத்தலால்-தருதலால்- தீயவை-(அப்படிப்பட்ட) தீவினைகள்—தீயினும்- தீயினும் அதிகமாக – அஞ்சப்படும்– (ஒருவனால்) அஞ்சப்படும். எ-று.) (கருத்து) பாவமானவை துன்பங்களைக்கொடுத்தலால் அப்பாவங்களக்கினியிலுங் கொடியன என்பதாம். ❁ வேறொருகாலத்திலும் வேறொரிடத்திலும் வேறொருடம்பிலும், போய்ச்சுடுதல் தீவினைக்கே அல்லாமல் நெருப்புக்கு இல்லாமையால் தீயினும் அஞ்சப்படுமென்றார். (உ)

அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய .... ❋
செறுவார்க்குஞ் செய்யா விடல்..............................❋

(இ-ள்.) செறுவார்க்கும்-(தம்மை) வருத்துவோரிடத்தும்- தீய-தீவினைகளை}-செய்யாவிடல்- செய்யாமல்விடுதலை - அறிவினுளெல்லாம்-(தமக்கு உறுதிநாடும்) அறிவுகளெல்லாவற்றிலும்- தலை- முதலானவறிவாகும்-என்ப-என்று நல்லோர்|) சொல்லுவர் .எ-று.) (கரு

த்து) தம்மைவருத்துவோரிடத்துந் துன்பங்களைச்செய்யாமல் விடுதல்எல்லாவறிவினுள்ளுந்தலைமை என்பதாம். ❁ விடுதற்குக்காரணமாகிய அறிவைவிடலென்றும், செய்யத்தக்கவிடத்தும் செய்யாதிருந்தால் தமக்குத் துன்பம் வாராதென்று ஆலோசித்தறிதலால்அதனை அறிவினுளெல்லாந் தலையென்றும், சொல்லினர். [இவை மூன்றுபாட்டாலும் தீவினைக்கு அஞ்சவேண்டுமென்பது சொல்லப்பட்டது.] (௫)

மறந்தும் பிறன்கேடு சூழற்க

சூழி.........................*
னறஞ்சூழுஞ்
சூழ்ந்தவன் கேடு...........................*

(இ-ள்.) (ஒருவன்|)-பிறன்-பிறனுக்கு- கேடு- கேட்டைத்தரும்வினையை}-மறந்தும்-மறவியைப்பொருந்தியும்- சூழற்க- எண்ணாதிருக்கக்கடவன்.—சூழின்-எண்ணுவானாயின்- சூழ்ந்தவன்- அவ்வெண்ணினவனுக்கு-கேடு-கேட்டைத்தரும் வினையை}—அறம்- அறக்கடவுள்-சூழும்-எண்ணுவான். எ,று.) (கருத்து) ஒருவன் மறந்தும்பிறனுக்குக்கேட்டை நினையாதிருக்கக்கடவன் நினைப்பானாகி லவனுக்குத்தருமக்கடவுள் கேட்டைநினைக்கும்என்பதாம். ❋ கேடிரண்டும் அவற்றைத்தரும் வினைகளையுணர்த்தலால் ஆகுபெயர்கள். எண்ணுகிறபொழுதேதானும் உடனே எண்ணுதலால் இவன் பிற்பட்டாலும் அறக்கடவுள் முற்படுவானென்பதுகொள்ளப்பட்டது. [அறக்கடவுளெண்ணுதலாவது - அவன்கெடத்தான் நீங்கநினைத்தல். தீவினையை எண்ணுதலுமாகாதென்பதாம்.] (ச)

இலனென்று தீயவை செய்யற்க செய்யி .... ❋
னிலனாகு மற்றும் பெயர்த்து.................................❋

(இ-ள்)இலனென்று-வறுமையையுடையேனென்றுநினைத்து-(அது தீர்தற்பொருட்டு)—தீயவை-தீவினைகளை}-செய்யற்க- ஒருவன்பிறர்க்குச்) செய்யாதிருக்கக்கடவன்.—செய்யின்-செய்தால்- பெயர்த்து-பின்னும்-இலனாகும்-வறுமையையுடையவனாவான். எ,று.) (கருத்து) வறுமையாலே தீமைசெய்யாதிருக்கக்கடவன் செய்வானாகில் வறுமையுடையவனாவான் என்பதாம். ❋ மற்றும்-அசைநிலை.அத்தீவினையினாலே பிறவிதோறும்வறியவனாவனென்பதாம். (ரு)

தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால..........❋
தன்னை யடல்வேண்டா தான்.....................................❋

(அ)

உக-ஆம்-அதி-தீவினையச்சம்.

(இ-ள்.) நோய்ப்பால-துன்பஞ்செய்யுங் கூறுடைப்பாவங்கள்—தன்னை-தன்னை}-அடல்வேண்டாதான்-(பின்வந்து) வருத்துதலைவேண்டாதவன்|—தீப்பால-தீமைக்கூறுடையவினைகளை}-தான்-தான்-பிறர்கண்-பிறரிடத்தே- செய்யற்க- செய்யாதிருக்கக்கடவன். எ-று) (கருத்து) பாவங்கள் பின்பு தன்னைவருத்துதலை யிச்சியாதவன் பாவங்களைப்பிறரிடத்துச்செய்யாதிருக்குக்கடவன் என்பதாம். ※ செய்வானாயின் அப்பாவங்கள் அவனை வருத்துவதற்கு ஐயமில்லை யென்பதாம். (௬)

எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை.....................*
வீயாது பின்சென் றடும் ....*

(இ-ள்.) எனைப்பகையுற்றாரும்-எவ்வளவுபெரியபகையையுடையவரும்|—உய்வர்-(அதனை ஒருவழியினாலே) தப்புவார்.—(அப்படியல்லாமல்) வினைப்பகை-தீவினையாகிய பகையானது-வீயாது- நீங்காமல்-பின்சென்று- போனவிடத்துக்குப்போய்-அடும்- கொல்லும். எ-று.) (கருத்து) எவ்வகைப்பகையையடைந்தவர்களுங்கடைத்தேறுவர். தீவினைப்பகையானது பின்னேதொடர்ந்து கொல்லும் என்பதாம். (௭)

தீயவை செய்தார் கெடுதனிழ றன்னை.............................*
வீயா தடியுறைந் தற்று....................................*

(இ-ள்.) தீயவை-தீவினைகளை-செய்தார்-(பிறருக்குச்) செய்தவர்:
கெடுதல்-(தாம்)கெடுதல்-(எத்தன்மைத்தென்றால்): நிழல்-(ஒருவனை
து)நிழலானது|—(நெடுந்தூரம்போயினும்)— தன்னை- அவனை}-
வீயாது-விடாதுவந்து-அடி-அடியினிடத்தே-உறைந்தற்று-தங்கிய
தன்மைத்து. எ-று.) (கருத்து) தன்னிழலானது நெடுந்தூரஞ்செ
ன்றுந்தன்னடியிலே தங்கியதுபோலத் தீவினைகளுந் தன்னொடுதங்
கும் என்பதாம். ❊ முன்பாட்டில் வினைப்பகைவீயாதுபின் சென்ற
டுமென்று சொல்லப்பட்டதை இங்கேஉபமானத்தினால் விளக்கினார்

தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்........ ....*
துன்னற்க தீவினைப் பால்.............. ....*

(இ-ள்.) (ஒருவன்|)—தன்னை-தன்னை}-தான்-தான்-காதலனாயின்
விரும்புதலுடையவனாயிருந்தால்- தீவினைப்பால்- தீவினையாகியபிரி
வினுள்-எனைத்தொன்றும்-எவ்வளவுசிறியதொன்றையாயினும்- துன்
னற்க-(பிறரிடத்தே)செய்யாதிருக்கக்கடவன். எ-று.) (கருத்து)தன்

னைக்காக்கவிரும்பினாற் பிறனிடத்திலெவ்வளவும் பாவஞ்செய்யாதி
ருக்கக்கடவன் என்பதாம். ❊ நல்வினை தீவினை,எனவினைப்பிரிவு இ
ரண்டாகலின் தீவினைப்பாலென்றார்.பிறரிடத்தேசெய்த தீவினைதன்னி
டத்தே துன்பந்தருதலை விளக்கினா
ராதலால்-தன்னைத்தான் காதல
னாயினென்றார். [இவை ஆறுபாட்டாலும் பிறருக்குத்
தால் தாம்கெடுவரென்பது சொல்லப்பட்டது.]

அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்.... ....*
தீவினை செய்யா னெனின் ....*

(இ-ள்.) (ஒருவன் செவ்வையானவழியைவிட்டு)— மருங்கோடி-கொடியவழியிலேசென்று-தீவினை-தீவினைகளை}-செய்யானெனின் (பிறரிடத்தே)செய்யானாயின்- அருங்கேடனென்பது- (அவன்)இல்லாதகேட்டையுடையவனென்பதை- அறிக- அறியக்கடவர். எ,று.) (கருத்து) ஒருவன்பாவஞ்செய்யாதிருப்பானாகிற்கேடில்லாதவனென்றறியக்கடவன் என்பதாம். ❋ [இதனாலே தீவினைசெய்யாதவன் கேடில்லாதவனாவனென்பது சொல்லப்பட்டது] (ய)

உஉ-ஆம்-அதி-ஒப்புரவறிதல்.

அஃதாவது-உலகநடையை அறிந்து செய்தல். மனோவாக்குக்காயங்களாலே செய்யத்தகாதவைசொல்லினார் இனிச்செய்யத்தகு மவைகளில்,முன் சொல்லப்பட்டவற்றுள் அடங்காதவை

க ளைச்சொல்லுகின்றா ராகையால்
இது தீவினையச்

சத்தின் பின் வைக்கப்பட்டது.

கைம்மாறு வேண்டா கடப்பாடு
மாரிமாட்.... .... ❋
டென்னாற்றுங் கொல்லோ வுலகு...
....❋

(இ-ள்.) உலகு-உயிர்களானவை|—மாரிமாட்டு-(தமக்குதவுகின்ற)மேகங்களிடத்து-என்-என்னபிரதியுபகாரத்தை}-ஆற்றும்-செய்துவருகின்றன. [ஒன்றும் செய்கின்றனவில்லையென்றபடி.] (ஆதலால்)- கடப்பாடு - (அம்மேகங்கள் போல்வார்செய்யும்)உபகாரங்களும்|-கைம்மாறு-பிரதியுபகாரங்களை}- வேண்டா- வேண்டுவனவல்ல. எ,று.) (கருத்து) மேகங்களுக் கொப்பானவர் செய்யு முபகார

[உக]

(அஉ) ௨௨-ஆம்-அதி-ஒப்புரவறிதல்;

ங்கள் பிரதியுபகாரங்களை வேண்டுவனவல்ல என்பதாம். ❋ கொல், ஓ,அசை. கடப்பாடென்னும் பெயரினாலேயே அவசியம்செய்யவேண்டுவதென்பது பெறப்பட்டது. உபகாரஞ் செய்வாரது வேண்டாமையை உபகாரத்தின்மேல் ஏற்றினார். (க)

தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு .... ❋
வேளாண்மை செய்தற் பொருட்டு........... .... ❋

(இ-ள்.) தக்கார்க்கு - தகுதியுடையவர்க்கு - தாளாற்றி - முயற்சி செய்து- தந்த- சம்பாதிக்கப்பட்ட-பொருளெல்லாம்|-பொருளனைத்தும்-வேளாண்மை- உபகாரத்தை}-செய்தற்பொருட்டு- செய்தற் பயனுடையனவாம். எ-று.) (கருத்து) முயற்சிசெய்து சம்பாதித்த பொருளெல்லா முபகாரஞ் செய்யும் பொருட்டு என்பதாம். ❋ தகுதியில்லாத பிறருக்குப்பால் தாம் அநுபவித்தற் பொருட்டும், வைத்துஇழத்தற்பொருட்டும், அல்லவென்பதாயிற்று. (உ)

புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே..........................❋
ஒப்புரவி னல்ல பிற.......................................❋

(இ-ள்.) புத்தேளுலகத்தும்- தேவருலகத்திலும்-ஈண்டும்-இவ்வுலகத்திலும்- ஒப்புரவின்- உபகாரம்போல்-நல்ல-நல்லவையாகிய-பிற வேறுசெயல்களை}- பெறல்|-பெறுதல்- அரிது- அரிதாம். எ-று) (கருத்து) விண்ணுலகத்து மண்ணுலகத்தும் உபகாரத்தைப்போலவேறொன்றில்லை என்பதாம். ❋ கொடுப்பாரும், கொள்வாரும், இல்லாமல் எல்லாரும் ஒருதன்மையரா யிருக்கையால் தேவருலகத்தில் அரிதாயிற்று யாவருக்கும் ஒப்பதுபோல் வேறொன்று இல்லாமையால் இவ்வுலகத்தில் அரிதாயிற்று. [இவை

னது சிறப்புச் சொல்லப்பட்டது.]

மூன்றுபாட்டாலும் ஒப்புரவி

(௩)

ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்..................❋
செத்தாருள் வைக்கப் படும்.................................❋

(இ-ள்.) ஒத்ததறிவான்-உலகநடையை அறிந்துசெய்பவன்|-உயிர்வாழ்வான்- உயிரோடுகூடி வாழ்பவனாவான்.— மற்றையான்- அதனை அறிந்துசெய்யாதவன்- (உயிருடையவனாயிருந்தாலும்)-செத்தாருள்-இறந்தவர்களுள்- வைக்கப்படும்- (ஒருவனாக) வைக்கப்படுவான். [நினைக்கப்படுவானென்றபடி]. எ,று.) (கருத்து) உலகவியல்பையறிந்து நடப்பவ னுயிரோடு வாழ்பவன் அவ்வியல்பை யறியாதவ

உஉ-ஆம்-அதி-ஒப்புரவறிதல்.

(அா)

ன்செத்தவன் என்பதாம். ❋ உயிருக்குரிய அறிவும், செயலும், அவனிடத்தே காணப்படாமையால் - செத்தாருள் |வைக்கப்படுமென்றார். [இதனால் உலகநடையிலே தவறுதல் வேதநடையிலே தவறுதல்போல் தீரும்வழியை உடையதல்லவென்பது சொல்லப்பட்டது

ஊருணி நீர்நிறைந்
தற்றே யுலகவாம்..................*
பேரறி வாளன் திரு......
..............................*

(இ-ள்.) உலகு-உலகநடையை; அவாம்-விரும்பிச்செய்யும்-பேரறிவாளன்- பெரியவறிவினையுடையவனவன் — திரு - செல்வத்தினுலே (நிறைதல்) ஊருணி- ஊரில்வாழ்வார் நீருண்ணுங்குளமானது நீர்நிறைந்தற்று — நீரினுலே நிறைந்தது போலும். எ-று.) (கருத்து) அறிவாளர் செல்வமானது ஊரருண்ணுங்குளத்திலே நீர்நிறைந்தாற்போலும் என்பதாம். அச்செல்வம் பாழ்படாமல் நெடுங்காலம் எல்லார்க்கும் வேண்டுமளவில் உதவுமென்பதாம். (௫)

பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற்

செல்வ......................*

நயனுடை யான்க ட்

படின்......................................*

(இ-ள்.) செல்வம்-செல்வமானது-

நயனுடையான்கண் - உபகாரஞ்செய்பவனிடத்தே- படின்-உண்டாகுமானுல்—(அவ்வுண்டாதல்) உள்ளூர்-ஊர்நடுவே- மரம்-மரத்தினிடத்தே-பயன்-பழமானது-பழுத்தற்று- பழுத்தல்போலும். எ-று.) (கருத்து) செல்வமுபகாரஞ்செய்பவரிடத்திலுண்டாகில் நடூரிலே மரம்பழுத்தாற்போலும் என்பதாம். ஆல்-அசை. உலகநீதி பலவகையிலும் ஒப்புரவுசிறந்தமையால் அதனைநயனென்றார். அவன் அம்மரப்போல் எல்லார்க்கும் எளிதிலே பயன்கொடுப்பானென்பதாம். (௬)

மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்..........................*

பெருந்தகை யான்கட்

படின்..................................*

(இ-ள்·) செல்வம்-செல்வமானது-பெருந்தகையான்கண்-(உபகாரஞ்செய்யும்) பெரியதகைமையையுடையவனிடத்தே- படின்-உண்டாகுமானல்-(அச்செல்வமானது)மருந்தாகி-எல்லாவுறுப்புக்களும் (பிணிகளுக்கு)மருந்தாய்-தப்பா-தப்பாத-மரத்தற்று-மரத்தை ஒக்கும். எ-று.) (கருத்து) செல்வம் பெரியோரிடத்துண்டாகில் அது மருந்தாகி மரத்துக்கொப்பாகும் என்பதாம். ※ ஆல் - அசை- எல்லாவுறுப்புமென்றது மரத்துக்கு - இலை, பூ, காய், கனி, முதலான

(அசு) உஉ-ஆம்-அதி-ஒப்புரவறிதல்.

வைகளை· செல்வத்துக்கு - அநுபவித்தற்குரிய பலபொருள்களை. தப்பாமையாவது- கொள்ளுதற்கரிய விடங்களிலேநின்றுவது, மறைந்துநின்றுவது, காலத்தால் வேறுபட்டாவது, பயன்படாமை. தன் குறைவைநோக்காமல் எல்லாவருத்தமும் தீர்க்குமென்பதாம். [இவைமூன்றுபாட்டாலும் உபகாரஞ்செய்பவனது பொருள் பயன்படுமாறு சொல்லப்பட்டது. (எ)

இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்.............※
கடனறி காட்சி யவர்..................................※

(இ-ள்.) கடனறி-(தாம்) செய்யத்தகுமவைகளை அறிந்த-காட்சியவர்-இயற்கையறிவையுடையவர்|-

இடனில்பருவத்தும் - செல்வஞ்சுருங்கியகாலத்திலும்— ஒப்புரவிற்கு- உபகாரஞ்செய்வதற்கு- ஒல்கார்- தளரார். எ-று.) (கருத்து) அறிவுடையோர் வறுமையிலு முதவிசெய்தற்குக்குறைவுபடார் என்பதாம். ❆ மற்றவைகளையெல்லாம்விட்டாலும் இதனைவிடா ரென்பதாம். (அ)

நயனுடையா னல்கூர்ந்தா னாதல்
செயுநீர்மை..............❋
செய்யா தமைகலா வாறு. . ....
.................................❋

(இ-ள்.) நயனுடையான்- உபகாரஞ்செய்தலையுடையவன்- நல்கூர்ந்தானாதல்- வறுமைப்பட்டவனாகுதலாவது|-செயும்- (ஒழியாமற்) செய்யும்-நீர்மை- குணத்தையுடைய அவ்வுபகாரங்களை} - செய்யாது-செய்யப்பெறாமல்- அமைகலாவாறு- வருந்துகின்றவியல்பாம் . எ-று.) (கருத்து) உபகாரி வறியவனாகுதல் செய்யுமுதவி செய்யாமையாலேதான் என்பதாம். ❆ தான் அநுபவிக்கப்படும் பொருள்களைப்பெறாமை அவனுக்கு வறுமை அல்லவென்பதாம் [இவையிரண்டுபாட்டாலும் வறுமையால் ஒப்புரவுசெய்யாது விடத்தக்கதல்லவென்பது சொல்லப்பட்டது.] (கூ)

ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்................❋
விற்றுக்கோட் டக்க துடைத்து.... .... ❋

(இ-ள்.) ஒப்புரவினால்- உபகாரஞ்செய்தலினாலே- வருங்கேடெனின்-(ஒருவனுக்குப்பொருட்) கேடுவரு மென்பவருண்டாயின் - அஃது- அக்கேடானது|- ஒருவன்- ஒருவன்- விற்று- (தன்னைவிற்றாயினும்)-கோட்டக்கதுடைத்து- வாங்குந்தகுதியையுடையதாகும். எ-று (கருத்து) உதவிசெய்தலாற் கேடுவருமெனி லவ்வுதவியைத் தன்னை

உஉ-ஆம்-அதி-ஒப்புரவறிதல்.

(அ௫)

விற்றாகினுஞ் செய்யக்கடவன் என்பதாம். ❋ தன்னைவிற்று வாங்கப்படுவ தொருபொருள்- இல்லையாயினும் இக்கேடு புகழையுண்டாக்கலால் அதுவும் செயப்படுமென்றது. [இதனாலே ஒப்புரவிலுலே கெடுவது கேடல்லவென்பது சொல்லப்பட்டது.]

(ம)

உ௩-ஆம்-அதி-ஈகை.

அஃதாவது-வறியவராய் இறந்தவர்க்கு இல்லை

யென்னுமல் கொடுத்தல். இதுமறுமையைக்குறித்ததாகலின் இம்மையைக்குறித்த ஒப்புரவறிதலின் பின் வைக்கப்பட்டது.

வறியார்க்கொன் றீவதே யீகைமற்
றெல்லாங்.................*
குறியெதிர்ப்பை நீர துடைத்து.....................
.... *

(இ-ள்.) வறியார்க்கு- ஒருபொருளுமில்லாதவர்க்கு-ஒன்று-(அவரீவேண்டிய) தொன்றை- ஈவதே- கொடுத்தலே- ஈகை- (பிறர்க்குக்)

கொடுத்தலாகும்.—மற்றெல்லாம்- (அதுநீங்கலாகிய) எல்லாக்கொடையும்|- குறியெதிர்ப்பை - குறிக்கப்பட்ட பின்வரும்பயனோடுகூடிய - நீரது - குணத்தை} - உடையதாகும். எ-று.) (கருத்து)
தரித்திரருக்குக் கொடுத்தலே கொடையாகும். மற்றவர்களுக்குக் கொடுத்தல் பின்வாங்கிக்கொள்ளும் பயனாகும் என்பதாம். * அது நீங்கலாகிய கொடை- வறியவரல்லாதவர்க்கு ஒரு பயனை நோக்கிக் கொடுத்தல். நீரது என்பதில் அது பகுதிப்பொருள்விகுதி. பின்னும் தம்மிடத்தே வருதலால் குறியெதிர்ப்பை நீரதுடைத்தென்றார். [இதனால் ஈகையினது இலக்கணம் அறிவிக்கப்பட்டது.] (க)

நல்லா றெனினுங் கொளறீது மேலுலக ....*
மில்லெனினு மீதலே நன்று............. ....*

(இ-ள்.) கொளல்-இரத்தல்- நல்லாறெனினும்-(மேலுலகத்துக்கு) நல்வழியென்பவர் உண்டாயினும்- (அது) தீது-குற்றமாம்.-(கொடு

த்தவர்க்கு) மேலுலகம்- அந்தமேலுலகத்தையடைதல் - இல்லெனினும்-இல்லையென்பவர் உண்டாயினும்-ஈதலே-கொடுத்தலே|-நன்று

நல்லதாம். எ,று) (கருத்து) யாசித்தல்நல்லவழியென்றாலும் வாங்கு தல்குற்றமே, கொடுத்தலாலே முத்தியில்லை யென்றாலுங் கொடுத்த

[உஉ]

(அசு) உரு-ஆம்-அதிகாரம்

லேநல்லது என்பதாம் ❋எனினுமென்பனஇரண்டும்அப்படிச்சொல்வாரில்லாமையைக் காட்டிநின்றது: ஏகாரத்தால் பிறவறங்களில் ஈகை சிறந்ததென்பது பெறப்பட்டது. நல்லது சொல்லவந்தவர் தீயதும் உடன்சொல்லினர். (உ)

இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்.....................❋
குலனுடையான் கண்ணே யுள .... ❋

(இ-ள்.) இலனென்னும்- வறியேனென்று (இரப்பவன்) சொல்லும்-எவ்வம்-இழிவு- உரையாமை- (பிறரிடத்தே) சொல்லாமையும்- (அதனைத்தன்னிடத்தே சொன்னவர்க்கு) ஈதல்-(இல்லையென்னுமத்) கொடுத்தலும்- (ஆகியவிரண்டும்)- குலனுடையான்கண்ணே-நல்ல குடியிற்பிறந்தவனிடத்தே - உள- உண்டாயிருக்கும். எ,று.) (கருத்து) நற்குடியிற் பிறந்தவரிடத்தில் இல்லையென்னமையுங் கொடுத்தலுமுண்டு என்பதாம். ❋ முன்பாட்டிலேதீதெனப்பட்டதைச்செய்யாமைக்கும், நன்றெனப்பட்டதைச் செய்தற்கும், உரியவனை அறிவித்தபடி. (௩)

இன்னா திரக்கப் படுத லிரந்தவ.........................❋
ரின்முகங் காணு மளவு ....❋

(இ-ள்.) (இரத்தலேயல்லாமல்)-இரக்கப்படுதல்-இரக்கப்படுதலு
ம்|-இன்னாது- இன்பஞ்செய்வதன்று.- இறந்தவர்- (ஒருபொருளை)
இரந்தவராது- இன்-(அதுபெற்றதனால்) இனிதாகிய- முகம்- முகத்
தை-காணுமளவு- பார்க்குமளவும். எ,று.) (கருத்து) இரந்தவரினிய
முகத்தைக்காணுமளவுந் துன்பம் என்பதாம். ❀ உம்மையிரண்டும்
வருவிக்கப்பட்டன. இரக்கப்படுதல் - இரப்பவர்க்குக் கொடுப்பே
னென்றிருத்தல். எல்லாமிரப்பவர்க்கு ஒன்று கொடுக்கக் கூடாமை
நேரிடுமோவென்னும் அச்சத்தைக்குறித்து அதனை இன்னாதென்று
ர். எனவே எல்லாப்பொருளும் கொடுக்கவேண்டுமென்றதாயிற்று.

ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை.... ....*
மாற்றுவா ராற்றலிற் பின்........................*

(இ-ள்.) ஆற்றுவார்- (தவத்தால்) வல்லவராவோருக்கு- ஆற்றல்-வ
ல்லமையாவது!- பசியாற்றல்- (தம்மை அடைந்த)பசியைப்பொறு
த்தலாம் -(அவ்வல்லமைதான்) -அப்பசியை- அப்படிப்பொறுத்தற்
கரியபசியை- மாற்றுவார்- (கொடையினாலே) நீக்குவோரது-ஆற்ற

உரு-ஆம்-அதி-கவை.

(அள)

லிற்பின்- வல்லமைக்குப்பின். எ,று.) (கருத்து) தவத்தோர்க்குப் ப
சியைப்பொறுத்தல் வல்லமையாம். வல்லமையிலும் பசியையாற்று
வோர் வல்லமைபெரிதாம் என்பதாம். ❀ தாமும்பசித்துப் பிறருக்
கும் அதுதீர்க்க மாட்டாதவரது வல்லமையைக் காட்டிலும் தாமு
ம்பசியாது பிறருக்கும் அதுதீர்ப்பவரது வல்லமைநன்றென்பதாம்

அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்.......................
பெற்றான் பொருள்வைப் புழி..............................

❋

❋

(இ-ள்.) அற்றார்-வறியவரது- அழிபசி- மிகுந்தபசியை- தீர்த்தல் (அறனோக்கித்) தீர்க்கக்கடவன்,- அஃது-அவ்வறம்- பொருள்பெற்றானொருவன்-பொருள்படைத்தவனாகிய வொருவன்-வைப்புழி-(அப்பொருளைத்தனக்குதவ) வைக்குமிடம். (ஆதலால்). எ-று.) (கருத்து) பொருள்பெற்றவன் வறியவர் பசியைத்தீர்த்தலே யவன்பொருள்வைக்குமிடம் என்பதாம். ❁ எல்லா நன்மைகளும் அழியவருதலால் அழிபசியென்றார். அற்றாரழிபசி தீர்த்தபொருள் பின் தனக்கேவந்து உதவுமென்பதாம். (௬)

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்.................❋
தீப்பிணி தீண்ட லரிது...................

...............❋

(இ-ள்.) பாத்து- (எந்நாளும்) பகுத்து-ஊண்- உண்ணுதல்-மரீஇயவனை- பழகியவனை- பசியென்னும்-பசியெனப்படும்-தீப்பிணி-தீயநோய்- தீண்டலரிது- தீண்டுதலில்லை. எ-று.) (கருத்து) பிறர்க்கிட்டுண்ணுவோனைப் பசிநோய்தீண்டாது என்பதாம். ❁ இவ்வுடம்பிலே நின்று ஞானத்தையும், ஆசாரத்தையுங், கெடுத்து-அதனால்பின்வரும் உடம்புகளுக்குந் துன்பஞ்செய்தலால் தீப்பிணியெனப்பட்டது. தனக்குமருத்துவன் தானேயாகையால் பசிப்பிணிசேராதென்பதாம்.

[இவைஆறுபாட்டாலும் ஈதலின் சிறப்புச் சொல்லப்பட்டது.]

(௭)

ஈத்துவக்கு மின்ப மறியார்கொ

றாமுடைமை .... *

வைத்திழக்கும் வன்க

ணவர்.................................. ..... *

(இ-ள்.) தாமுடைமை- தாமுடையபொருளை}—வைத்து-(கொடாது) வைத்து- (பின்னே)- இழக்கும்- இழந்துவிடும்-வன்கணவர் அருளில்லாதவர்|-ஈத்து- (வறியவர்க்கு) வேண்டிய (பொருள்களைக்) கொடுத்து- உவக்கும்-(அவர்)' மகிழ்தலினால் (அருளுடையாரடையு

(௮.௮) ௨௩-ஆம்-அதி-ஈகை

ம்)-இன்பம்-மகிழ்ச்சியை}-அறியார்கொல்- கண்டறியாரோ. எ,று.) (கருத்து) பொருளைத்தேடிவைத் திழப்பவர் கொடுத்து மகிழுமின்பத்தை யறியார் என்பதாம். ❋ ஈந்தென்பது எதுகைநோக்கி ஈத்தென்றாயிற்று. அறிந்தாராயின் தாமும் அவ்வின்பத்தை அநுபவிப்பாரோயல்லாமல் வைத்திழவாரென்பது கருத்து. (௮)

இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய.......................... *

தாமே தமிய ருணல்...*

(இ-ள்.) நிரப்பிய- (பொருளின்குறைவை) நிறைக்கவேண்டி-(இரந்தவர்க்குக்கொடாமல்)- தாமே- தாமே- தமியர்- தனித்தவராகி- உணல்-உண்ணுதலானது- (ஒருவருக்கு)- மன்ற-நிச்சயமாக-இரத்தலின்-(பிறரிடத்தேபோய்) இரத்தலினும்-இன்னாது-துன்பஞ்செய்வதாம். எ,று.) (கருத்து) பிறர்க்குக் கொடாமல் தாமேயுண்ணுதல் யாசிப்பதிலுந் துன்பம் என்பதாம். ❊ பொருளின்குறையைநிறைத்தலாவது. ஒவ்வொரு தொகையைக் குறித்து அவ்வளவு சம்பாதிப்போமென்று அத்தொழிலையே மேற்கொண்டு உலோபஞ்செய்து சேர்த்தல். தனித்தல்- பிறரைச்சேராமை. இரத்தலுக்கு உள்ளது அப்போதையிழிவே- பின்னேவறுமையில்லை- தனித்துண்ணுதலுக்கு அவ்விரண்டும் உண்டாகுமாதலால் இரத்தலின்னாதென்றார். (௯)

சாதலி னின்னாத தில்லை யினிததூஉ.............................. *
மீத லியையாக் கடை .... *

(இ-ள்.) (ஒருவனுக்கு)-சாதலின்- இறத்தல்போல் - இன்னாதது- துன்பஞ்செய்வதொன்று- இல்லை-இல்லை-அதூஉம்-அப்படிப்பட்ட இறத்தலும்- ஈதல்-(வறியவர்க்குக்) கொடுத்தல் இயையாக்கடை- முடியாதவிடத்து-இனிது-இன்பஞ்செய்வதாகும். எ,று.)(கருத்து) இறத்தலைவிடத் துன்பமில்லை. இரந்தவர்க்குக் கொடாவிடத் திறத்தலையின்பம் என்பதாம். ❊ பிறருக்குப் பயன்படாத உடற்சுமை நீங்குதலால் இனிதென்றார். [இவைமூன்றுபாட்டாலும் ஈயாமையின்குற்றம் சொல்லப்பட்டது.] (௰)

௨௪-ஆம்-அதி-புகழ்.

அஃதாவது- இல்வாழ்க்கைமுதல் ஈகை ஈறாகச்சொல்லப்பட்ட இல்லறத்தில் தவறாதவர்க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகத்திலேசெய்தபடியே நிற்பதாகிய கீர்த்தியாம். இது பெரும்பாலும் ஈகைபற்றி வருதலால் அதன்பின் வைக்கப்பட்டது.

ஈத லிசைபட வாழ்த லதுவல்ல

.................................*

ஊதிய மில்லை யுயிர்க்கு ...

.... *

(இ-ள்.) ஈதல்-(வறியவர்க்குக்)கொடுத்தலினாலே-இசைபட-புகழுண்டாக-வாழ்தல்- வாழக்கடவர்.- அதுவல்லது- அப்புகழில்லாமல்- உயிர்க்கு- (மக்க) ளுயிர்க்கு-ஊதியம்- வேறுபயன்- இல்லை-இல்லை- (ஆதலால்). எ-று) (கருத்து) கொடுத்தலாற் கீர்த்தியுண்டாக வாழக்கடவர். அக்கீர்த்தியை யல்லாமல் மக்களுயிர்க்கு இலாபமில்லை என்பதாம். ❊ இசைபடவாழ்தற்குக் கல்வி ஆண்மை முதலாகியவேறுகாரணங்களும் இருக்கினும் ஈகை சிறந்ததாதலால் எடுத்துச்சொல்லப்பட்டது. (க)

உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்.....❊
நீவார் மேனிற்கும் புகழ்..............
... . ❊

(இ-ள்.) உரைப்பார்- (உலகத்திலே ஒன்றை) உரைப்பவரால்-உரைப்பவையெல்லாம்- உரைக்கப்படுமவைகளெல்லாம்|- இரப்பார்க்கு (வறுமையால்) இரப்பவர்க்கு— ஒன்று - (அவர்வேண்டிய) தொன்றை-ஈவார்மேல்- கொடுப்பவரிடத்தே- நிற்கும்-நிற்கும்-புகழ் கீர்த்திகளாம். எ-று.) (கருத்து) கொடுப்பவரிடத்தே கீர்த்திநிற்கும் என்பதாம். ❊ புகழ்தான்-உரையும், பாட்டும், என இருவகைப்படும். அவற்றுள்- உரைப்பாருரைப்பவையென எல்லார்க்கும் உரியவழக்கத்தையே எடுத்தாராகினும் இனம்பற்றிப்பலவர்க்கே உரியபாட்டும் கொள்ளப்படும் படவே- பாடுவார் பாடுவையெல்லா மிரப்பார்க்கொன்றீவார் மேனிற்கும் புகழ். என்பதும்பெற்றும். புகழின் காரணங்களி லீதல்சிறந்தமை இதனுள்ளுங்காண்க. (உ)

ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற் ....*
பொன்றாது நிற்பதொன் றில் ....*
[உக]

(௧௭௰) உ௪-ஆம்-அதி-புகழ்.

(இ-ள்·) ஒன்றா-தனக்கு இணையில்லையாக - உயர்ந்த-ஓங்கிய-புகழல்லால்-கீர்த்தியல்லாமல்- உலகத்து- உலகத்திலே-பொன்றாது- அழியாமல் நிற்பது- நிலைபெறுவது-ஒன்று- வேறொன்று!-இல-இல்லை. எ-று.) (கருத்து) உலகத்திற் புகழையல்லாது நிற்ப தொன்றில்லை யென்பதாம். ✻ தனக்கு இணையில்லையாக வோங்குதலாவது-கொடுத்தற்கரிய-உயிரையும், உறுப்பையும், பொருளையும், கொடுத்தமைப்பற்றி வருதலால் தன்னோடு ஒப்பது இல்லாமல்தானே உயர்தல். அப்படிப்பட்ட புகழையே மனிதனாய்ப்பிறந்தவன் சம்பாதிக்க வேண்டுமென்பதாம். [இவைமூன்றுபாட்டாலும் புகழது சிறப்புச்சொல்லப்பட்டது.] (௩)

நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப் ....*
போற்றாது புத்தே ளுலகு ....*

(இ-ள்.) (ஒருவன்) -நிலவரை- பூமியினெல்லையில்- நீள்புகழ்-அழியாது நிற்கும்புகழை}-ஆற்றின்-செய்வானாயின்-புத்தேளுலகு- தேவலோகமானது|- (அவனையல்லாமல்)- புலவரை- (தன்னை அடைந்திருக்கிற) ஞானிகளை}- போற்றாது-பேணாது. எ,று.) (கருத்து) உலகிலழியாது நிற்கும்புகழை யொருவன் செய்வானாகில் தேவலோகந் தேவர்களைத் துதியாது என்பதாம். ❋ இவன்போல் அவர் புகழ்வடிவால் இவ்வுலகத்தையும்,தேவவடிவால் அவ்வுலகத்தையும்,ஒருங்கு அடையாமல் புலவரைப்போற்றாது புத்தேளுலகென்றார். (௪)

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்.........................❋
வித்தகர்க் கல்லா லரிது.........................❋

(இ-ள்.) வித்தகர்க்கல்லால் - திறமையை உடையவர்க்கு அல்லாமல்-(மற்றவர்க்கு) -நத்த (மாகும்)- (புகழுடம்பிற்கு) பெருக்கமாகும்-கேடும்-வறுமையும்|-அரிது-இல்லை- உளதாகும்- (அப்புகழுடம்பு)நிலைபெறுவதாகும்-சாக்காடும்- மரணமும்|-அரிது-இல்லை.எ,று. (கருத்து) அறிவில்லார்க்குப் புகழுடம்பிற்குப் பெருக்கமாகும் வறுமையும் அவ்வுடம்பு நிலைபெறுவதாகு மரணமுமில்லை என்பதாம் ❋ நந்து என்னுமுதனிலைத் தொழிற்பெயர்- நத்து என விகாரப்பட்டு அம்விகுதிபெற்றுவந்தது போல்- உவமைதொகை. ஆகும் -அரிது- இவற்றைமுன்னுங் கூட்டப்பட்டன. பெருக்கமாகுங் கேடாவது-புகழுடம்புசெல்வத்தை அடைதற்குப் பூதவுடம்பு வறுமைப்படல்.நிலைபெறுவதாகு மரணமாவது, புகழுடம்பு நிலைபெறற்குப் பூதவுட

உச-ஆம்-அதி-புகழ்.

ம்புஇறத்தல். நிலையில்லாதவுடம்பை வருத்தியும் விட்டும் நிலையான புகழை வளர்த்தலும் நிறத்தலும் பிறர்க்கு முடியாமையால் வித்தகர்க்கல்லாலரிதென்றார் [இவ்விரண்டுபாட்டாலும் புகழுடையாரதுமேன்மைசொல்லப்பட்டது.] (௫)

தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார் .... *
தோன்றலிற் றோன்றாமை நன்று.................. *

(இ-ள்.) தோன்றின்- (மனிதராய்ப்) பிறந்தால்-புகழொடு-புகழுக்குஏதுவாகிய குணத்தோடு- தோன்றுக-பிறக்கக்கடவர்.— அஃதிலார்-அக்குணமில்லாதவர்-தோன்றலின்- (மனிதராய்ப்) பிறத்தலினும்-தோன்றாமை- பிறவாமையானது|- [விலங்குகளாய்ப்பிறத்தலென்றபடி]-நன்று-நல்லது. எ-று.) (கருத்து) பிறந்தாற் புகழொடுபிறக்கக்கடவர். அவ்வாறில்லாதவர்கள் பிறவாமையே நல்லது என்பதாம். ❋ புகழுக்கு ஏதுவைப்புகழென்றலால் ஆகுபெயர். இலாமொன்றதனால் மனிதரா யென்பதும், மனிதராய்ப்பிறவாமையென்றஅருத்தாபத்தியினாலே விலங்காய்ப் பிறத்தலென்பதும்,கொள்ளப்பட்டன. இகழ்வா ரில்லாமையால் நன்றென்றார். (௬)

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை .... *
யிகழ்வாரை நோவ தெவன்........................ *

(இ-ள்.) புகழ்பட- (தமக்குப்) புகழுண்டாக- வாழாதார்- வாழமாட்டாதவர்- (அதுபற்றிப் பிறரிகழ்ந்தவிடத்தே) - தந்நோவார்- (இவ்விகழ்ச்சி தமதுமாட்டாமையால் வந்ததென்று) தம்மைநோவாதவராகி- தம்மை-தம்மை- இகழ்வாரை- நிந்திப்பவரை}-நோவது|-நொந்துகொள்வது- எவன் - என்னநினைத்து. எ-று.) (கருத்து) புகழுண்டாகவாழாதவர் தம்மையிகழ்ந்தவரைநொந்துகொள்வதென்ன என்பதாம். ❋ புகழ்பட வாழவேண்டியதா யிருக்க அப்படிவாழமாட்டாத குற்றம்பற்றிப் பிறர் இகழ்வது ஒருபக்ஷமாதலால்- இகழ்வாரை நோவதெவனென்றார். (௭)

வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு.......*

மெச்சம் பெறுஅ விடின்............................*

(இ-ள்.) இசையென்னுமெச்சம்-புகழென்னும் எச்சத்தை}-(பெறவேண்டியிருக்க)- பெறுவிடின்-(அதனைப்) பெறுது விடுவாராயின்-வையத்தார்க்கெல்லாம்- பூமியிலுள்ளார்க்கெல்லாம்- வசை-(அதுதானே) வசையாகும்- என்ப -என்று(நல்லோர்) சொல்லுவர். எ,

(கூஉ) உசு-ஆம்-அதி-புகழ்.

று.) (கருத்து) ஒருவன் கீர்த்தியென்னும் பிள்ளையைப் பெறாமலிருப்பானாகில் உலகிற்கு வசையாம் என்பதாம். ❋ செய்தவர் இறந்துபோகத் தான் இறவாமல் நிற்கையுடையது எச்சமென்றார். இகழப்படுதற்கு மற்றொருகுற்றம் வேண்டா மென்பது கருத்து. (அ)

வசையிலா் வண்பயன் குன்று மிசையிலா்
யாக்கை பொறுத்த நிலம்.................

.... *

(இ-ள்.) இசையிலா் - புகழில்லாத- யாக்கை-உடம்பை}- பொறுத்த-சுமந்த-நிலம்- நிலத்தில்- வசையிலா-பழிப்பில்லாத- வண்பயன்-வளப்பத்தையுடையவிளைவு}-குன்றும் -குறையும், எ,று.) (கருத்து) கீர்த்தியிலா வுடலைச்சுமந்த நிலத்தில் விளைவுகுறையும் என்பதாம். ❋ உயிருண்டாயினும் அதனாலே பயன்கொள்ளாமையால்-யாக்கையென்றும், அதுநிலத்திற்குப் பாரமாதலின் பொறுத்தவென்றும், சொல்லினர். விளைவுகுறைத்தற்கு ஏதுபாபசரீரத்தைச் சுமக்கின்ற வெறுப்பு. [இவை நான்குபாட்டாலும் புகழில்லோரது தாழ்வுசொல்லப்பட்டது] (கூ)

வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய...... *

வாழ்வாரே வாழா தவர். .... *

(இ-ள்.) வசையொழிய- (தம்மிடத்து) வசையுண்டாகாமல் [புகழுண்டாகவென்றபடி] வாழ்வாரே|-வாழ்பவரே-வாழ்வார்(உயிர்)வாழ்வோராவார்.—இசையொழிய- புகழுண்டாகாமல் [வசையுண்டாகவென்றபடி]-வாழ்வாரே|- வாழ்பவரே - வாழாதவர்- இறந்தோராவார். எ.று.) (கருத்து) கீர்த்தியுடன்வாழ்பவருயிரோடுவாழ்பவர். அகீர்த்தியோடு வாழ்பவ ரிறந்தவர் என்பதாம். ❋ வசையென்பவென்னும் பாட்டில்- வசையொழிதல் புகழ்பெறுதலானதால்: இங்கே இசையொழிதல்- வசைபெறுதலாயிற்று. முன்பாட்டிலே புகழில்லாதவுடம்பென்றதனை விளக்கியவாறு. [இதனால் அம்மேன்மையுந்தாழ்வும் உடன்சொல்லப்பட்டன.] மறுமைப்பயன் வானுறையுந்தெய்வத்துள் வைக்கப்படுமென முன்னே சொல்லப்பட்டமையால் இல்லறத்துக்கு இவ்வுலகத்திலே புகழும் தேவருலகத்திலே போகமும் பயனென்பது கொள்ளப்பட்டது. (ம)

இனிமனுமுதலிய அறநூல்களால் பொதுவாகக்கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தொகுத்துக்கூறிய இவற்றுள்ளே அடங்கும் அஃது அறிந்து அடக்கிக்கொள்க.

இல்லறவியல் முற்றுப்பெற்றது. ஆ-குறள்-உாசம.

துறவறவியல்.

இனிமுறைப்படித் துறவறம் சொல்லத் தொடங்கினூர்.
துறவறமாவது-முன்சொல்லப்பட்ட இல்லறத்தின்வழுவா துநடந்து அறிவுடையாராய்ப்-பிறப்பினைஅஞ்சி-முத்திபெறுதற் பொருட்டுத் துறந்தவர்க்கு உரித்தாகிய அறமாம். அது- விரதமும், ஞானமும், என விருவகைப்படும்.

விரதம்.

அதாவது-வினைமாசுநீர்ந்து-அந்தக் கரணங்கள் பரிசுத்தமாதற்பொருட்டு- இன்னஅறங்களைச் செய்வேனென்றும், இன்னபாவங்களைவிடுவேனென்றும், தமதுவல்லமைக்கு ஏற்க அளவுசெய்துகொண்டு துறந்தோராலே காப்பாற்றப்படுவது. அவ்விரதங்கள் அளவில்லாதவையாயிருக்கினும் அவை பலவற்றையும் தம்முள்ளே அடக்கிநிற்கும் சிறப்புடைய சிலவற்றை இங்கே சொல்லத் தொடங்கி முதலிலே அருளுடைமையை அருளிச்செய்கிறூர்.

உரு-ஆம்-அதி-அருளுடைமை.

அஃதாவது- தொடர்புபற்றுமல் இயல்பாக எல்லா வுயிர்களின்மேலும்செல்வதாகிய கருணையை யுடையராதலாம். இல்லறத்துக்குஅன்புடைமைபோல் இது துறவறத்துக்குச்சிறத்தலால் முன்சொல்லப்பட்டது.

அருட்செல்வஞ் செல்வத்துட்செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள........ .... *

(இ-ள்.) பொருட்செல்வம் - பொருளால் வருஞ்செல்வங்கள்|— பூரியார்கண்ணும்-இழிந்தவரிடத்தும்-உள-இருக்கின்றன - (ஆகலால்)-செல்வத்துள்-செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்து எடுக்கப்பட்ட-செல்வம்- செல்வமானது!- அருட்செல்வம்- அருளால்வருஞ்செல்வமாம். எ,று.) (கருத்து) கிருபையால்வருஞ்செல்வமேசெல்வமாகும்பொருளால் வருஞ்செல்வங்கீழோரிடத்து முண்டென்பதாம்.

[உச]

(கூச) உ௫-ஆம்-அதி-அருளுடைமை.

※ அருளால்வருஞ்செல்வமாவது-உயிர்களைக்காப்பாற்றி அவ்வறத்தால் மேன்படுதலாம். இழிந்தோரிடத்து இல்லாமல் உயர்ந்தோரிடத்துமாத்திரம் உள்ள அருட்செல்வமே சிறப்புடைய செல்வமென்றும், இழிந்தோரிடத்தும் உள்ள மற்றைப்பொருட்செல்வங்கள் சிறப்புடையன அல்லவென்றும், சொல்லியதாம். (௪)

நல்லாற்று-னாடி யருளாள்க பல்லாற்றுந்................ ※
தேரினு மஃதே துணை .... ※

(இ-ள்.) (நல்லாற்றால்)-நல்வழியிலேநின்று-நாடி- (அளவைகளாலும் யுத்தியாலும் நமக்குத்துணையாகும் அறம்யாதென்று) ஆராய்ந்து-அருளாள்க- அருளுடையாராகக்கடவர்.— பல்லாற்றால்- (ஒன்றுக்குஒன்று ஒத்திராத) பலசமயவழிகளால்- தேரினும்-ஆராய்ந்தாலும்-துணை- துணையாவது|- அஃதே-அவ்வருளே [வேறொன்றில்லையென்றபடி.] எ,று.) (கருத்து) நல்வழியிலேநின்று கிருபையையாளக்கடவர். பலவழியிலாராயினு *மவ்வருளே துணை என்பதாம். ※ அளவைகளாவன- பொறிகளாலே காணும் காட்சியும், குறிகளாலே

ஆலோசித்து அறியும் அனுமானமும், † கருத்தாமொழியாகிய ஆகமமும், எனமூன்றுவகைப்படும். ஒப்புமைபற்றி அறிகிற உவமானமும், இப்படி அல்லாமற்போனால் இதுகூடாதென்று அறியும்அருத்தாபத்தியும், * உண்மைக்கு எதிராகிய இல்லாமையும்,எனவிவையுங் கூட்டி ஆறென்பாரும் உண்டு. இவையும் அம்மூன்றுள் அடக்கிக்கொள்ளப்படும் யுத்தியாவது இதுகூடும் இதுகூடாது எனத் தன்னிடத்தே தோன்றுவது.— ஒன்றுக்கு ஒன்று ஒத்திராமையாவது-மதவேறுபாட்டால் அளவைகளும், பொருள்களும், தம்முள்ளேமாறுகொள்ளுதலாம். அப்படியிருந்தாலும்- அருள் துணையென்பது எல்லாருக்கும் ஒத்திருக்குமென்பதாம். உயிரைவிட்டுநீங்காமல் இருமையிலும் உதவலால் துணையென்றார். [இவையிரண்டு பாட்டாலும் அருளதுசிறப்புச்சொல்லப்பட்டது.] (உ)

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த........*
இன்னா வுலகம் புகல்...... ....*

(இ-ள்.) இருள்சேர்ந்த- அந்தகாரந்தங்கிய- இன்னாவுலகம்- துன்பவுலகத்திலே- புகல்- (போய்)புகுதல்|- அருள்சேர்ந்த- அருளைச்சேர்ந்த- நெஞ்சினார்க்கு-நெஞ்சையுடையவர்க்கு- இல்லை-இலலை.எ,

---

† புகையினாலே நெருப்பை அறிவது முதலானவை
* பகலுண்ணான்பருத்திருக்கைநோக்கிஇரவிலுண்பானெனவறிவதுபோல்வன.

உரு-ஆம்-அதி-அருளுடைமை, (கூ
௩)

று.) (கருத்து) இருளைபொருந்திய மனமுடையோர்க்கு நரகத்திற் புகுதலில்லை என்பதாம். ❋ இருள்சேர்ந்த வின்னாவுலக மென்றது- நெருங்கியவிருளையுடையதாய்த் தன்னை அடைந்தவர்க்குத் துன்பஞ்செய்வ தொருநரகத்தை அது கீழுலகத்துள் ஓரிடமாகலின் உலக மெனப்பட்டது. (௫)

மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப............❋
தன்னுயி ரஞ்சும்
வினை..❋

(இ-ள்.) மன்னுயிர்-நிலைபேறுடைய உயிர்களை}-ஓம்பி-காப்பாற்றி-அருளாள்வாற்கு(அவைகளிடத்தே)அருளுடையனாயிருப்பவனுக்கு-தன்னுயிர்-தன்னுடையவுயிர்-அஞ்சும்-அஞ்சுதற்கு ஏதுவாகிய வினை-பாவங்களானவை|- இல்-உண்டாகா.— என்ப- என்று (அறிந்தோர்|-)சொல்லுவர். எ,று.) (கருத்து)பிறவுயிர்களிடத்துக்கிருபையுடையவனுக்குத் தன்னுயிர் பயப்படும் பாவமில்லை என்பதாம்,❋ உயிர்களெல்லாம்- நித்தியமாதலின் மன்னுயிரென்றார். அஞ்சுதல்-துன்பநோக்கி அஞ்சுதல். அப்படிப்பட்ட அறமுடையவன் கொலை முதலாகிய பாவங்களைச் செய்யானெனவே மறுமையிலே நரகத்தை அடையாமைக்கு ஏதுசொல்லப்பட்டதாயிற்று, (௪)

அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு.................❋
மல்லன்மா ஞாலங் கரி ....❋

(இ-ள்.) அருளாள்வார்க்கு- அருளுடையவருக்கு- (இம்மையிலும்)-அல்லல்-ஒருதுன்பமானது|-இல்லை- உண்டாகாது.— (அதற்கு) வளிவழங்கும்- காற்றுலாவுகின்ற- மல்லல்- வளப்பத்தையுடைய-மா பெரிய-ஞாலம்- பூமியில்வாழ்வோர்|- கரி-சாக்ஷியாவர். எ,று.) (கருத்து) கிருபையுடையவர்களுக்குத் துன்பமில்லை என்பதாம். ❊ சாக்ஷியாவார்- தாம்கண்டுதெளிந்த பொருளைக் காணாதார்க்குத் தெளிவித்தற்கு உரியவர். அருளாள்வார்க்கு அல்லலுண்டாக ஒருகாலத்திலும் ஓரிடத்திலும் ஒருவரும்கண்டறிவாரில்லாமையால்- உலகத்தாரனைவரும் சாக்ஷியாவரென்றற்கு ஞாலங்கரியென்றார். எனவே இம்மையிலென்பது பெற்றாம். ஞாலத்தாரை ஞாலமெனலால் ஆகுபெயர். [இவைமூன்றுபாட்டாலும் அருளுடையவர்க்கு இருமையிலும் துன்பமில்லாமை சொல்லப்பட்டது.] (௫)

பொருணீங்கிப் பொய்ச்சாந்தா ரென்ப ரருணீங்கி....❊
யல்லவை செய்தொழுகு வார்........
..............❊
(௯௯ கா)

௨௫-ஆம்-அதி-அருளுடைமை

(இ-ள்.) அருளீங்கி- (உயிர்களிடத்துச்செய்யவேண்டும்) அருளை விட்டு3-அல்லவை-விடவேண்டுங்கொடுமைகளை3-செய்து-செய்து- ஒழுகுவார்-நடப்பாரை3-பொருணீங்கி- (மூன்பிறப்பிலேயும்) உறுதிப்பொருளைத்தேடாமல்- பொய்ச்சார்ந்தார் (தாம் துன்பட்டதென்றமையை)மறந்தவர்-என்ப-என்று (நல்லோர்|-)சொல்லுவார். எ-று (கருத்து) அருளைவிட்டுப் பாவஞ்செய்பவரை மறுமைப்பொருளை மறந்தவரென்பர் என்பதாம். ❋ உறுதிப்பொருள்-அறம். துன்பப்படுதல்-தன்னைப்பற்றிவருவது முதலாகிய பிறவித்துன்ப மூன்றையும் அனுபவித்தலாம். மறவாதிருந்தாராயின் அப்படி நடவாரென்பதுகருத்து. (சா)

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்...........❋
இவ்வுலக மில்லா தியாங்கு...............................❋

(இ-ள்.) பொருளில்லார்க்கு- பொருளில்லாதவருக்கு- இவ்வுலகம் இவ்வுலகத்தினின்பம்- இல்லாதியாங்கு- இல்லாதமைபோல்- அருளில்லார்க்கு- (உயிர்களின்மேல்) அருளில்லாதவருக்கு- அவ்வுலகம்- அவ்வுலகத்தினின்பம்|-இல்லை-இல்லை. எ-று.) (கருத்து) பொருளில்லாதவர்க் கிவ்வுலகத்தின்ப மில்லாமைபோல் அருளில்லாதவர்க் கவ்வுலகத்தின்பமில்லை என்பதாம். ❋ உலகமிரண்டும் அவற்றினின்பங்களுக்கு ஆகுதலால்- ஆகுபெயர்கள். எப்படி இந்த வுலகவின்பத்துக்குப்பொருளோ அப்படியே அந்த வுலகவின்பத்துக்கு அருள் காரணமென் பதாயிற்று.

(எ)

பொருளற்றார் பூப்பரொருகா
லருளற்றா.....................❋
ரற்றார்மற் றாத
லரிது..............................❋

(இ-ள்.) பொருளற்றார்- (ஊழினாலே) வறுமையடைந்தவர்;- (அது நீங்கி)-ஒருகால்-(பின்)னொருகாலத்தில்- பூப்பர்-(செல்வத்தினால்) பொலிவார்.—(அப்படியல்லாமல்) -அருளற்றார்- அருளில்லாதவர்;- (பாவம்நீங்காமையால்)—அற்றார்-அழிந்தவரோ- மற்று- பின்னொரு காலத்திலும்- ஆதலரிது-ஆகுதலில்லை. எ-று.) (கருத்து) பொருளற்றவர் ஒருகாலத்திற் செல்வம்பெறுவர் அருளற்றவர் அழிந்தவரோ என்பதாம். ❋ முன்பாட்டில் ஒருவிதத்தால் பொருளில்லாமையோடு அருளில்லாமையை ஒப்பாக்கிச் சொன்னாராதலால் இப்பாட்டில் மற்றொருவிதத்தினாலே அதனைமறுத்து அதிலும் கொடிதென்பது சொல்லியபடி. (அ)

உ௫-ஆம்- அதி- அருளுடைமை.

(௬௯)

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரின்......❋
அருளாதான் செய்யு மறம்.......................❋

(இ-ள்.) அருளாதான்-(உயிர்களிடத்தே) அருள்செய்யாதவன்-செய்யும்-செய்யும்-அறம்-அறத்தை }தேரின்-ஆராயின்-தெருளாதான்-ஞானமில்லாதவன்- மெய்ப்பொருள்- மெய்ந்நூலிற்சொல்லப்பட்ட பொருளை }-கண்டற்று- (ஒருகால்) கண்டதுபோலும். எ-று.) (கருத்து) அருளில்லாதவன் செய்யுந் தருமத்தை யாராய்ந்து பார்க்கில் மெய்ஞ்ஞானமில்லாதவனுண்மைப்பொருளைக் கண்டாற்போலும் என்பதாம். ❋ ஆல்-அசை. எப்படி நிலைபெற்ற ஞானமில்லாதவன் த

டுவே மெய்ப்பொருளை உணர்ந்தால் அதனைத் தன்னு ஞான மில்லாமையாற்றானே அழித்துவிடுவானே அப்படியே அருளில்லாதவன் நடுவே அறஞ்செய்தால் அதனைத்தன்னருளில்லாமையாற்றானே அழித்துவிடுவா னென்பதாயிற்று. ஆகவே மற்றெல்லா வறங்களுக்கும் அருளுடைமை மூலமென்பது பெறப்பட்டது. [இவை நான்குபாட்டாலும் அருளில்லாதவர்க்குவரும் குற்றம் சொல்லப்பட்டது.]

வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்...... ... ... *
மெலியார்மேற் செல்லு
மிடத்து...... ...... *

(இ-ள்.) (அருளில்லாதவன்) - தன்னின்மெலியார்மேல்- தன்னிலும் மெலியவர்கள்மேல்-தான்-தான்-செல்லுமிடத்து -(வருத்துதற்குச்) செல்லுமிடத்து- வலியார்-(தன்னின்)வலியவர்- (தன்னைவருத்துதற்குவரும்போது)-முன்-(அவர்)முன்-தன்னை-(அஞ்சிநிற்கும்) தனது நிலையை)-நினைக்க-நினைக்கக்கடவன் எ-று.) (கருத்து)வலியவன்மெலியவனை வருத்தச்செல்லும்போது தன்னிலும்வலியவன் தன்னைவருத்தியதை நினைக்கக்கடவன் என்பதாம். * மெலியானெனினும்-அஃ நினைத்துங்கொள்க. அதனை நினைக்கவே இந்தவுயிருக்கும்அப்படியே அச்சமுண்டாகுமென்று அறிந்து அதன்மேல் அருளுடையவனுவா னென்பது கருத்து. [இதனாலே அருள்பிறத்தற்கு உபாயம் சொல்லப்பட்டது. (ய)

௨௬-ஆம்-அதி-புலான்மறுத்தல்.

அஃதாவது-ஊனுண்ணுதலையொழித்தலாம். கொலைப்பாவத்தைப்பின் உண்டாக்கலால் அதற்குக்காரணமாதலையும், முன்னும் அதனாலவருதலால் அதன்காரியமாதலையும், ஒருசேரவுடைத்தாகிய ஊனுண்ணுதல் அருளுடையார்க்குஇயைவது அன்றாகலின் அதனைவிலக்குதற்கு இது அருளுடைமையின்பின் வைக்கப்பட்டது.

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா.........*
னெங்ஙன மாளுமருள்.......................................*

(இ-ள்.) தன்னூன்-தன்னுடம்பை}-பெருக்கற்கு- வளர்த்தற்பொருட்டு-தான்-தான்-பிறிதூன்-மற்றொன்றினுடம்பை}-உண்பான்-தின்பவன்-எங்ஙனம்-எவ்வகையால்-அருள் -அருளை}-ஆளும்-ஆளுவான். எ-று.) (கருத்து) தன்னுடல் பெருக்கற்குப் பிறவுடலைத்தின்பவனெவ்வகையாற் கிருபையுடையவனாவான் என்பதாம். ❁ பயனில்லாததன்னூன் வளர்த்தலைப்பயனென நினைத்து இக்கொடுமைசெய்வோனே அறிவில்லாத கொடியோனென்றதாயிற்று. எங்ஙனமாளுமருளென்பது ஆளானென்பது பட நின்ற இகழ்ச்சிக்குறிப்பு. (க)

பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி ....*
யாங்கில்லை
ஊன்றின் பவர்க்கு.........................*

(இ-ள்.) பொருளாட்சி-பொருளினாலே பயன்கொள்ளுதல்|-போற்றாதார்க்கு- (அதனைக்) காப்பாற்றாதவருக்கு- இல்லை-இல்லையாம்.-ஆங்கு-அதுபோல்- அருளாட்சி- அருளினாலே பயன்கொள்ளுதல்|-ஊன்றின்பவர்க்கு- புலாலுண்பவருக்கு- இல்லை-இல்லை. எ-று.) (கருத்து) பொருளைக் காப்பாற்றாதவர்க்குப் பொருளின்பமில்லாமைபோல அருளைக் காப்பாற்றாதார்க் கருளின்பமில்லை என்பதாம். ❁ எப்படிப் பொருட்பயனை இழத்தற்கு அதனைக்காப்பாற்றாமையோ அப்படியே அருட்பயனை இழத்தற்குஊன்றினல் காரணமென்றதாயிற்று. [ஊன்றின்றாயினும் உயிர்களுக்கு ஒருதீங்கு நினையாராயின் அருளாளுதற்குக் குறைவில்லையென்பாரை மறுத்து அதுஉண்டென்பது இவ்விரண்டுபாட்டாலும் சொல்லப்பட்டது.] (எடுத்துக்காட்டுவமையணி.) (உ)

உ௬-ஆம்-அதி-புலான்மறுத்தல்.

(௯௧)

படைகொண்டார் நெஞ்சம்போ
னன்றூக்கா தொன்ற....❋
னுடல்சுவை யுண்டார் மனம்.........
.... ❋

(இ-ள்.) ஒன்றன் - பிறிதோருயிரினது - உடல் - உடலை - சுவையுண்டார் - சுவைபடவுண்டவரது - மனம் - மனமானது; - படைகொண்டார் கொலைக்கருவியைத் (தங்கையிலே) கொண்டவரது - நெஞ்சம்போல் - மனம்போல் - நன்றூக்காது - (கொலையையே நோக்குவதல்லது) அருளை நோக்காது. எ-று.) (கருத்து) ஊனுண்பவர்களது மனமானது நன்மையை விரும்பாது என்பதாம். ❋ சுவைபட வுண்டல் - காயங்களால் இனியசுவைபடச் சமைத்து உண்டல். - படை - வாள்முதலானவை. [இதனால் ஊனுண்பாரது மனம் தீங்குநினைத்தல் உபமான பிரமாணத்தினாலே சாதித்து முன்பாட்டிலே சொல்லியது உறுதி செய்யப்பட்டது.] (௩)

அருளல்ல யாதெனிற் கொல்லாமை கோறல்........... ❋
பொருளல்ல தவ்வூன் றினல்.............................❋

(இ-ள்.) அருள்-அருளானது|-யாதெனின்-எதுவென்றால்- கொல்லாமை-கொலைசெய்யாமையாம்-அல்லது-அவ்வருளல்லாததானது|-யாதெனின்-எதுவென்றால்-கோறல்-கொல்லுதல் —(ஆதலால்) -அவ்வூன்-அக்கொல்லுதலால்வந்தவூனை}-தினல்-தின்னுதல்|- பொருளல்லது-அறனல்லாததாம். [பாவம்]. ஏ-று.) (கருத்து) கொல்லாமையேகிருபையாம். கொல்லுதலேபாவமாம் என்பதாம். ❋ கொல்லாமையை அருளென்றும்- கொல்லுதலை அல்லதென்றும் - காரியங்களைக்காரணங்களாகவும், ஊன்றின் கையாகிய காரணத்தைப் பாவமாகிய காரியமாகவும், உபசரித்தார்.—அருளல்லது-கொடுமை.—சிறப்புப்பற்றி—அறம் பொருளெனப்படுதலால்- பாவம் பொருளல்லது எனப்பட்டது.

(ச)

உண்ணாமை யுள்ள தூயிர்நிலை யூனுண்ண

.... ❋

வண்ணாத்தல் செய்யா தளறு

.... ❋

(இ-ள்.) உயிர்-(சிலவகை)யுயிர்கள்-நிலை-(உடம்புகளிலே)நிற்கை|-ஊனுண்ணாமை}-உண்ணாமையுள்ளது- உண்ணாமை யென்னும் அறத்தினிடத்தது.- (ஆதலால்)-உண்ண-(அந்நிலைகுலைய ஒருவன் அதனை) உண்பானாயின்- அளறு-அவனை (விழுங்கிய) நரகமானது|- அண்ணாத்தல்செய்யாது- (பின்உமிழ்தற்கு)வாய்திறவாது ஏ-று) (கருத்து) ஒருவனூனுண்பானாயி னவனை நரகம் விழுங்கிவிடும் என்பதாம். ❋

(ரு) உ௬-ஆம்-அதி-புலான்மறுத்தல்.

உண்ணப்படுகிற விலங்குகள் இதனாலே குறைந்துபோக மற்றவை பல்குதலால்- உண்ணாமையுள்ள துயிர் நிலையென்றார்:— உண்ணவென்பது உண்ணினென்னும் பொருளில்வந்தது. [ஊனுண்டவன் அப்பாவத்தினாலே நெடுங்காலம் நரகத்துள் அழுந்துவானென்பதாம். [கொலைப்பாவம் கொன்றவர்மேல் நிற்றலால் பின் ஊனுண்பார்க்குப்பாவமில்லையென்பாரை மறுத்து அது உண்டென்பது இவை யிரண்டுபாட்டாலும் சொல்லப்பட்டது.] (௪)

தினற்பொருட்டாற் கொள்ளா துலகெனின் யாரும்......*
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்...... ....*

(இ-ள்.) தினற்பொருட்டால்- தின்னுதல்காரணமாக-உலகு-உலகத்தார்-கொள்ளாதெனின்- (ஊனைக்) கொள்ளாராயின் - விலைப்பொருட்டால்- விலைப்பொருள் காரணமாக- ஊன்றருவார்-ஊனைவிற்பவர்-யாரும்-எவரும்-இல்-இல்லை. எ-று.) (கருத்து) ஊனைவாங்குவாரில்லாவிடின் அதைவிற்பாரில்லை என்பதாம். ❋ [பின்னே உண்டார்வதாகிய ஊனைத்தின்னுதல் அதற்குமுன்னே உண்டாவதாகியகொலைக்குக் காரணமாகாமையால் தின்பார்க்குக் காரணத்தால்வரும்பாவம் இல்லையென்ற வாதியைநோக்கி அருத்தாபத்தி பிரமாணத்தினாலே காரணமாகுதல் சாதித்தலின் இதனால் முன்பாட்டிலே சொல்லியது உறுதிசெய்யப்பட்டது] (௫)

உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்.........*
புண்ண துணர்வார்ப் பெறின். . ...

.... *

(இ-ள்.) புலால்-புலாலானது|- பிறிதொன்றன்- வேறோருடம்பின து-புண்-புண்ணாகும்.— அது-அப்புலால் அசுத்தமாயிருக்கையை}- உணர்வார்- அறிவோரை}- பெறின்-பெற்றால்-உண்ணாமைவேண்டும் (அப்புலாலை) உண்ணாதொழிய வேண்டும். எ,று.) (கருத்து) பிறவுடலின்புண்ணென்றறிந்தவர்களைப்பெற்றால் ஊனையுண்ணாதிருக்கவேண்டும் என்பதாம். ❊ அந்தமெய்மையை அறியாமையால் அதனை உண்கின்றாரென்பதாம். [இதனால் யுத்தியினாலும் ஊனுண்ணல் இழிந்ததென்பது சொல்லப்பட்டது.] (எ)

செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணா .... ❊
ருயிரிற் றலைப்பிரிந்த வூன். ....

.... ❊

(இ-ள்.) செயிரின்- (மயக்கமாகிய) குற்றத்தினின்றும்-தலைப்பிரிந்த-நீங்கிய-காட்சியார் -அறிவினையுடையவர்|-உயிரின்-ஒருயிரினின்

உசு-ஆம்-அதி-புலான்மறுத்தல். (௱௬)

றும்-தலைப்பிரிந்த- நீங்கிவந்த- ஊன்-ஊனை}- உண்ணார்-தின்னார்.எ று.) (கருத்து) அறிவுடையோர் ஊன்தின்னார் என்பதாம். ❊ தலைப்பிரிவு-ஒருசொல். பிணமென்று ஊனின் மெய்மைதாமே அறிதலால் உண்ணாரென்றார். (அ)

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற.... .... ❊
னுயிர்செகுத் துண்ணாமை நன்று...................... ❊

(இ-ள்.) அவி-(நெய்முதலாகிய) அவிகளை-சொரிந்து-(தீயினிடத்தேபெய்து- ஆயிரம் வேட்டலின்- ஆயிரம்யாகஞ் செய்தலினும்-ஒன்றன்- ஒருவிலங்கினது- உயிர்-உயிரை-செகுத்து- போக்கி-உண்ணாமை-(அவ்வுயிர்தின்றவூனை) உண்ணாமை-நன்று-நல்லது. எ-று.) (கருத்து) ஆயிரம்யாகஞ் செய்தலினும் புலாலைத்தின்னாமை நல்லது என்பதாம். ❋ அந்தயாகங்களால் வரும்பயனிலும் இந்தவிரதத்தால் வரும்பயன் பெரிதென்பதாம்.
(கூ)

கொல்லான் புலாலை மறுத்தானைக்
கைகூப்பி........... ❋
யெல்லா வுயிருந் தொழும்.. .
.... ❋

(இ-ள்.) கொல்லான்-(ஒருயிரையுங்)கொல்லாதவனுமாய்-புலாலை மறுத்தானை- புலாலையுமுண்ணாதவனை எல்லாவுயிரும்-எல்லாவுயிர்களும்-கைகூப்பி-கைகுவித்து-தொழும்- வணங்கும். எ-று.) (கருத்து) ஊனைத்தின்னாதவனை யெல்லாவுயிரும்வணங்கும் என்பதாம். ❋ இவ்விரண்டறங்களையும் ஒருமிக்கவுடையவர்க்கு அல்லாமல்ஒன்றைமாத்திரம் உடையவர்க்கு அதனாற்பயனில்லை யாகவின் கொல்லாமையும் உடன்சொல்லினார். இப்பேராருளுடையவன் மறுமையிலே தேவரினும் உயர்ந்தவனாவனென அப்பயனது பெருமைசொல்லியபடி. [இவைமூன்றுபாட்டாலும் ஊனுண்ணாமையினது உயர்ச்சி சொல்லப்பட்டது.] (ய)

௨௭-ஆம்-அதி-தவம்.

அஃதாவது-மனம் பொறிவழிப்போகாமல் நிற்கையின் பொருட்டுவி
ரதங்களினாலே உண்டிசுருக்குதல் முதலான செயல்களை மேற்
கொண்டு-அவைகளால் தம்முயிர்க்குவருந் துன்பங்களை
ப்பொறுத்துப் பிறவுயிர்களைக்காப்பாற்றலாம். பு
லாலைமறுத்து உயிர்களின்மேல் அருள்முதிர்
ந்தவிடத்தே செயப்படுவ தாகலின் இ
துபுலான்மறுத்தலின்பின்வைக்கப்பட்டது.

உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண்
செய்யாமை ...... *
யற்றே தவத்திற் குரு....

....*

(இ-ள்.) தவத்திற்கு- தவத்திலுக்கு- உரு-வடிவமானது|—உற்ற
நோய்-(உண்டிசுருக்குதல் முதலானவைகளால்) தம்முயிர்க்குவரும் துன்பங்களை}—நோன்றல்-பொறுத்தலும்- உயிர்க்கு-பிறவுயிர்க்கு உறுகண்செய்யாமை- (தாம்) துன்பஞ்செய்யாமையும் ஆகிய -அற்றே-அவ்வளவினதேயாகும். எ,று.) (கருத்து) தவத்திற் கழகானது பசிபொறுத்தலுந் துன்பஞ்செய்யாமையுமாம் என்பதாம். ❋ மற்றையவிரதங்களெல்லாம் இவ்விரண்டிலே அடங்குமாதலின்-அற்றே யெனத் தேற்றேகாரங்கொடுத்தார். [இதனால்தவத்தினது இலக்கணம்சொல்லப்பட்டது.] (க)

தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை........ ....❋
யஃதிலார் மேற்கொள் வது........................ ....❋

(இ-ள்.) தவமும்- (பயனேயல்லாமல்) தவம் உண்டாவதும்|- தவமுடையார்க்கு- (முன்னைத்)தவத்தை உடையவர்க்கே- ஆகும்- உண்டாகும்.—(ஆதலால்) -அதனை-அத்தவத்தை}-அஃதிலார்- அம்முன்னைத்தவமில்லாதவர்|- மேற்கொள்வது- செயத்தொடங்குவது|-அவம்-வீணாய். எ,று.) (கருத்து) முற்பிறப்பிற் றவஞ்செய்தவருக்குத்தவம்பலிக்கும் என்பதாம். ❋ முன்பழக்கத்தால் அறிவும்வல்லமையுமுடையராய் முடித்தல்லால தவமுடையார்க்காகுமென்றும்,பழக்கமில்லாதவர்க்கு அவ்விரண்டும் இல்லாமையினாலே முடியாமையால் அவமென்றும கூறினர். (உ)

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன். ...❋
மற்றை யவர்க
டவம்..❋

உ௲-ஆம்-அதி-தவம்,

(இ-ள்,) மற்றையவர்கள்-இல்லறத்தையே பற்றிநிற்பவர்கள்|-துறந்தார்க்கு- இருவகைப்பற்றையுந் துறந்தவர்களுக்கு- துப்புரவு- உண்டியும் மருந்தும் இருப்பிடமும்-வேண்டி- (உதவுதலை) வேண்டி- தவம்-(தாம்) தவஞ்செய்தலை- மறந்தார்கொல்- மறந்தார் போலும். எ,று,) (கருத்து) இல்வாழ்வோர் துறவிகளுக்கு உண்டியுமருந்துமிடமும் வேண்டித் தவத்தை மறந்தாற்போலும் என்பதாம். ❊ துப்புரவு-அனுபவிக்கப்படும் பொருள்கள்.— தவமானது- வேண்டியவைகளை வேண்டியபடியே பெறத்தருவதாதலால் யாவராலும் செய்யத்தகுவதாகிய அதைத் தம்மாலே செயப்படுகிற தானத்தின்மேல்விருப்பமிகுதியால் மறந்தாற்போலுமெனவே தானத்தினும்தவம் உயர்ந்தது என்றதாயிற்று, (கூ)

ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு ... .❋
மெண்ணிற் றவத்தான் வரும்....... .... ❋

(இ-ள்·) ஒன்னார்-(தமது அறத்துக்கு இடையூறுசெய்த) பகைவரை-தெறலும்- கெடச்செய்தலையும்- உவந்தாரை- (அதனை) விரும்பினவரை-ஆக்கலும்- உயரச்செய்தலையும்-எண்ணின்- (தவஞ்செய்வோர்) நினைப்பாராயின்- தவத்தான்- (அவரது) தவவலிமையினால்-வரும்-(அவை|அவருக்கு)உண்டாகும். எ,று·) (கருத்து) சத்துருக்களைக்கெடுத்தலும், மித்துருக்களைக்காத்தலுந் தவவலிமையால்வரும் என்பதாம். ❋ முழுதுந் துறந்தவருக்கு -பகைவரும், நட்பினரும், இருப்பது கூடாமையால் தவத்திற்கு ஏற்றிச் சொல்லப்பட்டது.— எண்ணினென்றதனால் அவர்க்கு அவை எண்ணாமையே இயல்பென்பதுதோன்றுகின்றது — பகைவர் - பெரியராயினும் அவருக்குக் கேடும், விரும்பினவர் சிறியராயினும் அவருக்குஉயர்வும், நினைத்தவளவில் வந்துநிற்குமெனத் தவஞ்செய்வார் மேல்வைத்துத் தவத்தின் வல்லமை சொல்லியபடி.

(சு)

வேண்டிய வேண்டியாங் கெய்தலாற்
செய்தவ.........❋
மீண்டு முயலப்
படும்..........❋

(இ-ள்.) வேண்டிய-(முயன்றால்) பெறவேண்டியபயன்களை-வேண்டியாங்கு-வேண்டியபடியே- எய்தலால்-(மறுமையிலேதாம்)பெறலாமாதலால்-செய்தவம்- செய்யத்தகுவதாகிய தவமானது-ஈண்டு இம்மையில்- முயலப்படும் - (அறிவுடையோராலே|) முயலப்படும். எ,று.) (கருத்து) மறுமையில் வேண்டியபயன்களை யடைதலா லிம்மையிலே தவமானது முயற்சிசெய்யப்படும் என்பதாம். ❋ ஈண

டென்றதனால் மறுமை வருவிக்கப்பட்டது.— மேலேகதியும்,மோக்ஷமும், தவத்தாலல்லாமல் அடைதல்கூடாதென்பதாம். [இவைநான்குபாட்டாலும் தவத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.] (௫)

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா ....*
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு.................*

(இ-ள்.) தவஞ்செய்வார்- தவத்தைச்செய்பவர் - தங்கருமஞ்செய்வார்-தமதுகருமத்தைச்செய்பவராவார்|-மற்றல்லார்-மற்றைப்பொருளின்பங்களைச்செய்வார்|- ஆசையுட்பட்டு- (அவைகளி) னாசையாகியவலையில் அகப்பட்டு- அவஞ்செய்வார்- (தமக்குக்) கேடுசெய்பவராவார். எ,று.) (கருத்து) தவத்தோர் தவகாரியங்களைச் செய்வர்-மற்றவர் அவகாரியங்களைச் செய்வர் என்பதாம். ❋ அநித்தியமாய் மூவகைத்துன்பத்துக்கு இடமாய் உயிரின் வேறாய் உள்ள உடம்பைக் குவருத்தப்.வருமென்று விடாமல் தவத்தைச் செய்தால்- பிறப்பு பிணி-மூப்பு-இறப்பு- இவைகளால் அநாதியாகத்துன்பப்பட்டுக்கொண்டுவருகிற உயிரானது ஞானம்பெற்று மோக்ஷத்தை அடையுமாதலால் தவஞ்செய்வாரைத் தங்கருமஞ் செய்வாரென்றும், க்ஷணத்தில்அழிவதாகிய சிற்றின்பத்தின் பொருட்டுப் பலபிறவிகளிலும் துன்பப்படத்தக்க பாவஞ்செய்துகொள்ளுதலால் அல்லாதாரை அவஞ்செய்வாரென்றும், சொல்லினர். நித்தியமின்மை- அநித்தியம். (௬)

சுடச்சுடப் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்..........*
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு
...............................*

(இ-ள்.) சுடச்சுட-(புடத்தீயானது)சுடச்சுட-பொன்போல்-பொன்னுக்குக்குற்றம்நீங்கல்போல்-நோற்கிற்பவர்க்கு- தவஞ்செய்யவல்லவர்க்கு- துன்பம்- (அதனால்வருகிற) துன்பம்-சுடச்சுட-சுடச்சுட-ஒளிவிடும்-ஒளிமிகும். எ,று) (கருத்து) பொன்னைப்புடமிடப்பொன்பிரகாசிப்பதுபோலத்தவஞ்செய்வோர்தவம் பிரகாசிக்குமென்பதாம். ❀ ஒளி-பொன்னுக்கு- காந்தியும், தவஞ்செய்வோர்க்கு- ஞானமும்,ஆம்.— காந்திமிகுந்தோறும் பொன்னுக்குக் குற்றம் நீங்கல்போல் ஞானமிகுந்தோறும் அவர்க்குப்பாவம் நீங்கல்கொள்க.—ஒளிபோற் பொருளைவிளக்கலால்- ஞானம் ஒளியெனப்பட்டது. (எ)

தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய........... .. ..❀
மன்னுயி ரெல்லாந் தொழும்....................... .... ❀

(இ-ள்.)தன்னுயிர்-தனதுஉயிரை}-தானற-தனக்குஉரித்தாக-பெ

உள்-ஆம்-அறி-தவம்.

(௬௫)

ற்றானை-பெற்றவனை}- ஏனைய- அதுபெறாதவையாகிய-மன்னுயிரெல்லாம்- நிலைபெற்றுடைய உயிர்களெல்லாம்|-தொழும்-வணங்கும். எ,று:) (கருத்து) தவத்தா லுயிர்பெற்றவனை யெல்லாவுயிரும் வணங்குமென்பதாம். ❀ தனக்குரித்தாதல்- தவமாகியதன்கருமஞ்செய்கல் அதைக்காட்டிலும் பெறுதற்கு உரியது இல்லாமையால்- பெற்றானையென்றார். அதுபெறாதவையென்றது-ஆசையிற்பட்டு அவஞ்செய்யுமுயிர்களை.—சாபானுக்கிரகவல்லமையைப் பெற்றிருக்கையினாலே எல்லாவுயிருந் தொழுமென்றார். (அ)

கூற்றங் குறித்தலுங் கைகூடு நோற்றலி.........................❀
னாற்ற றலைப்பட் டவர்க்கு................
....❀

(இ-ள்.) கூற்றம்-இயமனை-குறித்தலும்-கடத்தலும்-கைகூடும்-உண்டாகும்-நோற்றலின்- தவஞ்செய்தலால் வருவதாகிய- ஆற்றல்-வல்லமையைத்- தலைப்பட்டவர்க்கு- கூடியவர்க்கு. எ-று.) (கருத்து) தவவலிமையையடைந்தவர்களுக்கு இயமனைவெல்லுதல் பொருந்தும் என்பதாம். ※ குறித்தலுமென்னும் உம்மை அது கூடாமையைவிளக்கியது. ஆற்றல்-சாபாநுக்கிரகம். [இவைநான்குபாட்டாலும் தவஞ்செய்வோரது உயர்ச்சி சொல்லப்பட்டது.] (௯)

இலர்பல ராகிய காரண நோற்பார்............................*
சிலர்பலர் நோலா தவர்...*

(இ-ள்.) (உலகத்திலே செல்வர்சிலராக)-இலர்-வறியவர் பலராகிய காரணம்-பலராதற்குக்காரணம்- (யாதென்றால்)-(அது)-நோற்பார்-தவஞ்செய்வோர்-சிலர்-சிலராக-நோலாதவர்-தவஞ்செய்யாதவர்-பலர்-பலராதல். எ-று.) (கருத்து) பாக்கியர்சிலரும், நிற்பாக்கியர்பலருமாக விருத்தற்குக் காரணந் தவஞ்செய்வார் சிலரு மத்தவமில்லார்பலருமாக விருத்தலாமென்க என்பதாம். ※ இங்கே செல்வம் ஞானத்தையும், வறுமை அஞ்ஞானத்தையும், குறித்தும் நின்றன. நோற்பார்சிலரெனக் காரணத்தைச் சொல்லலால் அதன்காரியமாகிய செல்வர் சிலராதல் வருவிக்கப்பட்டது [இதனால் தவஞ்செய்யார்க்கு இம்மையின்பமும் இல்லையென்று இதனால் அதனதுதாழ்வுசொல்லப்பட்டது.] (௰)

௨௮-ஆம்-அதி-கூடாவொழுக்கம்.

அஃதாவது:
தாம்விட்ட காமவின்பத்தை உறுதியில்லாமையினாலே
பின்னும் விரும்பும் வழிதோன்ற அவ்வழியேகொண்டுநின்று
தவத்தோடு பொருந்ாததாகிய தீயவொழுக்கம். அதுவிலக்குத
ற்கு இது தவத்தின்பின் வைக்கப் பட்டது.

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க..................*
ளைந்து மகத்தே
நகும்..*

(இ-ள்.) வஞ்சமனத்தான்-வஞ்சம்பொருந்தியமனத்தையுடையவ னது-படிற்றொழுக்கம்- மறைந்த ஒழுக்கத்தை}- பூதங்களைந்தும்-(உடம்பாய் அதனோடுகலந்துநிற்கின்ற)பஞ்சபூதங்களும்|-(கண்டு) அகத்தே- (தம்)முள்ளே- நகும் -சிரிக்கும். எ,று.) (கருத்து) வஞ்சகன் பொய்யொழுக்கத்தை யவனைம்பூதங்களுஞ் சிரிக்கும் என்பதாம். ※ காமந்தன்னுள்ளே வருத்திக்கொண் டிருக்கவும் காமமில்லாமையைச் சொலவிப்புறத்தாரைவஞ்சித்தலால்-வஞ்சமனமென்றும், அவ்வருத்தம் பொறுக்கமாட்டாமற் செய்யும் கள்ளச்செய்கையைப்படிற்றொழுக்கமென்றும், உலகத்திலே களவுடையவர் பிறர் அறியாமற் செய்யும் காரியங்களுக்கு ஐம்பெரும் பூதங்களே சாக்ஷியாகலின் அச்செய்கையையும், அவன்மறைக்கின்றவித்தையையும், அறிந்து அவன் அறியாமல் தம்முள்ளே சிரித்தலால் அகத்தேநகுமென்றும், சொல்லினர். செய்தகுற்றமறையாதாகலின் தவஞ்செய்வோனுக்கு அவ்வொழுக்கம் ஆகாதென்பது கருத்து. (க)

வா னுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்.......※
தானறி
குற்றப் படின்.......................................※

(இ-ள்.) தான்-தான்-அறி-அறிந்த-குற்றம்-குற்றத்திலே- தன்னெஞ்சம்-தனதுமனம்-படின்-தாழுமாயின்-(ஒருவனுக்கு) -வானுயர்-வான்போலுயர்ந்த-தோற்றம்- தவவேடமானது|-எவன்- என்னபயனை}-செய்யும்- செய்யும். எ,று.) (கருத்து) தன்னுள்ளங் குற்றப்படினுயர்வான தவவேட மென்னபயனைச்செய்யும் என்பதாம். ※ அறியாதுசெய்த குற்றத்துக்கு அல்லாமல் அறிந்துசெய்த குற்றத்துக்குப் பிராயச்சித்தம் இல்லாமையால் நெஞ்சு குற்றமுடையதாகிவிடும் விடவேநின்ற வேஷமாத்திரத்துக்குப் புறத்தாரை வெருட்டுதலே அல்லது வேறுபயன் இல்லையென்பதாம். (உ)

உஅ-ஆம்-அதி-கூடாவொழுக்கம்.

(௱எ)

வலியி னிலைமையான் வல்லுருவம்
பெற்றம்.............. ...*
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று..............
...*

(இ-ள்.) வலி- (மனத்தை அடக்கும்) வல்லமையை}-இல்- இல்லாத நிலைமையான்- இயல்புடையவன்- வல்லுருவம்- அவ்வல்லமையையுடையவராது வேடத்தைக்கொண்டு (மனம்போனவழி போகுதல்)- பெற்றம்-பசுவானது- (காவற்காரர் தூரத்தாதிருக்கும்படி) - புலியின்றோல்-புலியினது தோலை}- போர்த்து-போர்த்துக்கொண்டு-மேய்ந்தற்று-பயிரைமேய்ந்த அச்செய்கைப்போலும். ஏ.று.) (கருத்து) தவவலிமை யில்லாதவனது பொய்வேடமானது பசுவானது புலித்தோலைப் போர்த்துக்கொண்டு பயிரை மேய்ந்தாற் போலும் என்பதாம். ❋ மேய்தலுக்கு ஏற்க மனம்போனவழி போகுதல் வருவிக்கப்பட்டது. காவற்காரர் தூரத்தாமை-புலியசித்தாற் புல்லைத்தின்னுமென்பதனாலும், அச்சத்தாலும், ஆம். ஆகவே, அவ்வல்லுருவங்கொள்ளுதற்குப்பயன் அப்படிப்பட்ட காரணங்களால் -உலகத்தார் சந்தேகப்படாமையாயிற்று. பசுதனக்கு உரியபுல்லைவிட்டுப் புலித்தோல்போர்த்துப் பிறர்க்கு உரியபயிரைமேய்தல்போல் அக்கூடாவொழுக்கத்தான் தனக்குஉரிய மனைவியைவிட்டுத் தவவேடங்கொண்டு பிறருக்குஉரியபெண்டிரை அனுபவித்தலென்க. (அப்படிச்செய்கிறபசுஇல்லாமையால்இவபொருளுவமையணி.) (௩)

தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து ……………… ❋
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று. …………………………❋

(இ-ள்.) (அவ்வல்லமையில்லாத நிலைமையான்) -தவம்-தவவேடத்திலே - மறைந்து-மறைந்து-அல்லவை-தவமல்லாதவைகளை} செய்தல்-செய்தல்| வேட்டுவன் - வேடன்|புதல் - புதலிலே—மறைந்து-மறைந்து - புள்-பறவைகளை} சிமிழ்த்தற்று — பிடித்தல்போலும், எ,று.) (கருத்து) தவவேடங்கொண்டொருவன் பாவஞ்செய்தல்வேடன்புதரில்மறைந்து பறவைகளைப் பிடித்தல்போலும் என்பதாம். ❋ தவம் அதன்வேடத்துக்கு ஆகுதலால் ஆகுபெயர். தவமல்லவற்றைச் செய்தலாவது - பிறர்க்கு உரியமகளிரைத் தன்வசதாராக்குதல். இப்படிச்செய்தலென்பது இத்தொழி லுவமையினாலே தோன்றுதல் அறிக. ·(ள)

பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென் ...❋
றேதம்
பலவுந் தரும். ....❋

{ர்அ)
உ-அ-ஆ-அறி-கூடாவொழுக்கம்.

(இ-ள்.) (பிறர்தம்மைநன்குமதித்தற்பொருட்டு)- பற்றற்றேமெ
ன்பார்-பற்றற்றேமென்று சொல்லுவாரது— படிற்றொழுக்கம்-ம
றைந்தவொழுக்கமானது| (அப்பொழுது இனிதுபோல் தோன்று
மாயினும்)-எற்றெற்றென்று- (பின்) என்செய்தோம் என்செய்தோ
மென்று(தாமேஇரங்கும்படி)ஏதம்பலவும்— பலதுன்பங்களையும்}
தரும்- (அவருக்குக்) கொடுக்கும். எ-று.) (கருத்து)பற்றுவிட்டோ
மென்பவர் பொய்யொழுக்கமானது பின்பு துன்பந்தரும் என்பதா
ம். ❊ சொல்லினளவிலல்லது பற்றுநீங்காமையாலேபற்றற்றேமென்
பாரென்றும், சிறிதாய்க் கணத்துள்ளே அழிவதாகிய இன்பத்தின்
பொருட்டுப் - பெரிதாய்நெடுங்காலம் நிற்பதாகிய பாவத்தைச்செ
ய்வோர் அது துன்பத்தைத் தரும்போது ஐயோ பாவமேயென்று
அழுவாராதலின் எற்றெற்றென்றும், சொல்லினார். [இவைஐந்துபா
ட்டாலும் கூடாவொழுக்கத்தினது இழுக்கம்சொல்லப்பட்டது(ரு)

நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து.......... *
வாழ்வாரின் வன்கணா ரில்.......... ... . *

(இ-ள்.) நெஞ்சின்-மனதினால்- துறவார் (பற்றுக்களைத்துறவாரா
கி- துறந்தார்போல் - பாசநீங்கினவர்போல்— வஞ்சித்து - தானஞ்
செய்வாரை) வஞ்சித்து-வாழ்வாரின் - வாழுமவர்போல்-வன்கணார்-
இரக்கமில்லாதவர்| இல்-இல்லை. எ-று.) (கருத்து) துறந்தவர்போல
வஞ்சித்து வாழ்பவரிலுங் கொடியவரில்லை என்பதாம். ❊ தானஞ்
செய்வாரை வஞ்சித்தலாவது- யாம் மறுமையிலே நற்கதி அடைத
ற்பொருட்டு இந்த அரியதவத்தோர்க்கு இன்னது கொடுப்போமெ
ன்று அறியாமற்கொடுத்தவரை அதைவாங்கிக்கொண்டு தாழ்ந்தக
தியை அடைவித்தலாம், தமக்கு ஆமவைகளைச் செய்தார்க்கு ஆகா
தவைகளை செய்தலால் - வன்கணாரில்லையென்றார். (சு)

புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி. ... . *
மூக்கிற் கரியா ருடைத்து.................. .... *

(இ-ள்.) புறம்-மேலே - குன்றி-குன்றிமணியானது — கண்டனை யரேனும் - காணப்படுதல்போற் காணப்படுகிறசெம்மையையுடை யவராயினும்—அகம்-உள்ளே-குன்றிமூக்கின்-அக்குன்றிமணியின் மூக்குப்போல் - கரியார்-கறுத்திருப்பவரையும்}- உடைத்து (உலக மானது|)உடையதாயிருக்கின்றது· எ,று.) (கருத்து) புறத்திற் குன் றிமணிபோற் சுத்தமும் அகத்திலக்குன்றிமணிமூக்குப்போற் களங் கமுமுடையவரை யுலகமுடைத்து என்பதாம். ❋ குன்றியாகியஉப

உஅ-ஆம்-அதி-கூடாவொழுக்கம்.

(௱௬)

மானத்திலே நிறத்தைக்காட்டுகிற செம்மைகருமைகள் உபமேய த்திலே செவ்வையாயிருக்கையையும் அறிவில்லாமையையும்காட்டு கின்றன.

(எ)

மனத்தது மாசாக மாண்டார் நீராடி

....❋

மறைந்தொழு கு மாந்த ர்

பலர் ....❋

(இ-ள்.) மாசு-அழுக்கானது-மனத்ததாக-(தம்) மனத்திலுள்ளதாக-மாண்டார்-(பிறர்க்குத்தவத்தால்)மாட்சிமையுடையவராக- நீராடி- நீரிலேமுழுகிக் (காட்டி) -மறைந்து- (தாம்அதனிடத்தே) மறைந்து- ஒழுகும்-நடக்கும்-மாந்தர்-மனிதர்|-பலர்-(உலகத்திலே) பலர். எ,று) (கருத்து) களங்க முள்ளத்திருக்க வுடற்புறஞ் சுத்தமாகநீராடிக்காட்டுவார்பலர் என்பதாம். ❁ மாசு- காமவெகுளிமயக்கங்கள். அவைபோதற்காக வல்லாமல்-மாட்சிமைப்பட்டவரென்றுபிறர்நினைத்தற்காக நீராடுதலால்அத்தொழிலைஅவர்மறைதற்குஇடமாக்கினர். [இவைமூன்றுபாட்டாலும் கூடாவொழுக்கத்தாரது குற்றமும்,அவரைஅறிந்துநீக்கவேண்டுமென்பதும், சொல்லப்பட்டன.]

கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன ....*
வினைபடு பாலாற்
கொளல்...................................*

(இ-ள்.) கணை-அம்பானது|- (வடிவினாலே செவ்விதாயிருந்தாலும்)-கொடிது- (செயலினாலே) கொடியதாயிருக்கின்றது. யாழ்- வீணையானது|-கோடு(வடிவினாலே) வளைவினதாயிருந்தாலும்- செவ்விது-(செயலினாலே) செவ்விதாயிருக்கின்றது.—ஆங்கு- அவ்வகையே-அன்ன-தவஞ்செய்வார் கொடியர் செவ்வியராயிருக்கைகளை}- (அவரதுவடிவினாலே கொள்ளாமல்) - வினைபடுபாலால் - (அவரது) செயல்பட்டபகுப்பினாலே -கொளல்- அறிந்துகொள்ளக்கடவர். எ,று.) (கருத்து) அம்பு ஒழுங்காயிருந்துங் கொடுமைசெய்யும்வீணை வளைந்திருந்து மினிமைசெய்யு மதுபோலத் தவத்தோரை நடக்கையிற்கண்டுகொள்க என்பதாம். ❁ அம்புக்குச்செயல்-கொல்லுதல். வீணைக்குச்செயல்- இசையினாலே இன்பத்தைத்தருதல். அவ்வகையே-அவர்பாவத்தைச்செய்தால்- கொடியரென்றும், அறத்தைச்செய்தால்-செவ்வியரென்றும், கொள்ளவேண்டுமென்பதாம். [இதனால் அவரை அறியும் வழி சொல்லப்பட்டது.] (௯)

மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம் ....*

பழித்த தொழித்து
விடின்...* (ாய)

[உஅ]

உஅ-ஆம்-அதி-கூடாவொழுக்கம்.

(இ-ள்.) (தவஞ்செய்வோர்க்கு)-மழித்தலும்-(தலைமயிரை)மழித்தலும்-நீட்டலும்-(அதனைச்)சடையாக்கலும் அல்லது வளர்த்தலும்-வேண்டா-வேண்டுவனவல்ல.-உலகம்-உயர்ந்தோரால்- பழித்தது-(தவத்திற்கு ஆகாதென்று) குற்றஞ்சொல்லப்பட்ட ஒழுக்கத்தை-ஒழித்துவிடின்- நீக்கிவிடுவாராயின். எ,று.) (கருத்து) உலகம்பழித்ததையொழித்துவிட்டால் முண்டிதஞ்செய்தலுஞ் சடைவளர்த்தலும்வேண்டாம் என்பதாம். ❋ மழித்தலென்பதே தலைமயிலைக் காட்டலால் அதைச்சொல்லிறரில்லை. [இதனாலேகூடாவொழுக்கத்தைவிட்டுத் தவஞ்செய்வோர்க்கு வேஷமும் வேண்டாமென அவரது சிறப்புச்சொல்லப்பட்டது.] (ய)

உகூ-ஆம்-அதி-கள்ளாமை.

அஃதாவது- பிறருடைமையா யுள்ளவைகளில் யாதொருபொருளையும் அவரைவஞ்சித்துக்கொள்ள நினையாமையாம். நினைத்தலும்செய்தற்குச் சமானமாதலால் – கள்ளாமை யென்றார்.

இல்லறத்தாருக்குத் தம்மவரோடு விளையாட்டாகவாவது செய்யக்கூடும் துறவறத்தாருக்குநினைத்தவிடத்தும் பெரியதவறும் ஆதலின் இதுதுறவறமாயிற்று புறத்திலே போகாமல் மட்டுக்கு ஓரிடத்தைப்பற்றி உயிரை நோக்கவேண்டியதாகிய அவரதுமனத்தை

விட்டுப்புறத்திலேபேர்ய்ப் பலவிடத்தையுற்ற உடம்பின்பொருட்டுப் பொருளைநோக்
குதலல்லாமலும் அப்பொருளையும் வஞ்சித்துக்கொள்ள நினைத்தல் அவருக்குப்பெரியகு
ற்றமாதல் அறிக. இவ்விதம் வாய்மைமுதற் கொல்லாமை முடிவாகிய நான்கதிகாரத்
துக்கும் ஒக்கும் இதுபொருளைப்பற்றி யுண்டாங்குற்றத்தை விலக்குவதாகலின்
ற்றியுண்டாங் கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.
காமம்ப

எள்ளாமை வேண்டுவா னென்பா
னெனைத்தொன்றுங்......*

கள்ளாமை காக்கதன் னெஞ்சு..............

.................*

(இ-ள்.) எள்ளாமை- (முத்தியை)
பான்- விரும்புவோன் இவனென்று

இகழாமல் - வேண்டுவா னென்
(தவத்தோராலே) நன்றாக மதி
க்கப்படுவோன்|- எனைத்தொன்றும் - யாதொருபொருளையும் - கள்
ளாமை- பிறரைவஞ்சித்துக்கொள்ள நினையாதபடி -தன்னெஞ்சு-த

னது நெஞ்சை}-காக்க-காக்கக்கடவன். எ-று.) (கருத்து) முத்தியை
யிகழாமல் வேண்டுபவன்களவுசெய்யாமைதன்னெஞ்சைக் காக்கக்
கடவன் என்பதாம். ❊ முத்தியைய
இகழ்தலாவது-க ராட்சியேபிரமா

ணமெமன்றும்,—நிலம்-நீர்-நெருப்பு- காற்று-
எனப்பூதம் நான்கே யென்றும்,—அவைகள்
கூடுதலின் சிறப்பினாலே தோன்றிப் பிரிவி
உக்கு-ஆம்-அறி-கள்ளாமைப் (ஈமக)

னாலே அழிவதாகிய உடம்பினிடத்தே அறிவு மதுவினிடத்தே களி ப்புப்போல-வெளிப்பட்டு அழியுமென்றும்,— இறந்தவுயிர் பின்னே பிறவாதென்றும்,— இன்பமும் பொருளும் முயற்சியால் வருவதென்றும்,— சொல்லும்-உலோகாயத மதமுதலாகிய மயக்கநூல்களைத் தெளிந்து அவற்றுக்கு ஏற்க நடத்தலாம். ஞானநூற் பொருளையாயினும் ஆசாரியனுக்கு வழிபாடு செய்யாமல் வஞ்சித்துக் கொள்ளின் அதுவும் களவாமாகலின் எனத்தெரன்றுமென்றார். நெஞ்சு கள்ளாமை காக்கவென்றலால்- துறந்தோர்க்கு விலக்கப்பட்ட கள்ளுதலாவது- களவுசெய்ய நினைத்தலென்பது பெற்றாம். (க)

உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்..........*
கள்ளத்தாற் கள்வே மெனல்

..................................*

(இ-ள்.) (குற்றங்களை)-உள்ளத்தால்- (தமது) நெஞ்சினாலே- உள்ளலும்- நினைத்தலும்!-தீதே- (துறந்தார்க்குப்) பாவமேயாகும்.—(ஆதலால்)-பிறன்-பிறனது-பொருளை-பொருளை}-கள்ளத்தால்-அவனறியாதவகையினாலே-கள்வேம்- வஞ்சித்துக்கொள்வோம்- எனல்-என்று நினையாதிருக்கக்கடவர். எ-று.) (கருத்து) குற்றங்களை நினைத்தலுந்தப்புப் பிறன்பொருளைக் களவுசெய்வோமென்று நிருக்கக்கடவர் என்பதாம். ❊ அவருள்ளம் சிறந்ததென்பது தோன்றுதற்குஉள்ளத்தாலென்பது அதிகமாகச் சொல்லப்பட்டது. [இவையிரண்டுபாட்டாலும் துறந்தோர்க்குக் களவாவது இதுவென்பதும், அதைநீக்கவேண்டுமென்பதும், சொல்லப்பட்டன.] (உ)

களவினா லாகிய வாக்க மளவிறந் ....❊
தாவது போலக் கெடும்...❊

(இ-ள்.) களவினால்- களவுசெய்தலினால்-ஆகிய- உண்டாகிய-ஆக்கம்-பொருளானது|-ஆவதுபோல- வளர்வதுபோலே (தோன்றி)-அளவிறந்து- (தனது) எல்லையைக்கடந்து - கெடும்- அழியும். எ-று.) (கருத்து) களவாலாகியசெல்வம் வளர்வதுபோலக் கெடும் என்பதாம். ❊ ஆக்கத்துக்கு ஏதுவாகலால் ஆக்கமெனப்பட்டது. எல்லையைக்கடந்து கெடுதலாவது - போங்கால் பாவத்தையும், பழியையும், நிறுத்திச்செய்த அறத்தையும் உடன்கொண்டுபோகுதல். (ங)

களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண் ....❊
வீயா விழுமந் தரும்...
.... ❊

(இ-ள் .)
க ளவின்க ண்-பிறர் பொருளைவஞ்சித்துக்

௨௯-ஆம்-அதி-கள்ளாமை

கன்றிய-மிகுந்த-காதல்- ஆசையானது]-(அப்போது இனிதுபோ ல்தோன்றி)- விளைவின்கண்-தான்பயனைக்கொடுக்கும்போது-வீயா விழுமம்- தொலையாதுன்பத்தை}- தரும்-கொடுக்கும் எ-று.) (க ருத்து) களவையிச்சிக்கு மிச்சையானது துன்பத்தைத் தரும் என் பதாம். ❁ மிகுதலால்-எந்நாளும் அக்களவையே கற்பித்துப் பாவ மும் பழியும் கொடுத்தேவருதலால் வீயாவிழுமந் தருமென்றார். [இவையிரண்டுபாட்டாலும் அதை நீக்குதற்குக் காரணம் சொல்ல ப்பட்டது.] (௪)

அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்...... ❋
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்.................... ❋

(இ-ள்.) அருள்-அருளினது உயர்ச்சியை- கருதி-அறிந்து-அன்பு டையராதல்-(அதன்மேல்) அன்புடையராய் நடத்தல்| - பொருள்- (பிறர்)பொருளை}-கருதி- (வஞ்சித்துக்கொள்ள)நினைத்து-பொச்சா ப்பு-(அவரது)சோர்வை- பார்ப்பார்கண்- பார்ப்போரிடத்து-இல்- உண்டாகாது. எ-று.) (கருத்து) பிறர்பொருளை யிச்சிப்பவரிடத்து அருளுமன்புமில்லை என்பதாம். ❁ தமக்கு உரியபொருளையும் தீதெ ன்று வெறுத்துத் துறந்தவர் பின்னே பிறர்க்கு உரியபொருளை நன் றென்று விரும்பி அதனை வஞ்சித்துக்கொள்ளுதற்கு அவரதுசோர் வைப் பார்ப்பாராயின் அவரிடத்தே பிறவுயிர்களின்மேலே செய்த ற்கு உரிய அருளினாலே தவறாது நடத்தல் கூடாதென்பதாம். (௫)

அளவின்க ணின்றொழுக லாற்றார் களவின்கட்... .... ❋
கன்றிய காத லவர்.................................... ❋

(இ-ள்.) களவின்கண்-களவினிடத்தே-கன்றிய-மிகுந்த-காதலவர் ஆசையையுடையவர்|-அளவின்கண்- (உயிர்முதலானவைகளை) அளவுசெய்தலாகியவழியிலே- நின்று-நிலைபெற்று-ஒழுகலாற்றார்- (அதற்குஏற்க) நடக்கமாட்டார். எ-று.) (கருத்து) களவி விச்சையுடையவர்கள் கிருபைவழியிலே நடவார் என்பதாம். ❋ உயிர்முதலானவைகளை யளவுசெய்தலாவது- காட்சிமுதலாகிய பிரமாணங்களைக்கொண்டு உயிர்ப்பொருளையும்,—அதற்கு அநாதியாய் வருகிற குற்றவினைவிளைவுகளையும்,— அவற்றால் அவ்வுயிர் † நாற்கதியிலே பிறந்திறந்து வருதலையும்,— அதனை ஒழித்தற்கு உபாயமான யோகஞானங்களையும்,— அவற்றால் அவ்வுயிர் அடையு முத்தியையும்,— அளவு

† நாற்கதி, தேவகதி, மக்கட்கதி, நரககதி, விலங்குகதி.

௨௯-ஆம்-அதி-கள்ளாமை. (௨௮௭)

செய்து உள்ளவாறு அறிதல். அதற்குஏற்பநடத்தலாவது-அளவுசெய்யப்பட்டவைகளிலே தீயவைகளினீங்கிநல்லவைகளின்வழிநிற்கை.

களவென்னுங் காரறி வாண்மை
யளவென்று…………… …❋
மாற்றல் புரிந்தார் கணில்.…………
…………………………❋

(இ-ள்.) களவென்னும்-களவென்றுசொல்லப்படும்-கார்- இருண்ட-அறிவாண்மை-அறிவினையுடையராயிருக்கையானது|- அளவென்னும்-(உயிர்முதலானவைகளை) அளத்தலென்றுசொல்லப்படும்- ஆற்றல்-பெருமையை}- புரிந்தார்கண்-விரும்பினவரிடத்து-இல்-இல்லை எ-று.) (கருத்து) களவுசெய்வோமென்னுமறிவுடைமையானதுபெ

ருமையுடையோரிடத்தில்லை என்பதாம். ❋ இருள்-மயக்கம்.களவெ ன்னுங் காரறிவாண்மை எனக் காரியத்தைக் காரணமாகவும், அள வென்னுமாற்றல் எனக் காரணத்தைக் காரியமாகவும்,உபசரித்தார்.
[களவும் அறவறமும், இருளும் ஒளியும்போல் ஒன்றுக்கொன்று பகையாகலின் கூடிநிற்பனவல்ல வென்பது இவைமூன்று பாட்டாலு ம்சொல்லப்பட்டது.] (எ)

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும் ....❋
களவறிந்தார் நெஞ்சிற் கரவு ....❋

(இ-ள்.) களவறிந்தார்- களவை அறிந்தவரது-நெஞ்சில்-மனதில்-கரவு-வஞ்சனையானது|-அளவறிந்தார்- அவ்வளத்தலை அறிந்தவரது-நெஞ்சத்து-நெஞ்சில்- அறம்போல- அறமானதுபோல்- நிற்கும்-நிலைபெறும்• எ,று.) (கருத்து) களவுசெய்வோரிடத்து வஞ்சனை வளரு ம்என்பதாம். ❋ உயிர்முதலானவைகளை அளந்து அறிந்தவர்களுக்குத் அறவறமானது அசையாது நிற்குமென்பது-இவ்வுபமானதினாலே கொள்ளப்பட்டது. [களவோடுநீங்காது நிற்பது இதனாற்சொல்லப்பட்டது.] (அ)

அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல ....❋
மற்றைய தேற்றா தவர் ....❋

(இ-ள்.) களவல்ல-களவல்லாத-மற்றைய-மற்றவைகளை}-தேற்றாதவர்-அறியாதவர்|- [களவொன்றையே அறிந்தவரொன்றபடி.]- அளவல்ல-அவ்வளவல்லாத தீயநினைவுகளை}-செய்து-நினைத்து- ஆங்கே-அப்போதே-வீவர்-கெடுவார். எ,று.) (கருத்து) களவல்லாதவற்றை யறியாதவர்கள் பாவங்களைச்செய்து கெடுவர் என்பதாம். ❋ தீயநினைவுகளாவன-பொருளுடையாரை வஞ்சிக்கும்விதமும்,— அவ்வஞ்

சனையால் அதைக்கொள்ளும்விதமும்,—கொள்ளப்பட்ட அப்பொருளினாலே தாம்போகங்களை அனுபவிக்கும் விதமும்,— முதலானவை. நினைத்தலுஞ் செய்தலோடொக்குமாகலில்-செய்தென்றும்,அந்நினைப்பு உள்ள அறங்களைப்போக்கி-மறைப்பான சொல்லையுஞ்செயலையும் புகுவித்து -அப்போதே கெடுக்குமாதலால்ஆங்கேவீவரென்றும், சொல்லினார். மற்றவையாவன-துறந்தார்க்குஉணவாகச்சொல்லப்பட்ட காய் கனி கிழங்கு சருகு முதலானவையும்,இல்லறத்தோரால் தானஞ்செய்யப்பட்டவையும், ஆம். அறியாமையாவது-அவைகளையே உண்டு போதுமென்றிருக்க அறியாமை. [இதனால்களவினாலே கெடுமாறு சொல்லப்பட்டது.] (௯)

களவார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத் ……… ………*
தள்ளாது புத்தே ளுலகு ……… …… ……… …… ………*

(இ-ள்.) கள்வார்க்கு- களவிலே பழகுவோர்க்கு- உயிர்நிலை-(தம்மின்வேறல்லாத) உடம்பும்|-தள்ளும்-தவறும்.- கள்ளார்க்கு-களவிலேபழகாதவர்க்கு- புத்தேளுலகு - (நெடுந்தூரமாகிய) தேவருலகமும்|—தள்ளாது-தவறாது. எ,று.) (கருத்து) களவு செய்வோர்க்கு நரகமும், களவுசெய்யார்க்குச் சுவர்க்கமுமுண்டாம் என்பதாம்.❋ தொக்குநின்ற சிறப்பும்மை யிரண்டும் வருவிக்கப்பட்டன.இம்மையிலும் அரசனால் ஒறுக்கப்படுதலால்- உடம்பும்தள்ளுமென்றும்,மறுமையிலும் தேவராகுதல கூடுமாதலால்- தேவருலகும் தள்ளாதென்றும், சொல்லப்பட்டன. [இதனால் இருவர் பயன்களும் சேர்த்துச்சொல்லப்பட்டன.] (௰)

௩௰-ஆம்-அதி -வா ய்மை.

அஃதாவது-மெய்யினது தன்மையாம். பெரும்பாலும் காமமும் பொருளும்பற்றி உண்டாவதாகிய பொய்மையை விலக்கலால் இது கூடாவொழுக்கங் கள்ளாமைகளின்பின் வைக்கப்பட்டது.

வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்....*
தீமை யிலாத சொலல்..............
.... *

(இ-ள்.)

வாய்மையெனப்படுவது- மெய்மையென்று சிறப்பித்து

சொல்லப்படுவது-யாதெனின்-
யாதென்றுவினவினல்-(அது)-

௩௰-ஆம்-அதி-வாய்மை. (௨௰௧)

(பிறிதோருயிர்க்கு)-யாதொன்றும்- சிறிதாயினும்-தீமையிலாத-தீ மையைத்தராதசொல்லுகளை}-சொலல்-சொல்லுதல். எ,று.) (கருத்து) சத்தியமென்று சொல்லப்படுவது யாதொரு தீமையுஞ் சொல்லா துநன்மைசொல்லுதல் என்பதாம். ❋ இதனல்நடந்ததைச்சொல்லுதல் வாய்மை அல்லவென்று நீக்கப்பட்டது. அந்நடந்ததைச்

சொல்லுதலும்தீங்கைத் தாராதிருக்குமாயின் மெய்மையாம் - தரு மாயின் பொய்மையாமென்பது கருத்து.

(௧)

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த........ *
நன்மை பயக்கு மெனின்................................*

(இ-ள்.) பொய்ம்மையும்- பொய்மைச்சொற்களும்|-புரைதீர்ந்த குற்றத்தினின்று நீங்கிய- நன்மை- நன்மையை} - பயக்குமெனின்- (பிறர்க்குத்) தருமாயின்- வாய்மையிடத்த-மெய்மைச்சொற்களினிடத்தனவாம். எ,று.) (கருத்து) குற்றமற்ற நன்மையைத் தருமாகில் பொய்ம்மொழிகளு மெய்ம்மொழிகளுக்சொப்பாம் என்பதாம்.※ குற்றந்தீர்ந்த நன்மை-அறம். அதனைத்தருதலாவது-கேட்டையாவது மரணத்தையாவது அடைய நின்றதோருயிர் அச்சொற்களின் பொய்மையினாலே அது நீங்கி இன்புறுதல். நடவாததைச் சொல்லுதலும் நன்மையைத் தாராதாயின் பொய்மையாம்-தருமாயின்மெய்மையாமென்பது கருத்து. [இவை யிரண்டுபாட்டாலும்- தீங்கைத்தாராத நடந்ததைச் சொல்லுதலும், நன்மையைத்தரும் நடவாததைச்சொல்லுதலும், மெய்மையாம்- எனவும், தீங்கைத்தரும்நடந்ததைச்சொல்லுதலும், நன்மையைத்தாராத நடவாததைச்சொல்லுதலும், பொய்மையாம்- எனவும், அவைகளி னிலக்கணம் சொல்லப்பட்டது.] (௨)

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்.... ....*
றன்னெஞ்சே தன்னைச் சுடும்.........................*

(இ-ள்.) (ஒருவன்|)- தன்னெஞ்சு- தனதுநெஞ்சினாலே- அறிவது அறியப்படுவதொன்றை}- பொய்யற்க- (பிறர் அறிந்திலரென்று) பொய்யாதொழியக்கடவன்.-பொய்த்தபின்-பொய்த்தானாயின்-தன்னெஞ்சே- (அதனை அறிந்த) தனதுநெஞ்சே!- (அப்பாவத்துக்குச் சாக்ஷியாய்நின்று)- தன்னை-தன்னை}-சுடும்-தபிக்கும். [அதன்பயனாகிய துன்பத்தை அடைவிக்கும்.] எ,று.) (கருத்து) தன்னெஞ்சறிவதைப் பொய்சொல்லாதிருக்கக்கடவன். பொய்சொன்னால் தன்னெஞ்சே தன்னைச்சுடும் என்பதாம். ❁ [பொய்மறையாததாயிருக்கை

(௨௯௩) ௩௰-ஆம்-அதி-வாய்மை.

யால் அதைச்சொல்லாதென்பது இதனால் சொல்லப்பட்டது.]

உள்ளத்தாற் பொய்யா தொழுகி
னுலகத்தார்.......... .... *
ருள்ளத்து ளெல்லா
முளன்.............................*

(இ-ள்.) (ஒருவன்) -உள்ளத்தால்- (தன்) மனதுக்கேற்ப - பொய்யாது-பொய்பேசாமல்- ஒழுகின்- நடப்பானாயின்- (அவன்)-உலகத்தார்-உயர்ந்தோரது-உள்ளத்துளெல்லாம்- மனங்களிலெல்லாம்-உளன்-இருப்பான். எ-று.) (கருத்து) மனதிற்கேற்கப் பொய்யாது நடப்பானாகி லவன் எல்லாருள்ளத்து மிருப்பான் என்பதாம். ❋ உள்ளத்துக்கு என்பது உள்ளத்தாலென வருதலால் வேற்றுமை மயக்கம். பொய்பேசாமல் நடத்தலாவது- மெய்பேசி நடத்தல். அவனது அவ்வறத்தி னருமையை நோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையே நினைப்பா ரென்பதாம். [இதனால் இம்மைப்பயன் சொல்லப்பட்டது.] (௪)

மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு ....❋

தானஞ்செய் வாரிற் றலை ....❋

(இ-ள்) (ஒருவன்)- மனத்தொடு(தன்)மனத்தோடுபொருந்த-வாய்மை-உண்மையை}- மொழியின்- சொல்லுவானாயின்- (அவன்)தவத்தொடு- தவத்துடனே- தானம்-தானத்தை}- செய்வாரின்- (ஒருமிக்கச்) செய்வாரினும்- தலை-சிறப்புடையவனுவான். எ-று.) (கருத்து) உண்மைசொல்லுவானாகி லவன் தவந் தானஞ் செய்பவரினுந்தலையாவன் என்பதாம். ❋ புறமாகிய மெய்யினாலேசெய்யப்படும்அவைகளினும் அகமாகிய மனோவாக்குக்களாலே செய்யப்படும் இது மிகப்பயனுடைய தென்பதாம். (௫)

பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை..........❋

யெல்லா வறமுந் தரும்.............................. ....

..❋

(இ-ள்.) (ஒருவனுக்கு) -பொய்யாமையன்ன- பொய்பேசாமைக் குஒப்பாகிய-புகழ்- புகழ்க்காரணம்|-இல்லை- (இம்மைக்கு) இல்லை.- (அது|அவனுக்கு)-எய்யாமை- (உடம்பு) வருந்தாமல்-எல்லாவறமும்-எல்லாவறங்களையும்}- தரும்-(மறுமைக்குந்தானே)தரும். எ-று.) (கருத்து) பொய்சொல்லாமைக் கொப்பாகிய புகழ்ச்சியில்லை.அது எல்லாத்தருமமுங் கொடுக்கும் என்பதாம். ❋ புகழ்- அதன்காரணத்தைதக்காட்டலா லாகுபெயர். இல்லறத்திற்குப்பொருள் சம்பாதிக்கை முதலானவைகளாலும், துறவறத்துக்கு உண்ணுமை முதலான

௩௰-ஆம்-அதி-வாய்மை. (௱௰௭)

வைகளாலும் வருத்தப்படவேண்டுமல்லவா அவ்வருத்தங்கள் அடையாமல் அவ்விருவகை அறங்களும் கொடுக்கும் பயன்களைப் பொய்யாமை தானே கொடுக்குமென்றற்கு - எய்யாமை யெல்லாவறமுந் தருமென்றார். (கு)

பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற.........*
செய்யாமை செய்யாமை நன்று................... *

(இ-ள்.) (ஒருவன்) - பொய்யாமை பொய்யாமை - பொய்பேசாமையையே பொய்பேசாமையையே - ஆற்றின் - செய்யவல்லவனாயின் - (அவன்) அறம்பிற - பிறவறங்களை }-செய்யாமை செய்யாமை-செய்யாமையே செய்யாமையே|-நன்று-நல்லது.எ,று.) (கருத்து)பொய்சொல்லாது நடக்கில் வேறுதருமஞ்செய்யாமையே நல்லது என்பதாம். ❀ பொய்யாமை பொய்யாமை யென்னும் அடுக்கு-இடைவிடாமைபற்றி வந்தது. செய்யாமை செய்யாமை என்னும் அடுக்கு-துணிவுபற்றிவந்தது. பலவறங்களையும் மேற்கொண்டு செய்தற்கு அருமையாகலால் சிலதவறினால் குற்றப்படுதலின் அவ்வெல்லாவறங்களின் பயன்களையும் தானேதரவல்லதாகிய இப்பொய் பேசாமை யொன்றையே மேற்கொண்டு தவறாமற் செய்தல் நல்லதென்றற்குச்செய்யாமை செய்யாமை நன்றென்றார். [பிறவறங்க ளெல்லாம்தரும்பயனைத்தானே தரவல்லதென்று மறுவடைப்பயனது மிகுதி இவைவழன் அடுக்கினாலும் சொல்லப்பட்டது.] (எ)

புறந் தூய்மை நீரா னமையு மகந்தூய்மை.................*
வாய்மையாற் காணப் படும்................................ *

(இ-ள்.) (ஒருவனுக்கு)-புறம்-உடம்பு- தூய்மை - பரிசுத்தமாந்தன்மை|-நீரான்-நீரினாலே-அமையும்- உண்டாகும்.—(அதுபோல்)-அகம்-மனது- தூய்மை- பரிசுத்தமாந்தன்மை|- வாய்மையான் - உண்மையால் -காணப்படும் - உண்டாகும். எ,று.) (கருத்து) உடம்பு

நீரற்சுத்தமாகும். உள்ளஞ் சத்தியத்தாற் சுத்தமாகும் என்பதாம். ※ புறந்தூயதாதல்- அழுக்குநீங்குதல். அகந்தூயதாதல் - மெய்யுணர்தல். எப்படிப்புறஞ்சுத்தமாதற்கு நீரல்லாமற் காரணம் இல்லையோ அப்படியே அகம் சுத்தமாதற்கு வாய்மையல்லாமற் காரணமில்லை என்றதாயிற்று. (அ)

எல்லா விளக்கும் விளக்கல்ல
சான்றோர்க்குப்................ *
பொய்யா விளக்கே
விளக்கு........................ ....* (௱௰அ)
[௯.௰]

௯௰-ஆம்-அதி-வாய்மை.

(இ-ள்.) சான்றோர்க்கு- (துறவினுலே) நிறைந்தோருக்கு- எல்லா விளக்கும்- (புறத்திருளை நீக்குகிற உலகத்தோரது)விளக்குகளெல்லாம்|-விளக்கல்ல- விளக்குக்களாவனவல்ல - பொய்யாவிளக்கே-(அகத்திருளை நீக்குகிற (பொய்யாமையாகிய விளக்கே|-விளக்கு-விளக்காம். எ,று.) (கருத்து) உலகவிளக்குக்களெல்லாம் விளக்குக்களல்ல,பெரியோர்க்குப் பொய்சொல்லாமையே விளக்காம் என்பதாம். ※ உலகத்தோரது விளக்குக்களாவன-சந்திரன் சூரியன் அக்கினி அகத்திருள் அஞ்ஞானம். இவ்விளக்குக்களுக்குப்போகாத அகத்திருள் போகலால்-பொய்யா விளக்கே விளக்கென்றார். (கூ)

யாமெய்யாக் கண்டவற்று ளில்லையெனைத் தொன்றும்...*
வாய்மையி னல்ல பிற. . . . . ,
.................*

(இ-ள்.) யாம்-எம்மால்-மெய்யா-மெய்ந்நூல்களாக- கண்டவற்று ள்-காணப்பட்ட நூல்களுள் -எனைத்தொன்றும் - யாதொருதன்மை யாலும்-வாய்மையின்- உண்மையினும்- நல்ல- மேற்பட்டனவாகி ய-பிற- பிறவறங்கள்- இல்லை - கண்டதில்லை, எ.று.) (கருத்து) மெய் போலும் பிறதருமங்களை யாங்கண்டதில்லை என்பதாம். ❋ மெய் மைஅறிவிக்கிற நூல்களை மெய்யென்றதால் ஆகுபெயர். அந்நூல்க ளாவன- கடவுளாலும் அவரருள்வழிப்பட்டுப்பொருள்களை உள்ளவ ண்ணம் அறிந்து அறிந்தவண்ணம் சொல்லவல்லவாராலும் உலகத்தா ர்பிழைக்கும்பொருட்டு அருளிச்செய்யப்பட்ட ஆகமங்கள். அவை யெல்லாவற்றிலும் இது ஒப்பமுடிந்ததென்பதாம். [இவைமூன்று பாட்டாலும் இவ்வறத்தினது தலைமைசொல்லப்பட்டது.] · (ய)

௩௧-ஆம்-அதி-வெகுளாமை.

அஃதாவது- கோபஞ்செய்தற்குக்காரணமாகிய குற்றம் ஒருவனிட த்தே உண்டாகிய விடத்தும் கோபஞ் செய்யாமையாம். இதுபொய்மைபற்றி உண்டாம் கோபத்தைவிலக்கலால் வாய்மையின்பின் வைக்கப்பட்டது.

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்..❋

காக்கினென் காவாக்கா லென்..........................❋

(இ-ள்.) சினம்-(தன்)[கோபத்தை}- செல்லிடத்து- (அதுபலிக்கு

மிடத்து-காப்பான்- (எழும்பாமல்) தடுப்பவனே|-காப்பான்- (அருளினலே) தடுப்பவனுவான்.- அல்விடத்து - மற்றைப்பலியாதவிடத்து-காக்கின்- (அதனைத்)தடுத்தால்-என்-என்ன- காவாக்கால்-தடுக்காவிட்டால்-என்-என்ன, எ.று.) (கருத்து) கோபஞ்செல்லுமிடத்துக்காப்பவனே கோபத்தைக்காப்பவனக்கோபஞ் செல்லா விடத்துக்கோபத்தைக் காத்தாலென் காவாக்காலென் என்பதாம். ❁ தவத்திஞலேதன்னின் மெலியவரைச்செல்லிட மென்றும், வலியவரை அல்லிடமென்றும், சொல்லிஞர், வலியவர்மேலே கோபஞ் செய்தவிடத்தும் அதனுல் அவர்க்கு ஒருதீங்கு உண்டாகாமையால் அடக்கியவிடத்தும் அறம் இல்லையென்றற்குக்காக்கினென் காவாக்காலென்னென்றூர். [இதனுல் கோபியாமைக்கு இடஞ்சொல்லப்பட்டது.] (க)

௨ செல்லா விடத்துச் சினந்தீது செல்விடத்து..............*
மில்லதனிற் றீய பிற..............

.... *

(இ-ள்.) சினம்-(ஒருவனது) கோபமானது|- செல்லாவிடத்து-தன்னின்வலியவர்மேல் (உண்டாயின்)- தீது - (தனக்கே) தீதாம்.— செல்விடத்தும்- தன்னெளியவர்மேல்- (உண்டாயினும்)- அதனின்- அக்கோபத்தினும்- தீயபிற- தீமையுடையவை|- வேறே- இல்-இல்லை. எ.று.) (கருத்து) வலியவர்மேற் கோபஞ்செலுத்திற்றனக்கேகுற்றமாம். எளியவர்மேற் கோபஞ்செலுத்தி லதனினுங் குற்றமாம் என்பதாம். ❁ வலியவர்மேலே செய்யுங்கோபத்தால் உண்டாவது இம்மையிலே அவரால்வருந் துன்பமொன்றே- எளியவர்மேலேசெய்யுங்கோபம் இம்மையிலே பழியையும் மறுமையிலேபாவத்தையும் தருதலால்-இல்லதனிற் றீயபிறவென்றூர். கோபம்வலியவர்- எளியவர்-யாரிடத்தும் ஆகாதென்பதாம். (உ)

மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய..........................*
பிறத்த லதனான்
வரும்...*

(இ-ள்.)யார்மாட்டும்-யாவரிடத்திலும்-வெகுளியை-கோபத்தை -மறத்தல்- மறக்கக்கடவர்.—(ஒருவருக்கு)-தீய- தீமையுடையவை யெல்லாம்-பிறத்தல்- உண்டாகுதல்|- அதனான்- அக்கோபத்தினாலே வரும்-வரும்-(ஆதலால்). எ,று.) (கருத்து) கோபத்தை மறக்கக்கடவர்.அக்கோபத்தாற் பாவங்களுண்டாம் என்பதாம். ❊ வலியவர்-ஒப்பானவர்- எளியவர்- என்னுமூவரிடத்தும் ஆகாமையால்- யார்மாட்டுமென்றும், மனத்தினாலே துறந்தவர்க்கு ஆகாதவையாகிய தீய

(சஉ௰)　　சு௩-ஆம்-அதி-வெகுளாமை.

சிந்தைகளையெல்லாம்　　உண்டாக்கலால்-
ன்றும், சொல்லினார்.

தீயபிறத்தலதனான் வருமெ
(௫)

நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்.........................❋
பகையு முளவோ பிற...❋

(இ-ள்.) (துறந்தோர்க்கு அருளினாலேயுண்டாகிய)-நகையும்-(முகத்தினிடத்து) மலர்ச்சியையும்- உவகையும்- (மனத்தினிடத்து) மகிழ்ச்சியையும்- கொல்லும்- கெடுத்துநின்ற- சினத்தின்- கோபத்தின்-பிற-வேறாகிய-பகையும்- பகைகளும்|-உளவோ- உண்டோ-[இல்லை]. எ-று.) (கருத்து) முகமலர்ச்சியையும் மனமகிழ்ச்சியையுங்கோபங்கெடுக்குமக்கோபத்தைவிட பகையில்லை என்பதாம். ❋ துறந்தோர்க்கும் புறப்பகை இல்லையாயினும் உட்பகையாய் நின்று அவருக்கு நட்பாகிய அருள்முதலானவைகளையும் நீக்கிப் பிறவித்துன்பத்தை அடைவித்தலால் அவர்க்குக்கோபத்தின் மிகுந்தபகை இல்லையாயிற்று. [இவைமூன்றுபாட்டாலும் கோபத்தினது தீங்குசொல்லப்பட்டது] (௪)

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்...............❋
றன்னையே கொல்லுஞ் சினம்.......................................❋

(இ-ள்.) தன்னை-தன்னை}- தான்-தான்-காக்கின்-(துன்பம் அடையாமல்)காக்கநினைத்தானாகில்-சினம்- (தன்மனதிலே) கோபம்வாராமல்-காக்க-காக்கக்கடவன்.—காவாக்கால்- காவானாயின்- சினம்-அக்கோபமானது|-தன்னையே- தன்னையே}-கொல்லும்- கெடுக்குங்கடுந்துன்பங்களை அடைவிக்கும். எ-று.) (கருத்து) தன்னைக்காக்கநினைத்தாற் கோபத்தைக்காக்கக்கடவன். காக்காவிடிலக்கோபந்தன்னையேகொல்லும் என்பதாம். ❋ வேண்டிய நன்மைகளையெல்லாந் தருவதாகிய தவத்தைப் பிறர்மேலே சாபமிடுதற்காகஇழந்ததுன்பத்தோடு பழையபிறவித்துன்பமும் ஒருமிக்க அடைதலால்-தன்னையே கொல்லுமென்றார். (௫)

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு.......❋
மேமப் புணையைச் சுடும்... ....

.... *

(இ-ள்.)சினமென்னும்-கோபமாகிய-சேர்ந்தாரைக்கொல்லி-நெருப்பானது|- (தனக்கு இடமானவரை மாத்திரமல்லாமல்)-இனமென்னும்- (அவருக்கு) இனமாகிய-ஏமம்- இதோபஞ்செய்கிற - புணை

௩௧-ஆம்-அதி-வெகுளாமை. (௩௦௧)

யை-மரக்கலத்தையும்}-சுடும்-சுடும். ௭-று) (கருத்து) கோபத்தீயானது தன்னையுந் தன்னினத்தையுஞ் சுடும் என்பதாம். ❋ இனம்-உறுதிமொழிபோதிப்பவர். இனத்தைதப்புணையாக உருவகஞ்செய்ததால் பிறவிக்கடலைக்கடப்பித்துமுத்திக்கரையைச் சேர்க்கின்றவெனவருவித்து அப்புணைக்கு முன்கூட்டுக. புணையையுமென்னுமெச்சவும்மை-தொக்குநிற்கையால் வருவிக்கப்பட்டது. சுடுமென்றதற்குத் தனக்கு இடமானவரைவிட்டு நீங்கச்செய்யுமென்பது கருத்து. தன்னையும் பிறவிக்கடலில் வீழ்வித்து எடுப்பாரையும் நீக்குமென்பதாம். (நெருப்பிற்குச் சேராதவிடத்தையும் சுடுதலையும், மரக்கலத்திற்கு இதோபதேசஞ் செய்தலையும், அதிகமாகச் சொல்லுதலால் மிகையொற்றுமை யுருவகவணி.) (௬)

இனத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு............ *

நிலத்தறைந்தான் கைபிழையா

தற்று........................*

(இ-ள்.) சினத்தை - கோபத்தை - பொருளென்று - (தன்னுவல்லமையைக்காட்டுகிற) ஒருகுணமென்று - கொண்டவன் - (தன்னிடத்தே) கொண்டவனது-கேடு- அவ்வல்லமையிழப்பு|— நிலத்து- பூமியினிடத்து-அறைந்தான்-அறைந்தவனது-கை- கையானது-பிழையாதற்று- (அந்நிலத்திலேபடுதல்) தப்பாதவிதம்போல் தப்பாது. எ,று.) (கருத்து) கோபத்தைப்பொருளாகக் கொண்டவனழிவானது தரையிலறைந்தகை தப்பாதுபடுதல்போலாம் என்பதாம். ❁ தர்க்கநூலினது நடைபற்றி- குணம் பொருளெனப்பட்டது. பிழையாதவற்றென்பது குறைந்து நின்றது. [இவை மூன்றுபாட்டாலும்கோபஞ்செய்தோர்க்கு வருந் தீங்குசொல்லப்பட்டது.] (எ)

இணரெரிதோய் வன்ன வின்னா செயினும்........ ......❁
புணரின் வெகுளாமை நன்று..... ....❁

(இ-ள்.) இணர்- பலசுடர்களையுடைய-எரி- பெருநெருப்பானது- தோய்வன்ன- (வந்து) தழுவினாற்போலும்- இன்னா- துன்பந்தருமவைகளை - செயினும்- (ஒருவன்) செய்தானாயினும்- வெகுளாமை- (அவன்மேலே) கோபஞ்செய்யாமை-புணரின்-கூடுமாயின்-நன்று- (அது!) நன்று. எ,று.) (கருத்து) ஒருவன் துன்பஞ்செய்யினுமவன் மேற்கோபியாமை நல்லது என்பதாம். ❁ இன்னாமையின் மிகுதிதோன்ற-இணரெரியென்றும், அதனைமேலுமேலுஞ்செய்தல் தோன்ற-இன்னாவென்றும், அச்செய்கைமுனிவரையும் கோபிக்கச்செய்யுமென்பதுதோன்ற- புணரினென்றும், சொல்லினர். [இதனுஞ்

(ராஉஞ)

நக-ஆம்-அதி-வெகுளாமை.

கோ   பஞ்செய்யாமையினது நன்மைசொல்லப்பட்டது.] (அ)

உள்ளிய வெல்லா/முடனெய்து/முள்ளத்தா........ *
லுள்ளான்/வெகுளி/யெனின்........ *

(இ-ள்.) (தவஞ்செய்வோன்!)— உள்ளத்தால்- (தன்) மனத்தால்- வெகுளி-கோபத்தை}- உள்ளானெனின்- (ஒருபோதும்) நினையானாயின்-உள்ளியவெல்லாம்- நினைக்கப்பட்டபேறெல்லாம்}-உடன்- ஒருமிக்க எய்தும் - பெறுவான், எ-று.) (கருத்து) கோபத்தைநினையானாகிலவனினைத்தவெல்லாமடைவான் என்பதாம். ※ அருளுடையுள்ளமென்பது தோன்றற்கு-உள்ளத்தாலென்பது அதிகமாகச்சொல்லப்பட்டது. இம்மை- மறுமை-வீடு-இவையெல்லாம் இவ்வொன்றினாலேயே கிடைக்குமென்றற்கு-உள்ளியவெல்லா முடனெய்து மென்றார். [இதனால் கோபஞ்செய்யாதவர்க்குவரு நன்மைசொல்லப்பட்டது.] (௯)

இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்........ *
துறந்தார் துறந்தார் துணை........ *

(இ-ள்.) இறந்தார்-(கோபத்திலே) மிகுந்தவர்|— (உயிருடையவராயிருக்கினும்)-இறந்தாரனையர்-செத்தாரோடொப்பாவார்.- சினத்தை-அக்கோபத்தை}-துறந்தார்|—(சாந்தன்மையை யுடையவராயிருக்கினும்)- துறந்தார்துணை- அதனை யொழிந்தவரோடொப்பாவார். எ-று.) (கருத்து) கோபங்கொண்டவர் செத்தவரோடொப்பாவர் கோபங்கொள்ளாதவரிறப்பவராயினும் பிறவாதவரோடொப்பா

வர் என்பதாம். ❋ அதிககோபமுடையவர்க்கு ஞானம்பெறுதற்கு உரிய உயிர் இருக்கினும்கலக்கத்தினாலே அதனை அடையாமை நிச்சயமாதலால் இறந்தாரையொன்றும், கோபத்தை விட்டவர்க்கு நிலையில்லாதவுடம்பு இருந்தாலும் ஞானத்தினால் முத்தியை அடைவது நிச்சயமாதலால் முத்திபெற்றாரோ டொப்பவொன்றும், சொல்லினர். [இதனால் அவ்விருவர் பயன்களும் சேர்த்துச் சொல்லப்பட்டன.] (௰)



௩௰௨-ஆம்-அதி-இன்னாசெய்யாமை.

அஃதாவது-தனக்கு ஒருபயனைக் குறித்தாவது வைரம்பற்றியாவது சோர்வினாலாவது ஒருயிர்க்குத் துன்பந்தருமவைகளைச் செய்யாமை. அவைகளைச்செய்தல்வெகுளி ஒழியவும்உண்டாமென்பதை அறிவித்தற்கு இது வெகுளாமையின் பின் வைக்கப்பட்டது.

சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா............ ❋
செய்யாமை மாசற்றார் கோள்.................................❋

(இ-ள்.) சிறப்பு-யோகமாகியசிறப்பினாலே- ஈனும்- தரப்படுவன வாகிய-செல்வம் - அணிமாமுதலாகிய செல்வங்களை}- பெறினும்- பெறலாமாயினும்- பிறர்க்கு-அயலாருக்கு- இன்னா- துன்பந்தருமவைகளை}- செய்யாமை- செய்யாமை|- மாசற்றார்- (ஆகமவழியினாலே) குற்றமற்றோர் (யாவருக்கும்)-கோள்- துணிவாம். எ-று.) (கருத்து) பிறர்க்குத்தீமைசெய்யாமையே பெரியோர் கொள்கையாம் என்பதாம். ❋ சிறப்புடையயோகத்தைச் சிறப்பென்றும், அதனாற்பெறப்படுதலால் அணிமாதிகளையும் சிறப்பீனுஞ் செல்வமென்றும், காமம் வெகுளி மயக்கம் என்னுமுக்குற்றங்கள் அற்றமையால் மாசற்றாரென்றும், சொல்லினார். [இதனாலே தமக்கு ஒருபயனோக்குறித்துச் செய்தல் விலக்கப்பட்டது. (க)

கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா...............❋
செய்யாமை மாசற்றார் கோள்..............................❋

(இ-ள்.) (ஒருவன்)-கறுத்து-(தம்மேல்) வைரங்கொண்டு- இன்னா- துன்பந்தருமவைகளை}—செய்தவக்கண்ணு-செய்தவிடத்தும்- மறுத்து- மீண்டு- இன்னா - அத்துன்பதருமவைகளை}- செய்யாமை- (தாம்) செய்யாமையும்|- மாசற்றார்- அக்குற்றமற்றவரது- கோள்- துணிவு. எ-று.) (கருத்து) ஒருவன் துன்பங்களைச் செய்தாலுமவனுக்கு மறுபடி துன்பங்களைச் செய்யாமையே பெரியோர் கொள்கையாம் என்பதாம். ❋ தொக்குநின்ற செய்யாமையுமென்னும் முன்பாட்டின்பொருளைத்தழுவிய எச்சவும்மை வருவிக்கப்பட்டது. அவன்செய்தவைகளைமனதிலே வையாமல் விடுவதுசெயத்தக்கதென்பதாம். (உ)

(௩௨௪)

௩௨-ஆம்-அ-இன்னாசெய்யாமை.

செய்யாமற் செற்றார்க்கு மின்னாத செய்தபி............... *
னுய்யா விழுமந் தரும்.. *

(இ-ள்.) செய்யாமல்-(தான்முன்பு துன்பந்தருவதொன்றைச்)செய்யாதிருக்க- செற்றார்க்கும் (தன்மேலே)வைரங்கொண்டவர்க்கும்- இன்னாத-துன்பந்தருமவைகளை}-செய்தபின்-(துறந்தவன்) செய்தானாயின்பின்பு-(அச்செயலானது|)-உய்யா-கடக்கமுடியாத-விழுமம்-இடும்பையை}-தரும்-(அவனுக்குக்) கொடுக்கும். எ-று.) (கருத்து) தனக்குத்துன்பஞ்செய்தவர்க்குத்தான் துன்பஞ்செய்தல்கேட்டைத்தரும் என்பதாம். ❊ இடும்பையாவது- தவமிழந்து பழியும் பாவமும் அடைதல். (௫)

இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண..................... *
நன்னயஞ் செய்து விடல்... *

(இ-ள்) (தமக்கு-இன்னா- துன்பந்தருமவைகளை}- செய்தாரை- செய்தவரை}-ஒறுத்தல் (துறந்தோர்) தண்டித்தலாவது|- அவர்-அவர்-நாண-(தாமே) நாணும்படி-(அவருக்கு)நன்னயம்-இனிமையான மகிழ்ச்சிகளை}-செய்து-செய்து-விடல்-(அவ்விரண்டையும்) மறத்தலாம். எ-று.) (கருத்து) துன்பஞ்செய்தவரைத்தண்டித்தலாவது அவருக்கின்பஞ்செய்தலாம் என்பதாம். ❊ மறவாதவிடத்துப்பின்னும்வந்து விளைக்குமாதலின் மறக் வேண்டியவையாயின அவரை வெல்லுமுபாயஞ்சொல்லியபடி. [இவை மூன்றுபாட்டாலும் வைரங்கொண்டுசெய்தல்விலக்கப்பட்டது.] (௬)

அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்...................... *
தந்நோய்போற் போற்றாக் கடை............................... *

(இ-ள்.) (துறந்தார்க்கு)-அறிவினன்-(உயிர்முதலானவைகளை உள்ளவண்ணம் அறிந்த) அறிவினால் - ஆகுவது - ஆகுமொருபயன்--- உண்டோ-உண்டோ [இல்லை]- பிறிதின் - வேறோருயிருக்குவந்த --- நோய்- துன்பந்தருமவையை}-தந்நோய்போல்-தமக்குவந்த துன்பந்தருமவைபோல்-போற்றாக்கடை- (குறிக்கொண்டு) காப்பாற்றாதவிடத்து. எ,று.) (கருத்து) மன்னுயிர்க்குவந்த துன்பத்தைத்தன்னுயிர்க்குவந்தாற்போற் பாராவிடத்து அறிவினாலுண்டாவதென்ன என்பதாம். ❋ குறிக்கொண்டு காப்பாற்றலாவது-நடத்தல் இருத்தல் கிடத்தல் நிற்றல் உண்டல் முதலாகிய தமது தொழில்களாலும், மற்றைவழிகளாலும் உயிர்களுக்குவரும் துன்பங்களைமுன்னே அறிந்து

௩௨-ஆம்-அதி-இன்னாசெய்யாமை.

(௩௧௫)

அவைவாராமற்காத்தல். இத்துன்பம் பெரும்பாலும் அஃறிணையிலே எறும்பு முதலாகிய சிறியவுடம் புடைய பிராணிகளைப்பற்றிவருதலாலே பொதுப்பட-பிறிதினோயென்றும், மறப்பினாலே அவை துன்பத்தை அடையினும் நமக்குப் பாவமென்று அறிந்து காக்கவேண்டுமாகலின் அதுசெய்யாதவிடத்து அறிவினாலே பயனில்லையென்றும், சொல்லினார். ;[இதனால்சோர்வினாலே செய்தல் விலக்கப்பட்டது.] (௫)

இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை.............*
வேண்டும் பிறன்கட் செயல்.................................*

(இ-ள்.) இன்னாவென - (இவைமனிதருக்குத்) துன்பந்தருமவை யென்று-தானுணர்ந்தவை-(அநுமானப்பிரமாணத்தினாலே)தன்னால் அறியப்பட்டவைகளை}-பிறன்கண்- பிறனிடத்தே- செயல்-செய்தலை- துன்னாமை-பொருந்தாமை|-வேண்டும்-(துறந்தவனுக்கு)வேண்டும். எ-று.) (கருத்து) துன்பமென்றறிந்தவற்றைப்பிறனிடத்துச்செய்யாமைவேண்டும் என்பதாம். ❋ இன்பத் துன்பங்கள் உயிர்க்குணமாகலால் அவைபிரத்தியக்ஷப்பிரமாணத்தினாலே அறியக்கூடாமை அறிக. அறமும் பாவமும் உண்டாவது மனமறிந்து செய்தவிடத்தே ஆகலின் உணர்ந்தவையென்றார். (௬)

எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா ...... ❋
மாணாசெய் யாமை தலை.................................
........❋

(இ-ள்.) மனத்தானாம்- மனத்தோடு உண்டாகின்ற- மாணா- துன்பந்தருமவைகளை}- எஞ்ஞான்றும்-யாதொருகாலத்திலும்- யார்க்கும்-யாவரொருவர்க்கும்- எனைத்தானும்- எவ்வளவுசிறிதாயினும்- செய்யாமை-செய்யாமை|-தலை- முதன்மையான அறம். எ-று.) (கருத்து) யாருக்குந் துன்பஞ் செய்பவற்றைச் செய்யாமையே தலைமையானதருமம் என்பதாம். ❋ மனமறிந்து செய்யாதவிடத்தே பாவம்இல்லை என்பது பெற்றாம். வல்லமையுண்டான காலத்திலும் செயலாகாமையால்-எஞ்ஞான்றுமென்றும். எளியவருக்கும் ஆகாமையால் யார்க்குமென்றும், செயல் சிறிதாயினும் பாவம்பெரிதாகலால்-எனைத்தானுமென்றும், சொல்லினார். (எ)

தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ..... ..❋
மன்னுயிர்க் கின்னா செயல் ... .❋

(இ-ள்.)

(பிறர்செய்யும்துன்பந்தருமவை)-தன்னுயிர்க்கு-தனது

௩௨-ஆம்-அதி-இன்னாசெய்யாமை.

யிர்க்கு-இன்னாமை- துன்பந்தருமவையாந்தன்மையை}-அறிவான் (அனுபவித்து) அறிபவன்- மன்னுயிர்க்கு- நிலையுள்ளபிறவுயிர்களு க்கு-இன்னா-அத்துன்பந்தருமவைகளை}-தான்-தான்-செயல்- செய் தல் -என்-என்னகாரணத்தால். எ,று.) (கருத்து) தன்னுயிர்க்குத் து ன்பந்தருபவற்றை மன்னுயிர்க்குச் செய்வதென்ன காரணம் என்ப தாம். ❀ கொல்-ஒ-அசைகள். இப்படியே இவை பிறவுயிர்க்கும் து ன்பந்தரு மவைக ளென்பது அனுமானத்தால் அறிந் திருந்தும் செய்கின்றபாவம் பரிகரிக்கக்கூடாமையால்- துன்பந்தருமவைகள் பின்னேவந்து தன்னைவருத்துமென்பது ஆகமத்தாலும் அறிந்துவி ட்க்கடவனென்பது தோன்ற-தானென்றும், அத்தன்மையால் ஒழி யாமைக்குக்காரணம் மயக்கமென்பதுதோன்ற- என்னென்றும், சொலவினார். [இவைமூன்றுபாட்டாலும் பொதுவகையால் இன்னா செயல் விலக்கப்பட்டது.] (அ)

பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற்

றமக்கின்னா........... ❋

பிற்பகற் றாமே வரும்.. ....

.... ❋

(இ-ள்.) (துறந்த

வர்)-பிறர்க்கு-பிறர்களுக்கு-இன்னா-துன்பந்த ரு
மவைகளை}-முற்பகல்-
ஒருமுகூர்த்தத்தினது முன்பங்கிலே-செய்யி
ன்-செய்தால்- தமக்கு-தமக்கு- இன்னா- துன்பந்தருமவைகள்|-பிற்
பகல்-அம்முகூர்த்தத்தினது பின்பங்கிலே—(அவர்செய்யாதிருக்க)
-தாமேவரும்- தாமேவரும். எ-று.) (கருத்து) முன்பு ஒருவருக்குத்
தீமைசெய்தால் பின்பு அத்தீமை தனக்கேவரும் என்பதாம். ※த
வசிழத்தல்- இப்படிக் கடிதிலும் எளிதிலும் வரும் அதனால் அவை
செய்யாதிருக்கக் கடவனென்பதாம். முகூர்த்தம் - மூன்றேமுக்கால்
நாழிகை. (கூ)

௩ரு. நோயெல்லா நோய்செய்தார் மேலவாநோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்........,.............. ※

(இ-ள்.) நோயெல்லாம்- துன்பந்தருமவையெல்லாம்|-நோய்செ
ய்தார் மேலவாம் (ஒன்றனுயிருக்குத்) துன்பந் தருமவைகளைச் செ
ய்தவர்மேலனவாம்.-(அதனால்)- நோயின்மைவேண்டுபவர்-(தம்மு
யிர்க்குத்) துன்பந்தருமவை யில்லாமையை வேண்டுவோர்|- நோய்
(ஒன்றனுயிர்க்குத்) துன்பந்தருமவைகளை}-செய்யார்-செய்யார். எ-
று.) (கருத்து) துன்பமெல்லாந் துன்பஞ் செய்தவர்மேலாகும் அ
ன்பமில்லாமையை விரும்புவோர் துன்பஞ்செய்யார் என்பதாம்.※
※அவர்நிலத்திலே விளைவித் திட்டார்க்கு விளைவும் அதுவே யாகலால்

கூ௨-ஆம்-அதி-இன்னாசெய்யாமை.

(௩௨௯)

நோயெல்லா நோய்செய்தார் மேலவாமென்றார் (சொற்பொருட்பின்வருநிலையணி.) [இவையிரண்டுபாட்டாலும் அது செய்தவர்க்குவரும் தீங்குசொல்லப்பட்டது.] (௰)

௩௩-ஆம்-அதி-கொல்லாமை.

அஃதாவது- ஐயறிவுடையவை முதல் ஓரறிவுடையவை கடையாய உயிர்களைச் சோர்வினாலும் கொல்லுதல் செய்யாமை. இது முன் சொல்லப்பட்ட அறங்களெல்லாவற்றினும் சிறப்புடையதாய்ச் சொல்லாதொழிந்த மற்றையறங்களையெல்லாம் தன்னுள் அடக்கி நிற்கையால்- இறுதியில் வைக்கப்பட்டது.

அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்.........*
பிறவினை யெல்லாந் தரும்.........*

(இ-ள்.) அறவினை-அறங்களெல்லாமாகிய செய்கை-யாதெனின்-எதுவென்றால்-(அது)-கொல்லாமை-(ஒருயிரையும்) கொல்லாமையாம்.—கோறல்-(அவற்றைக்) கொல்லுதல்-பிறவினையெல்லாம்-பாவச்செய்கைகளெல்லாவற்றையும்}-தரும்-(தானே) தரும்-(ஆதலால்). எ-று.) (கருத்து) தருமச்செய்கை யாதென்றால் கொலைசெய்யாமையையாம். கொலைசெய்தல்பாவமெல்லாவற்றையுந்தரும் என்பதாம். ✱ விலக்கப்பட்டதைச் செய்யாமையும் அறஞ்செய்தலாம் ஆதலால்-கொல்லாமையை அறவினையென்றார். இங்கேபிறவினையென்றது-அவ்வினைகளின்விளைவை.— கொலைப்பாவம் விளைக்குந்துன்பத்தை மற்றைப் பாவங்களெல்லாம் கூடியும் விளைக்கமாட்டாதென்பதாம். கொல்லாமை தானே பிறவறங்களின் பயனெல்லாந் தருமென்று மேற்கோள்சொல்லி அதற்கு ஏது எதிர்மறை முகத்தாற் சொல்லியபடியாயிற்று. (க)

பகுத்துண்டு பல்லுயி ரோம்புத

லூலோர்...........✱

தொகுத்தவற்று ளெல்லாந் தலை.........

...........✱

---

† புல்-மரம்- இவைமுதலானவை பரிசத்தை அறிகிற ஓரறிவுயிர்கள். சிப்பி-சங்கு முதலானவை அதனோடு, ரசத்தையும் அறிகிற ஈரறிவுயிர்கள். கறையான் எறும்பு- இவைமுதலானவை அவ்விரண்டோடு, கந்தத்தையும் அறிகிற மூவறிவுயிர்கள். தும்பி வண்டு இவைமுதலானவை அம்மூன்றோடு ரூபத்தையும் அறிகிற நாலறிவுயிர்கள், மிருகங்கள் பறவைகள்- மனிதர் இவைமுதலானவை அந்நான்கோடு, சத்தத்தையும் அறிகிற ஐயறிவுயிர்கள்.

(இ-ள்.) பகுத்து - (உணப்பட்டதைப்பசித்த உயிர்களுக்குப்) பங்கிட்டுகொடுத்து - உண்டு - உண்டு - பல்லுயிர் - ஐவகையுயிர்களையும் } - ஓம்புதல் - காப்பாற்றல் - நூலோர் - அறநூலுடையோரால் - தொகுத்தவற்றுளெல்லாம் - (துறந்தவர்க்குத்) தொகுத்துவைக்கப்பட்ட அறங்களெல்லாவற்றினும் - தலை - முதன்மையான அறமாம் எ-று.) (எரு த்து) இடைத்தவற்றைப் பங்கிட்டுண்டு பலவுயிர்களைக் காப்பாற்றலெல்லாத் தருமத்தினுந் தலையான தருமம் என்பதாம். ✲ பல்லுயிருமென்கிற முற்றும்மை வருவிக்கப்பட்டது. ஓம்புதல் மறந்தும் கொலைவாராமற் குறிக்கொண்டு காத்தல். அதற்குப் பகுத்துண்ணுதல் அவசியம் இருக்கவேண்டிய அங்கமாதலால் அச்சிறப்புத்தோன்ற - பகுத்துண்டு என்றார். எல்லா அறநூல்களினும் நல்லவைகளையெடுத்துஎல்லாருக்கும் பொதுப்படச்சொல்லுதல் இந்நூலாசிரியருக்கு இயல்பாதலால் இங்கேயும் பொதுப்பட நூலோரென்றும், அவரெல்லாருக்கும் ஒப்பமுடிதலால் - தலையென்றும், சொல்லினார். (உ)

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்..........................✲
பின்சாரப் பொய்யாமை நன்று.....................................✲

(இ-ள்.) (நூலோராலே தொகுக்கப்பட்ட அறங்களுள்)-ஒன்றாக-(தன்னோடு இணைப்பது இல்லாமல்) தலையாக-கொல்லாமை-கொலை செய்யாமை-நல்லது-நல்லது.-(அதற்கு நீங்குவில்) பொய்யாமை-பொய்ச்சொல்லாமை-பின்சார-(அதன்) பின்னே நிற்க-நன்று-நல்லது. எ-று.) (கருத்து) கொல்லாமை நல்லது அதினும் பொய்சொல்லாமை நல்லது என்பதாம். ❋ அதிகாரந் கொல்லாமையாயினும்-முன்பொய்யாமை பொய்யாமையாற்றினென்றும், யாமெய்யாக்கண்டவற்றுளில்லையென்றும், சொல்லுதலால்- பொய்யாமை கொல்லாமைகளிலே சிறந்தது எதுவென்று சந்தேகம் உண்டாமென்றே அது உண்டாகாமற்பொருட்டு இங்கே- பின்சாரப்பொய்யாமை நன்றென்றார்.-முன்சொன்னதினும் பின்சொன்னது உறுதியுடையதாமாகலால். [இவைமூன்றுபாட்டாலும் கொல்லாமையினது சிறப்புச்சொல்லப்பட்டது.] (௩)

நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங். ......❋
கொல்லாமை சூழு நெறி.......... .... ❋

(இ-ள்.) (மேற்கதியும் முத்தியும் பெறுதற்கு)- நல்லாறெனப்படுவது-நல்லவழியென்று சொல்லப்படுவது-யாதெனின்-எதுவென்றால்-(அது) யாதொன்றும்- யாதோருயிரையும்- கொல்லாமை-கொல்

லாமையாகிய அறத்தினை}-சூழும்-(காக்க)நினைக்கும்- நெறி-வழியா ம். எ,று.) (கருத்து) நல்லவழியென்று சொல்லப்படுவது யாதெனி னுல் யாதோருயிரையுங் கொல்லாமையாம் என்பதாம். ❋ புல்லுமு தலாகிய ஓரறிவுயிரையும் உள்ளாக்குதற்கு யாதொன்று மென்றார். காத்தல்-தவறுமற்காத்தல். [இதனால் கொல்லாமையை யுடையதே நல்வழியென்பது சொல்லப்பட்டது.] (௪)

நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்............❋
கொல்லாமை சூழ்வான் றலை.......................❋

(இ-ள்.) நிலை-(பிறப்புநின்ற) நிலைக்கு-அஞ்சி-பயந்து-(பிறவாமை ப்பொருட்டு)-நீத்தாருளெல்லாம்- (மனைவாழ்க்கையைத்) துறந்தவ ரெல்லாருள்ளும்- கொலை- கொலைப்பாவத்திற்கு - அஞ்சி- பயந்து- கொல்லாமை- கொல்லாமையாகிய அறத்தை}- சூழ்வான்- மறவாத வன்|-தலை-உயர்ந்தோன். எ,று.) (கருத்து) கொலைக்கஞ்சிக்கொல்லா மையை மறவாதவனே யெல்லாருள்ளுந் தலையாவான் என்பதாம்.❋ பிறப்புநின்ற நிலையாவது- மனிதர்முதலாகிய சரமும், மரமுதலா கியஅசரமும், ஆகிய இருவகைப் பிறப்புக்களிலும் இன்பமென்ப தொன்று இல்லாமல் உள்ளவையெல்லாம் துன்பமேயாகியநிலைமை துறவு-ஒன்றேயாயினும் சமயவேறுபாட்டால் பலவாமாதலால்-நீத் தாருளெல்லாமென்றார். [இதனால் கொல்லாமையைமறவாதவனது உயர்ச்சிசொல்லப்பட்டது.] (௫)

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண் ணுங்
கூற்று.......................❋

(இ-ள்.) உயிருண்ணுங்கூற்று- உயிரைக்கொண்டுபோம் இயமனு னவன்|-கொல்லாமை- கொலைசெய்யாமையாகிய விரதத்தை}-மேற்

கொண்டு-மேலாகக்கொண்டு- ஒழுகுவான்-நடப்பவனது -வாழ்நாண்மேல்- ஆயுளின்மேல்- செல்லாது - செல்லான். எ-று.) (கருத்து) கொலைசெய்யாதவன் வாழ்நாளின்மேல் இயமன் செல்லமாட்டான் என்பதாம். ❊ மிகவும்பெரிய அறஞ்செய்தவரும், மிகவும்பெரிய பாவஞ்செய்தவரும், இம்மையிலேதானே அவைகளின் பயன்களை அநுபவிப்பாரென்னும் அறநூலினது துணிவுபற்றி-இப்பெரிய அறஞ்செய்தவன் தானும் கொல்லப்படானாகவே அவன்கருவினும்போது நியமிக்கப்பட்ட ஆயுட்காலம் குறைவுபடாதென்றற்கு- வாழ்நாண் மேல் கூற்றுச்செல்லாதென்றார். செல்லாதாகவே காலநீடித்திருந்து ஞானத்தைச் சம்பாதித்து மோக்ஷத்தை அடைவானென்பது

[கூகூ]

(௱௩௰) ௩௩-ஆம்-அதி-கொல்லாமை.

கருத்து. [இதனால் கொல்லா விரதத்தோர்க்குவரும் நன்மைசொல்லப்பட்டது.]

(கா)

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க
தான்பிறி.......... ❊
இன்னுயிர் நீக்கும்
வினை.......... ❊

(இ-ள்.) தான்-தான்-பிறிது-வேறொன்றனது-இன்னுயிர்-இனி தாகியவுயிரை-நீக்கும்-(அதனுடம்பிலிருந்து) நீக்குதலாகிய-வி தொழிலை-(அதுசெய்யாவிடத்து)-தன்னுயிர்-தனதுஉயிரான -நீப்பினும்-(உடம்பைவிட்டு) நீங்கிப்போமாயினும்-செய்யற்க-செ யாதிருக்கக்கடவன். எ-று.) (கருத்து) தானொருயிரைநீக்குந்தொழிலைச் செய்யாதிருக்கக் கடவன் என்பதாம். ✵ பாவம் தான் கொலையுண்டவிடத்தே தேய்தலும், ஒன்றைக் கொன்றவிடத்தே வளர்தலும், நோக்கி-தன்னை ஒன்று கொன்றாலும் தான் அதனைக் கொல்லலாகாதென்றதென்க. (எ)

நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்கு.....✵
கொன்றாகு மாக்கங் கடை.................................✵

(இ-ள்.) (யாகத்திலேகொன்றால்)-நன்றாகும்-இன்பமிகுவதாகிய ஆக்கம்-செல்வமானது-பெரிது-பெரிதாகும்-எனினும்-என்றுசொல்லப்பட்டதாயினும்- சான்றோர்க்கு-(அறவினாலே) நிறைந்தோர்க்கு-கொன்று-(ஒருயிரைக்)கொன்று-ஆகும்-(அதனா)லுண்டாவதாகிய-ஆக்கம்-செல்வமானது-கடை-இழிந்ததாம். எ-று.) (கருத்து) பெரியோர்க்குக் கொலைசெய்துவருஞ்செல்வங்கடை என்பதாம்.✵ இன்பமிகுஞ் செல்வமாவது- தாமும் தேவராய்ச்சுவர்க்கத்திலேசென்றடையும் செல்வம். அது சிறிதாகையாலும், பின்னும்பிறத்தற்கு ஏதுவாதலாலும், மோக்ஷமாகிய அழிவில்லாத சுகத்தை அடைவோருக்கு-கடையெனப்பட்டது. சுவர்க்கபோகத்தை விரும்பினவருக்கு ஆகுமாயினும் மோக்ஷத்தை விரும்பினவருக்கு ஆகாதென்றதனால் விதிவிலக்குகள் தங்களிலே விரோதப்படாமல் விளக்கியவாறாயிற்று. [இவையிரண்டுபாட்டாலும் கொலையினது குற்றம் சொல்லப்பட்டது. (அ)

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்..............✵
புன்மை தெரிவா ரகத்து. . .
.........................✵

(இ-ள்.) கொலைவினையராகிய-கொலைத்தொழிலையுடையவராகிய- ௩௩-ஆம்-அதி-கொல்லாமை;

(௩௨௯)

மாக்கள்-மனிதர்- (அத்தொழிலினது இழிவை அறியாத நெஞ்சினராயிருந்தாலும்)-புன்மைதெரிவாரகத்து-அவ்விழிவையறிவோரது நெஞ்சிலே-புலைவினையர் புலைத்தொழிலாராய்த்தோன்றுவர். ஏ-று.) (கருத்து) கொலைத்தொழிலைச்செய்வோர் அத்தொழில்செய்யாதவர்மனதிலே புலைத்தொழிலாராய்க்காணப்படுவர் என்பதாம். ※ கொலைவினையரென்றபடியினாலே யாகக் கொலையல்லாமையறிக. புலைவினையரென்றது-தொழிலினாலே புலையராவரென்றபடி. அவர்இம்மையிலே தாழ்வை அடைவரென்பதாம்; (௯)

உயிருடம்பி னீக்கியா ரென்பர் செயிருடம்பிற் .... ※
செல்லாத்தீ வாழ்க்கை யவர் ....
... . ※

(இ-ள்) செயிருடம்பின் - பார்க்கக் கூடாத நோயுடம் புடனே- செல்லாத்தீ வாழ்க்கையவர்-வறுமையோடேகூடிய இழிதொழில் வாழ்க்கையுடையவரை}—(இவர்முற்பிறப்பிலே)-உயிர்- உயிர்களை}—உடம்பின்-(அவைநின்ற) உடம்புகளிலிருந்து-நீக்கியார்-நீக்கினவர்-என்பர்-என்று (வினைவிளைவுகளை அறிந்தோர்})சொல்லுவார். எ,று. (கருத்து) வறுமையும் பிணியுமுடையவரை முற்பிறப்பிற்கொலை செய்தவரென்று பெரியோர்சொல்லுவர் என்பதாம். ❁ செல்லாவாழ்க்கை-தீவாழ்க்கையெனக்கூட்டுக் நோயுடம்பு-பெருவியாதிமுதலானவை கொண்டவுடம்பு- மறுமையிலே இவையும் அடைவரென்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் கொல்வோர்க்கு வருந்தீங்கு சொல்லப்பட்டது.] அருளுடைமை முதல் கொல்லாமை இறுதியாகிய இவைகளிலே சொல்லப்படாத விரதங்களும்அடங்கும் அஃது அறிந்து அடக்கிக்கொள்க. (௰)



ஞானம்.

இனி அவ்விரதங்களினாலே கரணங்கள் பரிசுத்தமானவிடத்து உண்டாவதும், மோக்ஷத்தைத் தருவதும், ஆகிய அறிவு

அது நிலையாமைமுதல் அவாவறுத்தல் இறுதியாக நான்கதிகாரத்துள் அடக்கிச் சொல்லப்படுகின்றது.

௩௪-ஆம்-அதி-நிலையாமை.

அஃதாவது - தோற்றமுடையவையெல்லாம் - நிலைபெறாத தன்மையாம் இதனை - அறிந்தவிடத்தேயல்லாமல் பொருள்களிலே பற்றுவிடாதாகலின் முன் வைக்கப்பட்டது.

நில்லா தவற்றை நிலையினவென் றுணரும்..................*
புல்லறி வாண்மை கடை.......................................*

(இ-ள்.) நில்லாதவற்றை- நிலையில்லாதவைகளை- நிலையினவென்று- நிலையுடையவையென்று- உணரும்- நினைக்கின்ற - புல்லறிவாண்மை- அற்பபுத்தியை யுடையவராயிருக்கை|-கடை- (துறந்தார்க்கு) இழிவு. எ-று.) (கருத்து) நிலையில்லாப்பொருளை நிலையுடைமையாக நினைக்கும் புத்தியில்லாமை யறிவோர்க்கிழிவு என்பதாம். ❊ தோற்றமுடையவைகளை அழிவில்லாதவையென்று நினைக்கும் அற்பபுத்தியால் அவைகளின் மேலேபற்றுச்செய்தல் பிறவித்துன்பத்துக்கு

ஏதுவாகலால் அதுமோக்ஷத்தை அடைவோர்க்கு தவறுமென்பது இதனாற் சொல்லப்பட்டது. இனிப்புல்லறிவாளர் பெரும்பாலும்பற் றுச்செய்வது சிற்றின்பத்துக்குஏதுவாகிய செல்வத்தினிடத்திலும், அதனை அனுபவிக்கும் உடம்பினிடத்திலும், ஆகலின்வருகிற பாட் டுகளால் அவைகளினது நிலையாமையையேயெடுத்துச்சொல்லுவார்.

கூத்தாட் டவைக்குழாத் தற்றேபெருஞ் செல்வம்........ *
போக்கு மதுவிளிந் தற்று..........

.... *

(இ-ள்.) (ஒருவனிடத்தே)-பெருஞ்செல்வம்-பெரியசெல்வம் வரு தல்-கூத்தாட்டு-கூத்தாடுதல் செய்கின்ற- அவை- சபையினிடத்தே- குழாத்தற்று- (காண்போர்) கூட்டம் வருதல்போலும்- போக்கும்- (அச்செல்வம்)போகுதலும்-அது-அக்கூட்டமானது|-விளிந்தற்று- (அக்கூத்தாட்டுமுடிந்தவிடத்தே) போகுதல்போலும். எ-று.) (கரு

துக-ஆம்-அதி-நிலையாமை:

(௩௩௧)

த்து) செல்வத்தின்கூட்டம்போற்சேரு மக்கூட்டங்கெடுதல் போற்செல்வங்கெடும் என்பதாம். ** பெருஞ்செல்வமெனவே-சுவ ர்க்கச்செல்வமும் அடங்கிற்று- போக்குமென்றவும்மையால் வருத லென்பது கொள்ளப்பட்டது. எப்படிஅக்கூட்டமானது கூத்தாட் டுக்காரனுடைய சபையினிடத்தே பலவிதத்தால் தானேவந்து அ துபோனவிடத்தே தானும்பொருமோ அப்படியேசெல்வமானது ஒருவனது நல்வினை காரணமாக அவனிடத்தே பலவிதத்தால் தா னேவந்து அதுபோனவிடத்தே தானும்போமென்பதாயிற்று.(௨).

அற்கா வியல்பிற்றுச் செல்வமது பெற்றா..............*
லற்குப வாங்கே செயல்...................................*

(இ-ள்.) செல்வம்-செல்வமானது-அற்கா-நிலையாத-இயல்பிற்று-இயல்பையுடையதாகும்-அதுபெற்றால்- அச்செல்வத்தைப்பெற்றால்-அற்குப-(அதனாலேசெய்யப்படும்) அறங்களை}- ஆங்கே-பெற்றபொழுதே-செயல்-செய்யக்கடவன். எ,று.) (கருத்து) செல்வப்பெற்றாற்றருமஞ்செய்யக்கடவர் என்பதாம். ❋ அல்காவென்பது- விகாரப்பட்டு நின்றது-ஊழ்உள்ளவிடத்தேயல்லது பெறக்கூடாமையால் அதுபெற்றாலென்றும், அவ்வூழ் இல்லாதவிடத்தே நில்லாமையால் ஆங்கேயென்றும், சொல்லினர். அதனாலே செய்யப்படும் அறங்களாவன-பயனைக்குறியாது செய்யும் கடவுட்பூசையும், தானமும். முதலானவை, அவைஞானத்துக்கு ஏதுவாய் மோக்ஷத்தைக் கொடுத்தலால் அவற்றை அற்குபவென்றும், செயலென்றும், சொல்லினர். [இவையிரண்டுபாட்டாலும் செல்வநிலையாமைசொல்லப்பட்டது.]

நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்.............❋
வாள துணர்வார்ப் பெறின்.... ....❋

(இ-ள்.) உயிர்-உயிரானது}-நாளென- நாளென்று அளவுசெயப்படுவதாகிய-ஒன்றுபோல்- ஒருகாலவளவுபோல்-காட்டி-(தன்னைக்) காட்டி-ஈரும்- அறுத்துச்செல்லுகின்ற-வாளது-வாளினது வாயினிடத்தது.-உணர்வார்ப்பெறின்-(அது) அறிவாரைப்பெற்றால். எ,று) (கருத்து) உயிரானது காலவளவுபோலத் தன்னைக்காட்டி யறுத்துச் செல்லும் வாள்வாயிடத்தது. இதையறிவாரைப் பெற்றாலாம் என்பதாம். ❋ காலமென்னும்அருவப்பொருள்-உலகியல்நடத்தற்பொருட்டுச் சூரியன்முதலாகிய அளவைகளால் கூறுபட்டதாக்கிவழங்கப்படுவதல்லாமல் தானாகக் கூறுபடாமையால் - நாளென வொன்றுபோலென்றும், அது தன்னைவாளென்று அறியமாட்டாதவரை- நம

(௩௬௪) ௩௩-ஆம்-அதி-நிலையாமை.

க்குப்பொழுதுபோகாநின்றதென்று மகிழும்படி மயக்கலால் -காட்டியென்றும், இடைவிடாமல் அறுத்தலால் வாளதென்றும், அது அறுக்கின்றபடியை அறியவல்லவர் இவ்வுலகத்திலே அரியரா யிருக்கையால்-உணர்வார்ப் பெறினென்றும், சொல்லினார். அறுக்கப்படுவது உடம்பாகலால் உயிரொன்பது-இங்கே உடம்பைக்காட்டிநின்றது.வாளினதுவாயை வாளெனகையால்கூறுபெயர்.[இதனால்உடம்புகளுக்குஅளவுசெய்யப்பட்ட நாள் கழிதலும் சொல்லப்பட்டது.]

நாச்செற்று விக்குண்மேல் வாராமுன் னல்வினை..........*
மேற்சென்று செய்யப் படும்...... .... *

(இ-ள்.) நாச்செற்று- (பேசாதிருக்கும்படி) நாவை அடக்கி-விக்குள்-விக்கலானது- மேல்வாராமுன்- எழுவதற்குமுன்னே- நல்வினை (மோக்ஷத்துக்குஏதுவாகிய) அறமானது|-மேற்சென்று-விரைந்து செய்யப்படும்-செய்யப்படும்* எ-று.) (கருத்து) நாவடக்கிச்சேத்துமமெழுமுன்னே தருமஞ்செய்யப்படும் என்பதாம். நாவைஅடக்கி விக்கல்மேலெழுதனுக்கு ஐயமில்லாமையாலும், அது நேரிடும்போது நல்வினையைச்செய்தலே அல்லாமல் சொல்லலும் ஆகாமையாலும் வாராமுனென்றும், அதுதான் இன்னகாலத்திலேவருமென்றறியக்கூடாமையால்- மேற்சென்றென்றும், சொல்லினார், நல்வினைசெய்யும் வழியின்மேல்வைத்து நிலையாமை சொல்லியபடி. [இதனால்அந்தநாள்கழிந்தால்உண்டாகும்நிலையாமை சொல்லப்பட்டது.]

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்.... ....*

பெருமை யுடைத்திவ் வுலகு.... ....*

(இ-ள்.) இவ்வுலகு-இந்தவுலகம்- ஒருவன்-ஒருவன்-நெருநல்-நே ற்றைக்கு-உளன்- உளனாயின். [பிறந்தவனென்றபடி]-(அவனே!)— இன்று-இன்றைக்கு-இல்லை-இலனாயினான் [இறந்தானென்றபடி]-எ ன்னும்பெருமை- என்றுசொல்லும் (நிலையாமையின்) மிகுதியை}- உடைத்து-உடையதாயிருக்கின்றது. எ-று.) (கருத்து) இவ்வுலக நே ற்றிருந்தவ னின்றில்லை யென்னும் பெருமையுடையது என்பதாம். ❋ பெண்பாலுக்கும் உண்டாயினும் சிறப்புப்பற்றி ஆண்பாலைச் சொல்லினார். இந்த நிலையாமையே உலகத்திலே மிகுந்ததென்றபடி [இதனால் அவ்வுடம்புகள் ஒரோவிடத்துப் பிறந்தவளவிலே இறத்த ல் சொல்லப்பட்டது.] (௫)

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப.....................*
கோடியு மல்ல பல..*

௩௪-ஆம்-அதி-நிலையாமை.

(௩௩௭)

(இ-ள்.) (அறிவில்லாதவர்!)-ஒருபொழுதும்- ஒருபொழுதளவும்- வாழ்வது-தம்முடம்பும் உயிரும் கூடியிருக்கையை}- அறியார்- அ றியமாட்டார்-(மாட்டாதிருந்தும்)-கோடியுமல்ல- கோடியளவுமன் றி-பல-(அதனினும்) பலவாகிய நினைவுகளை}- கருதுப- நினையாநிற் பார். எ-று.) (கருத்து) ஒருநாளளவும்வாழ்வதறியாதவர்கள் கோடி க்குமேலானவெண்ணங்களை யெண்ணுகிறார்கள் என்பதாம். ❋ ஒரு பொழுதும் என்றஇழிவுசிறப்பும்மையால்இங்கேபொழுதென்பது கணத்தைக் காட்டிநின்றது. காரணமாகிய வினையினளவே வாழ்த

ற்கும் அளவாகலால் அது அறியப்படாததாயிற்று. பலவாகிய நினைவுகளாவன. அனுபவிக்கப்படும் இன்பங்களுக்குரியவை ஆரும்விதமும், அதற்குப் பொருள்வேண்டியவிதமும், அது தம்முயற்சிகளால வரும்விதமும், அம்முயற்சிகளைத் தாம் செய்யும்விதமும், அவைகளுக்கு வரும் இடையூறுகளும், அவைகளை நீக்கும் விதமும், நீக்கியபின் அப்பொருளைச்சேர்க்கும் விதமும், அதைப் பிறர்கொண்டுபோகாமற் காப்பாற்றும் விதமும், அதனால் சினேகித்தவனை ஆக்கும் விதமும், பகைத்தவனை அழிக்கும்விதமும், தாம்அவ்வின்பங்களை அனுபவிக்கும்விதமும், முதலானவையாம்.— அறிவில்லாதவரியல்பின்மேல்வைத்து நிலையாமைசொல்லியபடி. [அவ்வுடம்புகள்ஒருகணமாயினும் நிற்குமென்பது நம்பப்படாமைசொல்லப்பட்டது.]

(எ)

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே.... ....*
யுடம்போ டுயிரிடை நட்பு.........................*

(இ-ள்.) உடம்போடு-சரீரத்தோடு-உயிரிடை- உயிருக்கு உண்டாகிய-நட்பு-சினேகமானது|-குடம்பை-(முன்னேதனியாதிருந்த)முட்டையானது-தனித்தொழிய- தனித்துக்கிடக்க- புள்-(அதனுளிருந்த)பறவை-பறந்தற்று- (பருவம்வந்தவிடத்தே) பறந்துபோந்தன்மையையுடையதாகும் எ,று.) (கருத்து) உடலுக்குயிரிருக்குஞ்சம்பந்தமானது முட்டைதனித்தொழியப் பறவை பறந்தாற்போலும் என்பதாம். * முன்னே தனியாமையாவது- கருவும், தானும்,ஒன்றாய்ப் பிறந்து வேறுகுமளவும் அதற்கு இடமா யிருத்தல். அதனால்

அம்முட்டை உடம்புக்கு உவமானமாயிற்று. அதனுள்ளேவேறுபா டில்லாமலிருந்தே பின்புதிரும்ப நுழையாமற் போகலால்-புள் உயிர்க்கு உவமானமாயிற்று- நட்பு-நட்பில்லாமற் போகுகையைக்குறிப்பினாலேகாட்டிநின்றது.—அறிவாகியும், அருவாகியும், நித்தியமாகியும், உள்ளஉயிரும்- அறியாமையாகியும், உருவாகியும், அநித்தியமாகியும், உள்ள உடம்பும்- தம்முள்ளே மாறுகலால் வினைவசத்தினாலே கூடியதல்லாமல் சினேகமில்லையென்பது [illegible] [இதனால்-அவ்வுடம்புகள் உயிர்நீங்கியவிடத்துக் [illegible]ப்பட்டது]

உறங்குவது போலுஞ் [illegible]றங்கி..............................*
விழிப்பது போலும் [illegible]..............................*

(இ-ள்.) (ஒருவனுக்கு) [illegible]வருதல்|- உறங்குவது போலும்- தூக்கம்வருதல்போலும்.—பிறப்பு- (அதன்பின்னே) பிறப்புவருதல்|-உறங்கி விழிப்பதுபோலும்- தூங்கிவிழித்தல்வருதல் போலும். எ,று.) (கருத்து) மரணம்வருதல் நித்திரை செய்தல்போலும் பிறப்புவருதல் நித்திரைசெய்துவிழித்தல்போலும் என்பதாம் ❋ உயிர்களுக்கு-உறங்கலும் விழித்தலும்போல் இறத்தலும் பிறத்தலும், இயல்பாகக் கடிதிலே மாறிமாறி வருமென்பது கருத்து. நிலையாமையே நிலைபெற்றவிதத்தை அறிவித்தற்குப் பிறப்பும்உடன் சொல்லப்பட்டது. [இதனால்- அவ்வுடம்புகளுக்கு இறப்பும் பிறப்பும் மாறிவருமாறு சொல்லப்பட்டது.] (௯)

புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்..............................*
டுச்சி லிருந்த வுயிர்க்கு..............................*

(இ-ள்.) உடம்பினுள்-(வாதமுதலானவைகளதுவீடுகளாகிய) உட
ம்புகளுள்-துச்சிலிருந்த-ஒதுக்குக்குடியிருந்துவந்த-உயிர்க்கு-உயி
ருக்கு-புக்கில்-என்றைக்கும் இருப்பதாகிய ஒருவீடானது-அமைந்
தின்றுகொல்-(இதுவரையில்) அமைந்ததில்லைபோலும். எ-று. (கரு
த்து) உடலுள்ளேயொதுக்குக்குடியிருந்த உயிர்க்கு என்றுமிருக்க
வீடமைந்ததில்லை என்பதாம். ❁ உயிரானது - அவ்வாதமுதலான
நோய்கள்-அமைந்த காலத்திலே இருந்தும், கோபித்த காலத்திலே
விட்டுப்போகியும், ஒருடம்பிலும் நிலைபெறாமல் வருதலால் - துச்சி
லிருந்தவென்றார். பின்னை புறப்படாமல் புகுந்தேவிடுகிற இல் அ
மைந்ததாயின் பிறர் இற்களிலே ஒதுக்குக்குடி இராதென்பதாம். ஆ
கவே உயிரோடு கூடிநிற்பது- ஒருடம்பும் இல்லையென்பது பெறப்
பட்டது. [இதனால்-அவ்வுடம்புகள் உயிருக்கு உரியவை அல்லவெ
ன்பது சொல்லப்பட்டது.] தாளென்பது முதலாகிய எழுபா
ட்டுக்களாலும் யாக்கைநிலையாமைசொல்லப்பட்டதென்றறிக. (௰)

௩

௫-ஆம்-அதி-துறவு.

அஃதாவது- புறமாகிய செல்வத்திலும், அகமாகிய உடம்பிலும், உண்டாகிய பற்றை அவைகளது நிலையாமையைப் பார்த்

துவிடுதலாம். அதிகாரம்வைத்த முறையும் இதனாலேவிளங்கும்.

யாதனின் யாதனி னீங்கியா

னோத............................*

லத னி னதனி னிலன்.......

................................*

(இ-ள்.) (ஒருவன்!)-யாதனின்யாதனின்-யாதொருபொருளின்யாதொருபொருளின்- நீங்கியான்-நீங்கினான்-(அவன்)-அதனினதனின் அப்பொருளினாலே அப்பொருளினாலே - நோதல்- துன்பத்தை அனுபவித்தலை}- இலன்- உடையவனல்லன். எ,று.) (கருத்து) ஐம்பொறிவிடயமாகிய ஐம்புலன்களையு மொவ்வொன்றாக வொழித்தவன வைகளால் வருந்துன்பங்களை யடையான் என்பதாம். * இங்கே துன் பமென்றது - இப் பிறப்பிலே அவைகளைத் தேடுதலாலும் - காப் பாற்றலாலும்- இழத்தலாலும்-வருமவையும், மறுமையிலே பாவத்

தால் வருமவையும், ஆகிய இருவகைத் துன்பங்களும்- ஆம்.எல்லா ப்பொருள்களையும் ஒருமிக்கவிடுதலே - தலைமையான துறவாகும். அப்படிக்கல்லாமல் ஒவ்வொன்றாக விட்டாலும் துன்பம் அவனுக்கு இல்லையென்பது கருத்து.

அவைகளால் வரும்

(அ)

வேண்டினுண் டாகத்

துறக்க துறந்தபி.................... *
ஈண்டியற் பால பல .. ..
.... *

(இ-ள்) துறந்தபின்- (எல்லாப்பொருள்களையும்) துறந்தபின்--- (ஒருவனுக்கு)-ஈண்டு- இப்பிறப்பிலே-இயற்பால- உண்டாகுமுறைமையையுடைய இன்பங்கள்|-பல-பலவாம்.—வேண்டின்- (அவ்வின்பங்களை) வேண்டினால்- உண்டாக- (காலம்) உண்டாக-துறக்க- (அப்பொருள்களைத்) துறக்கக்கடவன். எ,று.) (கருத்து) துறந்தபின் பின்பம் பலவாகலின் இன்பம்வேண்டினாற் றுறக்கக்கடவன் என் பதாம். ❊

அ வ்வின்பங்க ளாவன -அப் பொருள்க ளுக்காக- மனமும் வாக்கும்-காயமும்- அலையாது திற்கையாலும், அவை நல்வழியிலே செல்லுத

லாலும், வருவன . இளமையிலே துறந்தவன்
அவ்வின்பங் களை நெடுங்காலம்
அனுபவிப்பானாகலால்- உண்டாகத் துறக்கவெ
ன்றபடி. இன்பமும்,
க ாலமும், ஒருவிக்க ப்பட்டன. இப்பிறப்பிலே

[௩௫]

(௱௬அ) ௩௫-ஆம்-அதி-துறவு.

துன்பங்கள் இல்லாமற்
போதலேஅல்லாமல்இன்பங்களும்உண்டாம்

அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்.....*
வேண்டிய வெல்லா மொருங்கு.........................*

(இ-ள்.) (முத்தியை அடைவோர்க்கு) ஐந்தன்-செவிமுதலாகிய ஐம்பொறிகளுக்குஉரிய- புலத்தை- ஓசைமுதலாகிய ஐம்புலன்களைப் }-அடல்வேண்டும்-கெடுத்தல்வேண்டும்.—(கெடுக்கும்போது)—வேண்டியவெல்லாம்- (அப்புலன்களை அனுபவித்தற் பொருட்டுத்) தாம்படைத்த பொருள்களையெல்லாம்}- ஒருங்கு-ஒருமிக்க- விடல்வேண்டும்-விடுதல்வேண்டும். எ,று.) (கருத்து) ஐம்பொறியின் சம்பந்தமாகிய ஐம்புலன்களைக் கெடுத்தல்வேண்டும் என்பதாம். ❁ புலன்களை அனுபவித்தலைப்புலமென்றார். அவ்வனுபவிப்புமனதைத் துன்பத்திலும் பாவத்திலும் தேடப்பட்டிருக்கும்பொருள்களின்மேல் அல்லாமல் முத்திவழியாகிய யோகஞானங்களிலே செல்லவொட்டாமையால் அடல்வேண்டும், என்றும் அம்மனம் அப்பொருள்களிலேசென்றால்- அவ்வனுபவிப்புவளர்வதல்லது கெடுக்கப்படாமையால் வேண்டியவெல்லாமொருங்குவிடல்வேண்டுமென்றும், சொல்லினர். (௩)

இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை.......*
மயலாகு மற்றும் பெயர்த்து.........................*

(இ-ள்.) நோன்பிற்கு-தவஞ்செய்வோர்க்கு- ஒன்று-பற்றப்படுவதுஒருபொருளும்- இன்மை-இல்லாதிருக்கை|- இயல்பாகும் -சுபாவமாகும்.—உடைமை- (ஒன்றாயினும்) உடைமை|-பெயர்த்து-(அத்தவத்தைப்) போக்குதலால்-மற்றும்-மீண்டும்-மயலாகும்-மயக்கத்துக்குஏதுவாகும். எ,று.) (கருத்து) தவத்தோர்க்குப்பற்றற்றிருப்பதியல்பாகும். பற்றுண்டாயின் மயக்கமாகும் என்பதாம். ❁ நோற்பவனா நோன்பென்றும், மயலுக்கு ஏதுவைமயலென்றும், சொல்லுதலால்-ஆகுபெயர்கள்-எல்லாப்பொருள்களையும்விட்டு ஒருபொருளைவிடாதவிடத்தும் அதுசார்வாக விடப்பட்டவை யெல்லாம் இ

குப்பியந்து தவத்துக்கு விரோதமாய் மனக்கலக்கம் செய்யுமென்பது க ருத்து. [இ வைநான்குபாட்டாலும் எனதென்னும் புறப்பற் றுவிடுதல சொல்லப்பட்டது.]

(சு)

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க.........*
லுற்றூர்க்
குடம்ப மிகை...*
(இ -ள்.)

பிறப்பறு க்க லுற்றார்க்கு-பிறவியை நீக்கு முயற்சியையே **மேற்-ஆம்-அறி-துறவு.**

(ளஙக)

ற்கொண்டவருக்கு-உடம்பும்- (அதற்கு உதவியாகிய) உடம்பும்-மிகை-அதிகமாம்.—(ஆனபின்)-மற்றும்- அதற்குமேலும்-தொடர்ப்பாடு-(சம்பந்தமில்லாதவைபுஞ் சிலபொருள்கள்) பற்றப்படுதல்- எவன்-என்ன (பயனோ) (கருத்து) பிறவியைநீக்க முயல்வோர்க்குடல்பாரமாம் ......வர்க்கென்னபயனும் என்பதாம். ❊ கொல்- அசை. பொருட்பட உடம்பென்றதனல்-உருவுடம்பும்,அருவுடம்பும்,கொள்ளப்படும். அருவுடம்பு- இந்திரியவுணர்வுகளோடும் பிராணவாயுக்களோடும் காமவினைவிளைவுகளோடும் கூடிய மனம்- இது சூக்ஷ்மசரீரமெனவும்படும். (ரு)

யானெனதென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்......*
குய ர்ந் த

வுலகம் புகும்................................ *

(இ-ள்.) யானெனதென்னும்- (தானல்லாத உடம்பை) யானென்றும்) தன்னோடுசம்பந்த மில்லாதபொருளை) எனதென்றும் நினைத்து அவைகளிலே பற்றுச்செய்தற்கு ஏதுவாகிய- செருக்கு - மயக்கத்தை 3-அறுப்பான்-கெடுப்பவன்|-வானோர்க்கு-தேவர்க்கும்-உயர்ந்த-அடைதற்கரிதாகிய-உலகம்-முத்தியுலகத்தில்-புகும்- செல்லுவான். எ-று.)

(கருத்து) யான்-எனது என்னு மயக்கமற்றவன் முத்தியுலகத்திற் செல்லுவான் என்பதாம். ※ மயக்கம்-அறியாமை. அதனைக்கெடுத்தலாவது-குருபதேசத்தாலும், யோகாப்பியாசத்தாலும், அவ்வுடம்பை யானல்லவென்றும், அப்பொருளை எனதல்லவென்றும்,தெளிந்து- அவைகளிலே பற்றைவிடுதல்.வானோர்க்குமென்னுஞ் சிறப்பும்மை வருவிக்கப்பட்டது. [இதனால் இருவகைப்பற்றையும் விட்டவர்க்கே மோக்ஷமுண்டென்பது சொல்லப்பட்டது.] (௬)

பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்................... *
பற்றி விடாஅ தவர்க்கு
.... *

(இ-ள்.) பற்றி-(இருவகைப்)பற்றுக்களையும்3-பற்றி-இறுகப்பற்

றி-விடாதவர்க்கு-விடாதவரை 3-இடும்பைகள்-
துன்பங்கள்|-பற்றி-
இறுகப்பற்றி- விடா-விட்டு நீங்காவாம். எ,று.) (கருத்து) இருவகை
ப்பற்றையும்விடாதவர்களைத் துன்பங்கள் விடாவாம் என்பதாம். ※

இறுகப்பற்றல்- ஆசைமிகுதல் விடாதவர்க்கென்பது-வேற்றுமைம
யக்கம் [இதனால் பற்றுக்களை விடாதவர்க்கு மோக்ஷம்இல்லையென்
பது சொல்லப்பட்டது. (எ)

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி .... *
வலைப்பட்டார் மற்றை யவர்.. *

(௩௪௯) கரு-ஆம்-அதி-காரம்.

(இ-ள்.) தீரத்துறந்தார்-முழுதுந்துறந்தவர்|-தலைப்பட்டார்-(முத்தியை}) அடைந்தவராவார்.—மற்றையவர்-அப்படித்துறவாதவர் மயங்கி-மயக்கமுற்று- வலைப்பட்டார்-(பிறப்பாகிய) வலையிலே அகப்பட்டவராவார். எ-று.) (கருத்து) முற்றத் துறந்தவர்கள் முத்தி பெறுவர். துறவாதவர் பிறப்பிலழுந்துவர் என்பதாம். ※ முழுதுந் துறத்தலாவது- பொருள்களையும், இருவகை உடம்புகளையும்,வெறுத்துப்பற்றறவிடுதல். அப்படித் துறவாமையாவது-அவைகளிலே ஒன்றனிடத்தே சிறிதாயினும் பற்றுச்செய்தல். துணிவுபற்றி - தலைப்பட்டாரொன்றும், பொய்வழிகண்டே பிறப்புவலையுள் அகப்படுதலால்-மயங்கியென்றும், சொல்லினார். (அ)

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று........................ *
நிலையாமை காணப் படும்........ .... *

(இ-ள்.) (ஒருவன்)- பற்றற்றகண்ணே-(இருவகைப்) பற்றுக்களையும் அற்றபொழுதே- (அப்பற்றறுதியானது|) பிறப்பு- (அவனது) பிறவியை}-அறுக்கும்- ஒழிக்கும்.-மற்று- அவை அறாதபொழுது- நிலையாமை- (அவற்றால் பிறத்தலும் இறத்தலும், வருகிற) நிலையாமையானது|- காணப்படும்- அறியப்படும். எ-று.) (கருத்து) பற்றற்ற பொழுதே பிறப்பறும். அறாதபொழுதே பிறப்பிறப்பினிலையாமை காணப்படும் என்பதாம். ※ காரணம் அற்றபொழுதே காரியமும் அற்றதா முறைமைபற்றி-பற்றற்ற கண்ணே என்றார். [இவையிரண்டு பாட்டாலும் அவை இரண்டும் சேர்த்துச்சொல்லப்பட்டன. (கூ)

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்............ ...... *
பற்றுக பற்று விடற்கு..........
.... *

(இ-ள்.) பற்றற்றான்- (எல்லாப்பொருள்களையும் பற்றிநின்றே) பற்றில்லாதகடவுளாலே சொல்லப்பட்ட- பற்றினை-முத்திவழியை}-பற்றுக-(இதுவேநல்வழியென்று) மனதிற் கொள்ளக்கடவர்.—(கொண்டு)-அப்பற்றை-அதனிடத்து உபாயத்தை}-பற்றுக- மனத்திலேசெய்யக்கடவர்.- பற்று- (விடாதுவந்த)பற்று-விடற்கு-விடுதற்கு. எ,று.) (கருத்து) பற்றறும்பொருட்டு முத்திவழியைப் பற்றக்கடவர் என்பதாம். ❋ கடவுள்வாழ்த்துதற் கேற்க இங்கும் பொதுவகையினாலேபற்றற்றானென்றார் அதனிடத்துஉபாயமும்-தியானமும்,சமாதியும், ஆம்.—விடாதுவந்தபற்று- அநாதியாய்வருமுடற்பற்று. [இதனால் அப்பற்று விடுதற்கு உபாயம் சொல்லப்பட்டது.]

ந[illegible]- அதி-மெய்யுணர்தல்.

அ[illegible] பிறப்புவீடுகளையும், அவற்றின் காரண[illegible]யும்,
[illegible] சந்தேகங்களால் அல்லாமல உண்மையால்
[illegible]ல்-இதை-வட நூலார்தத்துவ ஞானமென்பர்,
[illegible]துவும் பற்றற்றான் பற்றினைப் பற்றியவிட
த்தே உண்டாவதாகையால் அக்காரணவொற்றுமைபற்றி
துறவின்பின் வைக்கப்பட்டது,

பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு........ ❋
மருளானா மாணாப் பிறப்பு.........

........................❋

(இ-ள்.) பொருளல்லவற்றை-மெய்ப்பொருள்களல்லாதவைகளை- பொருளென்று- மெய்ப்பொருள்களென்று- உணரும்- அறிகின்ற மருளான்-விபரீதஞானத்தினாலே - மாணாப்பிறப்பு- மாட்சிமைப்படாதபிறவி [இன்பமில்லாத பிறவியென்றபடி]- ஆம்-உண்டாகும். எ,று.) (கருத்து) பொருளல்லாதவைகளைப் பொருளென்றெண்ணு மயக்கத்தாற் பிறப்புண்டாம் என்பதாம். * [இங்கே பொருளல்லவற்றைப்பொருளென்றுணர்தலாவது-மறுபிறப்பும், இருவகைப்பயன்களும், கடவுளும், இல்லையென்றும், மற்றும் இப்படிப்பட்டவைகளைச் சொல்லுகிற மயக்க நூல் வழக்கத்தை மெய்நூல் வழக்கமென்று துணிதல், — நரகர்-விலங்கு-மக்கள்- தேவர் என்கிற நால்வகைப்பிறப்புக்களிலும் உள்ள துன்பமெய்யர்களில்-மாணாப்பிறப்பென்றார். [இதனால்- பிறப்புத்துன்பமென்பதும், அதற்கு முதற்காரணம் விபரீதஞானமென்பதும், சொல்லப்பட்டது.] (க)

இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி.................*
மாசறு காட்சி யவர்க்கு...................................*

(இ-ள்.) மருள்-அவ்விபரீதஞானத்திலிருந்து-நீங்கி-நீங்கி-மாசறு குற்றமற்ற- காட்சியவர்க்கு- மெய்யறிவையுடையவராயினவர்க்கு- (அம்மெய்யறிவானது)- இருள்-பிறவியை-நீங்கி- நீங்கச்செய்து- இன்பம்-[illegible]-பயக்கும்-கொடுக்கும். எ,று.) (கருத்து) விபரீ

* விபரீ[illegible]மாவது- ஒன்றை மற்றொன்றாக அறிதல் அது கயிற்றைப் பாம்பென்று அறிதல போல்வன, † சந்தேகஞானமாவது ஒன்றை இதுவோ அதுவோ வெனக்கொள்ளுதல்- கயிறோ பாம்போ வெனத் துணியாது நிற்பதுபோல்வன.

(௩௪௨) ௩௬-ஆம்-அதி-மெய்யுணர்தல்.

தஞானத்தைநீக்கி மெய்ஞ்ஞானத்தைக் கொண்டவர்க்கு அம்மெய்ஞ்ஞானமே மோட்சத்தைக் கொடுக்கும் என்பதாம். ❋ இருள்-நாசம்-அது தன்காரணமாகிய பிறவிக்கு ஆகுதலால் ஆகுபெயர். நீக்கியென்னுந் தன்வினை- நீக்கியென்னும் பிறவினைப் பொருளில்வந்த ஆ.மாசறுகாட்சி- கேவலஞானம். [இதனால் வீடாவது உயர்வொப்பில்லாத இன்பமென்பதும், அதற்குநிமித்தகாரணம்கேவலப்பொருளாகிய பிரமமென்பதும் சொல்லப்பட்டன.] (உ)

ஐயத்தி னீங்கித்
தெளிந்தார்க்கு வையத்தின்...............❋
வான நணிய துடைத்து...........
.........................❋

(இ-ள்.) ஐயத்தின்-சந்தேகத்திலிருந்து- நீங்கி-நீங்கி- தெளிந்தார்க்கு-மெய்யுணர்ந்தவர்க்கு- வையத்தின்- (அடைந்துநின்ற) நிலவுலகத்தினும்-

வானம்-(அடைய க்கடவத ாகிய)
வீட்டுலகம்|-நணியது-
அடைந்தாதலை}- உடைத்து-உடையதாம். எ-று.) (கருத்து) அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தை யடைந்தவர்க்கு முத்தியுலகம் சமீபமாகும் என்பதாம். ✱ இங்கே ஐயமாவது-மறுபிறப்பும், இருவினைப்பயன்களும், கடவுளும், உண்டோ இல்லையோ என்று ஒன்றிலே துணிவுபிறவாமல் நிற்றல். — ஒருவிதத்திலே பிறர்மதத்தைக் களைந்து தமது மதத்தை நிறுத்துதல் சமயநூல்களுக் கெல்லாம் இயல்பாகலால் அந்நூல்களாலே சொல்லப்பட்ட பொருள்களிலே மெய் எதுவோவென்று உண்டாகிற சந்தேகத்தை யோகிகள் தமது அநுபவஞானத்திலே நீக்கி மெய்யை அறிவார்களாகலால் அவரை ஐயத்தினீங்கித் தெளிந்தாரென்றும், அவ்வநுபவஞானம் மேலிடுந்தோறும் பழையலோகாசார ஞானம் மறைபட்டுக்கொண்டே வருமாதலால்- அதனைப்பயன்மேல்வைத்து- வையத்தின்வானநணியது டைத்தென்றும், சொல்லினர். சொல்லவே சந்தேகஞானமும் விகருக்காரணமாகுதல் சொல்லப்பட்டதாயிற்று.

பிற

(௫)

ஐயுணர் வெய்தியக் கண்ணும்|பயமின்றே................ ✱
மெய்யுணர்'வில்லா'தவர்க்கு..............................✱

(இ-ள்.) மெய்யுணர்வில்லாதவர்க்கு- மெய்யையறிதலில்லாதவர்க்கு-ஐயுணர்வு-(ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம் இவ்வைந்து புலன்களிலும் செல்லுதலால்) ஐந்தாகிய உணர்வு—எய்தியக்கண்ணும்-(அப்புலன்களைவிட்டுத்) தமக்குவசப்பட்டவிடத்தும்- (அதனாலே) -பயன்-பிரயோசனம்|-இன்று-இல்லை. எ-று.) (கருத்து) மெய்யையறி

௩௬௩ஆம்-அதி-மெய் யுணர்தல்.

(௱௬௩)

யாதவர்க்கு ஐம்புலன்களும் வசப்பட்டாலும் பிரயோசனமில்லை என்பதாம். ஐந்தாகிய உணர்வு- மனம். அது வசப்படுதலாவது- மடங்கியோர்கட்குறியிடத்தே நிற்கை. அப்படி நின்றவிடத்தும் அது முத்தியைத்தாராமையால்- பயனின்றேயென்றார். [இவையிரண்டு பாட்டாலும் மெய்யை யுணர்ந்தவர்க்கே முத்தி உண்டென்று மெய் யுணர்வின் சிறப்புச்சொல்லப்பட்டது.] (௪)

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு
மப்பொருண்.......... *
மெய்ப்பொருள் காண்ப தறிவு..............
.... *

(இ-ள்.) எப்பொருள் - யாதொருபொருள்- எத்தன்மைத்தாயினும்-யாதோரியல்புடையதாய்த் தோன்றினும் - (அத்தோன்றிய விதத்தைக்கண்டு விடாமல்) - அப்பொருள் - (தோன்றிய) அப்பொருளிடத்திருந்தும்- மெய்ப்பொருள்- பொய்யாகியபொருளை}-காண்பது-காண்பது.-அறிவு-மெய்யுணர்வு. எ,று.) (கருத்து) எந்தப்பொருளெந்தத் தன்மையுடைத்தாயினு மந்தப்பொருளிடத்துநின்று உண்மைப்பொருளைக காண்பதேயறிவாம் என்பதாம். சராசரமாகிய பொருள்களிலெல்லாம் உலகத்தார் கற்பித்துக்கொண்டுவழங்குகின்ற கற்பனைகளைக் கழித்துநின்ற உண்மையைக் காண்பதே மெய்யுணர்வு என்றபடியாயிற்று. அதாவது- அரசன் சேரமான் என்ற

விடத்தே அரசனென்பதோர் சாதியும், சேரமானென்பதோர் குடியும், ஒருவனிடத்தே கற்பனையாதலால் அக்கற்பனையைவிட்டு அவ

னை நிலமுதல் உயிரீறாகிய தத்துவங்களின் கூட்டமென்று அத்தத்துவங்களை நிலமுதலாக அதனதன் காரணங்களுள்

அறிந்து
ஒடுக்கிக்
கொண்டுபோய் முடிவிலே காரண காரிய
மிரண்டும் இல்லாமல் நிற்பதனை அறிதலாம்.
[இதனால் மெய்யுணர்வினது இலக்கணம் சொல்லப் பட்டது.]

(ரு)

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார்
தலைப்படுவர்..........❊
மற்றீண்டு வாரா நெறி...............
.........................❊

(இ-ள்.) ஈண்டு-இம்மையிலே பிறப்பினிடத்து-கற்று-(உபதேசத்தை ஞானாசாரியரிடத்தே)கேட்டு-(அதனால்)-மெய்ப்பொருள்-உண்மைப்பொருளை}-கண்டார்-உணர்ந்தவர்|-மற்றீண்டு-திரும்பி-இப்பிறப்பினிடத்து-வாராநெறி-வாராதவழியை}-தலைப்படுவர்-அடைவார். எ,று.) (கருத்து) இப்பிறப்பி லுபதேசத்தைக்கேட் டுண்மைப்பொருளை யறிந்தவர் பிறப்பைநீக்குவரென்பதாம். ❊ கற்றெ

ன்றதனால்-பலரிடத்தும் பலதாமும் பழகுதலும், ஈண்டென்றதனல்-மோக்ஷத்தை அடைதற்கு உரிய மனிதப்பிறப்புப்பெறுதற்கு அரியதென்பதும், கொள்ளப்பட்டன. ஈண்டு வாராநெறி-மோக்ஷமார்க்கம். மோக்ஷத்துக்கு நிமித்தகாரணமாகிய மூதற்பொருளை அறிதற்கு உபாயம் மூன்று. அவை-கேட்குதல்- சிந்தித்தல் -தெளிதல்-என்பன. [அவற்றுள் கேட்குதல் இதனுலேசொல்லப்பட்டது.] (௬)

ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாய்.... .... *

பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.......... .... *

(இ-ள்.) அப்படிக் கேட்கப்பட்ட உபதேசப்பொருளை }உள்ளம்-(ஒருவனது) உள்ளமான து— ஒருதலையா- நிச்சயப்பட —(ஓர்த்து-(பிரயாணங்களாலும்யுத்தியினுலும்) ஆராய்ந்து- (அதனல்)- உள்ளது-மூதற்பொருளை}-உணரின்-அறியுமாயின்- பிறப்பு- (அவனுக்குப்) பிறவியுள்ளதாக-பேர்த்து-மாறி-உள்ளவேண்டா-நினைக்கவேண்டுவதில்லை. எ-று.) (கருத்து) ஒருவன் மனமான துபதேசப்பொருளைக்கொண்டு உண்மைப்பொருளை யறியுமாறு லவனுக்குப்பிறவியுண்டென்று நினைக்கவேண்டியதில்லை என்பதாம். ❀ [இதனுல் சிந்தித்தல் சொல்லப்பட்டது.] (எ)

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் ... *

செம்பொருள் காண்ப தறிவு........ ....

.. ...*

(இ-ள்.) பிறப்பென்னும்-பிறவிக்கு முதற்காரணமெனப்படுகிற-
பேதைமை- அஞ்ஞானமானது-நீங்க-கெட- சிறப்பென்னும்-மோ
க்ஷத்துக்கு நிமித்தகாரணமெனப்படுகிற-செம்பொருள் - செவ்விய
பொருளை-காண்பது-அறிவதே!-அறிவு-(ஒருவனுக்கு) மெய்யுணர்
வாம். எ-று.) (கருத்து) பிறவிக்குக் காரணமாகிய அஞ்ஞானங்கெட
உண்மைப்பொருளைக் காண்பதேயறிவாம் என்பதாம். ❈ பிறப்பெ
ன்னும் பேதைமையென்றும், சிறப்பென்னுஞ் செம்பொருளென்
றும், காரியங்களைக் காரணங்களாக உபசரித்தார். ஐவகைக் குற்றங்
களுள்- அஞ்ஞானம் மற்றை நான்கிற்கும் காரணமாதலால் அச்சிற
ப்புப்பற்றி அதனையே பிறப்புக்குக் காரணமாக்கிச் சொல்லினார். எ
ல்லாப்பொருள்களினும் சிறந்ததாகலால் - மோக்ஷம் சிறப்பெனப்
பட்டது. நித்தியமாகியும், பரிசுத்தமாகியும், எங்கு நிறைந்துள்ள பி
ரமமென்னப்பட்ட முதற்பொருள் விகாரமில்லாமல் எக்காலமும் ஒ
ரேதன்மையதா யிருத்தல்பற்றி அதனைச் செம்பொருளென்றார். மு

௩௬-ஆம்-அதி-மெய்யுணர்தல்.

(௩௪௫)

ன்னே மெய்ப்பொருளென்றும், உள்ளதென்றும், சொல்லியதும் இ
துபற்றியென்றறிக. அதனைக்காண்கையாவது- உயிர் தனது அஞ்
ஞானம்கெட்டு அப்பொருளோடு ஒற்றுமையுற இடைவிடாமல் நினை
த்தல்.—இதனைச்சமாதியென்பர். மரணகாலத்தில் நினைக்கிறபடி பிற
விவருமென்றிருத்தலால் மோக்ஷமடைவோர்க்கு அக்காலத்திலே
தத்துவப்பொருளைப் பாவிக்கும்படி முன்னே பழகுதலாகிய இத
னின் மிகுந்த உபாயம் இல்லையென்பதறிக. [இதனாலே தெளிதல்
சொல்லப்பட்டது.]

(அ)

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்.....❈

சார்தரா சார்தரு நோய்...........

.... *

(இ-ள்.) (ஒருவன்) -சார்பு - (எல்லாப்பொருள்களுக்கும்) சார்பாகிய அச்செம்பொருளை3- உணர்ந்து-அறிந்து-சார்பு-இருவகைப்பற்றுக்களும்- கெட-நீங்க-ஒழுகின்-நடக்கவல்லவனாயின்- சார்தரும் (முன் அவனைச்) சேர்தற்குரியவாய்நின்ற-நோய்- துன்பங்கள்|- அழித்து-(அவ்வுணர்வையும் ஒழுக்கத்தையும்) அழித்து-மற்றுச்சார்தரா-பின்சேரமாட்டாவாம். எ,று.) (கருத்து) ஒருவன்மெய்ப்பொருளையறிந்து இருவகைப்பற்றுக்களுங்கெட நடப்பானாகில் அவனைத் துன்பங்களணுகாவாம் என்பதாம். * இங்கே ஒழுக்க மென்றது- யோகவழிநடத்தலே.அது-இயமம்,நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை,தியானம்,சமாதி,என வெண்வகைப்படும். அத்துன்பங்களாவன-பிறவி அநாதியாய் வருதலால் உயிர்களாலே அள வில்லாமல் சம்பாதிக்கப்பட்டிருக்கிற வினைகளின் பயன்க ளுள் இற ந்த உடம்புகளால் அனுபவிக்கப்பட்டவையும், பிறந்தவுடம்பால் மொண்டுகொள்ளப்பட்டவையும், நீங்கலாக-பின்னே அனுபவிக்கு ம்படி இடந்தவையாம். அவை விளக்கின்முன் இருள்போல் ஞான யோகங்களின்முன்னே கெடுதலால் அழித்துச்சார்தரா வென்றார்.பிறவிக்குக்காரணமாதலால் நல்வினைப்பயனும் நோயெனப்பட்டது.

[மூன்மூன்றுபாயங்களாலும் பரம்பொருளை அறியப் பிறப்பறுமென்றார். அது அறுமிடத்தே பின்வரக்கிடந்த துன்பங்களெல்லாம் எப்படிப்போமென்னும் விருவை எழுப்பிக்கொண்டு ஞானயோகமு இர்ச்சியுடைய உயிரைச் சேரமாட்டாமையாத் கெட்டுவிடுமென்ப துஇதனுல் சொல்லப்பட்டது.]

[௩௭]

(௧) (௱௪௧)

௩௧-ஆம்-அதி-மெய்யுணர்தல்.

காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற.... ..
...............*

ஞமங் கெடக்கெடு நோய். ....
....*

(இ-ள்.) (ஞானயோகங்களின் முதிர்ச்சி யுடையவர்க்கு) - காமம் வெகுளி மயக்கம்-விருப்பம் வெறுப்பு அஞ்ஞானம் எனப்படுகிற- இவைமூன்றன்- இக்குற்றம்மூன்றனது- நாமம்-பெயரும் — கெட- கெடுதலால்- நோய்-(அவைகளின் காரியங்களாகிய) வினைப்பயன்க ள்|-கெடும்-உண்டாதலில்லை. எ-று.) (கருத்து)ஞானவான்களுக்குமு க் குற்றநீங்க அக்குற்றங்களால்வருந் துன்பங்களில்லை என்பதாம். ❁ அநாதியாகிய அவித்தையென்னும் அஞ்ஞானமும், அதுபற்றி யானெனமதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இதுவேண் டுமென்னும் அவாவும், அதுபற்றி, அப்பொருளிடத்தே செல்லும் ஆசையும், அதுபற்றி அதனை மறுதலிடத்தே செல்லும் கோப மும், எனவடநூலார் குற்றம் ஐந்தென்பார். இவர் அவற்றுள் அகங் காரம் அவித்தையிலும், அவாவுதல் ஆசையிலும், அடங்குதலால்மூ ன்றென்றார். இடையறாத ஞானயோகங்களுக்குமுன்னே இக்குற்ற மூன்றும் காட்டுத்தீமுன்னே பஞ்சுபோலுமாம் ஆகலால் அம்மிகு

தி தோன்ற இவைமூன்றுநாமங்கெடவென்றார்.விகாரத்தினாலேதொ க்கதாமம் என்னும்மிழிவுசிறப்பும்மை வருவிக்கப்பட்டது. [காரண மாகிய அக்குற்றங்களைக் கெடுத்தோர் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையால்- அவர்க்குவருவதற்குரிய துன்பங்களும் இல்லையெ ன்பதும் இதனாலே சொல்லப்பட்டது.] — முன் கிடந்த துன்பங்களு ம்மேல்வருந்துன்பங்களும் இல்லாமற்போகுகை மெய்யுணர்வின் பயனாதலால் இவையிரண்டும் இவ்விகாரத்திலே சொல்லப்பட்டன.

இவ்விதத்தால் மெய்யுணர்ந்தார்க்குஉள்ளவை எடுத்தஉடம்பும் அ துகொண்ட வினைப்பயனுமே யென்பது பெற்றும். (ய)

௩௭-ஆம்-அதி-அவாவறுத்தல.

அஃதாவது-முன்னும்-பின்னும வினைத்தொடர்பு அறுத்தார்க்குந
நின்ற உடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களும், நின்ற

மையால் அதுபற்றி ஒரோவிடத்துத் துறக்கப்பட்ட பு
லன்களின்மேலே பழைய பழக்க வசத்தினாலே நினைவுசெல்லு
மன்றே அந்நினைவும் பிறவிக்கு
வித்தாமாகலால் அதனை
இடைவிடாத மெய்ப்பொருளுணர்வால்
அறுத்தலாம்.

அதிகாரமுறைமையும் இதனால் விளங்கும்.

அவாவென்ப வெல்லா வுயிர்க்கு
மெஞ்ஞான்றுந் .... *
தவாஅப் பிறப்பீனும் வித்து... ..
....*

(இ-ள்.) எல்லாவுயிர்க்கும்-சகலவுயிர்களுக்கும்- எஞ்ஞான்றும்-எக்காலத்திலும்-தவாஅ-கெடாதுவருகின்ற- பிறப்பு-பிறவியை3—ஈனும்-விளைப்பதாகிய-வித்து- விதை-அவா-அவாவாகும்-என்ப-என்று (நூலோர்) சொல்லுவார். எ,று.) (கருத்து) எவ்வுயிர்களுக்குப்பிறவியைத்தரும் விதையாவது ஆசையாகும் என்பதாம். ※ உடம்புநீங்கிப்போங் காலத்திலே அடுத்தவினையும், அது காட்டுங்கதி நிமித்தங்களும், அக்கதியிலவாவும், உயிரினிடத்தே முறையேவந்து உதிக்க- அறிவை மோகமானது மறைக்க, அவ்வுயிரை அவ்வவாவானது கதியினிடத்தேகொண்டு செல்லுமாகலால் - அதனைப்பிறப்பீனும்வித்தென்றும், கதிவசத்தால் உளதாகிய அவ்வுயிரின் வேறுபாட்டிலும் † உற்சர்ப்பிணி அவசர்ப்பிணி யென்னுங் காலவேறுபாட் டிலும், அது வித்தாகுகை வேறுபடாமையால் - எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும் என்றும், இது எல்லாச்சமயங்களுக்கும் ஒத்தலால்-என்பவென்றும், கூறினர். [இதனால் பிறப்புக்கு அவாவித்தாதல் சொல்லப்பட் டது.]

,(க)

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை
மற்றது............*
வேண்டாமை வேண்ட
வரும்...................................*

(இ-ள்.) (பிறப்புத்துன்பமாயிருக்கையை அறிந்தவன்)-வேண்டுங்கால்- (ஒன்றை) வேண்டினால்-பிறவாமை-பிறவாதிருக்கையையே

+ உத்சர்ப்பிணி உலகமானது வாழ்நாள் போகம் இவைமுதலானவைகளாலே வளர்பிறைபோல் பெருகுங்காலம் அவசர்ப்பிணி - அதுஅவைகளாலே தேய்பிறை போல்சுருங்குங்காலம்.

-வேண்டும்- இச்சிக்கவேண்டும்-அது- அப்பிறவாமையானது-வேண்டாமை- (தான் ஒருபொருளையும்) அவாவாமையை-வேண்ட-இச்சிக்க-வரும்- (அவனுக்குத்) தானே உண்டாம். எ-று.) (கருத்து) ஒருவன் பிறவாமையையேயிச்சிக்கவேண்டும் என்பதாம். ❋ அநாதியாகத்தான்பிறப்பு-பிணி-மூப்பு-இறப்பு- இவைகளினாலே துன்பப்பட்டுக்கொண்டு வருகின்றதன்மையை அறிந்தவனுக்கு இன்பத்தில் ஆசையுண்டானால் பிறவாமையை வேண்டுமென்றும், இவ்வுலகத்துச் சிற்றின்பத்தைக்குறித்து ஒருபொருளை அவாவினால் அது பிறவியைத்தரும் வித்தாய்ப் பின்னும் முடிவில்லாத துன்பமே விளைத்தலாலே அதுவேண்டாமை வேண்டவருமென்றுஞ் சொல்லினர்.

வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை... ..... *
யாண்டு மஃதொப்ப

தில்.......................................*

(இ-ள்.) வேண்டாமையன்ன - (ஒருபொருளையும்) அவாவாமை போலும்-விழுச்செல்வம்- மேலாகிய செல்வமானது|- ஈண்டு- (காணப்படுகிற) இவ்வுலகத்திலே- இல்லை-இல்லை (அவ்வளவேயன்றி)-ஆண்டும்- (கேட்கப்படுகிற) அவ்வுலகத்திலும்-அஃதொப்பது-அது போல்வது|-இல்-இல்லை. எ,று.) (கருத்து) இச்சியாமைக் கொப்பானசெல்வ மிவ்வுலகத்திலில்லை மோக்ஷத்திலு மதற்கொப்பானதில்லை. என்பதாம். ❁ மக்களதுசெல்வமும், தேவரதுசெல்வமும், மேலு மேலுநோக்கக் கீழாதலால்- தனக்குமேலில்லாத வேண்டாமையை விழுச்செல்வமென்றும், அதற்கு இரண்டுலகங்களிலும் ஒப்பில்லையென்றும், சொல்லினர். [இவ்விரண்டுபாட்டாலும் பிறவாமைக்குவழியாமெனவும், மேலாகிய செல்வமாமெனவும், வேண்டாமையின் சிறப்புச் சொல்லப்பட்டது.] (௬)

தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது........... ..:*
வாஅய்மை வேண்ட வரும்..................... .... *

(இ-ள்.) தூஉய்மையென்பது-(ஒருவர்க்கு) முத்தியென்றுசொல்லப்படுவது|-அவாவின்மை- அவாவில்லாமையாம்.- அது-அவ்வவாவில்லாமை|- வாஅய்மை- மெய்ம்மையை}-வேண்ட-இச்சிக்க-வரும்-தானேயுண்டாம். எ,று.) (கருத்து) ஒருவர்க்கு மோக்ஷமென்று சொல்லப்படுவது ஆசையில்லாமையாம் அவ்வாசை யில்லானட்டானது மெய்ம்மையை யிச்சிக்கவரும் என்பதாம். ❁ வீடாவது-உயிர் அஞ்ஞான முதலாகிய அழுக்கறுதலாகலால்- அதனைத் தூய்மை

௩௭-ஆம்-அதி-அவாவறுத்தல்.

(௩௬௫)

யென்றும்; காரணத்தைக் க ாரியமாக உபசரித்துத் தூய்மையென் ன்பது அவா வின்மையென்றும், வாய்மையுடைய பரத்தை ஆகுபெயரால் வாய்மையென்றும், சொல்லினர். மற்று-அசை-வேண்டுதல்-இடைவிடாது பாவித்தல். [அவாவறுத்தல் முத்திக்குநேரோகாரணமென்பதும், அதுவருவழியும் இதனாலே சொல்லப்பட்டன.]

அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையா .... *
ரற்றாக வற்ற திலர் ....*

(இ-ள்.) அற்றவரென்பவர்- (பிறவி)யற்றவரென்று சொல்லப்படுவர்.—அவாவற்றார்- (அதற்குநேரோ எதுவாகிய) அவ்வாசை யற்றவர்.—மற்றையார்- பிறவேதுக்கள் அற்று அதுவொன்றும்அறாதவர் —(அவ்வேதுக்களாலே சில துன்பங்கள் அற்றவரல்லாமல்)—அற்றாகவற்றிலர்-அவர்போற் பிறவியற்றிலர். எ-று.) (கருத்து) பிறவியற்றவரென்றுசொல்லப்படுவர் ஆசையற்றவர். அவ்வாசையறாதவர் பிறவியற்றிலர். என்பதாம். ❁ [இதனால் அவாவற்றவரது சிறப்புவிதியினாலும் எதிர்மறையினாலும் சொல்லப்பட்டது.] (௫)

அஞ்சுவதோரு மறனே யொருவனை.......... ... . *
வஞ்சிப்ப தோரு மவா .... *

(இ-ள்.) ஒருவனை-(மெய்யுணர்தல் முடிவாகிய காரணங்களெல்லாம்பெற்று அவைகளால் முத்தியை அடைதற்குரியவனாகிய) ஒருத்தனை)-வஞ்சிப்பது-மறவிவழியினாலேநுழைந்து பின்னும்பிறவியிலே தள்ளிக்கெடுக்கவல்லது|—அவா-அவாவாம்.—(ஆகலால்) —அஞ்சுவது-(அவ்வவாவை)அஞ்சிக்காப்பதே|—அறன்-துறவறமாம். எ-று (கருத்து)ஒருவனைக்கெடுக்கவல்லது ஆசையாம். அவ்வாசையை நீக்குவதே துறவறமாம் என்பதாம். ❁ ஒருமிரண்டும்- அசைகள்-அநாதியாய்வந்த அவவவா ஒரோவிடத்து வாய்மையை வேண்டுதலையொழிந்து பாரக்கினாலே காத்திடானாயின் அதுஇடமாக அவன்அறியாமல்புகுந்து பழைய வியற்கையாய்நின்று பிறப்பினை உண்டாக்குதலால் அதனைவஞ்சிப்ப தென்றார். காத்தலாவது - வாய்மை வேண்டலிலே இடைவிடாமற்பழகிப்பரிசரித்தல். [இதனால் அவாவின்குற்றமும் அதனைக்காப்பதே அறமென்பதும் சொல்லப்பட்டன.] (௬)

அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை........................ *
தான் வேண்டு மாற்றான் வரும்........................ *
[௩௬௭]

(௱௩௰). ௩௭-ஆம்-அதி-அவாவறுத்தல்.

(இ-ள்.) (ஒருவன்)-அவாவினை- ஆசையினை}- ஆற்றவறுப்பின்-முழுதுமறுத்தால். [வஞ்சித்தும்வாராமற் கெடுக்க வல்லவனாயினென்றபடி]- (அவனுக்கு)-தவாவினை-கெடாமைக்கு ஏதுவாகியசெயல்-தான்வேண்டுமாற்றால்- தான்விரும்புவ்வழியினாலே- வரும்- உண்டாகும். எ,று.) (கருத்து)ஒருவனிச்சையை நீக்கினாலவன்கெடாமைக்கேதுவுண்டாம் என்பதாம். ❀ கெடாமை- பிறவித் துன்பங்களால்-அழியாமை. அதற்குள் ... வினையென்றது-மேற்சொல்லியதுறவறங்களை. தான்விரும்புமவழி- மெய் வருந்தாதவழி. அவாவை முழுதும் அறுத்தவனுக்கு மேலே ... செய்யவேண்டுவதில்லை. அவனால்செய்யப்பட்டவையெல்லாம் அறமாமென்பது கருத்து. (எ)

அவாவில்லார்க் கில்லாகுந் துன்ப மஃதுண்டேற்....... ... *
றவா அது மேன்மேல் வரும்.......
.... *

(இ-ள்.) அவாவில்லார்க்கு-ஆசையில்லாதவர்க்கு- துன்பம்-(வரக்கடவ) தொருதுன்பம்|- இல்லாகும்- இல்லையாகும்.- ஒருவனுக்குப் பிறகாரணங்களெல்லாம் இல்லாதிருந்தும்) -அஃதுண்டேல்- அவ்வொன்றுமாத்திரம் உண்டாயின்- (அதனால்எல்லாத்துன்பங்களும்|) தவா அது-முடிவில்லாமல் -மேன்மேல்- மேலுமேலும்- வரும்-வரும். எ,று.) (கருத்து) ஆசையற்றவர்களுக்குத் துன்பமில்லை. அவ்வாசையுண்டாகில் துன்பமுண்டாம் என்பதாம். ❀ உடம்பு கொண்டு கொண்டதுன்பம் முன்பேசெய்து கொள்ளப்பட்டதாகலின் இங்கே துன்பமென்றது- இப்போது அவரவராலே செய்துகொள்ளப்படுகின்றவைகளை.- மேன்மேல் வருமென்றதனால் தன்னைப்பற்றி வருவதும், பிறவுயிரைப்பற்றிவருவதும், தெய்வத்தைப்பற்றிவருவதும், ஆகிய மூவகைத்துன்பங்களென்பதுபெற்றாம். [இதனால் அவாவே அத்துன்பத்திற்குக் காரணமென்பது சொல்லப்பட்டது.]

இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந்.................. *
துன்பத்துட் டுன்பங் கெடின் ....*

(இ-ள்.) அவாவென்னும்- அவாவென்றுசொல்லப்படுகிற- துன்பத்துட்டுன்பம்- துன்பங்களுள்ளே மிகுந்த துன்பமானது - கெடின் (ஒருவனுக்குக்) கெடுமாயின்- (அவன்முத்திபெற்றவிடத்தேயல்லாமல்)-ஈணடும்-இங்கேயும் [உடம்போடுகூடி நின்றவிடத்துமென்றபடி]-இன்பம்- ஆனந்தமானது-இடையறாது-நடுவேநீங்காது. எ-று.) (கருத்து) ஆசையென்னுந் துன்பத்தின் மிகுந்த துன்பம் ஒரு

௩௭-ஆம்-அதி-அவாவறுத்தல். (௩௱௬௯)

வனுக்குக்கெடுமானு லின்பம்வரும் என்பதாம்.. ❋ துன்பத்துட்டுன்பமாவது-மற்றைத் துன்பங்களெல்லாம் இன்பங்களாய்த்தோன்றும்படியாக வரும் கொடிய துன்பமாம். அவாவான துபயனைக்கொடுக்கும்போதேயல்லாமல் தோன்றும்போதும் துன்பமாகலால்-இப்படிச் சொல்லப்பட்டது.— அவாவென்னுந் துன்பத்துட்டுன்புமென்று [illegible] காரியமாக உபசரித்தார். அவ்வவாக்கெட்டவர்க்கு மனத்துமோர்ந்து நிரம்பிநிற்குமாகையால்- ஈண்டும் இன்பம் இடையறாதென்றார். [இதனால் அவாவறுத்தவர் முத்தியின்பத்தை உடம்போடு நின்றே அடைவாரென்பது சொல்லப்பட்டது.]

ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே.............❋
பேரா வியற்கை தரும்...... ....❋

(இ-ள்.) ஆராவியற்கை-(ஒருபோதும்) நிரம்பாதஇயல்பையுடைய-அவா-அவாவை-நீப்பின்- (ஒருவன்)விடுவானாயின்-(அவ்விடுகை| அவனுக்கு)-அந்நிலையே-அப்பொழுதே- பேராவியற்கை- எப்போதும்ஒருநிலைமையனாந்தன்மையை}-தரும்-கொடுக்கும். எ-று.) (கருத்து) ஒருவன் ஆசையைவிடுவானாகில் அவனுக்கு அவ்விடுகை நிலைமையைத்தரும் என்பதாம். ❋ நிரம்பாமையாவது- தானேயல்லாமல்தம்பயனும் நிலையாமையால வேண்டத்தகாத பொருள்களை வேண்டிமேலுமேலும்வளர்தல்.— அவ்வளர்ச்சிக்கு அளவில்லாமையால்விடுதலேதக்கதென்பது கருத்து. களிப்புக்கவலைகளும்,பிறப்புப்பிணிமூப்பிறப்புக்களும்,முதலானவை இல்லாமல் உயிர்-ஒப்புயர்வில்லாத இன்பத்தை அடைந்து நிற்கையால் வீட்டினைப் பேராவியற்கையென்றும், அஸத அவாவைவிட்ட விடத்துப் பெறுதற்கு ஐயமில்லாமையால் அந்நிலையே தருமென்றும், சொல்லினார். அந்நிலைமையையுடையவனைச் சீவன்முத்தனென்பர். [இதனால் வீடாவது இதுவென்பதும், அது அவாவறுத்தவர்க்கு அப்போதே உண்டாமென்பதும், சொல்லப்பட்டன.] (௰)

துறவறம் முற்றுப்பெற்றது.

ஆக-அதிகாரம்-௩௭-க்கு- திருக்குறள்-௩௱௭௰.

இவ்விதத்தால்- இம்மை- மறுமை- வீடு- என்கிற மூன்றையும் உண்டாக்குஞ் சிறப்புடைத்தாகிய அறத்தை அருளிச்செய்தார். இனிமுறையே-பொருளும், இன்பமும், அருளிச்செய்யத் தொடங்கியவர்- அவைகளுக்கு முதற்காரணமாகிய ஊழினை விசொல்லுகிறார்.

௩௮-ஆம்-அதி-ஊழ்.

அஃதாவது:
நல்வினைப்பயனாகிய இன்பமும்,
தீவினைப்பயனாகிய துன்பமும், அவ்வினைகளைச்
செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதியாம்.
ஊழ்-பால்-முறை- உண்மை- தெய்வம்- நியதி- விதி- என்பவை ஒரு
பொருட்சொற்கள். இது பொருளின்பங்க ளிரண்டுக்கு
ம்பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையாலும்
முன்சொல்லப்பட்ட அறத்தோடு சம்பந்த
முடைமையாலும், அதனிறுதியிலே
சொல்லப்பட்டது.

ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொ[illegible]......
போகூழாற் றோன்று மடி .... [illegible]

(இ-ள்.) (ஒருவனுக்கு)-கைப்பொருள்-கையில[illegible]ள்-
ஆகூழால் - ஆகுதற்குக் காரணமாகிய ஊழினாலே - [illegible]ன்மை-
முயற்சியானது|-தோன்றும்-உண்டாகும்.—போகூழால்- போகுத
ற்குக்காரணமாகிய ஊழினாலே-மடி- சோம்பலானது|- தோன்றும்-
உண்டாகும். எ-று.) (கருத்து) ஒருவனுக்குப் பொருள்வரும்விதியா
ல்முயற்சியுண்டாம். பொருளழியும் விதியால் சோம்பலுண்டாம் எ
ன்பதாம். ❋ ஊழானது ஒருபொருளினது ஆக்கவழிவுகளுக்குத்
துணைக்காரணமாகிய முயற்சி சோம்பல்களையும் தானேதோன்றச்
செய்யுமென்பது கருத்து. (க)

பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று........ .... ❋

மாக லூ மூற்றக் கடை.......... .... *

(இ-ள்.) (ஒருவனுக்கு)-அறிவு-எல்லாவறிவும் உண்டாயிருந்தாலு ம்-இழவு- (கைப்பொருளை)இழத்தற்குக்காரணமாகிய-ஊழ்-ஊழ்| -(உற்றக்கடை)- பொருந்தியவிடத்து- பேதைப்படுக்கும்-(அதனை) அறியாமையாக்கும்.-(அவனறிவுசுருங்கியிருந்தாலும்)ஆகல்-(கைப் பொருள்) ஆகுதற்குக் காரணமாகிய - ஊழ்-ஊழ் - உற்றக்கடை- பொருந்தியவிடத்து-அகற்றும்- (அதனை) விரிக்கும். எ-று.) (கருத் து) போகுமூ ழறிவில்லாமையைத்தரும். ஆகுமூ ழறிவைத்தரும்

ஙவு-ஆம்-அதி-ஊழ். (௩௱௩)

என்பதாம். * கைப்பொருளென்பது-அதிகாரத்தால்வருவிக்கப்ப ட்டது. ஊழ் இயற்கையாலாகிய அறிவையும் வேறுபடுத்துமென்ப தாம். (உ)

நுண்ணிய நூல்பல க ற்பினு

மற்றுந்தன்..... ....*

உண்மை யறிவே மிகும். ....

.... *

(இ-ள்.) (அறியாமை யாக்குவதாகியஊழுடையவனொருவன்—நு ண்ணிய-நுட்பமான பொருள்களையுடைய - நூல்பல - பலநூல்களை

யும்—கற்பினும்-கற்றாயினும்- (அவனுக்கு) -மற்றும்-பின்னும்-தன்னுண்மை- தனது ஊழினாலாகிய—அறிவே-அறிவே|—மிகும்-மேற்படும்.எ,று.) (கருத்து)ஒருவனுட்படமாகிய நூல்கள் பலவற்றைக்கற்றாலும் அவனுக்கு ஊழினாலாகிய வறிவேமிகும் என்பதாம்.❋ பொருளினுண்மை-நூலின்மேல் ஏற்றப்பட்டது.மேற்படுதல் - கல்வியறிவைப்பின்னே இதை ஏன் செய்தோமென்று துன்பப்படுதற் காதிச்செயலுக்குத்தான் முற்படுதல்.செயற்கையாலாகிய அறிவையுங்கீழ்ப்படுத்துமென்பதாம். (ரு)

இருவேறுலகத் தியற்கை திருவேறு.............................❋
தெள்ளிய ராதலும் வேறு.....................................❋

(இ-ள்.) உலகத்து-உலகத்தில்—இயற்கை- (ஊழினாலாகிய)இயற்கையானது|—இருவேறு-இரண்டு கூறாயிருக்கின்றது. (ஆதலால்)-திரு-செல்வமுடையவராதலும்|—வேறு-வேறு.தெள்ளியராதலும் அறிவுடையவராதலும்-வேறு-வேறு.எ,று.) (கருத்து) உலகினூழினியல்பிரண்டாம். அவை செல்வமுடைமை அறிவுடைமையாம் என்பதாம்.❋ செல்வத்தைப்படைத்தலும்,காப்பாற்றலும், பயன்கொள்ளுதலும், அறிவுடையவர்க்கல்லது கூடாவென்றே அவ்விதமல்லாமல்அறிவுடையவர் வறியவராகவும், மற்றவர்செல்வராகவும், காணுதலால்- அறிவினராதற்கு ஆகிறவூழ்செல்வராதற்கும், செல்வராதற்கு ஆகிறவூழ் அறிவினராகுதற்கும், ஆகாவென்றதாயிற்று.ஆகவே செல்வத்தைத் தேடும்போது அறிவாகிய துணைக்காரணமும் வேண்டாமென்பதுபெற்றாம். (சா)

நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு.............................❋
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.....................................❋

(இ-ள்.)செல்வம்-செல்வத்தை}—செயற்கு- உண்டாக்குதற்கு—

நல்லவையெல்லாஅம்- நன்மையுள்ளவையெல்லாம்|—-தீயவாம்-தீயவையாய் அழிக்கும். (அதுமாத்திரமல்லாமல்)— தீயவும் - தீயவைதாமும்| —நல்லவாம்-நல்லவையாய்ஆக்கும். (ஊழ்வசத்தால்) எ-று. (கருத்து)விதிவசத்தால் நல்லவையெல்லாந்தீயவாம்.தீயவையெல்லா நல்லவாம் என்பதாம். ❋ நல்லவைதீயவை என்றது- காலமும் இடமும் கருவியும்-தொழிலும்- ஆகிய இவைமுதலானவைகளை- ஊழாலென்பது-அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. அழிக்குமூழ்உற்றவிடத்துக்காலமுதலானவைகள் நல்லவையாயிருந்தாலும் அழியும்ஆக்குமூழ்உற்றவிடத்து அவைதீயவையாயிருந்தாலும்ஆகுமென்றதாயிற்று. ஆகவே ஊழ்காலமுதலான துணைக்காரணங்களையும் வேறுபடுத்துமென்பது பெற்றும், (ரு)

பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்............ ❋
சொரியினும் போகா தம...............
.... ❋

(இ-ள்.) பால்-ஊழினாலே—அல்ல- தம்முடையவையாகாதபொருள்கள்|—பரியினும்- வருந்திக்காப்பாற்றினாலும்—ஆகாவாம்-(தம்மிடத்து) நில்லாமற்போகும்-தம- தம்முடையவையாகிய பொருள்கள்|-உய்த்து-(புறத்தே)கொண்டுபோய்-சொரியினும்-பெய்துவிட்டாலும்- போகா-(தம்மைவிட்டுப்)போகாவாம். எ-று.) (கருத்து) ஊழினாலேதமக்குச் சொந்தமாகாப்பொருள்கள் காப்பாற்றினாலு நில்லாவாம். சொந்தமாகும்பொருள்கள் புறம்போக்கினாலும்போகாவாம் என்பதாம். ❋ பொருள்களது-நிலையும்,போக்கும்,ஊழால் ஆவதல்லது- காப்பினாலும், இகழ்ச்சியினாலும், ஆகாதென்பதாம். [இவைஆறுபாட்டாலும்பொருள்களுக்குக்காரணமாகிய ஊழின்வலிசொல்லப்பட்டது.] (௬)

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி.................... ❋
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது...............
.... ❋

(இ-ள்.) கோடி-(அநுபவிக்கப்படும் பொருள்கள்) கோடியை}-தொகுத்தார்க்கும்-வருந்திச்சேர்த்தவர்க்கும்—வகுத்தான்-தெய்வத்தினால்-வகுத்த-வகுக்கப்பட்ட—வகையல்லால் -வகையாலல்லது-துய்த்தல்-அநுபவித்தல்|—அரிது- உண்டாகாது எ-று. (கருத்து) கோடிபொருளைச்சம்பாதித்தவர்க்குங் கடவுளமைத்த வகைப்பன்றியநுபவித்தலரிது என்பதாம். ❋ எந்தவினை எந்தவுயிரினாலே செயப்பட்டதோ அந்தவினையின் பயனை அந்தவுயிர்க்கே வகுத்தலால்-

வகுத்தானென்றார், தொகுத்தார்க்கு மென்னுமும்மை தொகுக்காதவர்க்கு மாத்திரமல்லாமல் என்னும் பொருளைத் தருதலால் எச்சவும்மை.—வேறுமுயற்சிகளாலே பொருள்களைச்சேர்க்கலாமேயல்லாமல் அநுபவித்தல் கூடாது அதற்கு ஊழ்வேண்டுமென்பதாயிற்று. (எ)

துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால......................*
வூட்டா கழியு மெனின்......................................*

(இ-ள்) துப்புரவில்லார்- (வறுமையினாலே) அநுபவித்தல் இல்லாதவர்—துறப்பார்- (இல்வாழ்க்கையைத்) துறக்குங் கருத்துடையவராவார். (ஊழ்கள்)—உற்றபால-அடையும் பகுதியையுடைய துன்பங்களை}—ஊட்டா-அடைவிக்காமல்—கழியுமெனின்-நீங்குமாயின். எ-று. (கருத்து) ஊழ்வினைகள் துன்பங்களையடைவிக்காமல்நீங்குமானால் வறுமையநுபவமில்லாதவர் இல்வாழ்க்கையைத் துறப்பார் என்பதாம். ❋ தம்மால் விடப்படும் பற்றுக்களெல்லாம்தாமேவிடப்பெற்றிருத்தும் கருத்துவேறுபாட்டால் துன்பப்படுவது ஊழ்வலியாலென்னும் ஒழிந்தசொற்பொருளைக் காட்டலால் - மன் - ஒழியிசை. (அ)

நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா......................*
லல்லற் படுவ தெவன்......................................*

(இ-ள்.) நன்று-நல்வினை — ஆங்கால் - இன்பங்களைக்கொடுக்கும்போது —(அவ்வின்பங்களை நீக்கும் விதத்தைத்தேடாமல்) — நல்லவா-(இவை) நல்லவையென்றிசைந்து-காண்பவர்-அனுபவிப்பவர்! — அன்று-மற்றத்தீவினை — ஆங்கால்-துன்பங்களைக்கொடுக்கும்போது(அத்துன்பங்களையும் அப்படி அனுபவியாமல்— அல்லற்படுவது- (நீக்கும்விதத்தேடித்) துன்பப்படுவது|—எவன்- என்னநினைத்து.எ-று. (கருத்து)நன்மையுண்டாம்போது நன்மையை யநுபவிப்பவர் துன்மையுண்டாம்போது துன்பப்படுவதென்ன என்பதாம். ❋ தாமேமுன்செய்து கொண்டமையாலும், பயனைக்கொடாமல் கழியாமையாலும், இரண்டும் இசைந்து அனுபவித்தற்கு உரியவையாம், அவைகளிலே ஒன்றற்கு இசைந்து அனுபவித்து மற்றதற்கு அது செய்யாமல் வருந்துதல அறிவு அன்று என்பதாம். [இவைமூன்று பாட்டாலும் இன்ப துன்பங்களுக்குக் காரணமாகிய ஊழின்வலி சொல்லப்பட்டது.] (௯)

(ராகுசா) ௩௮-ஆம்-அதி-ஊழ்

ஊழிற் பெருவலி யாவுள
மற்றொன்று..........................❋
சூழினுந் தான் முந் துறும்..........
.........................❋

(இ-ள்.) மற்றொன்று- (தன்னைவிலக்குதற்பொருட்டுத்)தனக்குப் பகையாகிய ஒருபாயத்தை- சூழினும்-ஆராய்ந்தாலும்-தான்-தான் -முந்துறும்-(அவ்வுபாயத்தையாவது மற்றொன்றையாவது வழியாகக்கொண்டுவந்து அவ்வாராய்ச்சிக்கு)முற்பட்டுநிற்கும்.-(அதனால்) ஊழின் -ஊழ்போல்-பெருவலி--மிகுந்தவலிமையுடையவை-யா-எவை|-உள-இருக்கின்றன.எ-று.) (கருத்து) ஊழைவிடவலிமையுடையவையெவையிருக்கின்றன அதை விலக்கும்பொருட் டொன்றைநினைப்பினுமவ்வூழேமுன்வந்துநிற்கும் என்பதாம்.❁ பெருவலி-அதனையுடையஊழுக்கு ஆகுதலால் ஆகுபெயர். சூழ்தல்-பலருடனும்பழுதறவெண்ணுதல்-ஊழானது அவ்வுபாயத்தைச்செய்தற்கேயல்லாமல் ஆராய்தற்குஞ்சமயங்கொடாதென்கிற பொருளைக்குறித்துநிற்கையால்-உம்மை எச்சவும்மை-எல்லாம்வழியாகவருதலுடைமையால் ஊழே வலியையுடைய தென்பதாம். [இதனால் அவ்விருவகையூழ்களின் வல்லமையும் பொதுவாகச்சொல்லப்பட்டது] (௰)

இனி இல்லறத்தின் வழிப்படுவனவாகிய பொருளின்பங்களுள்

இம்மைமறுமை இரண்டையும்
தருவதாகியபொருளைச்
சொல்லும்படி எடுத்துக் கொண்டார்.



இண்டாவது

பொருட்பால்.

பொருளாவது—அறவழியினாலே சேர்க்கப்பட்ட பொன்மணி முதலினவையாம். அது - தனக்குத் துணைக் காரணமாகிய அரசனீதிசொல்லவே அடங்கும். அவ்வரசனீதியாவது காவலை நடத்துமுறைமையாம். அதனை அரசியல் அங்கவியல் - ஒழிபியல் - எனமூன்றியல்களால் அருளிச்செய்தார்.

அரசியல்.

அரசாவது-உலகத்திற்கு உயிரெனச்சிறந்த அரசனது தன்மையாம்,
அவ்வரசியலை இருபத்தைந் ததிகாரங்களினாலே சொல்ல
த்தொடங்கிமுதலிலே இறைமாட்சி
சொல்லுகிறார்.

௩௯-ஆம்-அதி- இறைமாட்சி.

அஃதாவது - அரசனது நற்குண
நற்செய்கைகளாம்

படைகுடி கூழமைச்சு நட்பரணாறு ......
.... *

முடையா னரசரு ளேறு..........

.... *

(இ-ள்.) படை-சேனையும்- குடி- நாடும் - கூழ்-பொருளும்---அமைச்சு-அமைச்சும்-நட்பு-நட்பும்- அரண்-அரணும்-(என்றுசொல்லப்படுகிற ஆறங்கங்களையும்)-உடையான்-உடையவன்|-அரசருளேறு-மன்னருள் ஆண்சிங்கம் போல்வானவான். எ,று.) (கருத்து) சேனைநாடுபொருள் அமைச்சு நட்பு அரண்இவ்வாறங்கங்களையு முடையவனரசருளாண்சிங்கம்போன்றவன் என்பதாம். * குடியையுடையநாடு- குடியென்றும், கூழுக்குளதுவாகியபொருள்-கூழென்றும், சொல்லப்பட்டன. அமைச்சு நட்பு பொருள் நாடு அரண் படை என்பதே முறையாயினும் இங்கே செய்யுணோக்கிப் பிறழவைத்தார். ஆறு முடையானென்றதனால் இவைகளிலே ஒன்றுகுறையினும் அரசனீதி செல்லாதென்பது பெற்றாம். [இதனால் அரசனுக்கு அங்க

டாவன
ர்திக்கு

இவையென்பதும்; இவைமூன்று முடைமையே
ஏதுவென்பதும், சொல்லப்பட்டன.]

அவன்வெ

(க)

அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு.... ....
மெஞ்சாமை வேந்தற் கியல்பு.......... ....

*

*

(இ-ள்.) வேந்தற்கு- அரசனுக்கு- இயல்பு- இயல்பாவது— அஞ்சாமை-திண்மையும்-ஈகை-கொடையும்-அறிவு-விவேகமும்-ஊக்கம்-மனவெழுச்சியும்- இந்நான்கும் - இந்தநான்கு குணங்களும்- எஞ்சாமை- நடுவே நீங்காது நிற்கை. எ-று. (கருத்து) அரசனுக்கியல்பாவது வல்லமை யீகை யறிவு மனவெழுச்சியாம் என்பதாம். ❋ ஊக்கம்-தொழில் செய்தலில் மனவெழுச்சி. இவற்றுள்-அறிவு ஆறங்கங்களுக்கும் உரித்து-ஈகை-படைக்குரித்து. மற்றவை-தொழிலுக்குரியன. உயிர்க்குணங்களுள் ஒன்றுதோன்ற மற்றவை அடங்கிவரும். அவற்றுள். இவை அடங்கினால் அரசனுக்குக் கெடுவனபலவாம். ஆதலால் இவை எப்பொழுதும் தோன்றநிற்றல் இயல்பாக வேண்டுமென்பது தோன்றற்கு எஞ்சாமை வேந்தற்கியல்பென்றார் (௨)

தூங்காமைகல்வி துணிவுடைமை யிம்மூன்று........ *
நீங்கா நிலனாள் பவற்கு......................... ... *

(இ-ள்.) நிலனாள்பவற்கு- நிலத்தினையாளுந் திருவினையுடையவனுக்கு- தூங்காமை (யுடைமை) அக்காரியங்களிலே விரைவுடைமையும்— கல்வி (யுடைமை) (அவைகளை அறிதற்கேற்ற) கல்வியுடைமையும்- துணிவுடைமை-ஆண்மையுடைமையும் ஆகிய- இம்மூன்றும்- இம்மூன்று குணங்களும்- நீங்கா-(ஒருபோதும்) நீங்காவாம். எ-று. (கருத்து) விரைவுடைமை, கல்வியுடைமை, வலியுடைமை, இம்மூன்று மரசனைவிட்டு நீங்காவாம் என்பதாம். ❋ கல்வியது கூறுபாடு பின்னேசொல்லப்படும். ஆண்மையாவது- ஒன்றையும் பாராமல் கடிதிலே செய்வதாகலால் அது இங்கே துணிவென்று உபசரிக்கப்பட்டது. இவற்றுள்- கல்வி ஆறங்கத்துக்கும் உரித்து. மற்றவை தொழிலுக்குரியன. நீங்காமையென்பதற்கு முன்னே எஞ்சாமைக்கு உரைத்தபடி உரைத்துக்கொள்க. (௩)

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா...... .... *
மான முடைய தரசு.................................. .... *

(இ-ள்) அறன்- (தனக்குச்சொல்லப்பட்ட) அறத்திலிருந்து-இழு

க்காது- தவறாது நடந்து-அல்லவை-அறமல்லாதவைகளை}-நீக்கி (தனது நாட்டிடத்தும்) உண்டாகாமற்கடிந்து-மறன்-வீரத்திலிருந்து-இழுக்கா-தவறாத-மானம்-மானத்தை} உடையது-உடையவன்!-அரசு-அரசனாவான். எ,று.) (கருத்து) தன்னறத்திருந்து பாவங்களைக் கடிந்து வலிமையிலேதவறாத மானமுடையவனரசனாவான் என்பதாம். [illegible] அறமாவது- வேதமோதல்- யாகஞ்செய்தல்- ஈதல்-என்னும் [illegible] தொழில்களிலும், படைக்கலம்பயிறல் - பல்லுயிரோம்பல்- பகைத்திறமழித்தல்- என்னுஞ்சிறப்புத் தொழில்களும், தவறாமல்நிற்கை. அல்லவை- கொலை-களவு-முதலானவை.குற்றமாகியமானத்தை நீக்குதற்கு மறனிழுக்கா மானமென்றார். அரசு -அரசனது தன்மையாதலால் அது உபசாரவழக்கால்அவன்மேலேநின்றது

இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த ....*
வகுத்தலும் வல்ல தரசு......................................*

(இ-ள்.) இயற்றலும்- (தனக்குப்பொருள்கள்வரும் வழிகளை) மேலும்மேலும்) உண்டாக்கலும்-ஈட்டலும்- (அப்படிவந்தவைகளை) ஓரிடத்தே தொகுத்தலும்—காத்தலும் - (தொகுக்கப்பட்டவைகளைப் பிறர்கொள்ளாமல்) காத்தலும்-காத்த-காக்கப்பட்டவைகளை—வகுத்தலும்- (அறம்பொருளின்பங்களின்பொருட்டுச்) செலவுசெய்தலும்-வல்லது - வல்லவன்—அரசு-அரசனானவன். ஏ,று.) (கருத்து.) பொருள்வரவுதேடலும் பொருளைக்காத்தலு மப்பொருளையறத்தின்வழிச் செலவுசெய்தலுமானவல்லவ னரசனாவான் என்பதாம். ✲ பொருள்களாவன-மணி-பொன்-நெல்-முதலானவை. அவைவரும்வழிகளாவன-பகைவரையழித்தலும்- இறைகொள்ளலும்-தன்னாடுகாத்தலும், முதலானவை.—பிறரொன்றவர்-பகைவர்-கள்வர்-சுற்றத்தார்-தொழில்செய்வோர்-முதலானவர். கடவுளர்-அந்தணர்-வறியோர்-என்கிறஇவர்க்கும் புகழுக்கும் கொடுத்தலை- அறத்தின்பொருட்டாகவும்,யானை-குதிரை-படை-நாடு- அரண்- என்கிற இவற்றுக்கும்பகையோடு கூடும்போது பிரிக்கப்படுவோர்க்கும், தன்னைவிட்டுப்பிரியும்போது கூட்டப்படுவோர்க்கும், கொடுத்தலை-பொருட்பொருட்டாகவும், மண்டபம்-வாவி-செய்குன்று- இளமரக்கா - முதலானவைகளைச் செய்தற்கும் ஐம்பொறிகளால் அநுபவிக்கப்படுமவைகளுக்கும் கொடுத்தலை- இன்பப்பொருட்டாகவும்,கொள்க.—இயற்றல்முதலானவைகளைத் தவறாமல்செய்தல் அரிதாகலால்- வல்லதுவென்றார். [இவைநான்குபாட்டாலும் அரசனது நற்குண நற்செய்கையாகிய மாட்சியே சொல்லப்பட்டது.]

(ராகூ௰) ௩௯-ஆம்-அதி-இறைமாட்சி.

(ரு)

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்....... ... *

மீக்கூறு மன்ன னிலம்................................ *

(இ-ள்.) மன்னன்-அரசன்-காட்சிக்கெளியன்-(வழக்கறிவிப்பவர்க்கும் குறையிரப்பவர்க்கும்)காணுதற்கு எளியவனுகி- கடுஞ்சொல்லனல்லனேல்- (யாவரிடத்தும்) கடியசொல்லினன் அல்லாதவனுமாயிருந்தால்-நிலம்-(அவனது)நிலத்தை}-(உலகம்|)மீக்கூறும்-எல்லா நிலங்களினும் - உயர்த்திச் சொல்லும் ஏ-று. (கருத்து) அரசன்காண்கைக்கெளியவனுகி யின்சொற்சொல்பவனுனு லவனிலத்தை யுலகுமுயர்த்திச்சொல்லும் என்பதாம். ❊ காணுதற்கு எளிமையாவது பெரியஅரசாட்சிமண்டபத்திலே அந்தணர்-சான்றோர் உள்ளிட்டவரோடுசமயமுடையனுயிருத்தல்.— கடுஞ்சொல்-கேள்வியினும்தொழிலினும் கடுமையாகியசொல்.— நிலத்தை உயர்த்திச் சொல்லுமெனவே மன்னனை உயர்த்திச்சொல்லுதல் சொல்லவேண்டுவதில்லையாயிற்று. உயர்த்திச் சொல்லுதல்- இவன் காக்கின்ற நாடு பசி பிணி பகைமுதலானவை இல்லாமல் யாவர்க்கும் மிகுந்தவின்பந் தருவதென்று புகழ்ந்துசொல்லல். (௬)

இன்சொலா லீத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலாற்........ *

றுன்கண் டனைத்திவ் வுலகு.................................*

(இ-ள்.) இன்சொலால்-இனியசொல்லுடனே-ஈத்து-கொடுத்து-அளிக்க-காப்பாற்ற-வல்லாற்கு-வல்ல அரசனுக்கு-இவ்வுலகு-இந்தவுலகம்-தன்சொலால்-தன்புகழோடுபொருந்தி-தான்கண்டனைத்து-தான்நினைத்த அளவினதாகும், எ-று.) (கருத்து) இனியசொல்லுடன்கொடுத்துக்காக்குமரசனுக்கு இவ்வுலகம் தன்புகழோடுபொருந்தித் தான்நினைத்த வளவுடையதாகும் என்பதாம். ❋ இன்சொல-கேள்வியிலும் தொழிலிலும் இனிமையாகியசொல் ஈதல்-வேண்டுவார்க்கு வேண்டுவனகொடுத்தல். அளித்தல்- தன்பரிவாரத்தினாலும் பகைவராலும் நலிவுபடாமற்காத்தல். இவைசெய்தல் அருமையாகலால் வல்லாற்கென்றும், அவன்மண்முழுதும் ஆளுமாகலால் இவ்வுலகென்றும், சொல்லினார். கருதியவள்ளியிற்றுதல்-நினைத்தபொருளெல்லாம் வரத்தல். (௭)

௩௯-ஆம்-அதி-இறைமாட்சி.

(௩௮௮)

முறைசெய்து காப்பாற்று மன்னவன்
மக்கட்...........❋
இறையென்று
வைக்கப் படும்...........................❋

(இ-ள்.) முறைசெய்து-(தான்)முறைசெய்து- காப்பாற்றும்-(பிறர்வருத்தாமற்) காத்தலுஞ்செய்யும்- மன்னவன்- அரசனானவன் }- (பிறவியினாலேமனிதனேயாயினும்)—மக்கட்கு- மனிதர்களுக்கு- இறையென்று-(செயலினாலே) கடவுளென்று-வைக்கப்படும்- வேறுவைக்கப்படுவன். எ-று.) (கருத்து)மநுமுறைசெலுத்திக் குடிகளைக் காக்குமரசனக்குடிகளுக்குத் தேவனாகவெண்ணப்படுவான் என்பதாம். ※ முறை-அறநூலிலும் நீதிநூலிலும் சொல்லும்வழி. பிறர்-மேலேசொல்லப்பட்டவர். வேறுவைத்தல் மனிதரிற்பிரித்து உயர்த்திவைத்தல், (அ)

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன் *
கவிகைக் கீழ்த் தங்கு முலகு.............................*

(இ-ள்.) சொல் - (கண்டித்துப்புத்திசொல்லுந் துணையாயினவரது) சொற்களை-செவிகைப்ப- (தன்) செவிபொறுதாகவும்-பொறுக்கும்-(அவைகளின்பயனைக்குறித்துப்) பொறுக்கும்—பண்புடை- குணமுடைய-வேந்தன்- அரசனது-கவிகைக்கீழ்- குடைநிழலின்கீழ்-உலகு-உலகம்-தங்கும்- பொருந்தும், எ-று.) (கருத்து) மந்திரிமுதலானவர்கள் கடிந்துத்திசொல்லுஞ் சொற்களைப் பொறுக்குமரசன்குடைநிழற்கீழுலகந்தங்கும் என்பதாம். ※ நாவின்கைப்பு-செவியிலேற்றப்பட்டது. பண்புடைமை - சிறப்பறிவுடையவனாகுகை. அறநூல நீதிநூல்களிலே தவறாமையால் பூமிமுழுதும்தானே ஆள்வானென்பதாம், (கூ)

கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு........ *
முடையானாம் வேந்தர்க் கொளி .... *

(இ-ள்.) கொடை-(வேண்டுவோர்க்குவேண்டுமவைகளைக்)கொடுத்தலும்-அளி-(யாவரிடத்தும்)-முகமலர்ந்து இன்சொற்சொல்லுதலும்-செங்கோல்-முறைசெய்தலும்- குடியோம்பல்- (தளர்ந்த)குடிகளைப்பேணலும் ஆகிய—நான்கும்- இந்நான்குசெயல்களையும்-உடையான்-உடையவன்-வேந்தர்க்கு-அரசர்க்கெல்லாம்- ஒளியாம்-விளக்காம். எ-று.) (கருத்து) கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலும், செங்கோல்செலுத்துதலும், குடிகளைக்காத்தலும், இந்நான்

[சக]

குசெயல்களையுமுடையவ னரசருக்குள் விளக்கமாவான் என்பதாம் ❋ செவ்விய கோல்போலுதலால் முறைமையைச் செங்கோ லென்றார். குடியோம்பல்- வறுமையுற்றவிடத்தே ஆதிலொன்றாகிய பொருளையும்வாங்காமை முதலானவைசெய்தல். தன்சாதிமுழுதும் விளக்கலால் விளக்கென்றார். [இவை ஐந்துபாட்டாலும் மாட்சியும் பயனும்உடன்சொல்லப்பட்டன.] (௰)

சயி-ஆம்-அ

தி-கல்வி.

அஃதாவது-அவ்வரசன் தான்கற்றற்குரிய நூல்களைக்கற்றல். அவையாவன-அறநூலும், நீதிநூலும், தேர் யானை குதிரை ப

டைக்கலம் எனப்பட்ட இவற்றினூல்களும்,முதலானவையாம்.
அரசன் அறிவுடையவனாயிருந்தால் தன்னுயிர்க்கேயன்றிமன்
னுயிர்க்கும் பயன்படுதல் குறித்து இது அரசியலுள்வைக்கப்
பட்ட தாயினும் யாவர்க்கும் உறுதியைத்தருவதாகிய சிறப்பு
டைமையினாலே பொதுப்படச்சொல்லுகின்றார். முன்னதிகா
ரத்திலே தூங்காமை யென்னும் பாட்டிலே தோற்றுவாய்செ
ய்யப்பட்ட மாட்சியைவிரித்துச் சொல்லுதலால் இது அதன்
பின்வைக்கப்பட்டது.

கற்க கசடறக் கற்பவை கற்றபி .. ...

........................❋

நிற்க வதற்குத் தக.

....❋

(இ-ள்) (ஒருவன்)-கற்பவை-கற்கப்படு நூல்களை}- கசடற-பழு
தற-கற்க-கற்கக்கடவன்.—கற்றபின்- (அப்படிக்) கற்றபின்னே-அ
தற்கு-அக்கல்விக்கு-தக-தகுதியாக-நிற்க-(அவைகளாலே சொல்ல
ப்பட்ட வழியிலே) நிற்கக்கடவன். எ-று.) (கருத்து) ஒருவன் கற்கப்
படுநூற்களைக் குற்றமறக்கற்கக்கடவன். கற்றபின் கல்வியறிவிற்கு
த்தக்கபடி நிற்கக்கடவன் என்பதாம். ❋ கற்பவையென்றதனால் அ
றம்பொருள் இன்பம் வீடு என்கிற உறுதிப்பொருள்களை உணர்த்து
கிற நூல்களென்பதுபெற்றாம். கசடறக்கற்றலாவது-விபரீதசந்தே
கங்களை நீக்கி மெய்ப்பொருளை நல்லோர் பலருடனேயும் பலதரமு
ம்பழகுதல்.—நிற்றலாவது - இல்வாழ்க்கையிலே கருமங்களைச்செ
ய்து-யோக்கியருக்குக்கொடுத்துத் தானனுபவித்தலிலும்,துறவிலே
தவத்தால் மெய்யுணர்ந்து அவாவறுத்தலிலும், தவறாமை. [இதனால்

சிறப்புடையவனுக்குக் கற்கவேண்டுமென்பதும், கற்கத்தகு நூல்களும், அவைகளைக்கற்கும்விதமும், கற்றதனாற்பயனும், சொல்லப்பட்டன.] (க)

எண்ணென்பவேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்........※
கண்ணென்ப வாழு முயிர்க்கு.................................※

(இ-ள். (அறியாதவரால்) - எண்ணென்ப-எண்ணென்று சொல்லப்படுமவையும்- ஏனையெழுத்தென்ப - மற்றையெழுத்தென்றுசொல்லப்படுமவையும் ஆகிய — இவ்விரண்டும்- இக்கலைகளிரண்டையும்} (அறிந்தோர்)—வாழுமுயிர்க்கு- வாழ்தற்குரியமனிதர்க்கு-கண்-கண்களாகும்- என்ப-என்றுசொல்வார். எ-று.) (கருத்து) கணிதநூற்களுமிலக்கணநூற்களுமனிதர்களுக்குக் கண்களாகும் என்பதாம். ※ எண்-கணிதம். எழுத்து-இலக்கணம். இவ்விருவிதநூல்களும்-அறமுதலாகிய பொருள்களைக்காணுதற்குக்கருவியாகலால்-கண்ணெனப்பட்டன. [இதனால் கற்கப்படு நூல்களுக்குக் கருவியாவனவும், அவைகள் அவசியம் வேண்டியவையென்பதும்,சொல்லப்பட்டன.]

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு......... ※
புண்ணுடையர் கல்லா தவர்.....

..................................※

(இ-ள்.) கற்றோர்-கற்றவரே-கண்ணுடையர்- கண்களுடையவர்-என்பவர்-என்று-உயர்த்திச்சொல்லப்படுவர்- கல்லாதவர்-கற்றிலாதவரே-முகத்து- முகத்தினிடத்து- இரண்டுபுண்ணுடையர்- இரண்டுபுண்களுடையவர்- (கண்ணிலார்) எ-று.) (கருத்து) கற்றோரேகண்களுடையவரென்று சொல்லப்படுவோர் மற்றோரேகண்களில்லாதவரென்று சொல்லப்படுவர் என்பதாம். ❋ தூரமானகாலதேசங்களில் உள்ளவைகளையும் காணும்ஞானக்கண்ணுடைமையால் கற்றோரை-கண்ணுடையரென்றும், அஃதுஇல்லாமல்நோய்முதலானவைகளாலே துன்பஞ்செய்யும் ஊனக்கண்ணேயுடைமையால்கல்லாதவரைபுண்ணுடையரென்றும், சொல்லினர். [முன்பாட்டிலேகண்ணல்லாமை குறிக்கப்பட்ட ஊனக்கண்ணினது மெய்ம்மையாகிய சொரூபத்தைச்சொல்லியவிதத்திறூலை பொருணூல்களையுங் கருவிநூல்களையுங் கற்றோரதுஉயர்வும், கல்லாரதுஇழிவும், இசூலேசொல்லப்பட்டன

உ வப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித .... ❋

லனைத்தே புலவர் தொழில். ....

.... ❋ (௱௬௪)

சூய்-ஆட்-அதி-கல்வி,

(இ-ள்.) புலவர்-கற்றறிந்தவராது- தொழில்- தொழில் - உவப்ப- (யாவரும்)மகிழும்படி-தலைக்கூடி-(அவரைச்)சேர்ந்து-உள்ள (இனி இவரை நாம் எப்போது காண்போமென்று) நினைக்கும்படி -பிரித ல்-நீங்குதலாகிய-அனைத்தே-அத்தன்மையை யுடையதாம். எ-று.) (கருத்து) கற்றவர்தொழிலாவது கற்றவரைச்சேர்ந் தினியெப்பொழு துகாண்போமென்று நினைந்து வருந்தலாம் என்பதாம். ❋ தாம் நல்வழிநடத்தலும், பிறருக்கு நன்மையைச்சொல்லுதலும்,தொழிலெனஒன் றாய்அடங்குதலால் அத்தன்மைத்தென்றார். அத்தன்மை-அப்பயனை த்தருந்தன்மை.—காணுதலாலே நல்லொழுக்கமும், மதுரமான வு றுதிச்சொற்களைக் கேட்கையால் இன்பமும், உண்டாதலால் கற்றவ ரிடத்தே எல்லாரும் அன்புடையவராவ ரென்பதாம். [இதனால் கற் றோரது உயர்வு வகுத்துச்சொல்லப்பட்டது] (ரு)

உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்.............❋
கடையரே கல்லா தவர்...............
...............................❋

(இ-ள்.) உடையார்முன்- செல்வர்முன் னே -இல்லார்போல்- வறிய வர்போல்-ஏக்கற்றும்-

(தம்மாசிரியர்முன்) ஏக்கற்றுநின்றும்-கற்றா ர்-கற்றவர்|- (உயர்ந்தவராவார்.)-கல்லாதவர்- (அந்நிலைக்குநாணிக்க ல்லாதவர்|-) கடையரே- (எப்போதும்) இழிந்தவரேயாவர். எ,று.) (கருத்து) கற்றோருயர்ந்தோரு மற்றோரிழிந்தோருமாவர் என்பதா ம். ※ ஏக்கறுதல்-ஆசையினாலேதாழ்தல். கடையரென்றதனால் அத ற்கெதிராகிய உயர்ந்தோரென்பது வருவிக்கப்பட்டது. பொய்யா கிய மானத்தைநோக்கி மெய்யாகிய கல்வியையிழந்தவர் பின்னொ ருநாளும் அறிவுடையவராகாமையால்- கடையரேயென்றார். [இத னாலே கல்லாதவரது இழிவுசொல்லப்பட்டது.] (௫)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக். .... *
கற்றனைத் தூறு மறிவு .... *

(இ-ள்.) மணல்-மணலினிடத்தே-கேணி-கேணியானது|-தொட்ட னைத்து-தோண்டிய அளவினதாக-ஊறும்-சுரக்கும்.-(அதுபோல்)- அறிவு:(மனிதருக்கு) அறிவானது|-கற்றனைத்து-கற்றஅளவினதாக -ஊறும்-சுரக்கும், எ,று.) (கருத்து) மணற்கேணி தோண்டியவள வாகவூறு மதுபோல மனிதருக்கறிவு கற்றவளவாகும் என்பதாம். ※ இங்கேகேணியென்றது-அதனீரை. சிறிதுகற்றவளவினாலேபோ துமென்று விடாமல் மேன்மேலும் கற்றல்வேண்டு மென்பதாம்.

௪௰-ஆம்-அதி-கல்வி.

(௩௯௬)

இக்கல்வி யுதிலு... தல் ஊடும் மாறுகொள்ளாவிடுத்தேயாகலாம்மு ன்னே ... திவே மிகுமென்றதனோடு இப்பாடல்விரோதப்ப டாமை அறிக. (௬)

... ... நாடாமா லூராமா லென்னொருவன் ... ... *
சாந்துணையுங் கல்லாத வாறு ... ... *

(இ-ள்.) (கற்றவனுக்குத் தன்னூடும் ஊருமே யல்லாமல்) -யாதா னும்-யாதாயினுமொருநாடும்|-நாடாம்-தன்னூடாம்-(யாதானும்)- யாதாயினுமோரூரும்|-ஊராம்- தன்னூராம்.— (அப்படியிருக்க)- ஒருவன்-ஒருவன்,-சாந்துணையும்-இறக்குமளவும்-கல்லாதவாறு-கல் லாமற்கழிகின்றது|-என்-என்னநினைத்து. எ-று.) (கருத்து) கற்றவர் க்குஎந்நாடுந் தன்னூடாம். அப்படியிருக்க வொருவன் மரணபரிய ந்தமும் கற்காமலிருப்பதென்ன என்பதாம். * ஆல்-அசைகள் பி ன்னும் உயிரோடுசெல்லுதலால் -சாந்துணையுமென்றார். பிறநாடுக ளும் ஊர்களும் தம்முடையனவபோலிருந்து மகிழ்ந்து பொருள் கொடுத்துப் பூசைசெய்தற்கு ஏதுவாகலால்-கல்விபோற்சிறந்தது வேறொன்று இல்லையாகவின் அதனையே எப்போதும் கற்கவேண்டு மென்பதாம். (எ)

ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்கு ... ... *
கெழுமையு மேமாப் புடைத்து ... ... *

(இ-ள்.) ஒருவற்கு-ஒருவனுக்கு-தான் -தான்- ஒருமைக்கண் ஒரு பிறப்பினிடத்து- கற்றகல்வி- கற்றவித்தையானது| - எழுமையும்-எ ழுபிறப்புக்களிலும்-ஏமாப்பு-யோப்உதவுதலை}- உடைத்து- உடை யதாகும் எ-று.) (கருத்து) ஒருவன் றான்கற்ற கல்வியானது தனக் கெழுபிறப்பிலு முதவுதலுடைத்தாம் என்பதாம். * வினைகள்போ லஉயிரிடத்தேதங்கி அது சென்றவிடத்தே செல்லுமாகலால் - எழு

வையுமேமாப் புடைத்தென்றூர் உதவுதல்-நல்வழியிலேசேர்தல்.

தா மின் புறுவ துலகின் புறக்கண்டு.......................*
காமுறுவர் கற்றறிந் தார்.................... ....*

(இ-ள்.) தாம்-தாங்கள்- இன்புறுவது- இன்பமடைதற்குஎதுவா
கியகல்விக்கு-உலகு-உலகமானது!-இன்புற- இன்பமடைய- கண்டு-
(அச்சிறப்பு) நோக்கி-கற்றறிந்தார்-
கற்றறிந்தவர்கள்-காமுறுவர்-
(பின்னும் அதனையே) விரும்புவார். எ,று.) (கருத்து) கற்றவர்தா
ங்களின்படைடயுங்கல்விக் குலகத்தா ரின்படைடதல்கண்டு மற்று
[௬௨]

(ஈசுசு) ...ம்-ஆம்-அதி-கல்வி.

ங்கற்பார் என்பதாம். ✻ தாமின்புறுதலாவது-கற்கிறபோது சொ ற்பொருள்களின் சுவையை அனுபவித்தலாலும்; புகழும் பொருளு ம்பூசையும் பெறுதலாலும், பின்னே அறத்தையும் வீட்டையும் அ டைதலாலும், அதனால் [illegible] இன்பத்தை அனுபவித்தல். உல கின்புறுவதாவது-[illegible]ச்சேர்ந்து அறியாதவைகளையெ ல்லாம் அறிந்தே[illegible]-சம்பாதித்தல்-காப்பாற்றல்- இழத்தல்- இவைகளில் [illegible] பலவாயும்புகையாக்கல் பற்றி-செல்வத்தை விரும்பான்மையால் [illegible]தாமொன்றும், கரும் புதின்னுதற்குக் கூலிபோல் தாமின்புறுதற்கு உலகமின்புறுவதும ற்கொருவழியால் இல்லாமையால்- அதனையே காமுறுவ ரொன்றும், சொல்லினர். (கூ)

கேடில் விழுச்செல்வங் கல்வியொருவற்கு...............✻
மாடல்ல மற்றை யவை
................................✻

(இ-ள்,) ஒருவற்கு-ஒருவனுக்கு-கேடில்-அழிவில்லாத-விழு-சீரா கிய-செல்வம்-செல்வமாவது|-கல்வி-வித்தையாகும்-மற்றையவை- அது நீங்கலாகிய மணியும்பொன்னும்முதலானசெல்வம்|-மாடல்ல- செல்வமல்ல. எ-று.) (கருத்து) ஒருவனுக்கு அழிவில்லாத செல்வங் கல்வியாம். பொன்மணிமுதலானவை செல்வமல்லவாம் என்பதாம். ✻ அழிவில்லாமையாவது- பங்காளிகள்- கள்வர்-வலியவர்- அரசர்- இவர்களாலே கொள்ளப்படாமையும்- வழிப்பட்டவர்க்குக் கொடுத் தவிடத்தே குறையாமையும், ஆம்.—சீர்மை-யோக்கியரிடத்தேநிற் கை. மணிபொன் முதலானவைகளுக்கு இவ்விரண்டும் இல்லாமை யால் அவற்றை மாடல்லவென்றார். [இவை ஐந்துபாட்டாலும் கல்வி யது சிறப்புச்சொல்லப்பட்டது.] (ய)

சக-ஆம்-அதி-கல்லாமை.

அஃதாவது-கற்றலைச்செய்யாமையினிழிவாம், கல்வியது சிறப்பை முன்னேசொல்லிய வளவால் முடிவுபெறாமை நோக்கி எதிர்மறையினாலேயும் சொல்லுதலால் இது அதன்பின் வைக்கப்பட்டது.

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய........ ....❋
நூலின்றிக் கோட்டி கொளல்.................................❋

௪௧-ஆம்-அதி-கல்லாமை,

(௪௱௧)

(இ-ள்.) நிரம்பிய-(தான்) நிரம்புதற்கு ஏதுவாகிய- நூல்-நூல்களை}-இன்றி-இல்லாமல்-(ஒருவன்|) கோட்டிகொளல்- சபையினிடத்தே (தானொன்றைச்சொல்லுதல்|) -அரங்கு- வகுப்பிடத்தை-இன்றி -இல்லாமல்-வட்டாடியற்று-உண்டை உருட்டியதுபோலும். எ,று.) (கருத்து) ஒருவன் கல்வியைக்கற்காமல் சபையிலொன்றைச் சொல்லல் வகுப்பறையில்லாமல் சூதாடியதுபோலும் என்பதாம். ❋ நிரம்புதல்- அறியவேண்டிய மறைகளையெல்லாம் அறிதல். அப்படிச் செய்தலால்-சொல்லும் பொருளும்வழிப்படாமற்போமென்பதாம்

கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு........ ....❋
மில்லாதாள் பெண்கா
முற்றற்று................. ....❋

(இ-ள்.) கல்லாதான்-கல்வியில்லாதவனொருவன்- சொல்-(சபையிடத்தேஒன்று) சொல்லுதலை}- காமுறுதல்- வேண்டுதல்|- முலையிரண்டும்-இரண்டுமுலைகளும்- இல்லாதாள்- இல்லாதவளொருத்தி|—பெண்-பெண்மையை}-காமுற்றற்று வேண்டுவதுபோலும். எ,று.) (கருத்து) கல்லாதவன் சபையிற்பேச விச்சித்தல் இரண்டுமுலைகளுமில்லாதவள் பெண்டன்மையை யிச்சித்தல்போலும் என்பதாம்.❋ முலையிரண்டுமில்லாதாள்-முலைகுறிது மில்லாதவளென்பதாம். அவாவியவிடத்து முடிவுபெறாது முடிவுபெற்றாலும் நகைவிளக்கு மென்பதாம். (உ)

கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்........................❋
சொல்லா திருக்கப் பெறின்..................
.........................❋

(இ-ள்.) கல்லாதவரும்-கற்றிலாதவரும்|-நனிநல்லர்-மிகவும்நல்லவராவார்,—(தாமே தம்மை அறிந்து)-கற்றார்முன்- கற்றோர்சபையிடத்து-சொல்லா திருக்கப்பெறின்-(யாதொன்றையும்) சொல்லாதிருக்கப்பெறுவாராயின். எ,று) (கருத்து) கற்றார்முன்பு யாதொன்றையுஞ் சொல்லா திருப்பாராகில் கல்லாதவரு மிகவு நல்லவராவார் என்பதாம். ❋ தம்மைத்தாமறியாமையின் அது கூடாதென்றற்கு-பெறினென்றும், பெற்றால்-அங்கேதம்மை வெளிப்படுத்தாமையாலும்-பின்கல்வியை விரும்புவாராகலாலும்நனிநல்லரென்றும்,சொல்லினர். [இவைமூன்றுபாட்டாலும் கல்லாதவர் சபையிலே பேசுதற்கு உரியரல்லரென்பது சொல்லப்பட்டது.] (ங)

கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்..........................❋
கொள்ளா ரறிவுடை
யார்...❋ (ருசுஅ)

௬௪-ஆம்-அதி-கல்லாமை.

(இ-ள்.) கல்லாதான்-கல்லாதவனது-ஒட்பம்-அறிவுடைமையானது-கழியநன்றாயினும் - (ஒரோவிடத்தே) மிகநன்றாயிருப்பினும்-அறிவுடையார்- விவேகமுடையவர்கள்-கொள்ளார்- (அதனை அறிவுடைமையாகக்) கொள்ளார். எ-று.) (கருத்து) கல்லாதானறிவு ஒருவேளை நன்றாயிருப்பினுங் கற்றோர்கொள்ளார் என்பதாம். ❋ கல்லாதவனது அறிவுடைமை- நன்றாகாது நன்றாயிற்றாயினும் நீர்மேலெழுத்துப்போல் நிலைபெறாதாகலால் நிலைபெற்ற நூலறிவினையுடையவர் அவ்வறிவுடைமையை மதியாரென்பதாம். (௪)

கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து......... .... ❋
சொல்லாடச் சோர்வு படும்.................................❋

(இ-ள்.) கல்லாவொருவன்-(நூல்களைக்) கல்லாதவொருவன்-தகைமை-(அறிவுடையேனென்று தன்னைமதிக்கும்) மதிப்பானது|-தலைப்பெய்து- (அவைகளைக்கற்றவன்) கண்டு-சொல்லாட-பேச-சோர்வுபடும்-கெடும். எ-று.) (கருத்து) கல்லாதவன் தன்னைமதிக்குமதிப்பானது கற்றவன்முன்பேசக்கெடும் என்பதாம். ❋ கற்றவனென்பது வருவிக்கப்பட்டது.யாதாயினுமொருவார்த்தைசொல்லுமட்டுமே நிற்பது-சொல்லியவிடத்து எதிருத்தரம் தரும்போதே வழுப்படுதலால் தன்னைமதித்தமதிப்பு அழிந்துவிடுமென்பதாம். [இவையிரண்டுபாட்டாலும் கல்லாதவரது இயற்கையறிவின் குற்றம்சொல்லப்பட்டது.] (௫)

உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்................. ❋
களரனையர் கல்லா தவர் ... .
.... ❋

(இ-ள்.) கல்லாதவர்-கல்லாதவர்கள்|- (காணப்பட்டுக்கொண்டிருக்கையால்)-உளரென்னு மாத்திரையரல்லால்-உளரென்று(சிலராலே) சொல்லப்படும் அளவினராதலன்றி- (நமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால்)- பயவாக்களரனையர்- விளையாதகளர்நிலத்தோடொப்பாவார். எ-று.) (கருத்து) கல்லாதவர் விளைவில்லாக் களர்நிலத்தையொப்பாவர் என்பதாம். ✽ எப்படிக்களர்நிலம் தானும் விரும்பப்படுதலை இழந்து உயிர்களுக்கும் உணவு முதலானவைகளை உதவுவதில்லையோ அப்படியே கல்லாதவர் தாமும் நன்குமதிக்கப்படுதலை இழந்து பிறர்க்கும் அறிவுமுதலானவைகளை உதவாரென்பதாம். [இதனாலே கல்லாதவரது பயன்படாமை சொல்லப்பட்டது.] (சு)

சுக-ஆம்-அதி-கல்லாமை.

(ரகா)

நுண்மா ணுழைபுல

மில்லா னெழினல.................✽

ம்மண்மாண் புனைபாவை யற்று ...

..........................✽

(இ-ள்.) நுண்-நுட்பமாகிய- மாண் -மாட்சிமைப்பட்டு- நுழை-(பலநூல்களிலும்) சென்ற-புலம்-அறிவை}-இல்லான்- இல்லாதவனது-எழில்கொழுச்சியும்|-நலம்-அழகும்|- மண்- சுண்ணச்சாந்தினாலே -மாண்-மாட்சிமைப்பட- புனை-அலங்கரிக்கப்பட்ட -பாவையற்று-

பாவையினது எழுச்சியும் அழகும்போலும். எ,று.) (கருத்து) நூலறிவில்லா னெழிச்சியுமழகும் சுண்ணாம்புச்சாந்தா லலங்கரிக்கப்பட்டபாவையினெழுச்சியு மழகும்போலுமாம் என்பதாம். ❁ அறிவுக்கு மாட்சிமையாவது- பொருள்களைக் கடிதிலே காணலும்,மறவாமையும், முதலானவை.—பாவை அதன் எழுச்சி யழகுகளைக்காட்டலால் ஆகுபெயர். உருவின்மிகுந்ததோருடம்புகிடைத்தலும்அரிதாகலால் எழினலங்களும் ஒருபயனேயாயினும் நூலறிவில்லாவிடத்தே சிறப்பில்லனவா மென்பதாம். [இதனால் அவர் வடிவழகினாலே பயனில்லாமை சொல்லப்பட்டது.] (எ)

நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே.... .... ❋
கல்லார்கட் பட்ட திரு ....❋

(இ-ள்.) கல்லார்கண்-கல்லாதவரிடத்து- பட்ட-உண்டாகிய-திரு-செல்வமானது- நல்லார்கண்- கற்றவரிடத்து -பட்ட -உண்டாகிய-வறுமையின்-வறுமையினும்-

இன்னாதே-துன்பஞ்செய்வதேயாகும் எ,று.)

(கருத்து) கல்லாதவரிடத்துண்டாகிய

செல்வமானது கற்ற வரிடத்துண்டாகிய

வறுமையைப்பார்க்கிலுந் துன்பஞ்செய்யும் எ

ன்பதாம். ❁ செல்வம்-தனக்குரிய கற்றவனாயும், வறுமை-தனக்கு ரியகல்லாதவனாயும், விட்டு மாறிநிற்கையால்- அவ்விரண்டும் தாம் இடுக்கப்பட்டு உலகிற்கும் துன்பஞ்செய்தலால் ஒக்குமாயினும்செ ல்வம் கல்லாதவனாக்கெடுக்கும். வறுமை-கற்றோனாக்கெடுக்காது. ஆதலால் அவ்வறுமையினும் இச்செல்வம் இன்னாதென்றார். [இதனா ல்அவர்செல்வத்தின் குற்றம்சொல்லப்பட்டது.] (அ)

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்.... *
கற்றா ரனைத்திலர் பாடு........... .... *

(இ-ள்.) கல்லாதார்-கல்லாதவர்கள்|- மேற்பிறந்தாராயினும்-உய ர்ந்தசாதியிலே பிறந்தாராயினும்- கீழ்ப்பிறந்தும்- தாழ்ந்தசாதியி

லேபிறந்திருந்தும்- [illegible]னைத்து-கற்றவரதுபெருமையளவினதா கிய-பாடு-பெருமை[illegible]வர்-இல்லாதவர்களாவார்கள்.எ-று.)(கரு த்து) கல்லாதவர் மே[illegible]த் பிறந்தாராலும் கீழ்க்குலத்திற்பி றந்து கற்றவ[illegible]ன்பதாம். ❁ உடம்போடு அழியு ம்சாதியுயர்ச்சி[illegible]செல்லும் கலவியுயர்ச்சிசிறப்புடை யதென்பதாம். [இ[illegible] சாதியுயர்ச்சியால் பயனில் லாமை சொல்லப்பட்டது.] (கூ)

வி லங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்.................. ......*
கற்றாரோ டேனை யவர்...................................... ... ... *

(இ-ள்.) இலங்கு நூல்-விளங்கிய நூலை}-கற்றாரோடு-கற்றவருடன் -ஏனையவர்-கல்லாதவர்|- விலங்கொடு- மிருகங்களோடு- மக்களனைய ர்-மனிதர் எவ்வளவு நன்மையுடையவரோ அவ்வளவு தீமையுடைய வராவர், எ,று.) (கருத்து) கற்றவர்மக்களையுங் கல்லாதவர் மிருகங்க ளையும்மொப்பாவர் என்பதாம். ❋ விளங்கல்-மேன்படுதல்.— விலங் கைக்காட்டிலும் மனிதர்க்குமேலான அறிவுமிகுதி-கற்றவரிடத்தே காணப்படுதலால் கல்லாதவரும் அவரும் சமானமான பிறப்பின ரல்லரென்பதாம். [இதனால் கல்லாதவர் மனிதப்பிறப்பினாலே பயனடையாமை சொல்லப்பட்டது. (ம)

சஉ-ஆம்-அதி-கேள்வி.

அஃதாவது-கேட்கத்தகுநூலின் பொருள்களைக் கற்றறிந்தவர்சொல்லக்கேட்குதல். கற்றவிடத்தே அதனாலாகிய அறிவைஉறுதிப் படுத்தலாலும், கல்லாதவிடத்தும் அதனைஉண்டாக்கலாலும், இது கல்வி கல்லாமைகளின்பின் வைக்கப்பட்டது.

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்..... ❋

செல்வத்து ளெல்லாந் தலை.................. ❋

(இ-ள்.) (ஒருவனுக்கு)-செல்வத்துட்செல்வம்- சிறப்புடையசெல்வமாவது|-செவிச்செல்வம்- செவியால்வருஞ்செல்வமாம்.- அச்செல்வம்-அந்தச்செல்வம்|- செல்வத்துளெல்லாம்- பிறசெல்வங்களெல்லாவற்றினும்- தலை-தலைமையாம். எ,று.) (கருத்து) ஒருவனுக்குச்சிறப்புடையசெல்வமாவது கேள்விச்செல்வமாம். இச்செல்வமெல்லா

சுஉ-ஆம்-அதி-கேள்வி.

(௪௧௧)

ச்செல்வங்களினுந் தலைமையாம் என்பதாம். ❋ செவியால்வருஞ்செல்வம்- கேள்வியால் எல்லாப்பொருளையும் அறிதல். பிறசெல்வங்கள்-பொருளால்வருவன அவை நிலைபெருமையாலும், துன்பந்தருதலாலும், இது தலையாயிற்று. அவற்றைவிட்டு இவற்றையே தேடுகவென்பது கருத்து.]

(௬)

ழ் ச விக்குண வில்லாத போழ்து சிறிது.....................
வயிற்றுக்கு மீயப் படும்...........................

❋

❋

(இ-ள்.) செவிக்கு-காதுக்கு-உணவு-உணவாகிய கேள்வியானது-இல்லாதபோழ்து-இல்லாதகாலத்தே- வயிற்றுக்கும்- வயிற்றினுக்கும்-சிறிது-சிறிதுணவு}-ஈயப்படும்- கொடுக்கப்படும். எ,று.) (கருத்து) காதுக்குக்கேள்வியுணவில்லாதகாலத்துவயிற்றுக்குணவுகொடுக்கவேண்டும் என்பதாம். ❋ கேட்கிறபோது மிகுந்த சுவையையும் பின்னேபயனையும் தருவதாகிய கேள்வி உள்ளபோது வயிற்றுணவு வெறுக்கப்படுதலால்- இல்லாதபோழ்தென்றும், அதிகமானவிடத்தேசம்பாதிக்குந் துன்பமாத்திரம் அல்லாமலநோயுங்காமமுப்பெருகுதலால்-சிறிதென்றும், அச்சிறிது கொடுத்தலும் பின்னேபிழைத்திருந்து கேட்குதற்பொருட்டாகலால்-ஈயப்படுமென்றும்,சொல்லினர். [இவையிரண்டுபாட்டாலும் கேள்வியது சிறப்புச்சொல்லப்பட்டது.] (௨)

செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி.............❋
னான்றோர் டொப்பர் நிலத்து.............................❋

(இ-ள்.) செவியுணவின்-செவியுணவாகிய- கேள்வி-கேள்வியை}-உடையார்-உடையவர்|-நிலத்து-பூமியிலிருக்கினும்- அவியுணவின்-அவியாகிய வுணவினையுடைய-ஆன்றோரோடு-தேவரோடு-ஒப்பர்-ஒப்பாவார். எ,று.) (கருத்து) கல்விகேள்வியையுடையவர் பூமியிலிருப்பினுந் தேவரையொப்பாவார் என்பதாம். ❋ செவியுணவினென்பதன் இன்சாரியை னகரம்- வலித்தல் விகாரம்பெற்றது. அவியுணவு தேவர்க்கு யாகத்திலே கொடுக்கப்படுவது.- அறிவால்நிறைந்தமையால் ஆன்றோரென்றும், துன்பமறியாமையால் - தேவரோடொப்பரென்றும், சொல்லினர். [இதனாலே கேள்வியையுடையவரது சிறப்புச்சொல்லப்பட்டது.] (௩)

கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்.........
...........❋

கெ ாற்கத்தி

ஊற்றாந் துணை......................*

(இ-ள்.) கற்றிலனாயினும்-(உறுதி நூல்களைத்தான்) கற்றிலனாயினும்-கேட்க-(அவைகளின் பொருள்களைக் கற்றோர்சொல்லக்)கேட்கக்கடவன் — அஃது-அக்கேள்வியானது-ஒருவற்கு-ஒருவனுக்கு-ஒற்கத்தின்-தளர்ச்சிவந்தவிடத்து-ஊற்றாந் துணை-பற்றுக்கோடாந் துணையாம். எ-று.) (கருத்து) கல்லாதவனென்னுங் கற்றவர்சொல்லு நூற்களைச் கேட்கக்கடவன். அக்கேள்வியொருவனுக்குத் தளர்ச்சிவந்தவிடத்துத் துணையாம் என்பதாம். ❋ உம்மை கற்கவேண்டுமென்பது தோன்றநின்றது — தளர்ச்சி-வறுமையாலாவது அறிவில்லாமையாலாவது இடுக்கணுற்று மனந்தளர்தல். அத்தளர்ச்சியைக்கேள்வியாலாகிய அறிவு நீக்குமாதலால்-ஊற்றாந் துணையென்றார். (௪)

இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே..............*
யொழுக்க முடையார்வாய்ச் சொல்....................*

(இ-ள்.) (ஒருவருக்கு ஆபத்திலே)-ஒழுக்கமுடையார்-நல்லநடையுடையவரது-வாய்ச்சொல் - வாயிற்பிறக்கின்றசொல்|- இழுக்கலுடையுழி-வழுக்குதலையுடைய சேற்றுநிலத்திலே-ஊற்றுக்கோலற்றே ஊன்றுகோல்போலுதவும். எ-று.) (கருத்து) நல்லவர்கள் வாயிற்பிறக்குஞ்சொல் ஒருவர்க்காபத்து வந்தவிடத்திற் சேற்றுநிலத்திற் கூன்றுகோல்போலுதவியாம் என்பதாம். ❋ ஊன்றுகோல்போலுதவுதல்-தளர்ந்தவிடத்து அதனை நீக்குதல். ஒழுக்கமில்லாதவர் கல்வியுடையவராயினும் அறிவில்லாராகலால் அவர்வாய்ச்சொல்கேட்கலா

காதென்பது தோன்ற ஒழுக்கமுடையார் வாய்ச்சொலென்றார். தீச்சொலறியாமையாகிய சிறப்புத்தோன்றற்கு வாயென்பது அதிகமாக ச்செ ரல்லப்பட்டது.ஆ ச்செ ால்லைக்கேட்கக்கடவனென்பது கருத்து

எனைத்தானு நல்லவை கேட்க

வனைத்தானு.... ....*

டான்ற பெருமை தரும்....... . ...

.... *

(இ-ள்.)(ஒருவன்|)-நல்லவை-நல்லவை-(உறுதிப்பொருள்களிலே)-எனைத்தானும்-எவ்வளவுசிறிதாயினும்-கேட்க-கேட்கக்கடவன்.--(அக்கேள்வியானது|) அனைத்தானும்- அவ்வளவிறாலும்-ஆன்றபெருமை-நிறைந்தபெருமையை}-தரும்-கொடுக்கும் எ,று.) (கருத்து) ஒருவனல்லவைகளைக் கேட்கக்கடவன். அவைமிகுந்த பெருமையைத்தரும் என்பதாம். ❊ அச்சிறியகேள்விகளும்மழைத்துளிகள்போல்வந்து உள்ளே நிறைந்து எல்லாவறிவுகளையும் உண்டாக்கலால்-சிறிதென்று இகழலாகா தென்பதாம். (௲)

௬௨-ஆம்-அதி-கேள்வி. (ராஎரு)

பிழைத்துணர்ந்தும் பேதைமை

சொல்லா ரிழைத்துணர்ந்

தீண்டிய கேள்வி

யவர்...*

(இ-ள்.) இழைத்துணர்ந்து- (பொருள்களை) நுட்பமாக ஆராய்ந்து அறிந்து-ஈண்டிய- (அதன்மேலும்) நிறைந்த-கேள்வியவர்-கேள்வியையுடையவர்|- பிழைத்துணர்ந்தும்- பிறழ அறிந்தவிடத்தும் -பேதைமை- (தமக்குப்)பேதைமையை உண்டாக்குஞ்சொற்களை -சொல்லார்-சொல்லார். எ,று.) (கருத்து) கற்றவர்க ளறிவீனமான சொற்களைச் சொல்லார் என்பதாம். ❋ பிழைப்பவென்பது பிழைத்துணைத்திரிந்த து-பேதைமை- அதை உண்டாக்குஞ்சொலலுக்கு ஆகுதலால்-ஆகுபெயர். ஈண்டுதல் - பலவழிகளாலும் வந்துநிறைதல்.—பொருள்களின் மெய்ம்மையைத் தாமும் அறிந்து அறிந்தவரிடத்தேயும் அவர்சொல்லக்கேட்டு ஒப்புப்பார்த்து இருப்பவர்-தமோகுணத்தால் மயங்கினாராயினும் அவ்வாறல்லது சொலலாரென்பதாம். [இவைநான்குபாட்டாலும் கேள்வியிருலே திடப்பட்டவர்க்குவரும் நன்மைசொல்லப்பட்டது.]

(எ)

கேட்பினுங் கேளாத் தகையவே

கேள்வியாற்................ ❋

றோட்கப் படாத செவி.... ....

. ❋

(இ-ள்) கேள்வியால்-

கேள்வியினலே-தோட்கப்படாத -தொளை க்கப்படாத-செவி-காதுகள்|-கேட்பினும்- (தமக்குரிய ஓசையைக்) கேட்குமாயினும்- கேளாத்தகையவே- செவிடாந்தன்மையினவே யாம். எ,று.) (கருத்து) கேள்வியாலே தொளைக்கப்படாத செவிக ளோசையைக் கேட்குமாறுைங் கேளாததன்மையுடையனவாம் என் பதாம். ❋ ஓசைமாத்திரத்தால் உறுதி அடையாமையால்- கேளாத் தகையவென்றும், மனத்திலே நூற்பொருள் நுழைதற்கு வழியாக லால்-கேள்வியைக் காரணமாக்கியும், சொல்லினர். பழையதொளை தொளையன்றென்பதாம். (அ)

நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய.................... ❋
வாயின ராத லரிது....................
.....................❋

(இ-ள்.) நுணங்கிய-நுட்பமா கிய-கேள்வியரல்லார்-கேள்வியையு டையவரல்லாதவர்- வணங்கிய-வணக்கத்தைக்காட்டுகிற- வாயினரா தல்-சொல்லையுடையவராகுதல்|-அரிது-கூடாது. எ,று.) (கருத்து) நுணுக்கமான கல்விகேள்வியில்லாதவர்கள் வணக்கமுள்ள வாயின

[சசு]

(ஈஎ) சஉ-ஆம்அதி-கேள்வி

யுடையவராகுதலரிது என்பதாம். ※ கேட்கப்படுகின்ற பொருளின் துட்பம் கேள்விமேல் ஏற்றப்பட்டது. வாய்-அதன் சொல்லுக்குஆகுதலால் ஆகுபெயர். கேளாதார் அறிவில்லாமையால் தம்மைத் தாமே [illegible] ரென்பதாம். (௯)

செ[illegible] [illegible]வாயுணர்வின் மாக்க........*
[illegible]......................*

(இ-ள்.) செவியிற்சுவை-காதுக[illegible]யப்படுஞ்சுவைகளை}-உணரா-அறியாமல்- வாயுணர்வின்- வாய[illegible]ணப்பட்டசுவையை அறியும் அறிவினையுடைய-மாக்கள்-மனித[illegible]அவியினும்- இறந்தாலும்-வாழினும்-வாழ்ந்தாலும்- என்-(உலகத்துக்குவருவது) யாது. எ,று.) (கருத்து) காதுகளாலறியப்படுங் கல்வி மதுரத்தை யறியாமல் வாயாலறியப்படு மதுரத்தை யறியுமனிதர்கள் இறந்தாலென்ன வாழ்ந்தாலென்ன என்பதாம். ※ செவ்யாலுணரப்படுஞ்சுவைகள்- சொற்சுவையும், பொருட்சுவையும், ஆம். இவைகளிலேசொற்சுவை குணலங்காரங்கள், பொருட்சுவை- சிங்காரமுதலாகிய நவரசங்கள். வாய்ச்சுவை-தித்திப்புமுதல் அறுவகைப்படும்.—அவர் செத்தால் இழப்பதும், வாழ்ந்தால் பெறுவதும், இல்லாமையால் இரண்டும்ஒ மானத்தானென்பதாம். [இவைமூன்றுபாட்டாலும் கேளாதவிடத்துஉண்டாகும் குற்றம்சொல்லப்பட்டது.] (௰)

௪௩-ஆம்-அதி-அறிவுடைமை.

அஃதாவது-கல்வி கேள்விகளினாகிய

அறிவோடு உண்மையறிவு டையனுதல்.
அதிகார முறைமையும் இதனுல் விளங்கும்.

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு.............*
முள்ளழிக்க லாகா வரண்..............................*

(இ-ள்.) அறிவு- (அரசர்க்கு) அறிவென்பது- அற்றம்- முடிவுவாராமல்-காக்கும்-காக்கின்ற-கருவி-படையாம்.—(அதுவல்லாமல்-) செறுவார்க்கும்-பகைவர்க்கும்-அழிக்கலாகா- அழிக்கக்கூடாத-உள்-உள்ளாகிய-அரண்-காவலிடமுமாம் எ-று.) (கருத்து) அரசர்க்கறிவானது அவ்வரசனைக்காக்கும் படையாம். அவ்வறிவு பகைவர் அ

ளுரு-ஆம்-அதி-அறிவுடைமை.
(ாஎரு)

ழிக்கக்கூடாத அரணும் என்பதாம்.
※காத்தல்-முன்னுகவறிந்துப
ரிகரித்தல். [இதனுல் அறிவினது சிறப்புச்
சொல்லப்பட்டது.] (க)

சென்ற விடத்தாற்
செலவிடாதீதொரீஇ...................*
நன்றின்பா லுய்ப்ப
தறிவு.................................*

(இ-ள்.)

(ம்னத்தை)}-சென்றவிடத்தால்-(அது)போன விஷயத்தி

லே-செல்விடா- போகவிடாமல்-
(அவ்விஷயங்களினன்மைதீமைக

ளை ஆராய்ந்து)-தீது-தீயதிலிருந்துஒ
ரீஇ-நீக்கி-நன்றின்பால்-நல்ல

தனிடத் து-உய்ப்பது-போக
விடுவது-அறிவு-விவேகம். எ,று.) (கரு

த்து) அறிவானது மனம்போனவழியிற் போகவிடாமல் நன்மையி டத்துவிடுவதே யறிவாம் என்பதாம். ❊ குதிரையைநிலமறிந்துசெ லுத்தும் வாதுவன்போல் வேறுத்தி மனத்தைப் புலமறிந்து செலு த்துவது அறிவென்றார் அது உயிர்க்குணமாகலால். (உ)

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண் ....❊
மெய்ப்பொருள் காண்ப தறிவு

..........................❊

(இ-ள்.) எப்பொருள்-யாதொருபொருளை-யார்யார்வாய்-எவரெ வர்வாயில்-கேட்பினும்-கேட்டாலும்-அப்பொருள்-அப்பொருளின து-மெய்ப்பொருள் - மெய்யாகியபயனை- காண்பது - காணவல்ல து-அறிவு - விவேகம். எ-று.) (கருத்து) எந்தப்பொருளை யெவர் வாயிற்கேட்பினும் அந்தப்பொருளைக்காண்பதேயறிவாம்என்பதா ம். ❋ முக்குணங்களும் மாறிமாறிவருதல் யாவர்க்கும் உண்டாதலா ல்-உயர்ந்தபொருளை இழிந்தார்வாயிலும், இழிந்தபொருளை உயர்ந் தார்வாயிலும், உறுதிப்பொருளைப் பகைவர்வாயிலும், கெடுபொரு ளைச்சிநேகர்வாயிலும், ஓரோவிடத்தே கேட்கப்படுதலால்-எப்பொ ருள்யார்யார்வாய்க் கேட்பினுமென்றார். சொல்லுவாரியல்பு நோக் காமல் அப்பொருளின்பயனைநோக்கி நல்லதைக்கொண்டு தீயதைவிடு வது அறிவென்பதாம். (௩)

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்.....❋
நுண்பொருள்
காண்ப தறிவு .... ❋

(இ-ள்.) (தன்னாலே சொல்லப்படும் சொற்கள் அரியபொருளின வாயிருந்தாலும்) - எண்பொருளவாக- (கேட்பவர்க்கு) எளியபொ ருளின்வாம்படி- செல-மனங்கொள்ள- சொல்லி-சொல்லி-தான்-தா ன்-பிறர்வாய்-பிறர்வாயிற்(கேட்கப்படுஞ்சொற்களில்)-நுண்பொரு

ள்-(காணுதற்கரிய) நுட்பப்பொருளையும்}-காண்பது-காணவல்லீ து-அறிவு-விவேகம். எ-று:) (கருத்து) தன்னுற்சொல்பொருளை யெ ளிதாகச்சொல்லிப் பிறர்சொல்பொருளை யறிதலே யறிவாம் என்ப தாம். ❋ அறிவுடையவன்து தொழில்அறிவின்மேலேற்றப்பட்டது தான்சொல்பவைகளை வழுவில்லாமல் நன்றுகவிளங்கச் சொல்லவே ண்டுமென்பதற்குச் சொல்லின்மேல்வைத்தும், பிறர்சொல்லக்கேட் கப்படுமவைகள் வழுவினாலும் நன்றுகவிளங்காமற் போனாலும் அ வைகளின் பயனைக்கொண்டு விடவேண்டுமென்பதற்குப் பொருளி ன்மேல் வைத்துஞ் சொல்லினர். (ச)

உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்......... ....❋
கூம்பலு
மில்ல தறிவு..❋

(இ-ள்.) (ஒருவனுக்கு) -உலகம்-உயர்ந்தோரை}- தழீஇயது-நட் டாக்குவது|-ஒட்பம்-அறிவுடைமையாம்,—மலர்தலும்- (முன்னே) விரிதலும்- கூம்பலும்- (பின்னே) குவிதலும் -இல்லது- (அந்நட்பி லிடத்தே) இல்லாதது|-அறிவு-அறிவு. எ-று.) (கருத்து) ஒருவனுய ர்ந்தோரைச் சிநேகிப்பதறிவாம். நட்பினிடத்து முன்முகமலர்தலு ம்பின்முகங்குவித்தலு மில்லாமையு மறிவாம் என்பதாம். ❋ உயர் ந்தோரோடு நீர்ப்பூப்போல்வேறுபடாமல் கோட்டுப்பூப்போல்ஒரு நிலையே நட்பாயினுல் எல்லாவின்பங்களும் உண்டாகலால் அதனை அ றிவென்றூர். (ரு)

எவ்வ துறைவ துலக முலகத்தோ...................................❋
டவ்வ துறைவ
தறிவு..❋

(இ-ள்.) உலகம்-உலகமானது|-எவ்வது- எவ்விதத்தினால்- உறைவது-நடப்பதாயிருக்கின்றது:- உலகத்தோடு- அவ்வுலகத்துடன்பொருந்தி-அவ்வது-அவ்விதத்தால்-உறைவது-(தானும்)நடப்பது|-அறிவு-(அரசனுக்கு) அறிவாம். எ-று.) (கருத்து) உலகமானதெவ்வகையினாலே நடப்பதாயிருக்கின்றது அவ்வுலகத்துடன் பொருந்தி அவ்வகையினாலே தானடப்பதறிவாம் என்பதாம். ❋ உலகத்தையெல்லாம் யான் நியமித்தலால் என்னை நியமிப்பார் இல்லையென்று நினைத்துத் தான் நினைத்தபடி நடந்தால் பழியும்பாவமும் ஆம். ஆதலால் அப்படிநடத்தல் அரசனுக்கு அறிவன்றென்று விலக்கியபடியாயிற்று.[இவைஐந்துபாட்டாலும் அறிவுடைமையி னிலக்கணம் சொல்லப்பட்டது] (௬)

௪௩-ஆம்-அதி-அறிவுடைமை. (௪௨௭)

அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா.................... ❋
ரஃதறி கல்லா தவர்.................................❋

(இ-ள்.) ஆவது-வரக்கடவதை 3-அறிவார்-(முன்னே) அறியவல்லவர்|-அறிவுடையார்- அறிவையுடையவராவர்.—அஃது- அவ்வரக்கடவதை3-அறிகல்லாதவர்-(முன்னே) அறியமாட்டாதவர்| - அறிவிலார்–அறிவில்லாதவராவார். எ-று.) (கருத்து) முன்வரக்கடவதை யறியவல்லவர் அறிவுடையவராவார். அறியமாட்டாதவர் அறிவில்லாதவராவார் என்பதாம். ❋ முன்னறிதலாவது-முன்னேஎண்ணியறிதல்.

அஞ்சுவதஞ்சாமை பேதைமை யஞ்சுவ......................❋
தஞ்ச லறிவார் தொழில்.................................❋

(இ-ள்.) அஞ்சவது-அஞ்சத்தகுவதற்கு-அஞ்சாமை-பயப்படாமை|-பேதைமை-அறிவில்லாமைஆம்-அஞ்சுவது-அஞ்சத்தகுவதற்கு-அஞ்சல்-பயப்படுதல்|-அறிவார்தொழில்-விவேகிகளதுதொழில்-ஆம். எ,று.) (கருத்து) அஞ்சத்தகுவதற் கஞ்சாமை யறிவில்லாமையாம் அஞ்சத்தகுவதற் கஞ்சுதலறிவுடைமையாம் என்பதாம். ❊அஞ்சத்தகுவன-பாவம்பழிகேடு முதலாகிய பலவாயினும் சாதிபற்றி அஞ்சுவதென்று ஒருமையாகக்கூறினர். அஞ்சாமை-எண்ணாதுசெய்துநிற்றல். அஞ்சுதல்-எண்ணிச்செய்யாது விடுதல்.—அஞ்சாமையை இறைமாட்சியாக முன்னேசொல்லுதலால் இங்கேஅஞ்சவேண் டுமிடம் சொல்லியபடி. [இவை இரண்டுபாட்டாலும் அறிவுடையவரது இலக்கணம் சொல்லப்பட்டது.

(அ)

எதிரதா க்காக்கு மறிவினார்க் கில்லை
......................❊
யதிர வருவதோர் நோய்..................
...............❊

(இ-ள்.) (வரக்கடவதாகிய அதனை) — எதிராதாக்காக்கும்-முன்னே அறிந்துகாக்க வல்ல-அறிவினார்க்கு-விவேகமுள்ளவர்க்கு-அதிர-(அ வர்|)நடுங்கும்படி-வருவதோர்நோய்-வருவதாகிய ஒருதுன்பமும்| —இல்லை-இல்லை. எ,று.) (கருத்து) வருந்துன்பங்களை முன்னேமே

யறிந்து காத்துக்கொள்ளும் விவேகிகளுக்குத் துன்பமில்லை என்ப

தாம். ❋ இதனாலே வரக்கடவதாகிய துன்பத்தைக்காத்தற்குரியகாலம் அறிவிக்கப்பட்டது.

காத்தல்-அத்துன்பத்தின்காரணத்தைவிலக்குதல்.[அவர்க்குத்துன் பமில்லாமை இதனாலேசொல்லப்பட்டது] (ளஎஅ)

[சுடு]

சு-ஆம்-அதி- அறிவுடைமை.

அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா.......... ❋
ரென்னுடைய ரேனு-மிலர்.... ....❋

(இ-ள்.) அறிவுடையார்-விவேகமுடையவர்கள்|- எல்லாமுடையார்-(வேறென்றும் இல்லாதவராயிருந்தாலும்)எல்லாமுடையவராவார்.—அறிவிலார்-விவேகமில்லாதவர்கள்|-என்னுடையரேனும்.எல்லாமுடையவராயிருந்தாலும்-இலர்-(ஒன்றும்) இல்லாதவராவாரெ,று.) (கருத்து) அறிவுடையவரில்லாதவராயினு மெல்லமுடையவராவார். அறிவில்லா ரெல்லாமுடையவராயினு மொன்றுமில்லாதவ ராவார் என்பதாம்.☼ செல்வங்களெல்லாம் அறிவினாலேசம்பாதிக்கவும் காக்கவும்படுதலால் அதனையுடையவனை-எல்லாமுடையானென்றும்,அவையெல்லாம் முன்னாகவேஅமைந்துகிடந்தாலும் அழியாமற்காத்தற்கும் அழிந்தவிடத்தே சம்பாதித்தற்குங்கருவியாகிய அறிவில்லாமையால் அறிவில்லாதவனை-என்னுடையரேனுமிலரொன்றும்,சொல்லினர்,[இதனால் அறிவுடையவரது உடைமையும்,மற்றவரதுஇல்லாமையும்,சொல்லப்பட்டன.] (ய)

சச-ஆம்-அதிகாரம்

குற்றங்கடிதல்.

அஃதாவது-காமம்-குரோதம்-உலோபம்-மானம்-உவகை-மதம்-எனப்பட்ட ஆறுகுற்றங்களையும் அரசன் தன்னிடத்தே தோன்றாமல்கடிதல். இவைகளைக்குற்றமென்று அறிதலும், கடிதலும், அறிவுடையார்க்கல்லதுமற்

வர்க்குக்
கூடாமையால்—அதன்பின்
வைக்கப்பட்டது.

செருக்குஞ் சினமுஞ் சிறுமையு
மில்லார்..................*
பெருக்கம் பெருமித
நீர்த்து ....,.......................*

(இ-ள்.) செருக்கும்-மதமும்-சினமும்-குரோதமும்-சிறுமையும்-காமமும்ஆகிய (குற்றங்களை)}—இல்லார்-இல்லாத அரசனது- பெருக்கம்-செல்வமானது|-பெருமித நீர்த்து-மேன்பாட்டுக்குணத்தை யுடையதாம். எ,று.) (கருத்து) மதமுங்கோபமுங் காமமுமில்லாத வரசன் செல்வமானது மேலானதாகும்என்பதாம்.❋ மதம்-செல்வ

௪௩-ஆம்-அதி-குற்றங்கடிதல்.
(௱௪௧)

க்களிப்பு-சிறியவர்துசெயலாதலால்-அளவிறந்த காமம்சிறுமையெனப்பட்டது. இக்குற்றங்கள்-அநீதிகளைச்செய்வித்தலால்இவைகளை நீக்கினவரது செல்வம்நல்வழிப்படுதலும்நிலைபெறுதலு முடைமையால்-மதிப்புடைத்தாகு மென்பதாம்.மிகுதிபற்றிஇக்குற்றங்கள் முன்சொல்லப்பட்டன. (க)

இவறலுமாண்பிறந்த மானமு மாணா.... ....*
வுவகையு மேத மிறைக்கு ....*

(இ-ள்.) இவறலும்-வேண்டுமிடத்துப்பொருள் கொடாமையும்|-மாண்பிறந்தமானமும் - நன்மையினீங்கிய மானமும்|—மாணாவுவகையும்-அளவிறந்தமகிழ்ச்சியும்- இறைக்கு- அரசனுக்கு-ஏதம்-குற்றங்களாம், எ,று.) (கருத்து) கொடாமையும்நன்மானமும்அளவில்லாமகிழ்ச்சியும் அரசனுக்குக்குற்றங்களாம் என்பதாம். ✽ மாட்சியானமானத்தை நீக்குதற்குமாண்பிறந்தமானமென்றார்.-அம்மானமாவது-அந்தணர்-சான்றோர்-அருந்தவர்-தன்முன்னோர்-தந்தைதாய்-என்றிவரை-வணங்காமையும் முடிக்கத்தகாததாயினும் நினைத்ததுமுடித்தேவிடுதலும், முதலானவை-அளவிறந்தவுவகை- மிகுந்தமகிழ்ச்சி [இவை இரண்டுபாட்டாலும்குற்றங்கள் இவையெனச்சொல்லப்பட்டன, (உ)

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்.....✽

கொள்வர் பழி நாணுவார்...✽

(இ-ள்.) பழிநாணுவார்- பழிக்குஅஞ்சுவோர்|-தினைத்துணையாங்குற்றம்-தினையளவு சிறியகுற்றமானது- வரினும்- (தம்மிடத்து)வந்தாயினும்— (அதனை அவ்வளவாகவல்லாமல்) - பனைத்துணையா-பனையினளவுபெரிதாக-கொள்வர்-கொள்வார்கள் எ,று,) (கருத்து)பாவத்துக்கஞ்சுபவர்கள் தினையளவு குற்றம்வரினும் பனையளவாகவெண்ணுவார் என்பதாம்.✽ குற்றம்- சாதியொருமைப்பெயர்-சிறுகுற்றமும் தமக்கு ஏற்றகாமையால் சிறிதென்றுபொருர்பெரிதாகக்கொண்டுவருந்திப்பின்னும் அதுவாராமல் காப்பரென்பதாம்,

குற்றமேகாக்க பொருளாகக் குற்றமே .... ✽

யற்றந் தரூஉம் பகை...✽

(இ-ள்.)அற்றம்-முடிவை}-தரூஉம்பகை-(தனக்குத்)தரும்பகை|—குற்றமே-குற்றமேயாம்- (ஆதலால்)-குற்றமே- அக்குற்றம்(தன்

ணிடத்துவாராமையையே) -பொருளாக-பயனுகக்கொண்டு- காக்க -காக்கவேண்டும். எ,று.) (கருத்து) தனக்குமுடிவைத்தரும்பகைகுற்றமாம் ஆகலால் அக்குற்றத்தைக்காக்கடவன் என்பதாம்.❋ இக்குற்றங்களிலே ஒன்றைப்பற்றியல்லாமல் பகைவர்தனக்கு முடிவைச்செய்யாமையால் இவையே அரசனுக்குப்பகையாவன வென்றும், இவைகளி னில்லாமையையே குணங்களினிருப்பாகக்கொண்டென்றற்கு-பொருளாகவென்றும்,சொல்லினர். (ச)

வருமுன்னர்க் காவா தான்வாழ்க்கை யெரிமுன்னர்..... ❋
வைத்தூறு போலக் கெடும்.... ....❋

(இ-ள்.) வருமுன்னர்-(குற்றம்) வருவதன்முன்னே- காவாதான்-(அதனைவாராமல்)காவாத அரசனது-வாழ்க்கை-வாழ்வானது-(அதுவத்தால்)-எரிமுன்னர்-தீமுகத்துநின்ற- வைத்தூறுபோல- வைக்கோலின்கூட்டம்போல - கெடும்- அழிந்துவிடும். எ,று.) (கருத்து) குற்றம்வருமுன்னே காத்துக்கொள்ளாவரசன் வாழ்வுஅக்கினிமுன்னின்றவைக்கோல்போலக்கெடும் என்பதாம்.❋ குற்றமென்பது-அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. முன்னரொன்றதனுல் - காத்தலாங்காலம்பெறப்பட்டது. குற்றம்சிறிதாயினும் அதனுலேபெரியசெல்வம்அழிந்தேவிடுமென்பது உபமானத்தினுலே கொள்ளப்பட்டது.

தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி .... ❋
னென்குற்ற மாகு மிறைக்கு.......................... ❋

(இ-ள்.) தன்குற்றம்-தனது குற்றத்தை} - நீக்கி-(முன்னேகண்டு) கடிந்து-பிறர்குற்றம்-பிறரது குற்றத்தை}-காண்கிற்பின்-(பின்னே) காணவல்லவனாயின்-இறைக்கு-அரசனுக்கு-ஆகும்- ஆகக்கடவதாகிய-குற்றம்-குற்றம்|—என்- யாது. எ-று.) (கருத்து) தன்குற்றத்தை முன்கடிந்துபிறர்குற்றத்தைப்பின்கடிவானாகில் அவ்வரசனுக்குக்குற்றமில்லை என்பதாம். ❋ அரசனுக்குத் தன்குற்றங்கடியாதவிடத்தே பிறர்குற்றங்கடிதல் குற்றமாம் அதுகடிந்தவிடத்தே முறைசெய்தலாம் என்றற்கு-என்குற்றமாகுமென்றார். எனவே தன்குற்றங்கடிந்தவனே முறைசெய்தற்குஉரியவனென்றதாயிற்று. [இவைநான்குபாட்டாலும் குற்றங்கடிதல் பொதுவகையினாலே சொல்லப்பட்டது] இனிச்சிறப்புவகையாற்கூறுகிறார். (எ)

செயற்பால செய்யா திவறியான் செல்வ.......................❋
முயற்பால தன்றிக்
கெடும்.. ❋

௪௪-ஆம்-அதி-குற்றங்கடிதல். (ர்அக)

(இ-ள்) செயற்பால- (பொருளினாலே தனக்குச்) செய்துகொள்ளப்படுமவைகளை}-செய்யாது- செய்துகொள்ளாமல்-இவறியான்-(அதனிடத்து) லோபஞ்செய்தவனது- செல்வம்- செல்வமானது|-உயற்பாலதன்றி- பின்னுள்ளதாகும் பகுப்பினதன்றி-கெடும்-(வீணாகக்) கெடும். எ,று.) (கருத்து) செய்யப்படுமவற்றைச் செய்துகொள்ளாமல் உலோபஞ்செய்யு மரசன் செல்வங் கெடும் என்பதாம். ❋ செய்துகொள்ளப்படுமவை- அறம்பொருளின்பங்கள். பொருளால் இம்மூன்றிலே ஒன்றாகிய பொருள்செய்தலாவது- அதனைப்பெருக்குதல். செல்வமானது- அறஞ்செய்யாமையாலும்- பொருள்பெருக்காமையாலும்- பின்னுளதாகாதென்றும், இன்பப்பயன் கொள்ளாமையால்-கெடுமென்றும், அறிக. (எ)

பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு............ ❋
மெண்ணப் படுவ தொன்றன்று.............................❋

(இ-ள்.) பற்றுள்ளமென்னும்- (பொருளைவிடத் தகுமிடத்து விடாது) பற்றுகின்றவுள்ளமாகிய-இவறன்மை உலோபத் தன்மையானது}-எற்றுள்ளும்- எல்லாக்குற்றத்தன்மைகளுள்ளும் -எண்ணப்படுவது-(வைத்து) நினைக்கப்படுவது- ஒன்றன்று- ஒன்றல்ல-மிகுந்ததாம். எ,று.) (கருத்து) பொருளைப்பற்று முலோபத் தன்மையானது எல்லாக்குற்றத்திலு மிகுந்ததாம் என்பதாம். ❋ இவறன்மை-குணங்களெல்லாம் சேர்ந்திருந்தாலும் அவைகளைக் கீழ்ப்படுத்தித் தான்மேற்படவல்லவியல்பு. மற்றவை அதுசெய்யமாட்டாமையால்-எற்றுள்ளுமெண்ணப்படுவ தொன்றென்றார். எவற்றுள்ளு மென்பது இடைக்குறைவிகாரம். [இவை யிரண்டுபாட்டாலும் உலோபத்தின தீமைசொல்லப்பட்டது.] (அ)

வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க............. ❋
நன்றி பயவா வினை...❋

(இ-ள்.) என்ஞான்றும் - எக்காலத்திலும் [தான் மிகவும் உயர்ந்த காலத்திலுமென்றபடி]- தன்னை-தன்னை }-வியவற்க-(மதத்தினாலே) நன்குமதியாதிருக்கக்கடவன்.— நன்றி-நன்மையை-பயவா- (தனக்குத்)தாராத-வினை-தொழில்களை }-நயவற்க-(மானத்தால்)விரும்பாதிருக்கக்கடவன். எ,று.) (கருத்து) எக்காலத்து மொருவன் தன்னை மதியாதிருக்கக்கடவன் நன்மையைத்தராததொழிலை யிச்சியாதிருக்கக்கடவன் என்பதாம். ❊ தன்னை நன்குமதித்தவிடத்தேஇடமும் காலமும் வலியும் அறியப்படாமையாலும், அறமும் பொருளும் இ [சகூ]

(ா அஉ) ❊❊-ஆம்-அதி-குறறங்கடிதல.

ழப்படுதலாலும், என்ஞான்றும் வியவற்கவென்றும், நினைத்தது முடித்தே விடுமென்று அறம்பொருளின்பங்களைத்தாரா தொழில்களை விரும்பினால்- அவைகளால் பாவமும் பழியும் கேடும் வருமாகலால்- அவற்றை நயவற்க வென்றும்; சொல்லினார். [இதனால்மதமானங்களினது தீமைசொல்லப்பட்டது.] (கூ)

கா தல காத லறியாமை யுய்க்கிற்பி.... ....❊
நோதில-வேதிலார் நூல்....... .... ❊

(இ-ள்.) காதல- (தன்னாலே) விரும்பப்பட்டபொருள்களை}-காதல்-அவ்விருப்பத்தை}-அறியாமல்- (அவர்) அறியாதிருக்கும்படி -உய்க்கிற்பின்- அனுபவிக்கவல்லவனாயின்- ஏதிலார்-பகைவர்-நூல்-(தன்னைவஞ்சித்தற்குஎண்ணும்)எண்ணமானது|-இல்-பழுதாம், எ,று.) (கருத்து) தன்னாலிச்சிக்கப்பட்ட பொருள்களையந் தன்னிச்சையையும்பகைவரறியாம லநுபவிக்க வல்லவனான லப்பகைவ ரெண்ணம் பழுதாம் என்பதாம். ❋ அறிந்தவிடத்தே அவைவழியாகப் புகுந்து வஞ்சிப்பாராதலால் அறியாமல் அனுபவிக்க வேண்டுமென்பதாம். [இதனாலே முழுதும் விடலாகாத காமத்தை அனுபவிக்கும்விதஞ்சொல்லப்பட்டது.] (ம)

௪௫-ஆம் -அதி-
பெரியாரைத் துணைக்கோடல்

அஃதாவது-அவ்வறுவகைக்குற்றங்களையும் கடிந்த அரசன் தன்னைத்தீயவழியில் விலக்கி நல்வழியிலேசெலுத்தும் பேரறிவுடையவரைத் தனக்குத் துணையாகக் கொள்ளுதல். அதிகாரமுறைமையும் இதனால்விளங்கும். பேரறிவுடையவராவார்- அரசாட்சிக்குக்குற்றம் வாராமற் காத்தற்குரிய அமைச்சர்புரோகிதர்.

அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை.... .. ..❋
திறனறிந்து தேர்ந்து கொளல்.........................❋

(இ-ள்.) அறனறிந்து -அறத்தினது நுட்பத்தை அறிந்து}-மூத்த -(தன்னின்) மூத்த-அறிவுடையார்-அறிவுடையவரது -கேண்மை-நட்பை}-தேர்ந்து- (அதனது அருமையைத்)தெரிந்து}-திறனறிந்து -(கொள்ளுந்) திறமறிந்து- கொளல்- (அரசன்) கொள்ளக்கடவன். எ,று.) (கருத்து) அரச னறிவுடையோர் சிநேகத்தைக் கொள்ளக்

டவன் என்பதாம். ❋ மூத்தல்-அறிவாலும், சீலத்தாலும், காலத்தாலும், முதிர்தல். அறிவுடையார்-,நீதியையும், உலகியலையும், அறிதலையுடையவர். திறனறிதலாவது- நன்குமதித்தல்-உயரச்செய்தல்- அவர்சொல்வழிநடத்தல்- இவைமுதலாக அவர் தனக்கு உள்ளாந்திறம நிந்துசெய்தல்,

(௧)

உற்றநோய் நீக்கி யுறாஅமை
முற்காக்கும்........................❋
பெற்றியார்ப்
பேணிக் கொளல்................... ... . ❋

(இ-ள்.) உற்ற-தெய்வத்தாலாவது மனிதராலாவது தனக்குவந்த-நோய்-துன்பங்களை}-நீக்கி- (நீக்கும்விதம்அறிந்து) நீக்கி-உறாமை -(பின் அப்படிப்பட்டவை) வாராதபடி- முற்காக்கும்-முன் (னறிந்து)காக்கவல்ல-பெற்றியார்- தன்மையுடையவரை}-பேணி-அவர் ✝ மகிழத்தக்கவைகளைச்செய்து-கொளல்-(அரசன்| துணையாகக்)கொள்ளக்கடவன். எ,று.) (கருத்து) துன்பங்களை நீக்கும் விதமறிந்துநீக்கி அத்துன்பங்கள்வாராமற் காக்கவல்லவரை யரசன் சிநேகிக்கக்

கடவன் என்பதாம்.

தெய்வத்தால்வருந் துன்பங்களாவன- மழை யில்லாமையாலும், அதிகமழையாலும், காற்றுத் தீப்பிணி இவைக ளாலும்வருவன. அவை- கடவுளையும், தக்கோரையும், நோக்கிச் செய்யப்படுஞ் சாந்திகளால் நீக்கப்படும்.—மக்களால்வருந் துன்ப ங்களாவன-பகைவர்-கள்வர்- சுற்றத்தார்-தொழில்செய்வார்-இவர்க ளால்வருவன, அவை சாம பேத தான தண்டங்களாகிய நால்வகை யுபாயங்களுள் ஏற்றதனால் நீக்கப்படும்,—முற்காத்தலாவது- தெய் வத்தால்வருமவைகளை உற்பாதங்களால் அறிந்து அச்சாந்திகளாலே காத்தலும், மனிதரால் வருமவைகளை அவரதுகுணம் † இங்கிதம் * ஆசாரம்செயல்-'என்பவைகளால் அறிந்து அவ்வுபாயங்களுள் ஒ ன்றாலே காத்தலும் ஆம். ஆகவே புரோகிதரையும்-மந்திரிகளையும் சொல்லியபடியாயிற்று. [இவையிரண்டுபாட்டாலும் பெரியோரது இலக்கணமும் அவரைத்துணையாகக் கொள்ளவேண்டுமென்பதும், கொள்ளும்விதமும், சொல்லப்பட்டன.] (௨)

அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்……………… *
பேணித் தமராக் கொளல்…………… ………… *

(இ-ள்.) பெரியாரை-பேரறிவுடையவர்களை-பேணி- அவர்மகிழ

† மகிழத்தக்கவை நன்குமதிக்குமுதலானவை.
† இங்கிதம் குறிப்பால் நிகழும் உறுப்பினதுதொழில்.
* ஆசாரம்- குறிப்பின்றி நிகழும்வேறுபாடு.

த்தக்கவைகளைச்செய்து- தமரா- தமக்குச்சிறந்தவராக- கொளல்- கொள்ளுதல்|- (அரசர்க்கு)-அரியவற்றுளெல்லாம்- அரியபேறுகள் பலவினும்- அரிதே- அரிது. எ,று.) (கருத்து) பெரியோரைச் சிநே கித்த லரசன் பெறும்பேறுகள் பலவினு மிதுபெரியதாம் என்பதா ம். ❋ உலகத்திலே அரியவையெல்லாம் பெறுதற்குரிய அரசர்க்கு இப்பேறு சிறந்ததென்றது இதனால் அவையெல்லாம் உண்டாதலைக் குறித்தென்க. (௩)

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்.....................*
வன்மையு ளெல்லாந் தலை.................................*

(இ-ள்.) தம்மிற்பெரியார்- (அறிவுமுதலானவைகளாலே) தம்மி ன்மிகுந்தவர்-தமரா- தமக்குச்சிறந்தவராக-ஒழுகுதல்- (தாம்அவர் வழியிலேநின்று) நடத்தல்|-(அரசர்க்கு)-வன்மையுளெல்லாம்-வலியு டைமைபலவினும்-தலை-முதன்மையாம். எ,று.) (கருத்து) தம்மை விடப்பெரியோரைச்சிநேகித்து நடத்த லரசன்வல்லமை பலவினுள் ளுந் தலைமையாம் என்பதாம். ❋ இப்பெரியார் பொருள் படையர ண்களால் நிக்கக் கூடாதவையாகிய தெய்வத்தால்வருந் துன்பமுதலா னவைகளையும் நீக்குதற்கு உரியவராகலால் அவைகளாலாகிய வலியி னும் இத்துணைவலி சிறந்ததெனப்பட்டது. (௪)

சூழ்வார் கண்ணாக வொழுகலான்
மன்னவன்.............. *

சூழ்வாரைச் சூழ்ந்து
கொளல்..................................*

(இ-ள்.) சூழ்வார்-மந்திரிகளை}-கண்ணாக-கண்ணாகக்கொண்டு-ஒழுகலால்-(தன்பாரம்) நடத்தலால்-மன்னவன்-அரசன்|- சூழ்வாரை-அப்படிப்பட்டமந்திரிகளை}-சூழ்ந்து-ஆராய்ந்து-கொளல்-(தனக்குத் துணையாக க்) கொள்ளக்கடவன். எ,று.) (கருத்து) மந்திரிகளை க்கொண்டு பூமிபாரநடத்தலா லம்மந்திரிகளை யரசன் துணையாகக் கொள்ளவேண்டும் என்பதாம். ❋ தானே ஆராயவல்லவனாயிருந்தா லும் அளவில்லாத தொழில்களால் வருத்தமடையு மரசனது பார மவ்வாராய்தலொன்றே தொழிலாகிய மந்திரிகளால் அல்லாமல் இனிது நடவாமைபற்றி அவரைக்கண்ணாக்கிச் சொல்லினர். ஆராய்தல் அமைச்சியலிலே சொல்லப்படுகிற இலக்கண முள்ளவரென்பதனை ஆ ராய் த ல். [இவைமூன்றுபாட்டாலும் பெரியாரைத்துணைக்கோள் ளு த லின் சிறப்புச்சொல்லப்பட்ட து]

(ரு) சுரு-ஆம்-அதி-பெரியாரைத்துணைக்கோடல்.

(ஶஅரு)

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்........... *
செற்றார் செயக்கிடந்த தில் .... *

(இ-ள்.) தக்காரினத்தனாய்-யோக்கியராகிய இனத்தினையுடையவனா கி-தானொழுக-தானும் (அறிந்து) நடக்க-வல்லானை-வல்லவரசனை}- செற்றார்-பகைவர்-செயக்கிடந்தது-செய்யக்கிடந்த ஒருதுன்பமு ம்;-இல்-இல்லை. எ-று.) (கருத்து) பெரியோரினத்தை யுடையவனாக த்தானடக்கவல்ல வரசனைப் பகைவர் செயிக்கக்கூடாது என்பதாம் ❋ தக்கார்-அறிவொழுக்கங்களாலே தகுதியுடையவர். ஒழுகுதல்-அ றநீதிகளின்வழி தவறாது நடத்தல். வஞ்சித்தல்-கூடினவரைப்பிரித் தல்-வேறுபகைவிளைத்தல்-என்கிற இவைகளாலும், வலிமையாலும் பகைவர்செய்யுந் துன்பங்கள் பலவகைப்பட்டிருப்பினும்-தானும் அறிந்து அறிந்தோரது சொல்லையுங்கேட்டு நடக்கையால்-அத்து ன்பங்களிலே ஒன்றும் வாராதென்றற்கு- செற்றார் ல்லென்றார்.

செயக்கிடந்த தி

(கா)

இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே.................. *
கெடுக்குந் தகைமை யவர்................................. *

(இ-ள்.) (தீயவைகளைக்கண்டால்) -இடிக்கும் - கோபித்துப்புத்தி சொல்லும்-துணையாரை- துணையாந்தன்மையையுடையவரை-ஆள்வாரை-(இவர்நமக்குச்சிறந்தவரென்றுகொண்டு)ஆளுகிறஅரசனை-கெடுக்குந்தகைமையவர்-கெடுக்கும்பெருமையையுடைய பகைவர்-யார்-(உலகத்தில்)யாவர். எ-று. (கருத்து)நன்மந்திரிகளைத் துணையாகக்கொண்டு அரசாளுமரசனைக் கெடுக்கும் பகைவரில்லை என்பதாம். ❋ தீயவை-பாவங்களும், நீதியல்லாதவையும்,- துணையாந்தன்மையாவது- தமக்கு அவையில்லாமையும், அரசனிடத்து அன்புடையவராயிருக்கையும், ஆம். அப்படிப்பட்டவர்-நல்வழியினீங்கவிடாமையால்- அவரையாளுமரசர்- ஒருவராலும் கெடுக்கப்படாரென்பதாம். ஏ-அசை [இவையிரண்டு பாட்டாலும் அதன்பயன் சொல்லப்பட்டது.] (எ)

இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்.... .... ❋
கெடுப்பா ரிலானுங் கெடும்.......................... ...❋

(இ-ள்.) இடிப்பாரை-கண்டித்துப்புத்திசொல்வாரை-இல்லாத-(தனக்குத்துணையாகக்) கொள்ளாத-ஏமரா- காவலற்ற-மன்னன்-இ

(௱அகூ)

சகூ-ஆம்-அதி-பெரியாரைத்துணைக்கோடல்.

ரசன்| கெடுப்பாரிலானும்- (பகையாகக்) கெடுப்பவர் இல்லாதிருந்தாலும்-கெடும்- (தானே)கெடுவான். எ-று) (கருத்து) புத்திசொல்லுமந்திரிகளைப் பெற்றிலாவரசன் கெடுக்கும்பகைவரில்லாமற்கெடுவான் என்பதாம். ❋ கெடுப்பார் உண்டாயிருப்பாரென்பதுதோன்ற-இலானுமென்றார். தானேகெடுதலாவது- பாகனில்லாத யானைபோல்- வழியல்லாத வழியிலேசென்று கெடுதல், (அ)

முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்................❋
சார்பிலார்க் கில்லை நிலை....................❋

(இ-ள்.) முதலிலார்க்கு-முதற்பொருளில்லாதசெட்டிகளுக்கு-ஊதியம்-(அதனால்வருகிற) லாபமானது|-இல்லை-இல்லை.-(அதுபோல்) -மதலையாம்-(தம்மைத்) தாங்குவதாகிய- சார்பிலார்க்கு- துணையில்லாதஅரசர்க்கு-நிலை-(அதனால்வருகிற) நிலையானது|- இல்லை-இல்லை. எ-று.) (கருத்து) முதற்பொருளில்லாதவர்க்கு இலாபமில்லை. அதுபோல மந்திரிக ளில்லாதவரசனுக்குத் துணையில்லை என்பதாம். ❋ எப்படி முதலைக்கொண்டே இலாபம் பெறவேண்டுமோ அப்படியே தாங்குவாரைக்கொண்டே நிலைபெறவேண்டுமென்பதாம். நிலை-அரசர் தமது அரசாட்சியின் பாரத்தோடு அசையாது நிற்கை. (கூ)

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே...........❋
நல்லார் தொடர்கை விடல்...
.................................❋

(இ-ள்.) (அரசன்)-நல்லார்- பெரியவரோடு- தொடர்கைவிடல்-ந ட்புக்கொள்ளாதுவிடுதல்|- (தான்தனியனு யிருந்துகொண்டு) -பல் லார்-பலரோடும்- பகைகொளலின்-விரோதங்கொள்ளுதலினும்-பத் தடுத்த-பத்துப்பங்கு அடுத்த-தீமைத்தே- தீமையையுடையதேயா ம். எ-று.) (கருத்து) அரசன் பெரியோர் சிநேகத்தை விடுதல் பல பேர்பகைகொள்ளுதலினும் பத்துப்பங்கு தீமையுடையதாம் என் பதாம். ❋ பலர்பகையாய் ஒருமுகமாயெதிர்த்தகாலத்து ஒருவிதத் தாலே பிழைத்தல்கூடினுங் கூடும் பெரியோர்நட்பைவிட்டால்ஒரு விதத்தாலும் பிழைத்தல்- கூடாமையால் இதுசெய்தல் அதனினும் தீதென்பதாம். [இவைமூன்றுபாட்டாலும் அதுசெய்யாதவிடத்து உண்டாகுங் குற்றம் சொல்லப்பட்டது.] (ய)

சகூ-ஆம்-அதி-சிற்றினஞ்சேராமை.

அஃதாவது- சிறியவினத்தைப் பொருந்தாமை. சிறியவினமாவது- நல்லதிலே நன்மையும் தீயதிலே தீமையும் இல்லையென்போ ரும், விடரும், தூர்த்தரும், முதலாயினகூட்டம். அறிவை வேறுபடுத்திஇருமையும்கெடுக்குமியல்யினதாகிய இதனைப் பொருந்தினல் பெரியாரைத் துணை க்கோடல் பயனில்லை யென்பது அறிவி த்தற்கு.இது அதன்பின் வைக்கப்பட்டது.

சிற்றினமஞ்சும் பெருமை சிறுமைதான்.........✽
சுற்றமாச் சூழ்ந்து விடும்.........✽

(இ-ள்.) பெருமை-பெரியோரியல்பு-சிற்றினம்-சிறியவினத்தை-அஞ்சும்-அஞ்சுதல்செய்யும்- சிறுமைதான்- மற்றைச் சிறியோரியல்பு-(அதுசேர்ந்தபொழுதே)-சுற்றமா- (தனக்கு) உறவாக- சூழ்ந்துவிடும் -எண்ணித்துணியும். எ-று.) (கருத்து) பெரியோரியல்பு சிறியவினத்திற்கஞ்சும். சிறியோரியல்பு சிறியவினத்தைச் சுற்றமாகக்கொள்ளும் என்பதாம். ✽ தம்மறிவு வேறுபடும்விதமும் அதனால் தமக்குவரும் துன்பமும் நோக்கலால் அறிவுடையார் அஞ்சுவரொன்றும், அறிவு ஒற்றுமைப்பட்டு நிற்கையால் வேறுநோக்காமையால் அறிவில்லாதவர் தமக்குச் சுற்றமாகத் துணிவரொன்றும், சொல்லினர். பெரியோரும் சிறியோரும் ஆன குணத்தோரது அஞ்சுதலும் அஞ்சாமையுமாகிய தொழில்கள் பெருமையுஞ் சிறுமையும் ஆகியகுணங்களின்மேல் ஏற்றிச்சொல்லப்பட்டன. [இதனால் சிற்றினம் பெரியோர்க்கு ஆகாதென்பது சொல்லப்பட்டது.] (க)

நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்.........✽
கினத்தியல்ப தாகு மறிவு.........✽

(இ-ள்) நீர்-நீரானது-நிலத்து- (தான்சேர்ந்த) நிலத்தினது-இயல்பான்-இயல்பினாலே-திரிந்து- (தனது) தன்மைவேறுபட்டு - அற்றாகும்-அந்நிலத்தினது தன்மையதாகும்.- (அதுபோல்) -மாந்தர்க்கு-மனிதர்க்கு- அறிவு-அறிவானது-இனத்து-(தாம்சேர்ந்த) இனத்தினது-இயல்பு-இயல்பினாலே-(திரிந்து)-தனதுதன்மைவேறுபட்டு —அதாகும்- அவ்வினத்தினது தன்மையதாகும். எ-று.) (கருத்து)

நிலத்தினியல்பினாலே நீர்திரிந்தாற்போலும் அவரவர் சேர்ந்தவினத்தினாலே அறிவுதிரியும் என்பதாம். ❋ [ஆகாயத்திலே தன்றன்மையதாயிருந்த நீருக்கு நிலத்தோடுசேர்ந்த விடத்து நிறஞ் சுவைமுதலாகிய குணங்கள்போல் தனித்திருக்கைகயிலே தன்றன்மையதாயிருந்த அறிவுக்குப் பிறவினத்தோடு சேர்ந்தவிடத்துக் காட்சிமுதலாகிய தொழில்கள் வேறுபடுமென்று இதனால் அதனது காரணம் சொல்லப்பட்டது. (௨)

மனத்தானா மாந்தர்க் குணர்ச்சி யினத்தானா ……………………❋
இன்னா னெனப்படுஞ் சொல்……………………………………❋

(இ-ள்.) மாந்தர்க்கு-மனிதர்க்கு-உணர்ச்சி- பொதுவறிவானது|- மனத்தான்- (தம்) மனத்தினாலே- ஆம்-உண்டாகும்.- இன்னனெனப்படும்-(இவன்) இப்படிப்பட்டவனென்று (உலகத்தாராலே) சொல்லப்படுகிற- சொல்-சொல்லானது|- இனத்தான்- இனத்தினாலே-ஆம்-உண்டாகும். எ-று.) (கருத்து) மனத்தினாலேயறிவுண்டாம் அது போல ஒருவன் சேர்ந்தவினத்தினாலே யின்னனென் றெண்ணப்படுவான் என்பதாம். ❋ இயற்கையாகிய ஐம்புலவறிவுமாத்திரத்துக்கு இனம் வேண்டாமையால்-அதனை மனத்தானாமென்றும், செயற்கையாகிய சிறப்பறிவுபற்றி -நல்லவனென்றாவது தீயவனென்றாவது உண்டாகுஞ் சொல்லுக்கு இனம்வேண்டுதலால் - அதனை இனத்தானாமென்றும், சொல்லினர். உபமானபிரமாணத்தை அங்கீகரியாமல் அவ்வறிவு வேறுபாடும் மனத்தாலா மென்பாரைநோக்கி இதனால் அது மறுத்துக்கூறப்பட்டது. (௩)

மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்……………………❋

இனத்துள தாகு
மறிவு......................................*

(இ-ள்.) அறிவு-அச்சிறப்பறிவு-ஒருவற்கு-ஒருவனுக்கு-மனத்து-மனத்தினிடத்து-உளதுபோல-(அப்போதே) உண்டாவதுபோல்-காட்டி-(தன்னைக்)காட்டி-இனத்து-(அவன்சேர்ந்த) இனத்தினிடத்தே-உளதாகும்-உண்டாகும். எ-று.) (கருத்து) ஒருவனுக்கறிவானது அவன்சேர்ந்த வினத்தினாலாகும் என்பதாம். ❊ மெய்ம்மை நோக்குதற்கு முன்னே மனத்துள்ளதுபோலக் காட்டியும், பின்னோக்கிய விடத்தே பழகிய இனத்துள்ளதாகியும் இருக்கையால்- காட்டி என விறந்தகாலத்தினாலேசொல்லினார். [சிறப்பறிவும்மனத்தினிடத்து அப்போதேஉண்டாவதென்பவனாநோக்கி அங்கேவெளிப்படுமளவே யுள்ளது அதற்குமூலம்இனமென்பதுஇதனாலேசொல்லப்பட்டது.]

சகரு-ஆம்-அதி-சிற்றினஞ்சேராமை
(ாஅகூ)

மனந்தூய்மை செய்வினை தூய்மை
யிரண்டு................*
மினந்தூய்மை தூவா வரும்..............
..........................*

(இ-ள்.) மனம்-(அச்சிறப்பறிவு வெளிப்படுதற்கு இடமாகிய)மனம்-தூய்மை-பரிசுத்தனாகைதன்மையும்-செய்வினை-செய்தொ

மில்- தூய்மை-பரிசுத்தனாகைத்தன்மையும்ஆகிய- இரண்டும்-இவ்வி ரண்டும்|- இனம்- (சேர்ந்த) வினம்- தூய்மை- பரிசுத்தனாகைத்தன் மை- துாவா-பற்றுக்கோடாக- வரும்-உண்டாகும். எ,று.) (கருத்து) மனப்பரிசுத்தமுஞ், செய்வினைப்பரிசுத்தமும், சேர்ந்தவினத்தாலா கும் என்பதாம். ❋ மனந்தூயனாதலாவது- சிறப்பறிவு வெளிப்படு ம்படி இயற்கையாகிய அறியாமையி னீங்குதல். செய்வினை தூயனா தலாவதுமனோவாக்குக்களாலேசெய்யப்படுகிறநல்லதொழிலையுடை யவனாகுதல். [ஒருவன் பரிசுத்தவினத்தனாகவே அவ்வினத்தோடு ப ழக்கவசத்தால் பரிசுத்தமனத்தனாகி அம்மனதினிடத்தே சிறப்பறி வுதோன்ற அதனால் பரிசுத்தமான சொல்லும் செயலும் உடையனா வனென்று இதனால் இனத்தில் உள்ளதாம்விதம்சொல்லப்பட்டது.]

மனந்தூயார்க் கெச்ச நன்றாகு மினந்தூயார்க்............. ❋
இல்லைநன் றாகா வினை...

....❋

(இ-ள்.) மனந்தூயார்க்கு- மனது பரிசுத்தமானவர்க்கு-எச்சம்-ம க்கட்பேறு|-நன்றாகும்- நன்றாகவிளங்கும் - இனந்தூயார்க்கு-இன ம்பரிசுத்தமானவர்க்கு-நன்றாகாவினை-நன்றாகாதசெயல்|—இல்லை- (யாதும்) இல்லை. எ,று.) (கருத்து) மனஞ்சுத்தமுள்ளவர்க்கு மக்கட் பேறுநன்றாகும். இனம்பரிசுத்தமுள்ளவர்க்குநன்மையில்லாச்செய லில்லை என்பதாம். ❋ காரணத்திலே எந்தக்குணம் உள்ளதுஅதுகா ரியத்திலிடத்தும் உண்டாமாதலால் தந்தைகுணம் மைந்தனிடத்தி லும் உண்டாமென்பதுபற்றி - எச்சநன்றாகுமென்றும். நல்வினத் தோடு எண்ணிச்செய்யப்படுதலால்- இல்லை நன்றாகாவினையென்று ம்,சொல்லினர். (௬)

மனநல மன்னுயிர்க் காக்க மினநல.......... ....
..........*
மெல்லாப் புகழுந் தரும் ....
...................*

(இ-ள்.) மன்னுயிர்க்கு- நிலைபெற்றவுயிர்களுக்கு- மனநலம்-மனத்தினது நன்மையானது|- ஆக்கம்-செல்வத்தை}- (தரும்) -இனநலம்-இனத்தினதுநன்மையானது|- எல்லாப்புகழும்-(அதனோடு) எல்லாப்புகழ்களையும்}- தரும்-கொடுக்கும். எ-று.) (கருத்து) மனத்தி

[சஅ]

(௱௪௯ ம)

௪௬-ஆம்-அதி-சிற்றினஞ்சேராமை.

னன்மை செல்வத்தைத்தரும். இனத்தினன்மை புகழைத்தரும் என்பதாம். ❋ மனது நன்றாகுகை தானே அறமாகலால் அதனை ஆக்கந்தருமென்றும், புகழ்கொடுத்தற்குரிய நல்லோர்தாமே இனமாகலால்-இனநல மெல்லாப்புகழுந்தருமென்றும், சொல்கிறார். [முன்னே மனநன்மை இனநன்மையதீதி வருமென்பதனை உட்கொண்டு அதை இயல்பாகவே யுடையார்க்கு இவ்வினநன்மை வேண்டாமென்பாரை நோக்கி அதுவேயல்லாமல் அப்படிப்பட்டபலவும் தருமென்று அவர்க்கும் இதுவேண்டுமென்பது இவ்விரண்டுபாட்டாலும் சொல்லப்பட்டது] (எ)

மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க் ....*
கினநல மேமாப் புடைத்து. ....
.........................*

(இ-ள்.) மனநலம்-மனநன்மையை- நன்கு-(முன்னை) நல்வினையினாலே உடையராயினும்- (தாமே) உடையவராயிருந்தாலும் - சான்றோர்க்கு-நிறைந்தோர்க்கு-இனநலம்- இனநன்மையானது|-ஏமாப்பு-(அதற்கு) வலிமையாதலை- உடைத்து- உடையது. எ,று.) (கருத்து) மனநன்மையுடையவராலும் பெரியோர்க்கு இனநன்மை யுறுதியுடையதாம் என்பதாம். ❋ அந்நல்வினை உள்ளவிடத்தும் மனநலத்தை வளர்த்துவருதலால் அதற்குவலியாத லுடைத்தாயிற்று.

மனநலத்தி னாகு மறுமைமற் றஃது.................... ......❋
மினநலத்தி
னேமாப் புடைத்து.................................❋

(இ-ள்.) (ஒருவனுக்கு)-மனநலத்தின்-மனநன்மையால்-மறுமை-வருபிறப்பின்பம்|-ஆகும்-உண்டாம் - மற்றஃதும்-அதற்கு அச்சிறப்புத்தானும்|- இனநலத்தின்- இனநன்மையால்-ஏமாப்பு- வலிமைபெறுதலை-உடைத்து- உடையது. எ,று.) (கருத்து) ஒருவனுக்குமனநன்மையால் வருபிறப்பின்பமுண்டாம்,இனநன்மையால்வலிமையுண்டாம் என்பதாம். ❋ மனநலத்தினாகு மறுமையென்பது- மறுமையைத்தருவது மனநன்மையே வேறொன்று அன்று என்கிறமதத்தை உடன்பட்டுச் சொல்லியபடி. [இலவேளைகளிலே தமோகுணத்தினாலே மனநலம் வேறுபட்டாலும் நல்லினம் திருத்தி மறுமையின்பத்தைத் தருவிக்குமென்று அது நிலைபெறச்செய்யுமாறு இதனாலே சொல்லப்பட்டது.] இவைஐந்துபாட்டாலும் சிற்றினஞ் சேராமையினது சிறப்பு நல்லினம் சேர்தலாகிய எதிர்மறைமுகத்தினாலே சொல்லியபடி அறிக. (௬)

௪௬-ஆம்-அதி-சிற்றினஞ்சேராமை.

(௱௬௧)

நல்வினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி........... *
னல்லற் படுப்பதூஉ மில்.......................... *

(இ-ள்.) (ஒருவனுக்கு)- நல்லினத்தினூங்கு-நல்லவினத்தின்மிகுந்த-துணையும்- சகாயமும்!-இல்லை-இல்லை- தீயினத்தி(னூங்கு)-தீயவினத்தின்மிகுந்த- அல்லற்படுப்பதூஉம்- துன்பந்தரும்பகையும்!— இல்-இல்லை. எ,று.) (கருத்து) ஒருவனுக்கு நல்லவினத்தின் மிகுந்த துணையில்லை. தீயவினத்தில் மிகுந்தகேடில்லை என்பதாம். ※ ஊங்குபின்னும் கூட்டப்பட்டது. நல்லினம் அறியாமையை நீக்கித்துயரப்படாமல் காத்தலால்- அதனைத்துணையென்றும், தீயினம் அறிவை நீக்கித் துயரப்படச்செய்தலால் அதனைப் பகையென்றும், சொல்லினர். [இதனால் விதியும் எதிர்மறையும் சேர்த்துச்சொல்லப்பட்டன.

சஎ-ஆம்-அதி-தெரிந்துசெயல்வகை.

அஃதாவது-அரசன் தான்செய்யுந் தொழில்களை ஆராய்ந்து செய்யுந்திறம். அச்செயல் பெரியாரைத் துணைக்கொள்ளுதல் பயனுடைத்தாயவிடத்து அவருடன்செய்யப்படுவதாகலால் இதுசிற்றினஞ் சேராமையின்பின் வைக்கப்பட்டது.

அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு........... *
மூதியமுஞ் சூழ்ந்து செயல்...................... *

(இ-ள்.) (தொழில்செய்யுமிடத்து)-அழிவதூஉம்-(அப்போது அதனால்) அழிவதையும்- ஆவதூஉம்- (அழிந்தால்பின்னே) ஆவதையும்-ஆகி-ஆய்நின்று-வழியயக்கும்- பிற்காலத்துத்தரும்-ஊதியமும்-இலாபத்தையும்-சூழ்ந்து-ஆராய்ந்து- (உறுவதாயின்) -செயல்-செய்யக்கடவன். எ,று.) (கருத்து) ஒருவனழிவதையு மாவதையு மிலாபத்தையுமாராய்ந்து தொழில்செய்யக்கடவன் என்பதாம். ❀ உறுதலாவது-செய்கிறபோது அழிவதின் ஆவதுமிகுந்து பிற்காலத்தும்வளர்ந்துவருதல். அழிவதில்லாமையால் பின்வரும் ஆக்கத்தைஊதியமென்றூர். எனவே அவ்வூதியம் பெற்றூல் செய்யும்போது அழிவதும் ஆவதும் ஒத்திருந்தாலும் விடலாகாதென்றதாயிற்று.இரண்டுகாலத்திலும் பயனுடைமை தெரிந்துசெய்யவேண்டுமென்பதாம்.

(௪௬௧)

௪எ-ஆம்-அதி-தெரிந்துசெயல்வகை;

தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்....❀
கரும்பொருள் யாதொன்று மில்.................... ❀

(இ-ள்.) தெரிந்த- (தம்மாலே) தெரிந்துகொள்ளப்பட்ட- இனத்தொடு-இனத்துடனே- தேர்ந்து- (செய்யத்தகுந்தொழிலை) ஆராய்ந்து-எண்ணி- (பின்னேதாமேயும்) எண்ணி-செய்வார்க்கு செய்து முடிக்கவல்ல அரசருக்கு-அரும்பொருள்-பெறுதற்கரியபொருள் | -யாதொன்றும்-யாதொன்றும்- இல்-இல்லை. எ-று.) (கருத்து) நல்வினைத்தோடாராய்ந்து செய்யு மரசர்க்குப்பெறுதற்கரியபொருளொன்றுமில்லை என்பதாம். ❋ தொழிலாவது- போர்க்குச் செல்லுகை முதல் வெல்லுகை முடிவாகியதொழில்.—பொருள்களுக்கு ஏதுவாகிய வதனில் தவறுமையால்அரியபொருள்களெல்லாம் எளிதிலேபெறுவாரென்பதாம். [இவையிரண்டுபாட்டாலும் செய்யத்தகுந்தொழிலும் அதுசெய்யும் விதமும் சொல்லப்பட்டன.] (௨)

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை................ ❋
ளூக்கா ரறிவுடை யார்................................ ❋

(இ-ள்.) ஆக்கங்கருதி- (பின்பெறக்கடவதாகிய)லாபத்தைநோக்கி-முதல்-(முன்பெற்றுள்ள) முதலையும்-இழக்கும்-இழத்தற்கு ஏதுவாகிய-செய்வினை-தொழிலை-அறிவுடையார்- விவேகமுள்ளவர்,— ஊக்கார்-மேற்கொள்ளார். எ-று.) (கருத்து) அறிவுடையோர் இலாபத்தை நினைத்து முதலிழக்குந் தொழிலைச்செய்யார் என்பதாம். ❋ ஆக்கமேயன்றி முதலிழக்குந் தொழில்களாவன- வலியும் காலமும் இடமும் அறியாமல் பிறர்தேசத்தைப் பிடிக்கப்போய்த் தந்தேசத்தையும் இழத்தல்போல்வன. உம்மை வருவிக்கப்பட்டது முன்செய்துவந்த வினையாயினு மென்றற்குச் செய்வினையென்றார். (௩)

தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு................ ❋
மேதப்பா டஞ்சு பவர்................................ ❋

(இ-ள்.) இளிவென்னும்- (தமக்கு) இளிவரவென்னும்-ஏதப்பாடு-குற்றமுண்டாதலை}- அஞ்சுபவர்-அஞ்சுவோர்|-தெளிவிலதனை-(இனத்தோடும் தனித்தும் ஆராய்ந்து) துணியப்படாத தொழிலை}—-தொடங்கார்-தொடங்கமாட்டார். எ-று.) (கருத்து) குற்றத்திற்கஞ்சும்பெரியோர் துணியப்படாத தொழிலைச்செய்யாரென்பதாம்.❋ தொடங்கிஞல் நடுவிலேயும் மடங்குதல் கூடாமையால் தொடங்கா

சஎ-ஆம்-அதி-தெரிந்துசெயல்வகை.

(ாகூக)

மொன்றார். இளிவாவு- அத்தொழிலால் பின்னே அழிவை அடைந்தவிடத்து அதன்மேலும் அறிவும் மானமும் இலமொன்று உலகத்தார் இகழுமிகழ்ச்சியாம். அது நிச்சயமாகவே உண்டாமாதலால் தெளிவுள்ளவிடத்துத் தொடங்குகவென்பதாம்.

(சு)

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்............ ❋
பாத்திப் படுப்பதோ ராறு......... .... ❋

(இ-ள்.) வகை- (சென்றால் நடக்கும்) விதங்களையெல்லாம்- அறச்சூழாது-முற்றவெண்ணாமல் [இலவெண்ணிய வளவிலென்றயடி]-எழுதல்-(அரசன்பகைவர்மேலே) செல்லுதல்|- பகைவரை- அப்பகைவரை}-பாத்தி-வளருநிலத்திலே-படுப்பது-நிலைபெறச்செய்வது-ஓராறு-ஒருவழியாம். எ-று.) (கருத்து) அரசன்யோசியாமற்பகைவர்மேற்செல்லப் பகைவரை நிலைபெறச்செய்தலாம் என்பதாம் ❋

வகையாவன-வலிகாலம் இடம்என்கிற இவைகளால்தனக்கும் பகை வர்க்கும்- உண்டாகிய நிலைமைகளும், தொழிலைத் தொடங்கும்வித மும், அதற்குவரும் இடையூறுகளும், அவைகளை நீக்கும்விதமும், அ வரைவெல்லும்விதமும், அதனாலே பெறும்பயனும், முதலானவை. சில குறைந்தாலும் பகைவர்க்கு இடமாம் ஆதலால் முற்றுப்பெறஎ ண்ணவேண்டுமென்பதாம். இவைமூன்று பாட்டாலும் விடத்தகுந் தொழிலும்விடாதவிடத்துஉண்டாம்இழுக்கும், சொல்லப்பட்டன.]

செய்தக்க வல்ல செயக்கெடுஞ்

செய்தக்க........ .... *

செய்யாமை யானுங் கெடும்.......... ....

...........*

(இ-ள்.) (அரசன் தனது தொழில்களிலே)-செய்தக்கவல்ல- செய் யத்தகாதவைகளை}-செய-செய்ய-கெடும்-கெடுவான்- (இனி அதனா லே மாத்திரமல்லாமல்) செய்தக்க-செய்யத்தக்கவைகளை}-செய்யா மையானும்- செய்யாமையினாலும் -கெடும்-கெடுவான். எ,று.) (க ருத்து) அரசன் செய்யத்தகாதவற்றைச் செய்தலாலும் செய்யத்த க்கவற்றைச் செய்யாமையாலும் கெடுவான் என்பதாம். ❋ செயத் தகாதவை-பெருமுயற் சியையுடையவையும்-செய்த ாற்பயனில்லாத வையும், பயன்சிறிதானவையும், ஐயமானவையும், பின்னேதுயரம் விளைப்பவையும், ஆம் —செய்யத்த க்கவை — முன்சொல்லப்பட்ட வைகளுக்கு எதிரானவை.- இனிச்செய்தல் செய்யாமைகளால் அறி

வு ஆண்மை பெருமை என்கிற மூவகைப்பட்ட ஆற்றல்களிலே-பொருளும் படையும் எனவிருவகைப்பட்ட பெருமையானது சுருங்கிப் பகைவர்க்கு எளியவனாவான் ஆதலால் இரண்டும் கேட்டிற்கு ஏது

- [சக]

(ரகூ ச)

சஎ-ஆம்-அதி-தெரிந்துசெயல்வகை.

வாயின. [இதனால் செய்யத்தக்கவைகளைச்செய்து விடத்தக்கவைக் களைவிடுகவென்று இருவகையும் உடன்சொல்லப்பட்டன.] (ள)

எண்ணித் துணிக கருமத் துணிந்தபி....
.... *
னெண்ணுவ மென்ப திழுக்கு.................... ....
.........*

(இ-ள்.) கருமம்-(செயத்தக்க) தொழிலை-எண்ணி-(முடிக்குமுபாயமாக) எண்ணி-துணிக - தொடங்கக்கடவன்.— துணிந்தபின்-தொடங்கியபின்-எண்ணுவம்-எண்ணக்கடவோமென்பது-இழுக்கு-குற்றமாகலால். எ,று.) (கருத்து) இராசன் செய்தொழிலை முடிக்குமுபாயமாகவெண்ணிச்செய்யக்கடவன். தொடங்கியபின்னெண்ணுதல் குற்றம் என்பதாம். ❋ உபாயமாவது-கொடுத்தல்- இன்சொற்சொல்லல்-வேறுபடுத்தல்-ஒறுத்தல்-என்பன. இவற்றை வடநூலார்-தானம்-சாமம்-பேதம்-தண்டம்- என்பர், இவையெல்லாம் எண்ணுதுதொடங்கில் அத்தொழில் பகைவரால் விலக்கப்பட்டுமுடியாமையாலும், நடுவே விடுதல் கூடாமையாலும், அரசன்பின் துயரப்படுவானாதலால் இழுக்கென்றார். செயத்தக்கவையும் உபாயம் அறிந்து தொடங்கவேண்டுமென்பதாம். (எ)

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று.............................❋
போற்றினும் பொத்துப் படும்.......... ....❋

(இ-ள்.) ஆற்றின்-முடியுமுபாயத்தால்-வருந்தாவருத்தம்-(கருமத்தைக்குறித்து)வருந்தாதமுயற்சியானது-பலர்நின்று-(துணைவர்) பலர்நின்று- போற்றினும்-(குற்றப்படாமல்) காப்பினும்- பொத்துப்படும்- குற்றப்படும். எ,று.) (கருத்து) முடியுமுபாயத்தால்வருந்தாமுயற்சியானது பலர்காத்தாலுங் குற்றப்படும் என்பதாம். ❋ முடியுமுபாயத்தாலே முயலலாவது- பொருளாசைக்காரனிடத்தே கொடுத்தலையும், நடுநிலையாளன்- சோம்பலாளன்- பிறரோடு போர்செய்துநொந்தவன்- இவரிடத்தே இன்சொல்லையும், துணைப்படையாளன்- தன்பகுதியோடு பொருந்தாதவன்- இவரிடத்தேவேறுபடுத்தலையும், இவைகளின்வழி வாராதவிடத்து இவரிடத்தேயும்- நம்புக்கூடாத கீழ்மக்களிடத்தேயும்- ஒறுத்தலையும், செய்துவெல்லும்வழியால் முயற்சிசெய்தலாம்.-குற்றப்படுதல் - நன்மையைத்தாராது தீமையைத்தருதல். உபாயத்தின் சிறப்புச்சொல்லியபடி. (அ)

நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்.......... ....❋
பண்பறிந் தாற்றாக் கடை....................................❋

(ஈகரு)

(இ-ள்.) (வேற்றரசரிடத்து)-நன்று- நல்லவுபாயத்தை}-ஆற்றலுள்ளும்-செய்தலுள்ளும்-தவறு-குற்றம்|-உண்டு-உண்டாம்-அவரவர்-அவரவருடைய-பண்பு-குணங்களை}-அறிந்து-(ஆராய்ந்தறிந்து)—ஆற்றாக்கடை-(அக்குணங்களுக்குஇசையச்)செய்யாவிடத்து. எ-று. (கருத்து) அவரவர் குணங்களையறிந் திசையச் செய்யாவிடில் நன்மைசெய்தலுள்ளுங் குற்றமுண்டாம் என்பதாம். ❋ நல்லவுபாயம்-கொடுத்தலும் இன்சொற்சொல்லலும், ஆம்.—அவரவர்குணங்களை அறிந்துசெய்யாமையாவது- அவைகளுக்கு உரியவரல்லாரிடத்தே செய்தல். தவறு-தொழில் முடியாமை. (க)

எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு .... ❋
கொள்ளாத கொள்ளா துலகு..❋

(இ-ள்.) தம்மொடு- தமது நிலைமையோடு- கொள்ளாத- பொருந்தாதஉபாயங்களை}-(அரசர்தொழில் முடித்தற்பொருட்டுச்செய்வாராயின்)-உலகு-உலகமானது|-கொள்ளாது- அங்கீகரியாது. [இகழுமென்றபடி]—(ஆதலால்)-எள்ளாத- (அவ்வுலகத்தால்) இகழப்படாத உபாயங்களை}-எண்ணி-நாடி-செயல்வேண்டும்-செய்யவேண்டும். எ-று.) (கருத்து) அரசர் பொருந்தாத வுபாயங்களைச்செய்வாரானுலகமேற்றுக்கொள்ளாது என்பதாம். ❋ தமது நிலைமையோடுபொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது- தாம் வலியராயிருந்துகொண்டு மெலியார் செய்தற்குரிய தான சாம பேதங்களைச்செய்தலும், மெலியராயிருந்துகொண்டு வலியார்செய்தற்குரிய தண்டம் செய்தலும், ஆம். இவை அறிவில்லார் செயல்களாதலால்- உலகங்

கொள்ளாதென்றார். [இவைநான்குபாட்டாலும்செய்யப்படும்தொழில்களுக்கு உபாயமும் அதனுரிமையும், சொல்லப்பட்டன.] (௰)

௪௮-ஆம்-அதி-வலியறிதல்.

அஃதாவது-அவ்வுபாயங்களுள் தண்டஞ்செய்யக்குறித்த அரசனுண்வுன் நால்வகை வலிமைகளையும் அளந்து அறிதலாம்.

அதிகாரமுறைமையும் இதனுலே விளங்கும்.

வினைவலியுந் தன்வலியு மாற்றான்
வலியுந்.............................*
துணைவலியுந் தூக் கிச்
செயல்.............................* (௪௭௧)

(இ-ள்.) வினைவலியும்-(தான் செய்யக்கருதிய) தொழிலது வலிமையையும்-தன்வலியும் - (அதனைச்செய்துமுடிக்கும்) தனது வலிமையையும்-மாற்றான்வலியும் (அதனைவிலக்கும்பகைவனது வலிமையையும்-) துணைவலியும்- (இருவர்க்கும்) துணையாவோரது வலிமைகளையும்---தூக்கி-ஆராய்ந்து-(தனது வலிமை மிகுமாயின்)-செயல்-(அத்தொழிலைச்) செய்யக்கடவன். எ-று.] (கருத்து) தொழில்வலிமையையும் தன்வலிமையையும் பகைவன்வலிமையையும் துணைவலிமையையும் ஆராய்ந்து தன்வலிமிகுமாகில் அரசனத்தொழிலைச்செய்யக்கடவன் என்பதாம். ※ இந்நால்வகைவலிகளுள்-தொழில்வலி-கோட்டையை வளைத்தலும்- பிடித்தலும்- முதலாகிய தொழில்களாலும், மற்றவை மூவகை யாற்றல்களாலும், கூட்டிப்பார்த்து ஆராயப்படும்---தன்வலிமை மிகுந்தவிடத்துச் செய்கவென்றதனால் தோற்றல் நிச்சயமாகிய தன்வலிமைக் குறைவினிடத்தும், வெல்லுதல் ஐயமாகிய தன்வலிமையும் அவன்வலிமையும் ஒத்தவிடத்தும், ஒழிகவென்றதாயிற்று. (க)

ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்........................ *
செல்வார்க்குச் செல்லாத தில்.......................*

(இ-ள்.) ஒல்வது-(தமக்குச்) செய்யக்கூடுந்தொழிலையும்- அறிவது-(அதற்கு) அறியவேண்டும்வலியையும்-அறிந்து- தெரிந்து-அதன்கண்-அதனிடத்து- தங்கி-(மனமொழிகளை எப்போதும்)வைத்து -செல்வார்க்கு-(பகையின்மேலே) செல்வார்க்கு-செல்லாதது-முடியாதபொருள்-இல்-இல்லை. எ,று.) (கருத்து) செய்யக்கூடுந்தொழிலையுமறியவேண்டும் வலியையுமறிந்துசெய்யு மரசர்க்கு முடியாத பொருளில்லை என்பதாம். ※ இங்கே அறிவது துணைவலியாம். எல்லாப்பொருள்களையும் எளிதிலே அடைவரென்பதாம்.[இவையிரண்டுபாட்டாலும் வலியின் பகுப்பும், அதனை அறிந்துமேற்செல்வோர் பெரும்பயனும், சொல்லப்பட்டன.] (உ)

உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி.................. *

யிடைக்கண் முரிந்தார்
பலர்........................ ....❋

(இ-ள்.) உடை-(தலைவனுதலை) யுடைய-தம்வலி- தமது வலிமையி னளவை}- அறியார்-தெரிந்துகொள்ளாதவராகி-ஊக்கத்தின் -மன வெழுச்சியால்- ஊக்கி-(தம்மின்வலியவரோடு) போர்செய்யத்தொடங்கி-(அவர்வருத்தலால் அதுசெய்து முடிக்கப்பெறுமல்)-இடை

௪௮-ஆம்-அதி-வலியறிதல்.

(ராகஎ)

க்கண்-நடுவிலே-முரிந்தார்- கெட்டவரசர்|-பலர்- (உலகத்துப்) பலராவர். எ,று.) (கருத்து) தமது வலிமையைத் தெரிந்து கொள்ளாது வலியவரோடு போர்செய்து இடையில் புறங்கொடுத்த வரசர் பலர் என்பதாம். ❋ மூவகையாற்றல்களுள்ளுஞ்சிறப்பினதாகிய அறிவையுடையவர் சிலராதலால் முரிந்தார் பலரென்றார். அதனால் தம்வலிமை அறிந்தே தொடங்குகவென்பது குறைந்துநின்றது. (ரு)

அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை.... ......❋
வியந்தான் விரைந்து கெடும்............. ....❋

(இ-ள்.) ஆங்கு-அயல்வேந்தரிடத்து-அமைந்து- பொருந்தி-ஒழுகான்-நடவாதவனாகியும்-அளவு-(தன்வலி)யளவை}-அறியான்- அறியாதவனாகியும்-தன்னை-தன்னை}-வியந்தான்-மெச்சிக்கொண்டு(அவரோடுபகைத்த) அரசன்|-விரைந்து-விரைவாக-கெடும்-கெடுவான். எ,று.) (கருத்து) தன்வலியினளவையறியாது தன்னைப்புகழ்ந்தவரசன் கெடுவான் என்பதாம். ❋ பகைத்தல் வியத்தலாதலின் வியந்தானென உபசரித்தார். நட்பாய்நடத்தலாவது, வலிமையறிந்து பகை

த்தல். அயல்வேந்தரோடு செயதக்கதா யிருக்க இவையில்லாம ல்தான்மெலியவனாயிருந்துகொண்டு அவரோடுபகைத்தவனுக்கு ஒருபோதும் நிலையில்லாமையால் விரைந்துகெடுமென்றார். [இவையி ரண்டுபாட்டாலும் தன்வலிமை யறியாதவிடத்து உண்டாங்குற்றங் க்குச்சொல்லப்பட்ட து]
(௪)

பீலிபெய் சாகாடு மச்சிறுமப் பண்டஞ் ...
....*
சால மிகுத்துப் பெயின்.................
... .*

(இ-ள்.) பீலி-மயிலிறகை}-பெய்-ஏற்றப்பெற்ற- சாகாடும்- பண்டியும்|-அச்சிறும்-அச்சுமுறியும்.—அப்பண்டம்- அம்மயிலிறகை}-(அதுசுமக்குமளவினல்லாமல்) -சாலமிகுத்து-மிகவும் அதிகப்படுத்தி-பெயின்-ஏற்றினால். எ-று.) (கருத்து) மயிலினிறகை யேற்றப்பட்டபண்டியு மச்சுமுறியும் அவ்விறகையதிகமாகவேற்றினால் என்பதாம். ❋ உம்மை-பண்டியினது வலிமையையும், மயிலிறகினது மெலிமையையும் காட்டிநின்றது.- (எளியவொன்றுபலவோடும் பகைகொள்வோன் தான்வலியவனாயிருந்தாலும் அவர்கூடியவிடத்தேவலியழிவானென்னும்பொருள்பட நிற்கையால்-இது பிறிதுமொழிதலணி) [அதுசெயலாகதென்றனமையின்-இதனால்பகைவன்வலியும் அவன்துணைவலியும் அறியாதவிடத்துப்படுங்குற்றம் சொல்லப்பட்டது. (ரு)
[ரு0]

௩அ-ஆம்-அதி-வலியறிதல். (ஙா
கக)

(இ-ள்.) ஆகாறு-(அரசனுக்குப்பொருள்) வருகின்றவழியானது-அளவு-அளவினாலே-இட்டிதாயினும்- சிறியதாயிருந்தாலும்-கேடு-(அதனாலே)கெடுதல்|-இல்லை- இலலை-போகாறு -போகின்றவழி-(அளவு)-அளவினாலே- அகலாக்கடை-(அதிலும்) விரியாதாயின். எ-று) (கருத்து) அரசனுக்குப் பொருட்செலவு மிகாவிடில் அப்பொருள் வரவுசிறிதாகிலுங் கெடுதியில்லை என்பதாம். ❀ பொருளென்பது-அதிகாரத்தினாலே வருவிக்கப்பட்டது வரவும்செலவும்தம்முள் ஒத்திருந்தாலும் கேடில்லை யென்பதாம், (அ)

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல........
இல்லாகித் தோன்றாக் கெடும்....................

*

*

(இ-ள்.) அளவு-(தனக்குள்ளபொருளி)னளவை}-அறிந்து-தெரிந்து-(அதற்கேற்க)-வாழாதான்-வாழமாட்டாதவனது-வாழ்க்கை-வாழ்க்கைகளானவை|-உளபோல உள்ளவைபோலத் (தோன்றி)-இல்லாகி-(மெய்ம்மையால்) இல்லையாகி- தோன்றா-(பின்பு)அத்தோற்றமும்இல்லாமல்-கெடும்-அழியும். எ-று.) (கருத்து) தனக்குள்ளபொருளளவை யறிந்துவாழாதவன் வாழ்க்கை உள்ளவைபோலத் தோன்றியழியும் என்பதாம். ❀ அவ்வளவிற்கேற்க வாழ்தலாவது- முதலிலே சுருக்கக்கூடாமலிருந்தால் அதற்குச் சமமாகவாவது கொடுத்தும், அனுபவித்தும், வாழ்தல் ஆரம்பத்திலே கேடு வெளிப்படாமையால்உளபோலத் தோன்றி எனப்பட்டது;—முதலினும் செலவுமிகுத்தால் வரும் குற்றம் சொல்லியபடி.] (கூ)

உளவரை தூக்காத வொப்புர
வாண்மை.... ....*

வளவரை வல்லைக் கெடும்

.... ※

(இ-ள்.) உளவரை-(தனக்கு) உள்ளவளவை}- தூக்காத-ஆராயாத -ஒப்புரவாண்மை- உபகாரத்தால்- வளவரை-(ஒருவனது) செல்வத்தினளவு-வல்லைக்கெடும்- விரைவாகக்கெடும், எ,று.) (கருத்து) தனக்குள்ளவற்றை யாராயாத உதவியாலே செல்வத்தளவுகெடும் என்பதாம். ※ உபகாரமேயாயினும் மிதலாகாதெனலாய் இதுவுமது.[இவைநான்குபாட்டாலும் மூவகை ஆற்றலுள் பெருமையின் பகுதியாகிய பொருள்வலியறிதல்- சிறப்புநோக்கி வகுத்துச் சொல்லப்பட்டது.] (௰)

௪௮-ஆம்-அதி-காரம் வலியறிதல்.

அஃதாவது- வலிமையினாலே
மிகுதியுடையவனாய்ப்பகைவன்மேல்
போர்க்குச்செல்லு மரசன் அச்செல்லுதலுக்கு
ஏற்றகாலத்தி
னை அறிதல் அதிகார முறைமையும்

இதனூற்றுனே

விளங்கும். ௭

பகல்வெல்லுங் கூகையைக் காக்கை
யிகல்வெல்லும்....... *
வேந்தர்க்கு வேண்டும் பொழுது........
................*

(இ-ள்.) காக்கை-காகமானது|= கூகையை-(தன்னின் வலியதாகி
ய)கோட்டானை}-பகல்- பகற்பொழுதில்- வெல்லும்- வெல்லும்-(அது போல்)-இகல்-பகைவரை}- வெல்லும்-வெல்லக்கருதுகின்ற -வேந்தர்க்கு-அரசர்க்கு-பொழுது-(அதற்கேற்ற) காலம்|- வேண்டும்- வேண்டும். எ,-று.) (கருத்து) காகங் கோட்டானைப்பகலில்வெல்லும் அதுபோல அரசர் பகைவரை வெல்லக் காலம்வேண்டும் என்பதாம். * காலமல்லாதவிடத்தே வலிமையிருந்தால பயனில்லை யென்பது விளங்கநின்றது. இனிக்கால்மாவது- வெம்மையும் குளிர்ச்சியுஞ்சமமாய் நோய்செய்யாமல் நீரும் உணவுமுதலானவை யடைத்தாய்ச் சேனைவருந்தாமல் செல்லுந்தன்மையதாம். (இது எடுத்துக்காட்டு வமையணி)- [இதனால் காலத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.]

ப ருவத்தோ
டொட்ட வொழுக திருவினைத்......... ......*
தீராமை யார்க்குங் கயிறு...... ....
....*

(இ-ள்.) (அரசன்)-பருவத்தோடொட்ட-காலத்தோடு பொருந்த -ஒழுகல்- (தொழில்செய்து) நடத்தல்|- திருவினை- (ஒருவரிடத்தும் நில்லாது நீங்கும்) செல்வத்தை}- தீராமை-(தன்னிடத்து) நீங்காமல்-ஆர்க்கும்-கட்டுவதாகிய- கயிறு-கயிறாகும். எ-று.) (கருத்து) காலமறிந்து தொழிலைநடத்தல் செல்வத்தைக்கட்டுங்கயிறும் என்பதாம். ❋ காலத்தோடு பொருந்துதல் - காலந்தப்பாமற் செய்தலாம். தொழில் கைகூடிவருதலால் அதனால் உண்டாகும் செல்வம் எந்நாளும் நீங்காதென்பதாம். (உ)

> அருவினை யென்ப வுளவோ கருவியாற்................ ❋
> கால மறிந்து செயின்.. ❋

௪௯-ஆம்-அதி-காலமறிதல்.

(உ௱௧)

(இ-ள்.) அருவினையென்ப - (அரசரால்) செய்தற்கரியதொழில்களென்று சொல்லப்படுமவை|-உளவோ - உண்டோ- கருவியால்-(அவைகளைமுடித்தற்காகும்)சாதனங்களுடனே- காலம்- (செய்தற்காகும்)காலத்தை}-அறிந்து-தெரிந்து-செயின்-செய்தலால். எ-று.)(கருத்து)காலமறிந்துசெய்தால்அரியதொழில்களுளவோ என்பதாம். ❋ கருவிகள்-மூவ்வகையாற்றல்களும், நால்வகை உபாயங்களும், ஆம்.—அவை உண்டாகியவிடத்தும், காலம் வேண்டுமென்பது அறிவித்தற்குக் கருவியாலென்றார். இப்படிச்செய்வார்க்கு எல்லாதொழில்களும் எளிதின்முடியுமென்பதாம். (௩)

> காலங் கருதினுங் கைகூடுங் காலங்........................ ❋
> கருதி யிடத்தாற் செயின்.. ❋

இ-ள்.) (ஒருவன்)-ஞாலம்-பூமிமுழுதையும்-கருதினும்-(தானே ஆள) நினைத்தாலும்-(அது) கைகூடும்- கைக்குள்ளாம்.— காலம்-காலத்தை }-கருதி-அறிந்து-இடத்தால்-இடத்தோடுபொருந்த-செயின் (அதற்குச்செய்யுந்தொழிலைச்)செய்வானாயின். எ,று.) (கருத்து) அரசன்காலமறிந்து தொழில்செய்தால் உலகெல்லாமாள நினைத்தாலு

ங்கைவசப்படும் என்பதாம். ❊ இடமுண்டாகிய விடத்தும் காலம் வேண்டுமென்பதற்கு இடத்தானென்றார். இப்படிச் செய்வார்க்குக்

கைகூடாதவையும் கைகூடுமென்பதாம். [இவை மூன்றுபாட்டாலுங்காலமறிதலின் பயன்சொல்லப்பட்டது.] (௪)

காலங் கருதி

யிருப்பர் கலங்காது.............. ....*

ஞாலங் கருது பவர்.......

....*

(இ-ள்.) ஞாலம்-பூமியெல்லாம்-கலங்காது- தப்பாமல்-கருதுபவர்-(கொள்ள) நினைக்குமரசர்|- (தம்வலி மிகுமாயினும் அதனை நினையாமல்)-காலம்-(அதற்கேற்ற) காலத்தையே}-கருதி- நினைத்து-இருப்பர்-(அதுவருமளவும்) இருப்பர். பகைமேற் செல்லார். எ,று.) (கருத்து) பூமிமுற்றுமாளா நினைகுமரசர் பகைவரை வெல்லக் காலம் பார்த்திருப்பார் என்பதாம். ❊ அதை நினையாமற் சென்றால் பொருளும் படையும் ஆகிய இருவகைப் பெருமைகளும் தேய்ந்து வருந்துவராகலால் இருப்பரென்றார். இருத்தலாவது-நட்பாக்கல்-பகையாக்கல்-மேற்செல்லுதல்- இருத்தல்- பிரித்தல்- கூட்டல்-என்கிற அறுவகைக்குணங்களுள் மேற்செல்லுதலுக்கு-எதிராகியதொழில்.[இதனாற்காலம்வாராதவிடத்தேசெய்யவேண்டியதுசொல்லப்பட்டது.]

[௫௧]

(உ௱உ) சகூ-ஆம்-அதி-காலமறிதல்.

உளக்க முடையா னொடுக்கம்
பொருதகர்.....................❊
தாக்கற்குப் பேருந்
தகைத்து.....................❊

(இ-ள்.) ஊக்கமுடையான்-மிகுந்த வலிமையுடையவரசன்-ஒடுக்கம்-(பகைமேற்செல்லாது) காலம்பார்த்திருக்கின்ற விருப்பு|-பொருதகர்-போர்செய்கின்ற ஆட்டுக்கடா- தாக்கற்கு- (தன்பகைகெடப்)பாய்தற்பொருட்டு. பேருந்தகைத்து- பின்னே கால்வாங்குந்தன்மைத்து. எ,று.) (கருத்து) வலிமையுள்ளவரசன் பின்வாங்குதல் வெல்லும்பொருட்டாம் என்பதாம். ❋ உபமானத்திலே தாக்கற்கென்றுசொல்லப்பட்டிருக்கிறபடியினாலே உபமேயத்திலே வெற்றிபெறுதற்கென்பதுகொள்க [இதனால் அவ்விருத்தவின் சிறப்புச்சொல்லப்பட்டது.] (சு)

பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்......❋
துள்வேர்ப்ப ரொள்ளி யவர் ....❋

(இ-ள்.) ஒள்ளியவர்-அறிவுடைய வரசர்-ஆங்கே-(பகைவர்தீங்குசெய்த)அப்பொழுதே- (அவரறிய)- பொள்ளென- விரைவாக- புறம்வேரார்-புறத்திலே கோபஞ்செய்யார்.-காலம்-(தாம் அவனைவெல்லுதற்கேற்ற)காலத்தை}-பார்த்து-அறிந்து-(அதுவருமளவும்)-உள்வேர்ப்பர்-உள்ளே கோபஞ்செய்வார். எ,று.) (கருத்து) அறிவுடையவரசர் கோபத்தைப்புறங்காட்டார்.காலம்வருமளவு மக்கோபத்தையுள்வைத்திருப்பார் என்பதாம். ❋ பகைவரறியக்கோபஞ்செய்தவிடத்தே அவர் தம்மைக்காத்துக் கொள்வாராதலால் - புறம்வேராரென்றும், கோபஞ்செய்யாமல் அடக்குதல் கூடாமையால் -உள்வேர்ப்பரொள்ளியவரென்றும், சொல்லினர். (எ)

செறுநராக் காணிற் சுமக்க
இறுவரை..............................❋
காணிற் கிழக்காந்

தலை. ....*

(இ-ள்.) (வெல்லக்கருதிய அரசர்|)-செறுநரை- பகைவரை 3-காணின்-கண்டால்-சுமக்க-(அவர்க்குமுடிவுகாலம்வருமளவும்) பணிய க்கடவர்-இறுவரைகாணின்- அக்காலம்வந்து முடியுமிடத்து-தலை-(அவரது)தலை|- இழக்காம் - கீழ்விழும். எ,று.) (கருத்து) அரசர்ப கைவரைக்கண்டா லவர்க்கு முடிவுகாலம்வருமளவும்பணியக்கடவர் என்பதாம். ❋ பகைமை திரும்படி மிகவும் வணங்குகவென்றதற்கு சுமக்கவென்றும், அப்படிவணங்கவே அவர்தம்மைக்காத்துக்கொ

௪௯-ஆம்-அதி-காலமறிதல்.

(உ௭௩)

ள்ளாமையினாலே தப்பாமல் கெடுவாரென்றதற்கு- இழக்காந்தலையெ ன்றும், சொல்லினார். [இவ்விரண்டு பாட்டாலும் காலம்பார்த்திருக் குமிடத்துப் பகைமைதோன்றாமல்இருக்கவேண்டுமென்பது சொ ல்லப்பட்டது. (அ)

எய்தற்கரிய தியைந்தக்கா லந்நிலையே.......................... *
செய்தற் கரிய செயல்...*

(இ-ள்.) (பகையைவெல்ல நினைக்கின்ற அரசர்) - எய்தற்கரியது - (தம்மாலே)பெறுதற்கரியகாலம்-இயைந்தக்கால்- வந்துகூடியக்கால்-அந்நிலையே-அது நிற்குமளவிலே - செய்தற்கரிய - (அதன்முன்னே)செய்தற்கு அரியவையாயிருந்த தொழில்களை}-செயல்-செய்யக்கடவர். எ,று.) (கருத்து) அரசர் பகையைவெல்லக் காலம்வாய்த்தாலப்பொழுதே யத்தொழிலைச் செய்யக்கடவர் என்பதாம். ❊ ஆற்றல்முதலானவைகளாலே செய்துகொள்ளக் கூடாததா யிருக்கையால்-எய்தற்கரியதென்றும், அதுதானேவந்து கூடுதல் அரிதாகலால்-இயைந்தக்காலென்றும், கூடியவிடத்துப் பின்னில்லா தோடிப்போமாதலால்- அந்நிலையேயென்றும், அதுபெறுதவிடத்தே-செய்யக்கூடாமையால்-செய்தற்கரியவென்றும், சொல்லினர் [இதனுல் காலம்வந்தவிடத்து விரைந்துசெய்கவென்பதுசொல்லப்பட்டது.]

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்.............*
குத்தொக்க சீர்த்த விடத்து..................................*

(இ-ள்.) கூம்பும்பருவத்துத்தொழிலின்மேலே செல்லாதிருக்கவே
ண்டுங் காலத்திலே- கொக்கொக்க-கொக்கு இருக்குமாறுபோல் இ
ருக்கக்கடவன்.- மற்றுச்சீர்த்தவிடத்து-மற்றைச் (செல்லுங்காலம்)
வாய்த்தவிடத்து- அதன்குத்தொக்க- அதுதப்பாமற் செய்துமுடி
க்குமாறுபோல்தப்பாதுசெய்துமுடிக்கக்கடவன்.எ-று.) (கருத்து)
அரசன் பகையைவெல்லக் காலம் வாய்க்காவிடத்துக் கொக்கடங்க
ல்போலிருக்கக்கடவன். வாய்த்தவிடத்து அதன்குத்தைப்போலவெ
ல்லக்கடவன் என்பதாம். ❊ மீன்கொள்ளுதற்கு இருக்குமிடத்து அ
துவருமளவும் அது தன்முயற்சியை முன்னறிந்து தப்பிப்போகா
மற் பொருட்டு உயிரில்லதுபோல் இருக்குமாகலானும், வந்தவிடத்
துத் தப்பிப்போவதற்கு முன்னாகவே விரைந்து குத்துமாதலானும்
இருத்தலுக்கும் செய்தலுக்கும் கொக்கு உபமானமாயிற்று. கொக்
கொக்கவென்றாராயினும் அதுகூம்புமாறுபோற் கூம்புகவென்று

(உ௱ச) ௪௯-ஆம்-அதி-காலமறிதல்.

ம்,குத்தொக்கவென்றாராயினும் அதுகுத்துமாறுபோற்குத்துகவென்றும் உரைக்கப்படும். [இத்தால் இருத்தலுக்கும், தொழில்செய்தலுக்கும் இலக்கணம், சொல்லப்பட்டது.] (ய)

ருய-ஆம்-அதி[illegible]டனறிதல்.

அஃதாவது-வலியும் காலமும் அறிந்து பகைமேற் செல்லுவோன் தான் வெல்லுதற்கு ஏற்ற நிலத்தின் அறி[illegible]ம். அதிகாரமுறைமையும் இதனாற்றானே விளங்கும்.

தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்று....... *
மிடங்கண்ட பின்னல் லது........................ *

(இ-ள்) முற்றும்- (பகைவரை) வளைத்துக்கொள்வதற்காகும்-இடம்-ஓரிடத்தை}- கண்டபின்னல்லது பெற்றபின்னல்லாமல்.- எவ்வினையும்-யாதொருதொழிலையும்}-தொடங்கற்க-(அவரிடத்துத்,தொடங்காதிருக்கக்கடவர்.-எள்ளற்க-(அவலாச்சிறியவரென்று) இகழாதிருக்கக்கடவர். எ-று.) (கருத்து) அரசர் பகைவரைவெல்ல இடங்கண்டாலல்லது எத்தொழிலையுஞ் செய்யாதிருக்கக்கடவர். அவரையிகழாதிருக்கக்கடவர் என்பதாம். ❊அதற்காமிடமாவது- வாயில்களாலும், கீழறைகளாலும், அப்பகைவர் வருதலும் போகுதலும் ஒழியும்வகை-அரசனைச்சூழ்ந்து ஒன்றற்கொன்று துணையாய்த்தமக்குள்ளே நலிவிலலாது பலபடைகள் இருப்பிற்கும், மதிலும் அகழும்முதலாகிய அரண்செய்யப்பட்ட அரசிருப்பிற்கும், ஏற்ற நிலக்கிடக்கையையும் நீரையும் உடையது.— அவ்விடத்தைப் பெற்றால் தொடங்குதலும், இகழ்தலும், செய்கவென்பதாம். (க)

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு.மரண்சேர்ந்தா......*
மாக்கம் பலவுந் தரும்..................................*

(இ-ள்.) முரண்-மாறுபாட்டை}-,சேர்ந்த-சேர்ந்த- மொய்ம்பினவர்க்கும்-வலிமையையுடையவருக்கும்-அரண்- அரணை}—சேர்ந்து-சேர்ந்து-ஆம்- ஆகின்ற-ஆக்கம்-பெருக்கமானது|-பலவும்-பலபயன்களையும்}- தரும்-கொடுக்கும். எ,று.) (கருத்து) வலியவரசருக்கும்அரணைச்சேர்ந்தாகின்ற பெருக்கமானது பலபயன்களையுந்தரும்

ருய-ஆம்-அதி-இடனறிதல்.

(உாரு)

என்பதாம். ❋ மாறுபாடாவது- பூமிபலவரசர் ஆளுதற்குப் பொருவாயுள்ளதென்பது பொருத அரசரது பனநிலே தோன்றுவதாதலாலும், வலியுடைமை சொன்னவதனாலும், இது பகைவர்மேலே சென்ற அரசருக்கு ஆயிற்று.—அரண்சேர்ந்து ஆகின்ற ஆக்கமும் இருக்கையால் இங்கே ஆக்கம் விசேஷிக்கப்பட்டது. ஆக்கமென்றது-அதற்கு ஏதுவாகிய வளைத்தலே.அதுகொடுக்கும்பயன்கள்-பகைவராலே தமக்கு நலிவில்லாமையும், தாம் நிலைபெற்றுநின்று அவருக்கு நலிவுசெய்தலும், முதலானவை.

(உ)

ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து ....❋
போற்றார்கட் போற்றிச் செயின்... .... ❋

(இ-ள்.) ஆற்றாரும்- வலிமையில்லாதவரும்-ஆற்றி- வலிமையுடையவராய்-அடுப-வெல்வார்.-இடன்-(அதற்கேற்ற) இடத்தை-அறிந்து-தெரிந்து-போற்றி- (தம்மைக்) காத்துக்கொண்டு-போற்றார்கண்-பகைவரிடத்து-செயின்-(தொழிலைச்) செய்வாராயின். எ,று.) (கரு

த்து) வல்லமையில்லா வேற்றாரு மிடமறிந்து போர்செய்வா ராவல் வெற்றிபெறுவர் என்பதாம். ✿ காத்துக்கொள்ளுதலாவது-பகைவரால் நலிவு வாராதிருக்கும்படி- அரணாலும், படையாலும், காத்தல் இப்படித் தொழிலசெய்வாராயின் முன்சொல்லப்பட்ட வலிமையில்லாதிருந்தாலும் வெல்வரென்பதாம். (௫)

எண்ணியா **ரெண்ணு**

மிழப்ப ரிடனறிந்து................ .. ✽

துன்னியார் துன்னிச் செயின் ..

........................✽.

(இ-ள்.) இடன்-(தாம்தொழில் செய்தற்கேற்ற) இடத்தை-அறிந்து-தெரிந்து-துன்னியார்-சென்றவரசர்-துன்னி-(அரணைப்)பொருந்திநின்று- செயின்-(அத்தொழிலைச்) செய்வாராயின்-எண்ணியார்-(முன்புஅவனைவெல்ல) எண்ணியிருந்தபகைவர்|- எண்ணம்-அவ்வெண்ணத்தை}- இழப்பர் - இழந்துவிடுவார் எ,று.) (கருத்து) அரசர் இடமறிந்து போர்செய்வாராகில் பகைவரெண்ண முடியாதுஎன்பதாம். ✿ எண்ணப்பட்ட வெற்றியை - எண்ணமென்றார். பகைவர் போர்செய்யாமல் தம்மைக் காத்துக்கொள்ளுதலால்-எண்ணமிழப்பரென்றார். இதனால் அவர்பகைவர்தோற்பரென்பதாயிற்று.[இவை நான்குபாட்டாலும் பகைவரது அரணின்புறத்து இறங்கற்கு ஆமிடமறிதல் சொல்லப்பட்டது. (௬)

[௫௨]

(௨௱௬) ருய-ஆம்-அதி- இடனறிதல்.

நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி..............*
னீங்கி னதனைப் பிற..................................... *

(இ-ள்.) முதலை-முதலையானது|- நெடும்புனலுள்-ஆழமுள்ள நீரிலானால்-பிற-பிறவுயிர்களையெல்லாம்}-வெல்லும்-வென்றுவிடும்.— புனலின்-அந்நீரினின்றும்- நீங்கின்-நீங்கினால்- அதனை}-அதை-பிற-பிறவுயிர்களெல்லாம்|-அடும்-வெல்லும். எ-று.) (கருத்து)முதலைநீரிலிருந்தால் எல்லாவுயிரையும்வெல்லு மது அந்நீரை விட்டால் மற்றவுயிர்களாலே தோல்வியடையும் என்பதாம். ❋ எல்லாரும் தமது இடத்திலே வலியராயிருப்பரென்பது சொல்லப்பட்டது.— (நிலையாதநீரினிடத்தே பிறவுயிர்கள் நிற்கமாட்டாமையால் அவையெல்லாம் முதலைக்கு எளியனவாகும் அவ்வசஞ்சரித்தற்குரிய நிலத்தினிடத்தே அம்முதலை சஞ்சரிக்கமாட்டாமையால் அவைகளுக்கெல்லாமெளிதாமென்பது- மேற்செல்லுமரசன்பகைவர்நிற்கமாட்டாதவிடமறிந்து சென்றால் அவர் அவனுக்கு எளியவராவர் தான்நிற்கமாட்டாதவிடத்தேசென்றால் அவருக்கு அவன் எளியவனாவான் என்கிற பொருள்தோன்ற நின்றமையால்- பிறிதுமொழிதலணி.) (௫)

கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு......................*
நாவாயு மோடா நிலத்து......   .....

....*

(இ-ள்.) கால்வல்-(நிலத்தில்ஓடுகின்ற) வலிமைபொருந்தியஉருளைகளையுடைய-நெடுந்தேர்-பெரிய தேர்களானவை|- கடல்-கடலில்-ஓடா-ஓடமாட்டாவாம்.- கடலோடும்-கடலிலோடுகின்ற-நாவாயும்-மரக்கலங்களும்|-நிலத்து-நிலத்தில்-ஓடா- ஓடமாட்டாவாம். எ,று.) (கருத்து) நிலத்திலோடுந் தேர்கள் கடலிலோடாவாம். கடலிலோடுமரக்கலங்கள் நிலத்திலோடாவாம் என்பதாம். ❁ ஓடுதற்கேற்றகாலும் பெருமையும் உடையதாயிருக்கினு மென்பதுதோன்ற-'காலவலெடுந்தேரென்றார்.—(இப்பாட்டுப் போர்க்குச் சென்றவன் பகைவரிடங்களை அறிந்து அவைகளுக்கு ஏற்ற சாதனங்களால் தொழில்செய்யவேண்டுமென்னும் பொருள் தோன்ற நிற்கையினாலே இதுவும் அவ்வணி.) (சா)

அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை ......❋
யெண்ணி யிடத்தாற் செயின்......................❋

(இ-ள்.) (அரசர்)-எஞ்சாமை-(பகைவரிடத்துத்தொழில்செய்யும் விதங்களையெல்லாம்) குறையாமல்-எண்ணி-ஆலோசித்து-இடத்தா

ருய-ஆம்-அதி-இடனறிதல்.

(உளச)

ல்-இடத்தோடுபொருந்த- செயின்- செய்வாராயின்- (அச்செயலுக்கு)-அஞ்சாமையல்லால்-(தமது)தைரியமல்லாமல்- துணை- (வேறொரு)துணை-வேண்டா-வேண்டுவதில்லை. எ,று.) (கருத்து)குறைவிலாதெண்ணி யிடமறிந்து போர்செய்தால் தைரியமின்றி வேறு துணைகள்வேண்டாவாம் என்பதாம். ✻ அத்தொழில் தவறுதலுக்கு ஏது இல்லாமையால் தைரியமுடையராய் நின்று முடித்தலல்லது துணைவேண்டாவென்றார். [இவைமூன்றுபாட்டாலும்போர்செய்தற்குஆமிடமறிதல் சொல்லப்பட்டது.] (எ)

சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா .... ✻
னூக்க மழிந்து விடும். .... ✻

(இ-ள்,) உறுபடையான்-பெருஞ்சேனையையுடைய அரசன் [-சிறுபடையான்-சிறியசேனையையுடையவனது- செல்லிடம்-செல்லிடத்தை]-சேரின்-(அவனை அழிக்க நினைத்துச்)சேர்வானாயின்- (அவனால்) ஊக்கம்-(தன்)பெருமை- அழிந்துவிடும்- அழிவான். எ,று.) (கருத்து) நிறைசேனையையுடைய அரசன் குறைசேனையையுடைய அரசனிடத்தைச்சேர்ந் தழிக்கநினைக்கி லவனாற் பெருமை யிழந்துவிடுவான் என்பதாம். ✻ செல்லிடம் - செல்லுமிடம் எனவிரியும். ஊக்கத்தினழிவு உடையான்மேல் ஏற்றப்பட்டது. தன்சேனையின் பெருமைநோக்கி இடம்நோக்காமல் செல்வானாயின் அச்செலவு அச்சேனைக்கு ஒருசேரச்சென்று தொழில்செய்யக்கூடாமையாலாவது, பழக்கமில்லாமையாலாவது, அப்பெருமையாற் பயனில்லாமல் அழிவானென்பதாம். (அ)

சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த .... ✻
ருறைநிலத்தோ டொட்ட லரிது. .... ✻

(இ-ள்.) சிறைநலனும்-அரணழித்தற் கருமையையும்- சீரும்-பெருமையாகிய ஆற்றலையும்-இலரெனினும்-உடையரல்லராயினும்-மாந்தர்-)தொழில்செய்தற்குரிய) மனிதரை}-உறைநிலத்தோடு-(அவரது)இருப்பிடத்திற்சென்று-ஒட்டல்-தாக்குதல்|-அரிது-அரிது. எ-று (கருத்து) அரண்வலியும் பலமுமில்லாராகிலும் பகைவர் இருப்பிடஞ்சென்று வெல்லலரிது என்பதாம். ❊ ஆண்மை யுடையவரைச் சிறுமைநோக்கி அவரிருப்பிடத்திலேசென்று தாக்கினால்அதைவிட்டுப்போவதற்குத் துணியாமல் சாவதற்குத் துணிவு கொண்டவராய்ப் போர்செய்வாராதலால் அவருக்குப்பெரியசேனையும் தோற்றோடிப் போமென்பதாம். (க)

(உ௱அ) ருய-ஆட்-அதி- இடனறிதல்.

கா லாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா..............................❊
வேலாண் முகத்த களிறு...................................❊

(இ-ள்.) கண்ணஞ்சா- பாகர்க்கு அடங்காதவையும்- வேலாண்முகத்த-வேலையுடைய ஆள்களைத்தோத்த கொம்பையுடையவையும்ஆகிய-களிறு-களிறுகளை}-காலாழ்-கால்புதைகிறஇயல்பினதாகிய-களரில்-சேற்றுநிலத்திலே அகப்பட்டிருக்கும்போது-நரி- நரிகளானவை|-அடும்-கொல்லும். எ-று.) (கருத்து) நரிகள் யானைகளைச் சேற்று நிலத்தில்வெல்லும் என்பதாம். ❊ முகப்போர்ப்புக்கு ஆகுதலால்அஃது பெயர். (ஆண்மையும் பெருமையும் உடையராயினும் தகாத இடத்திலே சென்றால் அவைகளாற் பயனின்றி மிகவும் எளியரால்அழிவரென்பதும்தான்ற நிற்கையால் இதுவும் அஃவணி.) [இவைமூன்றுபாட்டாலும் பகைவரைச்சார்தலாகாத இடமும், சார்ந்தவிடத்து உண்டாகும் இழுக்கும், சொல்லப்பட்டன] (ய)

௫௧-ஆம்-அதி-தெரிந்துதெளிதல்.

அஃதாவது-மந்திரிமுதலாயவர்களைப் பிறப்பு-குணம்-அறிவு எனப்படுகின்றவைகளையும், செய்கைகளையும், காட்சி-கருத்து-ஆகமம்-என்கிற பிரமாணங்களினாலே ஆராய்ந்து தெளிதல். வலிமுதலாகிய மூன்றையும் அறிந்து பகைமேற்செல்வானுக்குச்சேனை கருத்தோடு தொழில் செய்தற்கும், எதிரிடாமைக்கும், இத்தெளிவு வேண்டுதலால் அவைகளின்பின் வைக்கப்பட்டது.

அறம்பொருளின்ப முயிரச்ச நான்கின் ....*
திறந்தெரிந்து தேறப் படும்............ ....*

(இ-ள்.) (அரசனாலே தெளியப்படுவோ னொருவன்) - அறம்-அறமும்-பொருள்-பொருளும்-இன்பம்-இன்பமும்-உயிரச்சம் -உயிர்ப்பொருட்டுவரும் அச்சமும்- நான்கின் - என்கின்ற உபதை நான்கினது-திறம்-திறத்தினால்-தெரிந்து-(மனவியல்பு)ஆராய்ந்து-தேறப்படும்- (பின்) தெளியப்படுவான். எ-று.) (கருத்து) ஒருவன றம்பொருளின்ப முயிரச்சமென்கின்ற நான்கின் திறத்தாற் றேர்ந்து

கொள்ளப்படுவான் என்பதாம். ❋

அவற்றுள்-அறவுபதையாவது-

புரோகிதனையும், அறவோனையும்,விட்டு-அவரால்

இவ்வரசன் அறமி

ல்லாதவனாயிருக்கையால் இவனை நீக்கி அறமும் உரிமையும் உடைய ஒருவனை வைத்தற்கு எண்ணினோம். இதுதான் யாவர்க்கும்சம்மதம். உன்கருத்து என்னவென்று சபதத்தோடு சொல்லுவித்தல்.— பொருளுபதையாவது-சேனைத்தலைவனையும், அவனோடுசம்பந்தமானவனையும், விட்டு-அவரால் இவ்வரசன் உலுத்தனாயிருக்கையால் இவனை நீக்கி ஈகையும் உரிமையும் உடைய ஒருவனைவைத்தற்கு எண்ணினோம் இதுதான் யாவர்க்கும் சம்மதம். உன்கருத்து என்னவென்று சப

தத்தோடு சொல்லுவித்தல்.— இன்பவுபதையாவது- ஆதிதொட்டுஉ

ரிமையோடு பழகிய ஒருதவமுதுமகளைவிட்டு - அவளால் உரிமையுள இன்னாள் உன்னைக்கண்டு வருத்தமுற்றுக் கூடவேண்டுமென்றுஎன்னைவிடுத்தாள் அவளைக் கூடுவையானால் உனக்கு அதிக சுகமாத்திரமல்லாமல் அதிகதிரவியமும் கிடைக்குமென்று சபதத்தோடுசொல்லுவித்தல்.—உயிரச்சவுபதையாவது - ஒருநிமித்தத்தின் மேல்வைத்

துஒருமந்திரியினாலே மற்றவரை அவன்வீட்டில் அழைப்பித்துஇவரெதிரிடும்படி எண்ணற்குக் கூடினோமென்று தான் காவல்செய்து, ஒருவனால் இவ்வரசன் நம்மைக்கொல்ல

எண்ணுகின்றமையால் முந்தி
நாம் அவனைக்கொன்று நமக்கு இனிய ஒருவனைவைத்தல்இங்கேயா
வர்க்கும் சம்மதம். உன்கருத்து என்னவென்று சபதத்தோடு சொ
ல்லுவித்தல்.—இந்நான்கினும் வேறுபடாதவனு யிருந்தவிடத்துப்
பிற்காலத்திலும் வேறுபடானென்று
கருத்தளவையால் தெளியப்ப டுவா னென்பதாம்.
(க)

குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு..................*
நாணுடையான் கட்டே தெளிவு.................................*

(இ-ள்.) தெளிவு-(அரசனது) தெளிவானது;- குடிப்பிறந்து-(உயர்ந்த) குடியிலேபிறந்து- குற்றத்தின்-குற்றங்களினின்றும்-நீங்கி-நீங்கி-வடு-(நமக்குப்)பழுதுவருமோவென்று-பரியும்-அஞ்சிநிற்கும்—நாணுடையான்கட்டே-நாணமுடையவனிடத்தே. எ,று.) (கருத்து) நற்குடியிற்பிறந்து குற்றத்திலிருந்து நீங்கிநிற்குநாணமுடையவனை யரசன் தெளிந்துகொள்வான் என்பதாம். ❊ குற்றங்களாவன-குற்றங்கடிதலதிகாரத்திற் சொல்லப்பட்டவைகளாம். நாணம்-இழிதொழில்களிலே மனஞ்செல்லாமை. இவை மிகுதியாக யோக்கி

[ருஉ]

(உாய) ருக-ஆம்-அதி-தெரிந்துதெளிதல்.

யதீவாயிற் கேட்டலாகிய ஆகம பிரமாணத்தினாலேதெரிவன-இந்நான்கு முடையவனையே தெளிகவென்பதாம். (உ)

அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா..................*
லின்மை யரிதே வெளிறு....................................*

(இ-ள்.) அரிய-(கற்றற்கு) அருமையாகிய நூல்களை}-கற்று-கற்று-ஆசு-(மூன்சொல்லப்பட்ட) குற்றங்கள்- அற்றார்கண்ணும் - அற்றவரிடத்தும்-தெரியுங்கால்- (நுட்பமாக) ஆராயுமிடத்து - வெண்மை-அறியாமையானது-இன்மை- இல்லாதிருக்கை|- அரிதே-அருமையே. எ,று.) (கருத்து) அரியநூல்களைக்கற்றுக்குற்றமற்றவரிடத்தும் அறியாமை யில்லாதிருக்கை யரிதுஎன்பதாம். ❋ அறியாமை இவரிடத்து மனநிலையாமைபற்றி ஒரோவிடத்து உண்டாமாதலால் தெரியுங்காலென்றார். காட்சிப்பிரமாணத்தினால் தெளிந்தால் அக்குற்றமும் இல்லாதாரோ தெளியப்படுவ ரென்பதாம். [இப்பிரமாணங்களாலே குணமும் குற்றமும் தெரிந்து குணமுடையவரைத் தெளிகவென்பது இம்மூன்றுபாட்டாலும் சொல்லப்பட்டது.] (௩)

குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்........................❋
மிகைநாடி மிக்க கொளல்.................. .... ❋

(இ-ள்.) (குணகுற்றங்களுள் ஒன்றேயுடையார் உலகில்இல்லாமையால்)-குணன்-குணங்களை}-நாடி- ஆராய்ந்து- குற்றமும்-மற்றைக்குற்றங்களையும்-நாடி-ஆராய்ந்து-அவற்றுள்-(பின்பு)அவ்விருவகையுள்ளும்-மிகை-மிகுந்தவைகளை}- நாடி- ஆராய்ந்து-மிக்க-மிகுந்தவைகளால்-கொளல்-(அவரை) அறியக்கடவன். எ,று.) (கருத்து)அரசன் ஒருவன் குணங்களையுங் குற்றங்களையும் ஆராய்ந்துகொள்ளக்கடவன் என்பதாம். ❋ மிகுதல்- தலைமையினாலாவது-பன்மையினாலாவது-உயர்தல். மிகுந்தவைகளால் அறிதலாவது-குணமிகுந்திருந்தால் தொழிலுக்கு உரியவனென்றும், குற்றமிகுந்திருந்தால் அல்லனென்றும், அறிதல். [குணமாத்திர முடையவர் உலகத்திலே அரியராகலால் இவ்வகையாரையும் தெளிகவென்பது இதனாற் சொல்லப்பட்டது.] (௪)

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்.............❋
கருமமே கட்டளைக் கல்........... ....

...........❋

(இ-ள்.) (குடிப்பிறப்பு,குணம் அறிவு என்பவைகளால்மனிதரடை
யும்)-பெருமைக்கும்-பெருமையாகிய (பொன்னின்மாற்றறிதற்)கு

௫௧-ஆம்-அதி-தெரிந்துதெளிதல்.

(உ௱ய்க)

ம்-ஏனைச்சிறுமைக்கும்- மற்றைச்சிறுமையாகிய (பொன்னின்மாற்றறிதற்)கும்-கட்டளைக்கல்- உரைக்கல்லாவது|-தத்தங்கருமமே -தங்கள் தங்கள் செயல்களே. எ,று.) (கருத்து) மனிதர்பெருமையுஞ்சிறுமையு மறியு முரைக்கல்லாவது அவரவர்தொழில்களாம் என்பதாம். ❋ மனிதருடைய பெருமை சிறுமைகளைத் தப்பாமல்அறியவேண்டியவர்களுக்கு முடிவானசாதனம் அவர்செயலே என்றற்கு- கருமமே எனத்தேற்றேகாரத்தோடு சொல்லினார். (பெருமை சிறுமைகளைப்பொன்னொருமைக் கருமம் ஒன்றைக் கட்டளைக் கல்லெனலால் ஏகதேசவுருவகவணி.) [இதனாற் குணகுற்றங்களை அறிதற்குக் கருவிசொல்லப்பட்டது.] (௫)

அற்றாரைத்தேறுத லோம்புக மற்றவர்..................❋
பற்றிலர் நாணார் பழி..................................❋

(இ-ள்.) அற்றாரை-குற்றமில்லாதவரை}-தேறுதலோம்புக-தெளிதலொழியக்கடவன்.- (அவர்)-மற்றுப்பற்றிலர்-உலகத்தொடு சம்பந்தமில்லாராதலால்}-பழி-பழியை- நாணார்-அஞ்சார். எ,று.) (கருத்து) அரசன் குற்றமற்றவரைத் தெளிதலொழியக்கடவன். அவருலகத்தோடொட்டாதவராதலாற் பழிக்கஞ்சார் என்பதாம். ❊ உலகத்தாரால் பழிக்கப்படுவன எவை அவைவிடுதற்கு, புகழப்படுவன எவை அவைசெய்தற்கும் காரணமாகிய உலகநடையினியல்பு சுற்றமில்லாதவர்க்கு இல்லாமையால் அவரை நம்பலாகா தென்பதாம்.

காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்............... .❊
பேதைமை யெல்லாந் தரும்........ ....❊

(இ-ள்.)காதன்மை-அன்புடைமையானது-கந்தா-பற்றுக்கோடாக-அறிவு-(தமக்கு) அறியவேண்டுமவைகளை}-அறியார்-அறியாதவரை}-தேறுதல்-தெளிதலானது|-பேதைமையெல்லாம்- அறிவில்லாமையையெல்லாம்}-தரும்-(அரசனுக்குத்தரும். எ,று.) (கருத்து)அறியவேண்டியவைகளை யறியாதவர்களை யரசன்தெரிந்துகொள்ளுதலவனுக்கறிவின்மை யெல்லாந் தரும் என்பதாம். ❊ தன்னோடுஅவரிடத்துநின்ற அன்புபற்றி அரசன் அறிவில்லாதவரைத் தொழில்செய்யவைத்தால் அத்தொழில் அவரறிவில்லாமையினாலே கெடும். கெட்டால் அவர்க்குள்ளது மாத்திரமல்லாமல்-தொழிலுக்குரியவரை அறியாமையும், மேல்விளைவை அறியாமையும், முதலாக அவனுக்கு அறியாமைகள் பலவும் உண்டாகு மென்பதாம். (எ)

(உ௱யஅ)

ருக-ஆம்-அதி-தெரிந்துதெளிதல்.

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை ....*
தீரா விடும்பை தரும்..*

(இ-ள்:) பிறனை-தன்னோடு சம்பந்தமில்லாதவனை}-தேரான்-(பிறப்புமுதலானவைகளாலும் செய்கையாலும் ஆராய்ந்திலனாகி-தெளிந்தான்-தெளிந்த அரசனுக்கு- (அத்தெளிவு)- வழிமுறை-(அவன்)சந்ததிமுறையினும்-தீரா-நீங்காத-இடும்பை-துன்பத்தை}—தரும்-கொடுக்கும். எ,று) (கருத்து)தன்னோடு சம்பந்தமில்லாதவனைத்தெரிந்துகொண்ட அரசனுக்கு அத்தெளிவு துன்பந்தரும் என்பதாம். ❊ சம்பந்தம்-தன்குடியோடு தொடர்ந்தமரபு. தெளிதல்-அவனிடத்தே தொழிலைவைத்தல். அத்தொழில் கெடுதலால் அவன் குலத்திற் பிறந்தவரும்பகைவர் னகப்பட்டுக் கீழாவரென்பதாம்: (அ)

தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபிற் ....*
றேறுக் தேறும் பொருள்........................ ....*

(இ-ள்:) யாரையும்-யாரையும்-தேராது- ஆராயாமல்—தேறற்க-தெளியாதிருக்கக்கடவன்-தேர்ந்தபின்-ஆராய்ந்தபின்-தேறும்பொருள்-தெளியப்படும்பொருள்களை}- தேறுக-தெளியக்கடவன். எ,று.) (கருத்து) அரசன் யாரையு மாராயாமல் கொள்ளாதிருக்கக்கடவன் ஆராய்ந்தபின் கொள்ளக்கடவன் என்பதாம். ❊ தேறற்கவென்று பொதுப்படச் சொன்னமையால்- யாதொருதொழிலினும் தெளியலாகாதென்பது பெறப்பட்டது இங்கே தேறுகவென்றதற்கு ஐயுறாதிருக்கக்கடவனென்பது கருத்து, தேறும்பொருள்-அவரவர்வல்லமைக்கு ஏற்ற தொழில்கள். பொருள்-ஆகுபெயர்: (௯)

தேரான் றெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந் .... *
தீரா விடும்பை தரும்...*

(இ-ள்.) (அரசன்)-தேரான்-(ஒருவனை) ஆராய்ந்திலனாகி-தெளிவு
ம்-தெளிதலும்|-தெளிந்தான்கண்-ஆராய்ந்துதெளியப்பட்டவனிட
த்தே-ஐயுறவும்-சந்தேகப்படுதலும்|-தீராவிடும்பை-நீங்காத துன்ப
த்தை}-தரும்-(அவனுக்குக்)கொடுக்கும் எ,று.) (கருத்து) அரசன்
ஒருவனை யாராய்ந்திலனாகித் தெளிதலும், ஆராயப்பட்டவனிடத்தி
லையங்கொள்ளுதலும், அவனுக்குத் துன்பந்தரும் என்பதாம். ❄ அ
ரசன் ஒருவனிடத்து ஒருதொழிலைவைத்தபின் ஒருதவறுங்காணுமல்
சந்தேகப்படுவானுயின் அதனை அவன் அறிந்து இனி இது நில்லா

௫௧-ஆம்-அதி-தெரிந்துதெளிதல்.

(௨௱௰௫)

தென்னுங் கருத்தால் அத்தொழிலைத் தளரவிடுவான். அதுவல்லாமல்
பகைவராலே எளிதிலே பிரிக்கவும்படுவான் ஆதலால் தெளியப்பட்
டவனிடத்தே சந்தேகப்படுதலும் ஆகாதாயிற்று. தெளிவுக்கு அள
வுசொல்லியபடி. [இவைஐந்துபாட்டாலும் தெளியப்படாதவர் இவ
ரென்பதும், அவரைத்தெளிந்தால் உண்டாகும் இழுக்கும். தெளிவு
க்குஅளவும், சொல்லப்பட்டன. (௰)

௫௨-ஆம்-அதி-தெரிந்துவினையாடல்.

அ௫௱௰க ஈவது-அத்தெளியப்பட்டவனை அவர்

செய்யவல்ல தொழில்களை அறிந்து அவைகளிலே ஆளுந்திறம். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த ....❋
தன்மையா னாளப் படும்... .... ❋

(இ-ள்.) (அரசன்முதலிலே ஒருதொழிலைக்கொடுத்தால்)-நன்மையுந்தீமையும்-(அத்தொழிலிலே) ஆமவையும் ஆகாதவையும் ஆகிய செயல்களை}-நாடி- ஆராந்தறிந்து-நலம்- (அவைகளுள்) ஆமவைகளையே-புரிந்த-விரும்பிய-தன்மையான்-இயல்பை யுடையவன்-(பின்னை அவ்வரசனாலே!)—ஆளப்படும்-(சிறந்த தொழில்களிலே)ஆளப்படுவான். எ-று.) (கருத்து) நன்மைதுன்மைகளறிந்து ஆமவைகளைச்செய்பவன் அரசனாலாளப்படுவான் என்பதாம். ❋ தன்னை உரிமைஅறிதற்பொருட்டு உள்ளுக்கும்புறம்புக்கும் நடுவாகியஒருதொழிலை அரசன்தன்னிடத்தே வைத்தவிடத்து அதிலேஆமுஞ்செயல்களையேசெய்தவன்பின்னும் அத்தன்மையனாகுதல்பற்றி உள்ளாகியதொழிலிலே ஆளப்படுவானென்பதாயிற்று.புரிந்தவென்று இறந்தகாலத்தினாலே சொல்லுதலால் முன்னேஉரிமையை அறிதற்பொருட்டுவைத்ததொழிலென்பது பெறப்பட்டது. (க)

வாரிபெருக்கி வளம்படுத் துற்றவை......................❋
யாராய்வான் செய்க வினை..........................

......❋

(இ-ள்.) வாரி-(பொருள்கள்)வரும்வழிகளை}-பெருக்கி-விரியச்செய்து-வளம்படுத்து-(அப்பொருள்களாலே) செல்வங்களைவளர்த்து-உற்றவை-(அவ்வரும்வழிகளுக்கும்,பொருள்களுக்கும்,செல்வங்களு

௫௰௨-ஆம்-அதி-தெரிந்துவினையாடல்.

க்கும்,) வந்தஇடையூறுகளை}-ஆராய்வான்-(தினந்தோறும்) ஆராய்ந்துநீக்கவல்லவன்|—வினை-தொழிலை}-செய்க- (அரசனுக்குச்)செய்யக்கடவன். எ,று.). (கருத்து) பொருள்வரும்வழியைவிருத்திசெய்து பொருளைவளர்த்து இடையூறுகளை யாராய்பவன் அரசனுக்குத்தொழில்செய்யக்கடவன் என்பதாம். ❄ வரும் வழிகளாவன -முன்இறைமாட்சி அதிகாரத்தில் இயற்றலுமென்றவிடத்துஉரைக்கப்பட்டவையும்,உழவு-பசுக்காவல்-வாணிகம்- என்பவையும், ஆம் செல்வங்களாவன-அங்கேபொருளும்,இன்பமும்,ஆகச்சொல்லப்பட்டவைகள்-இடையூறுகளாவன-அரசன்-தொழில் செய்வோர்- சுற்றத்தார்-பகைவர்-கள்வர்-என்கிறஇவர்களால்வரும் நலிவுகள். (௨)

அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு..............*
நன்குடையான் கட்டே தெளிவு....... .... *

(இ-ள்.) அன்பு-(அரசனிடத்தே) அன்பும்-அறிவு-(அவனுக்கு ஆமவைகளை அறியும்) அறிவும் - தேற்றம் - (அவைகளைச்செய்யுமிடத்துக்) கலங்காமையும்-அவாவின்மை-(அவைகளாலே பொருள் கைகூடியவழிஅதன்மேல்) அவாவில்லாமையும் ஆகிய-இந்நான்கும்-இந்நான்கு குணங்களையும்- நன்குடையான்கட்டே- நன்றாக உடையவனிடத்தே.—தெளிவு-(தொழிலைவிட்டிருக்கும்)தெளிவு. எ,று.)(கருத்து) அன்பு அறிவு தெளிவு ஆசையில்லாமை இந்நான்குமுடையவனிடத்தேயரசனுக்குத்தெளிவுண்டாம்என்பதாம்· ❋இந்நான்கையுமுடைமை அவன்செய்கின்றதொழிலிலே சிறிதும் ஆராயவேண்டுவதில்லையென்று அரசன்தெளிதற்குஏதுவாகலால் அவனைஅதன்பிறப்பிடமாக்கினார்.[இவைமூன்றுபாட்டாலும் ஆளுதற்குஉரியவனது இலக்கணம் சொல்லப்பட்டது.] (௫)

எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்......❋
வேறாகு மாந்தர் பலர்............ .... ,
....,... ❋

(இ-ள்.) எனைவகையால் -எல்லாவகையாலும்- தேறியக்கண்ணும்-(ஆராய்ந்து) தெளிந்தவிடத்தும்- வினைவகையான் -அத்தொழிலியல்பினாலே-வேறாகும்-வேறுபடுகின்ற-மாந்தர்-மனிதர்|—பலர்-(உலகத்திலே) பலர். எ,று.) (கருத்து) எவ்வகையாலறிந்தவிடத்தும் தொழில்வகையால்வேறுபடுமனிதர்பலர் என்பதாம்.❋அரசவின்பத்தை விரும்பி வேறுபடுவோரேயல்லாமல் அதனைக்குற்றமென்று விட்டுத் தம்மியல்பிலே நிற்பவர் அரியராதலால்-வேறாகுமாந்தர்பலரென்று

ர்.தொழில்வைப்பதற்கு முன்னே எல்லாக்குணங்களு முடையவரா கவைத்தபின்வேறுபடுவோரை நடுவானதோர் தொழிலைவைத்து அறிந்து நீக்கவேண்டுமென்பதாம். [இதனால் ஒருவகையால் ஒழிக்கப் படுவார் இவரென்பது சொல்லப்பட்டது. (ச)

அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்..... ....*
சிறந்தானென் றேவற்பாற் றன்று.................. .. *

(இ-ள்.) வினைதான்-தொழில்தான்|—அறிந்து-(செய்யும்உபாயங்களை) அறிந்து-ஆற்றி-(செயலாலும் இடையூறுகளாலும் வருந்துன்பங்களைப்) பொறுத்து-செய்கிற்பாற்கல்லால்-(முடிவு) செய்யவல்லவனையல்லது-சிறந்தானென்று-(இவனிடத்து) அன்புடையவனென்று-ஏவற்பாற்றன்று-(வேறொருவனை)ஏவுந்தன்மையை உடையதன்று.எ,று.) (கருத்து) தொழில்செய்யு முபாயங்களை யறிந்துமுடிப்பவனுக்கல்லது தொழிலைமற்றவனுக்குக்கொடுக்கலாகாது என்பதாம் ❋ [அறிவாற்றல்களாலல்லது அன்பினாலே முடியாதென இதனால் தொழிலினது இயல்பு சொல்லப்பட்டது (ரு)

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ........... ....*
டெய்த வுணர்ந்து
செயல்.............. ....*

(இ-ள்.) செய்வானை-செய்பவ னிலக்கணத்தைத்-நாடி-(முன்னே) ஆராய்ந்து-வினை-(செய்யப்படுந்)தொழிலினியல்பைத்- நாடி-(பின்னே)ஆராய்ந்து-(அதன்பின்பு அவனையும்அதனையும்)-காலத்தோடு-காலத்துடனே(சேர்த்து)-எய்த-பொருந்த-உணர்ந்து-அறிந்து-செயல்-(அவனை அத்தொழிலினிடத்து ஆளுதல்) செயக்கடவன். எ-று.) (கருத்து)அரசன்தொழில் செய்பவனையறிந்து பின்னத்தொழிலையறிந்து அவனைத்தொழிலில்வைத்தாளக்கடவன் என்பதாம். ❊ செய்பவனிலக்கணமும், தொழிலினியல்பும்,முன்னே சொல்லப்பட்டன. காலத்தோடுபொருந்த அறிதலாவது-இக்காலத்திலிவ்விலக்கணமுடையவன் செய்தால்-இவ்வியல்புடைத்தாகிய தொழில்முடியுமென்றுகூட்டி அறிதல்-

(௫)

இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந் .... *
ததனை யவன்கண் விடல்................................ *

(இ-ள்.) இதனை-இத்தொழிலை-இதனால் இச்சாதனத்தால்- இவன் முடிக்குமென்று-இவன்முடிக்கவல்லவனென்று-ஆய்ந்து-(கூறுபடு

(உ௱௰௫)

௫௨-ஆம்-அதி-தெரிந்துவினையாடல்.

த்தி)ஆராய்ந்து-(இம்மூன்றும்தம்முள்ஒத்திருந்தவிடத்து)-அதனை-அத்தொழிலைத் - அவன்கண் - அவனிடத்தே— விடல்-விடக்கடவன். எ-று.) (கருத்து) அரசன் இத்தொழிலை யிச்சாதனத்தா லிவன்முடிக்க வல்லவனென்றறிந்து

அத்தொழிலையவனிடத்துவிடக்கடவன் என்

பதாம். ※ சாதனம்-துணைவரும், பொருளும்; முதலானவைசெய்ப வனும், சாதனமும், தொழிலும், தம்முள் ஒத்திருத்தலாவது-ஒவ்வொன்றோடு மற்றை இரண்டுக்கும்பொருத்தம் உண்டாகுதல்-விடுதல்-அவனை அத்தொழில் செய்தற்கு உரியவனாக்குதல். (எ)

வினைக்குரிமை நாடிய பின்றை யவனை.................. ※

யதற்குரிய னாகச் செயல்..

.................................※

(இ-ள்.) (ஒருவனை அரசன்)-உரிமை-(தனது) தொழில்செய்தற்கு உரியனா யிருக்கையை}-நாடியபின்றை-ஆராய்ந்து துணிந்த பின்பு-அவனை-அவனை}-அதற்கு-அத்தொழில்செய்தற்கு-உரியனாக-உரியவனாக---செயல்-(உயரச்)செய்யக்கடவன். எ,று. (கருத்து) அரசன் ஒருவனைத்தொழிற்குரியவனா யிருக்கையையறிந்து அவனையத்தொழிற்குரியவனாகச்செய்யக்கடவுன் என்பதாம். ※ உயரச்செய்தல்-அதனைத்தானே செய்துமுடிக்கவல்லவனாக்கல். அதுசெய்யாதவிடத்துங்கெடுமென்பது கருத்து. (அ)

வினைக்கண் வினையுடையான் கேண்மைவேறாக..............※

நினைப்பானை நீங்குந் திரு...................................※

(இ-ள்.) வினைக்கண்-(தனது)தொழிலினிடத்தே - வினையுடையான்- (எப்போதும்) முயற்சியை யுடையவன்} - (அவ்வுரிமையால்) கேண்மை - (தனக்குச்) சுற்றமாய் நடக்கின்றதன்மையை}- (அது பொறாதவர் து சொல்லை க்கேட்டு)-வேறாக-மாறுபட- நினைப்பானை-

நினைக் கும்
அரசனை}— திரு-ஸ்ரீதேவி |-நீங்கும்-நீங்குவாள்.
எ,று.)(க ருத்து)தனதுசெ
ா ழிலிலேமுயற்சியு டையவனைவேறாகநினைக்குமரச
னைச்ஸ்ரீதேவிநீங்குவாள் என்பதாம். ❁
சுற்றமாய்நடக்கின்றதன்மை யாவது-தான்பிறனுய்
நில்லாமல்சுற்றத்தார்செய்யும் உரிமையையெ
ல்லாம்செய்துநடத்தல். அவனைஅவமதித்துக்
கோபிக்கநினைப்பானா யின் பின்
ஒருவரும்உட்பட்டு முயல்வாரில்லாமல்செல்வம்
கெடுமெ ன்பது கருத்து. [இந்நான்கு
பாட்டாலும் ஆளுதற்கு உரியவனைஆ ளுந்திறம்
சொல்லப்பட்ட து.
(௬)

குஉ-ஆம்-அதி-தெரிந்துவினையாடல்.

(உரையன)

நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான் .... ❀
கோடாமை கோடா துலகு............................❀

(இ-ள்.) வினைசெய்வான்-தொழில்செய்பவன் - கோடாமை-கோணாதிருக்க-உலகு-உலகமானது|-கோடாது - கோணாது-(ஆதலால்) நாடோறும்-தினந்தோறும்-நாடுக-மன்னன்- அரசன்-(அவன்செயலை) ஆராயக்கடவன். எ,று.) (கருத்து) தொழில்செய்பவன் கோணாதிருக்கவுலகங்கோணாது ஆகையாலரசனவனை நாள்தோறு மாராயக்கடவனென்பதாம்.❀ஒவ்வொன்றனையும்ஆராயவே அதன்வழிப்பட்டவுலகெல்லாம் ஆராய்ந்தவனாவன் அதனால் அவனுரிமை அழியாமல்தன்னுள்ளே ஆராய்ந்துகொண்டு வரக்கடவனென்பதாம். [இதனால்ஆண்டவிடத்துச் செய்வது சொல்லப்பட்டது.] (ய) ❀—

❀—❀— ❀ —❀—❀ —❀ —❀— ❀—❀—❀—❀

௫௩-ஆம்-அதி-சுற்றந்தழால்.

அஃதாவது-அரசன் தனது சுற்றத்தாரைத்

தன்னைவிட்டு நீங்

காதிருக்கும் படி

தழுவுதல்.தொழில்செய்வோரைச்சொல்லிய

பின்றைச்சுற்றத்தாரைச் சொல்லுதலால் இது

தெரிந்துவினையா

டவின்பின்வைக்கப்பட்டது.

பற்றற்ற கண்ணும் பழமை
பாராட்டுதல்.............................. *
சுற்றத்தார் கண்ணே யுள். . .
.... *

(இ-ள்.) பற்றற்றகண்ணும் - (ஒருவன்) செல்வந்தொலைந்து வறுமைப்பட்டவிடத்தும்-பழமை-(தம்மோடு அவனிடத்து உண்டாகிய)பழமையை3-பாராட்டுதல்-(எடுத்துக்)கொண்டாடு மியல்புகள்|-சுற்றத்தார்கண்ணே- உறவினரிடத்தே— உள- உளவாரும். எ,று.) (கருத்து) ஒருவன் செல்வப்பற்றற்றவிடத்தும் பழமைகொண்டாடுத ல்சுற்றத்தாரிடத்தே யுண்டாம் என்பதாம். * பற்றற்றகண்ணும் என்பினும் மைவறியனை விடத்துப் பாராட்டாமையை விளக்கி நின்றது.-பழமை- செல்வத்தோடிருந்த காலத்திலே தமக்குச்செய்த உபகாரம். சுற்றத்தார் பாராட்டுதலைத்தெளிவித்தலால் ஏகாரம்தேற்றேகாரம். [இதனாலே சுற்றத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.]

விருப்பறுச் சுற்ற மியையி
னருப்பறு ....* வாக்கம்
பலவுந் தரும்.................................... *

(இ-ள்.) விருப்பறு-அன்புநீங்காத-சுற்றம் - சுற்றமானது-இயை யின்-(ஒருவனுக்குக்) கிடைக்குமாயின்-(அது)-அருப்பறு- இளைத் தல்நீங்காத- ஆக்கம்பலவும்-பலசெல்வங்களையும்-தரும்-(அவனு க்குக்) கொடுக்கும். எ-று.) (கருத்து) ஒருவனுக்குஅன்புள்ளசுற்றங் கிடைத்தா லதுபலசெல்வங் கொடுக்கும் என்பதாம். ❁ உட்பகை யாயினோரை நீக்குதற்குவிருப்பறுசுற்றமென்றும், தானேவளர்க்கு ம் செல்வத்தை நீக்குதற்கு அருப்பறுவாக்கமென்றும், அடைகொ டுத்துச்சொல்லினர். இயையினென்றது அதுகிடைத்தவினது அரு மையைக்காட்டிநின்றது.- பலவுமென்றது-அங்கங்கள் ஆறனையும்.- பலர்கூடிவளர்த்தலால் அவைமேலும் கிளைக்குமென்பது கருத்து.

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்.............❋
கோடின்றி நீர் நிறைந் தற்று.............................. ❋

(இ-ள்.) அளவளாவில்லாதான்-(அச்சுற்றத்தோடு) நெஞ்சுகலத்த லில்லாதவனது-வாழ்க்கை- வாழ்வானது-குளவளா- குளப்பரப்பா னது-கோடின்றி-கரையில்லாமல்— நீர் நிறைந்தற்று- நீர் நிறைந்தா ற்போலும். எ-று.) (கருத்து) சுற்றத்தாரோடு கலவாதவன் வாழ்வா னது கரையில்லாக்குள நீர் நிறைந்தாற்போலும் என்பதாம். ❁ சுற் றம்-அதிகாரத்தாலே வருவிக்கப்பட்டது. வாழ்க்கைக்கு ஏதுவான செல்வங்களை வாழ்க்கையென்றார். சுற்றமில்லாதவனது செல்வங்கள் தாங்குவா ரில்லாமையால் புறத்திலே போமென்பதாம். (௩)

சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்..........❋
பெற்றத்தாற் பெற்ற
பயன்..❋

(இ-ள்.) செல்வம்-செல்வத்தை }-பெற்றத்தால்-பெற்ற அதனால்-பெற்றபயன்-(ஒருவன்)பெற்றபயனாவது]-(தன்) சுற்றத்தால்-உறவினால்- தான்சுற்றப்பட.-தான் சூழப்படும் வகை — ஒழுகல்-(அச்சுற்றத்தைத்) தழுவிநடத்தலாம், எ-று.) (கருத்து) செல்வம்பெற்றதனால்வரும்பயனாவது சுற்றத்தைக்காத்தவாழ்வென்பதாம். ❊ இந்நடக்கை- பகையில்லாமல் அரசாளுதற்கு ஏதுவாகலால் இதனைச்செல்வத்திற்குப் பயனென்றார். [இவை மூன்றுபாட்டாலும் சுற்றத்தைத்தழுவுதல் செல்வத்துக்கு ஏதுவும், அரணும், பயனும், ஆமென்பது சொல்லப்பட்டது. (௪)

கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய.............❊
சுற்றத்தாற் சுற்றப்
படும்............ ....❊

[illegible]-சுற்றத்தால், (உாயக்)

(இ-ள்.) (சுற்றத்துக்கு) - கொடுத்தலும் - (வேண்டு மவைகளைக்) கொடுத்தலையும்-இன்சொலும்- இனியசொற் [illegible] லையும்- ஆற்றின்-([illegible]செய்ய)வல்லவனாயின்-அடுக்கிய-(தம்மிலே) தொடர்ந்த-[illegible](பலவகைச்) சுற்றத்தாலும்|—சுற்றப்படும்-சூழப்படுவான் [illegible]) (கருத்து) கொடுத்தலும் இனியசொற் சொல்லுதலும் [illegible]செய்தா லவன்சுற்றத்தாற் சூழப்படவாழ்வான் என்பதாம். [illegible] இவ்விரண்டும் அளவறிந்து செய்தல்- அரிதென்பது தோன்ற ஆற்றினென்றார் தம்மிலேதொடர்தலாவது-உறவினதுஉறவும், அதனது உறவும், ஆகச்சம்பந்தப்பட்டு வருதல், (௫)

பெருங்கொடையான் பேணான் வெகுளி யவனின்......❊
மருங்குடையார்
மாநிலத் தில்,...........................❊

(இ-ள்.) (ஒருவன்)-பெருங்கொடையான் - மிகுந்தகொடையையுடையவனும்-வெகுளி-கோபத்தை}-பேணான்-விரும்பாதவனும் (ஆனால்)-அவனின்-அவன்போல்-மருங்குடையார்-சுற்றமுடையவர்|---மாநிலத்து-இப்பெரியஉலகத்தில்-இல்- இல்லை, எ-று.) (கருத்து) மிகுந்தகொடையுங் கோபமில்லாமையு முடையவனாகி லவன்போற் சுற்றத்தாரில்லை என்பதாம். ※

மிகுந்தகொடை-ஒன்றினாலும் வறுமைப்படாதிருக்கக் கொடுத்தல்.

விரும்பாமை-இது அரசர்க்கு வேண்டு மென்று அளவுகடந்துசெய்யாமை.

(எ)

காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
..................※
மன்ன நீ ரார்க்கே யுள..................
.... ※

(இ-ள்.) காக்கை-காகங்கள்|-(தமக்கு இரையைக் கண்ட விடத்து)
கரவா-மறைக்காமல்-கரைந்து-
(இனத்தை) அழைத்து- உண்ணும்-
(அதனோடுகூடி) உண்ணும்-ஆக்கமும் -(சுற்றத்திரளாகிய) பெருக்கங்களும்|---அன்னநீரார்க்கே-அப்படிப்பட்ட இயல்பையுடையவர்க்கே-உள-உளவாகும். எ-று.)

(கருத்து) காசமிலாகிடைத்தா லிலத் தையழைத் துண்ணுதல்போல இச்செய்கை நல்வினைத்த ஈர்க் குளவா ம் என்பதாம். ❋

அப்பெருக்கங்களாவன - பகையில்லாமை பெருஞ்செல்வமுடைமைமுதலானவைஎச்சஉம்மையால்அறமும்இன்பமும்அன்றி-பொருளும்பெறுவரென்பதாயிற்று. அப்படிப்பட்ட வியல்டு தம்மால் அனுபவிக்கப் பட்டவைகளை யெல்லாம்அவரும் அனுபவிக்கும்படிவைத்தல்.

(எ) (உபாடி) கூ-ஆம்-அதி-சுற்றந்தழால்.

❋ பொருநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி......❋

னதுநோக்கி வாழ்வார் பலர்......................❋

(இ-ள்.) வேந்தன்-அரசனானவன்-பொதுநோக்கான்-எல்லாரையு
ம்ஒருதன்மையாகநோக்காமல்-வரிசையா-அவரவர்தகுதிக்குஏற்க-
நோக்கின்-நோக்குவனாயின் அதுநோக்கி- அச்சிறப்புநோக்கி-
வாழ்வார்-(அவனைவிடாமல் [illegible])தார்|—பலர்-அநேகர். எ-
று.) (கருத்து) அரசனவரவர்க்குத் தகுதியறிந்து நடப்பானாகி லவ
னைவிடாதுவாழுஞ் சுற்றத்தார் பலர் என்பதாம். ※ உயர்ந்தார் நீக்
குதல் குறித்துப்பொது நோக்கை விலக்கினை, எல்லாரும்விடாதொ
ழுகுதல் குறித்து வரிசைநோக்கை விதித்தார். [இவை நான்குபாட்
டாலும் சுற்றந்தழுவுதற்குஉபாயம் சொல்லப்பட்டது. (அ)

தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்..................*
காரண மின்றி வரும்..*

(இ-ள்.) தமராகி-(முன்னே) சுற்றத்தாராயிருந்து-தற்றுறந்தார்-
(தன்னோடுபொருந்தாமல் யாதாயினும்ஒருகாரணத்தினாலே) தன்னை
ப்பிரிந்துபோனவர்-சுற்றம்-(பின்னும்வந்து) சுற்றத்தாராகுதல்|—
அமராமைக்காரணம்-அப்பொருந்தாமையின்காரணம் - இன்றி-(த
ன்னிடத்தே) இல்லையாக-வரும்-(தானே)உண்டாகும். எ-று.) (கருத்
து) முன்சுற்றத்தாராகிப் பின்பிரிந்தவர் மற்றுஞ் சுற்றத்தாராகுதல்
காரணமில்லாதுண்டாம் என்பதாம். ※ பொருந்தாமையின்காரண
மாவது-தான் வழிதப்பிநடத்தல்- வெறுப்பவைசெய்தல்- இவைமு
தலியவைகளால வருவது. இயற்கையாகவே அன்புடையாராகிய சுற்
றத்தார்க்குச் செயற்கையால் வந்தபிரிவு - அச்செயற்கையை ஒழிக்
கஒழிதலால் அவர்க்கு அன்பு பழைய இயல்பாகவே நிற்குமென்ற
ற்குவருமென்றார். (கூ)

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்த..........*
னிழைத்திருந் தெண்ணிக்
கொளல்..........................*

(இ-ள்.) உழை-(தன்)னிடத்தினின்றும்- பிரிந்து-(காரணமில்லாம ற்) பிரிந்துபோய்-காரணத்தின்-(பின்பு)காரணத்தினாலே-வந்தானை- வந்தசுற்றத்தானை}-வேந்தன்-இராசனானவன்|-இழைத்திருந்து- அ க்காரணத்ததைச் செய்துவைத்து - எண்ணி- ஆராய்ந்து— கொளல்- (தழுவிக்) கொள்ளக்கடவன். எ,று.) (கருத்து) ஒருவன் காரணமில்

௭௯-ஆம்-அதி-சுற்றந்தழால்.

(௨௨௧)

லாமற் பிரிந்துபோய்ப் பின்பொருகாரணத்தால் வந்தவனை அரசன் ஆராய்ந்துகொள்ளக்கடவன் என்பதாம். ❋சும்மாஉழைப்பிரிதெ ன்றமையால்- பிரிதற்குக் காரணமில்லாமை கொள்ளப்பட்டது. வ ருதற்காரணத்தைச் செய்யாதவிடத்துப் பின்னும்பிரிந்துபோய்ப் பகைவரோடு கூடுவானாதலால் இழைத்திருந்தென்றும், அன்பில்லா மற்போய்ப் பின்னுங்காரணத்தால் வந்தமையால் எண்ணிக்கொள லென்றும், சொல்லினார். பிரிந்துபோன சுற்றத்தாருள் - தீமைசெய் யப்போய் அதனைவிடவருவானும், அதுசெய்யாமற்போய்ப் பின்பு நன்மைசெய்யவருவானும், தழுவப்படுதலால் - தழுவுமாறு முறை யே இவ்விரண்டுபாட்டாலும் சொல்லப்பட்டது. (௰)

௭௪-ஆம்-அதி-பொச்சாவாமை.

அஃதாவது-அழகும், செல்வமும், ஆற்றலும், முதலானவைகளால்
மகிழ்ந்து தன்னைக்காத்துக்கொள்ளுதலிலும், பகையழித்தல்
முதலாகிய காரியங்களிலும், மறதி செய்யாமையாம்.
முன் சொல்லப்பட்ட சுற்றத்தாரால் பயனுள்ளது
இம்மறதி யில்லாவிடத்தாகலால் இதுசுற்றந்
தழாலின்பின் வைக்கப்பட்டது.

இறந்த வெகுளியிற் றீதே சிறந்த......*
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு......*

(இ-ள்.) சிறந்தவுவகை-மிகுந்த
அகமலர்ச்சியினது - மகிழ்ச்சியி
ன்-களிப்பால்வருவதாகிய-சோர்வு-மறதியானது-இறந்தவெகுளியி
ன்-அளவுகடந்தகோபத்தினும்-தீதே-(அரசனுக்குத்) தீதேயாம். எ
,று.) (கருத்து) மிகுமகிழ்ச்சியால்வரு மறதியானது அளவுகடந்த
கோபத்தைப்பார்க்கிலும் அரசனுக்குக்
குற்றந்தரும் என்பதாம்.❊ மிகுந்த
வுவகையாவது-பெருஞ்செல்வம்- பேரின்பம்-
பெருமிதம்- என்கிற இவைகளால்
வருவது - அளவு-பகைவரை வெல்லுதலுக்கும்,
கொடியோரை ஒறுத்தலுக்கும்,
வேண்டியது-அக்கோபம்-ஒரோவிடத்துப்
பகைவரையும் கொல்லும்,
இதுஅப்படிப்பட்டதல்லாமல் தன்னையே
கொல்லலால் அதனினும் தீதாயிற்று.

[௫௬]

(க) (உடஉ)

௫௪-ஆம்-அதி-பொச்சாவாமை.

பொச்சாப்புக் கொல்லும் புகழை

யறிவினை..............*

நிச்ச நிரப்புக்கொன்

றாங்கு.............................*

(இ-ள்.) பொச்சாப்பு-மறதியானது|-புகழை-(ஒருவனது)கீர்த்தியை3-கொல்லும்-கெடுக்கும்.—நிச்சநிரப்பு - நித்தியவறுமையானது|-அறிவினை-புத்தியை3-கொன்றாங்கு-கெடுக்கும்விதம்போல். எ, று.) (கருத்து) தரித்திர மறிவைக்கெடுக்கும். அதுபோல மறதி புகழைக்கெடுக்கும் என்பதாம். ※ நித்தியவறுமை-தினந்தோறும்யாசகத்தால் வருந்தித் தன்வயிறுநிறைத்தல்:—எப்படி அந்நித்தியவறுமை அறிவுடையானிடத்தே உண்டானால் அவனுக்கு இளிவரவாலும், பாவத்தாலும், இகழ்ச்சியை உண்டாக்கி அவன் கனத்தை அழிக்குமோ அப்படி மறதியும் புகழுடையவனிடத்தே உண்டாயின் அவனுக்குத் தன்னைக்காத்துக் கொள்ளாமையாலும், காரியக்கெடுதியாலும், இகழ்ச்சியை உண்டாக்கி அவன் கனத்தைஅழிக்குமென்பதாயிற்று. [இவ்விரண்டுபாட்டாலும் மறவியினது குற்றம்சொல்லப்பட்டது.]

(உ)

பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத் ....*

தெப்பானு லோர்க்குந் துணிவு............

.... *

(இ-ள்.) புகழ்மை-புகழுடையரா யிருக்கையானது-பொச்சாப் பார்க்கு-மறந்துநடப்பவர்க்கு- இல்லை-இல்லை.—அது- அவ்வில்லா மையானது!-(இந்நீதி நூலுடையவர்க்கு மாத்திரமல்லாமல்)-உலகத்து-உலகத்தில்-எப்பாலூலோர்க்கும்-எவ்வகைப்பட்ட நூலுடையவர்க்கும்-துணிவு- ஒப்பமுடிந்தது. எ,று.) (கருத்து) புகழ்ச்சி மறதியுடையோர்க்கில்லை இது எல்லா நூலார்க்குந் துணிவுதான் என்பதாம். ❋ அரசருக்கேயல்லாமல் அறமுதலாகிய நான்கிலும்முயல்பவர் யாவர்க்கும் அவை கைகூடாமையினாலே புகழ் இல்லை யென்பது தோன்ற-எப்பாலூலோர்க்குந் துணிவு என்றார். (௩)

அச்சமுடையார்க் கரணில்லை யாங்கில்லை.....................*
பொச்சாப் புடையார்க்கு நன்கு.........................*

(இ-ள்.) அச்சமுடையார்க்கு-பயமுடையவர்க்கு-அரண்-(காடுமலைமுதலாகிய) அரணங்களில்(இருந்தாலும்)-இல்லை-(அவைகளாலே பயன்!)இல்லை.—ஆங்கு-அதுபோல்- பொச்சாப்புடையார்க்கு-மறதியுடையவர்க்கு-நன்று-செல்வமெல்லாம்(உடையராயிருந்தாலும்)

௫௪-ஆம்-அதி-பொச்சாவாமை. (௨௨௫)

இல்லை-(அவைகளாலேபயன்) இல்லை. எ-று.) (கருத்து) பயமுடைய வர்க்கு நால்வகை யரணங்களிருந்தும் பயனில்லை அதுபோல மறதி யுடையவர்க்குச் செல்வங்க ளிருந்தும் பயனில்லை என்பதாம். ※ செல்வம்-நன்குக்கு ஏதுவாகலால்- அதனை நன்கென்றார். எப்படி அச்சமுடையவரது அரணம் அழியுமோ அப்படி மறதியுடையவர் செல்வமும் அழியுமென்பதாயிற்று. (௬)

முன்னுறக் காவா திழுக்கியோன் றன்பிழை.................... ※
பின்னூ றிரங்கி விடும்.................................... ※

(இ-ள்.) (வாராமற்காக்கப்படுந்துன்பங்களை})-முன்னுற-(அவை வருதற்கு) முற்பட-காவாது-(அறிந்துகாவாமல்) -இழுக்கியான்-மறந்திருந்தவன்|- பின்-பின்பு- ஊறு-உற்றகாலத்து- (காக்கக்கூடாமையால்)-தன்பிழை-தன்னுடைய அத்தவறு (நினைத்து)- இரங்கிவிடும்-இரங்கிவிடுவான். எ-று.) (கருத்து) துன்பம்வருமுன் காக்காமல்மறந்திருந்தவன் தன்குற்றத்தைக்குறித்துப் பின்விசனப்படுவான் என்பதாம். ※ அத்துன்பங்களாவன - மறதியார்த்துப் பகைவரா லேசெய்யப்படுவன, துன்பம்- உற்றகாலத்திலே காக்கக்கூடாமையால் இரங்கிவிடுமென்றார். [இவை மூன்றுபாட்டாலும் மறதியுடையவர்க்குவரும் துன்பம் சொல்லப்பட்டது.] (௭)

இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை.................. ※
வாயி னதுவொப்ப தில்.. ※

(இ-ள்.) (அரசர்க்கு)-இழுக்காமை-மறவாமையானது-யார்மாட்டும்-யாவரிடத்தும்-என்றும்-எக்காலத்திலும்- வழுக்காமை-ஒழிவில்லாமல்-வாயின்- நேர்படுமாயின்- அது-அதனை}-ஒப்பது-ஒக்குந ன்மையானது|-இல்-இல்லை. எ-று.) (கருத்து) யாவரிடத்து மறவிழி ல்லாமை வாய்க்குமாறு லதற்கொப்பொன்றுமில்லை என்பதாம். ❋ தொழில்செய்வோர்-சுற்றத்தார்- என்கிற தம்மவரிடத்தும் சமமாக வேண்டுதலால்- யார்மாட்டுமென்றும், தன் பெருக்கக் காலத்திலும் சுருக்கக்காலத்திலும் சமமாகவேண்டுதலால்- என்றுமென்றும், எல்லாக்காரியங்களிலும், சமமாகவேண்டுதலால்-வழுக்காமையென்று ம்,சொல்லினர். (சு)

அரியவென் றாகாத வில்லைபொச் சாவாக்............❋
கருவியாற் போற்றிச் செயின்..............❋

(உஉஎ) ௫௩-ஆம்-அதி-பொச்சாவாமை.

(இ-ள்.) அரியவென்று-(இவை) அரியவையென்று சொல்லப்பட்டு-ஆகாத-(ஒருவனுக்கு) முடியாதகாரியங்கள்|- இல்லை-இல்லையாகும்.—பொச்சாவா-மறவாத- கருவியால்-மனத்தினாலே -போற்றி-எண்ணி-செயின்-செய்தால். எ-று.) (கருத்து) மறவாத மனத்தா லாலோசித்துச்செய்தால் அரசனுக்கரியவை யொன்றுமில்லை என்பதாம். ❋ அந்தக்கரணமாதலால்-மனத்தைக் கருவியென்றார். இடைவிடாத நினைவும் தப்பாத எண்ணமும் உடையவர்க்கு எல்லாம் எளிதின்முடியுமென்பதாம். [இவ்விரண்டோட்டாலும் மறவாமையினது சிறப்புச் சொல்லப்பட்டது.] கரணம்-காரணம். (எ)

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா.......❋
திகழ்ந்தார்க் கெழுமையு மில்....................❋

(இ-ள்.) புகழ்ந்தவை-(நீதிநூலுடையாரால் இவைஅரசர்க்கு உரியவையென்று) உயர்த்திச்சொல்லப்பட்ட செயல்களை}-போற்றி-மறவுபற்றி-செயல்வேண்டும்- செய்யக்கடவர்.—செய்யாது- (அப்படிச்)செய்யாமல்- இகழ்ந்தார்க்கு-மறந்தவர்க்கு-எழுமையும்-எழுபிறப்பினும் வரும்நன்மை|- இல்-இல்லை. (ஆதலால்.) எ,று.) (கருத்து) மேலானவற்றை யரசரொண்ணிச் செய்யக்கடவர் செய்யாது மறந்தவர்க்கெழுபிறப்பினு நன்மையில்லை என்பதாம் ❋ அச்செயல்களாவன-மூவகை ஆற்றலும், நால்வகை யுபாயமும், ஐவகைத்தொழிலும், அறுவகைக்குணமும், முதலான செயல்கள்.—சாதிதருமமாகிய இவைகளின்வழுவிய அரசர்க்கு நரகத்துக்கமே உள்ளதாகலால்-எழுமையு மில்லையென்றார். எழுமை-ஆகுபெயர். [இதனால் மறவாது செய்யவேண்டுமவைகள் சொல்லப்பட்டன.] (அ)

இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்................❋
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து...................❋

(இ-ள்.) (அரசர்|)-தம்மகிழ்ச்சியின்-தமது மகிழ்ச்சியினிடத்து-தாமைந்துறும்போழ்து-தாம் செருக்குறும்பொழுது-இகழ்ச்சியின்-(முற்காலத்திலே அதனால் ஆகிய)மறதியினாலே-கெட்டாரை-கெட்டவர்களை}-உள்ளுக- நினைக்கக்கடவர். எ,று.) (கருத்து)அரசர்செல்வத்திலே மகிழ்ச்சியடையும்போது முற்காலத்திலே மகிழ்ச்சியிலேமறதியடைந்தவர்களை நினைக்கக்கடவர் என்பதாம். ❋ மகிழ்ச்சிக்குக் காரணமாயுள்ளவைகளோடு அவர்க்கு உண்டாகிய உரிமையை மகிழ்ச்சிமேலேற்றி- தம்மகிழ்ச்சியினென்றும், இகழ்ச்சியும்

கேடும் உடன்றோன்றுமாகலால்- மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்தென்றும், சொல்லினார்.-கெட்டாரை நினைக்கவே நாமும் அப்படியேகெடுவோமென்று அதனிடத்தேசெருக்குறாரென்பது கருத்து.

உள்ளியதெய்த லெளிதுமன் மற்றுந்தா...... *
னுள்ளிய துள்ளப் பெறின்...... *

(இ-ள்.) (அரசனுக்கு) -உள்ளியது- (தான்பெற) நினைத்தபொருளை3-எய்தல்-(அந்நினைத்தபடியே) அடைதல்-எளிதுமன்-எளிதாகும்.—மற்றும்- பின்னும்-தான்-தான்-உள்ளியது-அந்நினைத்தபொருளையே3-உள்ளப்பெறின்-நினைக்கக்கூடுமானால். எ-று.) (கருத்து) அரசனினைத்தபொருளை நினைக்கக்கூடுமானலப்பொருளையடைதலெளிதாகும் என்பதாம். ❊ அதுகூடாதென்னும் ஒழிந்த சொற்பொருளைக்காட்டலால்- மன் ஒழியிசையிலே வந்தது. இசையென்பது சொல்.—அதனையே நினைத்தலாவது-மறதியில்லாமல் அதனிடத்தே முயற்சிசெய்தல். [இவையிரண்டுபாட்டாலும் மறவாமைக்கு உபாயஞ்சொல்லப்பட்டது.] (௰)

௫௫-ஆம்-அதி-செங்கோன்மை.

அஃதாவது-அரசனாலே செய்யப்படு முறையின் ...மை. அந்த முறையானது ஒருபக்கத்திலே சாயாமற்செவ்வையாகிய கோல்போலுதலாலே செங்கோலெனப்பட்டது. அது மறதியில்லாத அரசனாலே செய்யத்தக்கதாகலால் இது பொச்சாவாமையின் பின் வைக்கப்பட்டது.

ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்...... *
தேர்ந்துசெய் வஃதே முறை...... *

(இ-ள்.) (தன் கீழ்வாழ்வோராலே செய்யப்பட்ட குற்றத்தை)-ஓர்ந்து-நாடி-யார்மாட்டும்- யாவரிடத்தும்-கண்ணோடாது-முகங்கொடாமல்-இறைபுரிந்து- நடுவுநிலைமையைப்பொருந்தி- தேர்ந்து-(அக்குற்றத்துக்குச் சொல்லப்பட்ட தண்டத்தை நூலோரோடும்)ஆராய்ந்து-செய்வஃதே- அவ்வளவினதாகச் செய்தலே |- முறை-செங்கோலாம். எ-று.) (கருத்து)
அரசன் குற்றத்தையாராய்ந்து எல்லாரி (௨௨௪)
[௫௭]

௫௫-ஆம்-அதி-செங்கோன்மை.

டத்து ந டுவுநிலைமைபொருந்தி யரசாள்வதே
செங்கோலாம் என்ப
தாம். ❋ நடுவாய்நிற்கை இறை என்கிற அரசனுக்கு இயல்பாகலால் அரசனை இறையென்றும், உயிரினும் சிறந்தவர்டத்தும் என்றற்கு-யார்மாட்டுமென்றும், சொல்லினர். இறைமை-இறை. எ-ம், செய்வது-செயவஃது-எ-ம்,விகாரப்பட்டன. [இதனாலே செங்கோன்மையினது இலக்கணம் சொல்லப்பட்டது.]
(௧)

வா னோக்கி வாழு முலகெல்லா
மன்னவன் ....❋
கோனோக்கி வாழுங்
குடி... ❋

(இ-ள்.) உலகெல்லாம்- உயிர்களெல்லாம்|- வானோக்கி- மனழயை நோக்கி-வாழும்-வாழும்—(என்றாலும்)-குடி-குடிகளானவை|-மன்னவன்-அரசனது-கோனோக்கி-செங்கோலைநோக்கி- வாழும்-வாழு

ம். எ.று.) (கருத்து) உயிரனைத்து மழையைநோக்கிவாழும் குடிக ளனைத்து மரசன் செங்கோலைநோக்கி வாழும் என்பதாம். ❁ வானு லாகிய உணவை வானென்றும், கோலாலாகிய வமத்தைக்கோலென் றும், சொல்லினர்.—அவ்வேமம் இல்லாதவிடத்தே உணவு உளதாயி ருந்தாலும் குடிகளுக்கு அதனாலே பயன் இல்லையென்பதாம். (உ)

அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய் ……………*
நின்றது மன்னவன் கோல்……………*

(இ-ள்.) மன்னவன்கோல்-அரசன்

செ ங்கோலானது | —அந்தணர்

நூற்கும்-அந்தணர்க்கு உரித்தாகிய வேதத்திற்கும், - அறத்திற்கும்- (அதனாலே சொல்லப்பட்ட) தருமத்திற்கும்,-ஆதியாய்-காரணமாகி -நின்றது-நிலைபெற்றது. எ.று.) (கருத்து) வேதத்திற்குந் தருமத்தி ற்குங் காரணமாகி நின்றது அரசன் செங்கோலாம் என்பதாம். ❁ வேதமும், அறமும், அநாதியாயினும் செங்கோல்இல்லாத விடத்து நடவாதாகலால் அதனை அவைகளுக்கு ஆதியென்றும், அப்பெற்றி யுடைத்தாக்கு ஆதியாவது வேறொன்றும் இல்லையென்றற்கு நின்றதெ ன்றும், சொலலினர். [இவையிரண்டு பாட்டாலும் செங்கோலது சி றப்புச் சொல்லப்பட்டது.] (௩)

குடிதழீஇக் கோலோச்சு மாநில

மன்ன……………*
னடிதழீஇ நிற்கு முலகு……………
…………*

(இ-ள்.) உலகு-உலகத்தார்

|-குடிதழீஇ-(த ன்)குடிக ளையும் அணைத்து-கோலோச்சும்-செங்கோலையும் செலுத்தும்--மாநிலமன்னன்-

இருக்கும்-அறி-செங்கோ ன்மை.

(உஉஎ)

பெருநிலவேந்தனது-அடிதழீஇ-அடியைப்பொருந்தி- நிற்கும்-நிற்பார். எ-று.) (கருத்து) உலகத்தார் குடிகளைத்தழுவி அரசனடியைப்பொருந்தி நிற்பார் என்பதாம். ❋ அணைத்தல்-இன்சொற் சொல்லுதலும், தளர்ந்தவிடத்து வேண்டுமவைகொடுத்தலும், முதலானவை. இவ்விரண்டும் தப்பாமற் செய்பவன் நிலமுழுதும் ஆள்வானாகையால் அவனை மாநிலமன்னனென்றும், அவனிடத்தில் யாவரும்நீங்காத அன்புடையவராவாராகலால்- அடிதழீஇ நிற்குமுலகென்றும் சொல்லினர். (௪)

இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட.........................❋
பெயலும் விளையுளுந் தொக்கு .... ❋

(இ-ள்.) பெயலும்-பருவமழையும்| -விளையுளும்- (குறையாத)விளைவும்|-தொக்கு-கூடி-இயல்புளி-(நூல்களாலேசொல்லப்பட்ட) இயல்பால்-கோலோச்சும்-செங்கோலைச்செலுத்தும் -மன்னவன்-அரசனது-நாட்ட-நாட்டிலுள்ளனவாம். எ-று.) (கருத்து) நீதிமன்னனாட்டிலே மழையும் விளைவு நிறைந்திருப்பனவாம் என்பதாம். ❋ அவனதுநாட்டிலே வானமும் நிலமும் சேரத் தொழிற்பட்டு வளஞ்சுரக் குமென்பதாம்.

(ரு)

வேலன்று வென்றி தருவது

மன்னவன்.....................*

கோலதூஉங்

கோடா தெனின்..........................*

(இ-ள்.) மன்னவன்-அரசனுக்கு- வென்றிதருவது-(போரில்)வெற்றியைத்தருவது|-வேலன்று-(அவனெறியும்)வேற்படையன்றாகும்.—கோல்-(அவனது)செங்கோலாகும் —அதூஉம்-அக்கோலும்|—(அப்படிப்பட்டதாவது) -கோடாதெனின்-(தான்) கோணுதிருக்குமாயின். எ,று.) (கருத்து) அரசனுக்கு வேல் வெற்றியைத் தராது. செங்கோல் வெற்றியைத்தரும் என்பதாம். ※ கோல் செம்மையாயிருக்கின்றவிடத்தே வேல் பயன்படு மென்றற்கு- வேலன்று வென்றிதருவது கோலென்றார். (௬)

இறைகாக்கும் வையக மெல்லா மவனை.................. *

முறைகாக்கு முட்டாச் செயின்........................*

(இ-ள்.) இறை-அரசனானவன்-வையகமெல்லாம்- பூமிமுழுவையும்}-காக்கும்-காப்பாற்றுவான்.—முறை-(அவனது)செங்கோலானது|-அவனை}-காக்கும்-காப்பாற்றுவதாகும்.- முட்டாச்செயின்-மு

ட்டாமற் செலுத்துவானாயின். எ-று.) (கருத்து) அரசன் பூமியைக் காப்பான். செங்கோலவனைக் காக்கும் என்பதாம். ❁ முட்டாமற் செங்கோல் செலுத்திய விதத்தை மகனைத் தேர்க்காலில் வைத்தூர்ந்த சோழனிடத்தும், அயலார்வீட்டுக்கதவைத்தட்டிய தன்கையைக் குறைத்த பாண்டியனிடத்தும், காண்க. [இந்நான்குபாட்டாலும் செங்கோல்செலுத்தியவன் அடையும் பயன் சொல்லப்பட்டது.]

எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்.........*
றண்பதத்தாற் றானே கெடும்.............................*

(இ-ள்.) (வழக்கறிவிப்பவர்க்கு)-எண்பதத்தான்-எளிதானசமயத்தையுடையவனாகி-ஓரா-(அவரால் அறிவிக்கப்பட்டவைகளை நூலோர்பலரோடும்)ஆராய்ந்து-முறைசெய்யா-(நின்றவுண்மைக்கேற்பாக)முறைசெய்யாத-மன்னவன்-அரசன்|- தண்பதத்தால்-தாழ்ந்தபதத்திலேநின்று-தானேகெடும்- தானேகெடுவான். எ-று.) (கருத்து) எளிய சமயமுடையனாகி யாராய்ந்து முறைசெய்யாத மன்னன் தானேகெடுவான் என்பதாம். ❁ தாழ்ந்தபதம்-பாவமும், பழியும், அடைந்துநிற்குநிலை அல்லவை செய்தார்க்கு அறங்கூற்ற மாகலால் பகைவரில்லா திருந்தாலும் தானேகெடுமென்றார். செலுத்தாதவனது கேடுசொல்லப்பட்டது.]

[இதனுல் முறை

(அ)

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்....................*
வடுவன்று வேந்தன் றொழில்...................................*

(இ-ள்.) குடி-குடிகளை-புறங்காத்து-பிறர்வருத்தாமற்காத்து-ஓம்பி-தானும் வருத்தாமல் ஆதரவுசெய்து-குற்றம்-(அவரிடத்திலே) குற்றமுண்டானால்-கடிதல்-(அதனைத்தீர்க்கும்படி) தண்டித்தல்-வேந்தன்றொழில்-அரசனது தொழிலாம் (ஆதலால்)-வடுவன்று-பழியாகாது. எ,று.) (கருத்து)

குடிகளைக்காத்துக் குற்றங்கடிதல் அரசனதுதொழிலாம் என்பதாம். ❊ துன்பஞ்செய்தல்- பொருள்வாங்கல்-கொல்லுதல்-என ஒறுப்பு என்கிற தண்டம் மூன்றாம். அவைகளுள் இங்கேசொல்லப்பட்டவை-குற்றங்கடிதலென்றதனால் முன்னையவிரண்டுமாம். தன்கீழ்வாழ்வாரை ஒறுத்தல்-அறனல்லாமையால் வடுவாமென்பதனை ஆக்ஷேபமாக்கிக்கொண்டு அது அரசனுக்கு அவரை அக்குற்றத்தினீக்கிப் பரிசுத்தராக்குதலால்- சாதிதருமமென்றார். (௯)

கொலையிற் கொடியாரை
வேந்தொறுத்தல் பைங்கூழ்.*
*களைகட் டதனொடு நேர்........
...............*

(இ-ள்.)வேந்து-அரசனானவன்- கொடியாரை-கொடியவரை}-கொலையின்-கொலையினாலே-ஒறுத்தல்-தண்டித்து (நல்லோரைக்காப்பாற்றல்)-(உழவனானவன்)-பைங்கூழ்-பயிரை}-களைகட்டதனொடு-களைவைக்களைத்துகாப்பாற்றலோடு-நேர்- ஒக்கும்.எ-று.) (கருத்து) அரசன் கொடியவரைத் தண்டித்து நல்லவரைக் காத்தலுழவன்பயிர்க்குக் களையெடுத்தல்போலாம் என்பதாம். ❊ கொடியோர் தீக்கொளுவுவோர்- நஞ்சிடுவோர்- படையிற் கொல்வோர்- கள்வர்- வழியலைப்போர்-கொள்ளையிடுவார்- பிறனில்லாளை விரும்புவோர்இவர்முதலாயினோர்கள். இப்படிப்பட்டவரை அரசன்கொல்லாதவிடத்துப் புல்லுக்களைக்கு அஞ்சாநின்ற பயிர்போன்று பலவருத்தங்களை அடைந்து உலகத்தார் துன்பப்படுவார். [இவையிரண்டுபாட்டாலும் செங்கோல்செலுத்தும் அரசனுக்குத் தீயோரிடத்து மூவகைத்தண்டமும் செய்யவேண்டுமென்பது சொல்லப்பட்டது.] (ம)

❊()*()*()*()*()*()*()*()*(.)*()*()*()*()*()*()*()*()❊

ருசு-ஆம்-அதி-கொடுங்கோன்மை.

அஃதாவது-அம்முறையினது கோணுதற்றன்மையாம்-செங்கோன்மைக்கு மாறுகலால் இது அதன்பின் வைக்கப்பட்டது.

கொலைமேற் கொண்டாரிற் கொடிதே யலைமேற்கொண்

டல்லவை செய்தொழுகும்

வேந்து.... ....❊

(இ-ள்.) அலை-(பொருளை விரும்பிக்குடிகளை) அலைத்தற்றொழிலை}-மேற்கொண்டு-(தன்)மேற்கொண்டு-அல்லவை-முறையல்லாதவைகளை}-செய்து-செய்து-ஒழுகும்- நடக்கும்- வேந்து- அரசனானவன்|-கொலை-(பகைமைபற்றிக்) கொல்லுதற்றொழிலை}-மேற்கொண்டாரின்-(தம்)மேற்கொண்டு நடப்பவரினும்-கொடிதே-கொடியவனுவான். எ,று.) (கருத்து) அநியாயஞ்செய்யுமரசன் கொலைசெய்பவரினுங் கொடியன் என்பதாம். ❋ அவர்செய்வது ஒருநாளைத்துன்பம். இவன்செய்வது எந்நாளும் துன்பமா மென்பதுபற்றி அவரினும் கொடியனென்றார். அலைத்தல்- கொலையினும் கொடியதென்பதாயிற்று. (க)

[௫௫]

(உாய)

இக-ஆம்-அதி-கொடுங்கோன்மை.

வேலொடு நின்றான்

இடுவென் றதுபோலும்........❋

கோலொடு நின்றா

னிரவு........................❋

(இ-ள்.) கோலொடு நின்றான்-கோலோடு நின்றான்- நின்றவரசன் இரவு-(குடிகளைப்பொருள்) வேண்டுதலானது-வேலொடு- வேலாயுதத்தோடு-நின்றான்-(வழியில் அலைந்து தப்பறிக்குமிடத்துத்தனியே) நின்றகள்வன்-இடுவென்றதுபோலும்-(வழிப்போக்கனை நோக்கி உன்கைப்பொருளைத்) தாவென்று வேண்டுதல்போலும். எ-று.) (கருத்து) கொடுங்கோலரசன் குடிகளை வருத்திப்பொருள்வேண்டுதல் வழிப்போக்கனைக் கள்வன் வருத்திப் பொருள்கொடு வென்றல்போல் என்பதாம் ❋ வேலொடு நின்றானென்றதனாலே - பிறவொடு நில்லாமையும், இரவென்றதனாலே- குடியிறையல்லாமையும், கொள்ளப்பட்டன.—தாராக்கால் -தண்டிப்பேனென்னுங்குறிப்பினனாகலால் இரந்துவாங்குதலும் கொடுங்கோன்மை யாயிற்று. [இவ்விரண்டு பாட்டாலுங் கொடுங்கோன்மையினது குற்றஞ்சொல்லப்பட்டது.]

நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ..................❋
னாடொறு நாடு கெடும்......................................❋

(இ-ள்.) நாடொறும்-நாள்தோறும்-நாடி-(தன்னாட்டிலேதோன்றுந்தீமைகளை) ஆராய்ந்து-முறை-முறைமையை-செய்யா- (அதற்குஒக்கச்) செய்யாத -மன்னவன்-அரசன்|— நாடொறும்-நாள்தோறும்-நாடுகெடும் -நாடிழப்பான். எ-று.) (கருத்து) தன்னாட்டிற் குற்றங்களையாராய்ந்து நீதிசெலுத்தாதமன்னன் தன்னாட்டையிழப்பான் என்பதாம். ❋ நாடு உறுப்பாகலால் அதன்கெடுதல் அவன்மேல்நின்றது. இழத்தல்-பயன் அடையாமை.

(௩)

கூழுங் குடியு மொருங்கிழக்குங்
கோல்கோடிச்.......... ❋
சூழாது

செய்யு மரசு..*

(இ-ள்.) சூழாது-(மேல்விளைவை) எண்ணாமல்- கோல்கோடி- முறைதப்ப-செய்யும்-செய்யும்- அரசு- அரசனானவன்|-(அச்செயலால்)-கூழும்-(முன்னே சம்பாதிக்கப்பட்ட)பொருளையும்}- குடியும்-(பின் அது சம்பாதிக்கைக்கு ஏதுவாகிய) குடிகளையும்}- ஒருங்கு-ஒருசேர-இழக்கும்-இழப்பான். எ,று.) (கருத்து) மநுநீதிதப்பிய வரசானவரசன் பொருளையுங் குடிகளையு மிழப்பான் என்பதாம். * கோடியென்னும் வினையெச்சம்- கோடவென்னும் வினையெச்சப்

[illegible]-அதி-[illegible]

(உ-ரை)

பொருளில் வந்தது. முன்சம்பாதிக்கப்பட்ட பொருளை இழத்தற்கு ஏதுவருகிறபடியைச் சொல்லுகிறார். (ச)

அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே...............*
செல்வத்தைத் தேய்க்கும் படை.............................*

-(இ-ள்) செல்வத்தை-(அரசன்)செல்வமாகிய (மரத்தை)-தேய்க்கும்-தேய்க்கும்-படை-வாளாவது-(அவன்) முறைசெய்யாமையினாலே-அல்லற்பட்டு-(குடிகள்) துன்பப்பட்டு-ஆற்றாது-(அதனைப்) பொறுக்கமாட்டாமல்- அழுதகண்ணீரன்றே - அழுதகண்ணீரல்லவோ. எ,று.) (கருத்து) குடிகளழுத கண்ணீரல்லவோ கொடுங்கோல்வேந்தன்செல்வத்தையறுக்கும்வாள்என்பதாம். ❋ அல்லற்படுத்தியபாவத்தினது தேய்த்தல் அதற்கு ஏதுவாகிய கண்ணீர்மேல் நின்றது. அக்கண்ணீரைக் காட்டிலும் கொடியது வேறில்லாமையால் செல்வங்கடிதிலே தேயுமென்பது கருத்து (ஏகதேச வுருவகவணி.)

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேல் ....❋

மன்னவா மன்னர்க் கொளி

..................................❋

(இ-ள்.) மன்னர்க்கு-அரசர்க்கு-மன்னுதல் -(புகழ்களாலே) நிலைபெறுதல்-செங்கோன்மை-செங்கோன்மையினால்(ஆகும்)-அஃது -அச்செங்கோன்மை-இன்றேல்-இல்லையாயின்-மன்னர்க்கு- அரசர்க்கு-ஒளி-அப்புகழ்களானவை-மன்னுவாம்-உண்டாகாவாம். எ,று. (கருத்து) அரசர்க்குச் செங்கோன்மையே புகழ்களாம்.அஃதில்லா

விடிலப்புகழ்க ளுண்டாகாவாம் என்பதாம். * மன்னுமை - ஒரு போதும் நிலையாமை பழிக்கப்பட்டால்புகழ்நிலையாமையால்தாமும் நிலையாரென்பதாயிற்று. வெற்றிகொடைமுதலாகிய ஏதுக்களால் புகழ் பலவகைப்படுதலால் மன்னுளனப் பன்மையாற் சொல்லினார். அப்புகழ்களெல்லாம்-செங்கோன்மை யில்லாதவிடத்து இல்லையாமென்பதாம். [இவைநான்குபாட்டாலும் ஆடையும் குற்றம் சொல்லப்பட்டது.]

கொடுங் கோன்மையான்

(சா)

துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த.............*
னளியின்மை வாழு முயிர்க்கு ....*

(இ-ள்.) வேந்தன்-அரசனது-அளியின்மை-அருளில்லாமையானது-வாழும்-(அவனாட்சியிலே)வாழும்- உயிர்க்கு-குடிகளுக்கு-துளி-மழையினது-இன்மை- இல்லாமையானது-ஞாலத்திற்கு- பூமியில்

வாழுமுயிர்களுக்கு -எற்று- எவ்வகைத்துன்பந்தருமோ.—அற்றே -அவ்வகைத்துன்பமேதரும். எ-று.) (கருத்து) மழையில்லாமை துன்பந்தரும். அதுபோல அரசனருளில்லாமை குடிகளுக்குத் துன்பந்தரும் என்பதாம். ❋ உயிரென்றது-குடிகளை முன்வானோக்கி வாழுமென்றதனை-எதிர்மறைமுகத்தாற் சொல்லியபடி. (௭)

இன்மையி னின்னா துடைமை முறைசெய்யா.............*
மன்னவன் கோற்கீழ்ப் படின்..............................*

(இ-ள்.) முறைசெய்யா- முறைமையைச்செய்யாத- மன்னவன்- அரசனது-கோற்கீழ்- கொடுங்கோலின்கீழ்- படின்-வாழின்-(யாவர்க்கும்)-உடைமை-(பொருள்) உடைமையானது- இன்மையின்- இல்லாமையினும்- இன்னாது - அதிக துக்கத்தைச் செய்வதாகும். எ-று.) (கருத்து) அரசன் கொடுங்கோலின்கீழ் வாழ்ந்தால் வறுமையினுங் கொடிய துன்பந்தரும் என்பதாம். ❋ தனக்குரியபொருளோடு அமையாது மேலும் விரும்புவானது நாட்டிலே அடிகுத்துழுதலன்னவை பொருளுடையார்க்கே ஆதலால் அவ்வுடைமைஇல்லாமையினும்இன்னாதாயிற்று. [இவ்விரண்டு பாட்டாலும் அவனாட்டு வாழ்வார்க்குவரும் குற்றம் சொல்லப்பட்டது.] (௮)

முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி..........*
யொல்லாது வானம் பெயல்.................................*

(இ-ள்.) மன்னவன்-அரசன்- முறைகோடி- முறைதப்ப-செய்யின்-(பொருளைச்) சம்பாதிப்பானாயின்-(அவனது நாட்டிலே)-உறை-பருவமழையானது-கோடி -இல்லாமற்போக- வானம்-மேகமானது|-பெயல்-பொழிதலை}-ஒல்லாது-பொருந்தாது. எ-று.) (கருத்து) அரசன் மறுமுறைதப்பி னவர்களின் லவனாட்டிலே மழைபெய்யாது என்பதாம். ❁ பருவமழை-யில்லாமைக்கு வ் ஆ வருகின்றபாட்டாற் சொல்லுகிறார். கோடி எனவந்த இரண்டுசொற்களும் கோட என்னுஞ்சொற்பொருளில் வந்தன. (௯)

ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்........❋
காவலன் காவா னெனின்....................................❋

(இ-ள்.) காவலன்-காப்பாற்றற்கு உரிய அரசன்|- காவனெனின்-(உயிர்களைக்) காப்பாற்றானாயின்- (அவனது நாட்டிலே)- ஆ-பசுக்களும்|-பயன்குன்றும்- பால்சுருங்கும்.-அறுதொழிலோர்-அந்தணரு

ம்|-நூல்- நூல்களை}-மறப்பர்-மறந்துவிடுவர். எ-று.) (கருத்து) அரசன்உயிர்களைக் காவாவிடின் லவனாட்டிற் பசுக்கள் பால்சுருங்கும் வேதியர் வேதம்மறப்பர் என்பதாம். ❁ ஆபயன்-ஆவினின்றுங் கொள்ளப்படும்பயன்-அறுதொழிலாவன- வேதமோதல்- ஓதுவித்தல்-யாகஞ்செய்தல்- செய்வித்தல்- ஈதல்- ஏற்றல்- என்பவை.—பால்குறைதலாலும், நூல்மறத்தலாலும், தேவர்க்கு யாகம் நடவாமையால் மழைபெய்யா தென்பதாயிற்று [இவையிரண்டுபாட்டாலும் அவனாட்டில் உண்டாம் குற்றம்சொல்லப்பட்டது.] (௰)

ருஎ-ஆம்-அதி-

வெருவந்தசெய்யாமை.

அஃதாவது- குடிகள் அஞ்சுவதும், பகுதி என்று சொல்லப்படுகிற
மந்திரிமுதலாகிய அங்கங்கள் அஞ்சுவதும், தான் அஞ்சுவது
ம். ஆகிய தொழில்களைச் செய்யாமை. அவைசெய்தல்
கொடுங்கோன்மையிலே சேர்தலால்
இது அதன்
பின் வைக்கப்பட்டது.

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்...... ....*
லொத்தாங் கொறுப்பது வேந்து ....*

(இ-ள்.) (ஒருவன் மெலியவனுக்குத் தீங்குசெய்த விடத்து) -தக்காங்கு- நடுவாய்நின்று- நாடி-(அதனை)ஆராய்ந்து- தலைச்செல்லாவண்ணத்தால்- (பின்னும்) அப்படிப்பட்ட காரியத்திலே செல்லாமற் பொருட்டு-ஒத்தாங்கு- (அக்குற்றத்துக்கு) ஏற்க-ஒறுப்பது-(அவனைத்த ண்டிப்பவனே)-வேந்து-அரசனாவான்.
எ-று.) (கருத் து) நடு வா ய்நின்று
ஒருவன்குற்றத்தை யாராய்ந்து தக்கபடி

தண்டிப்பவ
னே யாசன் என்பதாம். ❀ இதனாலே தகுந்ததண்டம் நாடாமையு
ம், வேறொருகாரணம்பற்றி அதிகமாகத் தண்டித்தலும், குடிகள் அ
ஞ்சுந்தொழிலாதல் பெற்றாம். (௧)

கடிதோச்சி மெல்ல வெறிக
நெடிதாக்க.......... ....*
நீங்காமை வேண்டு
பவர்.................... ....*

(இ-ள்.) ஆக்கம்-செல்வமானது- நெடிது-
நெடுங்காலம்-நீங்கா மை-நீங்காமையை}-
வேண்டுபவர்-விரும்புவோர்|-கடிதோச்சி-(அ
[௫௧]
(உருக)
ளை-ஆம்-அதி-வெருவந்தசெய்யாமை

த்தகுந்ததண்டம் செய்யத்தொடங்கும்போது) அளவுகடக்கச்செய்பவர்போலே தொடங்கி- மெல்லவெறிக-(செய்யும்போது) அளவுகடவாமற்செய்யக்கடவர். எ,று.) (கருத்து) செல்வம் வேண்டுவோர்வலியதண்டனை செய்பவர்போலத் தொடங்கி மெலியதண்டனைசெய்யக்கடவர் என்பதாம். ❀ [illegible] கடிதோச்சல்-குற்றஞ்செய்வார் அதனை அஞ்சுதற்பொருட்டு [illegible] மெல்லவெறிதல்: யாவரும் அஞ்சாமைப்பொருட்டும், ஆம். [illegible] குறைதல்பற்றி - தகுந்ததண்டஞ்செய்தலை மெல்லவென்றார். ஓச்சுதல்-எறிதல்-இரண்டும் உவமிப்பற்றிவந்தன. [இவ்விரண்டு பாட்டினும் குடிகள் அஞ்சுவன செய்யாமையினது இலக்கணம் சொல்லப்பட்டது.] (உ)

வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயி ………*
னொருவந்த மொல்லைக் கெடும்……………… *

(இ-ள்.) அரசன்-வெருவந்த-(குடிகள்)அஞ்சப்பட்டசெயல்களை—செய்து-செய்து- ஒழுகும் நடக்கும்-வெங்கோலனாயின்-கொடுங்கோலனாயிருந்தால்- ஒருவந்தம்-நிச்சயமாகவே-ஒல்லை-கடிதில்—கெடும்-(அவன்) கெடுவான். எ,று.) (கருத்து) குடிகளஞ்சத்தக்கவற்றைச்செய்யுங் கொடுங்கோலரசன் விரைவிற்கெடுவான் என்பதாம். ❀ அச்செயல்களும்-கேடும்-பின்னே சொல்லப்படும். (ங)

இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்த…….*
னுறைகடுகி யொல்லைக் கெடும் …………………*

(இ-ள்.) இறை-(நம்) மாசனானவன்- கடியனென்று - பொல்லாதவனென்று- உரைக்கும்- (குடிகளாலே சொல்லப்படுகிற)- இன்னாச்சொல்- துன்பந்தருஞ்சொல்லையுடைய- வேந்தன்-அரசன்|-உறைகுறுகி-ஆயுளுங்குறைந்து- ஒல்லைக்கெடும்- (செல்வமும்) கடிதினிழப்பான். எ,று.) (கருத்து) கொடியனென்று சொல்லப்பட்ட கொடுங்கோலரசன் ஆயுள்குறைந்து செல்வமிழப்பான் என்பதாம்.※ ஆயுள்குறைதலாவது-அச்சொல்லில்லாதவர்க்கு உள்ளதிலே குறைதல்.

அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்.....*
பேஎய்கண் டன்ன துடைத்து.... ....*

(இ-ள்.) அருஞ்செவ்வி-(தன்னைக்காணவேண்டுவோர்க்கு)அரிதாகிய சமயத்தையும்,— இன்னாமுகத்தான்- (கண்டால்) இனிமையில்லாத முகத்தையும், உடையவனது- பெருஞ்செல்வம் -பெரியசெல்வம்-பேஎய்-பேயால்- கண்டதன்னது-காணப்பட்டதுபோல்வதொ

ருகுற்றத்தைநோக்கிப் பார்த்து-உடையதானும் (கருத்து) அரியசமயத்தையும் கடியமுகத்தையு முடைய அரசன் செல்வமானது பேய்கண்ட செல்வம்போலாம் என்பதாம். ❋ எனவே இவ்விரண்டும் அஞ்சுவனசெய்தலாயிற்று. இவைசெய்வானை ஒருவரும் சேராமையானும் அவன்செல்வம் தனக்கும் பிறருக்கும பயன்படாதென்பது பற்றிப் பேய்கண்டன்னதுடைத்தென்றார்.-காணுதல்-தன்வசமாக்கல்.

கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வ.......... ❋
நீடின்றி யாங்கே கெடும்....................................❋

(இ-ள்.) (அரசன்)-கடுஞ்சொல்லன்-கடியசொல்லையுடையவனும், —கண்ணிலன்-கண்ணோட்டமில்லாதவனும்,-ஆயின் - ஆனால்-நெடுஞ்செல்வம்-(அவனது) பெரியசெல்வமானது- நீடின்றி- நீடுதலில்லாமல்-ஆங்கே-அப்பொழுதே- கெடும்- அழியும். எ-று.) (கருத்து) அரசன் வன்சொல்லுடையவனு மிரக்கமில்லாதவனுமானால் அவன் செல்வங்கெடும் என்பதாம்.❋ வேட்டங்கடுஞ்சொன் மிகுதண்டஞ் சூது பொருள், வீட்டங்கள் காமமோடேழ். எனப்பட்ட வினைகளுள் கடுஞ்சொல்லையும், மிகுதண்டத்தையும் இவர்அச்சஞ்செய்தலுள் அடக்கினார். இவைசெய்தபொழுதே கெடுஞ் மென்றற்கு-நெடுஞ்செல்வமென்றார்.

சிறுமைய தல்லதாயினு

(௬)

கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த ....*
னடுமுரண் டேய்க்கு மரம். ....*

(இ-ள்.) கடுமொழியும்-கடியசொல்லும்|-கையிகந்த தண்டமும்-(குற்றத்தின்) மிகுந்ததண்டமும்|-வேந்தன்- அரசனது- அடும்- (பகை) வெல்லுதற்குஎற்ற- முரண்-மாறுபாடாகிய (இரும்பை)- தேய்க்கும்-தேய்க்கின்ற-அரம்-அரங்களாம். எ,று.) (கருத்து) வன்சொல்லும் அதிகதண்டமும் அரசன் பலன்களை யழிக்கும் அரங்களாம் என்பதாம். ❋ கடியசொல்லாற் சேனையும், அதிக தண்டத்தினாலே தேசமும், கெட்டு மாறுபாடு சுருங்கிவருதலால் அவைகளை அரமாக்கினர். (ஏகதேசவுருவகம்) [இவைஐந்துபாட்டாலும் சுடயமில்லாமை இன்னுழுகமுடைமை- கண்ணோட்ட மில்லாமை- கடுஞ்சொற்சொல்லல்- அதிகதண்டம்- இவைகள்குடிகள்அஞ்சுந்தொழில்களென்பதும், இவைசெய்தலுன் ஆயுளும் பகைவெல்லுமுரணும் செல்வமும் இடைக்கமென்பதும், சொல்லப்பட்டன.] (எ)

(உருசு)

௭-ஆம்-அதி-வெருவந்தசெய்யாமை.

இனத்தாற்றி யெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச் ....*
சீறிற் சிறுகுந் திரு. ....*

(இ-ள்.) (காரியவெண்ணத்தை) -இனத்தாற்றி-மந்திரிகளிடத்தே வைத்து-எண்ணாத-(அவரோடுதானும்) எண்ணிச்செய்யாத- வேந்தன்-அரசன்-(தன்காரியத்தப்பியவிடத்து) -சினத்தாற்றி- (தன்னைக்)

கோபத்திலேசெலுத்தி-சீறின்-(அவரைச்) சோபிப்பானாயின்-திரு-(அவனது) செல்வமானது|-சிறுகும்-(நாடோறும்) சுருங்கும். எ-று.) (கருத்து) காரியங்களை மந்திரிகளுக்கொப்பித்து அவரோடெண்ணிச் செய்யாத அரசன் அம்மந்திரிகளைக் கோபிக்கி லவன்செல்வங்கெடும் என்பதாம். ※ இராச்சியபாரத்தைத்தாங்கிச் செலுத்துதலொப்புமையால் மந்திரிகளை இனமென்றும், அத்தவறு தனதென்றிராமல் அவர்மேல் ஏற்றிக்கோபித்தால் அவர் அஞ்சி நீங்குவாராதலால் அத்தவறு தீரும்விதமும், அப்பாரம் இனிது செலுத்தும்விதமும், இல்லையென்பதுநோக்கித் திருசிறுகுமென்றும், சொல்லினார். [இதனால் மந்திரிமுதலாகிய பகுதி அஞ்சும் தொழிலும், அதுசெய்தால் அடைவதும், சொல்லப்பட்டன.] (௮)

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்..........※
வெருவந்து வெய்து கெடும்..........................※

(இ-ள்.) சிறைசெய்யா-(முன்னே தனக்கொரு காப்பிடமாக) அரண்செய்துகொள்ளாத- வேந்தன்-அரசன்|- செருவந்தபோழ்தில்-போர்வந்தகாலத்திலே-வெருவந்து- (காப்பு இல்லாமையால்) அஞ்சி-வெய்து- விரைவிலே-கெடும்- கெடுவான். எ-று.) (கருத்து) அரண்கட்டிக்கொள்ளாத அரசன் விரைவிற் கெடுவான் என்பதாம். ※ பகையை அஞ்சிச்சேர்ந்தவர் நீங்குதலால் தனியனாகித் தானும் அஞ்சிப் பகைவசத்தனாவனென்பதாம். [இதனால்தான் அஞ்சும்செயலும் அதுசெய்தால் அடைவதும் சொல்லப்பட்டன.] எமம் - காப்பு-ஒருபொருட்சொற்கள். (௯)

கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல..........................※
தில்லை நிலக்குப் பொறை ....
..........※

(இ-ள்.) கடுங்கோல்-கடுங்கோலனாகிய அரசன்-கல்லார்- (நீதிநூலாதிகளைக்) கல்லாதவரை-பிணிக்கும்-(தனக்குப்பகுதியாகக்)கூட்டா நிற்பான்.-அதுவல்லது-அக்கூட்டமல்லாமல்-நிலக்கு-பூமிக்கு---

ருஎ-ஆம்-அதி-வெருவந்தசெய்யாமை.

(உருஎ)

பொறை-(அதிகமான) பாரம்- இல்லை-(வேறே)இல்லை. (எ-று.) (கருத்து) கொடுங்கோலரசன் கல்விகல்லாதவர்களை மந்திரிகளாக்கிக் கொள்வான் அதுவே பூமிக்குப்பாரம் என்பதாம். கடுங்கோல்- இங்கே அதிகாரண்டம் செய்வானுக்கு ஆயிற்று. அவன் அதுசெய்தற்கு உடன்படுவாரை யல்லது கூட்டாமையால்- கல்லார்ப்பிணிக்குமென்றும், மற்றவையெல்லாம் சுமக்கிறது இயல்பாகலால் நிலத்துக்குப்பாரம் அதுவல்ல தில்லையென்றும், சொல்லினர். [இதனால் அந்தவனுசெய்தலின் குற்றம் சொல்லப்பட்டது.] (ம)

ருஅ-ஆம்-அதி-கண்ணோட்டம்.

அஃதாவது-தன்னோடு பழகினவரைக் கண்டால் அவராலே சொல்லப்பட்டதனை மறுக்கமாட்டாமை. இது அவர்மேலே கண் ஓடியவிடத்து நிகழ்வதாகலால் அப்பெயர்பெற்றது.இது தாக்ஷிண்யமென்றும் முகங்கொடுத்த லென்றும் சொல்லப்படுகின்றது. முன்னதிகாரத்திலே சொல்லப்பட்டதையே சிறப்புப்பற்றி இதிலேவிரித்துச் சொல்லுதலால் அதன்பின்வைக்கப்பட்டது.

**கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை..................*
யுண்மையா னுண்டிவ் வுலகு..................................***

(இ-ள்.) கண்ணோட்டமென்னும் - கண்ணோட்டமென்று சொல்லப்படுகிற - கழிபெருங்காரிகை - மிகவும்பெரிய அழகானது - உண்மையால் - (அரசரிடத்தே) உண்டாயிருக்கையால் - இவ்வுலகு - இந்தவுலகமானது - உண்டு - உண்டாகின்றது. எ-று.) (கருத்து) அரசனுக்குத் தாக்ஷிணியமென்னு மழகுண்டாயிருக்கையால் இவ்வுலகமுண்டாயிருக்கின்றது என்பதாம். ※ கண்ணோட்டமில்லாமை - வெருவந்தசெய்தலென்கிற அஞ்சுவன செய்தலாகலால் அவர் நாட்டு வாழ்வார் புலியைச்சேர்ந்த மானினம்போற் காப்பிடம் பெறுமைபற்றி இவ்வுலகு உண்டென்றார். (க)

**கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா.....................*
ருண்மை நிலக்குப் பொறை..................................***

(உ௱அ)

௫அ-ஆம்-அதி-கண்ணோட்டம்.

(இ-ள்.) உலகியல்-உலகநடையானது-கண்ணோட்டத்துக்கண்ணோட்டத்தினிடத்தே-உள்ளது-நிகழ்வதாகும்-(ஆதலால்)- அஃதிலார்-அக்கண்ணோட்டமில்லாதவர்-உண்மை-உளராதல்-நிலக்கு-பூமிக்கு—பொறை- பாரமாவதற்கே [வேறொன்றுக்கு அன்று.] எ-று.) (கருத்து) உலகத்தாக்ஷிணியத்திலே நடப்பதாம். இஃதில்லாதவர் பூமிக்குப்பாரமாவர் என்பதாம். உலகநடையாவது-உபகாரஞ்செய்தல்-காப்பாற்றல்-பிழைபொறுத்தல் இவைமுதலானவை — அவை உண்டாகாமையால் கண்ணோட்டமில்லாதவர் தமக்கும்பிறர்க்கும் பயன்படாரென்பதுபற்றி நிலத்துக்குப்பொறையென்றார். [இவையிரண்டுபாட்டாலும்கண்ணோட்டத்தினதுசிறப்புக்சொல்லப்பட்டது

பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னுங்
கண்ணோட்ட மில்லாத
கண் .... *

(இ-ள்.) பண்-இசையானது-பாடற்கு-பாட்டின்றொழிலோடு-இயைபின்றேல்-பொருத்தமில்லையாயின்-என்னும்-என்னபயனுடைத்தாகும்-(அதுபோல்) கண்-கண்ணானது-கண்ணோட்டமில்லாத கண்-கண்ணோட்டமில்லாத..... என்னும் - என்னபயனுடைத்தாகும். எ-று.) (கருத்து) பாட்டினொழிலிலாவிடத்து பண்ணில் அதுபோலக்கண்ணிற்குத் தாக்ஷிணியமில்லாவிடத்து பயனில்லை என்பதாம். எப்படிப்பாடற்றொழிலோடு பொருந்தாதவிடத்து இசையினாலே பயனில்லையோ அப்படியே கண்ணோட்டத்தோடு பொருந்தாதவிடத்துக் கண்ணினாலே பயனில்லையென்பதாம். (௩)

உளபோன் முகத்தெவன் செய்யு மளவினாற் .... *
கண்ணோட்ட மில்லாத கண் ....
.................*

(இ-ள்.) அளவினால்-தகுயளவினால்- கண்ணோட்டமில்லாத-தாக்ஷிணியமில்லாத-கண்-கண்களானவை- முகத்து-முகத்தினிடத்து-உள போல்-உள்ளவைபோல் (கண்டோர்க்குத் தோன்றுதலையல்லாமல்-) எவன்-(வேறே)என்னபயனை-செய்யும்-செய்யும், எ-று.) (கருத்து) கண்ணோட்ட மில்லாதகண்கள் ஒன்றையுஞ்செய்யா வென்பதாம். ❋ தோன்றுதலையல்லாமலென்னுஞ் சொற்கள் வருவிக்கப்பட்டன.— அதிகமான கண்ணோட்டத்தை விலக்குதற்கு அளவினாலென்றார். அக்கண்கள் ஒருபயனையும் செய்யாவென்பது கருத்து. (௪)

கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற்............ ❋
புண்ணென் றுணரப்
படும் ... .❋

௫௮-ஆம்-அதி-கண்ணோட்டம். (உகூ)

(இ-ள்.) [illegible]- அணிகலம்-அணியும் அணியாவது [illegible]ண்ணோட்டம்-தாக்ஷிணியமாகும்- அஃதின்றேல்-அவ்வணி இல்லையாயின்- (அக்கண்)-புண்[illegible]- புண்ணென்று-உணரப்படும்- (அறிவுடையவரால்!) அறியப்படும். எ-று.) (கருத்து) [illegible] ஆபரணந் தாக்ஷிணியமாம், அஃதில்லாவிடி லக்கண் புண்[illegible]ம். ❋ கண்ணிற்குவேறே அணியில்லாமையால்- கண்ணிற்[illegible]மென்றும், கண்ணாய்த் தோன்றினும்- நோய்களாலும்-[illegible]லாலும்- துயர்விளைத்தலைநோக்கி -புண்ணென் றுணரப்[illegible]றும், சொல்லினர். [இவைமூன் றுபாட்டாலும் அதுசெய்யாத கண்ணின் குற்றம் சொல்லப்பட்டது. (௫)

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ...........*
டியைந்து கண் ணோடா தவர் ....*

(இ-ள்.) கண்ணோடு-(ஓடியைந்து ஓடிய) கண்ணோடு-இயைந்து-பொருந்தியிருந்தும்- கண்ணோடாதவர் கண்ணோடுத லில்லாதவர்|-(சஞ்சரிக்கின்றவராயிருக்கினும்) -மண்ணோடு-மண்ணுடன்-இயைந்து-பொருந்தி நின்ற-மரத்தனையர்-மரத்தினை யொப்பர். எ,று.) (கருத்து) தாக்ஷிண்யமில்லாதவர் மரத்திற் கொப்பாவார் என்பதாம்.※ கண்ணினது- தொழிலாகிய ஒடுதல் கண்ணையுடையவன்மேல் நின்றது.—மரம்- கண்ணோடு பொருந்தியும் கண்ணோடாமையால்உபமானமாயிற்று. (சு)

கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்.........*
கண்ணோட்ட மின்மையு மில் ....*

(இ-ள்.) கண்ணோட்டமில்லவர்-கண்ணோட்டமில்லாதவர்|-கண்ணிலர்-கண்ணுடையவருமல்லர்.—கண்ணுடையார்- கண்ணுளார்|-கண்ணோட்டமின்மையும்- கண்ணோட்டமில்லாதவராதலும்-இல்-இல்லை எ,று.) (கருத்து) கண்ணோட்ட மில்லாதவர் குருடர். கண்ணோட்டமுள்ளவர் கண்ணுள்ளார் என்பதாம். ※ நெருப்பு எங்கே இல்லையோ அங்கே புகையும் இல்லை -புகை எங்கே இருக்கின்றதோ அங்கே நெருப்பும் இருக்கும்-என்பதுபோல்- கண்ணோட்டம் எவரிடத்து இல்லையோ அவரிடத்தே கண்ணும் இல்லை- கண் எவரிடத்து இருக்கின்றதோ அவரிடத்தே கண்ணோட்டமும் இருக்குமென அனுமானப்பிரமாணம் பற்றிச்சொல்லியது. [இவையிரண்டு பாட்டாலும் கண்ணோடாதாரிழிவு சொல்லப்பட்டது.] (எ)

(உசய)

இ-அ-ஆம்-அதி-கண்ணோட்டம்

கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்.............................❀
குரிமை யுடைத்திவ் வுலகு..❀

(இ-ள்.) (இவ்வுலகு) இந்தவுலகம்-கருமம்-(முறைசெய்தலாகிய தமது)தொழில்-சிதையாமல்-அழியாமல்-கண்ணோடவல்லார்க்கு-கண்ணோட்டஞ் செய்யவல்ல அரசர்க்கு- உரிமை - உரியதாந்தன்மையை-உடைத்து- உடையதாகும். எ-று.) (கருத்து) கண்ணோட்டமுடையவர்களுக்கு இவ்வுலக முரிமையுடையதென்பதாம். ❀ தம்மோடு பழகினவர் பிறருக்கு இடுக்கண் செய்தவிடத்து அவரைக்கண்ணோட்டத்தினாலே தண்டிக்காதவர்க்கு முறைகெடுதல் முன்னே ஓர்ந்து கண்ணோடா தென்ற குறளிலே சொல்லப்பட்டமுறை இலக்கணத்தாலும்பெற்றாம்.—முறைகெட வருமிடத்துக் கண்ணோட்டஞ் செய்யாமையும், அது வாராதவிடத்துக் கண்ணோட்டஞ் செய்தலும், ஒருவனுக்குச் சுபாவமாகுதல் அருமையாகலால்- கண்ணோடவல்லார்க்கென்றும், அச்சுபாவமுடையவர்க்கு உலகமுழுதும் நெடுங்காலம்வசப்படுதலால் -உரிமையுடைத்தென்றும், சொல்லினார். [இதனால் கண்ணோட்டஞ் செய்யும்விதம் சொல்லப்பட்டது. (அ)

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்.........❀
பொறுத்தாற்றும் பண்பே தலை..................................❀

(இ-ள்.) ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்- (தம்மை) ஒறுக்குமியல்புடையவரிடத்தும்-கண்ணோடி-கண்ணோட்டமுடையவராகி-பொறுத்தாற்றும் பண்பே-(அக்குற்றத்தைப்)பொறுக்குமியல்பே| —தலை (அரசர்க்குத்) தலைமையான வியல்பு. எ-று.) (கருத்து) தம்மைவருத்துவோரிடத்துங் கண்ணோட்டமுடையவர்களே தலையாவார் என்பதாம். ❀ பண்பினொன்றதனால்- அவர்பழக்கம்பெற்றாம். ஒறுத்தாற்றும்-பொறுத்தாற்றும்-ஒருசொல். (௯)

பெயக்கண்டு நஞ்சுண் டமைவர்

நயத்தக்க..........!.....*

நாகரிகம் வேண்டு

பவர்......................................*

(இ-ள்.) நயத்தக்க-(யாவராலும்) விரும்பத்தக்க- நாகரிகம்-கண்ணோட்டத்தை}-வேண்டுபவர்-வேண்டுவோர்|-நஞ்சு-நஞ்சை}- பெயக்கண்டும்-(பழகினவர்) இடக்கண்டும் -உண்டு- (கண்மறுக்கமாட்டாமையால் அதனை)உண்டு-அமைவர்- (பின்னும் அவரோடு) பொருந்துவார். எ,று.) (கருத்து) தாக்ஷிண்யம் வேண்டுவோர் சிநேகர்

௫அ-ஆம்-அதி-கண்ணோட்டம். (உசக)

நஞ்சிடக்கண்டு முண்டுசிநேகிப்பார் என்பதாம் ❁ [இவ்விரண்டு பாட்டாலும் அவரைத்தண்டிக்காமல் கண்ணோட்டஞ் செயவேண்டுவது பிறருக்குக் குற்றஞ்செய்தவிடத்தன்று தமக்குக்குற்றம் செய்தவிடத்தே யென்பது சொல்லப்பட்டது.] (ய)

❁*{⌘}—{⌘}—{⌘}—{⌘}—{⌘}—{⌘}—{⌘}—{⌘}—{⌘}*❁

௫கூ-ஆம்-அதி-ஒற்றாடல்.

அஃதாவது-பகைவர் அயலோர் நட்பினர் என்னு மூன்றுதிறத்தார் டத்தும் நிகழ்ந்தவை அறிதற்கு ஒற்றரை ஆளுதலாம். முன்சொல்லப்பட்ட இலக்கணமுடைய அரசனுக்குத் தன்னாடு காக்கும்போதும் பிறர்நாடு பிடிக்கும் போதும் வேண்டுமவைகளைச் சொல்லத்தொடங்கினாராதலால் அவ்விரண்டு காரியங்களுக்கும் அவசியம் வேண்டுவதாகிய இது முன்னே வைக்கப்பட்டது.

ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்.................*
தெற்றென்க மன்னவன் கண்......................... .. ..*

(இ-ள்.) மன்னவன்-அரசனானவன் | -ஒற்றும்-ஒற்றனும்-உரைசான்ற-புகழ்நிறைந்த-நூலும்-(நீதி)நூலும் ஆகிய-இவையிரண்டும்-இவ்விரண்டும்-கண்-(தன்னிரு)கண்களுமாக- தெற்றென்க -தெளியக்கடவன். எ-று.) (கருத்து) அரசனானவன் ஒற்றனையும் நீதிநூலையுந் தன்னிருகண்களாகத் தெளியக்கடவன் என்பதாம். ※ ஒற்றனானவன் தன்கண்ணுக்கு எட்டாத தூரமெல்லாம் போய்க்கண்டு அங்கே நடந்தவையெல்லாம் அறிவித்தலாலும், நூலானது - அந்நடந்தவைகளுக்குத் தன்னறிவுக்கு எட்டாத தொழில்களையெல்லாஞ் சொல்லி அறிவித்தலாலும், இவ்விரண்டனையுமே தனக்குஊனக்கண்ணும்ஞானக்கண்ணுமாக நிச்சயித்துக்கொண்டு நடக்கக்கடவனென்பதாம். [இதனால் ஒற்றினது சிறப்புச் சொல்லப்பட்டது.] (க)

எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்.... ....*
வல்லறிதல் வேந்தன் றொழில்.....
......................*

(இ-ள்.) எல்லார்க்கும்- எல்லா ரிடத்தும்- நிகழ்பவையெல்லாம்-நடப்பனவகளையெல்லாம்- எஞ்ஞான்றும்-நாடோறும் | — வல்லறிதல்-

(ஒற்றாலே) விரைந்தறிதல்|-வேந்தன் தொழில்-
[சுக]

அரசனுக்கு உரிய (உ௬உ) ருக

-ஆம்-அதி-ஒற்றாடல்.

தொழில். எ-று.) (கருத்து) யாவரிடத்து நடப்பவைகளையொற்றா லறிதலரசனது தொழிலாம் என்பதாம். ❋ எல்லார்க்குமென்றது- பகைவர்-அயலோர்-நட்பினர்- என்னுமூவகையாரையும்.— நிகழ்பவையெல்லாமென்றது- நல்லவையும் தீயவையும் ஆகிய சொற்களையும், செயல்களையும்,— அவை நிகழ்ந்தபொழுதே அவைகளுக்குத் தக்கவழியாகவாவது தேறுதலாகவாவது செய்யவேண்டுதலால்- வல்லறிதலென்றார்.— அவ்விருதொழில்களுக்கும் அறிதல் காரணமாகலால் அதனைத்தொழிலென்று உபசரித்தார்.— ஒற்று அதிகாரத்தால் வந்தது. [இதனால் ஒற்றினாலாகிய பயன் சொல்லப்பட்டது.] (௨)

ஒற்றினொற்றிப் பொருடெரியா மன்னவன்...........*
கொற்றங் கொளக்கிடந்த தில் ....*

(இ-ள்.) ஒற்றினால்-ஒற்றனைக்கொண்டு-ஒற்றி-(எல்லாரிடத்தும் நிகழ்ந்தவைகளை) அறிந்துவரச்செய்து-பொருள்-(அவைகளால் அடையும்) பயனை)-தெரியா ஆராய்ந்தறியாத- மன்னவன்- அரசனானவன்)-கொற்றங்கொளக்கிடந்தது- வெற்றியடையக்கிடந்தது-இல்- (வேறொருவழி) இல்லை. எ-று.) (கருத்து) ஒற்றனைக்கொண்டு பகைவர்காரியங்களை யறியாதவரசன் வெற்றியடையான் என்பதாம். ❋ அந்நிகழ்ந்தவையும் பயனும் அறியாமல் பகைக்கு எளியனாதல் ஒற்றனாலே நீங்குவதன்றி வேறொன்றினாலே நீங்காமையால்- கொற்றங்கொளக்கிடந்ததில்லென்றார். [இதனால் அத்தொழில் செய்யாதவிடத்துவரும் குற்றம் சொல்லப்பட்டது.] (௩)

வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங் ......❋
கனைவரையு மாராய்வ தொற்று.......................❋

(இ-ள்.) தம்-தம்முடைய- வினைசெய்வார்- காரியஞ்செய்பவர்-சுற்றம்-சுற்றத்தார்- வேண்டாதார்-பகைவர்-என்று -என்றுசொல்லப்பட்ட-அனைவரையும்-எல்லாரையும்)-ஆராய்வது-(சொல்லாலும்செயலாலும்) ஆராய்பவனே)- ஒற்று - ஒற்றனாவான். எ-று.) (கருத்து) தொழிலாளரையும், உறவினரையும், பகைவரையும், ஆராய்பவனே ஒற்றனாவான் என்பதாம். ❋ அரசனுக்குக் காரியஞ்செய்வோராலே செய்யப்படுமவையும், சுற்றத்தாராலே தன்னிடத்தும் நாட்டிடத்தும் செய்யப்படுமவையும்; பகைவராலே தன்சோர்வு பார்த்தலும், மேலே தேறப்படுதலும் முன்னிட்டுச் செய்யப்படுமவையும், அறிந்து அவைகளுக்கு ஏற்பவைகளைச் செய்யவேண்டுதலால் இம்மூவரை

யார்வையும் [illegible] ஆராயவேண் [illegible] அவ்வலாயுமா
ராய்வ[illegible]ன்ஞர். (ச)

கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு ....*
உகாஅமை வல்லதே யொற்று............*

(இ-ள்.) (எவராது செய்தியை அறிதற்குச் சென்றுரேஅவராலே)
-கடாஅ-சந்தேகிக்கப்படாத-உருவொடு-வடிவோடு (பொருந்தி)-
(அவர்சந்தேகித்து அறியத்தொடங்கினல்)-கண்ணஞ்சாது-(கோபி
த்துப்பார்க்கின்ற அவர்- கண்ணிற்கு அஞ்சாமைநின்று-யாண்டும்-
நாலுபாயங்களும்செய்தாலும்-உகாஅமை-(மனதிலுள்ளவைகளை)
உமிழாதிருக்க-வல்லதே -வல்லவனே|—ஒற்று-ஒற்றனுவான். எ,று.)
(கருத்து) ஐயமில்லாவடிவோடுபொருந்தி யஞ்சாதிருந்து பகைவர்
என்செய்யினு முள்ளதைச் சொல்லாதவனே ஒற்றன் என்பதாம்.❁
சந்தேகிக்கப்படாதவடிவு- பார்ப்பார் வணிகர் முதலானவர் வடிவு.

துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந். ....*
தென்செயினுஞ் சோர்வில தொற்று............*

(இ-ள்.) துறந்தார்- முழுதுந் துறந்தோரும்---படிவத்தர்- விரதவொழுக்கத்தோரும்-ஆகி-ஆகி-இறந்து-(போகக்கூடாதவிடங்களிலெல்லாம்)போய்-ஆராய்ந்து-(ஆராயவேண்டியவைகளெல்லாம்)ஆராய்த்தறிந்து-என்செயினும்- (அவ்விடத்தோர் சந்தேகித்துப்பிடித்து) என்ன துன்பஞ் செய்துகேட்டாலும்--- சோர்வில்து-தன்னை வெளிப்படுத்தாதவனே]-ஒற்று- ஒற்றனுவான். எ,று.) (கருத்து) துறவிகள் விரதர்கள் வடிவாகி யெங்கும்போ யாராய்ந்தறிந்து பகைவர் துன்பஞ்செய்யினுந் தன்னைக்காட்டாதவ னொற்றனுவான் என்பதாம். ❋ விரதவொழுக்கம்- தீர்த்தயாத்திரை முதலானவை.- செயினுமென்பது- அறவோனொன்று செய்யாவொன்பதை விளக்கிநின்றது.---முன்னே நால்வகை உபாயமுஞ்சொல்லி இங்கேயும் தண்டத்தைப்பிரித்துச் சொல்லியது- அதன் நோக்கி.

பொறுத்தற்கருமைச் சிறப்பு

(௬)

மறைந்தவை கேட்கவற் றாகி

யறிந்தவை.....................❋

யையப்பா டில்லதே

யொற்று.... ....❋

(இ-ள்.) மறைந்தவை-(எவர்து செயல்களை அறியச் சென்றானோ அவரது) மறைவாயுள்ள செயல்களை}- கேட்கவற்றாகி-(அவருக்குள்ளு

[illegible]னவராலே) கேட்கவல்லவனாகி-அறிந்தவை-(கேட்டு) அறியப்பட்ட அச்செயல்களிலே-ஐயப்பாடில்லதே-(பின்) சந்தேகப்படுதலில்லாதவனே -ஒற்று-ஒற்றனாவான். [illegible]) (கருத்து) இரகசியங்களைக் கேட்கவல்லவனாகிய [illegible]கப்படாதவனே ஒற்றனாவான் என்பதாம். [illegible] செயல்களைச் சொலலுவாரை அறிந்து அவர் [illegible] ஒட்டி அவரோ சொல்லும்படி [illegible] செயல்பாவது முன்னே உள்ள [illegible]ம் அன்னிடர்போலே [illegible] கேட்கவேண்டி [illegible]யென்றும், கேட்டு அறியப்பட்டமவைகளைத் தானே [illegible]சொன்னால் அரசனால் அவைகளுக்கு ஏற்றகாரியம் செய் [illegible] ஐயப்பாட்டில்லதேயென்றும், சொல்லினர். [இவை [illegible]லும் ஒற்றனது இலக்கணம் சொல்லப்பட்டது.] (எ)

ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோ…… …… ……… *
ரொற்றினா லொற்றிக் கொளல்………………………*

(இ-ள்.) ஒற்று-ஓரொற்றனாலே-ஒற்றி- மறைவாயறிந்துவந்து-தந்த- அறிவிக்கப்பட்ட பொருளையும் காரியத்தையும்} - மற்றுமோரொற்றினால்-பின்னும்-(ஓரொற்றனாலும்)-ஒற்றி-அறிந்துவரச்செய்து-கொளல்-(ஒப்புமைகண்டு)கொள்ளக்கடவன்.எ,று.) (கருத்து) ஓரொற்றனறிந்து வந்தபொருளை மற்றொருஒற்றனாலறிந்து வரச்செய்து அரசன் கொள்ளக்கடவன் என்பதாம். ※ அவரோடு கலந்து நின்று மாறுபாடச்சொல்லுதலும் கூடுமாகையால் அரசனுக்கு ஒருவன் சொல்லையே நம்பலாகாதென்பதாம். (அ)

ஒற்[illegible] றுணராமை [illegible]……………*
[illegible] சொற்றொக்க தேறப் படும்……………*

(இ-ள்.) (ஒற்[illegible])[illegible] ஓரொற்றன்-ஒற்று- மற்

ரொருவொற்றனை நீ- உணரா[illegible]படி- ஆளக- ஆளக்கடவர்.---(அப்படி ஆளப்பட்ட ஒற்றர்களுள்-உடன்மூவர்-(ஒருவொருவன்மேலே வேறுவேறு விடப்பட்டு)மூவருடைய-சொல்-சொற்களும்-தொக்க-(பயனால்)ஒத்திருக்குமாயின்-தேறப்படும்-(அப்பொருள் மெய்யென்று) தெளியப்படும். எ-று.) (கருத்து) ஓ ரொற்றன் மற்றொருவொற்றனை யறியாதிருக்கும்படியரசனாளக்கடவன் என்பதாம் ❊ ஆபிரென்பது வருவிக்கப்பட்டது. ஒருவனை ஒருவன் அறிந்

ருகூ-ஆம் அதிகாரம் ஒற்றாடல்.

(உசரு)

தால் தம்மிலேகலந்துகொண்டு ஒப்பச் சொல்வாராகையால்- உணராமைஆள்கவென்றும்,மூவர்க்கும் நெஞ்சுஒருதன்மைப்படுதலும், பட்டால்தீழ்த்திருத்தலும்,கூடாமையால்தேறப்படுமென்றும்,சொல்லினார்.---இதனாலே மூவர்சொலலும் ஒத்திராமற்போனால் பின்னும்ஆராய்கவென்பதும் பெறப்பட்டது. (௬)

சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற். ………❊

புறப்படுத்தா னாகு மறை ……………………

…………………❊

(இ-ள்.) ஒற்றின்கண்-(மறைந்தவைகளை அறிந்துசொல்லிய) ஒற்றனிடத்து-சிறப்பு-சிறப்பை}-அறிய-(பிறர்) அறிய-செய்யற்க-செய்யாதிருக்கக்கடவன்.—செய்யின்- செய்தால்-மறை- (தன்னுள்ளே) அடக்கப்படுமவைகளை}-புறப்படுத்தானாகும்-(தானே) வெளியில் இட்டவனாவான். எ-று.) (கருத்து) அரசன் ஒற்றனுக்குப் பிறரறியச்சிறப்புச் செய்யாதிருக்கக்கடவன் செய்தால் தனது இரகசியங்களை வெளிப்படுத்தினவனாவான் என்பதாம். ❋ மறையாவது-அவன் ஒற்றனென்பதும், அவன் சொல்லியதும், ஆம். சிறப்புப்பெற்ற இவன் யாரென்பதும், இது பெறுதற்குக் காரணம் யாதென்றும், வினவுவாரும் சொல்வாரும் அயலாராகலால் புறப்படுத்தானாகுமென்றார். [இவை மூன்றுபாட்டாலும் ஒற்றரை ஆளும்விதமும், அவராலே நடந்தவை அறியும்விதமும், அறிந்தாற் சிறப்புச்செய்யும்விதமும், சொல்லப்பட்டன.] (ய)

௬௰-ஆம்-அதி-ஊக்கமுடைமை.

[illegible].

மனமானது தொழில் செய்தலில் எழுச்சியை உடைத்தாதலாம். ஒற்றரால் நடந்தவை அறிந்து அவைகளுக்கு ஏற்றதொழில் செய்வோனுக்கு இது அவசியம் வேண்டுதலால் அதன்பின் வைக்கப்பட்டது.

உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லா........................❋
ருடைய
துடையரோ மற்று......................................❋

(இ-ள்.) உடையரெனப்படுவது-(ஒருவரை) உடையவரென்றுசொல்லுதற்குச்சிறந்தது-ஊக்கம்-மனவெழுச்சியாம்.—அஃதில்லார்

அம்மனவெழுச்சியில்லாதவர்|-மற்றுடையது-வேறுடையதுதானு ம்-உடையரோ-உடையராவரோ-[ஆகார்] . எ-று.) (கருத்து) உடையதொன்று சொல்லத்தக்கது மனவெழுச்சியாம் அவ்வெழுச்சியில்லாதவர் யாதுமில்லாதவர் என்பதாம். ❋ வேறுடையதென்றது-முன் அடைந்துநின்றபொருளை. உம்மை இருவிக்கப்பட்டது காப்பாற்றவலிமையில்லாமையால் அதையும் இழப்பரென்பதாம். (க)

உள்ளமுடைமை யுடைமை பொருளுடைமை .... ❋
நில்லாது நீங்கி விடும்.............................. ❋

(இ-ள்.) (ஒருவனுக்கு)-உள்ளமுடைமை-மனவெழுச்சியுடைமையே|—உடைமை- (நிலைபெற்ற)வுடைமையாம்.-பொருளுடைமை-பொருளுடைமை-நில்லாது-நிலைபெறாமல்- நீங்கிவிடும்-நீங்கும். எ-று.) (கருத்து) மனவெழுச்சிநிலையுள்ளவுடைமையாம்பொருளுடைமை நிலையில்லதாம் என்பதாம். ❋ மனவெழுச்சி உள்ளத்தின் குணமாகலால் அதற்கு நிலைபெறுதலும், பொருள் உடம்பினும் வேறாய் அழிவதா யிருக்கையால் அதற்கு நிலைபெறாமையும், சொல்லப்பட்டன. சொல்லவே அது உடைமை அன்றென்பது பெறப்பட்டது.]

ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்க................. ❋
மொருவந்தங் கைத்துடை யார்......................... ❋

(இ-ள்.) ஒருவந்தம்- நிலைபெற்றதாகிய- ஊக்கம் - மனவெழுச்சி
யை3-கைத்து-கைப்பொருளாக - உடையார்- உடையவர்|—(இழந்
தாராயினும்)-ஆக்கம்-கைப்பொருளை3-இழந்தேமென்று-இழந்து
விட்டோமென்று-அல்லாவார்- மனஞ்சுழலார். எ,று.) (கருத்து)மன
வெழுச்சியுடையவர் பொருளிழந்தும் வருந்தார் என்பதாம். ❊ ம
னஞ்சுழலாமைக்குஏது வருகின்றபாட்டாற்சொல்லப்படுகின்றது.

ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா.........................*
ஊக்க முடையா னுழை...*

(இ-ள்.) அசைவிலா-அசைவில்லாத-ஊக்கமுடையானுழை-மன
வெழுச்சியுடையவனிடத்தே-ஆக்கம்- பொருளானது|—அதர்வினா
ய்-வழிகேட்டுக்கொண்டு-செல்லும் - போகும். எ,று.) (கருத்து)ம
னவெழுச்சி யுடையவனிடத்துச் செல்வம்வரும் என்பதாம். ❊ அ
சைவின்மை-இடுக்கண்முதலாகியவைகளால் தளராமை.வழிகேட்டு
ச்சென்று சேர்வார்போலே தானேசென்றுசேருமென்றற்கு-அதர்

வினாய்ச் செல்லுமென்றார். [இவை நான்குபாட்டாலும் அடைந்து
நின்ற பொருளினும்அதற்குக் காரணமாகிய ஊக்கம் சிறந்ததென்
பது சொல்லப்பட்டது.] (௪)

வெள்ளத்
தனைய மலர்நீட்ட மாந்தர்தம்.........................*
முள்ளத் தனைய
துயர்வு..*

(இ-ள்.) மலர்-நீர்ப்பூத்தாள்களது- நீட்டம்- நீட்சியானவை|-வெள்ளத்தனைய-நின்ற நீரளவினவாம்.—(அதுபோல)மாந்தர்- மனிதர்கள்-உயர்வு-உயர்ச்சியானது|-உள்ளத்தனையது- (அவர்) மனவெழுச்சியளவினதாம். எ-று.) (கருத்து)நீர்ப்பூத்தாள்கள் நிறை நீரளவாம் அதுபோல மனிதர்களுயர்வுமனவெழுச்சி யளவாம் என்பதாம். ❋ மலர் அதன்றாளுக்குஆதலால் ஆகுபெயர், நீர்மிகுந்தமட்டும் மலர்கள் நீளுமென்பது தோன்ற- வெள்ளத்தனைய வென்றார். இவ்வுபமானவலிமையால் ஊக்கமிகுந்தவளவும் மனிதர் உயர்வொன்பது பெறப்பட்டது.உயர்வு-பொருள் படைகளால் மிகுதல். (௬)

உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது..................❋

தள்ளினுந் தள்ளாமை

நீர்த்து..................................❋

(இ-ள்.) (அரசரானவர்|)-உள்ளுவதெல்லாம்- நினைப்பதெல்லாம்-உயர்வு-(தமது)உயர்ச்சியையே- உள்ளல்- நினைக்கக்கடவர்.—அது-அவ்வுயர்ச்சியானது-தள்ளினும்-(ஊழ்வகையினாலே)கூடாமற்போயினும்-(அந்நினைப்பு|)-தள்ளாமைநீர்த்து- தள்ளாமைக்குணமுடையதாம். எ-று.) (கருத்து) அரசருயர்வை நினைக்கக்கடவர் அவ்வுயர்ச்சி கூடாவிடினு மந்நினைப்புநீங்காக் குணமுடையதாம் என்பதாம். ❋ மற்று-அசை-தள்ளினுமென்றதனால் தள்ளாமைமிகுதியாதல் விளங்கிற்று.தள்ளியவிடத்தும் முயற்சியிலே அவர்தவறுதல்இல்லாமல்நல்லோராலே பழிக்கப்படாமையால் தள்ளாதஇயற்கை யுடைத்தென்பதாம். முன்னேஉள்ளத்தனைய துயர்வென்றதனை உறுதிசெய்தபடி.

சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்..............❋

பட்டுப்பா டூன்றுங் களிறு...............................❋

(இ-ள்.) களிறு|யானையானது-புதையம்பின்-கட்டாகிய அம்பினு லே-பட்டு-(புண்)பட்டவிடத்து- பாடூன்றும் - (தளராமல்தன்) பெருமையை} நிலைநிறுத்தும்.—(அதுபோல்)-உரவோர்- மனவெழுச்சியையுடையவர்|-சிதைவிடத்து-(தாம் நினைத்த உயர்ச்சிக்கு) அழி

(௨௪௱) ௬௰-ஆம்-அதி-ஊக்கமுடைமை.

அம்மனவெழுச்சியில்லாதவர்|-மற்றுடையது-வேறுடையதாரானும்-உடையரோ-உடையராவரோ-[ஆகார்] . எ-று.) (கருத்து) உடையவொன்று சொல்லத்தக்கது மனவெழுச்சியாம் அவ்வெழுச்சியில்லாதவர் யாதுமில்லாதவர் என்பதாம். ✻ வேறுடையதென்றது-முன் அடைந்து நின்றபொருளொழிந்தும் வருவிக்கப்பட்டது காப்பாற்றவலிமையில்லாமையால் [illegible] இழப்பரென்பதாம். (க)

உள்ளமுடைமை யுடைமை பொருளுடைமை .... ✻
நில்லாது நீங்கி விடும். .... ✻

(இ-ள்.) (ஒருவனுக்கு) உள்ளமுடைமை-மனவெழுச்சியுடைமையே|—உடைமை- (நிலைபெற்ற)வுடைமையாம்.-பொருளுடைமை-பொருளுடைமை-நில்லாது-நிலைபெறுமல் நீங்கிவிடும்-நீங்கும். எ-று.) (கருத்து) மனவெழுச்சிநிலையுள்ளவுடைமையாம்பொருளுடைமை நிலையில்லதாம் என்பதாம். ✻ மனவெழுச்சி உள்ளத்தின் குணமாகலால் அதற்கு நிலைபெறுதலும், பொருள் உடம்பினும் வேறாய் அழிவதாயிருக்கையால் அதற்கு நிலைபெறுமையும், சொல்லப்பட்டன. சொல்லவே அது உடைமை அன்றென்பது பெறப்பட்டது.]

ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்க........ ✻
மொருவந்தங் கைத்துடை யார்........ ✻

(இ-ள்.) ஒருவந்தம்- நிலைபெற்றதாகிய- ஊக்கம் - மனவெழுச்சியை3-கைத்து-கைப்பொருளாக - உடையார்- உடையவர்|—(இழந்தாராயினும்)-ஆக்கம்-கைப்பொருளை3-இழந்தேமென்று-இழந்துவிட்டோமென்று-அல்லாவார்- மனஞ்சுழலார். எ,று.) (கருத்து)மனவெழுச்சியுடையவர் பொருளிழந்தும் வருந்தார் என்பதாம். ❋ மனஞ்சுழலாமைக்குஏது வருகின்றபாட்டாற்சொல்லப்படுகின்றது.

ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா..........................❋
ஊக்க முடையா னுழை...❋

(இ-ள்.) அசைவிலா-அசைவில்லாத-ஊக்கமுடையானுழை-மனவெழுச்சியுடையவனிடத்தே-ஆக்கம்- பொருளானது|—அதர்வினாய்-வழிகேட்டுக்கொண்டு-செல்லும் - போகும். எ,று.) (கருத்து)மனவெழுச்சி யுடையவனிடத்துச் செல்வம்வரும் என்பதாம். ❋ அசைவின்மை-இடுக்கண்முதலாகியவைகளால் தளராமை.வழிகேட்டுச்சென்று சேர்வார்போலே தானேசென்றுசேருமென்றற்கு-அதர்

வினாய்ச் செல்லுமென்றார். [இவை நான்குபாட்டாலும் அடைந்துநின்ற பொருளினும்அதற்குக் காரணமாகிய ஊக்கம் சிறந்ததென்பது சொல்லப்பட்டது.] (ரு)

வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்..........................❋
உள்ளத் தனைய துயர்வு...❋

(இ-ள்.) மலர்-நீர்ப்பூத்தாள்களது- நீட்டம்- நீட்சியானவை|-வெள்ளத்தனைய-நின்ற நீரளவினவாம்.—(அதுபோல)மாந்தர்- மனிதர்கள்-உயர்வு-உயர்ச்சியானது|-உள்ளத்தனையது- (அவர்) மனவெழுச்சியளவினதாம். எ,று.) (கருத்து) நீர்ப்பூத்தாள்கள் நிறை நீரளவாம் அதுபோல மனிதர்களுயர்வுமனவெழுச்சி யள்வாம் என்பதாம். ❋ மலர் அதன்றாளுக்குதலால் ஆகுபெயர், நீர்மிகுந்தமட்டும் மலர்கள் நீளுமென்பது தோன்ற- வெள்ளத்தனைய வென்றார். இவ்வுபமான வலிமையால் ஊக்கமிகுந்தவளவும் மனிதர் உயர்வொன்பது பெறப்பட்டது.உயர்வு-பொருள் படைகளால் மிகுதல். (௯)

உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது.......................❋
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து...............................❋

(இ-ள்.) (அரசரானவர்|)-உள்ளுவதெல்லாம்- நினைப்பதெல்லாம்-உயர்வு-(தமது)உயர்ச்சியையே - உள்ளல்- நினைக்கக்கடவர்.—அது-அவ்வுயர்ச்சியானது-தள்ளினும்-(ஊழ்வகையினாலே)கூடாமற்போயினும்-(அந்நினைப்பு|)-தள்ளாமைநீர்த்து- தள்ளாமைக்குணமுடையதாம். எ,று.) (கருத்து) அரசருயர்வைநினைக்கக்கடவர் அவ்வுயர்ச்சி கூடாவிடினு மந்நினைப்புநீங்காக் குணமுடையதாம் என்பதாம். ❋ மற்று-அசை-தள்ளினுமென்றதனால் தள்ளாமைமிகுதியாதல் விளங்கிற்று.தள்ளியவிடத்தும் முயற்சியிலே அவர்தவறுதல்இல்லாமல்நல்லோராலே பழிக்கப்படாமையால் தள்ளாதஇயற்கை புடைத்தென்பதாம். முன்னேஉள்ளத்தனைய துயர்வென்றதனை உறுதிசெய்தபடி.

சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்...............❋
பட்டுப்பா டூன்றுங் களிறு.......................................❋

(இ-ள்.) களிறு|யானையானது-புதையம்பின்-கட்டாகிய அம்பினாலே-பட்டு-(புண்)பட்டவிடத்து- பாடூன்றும் - (தளராமல்தன்) பெருமையை3 நிலைநிறுத்தும்.—(அதுபோல்)-உரவோர்- மனவெழுச்சியையுடையவர்|-சிதைவிடத்து-(தாம் நினைத்த உயர்ச்சிக்கு) அழி

வுவந்தவிடத்து-ஒல்கார்- தளராமல்தம்பெருமையைநிலைநிறுத்து வார். எ,று.) (கருத்து) யானை கணையாற் புண்பட்டவிடத்துந் தளராமற்பெருமையைநிறுத்தும் அதுபோல மனவெழுச்சியுடையார் வருத்தம்வந்தவிடத்துந் தளரார் என்பதாம். ❋ பட்டு- பட்டாலென்பதன்பொருளிலேவந்தது.—ஒல்கார்மை-களிற்றுக்கும், பாடூன்றல்- உரவோருக்கும், கூட்டப்பட்டன.-நினைக்கப்பட்ட வுயர்ச்சியானது கூடாமற்போயினும் தவறாமல் அதனைமுடிப்பரென்பதாம்.[இவை மூன்றுபட்டாலும் உயர்ந்தோர் துயர்ச்சிசொல்லப்பட்டது

உள்ளமிலாதவ ரெய்தா ருலகத்து .... ❋
வள்ளிய மென்னுஞ் செருக்கு ....❋

(இ-ள்.) உள்ளமிலாதவர்- மனவெழுச்சி யில்லாத அரசர்- உலகத்து-இவ்வுலகத்தாருள்-வள்ளியமென்னும்- வண்மையையுடையமென்று தம்மைத்தாமே மதிக்கும்-செருக்கு-மதிப்பை-எய்தார்-பெறார். எ,று.) (கருத்து) மனவெழுச்சி யில்லாதவர் மதிப்படையாரென்பதாம். ❋ ஊக்கமில்லாதவர்க்கு- முயற்சி- பொருள்- கொடை- செருக்கு-இவைமுறையே இல்லாமற்போதலால்-செருக்கெய்தாரென்றார். கொடை வெற்றிகளால் ஆகிய வின்பம் தமக்கல்லது பிறர்க்குககாணப்படாமையால் தன்மையிடத்தாற் சொல்லப்பட்டது.

பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை....................❋
வெரூஉம்
புலிதாக் குறின்.................................. ❋

(இ-ள்) யானை-யானையானது-பரியது-(எல்லாவிலங்குகளினும்)

பெரிய உடம்பையுடையது-(அதுவல்லாமலும்) -கூர்ங்கோட்டது-
கூர்மையான கொம்புகளையுமுடையது- ஆயினும் -ஆனாலும்-புலி
புலியானது-தாக்குறின்- (தன்னை) எதிர்ப்படின்- வெரூஉம்- (அதற்கு)அஞ்சும். எ-று.) (கருத்து) யானை பெரிதுங் கொம்புடையதுமாறாலும் புலியடிக்கி லஞ்சும் என்பதாம். ❋ பேருடம்பால்வலிமிகுதி சொல்லப்பட்டதாயிற்று. [புலியைக் காட்டிலும் மிகுந்த உடல்வலிமையும் வெல்லுதற்குச்சிறந்த ஆயுதமும் உடையதாயினும் யானை ஊக்கமில்லாமையால் அதனை யுடைய அப்புலிக்கு அஞ்சுமென்ற இந்தவாக்கியம், பகைவரைக்காட்டிலும் மிகுந்த உடல்வலிமையும், வெல்லுதற்குச்சிறந்த ஆயுதமும் உடையவராயினும் அரசர் ஊக்கமிலராயின் அதனையுடைய அரசர்க்கு அஞ்சுவரென்பதுதோன்றநிற்றலால்-பிறிதுமொழிதல். (௯)

௬௰-ஆம்-அதி-ஊக்கமுடைமை. (௨௪௯)

உரமொருவற் குள்ள வெறுக்கை
யஃதில்லார்.................❋
மரமக்க ளாதலே
வேறு..................................❋

(இ-ள்.) ஒருவற்கு-ஒருவனுக்கு-உரம்-திடமான-அறிவாவது|-உள்ளவெறுக்கை-மனவெழுச்சியாம்.- அஃது-அதனை-இல்லார்- இல்லாதவர்|மரம்- [மனிதராகார்] மரங்களாவார்.-வேறு-(சாதிமரங்களோடு இம்மரங்களிடத்து) வேற்றுமை|-மக்களாதலே- மனிதவடிவாயிருக்கையே; [வேறில்லை.] எ-று.) (கருத்து) ஒருவனுக் கறிவாவது மனவெழுச்சியாம். அஃதில்லாதவர் மரங்களுக்கொப்பாவார் என்பதாம்.

❀ மனிதருக்கு இருக்கவேண்டிய நல்லறிவும் காரிய முயற்சியும் இல்லாமைபற்றி மரமென்றும், மரத்தில் உண்டாம் பயன் இல்லாமைபற்றி மக்களாதலே வேறென்றும், சொல்லினர்.—மரத்திற்குப் பயன்-பழமுதலானவையும், ஆலயம் வீடு தேர் மரக்கலம் இவைகளுக்கு உறுப்பாதல் முதலானவையும், ஆகும். [இவைமூன்றுபாட்டாலும் ஊக்கமில்லாதவரது இழிவுசொல்லப்பட்டது.] (௰)

௬௧-ஆம்-அதி-மடியின்மை.

அஃதாவது- நினைக்கப்பட்டவைகளைச் செய்யும்போது சோம்புதலில்லாமையாம். ஊக்கமுடையவர்க்கு ஒரோவிடத்தே குணவசத்தால் சோம்பல் வருதலைக்குறித்து இது அதன்பின் வைக்கப்பட்டது.

குடியென்னுங் குன்றா விளக்க மடியென்னு.... ... .❋
மாசூர மாய்ந்து கெடும்......... ....❋

(இ-ள்.) குடியென்னுங் குன்றாவிளக்கம்-(தான்பிறந்த) குடியாகி யமழுங்காவிளக்கான து|- மடியென்னுமாசு- (ஒருவனது) சோமபலாகிய இருளானது-ஊர-நெருக்க-மாய்ந்துகெடும்-மழுங்கிக்கெடும். எ-று.) (கருத்து) ஒருவன் குடியென்னும் விளக்கானது அவன் சோம்பலாற்கெடும் என்பதாம். ❋ உலகநடை யுள்ளவரைக்கும் இடையறாது தன்னுட்பிறந்தவரை விளக்குதலால்-குடியைக்குன்றாவிளக்கமென்றும், தமோகுணத்தினலே வருதலால் சோம்பலை இருளென்றும், அது மற்றையிருள்போலாகாமல் அவ்விளக்கைத்தான்

[சு ௫.]

(உ-ருயு) ௬௧-ஆம்-அதி-மடியின்மை.

நெருக்கி மாய்க்கும் வலியுடைமையரல் -மாசூரமாய்ந்து கெடுமென்றும், சொல்லினர்.—கெடுதல்- பெயரும் வழங்காமற் போகுதல்.

மடியை மடியா வொழுகல்

குடியைக்..................... ....❋

குடியாக வேண்டு பவர் ....

....❋

(இ-ள்.) குடியை-(தாம்பிறந்த) குடியை}- குடியாக-(மேன்மேலுயரும்) நற்குடியாக-வேண்டுபவர்-வேண்டுவோர்-மடியை-சோம்பலை}-மடியா-சோம்பலாகவே நினைத்து) -ஒழுகல்- (முயற்சியோடு) நடக்கக்கடவர். எ-று.) (கருத்து) தாம்பிறந்த குடியை நற்குடியாகவேண்டுவோர் சோம்பலைவிடக்கடவர் என்பதாம். ❋ நெருப்பைக்காட்டிலுங் கொடியது வேறில்லாமைபற்றி நெருப்பை நெருப்பாகவே நினைக்கவேண்டும் என்பதுபோல் மடியைக் காட்டிலுங் கொடியது வேறில்லாமைபற்றிப்பின்னும் அப்பெயராற்றனேசொல்லினர். சோம்பலை சோம்பலாகவே நினைத்து முயற்சிசெய்து நடந்தால் தாம் உயர்தலாலே குடி உயருமென்றற்கு-குடியைக்குடியாகவேண்டுபவவென்றார். அப்படி நடவாமற்போனால் குடி அழியுமென்பது கருத்து. (௨)

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த........ ......❋
குடிமடியுந் தன்னினு முந்து... ...
...........................❋

(இ-ள்.) மடி-மடிக்கத்தகுவதாகிய-மடி- சோம்பலை}-கொண்டு-(தன்னுள்ளே) கொண்டு-ஒழுகும்-நடக்கும்-பேதை-அறிவில்லாதவன்-பிறந்த-பிறந்த-குடி-(குடியானது)-தன்னினும்- அவனினும்-முந்து-முற்பட-மடியும்-அழியும். எ-று.) (கருத்து) சோம்பலுடையவன்குடியானது கெடும் என்பதாம். ❋ அழிவுதருஞ்சோம்பலை உட்கொண்டு நடத்தலாலே பேதையென்றும், அவனாலே காப்பாற்றப்படுவதாதலால்-குடி தன்னினுமுந்து மடியுமென்றும், சொல்லினர். ஆக்கத்திலே பிற்படினும் அழிவிலே முற்படுமென்பதாம். (௩)

குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து... ....❋
மாண்ட வுஞற்றி லவர்க்கு.......... ....❋

(இ-ள்.) மடி-சோம்பலிலே-மடிந்து-வீழ்தலால்-மாண்டவுகுற்றி லவர்க்கு-திருத்தமாகிய முயற்சி யில்லாதவராயினவர்க்கு-குடி-குடி யும்-மடிந்து-அழிந்து-குற்றம்- குற்றங்களும்|-பெருகும்- பல்கும். எ-று.) (கருத்து) முயற்சியில்லாதவர்க்குக் குடியுங்கெட்டுக் குற்றங்

௬௱௩-ஆம்-அதி-மடியின்மை.

(௨௭௪)

களும்பெருகும் [illegible]. குற்றங்கள் பின்வருங் குறளிலே சொல்லப்படுகின்றன. [இவை நான்குபாட்டாலும் சோம்பலினது தீமை சொல்லப்பட்டது.] (௪)

நெடுநீர் மறவி மடி துயி லுன்குங்.............................*
கெடுநீரார் காமக் கலன்... ... ...*

(இ-ள்.) மடி-சோம்பலும்-நெடுநீர்-(விரைவிற்செய்தற்குரியவை களை) நீட்டித்துச் செய்யுந் தண்மையும்-மறவி-மறதியும்- துயில் -துயி லும ஆகிய-நான்கும்-இந்நான்கும்-கெடுநீரார்- இறக்கமிடல்வினை யுடையவர் -காமக்கலன்- விரும்பியேறு மரக்கலமாம். எ-று.) (கரு த்து) சோம்பலும், தாமதமும், மறதியும், நித்திரையும், கெடுவோ ரேறுமரக்கலங்களாம் என்பதாம். ❋ மடி செய்யு ளமைவு நோக்கி நடுநின்றது.—மடியோடு மற்றைமூன்றும்-தமோகுணத்திலேதோ ன்றி உடனிகழ்வனவாதலால் சேர்த்து எண்ணப்பட்டன.—காமக்க லனென்பதனால்- எப்படிமரக்கலம் மரணம் சமீபித்தவர்க்குப் பெ ருக்கந் தருவதுபோலேதோன்றிஅவர்விரும்பிஏறியவிடத்துக்கடலி லேவிழுத்துமோ அப்படியே இந்நான்கும் துன்பஞ் சமீபித்தவர்க் குஇன்பஞ் செய்பவைபோலே தோன்றி அவர் அவைகளைவிரும்பிக் கொண்டவிடத்தே துன்பத்திலே விழுத்துமென்பதுதோன்றலறிக.

படியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடையார்.....*
மாண்பய னெய்த லரிது.... .... *

(இ-ள்.) படியுடையார் - நிலமுழுதும் ஆண்டவரசரது—பற்று-செல்வமானது-அமைந்தக்கண்ணும்- (தானேவந்து) சேர்ந்தவிடத்தும்-(அதனால்)-மடியுடையார் -சோம்பலுடையவர்,-மாண்பயன்-பெரும்பயனை}- எய்தலரிது - அடைதலில்லை. எ,று.) (கருத்து) உலகொருங்குடைய அரசர்செல்வம் வலியவந்தாலும் சோம்பலுடையவர் பயனடைதலில்லை என்பதாம். ❋ உம்மை- அமையாமையைவிளக்கிநின்றது.—பயன்-இன்பம். அச்செல்வம்காக்குமுயற்சியில்லாமையால் அழிதலாலே தந்துன்பம் நீங்காதென்பதாம். (சு)

இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து.... ..... *
மாண்ட வுஞற்றி லவர்........ ....*

(இ-ள்.) மடிபுரிந்து -சோம்பலைவிரும்புதலால்- மாண்ட-பெருமைபொருந்திய- உஞற்றிலவர் முயற்சியில்லாதவர்,—இடிபுரிந்து-

(நட்பாளர்) கண்டித்துப் புத்திசொல்லி- (அதனாற்பயன் காணமையினாலே) எள்ளுஞ்சொல் -(பின்) இகழுஞ்சொல்லை}— கேட்பர்-கேட்பார். எ,று.) (கருத்து) சோம்பலுடையவர் பிறரிகழுஞ்சொல்லைக்கேட்பர் என்பதாம். ❋ அவரிகழ்தல் சொல்லவே பிறரிகழ்தல் சொல்லவேண்டுவ தில்லையாயிற்று: அவைகளுக் கெல்லாம் எதிர்பேசமாட்டாமையால் கேட்பரென்றார். (எ)

மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் ஒன்னார்க்............ *
கடிமை புகுத்தி விடும்.. *

(இ-ள்.) மடிமை-சோம்பற்றன்மையானது-குடிமைக்கண்-குடிமையுடைய அரசனிடத்தே-தங்கின்-தங்குமாயின்-(அது) தன்னொன்னார்க்கு-தன் பகைவர்க்கு-அடிமை- அடியனாந்தன்மைக்கே-புகுத்திவிடும்-(அவனை) அடைவித்துவிடும். எ-று.) (கருத்து) சோம்பலரசனிடத்துத் தங்குமானால் அது அரசன் தன்னைப் பகைவர்க் கடிமையாக்கும் என்பதாம் ※ சோம்பலினது தன்மை-காரியக்கேடு, குடிமை-குடிசெய்தற்றன்மை அது அதனையுடைய அரசனுக்காதல் தன்னொன்னார்க் கென்றதனால் அறிக-அடியனாந்தன்மை தாழ்ந்து பின் றேவல் கேட்டல். [இவைநான்குபாட்டாலும் சோம்பற்குற்றங்கள் சொல்லப்பட்டன.] (அ)

குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன் .... *
மடியாண்மை மாற்றக் கெடும்.......................... *

(இ-ள்.) ஒருவன்-ஒருவன்- மடியாண்மை- சோம்பலை ஆளுந்தன்மையை-மாற்ற- ஒழிக்கவே-குடி- (அவனது) குடியுள்ளும் - ஆண்மையுள்-ஆண்மையுள்ளும்(வந்த)-குற்றம்- குற்றங்கள்-கெடும்-அழியும். எ-று.) (கருத்து) ஒருவன் சோம்பலையொழிக்க அவன் குடியினும் ஆண்மையினும் வந்த குற்றங்க ளழியும் என்பதாம். ※ சோம்பலை ஆளுந்தன்மையாவது- சோம்பலுடைமைக்கு ஏதுவாகிய தமோகுணம்.—அவற்றுள் வந்தகுற்றமென்றது - சோம்பலாலன்றி முன்னே வேறுகாரணங்களால் நிகழ்ந்தவைகளை.—அவையும் சோம்பலுடைமையை ஒழித்து முயற்சியுடையவனை நீங்குமென்பதாம்.

மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான் .... *
தாஅய தெல்லா
மொருங்கு...................................... *

(இ-ள்.) மடியிலா- சோம்பலில்லாத-

மன்னவன்- அரசன்|-அடி- (தன்)
னடியளவிருலே-அளந்தான் - (எல்லா
வுலகத்தையும்) அளந்த

சா க-ஆம்-அதி-மடியின்மை. (உ௫௩)

கடவுள்|-தா ... - கடந்தபரப்புமுழுதையும்}-ஒருங்கு- ஒருசேர ... அடைவான். எ,மு.) (கருத்து) சோம்ப வி... வரசன் ... மடைவான் என்பதாம். ❊ எப்போதும் தொழிலிலிடத்தே முயன்றால் இடையீடில்லாமல் அடைவானென்பதாம்.[இவையிரண்டுபாட்டாலும் சோம்பலில்லாதவன் அடையும்பயன் சொல்லப்பட்டது.]

.ம) ❊ * ⁀ * ⁀ * ⁀ * ⁀ * ⁀ * ⁀ * ⁀ * ⁀ * ⁀ * ⁀ * ❊

சா உ-ஆம்-அதி-ஆள்வினையுடைமை.

அஃதாவது-இடைவிடாத மெய்ம்முயற்சியை யுடையராதல். அது ஆளும்வினையெனக் காரியத்தாற் சொல்லப்பட்டது. சோம்பலைக் கெடுத்தாலும் ... லாமல்ஆளக்கூடாமையிருலே

தொழிலை முயற்சியா லல்
இது மடியின்மையின்பி

ன் வைக்கப்பட்டது.

அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்.... ....*
பெருமை முயற்சி தரும்... .... *

(இ-ள்.) (தமது சிறுமையை நோக்கி)-அருமையுடைத்தென்று-(நாம் இத்தொழிலை முடித்தல்) அருமையையுடைத்தென்று நினைத்து- அசாவாமைவேண்டும் - தளராதிருக்கவேண்டும்.—பெருமை-(அத்தொழிலை முடித்தற்கு ஏற்ற)பெருமையை}-முயற்சி- முயற்சியானது|-தரும்-(தமக்கு)உண்டாக்கும். எ,று.)(கருத்து)தொழிலைக் குறித்தருமையென்று தளராதிருக்கவேண்டும் தளராமுயற்சிபெருமைதரும் என்பதாம். ❊ சிறுமையைநோக்கியென்றது-பெருமைதருமென்றதனாலும், தொழிலை முடித்தலென்றது - அதிகாரத்தானும், வருவிக்கப்பட்டன.—விடா முயற்சிசெய்தால் தாம் பெருமையை யுடையவராவராதலால் அரியதொழில்களும் எளிதிலே முடியுமென்பதாம். (க)

வினைக்கண் வினைகெட லோம்பல்
வினைக்குறை... ....*
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு
....*

(இ-ள்.) உலகு-உலகம்|-வினைக்குறை- தொழிலாகிய குறையை}-தீர்ந்தாரின்-செய்யாதுவிட்டவனை}-தீர்ந்தன்று-விட்டது-(அதனால்)-வினைக்கண்- (செய்யத்தகுந்) தொழிலினிடத்தே- வினைகெடல்-செயலற்றிருக்கையை}- ஓம்பல் - ஒழியக்கடவன். எ,று.) (கருத்து)

௬௨-ஆம்-அதி-ஆள்வினையுடைமை.

தொழிலின் குறையைச் செய்யாது விட்டவனை யுலகம்விட்டது ஆகையால் தொழிலிற்செய்கை யற்றிருக்கையை விடக்கடவன் என்பதாம். ❁ குறை-அவசியம் வேண்டியபொருள். (௨)

தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே ...... ❋
வேளாண்மை யென்னுஞ் செருக்கு...... .... ❋

(இ-ள்.) வேளாண்மை யென்னுஞ் செருக்கு- (எல்லார்க்கும்)உபகாரஞ்செய்தலென்னு மேன்பாடானது|—தாளாண்மையென்னுந் தகைமைக்கண்-முயற்சியென்னும் உயர்ந்தகுணத்தினிடத்தே-தங்கிற்று-நிலைபெற்றதே. எ,று.) (கருத்து) உபகாரமேன்மை முயற்சியினிடத்து நிலைபெற்றது என்பதாம். ❁ பொருள் கைகூடுதலால் உபகாரஞ்செய்தற்கு உரியவர் முயற்சியை யுடையவரே யென்றற்கு அதனைஅவன் குணத்தின்மேல்வைத்தும், அம்மேன்பாடானது பிறரிடத்தே இல்லையென்றற்குத் தங்கிற்றேயென்றும்,சொல்லினர். [இவை மூன்றுபாட்டாலும் முயற்சியது சிறப்புச்சொல்லப்பட்டது.] (௩)

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை...... ❋
வாளாண்மை போலக் கெடும்......... ... .❋

(இ-ள்.) தாளாண்மையில்லாதான்-முயற்சியில்லாதவன்-வேளாண்மை-உபகாரியாந்தன்மையானது-பேடி-(சேனையைக்கண்டால் அஞ்சும்) பேடியானவள்—கைவாளாண்மைபோல-(அச்சேனையிடத்தே)கையிலவாளை ஆளுகைத்தன்மைபோல-கெடும்-இல்லையாம். எ-று.) (கருத்து) முயற்சியில்லாதவனுபகாரத்தன்மை பேடிகைவாள்போலாம் என்பதாம். ❋ எப்படிப் பேடியானவள் வாளால்வெட்டுதற்குக் கருத்துடையவளாயினும் அது அவளச்சத்தால் முடியாதோ அப்படியே முயற்சியில்லாதவன் பலருக்கும் உபகாரஞ்செய்தற்குக் கருத்துடையவனாயினும் அது அவன் வறுமையால்முடியாதென்பதாம். [இதனால முயற்சியில்லாதவனது குற்றஞ்சொல்லப்பட்டது.] (சு)

இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர் .. ...❋
துன்பந் துடைத்தூன்றுந் தூண்...................... ❋

(இ-ள்.) இன்பம்விழையான்-(தனக்கு)இன்பத்தை விரும்பாதவனாகி-வினைவிழையான்-தொழில்முடித்தலையேவிரும்புவோன்-தன்கேளிர்- தன்சுற்றத்தாரும் நட்பாளருமாகிய கேளிரது—துன்பம்-(பாரத்தைப்)துன்பத்தை}- துடைத்து-ஒழித்து-உளன்றும்- அதனை

கூஉ-ஆம்-அதி-ஆள்வினையுடைமை.
(உ௬௱)

த்தாங்கும்-தாண்-தாளும். எ,று.) (கருத்து) தனக்கின்பம் விரும்பா தவனாகி முயற்சியைவிரும்புவோன்தனனுறவினர் துன்பத்தைத்தா ங்குந் தூண் என்பதாம். ✽ கேளிர துவருமையுந்தீர்த்து அவரைக்கா த்தலுஞ்செய்ய வல்லவனுமெனவேதனக்கு அவை செய்துகொள்ளு தல் சொல்லவேண்டுவதில்லையாயிற்று.— காரியமாகிய இன்பத்தைவி ரும்பாமல்காரணமாகியமுயற்சியை விரும்புவோன் எல்லாப்பயன்க ளும் அடைவா னென்றதனால் அக்காரணத்தைவிட்டு அக்காரியத்தை விரும்புவோன் ஒருபயனும்அடையானென்பது பெறப்பட்டது'(ஏ கதேசவுருவகம்) [இதனால் அதனை யுடையவனது நன்மை சொல்லப்பட்டது] (௫)

முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை.................... ✽
இன்மை புகுத்தி விடும்.. ✽

(இ-ள்.) முயற்சி- (அரசரிடத்தே உண்டாகிய) முயற்சியானது|- திருவினை-(அவரது) செல்வத்தை}-ஆக்கும்- வளர்க்கும்.—முயற்றி ன்மை-அம்முயற்சியில்லாமையானது|-இன்மை-வறுமையை}-புகு த்திவிடும்-அடைத்துவிடும். எ,று.) (கருத்து) முயற்சி செல்வத்தை வளர்க்கும் அம்முயற்சி யில்லாமை தரித்திரத்தைக்கொடுக்கும் என் பதாம். ✽ இங்கேசெல்வம்-மந்திரிமுதலாகிய அறுவகை அங்கங்க ள்.—வறுமை அவை யில்லாதவராதல்.—அதனை அடைவித்துவிட வே பகைவரால் அழிவரென்பது கருத்து. (௬)

மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்.................... ✽
றாளுளா டாமரையி னாள்.. ✽

(இ-ள்.) மாமுகடி-கரியமூதேவியானவள்|-மடி-(ஒருவனது)சோம்பலினிடத்தே-உளாள்-இருப்பாள்.—தாமரையினாள்-சீதேவியானவள் -மடியிலான்- சோம்பலில்லாதவனது- தாள்- முயற்சியினிடத்தே-உளாள்-இருப்பாள்.—என்ப-என்று (அறிந்தோர்) சொல்லுவர். எ-று.) (கருத்து) மூதேவி சோம்ப லுடையவனிடத் திருப்பாள். சீதேவி சோம்பலில்லாதவனிடத் திருப்பாள் என்பதாம். ❊ பாவத்தின்கருமை அதன்பயனாகிய முகடிமேலேற்றப்பட்டது. சோம்பலையும் முயற்சியையும் உடையவரிடத்தே அவர்க ளிருத்தலை அவைகளின்மேலே ஏற்றினார். [இவையிரண்டுபாட்டாலும் அவ்விரண்டுக்கும் ஏதுக்கள் சொல்லப்பட்டன.] (ஏ)

பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்………*
தாள்வினை யின்மை பழி.
…………………… * (௬௱௰௮)

௬௰௨-ஆம்-அதி-ஆள்வினையுடைமை.

(இ-ள்.) பொறியின்மை- (பயனைத்தருவதாகிய) விதியில்லாமை|-யார்க்கும்-யாவர்க்கும்-பழியன்று- பழியாகாது-அறிவறிந்து-அறியவேண்டுமவைகளை அறிந்து}-ஆள்வினையின்மை-தொழிலசெய்யாமைய|-பழி- பழியாகும்: எ-று.) (கருத்து) யாவர்க்கும் விதியில்லாமை பழியாகாது முயற்சியில்லாமை பழியாகும் என்பதாம். ❊ அறியவேண்டுமவை- வலிமுதலானவையாம் ஊழ்பொருந்தாதவிடத்தே தொழில்செய்தலாலேபயன் இல்லையென்பாரை நோக்கி உலகம்பழையவினைபற்றிப் பழியாது இவ்விடத்தே தொழில செய்யாத குற்றமுடைமைபற்றியே பழிப்பென்றார்: அதனால் விடாது முயல்க வென்பது கருத்து. (அ)

தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்…………………*
மெய்வருத்தக் கூலி தரும்…………………………*

(இ-ள்.) (முயற்சிசெய்த தொழில்) தெய்வத்தான்-ஊழ்வகையால்—ஆகாதெனினும்-(நினைக்கப்பட்டபயனைத்) தாராதாயினும்-முயற்சி-முயற்சி,-தன்மெய்-தனக்கிடமாகிய உடம்பு- வருத்தக்கூலி-(வருந்திய) வருத்தத்தின் கூலியளவு}-தரும-கொடுக்கும்—[பாழாகாது]. எ,று.) (கருத்து) ஊழில்லாவிடினு முயற்சிபலனைத்தரும் என்பதாம். ✲ ஊழினால் ஆகிய விடத்துத் தன்னளவின் மிகுந்தபயனைத்தருமென்பது உம்மையால் பெற்றாம்.— ஆனவிடத்தும் ஆகாவிடத்தும் பாழாகாமையால் ஊழைநோக்கி இராமல் முயல்கவென்பது கருத்து. (கூ)

ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்....
..........✲

தாழா துஞற்று
பவர்.................................. ✲

(இ-ள்) ஊழையும்- (பயனைவிலக்குவதாகிய) ஊழையும- உப்பக்கங்காண்பர்-புறங்காண்பார்.-உலைவின்றி-(அவ்விலக்குதற்கு)இளையாமல்- தாழாது-தாழ்வற -உஞற்றுபவர்- (தொழிலை) முயல்வோர். எ,று.) (கருத்து) இடைவிடாது முயற்சிசெய்வோர் விதியையும் விலக்குவார் என்பதாம். ✲ தாழ்வறுதல் - ஆலோசனையிலும், வலிமுதலானவை பரிசலிலும் செயலிலும், குற்றமறுதல்.— ஊழானது-தொழிலை ஒருகால் இருகால் அல்லாமல் விலக்காமையாலேபலகாலும்முயற்சிசெய்வோர் பயனை அடைவாரென்றற்கு- உப்பக்கங்காண்பரென்றார். [ஊழினாலே இடுக்கண் வரினும் முயற்சி விடத்தக்கதல்லவென்பது இம்மூன்று பாட்டாலும் சொல்லப்பட்டது.] (ய)

௬௩-ஆம்-அதி- இடுக்கணழியாமை.

அஃதாவது- தொழிலிலே முயலப்பவன் ஊழினாலாவது, பொருளில்லாமையினாலாவது, மெய்வருத்தத்தாலாவது, தனக்குத்துன்பம்வந்தவிடத்து அதற்கு மனங்கலங்காமை. அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

இடுக்கண் வருங்கா னகுக வதனை.................. ....*
யடுத்தூர்வ தஃதொப்ப தில் ... .*

(இ-ள்.) (ஒருவன்)-இடுக்கண்- துன்பமானது- வருங்கால்-(வினையினாலே தனக்கு) வருமிடத்து-நகுக- (அதற்கு அழியாமல்) உள்ளமகிழக்கடவன்.—அதனை-அத்துன்பத்தை}- அடுத்து-மேலுமேலுமாய்-ஊர்வது- நெருக்கவல்லது.— அஃதொப்பது- அம்மகிழ்ச்சிபோல்வது-இல்- (வேறே) யில்லை. (ஆதலால்). எ-று.) (கருத்து) ஒருவன் துன்பம்வரும்போது மகிழக்கடவன் அத்துன்பத்தை நெருக்கக்கடவன் என்பதாம். ❊ தொழில நன்றாக முடிந்தவிடத்தே உண்டாவதான மகிழ்ச்சியை அதற்கு நடுவிலே துன்பம் வருமிடத்து உட்கொண்டால் அவன் அழிவின்றி மனவெழுச்சியால் அதனைத்தள்ளி அக்குறைமுடிக்க வல்லவனாவா னாதலின்-அதனை யடுத்தூர்வ தஃதொப்ப தில்லென்றார். (௧)

வெள்ளத்தனைய விடும்பை யறிவுடையா................*
னுள்ளத்தி னுள்ளக் கெடும்.... ....

*

(இ-ள்.) வெள்ளத்தனைய-வெள்ளம்போலேகரையில்லாத—இடும்பை-துன்பமெல்லாம்-அறிவுடையான்- புத்தியுள்ளவன்- உள்ளத்தின்-உள்ளத்திலுலே-உள்ள-(ஒன்றை) நினைத்தவளவிலே-கெடும்-அழியும். எ,று.) (கருத்து) அறிவுள்ளவனென்றை நினைக்கத்துன்பமெல்லாங்கெடும் என்பதாம். ※ துன்பமாவது-உள்ளத்து ஒருகோட்பாடே யென்பதும்-அதுமாறுபாடாகக்கொண்டால் நீங்குமென்பதும்-அறியவேண்டுதலால் அறிவுடையானென்றும், அவ்வுபாயத்தினெளிமைதோன்ற - உள்ளத்தினுள்ளவென்றும், சொல்லினூர். [இவ்விரண்டுபாட்டாலும் ஊழினுலாகிய இடுக்கணுல் அழியாமைக்கு உபாயஞ்சொல்லப்பட்டது.] (உ)

[சுஉ]

(உறிஅ) சாங-ஆம்-அதி-இடுக்கணழியா

மை.

இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்....................*
இடும்பை படாஅ தவர்..................................*

(இ-ள்.) இடும்பைக்கு- (தொழில்செய்யும்போது அதற்குநடுவி
லேவந்த) துன்பத்திற்கு-இடும்பை படாஅ தவர்-வருந்தாதவர்|இடு
ம்பைக்கு-அத்துன்பத்திற்கு-இடும்பை- துன்பத்தை}படுப்பர்-உண்
டாக்குவார். எ-று.)(கருத்து)துன்பத்திற்குத்துன்பப்படாதவர் துன்
பத்திற்குத்துன்பத்தைக்கொடுப்பர் என்பதாம். ※ வருந்துதல்- இ
ளைத்துச் செய்யாமல்விட நினைத்தல். —— மனத்திட முடையவராய்
விடாதுமுயன்றால் தொழில் முடிவுபெற்றுப் பயன்படுமாதலால் எ
ல்லாத்துன்பங்களும் நீங்குமென்பதுபற்றி - இடும்பைக் கிடும்பை
படுப்பரென்றார் —வருகின்றபாட்டிரண்டிலும்இதற்கு இப்படியே
பொருள் கொள்க. (ரு)

மடுத்தவா யெல்லாம் பகடன்ன னுற்ற .... *
இடுக்க ணிடர்ப்பா டுடைத்து.........
.... *

(இ-ள்.) மடுத்தவாயெல்லாம்-தடைபட்ட விடங்களிலெல்லாம்-ப
கடன்னான்-(பண்டியை இழுத்துச் செல்லும்)கடாப்போலேதொழி
லைமேற்கொண்டுசெலுத்தவல்லவனை}உற்ற-அடைந்த-இடுக்கண்-து
ன்பமானது|-இடர்ப்பாடு- (தானே) துன்பப்படுதலை} - உடைத்து-
உடைத்தாம். எ-று.) (கருத்து) தொழிலைச் செய்யவல்லவனை யடைந்த
துன்பமானது தானே துன்பப்படும் என்பதாம். ※ தடைபட்டவிட
ங்கள்-பண்டிக்குச்சேற்று நிலமுதலானவையும், தொழிலுக்குஇடை
யூறுகளும், ஆம்.—கடா - பக்கத்திலொற்றியும், மூச்சுப்பிடித்தும்,
கால்மடக்கியும், அரிதிலே செலுத்தும் விதம்போல தன்மெய்வருத்
தம் நோக்காமல் முயன்று செலுத்துவா னென்றற்கு - பகடன்ன
னென்றார். (சு)

அடுக்கி வரினு மழிவிலா னுற்ற .. ..*
இடுக்க ணிடுக்கட் படும்..... .... *

(இ-ள்.) அடுக்கிவரினும்-இடைவிடாது மேலுமேலும் வந்தனவாயினும்-அழிவிலான்-)தன் னுள்ளக்கோட்பாடு) விடாதவனை }-உற்ற-அடைந்த-இடுக்கண்-துன்பமானது;-இடுக்கட்படும்-(தான்) துன்பத்திலேபடும். எ,று.) (கருத்து) தைரியம்விடாதவனை யடைந்த துன்பமானது துன்பப்படும் என்பதாம். ❋ ஒன்றேபலகால்வருதலும்,

௬௩-ஆம்-அதி-இடுக்கணழியாமை.

(௨௬௩)

வேறுபலகலந்துவருதலும், அடங்க-அடுக்கி வரினுமென்றார். அழிவென்னைங் காரணப்பெயர்-காரியத்தின்மேல்நின்றது. [இவைமூன்றுபாட்டாலும் ஊழாலாகிய துன்பத்துக்கு அழியாமை சொலப்பட்டது.

(௫)

அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றோம்புத றேற்றா தவர் ....

❋

❋

(இ-ள்.) பேற்றேமென்று- (செல்வக்காலத்து இது) பெற்றேமென்று-ஓம்புதல்-உலோபஞ்செய்தலை-தேற்றாதவர்- அறியாதவர்|-அற்றேமென்று-(வறுமைக்காலத்திலே) வறியேமானோமென்று—அல்லற்படுபவோ-(மனத்திலே துன்பப்படுவாரோ. எ,று.) (கருத்து) செல்வத்திலுலோபஞ்செய்யாதவர் வறுமையில் விசனப்படார் என்பதாம். ❋ பெற்றவிடத்து உலோபஞ் செய்யாமையைநோக்கிஅற்

றவிடத்தும் மந்திரி முதலானவர்கள் விட்டுநீங்காமையால்- அல்லற்படுந லில்லையாயிற்று.[இதனுலேபொருளில்லாமையால் வந்த துன்பத்துக்கு அழியாமையும், அதற்குஉபாயமும், சொல்லப்பட்டன.

இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்..........*
கையாறுக் கொள்ளாதா மேல்.... .... *

(இ-ள்.) மேல்-அறிவுடையவன்;-உடம்பு;-தேகமானது-இடும்பைக்கு-துன்பமாகியவாகுக்கு-இலக்கமென்று- குறியிடமென்று தெரிந்து-கலக்கத்தை-(தன்மேல்வந்த) துன்பத்தை}—கையாறு-துன்பமாக-கொள்ளாதாம்-கொள்ளான். எ-று.) (கருத்து) அறிவுடையவன் துன்பத்தைத் துன்பமாகக்கொள்ளான் என்பதாம்.※(இடும்பை

லையவாமென்றுமல் உடம்பை இலக்கமென்றதனுல்
ம்.) இயல்பாகக் கொள்வமென்றறிக.

வகதேசவுருவக

(எ)

இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான்........... ...*
றுன்ப முறுத லிலன் ....*

(இ-ள்.) இன்பம்-(தன்னுடம்பிற்கு) இன்பமானவைகளை}-விழையான்-விரும்பானுகி-இடும்பை-(வினையால்) துன்பமடைதல்- இயல்பென்பான்-இயல்பென்று தெளிந்திருப்பவன்|-துன்பமுறுதலிலன் (தன்முயற்சியால்) துன்பமடையான் எ-று.) (கருத்து) இன்பத்தை இச்சியாதவனுகித் துன்பத்தை யியல்பென்று நினைப்பவன் துன்படையான் என்பதாம். ※ இன்பம் விரும்பினுலும்,இயல்பென்று

௬௩-ஆம்-அதி-இடுக்கணழியாமை.

துவாராமல் காக்கக்கருதினாலும், துன்பம் விளைதலால்
டும் செய்யாதவனை-துன்பமுறுத லிலனென்றார்.
இவ்விரண்

(அ)

இன்பத்து ளின்பம் விழையாதான்
றுன்பத்துட்.............*
துன்ப முறுத லிலன்........................
..................................*

(இ-ள்.) இன்பத்துள்-(வினையினாலே) இன்பம் வந்தவிடத்து-இன்பம்- அவ்வின்பத்தை}-விழையாதான்-(அனுபவித்துக்கொண்டமனத்தால்) விரும்பாதவன் |-துன்பத்துள்- துன்பம் வந்தவிடத்தும்-துன்பம்-அத்துன்பத்தை}—உறுதலிலன் - (அனுபவித்துக்கொண்டமனத்தால்) அடையான். எ-று.) (கருத்து) இன்பத்தை யிச்சியாதவன் துன்பத்தில் விசனப்படான் என்பதாம். ❄ துன்பமுற்சியாவ்வரும். இடுக்கண் இரண்டும் ஒரு தன்மையாக் கொள்ளலாம் பயன்களும் இலவாயின. (௯)

இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்...............*
ஒன்னார் விழையுஞ் சிறப்பு.................................*

(இ-ள்.) (ஒருவன் தொழில் செய்யுமிடத்து)- இன்னாமை-(முயற்சியால்வருந்) துன்பத்தையே-இன்பமெனக்கொளின்- (தனக்கு)இன்பமாக நினைத்துக் கொள்ளுவானாயின்-(அதனால்)-தன்னொன்னார்-தன்பகைவர்-விழையும்-நன்கு மதித்தற்கு ஏதுவாகிய- சிறப்பு-உயர்ச்சியானது|—ஆகும்- உண்டாகும். எ,று.) (கருத்து) துன்பத்தையின்பமாகக் கொள்வானாகி லவன் பகைவராலே மதிக்கப்படு முயர்ச்சியடைவான என்பதாம். ❋ துன்பந்தானும் உயிர்க்கு இயல்பன்றிக் கணிதமாய் மனத்தினிடத்தே நிகழ்வதோர் கோட்பாடாகலின் அதனை மாறுபடக்கொண்டால் அதற்கு அழியாமல் மனமகிழ்ச்சியுடையனாகி அதனாலே தொடங்கிய தொழிலை முடிக்கவல்லவனாகுமென்பது கருத்து. [இவைநான்குபாட்டாலும் மெய்வருத்தத்தாலாகிய துன்பத்துக்கு அழியாமையும், அதற்கு உபாயமும், சொல்லப்பட்டது.] (ய)

—❋—

அரசியல்

முற்றுப்பெற்றது.

❋ (❋) (❋) (❋) (❋) ❋

அங்கவியல்.

இனிமுறையானே அரசியலை நடத்துதலிலே ஒன்றற்கொன்று துணையாகிய அங்கங்களது இயல்பை முப்பத்திரண்டு அதி
காரத்தாலே சொல்லத்தொடங்கி

அவ்வங்கங்களுள்ஆ

ரீனுள்ளும்

ஆக்கிஞைசக்கரத்தைச்செலுத்துதலிலே

அவ்வரசனுக்குச் சமானமாகிய அமைச்சன

து இயல்பு

பத்ததிகாரத்தினலே சொல்லத்தொடங்கி

முதலிலே

அமைச்சுச் சொல்லுகின்றார்.

சாசு

ஆட்-அதி-அமைச்சு.

அஃதாவது - அமைச்சனது தன்மை

அத்தன்மை அவனீ

குணங்களும் செய்கைகளும்

ஆம்.

கருவியுங் காலமுஞ் செய்கையுஞ்

செய்யு.......... . . . *

மருவினையு மாண்ட

தமைச்சு.......................... *

(இ-ள்.) (தொழில்செய்யும்போது)-கருவியும்-(அதற்குவேண்டு
ஞ்) சாதனங்களும் காலமும்-(அதற்கு ஏற்ற)காலமும்- செய்கையு
ம்-(அது) செய்யும்விதமும்-செய்யுமருவினையும்- (அவ்விதத்திலே)
செயப்படும் அரிய தொழில்களும்-மாண்டது - பொருந்த வெண்
ணவல்லவனே|—அமைச்சு-மந்திரியாவான். எ-று.) (கருத்து) கருவி
யும் காலமும் செய்கையும் தொழிலும் இவற்றை யெண்ண வல்லவ.
ன் மந்திரி என்பதாம். ❊ சாதனங்கள்:- சேனையும், பொருளும்.-கா
லம்- அத்தொழிலைத் தொடங்குங்காலம்.—செய்கையெனவே அது
தொடங்குமுபாயமும், இடையூறு நீக்கி முடிக்கும்விதமும், அடங்
கின.—சிறிய முயற்சியினாலே பெரியபயன் தருமென்றதற்கு அரு
வினையென்றார். இவ்வைந்தையும் வடநூலார் மந்திரத்துக்கு அங்க
மென்பார். (௧)

வன்கண் குடிகாத்தல் கற்றறித
லாள்வினையோ..............❊
டைந்துடன் மாண்ட தமைச்சு
....❊

(இ-ள்.) வன்கண் - (தொழில்செய்தலில்) அசைவில்லாமையும்-
குடிகாத்தல்-குடிகளைக்காத்தலும்-கற்றறிதல்- (நீதிநூல்களைக்(கற்
று (விதிவிலக்குகளை)அறிதலும்-ஆள்வினை-முயற்சியும்-ஐந்துடன்-
(முன்சொல்லப்பட்ட) அங்கங்களைத் துடனே-மாண்டது- திருந்தவு.
[சுசு]

டையவனே|—அமைச்சு—மந்திரியாவான். எ-று.) (கருத்து) அழை வில்லாமையும் குடிகளைக்காத்தலும் கற்றறிதலும் முயற்சியும் உடையவன் மந்திரி என்பதாம். ❋ இந்நான்கினையும் முன்னையவைகளோடு சேர்த்துச் சொல்லியது — அவைகளும் இவைகளோடு கூடியே மாட்சிமைப்பட வேண்டுமென்பதை அறிவித்தற்கும், அவைஐந்தென்னுந் தொகைபெறுதற்கும், என்க. (உ)

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்……………❋
பொருத்தலும் வல்ல தமைச்சு …………………………❋

(இ-ள்.) (போர்வந்தவிடத்து)-பிரித்தலும்- (பகைவர்க்குத் துணையாயினவரை அவரைவிட்டுப் பிரிக்கவேண்டினால்) பிரித்தலும் - பேணிக்கொளலும் — (தம்மிடத்தோரை அவர் பிரியாமற் கொடையினாலும் இன்சொல்லினாலும்) காத்துக்கொள்ளுதலும்-பிரிந்தார்— (தம்மைவிட்டும் தம்மவரைவிட்டும்) பிரிந்தவரை}-பொருத்தலும்-(மறுபடி பொருத்தவேண்டினால்) பொருத்தலும்—வல்லது- வல்லவனே|- அமைச்சு-மந்திரியாவான். எ-று.) (கருத்து) பிரித்தலும் காத்தலும் பிரிந்தவரைப் பொருந்தச்செய்தலும் வல்லமையுடையவன் மந்திரி என்பதாம். ❋ இவைகளுள் அப்பொழுதை நிலைக்கு ஏற்ற செயலறிதலும், அதனை அவரறியாமல் அதற்கு ஏற்ற உபாயத்தால் முடிவுறப்பிடித்தலும், அருமையாதல்நோக்கி வல்லதென்றார்.—பொருத்தலுக்குச் சந்தியென்றும், பிரித்தலுக்கு விக்கிரகமென்றும், பெயர்கள். (௩)

தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்……………❋
சொல்லலும் வல்ல தமைச்சு……………………………❋

(இ-ள் .) (ஒருக ாரியச்செய்கை பலவிதமாகத்
தோன்றினல்)- தெ ரிதலும்-(அவற்றுள் ஆவதை)
ஆராய்ந்தறிதலும்- தேர்ந்துசெயலு ம்-(அது
செய்யும்போது பலிக்கும்விதம்)
நாடிச்செய்தலும்- (இவை ைாப்பிரித் நல்
பொருத்த ல்செய்த வி்லை)-ஒருதலையா ச்
சொல்லலும்- (அவர்க்குஇதுவேநம்
பத்தக்கதென்று)துணிவுபிறக்கும் வகைசொ
ல்லலும்-வல்லது- வல்லவனே---அமைச்சு -
மந்திரியாவான். எ,று.) (கருத்து) ஆராய்தலும்
ஆராய்ந்துசெய்தலும் ஒருதலையாகச்சொல் லலும்
வல்லவன் மந்திரி என்பதாம். ❋
தெரிதல்செயலின்மேலாயி
ற்று-வருகின்றநதுவாகலின்.

(சு) ௬ாசு-ஆம்-அதி-அமைச்சு.

(௨௬௩)

அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந் ...
திறனறிந்தான் றேர்ச்சித் துணை.......................

❋

❋

(இ-ள்.) அறன்- (அரசனாலே செய்யப்படும்) அறங்களை}—அறிந்து- ஆன்றமைந்த - (தனக்கு ஏற்றகல்வியாலே) நிறைந்தமைந்த-சொல்லான்-சொல்லையுடையவனாகி- எஞ்ஞான்றும்- எந்நாளிலும்-திறன்-(தொழில்செய்யுந்)திறங்களை}-அறிந்தான்- தேர்ச்சி- ஆலோசனைக்கு- துணை-(அவனுக்குத்) துணையாவான். எ-று.) (கருத்து) தருமங்களையறிந்து தொழில்செய்யுந் திறங்களைத் தெரிந்தவன் மந்திரி என்பதாம். ❋ தன்னரசன் சுருங்கியகாலத்திலும் பெருகிய காலத்திலும நடுவானகாலத்திலும் என்றற்கு-எஞ்ஞான்றுமென்றார். [இவ்வைந்து பாட்டாலும் மந்திரிகளது குணத்தன்மை சொல்லப்பட்டது. (ரு)

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்.................❋
யாவுள முன்னிற்

பவை....................................❋

(இ-ள்.) மதிநுட்பம்-(இயற்கையாகிய) புத்தி-நுட்பத்தை}—நூலோடு-(செயற்கையாகிய) நூலறிவோடு-உடையார்க்கு-உடையமந்திரிகளுக்கு - அதிநுட்பம்-அதிக நுட்பத்தையுடைய ஆலோசனைகளாய் முன்னிற்பவை-எதிர்நிற்பவை-யாவுள-எவையுள. எ-று.) (கருத்து) புத்திநுட்பத்தையுடைய மந்திரிகளுக்கு முன்னிற்குமாலோசனைகளெவையுள என்பதாம். ❋ நூல்- அதனறிவுக்கும், அதிநுட்பம் அதனையுடைய ஆலோசனைக்கும, ஆகுசலால் ஆகுபெயர்கள்.-முன்னிற்றல் பகைவராலோசனையால் தம்மாலோசனை அழியாதுநிற்றல் பகைவராலோசனையை தாம் அறிந்து அழித்து அவரறிந்து அழியாதவைகளைத் தாம் ஆலோசிப்பவரென்பது கருத்து [இதனால் அவரது சிறப்புச் சொல்லப்பட்டது.] (சா)

செயற்கை யறிந்தக் கடைத்து
முலகத்................❋

தியற்கை

யறிந்து செயல்.......................................*

(இ-ள்.) செயற்கை-(நூல்வழியினால் தொழில்) செய்யுந்திறத்தை அறிந்தக்கடைத்தும் - அறிந்தவிடத்தும் - உலகத்து- உலகத்திலே- இயற்கை-(அப்போது நடக்கின்ற) இயற்கையை}-அறிந்து-தெரிந்து—செயல்-(அதனோடுபொருந்தச்) செய்யக்கடவன். எ,று.) (கருத்து) தொழில்செய்யுந்திறங்களை யறிந்தாலும் உலகநடக்கை யறிந்

கூ-ஆம்-அதி-அமைச்சு.

(உசு)

திற்பர். எ,று.) (கருத்து) செய்தொழிலிலே திறமில்லாமந்திரிகள்மு ன்பாலோசித்தும் பின்பு முடிவில்லாமற் செய்வார்கள் என்பதாம். ❀ அக்கூறுபாடாவன-வந்தவந்த இடையூறுகளுக்கு எற்ற ஏற்ற ப ரகாரம் அறிந்துசெய்தலும், தாம் திடமுடையவராதலும், ஆம்.—தப்பாமல் ஆலோசிக்க வல்லவராயிருந்தும் செய்து முடிக்க மாட் டாதவரும் உண்டென்பதாம். [இவ்வ யிரண்டுபாட்டாலும் மந்திரிகளுள் விடப்படுவாரது குற்றம் சொல்லப்பட்டது.]

(ம)

✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤

கூ ரு-ஆ

i.—அதி-சொல்வன்மை.

அஃதாவது - தான் நினைத்த தொழில் முடியும் வழியால் வார்த்தை
சொல்ல வல்லவனாகுதல் முன்னதிகாரத்திலே ஒருதலையாச்சொ
ல்லுமென்றதனையே சிறப்புப்பற்றி விரித்துச் சொல்லு
தலால் அதன்பின்
வைக்கப்பட்டது.

நாநல மென்னு நலனுடைமை
யந்நலம்............ ... ...*
யாநலத்
துள்ளதூஉ மன்று...................... ....*

(இ-ள்.) (மந்திரிகளுக்கு அவசியம்வேண்டியகுணமாவது)-நாந லமென்னும்- நாநலமென்று சிறப்பித்துச் சொல்லப்படும் - நலனு

டைமை-நலத்தினை யுடையராதல்.—அந்நலம்- அந்த நலமானது|-(பிறர்க்கும்)-யாநலத்து-பிறநலங்களிலெல்லாம் -உள்ளதாஉமன்று-அடங்குவதன்று [மிகுந்தது.] (ஆதலால்). எ-று.) (கருத்து) மந்திரிகளுக்கு நாநலம்போல வேறுநலமில்லை என்பதாம். ❁ நாநலம்-நாவாலுளதாகிய நலமெனவிரியும்.—இந்நலம்-உலகத்தைத்தம்வசமாக்கும் மந்திரிகளுக்கு வேறுயிருக்க வேண்டுமென்னும் நீதிநூல் வழக்கம்பற்றி-நாநலமென்றும். பிறருக்கும் இதுபோற் சிறந்தது வேறில்லாமையால் - அந்நலம் யாநலத்துள்ளதாஉ மன்றென்றுஞ், சொல்லினர்.—பிரித்தல் பொருத்தல் முதலாகிய தொழிலில்லார்க்கும் இது அவசியம் வேண்டுவதானால் அத்தொழிலுடைய மந்திரிகளுக்குச் சொல்லவேண்டுமோ வென்பது கருத்து. (க)

ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்........................ ❋
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.... ....❋

(இ-ள்.) (மந்திரிகள்|)சொல்லின்கண்-சொல்லினிடத்து- சோர்வு-

[சுஎ]

சோர்தலை }-காத்தோம்பல்-(தம்மிடத்தே உண்டாகாமல்) காக்கக்கடவர்.—(தம்மரசனுக்கும் அங்கங்களுக்கும்)- ஆக்கமும்- பெருக்கமும்-கேடும்- அழிவும்-அதனால்-அச்சோர்வினாலே- வருதலால்-வருகையால். எ-று.) (கருத்து) செல்வமுங், கேடுஞ்,சொல்லால் வருதலாலமந்திரிகள் சொற்சோர்வு வாராமற் காக்கக்கடவர் என்பதாம். ❊ ஆக்கத்துக்கு ஏதுவாகிய நல்லசொல்லையும், கேட்டுக்கு ஏதுவாகிய தீயசொல்லையும், சொல்லென்கிற- ஒப்புமைபற்றி- அஃதுவென்றார் இவர் சொற்சோர்வு மற்றைச்சோர்வுபோ லாகாமல் உயிர்களுக்கெல்லாம் ஒருசேரவருதலால்- காத்தோம்பலென்றார். [இவையிரண்டிபாட்டாலும் சொல்வல்லமை மந்திரிகளுக்கு அவசியம் வேண்டியதென்பது சொல்லப்பட்டது.] (௨)

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்...... ... ❊
வேட்ப மொழிவதாஞ் சொல் ... .
....❊

(இ-ள்.) கேட்டார்-(நட்பா)யேற்றுக்கொண்டவரை }-பிணிக்கும்-(பின்வேறுபடாமற்) கட்டும்-தகை -குணங்களை }-அவாய்-அவாவி-கேளாரும்-(மற்றநப்பகையா) யேற்றுக்கொள்ளாதவரும்-வேட்ப-(பின் அப்பகைமை யொழித்துநட்பினை)விரும்பும் வண்ணம்-மொழிவது சொல்லப்படுவதே|— சொல்- சொல்லாம். எ-று.) (கருத்து) கேட்டாருங், கேளாதவரும், இச்சிக்கச் சொல்வதே சொல்லாம் என்பதாம். ❊ அக்குணங்களாவன- வழுவில்லாமை- சொற்சுருங்குதல்- பொருள்விளக்குதல்- இனிதாதல்- மேலானபயனைத்தருதல்-இவை முதலானவை.—அவைகளை அவாவுதலாவது-அச்சொல்சொல்லுவான் குறித்த பொருளையேயன்றி வேறேபுத்தி நுட்ப முடையவராலே கொள்ளப்பட்டவைகளின் மேலும் நோக்குடைத்தாதல். [இதனால் சொல்லினது இலக்கணம் சொல்லப்பட்டது.] (௩)

திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும் ....
பொருளு மதனினூஉங் கில்........................

..........*

... . *

(இ-ள்.) (மந்திரிகள்!)-சொல்லை-(அப்படிப்பட்ட) சொல்லை- திறன்-(தம்முடையவும் கேட்பாருடையவுமான) திறங்களை}-அறிந்து-தெரிந்து-சொல்லுக-சொல்லக்கடவர்.—அதனினூஉங்கு- அப்படிச்சொல்லுதற்கும்மேற்பட்ட - அறனும் பொருளும்-தருமமும்பொருளும்|—இல்-இல்லை. (ஆதலால்). எ,று.) (கருத்து) மந்திரிகள் சொற்றிறங்களையறிந்து சொல்லக்கடவர் என்பதாம். * அத்திறங்களாவன-குடிப்பிறப்பு-கல்வி-ஒழுக்கம்-செல்வம்-உருவம்-பருவம்-என்

௬௫-ஆம்-அதி-சொல்வன்மை.

(௨௱௪)

பவைகளால் வரும் தரதரவேறுபாடுகள். அவைகளை அறிந்து சொல்லுதலாவது-அவைகளாலே தமக்கும் அவர்க்கும் உண்டாகிய உயர்வுதாழ்வுகளை அறிந்து அவரவர்க்குத் தகுந்தமரபினாலே சொல்லுதல். அது உயர்ந்தோர் நடையோடு பொருந்தலையும், இனிமையையும்,தருதலால் அறனாயிற்று. தமது காரியமுடிதலாலே பொருளாயிற்று. அறனும் பொருளும் எனக்காரணத்தைக் காரியமாக்கிச் சொல்லினர். • (௪)

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை.....*

வெல்லுஞ்சொ லின்மை யறிந்து........ .... *

(இ-ள்.) சொல்லை-(தாம்சொல்லக்கருதிய) சொல்லை - வெல்லுஞ்சொல்-வெல்லவல்ல சொல்லாகிய-பிறிதோர்சொல் - பிறிதோர்சொல்-இன்மை-இல்லாமையை}-அறிந்து-தெரிந்து-அச்சொல்லை-அந்தச்சொல்லை}—சொல்லுக - சொல்லக்கடவர். எ-று.) (கருத்து) பிறர் சொல்லுஞ்சொல் வெல்லுஞ்சொல் இல்லாமையைக்கண்டு சொல்லக்கடவர் என்பதாம். ※ பிறிதோர்சொல்லாவது-பகைவரது எதிரான சொல். வெல்லுதல்- குணங்களாலே மிகுதல். அதுவே வெல்லச்சொல்லுகவென்பதாம். (ரு)

வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன்...※
மா ட்சியின் மாசற்றார்
கோள்........................ ※

(இ-ள்.) வேட்ப-(பிறர் பின்னுங்கேட்க)விரும்பும்படி-தாஞ்சொல்லி-தாங்கள்சொல்லி-பிறர்சொல்-பிறர் (தமக்குச்சொல்லுஞ்) சொல்லினது- பயன்கோடல்- பயனைக்கொண்டு விடுதல்|—மாட்சியில்லினது (மந்திரி) யிலக்கணத்திலே-மாசற்றார்- குற்றமற்றவரது- கோள்-துணிவு. எ-று.) (கருத்து) பிறரிச்சிக்கும்படிசொல்லிப் பிறர்சொற்பயனைகொள்ளுதல் மந்திரிகள் கொள்கையாம் என்பதாம். ※ பிறர் சொற்களிலே குற்றமுளவாயினும் அவைநோக்கி இகழாரென்பதாம். வல்லமையில்லாதவரை யிகழ்தல்- வல்லவர்க்குத் தகுதியல்லாமையால் இதுவும் உடன்சொல்லினார். [இவை மூன்றுபாட்டாலும் அவைச்சொல்லும்விதம் சொல்லப்பட்டது.] (சு)

சொலல்வல்லன் சோர்விலனஞ்சா னவனை ....※
யிகல்வெல்லல் யார்க்கு மரிது....... ....※

(இ-ள்.) (தானெண்ணியகாரியங்களை)-சொலல்வல்லன்-(பிறர்க்கு

ஏற்கச்) சொல்லுதல்வல்லவனாகி-(அவைமிகவும் பலவானவிடத்தே) சோர்விலன் – (ஒன்றிலுஞ்) சோர்வில்லாதவனாகி-அஞ்சான்-(சபைக்கு) அஞ்சாதவன் (யாவன்) -அவனை- அவனை}-இகல்-மாறுபாட்டிலே-வெல்லல்-வெல்லுதல்|— யார்க்கும்-எவர்க்கும்-அரிது-அருமை. எ,று.) (கருத்து) சொல்லில் வல்லவனும், சோர்வில்லாதவனும், அஞ்சாதவனுமாகியவனை வெல்லலரிது என்பதாம். ❋ ஏற்கச்சொல்லுதல்-அவருக்கு அவை காரியமல்லாதவையாயிருந்தாலும் ஆமென்று நம்பும்படி சொல்லுதல். சோர்வு-சொல்லவேண்டுவதனைமறதியாலொழிதல். இம்மூன்றுகுணமு முடையவனைப் பகைவராய்ப்பிரித்தல் பொருத்தல் செய்து வெல்வார் இல்லையென்பதாம். (எ)

விரைந்து தொழில்கேட்கு ஞாலம் நிரந்தினிது............ ❋
சொல்லுதல் வல்லார்ப் பெறின்..........
.... ❋

(இ-ள்.) தொழில்-(சொல்லப்படுங்) காரியங்களை- நிரந்து- ஒழுங்குபடக்கோத்து-இனிது-இனிதாக- சொல்லுதல்- சொல்லுதலில்-வல்லார்-வல்லவரை}பெறின்-பெற்றால்-ஞாலம்-உலகமானது.— விரைந்து-விரைவாகி-கேட்கும்-(அவைகளை) ஏற்றுக்கொள்ளும். எ,று.) (கருத்து) சொல்காரியங்களை யினிதாகச் சொல்லுதலில்வல்ல மந்திரிகளைப்பெற்றால் உலகமேற்றுக்கொள்ளும் என்பதாம் ❋ ஒழுங்குபடக்கோத்தல்- முன்னேசொல்ல வேண்டியவையும் பின்னேசொல்லவேண்டியவையும் அறிந்து அம்முறையே வைத்தல். இனிதாதல்-கேட்பார்க்கு இன்பந்தருதல்.— சொல்லுதல் வல்லவன் நூறாயிரம் பேருளொருவன் என்னும் வடமொழிபற்றி- வல்லார்ப் பெறினென்றார். [இவையிரண்டு பாட்டாலும் அவ்விதங்களாலே சொல்லுதல்வல்லாரது சிறப்புச் சொல்லப்பட்டது.]

(அ)

பலசொல்லக் காமுறுவர் மன்றமா
சற்ற.....................*
சிலசொல்ல றேற்றா தவர்
...............................*

(இ-ள்.) மாசற்ற-குற்றமற்றவையாய்-சில- சிலவாகிய வார்த்தைகளை-சொல்ல அப்படிச்)சொல் லுதலை-தேற்றாத வர்-அறியாதவர்! — பல-பலவாகிய வார்த்தைக ளை-சொல்ல-பேச-காமுறுவர்-விரும்புவார். (எ,று.) (கருத்து) குற்றமற்ற வார்த்தை களைப்பேச அறியாதவர்கள் பலவார்த்தைகளைப்பேச விரும்புவார்கள். வார்த்தை-வசன

மென்பதாம். * குற்றம்-முன்சொல்லப்பட்ட குணங்களுக்குஎதிரா னவை. இடைவிடாமற் பலசொல்லுதலையும் சொல்வன்மையென்று

விரும்புவாருமுளரே. அவர் அப்படிச் சொல்லமாட்டாதவரே-வல் லவர் அல்லரென உறுதிப்படுத்துகிறது இப்பாடலென்றார் (க)

இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற ....*
துணர விரித்துரையா தார்..........................*

(இ-ள்.) கற்ற-கற்ற நூல்களை}-உணர-(பிறர்) அறியும்விதமாக-விரித்துரையாதார்-விரித்து உரைக்கமாட்டாதவர்|—இணர் - கொத்திலிடத்தே-ஊழ்த்தும்-மலர்ந்திருந்தும் - நாறா-மணக்காத-மலரனையர்-பூப்போல்வர். எ-று.) (கருத்து) கற்ற நூல்களை விரித்துச்சொல்லாதவர்கள் வாசனையில்லா மலருக் கொப்பாவார் என்பதாம். ❊ எப்படிச் செவிபெற மலர்ந்திருந்தும் வாசனைசெய்யாதமலர் சூடப்படாதோ அப்படியே நூலைக்கற்றிருந்தும் சொல்லமாட்டாதவர் நன்குமதிக்கப்படாரென்பதாம். [இவ்விரண்டு பாட்டாலும் அது மாட்டாரது இழிவு சொல்லப்பட்டது.] (௰)

௬௬-ஆம்-அதி-வினைத்தூய்மை.

அஃதாவது-செய்யப்படுந் தொழில்கள் பொருளைமாத்திர மல்லாமல் அறமும் புகழுந் தந்து நல்லவையாதல். சொல்லே யல்லாமல் செயலும் நன்றாக வேண்டு மென்கின் றமையால் இது அதன் பின் வைக்கப் பட்டது.

துணைநல மாக்கந் தரூஉம் வினைநலம்....
....❊
வேண்டிய வெல்லாந் தரும்.. ....
....❊

(இ-ள்.) (ஒருவனுக்கு)-துணை நலம்- துணையின து நன்மை யான து|-ஆக்கம்- செல்வமொன்றையே}-தரூஉம்- கொடுக்கும்.—வினை நலம் - தொழிலின து நன்மையான து|-வேண்டியவெல்லாம் - (அவன்)வேண்டியவைகளையெல்லாம் தரும்-கொடுக்கும்.எ,று.)(கருத்து) ஒருவனுக்குத் துணைநன்மை செல்வமொன்றைத் தரும் தொழிலின் நன்மை வேண்டியவற்றைத் தரும் என்பதாம்.❋வேண்டியவெல்லாமென்றது - இம்மையில் அறம்பொருளின்ப முதலானவைகளையும், மறுமையில்தான்விரும்பியபதங்களையும்.-[இதனால்காணப்படுந் து

[௬௮]

(உ௭௰)

௬௬—ஆம்-அதி-வினைத்தூய்மை.

ணைநன்மையினும் கருதப்படுந் தொழினன்மை சிறந்ததென வினைத்தூய்மையது சிறப்புச் சொல்லப்பட்டது.] (௧)

❋ என்று மொருவுதல் வேண்டும் புகழொடு.................❋
நன்றி பயவா வினை...❋

(இ-ள்.) (தம்மரசனுக்கு) — புகழொடு - (இம்மைக்கு) புகழையும்-நன்றி (மறுமைக்கு) அறத்தையும்-பயவா-தாராத-வினை-தொழில்களை}-என்றும்- எக்காலத்திலும் — ஒருவுதல்வேண்டும்- (மந்திரிகளுக்கு!) ஒழிதல் வேண்டும். எ,று.) (கருத்து) அரசனுக்குப் புகழையுந் தருமத்தையுந் தாராத்தொழில்களை மந்திரிகள் விடவேண்டும் என்பதாம். ❋ பெருகல்—சுருங்கல் நடுநிற்றல்— என்கிற நிலைவேறுபாடுகள் காலத்தினால் வருதலால்— என்று மென்றார். (௨)

ஓசீதல் வேண்டி யொளிமாழ்குஞ் செய்வினை..............❋
யாஅது மென்னு மவர்.............. ...
.......................❋

(இ-ள்.) ஆஅதும்-மேலாகக்கடவோம்- என்னுமவர்- என்று நினைப்பவர்|-ஒளி-(தம்) மொளி-மாழ்கும் - கெடுதற்குக் காரணமாகிய-வினை-தொழிலை}-செய்-செய்தலை} ஓஒதல்வேண்டும்- ஒழியக்கடவர். எ,று.) (கருத்து)மேலாவோ மென்றெண்ணுவோர் கெடுதற்குக் காரணமானதொழில் விடக்கடவர் என்பதாம. ❋ ஒளியாவது- தாம்இருக்கின்ற காலத்திலே எல்லாராலும் நன்குமதிக்கப்படுதல்.ஒளிகெடவருமாக்கம்- ஆக்கமன் றென்பதாம். (ரு)

இடுக்கட் படினு மிளிவந்த செய்யார் .... ❋
நடுக்கற்ற காட்சி யவர்.... .... ❋

(இ-ள்.) நடுக்கற்ற-அசைவற்ற - காட்சியவர்-தெளிவையுடையவர்---இடுக்கட்படினும்- (தாம்) துன்பத்திலேபடவரினும்- (அதுதீர்தற்பொருட்டு) இளிவந்த- (முன்செய்தவர்க்கு) இழிவுவந்ததொழில்களை}-செய்யார்-செய்யார். எ,று.) (கருத்து) அசைவில்லா வறிவினையுடையவர் துன்பம்வரினும் இழிதொழிலைச் செய்யார் என்பதாம். ❋ சிறிதுபோதிலே நீங்குவதாகிய துன்பத்தைநோக்கி எப்போதும நீங்காத இழிவை அடையலாகாதென்பதும், அவ்விழிவை அடைந்தாலும் வருவதாயுள்ள அத்துன்பமானது வருமென்பதும், தெளிவாராதலால்- செய்யாரென்றார். (சு)

ள்ள-ஆம்-அதி-வினைத்தூய்மை. (௨௪௬)

எற்றென்
றிரங்குவ செய்யற்க செய்வானேல்...... ...❋
மற்றன்ன செய்யாமை நன்று............
.... ❋

(இ-ள்) எற்றென்று- (நான்செய்தது) எப்படிப்பட்டதென்று- இரங்குவ- (பின்தானே) இரங்குந்தொழில்களை3:- செய்யற்க- (ஒருகாலும்) செய்யாதிருக்கக்கடவன்.—செய்வானேல் - (ஒருகாலமயங்கி அவைகளைச்) செய்வானாயின்-மற்று-பின்பு-அன்ன- அவ்விரங்கல்களை3-செய்யாமை- செய்யாமை|-நன்று- நல்லது. எ,று.) (கருத்து) தான்வருந்துந் தொழில்களைச்செய்யாதிருக்கக்கடவன் அவற்றைச் செய்வானாகிலும் பின்செய்யாமை நல்லது என்பதாம். ❀ தொழில் பலவாதலால் இரக்கமும் பலவாயிற்று. செய்துவிட்டபின்பு இரங்குவானாயின் அஃது தீரும்வழி அறிந்திலனென்றும், தைரியமிலனென்றும், தன்பழியைத்தானே தூற்றுகின்றானென்றும், எல்லாருமிகழுவாராதலால் பின்பு இரங்காமைநன்றென்று.— இரங்காமையும் நல்லதொழில்செய்வோர் செயலாதலால் உடன் சொல்லப்பட்டது.

ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க.............. *
சான்றோர் பழிக்கும் வினை... ....
.... *

(இ-ள்.) (ஒருவன்) ஈன்றாள்-(தன்னைப்) பெற்றதாயினது-பசி-பசியை}-காண்பானாயினும்-(வறுமையாலே) கண்டிருக்குந் தன்மையனாயினானெனினும்((அதைக்குறித்து)-சான்றோர்-(அறிவினாலே) நிறைந்தார்-பழிக்கும்-நிந்திக்கின்ற-வினை-'தொழில்களை}-செய்யற்க-செய்யாதிருக்கக்கடவன். எ-று.) (கருத்து) தாய்பசியைக் கண்டானாயினு மதைக்குறித்துப் பழிக்குந் தொழிலைச் செய்யாதிருக்கக்கடவன் என்பதாம். ❋ வயதுமுதிர்ந்த தாய்தந்தையரும், கற்புடையமனைவியும், குழந்தையும், பசியால் வருந்துமளவிலே தீயவை பலவுஞ் செய்தாயினும் காப்பாற்றுகவென்று அறநூலிற் சொல்லப்பட்ட பொதுவிதி - பொருணூலின் வழிநடத்தலும், அரசர்தொழிற்கு உரியராதலும், நன்குமதிக்கப்படுதலும், உடைய மந்திரிகளுக்கு ஆகாமைபற்றி இப்படிச்சொல்லினார். [இவை ஐந்துபாட்டாலும்பாவமும் பழியும் தரும் தொழிலைச் செய்யலாகாதென்பது சொல்லப்பட்டது. (௬)

பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்........ ....❋
கழிநல் குரவே
தலை..❋ (௨௭௨)

(இ-ள்) (சான்றோரல்லாதவர் தீயதொழில்களைச்செய்து)-பழிமலைந்து-(அதனாற் பழியைத்தம்மேற்கொண்டு எய்திய-பெற்ற-ஆக்கத்தின் - செல்வத்தைக் காட்டிலும்- சான்றோர் - (அதுமேற்கொள்ளாத) சான்றோரனுபவிக்கும்-கழிநல்குரவே-மிகுந்தவறுமையே|-தலை-உயர்ந்தது. எ-று) (கருத்து) பழியாலடைந்த செல்வத்திலும் பெரியோரநுபவிக்கும் வறுமையேமேலாம் என்பதாம். ❋ நிலையில்லாத செல்வத்தின்பொருட்டு நிலையுள்ள பழியை மேற்கொள்ளல் சான்றோர் தன்மையோடு பொருந்தாமையால் சான்றோர் கழிநல்குரவே தலையென்றார். (எ)

கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதா... .... ❋
முடிந்தாலும் பீழை தரும்.................
... . ❋

(இ-ள்.) கடிந்த-(நூலோர்) தள்ளியதொழில்களை}-கடிந்தொரார்-(தாமும்) தள்ளிவிடாராகி-செய்தார்க்கு-(பொருளைக்குறித்துச்) செய்தமந்திரிகளுக்கு-அவைதாம் - அவைதாம் —(தூயவையல்லாமையால்முடியாவாம்)-முடிந்தாலும்-(ஒருவழியால்)முடிந்தாலும் (பின்)-பீழை-துன்பத்தை}- தரும்-கொடுக்கும். எ-று.) (கருத்து) பெரியோர் தள்ளப்பட்ட தொழிலைக் கொள்ளப்பட்ட மந்திரிகளுக்கு அத்தொழில் முன்முடியினும் பின் துன்பந்தரும் என்பதாம். ❋ முடிதல்- நினைத்தபொருளைத் தருதல். (அ)

அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்.. ... ...❋
பிற்பயக்கு நற்பா லவை.................................❋

(இ-ள்.) (ஒருவன்)-அழக்கொண்டவெல்லாம் - (தீயதொழில்களை ச்செய்து)- (பிறர்) இரங்க- கொண்டபொருளெல்லாம்|-அழப்போம்-(இம்மையிலே அவன்) இரங்கப்போகாநிற்கும்.— நற்பாலவை- மற்ற நல்லதொழில்களால் வந்தபொருள்கள்|-இழப்பினும்- (முன்) இழந்தானாயினும்-பிற்பயக்கும்-பின்வந்துபயன்கொடுக்கும். எ-று (கருத்து) பிறரழக்கொண்ட பொருள்யாவுந் தானழப்போகுமந ல்வழியால் வந்தபொருள்கள் முன்னிழந்தானாயினும பின்பயன் கொடுக்கும என்பதாம்.※ பின்னெனவே மறுமையுமஅடங்கிற்று- பொருள்களால் அவைகளுக்குக் காரணமாகிய தொழில்களது இப ்படி சொல்லியபடி. (க)

சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்............*

கலத்துள்நீர் பெய்திரீஇ

யற்று..................................*

கஉ-ஆம்அதி-வினைத்தூய்மை.

(உஎரு)

(இ-ள்.)

(மந்திரியானவன்|)-சலத்தால்-தீயதொழில்களால்-

பொ
ருள்செய்து- பொருளைச்சம்பாதித்து- எம்மார்த்தல்- (அரசனால் அரச
னுக்குக்) காப்புச்செய்தல்-பசுமட்கலத்துள்- பசியமண்ணின்பாத்
திரத்துள்- நீர்பெய்து-நீரைவார்த்து- இரீஇயற்று- (அதற்குக்)காப்
புச்செய்தலோடொக்கும். எ,று.) (கருத்து) மந்திரியரசனுக்கு வ
ஞ்சிப்பால் பொருளைத்தேடிக்காத்தல் பசியமண்பாத்திரதனுள்ளே
நீரைவார்த்துக் காத்தல்போலாம் என்பதாம். இருத்துதல் - நெ
டுங்காலம் இருப்பாகச்செய்தல் ; அரசனும் பொருளும் ஒருசேரப்
போமென்பதாம். [இவை நான்குபாட்டாலும் அதற்குக்காரணம்
சொல்லப்பட்டது.] (ம)

௬எ-ஆம்-அதி-வினை
த்திட்பம்.

அஃதாவது- அப்பரிசுத்தமாகிய தொழிலை முடிப்பவனுக்கு
வேண்டுவதாகிய மனவலிமையாம். அதிகாரமுறைமையும்
இதனாலேயே விளங்கும்.

வினைத்திட்ப மென்ப தொருவன்
மனத்திட்ப .... *
மற்றைய வெல்லாம்
பிற .... *

(இ-ள்.) வினைத்திட்பமென்பது - தொழில் செய்யுமிடத்து வலிமையென்று சொல்லப்படுவது|-ஒருவன்-(அதனைமுடித்தற்குரிய) ஒருவனது - மனத்திட்பம் - மனத்தினதுவலிமையாம்.-மற்றையவெல்லாம்-அது நீங்கலான வல்லமைகளெல்லாம்|-பிற-(அதற்கு) வலிமையென்று சொல்லப்படுவன வல்ல. எ,று.) (கருத்து) தொழில்வலிமையென்று சொல்லப்படுவது ஒருவன் மனவலிமையாம் மற்றவலிமையிதற்கு நிகரல்லவாம் என்பதாம். ※ அது நீங்கலானவை-படை அரண் நட்பு முதலானவைகளின் வலிமைகள். அவையும் அதற்கு வேண்டியவையாய் இனமாகலால் -

மற்றையவென்றும், அவை வேண்டியவையாயிருந்தாலும் அம்மனவலி

இல்லாதவிடத்தே பயனிலவா

கலால் பிறவென்றும், சொல்லினார். [இதனால்

இன்னதென்று சொல்லப்பட்டது.]

வினைத்திட்ப மாவது

(க)

உள ரொரா லுற்றபி னொல்காமை

யிவ்விரண்டி........ ... ※

னாறென்ப ராய்ந்தவர் கோள்

.............................※

[சுஉ] --- --- (உளசு)

சா எ-ஆம்-அதி-வினைத்திட்பம்.

(இ-ள்.) ஆய்ந்தவர்- (முன்புநீதி நூலை) ஆராய்ந்தமந்திரிகளது — கோள்- துணிவு -ஊறு-பழுதுபடுந் தொழிலை} ஓரால்-செய்யாமையும்-உற்றபின் - (செய்யுந் தொழில் ஊழினாலே) பழுதுபட்டவிடத்து-ஒல்காமை- (அதற்குத்) தளராமையும் ஆகிய- இவ்விரண்டின்- இவ்விரண்டினது- ஆறு-வழியாகும்.—என்பர் - என்று (நூலோர்|) சொல்லுவர். எ,று.) (கருத்து) மந்திரிகள் துணிவானது பழுதுபடுந்தொழிலைச் செய்யாமையு மத்தொழிற் பழுதாகிற்றளராமையுமாம் என்பதாம். ❋ தேவர்க்கும் அசுரர்க்கும் மந்திரிகளாகிய பிரகற்பதி சுக்கிரன் இவர்களது துணிவைத் தொகுத்துப் பின்னை நீதிநூலுடையோராலே சொல்லப்பட்டபடியே சொல்லுகின்றமையாலிங்கே வினைத்தூய்மையும் உடன்சொல்லினார். (உ)

கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கி.... *
னெற்றா விழுமந் தரும் ....
....*

(இ-ள்.) (செய்யப்படுந்தொழிலை) - கடை-முடிவிலே- கொட்க-சு முல [வெளிப்படவென்றபடி] - செய்தக்கது - (அதற்குமுன் னெல்லாம் மறைத்துச்) செய்வதே|-ஆண்மை- வலிமையாகும்.—இடை-ந(டு)விலே - கொட்கின்-வெளிப்படுமாயின் - (அவ்வெளிப்படுதல்|)-எற்றா-நீக்கப்படாத-விழுமம்- துன்பத்தை}—தரும்-(செய்தவனுக்குக்) கொடுக்கும். எ,று.) (கருத்து) தொழிலைமறைத்து முடிவிற் செய்வதே வலிமையாம் அது நடுவில் வெளிப்படுமாகிற்றுன்பமாம் என்பதாம். ❁ மறைத்துச் செய்தலாவது-சேனைமுதலாகிய ஐந்து அங்கங்களும் எண்ணிய விதத்தை-பிறர் அறியாதிருக்கவும், தான் அறிந்ததையும்- தன்னிங்கிதம்-வடிவு- செயல்- சொற்களால்- அவர்-ஆலோசித்து அறியாதிருக்கவும், அடக்கிச்செய்தல்.— அத்துன்பங்களாவன-பகைவர் முன்னறிந்து அத்தொழிலை விலக்குதலும், செய்வானை விலக்குதலும், செய்வாராதலால் அவ்விலக்குதல்களால் வருவன. [இவையிரண்டுபாட்டாலும் அதன் பகுதி சொல்லப்பட்டது.

சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்......... ...*
சொல்லிய வண்ணஞ் செயல்.........................*

(இ-ள்.) சொல்லுதல்- (இத்தொழிலை இவ்விதத்தாலே செய்வோமென்று ஒழுங்குபடச்) சொல்லுதல்|- யார்க்கும் - எவர்க்கும்-எளிய-எளியவையாகும்.—(அதனை) - சொல்லியவண்ணம்- அச்சொல்லப்பட்டவிதத்தால் - செயல் - செய்தல்| - அரியவாம் - அரியவையா

ம். எ,று.) (கருத்து) தொழில்செய்வோ மென்றலியார்க்கு மெளிதா ம் அதைச் சொலவியபடி செய்தலரிதாம் என்பதாம். ❁ அரியவை களை எண்ணிச்சொல்லுதல் மனவலிமை யிலலாதவர்க்கும் கூடுமாத லால் - எளியவென்றார். [இதனால் அதனது அருமை சொல்லப்ப ட்டது.] (௪)

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க........ *
ணூறெய்தி யுள்ளப் படும்.................................... *

(இ-ள்.) வீறெய்தி - (எண்ணத்தினாலே) சிறப்பை அடைந்து}- மாண்டார்- (மற்றை யிலக்கணங்களாலும்) மாட்சிமைப்பட்டமந்தி ரிகளது-வினைத்திட்பம் - தொழில்வலிமையானது - வேந்தன்கண்- அரசனிடத்து ஊறெய்தி-உளறுதலை அடைதலாலே-உள்ளப்படும்- (எல்லாராலும்) நன்குமதிக்கப்படும். எ,று.) (கருத்து) மந்திரிகள் தொழில் வலிமையானது அரசனிடத்துப் பொருந்துதல் யாவராலு மதிக்கப்படும் என்பதாம். ❁ வேந்தன்கணூறெய்தல்- எடுத்ததொ ழில் அதனால் முடிந்து செல்வமும் புகழும் அவனிடத்தே உண்டா தல். [இதனால் அதன் சிறப்புச் சொல்லப்பட்டது.] (௫)

எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்..... ... *
திண்ணிய ராகப் பெறின்.................................
.......*

(இ-ள்.) எண்ணிய - (தம்மால்) எண்ணப்பட்ட பொருள்களை யெ ல்லாம்}-எண்ணியாங்கு - அவ்வெண்ணியபடியே- எய்துப - அடை வார். — எண்ணியார் - (அவ்வெண்ணப்பட்ட பொருள்களுக்கு வழி யாகிய தொழிலிடத்தே) - திண்ணியராகப்பெறின்- வலிமையுடைய வராகப்பெற்றால். எ,று.) (கருத்து) தொழிலில் வலிமையுடையவரா கில் நினைக்கப்பட்ட பொருளை நினைத்தபடி பெறுவார் என்பதாம்.

❋எளிதிலே அடைவாரென்றற்கு - எண்ணியாங் கெய்துபவென்றார். அவர் அப்படியல்லாமல் எண்ணுமையில் வலிமையை யுடையராக வே அவையெல்லாம் கைகூடுமென்பது கருத்து [இதனால் அதனை யுடையவர் அடையும்பயன் சொல்லப்பட்டது.] (௬)

உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க். ❋
கச்சாணி யன்னா ருடைத்து......... ....
...............❋

(இ-ள்.)(உலகமானது)-உருள் - உருளாநின்ற - பெருந்தேர்க்கு- பெரியதேர்க்கு - அச்சாணியன்னார் - அச்சினிடத்தே ஆணிபோல்

(௨எ௬) சுஎ-ஆம்-அதி-வினைத்திட்பம்.

தொழிலினிடத்தே வலிமையை யுடையவரை}-உடைத்து - உடையது- (அதனால்)-உருவுகண்டு- (அவர்) வடிவினிடத்தே சிறுமைநோக்கி- எள்ளாமைவேண்டும் - (அவரை இகழாமை வேண்டும். எ.று.) (கருத்து) உலகம் தேர்க்கச்சாணிபோலத் தொழிலில வலிமையுள்ளோரையுடையது அதனால் வடிவு கண்டொருவரை யிகழலாகாது என்பதாம் ❋ எள்ளாமைவேண்டு மென்றதனாலும், உவமானத்தாலும், சிறுமை வருவிக்கப்பட்டது. அச்சு-உருள்கோத்தமரம்.ஆணி உருள்கழலாமல் அதன்கடையிலே செருகுவது. அது வடிவினாலே சிறிதாயிருந்தே பெரிய பாரத்தைக்கொண்டு செலுத்துகிறவலிமை யுடைத்தாதல்போல் வடிவினாலே சிறியராயிருந்தே பெரியதொழிலைக்கொண்டு செலுத்துகிற வலிமையுடைய மந்திரிகளும் உண்டு அவரை அவ்வலிமைநோக்கி அறிந்துகொள்க வென்பதாம். [இதனால் அவரை அறியும்விதம் சொல்லப்பட்டது.] (எ)

கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது.....................❋
தூக்கங் கடிந்து செயல்........ ....

....*

(இ-ள்.) கலங்காது - (மனம்) தெளிந்து-கண்ட - (செய்வதாகத்) துணிந்த-வினைக்கண்-தொழிலினிடத்து- தூளங்காது-(பின்)அசைத லில்லாமல்- தூக்கங்கடிந்து-ஆலசியத்தை ஒழித்து}- செயல்-செய க்கடவர். எ,று.) (கருத்து) மனந்தெளிந்து செய்யத்துணிந்த தொ ழிலிடத்து ஆலசியமில்லாம லத்தொழிலைச் செய்யக்கடவர் என்ப தாம். ※ கலங்கியவிடத்து ஒழிவது செய்வதுபோல் தோன்றுமா கலால் தெளிந்து பலகால ஆராய்ந்தாலும் செய்வதாகவொத்ததொ ழிலை- கலங்காதுகண்ட வினையென்றார். தூளங்காமை - வலிமையு டைமை. (அ)

துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி...............*
யின்பம் பயக்கும் வினை..............................*

(இ-ள்.) (முதலிலே மெய்ம்முயற்சியினாலே)-துன்பம்-துன்பமானது உறவரினும் - (தமக்கு) மிகவரினும் - (அதுகண்டுதளராமல்) இன்பம்-சுகத்தை }-பயக்கும்-(முடிவிலே) தருகின்ற-வினை - தொழி லை}-துணிவாற்றி - வலிமையுடையராய்-செய்க -செய்யக்கடவர். எ, று.) (கருத்து) துன்பம் வரினுமின்பந்தரும்தொழிலைச்செய்யக்கடவர் என்பதாம். ※

துணிவு-கலங்காமை - அக்கலங்காமை யுடையவர்க்கல்லது சிறிதுகாலத்திலே

மல் அதனால் உண்டாய் நிலைபெறும் இன்பத்தை நோக்கிச் செய்தல் கூடாமையாலே துணிவாற்றிச் செய்கவென்றார். [இவை இரண்டு பாட்டாலும் அவர்தொழில்செய்யும்விதம் சொல்லப்பட்டது.](கூ)

எனைத்திட்ப மெய்தியக் கண்ணும்
வினைத்திட்பம் ....*
வேண்டாரை
வேண்டா துலகு.............................. *

(இ-ள்.) உலகு - உயர்ந்தோர்|-வினைத்திட்பம் - தொழில்வலிமையை}-வேண்டாரை-(இதுநமக்குச் சிறந்ததென்று) கொள்ளாத மந்திரிகளை}-- எனைத்திட்பம் - அவை நீங்கலாகிய வலிமைகளெல்லா

ம்-எய்தியக்கண்ணும்-உடையவராகிய விடத்தும்-வேண்டாது- நன்கு மதியார். எ-று.) (கருத்து) உயர்ந்தோர் தொழில்வலிமையையவிரும்பாத மந்திரிகளை மதியார் என்பதாம், ❊ மனத்தினிடத்திலே வலிமை யில்லாதவர்க்கு - படை-அரண்-நட்பு-முதலானவைகளின் வலிமைகளெல்லாம் உண்டாயினும் தொழில் முடியாமையால் அவ்வ

லிமைகளெல்லாம் கெடுமென்பதுபற்றி உலகு வேண்டாதென்றார்.
[இதனால் தொழில்வலிமை யில்லாதவரது இழிவுசொல்லப்பட்டது]

கூஅ- ஆம்-அதி- வினைசெயல்வகை.

அஃதாவது - அவ்வினையுடைய மந்திரியானவன் அத்தொழிலைச் செய்யுந்திறமாம்.—அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு........ .... *
தாழ்ச்சியுட் டங்குத றீது... ....*

(இ-ள்.) சூழ்ச்சி-ஆலோசனைக்கு - முடிவு-எல்லையாவது|— துணிவெய்தல் - (ஆலோசிப்பவன் இனிது இதுதப்பாதென்னுந்) துணிவைப்பெறுதல்.- அத்துணிவு - அப்படித்துணிவு பெற்றதொழில்-தாழ்ச்சியுள் -(பின்) ஆலசியத்தில்-தங்குதல்|- தங்குதல்- தீது-குற்றமுடையதாம். எ,று.) (கருத்து) ஆலோசனைக் கெல்லையாவது துணிவுபெறுதல் அத்துணிவு பின்னாலசியப்படுதல் குற்றம் என்பதாம். ❁ சூழ்ச்சி முடிவு துணிவெய்த லென்றதனால்- துணிவுபெறும் வரைக்கும் ஆலோசிக்கவேண்டு மென்பதாயிற்று. பின்வந்த துணி

[எல]

(உஎஅ)

சாஅ-ஆம்-அதி-வினைசெயல்வகை.

வு-அது பெற்றதொழிலுக்கு ஆதலால் - ஆகுபெயர் — ஆலசியமுண்டானவிடத்தே காலக்கழியாகலாலும், பகைவர் அதை அறிந்து அழித்தலாலும், முடியாமையால் - அதனைத் தீதென்றார். (க)

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க.................... *
தூங்காது செய்யும் வினை .... *

(இ-ள்.) தூங்கி-ஆலசியித்து-செயற்பால - செய்யும்படி நிலையுடையதொழில்களுள் - தூங்குக- ஆலசியம் பண்ணக்கடவன் — தூங்காது - ஆலசியம்பண்ணாமல் - செய்யுமேவினை - செய்யுந்தொழில்களுள்—தூங்கற்க - ஆலசியம்பண்ணாதிருக்கக் கடவன். எ-று.) (கருத்து) ஆலசியமாகச்செய்யுந் தொழில்களை ஆலசியமாகச் செய்யக்கடவன் விரைவாகச்செய்யுந் தொழில்களை விரைவாகச் செய்யக்கடவன் என்பதாம். ❊ இருவகைத்தொழில்களும் - வலியாலும், காலத்தாலும், அறியப்படும். மாறிச்செய்தால் - அவை பலியாமற்போமென்பது கருத்து. முன்னே தூங்காமையென்றதை இங்கேபகுத்துச் சொல்லினர். [இவை இரண்டுபாட்டாலும் பொருள்வகையால் தொழில்செய்யுந் திறம் சொல்லப்பட்டது.] (உ)

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்கால்....... *
செல்லும்வாய் நோக்கிச் செயல்.................................*

(இ-ள்) (தொழில்செய்யும்போது) - ஒல்லும்வாயெல்லாம்- கூடுமிடத்திலெல்லாம் - வினை - தண்டஞ்செய்தல்|-நன்று - நல்லதாகும்.- ஒல்லாக்கால் - (அது) கூடாதவிடத்து - (மற்றைமூன்று உபாயங்களிலே)-செல்லும்வாய்நோக்கி - (அது) முடிவதோருபாயம் நோக்கி-செயல் - செய்யக்கடவன். எ-று.) (கருத்து) குற்றங் கூடுமிடத்தெல்லாந் தண்டித்தல்நல்லது அது கூடாவிடத்து மூன்றுபாயங்களாற் செய்யக்கடவன் என்பதாம். ❊ கூடுமிடம்-பகைவனிலும் தான்வலியவனாகியகாலம்.—அக்காலத்திலே பகைவர் தண்டத்துக்கே அஞ்சுவராகலால் - அத்தண்டமே நன்றென்றார்.—கூடாதவிடம்-ஒத்தகாலமும், இளைத்தகாலமும், ஆம். [இதனால்-வலிமை-ஒப்புமை-மெலிமை-என நிலை மூவகைப்படுமென்பது, அவைகளுள் வலிமையினது சிறப்பும், சொல்லப்பட்டது.] (ங)

வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்

………❋

தீயெச்சம்

போலத் தெறும்…………………………… ❋

(இ-ள்.) வினையும் (செய்யத்தொடங்கியது) தொழிலும் - பகை - (அழிக்கத்தொடங்கிய) பகையும் - என்றிரண்டினுடைய - என்று சொல்லப்பட்ட இரண்டினுடைய - எச்சம் - குறையும் - நினையுங்கால் - ஆராயுமிடத்து - தீயெச்சம்போல - தீயினது குறைபோல — தெறும் - (பின் வளர்ந்து) கெடுக்கும். எ-று.) (கருத்து) தொழிலும் பகையும் அக்கினிபோல்வளர்ந்து கெடுக்கும் என்பதாம். ❋ இனி இக்குறை என்னசெய்யுமாட்டுமென்று இகழ்ந்து விட்டுவிடாமல் முடிவுபெறச் செய்கவென்பதாம்.— பின்வளர்தல் ஒப்புமைபற்றிப் பகையெச்சமும் உடன்சொல்லினர். [இதனால் வலியவன் செய்யுந் திறம் சொல்லப்பட்டது.] (௪)

பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்து…… ❋
இருடீர வெண்ணிச் செயல்………………………❋

(இ-ள்.) (தொழில்செய்யுமிடத்து) - பொருள் - பொருளும்-கருவி-சாதனமும்-காலம்-காலமும் - வினை - தொழிலும் - இடன்.இடமும்ஆகிய-ஐந்தும்-ஐந்தும் - இருடீர-மயக்கமற - எண்ணி-நினைத்து---செயல் - செய்யக்கடவன். எ,று.) (கருத்து) பொருளும் சாதனமும் காலமும் தொழிலும்இடமும்இவ்வைந்து நினைத்துத்தொழில்செய்யக்கடவன் என்பதாம். ❋ பொருள்-அழியும்பொருளும், ஆகும்பொருளும்,--- கருவி - தன்சேனையும், பகைவர்சேனையும், காலம்-தனக்கு ஆங்காலமும், அவர்க்கு- ஆங்காலமும், வினை- தான்வல்லதொழிலும், அவர்வல்லதொழிலும், இடன் -தான் வெல்லும் இடமும், அவர்வெல்லும் இடமும், இவைகளைத்தான் வெற்றிபெறுந்திறத்தில் தப்பாமல் எண்ணிச்செய்க வென்பதாம். (௬)

முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்.................. *
படுபயனும் பார்த்துச் செயல்.............................. *

(இ-ள்.) (தொழில்செய்யுமிடத்து) - முடிவும்- (அது) முடிதற்கு உளதாகிய முயற்சியையும்-இடையூறும் - (அதற்குவரும்) இடையூற்றையும்-முற்றி - (அவ்விடையூறுநீக்கி) முடித்தால்-எய்தும்- (தான்) அடையும்-படுபயனும்-பெறும்பயனையும் - பார்த்து-சீர்தூக்கி-செயல்-செய்யக்கடவன். எ,று.) (கருத்து) முயற்சியையும்இடையூற்றையும் பயனையும் ஆராய்ந்து தொழில்செய்யக்கடவன் என்பதாம். ❋ முடிவு- அதன்முயற்சிக்குஆகுதலால் ஆகுபெயர்.---முயற்சியளவுக்கும் இடையூறளவுக்கும் பயனளவு பெரிதாயிருந்தால் அத்தொழிலைச் செய்கவென்பதாம். (௭)

(உஅய) ௬அ-ஆம்-அதி-வினைசெயல்வகை.

செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை...... ... ...*

யுள்ளறிவா னுள்ளங் கொளல்....

.. ..*

(இ-ள்.) செய்வினை-(அவ்வழியினாலே) செய்யப்படுந்தொழிலை}-செய்வான்-செயத்தொடங்கினவன் - செயன்முறை - செய்முறைமையாவது-அவ்வினை-அத்தொழிலினது-உள்- உளப்பாட்டை - அறிவான்-அறிபவனது -உள்ளம்-கருத்தை}- கொளல்-(தான்) அறிதல். எ-று.) (கருத்து)தொழிலைச்செய்யத்தொடங்கினவன் செய்யமுறையாவது அத்தொழிலி னுளப்பாட்டையறிதல் என்பதாம். ❁அவ்வாறென்றது-பொருண்முதலானவைகளை எண்ணலையும்,முடிவுமுதலானவைகளை ஆராய்தலையும்,-உள்ளறிவான்-முன்செய்துகைவந்தவன். அவன் கருத்து -அதனைச்செய்துவந்த உபாயம்.-அதனை அறியவேதானும் அவ்வுபாயத்தினாலே செய்துபயனை அடைவானென்பதாம்.[இவையிரண்டுபாட்டானும் ஒப்பவன்செய்யுந்திறம் சொல்லப்பட்டது.

வினையான் வினையாக்கிக் கோட னனைகவுள்...............*

யானையால் யானையாத் தற்று...... ....

.. *

(இ-ள்.) வினையால் - (செய்யப்படுகின்ற) தொழிலினாலே- வினை- (அப்படிப்பட்ட) வேறொருதொழிலை- ஆக்கிக்கோடல- முடித்துக் கொள்ளக்கடவன்- (அது) -நனைகவுள்- (மதத்தால்) நனைந்த கபோ லத்தையுடைய-யானையால் - யானையினால்-யானை - (அப்படிப்பட்ட வேறொரு) யானையை- ஆர்த்தற்று - கட்டியதோடு ஒக்கும். எ-று.) (கருத்து) தொழிலாலேதொழிலை முடித்துக்கொள்ளக்கடவன் அது யானையை யானையாற்கட்டிய தொப்பாம் என்பதாம். ❋பிடித்தற்க ருமைதோன்ற-நனைகவுளென்றார். தொடங்கிய தொழிலாலே வேறு மொருதொழிலைமுடித்தற்கு உபாயமாகும்விதம் ஆலோசித்துச்செ ய்தால் எல்லாத்தொழில்களும் எளிதிலே முடியுமென்பதாம். (அ)

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே ....❋
யொட்டாரை யொட்டிக்கொளல்..............................❋

(இ-ள்.) (தொழில்செய்பவனால்)-நட்டார்க்கு-(தனது) நட்பினரு க்கு-நல்லசெயலின்-நல்லவைகளைச் செய்தலினும்- ஒட்டாரை-(த ன்பகைவராது)பகைவரை- ஒட்டிக்கொளல்- (தனக்கு) நட்பாக்கிக் கொள்ளுதல்|—விரைந்ததே- விரைந்து செய்யத்தகுவதாம். எ-று) (கருத்து)பகைவரைச் சிநேகமாக்கிக்கொள்ளுதல் சிநேகருக்குநல்

ௌ அ-ஆம்- அதி-வினைசெயல்வகை.

(உ௮௪)

லவைகளைச்செய்தலினு நல்லதுளன்பதாம்.❋ அத்தொழிலைப் பலிக் கச்செய்யும் அவ்விரண்டு காரியங்களையும்பகை ரிக்குத் தன் மெலி வுதெரிவதன் முன்னே செய்கவென்றற்கு-விரைந்ததென்றார். (௯)

உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக்

குறைபெறிற்... .. .... ❋

கொள்வர் பெரியார்ப் பணிந்து. . . .

.... ✻

(இ-ள்) உறசிறியார்-ஆளுமிடஞ்சிறியாராகிய மந்திரிகள் தம்மின் மிகுத்தவலியவர் எதிர்ந்தவிடத்தே)-உள்-(சமத) அங்கங்களின் நடுங்கல்-நடுங்குதலுக்கு-அஞ்சி-பயந்து- குறைபெறின்-(அந்நிலைக்கு வேண்டுவதாகிய)சந்தி கூடுமாயின்-பெரியார்- அப்பெரியவரைப் பணிந்து-வணங்கி-கொள்வர்-(அதனைஎற்றுக்)கொள்வர். எ,று.) (கருத்து) ஆளுமிடஞ் சிறியாராகிய மந்திரிகள் பகைவரெதிர்த்த விடத்துப்பணிந்துகொள்வர் என்பதாம். ✻ இடம்-நாடும், அரணும்,—அவைகளின்சிறுமை உடையர்மேல்வைத்தப்பட்டது.—மெலியாரோடு சந்திக்கு வலியார்நேர்தல் அரிதாகலால்-பெறினென்றார்.- அடியிலே மெலியராயினர் தம்மங்கங்களும் அஞ்சிநீங்கினால் முதலோடுங்கெடுவராகலின் அது வாராமற்சிறிதுகொடுத்தும்சந்தியைஎற்றுக்கொள்கவென்பதாம்.—பணிதல் மானிகளுக்குக் கருத்தல்லாமையால் கொள்வாரெனஉலகியலாற் சொல்லினார்.

[இவை மூன்றுபாட்டாலும்மெலியவன் செய்யுந்திறம் சொல்லப்பட்டது]

(ய)

சீ கூ-ஆம்-அ
தி-கா ரம்.

அஃதாவது பொருந்தல் பிரித்தல்களுக்கு வேற்றரசரிடத்தே செல்வாரது தன்மை. அவ்விரண்டனையும் முன்வினை செயல்வகை யென்றமையால் இது அதன்பின் வைக்கப்பட்டது. தான்வகுத்துச்சொல்வோன் - சொல்லியது சொல்வோன் - எனத்தூது இருவகைப்படும். அவருள் முன்னோன் மந்திரியோடு சமானனாவானாகலாலும் பின்னோன் அவனிற் காரியங் குணங்குறைந்தானாகலாலும் இஃது அமைச்சியலாயிற்று.

அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல்
வேந்தவாம்...... *
அ பண்புடைமை தூதுரைப்பான்
[எக]
பண்பு............... * (உஅஉ)

சுகூ-ஆம்-அதி-கா ரம்.

(இ-ள்.) அன்புடைமை-(தன்சுற்றத்தாரிடத்து) அன்புடையவனாதலும் - ஆன்ற குடிப்பிறத்தல்- (மந்திரிதொழில் செய்தற்கு) அமைந்த குடியிலேபிறத்தலும்|-வேந்தவாம்பண்புடைமை-அரசர்-சந்திவிரும்பும குணமுடையவனாதலும்|-தூதுரைப்பான்- தூதுவார்த்தையைச்சொல்லுவானுக்கு-பண்பு-இலக்கணமாம். எ,று.) (கருத்து) அன்பும் நற்குடியிற்பிறத்தலும் அரசர்விரும்புங் குணமு முடையனாதல் தூதனிலக்கணம் என்பதாம். ❋ முன்னையவிரண்டினாலும்முறையே சுற்றத்தார்க்குத் தீங்குவாராமல் தானேகாத்து நடத்தலும், தன்முன்னோர் தூதியல்கேட்டு அறிதலும், பெற்றாம்.— வேந்தவாம்பண்புடைமை- பின்புமன்னரைச் சேர்த்தொழுகலிலே அறியப்படும். அதனால்வேற்றரசரும்அவனுக்குவசப்படுதல்கொள்ளப்படும்.

அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்.... *
இன்றி யமையாத மூன்று........................... *

(இ-ள்.) அன்பு-(தம்மரசரிடத்து)அன்புடைமையும்|-அறிவு-(அவனுக்கு ஆமவைகளை அறியும்) அறிவுடைமையும்|-(அவைகளைவேற்றுவேந்தரிடத்துச் சொல்லும்போது) ஆராய்ந்த சொல்வன்மை- ஆராய்ந்துசொல்லுதல் வலியும்- தூதுரைப்பார்க்கு - தூதுசொல்ல உரியவர்க்கு-இன்றியமையாத -அவசியமாக வேண்டிய குணங்கள்|- மூன்று மூன்றும். எ,று.) (கருத்து) அன்பு-அறிவு-சொல்வன்மை- இவை தூதுசொல்வோர் குணங்களாம் என்பதாம். ❋ ஆராய்தல்- அவைகளுக்குச் சம்மதிக்கும் சொற்களைத் தெரிதல்.— அவசியமாகவேண்டிய குணங்கள் மூன்றெனவே மந்திரிகளுக்குச் சொலவியமற்றைக்குணங்களும் வேண்டுமென்றதாயிற்று. [இவையிரண்டுபாட்டாலும் இருவகைத் தூதர்க்கும் பொதுவிலக்கணம் சொல்லப்பட்டது.] (உ)

நூலாரு ணூல்வல்ல னாகுதல் வேலாருள் ....*
வென்றி வினையுரைப்பான் பண்பு........ ....*

(இ-ள்.) வேலாருள்-வேலினையுடைய வேற்றரசரிடத்து- வென்றி-(தன் அரசனுக்கு) வெற்றியைத்தருகின்ற- வினையுரைப்பான் - தொழிலைச்சொல்வோனுக்கு- பண்பு-இலக்கணமாவது- நூலாருள்- நீதிநூலை அறிந்த மந்திரிகளிடத்து- நூல்வல்லனாகுதல்- (தான்) அந்நூலில்வல்லவனாகுதல். எ,று.) (கருத்து) தூதனுக் இலக்கணமாவது-மந்திரிகளிடத்து வல்லவனாகுதல் என்பதாம். ❋ கொலைத்தொழிலோ

௬௯-ஆம்-அதி-தூது.

(உதா)

தொன்பது தோ ன்ற- வேலா தொன்றும்,
தூதுத்தொழிலிரண்டுமட ங்க-
வன் றிவி னையெ ன்றும்,
சொல்லினர்.—வல்லவனாகுதல்-அறிதன்மா ந்திர
முடையராகிய அவர்முன்வருக்கும்
வல்லமையுடையனாகுதல்.

அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றின் ....❋
செறிவுடையான் செல்க வினைக்கு......................❋

(இ-ள்.) அறிவு- (இயற்கையாகிய) அறிவும்- உருவு-(கண்டோரி ச்சிக்கும்) தோற்றப்பொலிவும்-ஆராய்ந்தகல்வி-(பலரோடு பேர் பலகா லும்)ஆராயப்பட்ட கல்வியும் என-இம்மூன்றின்- (நன்றுமதித்தற்கு ஏதுவாகிய) இம்மூன்றினது- செறிவுடையான் - கூட்டத்தையுடை யவன்;-வினைக்கு (வேற்றரசரிடத்துத்தூதுத்)தொழிலுக்கு-செல்க- செல்லக்கடவன். எ-று.) (கருத்து) அறிவு-உருவு-கல்வி- இவற்றையு டையவன்தூதுசெல்லக்கடவன் என்பதாம். ❋ இம்மூன்றும் ஒருவ னிடத்துக்கூடுதல் அரிதாகலால்-செறிவுடையானென்றார். இவைகளா லேநன்குமதிப்புடையவனாகவே இனிது முடியுமென்பது கருத்து.

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது ....

........❋

........❋

(இ-ள்.) (வேற்றரசர்க்குப் பலகாரியங்களைச் சொல்லுமிடத்து)- தொகச்சொல்லி- (காரணவகையால்) தொகுத்துச்சொல்லியும்- (இ னிமையில்லாத காரியங்களைச் சொல்லுமிடத்து)-தூவாத நீக்கி-வெ

ய்யசொற்களை நீக்கியும்- நகச்சொல்லி - (இனிமையானசொற்களா ல்)மகிழச்சொல்லியும்-நன்றிபயப்பது- (தன்னரசனுக்கு) நன்மை யைச்செய்பவனே|—தூது-தூதனுவான். எ,று.) (கருத்து) தொகு த்துச்சொல்லியும் கடுஞ்சொல்லை நீக்கியுமகிழச்சொல்லிய மரசனுக் கு நன்மைசெய்பவனே தூது என்பதாம். ❋ பலகாரியங்களுக்குஉ டம்படாதவர்- பரம்பரையால் அப்பலவும் முடிதற்கும் காரணமா னஒருகாரியத்தைச்சொல்ல அதனால் அவையடன்படும் விதத்தை ஆ லோசித்தறிதல் அருமையாதலால்-சுருக்கத்தால் உடன்படுவர் இனி மையில்லாதகாரியங்களுக்கு உடன்படாதவர் - மனமகிழச்சொல்ல அவவினிமை யில்லாமை தோன்றாமையால்உடன்படுவர். ஆதலால்.- அவ்விருவழியாலும் தன்காரியந்தவறாமல் முடிக்கவல்லவ னென் பதாம். (௫)

கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்..... ..... ❋
தக்க தறிவதாந் தூது . ...
.......................❋ (௨௮௬)

௬௯-ஆம்-அதி-தூது.

(இ-ள்.) கற்று-(நீதிநூல்களைக்) கற்று-செல-(பகைவேந்தர்)மன ங்கொள-சொல்லி - (தான்சென்றகாரியத்தைச்) - சொல்லி கண் ணஞ்சான்-(அவர்கோபித்துப்பார்க்கில்) அப்பார்வைக்கு அஞ்சாதவ னாய்-காலத்தால்-காலத்தோடுபொருந்த- தக்கது- (அதுமுடிக்கத் தக்கஉபாயத்தை)-அறிவது-அறிபவனே|—தூதாம்-தூதனாவான். எ,று.) (கருத்து) நீதிநூலைக்கற்றுப் பகையரசர்மனங்கொளச்சொ ல்லி யஞ்சாதவனாய் காலத்திற்கேற்கவுபாயமறிபவனே தூதன் என் பதாம். ❋ அவ்வுபாயம் அறிதற்பொருட்டு நீதிநூற்கல்வியும், அத னாலன்றிவேறொன்றால் முடியுங்காலமுளதின் அவ்வாறு முடிக்கவே ண்டுதலால்-காலத்தாற்றக்க தறிதலும், இலக்கணமாயின. (௬)

இடனறிந்து காலங் கருதி யிடனறிந்.... .... ❋

தெண்ணி யுரைப்பான் றலை.......... ......

.... ❋

(இ-ள்.)கடன்-(வேற்றரசரிடத்துத்தான்செய்யு)முறைமையை}-அறிந்து- தெரிந்து- காலங்கருதி- (அவர்) சமயம்பார்த்து- இடன்-(சென்றகருமஞ்சொல்லுதற்குஏற்ற)விடத்தை}-அறிந்து-தெரிந்து எண்ணி-(சொல்லும்வழியைமுன்னே) விசாரித்து-உரைப்பான்-(அவ்வழி)சொல்லுவோன்|-தலை-(தூதரில்) மிக்கவன். எ-று.) (கருத்து) முறைதெரிந்து சமயம்பார்த்துத் தக்கவிடமறிந்து எண்ணிச்சொல்பவனே தூதன் என்பதாம். ❋ செய்யுமுறைமையாவது- அவர்நிலையும்,தன்னரசனிலையும், தன்னிலையும், சீர்தூக்கி அவைகளுக்கேற்பக்காணுமுறைமையும் சொல்லுமுறைமையு முதலாயின.---செவ்வி-தன்சொல்லை யேற்றுக்கொள்ளு மனநிகழ்ச்சி அதுகாலத்தின்வசத்ததாகலால்-காலமென்றார்.--- இடன்-தனக்குத்துணையாவார் உடனாகியவிடம்.-எண்ணுதல்தான் அதுசொல்லும்விதமும், அதற்குஅவர்சொல்லும் உத்தரமும், அதற்குப்பின் தான்சொல்லுமவைகளும் ஆக இவ்வழியால் மேலுமேலும் தானேயெண்ணுதல். வடநூலார் இவ்விருவகையாருடனே ஓலைகொடுத்து நிற்பானையும் கூட்டித் தூதரை-தலை இடைகடை எனவகுத்துச்சொல்லினராகலால் அவர்மதமுந்தோன்ற-தலையென்றார்.--- தூதென்பது அதிகாரத்தால் வந்தது.

[இவை ஐந்துபாட்டாலும் தான் வகுத்துச்சொல்லுவானது இலக்கணஞ்சொல்லப்பட்டது.]

(எ)

தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின் ...❋
வாய்மை வழியுரைப்பான் பண்பு..... ....❋

(உ௮௫)

(இ-ள்.) வழி (தன்னரசன் வார்த்தையை) அவன்சொல்லிய வழி யே-உரைப்பான்-(வேற்றரசர்க்குச்) சொல்லுவானது- பண்பு-இல க்கணமாவது|-தூய்மை-(பொருளாலுங்காமத்தாலும்) பரிசுத்தனா தலும்-துணைமை-(தனக்குஅவர்மந்திரிகள்) துணையாந்தன்மையும்- துணிவுடைமை- துணிதலையுடைமையும் - இம்மூன்றின்-இம்மூன் றோடுகூடிய- வாய்மை - மெய்ம்மையும் ஆம். எ-று.) (கருத்து) சுத்த மும் துணையும் துணிவும் சத்தியமும் இந்நான்கும் தூதனிலக்கண மாம் என்பதாம். ❋ பொருள் காமங்கள் பற்றி வேறுபடச் சொல் லாமைப்பொருட்டு- தூய்மையும், தன்னரசனுக்குஉயர்ச்சிசொல்லி யவிடத்தே எம்போல்வார்க்கு அது இயல்பென்றுஅவர்கோபத்தை நீக்கற்பொருட்டு- துணைமையும், இதுசொன்னால் இவர் துன்பஞ்செ ய்வாரென்றுஒழியாமைப்பொருட்டுத் துணிவுடைமையும், யாவரா லும் நம்பப்படுதற்பொருட்டு - மெய்ம்மையும், வேண்டப்பட்டன.

விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்.........❋
வாய்சோரா வன்க ணவன்... ....

.... ❋

(இ-ள்.)விடுமாற்றம்-(தன்னரசன்சொல்லி) விட்டவார்த்தையை}- வேந்தர்க்கு-வேற்றரசர்க்கு- உரைப்பான்-சொல்லுதற்குஉரியவன்- (தனக்குவரும் துன்பத்திற்குஅஞ்சி)-வடுமாற்றம்-(அவனுக்குத்)தா ழ்வானவார்த்தையை}-வாய்சோரா-வாய்சோர்ந்தும் சொல்லாத-வ

ன்கணவன்-வலிமையையுடையவன். எ-று) (கருத்து) தன்னரசன்வார்த்தையை வேற்றரசர்க்குச் சொல்லுதற்குரியவனே தூதரில்வலியவன் என்பதாம். ❋ தாழ்வு-அரசர்சாதிக்குத் தருமமல்லாமையால்-அதனை வழுவென்றார்.

(௯௰)

இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற் .... ❋
குறுதி பயப்பதாந் தூது .... ❋

(இ-ள்.) இறுதிபயப்பினும்-(அவ்வார்த்தைதனக்கு) முடிவைத்தருமாயினும்-எஞ்சாது-(அதற்கு)அஞ்சிவிடாது-(தன்னரசன்சொன்னபடியே)-இறைவற்கு-அவ்வரசனுக்கு-உறுதி-மிகுதியைபயப்பது-(வேற்றரசரிடத்துச்) சொல்லுவோனே (தூதாம்-தூதனாவான். எ-று.) (கருத்து) தனக்குமுடிவுவரினும் அஞ்சாது வேற்றரசனுக்குத்தன்னரசன்சொல்லைச் சொல்பவனே தூதன் என்பதாம். ❋ முடிவைத்தரினுமென்றதனால்-மற்றைத் துன்பங்களைத்தருதல்சொல்லவேண்டுவதில்லை யாயிற்று, [இவ்விரண்டுபாட்டானும் சொல்லியது சொல்லுவானது இலக்கணம் சொல்லப்பட்டது.] [௰]

[௭௨]

௭௰ - ஆம் - அதி -
மன்னரைச்சேர்ந்தொழுகல்.

அஃதாவது-மந்திரி அரசனைப்பொருந்தி நடக்கும் விதம்-இது-மேற்சொல்லப்பட்ட பண்புடைமையெனமுன்சொல்லப்பட்டமையால் தூதின் பின்வைக்கப்பட்ட

து.

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க.
.... *
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு
வார்........... ......*

(இ-ள்.) இகல்-மாறுபடுதலையுடைய- வேந்தர்- அரசரை- சேர்ந்து-அடுத்து- ஒழுகுவார்-நடக்குமந்திரிகள்- (அவரை) - அகலாது- மிகநீங்காமலும் - அணுகாது - மிகநெருங்காமலும் - தீக்காய்வார் போல்க- நெருப்பிற் குளிர்காய்வார்போல் நடுவிடத்து நிற்கக்கடவர். எ-று.) (கருத்து) மந்திரிகள் மாறுபாடுடைய வேந்தரிடத்து அகலாமலும் அணுகாமலு மிருக்கக்கடவர் என்பதாம். ※ முன்கோபக்கார னென்பதுதோன்ற-இகல்வேந்தனென்றார்.—மிகநீங்கினுற்பயன்கொடாமல் மிகநெருங்கினுல் அவமதிபற்றிவருத்தும் வேந்தர்க்கு-மிகநீங்கினுற் குளிர்நீங்காமல் மிகநெருங்கினுற் சுடுவதாதலால்தீ உபமானமாயிற்று. (க)

மன்னர் விழைப விழையாமை
மன்னரான்........ ....*
மன்னிய வாக்கந் தரும்...............
.... *
(இ-ள்.) மன்னர்-(தம்) மன்னரால்-விழைப-

விரும்பப்பட்டவை

களை}-விழையாமை-(தாம்) விரும்பாதிருத்தல்-மன்னரால்- அவ்வாசராலே-மன்னிய-நிலைபெற்ற-ஆக்கம்- செல்வத்தை} - தரும்- (மந்திரிகளுக்குக்) கொடுக்கும். எ,று.) (கருத்து) தம்மரசரால் விரும்பப்பட்டவற்றை விரும்பாதிருத்தல் மந்திரிகளுக் கவரால் செல்வமுண்டாம் என்பதாம். ❋ இங்கே விரும்பப்பட்டவை யென்றது- அவர்க்குச் சிறப்பாக உரியவைகளை - அவை உண்ணப்படுவனவும்-அணியப்படுவனவும் முதலானவை. இவைகளைச் சமமாய்த் தோன்றற்கு அஞ்சி விரும்பாதொழியவே அவ்வச்சநோக்கி மகிழ்ந்து அவர் தாமேஎல்லாச் செல்வமும் தருவரென்பது கருத்து. (உ)

போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்...............*
தேற்றுதல் யார்க்கு மரிது...........................*

எஉ-ஆம்-அதி-மன்னரைச்சேர்ந்தொழுகல்.

(உஅஎ)

(இ-ள்.) (மந்திரிகள்) - போற்றின்- (தம்மைக்) காத்துக்கொள்ள வேண்டினால்-அரியவை- அரியபிழைகளை}- போற்றல்- (தம்மிடத்தி லேவாராமற்) காக்கக்கடவர்.—கடுத்தபின்-(அவ்வரசர் அவை வந்த

லவகளாகக்கேட்டு) சந்தேகித்தபின்பு- தேற்றுதல்-(அவரைப்பின்) தெளிவித்தல்|-யார்க்கும்- யார்க்கும்- அரிது- அருமை- (ஆதலால்) . எ-அ.) (கருத்து) மந்திரிகள் தங்களிடத்துக் குற்றம்வாராயதற்காக் கக்கடவர்தம்மரசர்சந்தேகித்தபின் அவரைத்தெளிவித்தலரிது என் பதாம். ❋ அரியபிழைகள்-
அவராலேபொறுத்தற்கரிய பிழைத்தல்
முதலானவை, அவைகளைக்காத்தலாவது- ஒருவன் சொல்லியக்கால் அவர்நம்பாதிருக்கும்படி நடத்தல். பின்ஒருவழியால் நம்புவித்தவு ம்கடன்கொண்டவனைக் கண்டவிடத்தெல்லாம் அப்பொருள் போல த்தம்மைக்கண்டவிடத்தெல்லாம் அப்பிழைதோன்றுமாதலால் யார் க் குமரிதென்றார்.] இவைமூன்றுபாட்டாலும் அதுபொதுவகையா ற்சொல்லப்பட்டது.] (ங)

செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக......❋
லான்ற பெரியா ரகத்து..................................❋

(இ-ள்.) ஆன்ற- நிறைந்த- பெரியாரகத்து- அரசரிடத்திருக்கும் போது-செவிச்சொல்லும்- (ஒருவன்)காதிலேசொல்லுதலையும்- சேர்ந்தநகையும்- (ஒருவன்முக) நோக்கிநகைத்தலையும்- அவித்து- நீக்கி-ஒழுகல்-நடக்கக்கடவன். எ-அ.) (கருத்து) மந்திரி அரசனிடத்தி ருக்கையில் ஒருவன்காதிற் சொல்லுதலையும், ஒருவன்கண்டுநகைத்த லையும்நீக்கி நடக்கக்கடவன் என்பதாம். ❋ சேர்தல்-பிறனோடுசேர் தல்-அவைசெய்தால்- தஞ்சோர்வுகண்டு செய்தவையாகக் கொள்வ ரென்பது கருத்து.] (ச)

எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளை.......❋
விட்டக்கால் கேட்க
மறை..................................❋

(இ-ள்.) மறை - (அரசனுக்குப் பிறரோடு) ரகசியம் நிகழுமிடத்து -எப்பொருளும்- யாதொருபொருளையும் - ஓரார் - செவிகொடுத்துக்கேளாமலும்- தொடரா - (அவனை) மூடுகி வினவாமலும் - அப்பொருளை-அந்தரகசியப்பொருளை }- விட்டக்கால்-(அவனே) அடக்காமற் சொல்வினுல்—கேட்க-கேட்கக்கடவர். எ,-று.) (கருத்து)அரசனிரகசியம்பேசுகையிற் கேளாமலு மறைவினவாமலுமிருந்து அவன் சொன்னால் மந்திரிகள் கேட்கக்கடவர் என்பதாம். ※ மூடுகி

(உஅஅ)

எய்-ஆய்-அறி-மன்னரைச்சேர்ந்தொழுகல்

விளுவுதற்கு- உரியபொருளாயிருந்தாலு மென்முர்.

மென்றற்கு எப்பொருளு

(ஞ)

குறிப்பறிந்து

காலங் கருதி வெறுப்பில .. .. ※

வேண்டுப வேட்பச் சொலல்.................

.. ..※

(இ-ள்.) (அரசனுக்குக்காரியஞ் சொல்லும்போது) - குறிப்பறிந்து-(அப்பொழுது நிகழ்கின்ற அவனது) குறிப்பைஅறிந்து }- காலங்கருதி-(சொல்லுதற்கேற்ற) காலத்தையும் பார்த்து- வெறுப்பில- வெறுப்பில்லாதனவும்-வேண்டுப- வேண்டுவனவும் ஆகிய காரியங்களை }-வே ட்ப-(அவன்மனம்)

விரும்புவகை—சொல்ல-சொல்லக்கடவர். எ-று.) (கருத்து) குறிப்பறிந்து சமயம்பார்த்து வெறுப்பில்லாதவற்றையும் வேண்டுவனவற்றையுஞ் சொல்லக்கடவர் என்பதாம்.

❋ அரசன்மனம் காரியத்திலன்றிக் காமவெகுளி யுள்ளிட்டவைகளிலே நிகழுமிடத்தும், அதற்கு ஏற்காத காலத்தும், சொல்லுதல் பயன்படாமற் போதலால்-குறிப்பறிந்து காலங்கருதியென்றும், அவனுடன்படாத காரியங்கள்முடிவுபெறாமையால்-வெறுப்பிலவென்றும் பயனில்லாதவையும் பயன்சுருங்கியவையும் ஆகிய காரியங்களைச்செய்யவேண்டாமையால்- வேண்டுபவென்றும், அவைகளை இனியவையாய்ச் சுருங்கிவிளங்கிய பொருளுடையவை யாகிய சொற்களாலே சொல்லுக வென்றதற்கு வேட்பச்சொல்லென்றும், சொல்லினர். (௬)

வேட்பன சொல்லி வினையில
எஞ்ஞான்றுங்.......... ❋
கேட்பினுஞ் சொல்லா விடல். . ....
.................❋

(இ-ள்.) (பெரும்பய னுள்ளவையும்) -வேட்பன- (அரசன்) விரும்புவனவும் (ஆகியகாரியங்களை)-சொல்லி-(அவன் கேட்டிலனாயினும்) சொல்லி-எஞ்ஞான்றும்-எந்நாளும்- வினையில - பயனில்லாதவைகளை)—கேட்பினும்-(தானே) கேட்டாலும்-சொல்லாவிடல்-சொல்லாது விடக்கடவன். எ-று.) (கருத்து) அரசன் விரும்பியவற்றைச் சொல்லிப் பயனில்லாவற்றை யவன்கேட்டாலு மந்திரி சொல்லாது விடக்கடவன் என்பதாம். ❋

விளையிலகேட்பினும் எனவந்தசொ

ற்களால் அவைகளுக்கு எதிரானசொற்கள் - வருவிக்கப்பட்டன.—— வினையால் வருதலின் - வினையென்றும், வறுமைக்காலமும் அடங்கா ஏஞ்ஞான்றுமென்றும், சொல்லினர்.—சொல்லத்தக்கவையும், சொல் லத்தகாதவையும், வகுத்துச் சொல்லியபடி ∴[இவைநான்குபாட்டா லும் சிறப்புவகையால் சொல்லப்பட்டது.] (எ)

எய-ஆம்-அதி-மன்னரைச்சேர்ந்தொழுகல்.

(உ அகூ)

இளையரின முறைய ரென்றிகழார் நின்ற........... ... ✽
ஒளியோ டொழுகப் படும்.........................✽

(இ-ள்) இளையர்- (இவர்எமக்கு)இளையவர்-இனமுறையர்- (எமக் கு)இன்னமுறைமியினர்- என்றிகழார்-என்று (அரசரை) அவமதியாம ல-நின்ற- (அவரிடத்து) நிலைபெற்ற- ஒளியோடு - ஒளியோடுபொரு ந்த-ஒழுகப்படும் - நடக்கத்தகும். எ,று.) (கருத்து) அரசரிளையவ ர் எமதுசாதியார் என்றிகழாமல் மந்திரிகள் மதிக்கக்கடவர் என்ப தாம். ✽ ஒளி-நித்தினா செய்யாநிற்கவும் உலகங்காக்கின்ற அவரது தெய்வத்தன்மை அதனோடுபொருந்த வொழுகுதலாவது-அவர்மே வரும் தாம்மனிதருமாகநடத்தல். அவ்வொளியினாலே நீக்கப்பட்ட இளமையும்முறைமையும்பற்றி இகழ்வாராளுல் தாமும் நீக்கப்படு வரென்பதுகருத்து. (அ)

செ ா ளப்பட்டே மென்றெண்ணிக்

கொள்ளாதசெய்யார்

துளக்கற்ற காட்சி

யவர்.. *

(இ-ள்.) துளக்கற்ற-அசைவற்ற-காட்சியவர்-அறிவையுடையவர்-கொளப்பட்டேமென்று - (அரசனால்) நன்கு மதிக்கப் பட்டோமென்று-எண்ணி-நினைத்து- கொள்ளாத-(அவன்) விரும்பாதவைகளை}-செய்யார்-செய்யார்கள். எ,று.) (கருத்து) அறிவுடையவர் அரசனாலே மதிக்கப்பட்டோமென்று நினைத்து அவர் விரும்பாதவற்றைச்செய்யார் என்பதாம். ❋ விரும்பாதவைகளைச்செய்து அறிவுடைவோர்கொள்ளப்பட்ட பின்புதம்மை வேறொருவராகநினைப்பவராகலால் முன்னையாகவே நினைத்து அஞ்சிநடப்பவரை- துளக்கற்றகாட்சியவரென்றார். (கூ)

பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்...................... *

கெழுதகைமை கேடு

தரும்.. *

(இ-ள்.) பழையமென - (அரசனுக்குப்) பழைமையோமென-கருதி-நினைத்து- பண்பல்ல- (தமக்கு) இயல்பல்லாதவைகளை}- செய்யும்-செய்கின்ற-கெழுதகைமை- உரிமையானது- கேடுதரும் (மந்திரிகளுக்குக்) கேட்டைத்} தரும். எ,று.) (கருத்து) அரசனுக்குப்பழைமையோமென்று நினைத்து இயல்பல்லாதவற்றைச் செய்யுமுரிமையானது மந்திரிகளுக்குக் கேட்டைத்தரும் என்பதாம். ❋ அவன்பொறுத்துவருந்தும்பொழுதில் அப்பழைமைநோக்கி முகங்கொ

(உகஎ)

எய-ஆம்-அதி-மன்னரைச்சேர்ந்தொழுகல்.

டாமல் உயிரை வௌவுதலால்

அவன் வேண்டாதவை செய்தற்கு-ஏ துவாகிய உரிமை கேடு தருமென்றார். [இவை மூன்றுபாட்டானும் பொறுப்பதொன்று அரசர்க்கு வெறுப்பாயுள்ளவைகளைச்செய்யலாகா தென்பது சொல்லப்பட்டது.]

(ம)

எ௧-ஆம்-அதி-குறிப்பறிதல்.

அஃதாவது-அரசர் நினைத்ததை அவர் சொல்லாமல் அறிதல்.

இதுவும் மன்னரைச் சேர்ந்தொழுகுவார்க்கு அவசியமான தாக லால், இது அதன்பின் வைக்கப்பட்டது.

கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று .... *
மாறாநீர் வையக் கணி ....
.... *

(இ-ள்.) குறிப்பு-(அரசனால்) குறிக்கப்பட்ட காரியத்தை}- கூறாமை-(அவன் சொல்லவேண்டாவகை— நோக்கி - (அவன்முகத்தையாவது கண்ணையாவது) பார்த்து-அறிவான் - அறிகிறமந்திரியானவன்|-எஞ்ஞான்றும் எந்தநாளும்- மாறாநீர்- வற்றாதநீராலே சூழப்பட்ட-வையக்கு-உலகத்துள்ளார்க்கு அணி-ஆபரணம்.எ,று.) (கருத்து) அரசன்குறிப்பை யறிகிறமந்திரி உலகத்தார்க் காபரணமாவான் என்பதாம். ❋ அறிவுடையனாகி எல்லார்க்கும் அழகுசெய்தலால்-வையக்கணியென்றார் குறிப்பும் வையமும் ஆகுபெயர்கள், வையத்திற்கென்பதுவிகாரம். (க)

ஐயப்படாஅ தகத்த துணர் வானைத்.................... *
தெய்வத்தோ டொப்பக் கொளல்........................ *

(இ-ள்.) அகத்தது-(ஒருவனது) மனத்தினிடத்திலே நிகழ்வதை} ஐயப்படாஅது- சந்தேகப்படாமல்- உணர்வானை- துணிவாக அறியவல்லவனை}—(மனிதனேயாயினும்)-தெய்வத்தோடொப்ப-தெய்வத்தோடு சமானமாக - கொளல் நன்கு மதிக்கக்கடவன். எ,று.) (கருத்து) மனத்தினிடத்து நடப்பதை அறிபவனைத் தெய்வத்தோடுசமானமாகக் கொள்ளக்கடவன் என்பதாம். ❋ உடம்புமுதலானவைகளால் ஒப்பாகாதாயினும் பிறர்நினைத்ததை அறிகிற தெய்வத்தன்மையுடைமையால் தெய்வத்தோடொப்ப வென்றார். (உ)

எக-ஆம்-அதி-குறிப்பறிதல்.

(உகூக)

குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்................ *
யாது கொடுத்துங் கொளல்,............................ *

(இ-ள்.) குறிப்பின்-(தங்) குறிப்புநிகழும்விதம் அறிந்து- குறிப் புணர்வாரை- (அதனால் பிறர்குறிப்பு அறியுந்தன்மையவரை)- உறு ப்பினுள்(அரசர்தம்)உறுப்புகளுள்- யாதுகொடுத்தும்(அவர்வேண் டுவது யாதொன்றைக் கொடுத்தாயினும்)—கொளல்- (தமக்குத்) து ணையாகக்கொள்ளக்கடவர். எ-று.) (கருத்து) குறிப்பால் குறிப்பறி பவரை வேண்டுவன கொடுத்துக் கொள்ளக்கடவர் என்பதாம். ❋ உள்ளே நிகழும்வழி யாவர்க்கும் ஒத்தலால் பிறர்குறிப்பை அறிதற் குத் தங்குறிப்புச் சாதனமாயிற்று — உறுப்புகள் - பொருள், நாடு முதலாகிய புறத்துறுப்புகள். [இவை மூன்றுபாட்டாலும் குறிப்ப றிவாரது சிறப்புச் சொல்லப்பட்டது.] (௩)

குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை .... ❋
உறுப்போ ரனையரால் வேறு .... ❋

(இ-ள்.) குறித்தது - (ஒருவன்மனத்தில்) நினைத்ததை)- கூறாமை- (அவன்) சொல்லாமல்-கொள்வாரோடு-அறியவல்லாரோடு-ஏனை-ம ற்றை (அறியமாட்டாதவர்)) -உறுப்பு - அவயவத்தால்- ஓரனையர்-ஒ ருதன்மையாக வொப்பினும்- வேறு- (அறிவால்) வேறு. எ-று.) (க ருத்து) ❋ மனதில்நினைத்ததைச் சொல்லாமலறியவல்லரோடு அறி யமாட்டாதவர் வடிவாலொப்பினு மறிவால்வேறுவர் என்பதாம்.❋ அறியமாட்டாதவரென்பதும், அறிவாலென்பதும், வருவிக்கப்பட் டன. சிறந்த அறிவில்லாமையால் மிருகமென்னுங் கருத்தால் - வே றென்றார். (௪)

குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு... ....❋
ளென்ன பயத்தவோ கண்...... ... .❋

(இ-ள்.) குறிப்பின்- (குறித்ததை அறியவல்லதன்) காட்சியால்-குறிப்பு- (பிறர்) குறிப்பை}-உணராவாயின் - அறியமாட்டாவாயின்- (ஒருவனுக்கு) உறுப்பினுள்-அவயவங்களுள்-கண்- (சிறந்த) கண்கள்|-என்னபயத்தவோ- (வேறே) என்னபயன் செய்வனவோ. எ-று.) (கருத்து) குறிப்பால்பிறர்குறிப்பையறியாவிடில்கண்கள்என்னபயனைத்தருவன என்பதாம். ❋ குறிப்பறியுமிடத்தே துணையாஞ்சிறப்புப்பற்றி உயிரினறிவு கண்மேல் ஏற்றப்பட்டது. அக்கண்களாலே

பயனில்லை வென்பதாம்.
[இவையிரண்டுபாட்டாலும் குறிப்பறியா கிழிவு சொல்லப்பட்டது.

(ரு)

அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்........ ......*
கடுத்தது காட்டு முகம்.......... ....*

(இ-ள்) அடுத்தது- (தன்னை) அடுத்தபொருளினது நிறத்தை}- காட்டும்- (தான்கொண்டு) காட்டுகிற- பளிங்குபோல்-பளிங்கினைப் போல- நெஞ்சம்-(ஒருவனது) நெஞ்சத்தில்- கடுத்தது - மிகுந்தகுணத்தை}-முகம்- (அவன்) முகமானது|— காட்டும்- (தான்கொண்டு)காட்டும். எ-று.) (கருத்து) அடுத்தபொருளைக்காட்டும் கண்ணாடி போல ஒருவன்மனத்தின் குணத்தை முகங்காட்டும் என்பதாம். ❋ அடுத்தநிறத்தை அடுத்ததெனலால் ஆகுபெயர்.— ஒருபொருள் வேறொருபொருளின் குணத்தைக்கொண்டு தோற்றுதலாகிய தொழிலுவமை. (சு)

முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்......❋
காயினுந் தான்முந் துறும்......................❋

(இ-ள்.) (உயிரானது|)-உவப்பினும்-விரும்பினாலும்- காயினும்- வெறுத்தாலும்-தான்- தான் (அறிந்து) -முந்துறும்- (அவ்விரண்டினும்அவ்வுயிருக்கு) முற்பட்டுநிற்கும் —(ஆதலால்) முகத்தின்-முகம்போல்-முதுக்குறைந்தது- அறிவுமிகுந்தது|- உண்டோ-வேறுண்டோ. எ-று.) (கருத்து) முகம்போல அறிவுமிகுந்தது வேறில்லை என்பதாம். ❋ அறிவு உயிர்கட்கேயல்லாமல் முகத்திற்கு இல்லையென்பாரை நோக்கி உயிரினது கருத்தை அறிந்து அதுவிரும்பினால் தான்மலர்ந்தும், அதுவெறுத்தால் தான் கருகியும் வரலால உண்டென்றுமறுப்பவர்போல் குறிப்பறிதலுக்குச் சாதனம் சொல்லியபடி. (எ)

முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி... ....❋
யுற்ற துணர்வார்ப் பெறின் ....❋

(இ-ள்.) குறையுறுவோன்- அகநோக்கி- (தன்) மனத்தைக்குறிப்பால் அறிந்து-உற்றது- (தான்) உற்றதனை}-உணர்வார்- அறிந்துதீர்ப்பாரை}—பெறின்-பெற்றால் - (அவர்தன்முகத்தைப் பார்க்கும்படியாக)-முகநோக்கி- (அவர்)முகத்தைப்பார்த்து- நிற்க- (அவ்வளவிலே) நிற்க-அமையும்-போதும்.

எ, று.) (கருத்து) மனதைக் குறி ப்பாலறிந்து உற்றதை அறிவாரைப்பெற்று லவர் முகம்பார்த்துநிற்

கப்போதும் ஒன்பதாம். ❋ அப்படி நில்லாமல் சொல்லுவானாகில் இருவருக்கும் சிறுமையாமாகலால் அது வேண்டாமென்பதாம். குறையுற்றோன் து இயல்பு சொல்லுவார்போல் சாதனம் சொல்லிய படி. [இவை] மூன்றுபாட்டாலும் குறிப்பறிதலுக்குச் சாதனம்முக மென்பது சொல்லப்பட்டது. (அ)

பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின். ❋
வகைமை யுணர்வார்ப் பெறின்........................ ....❋

(இ-ள்.)
மையை }-

கண்ணின்வகைமை-(தமது) பார்வை வேறுபாட்டுத்தன் உணர்வார்- அறியவல்லமந்திரிகளை }- பெறின்- (அரசர்) பெற்றால்-(அவர்க்கு)-பகைமையுங் கேண்மையும்- (மனத்திலுள்ள) பகைத்தன்மையும் நட்புத்தன்மையும் - (வேற்றரசர் சொல்லாமற் போயினும்)-கண்-(அவர்) கண்களே|—உரைக்கும்- சொல்லும். எ, று.) (கருத்து) கண்ணின் தன்மையை யறியவல்ல மந்திரிகளை யரசர்பெற்றா லவர்க்குப்பகையையு நட்பையுங்கண்காட்டும் என்பதாம். ❋ பார்வை வேறுபாடாவன- வெறுத்தபார்வையும், விரும்பியபார்வையும், ஆம் -உணர்தல் அவைகளை அந்தந்தக்குறிகளால் அறிதல்.

நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்.........❋

..............................*

(இ-ள்.) நுண்ணியமென்பார்-நுட்ப வறிவுடையே மென்றிருக்கு மந்திரிகள்- அளக்குங்கோல் - (அரசரது கருத்தை) அளக்குங் கோலாவது|— காணுங்கால்- ஆராயுமிடத்து- கண்ணல்லது- (அவரது) கண்களல்லாமல்-பிற- வேறு|-இல்லை- இல்லை. எ,று) (கருத்து) அரசர்கருத்தை யளக்குங்கோலாவது அவர்கள் கண்களேயல்லாமல் வேறில்லை என்பதாம். ※ இங்கிதம் -வடிவு-தொழில்- சொல்-என்பவை முதலான பிறர்கருத்தளக்கிற அளவைகள்பலவும் முன்னறிந்தவிடத்தே அவராலே மறைக்கப்படும் பார்வை மனத்தோடு கலத்தலால் மறைககப்படாதென்பதுபற்றி அதனையேபிரித்துச்சொல்லினர், [இவையிரண்டுபாட்டாலும் நுண்ணியகருவி பார்வை,யென்பது சொல்லப்பட்டது.] (௰)

௭௨- ஆம்-அதி-அவையறிதல்.

வக்காவது - அரசனோடிருந்த சபையில் அவை அறிதல் - காரியஞ் சொல்லுங்கால் அவன் குறிப்பறிதலே யல்லாமல் இதுவும் வேண்டுதலால் பின் வைக்கப்பட்டது.

அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்........ ...❋
றொகையறிந்த தூய்மை யவர்....................... ... ❋

(இ-ள்.) சொல்லின்றொகை - சொல்லின் கூட்டத்தை } - அறிந்த - தெரிந்த - தூய்மையவர் - பரிசுத்தகுணமுடையவர், - (தாம் ஒன்று சொல்லும்போது) - அவை - (அப்போதுள்ள) சபையை } - அறிந்து - தெரிந்து — ஆராய்ந்து - ஆராய்ச்சிசெய்து - சொல்லுக - சொல்லக்கடவர். எ-று.) (கருத்து) சொல்லின்றொகையை யறிந்தவர் சபையறிந்து சொல்லக்கடவர் என்பதாம். ❋ சொல்லின்றொகையென்பவை - செஞ்சொல் - ஆக்கச்சொல் - குறிப்புச்சொல் என மூவகைச்சொற்களும் அடங்கின. — தூய்மை - அச்சொற்களில் தமக்குஆகாதவை ஒழித்து ஆமவைகொள்ளல் - அவையினவை அவையென்றார். அவ்வவை மிகுதி - ஒப்பு - தாழ்வு - எனமூவகைப்படும் - அறிதல் - தம்மோடு தூக்கி அறிதல் - ஆராய்தல் - இச்சபையிலே சொல்லப்படும் - இது - சொல்லும்விதம் - இது - சொன்னால் அதன்முடிவு - இது - என்று இவையுள்ளிட்டவை ஆராய்தல். (௧)

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி...... ❋
னடைதெரிந்த நன்மை யவர் ....❋

(இ-ள்.) சொல்லினடை - சொற்களதுநடையை } - தெரிந்த - ஆராய்ந்து அறிந்த - நன்மையவர் - நன்மையையுடையவர், - (சபையினிடத்து ஒன்றுசொல்லும்போது) - இடைதெரிந்து (அதன் சமயத்தை } ஆராய்ந்தறிந்து - நன்குணர்ந்து - (வழுப்படாமல்) மிகவுந்தெரிந்து - சொல்லுக - சொல்லக்கடவர். எ-று.) (கருத்து) சொல்லின

டையறிந்தவர் சமயமறிந்து சொல்லக்கடவர் என்பதாம். ❋ சொற்களினுடையாவது- அம்மூவகைச்சொற்களும்- செம்பொருள்-ஆக்கப்பொருள்-குறிப்புப்பொருள் இவைகளையுணர்த்தும் விதம்-சமயம்-கேட்குதலில் ஆசையுடைமை-வழு-சொல்வழுவும்,பொருள்வழுவும் [இவையிரண்டுபாட்டாலும்ஒன்றுசொல்லுமபோது சபையறிந்து சொல்லவேண்டுமென்பது சொல்லப்பட்டது.] (உ)

௭௨-ஆம்-அதி-அவையறிதல்.

(உகூ௩)

அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின். ❋
வகையறியார் வல்லதூஉ மில்................................ ❋

(இ-ள்.) அவை-சபையினளவை}-அறியார்- அறியாதவராகிய— சொல்லல்-(ஒன்று) சொல்லுதலை}-மேற்கொள்பவர்- தம்மேற்கொள்பவர்- சொல்லின்வகை-அச்சொல்லின்கூறுபாடும்- அறியார்-அறியாராவர்— வல்லதூஉம்- (மற்றும்) வல்லமையும் இல்-(அவர்க்கு)இல்லை. ஏ,று.) (கருத்து) அவையளவையறியாராகிப்பேச மேற்கொள்பவர் சொல்லின்வகையறியார் என்பதாம். ❋ சொல்லுதல்வகைமை கேட்பவரது உணர்வுவகைமை பற்றிவருதலால்- சொல்லின்வகையறியாரென்றும், இஃதறியார் யாதுமறியாரென்று எல்லாராலும் இகழப்படுதலால்-வல்லதூஉமில்லென்றும், சொல்லினர். இதனால்சபையை அறியாதவிடத்துவரும் குற்றம் சொல்லப்பட்டது. (௩)

ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்........ *
வான்சுதை வண்ணங் கொளல் .... *

(இ-ள்.) ஒளியார்முன்-(அறிவால்) ஒள்ளியாரது சபையினிடத்து ஒள்ளியராதல் - (தாமும்) ஒள்ளியராகக்கடவர்.— வெளியார்முன்)- (மற்றை) வெள்ளைகளது சபையினிடத்து - வான்சுதை வண்ணம்- (தாமும்) வெண்சுண்ணச் சாந்துநிறத்தை}-கொளல்-கொள்ளக்கடவர். எ,று.) (கருத்து) அறிவாளிகள் சபைமுன்னே அறிவாளிகளாகக்கடவர் அறிவில்லார் சபை முன்னே அறிவில்லாராகக்கடவர் என்பதாம். ❋ ஒளியாரென்றது - மிக்காரையும், ஒத்தாரையும்,- ஒள்ளியராதல்- தமது நூலறிவும் சொல்வன்மையும் தோன்ற விரித்துரைத்தல்—வைரம்-இதன்பகுதிவேரம்- வைரமில்லாமரத்தை வெளிறென்பதுபோல் அவ்விரண்டுமறியாத புல்லரைவெளியாரென்றார்.—அவர் மதிக்கும்படிக்கு அவரினும் வெண்மையுடையராகவென்றற்கு-வான்சுதைவண்ணங்கொளலென்றார். [சபையளவறிந்தார் செய்யுந்திறம் இதனால் தொகுத்துச் சொல்லப்பட்டது.] (௪)

நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருள் .... *
முந்து கிளவாச் செறிவு.................................. *

(இ-ள்.) முதுவருள் - (தம்மின்) மிகுந்தவரது சபையினிடத்து- முந்து- (அவருக்கு) முற்பட்டு-கிளவா-(ஒன்றைச்) சொல்லாத-செறிவு-அடக்கம்,—நன்றென்றவற்றுள்ளும் - (ஒருவர்க்குஇது) நல்ல

(உகூச) எ௨-ஆம்-அதி-அவையறிதல்.

தென்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட குணங்கள் பலவினும்- நன்
றே-நல்லதாகும். எ-று.) (கருத்து) அறிவுடையோர் சபையிலவர்மு
ன்னமோன்றைச் சொல்லாத வடக்கமானது நன்மையெல்லாவற்று
ள்ளுநல்லது என்பதாம். ❋ நங்குறைவும், அவர்நிறுதிடப், அவர்
சொல்லுதற்குமுன்னே சொன்னால் உண்டாகிற இழுக்கும், சொல்
லாவிட்டால் வருகிறநன்மையும், அறிந்தே அடங்கலால் அவ்வடக்க
த்தை -நன்றென்றவற்றுள்ளு நன்றே என்றார்.— முன்சொல்லுதலை
யே விலக்கினமையால் உடன்சொல்லுதலும், பின்சொல்லுதலும்,
ஆமென்பது பெறப்பட்டது. [இதனால் மிகுந்தவரது சபையின்கட
தத்துச் செய்யுந்திறம் சொல்லப்பட்டது.] (௫)

ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புல ....❋
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு ....❋

(இ-ள்.) வியன்புலம்- விரிந்த நூற்பொருள்களை } ஏற்று-உட்கொ
ண்டு உணர்வார்முன்னர்- (அவைகளின் மெய்ம்மையை)} அறியவல்ல
வர் சபையினில்-இழுக்கு-(வல்லவனொருவன்) சொல்லிழுக்குப் படு
தல்|-(முத்திபெறற்பொருட்டு நல்வழியினின்றவனொருவன்)-ஆற்றி
ன்-அவ்வழியினின்றும்— நிலைதளர்ந்தற்றே- நிலைதளர்ந்து வீழ்ந்தா
லொக்கும். எ-று.) (கருத்து) கற்றவர்சபையில் கற்றவனிழுக்குப்ப
டுதல் நல்வழியினின்றவன் தீவழியில்விழுந்தாற்போலும் என்பதாம்
❋ நிலைதளர்ந்துவீழ்தல்- அறிவால் ஐம்பொறிவென் றொழுகியவன்
பின்னிளகிக்- கூடாவொழுக்கத்தானாகுதல். பயனிழத்தலேயன்றி இ
கழவும் படுவானென்பதாம். [இதனால்அச்சபையில்தவறியவிடத்து
ப்படும் குற்றம் சொல்லப்பட்டது.] (௬)

கற்றறிந்த ார் கல்வி விளக்குங் கசடறச்
..................................❋
சொற்றெரிதல் வல்லா ரகத்து ....
..........................❋

(இ-ள்.) கசடற-வழூப்படாமல்-சொற்றெரிதல்- சொற்களை ஆராய்தலில்3-வல்லாரகத்து-வல்லவர் சபையிடத்தே-(சொல்லினல்)-கற்று-(பல நூல்களையுங்) கற்று-அறிந்தார்-(அவைகளாலாகிய பயனை3-அறிந்தயராது-கல்வி-கல்வியானது|-விளங்கும்-(யாவர்க்கும்)விளங்கித்தோன்றும். எ,று.) (கருத்து) குற்றமறக்கற்றவர் சபையிற் கற்றவர்கல்விவிளங்கும் என்பதாம். ※ அப்படிப்பட்ட சபையிலேயே சொல்லக்கடவனென்பதாம்.

(எ)

எஉ-ஆம்-அதி-அவையறிதல்.

(உகஎ)

உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன் .... ※

பாத்தியு ணீர்சொரிந் தற்று ....

.... ※

(இ-ள்.) உணர்வது-(பொருள் களைத்தாமே)அறியவல்லஅறிவை3

-உடையார்முன்- உடையவர் சபையினிடத்து-சொலலல்- (கற்றார் ஒன்றைச் சொல்லுதல்)-வளர்வதன்- (தாமே) வளர்வதொருபயிர் நின்றபாத்தியுள்- பாத்தியினுள் - நீர்சொரிந்தற்று - நீரைவார்த்தாற்போலும். எ-று.) (கருத்து) கற்றவர்சபையிற் கற்றவற்றைச்சொல்லல் பாத்தியில் நீர்விட்டாற்போலும் என்பதாம். ...னை யும்வளர்ந்த அரியகல்வி மிகவளருமென்பதாம். [இவைபிரவைப்ப பாட்டாலும் ஒத்தாரது சபையிடத்து எவ்வழியும்சொலலக்கடவனென்பது சொல்லப்பட்டது.] (அ)

புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு ...
ணன்கு செலச்சொல்லு வார். ....

*

*

(இ-ள்.) நல்லவையுள்-நல்லவரிருந்தசபையினிடத்து-நன்கு-நல்ல பொருள்களை-செல-(அவர்) மனங்கொள்ள -சொல்லுவார் - சொல்லுதற்குஉரியவர்|-புல்லவையுள்-(அவையறியாத) புல்லரிருந்தசபையினிடத்து-பொச்சாந்தும்- மறந்தும்- சொல்லற்க- (அவைகளைச்

சொல்லாதொழியக்கடவர். எ-று.) (கருத்து) நல்லோர்சபையிலே ந
ற்பொருளைச் சொல்பவர் புல்லர்சபையிலே மறந்துஞ் சொல்லாதி
ருக்கக்கடவர் என்பதாம். ❊ சொல்வாராயின் தமக்குரிய சபையை
அறியாத குற்றம்பற்றி நல்லோர்சபையும், சொன்னபொருளறியா
மையால் புல்லர்சபையும், இகழ்தலால் இரண்டுசபைக்கும் ஆகாரெ
ன்பது கருதி- பொச்சாந்துஞ் சொல்லற்க வென்றார். (௯)

அங்கணத்துளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்த.... .
ரல்லார்முற் கோட்டி கொளல்...... ....

..... ❊

.... ❊

(இ-ள்.) (நல்லோர்)-தங்கணத்தரல்லார்முன்- தம்மினத்தவரல்லா
தவர்சபையிடத்து- கோட்டிகொளல்- யாதொன்றையும் சொல்லா
திருக்கக்கடவர்—(சொன்னால்அது) -அங்கணத்துள்- (பரிசுத்தமல்
லாத) முற்றத்துள்- உக்க-வீழ்ந்த-அமிழ்தற்று - அமிர்தமொக்கும்.
எ-று.) (கருத்து) தம்மினத்த ரல்லார் சபையில் ஒன்றுஞ்சொல்லாதி
ருக்கக்கடவர். சொல்லுதல் சேற்றுள்வீழ்ந்த வமிர்த மொக்கும் எ
ன்பதாம். ❊ சொல்லின்-அது- இவ்விரண்டும் வருவிக்கப்பட்டன.

[௭௰]

(உகூஅ) ௭௨-ஆம்-அதி-அவையறிதல்,

சாவாமருந்காருத லறிந்து உண்போர் கையிலும் படாமல் அம்மு
ற்றத்திற்கும் பொருத்தமில்லாமல் கெட்டவிதம் தோன்றற்கு-உக்க
வமிழ்தென்றார். அச்சொல் பயனில்லாத சொல்லாமென்பதாயிற்று
[இவ்வையிரண்டுபாட்டாலும் தாழ்ந்தோர் சபையினிடத்து ஒருவழி
யும் சொல்லலாகாதென்பது சொல்லப்பட்டது.] (ம)

எ௩-ஆம்-அதி-அ
வையஞ்சாமை.

அவையாவது - சொல்லுதற்குரிய சபையை அறிந்து சொல்லுங்கால்
அதற்கு அஞ்சாமை. அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்

வகையறிந்து வல்லவை வாய்சோரார்
சொல்லின். ..... *

றொகையறிந்த தூய்மை யவர் ....
.... *

(இ-ள்.) சொல்லின் றொகையறிந்த-சொற்களது தொகையை அ
றிந்த} தூய்மையவர்-பரிசுத்தகுணமுடையவர்|-வகையறிந்து கற்
றுவல்லசபை மூடசபை என்கிற சபையின்) வகையை அறிந்து}—
வல்லவை-கற்றுவல்லசபையில்- (ஒன்று சொல்லும்போது) — வாய்
சோரார்-(அச்சத்தாற்பிழைபடச்)சொல்லார்.எ,று.) (கருத்து)சொ
ல்லினது தொகையையறிந்தவர் சபையினது வகையையறிந்து பி
ழைபடச்சொல்லார் என்பதாம். * இருந்தாரது வல்லமை சபை
மேல் ஏற்றப்பட்டது. அச்சத்தாலென்பது- அதிகாரத்தால்வந்தது.

கற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார்முற்

..................*

கற்ற செலச்சொல்லு வார் .. ..

.................................*

(இ-ள்.) கற்றார்முன்-கற்றோர்சபையினிடத்தே- கற்ற-(தாம்) கற்றவைகளை}-செல-(அவர்) -மனங்கொள்ளும்வகை - சொல்லுவார்-(அஞ்சாமல்)-சொல்லவல்லவர்|-கற்றாருள் - கற்றவொல்லாரினும்-கற்றார்-(இவர்) நன்றாகக்கற்றவர் எனப்படுவர்-என்று(உலகத்தோரா லே) சொல்லப்படுவர். எ-று.) (கருத்து) கற்றவர்சபையிற் கற்றவற்றைச் சொல்லவல்லவர் கற்றவொல்லாருள்ளுங் கற்றவரென்றுசொல்லப்படுவார் என்பதாம். ※ உலகமறிவது அவரையே யாகலின் அவ்வுலகத்தினுலே புகழப்படுவாரும் அவரேயென்பதாம். (உ)

எ௩-ஆம் அதி-அவையஞ்சாமை.

(உ௩௩)

பகையகத்துச்

சாவா ரெளிய ரரிய...........................*

ரவையகத் தஞ்சா தவர்....... ... .

.................*

(இ-ள்.) பகையகத்து-பகையினிடத்து-சாவார்-(அஞ்சாது போய்) இறக்கவல்லவர்-எளியர்-(உலகத்துப்) பலர்.— அவையகத்து-சபையினிடத்து-அஞ்சாதவர்-அஞ்சாமற் (போய்ச்சொல்ல) வல்லவர்-அரியர்-சிலர். எ-று.) (கருத்து) பகையினிடத் தஞ்சா திறக்கவல்லவர் பலர், சபையினிடத் தஞ்சாது பேசவல்லவர் சிலர் என்பதாம். ❁ அஞ்சாமை சாவாரென்பதனோடுங்கூட்டி அதனாலே சொல்லவல்லவரென்பது வருவிக்கப்பட்டது, [இவை மூன்றுபாட்டாலும் அவையஞ்சாது சிறப்புச் சொல்லப்பட்டது.] (௩)

கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற..................*
மிக்காருண் மிக்க கொளல். ....
.......................*

(இ-ள்.) கற்றார்முன்-(பலநூல்களையுங்) கற்றோர்சபையிடத்து-கற்ற (தாம்) கற்றவைகளை}-செல-(அவர்)மனங்கொள்ளும்படி-சொல்லி-சொல்லிக்காட்டி-தாங்கற்ற-தாங்கற்றவைகளிலும்-மிக்க-அதிகமான பொருள்களை}-மிக்காருள்-அதிகமாகக்கற்றவரிடத்து-கொளல்-(அறிந்து) கொள்ளக்கடவர். எ-று.) (கருத்து) கற்றவர்முன் கற்றதைச் சொல்லித் தாங்கற்றவைகளினு மிக்கவற்றைக் கற்றவரிடத்துக் கொள்ளக்கடவர் என்பதாம். ❁ எல்லா மொருவருக்குக் கற்றல் கூடாமையால் வேறுவேறாகிய கல்வியுடையவர் பலரிருந்த சபையின்கண் தாங்கற்றவைகளைச் சொல்லிக் கற்கப்பெறாதவையுங்கேட்டு அறியலாமென்பதாயிற்று. [இதனால் அதனது ஒருசார்பயன் சொல்லப்பட்டது.] (௪)

ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா ....*
மாற்றங் கொடுத்தற் பொருட்டு.....................*

(இ-ள்.) அவை-(வேற்றுவேந்தர்)சபையில்-அஞ்சா-அஞ்சாமல்-மாற்றம்-எதிர்மொழியை-கொடுத்தற்பொருட்டு-கொடுக்குங்காரணமாக ஆற்றின்-(சொல்லிலக்கண) வழியாலே-அளவு-அளவைநூலை-அறிந்து-தெரிந்து-கற்க-(மந்திரிகள்) கற்கக்கடவர். எ-று.) (கருத்து) வேற்றரசர்சவையி லஞ்சாதெதிர்மொழி கொடுத்தற்பொருட்டுச் சொல்லிலக்கணவழியா லளவைநூ லறிந்து மந்திரிகள் கற்கக்கடவர்கள் என்பதாம். ❋ அளவைநூல்சொல்லிலக்கணங்கற்றே.

(கூ) எகூ-ஆம்-அதி-அவையஞ்சாமை.

கற்கவேண்டுதலால் இதற்கு அது வழியெனப்பட்டது. அளவையெனப்பட்ட தர்க்கநூலைக் கற்றவர்க்கே அவர் சொல்லை வெல்லக்கூடுமாகலால் அவைகளைப் பிழைபடாமற் கற்கக்கடவனென்பதாம். [இதனால் அதன்காரணம் சொல்லப்பட்டது.]

(ரு)

வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடென்....❋

நுண்ணவை யஞ்சு பவர்க்கு ....

................❋

(இ-ள்.) வன்கண்ணரல்லார்க்கு-சௌரியமுடையவரல்லாதவர்க்கு -வாளோடு- வாளாயுதத்துடன்- என்-என்ன- (சம்பந்தமுண்டு.)— (அதுபோல்)- நுண்ணவை- புத்திநுட்பமுடையவரது சபையை- அஞ்சுபவர்க்கு- அஞ்சுவோர்க்கு- நூலோடு- நூலுடனே-என்-என்ன-(சம்பந்தமுண்டு) எ-று) (கருத்து) சௌரியமில்லாதவர்க்கு வாளாயுதத்துடனென்னசம்பந்தமுண்டு. அதுபோலக் கற்றவர் சபைக்கஞ்சுவோர்க்கு நூலோடென்ன சம்பந்தமுண்டு என்பதாம். ❋ இருந்தாரது நுண்மை அவைமேல் ஏற்றப்பட்டது. நூலுக்குரியவரல்லரென்பதாம். (௬)

பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்........*
தஞ்சு மவன்கற்ற நூல்........ ....
....................*

(இ-ள்.) அவையகத்து- (சொல்லப்படுகின்ற) சபைநடுவில்- அஞ்சுமவன்-(அதனை) யஞ்சுமவன்-கற்றநூல்-கற்றறிந்த நூல-பகைடகத்து-(எதிர்ப்படும்பகைநடுவில்) -பேடி-(அதனை அஞ்சும்) பேடி-கை-கையிற்பிடித்த -ஒள்வாள்- கூர்வாளையொக்கும். எ-று.) (கருத்து) சபைக் கஞ்சுவோன் கற்றநூல் பேடிகைவாளை யொப்பாகும் என்பதாம். ❋ பேடிபெண்ணியல்புமிகுந்து ஆணியல்புமுடையவள்- இடமும் வாய்த்துத் தானும்நன்றாயிருந்ததே யாயினும் பிடித்தவனது குற்றத்தால் வாள் சிறவாமைபோல் சபையும் வாய்த்துத் தானும் நன்றாயிருந்ததே யாயினும் கற்றவனது குற்றத்தால் நூல் சிறவாதாயிற்று. (௭)

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு...... .... *
ணன்கு செலச்சொல்லா தார்.........
.... *

(இ-ள்.) நல்லவையுள்-நல்லவரிருந்த சபையுள்- நன்கு-நல்லசொற்பொருள்களை-செல- (அவர்க்கு) ஏற்க- சொல்லாதார் - (அச்சத்தால்) சொல்லமாட்டாதவர்- பல்லவை-கற்றும்- பலநூல்களைக்கற்று

௭௩-ஆம் அதி-அவையஞ்சாமை. (௬௱௭௧)

ராயினும்-பயமிலரே-(உலகத்துக்குப்) பிரயோசனப்படுதலிலர். ௭, (௱.) (கருத்து) நல்லவர்சபையிலே நல்லபொருளைச் சொல்லாதவர் பலநூல்களைக்கற்றாராயினும்பயனில்லாதவர்என்பதாம். ❋ அறிவார்முன்சொல்லாமையால கல்வியினுண்மை அறிவார் இல்லையென்பதாம். (௮)

கல்லாதவரிற் கடையென்ப கற்றறிந்து........................ ❋
நல்லா ரவையஞ்சு வார்.....................
.... ❋

(இ-ள்.) கற்று-(நூல்களைக்) கற்று- அறிந்தும்- (அவைகளாலேபயனை) அறிந்திருந்தும்- நல்லார்-நல்லவரிருந்த-அவை-சபையை-அஞ்சுவார் அஞ்சி- (அவ்விடத்திலே) சொல்லாதவரை- கல்லாதவரின் -மூடரினும்-கடை-கடையர்-என்ப-என்று-(உலகத்தோர்) சொல்லுவார். ௭,,௱.) (கருத்து) கற்றிருந்துங் கற்றவர்சபைக் கஞ்சுபவர்கல்லாதவரிலுங் கடையாவர் என்பதாம். ❋ அக்கல்வியறிவுகளாலேபயனைத்தாமும அடையாமல் பிறரையும்அடைவிக்காமல கல்வித்தன்மை அடைந்து நிற்கையால் கல்லாதவரிற்கடையென உலகம்பழிக்குமென்பதாம். (௯)

உளரெனினு மில்லாரோ டொப்பர் களனஞ்சிக்.......... ❋
கற்ற செலச்சொல்லா
தார்............................ .... ❋

(இ-ள்.) களன்-சபைக்குஅஞ்சி- பயந்து-கற்ற-(தாம்) கற்றவை களை}.செல-(அதற்கு) ஏற்க-சொல்லாதார்-சொல்லமாட்டாதவர்|- உளரெனினும், உயிரோடிருந்தாலும் -(உலகத்தோரால் எண்ணப்ப டாமையால்) -இல்லாரொடொப்பர்-இறந்தவரோடொப்பாவார். எ-று.) (கருத்து) சபைக்கஞ்சிக்கற்றவற்றைச்சொல்லாதவர் உயிரோடிருந்துமிறந்தவரோடொப்பர் என்பதாம். ❊ [இவ்வைந்துபாட்டாலும் சபைக்கு அஞ்சுவோரது இழிவு சொல்லப்பட்டது. (௰)

—— ❊ ——

அங்கவியல் அமைச்சு முற்றியது.



[எசு]

எசு ஆம் அதி-நாடு.

இனி அவ்வரசனாலும்-மந்திரியாலும்-கொண்டு செலுத்தப்படு

வனவாகிய பொருள் அரண்முதலிய அங்கங்களுக்கு அவசியம்வே ண்டுவதாகிய, ஆகியநாடு ஓதிகாரத்தினைமேல சொல்லுகின்றார்.

அஃதாவது - இப்படிப்பட்டதென்பதும்,

அதிகாரமுறைமையும்,
இதனுள் விளங்கும்.

தள்ளா விளையுளுந் தக்காருந்
தாழ்விலாச்.... ....*
செல்வருஞ் சேர்வது நாடு........ ....
.....................*

(இ-ள்.) நாடு-நாடாவது- தள்ளா விளையுளும்-குன்றுதவிளைவுசெய்வோரும்-தக்காரும்- அறவோரும்-தாழ்விலாச்செல்வரும்-கேடில்லாத செல்வமுடையோரும் - சேர்வது- கூடிவாழ்வதேயாம். எ,று.)

(கருத்து) உழவரும் அறிவோரும் செல்வரும் கூடிவாழ்வதே நாடாம் என்பதாம். ※ தக்கார் முதலானவரோடும், சேர்தற் றொழிலோடும்,பொருந்தாமையால் விளைவென்பது உழவரையுணர்த்திநின்றது.- குன்றாமை - எல்லாவுணவுகளும் நிறையவுண்டாதல், இதனுவழ்வோர்க்குவறுமை யில்லாமைபெறப்பட்டது.— அறவோர் - துறந்தோரும் அந்தணருமுதலாயினோர். இதனுல் அழிவிலலாமைபெறப்பட்டது- கேடில்லாமை- கொடுக்கக்குறையாமை, செல்வர் கட்டவினும், பண்டியினும், பொருள்தரும் வணிகர் இதனுல் அரசனுக்கும்,வாழ்வோர்க்கும், பொருள் கிடைத்தல பெறப்பட்டது.
(௧)

பெருமபொருளாற் பெட்டக்க தாகி
யருங்கேட்டா.... *

லாற்ற விளைவது நாடு ...., ...

• •••,•• ※

(இ-ள்) நாடு நாடாவது-பெரும்பொருளால்-அளவற்றபொருளுடைமையால்-பெட்டக்கதாகி-(பிறதேசத்தாராலும்)விரும்பத்தக்கதாகி-அருங்கேட்டால்-அழிவில்லாமையோடுகூடி-ஆற்றவிளைவது-

மிகவிளைவதாம். எ,று.) (கருத்து) அளவில்லாப் பொருளுடைமையால பிறராலிச்சிக்கத்தக்கதாகி அழிவின்மைபொருந்தி மிகவிளைவதே நாடாகும் என்பதாம். ※

கேடாவது-அதிகமழை-மழையில்லாமை-எலிவிட்டில்-கிளி-அரசாண்மை- எனப்படுகிற இவைகளா

லிவருவது.—இவைகளைநூலார்ஈதிபாவமென்று சொல்வர்,இவைகளுள் அரசாண்மைஅரசனறத்தாலும், மற்றவை அவன் மறத்தாலும், இலவாம் இவையில்லாமற்போகவே மிகவிளையுமென்பதாயிற்று. [illegible]நாடு.

(ருளாரு)

பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி

யிறைவற்...*

இறையொருங்கு நேர்வது

நாடு......................*

(இ-ள்.) நாடு-நாடாவது|—பொறை- (பிறநாடுகள்சுமந்த) பாரமெல்லாம்-ஒருங்கு-ஒருமிக்க-மேல்வருங்கால்-(தன்) மேல்வரும்போது - தாங்கி - (அவைகளைத்) தாங்கி- (அதன்மேலும்) - இறைவற்கு-(தன்) னரசனுக்கு-இறையொருங்கு- இறைப்பொருண் முழுவதையும்-நேர்வது-உடன்பட்டுக்கொடுப்பதேயாம். எ-று. (கருத்து) பிறநாட்டுப்பாரந்தன்மேல்வரும்போது அவற்றைத்தாங்கித்தன்னரசனுக்கிறைப்பொருண் முற்றுந்தருவதே நாடாம் என்பதாம். ❀ பாரமாவது - மனிதர்கூட்டமும், பசுமுதலாகிய விலங்கின் கூட்டமும்.- தாங்குதலாவது - அவைகள் தத்தந்தேசங்களிலே பகைவர் வருதலாலாவது, அரசன் முறைதப்பலாலாவது, உணவில்லாமையாலாவது, தன்னிடத்து வந்தால் அவ்வத்தேசங்கள்போல இனிதிருப்பச்செய்தல் — அதனால் தன்னரசனுக்கு வரிட்டணங்குறைபடுத்தாமல் தானே கொடுப்பதென்றற்கு- இறையொருங்கு நேர்வதென்றார். (௩)

உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்..............*

சேரா தியல்வது நாடு ....

................*

(இ-ள்.) நாடு-நாடாவது - உறுபசியும்-அதிகபசியும்-ஓவாப்பிணியும்-நீங்காதநோயும்- செறுபகையும்- (புறத்திலிருந்துவந்து) அழிவுசெய்யும்பகையும்-சேராது-அடையப்பெறாமல்- இயல்வது-இனிதுநடப்பதேயாம். எ-று.) (கருத்து) பசியும், பிணியும், பகையுஞ், சேராதிருப்பது நாடாகும் என்பதாம். ❄ அதிகபசி உழவருடைமையாலும், மிகவிளைதலாலும், சேராதாயிற்று.—நீங்காத நோய்-தீக்காற்று மிகக குளிர்வெப்பங்களும், உண்ணப்படுமவைகளது தீமையும் இலலாமையால் சேராதாயிற்று.—செறுபகை-அரசன்வலிமையும், நிலப்படையும், அடவியும்-அரணும், உடைமையால் சேராதாயிற்று. (௬)

பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்கும்...*
கொல் குறும்பு மில்லது நாடு
....*

(இ-ள்.) நாடு-நாடாவது|-பல்குழுவும்- (சங்கேதவசத்தால் மாறுபட்டுக்கூடும்) பலகூட்டமும்- பாழ்செய்யும்- (உடனிருந்துகொண்டே) பாழாகச்செய்யும்- உட்பகையும்- கள்ளர் முதலிய உட்பக...

ம்-வேர்தலைக்கும்- (சமயம்வந்தால்) அரசனை அலைக்கின்ற-கொல்குறும்பும்-கொலைத்தொழிற்குறும்பரும் -இல்லது- இல்லாததேயாம். எ-று.) (கருத்து) பலகூட்டமும், பகையும், கொலைத்தொழிற்குறும்பரும் இல்லாததேநாடாகும் என்பதாம். ❋ சங்கேதம் சாதிபற்றியும், சமயம்பற்றியும், பலர்க்கு உளதாமொருமை.— உட்பகை-வழியலைத்துப் பறிக்குங்கள்வர் கோள்சொல்லுவோர் முதலாகிய மக்களும்; பன்றி புலி காடி முதலிய மிருகங்களும்,— இம்மூன்றும் அரசனாலும், வாழ்வோராலும், கடியப்பட்டு நட்பதெனபதாம் (ரு)

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா... .... ❋
நாடென்ப நாட்டிற் றலை...........

.... ❋

(இ-ள்.) கேடறியா- (பகைவராலே) கெடுதலறியாததும்-கெட்ட விடத்தும்- (அரிதிற்) கெட்ட விடத்தும்-வளங்குன்றா- (அப்போதும்) வளங்குறையாததும் ஆன-நாடு-நாட்டை}- நாட்டின் - (எல்லா) நாடுகளிலும்- தலை- முதன்மையதாகும்- என்ப-என்று (நூலோர்) சொல்லுவார். எ-று.) (கருத்து) கேடில்லாததும், வளங் குன்றாததுமான நாட்டையெல்லா நாட்டிலு முதன்மையான நாடென்பர் என்பதாம். ❋ அறியாத- குன்றாத - என்பன இறுதிகெட்டுவந்தன.— கேடறியாமை-அரசன் வலிமையாலும், கடவுட்பூசை அறங்கள் என்னிவைகளைச் செயலாலும், வரும்,— வளம்- † ஆகரங்களிற் படுமவையும், வயல் தண்டலைகளில் விளையுமவையும், ஆம்.—குறையாமை-அவை சம்பாதிக்கவேண்டாமல் இயல்பாகவே உளவரவும் முன்சம்பாதிக்கப்படுங் குறையறுதலும் [இவைஆறுபாட்டாலும் நாட்டது இலக்கணம் சொல்லப்பட்டது.] (சா)

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்.......... .....❋
வல்லரணு நாட்டிற் குறுப்பு....... ....❋

(இ-ள்.) இருபுனலும்- மேழ்நீர்மேனீர் எனப்படுகிற தன்னிடத்து நீரும்-வாய்ந்தமலையும்- வாய்ப்புடைத்தாகிய மலையும்- வருபுனலும் -(அதிலிருந்து) வருவதாகியநீரும்- வல்லரணும்-அழியாதநகரியும்- நாட்டிற்கு- நாட்டினுக்கு-உறுப்பு-அவயவமாம். எ,று.) (கருத்து) நீருமலையு மலையில்வருநீரும் நகரும் நாட்டிற்குறுப்பாம் என்பதாம். ‡ இவ்விடத்துப் புனலென்றது- தூரவு கேணிகளும் ஏரிகளும் ஆறுகளும் ஆகிய ஜலாதாரங்களே. அவயவமாதற்கு உரியன அவை

---

† ஆகரம் மணி பொன் முதலியவை எடுக்குங்குழிகள்.

ஈசு-ஆம்-அதி-நாடு.

(குறள்)

பேயாகலால் அவைகளால் மழைவறப்பினும் வளமுடைமை பெற

ப்பட்டது.—தமேவதல்லாமல் ஒருபக்கத்ததாகலும், தன் வளந்தருத லும் மாரியினுண்ட நீர் கோடையினுமிழ்தலு முடைமைபற்றி- வாய்ந்தமலையென்றார்.[இதனால்அதனது அவயவம்சொல்லப்பட்டது.]

பிணியின்மை செல்வம் விளைவின்ப

மேம...........*

மணியென்ப நாட்டிற்கிவ்

வைந்து....................... *

(இ-ள்.) பிணியின்மை-நோயில்லாமையும் - செல்வம் - செல்வமும்-விளைவு-பயிர்விளைவும்- இன்பம்-சுகமும் - ஏமம்- காவலும்-இவ்வைந்து-இவ்வைந்தினையும்- நாட்டிற்கு-தேசத்திற்கு- அணி-அழகாகும்— என்ப - என்று (நூலோர்,) சொல்லுவார். எ,று.) (கருத்து) நோயில்லாமையும் செல்வமும் பயிர்விளைவு மின்பமும் காவலு மிவ்வைந்து நாட்டிற்கழகாகுமென்பர் என்பதாம்.❋பிணியில்லாமை நிலநலத்தால்வருவது.—செல்வம்-முன்சொல்லியது.-இன்பம்-விழவும் வேள்வியும் சான்றோருடைமையாலும். அனுபவிப்பவையுடைமையாலும், நிலநீர்களது நன்மையாலும், வாழ்வார்க்கு உள்ளே நிகழ்வது. காவலெனவே அரசன்காவலும், வாழ்வார்காவலும், அரணகாவலும், அடங்கின. [பிறதேசத்தோரும் இச்சித்துப் பின்னே அவைகளை நினையாமைக்கு ஏதுவாகிய அதினழகு இதனாலேசொல்லப்பட்டது.] (அ)

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல........................❋
நாட வளந்தரு நாடு.......................................❋

(இ-ள்.) நாடா- (தம்மிடத்துவாழ்வோர்) தேடிவருந்தாத- வளத்தன-செல்வத்தையுடையவைகளை} நாடு-நாடுகள்-என்ப-என்று-(நூலோர்,)சொல்லுவர்-(ஆகலால்)-நாட-தேடிவருந்த- வளந்தரும்-செல்வத்தைத்தரும்-நாடு-நாடுகள்|-நாட-நாடல்ல-நாடுகளாகாவாம்.எ,று.) (கருத்து) தேடாதசெல்வத்தையுடையவற்றை நாடென்றுசொல்லுவர் தேடிவருந்த செல்வத்தைத்தரு நாடுகள் நாடுகளல்ல என்பதாம். ❋ நூலோர் விதிபற்றி எதிர்மறை- முகத்தால் குற்றம்சொல்லியபடி. (௯)

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே...........❋
வேந்தமை வில்லாத நாடு...............................❋

(இ-ள்.) வேந்து -அரசனோடு- அமைவில்லாத- பொருந்துதலில்

லாத-நாடு-நாடானது|-ஆங்கு-மேற்சொல்லிய குணங்களா லெல்லாம்-அமைவெய்தியக்கண்ணும்- நிறைந்துள்ளதாயினும்-பயமின்றே (அவைகளாலே) பயனுடைத்தன்று. எ,று.) (கருத்து) இராசனுடன் பொருந்தாத நாடானது எல்லாநிறைவுள்ளதாயினும்பிரயோசனமில்லை என்பதாம். ❋ வேந்தமைவெனவே குடிகள்- அவனிடத்தே அன்புடையராதலும், அவன் குடிகளிடத்தே அருளுடையனாதலும், அடங்கின. அவையில்லாவிடத்து அந்நாட்டில் வாழ்வோரிலலாமையால் அவைகளாலே பயன் இல்லையாயிற்று. [இவ்விரண்டுபாட்டானும் அதனது குற்றம் சொல்லப்பட்டது.] (ய)

❋§§❋

எரு
ஆம்-அதி-அரண்.

இனி அந்நாட்டிற்கு உறுப்பாய் அடங்கு

மாயினும் பகைவரால்
தொலைவுவந்தவிடத்து அதற்கும்- அரசனுக்கும், காப்பாதற்
சிறப்புப்பற்றிவேறோரங்கமாகச்சொல்லப்பட்டஅரண்
ஒரதிகாரத்தால் சொல்லுகின்றார்.
அஃதாவது-இன்னதென்பதும், அதிகாரமுறைமையும்,
இதனுள்விளங்கும்.

ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற் .... *
போற்று பவர்க்கும் பொருள் .... *

(இ-ள்.) அரண்-கோட்டையானது-ஆற்றுபவர்க்கும்-(மூவகைவலிமையுமுடையவராய்ப்) பிறர்மேலேசெல்வோர்க்கும்- பொருள்-சிறந்ததாகும்.—அஞ்சி- (அவையல்லாமல்) தம்மேல் வருவோர்க்கு3 அஞ்சி-தற்போற்றுபவர்க்கும்- தன்னையே அடைவோர்க்கும்-பொருள்-சிறந்ததாகும். ஏ,று.) (கருத்து) கோட்டையானது போர்செல்வோர்க்கும் தன்னை யடைந்தோர்க்கும் சிறந்தபொருளாகும் என்பதாம். * பிறர்மேற் செல்லும்போது உரிமைப்பொருள் முதலானவைகளைப் பிறனொருவன் வெளவாமல் வைத்துச் செல்ல வேண்டுதலானும், பெருமை தொலைந்து முடிவுவந்தவிடத்துக்கடலினடுவே உடைகப்பக்காரர்போன்று காப்புக்காணுது முடிவராகலானும், அவ்விருவகையோர்க்கும் அரண்பொருளாயிற்று.—வலிமையுடையவராயினும் அரணில்லாதவிடத்து அழியுந்தன்மையராகலால் அவரை முன்சொல்லினர். [இதனால்அரணினது சிறப்புச்சொல்லப்பட்டது.

எறி-ஆம்-அதி-அரண். (நாள

)

ம ணிநீரு மண்ணு

மலையு மணிநிழற்........................ .*
காடு முடைய
தரண்....................................... *

(இ-ள்.) அரண்|-கோட்டையானது-மணிநீரும்-மணிபோல்நிறத்தையுடைய நீரும்-மண்ணும்-வெளிநிலமும—மலையும் மலையும்-அணிநிழற்காடும்-குளிர்ந்த நிழலையுடையகாடும்- உடையது- உடையதேயாம். எ,று.) (கருத்து) நீரையும், வெளிநிலத்தையும் மலையையும் காட்டையு முடையது கோட்டையாம் என்பதாம். ❋எந்நாளும் வற்றாத நீரென்றற்கு- மணிநீரென்றும், நீருநிழலுமில்லாத வெறுநிலமென்றற்கு மண்ணென்றும், செறிந்தகாடென்றற்கு- அணிநிழற்காடென்றும், சொல்லினர்.— மதிற்புறத்து வெளிநிலம் பகைவர் அரண்பற்றாமைப்பொருட்டு—நீரரண்- நிலவரண்-மலையரண்-காட்டரண்-என்கிற இந்நான்கரணும் சூழப்படுவது அரணென்பதாம்.

உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி............... *
னமைவர
ணென்றுரைக்கு நூல்........................*

(இ-ள்.) உயர்வு-உயர்ச்சியும்- அகலம்-
அகலமும்—திண்மை-வலி
மையும்-அருமை-அருமையும்(எனப்பட்ட)-இந்நான்கின்-இந்நான்கினது-அமைவு-மிகுதியையுடைய மதில- அரணென்று-கோட்டை

யென்று- நூல்- நூலோர்|-உரைக்கும்-சொல்லுவர்.எ,று.) (கருத்து) உயர்வு-அகலம்-வலிமை-அருமை- இந்நான்கின் மிகுதியையுடைய

மதிலைக் கோட்டையென்று சொல்லுவர் என்பதாம். ❋ அமைவு நூல்இரண்டும் ஆகுபெயர்கள்.—உயர்வு-ஏணிக்கு எட்டாதது.— அக

லம்-புறத்தோர்க்குத் தோண்டக்கூடாத அழ்யகலமும், உள்ளிடத்தோர்க்கு நின்றுதொழில் செய்தற்காந்தலை யகலமும்,—திண்மை-

கருங்கல் செங்கல்களாலே செய்தலால்-குத்தப்படாமை.—அருமை பொறிகளாலே சேர்தற்கருமை.—[பொறி-எந்திரப்பாவைகள்.]

சிறுகாப்பிற்

பேரிடத்த தாகி யுறுபகை..........................*

ஊக்க மழிப்ப

தரண்......................................*

(இ-ள்) அரண்|-கோட்டையானது-சிறுகாப்பின்-காக்கவேண்டுமிடஞ்சிறிதாய்-பேரிடத்ததாகி-பரந்தவிடத்தை யுடையதாய்-உறுபகை-(தன்னைச்) சூழ்ந்தபகைவரது-ஊக்கம்- மனவெழுச்சியை}-அழிப்பது- கெடுப்பதேயாம். எ-று.) (கருத்து) காக்குமிடஞ் சிறிதாய்ப் பரந்தவிடமுடையதாய்ப் பகைவர் வலிமையைக் கெடுப்பதேகோட்டையாம் என்பதாம். *வாயிலும் வழியும் ஒழிந்தவிடங்

(கூஅ) எ௫-ஆம்-அதி-அரண்.

கள்-மலை-காடு-நீர்-நிலை-என்றிவைகளுள் ஏற்பவைகளை உடைத்தாதல்பற்றி- சிறுகாப்பினென்றும் உள்ளிடத்தோர் நலிவில்லாமல் இருத்தல்பற்றி- பேரிடத்ததாகியென்றும், தம்வலிமைகண்டு இப்பொழுதே அழிப்போமென்றுவரும் பகைவர்யாந்து அதுகண்டால் அத்தைரியம் ஒழிதல்பற்றி ஊக்க மழிப்பதென்றும், சொல்லினர். (௪)

கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார் ...*
நிலைக்கெளிதா நீர தரண்.........................*

(இ-ள்.) அரண்-கோட்டையானது-கொளற்கரிதாய்-(புறத்தோராலே) கொள்ளுதற்கரிதாய்-கொண்ட-உட்கொண்ட—கூழ்த்தாகி-(பலவகை) புணவையுடையதாகி- அகத்தார்- உள்ளிடத்தோரது-நிலைக்கு- (போர்) நிலைக்கு-எளிதாம்-எளிதாகின்ற-நீரது-குணத்தையுமுடையதேயாம். எ-று.) (கருத்து) பகைவர்கொள்ளுதற்கரிதாய்ப் பலவகைபுணவையுடையதாய் உள்ளிட்டோர்போர்நிலைக்கெளியதாகியகுணமுடையதே கோட்டை என்பதாம். ❋கொள்ளுதற்கருமை காவற்காடுகிடங்குகளாலும், பொறிகளாலும் இடங்கொள்ளுதற்கருமை-உணவு-தலைமைபற்றிச் சொல்லினமையால் மற்றுமுள்ள அனுபவிக்கப்படுமவைகளும் அடங்கின.—நிலைக்கெளிதா நீர்மையாவது உள்ளிடத்தோரால் விடப்பட்ட ஆயுதமுதலானவை புறத்தோர்மேல் எளிதிலே செல்லலும், அவரால் விடப்பட்டவை உள்ளிடத்தோர்மேலே செல்லாமையும், பதணப்பரப்பும், முதலானவை. பதணம்-மதிலுண்மேடை. (௫)

எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு.................❋
நல்லா ளுடைய
தரண்....................................❋

(இ-ள்.) அரண்-கோட்டையானது-எல்லாப்பொருளும்-(உள்ளிடத்தோர்வேண்டும்) பொருள்கள்யாவையும்—உடைத்தாய்-உடையதாகி-இடத்து-(புறத்தோரால்) அழிவடையுமளவில்-உதவும்-(அதவராமற்படி) உதவிக்காக்கவல்ல-நல்லாள்-நல்லவீரரையும்-உடையது உடையதேயாம். எ-று.) (கருத்து) எல்லாப் பொருளுள்ளதாய் வீரரையுடையது கோட்டை என்பதாம் ❋ அரசனிடத்து அன்பும், மானமும், மறமும், சோர்வில்லாமையும், முதலாகிய நற்குணங்களை உடைமைபற்றி- நல்லாளென்றார். (௬)

முற்றியு முற்று தெறிந்து மறைப்படுத்தும்.............*
பற்றற் கரிய தரண்...............................*

எ௬-ஆம்-அதி-அரண்.

௲௱௬)

(இ-ள்.) அரண்-கோட்டையானது-முற்றியும்-(வரவுபோக்குஒழியும்வகை) நெருங்கிச்சூழ்ந்தும்-முற்றாது- அப்படிச்சூழாமல்-எறிந்தும்-(நெகிழ்ந்தவிடநோக்கி) ஒருமுகமாகப் போர்செய்தும்-அறைப்படுத்தும்-(உள்ளிடத்தோரை அவருக்கு நம்பிக்கையானவரை விட்டுக்) கீழறுத்துத்திறப்பித்தும்-பற்றற்கரியது-(புறத்தோராலே பிடித்துக்) கொள்ளுதற்கரியதேயாம். எ,று.) (கருத்து) சூழ்ந்துஞ் சூழாமலும் போர்செய்தும் கீழறைபெற்றும் பிறராற் கொள்ளுதற்கரியது கோட்டையாம் என்பதாம். ❊ இம்மூன்று உபாயங்களுள்ளும்-முதலாவது- எல்லாப்பொருளு முடைமையாலும்,மற்றவைகள் நல்லாளுடைமையாலும், பலிப்பனவல்லவாயின. (எ)

முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்.............*
பற்றியார் வெல்வ தரண்...............................*

(இ-ள்.) அரண்- கோட்டையானது- முற்றாற்றி- (சேனைப்பெருமையால்) சூழ்தல் வல்லவராகி - முற்றியவரையும்- (வந்து) சூழ்ந்த புறத்தோரையும் - பற்றியார் - (தன்னைப்பற்றிய) உள்ளிடத்தோர்-பற்றாற்றி-(தாம்) பற்றியவிடம் விடாதே நின்று-வெல்வது- (போர் செய்து) வெல்வதேயாம். எ,று.) (கருத்து) தன்னைப்பற்றிச்சூழ்ந்தவரையும் தன்னிடத்திருந்தவர்பற்றிவெல்வதேகோட்டை என்பதாம் ❊ வெல்வதென அரணுடையார் தொழில் அரண்மேலே நின்றது.-

பெரும்படையானைச் சிறுபடையானைப் பொறுத்துநிற்குந் துணையேயன்றி வெல்லுமியல்பினதென்பதாம்.—[இவை ஏழுபாட்டாலும்அதனது இலக்கணம் சொல்லப்பட்டது.] (அ)

முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து. ....*
வீறெய்தி மாண்ட தரண்...................................... ..... *

(இ-ள்.) அரண்-கோட்டையானது|-முனைமுகத்து- போர்தொடங்கினவளவிலே-மாற்றலர்-பகைவர்-சாய-கெட-வினைமுகத்து-(உள்ளிடத்தோர்செய்யுந்) தொழில்வேறுபாடுகளால்-வீறெய்தி-வீறுபெற்று-மாண்டது-(மற்றும்வேண்டும்) பெருமையையுடையதேயாம் எ,று.) (கருத்து) போரிடத்துப் பகைவர்கெடத் தொழிலிடத்துப் பெருமையுடையதுகோட்டை என்பதாம். ❋ ஆரம்பத்திலேகெட்டவர் பின்னுங்கூடிப்போர்செய்தல் கூடாமையால் முனைமுகத்துச் சாயவென்றார். தொழில் வேறுபாடுகளாவன- பகைவர் தொடங்கிய போரை அறிந்து எய்தல் எறிதல் குத்துதல் வெட்டுதல் என்றிவைமுதலாகிய தொழில்களுள் அப்போரை அழிப்பவைகளைச் செய்தல்.- மற்றும் வேண்டும் பெருமையென்றது- புறத்தோர் அறியாமல் புகுதல் போகுதல் செய்தற்கு உண்டாக்கப்பட்ட சுருங்கை வழிமுதலானவை யுடைமை. (கூ)

[எஅ]

(௬௱௰) எரு-ஆம்-அதி-அரண்.

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி................*
யில்லார்க ணில்ல தரண்...*

(இ-ள்.) அரண்-கோட்டையானது-எனைமாட்சித்தாகியக்கண்ணும்-(முன்சொல்லப்பட்ட) பெருமையெல்லாம் உடைத்தாகிய விடத்தும்-வினை-தொழில்செய்யுமிடத்து-மாட்சி-பெருமையை-இல்லார்கண்-இல்லாதவரிடத்து- இல்லது-(அவை) இலதாம். எ-று.) (கருத்து) கோட்டை எவ்வளவு பெருமையுடைத்தாகிய விடத்தும் தொழிற்பெருமையில்லாதவரிடத்துப் பயனிலதாம் என்பதாம். ❋ சும்மாவிருக்கையும், அளவறியாது செய்தலும், ஏற்காதது செய்தலும் எல்லாமடங்க- வினைமாட்சியில்லாவொன்றும், ஏற்றதொழிலை அளவறிந்துசெய்து காப்பாற்றுமற்போனால் அவ்வாறனது அப்பெருமைகளாலே பயனில்லாமல் அழியுமென்றற்கு- அவை யுடைத்தன்றென்றும், சொல்லினர். [இவையிரண்டுபாட்டாலும் காப்பவர் அவசியம் வேண்டுமென்பது சொல்லப்பட்டது.] (௰)

௭௬-ஆம்-அதி-பொருள்செயல்வகை.

இனிப் பெரும்பாலும்- நாட்டாலும். அரணாலும், வளர்க்கவும், காக்கவும், படுவதாகிய பொருள் சம்பாதித்தலின் விதம் இவ்வதிகாரத்தாலே சொல்லுகிறார். அஃதாவதின்னதென்பதும் அதிகாரமுறைமையும் இதனுள் விளங்கும்.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்............*
பொருளல்ல தில்லை பொருள்.....................*

(இ-ள்.) பொருளல்லவரை- ஒருபொருளாக மதிக்கப்படாதவரை யும்}-பொருளாகச்செய்யும்- பொருளாக மதிக்கப்படச்செய்யவல் ல-பொருளல்லது-பொருளையல்லாமல்-பொருள்- ஒருவர்க்குப்பொ ருள்|-இல்லை-வேறில்லை எ,று.) (கருத்து) மதிக்கப்படாதவரையுமதி க்கப்படச்செய்யும் பொருளல்லாமல்ஒருவர்க்குவேறுபொருளில்லை

௩௬-ஆம்அதி-பொருள்செயல்வகை.

(ஙாயக)

என்பதாம். மதிக்கப்படாதவர் - அறிவில்லாதவரும், இழிகுலத் தாரும், மதிக்கப்படச்செய்தல்-அறிவுடையவரும், உயர்குலத்தவ ரும், அவரிடத்திலேபோய் நிற்கப்பண்ணுதல்.-அதனாலேசம்பாதிக் கவேண்டுவது அதுவே யென்பதாம். (க)

இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை........... *
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு...........................*

(இ-ள்.) (எல்லா நன்மையு முடையவராயிருந்தாலும்)-இல்லாரை -(பொரு) ளில்லாதவரை}-எல்லாரும்-யாவரும்|-எள்ளுவர்-இகழ்வர்- (எல்லாத்தீமையுமுடையவராயிருந்தாலும்)-செல்வரை- அப்பொரு ளுடையவரை}-எல்லாரும்-யாவரும்|-சிறப்புச்செய்வர்-உயர்ச்செய் வர். எ,று.) (கருத்து) வறியவரை யாவருமிகழ்வர். செல்வரை யாவ ரும்புகழ்வர் என்பதாம். உயர்ச்செய்தல்- தாம் தாழ்ந்துநிற்றல் இகழ்விலும் தாழ்விலும் பகைவர் நட்பினர் அயலவர் என்னு மூவ கையோரும் ஒத்தலால் எல்லாருமென்றார். பின்னுஞ்சொல்லியது அ தனைஉறுதிசெயற்கு. (உ)

பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு... *
மெண்ணிய தேயத்துச்

சென்று..........................❋

(இ-ள்.) பொருளென்னும் பொருளென்று (எல்லாராலுஞ்)சிறப்பிக்கப்படும்-பொய்யாவிளக்கம்- நந்தாவிளக்கானது|- (தன்னைச்சம்பாதித்தவர்க்கு)-எண்ணிய-(அவர்) நினைத்த-தேயத்து- தேசத்தில்-சென்று-போய்-இருள்-(பகையென்னு) மிருளை}-அறுக்கும்-கெடுக்கும். எ,று.) (கருத்து) பொருளென்னும் விளக்கானது பகையென்னுமிருளைக்கெடுக்கும் என்பதாம். ❋ பொருள்-எல்லார்க்குமெந்நாளும் அவசியம் வேண்டுவதாய்வருதல்பற்றி-பொய்யாவிளக்கமென்றும், மற்றைவிளக்கோடு இதனிடத்து வேற்றுமைதோன்ற-எண்ணியதேயத்துச் சென்றென்றும், சொல்லினார். ஏகதேச வுருவகம். [இவைமூன்றுபாட்டாலும் பொருளது சிறப்புச் சொல்லப்பட்டது

அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து..................❋
தீதின்றி வந்த பொருள்..............................❋

(இ-ள்.) திறனறிந்து- (சம்பாதிக்குந்) திறத்தைஅறிந்து}- தீதின்றி-(அரசன்) கொடுங்கோன்மையில்லாக- வந்தபொருள்- கிடைத்தபொருள்|-(அவனுக்கு)-அறன்-அறத்தையும்}-ஈனும்-கொடுக்கும்.

(௬௱௰௨)

௭௬-ஆம்-அதி-பொருள்செயல்வகை.

இன்பமும் - இன்பத்தையும்}— ஈனும் - கொடுக்கும்' எ-று.) (கருத்து) குற்றமில்லா[illegible] பொருளானது தருமத்தையுமின்பத்தையுந்தரும் என்பதாம். [illegible]ம்-சம்பாதித்தற்குஉரியவழி.செங்கோலனென்று புகழப்[illegible] கடவுட்பூசை தானங்களாலே பயன் அடைதலாலும் [illegible]மென்றும். நெடுங்காலமிருந்து அனுபவிக்கப்படுதலால் [illegible]மென்றும். சொல்லினர்.— ஆதலால் அத்திறத்தி[illegible]ன்பதாம். (ச)

அருளொடு மன்பொடு வாராப் பொருளாக்கம் ......*
புல்லார் புரள விடல்........................*

(இ-ள்.) அருளொடும்- (தாம் குடிகளிடத்துச் செய்யும்) கருணையோடும்-அன்பொடும்-(அவர்தம்மிடத்துச்செய்யும்) அன்போடும் வாரா-(கூடி) வாராத-பொருளாக்கம்- பொருட்சம்பத்தியத்தை}- புல்லார்-(அரசர்) பொருந்தாராகி-புரளவிடல்-நீங்கவிடக்கடவர்' எ-று.) (கருத்து) அருளோடு மன்போடும் வாராத பொருளை யரசர்நீக்கக்கடவர் என்பதாம். ❋ அவைகளோடுகூடி வருதலாவது ஆறிலொன்றாய் வருதல். அப்படிக்கு வாராதபொருள்- பச்சைமண் பாண்டத்து நீர்போல் சம்பாதித்தவனையுங்கொண்டு இறத்தலால் அதனைப்புல்லாதொன்றவளவிலே நிறுத்தாமற் புரளவிடலென்றும் சொல்லினர். (ரு)

உறுபொருளு முல்கு பொருளுந்தன் னொன்னார்த் ......*
தெறுபொருளும் வேந்தன்
பொருள்....................*

(இ-ள்.) உறுபொருளும்- (உடையவர் இல்லாமையால் தானேவந்துகிடைத்தபொருளும்|-உல்குபொருளும்-சுங்கமாகியபொருளும்| தன்ஒன்னார்-தன்பகைவரை}-தெறுபொருளும்- வென்று (திறையாக்கொள்ளும்) பொருளும்|- வேந்தன்பொருள்- அரசனுக்குரிய பொருள்கள். எ,று.) (கருத்து) உடையவரில்லாப்பொருளுஞ், சுங்கப்பொருளும், பகைவரைவென்று திறைகொண்டபொருளு மரசன் பொருள்களாம் என்பதாம். ❋ உறுபொருள்-வைத்தவரிறந்துபோக நெடுங்காலம் நிலத்தின்கீழ்க்கிடந்து பின்கண்டெடுத்ததுமாம்.சுங்கம்-மரக்கலத்திலும் பண்டியிலும் வரும் பண்டங்களுக்கு வாங்கும்வரி. தெறுபொருள்-தெறுதலால் வரும்பொரு ளெனவிரியும். ஆறிலொன்றல்லாமலும் உரியவைசொல்லியபடி. [இவைமூன்றுபாட்டாலும் அது சம்பாதிக்கும் வழி சொல்லப்பட்டது.] (௬)

௭௬-ஆம்-அதி-பொருள்செயல்வகை.

(௭௱௫௰௭)

அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்.......❋
செல்வச் செவிலியா லுண்டு..........................❋

(இ-ள்.) அன்பீன்- அன்பினால் ஈன்றிடப்பட்ட- அருளென்னும்- அருளென்கின்ற-குழவி-குழந்தையானது|-பொருளென்னும்-பொருளென்று உயர்த்திச்சொல்லப்படும்-செல்வம் -செல்வத்தையுடைய -செவிலியால்-செவிலித்தாயால்-உண்டு-வளரும். எ,று.) (கருத்து)அன்பாலீன்றிடப்பட்ட அருளென்னுங் குழந்தையானது பொருளெ

ன்னுஞ்செவிலித்தாயால் வளரும் என்பதாம். ❋ சம்பந்தம் பற்று மல் வருத்தமடைந்தவரிடத்துச் செல்வதாகிய அருள் - சம்பந்தம்ப ற்றிச் செல்லும் அன்புமிகுந்தவிடத்து உண்டாவ தாகலால் அதனை அன்பீன் குழவியென்றும், அது வறியவர்மேற் செல்வது- அவ்வறு மை களையவல்ல பொருளுடையவர்க்கு ஆதலால்பொருளை-அதற்கு ச்செவிலியென்றும், அது உலகிற் செவிலிபோ லல்லாமல் தானேஎ ல்லாப்பொருளும் உதவிவளர்த்தலால்- செல்வச்செவிலி யென்றும், சொல்லினர். (எ)

குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன் ...❋
றுண்டாகச் செய்வான் வினை.......... ....❋

(இ-ள்.) தன்கைத்து- தன்கையதாகியபொருள்- உண்டாக- உண் டாகவிருக்க-ஒன்று - ஒருதொழிலை}- செய்வான் - செய்பவனது-வி னை-செய்கையானது|—குன்றேறி- (ஒருவன்) மலைமேல் ஏறி நின்று

யானைப்போர்- யானைகளதுபோரை}-கண்டற்று-கண்டதனோடொ க்கும். எ,று.) (கருத்து) தன்பொருளிருக்க வொருதொழிலைச் செய் பவன் செய்கையானது மலைமேலேறி யானைகள் போரைக் கண்ட தொக்கும் என்பதாம். ❋ எப்படிக் குன்றேறினவன் அச்சமும் வரு த்தமும் இல்லாமல் பூமியில் யானையும் யானையும் செய்கின்ற சண் டையைத் தான் இனிதிருந்துகாண்பானோஅப்படிக்கைப்பொருளு ண்டாக ஒருதொழிலை மேற்கொண்டவனும் அச்சமும் வருத்தமும் இல்லாமல்வல்லவனாஎவித்தான் இனிதிருந்து முடிப்பானென்பதாம்

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு ....❋
மெஃகதனிற் கூரிய தில்..............

.. ..❋

(இ-ள்.) (தமக்குஒன்றுண்டாகநினைப்பவர்|) - பொருளை-திரவிய த்தை}-செய்க- சம்பாதிக்கக்கடவர்.— (அப்பொருள்) - செறுநர்-
[எக]

(௬௱௰௪)

எ௬-ஆம்-அதி-பொருள்செயல்வகை.

(தம்)பகைவரது-செருக்கு-தருக்கை}-அறுக்கும்- கெடுக்கும்-எஃகு-ஆயுதமாம்.—(அதற்கு) -அதனின்-அதுபோல்-கூரியது-கூரிய ஆயுதம்|-இல் - (வேறு) இல்லை. எ,று.) (கருத்து) திரவியத்தைச்சம்பாதிக்கக்கடவர் அத்திரவியம் பகைவர் செருக்கைக் கெடுக்கு மாயுதமாம் என்பதாம். ❋ பொருளைச் சம்பாதித்தவர் பெருமையும் நட்புமுடையவராவராதலாலே பகைவர் செருக்கு நீங்கித் தாமே அடங்குவாரென்பதற்கு- செறுநர் செருக்கறுக்கு மெஃகென்றும்,மற்றையாயுதங்கள் அதுபோல் அருவப்பொருளை அறுக்கமாட்டாமையால்-அதனிற் கூரியதில்லையென்றும், சொல்லினார். (௯)

ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு...... ❋
ளேனை யிரண்டு மொருங்கு......................... ❋

(இ-ள்.) ஒண்பொருள்-நல்வழியால் வரும்பொருளை} -காழ்ப்ப-மிகவதிகமாக-இயற்றியார்க்கு- உண்டாக்கினவர்க்கு-ஏனையிரண்டும் மற்றை அறமும்| இன்பமும்|-ஒருங்கு-ஒருசேர- எண்பொருள்-எளியபொருள்களாம். எ,று.) (கருத்து) நல்வழியால் வரும்பொருளை மிகவுமுண்டாக்கினவர்க்குத் தருமமுமின்பமு மெளியனவாம் என்பதாம். ❋ காழ்த்தல் முதிர்தல். அப்பொருள்- பயன்கொடுத்தல்லது போகாமையால்- ஒண்பொருளென்றும், மற்றை யிரண்டும் அதன் விளைவாகலால் தாமே ஏககாலத்திலே உண்டாகுமென்பதற்கு -எண்பொருளென்றும், சொல்லினார். [இவைநான்குபாட்டாலும் அதன்பயன் சொல்லப்பட்டது.] (௰)

எஎ-ஆம்-அதி-படைமாட்சி.

இனிப்பொருளினால் ஆவதாய் வெல்வதாகிய படையை இரண்டதிகாரத்தாலே சொல்லத்தொடங்கி முதலிலே படைமாட்சி சொல்லுகிறார். அஃதாவது- சேனையினது நன்மையாம். அதிகாரமுறைமையும் இதனாலேவிளங்கும்.

உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை

வேந்தன்..............*

வெறுக்கையு ளெல்லாந் தலை.....................

..........*

௭௭-ஆம்-அதி-படைமாட்சி.

(௭௱௬௰௧)

(இ-ள்.) உறுப்பு-(யானைமுதலாகிய) நாலுறுப்புக்களாலும் - அமைந்து நிறைந்து- ஊறு-(போரிலே) காயம்படுதற்கு - அஞ்சா- அஞ்சாது-நின்று-வெல்-(பகையை) வெல்வதாகிய-படை-சேனையானது|-வேந்தன்-அரசனது - வெறுக்கையுளெல்லாம் - செல்வங்களிலெல்லாம்- தலை-முதன்மையாகிய (செல்வமாம்.) எ,று.) (கருத்து) போரிலஞ்சாதுநின்று வெல்லும்படையானது அரசன்செல்வம்யாவற்றினுந் தலைமை என்பதாம். ❋ இவ்விடத்திலே படையென்றது- அத்நான்கின் கூட்டத்தை சேனை - ஊறஞ்சிய விடத்தே வெல்லுதல் கூடாமையால் ஊறஞ்சாவென்றும், அச்சேனை ஒழிந்த அங்கங்களுக்கும் அரசனுக்கும் காவலாகலால்-வெறுக்கையு ளெல்லாந்தலையென்றும் சொல்லினர்.

(௨)

உ லைவிடத் தூறஞ் சாவன்கண்

டொலைவிடத்துத்.........*

தொல்படைக் கல்லா

லரிது..............................*

(இ-ள்.) தொலைவிடத்து-(தான்) சிறிதாகியவிடத்தும்- உலைவிடத்து-(... போரிலிடத்து)

அழிவுவந்தால்-ஊறு - (தன்மே [illegible]) [illegible]

[illegible] ந்து-

அஞ்சா-அஞ்சாதுநின்று தாங்கும்- வன்கண்-

தெளரிய [illegible] மானது|-தொல்படைக்கல்லால்-

அவன்முன்னேனாத்தொ

டங்கிவரும் சேனைக்கல்லாமல்- அரிது-உண்டாகாது எ,று.) (கருத்து) அஞ்சாதுநின்று தாங்குஞ் செளரியமானது அரசன் பழைய சேனைக்கலலது மற்றவர்க்கில்லை என்பதாம். ❁ இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது.— மூலப்படை- கூலிப்படை- நாட்டுப்படை-காட்டுப்படை- துணைப்படை- கைப்படை- எனப்படுகிற அறுவகைப்படைகளுள்ளுஞ்சிறப்புடையது மூலப்படையாதலால்அரசன் அதற்குவேண்டிய மவைகளைக்கொடுத்து அதைக்காப்பாற்றுகவென்பது கருத்து.

(உ)

ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை.................. ❋
நாக முயிர்ப்பக் கெடும்.............. ....❋

(இ-ள்.) எலிப்பகை- எலிகளாகிய பகைதிரண்டு-உவரி- கடல்போல்-ஒலித்தக்கால்- இரைத்தால்- என்னும்- (பாம்புக்கு) என்ன துன்பம்வரும்.—நாகம்-அப்பாம்பு-உயிர்ப்ப-மூச்செறிந்தவளவிலே-கெடும்-(அது|தானே) கெடும். எ,று.) (கருத்து) எலிகள் கூடிச் சத்தித்தால் பாம்புக்கென்ன துன்பம்வரும் பாம்புமூச்சுவிட்டவளவில் எலிகளழியும் என்பதாம். ❁ இத்தொழிலுவமத்தால் திரட்சிபெற்றும். (வீரரல்லாதார் பலர் திரண்டு ஆர்த்தால் அதற்கு வீரன் அஞ்சா

 எஎ-ஆம்-அதி-படைமாட்சி.

ன்.அவன் எழும்பினவளவிலே அவர் கெடுவரென்பது தோன்ற நின்றமையால்- இது பிறிது மொழிதலணி.) வீரரல்லாதார் பலரினும் வீரனொருவனை ஆளுதல் நல்லதென்பதாம். [இவைமூன்றுபாட்டானு ம்மூலமே அரசனுக்குப் படையானது மற்றையவைகளுட் சிறந்த தென்பதும், அதனுள்ளும் மூலப்படை சிறந்ததென்பதும், அதனுள்ளும் வீரன் சிறந்தவனென்பதும், சொல்லப்பட்டன.] (௩)

அழிவின் றறைபோகா தாகி வழிவந்த........................*
வன்க ணதுவே படை.....................................*

(இ-ள்.) படை - (அரசனுக்குப்) படையாவது|— அழிவின்று-(போரினிடத்தும்) கெடுதலில்லாமல்—அறைபோகாதாகி-(பகைவராலே) கீழறுக்கப்படாததாகி-வழிவந்த-பழைமையாகவந்த-வன்கணதுவே-சௌரியமுடையதே. எ,று.) (கருத்து) போரிற்கெடுதலில்லாமல்பழமையாகவந்த சௌரியமுடையதே யரசனுக்குப்படையாம் என்பதாம். ❋ அழிவில்லாமையால் மறமானங்களுடைமையும், அறைபோகாமையால் அரசனிடத்து அன்புடைமையும், பெறப்பட்டன. (௪)

கூற்றுடன் று மேல்வரினுங் கூடியெதிர் நிற்கு.......... *
மாற்ற லதுவே
படை...................................*

(இ-ள்.) படை-சேனையானது |-கூற்று-

கூற்றுவன்- உடன்று-கோ
பித்து-மேல்வரினும்- தன்மேல்வரினும்-கூடி-மனமொத்து-எதிர்நிற்கும்-எதிர்நின்றுதாங்கும்- ஆற்றலதுவே -மனவலிமையையுடையதேயாம். எ-று.) (கருத்து) இயமன்கோபித்து மேலிட்டுவரினு மெதிர்நின்றுதாங்கும் வலிமையுடையதே படையாம் என்பதாம். ※ மிகப்பலர் மனமொத்தற்குக் காரணம் அரசன்மேலன்பு. உம்மை-சிறப்பும்மை. (ரு)

மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற..................... ※
மெனநான்கே யேமம்
படைக்கு..................................... ※

(இ-ள்.) மறம்-சௌரியமும்|-மானம்-மானமும்|- மாண்ட-மாட்சிமைப்பட்ட-வழிச்செலவு- (முன்வீரர்சென்ற) நல்வழியிலேசெல்லுதலும்|-தேற்றம்- (அரசனால்) நம்பப்படுதலும்|-என நான்கே-எனவிந்நான்குகுணமுமே- படைக்கு- சேனைக்கு ஏமம்-அரணும். எ-று.) (கருத்து) சௌரியமும், மானமும், நல்வழிச்செல்கையும், நம்

எ-ஆம்-அதி-படைமாட்சி. (கூாய
எ)

பிக்கையும், ஆகிய விந்நாற்குண்முஞ் சேனைக்கரிணுகும்என்பதாம். ❋ இவைகளால் முறையே பகைவராச் சீக்கிரத்திலேகொன்றுநிற்கையும், அரசனுக்குத்தாழ்வு வாராமற் காத்தலும், தோற்பவர்மேற் படையெறியாமை முதலியவும், அறைபோகாமையும், ஆகிய செய்கைகள்பெறப்பட்டன. இச்செய்கையோர்க்குப் பகைவர் நெருங்கமாட்டாராகலின் வேறரண் வேண்டாமென்பதாம். (௬)

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த .... ❋
போர்தாங்குந் தன்மை யறிந்து.......... ❋

(இ-ள்.) தானை-சேனையாவது-தலைவந்த-(பகைவராலேவகுக்கப்பட்டுத்) தன்மேல்வந்த-போர்-(படையின்) போரை-தாங்குந்தன்மை-விலக்கும்வகுப்பை-அறிந்து-அறிந்து (வகுத்துக்கொண்டு)-தார்-(அவரது) தூசிப்படையை-தாங்கி-(தன்மேல்வாராமல்) தடுத்து-செல்வது- (தான்அதன்மேலே) செல்வதேயாம். எ,று.) (கருத்து) தன்மேல்வந்தபோரை விலக்கும்வகுப்பையறிந்து பகைவர்தூசிப்படையைத் தடுத்துச்செல்வதே படையாம் என்பதாம். ❋ படைவகுப்பாவது-வியூகம்-அது எழுவகையுறுப்புக்களையுடையதாய் வகையால் நான்காய்- விரியால முப்பதாம். இவைகளின்பெயரும் இலக்கணங்களும் இங்கேசொன்னால் விரியும் அவையெல்லாம் வடநூல்களுட்கண்டுகொள்க. [இவைநான்குபாட்டாலும் படையதிலக்கணம் சொல்லப்பட்டது] (எ)

அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை........ ❋
படைத்தகையாற் பாடு பெறும்............ ❋

(இ-ள்.) தானை-சேனை|-அடற்றகையும்-(பகைமேலே தான்சென்று) போர்செய்யுஞ்சௌரியமும்-ஆற்றலும்-(அதுதன்மேல்வந்தால்) பொறுக்கும்வலிமையும- இல்லெனினும்-இல்லையாயினும்-படைத்தகையால்- தனது தோற்றப்பொலிவாலே- பாடு-பெருமையை}-பெறும்-அடையும். எ-று) (கருத்து) சேனையானது சௌரியமும் வலிமையுமில்லையாயினும் பொலிவினாலே பெருமையை யடையும் என்பதாம். இல்லெனினுமெனவே அவசியம் அவைகள் வேண்டுமென்பது பெறப்பட்டது. தோற்றப்பொலிவாவது- அலங்கரிக்கப்பட்ட தேர் யானை குதிரைகளுடனும் படாகை கொடி குடை பலவாத்தியம் காகளமுதலானவைகளுடனும் அணிந்து தோன்றும் அழகு பாடு-கண்டவளவிலே பகைவரஞ்சும் பெருமை. (அ)

[அ0]

(கா[illegible]) எஎ-ஆம்-அதி-படைமாட்சி.

சிறுமையுஞ் செல்லாத் துனியும்
வறுமையு ....*

மில்லாயின் வெல்லும் படை...... ... . *

(இ-ள்.) சிறுமை [illegible] தேய்ந்து) சிறிதாகலும்-செல்லாத்துனியும்- (மனத்தி [illegible] வெறுப்பும்- வறுமையும்- தரித்திரமும்-இல்லாயின் [illegible] யாயின்-படை-சேனையானது|-வெல்லும்-([illegible]) (கருத்து) சிறிதாகலும்வெறுப்பும் வறுமையும் [illegible] யானது பகையைவெல்லும்மென்பதாம் ❋ விட்டுப்போத [illegible] மையடைதலும், அரசன் பொருள் கொடாமையால் [illegible] ப்பு மகளிர் வெளவழிவாயின செய்தல் முதலான [illegible] வருவது, இவையுள்ளவிடத்து அவனிடத்து அன்பில்லாமல் உற் [illegible] போர்செய்யாமையின் இல்லாயின் வெல்லுமென்றார். (கூ)

நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை...... .... *
தலைமக்க ளில்வழி யில் .... *

(இ-ள்.) நிலைமக்கள்-(போரினிடத்து) நிலையையுடைய வீரரை}-சாலவுடைத்தெனினும்- மிகவுடையதாயினும்-தலைமக்கள்- (தனக்குத்) தலைவராகியவீரர்-இல்வழி-இல்லாவிடத்து-தானை-சேனை|-இல்-இல்லாது. எ,று.) (கருத்து) சேனையானது வீரரை மிகவுடைத்தாயினும் படைத்தலைவரில்லாவிடத்துப் போரினில்லாது என்பதாம் ❋ சேனாதிபதிகள் நிலையுடையவரலலாமல் போவாராயின் காண்போரில்லைப் போர்செய்யாமல் தானும்போமென்றற்கு-தலைமக்களில்வழியில்லென்றார் [இவைமூன்றுபாட்டாலும் முறையே படைத்தகைமையாலும், அரசன்கொடைத்தாழ்வுகளாலும், தலைவரில்லாமையாலும், தாழ்வுசொல்லப்பட்டது.]
(ய)

எஅ-ஆம்-அதி-படைச்செரு

o

அஃதாவது-அச்சேனையினது மறமிகுதியாம்.
அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

என்னைமுன் னில்லன்மின் றெவ்விர்
பலரொன்னை.......... *
முன்னின்று
கன்னின் றவர்............................*

எ-அ-ஆம்-அடி-படைச்செருக்கு.

(நா[illegible]யகம)

(இ-ள்.) தெவ்விர்-பகைவரே-என்-என்னுடைய—ஐமுன்-தலைவனெதிர்-நின்று-(போரேற்று) நின்று-கன்னின்றவர்-(அவன்வெஃபட்டுவீழ்ந்து) கல்லினிடத்தே நின்றவீரர்|- பலர்-பலராவர்-(நீரதனிடத்து நில்லாமல் உம்முடலிலே நிற்கையைவேண்டில்) -என்-என்னுடைய-ஐமுன்- தலைவனெதிர்- நில்லன்மின்- (போரேற்று) நில்லாதேயுங்கள். எ-று.) (கருத்து) பகைவரேயென்றலைவனொதிர்நின்றுவெல்லாது இறந்து கல்லாக நாட்டப்பட்டவர் பலராவர் நீங்களுயிரோடிருக்க விரும்பினால் என்தலைவர்முன் னில்லாதீர்கள் என்பதாம்.❋
கல்-போரில்வீரர் இறந்தவிடத்து அவருருவஞ்செய்து நடப்படுதல்
ஒருவீரன் தன்மறம் அரசன்மேல் வைத்துச் சொல்லியபடி. [இப்பாட்டு * நேடுமொழிவஞ்சி.] (க)

கான முயலெய்த வம்பினில் யானை.............................*

பிழைத்தவே லேந்த லினிது

....*

(இ-ள்.) கானம்-காட்டில் ஓடுகிற-முயல்-முசலை-எய்த- (தப்பாமல்)எய்த-அம்பினின்-அம்பை ஏந்துதலைப் பார்க்கிலும்-யானை- (வெளிநிலத்திலேநின்ற) யானையை} - (எறிந்து) -பிழைத்தவேல் -தப்பியவேலை-ஏந்தல்-தாங்குதல்|-இனிது-நன்று-. எ,று.) (கருத்து) முயலையெய்த அம்பை யேந்துதலைப்பார்க்கிலும் யானையையெட்டு தப்பியஅம்பை யேந்துதல் நல்லது என்பதாம். ❋ கானமுயலென்றதனுல்-வெளிநிலமென்பதும், பிழைத்தவே லென்றதனுல் - தப்பாமலென்பதும், முயற்குத்தக எய்தவென்றதனுல்-யானைக்குத்தக எறிதலும்,வருவிக்கப்பட்டன.—இதுபகையரசனது சேனையோடுசண்டைசெய்து அது தோற்றுப் பின்னிடக்கண்டு நாணிப்பின் ,அவ்வரசன்மேற் செல்லலுற்ற ஒருவீரனது சொல்லு. (உ)

பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா............*

ஊ ராண்மை மற்றத

னெஃகு.............................*

(இ-ள்') தறுகண்-(பகைவரிடத்தே முகங்கொடாமற் செய்கிற மறம்|-பேராண்மை-மிகுந்தவாண்மையாகும்.-ஒன்றுற்றக்கால்-(அவர்க்கு) ஒருதாழ்வுவந்ததாயின்- (அதுதீர்த்துக் கொள்ளுதற்பொருட்டு)-ஊராண்மை- (முகங்கொடுத்து) உபகாரியாந்தன்மை| - அதன்-அதற்கு-எஃகு-கூர்மையாகும்.-என்ப-என்று (நூலோர்|) சொல்லுவர். எ,று.) (கருத்து) பகைவரைவெல்லு டறமானது மிகுந்த

* நெடுமொழி வஞ்சியாவது - பகைவர்முன்னே தன்னுண்மை சொல்வது.

வாஸ்மையாகு மப்பகைவர்க்குத்
தாழ்வுவந்தகாலத் துதவுதல் கூர்
மையாகும் என்பதாம். ❋ மற்று-அசை.
ம் * தழிஞ்சி]

[இவை யிரண்டுபாட்டு

(௩)

கைவேல் களிற்றொடு போக்கி
வருபவன்....... .... *
மெய்வேல் பறியா நகும்.... ....
... *

(இ-ள்.) கைவேல்-(தன்) கைப்படையாகிய வேலை- களிற்றொடு-(தன்மேல்வந்த) யானையோடு—போக்கி-எறிந்துவிட்டு- வருபவன்-(வருகின்ற யானைக்கு வேல்தேடித்) திரிபவன்|-மெய்வேல்- தன்மார்பிலிருந்தவேலை-(கண்டு)-பறியா-பிடுங்கி-நகும்-மகிழ்வான். எ-று.) (கருத்து) கைவேலை யானைமே லெறிந்து வருபவன் தன்மெய் வேலைப்பிடுங்கி மகிழ்வான் என்பதாம். ❋ களிற்றொடுபோக்கல் - களிற்றினுயிரைக்கொண்டுபோம்படிவிடுதல்.—மகிழ்ச்சி-தேடிய தறு அடைதலால்.—இதனுள்-களிற்றையல்லது எறியானென்பதும்,கோபமிகுதியால் வேல் மார்பிலே புதைந்ததை அறிந்திலனென்பதும், பின்னும்போர்மேல் விருப்பினனென்பதும்,பெறப்பட்டன. [இது † நூழிலாட்டு.]
(௪)

விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி..... .. *
னொட்டன்றோ வன்க ணவர்க்கு............ ....*

(இ-ள்.) விழித்தகண்-(பகைவனைக்) கோபித்துப்பார்த்தகண்-வேல்கொண்டு-(அவர்) வேலைக்கொண்டு-எறிய-எறிய-அழித்து- (அதற்குப்பொறுமல் அப்பார்வையை) அழித்து-இமைப்பின்- இமைக்குமாயின்-(அவ்விமைத்தல்!)-வன்கணவர்க்கு-வீரர்க்கு- ஒட்டன்றோ-தோற்பல்லவா. எ-று.) (கருத்து)கோபித்துப்பார்த்தகண் வேல்கொண்டெறிய இமைக்குமாயின் தோற்பல்லவா என்பதாம். ❋ அக்கோபப்பார்வை யிமைத்தலும் போரினிடத்து இகழ்ச்சியென்றுநினைத்து அதுவும் செய்யாரென்பதாம். (ரு)

விழுப்புண் படாதநா ளெல்லாம்

வழுக்கினுள்............ ❋

வைக்குந்தன் னாளை

யெடுத்து........................ ❋

(இ-ள்.) (வீரனானவன்!)-தன்னாளை- தனக்குக்கழிந்ததினங்களை}-எடுத்து-எடுத்(தெண்ணி)-(அத்தினங்களுள்)-விழுப்புண்-பெருங்கா

❋ தழிஞ்சி தோற்றவர்மேலே ஆயுதஞ்செலுத்தாத மிகுமறம் சொல்வது.

† நாழிலாட்டு பகைவரோட மார்பிற்புதைந்துகிடந்த வாயுதம்பிடுங்கி எறிவது.

எஅ-ஆம்-அதி-படைச்செருக்கு.

(௬௨௧)

யங்கள்-படாதத்தா ளெல்லாம் - படாத தினங்களெல்லாம்}- வழுக்கி னுள்-பயன்படாது கழிந்ததினங்களுள் சேர்-ஸ்வீக்கும்-வைப்பான். எ-று.) (கருத்து) சுத்தவீரனானவன் போர்செய்யப்படாதநாளை வீணாளென்றெண்ணுவான் என்பதாம். ❋ விழுப்புண்-முகத்திலும், மார்பிலும், பட்டபுண். போர்பெற்றிருக்கவும் அதுபெறாத நாள்களோடுகூட்டுவனென்பதாம். [இவை மூன்றுபாட்டாலும் ஊறஞ்சாமை சொல்லப்பட்டது.] (௬)

சூழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்... .... ❋
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.......
...........................❋

(இ-ள்.) சுழலும்-(பூமியைச்) சூழ்ந்துநிற்கும்- இசை- புகழை}- வேண்டி-விரும்பி-வேண்டாவுயிரார் உயிர்வாழ்தலைவேண்டாதவீரர் -கழல்-வீரக்கழலை}- யாப்பு-கட்டுதல்|- காரிகைநீர்த்து அலங்காரகுணமுடைத்தாம். எ,று.) (கருத்து)புகழைவிரும்பி யுயிரைவிரும்பாதவர் வீரக்கழலைக்கட்டுத லவர்க்காபரணமாம் என்பதாம். ❋ பூமியைச்சூழுமெனவே அப்புகழின் பெருமை பெறப்பட்டது.—அப்படிப்பட்டவீரர் வானுலகமும் புகழும் எய்திலே ஆபரணமாவது அக்கழலை யென்பதாம்.

அடைவராகலால்

(எ)

உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன் ..
...........................❋
செறினுஞ்சீர் குன்ற விலர்............
...............❋

(இ-ள்.) உறின்-(போர்) பெறின்-உயிர் - (தம்)முயிர்ப்பொருட்டு-அஞ்சா-அஞ்சாமல் (அதன்மேற்செல்லும்) - மறவர்-வீரர்|—இறைவன்-(தம்) மரசன்-செறினும்-(அதுவேண்டாமென்று) கோபிக்கினும் - சீர்குன்றல் - அவ்வீரமிகுதிகுறைதல் - இலர் - இலராவர். எ,று.) (கருத்து) தம்முயிர்க்கஞ்சாது போர்செய்யும்வீரர் தம்மரசன்கோபிக்கினும் வீரங்குறையார் என்பதாம். ❋ வீரர்போர்பெற்றறியாமையால் அதுபெற்றால் அரசன்தடுப்பினும் நில்லாரென்பதாம். (அ)

இழைத்த திகவாமைச் சாவாரை யாரே.........................*
பிழைத்த தொறுக்கிற் பவர்...................................*

(இ-ள்.) இழைத்தது-(தாம்) சொல்லியசபதம்- இகவாமை- தப்பாமற்பொருட்டு-சாவாரை- (போய்ச்) சாகவல்லவீரரை-பிழைத்தது-(அது) தப்பியவிதம் (சொல்லி) -ஒறுக்கிற்பவர்-இகழ்தற்குரியவர்|—யார்-யாவர் எ,று.) (கருத்து) சபதப்படி போரிற்சாகும்வீர

[அக]

ரை யிகழ்பவர்யார் என்பதாம். ❋ இழைத்தல் - இன்னது செய்யேனாகில் இன்னதாகவெனத்தான் வகுத்தல். சொல்லியென்பது-வருவிக்கப்பட்டது. சபதமுடிக்கப்புகுந்து முன்னே இறந்தாலுந்தொலைவில்லாமையால் அது முடித்தவராவரெனச் சாதற்சிறப்புச்சொல்லியபடி. (௯)

புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா.........................*
டிரந்துகோட் டக்க துடைத்து.....................................*

(இ ள்.) (தமக்குச்செய்த நன்றிகளை நினைத்து)-புரந்தார்-ஆண்டவரசரது-கண்- கண்கள் - நீர்மல்க- நீர்பெருகும்படி — சாகிற்பின்-(போரிலே) சாகப்பெறின்-சாக்காடு-அச்சாவு|— இரந்து- இரந்தாயினும்-கோட்டக்கது-கொள்ளுந் தகுதியை}—உடைத்து-உடையது. எ,அ) (கருத்து) வீரர்கள் அரசர் கண்கள்நீர் ததும்பப் போரிவிறந்தால் அவ்விறத்தல் கொள்ளத்தக்கது என்பதாம். ❊ சுற்றத்தார்அழ இல்லிடத்து நோயினாலேசாவோர் பழவினைப்பயனை அடைதலால்-அப்போதை வினையால் வானுலகத்தை அடையும் சாவை- இரந்து கோட்டக்க துடைத்தென்றார். [இவை நான்குபாட்டாலும் உயிர்காவாமை சொல்லப்பட்டது.] (௰)

௭௯-ஆம்-அதி-நட்பு.

இனிப்படைபோல் அரசனுக்குத் தொழிலிடத்து உதவுவதாகிய நட்பை ஐந்ததிகாரத்தால் விதிமுகத்தாலும்,பன்னிரண்டதிகாரத்தால் எதிர்மறைமுகத்தாலும், சொல்லத்தொடங்கி விதிமுகவதிகாரமைந்தினுள்ளும் முதலிலே நட்புச்சொல்லுகின்றார். அஃதாவது இன்னதென்பதும் அதிகாரமுறைமையும் இதனுள் விளங்கும்.

செயற்கரிய யாவுள நட்பி

ன் அதுபோல்.....................*

விளைக்கரிய யாவுள காப்பு...........

.................*

(இ-ள்.) நட்பின்-நட்புப்போல்-செயற்கரிய-சம்பாதித்துக்கொள்ளுதற்கு-அரியபொருள்கள்-யா-எவைகள்-உள-இருக்கின்றன.

(சம்பாதித்துக்கொண்டால்)-அதுபோல்-வினைக்கரிய-(பகைவர்

எண்ணம்-அதி-நட்பு.

(௫௨௧)

செய்தற்) தொழிலுக்குப் (டிருதற்கு) அரிய-காப்பு-காவல்-எவை-
யா-எவைகள்|-உள-இருக்கின்றன. எ-று.) (கருத்து) நட்பைப்போல
ச்சம்பாதித்தற் கரியபொருள்வை யிருக்கின்றன என்பதாம். ☼
நட்புச்செய்தற்கு ஆவாரைப்பெறுதலும், பெற்றால் செய்யும்உபா
யமும், செய்தால் வேறுபடாமல் நிற்றலும். முதலானவை அருமை
யாகலான்- நட்புப்போல் செயற்கரியன இல்லையென்றும், செய்தால்
பகைவர் அஞ்சிப் போர்தொடங்கா ராதலால்-அதுபோல் போர்வா
ராமற் காத்தற்கு அரியகாவலில்லையென்றும், சொல்லினார்.—நட்பு
இயற்கை, செயற்கை என இருவகைப்படும். அவைகளில் இயற்கை
நட்பு - பிறப்புமுறையா லாகியதும், தேயமுறையா லாகியதும்,
என இருவகைப்படும். அவைகளுள் முன்னையது சுற்றமாகலால்சுற்ற
ந்தழாலில் அடங்கிற்று. மற்றது பகையிடையிட்ட தேயத்ததாகலாற்
துணைவலியெண்|வலியறிதலுள் அடங்கிற்று. [இனிஇவ்வதிகாரத்திலே
சொல்லப்படுவது-முன்செய்த உதவிபெற்றுவருவதாகியசெயற்கை
நட்பேயாகலால் அதன் சிறப்பு இதனால் சொல்லப்பட்டது.] (க)

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்.........................*
பின்னீர பேதையார் நட்பு.................................*

(இ-ள்.) நீரவர்-அறிவுடையவரது-கேண்மை-
நட்புக்கள்| -பிறை -பிறைபோல்-நிறைநீர -
(நாடோறும்) நிறையுந்தன்மையினவாம்.-
பேதையார்- அறிவில்லாதவரது-நட்பு-
நட்புக்கள்|-- மதி- (நிறைந்த

ு)சந்திரன்போல் - பின்னீர - பின்னேநாடோறுங்குறையுந்தன்மை யுடையவாம். எ-று.) (கருத்து) அறிவுடையோர் நட்பு இளம்பிறைபோல் வளரும். அறிவில்லார்நட்பு நிறைசந்திரன்போல குறையும் என்பதாம். ❁ இனிமைபற்றி நீரவென்றார். அறிவுடையவர் தங்களிலே செய்தநட்பு முன் சுருங்கிப் பின் பெருகற்கும், அறிவில்லாதவர் தங்களிலே செய்தநட்பு முன்பெருகிப் பின் சுருங்கற்கும், காரணம் - தம்முள் முன்னறியாமையும் பின்னறிதலுமாம். (௨)

நவிறொறு நூனயம்
போலும் பயிறொறும்..............*
பண்புடை யாளர் தொடர்பு.

.............................*

(இ-ள்.) பண்புடையாளர் - நற்குணமுடையமக்கள் - தொடர்பு - (தங்களிலேசெய்த) நட்பு - பயிறொறும் - பழகுந்தோறும் - (அவருக்கு இன்பஞ்செய்தல்) - நூல் - நூற்பொருள் - நவிறொறும் - கற்குந்தோறும் - நயம்போலும் (கற்பவர்க்கு) இன்பஞ்செய்தல்போலும். எ-று.) (கருத்து) நற்குணமுடையவர் நட்பு [illegible] (௩)

௭௰௯-ஆம்-அதி-நட்பு.

பயன்கொடுத்தல் போலாம் என்பதாம். ❁ இரண்டிலும் ஒருபோதைக்கு ஒருபோது மிகுமென்பதாம். [இவை யிரண்டுபாட்டாலும் அச்சிறப்புக்கு ஏதுசொல்லப்பட்டது.] (௫)

நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக் கண்..................*
மேற்சென் றிடித்தற் பொருட்டு..............................*

(இ-ள்.) நட்டல்- (ஒருவரோடு ஒருவர்) நட்புச்செய்தல்—(நகைக செய்தற்கு) ஏற்றன வசொல்லி - நகுதற்பொருட்டு - நகைசெய்தற் பொருட்டு- அன்று-அல்ல.—மிகுதிக்கண் - (அவர்க்கு) வேண்டாத செய்கை (உண்டானவிடத்து)-மேற்சென்று-முற்பட்டு- இடித்தற் பொருட்டு-கண்டித்துப் புத்திசொல்லுதற்பொருட்டு.எ,று.) (கருத்து) நகைக்கும்பொருட்டல்ல சிநேகஞ்செய்தல் புத்திசொல்லும் பொருட்டே என்பதாம். ❋ பழியும் பாவமுந் தருஞ்செய்கை - துன்பமேதருதல்பற்றி வேண்டப்படுவ தல்லாமையால்- அதனைமிகுதி யென்றும், அது செய்தற்குமுன்னே திருப்பவேண்டுதலால்- மேற் சென்றென்றும், இனியசொல்லுக்குத் திருப்பாமையால்- இடித்தற் பொருட்டென்றும், சொல்லினர். [இதனால் நட்பின்பயன் சொல்லப்பட்டது.]
(௪)

புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா..................*
னட்பாங் கிழமை தரும்..................................*

(இ-ள்.) (ஒருவனோடு ஒருவன் நட்பாகுதற்கு)- புணர்ச்சி- ஓரிடத்திலிருத்தலும்-பழகுதல்- பலதரங்கண்டுபேசலும்-வேண்டா-வேண்டுவதில்லை-உணர்ச்சிதான்- (இருவர்க்கும்) ஒத்த அறிவுதானே - நட்பாம்-சிநேகமாம்-கிழமை-உரிமையை}-தரும்-கொடுக்கும். எ,று.) (கருத்து) இருவர்க்கு மொத்த வறிவே சிநேகந்தரும் என்பதாம். ❋ இவை இல்லையாயினும் ஒருவரை யொருவர் சமமாகவறிதலே உடலுயிர் நீங்குதற்குரிய நட்பை உண்டாக்கு மென்பதாம். [நட்பிற்கு-புணர்ச்சி- பழகுதல்- உணர்ச்சியொத்தல் - என்கிற காரணமூன்றுள்ளும் பின்னது சிறப்புடையதென்பது இதனால் சொல்லப்பட்டது.]
(௫)

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்..........................*
தகநக நட்பது நட்பு...*

(இ-ள்.) முகநக-(கண்டவிடத்து) முகமாத்திரமே மலரும்வகை-நட்பது-சிநேகிப்பது|-நட்பன்று-சிநேகமன்று.—நெஞ்சத்தக

எகூ-ஆம்-அதி-நட்பு.

(கூ௨௫)

நக- (அன்பால்) உள்ளமும்மலர-நட்பது-சிநேகிப்பதே|-நட்பு-சி
னேகமாம். எ,-று.) (கருத்து) முகமலர்ந்து சிநேகிப்பது சிநேகமல்ல, அகமலர்ந்து சிநேகிப்பதே சிநேகம் என்பதாம். ❀ நெஞ்சத்தகமுமென்னும் மெச்சவும்மை தொக்குநின்றது. அதனால் இரண்டும் ஒருசேர மலரவேண்டுமென்பது பெற்றும். (சு)

அழிவினவை நீக்கி யாறுய்த் தழிவின்க……………………*
ணல்ல லுழப்பதா நட்பு…………………………*

(இ-ள்.) நட்பு- (ஒருவனுக்கு) நட்பாவது|-அழிவின்-அழிவைத்தருகிற-அவை- தீயவழியை}—நீக்கி-விலக்கி-ஆறு-நல்வழியை}—உய்த்து-நோக்கி-அழிவின்கண்-(ஊழினாலே)கேடுவந்தவிடத்து-அல்லல்-அத்துன்பத்தை}-உழப்பதாம்-உடனிருந்து அனுபவிப்பதே எ,-று.) (கருத்து) நட்பாவது தீயவழியைநீக்கி நல்லவழியைநோக்கித்துன்பத்தை யனுபவிப்பதாம் எனபதாம். ❀ ஆறெனை வருகின்றமையால் அழிவினவை தீயவழியெனப்பட்டது. (எ)

உடுக்கை யிழந்தவன் கைபோல
வாங்கே……… ….!…… *

யிடுக்க ண்

களைவதா நட்பு.............................. *

(இ-ள்.) நட்பு-நட்

பாவது-உடுக்கையிழந்தவன்- (சபையினிடத்து) ஆடைகுலைந்தவனுக்கு- கைபோல-கைசென் றுதவுதல்போல-(சிநேகிக்கப்பட்டவனுக்கு)-ஆங்கே-அப்பொழுதே-இடுக்கண்-துன்பத்தை}- களைவதாம்- நீக்குவதாம். எ-று.) (கருத்து) ஆடைகுலைந்தவன்கைபோலத் துன்பத்தை நீக்குவதே நட்பாம் என்பதாம். ❊ ஆடைகுலைந்தவனுக்குக் கை எப்படியோ அப்படியே ஆபத்தை அடைந்தவனுக்கு நட்பாளன் மனத்தினும் முற்பட்டுஉதவிசெய்து துன்பம்ஒழிப்பானென்பதாம்.நட்பினன்செயல் நட்பில்ஏற்றப்பட்டது

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி ...... *
யொல்லும்வா யூன்று நிலை.................... *

(இ-ள்.) நட்பிற்கு-சிநேகத்திற்கு-வீற்றிருக்கை-அரசிருக்கை-யாதெனின்-யாதென்றால்-(அது) கொட்பின்றி-(எந்நாளும்) வேறுபடாமல்-ஒல்லும்வாய்-கூடுமிடத்தெல்லாம்-ஊன்றுநிலை-(அறம்பொருள்களிலே தளராமல்) தாங்குந்திண்மை எ-று.) (கருத்து) நட்பிற்கரசிருக்கை யாதென்றால் எந்நாளுந் தாங்குந் திண்மையாம் என்பதாம். ❊ ஒருநாளும் வேறுபடாமல் கூடுமிடத்தெல்லாம் மறுமை

[அக]

(கூஉகா) எகூ-ஆம்-அதி-நட்பு.

யிம்மைகளுக்கு உறுதியாகிய அறம்பொருள்களிலே தளர்ந்தவிடத்தும் அத்தளர்ச்சிநீக்கி நிறுத்துதற் ருமேல் ஒருசெயலும் இல்லாமையால் அதனை நட்பிற்கு முடித்த எல்லை என்றார். (கூ)

இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று ....
புனையினும் புல்லென்னு நட்பு ....

*

*

(இ-ள்.) இவர்-இவர்|-எமக்கு-எங்களுக்கு-இனையர்- இவ்வளவன்பினர்.-யாம்|-நாங்கள்-இன்னம்-(இவர்க்கு) இவ்வளவன்பினேம்.- என்று என்று-புனையினும்-(ஒருவரை) ஒருவர் சிறப்பிக்கினும்- நட்பு-சிநேகம்- புல்லெனும்- சிறிதாய்த்தோன்றும். எ,று.) (கருத்து) இவரெங்களுக் கிவ்வள வன்பினர் நாங்களிவர்க்கிவ்வள வன்பினரென்று சிறப்பிக்கிற் சிநேகஞ்சிறிதாம் என்பதாம். * தாம் அவர் என்கிற பேதமில்லா திருந்தும் சிறப்பித்துச் சொல்லில் பேதம் உண்டாகலால்-புல்லெனுமென்றார். [இவைஐந்துபாட்டாலும் நட்பினது இலக்கணம் சொல்லப்பட்டது.] (ம)

அய-ஆ ய்-அதி-ந ட்பாராய்தல்.

அஃதாவது- முன் சொல்லப்பட்ட இலக்கணமுடையவரை ஆராய்ந்தறிந்தே சிநேகிக்க வேண்டுதலால் அவரை ஆராயுந்திறமும்; அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

நாடாது நட்டலிற் கேடில்லை நட்பின் ....
வீடில்லை நட்பாள் பவர்க்கு ... .

*

*

(இ-ள்.) நட்பாள்பவர்க்கு- நட்பைவிரும்பி அதனிடத்தே நிற்பவர்க்கு-நட்டபின்- (ஒருவனோடு) நட்புச்செய்தபின்- வீடு - (அவனை) விடுதல்-இல்லை-உண்டாகாது.-(ஆதலால்)-நாடாது-ஆராயாமல்-நட்டலின்-சிநேகித்தல்போல்-கேடு-கேடுதருவது-இல்லை-(வேறே) இல்லை. எ,று.) (கருத்து) சிநேகிப்பவர்க்குச் சிநேகித்தபின் சிநேகத்தைவிடுதலில்லை.ஆராயாமல்சிநேகித்தல்போற்கேட்டைத்தருவதொன்றிலை என்பதாம். ※ ஆராய்தல்- குணநன்மை செயற்கை நன்மைகளை-கேடுதருவதைக் கேடெனலால் ஆகுபெயர்.—சிநேகித்தால்-தாம் அவனொன்றும் வேற்றுமை இல்லாமையால்- வீடில்லை யென்

அய-ஆம்-அதி-நட்பாராய்தல்.

(௲௨௱)

றும் அவ்வேற்றுமையால் அவனிடத்துப் பழிபாவங்கள், தம்மவையாகலால் இருமையும் கெடுவவொன்பது நோக்கி- நாடாது நட்டலிற் கேடில்லை யென்றும், சொல்லினர். (க)

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை.*
தான்சாந் துயரந் தரும் ....*

(இ-ள்) (குணமுஞ்செய்கையும் நல்லனென்பதும் அல்லனென்பதும்)-ஆய்ந்து-(பலகால்) ஆராய்ந்தும்-ஆய்ந்து-பலவழியால்-ஆராய்ந்தும்-கேண்மை-(ஒருவனோடு) நட்பை}- கொள்ளாதான்-கொள்ளாதவன்|-கடைமுறை- முடிவில்-தான்-தான்-சாம்-சாவதற்கு எதுவாகிய-துயரம்-துன்பத்தை}-தரும்-(தானே) விளைத்துக்கொள்ளுவான். எ,று.) (கருத்து) ஆராய்ந்துகொள்ளாதவன் சிநேகஞ் சாவதற்கேதுவான துன்பந்தரும் என்பதாம். ❋ தீயகுணமும் தீயசெயலுமுடையவனோடு நட்புக்கொள்ளின் அவனுக்குவரும் பகைமையெல்லாம் தனக்கும்வந்து பின் அவைகளால் இறந்துவிடுவனென்பதாம். [இவையிரண்டுபாட்டாலும் ஆராயாத விடத்துப்படும் இழுக்குச்சொல்லப்பட்டது.] (௨)

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா.................. ❋
வினனு மறிந்தியாக்க நட்பு.................................. ❋

(இ-ள்.) குணனும்- (ஒருவனது) குணத்தையும்- குடிமையும்-குடிப்பிறப்பையும்-குற்றமும்-குற்றத்தையும்-குன்றாவினனும்-குறைவற்ற சுற்றத்தையும்- அறிந்து-(ஆராய்ந்) தறிந்து-நட்பு- சிநேகம்-யாக்க-(அவனோடு) செயக்கடவன். எ,று.) (கருத்து) குணத்தையுங் குடிப்பிறப்பையுங் குற்றத்தையுஞ் சுற்றத்தையு மறிந்து நட்புச்செய்யக்கடவன் என்பதாம். ❋ குற்றமில்லாதவர் உலகத்திலே இல்லாமையால் பொறுக்கத்தக்க குற்றமுடையரா யிருந்தால் அவர் நட்பு விடக்கூடாதென்பதற்கு- குற்றமுமென்றும், சுற்றத்தாரோடு கட்டுண்டிருப்பவர் நட்பாளரோடும் கட்டுண்டுவருதலால் - குன்றாவினனுமென்றும், விடப்பட்டால்- தங்குறையா மென்பதற்கு- அறிந்தியாக்கவென்றும், சொல்லினார். (௩)

குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்.......................... ❋
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.................................. ❋

(இ-ள்.) குடிப்பிறந்து - உயர்ந்தகுடியிற்பிறந்து- தன்கண் - தன்

விடத்து-பழி (உலகர்) சொல்லும்பழிக்கு- நாணுவானை- அஞ்சுவானை-கொடுத்தும்- (சில) கொடுத்தாயினும் - நட்புக்கொளல்வேண்டும்-சிநேகங்கொள்ளவேண்டும். எ-று.) (கருத்து) உயர்குலத்திற்பிறந்து பழிக்கஞ்சுபவனைப் பொருள்கொடுத்துஞ் சிநேகங் கொள்ளக்கடவன் என்பதாம். ❋ குடிப்பிறப்பால் தான் பிழைசெய்யாமையும், பழிக்கு அஞ்சலால் பிழைபொறுத்தலும், பெற்றும். இவையிரண்டுமுடையவனும் பெறுதல் அருமையாதலால் அவனட்பை விலைகொடுத்தும் கொள்கவென்பதாம். (௪)

அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய..........................❋
வல்லார்நட் பாய்ந்து கொளல்.... .... ❋

(இ-ள்.) அல்லது- (தாம்) உலகநடையல்லாததை (செய்ய நினைக்கின்)-அழச்சொல்லி- அழும்வகைசொல்லி (விலக்கியும்)- (செய்தக்கால்)-இடித்து-(பின்னும் செய்யாவகை) நெருக்கியும் - வழக்கு-அவ்வுலகநடையைச் (செய்யாவிடத்து)- அறியவல்லார் - செய்விக்கவும்-வல்லவரை- ஆய்ந்து-ஆராய்ந்து-நட்பு-சிநேகம்-கொளல்-கொள்ளக்கடவர். எ-று) (கருத்து) ஒருவன் பாவங்களைச்செய்ய நினைத்தா லழும்படிசொல்லி விலக்கியும் பாவங்களைச் செய்தால் செய்யாதிருக்க நெருக்கியும் உலகநடைசெய்விக்க வல்லவரைச் சிநேகிக்கக்கடவர் என்பதாம். ❋ அழச்சொல்லி இடித்து எனவந்த பரிகாரத்

தொழில்களுக்கு ஏற்ற குற்றத்தொழில்கள் வருவிக்கப்பட்டன. வழக்கு-உலகத்தார் ஆதிதொடங்கிச் செய்துவந்தசெயல் - தம்மோடுசினேகித்தவரும் அறியும்வகை அறிதல் அரிதாகலால்- அறியவல்லாரென்றார். (கு)

கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை .... *
நீட்டி யளப்பதோர் கோல்......... .... *

(இ-ள்.) (ஒருவனுக்குக்கேடென்பது)-கிளைஞரை- சுற்றத்தாரது நட்பாகிய (நிலங்களை)- நீட்டியளப்பது- குறையாமல் அளப்பதாகிய-ஓர்கோல்-ஒருகோலாம்.—(ஆகலால்)- கேட்டினும்- அக்கேட்டினிடத்தும்-ஒருறுதி-(அவராலேபெறப்படும்) ஒருநல்லறிவு|- உண்டு உண்டாகும். எ,று.) (கருத்து) கேட்டினிடத்துஞ், சிநேகராற் பெறப்படு நல்லறிவுண்டாம் என்பதாம். * தமது சினேகத்தி னெல்லைசுருக்கியிருக்கவும் செல்வக்காலத்திலே புறத்து வெளிப்படாதில் வந்தவர் பின் கேடெய்தவிடத்துச் செயல் வேறுபடுதலால் அக்கேட்

அய்-ஆம்-அதி-நட்பாராய்தல். (ருஉசு)

டால் சினேகத்தை அளவு செய்யலா மென்பதுபற்றி - கேட்டினைக் கோலாக்கியும், அதனால் அளந்தறிந்தால் அவரையேகொள்ளுதலால் அவ்வறிவை உறுதியென்றும், சொல்லினர். (இஃது ஏகதேசவுருவகம்) [இவைநான்குபாட்டாலும் ஆராயும் விதமும், ஆராய்ந்தால் சினேகிக்கப்படுவார் இவரென்பதும், சொல்லப்பட்டன.] (சு)

ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்...... .... *
கேண்மை யொரீஇ விடல் ....

....❋

(இ-ள்.) ஒருவற்கு-ஒருவனுக்கு- ஊதியமென்பது - பேறென்று சொல்லப்படுவது|— பேதையார்- அறிவிலாதவரது-கேண்மை-நட்பை-ஒரீஇ-ஒழிந்து-விடல்- (ஆவனா) விடுதல். எ,று.) (கருத்து) ஒருவனுக்கிலாபமென்று சொல்லப்படுவது அறிவில்லார்சிநேகத்தை விடுதல் என்பதாம் ❋ நட்பொழிந்தாலும் விட்டு நீங்காத விடத்துத்தீங்குவருதலால்- விடலென்றும்,நீங்கியவிடத்துத் தீங்கொழிதலேயல்லாமல் இருமை யின்பங்களுக்கும் உரிமைபெறுதலால் - அதனை ஊதியமென்றும், சொல்லினர். (எ)

உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க

.........., ... ❋

வல்லற்க

ளாற்றறுப்பார் நட்பு................ ....❋

(இ-ள்.) உள்ளம்- (தம்) மனவெழுச்சி- சிறுகுவ - சுருங்குதற்குக் காரணமாகிய தொழில்களை-உள்ளற்க-(செய்ய) நினையாதிருக்கக்கடவர்.—(அதுபோல்)-அல்லற்கண்-(தமக்கொரு).துன்பம்வந்தவிடத்து-ஆற்றறுப்பார்-கைவிடுவோரது-நட்பு-சிநேகத்தை-கொள்ளற்க-கொள்ளாதிருக்கக்கடவர். எ,று.) (கருத்து) மனந்தளருந்தொழிலைச்செய்ய நினையாதிருக்கக்கடவர். துன்பத்திற் கைவிடுவோர் நட்பைக்கொள்ளா திருக்கக்கடவர் என்பதாம் ❋ அத்தொழில்களாவன-தம்மின்வலியவரோடு தொடங்கியவையும், பயனில்லாதவையும் ஆம்.—முன்னெல்லாம் வலியாவார்போலே நடத்தலால்- ஆற்றறுப்பாரென்றார். ஆற்றறுத்தல்-வலியறுத்தல். (எடுத்துக்காட்டுவமை.) கொண்டால் அழிந்தே விடுவனென்பதாம். (அ)

கொடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை ....❋

புள்ளினு முள்ளஞ் சுடும்............... .

. ... ❋

(இ-ள்.) படுங்காலை-(ஒருவன்) கெடுங்காலத்து-கைவிடுவார்-(அவனைவிட்டு) நீங்குவார்-கேண்மை-(முன் அவனோடுசெய்த) நட்பா [அது-]

(கூகூய) ௮௰-ஆம்-அதி-நட்பாராய்தல்.

னது-அடுங்காலை-(கூற்றுவன்) கொல்லுங்காலத்து-உள்ளினும்-(ஒருவன்) நினைக்கினும்-உள்ளம்-(அந்நினைத்த)உள்ளத்தை}-சுடும்-சுட்டுவிடும். எ,று.) (கருத்து) கெடுங்காலத்துக் கைவிடுவோர் நட்பானது இயமன் கொல்லுங்காலத்து நினைக்கினுமுள்ளத்தைச்சுடும் என்பதாம். ❋ நினைத்தவளவிலே சம்பந்தமில்லாத பிறனுக்கும் கூற்றுவனிலும் கொடியதாமென்று- கைவிட எண்ணிச்செய்த நட்பின் கொடுமை சொல்லியபடி. [இவைமூன்றுபாட்டாலும் ஆராய்ந்தால் சினேகிக்கப்படாதவர் இவரென்பது சொல்லப்பட்டது.] (கூ)

மருவுகமாசற்றார் கே ண்மையொன்

றீத்து........ ....❋

மொருவுக வொப்பிலார்

நட்பு............................ ....❋

(இ-ள்.) மாசற்றார்-(உலகோடொத்துக்) குற்றமற்றவரது-கேண்மை-நட்டையே}-மருவுக-பழகக்கடவன்.—ஒப்பிலார்-(உலகத்தோடு) ஒத்தலில்லாதவரது-நட்பு-நட்பை}-(ஆராயாதுகொண்டாலும்)—ஒன்று-(அவருக்குவேண்டிய) ஒன்றை-ஈந்தும்-கொடுத்தாயினும்-ஒருவுக-விடக்கடவன். எ,று.) (கருத்து) குற்றமற்றவர் சிநேகத்தைக்கொள்ளக்கடவன் ஒப்பில்லார் சிநேகத்தைப் பொருள் கொடுத்தாகிலும் விடக்கடவன் என்பதாம். ❁ உலகோடொத்தவர் நட்பு இருமையின்பமும் தருதலால் மருவுகவென்றும், அதனோடு மாறாயினவர் நட்புத்துன்பமே தருதலால் அதைவிலைகொடுத்தாயினும் விடுகவென்றும், சொல்லினர். [இதனால் சினேகிக்கப்படுவாரும்படாரும் ஆகிய அவ்விருமையும் தொகுத்துச்சொல்லப்பட்டது.] (ம)

அ
க-ஆம்-அதி-பழைமை.

அஃதாவது- நட்பினரது பழையராந் தன்மைபற்றி அவர்செய்த பிழைகளைப் பொறுத்தல் ஆராய்ந்து சினேகிக்கப் பட்டாரா யினும் பொறுக்கப்படும் குற்றமுடையராகலானும் ஊழ்வகையாலும் நட்புக்கொள்ளப்பட்டவரிடத்துப் பிழையுளதாமென்பது அறிவித்தற்கு இது நட்பாராய்தலின்பின் வைக்கப்பட்டது.

பழைமை யெனப்படுவ தியாதெனின்
யாதும்……………*
கிழமை யைக்

கீழ்ந்திடா நட்பு...........................*

அக-ஆம்-அதி-பழைமை.

(௮௱௧)

(இ-ள்) பழைமையெனப்படுவது-பழைமையென்றுசொல்லப்படுவது-யாதெனின் - யாதென்றால்- (அது) கிழமையை - (பழைமையோர்) உரிமையாலே செய்தவைகளை- யாதும்-சிறிதாயினும்- கீழ்ந்திடா - சிதைக்காமல் (அவைகளுக்கு உடன்படுவதாகிய) — நட்பு- சிநேகம். எ-று.) (கருத்து) பழைமையென்று சொல்லப்படுவதியாதென்றால் பழைமையோர் செய்தவற்றைச் சிதையாமற் கொள்ளு நட்பாம் என்பதாம். ❊ கிழமை ஆகுபெயர். பின் கெழுதகைமையெனவருவதுமது— உரிமையாற்செய்தவையாவன-கருமஞ்செய்யும்போது கேளாதுசெய்தல்- கெடுப்வகைசெய்தல். தமக்குவேண்டுமவைகளைத் தாமே கொள்ளுதல். பணிவச்சங்களில்லாமை. இவைமுதலானவை [இதனாலே பழைமையாவது காலஞ்சென்றதன்று இப்படிப்பட்ட நட்பென்பது சொல்லப்பட்டது.] (௧)

நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்.............*
குட்பாதல் சான்றோர் கடன்...........................*

(இ-ள்) நட்பிற்கு- சிநேகத்திற்கு-உறுப்பு- அவயவமாவன-கெழுதகைமை- (நட்பினர்) உரிமையாற்செய்பவையாம்.—(ஆதலால்) அதற்கு-அவ்வுரிமைக்கு-உட்பாதல்-இனிமையராதல் - சான்றோர்-நிறைந்தோர்க்கு-கடன்- முறைமை எ-று.) (கருத்து) சிநேகத்திற்கவயவமாவன, சிநேகருரிமையாற் செய்தவையாம் என்பதாம். ❊ மற்று-அசை. வேறல்லாமைதோன்ற உறுப்பென்றார். அவயவமாகுதலறிந்தே இனியராவரென்பதுதோன்ற- சான்றோர்மேல்வைத்தார்.

பழகிய நட்பெவன் செய்யுங்

கெழுதகைமை.... ....*

செய்தாங் கமையாக் கடை..

.... *

(இ-ள்.) கெழுதகைமை-(நட்பினர்) உரிமையினாலேசெய்தவைக ளுக்கு-செய்தாங்கு-(தாம்) செய்தவைபோல் - அமையாக்கடை-உ டன்படாராயின்-பழகிய- (அவரோடு) பழையதாய்வந்த- நட்பு|-சி நேகமானது-எவன்-என்னபயனை}-செய்யும்-செய்யும். எ-று.) (கரு த்து) நட்பினர் செய்தவைகளுக்குத் தாஞ்செய்யாவிடத்து நட்பெ ன்னபயன்செய்யும் என்பதாம். * அப்படி உடன்படுதலாவது-தா மும் அவரிடத்து உரிமையால் உடன்படுதல். [இவை யிரண்டுபாட் டாலும்பழைமையால்வரும்உரிமையது சிறப்புச்சொல்லப்பட்டது

விழைதகையான் வேண்டி யிருப்பர்

கெழுதகையாற் ...*

கேளாது நட்டார்

செயின்.................. ....* (௱௱௨)

௮௧-ஆம்-அதி-பழைமை.

(இ-ள்.) நட்டார்-நட்பினர்-செழுதகையால்-உரிமையால்-கேளாது-தம் மைக் கேளாது-செயின்-(தங்கருமத்தைச்) செய்தாராயின்-விழைதகையான்-(அச்செயலது) விரும்பப்படுந் தன்மைபற்றி—(அறிவுடையோர்)-வேண்டியிருப்பர்-(அதனை) விரும்புவர். எ-று.) (கருத்து) நட்பாளர் உரிமையாற் கேளாதுசெய்தால் அறிவுடையோர் அதனை விரும்புவர் என்பதாம். ❋ ஒருவர்க்குத் தங்கருமப் தாம் அறியாமல் முடிந்திருக்கையைக் காட்டிலும் நன்மை இல்லாமையால் அச்செயல் விரும்பத்தக்கதாயிற்று. அதனை அப்படியறிந்து விரும்புதல் அறிவுடையார்க்கல்லது இல்லாமையால் அவர்மேல்வைத்துச் சொல்லப்பட்டது. [இதனால் கேளாது செய்தவிடத்து அதனைவிரும்புகவென்பது சொல்லப்பட்டது.] (௪)

பேதைமை யொன்றோ

பெருங்கிழமை யென் றுணர்க..*
நோதக்க நட்டார்
செயின்...........................*

(இ-ள்.) நோதக்க- (தாம்) வெறுக்கத்தக்கவைகளை}- நட்டார்-சிநேகித்தவர்-செயின்-செய்தால்-(அதற்குக்காரணம்|)-பேதைமையொன்றோ-அறியாமையொன்றோ-பெருங்கிழமை-மிகுந்தஉரிமையுமாம்.— என்று- என்று-உணர்க- அறியக்கடவர்· எ,று.) (கருத்து) வெறுக்கத்தக்கவைகளைச் சிநேகர்செய்தா லதுமிகுந்த வுரிமையாம் என்பதாம். ❋ செயினெனவே தம்மியல்பிலே செய்யாமைபெற்றும். இதுவருகின்றவைக்குள்ளும் ஒக்கும். இழவூழால்வரும்பேதைமை-யார்க்கும் உண்டாகலால் தமக்கு எதங்கொண்டாரென்றுவது ஊழ்வகையால் எம்மால் வரக்கடவது ஒற்றுமை மிகுதிபற்றி அவரால் வந்ததென்றுவது, கொள்வதல்லது அன்பிலாமையென்றுகொளப்படாதென்பதாம். [கெடும் வகைசெய்யின் அதற்குக் காரணம் இதனால் சொல்லப்பட்டது.]

(ரு)

எல்லைக்க
ணின்றார் துறவார் தொலைவிடத்துந்............*
தொல்லைக்க ணின்றார் தொடர்பு.
.................................*

(இ-ள்.) எல்லைக்கணின்றார்- (நட்பின்) வரம்பிலேநின்றவர்|- தொல்லைக்கணின்றார்-(தம்மோடு) பழைமையில் வேறுபடாது நின்றவ

ர-து—தொடர்பு-நட் பைக—தொலைவிடத்தும்-(அவராலே) தொ
லைவுவந்தவிடத்தும்—நீங்கார்-விடார். எ, று
.) (கருத்து)

அக்-ஆம்-அதி-பழைமை.

(௩௩௩)

நட்பிலேநின்றவர் பழைமையோர் சிநேகத்தைவிடார் என்பதாம்.
❋ பழைமையில் வேறுபடாமையாவது- உரிமை யொழியாமையா
ம்.—தொலைவு-பொருட்கேடு- போர்க்கேடு. (௬)

அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்.................❋
வழிவந்த கேண்மை யவர்..............................❋

(இ-ள்.) அன்பின்-அன்புடனே வழிவந்த- பழையதாய்வந்த-கே
ண்மையவர்-நட்பினையுடையவர்|—(நட்பினர்) -அழிவந்த -அழிவுவ
ந்தவைகளை-செய்யினும்-செய்தாலும்-அன்பறார்-(அவரிடத்தே)அ
ன்புநீங்கார். எ,று.) (கருத்து) பழைமையான நட்பினை யுடையவர்
பிறர் அழிவானவற்றைச் செய்தாலு மன்பைவிட்டகலார் என்பதா
ம். ❋ அழிவு-மூன்சொல்லியகேடுகள். [இவையிரண்டுபாட்டாலும்
கேடுசெய்தவிடத்தும் விடுந்தன்மையதன்றென்பது சொல்லப்ப
ட்டது.]

(எ)

கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை

வல்லார்க்கு......❋

நாளிழுக்க நட்டார்

செயின்.........................*

(இ-ள்.) கேள்-நட்பினாது-இழுக்கம்-பிழையை}-கேளா-(பிறர் சொல்லினும்) கேளாத-கெழுதகைமை வல்லார்க்கு-உரிமையறிடவல்லவர்க்கு- நட்டார்-அந்நட்பினர்|-இழுக்கம்-பிழையை} -செயின் செய்தால்-(அது)-நாள்- (பயன்பட்ட) நாளாம். எ,று.) (கருத்து) நட்பாளர் பிழையைக் கேளாதவர்க்கு நட்பாளர் பிழையைச்செய்தலதுபயன்பட்ட நாளாம் என்பதாம். ❋ பிழையாவன- முன்சொல்லிய-பணியாமை- அஞ்சாமை-தற்பொருள்வெளவல்-முதலானவை. கேட்டல்-உட்கொள்ளுதல். செய்தவிடத்தல்லாமல் அவ்வல்லமைவெளிப்படாமையால் செய்யாதவை நாளல்லவாயின. பொறுத்தற் சிறப்புச்சொல்லப்பட்டது]

[இதனால் பிழை

(அ)

கெடாஅ வழிவந்த

கேண்மையார் கேண்மை............*

விடாஅர் விழையு முலகு.......................

...*

(இ-ள்.) கெடாஅ-(உரிமை) கெடாமல்-வழிவந்த- பழையதாய்வந்த-கேண்மையார்-நட்பையுடையவரது - கேண்மை-நட்பை}-வி

டாஅ ர்-(அ வர்பி ழைநோ க் கி)
விடாதவரை - உலகு- உலகமானது|-
விழையும்-(நட்புக்குறித்து) விரும்பும். எ,று.) (கருத்து) பழையசி
நேகர் நட்பை விடாதவரை உலகமிச்சிக்கும் என்பதாம். ❋ விடா
[அ௫]

(௬௬௬) அ௧-ஆம்-அதி-பழைமை.

தாரையெனவே விடுதற்குக்காரணம் சொல்லப்பட்டது. நம்மிடத்
தும் இவர் இப்படிப்பட்டவராவரென்று யாவரும்- தாமேவந்து ந
ட்பாவரென்பதாம். (௯)

விழையார்
விழையப் படுப பழையார்கட்................ ❋
பண்பிற் றலைப்பிரியா தார்.........................
...❋

(இ-ள்.) பழையார்கண்-பழையநட்பினரிடத்து-(அவர்பிழைசெ
ய்தாராயினும்)-பண்பிற்றலைப்பிரியாதார்-(தம்) பண்புநீங்காதவர்,-
விழையார்-பகைவராலும்-விழையப்படுப-விரும்பப்படுவர். எ,று.)
(கருத்து) பழையசிநேகரிடத்துச் சிநேகநீங்காதவர் பகைவராலு
மிச்சிக்கப்படுவர் என்பதாம். ❋ தம்பண்பாவது - செய்யாதமுன்
போல் அன்புடையவராதல். அக்குணநோக்கிப் பகைவரும் நட்பின
ராவரென்பதாம். [இவையிரண்டுபாட்டாலும் பழைமையறிவார் அ
டையும் பயன் சொல்லப்பட்டது.] (௰)

அ௨-ஆம்-அதி-தீநட்பு.

இனிப் பொறுக்கப்படாத குற்ற முடைமையால் விடத்தக்கதாகிய நட்பு நட்பாராய்ந்த லதிகாரததில் சுருங்கச்சொலலி அவ்வளவி ல் அடங்காமையால் அதனை இருவகைப் படுத்தி இரண் டதிகாரத்தாலே சொல்லத் தொடங்கி முன்னே தீ நட்புச் சொல்லுகிறார்.

அஃதாவது - தீக்குணத்தாரோடு உண்டாகிய நட்பாம். அதிகாரமுறைமை சொல்லாமலே விளங்கும்.

பருகுவார் போலினும் பண்பிலார்
கேண்மை..............*
பெருகலிற் குன்ற
லினிது..............................*

(இ-ள்) பருகுவார்போலினும்- (ஆசைமிகுதியால்)உண்பவர்போன்றாராயினும்- பண்பிலார்-குணமிலாரது [தீக்குணமுடையவரது என்றபடி]-கேண்மை-நட்பானது-பெருகலின்-வளர்தலினும்-குன்றல்-குறைதல்-இனிது-இனிதாம். எ,று.) (கருத்து) நற்குணமில்லார்நட்பானது பெருகுதலினும் சிறுகுதலினிதாம் என்பதாம். ❊பெருகினால வருங்கேடு குன்றினால் வாராமையின் குன்றலினிதென்றார்.

[இதனால் திறட்பினதாகாமை பொதுவகையாற் சொல்லப்பட்டது இனிச்சிறப்புவகையாற் கூறுவர்.] (க)

உறினட் டறினொரூஉ மொப்பிலார்
கேண்மை............*

பெறினு மிழப்பினு மென்.................. ......
.....*

(இ-ள்.) உறின்-(தமக்குப்பயன்) உள்ளவிடத்து-நட்டு- சிநேகித்து-அறின்-(அது) இல்லாவிடத்து-ஒரூஉம்-ஒழியும்- ஒப்பிலார்-ஒப்பில்லாதவரது-கேண்மை-சிநேகத்தை}-பெறினும்-பெற்றாலும்-(என்)-(ஆக்கட்|)யாது.-இழப்பினும்-இழந்தாலும்-என்-(செலவம்)யாது. எ,று.) (கருத்து) செலவம்வந்தவிடத்துச் சிநேகித்து அது இல்லாவிடத்துக் கைவிடுவோர்கள் சிநேகத்தைப்பெற்றாலென்ன, அற்றாலென்ன என்பதாம். ※ தமக்கு உற்றவை பார்ப்பவர் பிறரோடு பொருத்தமிலராதலால் அவரை ஒப்பிலாரென்றார். அவரிடத்து அயலாந்தன்மையே பொருந்துமென்பதாம். (உ)

உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது...............*
கொள்வாருங் கள்வரு
நேர்.................................*

(இ-ள்.) உறுவதுசீர்தூக்குநட்பும்-(நட்பளவுபாராமல் அதனால்) வரும்பிரயோசனத்தளவுபார்க்கும் நட்பினரும்|- பெறுவதுகொள்வாரும் -(கொடுப்பாரைக்கொள்ளாமல்) விலையைக்கொள்ளும் வேசையரும்|-கள்வரும்-(பிறர்கேடு நோக்காது அவர்சோர்வு பார்க்கும்) கள்வரும்|-நேர்- (தம்முள்) ஒப்பர். எ-று.) (கருத்து) நட்பின்பயனையெண்ணுவாரும் வேசையருங்கள்வருந்தம்மிலொப்பாவர் என்பதாம் ❋ நட்பு-ஆகுபெயர். பொருள்களைக் குறித்து வஞ்சித்துநடத்தலால் அவ்விருவரோடும் ஒப்பவென்பதாயிற்று. [இவையிரண்டுபாட்டாலும் தமக்குப்பிரயோசனம் பார்ப்பவரது நட்பினது தீமைசொல்லப்பட்டது.] (௩)

அமரகத்தாற்றறுக்குங் கல்லாமா வன்னார்...................❋
தமரிற் றனிமை தலை.....................................❋

(இ-ள்.) (முன்னெல்லாந் தாங்குவதுபோலிருந்து) -அமரகத்து-போர்வந்தவிடத்து-ஆற்றறுக்கும்- போர்க்களத்திலே தள்ளிவிட்டுப்போகின்ற-கல்லா-கல்வியில்லாத-மாவன்னார்-குதிரைபோல்வாரது-தமரின்-தமராந்தன்மையினும்-தனிமை|- தனியாதலே-தலை- சிறப்புடைத்து. எ-று.) (கருத்து) போர்க்களத்தில்விட் டோடிப்போ

(௬௱௬௯) அஉ-ஆம்-அதி-தீநட்பு.

வோர் நட்பினுந் தனிமையாக விருத்தலல்லது என்பதாம். ❋ கல்லாமை-கதியைந்தும், சாரிபதினெட்டும், போர்செய்திறமும், அறியாமை. துன்பம்வாராதமுன்னெல்லாம் துணையாவார்போன்று வந்தவிடத்துவிட்டு நீங்குவாரென்பது உவமையாற்பெற்றாம். அவர் தமரானல் வரும் அழிவு தனியானல் வாராமையால் - தனிமை தலையென்றார். எனவே அதுவும் தீதாதலறிக. (௪)

செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை...........❋

யெய்தலி னெய்தாமை நன்று.....

...............*

(இ-ள்.) செய்
து-செய் துவைத்தாலும்-ஏமஞ்சாரா-காப்பாகாத
-சிறியவர்-கீழ்மக்களது-
புன்கேண்மை-தீநட்பு|-எய்தலின்-(ஒருவ
னுக்கு) உண்டாதலின்—எய்தாமை-இல்லாதிருத்தல்|-நன்று-நல்ல
து. எ,று.) (கருத்து) சிறியவர்களுடைய தீ நட்பானது ஒருவனுக்
குஉண்டாதலினு மில்லாதிருக்கை நல்லது என்பதாம். ❋ சிறப்பும்
மை ஒருவிக்கப்பட்டது. காவலாகாமை- தொலைவினிடத்து விட்டு
நீங்கல். எய்தலி னெய்தாமை நன்றென்பதற்கு- முன் உரைத்தபடி
உரைக்க. [இவையிரண்டுபாட்டாலும் தொலைவிலே துணையாகாதவ
ர்நட்பினது தீமை சொல்லப்பட்டது.] (ஞ)

பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா..............*
ரேதின்மை கோடி
யுறும்...................................*

(இ-ள்.) பேதை—அறிவில்லாதவனது-பெருங்கெழீஇ நட்பின்-மி
கநெருங்கிய நட்பைப்பார்க்கிலும்-அறிவுடையார்- அறிவுடையவர
து-ஏதின்மை-பகைமை|- கோடியுறும்- கோடிப்பங்கு நல்லது. எ,
று.) (கருத்து) அறிவில்லார் நட்பைப்பார்க்கிலும் அறிவுடையவர்ப
கைநல்லது என்பதாம். ❋ அறிவுடையவனதுபகைமை- ஒருதீங்கு
ஞ்செய்யாமையாலும், பேதையினது நட்பு- பலதீங்கும் செய்தலா
லும், கோடியுறுமென்றார். (சா)

நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்..................*
பத்தடுத்த கோடி யுறும்.............................*

(இ-ள்.) நகைவகையராகிய- (தாம் அறிதல்வகையராதற்கல்லாம ல்) நகுதல்வகையராதற்கு ஏதுவாகிய- நட்பின்-நட்பால் (வருமவை களின்)-பகைவரால்-பகைவரால் (வருபவை)-பத்தடுத்தகோடி- ப த்துக்கோடிமடங்கு-உறும்-நல்லவையாம். எ-று.) (கருத்து) நகைக்

அஉ-ஆம்-அதி-தீநட்பு. (௮௱௭௰௭)

கேதுவாகிய நட்டபைவிட பகைக்கேதுவாகிய

நட்பு நல்லவையாம்

என்பதாம். ❁ அந்நட்பாவது- விடரும், தூர்த்தரும், கழைக்கூத் தரும், போன்று பலவகையால் நகுவித்துத்தாம் பயன்கொண்டொ ழிவாரோடு உண்டாகியது. பத்தடுத்தகோடி. பத்தாகத் தொகுத்த கோடி. அந்நட்பில் வருமின்பங்களில் அப்பகைவரால் வருந்துன்ப ங்கள் மிகநல்லவென்பதாம். (எ)

ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை........................❋
சொல்லாடார் சோர விடல் .... ❋

(இ-ள்.) ஒல்லுங்கருமம்- (தம்மாலே) முடியுந்தொழிலை}-உடற்று பவர்-முடியாதாகச் செய்பவரோடு கொண்ட-கேண்மை-நட்பை}- (அதுகண்டால்)- சொல்லாடார்- (அதை அவரறியச்) சொல்லாமல் சோரவிடல்- தளரவிடக்கடவர். எ-று.) (கருத்து) தம்மாலேமுடிய ந்தொழிலை முடியாதாகச் செய்பவருடன் கொண்ட நட்பை விடக் கடவர் என்பதாம். ❁ சோரவிடல்- விடுகின்றவிதம் தோன்றாமலொ ருகாலைக்கொருகால் ஒயவிடுதல்.— அறியச் சொலினும், விடுகி ன்றவிதம் தெரிந்தாலும், அப்போது பரிகரித்துப்பின்னும்நட்பா யிருக்க நினைப்பாராகலால் சொல்லாடாரென்றும், சோரவிடலென் றும், சொல்லினர். [இவைமூன்றுபாட்டாலும் முறையே பேதைய ர்-நகுவிப்பவர்-இயல்வது செய்யாதவர்- இவர்நட்புத்தீமைகள்சொ ல்லப்பட்டன.] (அ)

கனவினு மின்னாது மன்னோ
வினைவேறு..................*
சொல்வேறு பட்டார்
தொடர்பு........................ *
(இ-ள்.) வினைவேறு-தொழில்வேறு-
சொல்வேறு-செ ால்வேறு—
பட்டார்-பட்டவரது-தொடர்பு-நட்பு|-கனவினும்-(நனவிலேமாத்
திரமேயல்லாமல்) கனவிலும்-இன்னாது- துன்பஞ்செய்வதாகும். எ
-று.) (கருத்து) தொழில்வேறு, சொல்வேறு பட்டவர் சிநேகமான
துகனவிலுந் துன்பந்தரும் என்பதாம். ❋ தொழிலுஞ் சொல்லும்
ஒவ்வாமல் வேறுவேறாயிருத்தல்- தொழிலிலே பகைவராயும்.சொல்
லிலே நட்பினராயும், இருக்கை. நிகழ்ச்சியிலே உண்டா யிருத்தலா
லே-கனவினுமின்னாதென்றார். மன்-ஓ-அசைநிலை. (க)

எனைத்துங் குறுகுத லோம்பன் மனக்கெழீஇ ....*
மன்றிற் பழிப்பார் தொடர்பு
[அரு]

..............................* (கூகூஅ)

அஉ-ஆய்-அநி-தீநட்பு.

(இ-ள்.) மனை-வீட்டிலே (தனித்திருந்தபோது)-கெழீஇ- நட்பாடி மன்றில-சபையிலே (பலருடனிருந்தபோது) -பழிப்பார்- பழி சொல்லுவோரது-தொடர்பு-நட்பு- எனைத்தும்- எவ்வளவு சிறிதாயினும்-குறுகுதல்- (தம்மைச்)சேர்தலை-ஓம்பல்-பரிகரிக்கக்கடவர். எ-று.) (கருத்து) வீட்டிலே தனித்திருக்கையிற் சிநேகித்துச் சபையிற்பழிப்பவர் நட்புக்கொள்ளா திருக்கக்கடவர் என்பதாம். ❋ அவ்விருசெயலும் தீதாகலின் அவர் ஒருபோதும் தம்மைச் சேராதவிதம் குறிக்கொண்டு காக்கவேண்டு மென்பதற்கு அவர் நட்பின் மேல்வைத்துச் சொல்லினார். [இவையிரண்டுபாட்டாலும் வஞ்சர் நட்பின் தீமைசொல்லப்பட்டது. (௰)

அ ௩-ஆ

௰-அதி-கூடாநட்பு.

இனிமேற்றைக் கூடாநட்புச் சொல்லுகின்றார்.
அஃதாவது - பகைமையால் உள்ளே கூடாதிருந்தே சமயம்கிடைக்குமளவும் புறத்திலே கூடி நடப்பவர் நட்பு.

சீரிடங் காணி
னெறிதற்குப் பட்டடை.......................❋
நேரா நிரந்தவர் நட்பு ....
.......................❋

(இ-ள்.) நேரா-கூடாதிருந்தே-நிரந்தவர்- (வாய்க்குமிடம் காணுமளவும்) புறத்திற் கூடிநடப்பவரது-நட்பு-சினேகம்|-சீரிடம்- வாய்க்குமிடத்தை 3-காணின்- கண்டால்-எறிதற்கு- (அற) வெறிதற்குத் (துணையாகிட)-பட்டடை-பட்டடையாகும். எ,று.) (கருத்து) வாய்க் கமிடங்கூடாதிருந்தவர் நட்பானது அந்த இடத்தைக்கண்டாலெறிதற்குப் பட்டடையாம் என்பதாம். ❋ எறியுங்காலம் வாராமுன்னெல்லாந் தாங்குவதுபோலிருந்து வந்தவிடத்து அறவெறிவிப்பதாகிய பட்டடைக்கும் அப்படிப்பட்டதாகிய நட்பிற்கும் தொழிலொப்புமை யிருத்தலால் அதுபற்றி அந்நட்பைப் பட்டடையாக உபசரித்தார். (௧)

இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர் .... ❋
மனம்போல வேறு படும்........ ....❋

(இ-ள்.) இனம்போன்று- (நமக்கு) உற்றவர்போன்று-இனமல்லார்-உறாதவரோடு உண்டாகிய-கேண்மை - நட்பானது|— (இடம்பெ

அங-ஆம்-அதி-கூடாநட்பு.
(௱௭௧)

ற்றால்)-மகளிர்-பெண்பாலார்- மனம்போல-நெஞ்சப்போல-வேறு படும்-வேறுபடும். எ,று.) (கருத்து) உறவினர்போன்று உறவிலாரா காதவர் நட்பானது பெண்களினயப்போல வேறுபடும் என்பதாம். ❋ நட்பு-வேறுபடுதலாவது- இடம்பெற்றால் பழைய பகையேயாகுதல். [இவை யிரண்டுபாட்டாலும் கூடாநட்பினது குற்றஞ்சொல்லப்பட்டது.] (௨)

பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல........
..................*
ராகுதன் மாணார்க் கரிது
.... *

(இ-ள்.) நல்ல-நல்லவையாகிய-பல- பலநூல்களை}- கற்றக்கடைத்தும்-கற்றவிடத்தும்- (அதனல்)- மனநல்லராகுதல்- மனத்திருந்தி நட்பினராகுதல்,-மாணார்க்கு- பகைவர்க்கு—அரிது-இல்லை. எ,று.) (கருத்து) பலநூலைக்கற்றவிடத்து மனநலத்தராகுதல் பகைவர்க்கில்லை என்பதாம். * நல்லநூல்- மனக்குற்றங் கெடுப்பன.நல்லராகுதல்- சலப்பிடுதல். உட்சலமுடையாரைக் கலவியுடைமைபற்றி நட்பென்று கொளலாகாதென்பதாம். (ரு)

முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா..................*
வஞ்சரை யஞ்சப் படும்.... ....*

(இ-ள்) (கண்டபோது)-முகத்தின்- முகத்தால்- இனிய-இனிமையுள்ளனவாக-நகாஅ-சிரித்து- அகத்து- மனத்தால்—இன்னா- (எப்பொழுதும்) இனியராகாத-வஞ்சரை-வஞ்சகரை}—அஞ்சப்படும்-அஞ்சல்வேண்டும். எ,று.) (கருத்து) முகமலர்ந்து நகைத்து அகமலராதவஞ்சகருக்குப் பயப்படவேண்டும் என்பதாம் * நகையது வகைபற்றி- இனியவென்றும், மனத்திலே சலம்தோன்ற நிற்கவும் அதற்கு விரோதமாகிய நகையைப் புறத்திலே காட்டலால் வஞ்சரென்றும், அச்சலம் முடிப்பதற்குச் சாதனமாகிய முகத்தாலும் தோன்றுமையால்- அஞ்சப்படுமென்றும், சொல்லினர். [இவைபிரண்டுபாட்டாலும் குற்றத்திற்கு எதுவாகிய அவர்கொடுமை சொல்லப்பட்டது.] (சு)

மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்....... .... *
சொல்லினாற் றேறற்பாற் றன்று ....

.... ※

(இ-ள்.)மனத்தின்-மனத்தால்-அமையாதவரை-(தம்மொடு)பொருந்தாதவரை}- எனைத்தொன்றும்- யாதொருகருமத்திலும்- சொல்லி

(௬௫௰) அங-ஆம்-அதி-கூடாநட்பு°

னால்-சொல்லினால்---தேறற்பாற்று- தெளிதன் முறைமையது-அன்று-அல்ல-(என்று நீதிநூலில்)சொல்லும். எ-று.) (கருத்து) மனமொவ்வாதவரை யாதொரு சொல்லாலுந் தெளிதல் கூடாது என்பதாம்: ※ பகைமை மறைத்தற்பொருட்டுச்சொல்லுகின்ற வஞ்சனைச்சொல்லை நல்லசொல்லென நினைத்து அவரைக் கருமங்களிலே தெளிதல் நீதிநூலின் முறைமை அன்றென்பதாம். (௫)

நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ ..... ※
லொல்லை யுணரப் படும் .... ※

(இ-ள்.) நட்டார்போல்- நட்பினர்போல்-நல்லவை-நன்மையைத்தருஞ்சொற்களை}-சொல்லினும்- சொன்னாலும்- ஒட்டார்சொல்- பகைவர்சொற்கள்---(அது தாராமை})- ஒல்லை-விரைவிலே [சொல்லியபொழுதேயென்றபடி]-உணரப்படும்-அறியப்படும் எ-று.) (கருத்து) நட்பாளர்போலநல்லசொற்களைச்சொன்னாலும் பகைவர்சொற்கள் நலந்தராமையை யறியப்படும் என்பதாம. ※சொல்லினென வே அவர் சொல்லாமையே பெற்றாம். பகைவராதலால்- தீமைதருதற்கு ஐயமில்லை யென்பதற்கு ஒல்லை யுணரப்படுமென்றார். (௬)

சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கந் ※
தீங்கு குறித்தமை யான்.................. .... ※

(இ-ள்.) வில்வணக்கம்-வில்லினது வணக்கம்- தீங்கு- (எற்றவர்க்குத்) தீமைசெய்தலை-குறித்தமையால்- குறித்ததனால்- ஒன்னார்கண்-பகைவரிடத்தே (பிறக்கும்)-சொல்வணக்கம்-சொல்லினது வணக்கத்தையும்-கொள்ளற்க-(நமக்கு நன்மைசெய்தலைக் குறித்ததென்று) நினையாதிருக்கக்கடவர். எ-று.) (கருத்து) வில்வணக்கந் தீங்கைத்தருதலால் பகைவரிடத்துச் சொல்வணக்கங் கொள்ளாதிருக்கக்கடவர் என்பதாம். ❋ தம்வணக்கம் அன்றென்பது தோன்ற - சொல்வணக்கமென்றும், வில்வணக்கம் வேறாயினும் - வணங்குதலொப்புமைபற்றி அதன் குறிப்பையே ஏதுவாக்கியும், சொல்லினார்.—வில்லினன் குறிப்பு அவனாகிய வில்வணக்கத்தின்மேல்நிற்றலால்பகைவரது குறிப்பும் அவராகிய சொல்வணக்கத்தின்மேலதாயிற்று. இதுவும் தீங்குகுறித்த வணக்கமென்றே கொண்டு அஞ்சிக்காக்கவேண்டுமென்பதாம். [இவை மூன்றுபாட்டாலும் அவரைச் சொல்லால் தெளியலாகாதென்பது சொல்லப்பட்டது.] (எ)

அங-ஆம்-அதி-கூடாநட்பு. (ருசக)

தொழுதகையுள்ளும் படையொடுங்கு மொன்னா... ❋
ரழுதகண் ணீரு மனைத்து..........................❋

(இ-ள்.) (பகைவர்குறிப்பை அறியவல்லவர்க்கு)

- ஒன்னார்- பகைவர்- தொழுதகையுள்ளும்- கும்பிட்டகையுள்ளும்— படை- ஆயுதமானது- ஒடுங்கும்- மறைந்திருக்கும்.— அழுதகண்ணீரும்- (அவர்) அழுதகண்ணீரும்—அனைத்து- அப்படியே அது மறைந்திருத்தற்கு இடமாம். எ-று.) (கருத்து) பகைவர் கும்பிட்டகையோடு மாயந் மறைந்திருக்கும் அப்பகைவரழுதகண்ணீருமப்படியேயென்பதாம். ❋ தாம் நட்பென்பதனைத் தங்கையாலும், கண்ணாலும், நட்டவிடத்துப்பின் கொல்லுதற்கு எடுக்கவிருக்கின்ற ஆயுதம் ஆலோசித்தறியும்போது நம்புவிக்கின்றபொழுதே அவைகளுள்ளே தோன்றுமென்பதற்கு- ஒடுங்குமென்றார்.—பகைவர் தமது தளர்ச்சிகாட்டித் தொழுதாலும் அழுதாலும் அவர்குறிப்பையே நோக்கிக் காத்துக்கொள்கவென்பதாம். [இதனால் அவரைச் செயலால் தெளியலாகாதென்பது சொல்லப்பட்டது.] (அ)

மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து..........❋
நட்பினுட் சாப்புல்லற்
பாற்று.................................❋

(இ-ள்.) (அரசநீதியானது)- மிகச்செய்து- (புறத்திலே நட்பை) மிகச்செய்து- தம்மெள்ளுவாரை- (உள்ளே தம்மை இகழும் பகைவரை)—நட்பினுள்- (தாமும்) அந்தநட்பினிடத்தே நின்று- நகச்செய்து- (புறத்திலே அவர்) மகிழும்படி செய்து- சாப்புல்லற்பாற்று- (உள்ளே அது) சாம்படிக்குப் பொருந்துந்தன்மையுடைத்து. எ-று. (கருத்து) இராசநீதியானது புறத்து நட்பை மிகச்செய்து இகழ்பவரை நட்பில் மகிழும்படி செய்து பொருந்துந் தன்மையுடையது என்பதாம். ❋ நின்றென்பதும், அரசநீதி யென்பதும், வருவிக்கப்பட்டன. உள்ளொன்று புறமொன்றுதல் ஒருவருக்குத்தகாதாயினும் பகைவரிடத்தானால் தகுமென்பது நீதிநூலது துணிவென்பதற்கு அதன்மேல்வைத்துச்சொல்லினார். எள்ளுவாரைப் புல்லலெனக்கூட்டுக.

பகைநட்பாங் காலம் வருங்கால் முகநட்.........................❋

டகநட்   பொரீஇ
விடல்...*

(இ-ள்.) பகை-(தம்)பகைவர்-நட்பாங்காலம்- நட்பினராய்நடக்குங்காலம்-வருங்கால்- வந்தால்- முகம்-(தாமும்) முகத்தால்-நட்டு-
[அக]

(௲௪௨)   அரு-ஆம்-அதி-கூடாநட்பு

(அவரோடு)நட்புச்செய்து-அகம்-மனத்தால்-நட்பு-நட்பை-ஒரீஇ-நீங்கி-விடல்-(பின் அதுவும்) விடக்கடவர். எ-று.) (கருத்து) பகை நட்பாருங்காலத்தில் முகநட்பாய்ச்சிநேகித்து அகநட்பு விடல்வேண்டும் என்பதாம். ❋ அக்காலமாவது - தம்மாலும் பகையென்று வெளிப்படநீக்கக்கூடாதவளவு இதனாலேகூடுமளவெல்லாம் நீக்குகவென்பதுபெற்றும். [இவையிரண்டுபாட்டாலும் அந்தநட்பிடத்துநடக்கும்விதம்சொல்லப்பட்டது.] (ம)

இனி அந்நட்பைஎதிர்மறுத்துப் பகைமுகத்தாலே சொல்லத்தொடங்கினூர். அப்பகை தான்முழுவதும் விடலாகாத குற்றமாகிய குரோதத்தாலும், காமத்தாலும், வருவனம். அவைகளுள்-குரோதத்தால் வருபவை ஐந்ததிகாரத்தாலும், காமத்தாலவருபவை ஐந்ததிகாரத்தாலும், சொல்லுதற்கு அவ்விரண்டுக்கும் அடியாகிய மயக்கத்தை இருவகைப்படுத்தி இரண்டதிகாரத்தாலே சொல்லத்தொடங்கி முதலிலே பேதைமை சொல்லுகிருர்.

அச-ஆம்-அதி-பேதைமை.

அஃதாவது-யாதொன்றும் அறியாமை.

பேதைமை யென்பதொன்
றியாதெனி னேதங்கொண்*
டூதியம் போக விடல் ....
.............*

(இ-ள்.) பேதைமையென்பது-அறியாமையென்று சொல்லப்படுவது|-ஒன்று-(மற்றைக்குற்றங்களினெல்லாம் மிகுந்த)தொன்று.-யாதெனின்-(அது!) யாதென்றுவினவிருல்-ஏதங்கொண்டு-(தனக்குக்) கேடுதருமவைகளைக் கைக்கொண்டு- ஊதியம்- ஆக்கந்தருமவைகளை}—போகவிடல்-கைவிடுதல். எ,று.) (கருத்து) அறியாமையென்புறியாதென்ருல் குற்றங்களைக் கைக்கொண்டு இலாபத்தைவிடுதல் என்பதாம். ❋ கேடு-வறுமை-பழிபாவங்கள். ஆக்கம்-செல்வம்புகழறங்கள்.—பேதைமை-தானே தன்னிருமைப்பயனும் கெடுத்துக்கொள்ளுத லென்பதாம். (௧)

பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை........*
கையல்ல
தன்கட் செயல்............................ *

(இ-ள்.) (ஒருவனுக்கு)-பேதைமையுளெல்லாம் - பேதைமையெல்லாவற்றுள்ளும்- பேதைமை-மிகுந்த பேதைமையாவது—கையல்லதன்கண்-(தனக்கு)ஆகாதசெய்கையில்-காதன்மை-ஆசையை}-செயல்-செய்தல். எ,று.) (கருத்து) அறிவில்லாமையெல்லாவற்றுள்ளுமறிவில்லாமையாவது ஆகாதசெய்கையைச் செய்தலென்பதாம். ✲ இருமைக்கும் ஆகாவென்று நூலோர் கடிந்த செயல்களை விரும்பிச்செய்தலென்பதாம். [இவ்விரண்டுபாட்டாலும் பேதைமையதுஇலக்கணஞ்சொல்லப்பட்டது.] (உ)

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்........✲
பேணாமை பேதை தொழில்.............................✲

(இ-ள்.) நாணாமை-(நாணவேண்டுமவைகளுக்கு)நாணாமையும்-|நாடாமை- (நாடவேண்டுமவைகளை)நாடாமையும்|—நாரின்மை-(யாவரிடத்தும்)முறிந்தசொற்செயலுடைமையும் -யாதொன்றும்- (பேணவேண்டுமவைகளுள்) யாதொன்றையும்|-பேணாமை- பேணாமையும் |-பேதைதொழில்-மூடனது தொழில்களாம். எ,று.) (கருத்து) நாணாமையும் நாடாமையும் ஆசையின்மையும் யாதொன்றையும் பேணாமையும் அறிவீனனுடைய தொழில்களாம் என்பதாம். ✲ நாணவேண்டுமவை-பழியாவங்கள்.

நாடவேண்டுமவை- கருமங்களி

லேவிதி விலக்குகள். நூறிதல்-கண்ணறுதல். பேணவேண்டுமவை-கு டிப்பிறப்புக்கல்வியொழுக்க முதலாயின. இவை பேதைக்கு எந்நா ளும் இயல்பாய் வருதலாலே-தொழிலென்றார். (௩)

ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்.........*
பேதையிற் பேதையா ரில்...*

(இ-ள்.) ஓதி-(மனமொழிமெய்கள் அடங்குதற்கு ஏதுவாகிய நூல்களை} ஓதியும்-உணர்ந்தும்- (அவ்வடக்கத்தால் வரும் பயனை} அறிந்தும்-பிறர்க்கு-பிறருக்கு-உரைத்தும்- (அதனைஅறியும்படி) சொல்லியும்-தான்-தான்-அடங்கா- (அவை) அடங்கி நடவாத--பேதையின்-மூடன்போல்-பேதையார்-மூடர்-இல்- (உலகில்) இல்லை. எ-று. (கருத்து) கற்றறிந்தும்பிறர்க்குக்கற்பித்துந் தானடங்காதஅறிவீனன்போலறிவீனனில்லை என்பதாம். ❊ இப்பேதைமை-தனக்குமருந்தாகிய இவைகளாலே தீராமையாலும், வேற்றுமருந்தில்லாமையாலும், பேதையிற் பேதையாரில்லென்றார். [இவ்விரண்டுபாட்டாலும்

(௩௪௪) ௮௪-ஆம்-அதி-பேதைமை.

பேதையது தொழில் பொதுவகையால் சொல்லப்பட்டது.]
சிறப்புவகையாற் கூறுவர்.
இனிச்

(௪)

ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்...........
தான்புக் கழுந்து மளறு......................................

*

*

(இ-ள்.) பேதை- மூடனானவன்—எழுமையும் -வரும்பிறவிகளி லெல்லாம்—தான்-தான்-புக்கு-புகுந்து—அழுந்து-அழுந்துதற்கி டமாகிய-அளறு-நரகத்தை}—ஒருமை- இவ்வொருபிறப்புள்ளே—செயலாற்றும்- செய்துகொள்ளவல்லவனாவான். எ,று.) (கருத்து) அறிவீனன் வரும்பிறவிகளிற்புகுந்து நரகத்தை யேற்றுக் கொள்வான் என்பதாம். ❀ எல்லாப்பிறப்பும் ஏழாய் அடங்குதல் அறியப்பட்ட மையின் எழுமையுமென முற்றும்மை கொடுத்தார். இவ்விடத்தும் பிறப்புகளிலும் கொடுவினை வசத்தால் அந்நரகத்துன்பமே அனுப வித்துவருதலால்-எழுமையுந் தான்புக்கழுந்துமளறென்றார். நெடு ங்காலந்தான் நரகத்துன்பம் அனுபவித்தற்கு ஏதுவாம்கொடுவினை களையே அறிந்து சிலகாலத்துள்ளேசெய்து கொள்ளுதல் பிறர்க்கு அரிதாகலின் ஆற்றுமென்றார். [இதனால் அவன் மறுமைச் செயல் சொல்லப்பட்டது. (௫)

பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்......*
பேதை வினைமேற் கொளின்.....................
...*

(இ-ள்.) கையறியா- செய்முறைமையறியாத--பேதை-மூடனானவன்-வினை-ஒருதொழிலை}—மேற்கொளின்- மேற்கொள்வானாயின்-பொய்படும்- (அதுவும்) புரைபடும்-ஒன்றோ- (அது) ஒன்றா தாறோ.---புனை பூணும்-(தானும்) தளைபூணுவான். எ,று.)(கருத்து) மூடனொருதொழிலை மேற்கொள்வானாயி னத்தொழில் குற்றப்படு மன்றியுமவன் தளைபூணுவான் என்பதாம். ❀ புரைபடுதல்- பின் ஆகாதபடி உள்ளழிதல். அதனையும் கெடுத்துத்தானும் கெடுமென்பதாம். [இதனால் அவன்செல்வம்படைக்குமாறு சொல்லப்பட்டது.

ஏதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை......... .... *
பெருஞ் செல்வ முற்றக் கடை. .. ..

....*

(இ-ள்.) பேதை-மூடனானவன்-பெருஞ்செல்வம்- பெரியசெல்வத்தை}—உற்றக்கடை-(ஊழால்) அடைந்தவிடத்து-ஏதிலார்- (தன்னோடு) ஒருசம்பந்தமு மில்லாதவர்|-ஆர-அநுபவிக்க-தமர் (எல்லா

ச்சம்பந்தமு முடைய) தம்மவர்|-பசிப்பர்- பசித்திருப்பார். எ,று.) (கருத்து) அறிவீனன்செல்வமடைந்தவிடத்து அயலா ரநுபவிக்கச் சுற்றத்தார் பசித்திருப்பர் என்பதாம். * எல்லா நன்மைகளும் செய்துகொள்ளற்குச் சாதனமென்பது தோன்ற- பெருஞ்செல்வமென்றும், அதனைப்படைக்கும் வலிமை இல்லாமைதோன்ற- உற்றக்கடையென்றும், எல்லாம்பெறுதல்தோன்ற- ஆரவென்றும், உணவும் பெறுமைதோன்றப்பசிப்பரென்றும், சொல்லினர். (எ)

மைய லொருவன் களித்தற்றாற் பேதைதன்.......... . . *
கையொன் றுடைமை
பெறின்........................ *

(இ-ள்.) பேதை-மூடனானவன்-தன்கை-தன்கையில்- ஒன்று-ஒருபொருளை}—உடைமைபெறின்- உடைமையாகப் பெற்றானாயின்- மையலொருவன்-பித்தினையுடைய ஒருவன்|-களித்தற்று-(அம்மயக்கத்தின் மேலே) மதுவுண்டுமயங்கியதுபோலும். எ,று.) (கருத்து) அறிவில்லான் பொருளைப்பெற்றானாகில் வெறியனையுடைய வொருவன்மதுவுண்டு மகிழ்ந்தாற்போலும் என்பதாம். * ஆல்- அசை.— பெறினெனவே-அவன்ஊழாலல்லது - தன்னாலே பெறுமைபெற்றும்.-பேதைமையும்,செல்வக்களிப்பும், ஒருசேர உடைமையால் அவன்செய்காரியங்கள்-மையலும், மதுக்களிப்பும், ஒருசேரவுடையவ

ன் செய்காரியங்கள்போலே தலைதடுமாறுமென்பதாம். [இவ்வயிர ண்டுபாட்டாலும் அவன் செல்வமடைந்தவிடத்துப் பயன்கொள்ளு ம்விதம்சொல்லப்பட்டது.] (அ)

பெரிதினிது பேதையார் கேண்மை

பிரிவின்கட் .... *

பீழை தருவதொன் றில்... ....

.... *

(இ-ள்.) பிரிவின்கண்-(பின்) பிரிவுவந்தவிடத்து- (அப்பிரிவு)— தருவது-(இருவருக்கும்) தருவதாகிய-பீழையொன்று-துன்பமொ ன்று-இல்- இல்லை- (ஆதலால்) - பேதையார்- மூடரது- கேண்மை- (தம்மூட்கொண்ட)நட்பு|-பெரிதினிது - மிகவுமினிது. எ;று.((கரு த்து)பிரிவினிடத்துத்துன்பமில்லை அறிவில்லார் நட்புமிகவுமினிது என்பதாம். ❋ தினந்தோறும் தேய்ந்து வருதலால் துன்பந் தாரா தாயிற்று. புகழ்வார் போன்று பழித்தபடி. [இதனால் அவனது நட்பி ன்குற்றம் சொல்லப்பட்டது.] (கூ)

கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர் ... .*

குழா அத்துப்

பேதை புகல்.......... ....* (ஈஉகூ)

[அஎ]

அசு—ஆம்-அதி-பேதைமை.

(இ-ள்.) சான்றோர்-பெரியோராது-குழாஅத்து-சபையிலிடத்து-பேதை-மூடனானவன்-புகல்-புகுதல்|— கழா அக்கால்- கழுவாதகாலை- (அசுத்தமிதித்தகாலையென்றபடி)-பள்ளியுள்- (இன்பந்தருஞ்) சயனத்தின்மேல்-வைத்தற்று-வைத்தல்போலும். எ-று.) (கருத்து) பெரியோர் சவைபில்றிவில்லான்புகுதல் கழுவாதகாலைச் சயனத்தில் வைத்தல்போலும் என்பதாம். ❊ ஆல் - அசை.— அதனால் அச்சயனமும் இழிவுசெய்யப்படும் விதம்போல் இவனால் இச்சபையும் இழிவுசெயப்படுமென்பதாம். [இதனால் அவன் சபையிடத்து இருக்கும்விதம்சொல்லப்பட்டது.] (௰)

அறு-ஆய்-அதி-புல்லறிவா

ண்மை.

இனி

மற்றைப்புல்லறிவாண்மை சொல்லுகின்றார். அதுபுல்லிய அறிவை ஆளுதற் றன்மையென விரியும்.

அஃதாவது- தான்சிற்றறிவினனாயிருந்தே தன்னைப்பேரறிவனாக மதித்து உயர்ந்தோராலே சொல்லப்படும் உறுதிச் சொல்லைக்கொள்ளாமை.

அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை.........❊
யின்மையா வையா துலகு.................................. ❊

(இ-ள்.) இன்மையுள்- (ஒருவனுக்கு) இல்லாமை பலவுள்ளும்- இன்மை-மிகுந்தஇல்லாமையாவது|-அறிவின்மை- அறிவில்லாமை.- பிறிதின்மை-மற்றைப் பொருளில்லாமையோவெனின்-(அதனை)-உலகு-உலகத்தார்,-இன்மையா- (அப்படிப்பட்ட) இல்லாமையாக-வையாது- கொள்ளார். எ,று.) (கருத்து) இல்லாமையுள்ளே யில்லாமையாவது அறிவில்லாமையாய் பொருளில்லாமையை யுலகத்தாரில்லாமையாக வெண்ணார் என்பதாம். ❊ புல்லறிவாளர் செல்வ மடைந்தவிடத்தும் இம்மை மறுமைப் பயனடையாமையால் அதனை இன்மையுளின்மையென்றும், நல்லறிவாளர் வறுமையடைந்தவிடத்தும் அப்பயனை யிழவாமையால் அதனை- இன்மையாவையாதென்றும், சொல்வினர். [இதனாற்புல்லறிவின்குற்றம் சொல்லப்பட்டது.]

அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது.................*
மில்லை பெறுவான் றவம்.....................................*

அசு-ஆம்-அறிவுபுல்லறிவுக்ண்மை.

(௬௪௭)

(இ-ள்.) அறிவிலான்- புல்லறிவுடையவன்|- நெஞ்சுவந்து-மனமகிழ்ந்து-ஈதல்- (ஒருவனுக்குஒன்று) கொடுத்தல். (கூடியதாயின் அதற்குக்காரணம்|)- பெறுவான்- பெறுகின்றவனது—தவம்- நல்வினையே.- பிறிதியாதும்- வேறொன்றும்|- இல்லை-இல்லை. எ,று.) (கருத்து) அறிவில்லா னொருவனுக் கொன்றைக் கொடுத்தல் பெற்றுக் கொள்பவனது தவமாம் என்பதாம். ❊ புல்லறிவாளரும் ஒரோவிடத்தே மனமகிழ்ந்து கொடுத்தலால் அவரும் நல்வினை செய்வோன் பாற்கு- பெறுவான் வீழ்பொருள் அடைந்தவன்போல்வதல்லதுஇம்மைநோக்கியாவது மறுமைநோக்கியாவது

ஈகின்றூரல்லாரெனச்
சொல்லியபடி [இதனால் புல்லறிவாளர் தம்மிடத்து நல்லனவுசெய்த
லறியாமை சொல்லப்பட்டது.] (உ)

அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை............
செறுவார்க்குஞ் செய்த லரிது..... ... ...

❋

❋

(இ-ள்.) அறிவிலார்-புல்லறிவுடையவர்|- தாம்-தாமே-தம்மை-த
ங்களை}-பீழிக்கும்-வருத்தும்-பீழை-வருத்தமானது|- செறுவார்க்கு
ம்-வருத்துதற்கு உரிய பகைவர்க்கும்-செய்தல்- செய்தல்|- அரிது-
அரிதாம். எ-று.) (கருத்து) அறிவில்லார் தங்களை வருத்தும் வருத்
தமானது வருத்தப்படுத்தும் பகைவர்க்குஞ் செய்தலரிது என்ப
தாம். ❋ பகைவர்தாம் அறிந்த ஒருதீங்கைக் காலம் பார்த்திருந்து
செய்வதல்லது வறுமை பழிபாவமுதலான பலவும் எக்காலமும்செ
ய்யமாட்டாமையால் அவர்க்கும் செய்தலரிதென்றூர். [இதனால்அவ
ர்தம்மிடத்துத்தீயவைசெய்தலேஅறிவென்பதுசொல்லப்பட்டது

வெண்மை யெனப்படுவ தியாதெனி னொண்மை.....❋
யுடையம்யா
மென்னுஞ் செருக்கு........ .. ..❋

(இ-ள்.) வெண்மையெனப்படுவது - புல்லறிவுடைமை யெனப்படுவது-யாதெனின்- யாதென்றால்- (அது)-ஒண்மையுடையம் யாம் -நல்லறிவுடையோம்யாம்— என்னும்- என்று (தம்மைத்தாமே) நன்குமதிக்கும்- செருக்கு - மயக்கம். எ-று.) (கருத்து) அறிவில்லாமையென்று சொல்லப்படுவ தியாதென்றால், நல்லறிவுடையோமென்னுமயக்கமாம் என்பதாம். ❋ வெண்மை- இளமை-அது அறிவு முதிராமை- உலகத்தார் இகழ்தல் அறிந்திருந்தும் அப்படி மதித்தலால்-மயக்கமென்றார். (௪)

(௬௪௮) அ௫-ஆம்-அதி-புல்லறிவாண்மை

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற.........................❋
வல்லதூஉ மையந் தரும்............................❋

(இ-ள்.) (புல்லறிவாளர்)-கல்லாத-(தாம்) கல்லாதநூல்களையும்- மேற்கொண்டு- (கற்றவராக) மேலிட்டுக்கொண்டு- ஒழுகல்-நடக்குதல்|-கசடற-குற்றமற-வல்லதூஉம்-கற்றதொருநூல் (உண்டாயின்) அதனிடத்தும்-ஐயம்-ஐயத்தை-தரும்- (பிறருக்கு) விளைக்கும். எ-று.) (கருத்து) கல்லாதநூற்களைக் கற்றோமென்று சொல்லுதல் கற்றநூற்களையுஞ் சந்தேகப்படுத்தும் என்பதாம். ❋ உண்டாயினென்பது வருவிக்கப்பட்டது.— ஐயம்-இவர் அந்தநூலிலும் வல்லவரென்பதும் இப்படித்தானிருக்குமோ வென்பது. (௫)

அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற் ....❋
குற்ற மறையா வழி...❋

(இ-ள்.) (புல்லறிவாளர்)-தம்வயின்- தம்மிடத்து உண்டாகும்-குற்றம்-குற்றங்களை- மறையாவழி- (அறிந்து) கடியாராயின்-அற்றம்-மறைக்கத்தக்க அவயவத்தை- மறைத்தலோ - (ஆடையால்) மறைத்தவராகத் தம்மை நினைத்தலும்-புல்லறிவு-அற்பவறிவாகும. எ,று.) (கருத்து) அறிவில்லார் குற்றங்களைக் கடியாராயின் அதுவேயறிவில்லாமை என்பதாம். ❋ குற்றமறைத்தலாவது- அவைகளை இல்லாமற் போகச்செய்தல். மறைக்கப்படுமவை பலவுள்ளும் உயர்ந்தவைகளையெல்லாம் மறையாது தாழ்ந்தவொன்றையே மறைத்து அவ்வளவிலே தம்மையும் உலகநடையுள்ளவராக மதித்தலும் புல்லறிவென்பதாம். [இவைமூன்றுபாட்டாலும் அவர் தம்மை விடத்தற்குற்றம் சொல்லப்பட்டது.] (௬)

அருமறை சோரு மறிவிலான் செய்யும்................ ❋
பெருமிறை தானே தனக்கு........ ....❋

(இ-ள்.) அருமறை- பெறுதற்கரிய உபதேசப்பொருளை -சோரும்-(பெற்றும்) உட்கொள்ளாது போக்கும்-அறிவிலான்-புல்லறிவாளன்- (அவ்வுறுதியறியாமையால்)- தானே-தானே- தனக்கு-தனக்கு-பெருமிறை-மிகுந்தவருத்தத்தை-செய்யும்-செய்வான். எ,று.) (கருத்து) இரகசியப்பொருளைப் போக்குமறிவில்லான் தனக்குத்தானே வருத்தத்தைச் செய்வான் என்பதாம். ❋ மிகுந்தவருத்தம்-பொறுத்தற்கரிய துன்பம். (௭)

அ௮-ஆம்-அதி-புல்லறிவாண்மை. (௩௪௧)

ஏவவுஞ் செய்கலான் றான்றேறா

னவ்வுயிர்.......... ....❋

மளவுமோர் நோய். .... *

(இ-ள்.) (புல்லறிவாளன்) - ஏவவும் - (தனக்கு) உறுதியானவைக ளை (அறிவுடையார்) சொல்லவும்-செய்கலான்-செய்யான்.— (அது வல்லாமல்)-தான்-தானாகவும்-தேறான் - (இவைசெய்பவையென்று) அறியான்—அவ்வுயிர், அந்தவுயிர்-போமளவும்- (உடம்பைவிட்டு ப்)போமளவும்-ஓர்நோய்- (பூமிக்குப் பொறுத்தற்கரிய) ஒருநோ யாம். எ-று.) (கருத்து)அறிவில்லான் பிறரேவவுந்தனக்குறுதிகளைச் செய்யான் தானாகவுந்தெளியான் என்பதாம். ❋ உயிர்தான் அறிவு த்தன்மையதாயிருந்தும் நின்றதேகவசத்தால் மயங்குந் தன்மைய தாய் வேறுபடுதலால் அவ்வுயிரொன்றும், அதனினீங்கிய பொழுதே அதற்கு இரண்டினுள் ஒன்று கூடுதலால்-போமளவுமென்றும்,குல மலை முதலானவைகளைச்சுமக்கின்றபூமிக்குஇப்பாவவுடம்புபெருஞ் சுமையாய்த் துன்பஞ்செய்தலால்-ஓர் நோயென்றும், சொல்லினர்.

காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான் .... *

கண்டானாந் தான்கண்ட வாறு .. ,

.... *

(இ-ள்.) {தன்னை எல்லாமறிந்தவனாக மதித்தலால்)-காணாதான்-(பி
றரால்ஒன்றை) அறியுந்தன்மையில்லாதவனை}-காட்டுவான்- அறிவிக்
கப்புகுவோன்|-தான்காணான்-(அவனாலேபழிக்கப்பட்டுத்) தான்அ
றியாதவனாய் முடியும்.-காணாதான்-(இனி) அவ்வறியுந்தன்மையில்
லாதவன்-(தான்கொண்டது விடாமையால்)-தான்கண்டவாறு- தா
ன்அறிந்தவிதத்தால்-கண்டானாம்- (அதனை) அறிந்தவனாய்முடியும்.
எ,று.) (கருத்து) ஒன்றுமறியாதவனைக்காட்டுவான் தானறிவில்லாத
வனாவான் என்பதாம். ❋ புல்லறிவாளனுக்கு நல்லறிவைவருவித்தல்
ஒருவழியாலும் பொருந்துவதன்றென்பதாம். (௯)

உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்.............*
தலகையா வைக்கப் படும்..............................*

(இ-ள்.) உலகத்தார்-உயர்ந்தோர் பலராலும்- உண்டென்பது'- உ
ண்டெனப்படுகிறபொருளை}-இல்லென்பான்- (தன்புல்லறிவால்)இ
ல்லையென்று சொல்வோன்- (மனிதனென்று நினைக்கப்படான்-)—
வையத்து- பூமியிலே- அலகையா- (காணப்படுகிற) ஒரு பேயென்
று-வைக்கப்படும்- நினைக்கப்படுவான். எ,று.) (கருத்து) பெரியோ

(நருய) ௮௫-ஆம்-அதி-புல்லறிவாண்மை.

ருண்டென்பதை யில்லையென்பவன் பேயென் றெண்ணப்படுவான் என்பதாம். ※ கடவுளும், மறுபிறப்பும், இருவினைப்பயனும், முதலாக அவர் உண்டெனப்படுமவை பலவாயினும் சாதியொருமைபற்றி உண்டென்பதென்றும், பேயும் இல்லையென்பவனும்தானே வேண்டியவை சொல்லலால் ஒத்தலும், வடிவால் ஒவ்வாமையும் உடைமையால் தன்னுடம்பை மறைத்து மக்களுடம்பிலே தோன்றுதல் வல்லவலகை யென்றும், சொல்லினார். [இவைநான்குபாட்டானும் உறுதிச்சொல்லைக் கொள்ளாமையின் குற்றம் சொல்லப்பட்டது.]

௮௬

ஆம்-அதி-இகல்.

இனி அவைகளால்வரும் குரோதகாமங்களுள் அரசர்க்குக் குரோதம் அதிகமாயுள்ளதாகலால் அதனால்வருமவைகளைச் சொல்லத் தொடங்கி முதலிலே இகல்சொல்லுகின்றார். அஃதாவது இருவர் தம்முள்ளே போர்செய்து வலிமைதொலைதற்கு ஏதுவாகிய மாறுபாடாம்.

இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்...... ...... ※
பண்பின்மை பாரிக்கு நோய் ....※

(இ-ள்.) எல்லாவுயிர்க்கும்- சகலவுயிர்களுக்கும் - பகலென்றும்-(பிறவுயிரோடு)கூடாமையென்னும்-பண்பின்மை-தீயகுணத்தை }
-பாரிக்கும்-வளர்க்கும்- நோய்-குற்றமாவது- இகல்-மாறுபாடாம்-என்ப-என்று (நூலோர்) சொல்லுவர். எ,று.) (கருத்து) எல்லாவுயிர்க்குந் தீயகுணத்தைவளர்க்குங் குற்றமாவது மாறுபாடாம் என்பதாம். ❋ மக்களையும் விலங்குகளோடொப்பாக்குவதென்பதுதோன்ற- எல்லாவுயிர்க்குமென்றும், கூடாத தீக்குணத்தைநடுநின்றுவிளைத்தலால்- பகலென்னும் பண்பின்மையென்றும் சொல்லினர்.
[இதனுல் மாறுபாட்டது குற்றம் சொல்லப்பட்டது.] (௧)

பகல்கருதிப் பற்றுசெயினு மிகல்கருதி .... ❋
யின்னுசெய் யாமை தலை....

.... ❋

(இ-ள்.) பகல்- (தம்மோடு) கூடாமையை } -
கருதி-நினைத்து-ப
ற்று-வெறுப்பவைகளை } - செயினும்-
(ஒருவன்) செய்தானாயினும்
ஃக்-ஜூம்-அதி-இகல். (௩௫௧)

-இகல்கருதி- (அவனோடு) மாறுபட்டுதலைக்குறித்து-இன்னா- துன்பந்தருமவைகளை}-செய்யாமை- (தாம் அவனுக்குச்) செய்யாமை|-தலை-உயர்ந்தது. எ-று.) (கருத்து) ஒருவன் வெறுப்பானவற்றைச்செய்தானாயினுந் துன்பந்தருபவைகளைச் செய்யாமை தலைமை என்பதாம். ❋ துன்பந்தருமவைகளைச் செய்யில் பகைமை வளரத் தாம் தாழ்ந்துவருதலாலும், ஒழியில் அவ்வெறுப்பவைகள் ஓய்ந்துபோகத்தாம் ஓங்கிவருதலாலும், செய்யாமைதலையென்றார். (௨)

இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத்................ ❋
தாவில் விளக்கந் தரும் .... ❋

(இ-ள்.) (ஒருவன்)- இகலென்னும்- மாறுபாடெனப்படுகின்ற-எவ்வம்-துன்பத்தைச்செய்யும்- நோய்-நோயை}-நீக்கின்-(தன்மனத்திலிருந்து) நீக்குவானாயின்- (அந்நீக்குதல்|) -தவலில்லா-(எந்நாளும்) அழிவில்லாமைக்கு ஏதுவாகிய- தாவில்-கெடாத- விளக்கம்-புகழை}-தரும்-(அவனுக்குக்) கொடுக்கும். எ-று.) (கருத்து) ஒருவன் மாறுபாட்டை நீக்குவானாயின் அதுபுகழைத்தரும் என்பதாம். ❋ யாவரும் நட்பாதலால் எல்லாச் செல்வமும் பெற்றுக் கொடைமுதலான காரணங்களால் புகழ்பெறு மென்பதாம். (௩)

இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்..................... ❋
துன்பத்துட் டுன்பங் கெடின்.................................... ❋

(இ-ள்.) இகலென்னும்- மாறுபாடெனப்படுகின்ற- துன்பத்துள்
-துன்பங்கள்பலவினும்-
வனுக்கு) இல்லையாயின்-

துன்பம்-மிகுந்த துன்பம்|-கெடின்-(ஒரு
(அவ்வில்லாமை|) - இன்பத்துள்-இன்பங்

கள்பலவினும்- இன்பம்-மிகுந்தவின்பத்தை 3-பயக்கும்- (அவனுக்குக்) கொடுக்கும். எ-று.) (கருத்து) ஒருவனுக்குமாறுபாடாகிய துன்பநீங்குமாயின துமிகுந்த வின்பத்தைத்தரும் என்பதாம். ❋ துன்பத்துட்டுன்பம்- மாறுபாடுடையோன் பலரோடும்போர்செய்து வலிமைதொலைதலால் யாவர்க்கும் எளியவனு யிருப்பது. அதனைவிரைவிலே தருதலால்- இகலென்னு மெஃகமென்றார்.இன்பத்துளின்பம்-மாறுபாடில்லோன் யாவரும் நட்பாகலால் எல்லாப்பயனும் பெற்றிருப்பது.

(௪)

இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே.... ....❋
மிகலூக்குந் தன்மை யவர் ....❋

(௲௩௨)

அசா-ஆம்-அதி-இகல்.

(இ-ள்.) இகல்-மாறுபாடு (தம்மனத்துத்தோன்றியவிடத்து)-எதிர்சாய்ந்தொழுகவல்லாரை- (அதனைஏற்றுக்கொள்ளாமற்) சாய்ந்து நடக்கவல்லவரை}-மிகலூக்கும்- வெல்லநினைக்கும் - தன்மையவர்-தன்மையையுடையவர்|-யாரே-யாவர். எ-று.) (கருத்து) மாறுபாட்டைநீக்கும்வல்லவரை வெல்லநினைப்பவர் யார் என்பதாம். ❋ மாறுபாட்டைநீக்கிநடத்தல் வேற்றருக்கு எவ்விதத்தாலும் அரிதாகலால் வல்லாரையென்றும், அவர் யாவர்க்கும் நட்பாகலால் அவரை வெல்லநினைப்பவர் யாவரும் இல்லையென்றும், சொல்லினர். [இவை நான்குபாட்டாலும்மாறுபடாதவர்க்குவரும் நன்மைசொல்லப்பட்டது.

இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை.............. ❋
தவலுங் கெடலு நணித்து.............................. ❋

(இ-ள்.) இகலின்- (பிறரோடு) மாறுபடுதலிலே- மிகல்- மிகுதல்-இனிதென்பவன்- (எனக்கு) இனிதென்றுசெய்பவனது- வாழ்க்கை -உயிர்வாழ்க்கை-தவலும்-பிழைபடுதலும்|-(நணித்து) சிறுபொழுதிலுண்டாம்,—கெடலும்-முழுதுங்கெடுதலும்|- நணித்து-சிறுபொழுதிலுண்டாம். எ-று,) (கருத்து) மாறுபடுதலையினிதென்பவன் வாழ்க்கையானது வழுவுதலுங் கெடுதலு முண்டாம் என்பதாம். ❋ மிகுதல்-மேலுமேலு மெழும்பல். இனிதென்பது- தான் வெல்லுதல் குறித்தல். பிழைபடுதல்- வறுமையாலே துன்பப்படுதல். முழுதுங்கெடுதல்- இறத்தல்.—பொருட்கேடும் உயிர்க்கேடும் அப்பொழுதே உண்டாகுமென்பதாம் (கு)

மிகன்மேவு மெய்ப்பொருள் காணு ரிகன்மேவு..........❋
மின்னு வறிவி
ணவர்...❋

(இ-ள்.) இகன்மேவும் - மாறுபாட்டோடு பொருந்துதலையுடைய-இன்னா-துன்பஞ்செய்கின்ற- அறிவினவர்- அறிவையுடையவர்|-மிகன்மேவும்- வெற்றிபொருந்துதலையுடைய- மெய்ப்பொருள்-நீதிநூற்பொருளை}-காணார்-அறியமாட்டார். எ-று.) (கருத்து) மாறுபாட்டாற் றுன்பஞ்செய்யுமறிவினையுடையவர் நீதிநூற்பொருளையறியார் என்பதாம். ❋ இன்னாவறிவு - தமக்கும்பிறர்க்கும் தீங்கையுண்டாக்கும் அறிவு.-வெற்றிவழிநின்றார்க்கு உண்டாவதுகாணப்படும் பிரயோசனத்தை யுடையதாகலால் மெய்நூலெனப்பட்டது. மாறுபாட்டினாலே அறிவுகலங்குதலால்காணாரென்றார்.[இவையிரண்டுபாட்டாலும் மாறுபட்டவர்க்கு வரும் தீங்கு சொல்லப்பட்டது.]

அசு-ஆம்-அதி-இகல். (௩௫௩)

இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை........................ ❋
மிகலூக்கி னூக்குமாங் கேடு............................ ❋

(இ-ள்.) இகலிற்கு-(தன்னுள்ளத்து) மாறுபாடு தோன்றியவிடத்து-எதிர்சாய்தல்-(அதற்கு) எதிரிடுதலையொழிதல்- ஆக்கம்- (ஒருவனுக்கு) ஆக்கமாம்.-அதனை-அம்மாறுபாட்டிலே- மிகல்-மிகுதலை-ஊக்கின்-மேற்கொள்ளுவானாயின்-கேடு-கேடும்-ஊக்குமாம்-(தன்னிடத்துவருதலை) மேற்கொள்ளும் எ,று.) (கருத்து) மாறுபாட்டிற்கெதிர்சாய்தலேசெல்வமதைமேற்கொள்ளிற்கேடாம்என்பதாம். ❋ எதிர்தல்-ஏற்றுக்கொள்ளுதல்: சாய்ந்தபொழுதே வருதலால்-சாய்த லாக்கமென்றார். (அ)

இல்கா ணுக்கம் வருங்கா லதனை........................ ❋
மில்கானுங் கேடு தரற்கு .... ❋

(இ-ள்.) (ஒருவன்|)-ஆக்கம்வருங்கால்- (தன்னிடத்து) ஆக்கம்வரும்போது-(காரணம் உண்டாயினும்)-இகல்- மாறுபாட்டை}--காணான்-நினையான்.—கேடுதரற்கு-(தனக்குக்) கேடுசெய்துகொள்ளுமிடத்து-(காரணம் இல்லாதிருந்தும்)-அதனை- அதனிடத்தே--மிகலை-மிகுதலை-காணும்-நினைப்பான். எ,று.) (கருத்து) ஒருவன் செல்வம்வரும்போது மாறுபாட்டைக்காணான் கேடுவரும்போது அதனைநினைப்பான் என்பதாம். ❁ மாறுபாட்டால் வருங்கேடு பிறரால் அன்றென்பது தோன்ற-தரற்கென்றார். ஆக்கக்கேடுகட்கு முன்மாறுபடாமையும் படுதலும் உண்டாமென்பதாம். (கூ)

இகலானா மின்னாத வெல்லா நகலானா ....*
நன்னய மென்னுஞ் செருக்கு ....*

(இ-ள்.) இகலான்- மாறுபாடொன்றினாலே- இன்னாதவெல்லாம்-துன்பஞ்செய்பவையெல்லாம்|—ஆம் - உண்டாகும்- நகலான்-நட்பொன்றினாலே-நன்னயமென்னும்- நல்லநீதியென்னும்- செருக்கு-பெருஞ்செல்வம்|—ஆம். உண்டாகும். எ;று.) (கருத்து) மாறுபாட்டாற்றுன்பமெல்லாமுண்டாம் நட்பால் செல்வமுண்டாம் என்பதாம். ❁ இன்னாதன-வறுமை பழிபாவங்கள் முதலானவை நகல்-மகிழ்தல். அதுவும் செருக்கென்பதும் தன்றன்காரணங்களுக்காயின நயமென்னுஞ் செருக்கெனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். [இவைமூன்றுபாட்டாலும்அவ்விருமையுஞ்சொல்லப்பட்டன.

[அக]

அஎ-ஆம்-அதி-பகைமாட்சி.

அஃதாவது - அறிவில்லாமை முதலாகிய குற்றங்களுடைமையால் பகையை மாட்சிமைப்படுத்தல். அரசர்க்கு எவ்வழியாலும் பகையில்லாமைகூடாமையால்மேலேபொதுவகையால் விலக்கப்பட்ட இகலை இவ்விடத்தே சிறப்பு வகையால் விதிக்கின்றாராகலால் இது அதன் பின்வைக்கப்பட்டது.

வலியார்க்கு மாறேற்ற லோம்புக லோம்பா...... .... *
மெலியார்மேன் மேக பகை........................ ...... *

(இ-ள்.) வலியார்க்கு- (தம்மின்) வலியவர்க்கு- மாறேற்றல்-பகையாயெதிர்தலை- ஓம்புக- ஒழியக்கடவர்.—மெலியார்மேல் - மற்றை மெலியவர்க்கு- பகை-பகையாகுதலை-ஓம்பா-ஒழியாமல்-மேக-விரும்பக்கடவர். எ,று.) (கருத்து) வலியவர்க்கெதிர்தலை நீங்கக்கடவர்மெலியவர்க்குப் பகையாதலை விரும்பக்கடவர் என்பதாம். ✽ வலியாரென்றவிடத்துத் துணைவலியும் அடங்கலால் மெலியாரென்ற விடத்துத் துணைவலியில்லாமையும் கொள்ளப்படும். அத்துணைதான் - படைபொருள் முதலாகிய வேற்றுமைத் துணையும், நல்லறிவுடைமை நீதிவழியொழுகல் முதலாகிய ஒற்றுமைத் துணையும், எனவிரண்டாம்,அவ்விரண்டுமில்லாரை வெல்வார்க்கு வலிமை தொலையாமையால்அவரோடு பகைத்தல் விதிக்கப்பட்டது. [சிங்கநோக்காகிய இதனுள் பகைமாட்சி பொதுவகையாலே சொல்லப்பட்டது.] (க)

அன்பில னான்ற துணையிலன் றான்றுவ்வா..................*
னென்பரியு மேதிலான் றுப்பு..........................*

(இ-ள்.) (ஒருவன்!)- அன்பிலன்- (தன்சுற்றத்தார்மேல்) அன்பில ன்.—ஆன்ற துணையிலன்- (அதுவேயன்றி) வலிய துணையிலன்.- தா ன்றுவ்வான்- (அதன்மேல்) தான்வலியிலன்-(அப்படிப்பட்டவன்!) ஏதிலான்- (தன்மேல்வந்த) பகைவனது- துப்பு-வலிமையை}-என் பரியும்-எப்படித்தொலைப்பான். ஏ,மு.) (கருத்து) அன்பும் துணையு ம்வலிமையு மில்லாதவ ன்பகைவனது வலிமையை யெப்படி நீக்கு வான் என்பதாம். ❁ சுற்றமும் முன்சொல்லப்பட்ட இருவகைத்து ணையும் தன்வலியும் இல்லுகலால் அவன்மேலே செல்வார்க்குவலிவள ர்வதல்லாமல் தீர்கலயா தென்பதாம். (௨)

௮௭-ஆம்-அதி-பகைமாட்சி.

(௩௫௫)

அஞ்சு மறியா னமைவில னீகலான் .... *
றஞ்ச மெளியன் பகைக்கு.. *

(இ-ள்.) (ஒருவன்)-அஞ்சும்- (அஞ்சவேண்டாதவைகளுக்கு) அஞ்சுவான்.-அறியான் - (அறியவேண்டுமவைகளை}) அறியான்.—அமைவிலன்- (பிறரோடு) பொருத்தமிலன் - ஈகலான் - (இவைகளின் மேலும் யாவரிடத்தும்) உலோபகுணமுடையன்.—(இப்படிப்பட்டவன்|)-பகைக்கு-பகைவர்க்கு- தஞ்சமெளியன்- மிகவெளியனுவான். எ,-று.) (கருத்து) அஞ்சுபவனு மறியாதவனு நட்பில்லாதவனு மூலோபனுமானவன் பகைவர்க் கெளியவனுவான் என்பதாம். ❁ தஞ்சமெளியனென்பவை- ஒருபொருளேக்குறித்துவந்த பலசொல். இந்நான்குகுற்றமு முடையான் பகையில்லாமலும் அழியுமாகலால்தஞ்சமெளியனென்ருர். (ரு)

நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும் .... *
யாங்கணும் யார்க்கு மெளிது .... *

(இ-ள்.) (ஒருவன்|)-வெகுளி-கோபத்தினின்றும்-நீங்கான்-நீங்காதவன்-நிறையிலன்- (அதுவேபன்றித்தா) ஙிறையுடையனல்லன் — (அவன்மேலேசெல்லுதல்|)- எஞ்ஞான்றும்- எந்நாளும்- யாங்கணும்-எவ்விடத்தும்- யார்க்கும்-யாவருக்கும் - எளிது-எளிமை. எ,-று.) (கருத்து) கோபத்தையு நிறையில்லாமையுமுடையவன் பகைவர்க்கெளியவனுவான் என்பதாம். ❁ நிறை-மறைபிறரறியாமை- இவன் கோபகுணமுடையவனுகலாலும், ரகசியத்தை வெளிப்படுத்தலாலும்இவன்மேலே போர்க்குச் செல்வார்க்குக் காலமும் இடமும் வலியும்அறிந்து செல்லுதல் வேண்டுவதில்லையாயிற்று. (சு)

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்.....*
பண்பிலன் பற்றார்க் கினிது.... ....
....*

(இ-ள்.) (ஒருவன்|)-வழிநோக்கான்-நீதி நூலைக்கல்லான்.- வாய்ப் பனசெய்யான்- (அது) விதித்ததொழில்களைச் செய்யான்.—பழி நோக்கான்- (தனக்குவரும்)பழியைப்பாரான்.—பண்பிலன்-குண முடையனல்லன்.—(அவன்பகைமை|)-பற்றார்க்கு-பகைவர்க்கு-இ னிது-இன்பம். எ,று.) (கருத்து) நீதி நூல்கல்லாதவன் விதித்தனசெ ய்யாதவன் பழிநோக்காதவன் குணமில்லாதவன் பகைவர்க் கெளிய னுவான் என்பதாம். ❋ பழையோராதியாக வழங்கிவருதலால் வழி

(ருகூ) அஎ-ஆம்-அதி-பகைமாட்சி.

யென்றும்தப்பாது பிரயோசனப்படுதலால்-வாய்ப்பனவென்றும், இக்குற்றங்களுடையவன் தானே அழிதலால் பற்றார்க்கினிதென்று ம், சொல்லினர். (ரு)

காணச் சினத்தான் கழிபெருங் காமத்தான் ....
பேணமை பேணப் படும் ....

❋

❋

(இ-ள்.) காணுச்சினத்தான்- (தன்னையும்பிறரையும்) அறியாமைக்கு ஏதுவாகிய கோபத்தையுடையவன் (யாவன்.) - கழிபெருங்காமத்தான்- மேலுமேலும் வளராநின்ற மிகுந்த காமத்தையுடையவன் (யாவன்.)-பேணுமை- (அவனதுபகைமை})-பேணப்படும்-விரும்பிக்கொள்ளப்படும். எ,று.) (கருத்து) கோபத்தையுங் காமத்தையுமுடையவன் பகைவர்க்கெளியன் என்பதாம். ❀ முன்சொல்லப்பட்டவனுக்கு யாவரும்பகை யாகலாலும், பின்சொல்லப்பட்டவனுக்குக் காரியம் தோன்றுமையாலும், தாமே அழிவனென்பதுபற்றி பேணுமை பேணப்படுமென்றார். (சு)

கொடுத்துங் கொளல்வேண்டு மன்ற வடுத்திருந்து .... ❋
மாணுத செய்வான் பகை.............................❋

(இ-ள்.) அடுத்திருந்து- (தொழிலைத்) தொடங்கியிருந்து-மாணுத-(அதற்கு) ஏற்காதவைகளை}-செய்வான்- செய்பவனது-பகை-பகைமையை}- கொடுத்தும்- (சிலபொருள் அழியக்) கொடுத்தாயினும்—மன்ற-நிச்சயமாக-கொளல்வேண்டும்-கொள்ளுதல்வேண்டும். எ,று.) (கருத்து) எலாதவற்றைச் செய்பவன் பகைமையைப்பொருள்கொடுத்துங் கொள்ளல் வேண்டும் என்பதாம். ❀ ஏற்காதவை மெலியவனுயிருந்து துணிதலும், வலியவனுயிருந்து தணிதலும்,முதலாயின.—அப்பொழுது அதனுலே சிலபொருள் அழியினும்பின்னே பலபொருள்களைப் பெறுதற்குச் சந்தேகம் இல்லாமையால்- கொடுத்துங் கொளல்வேண்டு மன்றவென்றார்- [இவை ஆறுபாட்டாலும் அதுசிறப்புவகையாலே சொல்லப்பட்டது.] (எ)

குணனிலனுய்க் குற்றம் பலவாயின் மாற்றூர்க்... .. ..❋
கினனிலனு மேமாப் புடைத்து.... ....❋

(இ-ள்.) (ஒருவன்)-குணனிலனுய்-குணமொன்று மிலனுய்- குற்றம்பலவாயின்-(உடைய)குற்றம்பலவாகியவிடத்து— இனனிலனும்-(அவன்|) துணையில்லாதவனுகும் — (அவ்விலனுகுகையே)-மாற்

(௬௫௱)

றார்க்கு-(அவன்) பகைவர்க்கு - ஏமாப்புடைத்து - துணையாகுந்தகை மையுடைத்து-எ-று.) (கருத்து) குணமில்லாதவனைப் பலகுற்றமுடையவனாகில் துணையில்லாதவனுமான அவன் பகைவர்க் கெளியன் என்பதாம். ❋ குணம்-இறைமாட்சி யுள்ளே சொல்லப்பட்டவை.— குற்றம்-இவ்வதிகாரத்துள்ளே சொல்லப்பட்டவையும், மற்றும் இப்படிப்பட்டவையும், ஆம்.— துணை- சுற்றநட்புப்பொருள் படைமுதலானவை.—பகைவர்க்கு இவ்வழியால் உண்டாகும் பயன்தானே உண்டாமாகலால்- ஏமாப்புடைத்தென்றார்.

(௮)

செறுவார்க்குச்
சேணிகவா இன்ப மறிவிலா.... .. ... . ❋
அஞ்சும் பகைவர்ப் பெறின்
.... ❋

(இ-ள்.) அறிவிலா-(நீதியை) அறிதலில்லாத- அஞ்சும்-அஞ்சுகின்ற-பகைவர்-பகைவரை- பெறின்- பெற்றால்- செறுவார்க்கு- (அவ

ளை) வெல்வார்க்கு-சேண்- உயர்வுள்ள- இன்பம்- இன்பங்கள்;-இக வா-நீங்கா. எ,று.) (கருத்து) நீதியையறியாத பகைவரைப் பெற்று ல்வெல்பவர்க்கின்பமாம் என்பதாம். ❊ உபாயமறிதலும், அறிந்தா ல்செய்து முடிக்குந்திடமும், இல்லாதவரோ பகைவராதல் கூடாமை யால்-பெறினென்றும், அவரை அறிந்து மேற்சென்ற பொழுதேப கையில்லாமையும், செல்வமும், ஒருசேர அடைதலாலே-சேணுடை யின்ப மிகவுமாவென்றும், சொல்லினர். (கூ)

கல்லான் வெகுளுஞ் சிறுபொரு

ளெஞ்ஞான்று............ ❊

மொல்லானை யொல்லா தொளி .. ..

.... ❊

(இ-ள்.) கல்லான்- (நீதிநூல்களைக்) கல்லாதவனோடு-வெகுளும்-ப கைத்தலால்வரும்- சிறுபொருள்-எளியபொருளை)-ஒல்லானை-அடை யாதவனை)-எஞ்ஞான்றும்-எந்நாளும்-ஒளி-புகழ்|- ஒல்லாது-அடை யாது. எ,று.) (கருத்து) கல்லாதவனுடன் பகைத்தலால்வரும் பொ ருளை யடையாதவனைப் புகழடையாது என்பதாம். ❊ சிறுபொரு ள்-முயற்சி சிறிதாகிய பொருள். நீதியறியாதவனை வெல்லுதல் எளி தாயிருக்கவும் அதுமாட்டாதவனை வெற்றியால்வரும் புகழ் கூடா தென்பதாம். ஆகவே இச்சிறிய முயற்சியாலே பெரியபய னடைக வென்றபடியாயிற்று. [இவைமூன்றுபாட்டாலும் ஆதனலாகியபய ன்சொல்லப்பட்டது.] (ய)

அஅ-ஆம்-அதி-பகைத்திறந்தெரிதல்.

அஃதாவது- மாட்சிமைப்படாத பகையை ஆக்குதற்குற்றமும்,மு
ன்னாய்நின்ற பகையுள்- நட்பாக்குந்தன்மையதும்,அயலாக்கு
ந்தன்மையதும்,அவைகளிலேசெய்வதும்,மற்றைக்களை
யுந் தன்மையதும், அதனிடத்தே செய்வனவும்,
களையும் பருவமும், களையாமற்போனால்படு
மிழுக்கமும், என்று இவ்விதங்களை ஆ
ராய்தல். இவையெல்லாம் மாட்சிமைப் படாத
பகையினவாகலால் இது பகைமாட்சியின்
பின்வைக்கப்பட்டது.

பகையென்னும் பண்பி
லதனை யொருவ..................*

னகையேயும் வேண்டற்பாற் றன்று..........
.................*

(இ-ள்.) ஒருவன்-ஒருவன்- பகையென்னும்- பகையென்று சொல்லப்படும்-பண்பிலதனை- தீமையுண்டாக்குவதனை} - நகையேயும்-விளையாட்டிடத்தேயாயினும்- வேண்டற்பாற்றன்று - விரும்புதற்றன்மையை யுடையதன்று' — (நீதிநூல்-1). எ-று.) (கருத்து) ஒருவன்பகையாகிய தீமைக்குணங்களை விளையாட்டிலும் விரும்பாதிருக்கக்கடவன் என்பதாம். ❊ மாட்சிமைப் படாத பகையை ஆக்கிக்கொள்ளுதல் எவ்விதத்தாலும் தீமையே தருதலால் பண்பிலதென்றும், அதனை விளையாட்டிடத்து வேண்டினும் கோபமேவிளைந்து மெய்யாமாகலால்- நகையேயுமென்றும், வேண்டாமை பழைமை யோர் துணிவென்றற்கு- நீதிநூல்மேல் வைத்தும், சொல்லினர்.நீதி நூல்வருவிக்கப்பட்டது. (க)

வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க.......... ❊
சொல்லேர் ருழவர் பகை ....
....❊

(இ-ள்.) (ஒருவன்|)- வில்லேர்-வில்லேராகவுடைய-உழவர்- உழவரோடு-பகைகொளினும்- பகைகொண்டாலும் - சொல்லேர்-சொல்லேராகவுடைய-உழவர்-உழவரோடு-பகை-பகையை}-கொள்ளற்க கொள்ளாதொழியக்கடவன். எ-று.) (கருத்து) வீரர்பகையைக்கொண்டாலு மந்திரிகள் பகையைக் கொள்ளாதிருக்கக்கடவன். சொல்லேருழவர்-மந்திரிகள் என்பதாம். ❊ சொல்-ஆகுபெயராய் நீதிநு

அ-அ-ஆம்- அதி-பகைத்திறந்தெரிதல். (ரு
௲கூ)

லின்மேல்நின்றுவீரம் ஆலோசனை என்கிற ஆற்றல்களுள் வீரமேயு
டையவரோடு பகைகொண்டால் கேடுவருவது நிச்சயமன்று. வந்
தாலும் தனக்கேயாம். மற்றை ஆலோசனையுடையவரோடானால் த
ன்வமிசத்தோர்க்கும் தப்பாது வருதலால்-அதுகொள்ளினும் இது
கொள்ளற்கவென்றார், கொளினும் என்கிற உம்மையால் வில்லேரு
ழவர்பகையும் ஆகாமை பெறப்படும்.— இரண்டுமுடையவரோடு
கொள்ளலாகாமை சொல்லவேண்டா வாயிற்று. (௨)

ஏமுற் றவரினு மேழை தமியனாய்ப்............................ *
பல்லார் பகைகொள் பவன்.................................... *

(இ-ள்.) தமியனாய்- (தான்) தனியனாயிருந்துகொண்டு- பல்லார்- பலரோடும்- பகைகொள்பவன்- பகையைக்கொள்வோன் | - ஏமுற்றவரினும்- பித்தங்கொண்டவரினும்- ஏழை-அறிவிலன். எ-று,) (கருத்து) தனித்திருந்து பலர் பகையைக்கொள்பவன் பித்தரினு மறிவில்லான் என்பதாம். ※ தனிமை- சுற்றநட்புப்படை முதலானவையில்லாமை.—மயக்கத்தால் அவ்விருவரும் ஒப்பாராயினும் பித்தங்கொண்டவர் அதனாலே தீங்கடையாமையால் தீங்கடைதலுமுடைய இவனை அவரினுமேழையென்றார்,—தீங்காவது- துணையுள்ளவிடத்தும் வெல்லுதல் சந்தேகமாயிருக்க அத்துணையில்லாமலும்பலரோடும் பகைகொண்டு அவரால் வேறுவேறு போர்செய்யிடதும்ஒருமுகமாகப் போர்செய்யிடத்தும், அழிந்தே விடுதல். [இவை மூன்றுபாட்டாலும் பகைகொள்ளுதற் குற்றம் பொதுவினும் சிறப்பினும் சொல்லப்பட்டது:]
(௩)

பகைநட்பாக் கொண்டொழுகும்
பண்புடை யாளன்...... *

றலகைமைக்கட் டங்கிற்
றுலகு.................................*

(இ-ள்.) பகை-பகையை}-நட்பாக்கொண்டொழுகும்-(வேண்டியபோது வேறுபடுத்தித்தனக்கு) நட்பாகச்செய்துகொண்டு நடக்கும்—பண்புடையாளன்- இயல்பையுடைய அரசனது-தகைமைக்கண்-பெருமையுள்ளே-உலகு-உலகம்|-தங்கிற்று- தங்கியது. எ-று.) (கருத்து) பகையை நட்பாகக்கொண்டு நடக்குமரசன் பெருமைக்குள்ளே யுலகந்தங்கியது என்பதாம். ❊ வேறுபடுத்தல்-பகை நிலையினீக்குதல். ஒழுகல்- நீதிவழிநடத்தல். பெருமை-பொருள் படை என்கிற விருவகை ஆற்றல். அதன்வழிய தாதற்கு என்றும் வேறுபாடில்லாமையால் அத்துணிவுபற்றித் தங்கிற்றென்றார். (௪)

(௬௱ய)

அஅ-ஆம்-அதி-பகைத்திறந்தெரிதல்.

தன்றுணை யின்றாற் பகையிரண்டாற் றானொருவ........*
னின்றுணையாக் கொள்கவற்றி னொன்று.................. *

(இ-ள்.) தன்றுணை-தனக்கு உதவுந் துணையோவெனில்-இன்று-இல்லை.—பகை- (நலிவுசெய்யும்) பகையோவெனில்- இரண்டு-இரண்டு-(இப்படியிருக்கிறபோது)- தானொருவன் ஒருவனாகியதான்—அவற்றின்-அப்பகையிரண்டனுள்-ஒன்று- (பொருந்தியதாகிய) ஒன்றை}-இன்றுணையா- (அப்போதைக்கு) இனிய துணையாக-கொள்க-(செய்து) கொள்ளக்கடவன். எ-று.) (கருத்து) தனக்குதவுந்துணையில்லை. வருத்தும்பகையிரண்டு. இவ்விரண்டிற் பொருந்தியதொன்றைக்கொள்ளக்கடவன் என்பதாம் ❊ பொருந்தியதாவது - மற்றதை வெல்லுதற்கு ஏற்றது —அப்பொழுது- அவ்வெல்லும்பொழுது.—வேறுபாடில்லாமல் செய்துகொள்க வென்றற்கு- இன்றுணை

யாகவென்றார். ஆலிரண்டும்-அசை. [இவையிரண்டுபாட்டாலும் நட்பாக்கற் றன்மையது சொல்லப்பட்டது.] (ரு)

தேறினுந் தேறா விடினு மழிவின்கட் *
டேறான் பகாஅன் விடல். *

(இ-ள்.) (பகைவன்)-தேறினும்- (முன்) தெளிந்தானாயினும்-தேறாவிடினும்- தெளிந்திலனாயினும்- அழிவின்கண் - (தனக்குப்புறத்தொருதொழிலால்) தாழ்வுவந்தவிடத்து - தேறான்- கூடானாகியும்- பகாஅன் -நீங்கானாகியும்- விடல்- (நடுவே) விட்டுவைக்கக் கடவன் எ-று.) (கருத்து) பகைவன் தெளிந்தானாயினுந் தெளிந்திலனாயினுந்தாழ்விடத்துக் கூடானாகியு நீங்கானாகியு மிருக்கக்கடவன் என்பதாம். ❋ முன்தெளிந்தானாயினும் அப்போது கூடாதொழிகவென்றது-உள்ளாய்நின்று கெடுத்தலேக்கி.—தெளிந்திலனாயினும் அப்போது நீங்காதொழிகவென்றது - அவ்வழிவிற்குத் துணையாதலேக்கி. [இதனால் அயலாக்குந் தன்மையது சொல்லப்பட்டது.]

நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க *
மென்மை பகைவ ரகத்து. *

(இ-ள்.) நொந்தது-நொந்ததனை}-அறியார்க்கு- (தாமாக) அறியாத நட்பினர்க்கு- நோவற்க-(தன்) நோவுசொல்லாதிருக்கக்கடவன்.—மென்மை- வலியில்லாமையை}- பகைவரகத்து- (அதைப்பார்த்திருக்கும்)

பகைவரிடத்து- மேவற்க- மேலிட்டுக் கொள்ளாதிருக்கக்கடவன். எ-று.) (கருத்து) நொந்ததை யறியார்க்குத் தன்

ஞேவைச்சொல்லா திருக்கக்கடவன். வலியில்லாமையைப் பகைவரிடத்து மேலிட்டுக்கொள்ளா திருக்கக்கடவன் என்பதாம். ❋ பகைவரிடத்தே செய்யலாகாதது சொல்லவந்தவர் - நட்பினரிடத்தேசெய்யலாகாததும் உடன் சொல்லினர். [இதனல் அவ்விருவகை யிடத்தும் செய்வது சொல்லப்பட்டது.] (எ)

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்.... .... ❋
பகைவர்கட் பட்ட செருக்கு .... ❋

(இ-ள்.) வகையறிந்து-(தான்தொழில்செய்யும்) வகையை அறிந்து-தற்செய்து - (அதுமுடித்தற்கு ஏற்பத்) தன்னைப்பெருக்கி-தற்காப்ப-(மறதிஅடையாமல்) தன்னைக்காக்கவே-பகைவர்கண்-(தன்) பகைவரிடத்து-பட்ட-உண்டாகிய-செருக்கு-களிப்பு |-மாயும்-கெடும். எ-று,) (கருத்து) தொழில்வகையறிந்து தன்னைக்காக்கப்பகைவர்செருக்குங்கெடும் என்பதாம். ❋ வகை-வலியவனைத்தான்நேரேபோர்செய்விதமும், மெலியவனைவளவிலேபோர்விலக்கும்விதமும், முதலானவை.—பெருக்கல் -பொருள்படைகளாலேபெருகச்செய்தல்.-களிப்பு-இவ்வழியால் வெல்வோமென்றெண்ணி மகிழ்ந்திருத்தல் இவ்விறுகுதல்அறிந்துதாமே அடங்குவனென்பதாம். [இதனாற் களையுந்தன்மை யதனிடத்துச்செய்வன சொல்லப்பட்டன.]

இளைதாக முண்மரங் கொல்க களையுநர்...... ....❋
கைகொல்லுங் காழ்த்த விடத்து ....❋

(இ-ள்.) முண்மரம்- (களையவேண்டுவதாகிய) முள்ளுமரத்தை- இளைதாக-இளையதாகிய நிலையிலே-கொல்க- களையக்கடவர்.—(அல்லாமல்)-காழ்த்தவிடத்து- முதிர்ந்த நிலையில்- (களையத்தொடங்கினல்)-களையுநர்-களைபவரது-கை-கையை-கொல்லும்-(அதுதானே) களையும். எ,று.) (கருத்து) முள்ளாகியமரத்தை யிளைமையிற் களையக்கடவர் அதுமுதிர்ந்தாற்களைபவர் கையைக்களையும் என்பதாம். ❋ (களையப்படுவதாகிய தம்பகையை அதுமெலிதாகிய காலத்தே களைக அப்படிச்செய்யாமல் வலிதாய காலத்திலே களையத்தொடங்கினல் தம்மை அப்பகைதானே களையுமென்பது தோன்ற நின்றமையால் இது பிறிது மொழிதலணி) [இதனாற் களையும் பருவம் சொல்லப்பட்டது.] (௯)

உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர்........ ....*
செம்மல் சிதைக்கலா தார்..........................

[௮௯]

* (௬௭௨)

அ அ-ஆம்-அதி-பகைத்திறந்தெரிதல்.

(இ-ள்.) செயிர்ப்பவர்- (தம்மோடு) பகைப்பவரது- செம்மல்- தருக்கை-(கெடுக்கலாயிருக்க); சிதைக்கலாதார்- (இகழ்ச்சியால்) கெடுக்காதவரசர்- உயிர்ப்ப- (பின்) மூச்சுவிடு மாத்திரத்திற்கு- மன்ற-நிச்சயமாக- உளரல்லர்-இருக்கின்றவரல்லர். எ,று.) (கருத்து) பகைப்பவர் செருக்கைக் கெடுக்காதவரிறப்பர் என்பதாம். ❋ அவர்வலியவராய்த் தம்மைக் களைதல் நிச்சயமாகலால் இறந்தாரேயாவரென்பதாம்.]இதனால் களையாவழிப்படும் இழுக்கம் சொல்லப்பட்டது.] (௰)

உட்பகை.

அஃதாவது- புறப்பகைக்கு இடமாக்கிக்கொடுத்து அதுவெல்லுமளவும் உள்ளாய்நிற்கும்பகை. இதுவும் களையப்படுவதிலேசேர்ந்ததாகலால் பகைத்திறம் தெரிதலின்பின் வைக்கப்பட்டது.

நிழனீரு மின்னாத வின்னா தமர்நீரு......... .... *
மின்னாவா மின்னா செயின்.............................. ... ...*

(இ-ள்.) (ஒருவனுக்கு)- நிழனீரும்- (அனுபவிக்கப் படுவனவாகிய) நிழலும் நீரும்-இன்னாத- (முன் இன்பஞ்செய்வனவாயினும் பின்) நோய்செய்யுமவை|-இன்னா-இனியனவல்லவாம்.-(அதுபோல்)-தமர்நீரும்- (தழுவவேண்டுவனவாகிய) தம்மவரியல்புகளும்|- இன்னாசெயின்- (முன்இன்பஞ் செய்வனவாயினும் பின்) துன்பஞ்செய்யுமவை|- இன்னாவாம் - இனியனவல்லவாம். எ,று.) (கருத்து) ஒருவனுக்குநிழனீரு நோய்செய்யு மதுபோலத் தம்மினத்தா ரியல்புகளுந் துன்பஞ்செய்யும் என்பதாம். ❄ நோய்-பெருங்கால்- பெருவயிறு முதலானவை.— தமரென்றதனால்- உட்பகையாதற்குரியராதிகளெனவறிக. இன்னாசெயல்-முன்வெளிப்படாதிருந்து துணைபெற்றவழி கெடுத்தல். (௧)

வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக.................*
கேள்போல் பகைவர் தொடர்பு...... ...
...............*

(இ-ள்.) வாள்போல்-வாள்போலே (வெட்டுவேோ மென்று வெளி அக-ஆம்-அறி-உட் பகை.) (நகூந)

ப்பட்டுநிற்கும்)-பகைவரை- சத்துருக்களை}-அஞ்சற்க- அஞ்சாதிருக்கக்கடவர்.— (அப்படிநில்லாமல்)-கேள்போல்- உறவினர்போலே (மறைந்துநிற்கும்)-பகைவர்- பகைவாது-தொடர்பு- நட்பை}-அஞ்சுக-அஞ்சக்கடவர். எ,று.) (கருத்து) வெட்டுவோ மென்னும் பகைவர்க் கஞ்சாதிருக்கக்கடவர். உறவினர்போ லிருக்கும்பகைவர்க்கஞ்சக்கடவர் என்பதாம். ❋ முன்னே அறிந்து காக்கப்படுதலால்-அஞ்சற்கவென்றும், அப்படி அறிவும் காக்கவுங் கூடாமையால் கெடுதல் நிச்சயமென்பதுபற்றி- அஞ்சுகவென்றும், சொல்லினர்.-மின் செய்யும் பகையினும் கொடிதாகலாலும், காக்குங்காலம் அறிவரிகலாலும், அஞ்சப்படுவது முன்செய்த அவர் நட்பாயிற்று. [இவையிரண்டுபாட்டாலும் உட்பகை யாகாதென்பது சொல்லப்பட்டது] (௨)

உட்பகை யஞ்சித்தற் காக்க வுலைவிடத்து.... ... . ❋
மட்பகையின் மாணத் தெறும். ....
....❋

(இ-ள்) உட்பகை- உட்பகையாயினோரை}- அஞ்சி-பயந்து- தற்காக்க- தன்னைக்காத்துக்கொண்டு நடக்கக்கடவர் — (அப்படிநடவாதபோது)- உலைவிடத்து - (தனக்கு) ஓர் தளர்ச்சிவந்த விடத்து-மட்பகையின்- (குயவன்) மட்கலத்தை அறுக்கும் ஆயுதம்போல்—

மாண-தப்பாமல்-தெறும்- (அவர்) கெடுப்பர். எ-று.) (கருத்து) உட்பகைக்கஞ்சித் தன்னைக்காக்கக்கட்வர். காவாவிடிற் பகைவர்கெடுப்பர் என்பதாம். ❁ காத்தல் - அவரணையாமலும்,
அவருக்குஉடம்
படாமலும்,
மூறுத்தலால்

பரிகரித்தல். பகைமைதோன்றாமல் உள்ளாயிருந்தே கெடுதல் தப்பாதென்பதாம். (௩)

மனமாணா வுட்பகை தோன்றி
னினமாணா..................❁
வேதம் பலவுந் தரும்..................
..................❁

(இ-ள்.) மனமாணா- (புறந்திருந்தியது போன்று) அகந்திருந்தாத-உட்பகை-உள்ளுட்பகை- தோன்றின்- (அரசனுக்கு) உண்டாமாயின்- (அது)- இனமாணா-சுற்றம்-வசப்படாமைக்கு ஏதுவாகிய- ஏதம்பலவும் - குற்றம்பலவும்} - தரும்- (அவனுக்குத்) தரும். எ-று.)((கருத்து) அரசனுக்குட்பகை யுண்டாயின் பலகுற்றமுந்தரும் என்பதாம். ❁ அவை-சுற்றத்தாரை உள்ளாய்நின்று வேறு படுத்தலும், அதனால் அவர் வேறுபட்ட விடத்தே தான் தேருமையும், பின் அவைகளால் விளைவனவும், ஆம். (௪)

உறன்முறையா னுட்பகை தோன்றி

னிறன்முறையா....*

னேதம் பலவுந் தரும் ...

....*

(இ-ள்.) உறன்முறையான்-(புறத்தில்)உறவுமுறைத்தன்மையோடு கூடிய-உட்பகை- உட்பகையானது-தோன்றின்-(அரசனுக்கு)உண்டாயின்- (அது)-இறன்முறையான்- இறத்தன் முறைமையோடு கூடிய-ஏதம்பலவும்- குற்றம்பலவற்றையும்}-தரும்- (அவனுக்குக்) கொடுக்கும். எ,று.) (கருத்து) உறவின்முறை யுட்பகை யரசனுக் குத்தோன்றி லதுபல குற்றத்தையுந் தரும் என்பதாம். * அவை- புறப்பகைக்குத் துணையாய்நின்றே அதுதோன்றாமல் கொல்லு கைமுதலாகிய வஞ்சனைசெய்தலும், மந்திரிகளை முதலாகிய அங்கங்களைத் தேய்த்தலும், முதலானவை. (ரு)

ஒன்றாமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும் ....*

பொன்றாமை யொன்ற லரிது..................... ...... *

(இ-ள்.) ஒன்றாமை- பகைமை-ஒன்றியார்கண் (தனக்கு) உள்ளாயினாரிடத்து- படின்- உண்டாகுமாயின்- பொன்றாமை- இறவாமை- ஒன்றல்- (அரசனுக்குக்) கூடுதல்|-எஞ்ஞான்றும்- எந்நாளும்- அரிது-அருமை. எ,று.) (கருத்து) தனக்குள்ளாயினாரிடத்துப் பகையுண்டாயி னரசனுக்கிறத்தலைத்தரும் என்பதாம். ❀ பொருள் படை முதலாகிய உறுப்புக்களாலே பெரியனாகிய காலத்து மென்றற்கு- எஞ்ஞான்றுமென்றார். [இவைநான்கு பாட்டாலும் அதனால்தனக்கு வரும் தீங்கு சொல்லப்பட்டது.] (சு)

செப்பின் புணர்ச்சிபோற் கூடினும் கூடாதே........ *
உட்பகை யுற்ற குடி.................................*

(இ-ள்.) செப்பின்- செப்பினது-புணர்ச்சிபோல்- புணர்ச்சிபோல்-கூடினும்- (புறத்தே வேற்றுமை தெரியாமற்) கூடினாராயினும் -உட்பகை- உள்ளிடத்துப்பகை- உற்ற-உண்டாகிய—குடி - குடியிலுள்ளார்|-கூடாதே- (அகத்தேதம்முட்) கூடார். எ,று.) (கருத்து) உள்ளிற்பகைபொருந்திய குடியிலுள்ளார் செப்பின் மூடிபோற்கூடினாராயினு மனவொற்றுமையிற்கூடார் என்பதாம். ❀ செப்பின் புணர்ச்சி- செப்புமேன்மூடியோடு புணர்ந்த புணர்ச்சி.— அவருட்பகையால் மனம் வேறுபட்டமையால் புறப்பகைபெற்றவிடத்தே வேறுவேறாவரென்பதாம். (எ)

௮௯-ஆம்-அதி-உட்பகை. (௬௫௧)

அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு....
துட்பகை யுற்ற குடி..............................

*

*

(இ-ள்) (முன்வளர்ந்து வந்ததாயினும்)- உட்பகையுற்றகுடி-உட்பகைப்புண்டாகிய குடியானது|-அரம்பொருத- அரத்தினலேதேய்க்கப்பட்ட-பொன்போல- இரும்புபோல - பொருது- (அதனலே) தேய்க்கப்பட்டு-உரம்-வலிமை-தேயும் - தேய்ந்துபோம். எ,று:) (கருத்து) உட்பகைபொருந்திய குடியானது அரத்தினலே தேய்க்கப்பட்டவிரும்புபோலக் கெடும் என்பதாம். ❁ காரியஞ் செய்வது போன்று பொருந்தி மெல்ல மெல்லப் பரிசயித்தலால் வலிமை தேய்ந்துவிடுமென்பதாம். [இவையிரண்டுபாட்டாலும்அவன்குடிக்கு வரும் தீங்கு சொல்லப்பட்டது.] (அ)

எட்பகவன்ன சிறுமைத்தே யாயினு.................... ...... *
முட்பகை யுள்ளதாங் கேடு...... ....

....*

(இ-ள்.) உட்பகை-(அரசனது) உட்பகை- (அவன்பெருமையை நோக்க)-எட்பகவன்ன- எள்ளின்பிள்வையொத்த - சிறுமைத்தேயாயினும்-சிறுமை யுடையதே யாயினும்-கேடு- (அப்பெருமையெல்லாம் அழியவரும்) கேடு-உள்ளதாம்- (அத)னகத்ததாம். எ,று.) (கருத்து) உட்பகை யெட்பிளப்பித் கொட்பான சிறிதாயினுங் கேடுண்டாம் என்பதாம். ❁ மிகவும்பெரியகேட்டுக்கு எல்லவருமளவும் மிகவுஞ் சிறிய உட்பகை உள்ளே அடங்கியிருந்து வந்தால் வெளிப்பட்டுநிற்குமென்பதாம். [இதனலது சிறிதென்று இகழப்படாதென்பது சொல்லப்பட்டது.] (கூ)

உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்........................*
பாம்போ டுடனுறைந் தற்று.................

.... *

(இ-ள்.) உடம்பாடிலாதவர்- மனப்பொருத்த மில்லாதவரோடு— வாழ்க்கை- (ஒருவன்) கூடிவாழும்வாழ்வு|-குடங்கருள்- ஒருகுடிலைச யினுள்ளே-பாப்போடு- நாகப்பாம்போடு-உடனுறைந்தற்று- கூடி வாழ்ந்தாற்போலும். எ-று.) (கருத்து) மனவொற்றுமை யில்லாருடன் கூடிவாழும் வாழ்க்கையானது ஒருகுடிசையுள்ளே பாம்புடன் கூடிவாழ்தல்போலாம் என்பதாம். ❋ இடச்சிறுமையாலும் பழக்கத்தாலும் பாம்பினலே கடிக்கப்படுதல் நிச்சயமாம் ஆகவே அவ்வுவமையால் அவனுயிர்க்கு முடிவுவருதல் நிச்சயமென்பதுபெற்றும்

[கஉ]

(௲௯௱) அகூ-ஆம்-அதி-உட்பகை.

[இதனாலே கண்ணோட்டஞ் செய்யாதவரைக் குசொல்லப்பட்டது.]

கடியக்கடவு னென்ப

(ய)

கூய-ஆய்-அதி-பெரியாரைப்

பிழையாமை

அஃதாவது - பெரியராயினரை அவமதித்து நடவாமை இரட்டுற
மொழிதலாலே பெரியாரென்பது வலிமையினாலே பெரியரா
கிய வேந்தர்மேலும், தவத்தினாலே பெரியராகியமுனிவ
ர்மேலும், நின்றது. மேற்சொல்லாமல் குறைந்து
நின்றதாகலால் இது குரோதத்தால் வருமவ
வைகளது முடிவில்
வைக்கப்பட்டது.

ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார் ....*
போற்றலு ளெல்லாந் தலை ... .*

(இ-ள்.) ஆற்றுவார்-(எடுத்துக்கொள்ளப்பட்டவை யாவும்முடிக்க) வல்லாருடைய- ஆற்றல்- வல்லமைகளை}- இகழாமை - அவமதியாமை|-போற்றுவார்- (தம்மிடத்துத் தீங்குவாராமற்) காப்பவருடைய-போற்றலுளெல்லாம்-காவலுக்குளெல்லாம்-தலை-மிகுந்தது. எ,று.) (கருத்து) வல்லவருடைய வல்லமைகளை யிகழாமையே காவலெல்லாவற்றுள்ளுந்தலை என்பதாம். ❋ ஆற்றலென்பது - பெருமை அறிவு முயற்சி என்கிற மூன்றின்மேலும் நின்றது. இகழ்ந்தவிடத்தே தம்மைக்களைய வல்லாரென்பது தோன்ற-ஆற்றுவாரென்றும், அரண்படை பொருளட்பு முதலாகிய மற்றைக் காவல்கள் அவரால் அழியுமாகலால் அவ்விகழாமையை - தலைமையான காவலென்றும், சொல்லினர். [இதனாலே பொதுவகையால் அவ்விருவகைப் பெரியோர்க்கும் பிழைசெய்யாமைசிறப்புச்சொல்லப்பட்டது

பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாரால்...........*
பேரா விடும்பை தரும்........... ....*

(இ-ள்.) (வேந்தர்)- பெரியாரை- (வலிமைகளாலே) பெரியராயினரை}-பேணாது-நன்குமதியாமல்(அவமதித்து)-ஒழுகின்-நடப்பாராயின்- (அந்நடக்கையானது|) பெரியாரால்- அப்பெரியரால்-பேராவிடும்பை- (எந்நாளும்) நீங்காதுன்பங்களை}-தரும்- (அவருக்

௯௰-ஆம்-அதி-பெரியாரைப்பிழையாமை.

(௩௱எ)

ருக்) கொடுக்கும். எ-று.) (கருத்து) பெரியோரை யவமதித்து நடந்தா லந்நடக்கை தீங்கைத்தரும் என்பதாம். ❋ அத்துன்பங்களாவன-இருமையிலும் ஓயாமல்வருகிற மூவகைத் துன்பங்களுமாம். அவையெல்லாம் தாமே செய்துகொள்ளுகின்றவையென்பது தோன்ற ஒழுக்கத்தை வினைமுதலாக்கியும், பெரியாரைக் கருவியாக்கியும் சொல்லினார் [பொதுவகையால் அவர்க்குப் பிழைசெயற்குற்றம் இதனாற்சொல்லப்பட்டது.] இனிச்சிறப்புவகையாற் சொல்லுவர்.

கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டி......❋
னாற்று பவர்க ணிழுக்கு.................................❋

(இ-ள்.) அடல்வேண்டின்-(வேற்றுவேந்தரைக்) கொல்லுதல்வேண்டில்-ஆற்றுபவர்கண்-(அதனை அப்பொழுதே) செய்யவல்லவேந்தரிடத்து-இழுக்கு-பிழையை)-கெடல்வேண்டின்-(தான்) கெடுதல்வேண்டினானாயின்-கேளாது-நீதிநூலிலேசொல்லப்பட்டதைக்)கேளாமல்-செய்க-(ஒருவன்!) செய்யக்கடவன். எ-று.) (கருத்து) தான்கெடவிரும்பினால் வேற்றரசரைவெல்லும் வேந்தரிடத்துப்பிழை செய்யக் கடவன் என்பதாம். ❋ நீதிநூல் அச்செயலாகாதென்று சொல்லுதலாலே - கேளாதென்றார். (௩)

கூற்றத்தைக் கையால் விளித்தற்றா லாற்றுவார்க்..........❋
காற்றாதா ரின்னா செயல்.... ....
...................❋

(இ-ள்.) ஆற்றுவார்க்கு- மூவகையாற்றலுமுடையவர்க்கு-ஆற்றாதார்-அவ்வாற்றலில்லாதவர்-இன்னா-இன்னாதவைகளை}-செயல்-(முற்பட்டுச்) செய்தல்|-கூற்றத்தை-(தானேயும்வருந்தன்மையனாகிய)கூற்றுவனை}-கையால்- (அதற்குமுன்னே) கைகாட்டி-விளித்தற்று-அழைத்தாலொக்கும், எ-று.) (கருத்து) வல்லமையுடையவர்க்கு வல்லமையில்லாதார் துன்பஞ்செய்தல்இயமனைக்கையா லழைத்தல்போலாம் என்பதாம். ❊ ஆல்-அசை. கையாலழைத்தல் - இகழ்ச்சிக்குறிப்பு. தாமேயும் உயிர் முதலானவைகளைக் கொள்ளுதற்குரியவனை அதற்குமுன்னே விரைந்து தம்மேல்வருவித்துக் கொள்ளுவாருக்கு மரணம் திடமாகவும் சமீபமாகவும் வருமென்பது சொல்லியபடி. [இவையிரண்டுபாட்டாலும் வேந்தர்க்குப்பிழைசெய்தலின் குற்றம் சொல்லப்பட்டது.] (ச)

யா ண்டுச்சென் றியாண்டு முளராகார்
வெந்துப்பின்...,*
வேந்து
செறப்பட் டவர்.......................*

(ருசுஅ)

கூய-ஆம்-அதி-பெரியாரைப்பிழையாமை.

(இ-ள்.) வெந்துப்பின்-வெவ்விதாகிய வலிமையையுடைய- வேந்து-வேந்தனால்-செறப்பட்டவர்- கோபிக்கப்பட்டஅரசர்|-யாண்டுச்சென்று- (அவனைத்தப்பி) எங்கேபோய் (உளராவார்.)- யாண்டும்- எவ்விடத்தும்—உளராகார்- உயிர்வாழ்வாராகார். எ,று.) (கருத்து) வல்லவரசனாற் கோபிக்கப்பட்டவாசர் எவ்விடத்துச்சென்று முயிர் வாழார் என்பதாம் (ஸ்.) வெவ்விய வலியுடைய அரசனுதலாலே அவனது நிலம்விட்டுப் போனவர்க்கு இடங் கொடுப்பாரில்லை உளராகுல்இவர்இனி ஆகாரென்பது நோக்கி அவனோடு நட்புக்கொள்ளுதற்பொருட்டும், தாமேவந்து அடைந்த அவருடைமையை அபகரித்தற்பொருட்டும், கொல்லுவர் அன்றெனின் உடனே அழிவரென்பன நோக்கி-யாண்டுச்சென்றியாண்டு முளராகாரென்றார். [இதனால்குற்றமுடையார் அருமையுடைய அரண்சேர்ந்து முய்யாரென்பது சொல்லப்பட்டது.] (ரு)

எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்............*
பெரியார்ப் பிழைத்தொழுகு
வார்.........................*

இ-ள். (காட்டிடைச்சென்றொருவன்)-எரியால்-(அவ்விடத்து
த்) தீயால்-சுடப்படினும்- சுடப்பட்டாலும்-உய்வு-(ஒருவழியால்)
உயிர்பிழைத்தல்|-உண்டாம்-கூடும்.—பெரியார்-(தவத்தாற்) பெரி
யார்க்கு-பிழைத்தொழுகுவார்- பிழைசெய்துநடப்பவர்|- உய்யார்-
(எவ்வழியாலும்) உயிர்பிழையார். எ-று.) (கருத்து) தீயினாற்சுடப்
படினு மொருவழியிற் பிழைப்புண்டாம். பெரியோர்க்குப் பிழை
செய்து நடப்பவர் பிழையார் என்பதாம். ❋ தீமுன் உடம்பைப்ப
ற்றி அதுவழியாக உயிர்மேலே செல்லுதலால் நடுவிலே உய்யவுங்
கூடும் அருந்தவர் கோபம் அப்படிப்பட்டதல்லாமல்தான் நிற்பது
கணமாய் அதற்குள் யாவர்க்கும் காத்தல் அரிதாகலின் அதுகூடா
தாகலால் அதற்கு ஏதுவாகிய பிழைசெய்யத்தக வென்பதாம். (சு)

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னாந் ❋
தகைமாண்ட தக்கார் செறின்........
.... ❋

(இ-ள்.) தகை-(சாபானுக்கிரகங்களுக்கு ஏதுவாகிய) பெருமை
யால்-மாண்ட-மாட்சிமைப்பட்ட-தக்கார்- அருந்தவர்-செறின்-(அ
ரசனைக்) கோபிப்பாராயின்-வகை- அங்கங்களால்- மாண்ட-அழகு
பெற்ற-வாழ்க்கையும்- (அவ) னரசாட்சியும்|-வான்பொருளும்-(ச
ம்பாதித்துவைத்த) பெரும்பொருளும்|- என்னும்- என்பட்டுவிடும்

கூ௰-ஆம்-அதி-பெரியாரைப்பிழையாமை.

(௮௱௯௰௭)

ன், மு.) (கருத்து) பெரியோர் கோபிப்பாராகில் அரசனரசாட்சியுமவன்பொருளுமிழந்தெண்பயன்படும் என்பதாம். ❋ அங்கம்-அமைச்சு நாடு அரண் படை எனவிவை. செறிவென்பது அவர்சேர்பியாமை தோன்றநின்றது பின்வருமவைகளுக்கும் இது ஒக்கும். அரசன்தன்செல்வக்களிப்பால் அருந்தவரிடத்துப் பிழைசெய்வானாயின் அச்செல்வம் அவர்கோபத்தீயால் ஒரு கணத்துள்ளே வெந்துவிடுமென்பதாம். (எ)

குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு.......... ❋
நின்றன்னார் மாய்வர் நிலத்து.......... ❋

(இ ள்.) குன்றன்னார்-மலையையொக்குமருந்தவர்- குன்ற-கெட மதிப்பின்-நினைப்பாராயின்- நிலத்து-இந்நிலத்து-நின்றன்னார்-நிலைபெற்றாற்போலுள்ளசெல்வர்)-குடியொடு-(தங்) குடியோடு- மாய்வர்-(அப்பொழுதே)மாய்வர். எ, மு.) (கருத்து) பெரியோர் கெடும்படிநினைப்பாராகிற் செல்வர்குடியொடுகெடுவர் என்பதாம். ❋ வெயில்மழைமுதலானவைகளைப்பொறுத்தலும், அசையாமையும், உள்ளிட்ட குணங்களுடைமையால் - குன்றன்னாரென்றார்.— நிலைபெற்றாற்போலுதலாவது மிகவும் பெருஞ்செல்வமுடையோராகலால் இவர்க்கு எந்நாளும் அழிவில்லையென்று கண்டவரால் நினைக்கப்படுதல்.

ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து.......... ❋
வேந்தனும் வேந்து கெடும்..........
.... ❋

(இ-ள்.) எந்திரகொள்கையார்-(ஞாத்தற்கருமையால்) உயர்ந்தவிரதங்களையுடையார்-சீறின்-(அவ்வலிமையால்) கோபிப்பாராயின் -வேந்தனும்-இந்திரனும்- இடைமுரிந்து- நடுவே (தன்பத) மிழந்து-வெந்து-அழிந்து- கெடும்- கெடுவான் எ-று.) (கருத்து) தவத்திற்பெரியோர்கோபிக்கி லிந்திரனுங்கெடுவான் என்பதாம். ❊ இந்திரபதம்பெற்ற நகுடன் பிழைசெய்து அகத்தியமுனிசாபத்தாலதனையிழந்தானென்பதறிக. [இவைநான்குபாட்டாலு முனிவர்க்குப் பிழைசெய்தலின் குற்றஞ்சொல்லப்பட்டது.] (௯)

இறந்தமைந்த சார்புடையா ராயினு முய்யார்.... ... .*
சிறந்தமைந்த சீரார் செறின்.... ....*

(இ-ள்.) சிறந்தமைந்த-மிகவும் அதிகமான- சீரார் - தவத்தையுடையவர்-செறின்- கோபிப்பாராயின் - (அக்கோபிக்கப்பட்டவர்,)- [௯௨]

(௬௭௦)

௯௰-ஆம்-அதி-பெரியாரைப்பிழையாமை.

இறந்தமைந்த-மிகவும்பெரிய- சார்புடையாராயினும் - சார்பையுடையவராயினும்-உய்யார்- (அதுபற்றி) உய்யமாட்டார். எ-று.) (கருத்து) தவமுடையோர் கோபிக்கிற்சார்புடையவரும் பிழையார் என்பதாம். ❊ சார்பு-அரண் படை பொருள் நட்பு-ஆம். அவையெல்லாம் கோபிப்பவரது வலிமையால் திரிபுரம்போல் அழிந்துவிடுமாகலால்-உய்யாரென்றார். [இதனால் அக்குற்றமுடையவர்சார்புபற்றியும்உய்யாரென்பது சொல்லப்பட்டது.] (௰)

❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊

௯௧-ஆம்-அதி-பெண்வழிச்சேறல்.

இனிக்காமத்தால் வருபவை நேரே பகையல்லவாயினும் பெருக்கஞ்
சிதைத்தல் அழிவைத்தருதல் என்கிற தொழில்களாலே பகை
யோடு ஒத்தலால் அவைகளைப் பகைப்பகுதியின் முடி
விலே சொல்லத்தொடங்கி முதலிலே பெண்வழிச்
சேறல் சொல்லுகிறார்.

அஃதாவது- தன்வழிநடத்தற்கு உரியவளாகிய

மனையவள் வழியே

தான் நடத்தல்.

மனைவிழைவார் மாண்பய னெய்தார்
வினைவிழைவார்...... *

வேண்டாப் பொருளு மது ....
.... *

(இ-ள்.) மனைவிழைவார்-(இன்பங்காரணமாகத்) தம்மனையாளை விரும்பி அவர்வழிநடப்பவர்,-மாண்பயன்-(தமக்கு) இனிய துணையாகிய அறத்தை}-எய்தார்-அடையார்.-வினைவிழைவார்-பொருள்சம்பாதித்தலிலே முயல்பவர் வேண்டாப்பொருளும்-(அதற்குவிரோதமென்று) இகழும்பொருளும்|—அது-அவ்வின்பம். எ,று.) (கருத்து) மனையவள் வழியிலேநடப்பவர் தருமத்தை யடையார் என்பதாம். * அவ்வின்பம்- அவளதுதன்மையராதற்கு ஏதுவானவின்பம். அது அவளாலே பயனுகிய அறத்திலும் அவ்வறத்திற்கும் தன்னதிகாரத்திற்கும் ஏதுவாகிய பொருளிலும்அவரைச்செல்லவிடாமையால்- விடப்படுந்தன்மையதென்பதாம். (க)

பேணாது பெண்விழைவா னாக்கம் பெரியதோர்......... *

....*

கூ க-ஆம்-அதி-பெண்வழிச்சேறல்.

(௬௭௧)

(இ-ள்.) பேணுது-(தன்னாண்மையை) விரும்பாமல்-பெண்விழைவான்-(மனையவளது) பெண்மையை விரும்புவோனது - ஆக்கம்-செல்வம்|- (இவ்வுலகத்து ஆண்பாலார்க்கெல்லாம்) - பெரியதோர் நாண்-பெரியவொருநாணம்-ஆக-உண்டாக- நாணு- நாணுதலை}-தரும்-(தனக்கும் கொடுக்கும். எ,று.) (கருத்து) மனையவள்பெண்டன்மையைவிரும்புவோன் செல்வம்வெட்கத்தைக் கொடுக்கும் என்பதாம். ✻ படைக்கும் வலிமையிலனுகவின் அச்செல்வத்தால்கொடுத்தலும் அனுபவித்தலும் முதலாகிய பயன்கொள்வான் அவளாகலால் அவ்வாண்மைச்செய்கை அவளிடத்ததாயிற்றென்று ஆண்பாலார் யாவரும்நாணஅதனலேதன்னாண்மையில்லாமை அறிந்து பின்னே தானும் நாணுவனென்பது நோக்கி-பெரியதோர் நாணுக நாணுத் தருமென்றார் [இவையிரண்டுபாட்டாலும் அவளைவிழைதற்குற்றம் சொல்லப்பட்டது.] (௨)

இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று ....
நல்லாரு ணுணுத் தரும் ... .

✻

✻

(இ-ள்.) (ஒருவன்)-இல்லாள்கண்- இல்லாளிடத்து- தாழ்ந்தவியல் பின்மை-தாழ்தற்கு ஏதுவாகிய அச்சம்|—நல்லாருள்- (அஃவச்சமி ல்லாத) நல்லாரிடத்துச் (செல்லுங்கால்)-நாணு- நாணுதலை}—என்ஞ ஞான்றும்- எந்நாளும்- தரும்- (அவனுக்குக்) கொடுக்கும், எ,று.) (கருத்து) மனையவளுக்கஞ்சுமச்சமானது நாணந்தரும் என்பதாம். ❋ அவள் தனக்கு அஞ்சி நடத்தல் இயல்பாகலால் அவளுக்கு அஞ்சு தல் இயல்பில்லாமையாயிற்று. அப்படி அஞ்சி நடத்தலால் அவனை நியமிப்பார் இல்லையாம். ஆகவே எல்லாக் குற்றங்களும்விளையுமென் றுநோக்கி-என்ஞான்று நாணுத்தருமென்றார். (ரு)

மனையாளை யஞ்சு மறுமையி லாளன்....

. ...❋

வினையாண்மை வீறெய்த

லின்று........................❋

(இ-ள்.) மனையாளை- (தன்) மனையாளை }-அஞ்சும்-அஞ்சிநடக்கின்ற-மறுமையிலாளன்-மறுமைப்பயனில்லாதவனு க்கு- வினையாண்மை-தொழிலையாளுந்தன்மை-(உண்டாகிடவழியும்) -வீறெய்தலின் றி-(நல்லோராலே) கொண்டாடப்படாது. எ,று) (கருத்து) மனை யாளுக்கஞ்சுவோனது தொழில் பெருமையடையாது என்பதாம். ❋ இல்லறஞ்செய்தற்குரிய நன்மை இல்லாமையால் மறுமையிலா ளனென்றும் தொழிலையாளுந் தன்மை தனது புருஷத் தன்மையி.

(ருஎ) ஶ்ரீ

௧-ஆம்-அதி-பெண்வழிச்சேறல்.

ல்லாத அவனால் முடிவுபோகாமையால் - சொல்லினார்.

வீறெய்த லின்றென்றும்,

(௪)

இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்றும் .... *
நல்லார்க்கு நல்ல செயல் .... *

(இ-ள்.) இல்லாளையஞ்சுவான்- (தன்) மனையாளை அஞ்சுவோன்- (தான்தேடியபொருளையாயினும்)- நல்லார்க்கு-நல்லோர்களுக்கு- நல்லசெயல்- (அப்பொருளாலே) நல்லவைகள்செய்தற்கு-எஞ்ஞான்றும்-எந்நாளும்- அஞ்சும்- அஞ்சாநிற்பன். எ,று.) (கருத்து) மனைவிக்கஞ்சுவோ னல்லோர்க் குதவிசெய்ய வஞ்சுவான் என்பதாம். ❋ மற்று-அசைநிலை.— நல்லார்-அருந்தவர் சான்றோர்தாய்தந்தைகள் முதலாயினோரும், விருந்தினரும்,ஆம்.— நல்லனசெய்தல்-அவர்க்கு வேண்டுமவைகளைக் கொடுத்தல். அதுசெய்யவேண்டு நாள்களினு மென்றற்கு-எஞ்ஞான்றுமென்றார். (௫)

இமையாரின் வாழினும் பாடிலரே யில்லாள் .... *
ளமையார்தோ ளஞ்சு பவர் .... *

(இ-ள்.) இல்லாள்- (தம்) மில்லாளுடைய-அமையார்தோள்-வேய்போலுந்தோளுக்கு- அஞ்சுபவர்- பயப்படுவர்- இமையாரின்-(வீரத்தாலே சுவர்க்கமடைந்த) தேவர்போல் - வாழினும்- (இவ்வுலகத்து) வாழ்ந்தாராயினும்- பாடிலரோ-ஆண்மையிலர். எ-று.) (கருத்து) மனையாளுக்குப்பயப்படுவோர் பெருமை யடையார் என்பதாம் ❋ தேவர்போல் வாழ்தலாவது - பகைத்தவீரர் தோள்களையெல்லாம் வெல்லுதலால் நன்குமதிக்கப்பட்டு வாழ்தல். அது கூடாமையால்-வாழினுமென்றார். அமையார்தோளென அஞ்சுதற்காரணத்ததுஎளிமைசொல்லியபடி வீரரதுதோள்களை வென்றாராயினும்இல்லாளது தோள்களை அஞ்சுவோர் ஆண்மையிலரொன்பதாம். [இவைநான்குபாட்டாலும் அவளை அஞ்சுதற்குற்றம் சொல்லப்பட்டது]

பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னாணுடைப்❋
பெண்ணே பெருமை யுடைத்து ....

.... ❋

(இ-ள்.) பெண்-இல்லாளது-ஏவல்- ஏவற்றொழிலை- செய்தொழுகும்-(நாணமில்லாமல்) செய்துதிரிகின்றவனது- ஆண்மையின்-ஆண்டன்மையைக்காட்டிலும்- நாணுடை -நாணத்தையுடைய -பெண்ணே- (அவள்) பெண்டன்மையே- பெருமை-மேன்பாட்டை-

௯௧-ஆம்-அதி-பெண்வழிச் சேறல்.

(௬௭௩)

உடைத்து- உடையது. எ-று.) (கருத்து) பெண்ணேவல் செய்து நடக்குமாண்டன்மையினும்பெண்ணே பெருமை யுடையது என்பதாம். ❋ நாணுடைப் பெண்ணென்ன அதிகமாகச்சொல்லியது-அ.

வேலேவல் செய்வோனது நாணில்லாமை முடித்தற்காதலால்-அது உவருவிக்கப்பட்டது.—ஏவல் செய்வித்துக்கொள்ளுதற் சிறப்புத்தோன்ற-பெண்ணே எனப்பிரித்தார்.] (எ)

நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாட்......*
பெட்டாங் கொழுகு பவர் .... *

(இ-ள்.) (தாம்வேண்டியபடியன்றி)-நன்னுதலாள்-(தம்) மனையாள்-பெட்டாங்கு-வேண்டியபடி-ஒழுகுபவர்-நடப்பவர்,-நட்டார் (தம்மோடு) நட்புச்செய்தவரது-குறை-குறையை}-முடியார்-முடிக்கமாட்டார்-(அதுவல்லாமலும்)-நன்று-(மறுமைக்குத் துணையாகிய) அறத்தையும்}-ஆற்றார்-செய்யமாட்டார். எ,று.) (கருத்து) மனைவிமனப்படி நடப்பவர் சிநேகருக்குதவார் தருமஞ்செய்யார் என்பதாம். ❋ நன்னுதலா ளென்பதனை அமையார்தோ ளென்றதுபோற்கொள்க. அவள் தானே அறிந்து ஏவுதலும்பொருள்கொடுத்தலும் கூடாமையால் இருமைக்கும் வேண்டுவன செய்யமாட்டா ரென்பதாம். (அ)

அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்.... ... ...*
பெண்ணேவல் செய்வார்க ணில்.... .... *

(இ-ள்.) அறவினையும்-அறச்செயலும்|--ஆன்றபொருளும்-அது முடித்தற்கு ஏதுவாகிய பொருட்செயலும்| -பிறவினையும்- அவ்விரண்டின்வேறாகிய இன்பச்செயல்களும்|-பெண்ணேவல்- (தம்)மனையாளேவலை- செய்வார்கண்-செய்வாரிடத்து-இல்-உண்டாகா. எ,று,)
(கருத்து) மனைவிக்கேவல் செய்பவரிடத்துத் தருமச்செய்கை பொருட்செய்கை யின்பச்செய்கை யிம்மூன்மில்லை என்பதாம். ❊ இன்பச்செயல்களுக்கு அறச்செயல் பொருட் செயல்களை முன்னே குறித்தார்க்கு நலமை அவளிடத்திருத்தலால் பின் அச்செயல்களும்இல்லையென்பது தோன்ற- அவைகளைப்பிரித்துச் சொல்லினர்.—[இவைமூன்றுபாட்டாலும் அவளேவல் செய்தற்குற்றம் சொல்லப்பட்டது.] (௯)

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும். ❊
பெண்சேர்ந்தாம் பேதைமை யில். [௧௪]

....❊ (௬௭௪)

௯௧-ஆம்-அதி-பெண்வழிச்சேறல்.

(இ-ள்.) எண்சேர்ந்த- (கரும) வாலோசனையிலேசென்ற-தெளிந்து-மனத்தையும்- இடன்-(அதனாலாகிய) செல்வத்தையும்- உடையார்க்கு-உடையவர்க்கு- பெண்சேர்ந்தாம்- மனையாளைச்சேர்தலால் விளையும்-பேதைமை- அறியாமை|- எஞ்ஞான்றும்- எக்காலத்தும்- இல்-உண்டாகாது. எ-று.) (கருத்து) நல்லமனமும், நல்லசெல்வமுமுடையவர்க்கு மனைவியால்வரு மறியாமையில்லை என்பதாம். ❋ இல்லாமைக்காலத்துமென்றற்கு - எஞ்ஞான்றுமென்றார். அப்பேதைமையாவது- மேற்சொல்லிய- விழைதல்-அஞ்சல் ஏவல்செய்தல் என்கிற மூன்றற்கும் காரணமாகியது. [எதிர்மறைமுகத்தால் அம்மூன்றும் இதனால் தொகுத்துச் சொல்லப்பட்டன.] (ய)

கூ௨-ஆம்-அதி-வரைவின் மகளிர்.

அஃதாவது- தந்நலம் விலைகொடுப்பவர் யாவர்க்குமே விற்பதல்லது அதற்கு ஆவார் ஆகாதார் என்கிற வரைவில்லாத மகளிரது இயல்பு' ஆதலால் தமக்குரிய மகளிரால்வருங் குற்றத்தின்பின் வைக்கபபட்டது.

அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியார் ❋
இன்சொ லிழுக் குத் தரும்.......... ....❋

(இ-ள்.) அன்பின்விழையார் - (ஒருவனை) அன்புபற்றி விரும்பாராகி- பொருள்விழையும்- பொருள்பற்றிவிரும்பும்- ஆய்தொடியார் -மகளிர்-இன்சொல்-(அது கைவருமளவும் அன்புபற்றி விரும்பினராகச்சொல்லும்) இனியசொல்|-இழுக்கு- இன்னாமையை- தரும்- (அவனுக்குத்) தரும். எ-று.) (கருத்து) அன்பால்விரும்பாது பொருளால்விரும்பும் வேசையர்களின் சொல்லானது துன்பந்தரும் என்பதாம். ❁ ஆய்தொடி-ஆராய்ந்தவளையல். ஆய்தொடி-இன்சொல்-என்றதனால அவர்மயக்குஞ் சாதனம் சொல்லப்பட்டது. அச்சொல் அப்பொழுது இனிதுபோன்று பின் வறுமையை உண்டாக்கலால் அதுகொள்ளலாகாதென்பதாம்.] (௧)

பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர் ....*

நயன்றூக்கி நள்ளா விடல்..........

.........................*

(இ-ள்.) பயன்றூக்கி- (ஒருவனுக்கு உள்ள) பொருளை அளந்தறி

௯௨-ஆம்-அதி-வரைவின்மகளிர்.

(௯௱௨)

ந்து-பண்புரைக்கும்- (அது கிடைக்குமளவும்) தமது குணமுடைமைசொல்லும்- பண்பின்மகளிர் -குணமில்லாத மகளிரது- நயன்றூக்கி- நடக்கைவழியைஆராய்ந்தறிந்து-நள்ளா-(அவரைப்) பொருந்தாமல்-விடல்-விடக்கடவர். எ-று.) (கருத்து). பொருட்பயனைக்குறித்து நயம்பேசும் வேசையர் நடக்கையறிந்து அவரைவிடக்கடவரென்பதாம். ❁ பண்பு சொல்லிலல்லது அவரிடத்தில்லாமையின் றோன்ற-பண்பின் மகளிரென்றும், அது சாதித்தருமமாதலால் நாலாவேயலலாமல் அவர்செயலாலும அறிந்தென்றற்கு- நயன்றூக்கி யென்

தும், அவ்வாறு அவளைவிடுதற்கு உபாயமென்பது தோன்ற-தள்ளாவிடலென்றும், சொல்லினர். (உ)

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று.......... ....*

(இ-ள்.) பொருட்பெண்டிர்- (கொடுப்பாரை விரும்பாதுபொருளையே விரும்பும்) பொதுமகளிரது-பொய்ம்மை- பொய்மையையுடைய-முயக்கம்-தழுவுதல்|-(பிணமெடுப்பவர்) -இருட்டறையில்- இருள்வீட்டில்- ஏதில்பிணம்- முன்னறியாதபிணத்தை}-தழீஇயற்று தழுவினாற்போலும். எ,று.) (கருத்து) வேசையர்கள் பொய்யானபுணர்ச்சியானது இருள்வீட்டிலயலான் பிணத்தைத் தழுவினாற்போலும் என்பதாம். ✻ பொருளுக்குத் தழுவும் பரத்தையர்- கருதுஞ்செயலும் ஆராயாமல் சாதியும் பருவமும் ஒவ்வாதானைக் கூடும்போது அவர்குறிப்பு- கூலிக்குப்பிணமெடுப்பவர் காணப்படாததொரிடத்திலே சம்பந்தமில்லாத ஒருபிணத்தை எடுக்கும்போது இவர்குறிப்போடொக்கும் எனவே அகத்தால் அருவராநின்றுபொருளை நோக்கிப் புறத்தால் தழுவுவர் அதனை ஒழியக்கடவரென்பதாம்.—[இவைமூன்றுபாட்டாலும் அவர் சொல்லும் செயலும் பொய்யென்பது சொல்லப்பட்டது.] (௩)

பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு..*
ளாயு மறிவி னவர். ....*

(இ-ள்.) பொருட்பொருளார் – (இன்பமாகிய பொருளை இகழ்ந்து) பொருளாகிய பொருளையே விரும்புமகளிரது- புன்னலம்-புல்லியநலத்தை}-அருட்பொருள்- அருளோடுகூடியபொருளை}-ஆயும் ஆராய்ந்து சம்பாதிக்கும்-அறிவினவர்-அறிவையுடையவர்|-தோயார்-தீண்டார். எ,று.) (கருத்து) அருளையாராயு மறிவுடையார்வேசை

யரைச்சேரார் என்பதாம். ❋ அறமுதலாகிய நான்கும் பொருளெ ணப்படுதலால்- பொருட்பொருள் அருட்பொருள் என விசேடித்தா ர்.—புன்மை இழிந்தார்க்கே உரித்தாதல்.— தாம்விரும்புகின்ற அற த்திற்கு அவர் மெய்ந்நலம் விரோதமாகலால்-தோயாரென்பதாம்.

பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின் ...❋
மாண்ட வறிவி னவர்.................

... ...❋

(இ-ள்.) மதிநலத்தின்- (இயற்கையாகிய) மதிநன்மையால்-மாண் ட-மாட்சிமைப்பட்ட-அறிவினவர்- (செயற்கை) யறிவுடையவர் பொதுநலத்தார்- (பொருள்கொடுப்பவர்க்கெல்லாம்) பொதுவாகி யஆசையையுடைய மகளிரது- புன்னலம்- புல்லியநலத்தை }- தோ யார்-தீண்டார்• எ-று.) (கருத்து) புத்தி நலமுடைய பெரியோர் பர த்தையரைச் சேரார் என்பதாம். ❋ மதிநன்மை முற்பிறப்பிலேசெ ய்தநல்வினைகளால் மனந்தெளிவுடைத்தாதல். அத்தெளிவினலல்லா மல்அக்கல்வியறிவு மாட்சிமைப் படாமையால்- மதிநலத்தின்மாண் டவறிவினவொன்றும், அவ்வறி வுடையார்க்கு அவராலசயது பொ ய்மையும், மெய்ந்நலம் பலருக்கும் பொதுவாயிருக்கையும், விளங் கித்தோன்றலால்- தோயாரென்றும், சொல்லினர். (கூ)

தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்...........❋
புன்னலம் பாரிப்பார் தோள்.............................❋

(இ-ள்.) தகை-ஆடல்பாடல் அழகென்பவைகளாலே- செருக்கி-களித்து-புன்னலம்- (தம்)புல்லியநலத்தை}-பாரிப்பார்-(விலைகொடுப்பவர்க்கெல்லாம்) பரப்புமகளிரது-தோள்- தோளை}- தந்நலம்-(அறிவொழுக்கங்களாலாகிய) தமது புகழை}- பாரிப்பார்- (உலகத்தே பரப்புதற்குரிய)உயர்ந்தோர்|- தோயார்-தீண்டார். எ-று.) (கருத்து) தமது புகழைவிளக்கும் பெரியோர் வேசையர் தோளைச்சேரார் என்பதாம். ❊ ஆடல்முதலிய மூன்று முடைமை அவர்க்குமேன்பாடாகலால் தகையென்றும், தோய்ந்தால் அறிவொழுக்கங்கள் அழியுமாகலால் - அவ்வறி வொழுக்க ங்களாலே புகழ்பரப்புவோர்

தோயாரென்றும், சொல்லினர்.

[இவைமூன்றுபாட்டாலும்அவரை உயர்ந்தோர் தீண்டாரென்பது சொல்லப்பட்டது.]

(கூ)

நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்........... ❊
பேணிப் புணர்பவர் தோள்.............................❊

(இ-ள்.) நெஞ்சின்-நெஞ்சினால்-பிறவேறுபொருள்களை}-பேணி ஆசைப்பட்டு-)அவைகொடுப்பவர்களை}) -புணர்பவர்- (அவைகாரண மாகமெய்யிலேயே)புணருமகளிரது-தோள்-தோள்களை}-நிறைநெ ஞ்சமில்லவர்- நிற்கச்செய்தலினாலே (திருந்திய) நெஞ்சமில்லாதவர்-தோய்வர்-சேர்வர். எ-று.) (கருத்து) நன்மனமில்லாதவர் வேசையர் தோள்களைச் சேர்வார் என்பதாம். ❀ பொருளும், அதனால் படைக்கப்படுவனவும், விரும்புகிறநெஞ்சு அவ்வமேயிருத்தலால் புணர்வ

துஅவருடம்புமாத்திர மென்பதறிந்துஅதன்வழி ஓடாது நிற்குநெஞ்சையுடையார் தோயாமையால்-அஃதில்லாதார்தோய்வரென்றார்.

ஆயுமறிவின ரல்லார்க் கணங்கென்ப.......................*
மாய மகளிர் முயக்கு......................................*

(இ-ள்.) மாயமகளிர்-(உருவுசொற்செயல்களால்)வஞ்சித்தல்வல்ல மகளிரது-முயக்கு- புணர்ச்சியை}-ஆயும்-(அவ்வஞ்சனையை) ஆராய்ந்தறியும்-அறிவினரல்லார்க்கு- அறிவுடையவரல்லாதவர்க்கு—அணங்கு-அணங்குதாக்கு-என்ப-என்று (நூலோர்) சொல்வர். எ-று. (கருத்து) அறிவில்லார்க்கு வேசையர் புணர்ச்சியை நூலோரணங்கென்பர் என்பதாம். ❀ அணங்கு - காமவழியால் உயிர்கொள்ளுந் தெய்வமகளிர்.—தாக்கு-தீண்டல் இவ்வுருவகத்தால்- அப்புணர்ச்சி முன்னே இனிதுபோலே தோன்றிப் பின்பு உயிர்கொள்ளுதல் பெற்றும். இது நூலோர் துணிவென்பது தோன்ற அவர்மேல் வைத்துச்சொல்லினார். (அ)

வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்.....*
பூரியர்கள் ளாழு
மளறு.. *

(இ-ள்.) வரைவிலா-(உயர்ந்தோர் இழிந்தோரென்னாது விலைகொடுப்பவர் யாவரையும்) கூடும்-மாணிழையார்-மாட்சிமைப்பட்ட-ஆபரணத்தையுடையவரது-மென்றோள்-மெல்லியதோள்கள்|-புரையிலா-(அக்குற்றத்தையறிடம்) அறிவில்லாத-பூரியர்கள்-|கீழ்மக்கள் ஆழும்-(புகுந்து) அழுந்தும்-அளறு- நரகமாம். எ-று.) (கருத்து) வேசையர் தோள்கள் கீழ்மக்க ளழுந்து நரகமாம் என்பதாம். ❋ சாதியாலிழிந்தாரை நீக்குதற்கு-புரையிலாப்பூரியர்களென்றும், அவராழ்தற்கேது உருமுதலாகிய மூன்றுமே யென்பதுதோன்ற-மாணிழையார் மென்றோளென்றும், அவர்க்கு நரகத்தைத் தடையில்லாமல்தருமென்பதுதோன்ற உருவகமாக்கியும், சொல்லினார். (௯).

[௯௦]

(௯௭) ## ௯௨-ஆம்-அதி-வரைவின்மகளிர்.

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்........................ *
திருநீக்கப் பட்டார் தொடர்பு...... .... *

(இ-ள்.) இருமனப்பெண்டிரும்- கவர்மனத்தை யுடைய மகளிரு ம்-கள்ளும்-கள்ளும்|-கவறும்- சூதும்- திரு-திருமகளால் - நீக்கப்ப ட்டார்-விடப்பட்டவர்க்கு- தொடர்பு- நட்புக்களாம். எ-று.) (கருத் து) வேசையரும் கள்ளும் சூதும் இலக்குமியால்விடப்பட்டவர்க்கு நட்பாம் என்பதாம். ❋ இருமனம்- ஒருவனோடு கூடுதலும், கூடா மையும், ஒருகாலத்திலே யுடையமனம்.—கள்ளும் சூதும்பரத்தைய ர்க்குச் சமானமான குற்றமுடையவை-யாகலாலே உடன்சொல்ல ப்பட்டன வருகின்ற அதிகாரமுறைமையும் இதனாலேஅறிக.—தி ருநீக்கப்பட்டமை இவ்வடையாளங்களால் அறியப்படுமென்பதாம். [இவைநான்குபாட்டாலும் அதுசெய்பவர் இழிவுரென்பது சொ லலப்பட்டது.] (ல)

சுந-ஆம்-அதி-கள்ளு ண்ணாமை.

அஃதாவது-இனிஒழுக்கமும் உணர்வும் அழித்தலில்பரத்தைய ரோடு ஒப்பதாகிய கள்ளினை உண்ணாமையது சிறப்பு - எதிர்மறை முகத்தாலே சொல்லுகிறார்.

உட்கப் படாஅ
ரொளியிழப்ப ரென்ஞான்றுங்...... ...❋
கட்காதல் கொண்டொழுகு வார் ...
....❋

(இ-ள்.) கட்காதல்கொண்டு-கள்ளின்மேல் ஆசைகொண்டு- ஒழுகுவார்-நடக்குமரசர்.-எஞ்ஞான்றும்- எந்நாளும்- உட்கப்படாஅர்-(பகைவரால்) அஞ்சப்படார் — (அதுவேயல்லாமல்) - ஒளி-(முன் பெற்றுநின்ற) ஒளியையும்}- இழப்பர்- இழந்துவிடுவர், எ,று.) (கருத்து) கள்ளிச்சை வைக்குமரசர் அஞ்சார்புகழையிழப்பார் என்பதாம். ❋ அறிவில்லாமையால் பொருள் படைமுதலியவைகளால் பெரியராகிய காலத்தும் பகைவர் அஞ்சார் தம் முன்னோராலே அடைந்த ஒளியும் இகழப்படுதலால் இழப்பரென்பதாம். [இவை யிரண்டாலும் அரசநீதி இனிதுசெல்லாதென்பது இதனாலே சொல்லப்பட்டது.] (௧)

௯௩-ஆம்-அதி-கள்ளுண்ணாமை.

(௯௨௨)

உண்ணற்க கள்ளை யுணிலுண்க
சான்றோரா............... ❋
...னெண்ணப் படவேண்டா தார்................
....❋

(இ-ள்.) (அறிவுடையராயினோர்|)-கள்ளை- (அவ்வறிவுகெடுதற்கு ஏதுவாகிய) கள்ளினை }-உண்ணற்க- உண்ணாதிருக்கக்கடவர்.---உணில்-உண்ணவேண்டுவோருண்டாயின் - சான்றோரான் - நல்லோரால்-எண்ணப்படவேண்டாதார்- மதிக்கப்படவிருப்பாதார்|-உண்க - உண்ணக்கடவர். எ-று.) (கருத்து) கள்ளை யுண்ணாதிருக்கக்கடவர் மதிக்கத்தகாதவருண்ணக்கடவர் என்பதாம். ❋ பெறுதற்கரிய அறிவைப் பெற்றிருந்தும் கள்ளால் அழித்துக்கொள்ளுவாரை இயல்பாகவே அறிவில்லாத மிருகங்களுடனேயும் எண்ணாராகலால் - சான்றோராலெண்ணப்படவேண்டாதா ருண்கவென்றார். (உ)

ஈன்றாண் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்.............. ❋
சான்றோர் முகத்துக் களி ....
.... ❋

(இ-ள்.) ஈன்றாண்முகத்தேயும்- (ஏதுசெய்தாலும்மகிழும்) தாய்முன்பாயினும்- களி- (கள்ளுண்டு) களித்தல்.- இன்னாது- துன்பஞ்செய்வதாம் ---(ஆதலால்)-மற்றுச் சான்றோர்முகத்து-பின்- (குற்றம்யாதும் பொறாத) பெரியோர்முன்பு- (அக்களித்தல்|)-என்-(அவர்க்கு) யாதாகும். எ-று.) (கருத்து) தாய்முன்னுங்கள்ளுண்டு களித்தல் துன்பமாய் பெரியோர்முன் கள்ளுண்டுகளித்த லென்னபயனும் என்பதாம். ❋ ஆல்-அசை, மனமொழிமெய்கள் தம் வசப்படாமையால் நாணம் அழியும் அழியவே தாய்க்கும் இன்னாதான கள் -இருமையும் கெடுத்தலறிந்து தூரத்தே கடியும் பெரியோர்க்கு இன்னாதாகல் சொல்லவேண்டுமோ வென்பதாம்.] (௩)

நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு........................ ❋

(இ-ள்.) கள்ளென்னும்-மதுவென்று சொல்லப்படுகின்ற-பேணு-(யாவரும்) இகழும்- பெருங்குற்றத்தார்க்கு - மிகுந்தகுற்றத்தையுடையவர்க்கு-நாணென்னு நல்லாள்- நாணமாகிய நல்லவள்!-- (அவரைப்பார்த்தற்கு அஞ்சி) - புறங்கொடுக்கும்- எதிர்முகமாகாள். எ, று.) (கருத்து) கள்ளுண்பவர்களுக்கு நாணமில்லை என்பதாம். ✻ காணுதற்கும் அஞ்சி உலகத்தார் தூரத்தே நீங்குவர் ஆதலால் பேணுவென்றும், பின்னொருவழியிலும் நீக்கப்படாமையால் - பெருங்குற்ற

மென்றும், இழிந்தோரிடத்து நில்லாமையால் - நல்லாளென்றும் சொல்லினர். [இவை மூன்று பாட்டாலும் ஒளியிழத்தற் காரணஞ் சொல்லப்பட்டது.] (௪)

கையறியாமை யுடைத்தே பொருள் கொடுத்து........*

மெய்யறியாமை கொளல்... ... ...

.... *

(இ-ள்.) (ஒருவன்)-பொருள்கொடுத்து-விலைப்பொருளைக்கொடு
த்து- மெய்யறியாமை- (கள்ளாலேதனக்கு) மெய்மறதியையே- கொ
ளல்-கொள்ளுதல்|-கையறியாமை- (அவன்பழவினைப்பயனாகிய) செ
ய்வதறியாமையையே-உடைத்து- (தனக்குக் காரணமாக) உடைத்து.
எ,று.) (கருத்து) கட்குடித்து மெய்மறதியைக் கொள்ளுதலறிவில்
லாமையுடையது என்பதாம். ❋ என்னையறியாமைசொல்லவே மற்
றவையாவையும் அறியாமை சொல்லவேண்டாவாயிற்று. அறிவார்வி
லைகொடுத்து ஒன்றைக்கொள்ளுங்கால் தீயதைக்கொள்ளாமையால்
மெய்யறியாமைகொளல் முன்னையறியாமையால்வந்ததென்பதாம்

துஞ்சினர் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று......... ...❋
நஞ்சுண்பார் கள்ளுண் பவர் ....❋

(இ-ள்.) துஞ்சினர்-உறங்கினவர்-செத்தாரின்- இறந்தவரின்- வே
றல்லர்- (வேறாயினும் அக்காலத்தே அறிவில்லாமையால்) வேறென
ப்படார்.—(அப்படியே)- கள்ளுண்பவர்- கள்ளைக் குடிப்பவர்|-எஞ்
ஞான்றும்- எக்காலத்தும்-நஞ்சுண்பார்- (அறிவில்லாமையால்)-நஞ்
சுண்பவரேயாவர். (அவரின்வேறாயினும் வேறெனப்படார்) . எ,று.
(கருத்து) கள்ளைக்குடித்தவர் நஞ்சைக்குடித்தவர்க் கொப்பாவர் எ
ன்பதாம். ❋ உறங்கினவர்க்கும்,கள்ளுண்பவர்க்கும்,வேற்றுமை மூ
ச்சுநிற்றல். [இவையிரண்டுபாட்டாலும் அவர் அறிவிழத்தலின்குற்
றம்சொல்லப்பட்டது.] (௬)

உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றுங்........❋
கள்ளொற்றிக் கண்சாய் பவர் ....

.... ❋

(இ-ள்.) கள்ளொற்றி-கள்ளைமறைந்து (குடித்து)-கண்சாய்பவர் (அக்களிப்பால்) அறிவுசோர்பவர்}-உள்ளூர்- உள்ளூர்வாழ்பவரால்- உள்ளொற்றி- உள்ளே நடக்கிற காரியத்தை ஆலோசித்து அறிந்து- எஞ்ஞான்றும்- எந்நாளும் - நகப்படுவர் - சிரிக்கப்படுவார். எ,று.) (கருத்து) கள்ளைக்குடித் தறிவுமயங்குவோர் சிரிக்கப்படுவர் என்ப

கூ-ஆம்-அதி-கள்ளுண்ணாமை. (கூஅக)

நாம். ※ உய்த்துணர்தல்- சோர்விலுமேல் களிப்பினை னால் கள்ளுண்டமை அறிதல்:

அறிந்து அத
(எ)
களித்தறியே னென்பது கைவிடுக
நெஞ்சத்........ ....*
ஒளித்ததூஉ மாங்கே
மிகும் ....*

(இ-ள்.) களித்தறியேனென்பது- (மறைந்துண்டு) கள்ளுண்டறியேனென்று (உண்ணாதபொழுது தமது ஆசாரஞ்) சொல்லுதலை}-கைவிடுக-விடக்கடவர்.— (அவ்வுண்டபொழுதே) நெஞ்சத்தொளித்ததூஉம்-(முன்பிறர்அறிந்தால் இழுக்காமென்று) மனத்தில் ஒளித்தகுற்றமும்|-ஆங்கேமிகும்-முன்னையளவின்மிகுந்துவெளிப்படும் (ஆதலால்) : எ-று.) (கருத்து) கட்குடிக்கினுட்பொருள் வெளிப்படுமாகையாலாசாரஞ்சொருதலைக்கைவிடக்கடவர் என்பதாம். ❀ [இவையிரண்டுபாட்டாலும் அது மறைக்கப்படாதென்பது சொல்லப்பட்டது.] (அ)

களித்தானைக் காரணங் காட்டுதல்
கீழ்நீர்க்.... .... *
குளித்தானைத் தீத்துரீஇ
யற்று............ .. ..*

(இ-ள்.) களித்தானை- (கள்ளுண்டு) களித்தஒருவனை}-காரணங்காட்டுதல்- (இதுஆகாதென்று மற்றொருவன்)காரணங்காட்டித்தெளிவித்தல்|-கீழ்நீர்க்குளித்தானை- நீருள்ளே மூழ்கியஒருவனை}- தீ- விளக்கினால்-துரீஇயற்று- (மற்றொருவன்)தேடுதலையொக்கும். எ-று.) (கருத்து) கட்குடித்தவனைத் தெளிவித்த லெதுபோலெனில் நீருள்ளே மூழ்கினவனைவிளக்கினாற்றேடுதலொக்கும் என்பதாம். ❀ நீருள்விளக்குச்செல்லாமைபோல் அவன்மனத்துள் காரணம் செல்லாதென்பதாம். [இதனாலவனைத் தெளிவித்தல் முடியாமை சொல்லப்பட்டது.] (கூ)

கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கா........ *,
னுள்ளான்கொ லுண்டதன் சோர்வு.......
.... *

(இ-ள்.) (கள்ளுண்பவனொருவன்)- கள்ளுண்ணாப்போழ்தில்- கள்ளையுண்ணாமல் தெளிந்திருந்தபொழுதில்-களித்தானை- (கள்ளுண்டு) களித்தபிறனை-காணுங்கால்- காணும்போது - உண்டதன்சோர்வு- (தான்) உண்டபொழுது உண்டாந்தன்சோர்வை- உள்ளான்கொல்- (அவன்சோர்வால் அதுவும் இப்படிப்பட்டதென்று) நினையான் போலும். எ-று.) (கருத்து) கள்ளுண்பவன் தான் குடியாதபோது [கஎ]

(௬ அஉ)

௯௩-ஆம்-அதி-கள்ளுண்ணாமை.

குடித்தவனைக்கண்டு தன்சோர்வை நினையான்போலும் என்பதாம்.
சோர்வுமனமொழிமெய்கள் தன்வசப்படாமை. [கருத்தளவையால்-அதனிழுக்கத்தை ஆலோசித்து அறிந்தால் ஒழியுமென இதனால் அதுஒழித்தற்காரணம் சொல்லப்பட்டது.] (ம)

௯௪-ஆம்-அதி-சூது.

அஃதாவது-இனி அக்கள்ளுண்டல்போல் அறம்பொருளின்பங்களுக்குத் தடையாகிய சூதாடலும் பிணியனுபவித்தலும் சொல்லத்தொடங்கி முதலிலே சூதினது இயல்பு சொல்லுகின்றார்

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந் .....*
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று........................*

(இ-ள்.) வென்றிடினும்- (தான்) வெல்லும் வலிமை யுடையனாயினும்-சூதினை-சூதாடுதலை}-வேண்டற்க-விரும்பாதிருக்கக்கடவன் -- (வென்றுபொருள் பெறுவார் உண்டென்றால்)-வென்றதூஉம்- அவ்வென்றபொருளும்]-தூண்டிற்பொன்- (இரையால்மறைந்த) தூண்டிவிரும்பை-மீன்விழுங்கியற்று- மீன்விழுங்கியதுபோலும். எ,று.) (கருத்து) வெல்லவல்லவனாயினுஞ் சூதை விரும்பாதிருக்கக் கடவன். வென்றபொருளுந் தூண்டிவிரும்பை மீன்விழுங்கியதுபோலும் என்பதாம். ※ வெல்லுதல் நிச்சயமல்லாமையால் வென்றிடினுமென்றும், கருமங்கள் பலவுங் கெடுதலால்- வேண்டற்கவென்றும், சொல்லினர். எய்தியபொருள் சூதாடுவோர் நீங்காமைக் கிட்டதனை யென்பதும், அதனாலே பின் துயருழத்தலும், உவமையாற் பெற்றாம் (௧)

ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ........*
னன்றெய்தி வாழ்வதோ ராறு .... *

(இ-ள்.) ஒன்றெய்தி- (அத்தூண்டி லிரும்புபோன்ற) ஒன்றனைமுன்பெற்று- (இன்னும் பெறுவோமென்னுங்கருத்தால்)- நூறிழக்கும்- நூற்றினை இழந்துவறியராகும் - சூதர்க்கும் - சூதாட்டமுடையவர்க்கும்-நன்றெய்தி- (அப்பொருளால்) அறமுமின்பமும்பெற்று- வாழ்வதோராறு- வாழ்வதொருவழி-உண்டாங்கொல்-உண்டாமோ எ,று) (கருத்து) ஒருபொருள்பெற்று நூறுபொரு ளிழக்குஞ் சூதாடுவோர்க்கு நன்மைபெற்றுவாழும் வழியுண்டாமோஎன்பதாம்.

※ அதனையறியாது [illegible] பெறும்ப யனும் [illegible] இல்லையென்பதாம். (௨)

உருளாயம் ஓவாது கூறிற் பொருளாயம் .... ※
போஒய்ப் புறமே படும். .... ※

(இ-ள்) உருளாயம்- உருளுங் (கவற்றில் அகப்பட்ட) ஆதாயத்தை]-ஓவாது-இடைவிடாமல்- கூறின்-சொல்லிச் (சூதாடு)மாயின் -பொருள் - (அரசன்சம்பாதித்த) பொருளும்— ஆயம் - (அவன்) பொருள்வருவழியும்|- போஒய்- (அவனைவிட்டுப்) போய்-புறமேபடும்-பகைவரிடத்தேதங்கும், எ-று.) (கருத்து) அரசன் சூதாடுவானாயினவன்பொருளு மப்பொருள் வரும்வழியும் பகைவரிடத்துப் போம் என்பதாம். ※ கவற்றினுருட்சியை அதனுலாகிய ஆயத்தின் மேல் ஏற்றியும், சூதாடுதலை அதுசொல்லாகிய காரணத்தின்மேலிட்டும், சொல்லினர்.—காத்தலினும், செய்தலினும், கருத்திலனுகலால்அவையிரண்டும் பகைவரிடத்தே செல்லுமென்பதாம். (௩)

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின் .... ※
வறுமை தருவதொன் றில். .... ※

(இ-ள்.) சிறுமைபல- (முன்னில்லாத)-, துன்பங்கள்பலவும்-செய்து-(தன்னைவிரும்பினவர்க்குச்) செய்து- சீர்- (உள்ள) புகழையும்-அழிக்கும்-கெடுக்கும்-சூதின்-சூதுபோல்-வறுமை- வறுமையைத்-தருவது-கொடுக்கவல்லது-ஒன்று-வேறொன்று|-இல்-இல்லை. எ,று.) (கருத்து) துன்பங்களை யுண்டாக்கிப் புகழையுங்கெடுக்குஞ்சூதைப்போல வறுமையைக்கொடுப்ப தொன்றுமில்லை என்பதாம். ✻ அத்துன்பங்கள் பின்னேசொல்லப்படும்.—நல்வினைகளையும், நலவினைத்திணையும், நீக்கி-தீவினைகளையும், தீயினைத்திணையும், கூட்டுதலால்-சிறழிக்குமென்றார். சூதாடுவோர் வறுமைக்கு எல்லையாவரொன்பதாம்.

கவறுங் கழகமுங் கையுந் தருக்கி .... ✻

யிவறியா ரில்லாகி யார்... ....

....✻

(இ-ள்.) இல்லாகியார்-(முற்காலத்திலே தாம் இருந்தும்) இல்லாதவராயொழுகினவர்|-கவறும்-சூதினையும்}-கழகமும்- அதையாடுமிடத்தினையும்}-கையும்- (அவ்வாடுதற்கு வேண்டுங்) கைத்தொழிலினையும்}- தருக்கியிவறியார்- மேற்கொண்டு கைவிடாதவேந்தர், எ,று.) (கருத்து) சூதையுஞ் சூதாடுமிடத்தையுஞ் சூதாடு தொழிலையு

(ரூஅச)

கசஆம்-அதி-சூது.

ங்கைவிடாதவரசர் பொருளிருந்து மில்லாதவரோ என்பதாம். ✻ கைத்தொழில்- வெல்லும்படி பிடித்தெறிதல். மேற்கொள்ளுதலாலே பாண்டவர் தம்மாசிழந்து காட்டிலேபோய்அங்கேமறைந்தொழுகினொன அனுபவங் காட்டியபடி. [இவை ஐந்துபாட்டாலும்அதனது வறுமை யுண்டாக்கற் குற்றம் சொல்லப்பட்டது.] (ரு)

அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு ....*
முகடியான் மூடப்பட் டார் .... *

(இ-ள்.) சூதென்னும்-(தனதுபெயர்சொல்லல்மங்கலமல்லாமை யால்) சூதென்றுவேறுபெயர் சொல்லப்படுகிற- முகடியால்- மூதேவியால்-மூடப்பட்டார்- விழுங்கப்பட்டவர்|- அகடாரார்-(இம்மையிலே) வயிறுநிறையப்பெறார்.—அல்லலுழப்பர்- (மறுமையிலே) நரகத்துன்பமனுபவிப்பர். எ-று.) (கருத்து) சூதென்னு மூதேவியால் விழுங்கப்பட்டவ ரிம்மையில் வறுமையு மறுமையில்நரகமு மநுபவிப்பர் என்பதாம். ❋ செல்வங்கெடுத்து வறுமை கொடுத்த தீதொழில் வேறுபடாமையால் - சூதென்னு முகடியென்றும், வெற்றி தோற்புநோக்கி ஒருபொழுதும் விடாராகலால், இங்கே அகடாராரென்றும், பொய் களவுமுதலாகிய பாவங்கள் சம்பாதித்தலால்-அங்கே அல்லலுழப்பரென்றும், சொல்லினர்.— வயிறாரமை சொல்லவே மற்றை ஆடையணிமுதலாகிய புலன்களை அனுபவிக்கப்பெறாமை சொல்லவேண்டா வாயிற்று (௬)

பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங் .... *

கழகத்துக் காலை புகின் ....

.... ❋

(இ-ள்.) காலை-(அறம்பொருளின்பங்களுக்கு விதித்த)காலம்-கழகத்து-சூதாடுமிடத்து-புகின்- (அரசனுக்குக்) கழியுமாயின்- (அக்கழிவு)பழகிய-நெடுநாளாய்வந்த-செல்வமும்-(அவன்) செல்வத்தையும்}-பண்பும்-நற்குணங்களையும்}—கெடுக்கும்-அழிக்கும். எ,று.) (கருத்து) அரசன்சூதாடி லவ்வாட்ட மவன்செல்வத்தையுங் குணத்தையுமழிக்கும் என்பதாம். ❁ தான்செய்துகொள்ளும்அறமுதலானவைமாத்திர மல்லாமல் மூன்னோரைத் தொடங்கிவருகின்ற செல்வமும், முன்செய்த நல்வினையினுலாகிய நற்குணங்களும் இல்லாமற்போமென்பதாம். (எ)

பொருள்கெடுத்துப் பொய்மேற்கொளீஇ யருள்கெடுத் *
தல்ல
லுழப்பிக்குஞ் சூது............................*

௯௩-ஆம்-அதி-சூது. (௯௩அ)

(இ-ள்.) சூது-சூதாட்டமானது|- பொருள்கெடுத்து- (தன்னைப் பழகினவனது) பொருளைக் கெடுத்து - பொய்- பொய்யை}-மேற்கொளீஇ-மேற்கொளப்பண்ணி-அருள்கெடுத்து-(மனதில்எழுகிற) அருளைக்கெடுத்து- (இவ்வழியால்)-அல்லலுழப்பிக்கும்- (அவனை இருமையிலும்) துன்பமுறுவிக்கும். எ,று.) (கருத்து) சூதாட்டமானது பொருளைக்கெடுத்துப் பொய்யை மேற்கொள்ளச்செய்து இருண்மையக்கெடுத்துத் துன்பத்தை விளைவிக்கும் என்பதாம். ❁ பொருள்கெடுத்தல முதலாகிய மூன்றும் சூதினுடைய தொழில்களாகவும், அவைகளுக்கு- தோற்பு வெற்றி கோபம் என்பனமுறையே சாதனங்களாகவும், கொள்க.—முன்னையதால் இம்மையிலும், பின்னவைகளால் மறுமையிலும், ஆம். (அ)

உடைசெல்வ மூணொளி கல்வியென் றைந்து............*
மடையாவா மாயங் கொளின் ....
........*

(இ-ள்.) (அரசன்) — ஆயம்-சூதினை}-கொளின் - (தனக்குவிளை யாட்டுத்தொழிலாக) விரும்புவானாயின்-ஒளி-ஒளியும்- கல்வி கல்வி யும்-செல்வம்- செல்வமும்-உளண்-உளனும்- உடை- உடையும்-என் னைந்தும்- என்றிவ்வைந்தும்|-அடையாவாம்-(அவனைச்) சேராவா ம். எ,று.) (கருத்து) அரசன்சூதாட்டத்தை விரும்புவனாகில் கீர்த் தியுங் கல்வியுஞ் செல்வமு மூணுமுடையுமவனைச் சேராவாம் என் பதாம். ※ ஆயம்சூதுக்கு ஆகுபெயர் இம்முறைசெய்யுளுக்கிவை யப்பிறழ்ந்தது. செல்வம்-அறுவகை உறுப்புக்கள். ஊணுடையெ ன்பவைகளால் அனுபவிக்கப் படுவனவெல்லாம் கொள்ளப்படும் -- காலமும், கருத்தும், பெருமையால் இவைஉண்டாகாவென்பதாம். [இவை நான்குபாட்டாலும் சிறுமைபலசெய்து அவைகளால் இரு மையுங்கெடுத்தல் சொல்லப்பட்டது.] (கூ)

இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப ..'''.... ※
முழத்தொறூஉங் காதற் றுயிர்........................ ....※

(இ-ள்.) இழத்தொறூஉம்- (சூதாடலால் இருமைப் பயன்களையு ம்) இழக்குந்தோறும்- காதலிக்கும்- (அதன்மேலே) ஆசைசெய்யு ம்-சூதேபோல்- சூதனேபோல்—உயிர்-உயிரானது|- துன்பமுழத் தொறூஉம்- (உடம்பால்) மூவகைத் துன்பங்களையும்-அனுபவிக்கு ந்தோறும்-காதற்று- (அதன்மேலே) ஆசையை யுடைத்து. எ,று.) (கருத்து) இருமைப்பயன்களை யிழக்குந்தோறுஞ் சூதினை யிச்சிக் குஞ் சூதன்போல உயிரானது துன்பங்களை யநுபவிக்குந்தோறு

[கஎ]

(ஈ-அ)

கூ-ஆம்-அதி-சூது.

மிதன்மேலாசையுடையது என்பதாம். ❋ சூது ஆகுபெயர். உயிரினது அறியாமை சொல்லுவார்போன்று சூதனது அறியாமைசொல்லுதல் கருத்தாகலின் அதனை உறுதிப்படுத்தற்பொருட்டு உவமானமாக்கினார். [இதனெதிர் மறைமுகத்தால் சூதைவெறுத்து நடப்பவனையொக்கும் உடம்பினை வெறுத்து நடக்கின்ற உயிரெனவுங்கொள்க.] இதனால் அதைவிடுதலருமையும் விட்டவாறு பெருமையும் சொல்லப்பட்டன. (௰)

௯௫-ஆம்-அதி-மருந்து.

பழவினையாலும் காரணங்களாலும் மனிதர்க்கு வாதமுதலாகிய பிணிகள்வரும் அவைகளுள் பழவினையால் வருவன அவ்வினை கழியும்போதல்லாமல் தீராமையால் அவையொழித்து மற்றைக் காரணங்களால் வருமவைகளைத் தீர்க்கு மருந்தின் திறம் சொல்லுகின்றார் காரணங்களாவன- உணவு தொழில்கள் ஒவ்வாமை யாதலால் பிணிகளுங்காரணங்களால் வருவனவாயின.

மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்... ... . ❋
வளிமுதலா வெண்ணிய மூன்று .

.... ❋

(இ-ள்.) (உணவும்செயல்களும் ஒருவன் சரீரசுபாவத்துக்கு ஒத்த வளவினவன்றி)- மிகினும்- (அதனின்) மிகுமாயினும் - குறையினு ம்-குறையுமாயினும்|- நூலோர்- ஆயுள்வேதமுடையோரால்- வளி முதலா -வாதமுதலாக- எண்ணிய-எண்ணப்பட்ட- மூன்று-மூன்று நோயும்|-நோய்- துன்பத்தை}-செய்யும் -(அவனுக்குச்) செய்யும் . எ;று.) (கருத்து) உணவுந்தொழிலு மிகுந்தாலுங் குறைந்தாலும் பிணிமூன்றுந் துன்பஞ்செய்யும் என்பதாம். ❋ நூலோரெண்ணி யவெனவே அவர் அவைகளால்வகுத்த-வாதப்பகுதி- பித்தப்பகுதி- சிலேஷ்மப்பகுதி- என்கிற பகுதிப்பாடும் பெற்றும், அவைகளுக்கு உணவு ஒத்தலாவது- சுவை வீரியங்களாலும் அளவாலும் பொருந் துதல். செயல்கள் ஒத்தலாவது- மனமொழிமெய்களாலே செய்யுந் தொழில்களை அவைவருந்துவதற்குமுன்னே யொழிதல்.இவ்விரண் டும் இப்படியல்லாமல் மிகினுங்குறையினும் அவைதன் றன்னிலையி

[illegible] (௯௮௭)

லே நில்லாமல் வருந்துமென்பதாம். இதனால் உடம்புகளுக்கு இய ல்பாகியநோய்- மூவகையென்பதும், அவை துன்பஞ்செய்தற்கார ணம்---இருவகையென்பதும், சொல்லப்பட்டன.] இன்பஞ்செய்த ற்காரணம் பின்னே சொல்லுவர். (௧)

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய........ ❋
தற்றது போற்றி யுணின்.... ....❋

(இ-ள்.) (ஒருவன்)- அருந்தியது- (முன்) னுணப்பட்டது-அற்றது-சீரணித்தபடியை} போற்றி-(குறிகளாலே)தெளியவறிந்து-உணின்-(பின்னே) உண்பானாயின்-யாக்கைக்கு- (அவ) னுடம்புக்கு-மருந்தென-அவிழ்தமென்று- வேண்டாவாம்-வேறுவேண்டுவதில்லை எ,று.) (கருத்து) உண்ணப்பட்டது சீரணித்ததையறிந் துண்பானாயினவனுக்கு மருந்துவேண்டாவாம் என்பதாம். ✻ குறிகளாவன- உடம்பு சிறுகியிருத்தல்- நோக்கம் பரிசுத்தமாயிருத்தல்- கரசரணாதிசரணங்கள் தொழிற்குரியவாதல்- பசிமிகுதல்- எனவிவை முதலாயின. பிணிகள் உடலுக்கே ஆகுதலால் - யாக்கைக் கென்றார். உணினென்பது அதனருமைதோன்ற நின்றது. (௨)

அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு.............................✻
பெற்றா னெடிதுய்க்கு மாறு... ....✻

(இ-ள்.) அற்றால்-(முன்னுணப்பட்டது) அற்றால் - (பின்னுணப்படுவதனை}-அளவறிந்து- (அற) மளவறிந்து-உண்க-(அவ்வளவினதாக) உண்ணக்கடவன்.—உடம்பு - பெறுதற்கரியவிம்மனித வுடம்பை}-பெற்றான்-பெற்றவன்- நெடிது-நெடுங்காலம்- உய்க்குமாறு-(அதனைக்) கொண்டு செலுத்தும்வழி,- அஃது-அதுவாம். (ஆகலால்) . எ,று.) (கருத்து) உடலைக்கொண்டவனவனுடலிருக்கும்படிசீரணித்தவளவறிந் துண்ணக்கடவன் என்பதாம். ✻ இம்மை மறுமை வீடுபேறுகளை அடைதற்குரியது இம்மனித வுடம்பொன்றுமேயாகலால்-உடம்புபெற்றானென்றும், அதுநெடுங்காலம் நின்றவிடத்து அவைபெறுதற் செய்து கொள்ளலா மாகலால் - நெடிதுய்க்குமாறென்றும், சொல்லினார். (௩)

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல.... ....✻
துய்க்க துவரப் பசித்து.......... ....✻

(இ-ள்.) அற்றதறிந்து- (முன்னுணப்பட்டது)

அற்றபடியை அ.

றிந்து)- துவரப்பசித்து (பின்னே) மிகப்பசித்து-(உண்ணும்போது)-மாறல்ல- மாறுகொள்ளாத உணவுகளை)-கடைப்பிடித்து- (குறி க்கொண்டு-துய்க்க- உண்ணக்கடவன். எ-று.)

(கருத்து) சீரணித்த

ளவறிந்துமாறில்லாவுணவுகளை யுண்ணக்கடவன் என்பதாம். ❋ அற்றதறிந்தெனப்பின்னுஞ்சொல்லியது அதனை உறுதிப்படுத்தற்பொருட்டு.—உண்டது அற்றலும் அதன்பயனாகிய இரதம் அற்றதாகலால் அதுவும் அறல்வேண்டுமென்றற்கு - மிகப்பசித்தென்றார். மாறுகொள்ளாமையாவது- உண்பவன் சரீரசுபாவத்தோடு மாறுகொள்ளாமையும், காலவியல்போடு மாறுகொள்ளாமையும், சுவை வீரியங்களால் தம்முள்ளேமாறுகொள்ளாமையும், ஆம். அவையாவன-முறையேஉணவு - வாதபித்தசிலேஷ்மங்களாகிய சரீரசுபாவங்களுக்கு அடைபடாதவைகளைச் செய்வனவாதலும், ❋ பெரும்பொழுது சிறுபொழுது என்கிற காலவேறுபாடுகளுள் ஒன்றற்குஆவனபிறிதொன்றற்கு ஆகாமையும், தேனும்நெய்யும் தம்முள் ஒத்து நஞ்சாதல்போல்வனவும்-ஆம். அவைகளைக்குறிக்கொள்ளாதுமனம்பட்டவழியால் உண்டால் அதனால் நோயும்மரணமும் வருதலால்-கடைப்பிடித்தென்றார். (௪)

மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி................❋
னூறுபா டில்லை யுயிர்க்கு ....
.........❋

(இ-ள்.) மாறுபாடில்லாத- அம்மூவகைமாறுகோளும் இல்லாத-உண்டி-உணவை)-மறுத்து- (தன்னுள்ளம் வேண்டிய வளவை) மறு

த்து (பிணிவாராதவளவில்)-உண்ணின்-(ஒருவன்) உண்டால்- உயிர்க்கு-(அவ) னுயிர்க்கு-ஊறுபாடு-(பிணிகளாலே) துன்பம்விளைதல்|—இல்லை-உண்டாகாது' எ-று.) (கருத்து) நல்லுணவை யுண்டாற் பிணிகளாற்றுன்பமில்லை என்பதாம். ※ துன்பமூறுவது உயிரோயாதலால் - அதன்மேல் வைத்துச்சொல்லினர். மாறுபாடில்லாதவிடத்தும் குறைதல்நன்றென்பதாம்.[இவைநான்குபாட்டாலும் உணப்படுவனவும்,அவைகளினளவும்,காலமும்,பயனும்,சொல்லப்பட்டன.]

இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்கும் .... , ...※
கழிபே ரிரையான்க ணோய்..※

(இ-ள்.) இழிவறிந்து-அக்குறைதலை (நல்லதென்று) அறிந்து- உ

※ பெரும்பொழுது கார் கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்

. † சிறுபொழுது, மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு.

[illegible]

(௬௮௧)

ண்பான்கண்-(அவ்வாறே) உண்பவனிடத்து- இன்பம்போல்- இன்பத்தைப்போல்-கழிபேரிரையான்கண் - மிகப்பெரிய இரையை விழுங்குவோனிடத்து- நோய்- நோயானது|— நிற்கும் - நீங்காதிருக்கும்.(எ,று.) (கருத்து) குறைவாகவுண்பவனிடத்தின்பம்போல் நிறைவாகவுண்பவனிடத்துத் துன்பமிருக்கும் என்பதாம். ❁ அவ்வாறேயுண்டல்-உண்ணலாமளவிற் சிறிதுகுறையவுண்டல் இன்பமாவது - வாத முதலாகிய மூன்றும் தன்றன் னிலையில் வேறுபடாமையால் - மன மொழி மெய்கள் அவன்வசப்படலும், அதனால் அறமுதலாகிய நான்கும் முடிதலும், ஆம்: இரையை அருந்துமளவன்றி எடுத்து அதனால் வருந்தும் மிருகத்தோ டொத்தலால்- இரையாரென்றார்.

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்........................ ❁
நோயள வின்றிப் படும் .... ❁

(இ-ள்.) தெரியான்- (தன்சரீரசுபாவமும் அதற்கேற்ற வுணவும் காலமும்) ஆராயானாகி- (வேண்டியஉணவைவேண்டியகாலத்து)— தீயளவன்றி- (வயிற்றுத்) தீயளவல்லாமல்- பெரிதுண்ணின் - (ஒருவன்) மிகவுண்ணுவானாயின்-நோய்-நோயானது- அளவின்றி- அளவில்லாமல்-படும்- (அவனிடத்தே வளரும். எ,று.) (கருத்து) சீரணித்ததறியாதவனு மிகவுண்பானாகில் நோயவனிடத்துணடாம் என்பதாம் ❁ [இவ்விரண்டுபாட்டாலும் அப்படி உண்ணாதவிடத்தே படும் இழுக்குச் சொல்லப்பட்டது.] (எ)

நோய்நாடி நோய்முதல் நாடி யதுதணிக்கும்... ...... ❁
வாய்நாடி வாய்ப்பச் செயல்...... .... ❁

(இ-ள்.) (மருத்துவன்!) நோய்-நோயாளியிடத்து (நிகழ்கின்ற நோயை}---நாடி-(அதன்குறிகளால் இன்னதென்று) துணிந்து-நோய்முதல்-(பின்பு) அந்நோய்வருதற்காரணத்தை}-நாடி-ஆராய்ந்து-அது தணிக்கும்வாய்-(பின்) அதுதீர்க்கும்உபாயத்தினை}---நாடி-அறிந்து-வாய்ப்பச்செயல்-(அதனைப்) பிழைபடாமற்செய்யக்கடவன். எ-று.) (கருத்து) வைத்தியன் வியாதியையு மதன்காரணத்தையு மதுநீங்கு முபாயத்தையு மாராய்ந்து மருத்துவஞ்செய்யக்கடவன் என்பதாம். ❊ காரணம்-உணவுசெயலென முன் சொல்லப்பட்டவை. அவ்விரண்டையும் நாடுதற்குப்பயன்-நோயையும் உபாயத்தையும் ஐயமறத்துணிதல்.---மருந்துசெய்தல்-உதிரங்களைதல்-அறுத்தல்-சுடுதல்-முதலாகிய செயல்களெல்லாம் அடங்குதற்கு

(௫௧௮) ௯௫-ஆம்-அதி-மருந்து.

அது தணிக்கும்வா யென்றார். பிழைபடாமை-
செய்துவருகின்ற முறையிலே தப்பாமை.

பழைய மருத்துவர்

(அ)

உற்றா னளவும் பிணியளவுங் காலமுங்................... ❊
கற்றான் கருதிச் செயல்.................................❊

(இ-ள்.) கற்றான்-(ஆயுர்வேதந்தனைக்) கற்றமருத்துவன்|- (அவ்வுபாயத்தைச்செய்யுங்கால்)- உற்றானளவும்-நோயாளியளவும்- பிணியளவும்- (அவனிடத்து நிகழ்கின்ற) நோயினளவையும்- காலமும்- (தன்செயற்கேற்ற) காலத்தினையும்- கருதி- (அந்நூல்வழியால்)நோக்கி-செயல்-(அவைகளோடு பொருந்தச்) செய்யக்கடவன்.எ-று.) (கருத்து) மருத்துவன் பிணியாளியளவையும் பிணியளவையுங்காலத்தினளவையுமறிந்து பொருந்தச் செய்யக்கடவன் என்பதாம். * நோயாளியளவு- சரீரசுபாவம் பருவம் வேதனைகளினளவு.-- பிணியளவு † சாத்தியம்- அசாத்தியம்- யாப்பியம்- என்கிற - சாதிவேறுபாடும், தொடக்க நடுவீறென்னும் அதன்பருவவேறுபாடும் வன்மைமென்மைகளும், முதலாயின —காலம் முன்சொல்லியது. இம்மூன்றும் தப்பாமல் நூல்வழியாலும், அறிவு மிகுதியாலும், ஆராய்ந்து செய்கவென்பதற்கு- கற்றான் கருதிச் செயலென்றார். [இவையிரண்டுபாட்டாலும் அவ்விழுக்கம் வந்தவிடத்துத் தீர்க்கும்வழிசொல்லப்பட்டது.] (௯)

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்........*

றப்பானாற் கூற்றே மருந்து.............

.... *

(இ-ள்.) மருந்து-(பிணிக்கு) மருந்தாவது|-உற்றவன்- (அதனை) யுற்றவன்-தீர்ப்பான்- (அதனைத்) தீர்க்குமருத்துவன்-மருந்து- (அவனுக்குச்சாதனமாகிய) மருந்து-உழைச்செல்வான- (அதனைத்தப்பாமல்) செய்பவன்- என்று-என்று சொல்லப்பட்ட- அப்பால்- அந்நான்குபகுதியையுடைய-நாற்கூற்றே-நான்குதிறத்தது எ-று.) (கருத்து) பிணிக்குமருந்தாவது நோயாளிவைத்தியன்மருந்துசெய்பவன்இந்நான்குமாம் என்பதாம் † அவைகளுள்- உற்றவன்வகைநான்காவன, பொருளுடைமை- மருத்துவன்வழிநிற்றல்- நோய்நிலையுணர்த்தல்வன்மை-மருந்துத்துன்பம்பொறுத்தல் -எனவிவை--- தீர்ப்பான்வகை நான்காவன, நோய்பார்த்தற் கஞ்சாமை-ஆசிரியனைவழி

† சாத்தியம் தீர்க்கத்தக்கது அசாத்தியம் தீர்க்கத்தகாதது யாப்பியம் ஒட்டத்தக்கது.

கூடியதும்-அதி-மருந்து.

(ஈஎ)

பட்டு அடைந்தகல்வி நுண்ணறிவுடைமை- பலகாலுந் தீர்த்துவருதல்-மனமொழிமெய்கள் பரிசுத்தமாதல் - எனவிவை.---- மருந்தின் வகை நான்காவன, பலபிணிகளுக்கும் ஏற்றல்-சுவைவீரியம்விளைவாற்றல்களிற் மேம்படுதல்-எளிதிலேபெறப்படுதல்-சரீரசுபாவத்தோடுபொருந்தல்- எனவிவை.---- இயற்றுவான்வகை நான்காவன, நோயாளியிடத்தே அன்புடைமை- மனமொழிமெய்கள்பரிசுத்தமாதல் சொல்லியபடியே செய்தல் வல்லமை- அறிவுடைமை- எனவிவை.--- இவையெல்லாம் கூடியவிடத்தல்லது பிணிதீராமையால் இக்கூட்டத்தை மருந்தென்றார். [இதனால் அவற்றைத்தீர்த்தற்கு வேண்டுவனவெல்லாம் தொகுத்துச் சொல்லப்பட்டன.] (ம)

அங்கவியல் மூற்றிற்று.

இனி அவ்வரசியன் முதலானவைகளிலே அடங்கா தொழிந்தவை
வியல்பைப் பதின்மூன் றதிகாரத்தினாலே சொல்லத்தொடங்கி முதலிலே குடிமை சொல்லுகிறார்.

ஒழிபியல்.

௯௬-ஆம்-அதி-குடிமை.

அஃதாவது- உயர்ந்தகுடியினிடத்துப் பிறந்தவரது தன்மை. உயர்குடிப்பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் அவசியம்வேண்டுவதாகலால் அச்சிறப்புப்பற்றி முன்வைக்கப்பட்டது.

இற்பிறந்தார் கண்ணலல் லில்லை யியல்பாகச்..............

செப்புமு நாணு மொருங்கு.......................

(இ-ள்.) செப்பமும்- செம்மையும்|-நாணும்-நாணமும்|- ஒருங்கு-ஒருசேர- இற்பிறந்தார்கணல்லது- உயர்ந்தகுடியிலே பிறந்தவரிடத்தல்லாமல் (பிறரிடத்தே)-இயல்பாக-சுபாவமாக-இல்லை-உண்டா

கா. எ-று.) (கருத்து) செம்மையும், நாணமும், நற்குடியிற் பிறந்தவர்க்கல்லது மற்றவர்க்கில்லை என்பதாம். ❀ செம்மை - கருத்தும் சொல்லும் செயலும்- தம்முள்ளே மாறுபடாமை நாண்-பழிபாவங்களின் மடங்குதல். இவை இற்பிறந்தார்க்கானுல் ஒருவர் கற்பிக்க வேண்டாமல் தாமே உண்டாகும். பிறர்க்கானுல் கற்பித்த விடத்தும்நெடிது நில்லாவென்பதாம். (௧)

ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று.... ....*
இழுக்கார் குடிப்பிறந் தார்......... ....., ...*

(இ-ள்.) குடிப்பிறந்தார்-உயர்ந்த குடியிலேபிறந்தவர்- (தமக்குரிய)-ஒழுக்கமும்- நன்னடக்கையும்-வாய்மையும்- மெய்ம்மையும்-நாணும்-நாணமும் ஆகிய இம்மூன்றும்- இம்மூன்றிடத்தும்- இழுக்கார்-(நூலிற் சொல்லியபடி தவறாமலே) வழுவார். எ,று,) 'கருத்து) உயர்குடியிற் பிறந்தவர் நன்னடக்கை, சத்தியம், வெட்கம், இம்மூன்றிலும் தவறார் என்பதாம். ஒழுக்கமுதலாகிய மூன்றும் மெய்ம்மொழிமனங்களுக்கு உரியனவாகலால்- அம்முறை வைக்கப்பட்டன. இழுக்கல்- தாமறியாது வருதலும் இழுக்கா ரென்றார். (௨)

நகைஈகை யின்சொ லிகழாமை நான்கும்.......... .... *
வகையென்ப வாய்மைக் குடிக்கு......... .... *

(இ-ள்.) வாய்மை-(எக்காலத்தும்) வேறுபடாத குடிக்கு-குடியிற்பிறந்தவர்க்கு- (வறியவர்சென்றவிடத்து)- நகை-முகமலர்ச்சியும் ஈகை-(உள்ளவை) கொடுத்தலும்-இன்சொல்-இன்சொற் (சொல்லுதலும்)-இகழாமை-இகழாமையும் ஆகிய-நான்கும்- இந்நான்கும்-வகை-(உரிய) வகையாகும்- என்ப- என்று (நூலோர்) சொல்லுவர் எ-று.) (கருத்து) நற்குடியிற்பிறந்தவர்க்கு முகமலர்ச்சி கொடுத்தல்இன்சொல் இகழாமை இந்நான்கு முரித்தாம் என்பதாம். ❋ பொய்மை வேறுபடுதலுடைமையால் வேறுபடாமையைவாய்மையென்றும், இல்லாரை எல்லாரும் இகழ்வாராகலால்- இகழாமையை அவர்க்குரித்தாக்கியும், சொல்லினர். குடி-ஆகுபெயர். [இவைமூன்றுபாட்டாலும் குடிப்பிறந்தாரியல்பு சொல்லப்பட்டது.] (௩)

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்........ ...❋
குன்றுவ செய்த லிலர்.. ....❋

(இ-ள்.) அடுக்கிய-(பலவாக) அடுக்கிய-கோடி-கோடியளவினதாகிய பொருளை}- பெறினும்- பெற்றாலும்-குடிப்பிறந்தார்- உயர்ந்த குடியிலேபிறந்தவர்|-குன்றுவ-(தம்மொழுக்கங்) குன்றுந் தொழில்களை}-செய்தலிலர்- செய்யார். எ-று.) (கருத்து) உயர்குடியிற் பிறந்தவர் கோடிபொருளைப்பெற்றாலுங் குன்றுந்தொழிலைச் செய்யார்கள் என்பதாம். ❋ கோடியென்பது இங்கே எண்ணப்படும்பொருண்மேல் நின்றது. குன்றுந்தொழில்கள் - குன்றுதற்கு ஏதுவாகிய தொழில்கள். (௪)

[illegible] (௯௫௫)

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி.... .... ❋
பண்பிற் றலைப்பிரித லின்று..................................❋

(இ-ள்.) பழங்குடி-பழமைதொட்டுவருகிற குடியிலேபிறந்தவர்|- வழங்குவது- (தாம்) கொடுக்கும்பொருள் -உள்வீழ்ந்தக்கண்ணும்- முன்னையளவிலே சுருங்கியவிடத்தும் - பண்பின்- (தமது) குணமுடைமையில்- தலைப்பிரிதலின்று- நீங்கார். எ-று.) (கருத்து) நற்குடியிற்பிறந்தவர் கொடுக்கும்பொருள் சுருங்கியவிடத்துங் குணமுடைமையிற்குறையார் என்பதாம். ❋ பழமைதொட்டுவருதல் - சேர சோழ பாண்டியரென்பதுபோல் ஆதிகாலந்தொடங்கி மேம்பட்டு வருதல், அவர்க்கு வறுமையாவது - தாம்கொடுக்கும் பொருள் முன்னையளவிலே சுருங்குவதாகலால் அதனையேசொல்லினர். (௫)

சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற .... ❋
குலம்பற்றி வாழ்து மென்பார்...... ....
. ... ❋

(இ-ள்.) மாசற்ற-வசையற்றுவருகின்ற- குலம்பற்றி- (தமது) குடிமரபினோடொத்து-வாழ்துமென்பார்- வாழக்கடவோமென்று நினைத்து அப்படியே வாழ்வோர்|- (வறுமையுற்றவிடத்தும்)-சலம்பற்றி-வஞ்சனையைப்பொருந்தி- சால்பில- அமைவில்லாத தொழில்களை}-செய்யார்- செய்யார். எ-று.) (கருத்து) நற்குடிப்பிறப்பில்வாழ்பவர் வஞ்சனைபொருந்தி யமைவில்லாத தொழில்களைச்செய்யார் என்பதாம். ❋ அமைவில்லாமை- தங்குடிமரபினுக்குத் தகாமையாம். [இவைமூன்றுபாட்டாலும் அவர் வறுமையுற்றவிடத்தும் அவ்வியல்பின் வேறுபடாரென்பது சொல்லப்பட்டது.] (௬)

குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின் .... ❋
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து. ... .❋

(இ-ள்.) குடிப்பிறந்தார்கண்- உயர்ந்த குடியிற் பிறந்தவரிடத்தே (உண்டாகிற)-குற்றம்|—(தான்சிறிதேயாயினும்)-விசும்பின்- ஆகாயத்தில்-மதிக்கண்- சந்திரனிடத்து-மறுப்போல்-களங்கம்போல்-உயர்ந்து-ஓங்கி-விளங்கும்- தோன்றும்.எ,று.) (கருத்து) உயர்குடியிற்பிறந்தவரிடத்துண்டாங் குற்றஞ்சிறிதாயினுஞ் சந்திரனிற்களங்கம்போலோங்கிவிளங்கும் என்பதாம். ※ உயர்ந்தகுடிக்கு - விசும்பும், அதிற்பிறந்தோர்க்கு-மதியும், அவர்குற்றத்துக்கு - களங்கமும்,உவமானங்கள். குடியினது உயர்ச்சியினாலும், சந்திரன்போன்ற அவ

சிறந்த குணங்களோடு மாறுகலாலும், அக்குற்றமானது உலகெங்கும் பரந்து வெளிப்படுமென்பதாம். (எ)

நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக் .... *
குலத்தின்க ணையப் படும் .... *

(இ-ள்.) நலத்தின்கண் [illegible] முடையர்குய் வருகின்றவனிடத்தே- நாரின்மை [illegible] தோன்றின்- உண்டாமாயின்— (உலகம்)-அவனை-அ[illegible] குலத்தின்கண்- அக்குலப்பிறப்பிடத்தே-ஐயப்படும்- [illegible] (கருத்து) நலமுடையவனிடத்து அன்பில்லாமையுண்டா[illegible]குலமுடையனல்லனென்றையப்பாட்டில் வைக்கப்படும் [illegible] நலமும், குலமும், ஆகுபெயர். அன்பில்லாமையால்-[illegible]சொல்முதலானவைசொல்லப்பட்டனதோன்றினென்பது-[illegible]மைவிளக்கின்றது. நலனுடையனாய்வருதலினடுவே இவை[illegible]றலால்உள்ளது ஐயமாயிற்று. [இவையிரண்டுபாட்டாலும் வேறுபட்ட வழிப்படுமிழுக்கஞ்சொல்லப்பட்டது.] (அ)

நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டும் .... *
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல் .... *

(இ-ள்.) நிலத்திற்கிடந்தமை-நிலத்தினியல்பை}—கால்-(அதனிடத்தேமுளைத்த) முளையானது|-காட்டும் காண்பிக்கும்.—(அதுபோல்)- குலத்திற்பிறந்தார் வாய்ச்சொல் - நற்குலத்திற் பிறந்தவர்வாய்ச்சொல்|-காட்டும்- (அக்குலத்தினியல்பைக்}) காட்டும். எ-று.) (கருத்து) நிலத்தியல்பைமுளை காட்டும் குலத்தியல்பைவாய்மொழி காட்டும் என்பதாம். ❀ கிடந்தமை-உள்ளகுணம்.—முளைமாத்திரத்தால் நன்மையும் தீமையும் தெரிதலால் இலைமுதலானவைகாட்டுமெனச் சொல்லாராயினர். ஆகவே குலத்திற்பிறந்தார்க்கும் செயல்முதலானவை வேண்டாவாயின் குலத்திற்புல்லறிதற்குச்சாதனம் சொல்லுவார்போன்று இன்சொல் சொல்லவேண்டு மென்றபடியாயிற்று. (கூ)

நலம்வேண்டி னாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின், ❀
வேண்டுக யார்க்கும் பணிவு .... ❀

(இ-ள்.) (ஒருவன்)-நலம்வேண்டின்- (தனக்கு)நலமுடைமை வேண்டுமாகில்- நாணுடைமை-நாணமுடையவனாதலை}--வேண்டும்-வேண்டற்பாலன்.— குலம்வேண்டின் - குலமுடைமையை வேண்டு

கிஎச-ஆம்-அதி-குடிமை

(௬௯௫)

வாறாயின்-யார்க்கும்-(வணங்கத்தக்க)-யாவரிடத்தும்-பணிவு- வண
ங்குதலை}-வேண்டுக- வேண்டக்கடவன். எ-று.) (கருத்து) நலத்தை
விருப்பினால் நாணத்தைக்கொள்ளக்கடவன் குலத்தை விரும்பினால்
வணக்கத்தைக்கொள்ளக்கடவன் என்பதாம். ❋ நலம் - புகழ் புண்
ணியங்கள். அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர் த
ந்தைதாய் இவரெல்லாம் அடங்க-யார்க்குமென்றார். பணிவு - இருக்
கையெழல் எதிர்செலல் முதலாயின. [இவ்விரண்டுபாட்டாலுங்கு
டிமைக்கு வேண்டுவன சொல்லப்பட்டன.]
(௰)

௯௭-ஆம்-அதி-மானம்.

இனிக்

குடிப்பிறந்தவர்க்கு உரிய குணங்கள் சொல்லத்தொடங்கிமுத
லில் மானம் சொல்லுகின்றார்.

அஃதாவது- எந்நாளும தன்னிலையிலேதாழாமையும் ஊழால்
தாழ்வு வந்தவிடத்து உயிர் வாழாமையுமாம். இது அக்

குடிப்பிறப்பை அழியாமல் நிறுத்துதலாலே
சிறப்புப்பற்றி முன் வைக்கப்பட்டது.

அஃ.

இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்......... ... .*
குன்ற வருப விடல்.,..*

(இ-ள்.) இன்றியமையா-செய்யாதவிடத்தே தாம் அமையாத-சிறப்பினவாயினும்- சிறப்புடையவையாயினும்-குன்ற-(தங்குடிப்பிறப்பானது) தாழ-வருப- வருஞ்செயல்களை}-விடல்- விடக்கடவன் எ-று.) (கருத்து) மிகவுஞ்சிறப்புடையவைபாயினுந் தங்குடிதாழவருஞ்செயல்களை விடக்கடவன் என்பதாம். ※ அமையாமை - இறத்தல். குடிப்பிறப்பென்பது அறிகாரமுறைமைபால்வந்தது. தாமிறக்கவருமிடத்தே இழிதொழில்களைச் செய்தாயினும் பிழையென்னும் வடநூலின் முறைமையை மறுத்து உடம்பினது நிலையில்லாமையும். மானத்தினது நிலையுடைமையும், ஆராய்ந்து அவை செய்யலாகாதென்றபடி. (க)

சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு........................ .... *
பேராண்மை
வேண்டு பவர்.......... ....*

(ந.கூசு) கூஎ-ஆம்-அதி-மானம்.

(இ-ள்.) சீரொடு-புகழுடனே-பேராண்மை - மானத்தைநிறுத்து தலே-வேண்டுபவர் விரும்புபவர்|- சீரினும்-புகழ்சம்பாதிக்குமிடத் தும்-சீரல்ல- (தங்குடிக்கு) ஒவ்வாத இழிதொழில்களை-செய்யார்- செய்யார். எ-று.) (கருத்து)மானத்தைவிரும்புவோர் தங்குடிக்கொ வ்வாததொழில்களைச் செய்யார் என்பதாம். ❋ எவ்விடத்தும் நிலை குலையாத திடத்தால் உண்டாகலிபற்றி- பேராண்மை யெனப்பட்ட து. நிலையுடைய புகழின்பொருட்டேனும் செய்யாரென்பதாம். ஏ- அசை நிலை.] (௨)

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய ....❋
சுருக்கத்து வேண்டு முயர்வு...
..........................❋

(இ-ள்.) (குடிப்பிறந்தவர்க்கு)-பெருக்கத்து- நிறைந்த|செல்வம் உண்டானவிடத்து-பணிதல்- (யாவரிடத்தும்) பணிவு-வேண்டும்-வ ண்டும்.— சிறிய-குறைந்த-சுருக்கத்து- வறுமையுண்டானவிடத்து- உயர்வு-பணியாமை,-வேண்டும்- வேண்டும். எ-று.) (கருத்து) நற்கு டியிற்பிறந்தவர்க்குச் செல்வத்தில்வணக்கமும்வறுமையில் வணங்கா மையும வேண்டும் என்பதாம். ❋ பணியாமை- தாழ்வுவாராமல் ப ழையவுயர்ச்சியிலே நிற்றல். செல்வமுடையபோது அது உயர்ச்சி செய்தலினாலே தாம் தாழ்தலும், வறுமையுடையபோது அது தா ழ்வுசெய்தலினாலே தாம் உயர்தலும், வேண்டுமென்பதாம். [இவை மூன்றுபாட்டாலும் தாம் தாழ்தற்கு ஏதுவானவைகளைச் செய்யா மையின் சிறப்புச் சொல்லப்பட்டது.] (௩)

தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்...... ....❋
நிலையி னிழிந்தக் கடை......... ....❋

(இ-ள்.) மாந்தர்-

(குடிப்பிறந்த)மனிதர்|-நிலையின்- (தம்முயர்ந்த)நிலையிலிருந்து-இழிந்தக்கடை-தாழ்ந்தவிடத்து- தலையினிழிந்த-தலையிலிருந்து வீழ்ந்த- மயிரனையர்- மயிர்போல்வர். எ-று.) (கருத்து) நற்குடியிற்பிறந்தவர் நிலைகெட்டவிடத்துத் தலையிலிருந்து நீங்கியமயிர்க்கொப்பாவர் என்பதாம். ❋ அந்நிலையைவிடாது நின்றவிடத்தேவிரும்பிமரியாதை செயப்படுதலும், விட்டுத்தாழ்ந்த விடத்தே இழிவுசெயப்படுதலும், உவமானத்தாற்பெற்றும். (௪)

குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ .... ❋
குன்றி யனைய செயின்.. ❋

௯எ-ஆம்-அதி-மானம். (௯௬௫)

(இ-ள்.) குன்றினனையாரும்- (குடிப்பிறப்பால்) மலைபோலுயர்ந்தவரும்|-குன்றுவ-தாழ்தற்கு ஏதுவாகியசெயல்களை }-குன்றியனைய-ஒருகுன்றியளவாயினும்- செயின்-.செய்தால் - குன்றுவர்-தாழ்வார். எ-று.) (கருத்து) மலையைநிகர்த்தகுடிப்பிறப்பாளரும் தாழ்தற்கேதுவானசெயல்களைச் செய்தலால் தாழ்வார்கள் என்பதாம். ❋ குன்றியனையவும்என்கிற இழிவு சிறப்பும்மைவிகாரத்தால் தொக்கது. தாழ்தற்கு-ஏதுவாகிய செயல்களாவன- பழிக்கப்படுஞ் செயல்கள்.

புகழின்றாற் புத்தேணாட் டுய்யாதா லென்மற்............... ❋
றிகழ்வார்பின் சென்று நிலை .... ❋

(இ-ள்.) இகழ்வார்பின்- (தம்மை) அவமதிப்பவர் பின்னேசென்று நிலை- (ஒருவன்மானம்விட்டுச்) சென்று நிற்கின்ற நிலை;-- புகழின்று- (இவ்வுலகத்துப்) புகழுண்டாக்காது- புத்தேணாட்டு- மற்றைத் தெய்வலோகத்திலே-உய்யாது - செலுத்தாது - மற்று- இனி- என்-

(அவனுக்குச்செய்வது) யாது-யாது. எ,று.) (கருத்து) இகழ்பவர்பின்சொல்வோர் நிலைபுகழையுண்டாக்காதுமேலுலகத்துச் செலுத்தாது என்பதாம். ❋ ஆலிரண்டும்- அசைகள். புகழுண்டாக்குவப் புகழென்றார். பயனாகிய இவ்விரண்டும்இல்லாமல் வீணாகமாலங்கெடுகின்ற என்ன வென்பதாம். [இவைமூன்றுபாட்டாலும் ய்தற்குற்றம் சொல்லப்பட்டது.]

அலவசை

(௯)

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே.. ...... *
கெட்டா னெனப்படுத னன்று.... ....*

(இ-ள்.) ஒட்டார்பின் - (தன்னை) இகழ்வார்பின்னே—சென்று-போய்-(பொருள்பெற்று)-ஒருவன்வாழ்தலின்- (அதனால்) ஒருவன் உயிர்வாழ்தலைக்காட்டிலும்- அந்நிலையே- முன்னைநிலையிலேநின்று-

கெட்டானெனப்படுதல்-இறந்தானென்றுசொல்லப்படுதல்|-நன்று- (அவனுக்கு) நன்று. எ,று.) (கருத்து) ஒருவனிகழ்பவர்பின் சென்றுவாழ்தலினு முன்னிலையிலிருந் திறந்தானென்று சொல்லப்படுதலேநல்லது என்பதாம். ❋ புகழும்வானுலகமும் உண்டாக்காதேனும் பொருள்பெற்றுஉயிர்வாழ்வ மென்பானை நோக்கிச்சொல்லியது.

மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை
பெருந்தகைமை. *
பீடழிய வந்த விடத்து...... .

....*

(இ-ள்.) பெருந்தலைமை-

உயர்குடிப்பிறப்பான து-மடு (தன்)வ [ா] (௲௬௮)

· ௬௭-ஆம்-அதி-மானம்.

வியாகியமானம்-அழியவந்தவிடத்து-கெடவந்தபோது-ஊனோம்பு
ம் (இறந்துபோகாமல் பயனில்லாத) வுடம்பைக் காப்பாற்றும்-வா
ழ்க்கை வாழ்வானது-மற்றுமருந்தோ (பின்னுமிறவாமைக்கு) ம
ருந்தாமோ. எ,று.) (கருத்து) மானமழிய வந்தபோது உடலைக்கா
ப்பாற்றும் வாழ்வானது இறவாமைக்கு மருந்தாமோ என்பதாம்.
❋ அக்குடிப்பிறப்பு- நற்குணங்களுக்கெல்லாம் இடனாதற்சிறப்பு
ப்பற்றி-பெருந்தலைமை யென்றும், அக்குணம் பலவினும் மான
மானது அக்குடிப்பிறப்புக்கு வலியாதற் சிறப்புப்பற்றி மடென்று
ம்,அம்மானம் அழிந்தால் நின்ற வெற்றுடம்பு இழிக்கப்படுதலால்-
அதனை ஊனென்றும், பின்னுமிறத்தல் நிச்சய மென்றற்கு - மருந்
தோவென்றும், சொல்லினர். (அ)

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்ன .... *
ருயிர்நீப்பர் மானம் வரின் .. ..

....*

(இ-ள்.) மயிர்நீப்பின்- (தன்மயிர்த்திரளில்) ஒருமயிர் நீங்கினும் -வாழா-உயிர்வாழாத-கவரிமாவன்னார்- கவரிமாவையொப்பவர்,—மானம்வரின்- (உயிர்நீக்குதற்கான) மானம் பெறுமளவுவரின்- உயிர்-அவ்வுயிரை}-நீப்பர் விடுவர்.எ,று.) (கருத்து) கவரிமானுக்கொப்பானவர் மானங்கெடவரி னுயிரைவிட்டுவிடுவர் என்பதாம். ※ நீப்பினுமென்னுமும்மை- தொக்குநின்றது. உயிருமானமும் உடனில்லாதவிடத்துப் பின்னும்போவதாகிய வுயிரைநீக்கி எந்நாளு நிற்பதாகிய மானமடைவரென்பதாம். உவமானம் அவர்க்கு அது இயல்பென்பது விளக்கியது. (௯)

இளிவரின் வாழாத மான முடையா........ .... *
ரொளிதொழு தேத்து முலகு........ .... *

(இ-ள்.) இளிவரின்- (தமக்கு) ஓரவமானம்வந்தவிடத்து- வாழாத-(பொறுமல்)உயிர்வாழாத-மானமுடையார்- மானமுடையவரது—ஒளி-புகழ்வடிவை}- உலகு-உலகத்தார்|- தொழுதேத்தும்- (எந்நாளுந்) தொழுது துதியாநிற்பர். எ,று.) (கருத்து) அவமானம் வந்தபோது உயிர்பெற்றுவாழாத மானமுடையவர் புகழ்வடிவை யுலகத்தார் துதிப்பர் என்பதாம். ※ புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் வலவனே வானவூர்தி யெய்துவராதலால் - சுவர்க்கம் பெறுதல்சொல்லவேண்டாவாயிற்று. [இவை நான்குபாட்டாலும் மானப்பொருட்டாகிய இறப்பின் சிறப்புச் சொல்லப்பட்டது.] (௰)

௯௮-ஆம்-அதி-பெருமை.

அஃதாவது- செய்தற்கரியசெய்தல்- செருக்கில்லாமைபிறர்குற்றஞ்சொல்லாமை- என்றிவை முதலாகிய நற்குணங்களாலே பெரியராயினோரது தன்மையாம். நிலையிலிருந்துமேலும்மேலும்உயர்த்துவதாகிய இக்குணங்கள் உண்டாவது நிலையிலிருந்துதாழாமை உள்ளவிடத்தே யாகலால் இது மானத்தின்பின் வைக்கப்பட்டது.

ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்..... ......*
கஃதிறந்து வாழ்து மெனல்......... .... *

(இ-ள்.) ஒருவற்கு-ஒருவனுக்கு- ஒளி -ஒளியாவது- உள்ளவெறுக்கை-(பிறராலேசெய்தற்கரியவைகளைச் செய்வோமென்று நினைக்கிற) மனவெழுச்சியின்மிகுதி.—ஒருவற்கு-ஒருவனுக்கு- இளி-மானமாவது-அஃதிறந்து- அச்செயலையொழிந்து -வாழ்துமெனல்- உயிர்வாழக்கடவோமென்று நினைத்தல். எ;று.) (கருத்து ஒருவனுக்கொளியாவது மனவெழுச்சியாம். இளியாவதுமனவெழுச்சியில்லாமையாம் என்பதாம். ❋ ஒளி-தான் உளனாயகாலத்து மிகுத்துதோன்றுதலுடைமை.—மூன்றும் செயற்கரிய செய்வார் பெரியரொன்றாராயினும் இங்கே அவை அளவிறந்த உபகாரம் ஈகை முதலானவையாம்.—அவைகளினாலாகிய பெருமையை அதன் காரணத்தின்மேலிட்டு- உள்ள வெறுக்கையென்றும், அதனையே அதன் காரியமாகிய ஒளியாக்கியும், சொல்லினார். இதனாற்பெருமையின் சிறப்புச்சொல்லப்பட்டது] (க)

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா... .. .. *
செய்தொழில் வேற்றுமை யான்.
....*

(இ-ள்,) எல்லாவுயிர்க்கும்-எல்லாமக்களுயிர்க்கும்-பிறப்பு-(பொருவாகிய) பிறப்பியல்பு-ஒக்கும்-ஒத்திருக்கும்-(ஆயினும்)-சிறப்பு-(பெருமைசிறுமைஎனப்பட்ட) சிறப்பியல்புகள்|-ஒவ்வா- ஒத்திடாவாம்.—செய்தொழில் -செய்யுந்தொழில்களது- வேற்றுமையான்-வேறுபாட்டால். எ,று) (கருத்து) மக்களுக்குப் பிறப்பியல் பொத்திருக்கும். தொழில்வேற்றுமையாற் சிறப்பியல் பொவ்வாவாமென்பதாம். ❋ வேறுபாடு- நல்லவைபும்,தீயவைபும், இரண்டுமானவையும், இரண்டுமல்லாதவையும், ஆகிய பலபிரிவுகள்.— வினவசத்தா

(சா) ௯௭-ஆம்-அதி-பெருமை.

ல்பஞ்சபூதகாரியமாகிய உடம்பைப்பொருந்திநின்று அதன்பயனனுபவித்தல் எல்லார்க்கும் ஒத்திருத்தலால் பிறப்பொக்கு மென்றும், பெருமை சிறுமைகளுக்குக் காரணக் கல்லாகிய தொழிற்பிரிவுகள் உடம்புதோறும் வேறுபடுதலால்- சிறப்பொவ்வா வென்றும், சொல்லினர். (உ)

மேலிருந்துமேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்.......... ❋
கீழல்லார் கீழல் லவர்.... ....❋

(இ-ள்.) மேலல்லார்- (செய்தற் கரியனவ்களைச் செய்யமாட்டாமல்) சிறியராயினோர்|- மேலிருந்தும்- உயர்ந்த ஆதனங்களில் இருந்தாராயினும்-மேலல்லர் பெரியராகார் - கீழல்லவர்- (அவைசெய்து) பெரியராயினோர்|-கீழிருந்தும்- தாழ்ந்தவெறுநிலத்தில் இருந்தாராயினும்-கீழல்லார்- சிறியராகார். எ,று.) (கருத்து) சிறியவர்மேலிருந்தாலும் பெரியவராகார். பெரியவர் கீழிருந்தாலுஞ் சிறியவராகார் என்பதாம். ❋ மேலிருத்தல் கீழிருத்தல்களாலே- செல்வ வறுமைகளும், மேல் கீழ்களாலே- பெருமை சிறுமைகளும், கருதப்பட்டன [இவையிரண்டுபாட்டாலும் முறையே குடிப்பிறப்பு மாத்திரத்தாலும், செல்வமாத்திரத்தாலும், பெருமை உண்டாகாமை சொல்லப்பட்டது. (௩)

ஒருமை மகளிரே போலப் பெருமையுந் ....
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு. ..

.... ❋

.. .. ❋

(இ-ள்.) ஒருமை- பிளவுபடாத மனவொருமையை யுடைய-மகளிரேபோல-கற்புள்ள மாதரைப்போல- பெருமையும்- பெருமைக் குணமும்|—தன்னைத்தான்- தன்னைத்தானே - கொண்டொழுகின்- (ஒருவன் நிறையின்வழுவாமல்) காத்துக்கொண்டு நடக்க வல்லனாயின்-உண்டு-(அவனிடத்து) உண்டாம். எ,று.) (கருத்து) பெருமைக் குணமுங் கற்புள்ளமாதரைப்போலத் தன்னைக் காத்துக்கொண்டவனுககுண்டு என்பதாம் ❋ ஒழுகுதல்- மனமொழிமெய்களை அடக்கி உபகாரமுதலானவை செய்துவருதல். [இதனால்பெருமைஉண்டாமாறுசொல்லப்பட்டது.] (௪)

பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி .... ❋
னருமை யுடைய செயல்...................... .... ❋

(இ-ள்.) பெருமையுடையவர்-

(அவ்வழியாலே பெருமையுடைய

௯௮-ஆம்-அதி-பெருமை.

(சாக)

வராயினர்|-(தாம்வறியராகியவழியும்) -அருமையுடைய-(பிறரால் செய்தற்கு)அருமையுடையனவாகிய-செயல்-(தஞ்) செயல்களை}-ஆற்றின்-(அவைசெய்யும்) வழியால் -ஆற்றுவார்- (முடிவுபெறச்) செய்யவல்லவராவர். எ,று.)(கருத்து)பெருமையுடையோர் அருமையுடையசெயல்களைச் செய்வார் என்பதாம். ❊ அரியசெயல்களை முன்செய்து வந்தமைதோன்ற- பெருமையுடையவ ரென்றதனாலும், ஆற்றுவாரென்றதனாலும், வறியராகிய வழியுமென்பது பெற்றாம். [இதனால் அதனையுடையார்செய்தி சொல்லப்பட்டது.] (௫)

சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப் ... ...*
பேணிக்கொள் வேமென்னு நோக்கு .

.... *

(இ-ள்.) பெரியாரை- (அப்படிப்பட்ட) பெரியாரை- பேணி-வழிபட்டு- கொள்வேமென்னும் (அவரியல்பைக்) கொள்வேமென்னும்-நோக்கு-கருத்து-சிறியார்- மற்றச்சிறியராயினோரது – உணர்ச்சியுள்-மனத்தினிடத்து- இல்லை-உண்டாகாது. எ,று.) (கருத்து) பெரியோரைவழிபட்டுக்கொள்வோமென்னுங் கருத்துச் சிறியோர்மனத்திடத்தில்லை என்பதாம். ※ குடிமை செல்வம் கல்வி யென்றிவையுடையவராயிருக்கை மாத்திரத்தால் தம்மை வியந்திருப்பார்க்கு அவைநமக்கியல்பென்று அடங்கியிருப்பானை வழிபட்டு அவ்வியல்புடையராதல் கூடாதென்பதாம். (சு)

இறப்பே புரிந்த தொழிற்றுஞ் சிறப்புந்தான்...... ....*
சீரல் லவர்கட் படின்.............. ....*

(இ-ள்.) சிறப்பும்-(தனக்குத்தகும் பெரியாரிடத்து அடங்கியிருத்தலைச்செய்வதாகிய) சிறப்பும்-தான்-தான்-சீரல்லவர்கட்படின்(தனக்குத்தகாத) சிறியவரிடத்துஉண்டாமாயின்- இறப்பேபுரிந்த-அடங்கியிருத்தலொழிந்து செருக்கினிடத்திலே) மிகுந்த-தொழிற்றும்-செயலையுடைத்தாம். எ,று.) (கருத்து) சிறப்புஞ் சிறியவரிடத்துண்டாயின் செருக்கிலே மிகுந்த தொழிலையுடையதாம் என்பதாம். ※செருக்கினைமிகச் செய்யுமென்பதாயிற்று. சிறப்பு- குடிமைசெல்வங் கல்விகளினாலாகிய மிகுதி. [இவை யிரண்டுபாட்டாலும் அஃதில்லாதார் செய்தி சொல்லப்பட்டது] (எ)

பணியுமா மென்றும் பெருமை சிறுமை .... *
அணியுமாந் தன்னை வியந்து.
[௱௧]

..............'.... .... * (௯௱௨)

௬௮-ஆம்-அதி-பெருமை.

(இ-ள்.) பெருமை-பெருமையுடையவர்|—என்றும் - சிறப்புண்டாகிய நாளிலும்-பணியும்-அடங்கிநடப்பார்.-சிறுமை-(மற்றைச்) சிறுமையுடையவர் -(என்றும்)-அது இல்லாதநாளிலும்-தன்னைவியந்து-தம்மைமெச்சி-அணியும்-சிறப்பிப்பார். எ-று.) (கருத்து) பெருமையுடையவர் சிறப்புண்டாகியகாலத்து மடங்கிநடப்பார். சிறுமையுடையவர் சிறப்பில்லாக்காலத்துந் தம்மைச் சிறப்பித்து நடப்பார் என்பதாம். ☞ [பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற், செலலா தாகுஞ் செய்யுமென்முற்றே. என்றவிலக்கணத்திற்குமாறுயினு மதற்குக்காரணம். ❋ பண்புடையவர் தொழில்கள் பண்பின்மேல் ஏற்றப்பட்டன. இதுபின் அற்றமறைக்குமென்னு மிடத்தும் ஒக்கும். ஆயிரண்டும்-அசை. சிறப்பித்தல்- பிறரினுந் தமக்கு ஒருயர்வை ஏற்றிக்கொள்ளல். (அ)

பெருமை பெருமித மின்மை சிறுமை.................. ❋
பெருமித மூர்ந்து விடல்.. ....
.............●....... ❋

(இ-ள்.) பெருமை-பெருமைக்குணமாவது|-பெருமிதமின்மை -(காரணம் உண்டாகியவிடத்தும் அது இயல்பாதலேக்கிச்) செருக்கில்லாதிருத்தல் —சிறுமை- சிறுமைக்குணமாவது|-பெருமிதமூர்ந்துவிடல்-(காரணம் இல்லாவிடத்தும் அதனை ஏற்றிக்கொண்டு) செருக்கின்முடிவிலே நின்றுவிடுதல். எ-று.) (கருத்து) பெருமைக்குணமாவது செருக்கில்லாதிருத்தல். சிறுமைக்குணமாவது செருக்குடைத்தாயிருத்தல் என்பதாம். ❋ அளவுறச்செருக்கலென்பதாயிற்று. (கூ)

அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்.............. ❋
குற்றமே கூறி விடும்.............. .... ❋

(இ-ள்.) பெருமை- பெருமையுடையவர்|-அற்றமறைக்கும்- (பிறர்மானத்தையேசொல்லி) அவமானத்தை} மறையாநிற்பர்.—சிறுமை-மற்றைச்சிறுமையுடையவர்| -குற்றமேகூறிவிடும்- (பிறர்குணத்தைமறைத்துக்)குற்றத்தையே} சொல்லிவிடுவர். எ,று.) (கருத்து) பெரியோர் பிறரவமானத்தை மறைப்பர். சிறியோர் பிறர்குற்றத்தைச்சொல்லுவர் என்பதாம். ❋ மறைத்தலும் சொல்லலும் மற்றையிடத்தும் கூட்டப்பட்டன. தான்—அசை. [இவை மூன்றுபாட்டாலும் இருவர்செயலும் சேர்த்துச்சொல்லப்பட்டன.] (ய)

☞ நன்னூல்.

௯௯-ஆம்-அதி-சான்றாண்மை.

அஃதாவது- பலகுணங்களாலும் நிறைந்து அவைகளை ஆளுந் தன்மை. பெருமையுள் அடங்காத பலகுணங்களையும் தொகுத்துக்கொண்டு நிற்கையால் இது அதின்பின் வைக்கப்பட்டது.

கடனென்ப நல்லவை யெல்லாங்
கடனறிந்து...... .... ❋
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு... ...
.... ❋

(இ-ள்.) கடனறிந்து- (நமக்கு இது) தகுவதென்று அறிந்து— சான்று- (பலகுணங்களாலும்) நிறைந்து- ஆண்மை- (அவைகளை) ஆளுந்தற்றன்மையை}- மேற்கொள்பவர்க்கு- மேற்கொண்டு நடப்பவர்க்கு-நல்லவையெல்லாம்- நல்லகுணங்களெல்லாம்- கடன்-இயல்பாயிருக்கும்-என்ப-என்று (நூலோர்) சொல்லுவர் எ-று.) (கருத்து) பெரியவர்களுக்கு நற்குணங்களை மேற்கொள்ளுதல் கடமையாயிருக்கும் என்பதாம். ❋ சிலகுணங்களில்லாவிடத்தும், உள்ளவை இயல்பாயிராதவிடத்தும் சான்றாண்மை யென்னுஞ் சொற்பொருள் கூடாமையால் இவ்வதுப்பெயர்பற்றி அவரிலக்கணம் இப்படிச் சொல்லினானென்பதாம். (க)

குணநலஞ் சான்றோர் நலனே பிறநல.......... ... ... ❋
மெந்நலத் துள்ளதூஉ மன்று........... ... . ❋

(இ-ள்.) சான்றோர்நலன் - சான்றோர் நலமாவது- குணநலம்-குணங்களாலாகியநலமே.—பிறநலம்-அது நீங்கலான உறுப்புக்களாலாகியநலம்-எந்நலத் துள்ளதூஉம்- எந்தநலத்திலுமுள்ளதும்-அன்று-அல்ல. எ-று.) (கருத்து) சான்றோர்க்குக் குணநன்மையேபெரியநன்மையாம் மற்றநன்மை நன்மையல்ல என்பதாம். ❋ அகநலத்தை முன்னே பிரித்தமையால் மற்றைப் புறநலத்தை-பிறநலமென்றும், அது குடிப்பிறப்புக்கல்விமுதலாக நூலோரெடுத்த நலங்களுள்ளே செல்லாமையால்-எந்நலத்துள்ளதூஉ மன்றென்றும், சொல்லினார். [இவையிரண்டு பாட்டாலும்சால்புக்கேற்றகுணங்கள்பொதுவகையாற் சொல்லப்பட்டன.] (உ)

அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ.... ❋
டைந்துசால் பூன்றிய தூண்.... ....❋

(இ-ள்.) அன்பு-(சுற்றத்தார்மேலே யல்லாமற் பிறர்மேலும் உண்டாகிய) அன்பும்-நாண்-(பழிபாவங்களி) னாணலும்-ஒப்புரவு-(யாவரிடத்தும்) உபகாரஞ்செய்தலும்-கண்ணோட்டம்-(பழையார்மேல்) கண்ணோடலும்-வாய்மையோடு-(எவ்விடத்தும்) மெய்ம்மை சொல்லுதலோடும்—சால்பு-சால்பென்னும் (பாரத்தை)-ஊன்றிய-தாங்கிய-தூண்-தூண்கள்-ஐந்து-அஞ்சு. எ-று.) (கருத்து) அன்பு நாணம்-உபகாரம-தாக்ஷணியம்-சத்தியம்-இவ்வைந்துஞ் சால்பென்னும் பாரத்தைத் தாங்குந்தூண்கள் என்பதாம். ❋ இக்குணங்கள் இல்லாதவிடத்தே சால்பு நிலைபெறாமையால் இவைகளைத் தூணென்றார்.

(௩)

சொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை...... ...... ❋
சொல்லா நலத்தது சால்பு ....
.... ❋

(இ-ள்) நோன்மை-தவமாவது|- கொல்லாநலத்தது- (பிறவறங்களும் வேண்டுமாயினும்) ஒருயிரையுங் கொல்லாத அறத்தினிடத்ததாம்.—(அதுபோல்)-சால்பு- சால்பாவது|- பிறர்தீமைசொல்லாநலத்தது - (பிறகுணங்களும் வேண்டுமாயினும்) பிறர்தீமையைச் சொல்லாத குணத்தினிடத்ததாம். எ,று.) (கருத்து) நோன்பாவது-யாதொன்றையுங் கொல்லாமையாம். சால்பாவது பிறர் குற்றத்தைச்சொல்லாமையாம் என்பதாம். ❋ தவத்திற்குக் கொல்லாவறம்போல் சால்பிற்குப் பிறர்குற்றம் சொல்லாக்குணம் சிறந்ததென்பதாம்.

(சு)

ஆற்றுவா ராற்றல் பணிதல் துசான்றோர்.........

மாற்றாரை மாற்றும் படை... ....

......❋

......❋

(இ-ள்.) ஆற்றுவார்- (ஒருகருமத்தைச்) செய்துமுடிப்பவரது|- ஆற்றல்-வலிமையாவது|-பணிதல்- (அதற்குத் துணையாவாரைத்) தாழ்ந்துகூட்டிக்கொள்ளுதல்.—சான்றோர்- (இனிச்) சால்புடையவர்- மாற்றாரை-பகைவரை}- மாற்றும் படை - பகைமையொழிக்குஞ் சாதனமும்|-அது அப்பணிதல். எ,று.) (கருத்து) காரியமுடிப்பவர்வல்லமையாவது பணிதல் அது சத்துருக்களைவெல்லும்படையாம்என்பதாம். ❋ ஆற்றல்-செயவல்லராந்தன்மை. சால்பிற்குஏற்றபணிதற்குணத்துக் சிறப்புச்சொல்லுவார்மற்றதுமுடன் சொல்லினர்

சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி............ ... ❋

துலையல்லார் கண்ணுங்

கொளல்.......... .... ❋

(சாரு)

(இ-ள்.) சால்பிற்கு-சால்பாகிய பொன்னினை) அறிதற்கு - கட்டளை உரைகல்லாகிய (செயல்)-யாதெனின்- யாதென்றால்- தோல்வி-(தம்மினுயர்ந்தவரிடத்துக்கொள்ளுந்)தோற்பை}— துலையல்லார்கண்ணும்- இழிந்தவரிடத்தும்-கொளல- கொள்ளுதல். எ,று.) (கருத்து) சால்பிற் கட்டளைகல்லாவெனில் இழிந்தவரிடத்துந் தோல்விகொள்ளுதல் எனபதாம். ❊ எச்ச வும்மையால் இரு திறத்தாரிடத்தும் வேண்டுதல் பெற்றாம்.—கொள்ளுதல்வெல்லும் வலிமையடையராயிருந்தே யேற்றுக்கொள்ளுதல். இழிந்தாரை வெல்லநினைத்துத்தமக்குச்சமானமாக்கிக்கொள்ளாமல்தோற்பால் அவரின் உயர்வாராயின் அதனாலே சால்பளவு அறியப்படுமென்பதாம். (சா)

இன்றாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா...... ...... ❊
லென்ன பயத்ததோ சால்பு... .. .. ❊

(இ-ள்.) (சால்புடையவர்)-இன்றா- (தமக்குத்) துன்பந்தருமவைகளை}—செய்தார்க்கும்- செய்தவர்களுக்கும்- இனியவே-இன்பந்தருமவைகளையே}-செய்யாக்கால்- செய்யாவிட்டால்-சால்பு- சான்றாண்மை-என்னபயத்தது- (வேறே) என்னபடனுடைத்து. எ,று.) (கருத்து) துன்பஞ்செய்தவர்களுக்கு மின்பஞ்செய்யாவிடில் சான்றாண்மையென்னபயனைத்தரும் எனபதாம். ❊ ஓ-அசை-சிறப்பும்மை சால்புடையவரும் இன்றாசெய்தற்குஇடமாதல் விளக்கி நின்றது. தாமும்அவர்க்கு இன்றாசெய்வாராயின் தம்முடைய சால்பால் ஒரு பயனும் இல்லையெனபதாம். இவ்வுஜந்துபாட்டாலும் சிறப்புவகையாற்சொல்லப்பட்டது.] (எ)

இன்மை யொருவற் கிளிவன்று சால்பென் னும் .... ❊
திண்மையுண் டாகப் பெறின் .... ❊

(இ-ள்.) சால்பென்னும்-சால்பென்றுசொல்லப்படும்-திண்மை-வலிமை-உண்டாகப்பெறின்-தன்னிடத்துண்டாகப்பெற்றால்- ஒருவற்கு-ஒருவனுக்கு- இன்மை-வறுமை(யால்வருவது)-இளிவன்று-இகழ்வாகாது. எ-று. (கருத்து) சால்பின்வலிமையுண்டாகப்பெற்றால் வறுமைஇகழ்வாகாது என்பதாம். * தளராமல்நாட்டுதலால் வலியாயிற்று. சால்புடையவர் வறுமையிலும் மேன்படுவரெனபதாம்.

ஊழி பெயரினுந் தாம்பெயரார்
சான்றாண்மைக்., ...*
காழி யெனப்படு வார்... ...
[illegible]

....* (சாகூ)

௯௯-ஆம்-அதி-சான்றாண்மை.

(இ-ள்.) சான்றாண்மைக்கு-சால்புடைமையாகிய (கடலுக்கு)— ஆழியெனப்படுவார்-கரையென்று சொல்லப்படுவார்-ஊழிபெயரினும்- (மற்றைக்கடலும் கரையுள் நில்லாமற்) காலம் வேறுபட்டாலும்-தாம்பெயரார் — தாம்வேறுபடார். எ-று.) (கருத்து) சான்றோர்காலம் வேறுபடினுந் தாங்கள் வேறுபடார் என்பதாம் * சான்றாண்மையின் பெருமைதோன்ற அதனை - கடலாக்கியும், அதனைத் தாங்கிக்கொண்டுநிற்றலால்- அதனை யுடையாரை - கரையாக்கியும், சொல்லினர். [ஏகதேசவுருவகம்] (க)

சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான்........ *
றாங்காது மன்னோ பொறை ....

....✱

(இ-ள்.) சான்றவர்- (பலகுணங்களாலும்) நிறைந்தவர்- சான்றாண்மை- (தமது) தன்மை-குன்றின்- குன்றுவராயின்- இருநிலந்தான்-மற்றைப்பெரிய பூமிதானும்- பொறை- (தன்) பாரத்தை}- தாங்காது-தாங்காதாய் முடியும். எ,று.) (கருத்து) சான்றோர் சான்றாண்மை குன்றுவாராகில் பூமிபாரந்தாங்காது என்பதாம். ❊ தானுமென்னும் எச்சவும்மை விகாரத்தால் தொக்கது — அவர்க்குஅது குன்றுமையும் அதற்கு அது தாங்கலும் இயல்பாகலால் அவை எந்நாளும் உண்டாகா நின்றனவென்பது தோன்ற நின்றமையால் - மன்னென்பது † ஒழியிசையில் வந்தது. ஓகாரம்- அசை. [இவ்வமூன்றுபாட்டாலும் பலகுணங்களாலும் நிறைந்தவரது சிறப்புச்சொல்லப்பட்டது.]

(௰)

௱-ஆம்-அதி-பண்புடைமை.

அஃதாவது- பெருமை சான்றாண்மைகளில் தாம்வழுவாது நின்றே எல்லாரியல்புகளும் அறிந்துநடத்தலுடையராதல். அதிகார முறைமையும் இதனால் விளங்கும்.

என்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்... ......✱

பண்புடை மை யென்னும் வழக்கு.... ..

.... *

---

† ஒழியிசை ஒழிந்த சொற்பொருளைத் த
ருவது.

௱-ஆம்-அதி-பண்புடைமை.

(சா௱ன)

(இ-ள்.) யார்மாட்டும்-

யாவரிடத்தும்-எண்பதத்தால்- எளியசம
யத்தராயிருந்தால்- பண்புடைமையென்னும்-பண்புடைமையென
ப்படுகின்ற-வழக்கு- (அரிதாகிய) நல்வழியை-எய்தல்-அடைதல்|-
எளிது-எளிது|-என்ப-என்று (நூலோர்|) சொல்லுவர். எ-று.) (கரு
த்து) யாவரிடத்து மெளிய சமயத்தராக விருக்கிற் பண்புடைமை
யென்னு நல்வழியடைத லெளிது என்பதாம். ❊ குணங்களால் நி
றைந்து எளியசமயத்தருமாகியபோது பண்புடைமைதானே உண்
டாமாகலால் - எண்பதத்தா லெய்த லெளிதென்றும், அது உலகத்
தையெல்லாம் வசியமாக்கலால் அதனை - பழையோர் சென்ற நல்வ
ழியாக்கியும், அதனை எளிதிற்பெற இது நூலோரோதியஉபாயமெ
ன்றற்கு அவர்மேல்வைத்தும், சொல்லினர். (க)

அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்......*
பண்புடைமை யென்னும் வழக்கு...... .... *

(இ-ள்.) அன்புடைமை - (பிறர்மேல்) அன்புடையனாதலும்- ஆ
ன்றகுடிப்பிறத்தல்- (உலகத்தோடு) அமைந்த குடியிற் பிறத்தலும்-

இவ்விரண்டும் ஆகிய இவ்விரண்டும்|-பண்புடைமையென்னும் - (ஒருவனுக்குப்) பண்புடைமையென்று (உலகத்தார்) சொல்லும்—வழக்கு-நல்வழி. எ,று.) (கருத்து) ஒருவனுக்கு அன்புடைமையு நற்குடியிற்பிறத்தலுமே நல்வழியாம் என்பதாம். ❋ அமைதல்-ஒத்து வருதல-குடிப்பிறத்தலென்றது- குடிப்பிறந்தவர் செயலை.— இரண்டுங் கூடியவழியே பண்புடைமை யாவதென்பது தோன்ற மூற்றும்மைகொடுத்தார். [இவையிரண்டுபாட்டாலும் பண்புடையாதற்குக்காரணம் சொல்லப்பட்டது.] (உ)

உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க ....❋
பண்பொத்த லொப்பதா மொப்பு ...

.........................❋

(இ-ள்.) உறுப்பொத்தல்- (நெருங்கத்தகாத) உடம்பாலொத்தல்|

-மக்களொப்பன்று- (ஒருவனுக்கு)நல்லமனிதரோடு (ஒப்பாகாமையால்) பொருந்துவதன்று.—ஒப்பதாம்- (இனிப்) பொருந்துவதாகிய-ஒப்பு - ஒப்பாவது|- வெறுத்தக்க - நெருங்கத்தக்க- பண்பொத்தல்-பண்பாலொத்தல். எ-று.) (கருத்து) அவயவத்தா லொப்பாதலொப்பல்ல, குணத்தாலொப்பாதலே யொப்பாம் என்பதாம். ❋ ஒருவனுக்கு நன்மக்களோடு பிறப்பொத்தலாவது- உயிரின்வேறுப்நிலைபெறுத உடம்பொத்தலாகாது வேறல்லாமல் நிலைபெறுதலுடை-

(சாஅ) ௯-ஆம்-அதி-பண்புடைமை.
யபண்பொத்த
கவென்பதாம்.

லாகலால் அப்படிப்பட்டஅவர் பண்பிலையுடையரு
ஆல்-அவை; (க)

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்................*
பண்புபா ராட்டு முலகு.............. .... *

(இ-ள்.) நயன்-நீதியையும்]-ஒடு-அதனுடன்-நன்றி- அறத்தையு
ம்]-புரிந்த- விரும்பிய- பயனுடையார்-(பிறர்க்குந் தமக்கும்) பய
ன்படுதலுடையவரது- பண்பு-பண்பை]-உலகு-உலகத்தார்|-பாரா
ட்டும்-கொண்டாடாநிற்பர், எ,று.) (கருத்து) நீதியுந், தருமத்
தையும், விரும்பிய பயனுடையவர் குணத்தை புலகத்தார் புகழ்வர்
என்பதாம். ❊ நயனொடு நன்றிபுரிதலும், பயனுடைமையும்,பண்
பு காரணமாக வந்தமையால் அதனைப் பாராட்டுமென்றார். (ச)

நகையுள்ளு மின்னா திகழ்ச்சி பகையுள்ளும்... .... *
பண்புள பாடறிவார் மாட்டு....... .... *

(இ-ள்.) இகழ்ச்சி- (தன்னை) இகழ்தல்| நகையுள்ளும் |(ஒருவனு
க்கு) விளையாட்டினிடத்தும்- இன்னாது- துன்பந்தருவதாம். (ஆக
லால்)-பாடறிவார்மாட்டு- (பிறர்) இயல்பறிந்து நடப்பவரிடத்து—
பகையுள்ளும்- பகையுள்ளவிடத்தும்- பண்பு- (அப்பகை உண்டா
காமல் இனிமையாகிய) பண்புகளே-உள - உண்டாவனவாம். எ-று.)
(கருத்து) விளையாட்டிலு மிகழ்தலானது துன்பந்தரும். நல்லவரி
டத்துப் பகையினு நற்குணமுண்டாம் என்பதாம். ❊பாடறிவாரெ
னவே அவ்வின்னாமை யறிதலும் பெற்றும். அதனை அறிந்தவர்பின்
அதுசெய்யார் இனியவே செய்வரொன்பது கருத்து. (ரு)

பண்புடையார் பட்டுண் டுலக மதுவின்றேன்... .... *
மண்புக்கு மாய்வது மன்... .... *

(இ-ள்.) பண்புடையார்-பண்புடையவரிடத்தே-பட்டு-படுதலால் உலகம்-உலகியல்|- உண்டு- (எந்நாளும்) உளதாய்வாராநின்றது.— இன்றேல்- (அங்ஙேசபடுதல்) இல்லையாயின்.—அது- அவ்வுலகியல்|- மண்புக்கு-மண்ணிலேபுகுந்து- மாய்வது- மாய்ந்துபோவதாம். எ,று.) (கருத்து) பெரியவரிடத்து நற்குண முண்டாதலால் உலகியலெந்நாளு முண்டாகின்றது. அது இல்லாவிடி லுலகியல் கெடும் என்பதாம். ❋ மற்றைப்பண்பில்லார் சார்பல்லாமையால் ஒருசார்பு மில்லாமல் மண்ணிற்புகுந்து மாயுமது வேண்ட"வாயிற் றென்பது

[illegible] அதி-பண்புடைமை. (சார்க)

படர்நின்றமையால் [illegible] வந்தது. [இவை நான்குபாட்டாலும் அன்புடையவர் [illegible] சொல்லப்பட்டது

அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர் ....*
மக்கட்பண் பில்லா தவர்... ....*

(இ-ள்.) மக்கள்-நன்மக்களுக்கேயுரிய-பண்பில்லாதவர்-நற்குணமில்லாதவர்|-அரம்போலும்- அரத்தைப்போலும்- கூர்மையரேனும்-கூர்மையையுடையரோயாயினும்-மரம்போல்வர்-(ஓரறிவினதாகிய) மரம்போல்வர். எ,று,) (கருத்து) நன்மக்களுக்குரிய குணமில்லாதவர் கூரிய புத்தியுடையராயினு மரத்தை நிகர்த்தவர் என்பதாம். ❋ ஓரறிவு-பரிசத்தை அறிதல். தான் மடியில்லாமல் தன்னையுற்றபொருள்களை மடித்தலாகிய தொழில்பற்றி வந்தது.— பின்னுவ

மைவிசேட அறிவில்லாமையாகிய குணம்பற்றிவந்தது.— அவ்விசேட அறிவிற்குப் பயனாகிய மக்கட் பண்பில்லாமையால் அவ்வறிவுதானுமில்லையென்பதாயிற்று. (எ)

நண்பாற்று ராகி நயமில செய்வார்க்கும் ... ...*
பண்பாற்று ராதல் கடை.. *

(இ-ள்.) நண்பு-நட்பினை}- ஆற்றாராகி- (தம்மோடு) செய்யாதவராகி-நயமில-பகைமையை}-செய்வார்க்கும்-செய்து நடப்பவரிடத்தும்-பண்பாற்றாராதல்- (தாம்) பண்புடையவராய் நடவாமை}— கடை-(அறிவுடையவர்களு) இழுக்காம், எ-று.) (கருத்து) நட்பைக்கொள்ளாராகிப் பகைமையைக்கொள்வார்க்கும் குணமுடையவரா நடவாமையே கடை என்பதாம். ❊ நயம்-ஈரம். சிறப்பும்மை அவர்பண்பாற்றாமைக்கு இடனாதல் தோன்றநின்றது. அதனைச் செய்யின் தாமும் அவர் தன்மையராவொன்றற்கு- கடையென்றார். (அ)

நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம் ....*
பகலும்பாற் பட்டன் றிருள்... ....*

(இ-ள்.) நகல்வல்லரல்லார்க்கு- (பண்பில்லாமையால்ஒருவரோடு கலந்து) உண்மகிழ்தல் மாட்டாதவர்க்கு- மாயிருஞாலம் - மிகவும் பெரியபூமியானது|-பகலும்- (இருளில்லாத) பகற்பொழுதிலும்-இருள்-இருளினிடத்தே-பாற்பட்டன்று-கிடந்ததாம். எ-று.) (கருத்து) நட்புச்செய்து மகிழாதார்க்குப் பூமியானது இருளுடையதாகும் என்பதாம். ❊ எல்லாரோடும் கலந்து அறியப் பெறுமை யால்

(௬௱௰) ௱-ஆம்-அதி-பண்புடைமை.

பண்பில்லாதவர்க்கு உலகியல்தெரியாதென்றற்கு உடுத்துப் பட்டதென்றார்.]

உலகம் இருளினி
(கூ)

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்.................*
கலந்தீமை யாற்றிரிந் தற்று ....
.........*

(இ-ள்.) பண்பிலான்- பண்பில்லாதவன்-பெற்ற- (முன்னை நல்வினையினால்) அடைந்த-பெருஞ்செல்வம்- பெரியசெல்வம்- (அக்குற்றத்தால் ஒருவர்க்கும் பயன்படாது கெடுதல்)- நன்பால் நல்ல (பசுவின்) பால்-கலம்-(ஏற்ற) கலத்தினது-தீமையால்- குற்றத்தால்-திரிந்தற்று-கெட்டாற்போலும். எ-று.) (கருத்து) குணமில்லாதவன்முன்னல்வினையாலடைந்த செல்வமானது பயன்படாது கெடுதல் பசுவின்பால் பாத்திரக்குற்றத்தாற் கெட்டாற்போலும் என்பதாம். ❋ கலத்தீமையென்பது- கலந்தீமையென விகாரப்பட்டது. தொழிலுவமமாகலால் உவமேயத்தில் ஒத்ததொழில் வருவிக்கப்பட்டது. படைக்கும் வலிமையிலனாதல் தோன்ற- பெற்றவென்றும், எல்லாப்பயனுங் கொள்ளற்கு ஏற்ற இடமுடைமை தோன்ற - பெருஞ்செல்வமென்றும், சொல்லினார். அச்செல்வமும் பயன்படாதென்றவிதனால்வருகிற அதிகாரப்பொருண்மையும் தோற்றுவாய் செய்யப்பட்டது [இவைதான்குபாட்டாலும் அஃதில்லாரதுஇழிவுசொல்லப்பட்டது

௱க-ஆம்-அதி-நன்றியில்செல்வம்.

அஃதாவது- சம்பாதித்தவனுக்கும் பிறர்க்கும் பயன்படுதலில்லாத
செல்வத்தினியல்பு. செல்வமுடையானது குற்றம் செல்
வத்தின்மேல் ஏற்றப்பட்டது. அதிகார முறைமை
முன்தோற்றுவாய் செய்ததனுற் பெற்றும்.

வைத்தான் வாய்சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான்.....❋
செத்தான் செயக்கிடந்த தில்........

... ...❋

(இ-ள்.)வாய்சான்ற-(தன்)மனையிடமெல்லாம்நிறைதற்குஎதுவா
கிய-பெரும்பொருள்-பெரியபொருளை}-வைத்தான் (சம்பாதித்து)

வைத்தவனுகி-அஃது-அதனை}-உண்ணான்- (உலோபத்தால்) அநுப
வியாதவன்|(உளனுயினும்)-செத்தான்-செத்தானும்- செயக்கிடந்த

௱க-ஆம்-அதி-நன்றியில்செல்வம்.

(௲௱௧)

து-(அதனியல்பு அறியானைலே) [illegible] இல்லையானது-இ
ல்-இல்லை-(ஆதலால்)-எ,று.) (கருத்து) பெரும்பொருளைத்தேடிவை
த்தவனுகியப்பொருளை யநுபவியாதவனிருந்தாலுமிறந்தவனுக்கொ
ப்பாவனென்பதாம். ❋ [இதனாலே சம்பாதித்தவனுக்கு அச்செல்வ
ம்பயன்படலில்லாமை சொல்லப்பட்டது.] (௧)

பொருளானு மெல்லாமென் றீயா திவறு.............. ❋
மருளானு மாணுப் பிறப்பு...... ....❋

(இ-ள்.) பொருளான்-பொருளொன்றினால்- எல்லாம்- யாவும்-ஆம்-உண்டாகும்- என்று-என்று- அறிந்து - (அதனைச்சம்பாதித்து)- ஈயாது-(பின்பிறர்க்குக்) கொடாது-இவறும்-உலோபத்துவத்தைசெய்யும்- மருளான்-மயக்கத்தினாலே- மாணா- நிறைதலில்லாத - பிறப்பு- (பேய்ப் பிறப்பு— ஆம்- ஒருவனுக்கு) உண்டாம். எ,று.) (கருத்து) பொருளைச்சம்பாதித்துக் கொடாமையாற் பிறப்புண்டாம் என்பதாம். ❀ இருமையிலும் அடையும் இன்பங்கள் பலவும் அடங்க எல்லாமென்றும், சம்பாதித்தற்கு முன்னே உண்டாகிய அறிவானது பின்னே மயங்குதலால்- மருளென்றும், பொருள் உண்டாயிருக்கப் பிறருடைய பசி கண்டிருந்த பாவததால் உணவுகள் உண்டாயிருக்கப்பசித்து வருந்தும் பிறப்பு உண்டாமென்றும், சொல்லினர். (உ)

ஈட்டமிவறி யிசைவேண்டா வாடவர்........ ....*

தோற்ற நிலக்குப்

பொறை.......................................*

(இ-ள்.) ஈட்டம்- (பிறரின்றிச்)சம்பாதிப்போமென்று- இவறி- பொருள் சம்பாதிக்கைமாத்திரத்தையே) விரும்பி-இசை-(அதன் பயனாகிய) புகழை}—வேண்டாவாடவர்- விரும்பாத மக்களது-தோற்றம்-பிறப்பு|-நிலக்கு- பூமிக்கு- பொறை- பாரமாம் (அவ்வளவே) எ,று.) (கருத்து)பொருளைவிரும்பிப் புகழைவிரும்பாதவர் பிறப்புப்பூமிக்குப்பாரம் என்பதாம். ❀ புகழ்-இருமைக்கும் உறுதியாகிய அறமாகலால் ஈகையால் அதனைவேண்டாமல் சம்பாதிக்கைத் துன்பத்தையும், காப்பாற்றத் துன்பத்தையும், வேண்டிய அறிவில்லாமைபற்றி-நிலக்குப்பொறையென்றார். பிறப்பென்றது அதற்குரிய உடம்பினை. (௩)

ஏச்சுமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவரா .....*

னச்சப் படாஅ

தவன்.......................................*

௱௧-ஆம்-அதி-நன்றியில்செல்வம்.

(இ-ள்.) ஒருவரான்- (ஒருபொருளுங் கொடுத்து அறியாமையா ல்)ஒருவராலும்- நச்சப்படாஅதவன்- இச்சிக்கப்படாதவன்|--(தா ன் இறந்தவிடத்து)-எச்சமென்று- (இங்கே) ஒழிந்துநிற்பதாக-என் னதை}----என்னுங்கொல் - நினைப்பானோ! எ,று.) (கருத்து) ஒருவ ராலுமிச்சிக்கப்படாதவ னிறந்தபின் னெதைநினைப்பானோ! என்ப தாம். ❁ இங்கே ஒழிந்துநிற்கும் புகழ்-சுவார்மேலல்லாமல் நில்லா மையால் இவனுக்கு அதனோடு எவ்வளவும் சம்பந்தம் இல்லையென்ற தற்கு என்னென்னுங் கொல்லென்றார்- ஓ-அசை. [இவை மூன்றுபா ட்டாலும் அச்செல்வம் பிறர்க்குப் பயன் படவில்லாமை]சொல்லப் பட்டது.] (௪)

கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய......*
கோடியுண் டாயினு மில்........ ....*

(இ-ள்.) கொடுப்பதூஉம்- (பிறர்க்கு) ஈவதும் - துய்ப்பதூஉம்- (தான்) அனுபவிப்பதுமாகிய (இரண்டுசெய்கையும்)-இல்லார்க்கு- உடையரல்லாதவர்க்கு-அடுக்கிய- (பலவாக) அடுக்கிய- கோடியுண் டாயினும்- கோடிப்பொருள் உண்டாயினும்-இல்- (ஒன்றும்|) இல் லை. எ,று.) (கருத்து) கொடுத்தலு முன்னுதலு மில்லாதவர்க்குக் கோடிபொருளிருந்தும் பயனில்லை என்பதாம் ❁ இன்பத்தினுமஅ றம்சிறந்தமையால்- கொடுத்தல் முன் சொல்லப்பட்டது. ஒன்றுமி ல்லார்போற் பயனிரண்டும் இழத்தலால் இல்லென்றார். (௫)

ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொன்....*
றீத லியல்பிலா தான்..........................*

(இ-ள்.) தான் றுவ்வான்-தான்- அநுபவியாதவனாகி-(அதன்மேலும்) -தக்கார்க்கு- தகுதியுடையவர்க்கு- ஒன்று- (அவர்வேண்டிய தொன்றை}— ஈதலியல்பிலாதான் - கொடுத்தற்றன்மையில்லாதவன்|-பெருஞ்செல்வம்- (அவ்விரண்டுஞ் செய்தற்கு இடமுடையதாகிய)செல்வத்திற்கு-ஏதம்- ஒருநோய். எ,று.) (கருத்து) தானுண்ணுமலுங்கொடாமலுமிருப்பவன்செல்வம் வியாதிக்கொப்பாம் என்பதாம். ※ தக்கார்-தானம் வாங்குதற்கு ஏற்றவர். அநுபவிக்கப் படுதலும்ஈயப்படுதலுமாகிய தொழில்களுக்கு உரியதை அல்லாதாக்கினமையால்-நோயென்றார். [இவை யிரண்டுபாட்டாலும் அவ்விருவடியும் உடன்சொல்லப்பட்டது.] (ரு)

ா௧-ஆம்-அதி- நன்றியில்செல்வம்.

(சாயிஅ)

அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்.... ... . *
பெற்றா டமியன்மூத் தற்று ....*

(இ-ள்.) அற்றார்க்கு - (ஒருபொருளு) மிலராயினார்க்கு - ஒன்று- (அவர்வேண்டிய) தொன்றினை- ஆற்றாதான்-கொடாதவனது-செல்வம்-செல்வமானது- மிகுநலம்- (பெண்டிரின்) மிகுந்தநலத்தினை-பெற்றாள்- பெற்றவொருத்தி - (கொடுப்பாரில்லாமையினாலே)-தமியள்- (கணவனில்லாமல்) தனியளாய் - மூத்தற்று - மூத்தசன்மைத்து. எ-று.) (கருத்து) கொடாதவன் செல்வமானது அழகுள்ளவொருத்தி தன்னைக்கொடுப்பாரில்லாமையாற் கணவனில்லாது கிழவி யாகுதல்போலும் என்பதாம். ❊ நலம்வடிவினன்மையும் குணத்தினன்மையும், இவ்விரண்டும் ஒருசேரப்பெறுதலரிதாகலால்- பெற்றாளென்றார். கொடுப்பாரும் கணவனுமேயல்லாமல் தானும் பயனிழந்து கழிந்தகுமரியோடு உவமைசொன்னமையால் தானும் ஏற்பானுமேயல்லாமல் செல்வமும் பயனிழந்துகழியுமென்பதாம். (எ)

நச்சப் படாதவன் செல்வ நடுவூரு ....❊
ணச்சு மரம்பழுத் தற்று.... ....❊

(இ-ள்.) வறியவர்க்குச் சமீபனாயிருந்தும்ஒன்றுங்கொடாமையால்)-நச்சப்படாதவன்- (அவரால்) இச்சிக்கப்படாதவன் - செல்வம்- செல்வம்- (பெறுதல்)
நடுவூருள்-ஊர்நடுவுள்ள-நச்சுமரம்- எட்டிமரம்---பழுத்தற்று - பழுத்தல்போலும். எ,று.) (கருத்து) பிறராலிச்சிக்கப்படாதவன் செல்வமானது ஊர்நடுவே எட்டிமரம் பழுத்தல் போலாம் என்பதாம். ❊ சமீபத்திருக்கைகளாற் பயனில்லையென்பதாம்.
(அ)

அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய.... ....
வொண்பொருள் கொள்வார் பிறர்.......... ....

❊

❋

(இ-ள்.) (ஒருவன்)-அன்பொரீஇ- (கொடாதிருத்தற் பொருட்டுச்சுற்றத்தாரிடத்தும் நட்பினரிடத்தும்) அன்பு செய்வதனை ஒழித்து-தற்செற்று- (வேண்டுவன அனுபவியாமல்) தன்னைவருத்தி}—அறன்- (வறியவர்க்குக்கொடுத்தலாதியாகிய) அறத்தை}-நோக்காது-நினையாமல்- ஈட்டிய-சம்பாதித்த- ஒண்பொருள் - ஒள்ளியபொருளை}-கொள்வார்- (கொண்டுபோய்ப்பயன்) கொள்ளுவார்|-பிறர்.

[௯௪]

(சாயஃ)

ரகை—ஆம்-அதி-நன்றியில்செல்வம்.

பிறர். எ,று.) (கருத்து) அன்பற்றுத்தன்னை வருத்திச் சம்பாதித்த பொருளைப் பிறர்கொள்ளுவர் என்பதாம். ❋ பயனுகிய அறமும்இன்பமும் செய்துகொள்ளாதவனுக்குப் பொருளால் உள்ள துசம்பாதித்தற் றன்பமேயென்பதுதோன்ற - ஈட்டியவென்றும், அவன்சந்ததி வழியிலுள்ளவர்க்கும் உதவாதென்பதுதோன்ற - பிறரென்றும் சொலலினர். (௬)

ஓருடைச் செல்வர் சிறுதுனி மாரி..❋

வறங்கூர்ந் தனைய துடைத்து .. .. ❋

(இ-ள்.) சீருடை-புகழுடைத்தாகிய-செல்வர்-செல்வத்தினையுடையவராது- சிறுதுனி-(நிற்குங்காலம்) சிறியவறுமை|-மாரி-(உலகத்தையெல்லாநிலைநிறுத்துகிற) மேகம் — வறங்கூர்ந்தனையது- வறுமைமிகுந்ததுபோல்வதோரியல்பினை}—உடைத்து- உடையது. எ-று.) (கருத்து) மிகுந்தசெல்வமுடையவர் வறுமையானது மழைவறுமைகொண்ட தன்மையுடையது என்பதாம். ❋ துனி-வெறுப்பு அதனைச்செய்தலால் வறுமைதுனியெனப்பட்டது. யாவர்க்கும் பயன்பட்டவர் அதனால் வறியராகியவிடத்தும் அவ்வறுமை கடிதுநீங்குதலால்-பின்னும் செல்வராய்ப்பயன்படுவரென்பது உவமானத்தாற்பெறப்பட்டது. படவேநன்றியில்லாத செல்வம் எந்நாளும் பயன்படாதென்பதாயிற்று. [இவைநான்குபாட்டாலும் அச்செல்வத்தின்குற்றம் சொல்லப்பட்டது.] (ய)

௱௨-ஆம்-அதி-நாணுடைமை.

அஃதாவது-முன்சொல்லப்பட்ட சால்பு பண்புமுதலாகிய குணங்களால் உயர்ந்தோர் தமக்குத் தகாத கருமங்களில் நாணுதலுடையராந் தன்மை. அதிகாரமுறைமையும் இதனாலேவிளங்கும்.

க ருமத்தானாணுத

னாணுத் திருநுத........................... ❋

னல்லவர் நாணுப்

பிற.................................... ....*

(இ-ள்.) நாணு- (நன்மக்களது) நாணுவது|-கருமத்தால்-(இழிந்த)கருமங்காரணமாக- நாணுதல்-நாணுதலாம்.—பிற- அதல்லாமல் மனமொழிமெய்களது ஒடுக்கத்தால்வருகிற நாணங்கள்|-திருநுத

௱உ-ஆம்-அதி-நாணுடைமை.

(சாய்ரு)

ல்-அழகியநெற்றியையுடைய-நல்லவர்-குலமகளிரது-நாணு-நாணங்கள்போலும். எ,று.) (கருத்து) நாணமானது கருமங்காரணமாக நாணுவதாம் பிறநாணங்கள் பெண்களுடைய நாணங்கள்போலாம் என்பதாம். ❁ பிறகுலமகளிரது நாணென்றதனால் மற்றது நன்மக்களது நாணென்பதும், நாணுதலென்பதனால் கருமத்தி னிழிவும்,பெற்றாம். திருநுதனல்லவரென்பது- புகழ்ச்சிக்குறிப்பு. [இதனால்நாணினது இலக்கணம் சொல்லப்பட்டது.] (க)

ஊன் ணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல .... *
நாணுடைமை மாந்தர்
சிறப்பு............. .... *

(இ-ள்) ஊன்-உண்டியும்|-உடை-ஆடையும்|-எச்சம்-ஒழிந்தவைகளும்|-உயிர்க்கெலாம்- (மக்க)ளுயிர்க்கெல்லாம்-வேறல்ல-பொதுவாம்.-மாந்தர்சிறப்பு- (நன்மக்களுக்குச்சிறப்பாவது|)-நாணுடைமை-நாணமுடைமையாம். [அவையல்ல.] எ,று.) (கருத்து) உணவு ஆடை, மற்றவை யாவர்க்கும் பொதுவாம். நன்மக்களுக்குச் சிறப்பாவது நாணமுடைமையாம் என்பதாம். ❁ஒழிந்தவை-உறக்கமும், காமமும், அச்சமும்,- சிறப்பு-அவ்வுயிர்களின்வேறுபாடு. (உ)

ஊன்னைக் குறித்த வுயிரெல்லா நாணென்று...... ....*

நன்மை குறித்தது சால்பு.........
.... *

(இ-ள்.) உயிரெல்லாம்-உயிர்களனைத்தும்|-ஊனை-உடம்பை}-குறித்த-தமக்கு இருப்பிடமாகக்கொண்டு அதனைவிடாவாம்.- (அது போல்)-சால்பு- (நற்குணங்களி) னிறைவானது|- நாணென்னுநன்மை-நாணென்கிற நற்குணத்தை}-குறித்தது-தனக்குஇருப்பிடமாகக்கொண்டு அதனைவிடாது. எ,று.) (கருத்து) உயிர்களெல்லாமுடம்பைவிடாவாம். நற்குணநாணத்தைவிடாது என்பதாம். ❋ உயிர் உடம்போடு கூடியல்லது பயனடையாத விதம்போல் சால்பு - நாணொடுகூடியல்லது பயனடையாதென்பதாம். (௩)

அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்*
பிணியன்றோ பீடு நடை .... *

(இ-ள்.) சான்றோர்க்கு- பெரியோர்க்கு-நாணுடைமை-நாணமுடைமை|-அணியன்றோ- ஆபரணமல்லவோ-அஃதின்றேல்- அவ்வாபரணம் இல்லையாயின்-பீடுநடை- (அவர்) பெருமிதநடை|- பிணியன்றோ- (கண்டவர்க்கு)நோயன்றோ. எ,று.) (கருத்து) பெரியோ

ர்க்கு நாணமுடைமை யாபரணமாம். அஃதில்லாவிடி லவர் நடைபிணியாம் என்பதாம். ❋ அழகுசெய்தலால்-அணியென்றும்,பொறுத்தற்கருமையால்- பிணியென்றும், சொல்லினார். [இவைமூன்று பாட்டாலும் அதன்சிறப்புச் சொல்லப்பட்டது.] (௪)

பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்..... .... *
குறைபதி யென்னு முலகு.......
.... *

(இ-ள்.) பிறர்பழியும்- பிறர்க்குவரும் பழியையும் -தம்பழியும்- தமக்குவரும்பழியையும்- நாணுவார்- (ஒப்பாகமதித்து) நாணுவாரை} உலகு-உலகத்தார்|- நாணுக்கு- நாணத்திற்கு- உறைபதியென்னும்- இருப்பிடமென்று சொல்லுவர். எ-று.) (கருத்து) பிறர்பழியையுந் தம்பழியையுமதித்து நாணுவாரை யுலகத்தார் நாணத்திற்கிருப்பிடமென்பர் என்பதாம். ※ ஒப்பாசமதித்தல்- பிறர்க்குவந்த பழியையும் தமக்குவந்ததாகவே நினைத்தல் அக்கருத்துடையவர் பெரியார்களால் அவரை உயர்ந்தோர் யாவரும் புகழ்வரொன்பதாம் [இதனால் அதனையுடையவரது சிறப்புச் சொல்லப்பட்டது.] (௫)

நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்.........※
பேணலர் மேலா யவர்...............................※

(இ-ள்.) மேலாயவர்- உயர்ந்தவர்|- வேலி- (தமக்குக்) காப்பாக- நாண்-நாணத்தை}- கொள்ளாது- கொள்வதல்லாமல்- வியன்ஞாலம்-பரப்பானபூமியை}-பேணலர்-கொள்ளவிரும்பார் எ-று.) (கருத்து) உயர்ந்தோர் நாணத்தைக் கொள்ளாமலுலகத்தை விரும்பார் என்பதாம். ※ பழிபாவங்கள் அடையாமற் காத்தலால் வேலியென்றார். நாணமும் பூமியும் ஒன்றைவிட்டு ஒன்றைக்கொள்ளும்படி நேரிட்டவிடத்து நாணத்தைக் கொள்வதல்லது அப்பழிபாவங்கள்புகும்வழியாகிய பூமியைக்கொள்ள விரும்பாரென்பதாம். மன்னும் ஓவும்-அசைகள்.] (௬)

நாணா லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா.........※
னாண்டுறவார் நாணாள் பவர்...............................※

(இ-ள்.) நாணாள்பவர்-நாணத்தை (அதனதுசிறப்பறிந்து) விடாது நடப்பவர்|-(அந்நாணும் உயிருங்கூடி நிற்கமாட்டாத விடத்து) —நாணால் நாண்சிதையாமற்பொருட்டு-உயிர்-உயிரை}- துறப்பார் நீக்குவார்.—உயிர்ப்பொருட்டான்-உயிர்சிதையாமற்பொருட்டு—

௱௨-ஆம்-அதி நாணுடைமை.

(சாயனை)

நாண்-நாணினை}- துறவார்- நீக்கார். எ,று.) (கருத்து) நாணத்தை க்கொள்பவர் உயிரைநீக்குவார். நாணத்தைக்கொள்ளாதவர்உயிரை நீக்கார் என்பதாம். ❋ நாண் உயிரினுஞ் சிறந்த தென்பதாம். [இவையிரண்டுபாட்டானு மவர்செயல் சொல்லப்பட்டது.] (௭)

பிறர்நாணத் தக்கது தானணு ணாயி .... ❋
னறநாணத் தக்க துடைத்து ....
....❋

(இ-ள்.) பிறர்-கேட்டவரும் கண்டவரும்- நாணத்தக்கது-நாணத்தக்கபழியை}-தானணுணாயின்-(ஒருவன்) தானணுது செய்வானாயின்-(அந்நாணாமை|)- அறம்-தருமமானது - நாணத்தக்கது - (அவனை) விட்டுநீக்கத்தக்க குற்றத்தை}- உடைத்து- உடையது. எ,று.) (கருத்து) ஒருவனணுது பழியைச்செய்வானுகில் அதுகுற்றத்தை யுடையது என்பதாம். ❋ நாணில்லாதவனை அறம்சாரா தென்பதாம்

குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடு .. ..❋
நாணின்மை நின்றக் கடை.................................. ❋

(இ-ள்.) கொள்கை-ஒழுக்கம்-பிழைப்பின்- (ஒருவனுக்கு)வழுவுமாயின்- (அவ்வழுவு|)-குலம்- (அவன்) குடிப்பிறப்பொன்றையும்}-சுடும்-கெடுக்கும்-நாணின்மை- நாணில்லாமை-நின்றக்கடை-(ஒருவன்கண்ணே) நின்றவிடத்து-(அந்நிலை|)-நலம்- (அவ)னலம்யாவை

யும்)-சுடும்-கெடுக்கும். எ,று.) (கருத்து) ஒருவனுக் கொழுக்கம் வழுவுமாயி னவ்வழுவு அவனி குலத்தைக்கெடுக்கும். ஒருவனுணுதின்று லது நன்மையாவற்றையுங் கெடுக்கும் என்பதாம். ❊ நலம்-பிறப்பு கல்வி குணம் செயல் இனம் என் றிவைகளால் வந்தனவெல்லாங் கொள்ளப்படும் ஒழுக்கவழிவைக்காட்டினும் நாணவழிவு மிகத்தீதென்பதாம். (கூ)

நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை............................❊
நாணு லுயிர்மருட்டி யற்று...❊

(இ-ள்.) அகத்து- (தம்) மனதில்-நாண்-நாணத்தை)-இல்லார்-இல்லாதமக்கள்-இயக்கம்- (உயிருடையவர்போன்று சஞ்சரிக்கின்ற) சஞ்சரிப்பு|- மரப்பாவை- மரத்தாற் செய்யப்பட்ட பாவை-நாணுல்-எந்திரக்கயிற்றினுலாகிய (சஞ்சரிப்பால்)-உயிர்- உயிருடையதாக-மருட்டியற்று- மயக்குதல்போலும். எ,று.) (கருத்து) நாணமில்லாமக்கள் சஞ்சரிப்பு மரத்தாற் செய்யப்பட்ட பாவை கயிற்று லுயிருடையதாக மருட்டியது போலாம் என்பதாம். ❊ நாணில்லாத

[ால]

(சாயி அ)

ாஉ-ஆம்-அதி-நாணுடைமை.

டிக்களசைவு நாணுடையபாவை யசைவுபோல்வதல்ல து உயிரில்லையென்பதாம். [இவைமூன்றுபாட்டாலும் நாணில்லா ரிழிவு சொல்லப்பட்டது.] (ய)

௱௩-ஆம்-அதி-குடிசெயல்வகை.

அதிகாரவுது- ஒருவன் தான்பிறந்த குடியை உயரச்செய்தலின் விதம். இது தாழ்வினிடத்து நாணுடையவர்க்கு உண்டாவதாகலால் - அதன்பின் வைக்கப்பட்டது.

கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்.... .... *
பெருமையிற் பீடுடைய தில் ....*

(இ-ள்.) ஒருவன்- (தன்குடிசெய்தற்பொருட்டுத் தொடங்கியகருமமுடியாமையால்)- கருமஞ்செய- அக்கருமஞ்செய்தற்கு- கைதூவேனென்னும்-கையொழியேனென்கிற- பெருமையின்- முயற்சிப்பெருமைபோல்- பீடுடையது- மேன்பாடுடையபெருமை|—இல்-(அவனுக்கு) இல்லை. எ-று.) (கருத்து) ஒருவன் கருமஞ்செய்தற்குக் கைவிடேனென்னும் பெருமைபோல் மேன்பாடுடையதில்லை என்பதாம். ❋ குடிசெய்தற்கென்பது அதிகாரத்தால் வந்தது. பலவகைக்கருமஞ்செய்தலாலே செல்வமும் புகழுமடைந்து குடிஉயருமாகலால்-பீடுடையதில்லென்றார். (க)

ஆள்வினையு மான்ற வறிவுமென விரண்டின்................ *
னீள்வினையா னீளுங் குடி........................... *

(இ-ள்.) ஆள்வினையும்-முயற்சியும்- ஆன்றவறிவும் - நிறைந்தவறிவும்-எனவிரண்டின்- என்றுசொல்லப்பட்ட இரண்டினையுடைய-நீள்வினையான்-ஒவ்வில்லாத கருமச்செயலால்-குடி- (ஒருவனது) குடி|-நீளும்-உயரும். எ,று.) (கருத்து) முயற்சியும் அறிவுமாகிய விரண்டின் தொழிலாலொருவன் குடியுயரும் என்பதாம். ❋ நிறைதல்-இயற்கையறிவு ; செயற்கையறிவோடு கூடிநிரம்புதல்.— ஆள்வினை-சோம்பல் அடையாமற் பொருட்டு.- ஆன்றவறிவு- உயர்தற்கு ஏற்ற செயல்களும் அவைமுடிக்கும் விதமும் நாடிப்பிழைபடாமல் எண்ணுதற்பொருட்டு. [இவை யிரண்டு பாட்டாலும் அச்செயற்குக் காரணம் சொல்லப்பட்டது.] (உ)

௬௩-ஆம்-அதி-குடிசெயல்வகை. (௬௱௰௩)

குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ.......... *
மடிதற்றுத் தான்முந் துறும்............................ *

(இ-ள்.) குடிசெய்வலென்னும்- (என்) குடியினை உயரச்செய்யக்கடவேனென்றுகொண்டு (அதற்கு ஏற்றகருமங்களின் முயலுகிற) ஒருவற்கு- ஒருவனுக்கு - தெய்வம்- தெய்வமானது|—மடி- உடையை-தற்று- இறுகவுடுத்துக்கொண்டு- தான்-தான்- முந்துறும் - முன்னேயுற்றுநிற்கும். எ,று.) (கருத்து) குடியை யுயரச்செய்வேனென்னுமொருவனுக்குத் தெய்வமுன்னிற்கும் என்பதாம். ❋ முன்னடப்பார் செயல் உவமேமேல் ஏற்றப்பட்டது. (௩)

தூசமற் றூனே முடிவெய்துந் தங்குடியைத்............ *
தாழா துஞற்று பவர்க்கு................................ *

(இ-ள்.) தங்குடியை-தங்குடிக்கா ந் தொழிலை}—தாழா து-விரா ந்து-உஞற்றுபவர்க்கு- முயல்பவர்க்கு-(அத்தொழில் முடிக்கும்வித ம்|)- சூழாமல்-ஆலோசிக்கவேண்டாமல்-தானேமுடிவெய் தும்-தா னே முடிவுபெறும். எ,று.) (கருத்து) தங்குடிக்கான தொழிலைச்செ ய்வோர்க்குஅது தானே முடிவுபெறும் என்பதாம். ❋ குடி-அதற்கா ந் தொழிலுக்கு ஆதலால்ஆகுபெயர்.ஊழ்முந்துறுதலாற்பயன்சொ ல்லியபடி. [இவ்விரண்டுபாட்டாலும் அதற்கு ஊழ் துணையாதல் சொல்லப்பட்டது.] (௮)

குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் .... ❋
சுற்றமாச் சுற்று முலகு .... ❋

(இ-ள்.) குற்றமிலனாய்- குற்றமானவை செய்திலனாகி-- குடிசெய் து- (தன்) குடியைஉயரச்செய்து-வாழ்வானை- வாழ்பவனை}—சுற்ற மா- (அவனுக்குச்) சுற்றமாகவேண்டி-உலகு-உலகத்தார்;- சுற்றும்- (தாமேசென்று) சூழ்வர். எ,று.) (கருத்து) குற்றமற்றவனாய் குடி யையுயரச்செய்து வாழ்பவனை யுலகத்தார் சூழ்வர் என்பதாம். ❋ குற்றமாயின- அறநீதிகளுக்கு விரோதமான செயல்கள்.—தாமும் பயனடைதனோக்கி யாவரும் சென்று சார்வரென்பதாம். (௯)

நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த......❋
வில்லாண்மை யாக்கிக் கொளல்............................❋

(இ-ள்.) ஒருவற்கு-

ஒருவனுக்கு- நல்லாண்மையென்பது- நல்லா

(சஉய) ண்மை-ஆம்-அது-குடிசெயல்வகை.

ஆண்மையென்று உயர்த்திச் சொல்லப்படுவது|-தான்பிறந்த-தானு
ற்பவித்த-இல்லாண்மை- குடியை ஆளுந்தற் றன்மையை}— ஆக்கிக்
கொளல்- (தனக்கு உண்டாக்கிக் கொள்ளுதல்). எ-று) (கருத்து)
ஒருவனுக் காண்மையென்று சொல்லப்படுவது தன்குடியை யுயர்த்
திக்கொள்ளுதல் என்பதாம். ❁ போர்த்தொழிலி னீக்குதற்கு நல்
லாண்மையென விசேடித்தார். குடியையாளுந்தன்மை- குடியி
லுள்ளவரையுயரச்செய்து தன்வழிப்படுத்தல். அதனைச்செய்துகொ
ள்ளுதல் நல்லாண்மையாம்விதம் வருகிறபாட்டாற் பெறப்படும்.

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து... .. ...❁
மாற்றுவார் மேற்றே பொறை ....❁

(இ-ள்.) அமரகத்து-களத்திலிடத்து -
(சென்றவர் பலராயினும்
போர்தாங்குதல்)-வன்கண்ணர்போல- சூரர்
(மேலதாகுதல்)போல-
தமரகத்தும்-குடியினிடத்தும்-
(பிறந்தவர்பலராயினும்)-பொறை (அதன்பாரம்)
பொறுத்தல்|-ஆற்றுவார்மேற்றே-
வல்லவர்மேலதேயாம். எ-று.) (கருத்து)
போர்க்களத்தில்வீரர்மேலாகுதல்போலக்கு
டியிடத்துப்பாரம் பொறுத்தல்வல்லவர்மேலதாம்
என்பதாம். ❁ ந
ன்குமதிக்கப்படுவோர் அவரேயென்பதாம்' [இவை மூன்றுபாட்டா
லும் அவை செய்வாரடையும் சிறப்புச்சொல்லப்பட்டது.] (எ)

குடிசெய்வார்க் கில்லைப் பருவ மடிசெய்து................*
மானங் கருதக் கெடும் ....*

(இ-ள்.) மடிசெய்து - (குடியுயரச்செய்தலை நோக்காது காலத் தைநோக்கிச்) சோம்பல்செய்துகொண்டு-மானம்-மானத்தையும்-கருத-நினைப்பாராகில்-கெடும்- (குடி) கெடும் (ஆதலால்)- குடிசெய்வார்க்கு-தன்குடும்பத்தையுயரச்செய்வார்க்கு- பருவம்-காலநியதி இல்லை- இல்லை. எ,று.) (கருத்து) குடும்பத்தை யுயரச்செய்வார்க்குக்காலநியதியில்லை என்பதாம். ❋ காலநோக்கி மடிசெய்தல் - வெயின்மழை பனியுடைமைநோக்கிப் பின்னே செய்வோமென்று ஒழிந்திருத்தல்.—மானங்கருதல்- இக்குடியிலுள்ளார்யாவரும் இன்பமுற நான் இக்காலத்துத் துன்பமுறுவேனோவென்று உட்கொள்ளுதல்.- முன் இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும்பொழுது என்றதுகொண்டு இவர்க்கும் வேண்டுமோவென்று நினைக்கினும் அது நினைக்கலாகாதென மறுத்தபடி.] (அ)

௩௩-ஆம்-அதி-குடிசெயல்வகை. (௬௨௩)

இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ-குடும்பத்தைக்...*
குற்ற மறைப்பா னுடம்பு ....*

(இ-ள்.) குடும்பத்தை-தன்குடியை } -குற்றமறைப்பான்-மூலவகை

த்துன்பங்களும் அடையாமற்காக்க முயல்பவன து-உடம்பு-உடல ம்|-இடும்பைக்கே- (முயற்சித்) துன்பத்திற்கே-கொள்கலங்கொல்-

கொள்கலமாமவ்வளவோ [இன்பத்திற்காகுத லில்லையோ.] எ;று.) (கருத்து) தன்குடியைக்காக்க முயற்சி செய்பவ னுடலந் துல்பத்

திற்குக் கொள்கலமாம் என்பதாம். ※ என் குடிமுழுதும் இன்பமுற்று உயரவே நான் இருமையும் பெறுதலால் இம்மெய் வருத்தமாத்

திரம் எனக்கு நல்லதென்றுமுயலும் அறிவுடையவன் அதனை எந்நாளும் விடாமைநோக்கி இடும்பைக்கே கொள்கலங்கொல்லென்று

ர்.இதுகுறிப்புமொழி-ஓ-அசை [இவையிரண்டு பாட்டாலும் அவர்அதுசெய்யுமியல்பு சொல்லப்பட்டது.] (௯)

இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று............ ※
நல்லா ளிலாத குடி.. ※

(இ-ள்.) அடுத்து- (தான்வீழும்போது) முட்டுக்கொடுத்து - ஊன்றும் தாங்கவல்ல- நல்லாள்- நல்லவாண்மகன்- இலாத - பிறவாத-குடி-குடியாகிய(மரம்|)-இடுக்கண்- துன்பமாகிய (கோடரியானது) —கால்- (தன்) முதலை}-கொன்றிட-வெட்டிச்சாய்க்க-வீழும்-(ஒரு பற்றில்லாமல்) வீழாநிற்கும். எ,று.) (கருத்து) தாங்குவாரில்லாதகுடியாகிய மரம் துன்பக்கோடரியானது வெட்டக்கெடும்என்பதாம் ※ முதல் அதன்வழிக்கு உரியார்.—வளர்ப்பாரைப்பெற்றவழி- வளர்த்துபயன்படுதலும், அல்லாவழி- கெடுதலும், உடைமையால் மரமாக்கினர். (இதுகுறிப்புருவகம்.) [இதனால் அவரில்லாதகுடிக்கு உளதாம் குற்றம் சொலலப்பட்டது.] (ய)



[௱சு]

௱ச-ஆம்-அதி-உழவு.

அஃதாவது- சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கும் உரித்தாகிய உழுதற்றொழில். இதுசெய்விக்கும்போது மற்றவர்க்கும் உரித்தாகும். இது முன்னே குடியுயர்தற்கு ஏதுவென்ற முயற்சியாகலால்- குடிசெயல்வகையின்பின் வைக்கப்பட்டது.

சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா .... *
லுழந்து முழவே தலை................ ...
....*

(இ-ள்.) உலகம்-உலகமானது|-சுழன்றும்- (உழுதலால் வருமெய் வருத்தநோக்கிப்,பிறதொழில்களைச்செய்து) திரிந்தும் - ஏர்ப்பின்னது-(முடிவிலே ஏருடையார்வழியதாயிற்று.-அதனால்- அதனாலே -உழந்தும்-எல்லாவருத்தமுற்றும் -தலை-தலைமையாகிய (தொழில்|) உழவே-உழுதலேயாம். எ-,று.) (கருத்து) உலகமேருடையார்வழியதாயிற்றுத் தலைமையான தொழிலுழவேயாம் என்பதாம். ❁ ஏருடையார்க்கு ஆதலால் ஏர் ஆகுபெயர். பிறதொழில்களாலே பொருள்பெற்றவிடத்தும் உணவின்பொருட்டு உழுவாரிடத்துச் செல்லல் வேண்டுதலால்- சுழன்றுமேர்ப்பின்னது உலகமென்றும், வருத்தமில்லையாயினும் பிறதொழில்கள் கடையென்பது தோன்ற - உழந்தும் உழவே தலையென்றும், சொல்லினார். [இதனால் உழவினது சிறப்புச்சொல்லப்பட்டது.] (க)

உழுவாருலகத்தார்க் காணியஃ தாற்றா ....*
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.
... .*

(இ-ள்.) உழுவார்- உழுதல்வல்லவர்|-அஃதாற்றாது- அவ்வுழுதலைச்செய்யமாட்டாமல் - எழுவாரையெல்லாம் - (பிறதொழில்களிலே) மேற்செல்வோர்யாவரையும்-பொறுத்து-தாங்குதலால்- உலகத்தார்க்கு-உலகத்தாராகிய (தேர்க்கு)ஆணி-அச்சாணியாவர். எ-,று.) (கருத்து) உழுபவருலகத்தாராகியதேர்க் கச்சாணியாவார் என்பதாம். ❁ உழுவாரென்பது உழுவிப்பாருக்கும் ஆம்.—உலகத்தாரென்றது-இங்கே அவ்வுழவர் நீங்கலானவரை—கலங்காமல் நிறுத்தலின் உழுவார் ஆணிபோலுதலால் ஆணியென்றார். (ஏகதேசவுருவகம்)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந் ... .*
தொழுதுண்டு
பின்செல் பவர்.................................. ..*

(௬௨௯)

(இ-ள்.) உழுது-(எல்லாரும் உண்ணும்படி) உழுதலைச்செய்து—உண்டு-(அதனால்தாமும்) உண்டு-வாழ்வாரே- வாழ்கின்றவரே|- வாழ்வார்- (தமக்குரியராய்) வாழ்கின்றவர்.—மற்றெல்லாம்- மற்றவரெல்லாரும்|-தொழுது-(பிறரைத்) தொழுது-உண்டு- (அதனால்தாமும்) உண்டு- பின்செல்பவர்- (அவரைப்) பின்செல்லுகின்றவர். எ-று) (கருத்து) உழுதுண்டுவாழ்பவரே வாழ்பவர். மற்றவர் தொழுதுண்டுவாழ்பவர் என்பதாம் ※ தாமும் மனிதராய்ப் பிறந்திருந்தும் பிறரைத்தொழுது அவர் சிலகொடுக்கத் தம்முயிர்காத்து அவர்பின் செல்வார் தமக்கு உரியரல்லரென்பது கருத்து. (௩)

பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப.......... ....※
ரலகுடை நீழ லவர் ....
※.........................

(இ-ள்.) அலகுடை- (உழுதற்றொழிலால்) நெல்லை யுடையராகிய நீழலவர்-தண்ணளியுடையோர்|—பலகுடைநீழலும்- பலவேந்தர்குடை நிழலதாகிய (பூமிமுழுதையும்})-தங்குடைக்கீழ்-தம்(வேந்தர்) குடைக்கீழ- காண்பர் - பார்ப்பார்கள். எ-று.) (கருத்து) உழவுமுயற்சிசெய்வோர் பலவேந்தர் பூமியையுந் தம்வேந்தர் குடைநிழலிற்காண்பர் என்பதாம். ※ அலகு-கதிர். அது இங்கே நெல்லுக்காயிற்று. நீழல்போலுதலால் நீழலெனப்பட்டது. நீழலவரென்றது- இரப்போர்க்கெல்லாம் ஈதலேகுறிக்கொண்டு ஒற்றுமைபற்றி- தங்குடையென்றார்.குடைநீழலென்பதும் ஆகுபெயர். தம்மரசனுக்கு வெற்றிபெருக்கிமண்முழுதும் அவனதாகக் கண்டிருப்பரென்பதாம். (௪)

இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது...... .... ※
கைசெய்தூண் மாலை யவர்... .... ※

(இ-ள்.) கை-(தங்) கையால்- செய்து- (உழுதல்) செய்து ஊண் மாலையவர்-உண்ணுதலை இயல்பாகவுடையவர்;- இரவார்- (பிறரைத்தாம்) இரவார்.—இரப்பார்க்கு- (தம்மை) இரப்பவர்க்கு—ஒன்று-அவர் (வேண்டிய) தொன்றை}- கரவாது- ஒளிக்காமல்- ஈவர்-கொடுப்பார். எ,று.) (கருத்து) உழுதுண்பவர் யாசியார்இரப்பவர்க்குக் கொடுப்பர் என்பதாம். ❋ கைசெய்தூண் மாலையவரென்பது எந்நாளும் அழிவில்லாத செல்வமுடையாரென்னும் ஏதுவை உள்ளே கொண்டு நின்றது. (௫)

உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்........ ❋
விட்டேமென்
பார்க்கு நிலை................................❋ (சஉச)

ாசு-ஆம்-அதி-உழவு.

(இ-ள்.) உழவினார்- உழுதலையுடையவர்|-கைம்மடங்கின்-கை (அதனைச்செய்யாது) மடங்குமாயின் - விழைவதூஉம் - (யாவரும்) விரும்புமுணவும்- விட்டேமென்பார்க்கு- துறந்தோமென்பார்க்கு- நிலை-(அவ்வறத்திலே) நிற்றலும்- இல்லை- உளவாகா. எ-று.) (கருத்து) உழவர் கைம்மடங்குமாகில் யாவரும் விரும்பு முணவுந் துறந்தவர்க்குநிலையுமிலலை என்பதாம். ❋ உம்மை இறுதியிலும் வந்து கூடியது.உணவில்லாமையால் தாமுண்டலும், இல்லறம் செய்தலும், யாவர்க்குமில்லையாயின—அவருறுப்பு மாத்திரமாகிய கை சும்மாவிருக்கின் உலகத்தில் இம்மை மறுமை வீடென்னும் பயன்கள்நிகழாவென்பதாம். [இவ்வைந்துபாட்டாலும் அதனைச்செய்வாரது சிறப்புச் சொல்லப்பட்டது.] (௬)

தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்.... ❋
வேண்டாது சாலப் படும்.............. ❋

(இ-ள்.) (ஒருநிலத்தினையுழுதவன்)-தொடிப்புழுதி - ஒருபலப்பு ழுதி-கஃசா-காற்பலமாம்படி-உணக்கின் - (அதனைக்) காயவிடுவனு யின்-(அதனிடத்துச்செய்தபயிர்|)-பிடித்தெருவும்-ஒருபிடியில்-அ டங்கியஎருவும்-வேண்டாது- (இட) வேண்டாமல் - சாலப்படும்-ப ருத்துவிளையும். எ,று.) (கருத்து) ஒருபலப்புழுதி காற்பலமாகக்கா யவிடுவானுகில் பிடியெருவுமில்லாம லப்பயிர் விளையும் என்பதாம். ❋ பிடித்து-பிடியிலுள்ளது-சான்று- சாலவென்றுயது. (எ)

ஏரினு நன்று லெருவிடுதல் கட்டபி ....❋
நீரினு நன்றதன் காப்பு....... ....
.........................❋

(இ-ள்.) (அப்பயிர்க்கு)-எரினும்- அவ்வுழுதலினும்- எருவிடுதல் எருப்பெய்தல்|- நன்று- நன்றாகும்.— கட்டபின்- (இவ்விரண்டுஞ் செய்து) களைபிடுங்கியபின் - அதன்காப்பு - அதனைக்காத்தல்|- நீரி னும்-நீர்ப்பாச்சலினும்-நன்று-நன்றாகும். எ-று.) (கருத்து) உழுத லினு மெருப்போடுகிறது நல்லது களைபிடுங்கியபின் காத்தல் நீர்வி டுதலினு நல்லது என்பதாம். ❋ ஏர் உழுதலுக்கு ஆகுபெயர். ஆல்- அசை. காத்தல்- பட்டிமாடு முதலானவைகளால் அழிவடையாமற் காத்தல்—உழுதல்-எருப்பெய்தல்-களைபிடுங்கல்-நீர்ப்பாய்ச்சல்-கா த்தல்-என்று இம்முறையினவாகிய ஐந்தும் வேண்டுமென்பதாம்.

செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்..... .... ❋
தில்லாளி னூடி
விடும்...❋

ஈ-ஆம்-அதி-உழவு.

(சஉ௫)

(இ-ள்.) கிழவன்- (அந்நிலத்துக்கு) உரியவன்|-செல்லான் -(அதனிடத்து நாள்தோறும்) போய்ப்பார்த்து வேண்டியவை செய்யாருகி-இருப்பின் - (சோம்பி) யிருந்தால்- நிலம் - அந்நிலம்|—இல்லாளின்-மனைவிபோல்- புலந்து- (தன்னுள்) வெறுத்து- ஊடிவிடும் (அவனோடு) பிணங்கிவிடும். எ,று.) (கருத்து) உழுபவன்விளைநிலத்திற் போகாதிருக்கி லந்நிலம் அவனுடன் பிணங்கிவிடும் என்பதாம். ❋ செல்லுதல் - ஆகுபெயர். பிறரை ஏவியிராமல் தான்செல்லவேண்டுமென்பதுதோன்ற- கிழவனென்ருர். தன்னிடத்துவந்து வேண்டியவைசெய்யாது வேறிடத்திருந்தவழி மனையாள்போல் பிணங்குமென்றது அவன்போகமிழத்தலை நோக்கி. [இவைமூன்று பாட்டாலும் அது செய்யும் விதம் சொல்லப்பட்டது.] (க)

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி .... ❋
நிலமென்னு நல்லா ணகும்........................❋

(இ-ள்.) இலமென்று- வறியேமென்றுசொல்லி-அசையிஇருப்பாரை- சோம்பியிருப்பவரை}—காணின்- கண்டால்- நிலமென்னுநல்லாள்- நிலமகளென்று உயர்த்திச் சொல்லப்படுகிறநல்லாள்|-நகும்- (தன்னுள்ளே) சிரியாநிற்பள். எ,று.) (கருத்து) வறியோமென்று சோம்பலாயிருப்பவனை நிலமகள் கண்டால்சிரிப்பள் என்பதாம். ❋ உழுதல் முதலானவை செய்வோர் யாவர்க்கும் செல்வங்கொடுத்து வருகின்றவிதம்பற்றி- நல்லாளென்றும், அதுகண்டிருந்தும், அது செய்யாது வறுமையுறுகின்ற அறிவில்லாமைபற்றி நகுமென்றும், சொல்லினர். [இதனுல் அதுசெய்யாதவிடத்து உண்டாம் ச்சொல்லப்பட்டது.] வருகின்ற அதிகாரமுறைமைக்குக்

இழுக்கு

௬-ஆம்-அதி-நல்குரவு

அஃதாவது- அனுபவிக்கப்படுவன யாவும் இல்லாமை.

இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி..... .... *
னின்மையே யின்னா தது.............................*

(இ-ள்.) இன்மையின் - (ஒருவனுக்கு) [௱எ]
வறுமைபோல் - இன்னாதது (சஉசு)
௬-ஆம்-அதி-நல்குரவு.

து-துன்பஞ்செய்வது- யாதெனின்-யாதென்று வினவின்- இன்மையின்-வறுமைபோல்- இன்னாதது - துன்பஞ்செய்வது|— இன்மையே- வறுமையே. எ-று.) (கருத்து) தரித்திரம்போலத் துன்பஞ்செய்வதெதுவெனில் அதுவே என்பதாம். ❋ ஒப்பதில்லை யெனவே மிகுந்ததில்லாமை சொல்லவேண்டாவாயிற்று. (க)

இன்மை யெனவொரு பாவி மறுமையு.................. ....*
மிம்மையு மின்றி
வரும்..................................... .... *

(இ-ள்.) இன்மையென-வறுமையெனப்படுகிற- ஒருபாவி-ஒப்ப
ற்றபாவி|- (ஒருவனிடத்துவரும்போது)- மறுமையும் - மறுமையி
ன்பமும்-இம்மையும்- இம்மையின்பமும்-இன்றி- (அவனுக்கு)இல்
லையாக- வரும்-வருவான். எ,று.) (கருத்து) தரித்திரமென்னுமொரு
பாவி யொருவனிடத்துவரும்போது இம்மைமறுமையின்பமில்லா
மல் வருவன் என்பதாம். ❋ இன்மையென ஒருபாவி யென்பதற்கு
அழுக்காறெனவொருபாவி யென்றதற்கு உரைசெய்தபடி உரைக்க.
மறுமைஇம்மை ஆகுபெயர்,—நயாமையாலும், அனுப வியாமை
யாலும், அவையிலவாயின. (உ)

தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக.......*
நல்குர வென்னு நசை ....*

(இ-ள்.) நல்குரவென்னும்-வறுமையென்றுசொல்லப்படுகிற-ந
சை-ஆசை|—தொல்வரவும்- (தன்னாலேபற்றப்பட்டவருடைய) ப
ழைய குடிவரவினையும்}-தோலும்- (அதற்கேற்ற சொல்லினையும்}
தொகையாக-ஒருசேர- கெடுக்கும்-கெடுக்கும். எ,று.) (கருத்து)த
ரித்திரமென்னு மாசையானது பழங்குடிவரவையு மதற்குரியசொ
ல்லையுங் கெடுக்கும் என்பதாம். ❋ நசையில்லாவிடத்து வறுமையு
ம்இல்லையாகலால் நல்குரவை நசையாக்கி- அது அக்குடியிற் பழை
யோர்க்கு இல்லாத இழிதொழில்களையும் அவமானச்சொற்களையும்
உண்டாக்கலால் அவ்விரண்டினையும் ஒருசேரக் கெடுக்குமென்றார்.

இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த................ *
சொற்பிறக்குஞ் சோர்வு தரும் .... *

(இ-ள்.) இன்மை-வறுமையானது|-இற்பிறந்தார்கண்ணேயும்-உ
யர்ந்தகுடிப்பிறந்தவரிடத்தேயும்- இளிவந்தசொல்-அவமானச்சொ

ல்-பிறக்கும்-பிறத்தற்கு ஏதுவாகிய-சோர்வு-சோர்வினை }-தரும்-உண்டாக்கும். எ-று.) (கருத்து) தரித்திரமானது உயர்குடியிற் பிறந்தவரிடத்து இழிவுசொற்பிறக்குஞ் சோர்வைத்தரும் என்பதாம். ❋ சிறப்பும்மை அவரிடத்து அது பிறவாமை தோன்ற நின்றது. அவமானச்சொல்- எமக்கு ஈயவேண்டுமென்றல். சோர்வு -தாம்படுகிற துன்பமிகுதிபற்றி ஒரோவிடத்தே தங்குடிப்பிறப்பினை மறந்து அதுசொல்லுவதாக நினைத்தல். (௪)

நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத் ....❋
துன்பங்கள் சென்று படும்...... .... ❋

(இ-ள்.) நல்குரவென்னும்-வறுமையென்று சொல்லப்படும்-இடும்பையுள்- துன்பமொன்றினுள்ளே- பல்-பலவாகிய-துன்பங்கள்-துன்பங்களும் }-சென்று-வந்து- படும்: வினையும். எ-று.) (கருத்து) வறுமைத்துன்ப மொன்றனுள்ளே பல துன்பங்களும் வரும்என்பதாம். ❋ குறா-இசைநிறை.— துன்பமும் தானும் உடனே தோன்றலால்-வறுமையை- துன்பமென்றும், அத்துன்பம் அடியாகச்செல்வர் மனைவாயிலோர்க்குச் செல்லற்றுன்பமும்- அவரைக்காணத்துன்பமும்-கண்டபின் மறுத்தவிடத்து உண்டாந்துன்பமும் - மறுக்காதவிடத்தும் அவர்கொடுத்தது வாங்கற்றுன்பமும்- அதுகொண்டுவந்து அனுபவிப்பனவுகளைக் கூட்டுதற்றுன்பமும்-முதலானவை நாள்தோறும் வேறுவேறுகவருதலால் எல்லாத்துன்பங்களுமுண்டாமென்றமை, சொல்லினர். [இவை ஐந்துபாட்டாலும் வறுமையின்கொடுமை சொல்லப்பட்டது.] (௫)

நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்......❋
சொற்பொருள் சோர்வு படும் .... ❋

(இ-ள்.) நற்பொருள்-மெய்நூற்பொருளை}-நன்குணர்ந்து-தெளியவறிந்து- சொல்லினும்- சொன்னாராயினும்- நல்கூர்ந்தார்- வறுமைப்பட்டவரது-சொல்- சொல்லானது|-பொருள்சோர்வு-பொருளில்லாமையை}- படும்- கூடும். எ-று.) (கருத்து) வறியவர் மெய்ப்பொருளைச் சொல்லினு மச்சொல் பொருளில்லாமையைத்தரும் என்பதாம். ❀ பொருளில்லாமையைக் கூடுதலாவது - யாம்விரும்பி இவர்சொல்லைக் கேட்டோமாகில் முகங்கொடுத்து இவர்குறைமுடிக்கவேண்டுமென்று அஞ்சி யாவரும் கேளாமையால்- பயனில்சொல்லாய்முடிதல்.—கல்வியும் பயன்படாதென்பதாம். (௬)

(௪௨-அ).

௱௫-ஆம்-அதி-நல்குரவு.

அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும் .... *
பிறன்போல நோக்கப் படும்..... ... .'......... .... *

(இ-ள்.) அறஞ்சாரா- அறத்தோடு பொருந்தலில்லாத-நல்குரவு-வறுமையையுடையவன்}-ஈன்றதாயானும்- (தன்னைப்) பெற்றதாயினாலும்|-பிறன்போல- அந்நியன்போல|-நோக்கப்படும்- (நினைத்துப்) பார்க்கப்படுவன். எ-று.) (கருத்து) வறியவன் தன்தாயாலு மந்நியன்போலப் பார்க்கப்படுவான் என்பதாம். ❀ அறத்தோடு பொருந்தலில்லாமை—காரணகாரியங்களுள் ஒன்றோடு மியையாமை. நல்குரவு ஆகுபெயர். சிறப்பும்மை அவனது இயற்கையன்புடைமை விளக்கிநின்றது அவனிடத்தே கொள்வதில்லாமையேயன்றிக் கொடுப்பதுண்டாதலும் உடைமையால் அதுநோக்கிச் சுற்றத்தார் யாவரும் கைவிடுவ ரென்பதாம். (௭)

இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்.... ... . *
கொன்றது போலு நிரப்பு ....

.... : *

(இ-ள்.) நெருநலும்- நேற்றும்- கொன்றதுபோலும் - கொன்றதுபோன்று (எனக்குத் துன்பங்களைச்செய்த) நிரப்பு -வறுமையானது-இன்றும்- இன்றைக்கும்- வருவதுகொல்- (என்னிடத்து) வரக்கடவதோ. [வந்தால் இனியாது செய்வேன்.] எ,று.) ஓ-அசைநிலை (கருத்து) நேற்றுக்கொன்ற வறுமையானது இன்றும்வருமோ என்பதாம். * அத்துன்பங்கள்- முன்சொல்லப்பட்டன. நேற்று மிகவும்வருந்தி வயிறுநிறைத்த ஒருவன்சொல்லு. (அ)

நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்...... ...... * யாதொன்றுங் கண்பா டரிது. ....*

(இ-ள்.) நெருப்பினுள்- தீயிற்கிடந்து- துஞ்சலும்- தூங்கலும்- ஆகும்-(மந்திரமருந்துகளால் ஒருவனுக்குக்) கூடும்.- நிரப்பினுள்- வறுமைவந்தவிடத்து- யாதொன்றும்- யாதொன்றாலும்-கண்பாடு தூங்குதல்- அரிது-இல்லை. எ,று.) (கருத்து) தீயிலும் நித்திரை செய்யலாம் வறுமையிலே நித்திரைசெய்யக்கூடாதென்பதாம். * நெருப்பினும் வறுமை கொடிதென்றபடியாயிற்று. இதுவும் அவன் சொல்லு. [இவை நான்குபாட்டாலும் வறுமைப்பட்டவருக்குஉண்டாம்குற்றம் சொல்லப்பட்டது] (கூ)

௱௫-ஆம்-அதி-நல்குரவு. (சஉகூ)

துப்புர வில்லார் துவரத் துறவாமை.............. யுப்பிற்குங் காடிக்குங் கூற்று.............

*

*

இ-ள். துப்புரவில்லார் - அனுபவிக்கப்படும் பொருளில்லாதவர்- (தம்மாலேசெயத்தகுவது முழுதுந்துறத்தலேயாகவும்)—துவரத் துறவாமை - முழுதுந்துறவாதொழிதல்!—உப்பிற்குங் காடிக்கும்!- (பிறர்வீட்டிலுள்ள) உப்பிற்குங்காடிக்கும்—கூற்று - யமனுவர் - எ-று. (கருத்து) வறியவர்கள் துறவாதிருத்தல் அயல்வீட்டு உப்புக்கும் காடிநீருக்கும் யமனுவார்கள் என்பதாம். ❁ மானமழியாமையால் செயத்தகுவது அதுவேயாயிற்று. முழுதுந்துறத்தல்-சுற்றந்தானேவிட்டமையால் ஒருவழியால் துறந்தாராயினர் நின்றதம்முடம்பினையுந் துறத்தலாம். அதுசெய்யாதுகொண்டிருத்தல் - அவ்விரண்டினையும் மாளப்பண்ணுதலால் அதனை அவைகளுக்குக்கூற்றென்றார். [இதனால் அது உண்டானவிடத்துச் செய்வதுசொல்லப்பட்டது.] (ம)

❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁ ❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁

௱சு-ஆம்-அதி-இரவு.

இனிமானங்கெடாதவிரத்தல் இரவாமையோடு ஒத்தலால் அவ்விரவினுலும் வீடுபெறுதற்கு உதவிசெய்வதாகிய உடம்பைக் காக்கலாமென்கிற அறநூல் வழக்குப்பற்றி முன்துவரத்துறத்தலென்ற இறத்தலைவிலக்குதற்பொருட்டு இரவுசொல்லுகின்றார். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி .... ❋
னவர்பழி தம்பழி யன்று.. ❋

இ-ள். (வறுமைப்பட்டவர்!)—இரத்தக்கார்-இரத்தற்கு ஏற்புடையவரை—காணின்-கண்டவிடத்து—இரக்க-(அவரிடத்தே) இரக்கக்கடவர்.—கரப்பின் - (அவர்) ஒளித்தாராயின்—அவர்பழி - அவர்க்குப்பழியாம்.—தம்பழியன்று - தமக்குப்பழியாகாது. (ஆதலால்) எ-று. (கருத்து) தரித்திரர்கள் கொடுப்பவர்களைக்கண்டால் யாசிக்கக்கடவர்கள் அவரொளித்தாராயின் அவர்க்குப்பழியல்லது தமக்குப்பழியல்ல என்பதாம். ❁ இரத்தற்கேற்புடையவராவார்-சொல்லு

[௱௮·]

(௲௬௰) ௱௬-ஆம்-அதி-இரவு.

மூன்னே அறிதலுடையராய் மறுமற்கொடுப்பவர்.—அவர் உலகத்தில் அரியராதலால் காணினென்றும், அவரிடத்தே இரந்தார்க்கு இரவால்வரும் அவமானம் இல்லாமையால் இரக்கவென்றும், அவர் கொடுத்தலிலே குறைகாட்டாமையால்-கரப்பினென்றும்,காட்டுவாராயின் அப்பழிபரிசுத்தவெண்புடைவையில் அழுக்குப்போல் அவரிடத்தே கடிதுசொல்லுதலால் அவர்பழியென்றும்,ஏற்பில்லாதவரிடத்தே இரவல்லாமையால் தம்பழியன்றென்றும், சொல்லினர்.(க)

இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை……… ……… …. ………*
துன்ப முறாஅ வரின். ……… ……………… …. …. …. ……*

இ-ள். ஒருவற்கு-ஒருவனுக்கு—இரத்தல் - இரத்தலும்!—இன்பம் - இன்பத்திற்கு ஏதுவாம்.—இரத்தவை - இரந்தபொருள்கள்—(ஈவாரது அறிவுடைமையால்)—துன்பமுறாஅ-(தான்) துன்பமுறாமல்—வரின்-வந்தால். எ-று. (கருத்து) ஒருவனுக்குயாசித்த பொருள்கள் துன்பமடையாமல் வந்தால் யாசித்தலுமின்பமாம் என்பதாம். ❁ இன்பம் - ஆகுபெயர். உம்மையென்பது - தொக்குறைந்தது. துன்பமாவன - ஈவாரிடத்துக் காலமும் இடமும் அறிந்துசெல்லுதலும்-அவர்குறிப்பறிதலும்-அவரைத்தன்வசப்படுத்தலும்-அவர்

மனமிரங்கத்தக்கவை நாடிச்சொல்லலும்-முதலானவைகளால வருவனவும், மறுத்தவிடத்துவருவனவும், ஆம். அவையுறாமல் வருதலாவது - அவர்முன்னே அறிந்துகொடுக்கக்கொள்ளுதல். [இவை இர

ணடுபாட்டாலும் வறுமையால் உயிர்நீங்குமளவில் அவமானமில்லா விரவு விலக்கப்படாதென்பது சொல்லப்பட்டது] (உ)

கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்...... *
இரப்புமோ ரேஎ ருடைத்து. ...... *

இ-ள். கரப்பிலா-ஒளித்தலில்லாத—நெஞ்சின்-நெஞ்சினையுடைய—கடனறிவார்முன்- மானமறிவார்முன்—நின்று - நின்று— இரப்பும்-(அவரிடத்தே ஒன்றை)இரத்தலும்—ஒரே ஏர்-ஓரழகை—உடைத்து-(வறுமைப்பட்டவர்க்கு) உடைத்து. எ-று. (கருத்து) ஒளியாதுகொடுப்பவரிடத்து யாசித்தலும் ஓரழகுடையது என்பதாம். சிறியகருக்கத்து வேண்டுமுயர்வென்றதனால் அவர்க்கு அதுகடனெனப்பட்டது. மானமறிதல்-சொல்லத்தொடங்கிச் சொல்லமாட்டாமைக்கு ஏதுவாகிய அதனியல்பை அறிதல். அவ்வறிவுடையவர்க்குமுன்னே நிற்கைமாத்திரமே போதுமாகையால்-முன்னின்றெ

ன்றும், சொல்லுதலால் வருஞ்சிறுமை அடையாமல் ஓரேருடைத்தென்றும், சொல்லினர். உம்மை-அவ்விரவினிழிவுவிளக்கிநின்றது.

இரத்தலு மீதலே போலுங் கரத்தல்......
கனவிலுந் தேற்றாதார் மாட்டு......

❋

❋

இ-ள். கரத்தல்-(தமக்கு உள்ளது) மறைத்தலை—கனவினும்-சொப்பனத்திலும்—தேற்றாதார்மாட்டு- அறியாதவரிடத்து—இரத்தலும் - யாசித்தலும்!—ஈதலேபோலும் -(வறியவர்க்குச்) கொடுத்தலேபோலும். எ-று. (கருத்து).சொப்பனத்திலும் உளுத்தகுணமில்லாதவரிடத்துயாசித்தலும் கொடுத்தலேபோலாம் என்பதாம். ❋தான்புகழ்தாராதாயினும்முன்னுண்டாகிய புகழ்கெடவா ராமையால்-ஈதலேபோலுமெனருர். ஏ - அசை. (௬)

கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்று ❋
இரப்பவர் மேற்கொள் வது. ❋

இ-ள். கண்ணின்று - (சொல்லமாட்டாமல்) முன்னின்றமாத்திரத்தால்—இரப்பவர்- யாசிப்பவர்—(உயிர்காத்தற்பொருட்டு)—மேற்கொள்வது - (இரத்தலை)மேற்கொள்வது—கரப்பிலார் - (அவர்க்கு உள்ளது) ஒளிக்காமற்கொடுப்பவர்—வையகத்து - உலகத்து—உண்மையால் - இருக்கின்றபடியினாலே [பிறிதோன்றலன்று.] எ - று. (கருத்து) உள்ளபொருளை யொளியாதுகொடுப்பவர் உலகிலிருக்கையால் யாசிப்பவர்யாசகத்தைமேற்கொள்வது என்பதாம். ❋அவரில்லையாயின் மானம்விடமாட்டாமையால் உயிரைவிடுவரென்பதாம்.

கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை ❋

யெல்லா மொருங்கு கெடும். .... *

இ-ள். கரப்பிடும்பை -(உள்ளதை) ஒளித்தலாகியநோயை!—இல்லாரை -உடையரல்லாரைகாணின் - கண்டால்—மானம் விடாமலிரப்பவர்க்கு)—நிரப்பிடும்பையெல்லாம்-வறுமையால்வருந்துன்பங்களெல்லாம்!—ஒருங்குகெடும்-ஒருசேரக்கெடும். எ-று.(கருத்து)ஒளியாதுகொடுப்பவரைக்கண்டால் யாசிப்பவர்களுக்குத்துன்பங்கெடும் என்பதாம். ❊ ஒளித்தல்-ஒருவனுக்குவேண்டுவதொன்றல்லாமையால் அதனை-நோயென்றும், அந்நோயில்லாத இரக்கத்தக்கவரைக்கண்டபொழுதே அவ்விரப்பவர் மிகுமகிழ்ச்சியினராவராகலால் எல்லாமொருங்கு கெடுமென்றும், சொல்லினர். இடும்பை- துன்பம். அது நோய்க்கு ஆகுபெயர். (௫)

௱௯௨)

௱௬-ஆம்-அதி-இரவு.

இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள .... *
முள்ளு ளுவப்ப துடைத்து .... *

இ-ள். இகழ்ந்து-(தம்மை)அவமதித்து—எள்ளாது-இழிவுசொல்லாமல்—ஈவாரை-(பொருள்) கொடுப்பவரைகாணின் -கண்டால்—உள்ளம்-(அவ்விரப்பவரது)மனம்!—மகிழ்ந்து- மகிழ்தல்செய்து—

உள்ளுள் உள்ளுள்ளே—உவப்பது-மலருந்தன்மையை—உடைத்து உடையது. எ-று. (கருத்து) பொருள்கொடுப்பவரைக்கண்டால் யாசிப்பவர்மனம் மகிழ்ச்சியையுடையது என்பதாம். ❊ இகழ்ந்தெள்ளாதெனவே-நன்குமதித்தலும்,இனியவைசொல்லலும்-கொள்ளப்படும்.—அவ்விரப்பவர்க்கு வறுமைத்துன்பம்

கெடுவதுமாத்திரமே யன்றி—தம்மை அவர் ஐம்புலன்களாலும் பேரின்பமடைந்தவராக நினைத்தலாலும்-உள்ளுருவப்பதுடைத்தென்றார். [இவை ட்டாலும் இரக்கத்தககவரியல்பு சொல்லப்பட்டது.] •

ஐந்துபா

(எ)

இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால .... *
மரப்பாவை சென்றுவந் தற்று.......... .... *

இ-ள். இரப்பார்-(வறுமையுற்)றி ரப்பவர்—இல்லாயின்-இல்லையா யின்—ஈர்ங்கண்மாஞாலம்-குளிர்ந்த இடமுடைய பெரியபூமியிலுள் ளவரது(செலவு வரவுகள்!)—மரப்பாவை—(உயிரில்லாத) மரப்பா

வை—சென்றுவந்தற்று-(எந்திரக்கயிற்றால்)சென்றுவருதல்கள்போ லும். எ-று. (கருத்து) யாசகரில்லாவிடில் பூமியிலுள்ளோர் செலவு வரவுகள் மரப்பாவை

சூத்திரத்தாலாடுதல்போலுமாம் என்பதாம்.

* ஐ-அசை. ஞாலம்-ஆகுபெயர். உவமேயத்துக்கு உவமானத்தோடு ஒத்ததொழில் வருவிக்கப்பட்டது. பூமியிலுள்ளாரென்றது-இரப் பவரொழிந்தவரை[அவர்க்கு ஈந்துபுகழும் புண்ணியமும் அடையா மையால் உயிருடையரல்லரென்பதாம்.] (அ)

ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோள்..... .... *
மேவா ரிலாஅக் கடை. ....

.... *

இ-ள். இரந்துகோள்-(அவரிடத்துச் சென்று ஒன்றனை) இ[illegible]து கொள்ளுதலை—மேவாரிலா அக்கடை - விரும்புவாரில்லாதவழி— ஈவார்கண்-கொடுப்பவரிடத்து— என்-என்ன—தோற்றம் - புகழ்.— உண்டாம். [யாதுமில்லை] எ-று. (கருத்து) யாசிப்பவரில்லாவிடத் கொடுப்பவர்க்கென்ன புகழுண்டாம் என்பதாம். ✻தோற்றம்-ஆகு

௱௬-ஆம்-அதி-இரவு.

(௬௱௱)

பெயர். மேவுவாரொன்பது- விகாரமாயிற்று. கொடுத்தல்-வல்லமை வெளிப்படாமையால்- அதனாலே புகழடையாரொன்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் உலகிற்கு இரப்பார் வேண்டுமென்பது சொல் லப்பட் -து.]

(௯)

இரப்பான் வெகுளாமை வேண்டு நிரப்பிடும்மை .... *
தானேயுஞ் சாலுங் கரி ... . *

இ-ள்., (ஈவானுக்குப்பொருள்உதவாதவிடத்தே)- இரப்பான்,இரப்பவன்-!வெகுளாமைவேண்டும், (இவன் எனக்குக் கொடுக்கின்றிலனென்று அவனைக்) கோபியா தொழிதல்வேண்டும்.- (அது வேண்டியபொழுது உதவாதென்பதற்கு வேறுசாக்ஷிவேண்டா)- நிரப்பிடும்மைதானேயும், வறுமையாகிய தந்நோய்தானேயும்!-கரி, சாக்ஷியாதல்- சாலும், அமையும். எ-று. (கருத்து.) யாசிப்பவன்கோபியாமலிருக்கவேண்டும் என்பதாம். ❋ யாவர்க்குந் தேடவேண்டுதலும், நிலையில்லாமையும், முதலாகிய பிறசாக்ஷிகளும் உண்டென்பதுபடநின்றமையால்- உம்மை எச்சவும்மை. தனக்கேயல்லாமல் தன்னையிரந்தவர்க்கும் அன்றைக்கன்று பொருள்சம்பாதித்தற்கு அவன் படுந்துன்பத்தைத் தனக்கேயாகவைத்துத் தான்படுகிறதுன்பம் தானறிந்து கோபியாதிருக்கக்கடவனென்பதாம். [இதனால் அவர்க்கு அவசியமான ஓரியல்பு சொல்லப்பட்டது.]

(ம)

❋❋❋ ❋❋❋❋❋❋❋❋❋

❋❋❋❋❋❋❋❋❋❋

ளஎ-ஆம்-அதி- இரவச்சம்.

அஃதாவது- மானங்கெடவரும் இரத்தலுக்குஅஞ்சுதல். அதிகாரமுறைமையும் இதனாலேவிளங்கும்.

கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு .... ..

....*

மிரவாமை கோடி யுறும் ... .

.... *

இ-ள். (ஒருவன்) -கரவாது, (தமக்குள்ளதை) ஒளிக்காமல்- உவந்து-(இவர் வரப்பெற்றேமென்று உள்ளமகிழ்ந்து- ஈயும், கொடுக்கும்- கண்ணன்னார்கண்ணும், கண்போற்சிறந்தவரிடத்தும்-இரவாமை, இரவாமல் வறுமை படுதல்.- கோடியுறும், (இரந்துசெல்வமடைதலிற்) கோடிமடங்கு நன்றாம். எ - று.

கொடுக்குங் கண்ணிற் கொப்பானவரிடத்தும் (கரந்து) ஒளியாது யாசியாதிருத்தல்கோடிமடங்கு நன்மையாம் என்பதாம். ※ வறுமை மறைக்கப்படாத

[ாகூ] (சாகசு)

ாஎ-ஆம்-அதி-இரவச்சம்.

நட்பினரிடத்தும் இரக்கலாகாதென்பதுபடநின்றமையால் உம்மை உயர்வுசிறப்பு, அவ்விரவால் மானங்கெடாதென்பதொன்றேயல்லா

மல் அதற்கு மிகுதி கூடாமையால் செய்யவல்லதோர் முயற்சிசெய்து சீவனஞ்செய்தலே நல்லதென்பது கருத்து. (க)

இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து .... *
கெடுக வுலகியற்றி யான் .... *

இ-ள். உலகியற்றியான், இவ்வுலகத்தைப்படைத்தவன்-(இதனிடத்து வாழ்வார்க்குமுயன்று சீவனஞ்செய்தலை யல்லாமல்) - இரந்தும், யாசித்தும்- உயிர்வாழ்தல்வேண்டின், சீவனஞ்செய்தலைவேண்டிவிதித்தானாயின்- (அக்கொடியோன்!) -பரந்து- (தானும்அவர்போல்) எங்குஞ்சுழன்று-கெடுக, கெடக்கடவன். எ-று. (கருத்து) பிரமன் உலகத்தோரை யாசகஞ்செய்யப்படைத்தானாகி லவன்கெடக்கடவன் என்பதாம். ❋ மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும், அதற்கு வேண்டுவதாகியஉண்டியும், அதற்கு ஏதுவாகிய செய்தொழிலும், பழவினைவசத்தாற் கருவோடுகலந்தஅப்போதே அவன் கற்பிப்பானன்றே அவைகளுள்சிலவுயிர்க்கு இரத்தலையும் ஒருசெய்தொழிலாகக்கற்பித்தானாயின் அத்தீவினையால் தானும் அத்துன்பமடைய வேண்டுமென்பதாம். [இவ்விரண்டுபாட்டாலும் அவ்விரவின்கொடுமை சொல்லப்பட்டது.] (உ)

இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும் .... *
வன்மையின் வன்பாட்ட தில் .... *

இ-ள். இன்மை, வறுமையால்வரும் - இடும்பை, துன்பத்தை-ஐ (முயற்சிசெய்து நீக்க நினையாமல்) - இரந்து தீர்வா மென்னும், இரந்து நீக்கக்கடவோமென்று நினைக்கும் - வன்மையின், வல்லமைபோல்- வன்பாட்டது, வலிமைப்பாடுடையது- இல், இல்லை. எ-று. (கருத்து) வறுமைத்துன்பத்தைநீக்குவோமென்னும்வலிமைபோல வலிமையுடையதில்லை-என்பதாம்.❋ அதுநீக்கற்கு வழியாகிய முயற்சி இருக்கவழியல்லாத இரவால் நீக்கநினைத்தலால் வன்மையாயிற்று. வலிமைப்பாடு- முரட்டுத்தன்மை- அது ஆவுதையாலோசியாது செய்துநிற்றல். [இதனால் இரவு- வறுமை-ண்டது சொல்லப்பட்டது.]

தீர்தற்கு வழியன்றே

(ரு)

இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக் ...... *
காலு மிரவொல்லாச் சால்பு .... *

இ-ள். இடமில்லாக்காலும், அனுபவிக்க வேண்டுவதில்லாமல் வறுமைப்பட்டவிடத்தும்- இரவு, (பிறரிடத்துச்சென்று) ரஇத்தலுக்கு-

எஎ-ஆம்-அதி- இரவச்சம்.

(சுரு)

ஒல்லா, உடன்படார்த- சால்பு, நிறைவு!- இடமெல்லாம், உலகமெல்லாம்- (ஒருசேர இயைந்தாலும்) கொள்ளாத்தகைத்தே,கொள்ளாத பெருமையுடைத்தே. எ-று. (கருதது) தரித்திரத்திடத்தும் யாகியாமையேபெருமை -என்பதாம் ❋அவ்விரத்தலைச் சால்பு விலக்கலால் இரவொல்லாமை அதன்மேல் ஏற்றப்பட்டது. [இதனால் அவ்வழியல்லாதவைதச் சால்புடையார் செய்யாரென்பது சொல்லப்பட்டது.]

தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த .... *
துண்ணலி னூங்கி னியதில்.......... . . .. *

இ-ள். தாள், (வழியாகிய) முயற்சி- தந்தது,(கொண்டுவந்து) தந்தது- தெண்ணீர், தெளிந்தநீர்போலும்-அடுபுற்கையாயினும்,சமைத்தகூழேயாயினும்- உண்ணலினூங்கு, (அதனை)உண்ணுதற்குமேல்

இனியது, இன்பந்தருவது!-இல், இல்லை. எ-று. (கருத்து)முயற்சியா ல் வந்தது கூழாயினும் அதையுண்ணுதல்போ லின்பமுடையதில்லை என்பதாம். ❋முயற்சிதந்தகூழ் அழுததமில்லாமல்தெளிந்த நீர்போ ன்றதாயினும் அவமானமாகிய இரவால்வந்ததல்லாமல் தம்முடை யதாகலால் அமிழ்தத்தோடு ஒக்குமென்பதாம். [இதனால்வழியாலா கியது சிறிதெனினும் அதுசெய்யுமின்பம் பெரிதென்பதுசொல்ல ப்பட்டது.]

(ரு)

ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற் .... ❋
கிரவி னிளிவந்த தில் .... ❋

இ-ள். ஆவிற்கு, (தண்ணீர்பெறுதிறக்கு நிலைமையதாகிய)பசுவுக் கு- நீரென்று, (தருமநோக்கி) இதற்குத் தண்ணீர் தரல்வேண்டுமெ ன்று- இரப்பினும், இரந்துசொல்லும்போதும்-இரவின், அவ்விரவு போல்- நாவிற்கு (ஒருவ) னுவிற்கு - இளிவந்தது, அவமானம்வந் தது!- இல், வேறில்லை. எ-று. (கருத்து)பசுவிற்குநீர்விடென்னும்யா சகம்போல நாவிற்கிழிவில்லை - என்பதாம். ❋ ஆவைக்காப்பாற்றல் பெரியவறமாகலால்ஆவிற்கென்றும், பொருள்கொடுத்துக்கொள்ள வேண்டாத எளிமையதாகலால்நீரென்றும், இரக்கின்றோனுக்குஅவ மானமாவது அச்சொல்லளவேயாகலால் நாவிற்கென்றும், அதுதா ன்எல்லாவவமானங்களினும், மேற்படுதலால் இளிவந்ததில்லென்று ம், சொல்லினர். [இதனால் அறத்தையும்முயன்றுசெய்வதல்லது இர ந்துசெய்யலாகாதென்பது சொல்லப்பட்டது.] (சா)

இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற் .... ❋
கரப்பா ரிரவன்மி னென்று .... ❋

இ-ள். இர ப்பாரையெல்லாம், யாசிப்பவரையெல்லாம் - இரப்ப

ன், (நான்) இரவாநின்றேன்.-இரப்பின்,(உமக்கு) இரக்கவேண்டுமா
கில்,கரப்பார்,(தமக்குஉள்ளதைஒளிப்பவரா)இரவன்மின்,இரவாதி
ருங்கள்.எ-று ❋ (கருத்து) யாசிப்பாரையெல்லாம்யாசித்தேன் நீங்கள்
ஒளிப்பவரிடத்தில் யாசியாதிருங்கள். என்பதாம். ❋ இவ்வவமானச்
செயலால் ஊட்டிவளர்த்த விடத்தும் உடம்புநில்லா தாகலின் இது
வேண்டாவென்பது தோன்ற,இரப்பினென்றார்.[இதனால் மானங்கெ
டவரு மிரவு விலக்கப்பட்டது.] என்று-இடைச்சொல். (எ)

இரவென்னு மேமாப்பி றோணி கரவென்னும் ……………… ❋
பார்தாக்கப் பக்கு விடும் …………………………… ❋.

இ-ள். (இவ்வறுமையென்னுங்கடலை இதனாற் கடப்போமென்று நி
னைத்து ஒருவனேறிய)-இரவென்னும்,யாசகமென்னும்-ஏமாப்பில்,
காவலற்ற-தோணி,மரக்கலம்-(அதனிடத்தே ஓடுங்கால்)-கரவென்னு
ம்,ஒளித்தலென்னும்-பார்,வன்னிலத்தோடு - தாக்க, தாக்குமாயின்-
பக்குவிடும்,பிளந்துபோம்.எ-று. (கருத்து)யாசகமென்னுந்தோணி
ஒளித்தலென்னும் வலியநிலந்தாக்கக்கெடும் - என்பதாம். ❋ முயற்
சியாற் கடப்பதனை இரவால் கடக்கலுற்றவன் அதன் கரைகாணமை
யால், ஏமாப்பிறோணியென்றார். ஏமாப்பின்மைதோணிமேல் ஏற்ற
ப்பட்டது. அதுகடத்தற்கு ஏற்றதல்லாமையாலும், நிலமறியாது
செலுத்தியவழி உடைதலாலும்அதனிடத்தே ஏறலாகாதென்பதாம்.
(இதுஉருவகம்.) (அ)

இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள ………………………
வுள்ளதூஉ மின்றிக் கெடும் ………………………………

❋

❋

இ-ள். இரவு, (உடையார்முன்
இல்லார்சென்று) இரந்துநிற்றலி ன்

கொடுமையை-தீ உள்ள, நினைத்தால்- உள்ளம், (எம்) உள்ளம்!-உரு

கும், கரைந்துருகாநிற்கும்- கரவு, (இனி அந்நிலையைக்கண்டிருந்தவர்) இல்லையென்றலின் கொடுமையை-தீ உள்ள, நினைத்தால்- உள்ளது உம், அவ்வுருகுமளவுதானும்- இன்றி, இல்லாமல்- கெடும், அழிந்து போம்- எ-று. (கருத்து)யாசிப்பவர் கொடுமையை நினைத்தால் மனமுருகுகின்றது. இல்லையென்னுங் கொடுமையை நினைத்தால்உருகுமளவுமில்லாமற்கெடும்-என்பதாம். ❁ இரவினும் கரவு மிகக்கொடிதென்றபடி (௯)

கரப்பவர்க்கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்பவர் *
சொல்லாடப் போஒ முயிர் ....*

இ-ள். சொல்லாட, (ஒளிப்பவர்இல்லையென்று) சொல்லியமாத்திரத்தே- இரப்பவர், இரப்பவர்க்கு- உயிர்,!உயிரானது-போம், போ

௱எ-ஆம், அதி -. இரவச்சம்.

கா்தின்றது-சாப்பவர்க்கு, (இனிச்சொல்லுகின்ற) அவ்வொளிப்பவ ர்க்கு- (உயிர்பின்னிருத்தலால்)- யாங்கு, எப்புழையுள்-ஒளிக்குங்கொல், (அப்பொழுது) புகுந்தொளித்து நிற்குமோ. எ-று. ஒ, அசை- (கருத்து) யாசிப்பவர்க்கில்லையென்றால் உயிர்போகும். ஒளிப்பவர்க்குயிரெங்கேயொளிக்கும்-என்பதாம். ❊உயிர்போதலாவது இனியாமென்செய்வோமென்று ஏங்கிச் செயலற்று நிற்றல். கேட்டாரைக் கொல்லவல்லதாகிய சொல்சொல்வாரைக் கொல்லுதல் சொல்லவேண்டார்வாயினும் அதுகாண்கின்றிலம் இதுஎன்னேவென்பதாம். [இவைமூன்றுபாட்டாலும் அவ்விரவின்குற்றமும் சேர்த்துச்சொல்லப்பட்டன.]

கரவின் குற்றமும்

(ய)

ளா அ-ஆம்-அதி-கயமை.

அஃதாவது-முன்னே அரசியலுள்ளும் அங்கவியலுள்ளுஞ்சிறப்புவகையாற் சொல்லப்பட்ட குணங்களுள் ஏற்புடையவைகளைக்குறிப்பினால் யாவர்க்கும் பொருந்த வைத்தமையால் அங்கே குறிப்பாற் சொல்லியவையும், இங்கே ஒழிபியலுள்வெளிப்படச்சொல்லியவையும், ஆகிய குணங்களுள் யாதுமிலராகிய கீழோரது தன்மை. அதனால் இது எல்லாவற்றிற்கும் பின்வைக்கப்பட்டது.

மக்களே போல்வர் கயவ ரவரன்ன .... ❊
வொப்பா ரியாங் கண்டதில் .... ❊

இ-ள். கயவர்,கீழோர்!-மக்களேபோல்வர்,(வடிவால்முழுதும்)மக்களே போலிருப்பர்- அவரன்னவொப்பாரி,அவர்அம்மக்களையொத்தல்போன்றவொப்பு-யாம்,நாம்! -கண்டதில்,(வேறிரண்டுசாதிகளிடத்துக்கண்டதில்லை) எ-று(கருத்து)கீழ்மக்கள்வடிவாலேமக்களையொப்பாவர் அவர்களையொப்பானவரையான்கண்டதில்லை என்பதாம். ❊

முழுதுமொத்தல்- தேற்றேகாரத்தாற் பெற்றும். அவனொன்றது,அவரிடத்தேஉள்ள, வொப்புமையை. மக்கட்சாதிக்கும் கயச்சாதிக்கும் வடிவொத்தலால், குணங்களினிருப்பினும். இல்லாமையாலும். அல்லது வேற்றுமை அறியப்படா தென்பதாம்.

[இதனாற் கயவாது குற்றமிகுதி சொல்லப்பட்டது.] (க)

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர் .... *

நெஞ்சத் தவல மிலர் .... *

இ-ள். நன்று, (தமக்கு) உறுதியாயினவைகளை-அறிவாரின்,அறிபவரின்-கயவர், (அவையறியாத) கீழ்மக்கள்-திருவுடையர், நன்மை

[ா௭]

(சஅ)   ா அ-ஆம்,அதி-கயமை.

யுடையராவர் - (அவர்போல்)- நெஞ்சத்து, (தமது) நெஞ்சினிடத்து-அவலமிலர் (அவைகாரணமாக)- கவலையிலர் (ஆதலால்.) எ-று. (கருத்து) நன்மைகளை யறிபவரினும் நெஞ்சிற் கவலையில்லாதவராகிய கீழ்மக்கள் நன்மை யுடையவர் என்பதாம். *நன்றென்பது,சாதிபொருமை,உறுதிகளாவன,இம்மை மறுமை வீடுகளுக்கு உரியவாகிய புகழ் புண்ணிய ஞானங்கள்- இவைகளையறிவார் இவைசெய்யாநின்றே அதிகமாகச் செய்யப்பெறுகின்றிலேமென்றும், செய்கின்றவைகளுக்கிடையூறுவருமோவென்றும், இவைகளுக்கு மாறாகியபழிபாவமறியாமையென்புவைகளில் யாதுவிளையுமோ வென்றும், இவ்வழியாலே கவலையடைவர் (உ)

தேவ ரனையர் கயவ ரவருந்தா .... *
மேவன செய்தொழுக லான் .... *

இ-ள். தேவரனையர்கயவர், தேவரும் கயவரும் ஒருதன்மையர் - (அதுஎதினாலெனில்) - அவரும், அக்கயவரும் - (தேவர்போலே தம்மை நியமிப்பாரில்லாமல்) - தாமேவன, தாம் விரும்புமவைகளை - செய்தொழுகலான், செய்துநடத்தலால். எ-று. (கருத்து) தேவருங் கயவருமொப்பாவர் என்பதாம். ❋ உயர்ச்சியும் இழிவுமாகிய தங் காரணவேறுபாடு குறிப்பால் தோன்ற நின்றமையால்இதுபுகழ்வார் போன்றுபழித்தபடியாயிற்று. [இதனால் விலக்கப்படுத லில்லாமல் வேண்டியது செய்வாரென்பது சொல்லப்பட்டது. (௩)

அகப்பட்டி யாவாரைக் காணி னவரின் .... *
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ் .... *

இ-ள். கீழ், கீழாயினோன் - அகப்பட்டியாவாரை, (தன்னிற்)குறைந்தபட்டியாய் நடப்பவரை - காணின், கண்டானாயின் - (அவன் அந் நடக்கையிலே) - அவரின் - அவரைக்காட்டிலும் - மிகப்பட்டு - (தான் மேன்பட்டு) - செம்மாக்கும் - (அதனால் தன்மிகுதிகாட்டி) இறுமாப்பான். எ-று. (கருத்து) கீழ்மகன் பட்டியாய் நடப்பவரைக் கண்டாலதனினு மேலாகநடப்பான் - என்பதாம். ❋ அகமாகியமனம் பட்டிபோன்று வேண்டியபடி நடத்தலால் அகப்பட்டியென்றார். இதனால் அவர் மேன்படும் விதம்சொல்லப்பட்டது. (௪)

அச்சமே கீழ்கள தாசார மெச்ச .... *
மவாவுண்டே லுண்டாஞ் சிறிது .... *

இ-ள். கீழ்களதாசாரம், கீழோரது ஆசாரம் - (கண்டது உண்டாயின் அதற்குக் காரணம்!) - அச்சமே - (அரசனாலே துன்பம்வருமென்று அஞ்சும்) அச்சமே - எச்சம், (அது) ஒழிந்தால் - அவா, அவாவப்

படும்பொருள்-உண்டேல்,(அதனால்)உண்டாமாகில்-சிறிது,சிறிது-உண்டாம்,உண்டாகும்.எ-று. (கருத்து) கீழ்மக்கட்காசார மியல்பாகவில்லை-என்பதாம். ❁ ஆசாரத்தின் காரணத்தை ஆசாரமென்றும். அவாவப்படுமதனை அவாவென்றும், சொல்லினர். - கீழ்மக்களுக்கு ஆசாரம்பெரும்பான்மை அச்சத்தாலும் சிறுபான்மை பொருட்பேற்றாலுமல்லாமல் இயல்பாக உண்டாகா தென்பதாம். [வேண்டியபடி செய்தலே யியல்பு. ஆசாரஞ் செய்தலியல்பன்றென்பது இதனாற் சொல்லப்பட்டது. (௫)

அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட .... *
மறைபிறர்க் குய்த்துரைக்க லான் .... *

இ-ள். தாங்கேட்ட, தாங்கள்கேள்விப்பட்ட - மறை, இரகசியங்களை - உய்த்து, (இடந்தோறுந்) தாங்கிக் கொண்டு போய் - பிறர்க்கு அந்நியருக்கு - உரைக்கலான், சொல்லுதலால் - கயவர், கீழ்மக்கள் அறைபறையன்னர், அறையப்படும் பறைபோல்வர்.எ-று.(கருத்து) கீழ்மக்கள் பறைக் கொட்பாவர் என்பதாம். ❁ மறையாவது, வெளிப்பட்டால் ஏதம் விளையுமென்று பிறரைமறைத்து ஒருவன்சொல்லிய சொல். - பிறர், எவருக்கு மறைக்க வேண்டுமோஅவர். உய்த்தென்றார். அவர்க்கு அது பெரும்பாரமாதல் நோக்கி. பறை ஒருவன் கையால் தன்னையறிவித்ததொன்றனை இடந்தோறுங்கொண்டுசென்று அறியாதவர் யாவரையும் அறிவிக்குமாதலால் இதுதொழிலுவமம். இதனால் அவரது செறிவில்லாமை சொல்லப்பட்டது. (௬)

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங் .... *
கூன்கைய ரல்லா தவர்க்கு .... *

இ-ள். கயவர் கீழ்மக்கள்- கொடிறுடைக்கும்-(தங்) கதுப்பினைநெரிப்பதாக- கூன்- வளைந்த- கையரல்லாதவர்க்கு, கையினையுடைய ரல்லாதவர்க்கு ஈர்ங்கை (தாம்) உண்டு பூசியகையையே (தெறிக்கவேண்டுமென்று இரந்தாலும்) விதிரார், தெறியார். எ-று. (கருத்து.) கீழ்மக்களிரப்பவர்க்குக்கொடார் வருத்துவோர்க்குக்கொடுப்பர் என்பதாம். ❁ வளைந்தகை, முறுக்கியகை. (௭)

சொல்லப் பயன்படுவர் சான்றோர்கரும்புபோற்..... .... *

கொல்லப் பயன்படுங் கீழ்...... .... *

இ-ள். சான்றோர், மேலாயினோர்! - சொல்ல, (மெலியவர்போய்த் தங்குறையைச்)சொல்லியவளவிலே-பயன்படுவர்,(இரங்கி) பிரயோசனப்படுவர். . கீழ், மற்றைக்கீழாயினோர்: கரும்புபோல - கரும்பைப்போல- கொல்ல, (வலியவர்நையநருக்கியவிடத்தே)- பயன்படும்-

பிரயோசனப்படும். எ-று. (கருத்து) மேலோர் வருத்தஞ்சொன்னவுடன் பயன்படுவர் கீழோர் வருத்தினாற் பயன்படுவர் என்பதாம்❁ பயன்படுதல், உரியது கொடுத்தல். கீழாயினோரது இழிவுதோன்ற, மேலாயினோரையும் உடன்சொல்லினார்[இவை இரண்டுபாட்டாலும், அவர் கொடுக்கும்விதம் சொல்லப்பட்டது] (அ)

உடுப்பதூஉமுண்பதூஉங் காணிற் பிறர்மேல் ... . *

வடுக்காண வற்றாகுங் கீழ் ....*

இ-ள். கீழ், கீழாயினோன்- உடுப்பதூஉம், (பட்டுந்துகிலும்)உடுத்திலையும்- உண்பதூஉம், (பாலுஞ்சோறும்) உண்ணுகலையும்-காணின், கண்டால்- (அவைபொறுடைல்) பிறர்மேல்,அந்நியர்மேல் (குற்றமில்லையாகவும்) வடுக்காண, குற்றமுண்டாக்க- வற்றாகும், வல்லவனுவன். எ-று (கருத்து) கீழ்மகன் பிறருண்டாலும் உடுத்தாலுங் கணடாற் பொறாமைகொள்வான் என்பதாம். ❁உடுப்பது உண்பது என்பவை, அவ்வத் தொழிலின்மேல் நின்றன - அவைகளால், பூணுதல் வாகனமேறல் முதலாகிய பிறதொழில்களுங் கொள்ளப்படும்,அவைகளைக் கண்டமாத்திரத்தே பொறாமைப் படுதலாலே, காணினென்றும்- கேட்டவர் இக்குற்றம் அவரிடத்திருக்கலாமென்று உடன்படச் செய்தல் அரிதாகலால், வற்றாகு மென்றும்- சொல்லினார். [இதனால் பிறர் செல்வம்பொறாமை சொல்லப்பட்டது.] (கூ)

எற்றிற் குரியர் கயவொன் றுற்றக்கால் ………… ………… *
விற்றற் குரியர் விரைந்து ……………… ……………… *

இ-ள். கயவர், கீழோர் - ஒன்று, ஒருதுன்பம் - உற்றக்கால், (தம்மை) அடைந்தவிடத்து (அதுவேசார்பாக) -விரைந்து,விரைவுற்று- விற்றற்குரியர், (தம்மைப்பிறர்க்கு) விலைசெய்தற்கு உரியவராவர்.- (அதுவல்லாமல்) -எற்றிற்குரியர், (வேறே) எத்தொழிலுக்குஉரியராவர். எ-று. (கருத்து) கீழோர் துன்பம்வந்தவிடத்துத் தங்களை விறகுவுரியவராவர் என்பதாம். ❋ உணவில்லாமை யாகவாவது வேறொன்றாகவாவது ஒருதுன்பம் வந்து உற்றமாத்திரத்தென்பதுதோன்ற ஒன்றுற்றக்காலென்றும் - கொள்கின்றார் தங்கீழ்மையை அறிந்து வேண்டாவென்றதற்கு முன்னேவிற்றுநிற்றலால், விரைந்தென்றும்- சொல்லினார். ஒருதொழிலுக்கும்உரியரல்லரென்பது குறிப்பெச்சம். பொருட்பால்-முற்றிற்று.

இனி அப்பொருளைத் துணைக்காரணமாக வுடைத்தாய் இம்மையே பயப்பதாகிய இன்பத்தைச் சொல்லும்படி எடுத்துக்கொண்டார்.

மூன்றாவது.

காமத்துப்பால்.

அஃதாவது- காமத்தின் பகுதியைப்பற்றிச்சொல்லியது

இது- புணர்ச்சி- பிரிவு- எனவிருவகைப்படும். புணர்ச்சியைக் களவென்றும்- பிரிவைக்கற்பென்றும் வகுத்தார்.(தொல்காப்பியம்.) இன்பமும் பொருளு மறனுமென்றாங்- கன்பொடு புணர்ந்த வைந்திணைமருங்கிற்- காமக்கூட்டங் காணுங்காலை -மறையோர் தேஎத்து மன்றலெட்டனுட்- டுறையமைநல்யாழ்த் துணையோரியல்பே. (அகப்பொருள்விளக்கம்.) உலமலிகாதற் களவெனப்படுவ - தொருநான்குவேதத்திருநான்குமன்றலுள்-யாழோர்கூட்டத் தியல்பினதென்ப. (இறையனாரகப்பொருள்.) ஒப்புமுருவம் வெறுப்புமென்றாக்-கற்புமேரு மெழிலுமென்றாச்-சாயலுநாணுமடனுமென்றா-நோயும்வேட்கையு நுகர்வுமென்றாங்- காவயின்வருஉங் கிளவியெல்லா- நாட்டியமரபினெஞ்சுகொளினல்லது- காட்டலாகாப் பொருளவென்ப.

களவியல்.

௩௬-ஆம்-அதிகாரம்

கையணங்குறுத்தல்.

அஃதாவது- பொழில் விளையாட்டாசையால் பெண்கள்கூட்டம் நீங்க அங்குத் தனித்துநின்றவளை வேட்டையாடும் ஆசையால் - இளையர்கூட்டநீங்கத் தனித்துவந்த தலைவன் அவளழகு தனக்குவருத்தமுண்டாக்குதலைச்சொல்லுதல். *

அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு ... .

... ... *

... .. ※

[இது தலைவன் தலைவியைக்கண்

டையுற்றது.]

இ-ள். கனங்குழை, கனத்த குழையையுடையவிவள் - அணங்கு கொல், தெய்வப்பெண்ணோ-ஆய்மயில்கொல், தேர்ந்தெடுக்கப்பட்ட மயிலோ-மாதர்கொல், மானிடப்பெண்ணோ-என்னெஞ்சு, என்மனது மாலும், இப்படிப்பட்டவளென்றறியாது மயங்காநின்றது. எ-று. (கருத்து) இவள் தெய்வப்பெண்ணோ-மயிலோ- மானிடப்பெண்ணோ-[ாயக].

(ருசஉ) ாகூ- ஆம்- அதி-

தகையணங்குறுத்தல்.

இன்னாளென்றறியா தென்மன மயங்குகின்றது என்பதாம். ※ஓ, அசை-கனங்குழை, ஆகுபெயர். (அகப்பொருள்விளக்கம்.) யடமானே க்கிவடிவுங்கண்ட- விடமுஞ்சிறந்துழி யெய்துவதையம். (க)

நோக்கினா ளேக்கெதிர் நோக்குத .ருக்கணங்கு .... ※
தானைக்கொண் டன்ன துடைத்து .... ※

[இது- தலைவன் மானிடமாதென்று துணிந்து அவள்பார்வையாலாகிய வருத்தஞ்சொல்லியது.] இ-ள். நோக்கினாள், அழகையுடையவள்- நோக்கெதிர்- என்பார்வைக்கெதிரே- நோக்குதல், பார்க்குதல்- தாக்கணங்கு, தெய்வப்பெண் - தானைக்கொணடன்னது, போர்க்குச் சேனையைக் கொண்டுவந்ததுபோலுந் தன்மையை-ீ உடைத்து, உடையது, எ- று. (கருத்து) இவளென் பார்வைக்கெதிரேபார்க்குதல் ஒருதெய்வப்பெண போர்செய்யச் சேனையைக்கொண்டுவ

ந்தது போலுந் தன்மையுடையது-என்பதாம். ❁ (அகப்பொருள்விளக்கம்.) எழுதியவல்லியுந் தொழில்புனைகலனும்- வாடியமலருங் கூடியவண்டு- நடைபயிலடியும் புடைபெயர்கண்ணும்-,மச்சமும்பிறவு மவன்பாணிகளுங்-கச்சமிலையங்கடிவனவாகும்.இது துணிவிலக்கணம்

பண்டறியேன் கூற்றென் பதனையினி-
யறிந்தேன் .... *

பெண்டகையாற் பேர மர்க் கட்டு ....
.... *

[இதுவுமது] இ- ள். கூற்றென்பதனை, யமனென்றுசொல்வதை- பண்டறியேன், முன்கேட்டறிந்ததல்லது கண்டறிந்திலன்-இனியறிந்தேன், இப்பொழுது கண்டறிந்தேன்- (அது!)பெண்டகையால்,பெண்குணங்களுடனே- பேரமர், பெரியவையாய்ப் போர்செய்கின்ற கட்டு, கண்களையுடையது-எ-று. (கருத்து) தலைவன் தலைவியினுடையகண்களையே யமனென்றுகூறினன். என்பதாம். ❁பெண்டகையாவது- நாணம் - மடம்- அச்சம்-
பயிர்ப்பு·என்னு நாற்குணங்களாம்

கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற்
பெண்டகைப் ..... *

பேதைக் கமர்ந்தன கண் ....
.... *

[இதுவுமது.] இ-ள். பெண்டகை, பெண்குணங்களையுடைய-பே தைக்கு, பெண்ணிற்கு- கண், கண்கள்!-கண்டார், கண்டவரது - உயி ருண்ணும், உயிரையுண்ணும்- தோற்றத்தால், தோற்றத்தோடுகூடி- அமர்ந்தன, மாறுபட்டிருந்தன- எ-று. (கருத்து) இப்பெண்ணின்க ண்கள் கண்டவர்களுயிரையுண்ணுங் காட்சியாக மாறுகொண்டிருந் தன என்பதாம்.

(ரு)

௱௪௯-ஆம்- அதி- தகையணங்குறுத்தல்.

(௪௪௯)

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவர ....

ளோக்கமிம் மூன்று முடைத்து ....

*

*

[இதுவுமது] இ-ள். மடவரல், இப்பெண்ணினுடைய-நோக்கம் பார்வையானது!- கூற்றமோ, (என்னைவருத்தலால்) யமனோ - கண்ணோ, (என்மேலோடுதலால்) கண்ணோ- பிணையோ, (அஞ்சுதலால்) பெண்மானோவறிகிலேன்- இம்மூன்றும், இம்மூன்று குணங்களையும்- உண்டத்து, உடையதாயிருக்கின்றது. எ-று. (கருத்து) இவள்பார்வை யமனோ கண்ணோ மானோ அறியேன்-என்பதாம். (ரு)

கொடும்புருவங் கோடா மறைப்பி னடுங்கஞர் .... ✻
செய்யல மன்னிவள் கண் .... ✻

[இதுவுமது] இ-ள். கொடும்புருவம், வளைந்தபுருவங்கள்- கோடாமறைப்பின், செவ்வையாயிருந்துமறைத்தால்- இவள்கண்கள்,இவளுடையகண்கள்- நடுங்கஞர், நடு[illegible]தற்கு ஏதுவாகிய துன்பத்தை-செய்யல, (எனக்குச்)செய்யமாட்டாவாம். எ-று . (கருத்து) இவளுடையகண்கள் புருவங்களால்மறைக்கப்பட்டா லெனக்குத் துன்பத்தைச்செய்யாவாம், என்பதாம். மன்-ஒழியிசை, (சு)

கடாஅக் களிற்றின்மேற் கட்படாமாதர்.................. ✻
படாஅ முலைமேற் றுகில் .... ✻

[இது அவளுடைய முலைகளாலாகியவருத்தஞ்சொல்லியது.] இ-ள். மாதர், இப்பெண்ணினுடைய-படாஅ முலைமேற்றுகில், சாயாத முலைகள்மேலிட்ட சீலையானது- கடாஅக்களிற்றின்மேல்-மதயானையின்மேலிட்ட- கட்படாம், முகச்சீலையையொக்கும்.எ-று.(கருத்து) இவள்முலைகளின்மேலே தரித்த வத்திரமானது யானைமுகத்தின்மேலே தரித்த வத்திரத்தையொக்கும். என்பதாம். (எ)

ஒண்ணு தற்கோஒ வுடைந்ததே ஞாட்பினு... .... *
னண்ணரு முட்குமென் மூடு .... *
[இது அவளது நெற்றியாலாகிய வருத்தஞ்சொல்லியது.] இ-ள். ஞாட்பினுள், போர்க்களத்துள்-நண்ணாரும், பகைவரும்-உட்கும், அஞ்சும்-என்மீடு, என்னுடைய வலிமையானது- ஒண்ணுதற்கு, இவளுடைய பிரகாசநெற்றிக்கு- உடைந்தது, அழிந்தது. எ-று. (கருத்து) என்னுடைய வலிமையானது இவளுடைய நெற்றிக் கழிந்தது, என்பதாம். ❀ ஓ ஓ வியப்பிற்குறிப்பு. (அ)

பிணையேர் மடநோக்கு நாணுமுடையாட் .... *
கணியெவனோ வேதில தந்து .... *

(௬௬௬)

௱௬-ஆம், அதி-தகையணங்குறுத்தல்.

[இ-து. ஆபரணத்தாலாகிய வருத்தஞ் சொல்லியது.]

இ-ள். பிணையேர்மடநோக்கு, (புறத்தில்) பெண்மான்போன்றபார்வையும்- நாணம், (அகத்தில்) நாணத்தையும்-உடையாட்கு, உடையவிவளுக்கு- எதிலதந்து, வேறுபரணங்களையுண்டாக்கி-அணி, அணிதல்! - எவன் - என்னபயனுடையது. எ-று. (கருத்து) இவட்குப்பார்வையு நாணமு மாபரணங்களாயிருக்க வேறுப்ரணங்களை யணிதலென்னபயன்: என்பதாம். ஓ, அசை. (க)

உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போற் .... *
கண்டார் மகிழ்செய்த லின்று .... *

[இது - தலைவி குறிப்பறியலுற்ற தலைவன் சொல்லியது.] இ-ள். அடுநறா- காய்ச்சப்பட்ட மதுவானது!- உண்டார்கணல்லது உண்டவரிடத்தல்லாது, காமம்போல்- காமத்தைப்போல, கண்டார் கண்டவரிடத்து, மகிழ்செய்தல்- மகிழச்செய்தலை, இன்று- உண்டாவதல்ல எ-று. (கருத்து) மதுவுண்டால் மகிழ்ச்சி காமங்கண்டால் மகிழ்ச்சிதரும் என்பதாம். (ய)

௱ய-ஆம்-அதி-குறிப்பறிதல்.

அஃதாவது - தலைவன் தலைவி குறிப்பை அறிதலும், தோழி குறிப்பை அறிதலும், அத்தோழி அவ்விருவர் குறிப்பையும் அறிதலும், ஆம். தலைவி யழகைக்கண்டு வருந்திய தலைவன் தலைவியைக் கூடும்போது இது வேண்டுமாதலால்

தலைகயணங்குறுத்தலின் பின் வைக்கப்பட்டது. உ-ம். தொல்காப்பியம்- நாட்ட மிரண்டு மறிவுடன்படுத்தற்குக்- கூட்டியுரைக்குங் குறிப்புரையாகும்- குறிப்பேறித்துக் கொள்ளுமாயி னுங்கவைநிகழு மென்மனார்புலவர்.
கு

இருநோக் கிவளுண்க ணுள்ளதொருநோக்கு .... *
நோய் நோக்கொன் றந்நோய்மருந்து .... *

[இது தலைவன் தலைவி யுள்ளக்குறிப்பை அவள்பார்வையால்அறிந்தது.] இ-ள். இவளுண்கண் இவளுடைய (மை)யுண்டகண்களில்-உள்ளது, இருக்கின்றபார்வையானது- இருநோக்கு,இரண்டுபார்வையாயிற்று. ஒருநோக்கு, ஒருபார்வையானது!-நோய்நோக்கு,நோய்செய்யும்பார்வையாம்- ஒன்று, மற்றொருபார்வையானது! - அந்நோய்மருந்து, அந்நோய்க்கு மருந்தானபார்வையாம். எ-று. (கரு

௱௮-ஆம்,அதி- குறிப்பறிதல்.

(௬௬௫)

தது) இவள் பார்வையானது இரண்டு ஒன்று நோய்செய்யும் பார்வை மற்றொன்று அந்நோய்க்கு மருந்தான பார்வைஎன்பதாம்.(க)

கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற் .... *
செம்பாக மன்று பெரிது .... *

[இதுவுமது]இ-ள். கண், (இவளுடைய) கண்கள்- களவுகொள்ளுஞ்சிறுநோக்கம், நான்காணமல் என்னைப்பார்க்கின்றசிறியபார்வை- காமத்தில், ✡ மெய்புறுவுணர்ச்சியில்- செம்பாகமன்று, ஒத்தபாதியளவல்ல- பெரிது,)அதனிலும்) மிகும்-எ-று.(கருத்து)இவள்குறும் பார்வை காமத்தினு மதிகம் என்பதாம். ❁ நான் பார்த்தபோது நாணித் தலைகுனிந்தும் பாராவிடத்தே உற்றுப்பார்த்தும்வருதலாலே கண்களவுகொள்ளுமென்றும், அதுஉண்டாங்காலம் சிறிதாகலால்- சிறுநோக்கமென்றும், அப்பார்வை உட்கருத்து உள்ளவிடத்தே உண்டாவதாகலால் இனி இவளைக்கூடுதல் நிச்சயமென்றற்கு செம்பாகமன்று பெரிதென்றும், சொல்லினன். (உ)

நோக்கினா ணோக்கி யிறைஞ்சினா ளஃதவள் .... *
யாப்பினு ளட்டிய நீர் .... *

[இது தலைவன் தலைவிக்குறிப்பைப் பார்வையாலும், நாணினாலும், அறிந்தது.] இ-ள். அவள், அம்மாது- நோக்கினாள், பார்த்தாள்- நோக்கி, பார்த்து- இறைஞ்சினாள், தலைகுனிந்தாள்- அஃது, அச்செய்கைக்கு ஏதுவாகிய குறிப்பானது!- யாப்பினுள், (எம்மிருவரிடத்தும்தோன்றிய) அன்பாகிய பயிருள்- அட்டியநீர், (அதுவளரும்படி) வார்த்தநீராயிற்று. எ-று. (கருத்து) அவள்பார்த்தாள் பார்த்துத் தலைகுனிந்தாள் அவள்குறிப்பு இருவரன்பும் வளருந் தண்ணீராம். என்பதாம். ❁ யாப்பு- கட்டு- யாப்பினுலாகிய அன்பை-யாப்பென்றார். [ஏகதேசவுருவகவணி.] (௩)

யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற் .... *
றானோக்கி மெல்ல நகும் .... *

[இது தலைவன் தலைவிகுறிப்பை நாணினாலும், மகிழ்ச்சியாலும் அறிந்தது.] இ-ள்.யானோக்குங்காலை, நான்பார்க்கும்போது-நிலனோ

க்கும், நிலத்தைப்பாராநிற்கின்றாள்- நோக்காக்கால்,பாராதபோது தானோக்கி, தான்பார்த்து- மெல்லநகும், (தன்னுள்ளே) மகிழாநிற்பள்- எ-று. (கருத்து) யான்பார்க்கும்போது பூமியைப்பார்க்கிறாள்

※மெய்யுறு புணர்ச்சி- மெய்தொட்டுப்புணரும்புணர்ச்சி. உள்ளப்புணர்ச்சி யொன்று வேறேயிருக்கையால்இப்படிச்சொல்லப்பட்டது

[௱௰௪] (௬௬௫)

௱௰- ஆம்-அதி-குறிப்பறிதல்.

யான்பாராதபோது தான்பார்த்து நகைக்கின்றாள். என்பதாம். ※ மெல்லநகுதல் வெளிப்படாமல் மகிழ்தல் (௬)

குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண் .... ※
சிறக்கணித்தாள் போல நகும் ....※

[இதுவுமது.] இ-ள். குறிக்கொண்டு (நேரே) குறிக்கொண்டு-நோக்காமையல்லால், பாராமை மாத்திரமேயல்லது - ஒருகண்,ஒருகண்ணை- சிறக்கணித்தாள்போல, சுருக்கினவள்போல- நகும்,(என்னைப்பார்த்துத் தன்னுள்ளே-) மகிழா நின்றாள், எ-று. (கருத்து) நேரேபாராமல் ஒருகண்ணைச்சுருக்கினவள்போல்பார்த்து நகைக்கின்றாள். என்பதாம். ※ சிறங்கணித்தல்- சிறக்கணித்தாளெனச் செய்யுள் விகாரமாயிற்று. சிறங்கணித்தல் - சுருக்குதல். அதுவும்வெளிப்படத்தோன்றுமையால் -போலவென்றார்.பார்த்தென்பதுவருவிக்கப்படுதலால் - சொல்லெச்சம் • இனி இவளை அடைவது நிச்சயமென்பது - குறிப்பெச்சம். (௫)

உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர்சொ ………… *
லொல்லை யுணரப் படும்…. … ….. ……… …. ……. ..*

[இது- தோழி தூர்ப்படுத்திய விடத்தே அவளது குறிப்பை அறிந்ததலைவன் தன்னுள்ளேசொல்லியது.] - இ-ள். உறாஅதவர்போல், (புறத்திலே) அயலார்போல்-சொலினும், (கடுஞ்சொல்) சொல்லினும்-செறாஅர்சொல் - (உள்ளே) பகையாதவர்சொல் - (பின் பிரயோசனப்படுதல்) -ஒல்லையுணரப்படும், (குறையிரந்தவராலே!) கடிதில் அறியப்படும். எ-று. (கருத்து)புறம்பாகக்கடுஞ்சொல் சொல்லினும் உள்ளே பகையாதவர்சொல்சீக்கிரமறியப்படும் என்பதாம். ✲கடுஞ்சொல்,இவ்விடம்மிகுந்தகாவலையுடையதுவாரதேயு மென்றுசொல்லுகை முதலானவை-செறாஅனவேஅருளுடைமைபெறப்பட்டது

செறாஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னோக்கு ……. *
முறாஅர்போன் றுற்றார் குறிப்பு ………………… ……. *

[இதுவுமது.] - இ-ள். செறாஅ இச்சிறுசொல்லும், பின் இனிதாவதாய் முன்னே இன்னாதாகியசொல்லும்! - செற்றார்போனோக்கும், (உள்ளேபகையாதிருந்தேபுறத்தே) பகைத்தவர்போன்ற கோபப் பார்வையும்! - உறாஅர்போன்றுற்றார் -அயலோர்போலிருந்து நட்பாயினவர்க்கு - குறிப்பு, ஒருகுறிப்புப் பற்றிவருவனவாம். எ-று. (கருத்து) உள்ளன்பாகச்சொல்லுங் கடுஞ்சொல்லும், பகையாது பார்க்குங் கோபப்பார்வையும்ஆசைக்குறிப்பால்வரும்என்பதாம். ✲குறிப்பு, ஆகுபெயர்.இவைஉள்ளேஒருபயன் குறித்துச்செய்கின்றவை

௱௰-ஆம்-அதி- குறிப்பறிதல். (௱௪௭)

இயல்பல்ல வா [illegible] இவைகளுக்கு அஞ்சவேண்டா வென்பதாம்.

அசையியற் குண்டாண்டோ ரேஎர்யா னோக்கப்..... .....*
பசையினள் பைய நகும் .... *

[இதுவுமது.] - இ-ள். யானோக்க, நான் இரந்துநோக்கியவிடத்து-பசையினள், (அதுதெரிந்து இரங்கினவளாகி- பையநகும், உள்ளே நகைகின்றாள் - (அதனால்) - அசையியற்கு, அசைந்த சாயலையுடையவளுக்கு - ஆண்டு, அந்நகையினிடத்து- ஓரேஎர், ஒருநன்மைக்குறிப்பு - உண்டு, உண்டு-எ-று.(கருத்து)நான்பார்த்தவிடத்திலிரங்கிப்பார்த்து நகைக்கிறாளதனாலே நலமுண்டுஎன்பதாம். ※ஏர்,ஆகுபெயர்.அக்குறிப்பு இனிப்பழுதாகா தென்பதாம். (அ)

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல் .... *
காதலார் கண்ணே யுள ....
.... *

[இது. தோழிமதியுடன்பட எண்ணித்தன்னுள்ளே சொல்லியது.] இ-ள். ஏதிலார்போல, முன்னறியாதவர்போல-பொதுநோக்குநோக்குதல்(ஒருவரைஒருவர்)பொதுப்பார்வையாகப்பார்த்தல்!-காதலார்கண்ணே, ஆசையுடையஇவ்விருவரிடத்தும்- உள,உண்டாகின்றன எ-று.(கருத்து) அயலார்போலப்பொதுப்பார்வைபார்த்தலாசையுள்ளவரிடத்துணடு என்பதாம். ※ பார்த்தல்இருவரும் மதுமறைந்துண்டோர் மகிழ்ச்சிபோல் உள்ளத்துள்ளே மகிழ்தலால், அது பற்றிக் காதலாரென்றும், அதுபுறத்து வெளிப்படாமையால்ஏதிலாரென்றும். சொல்லினான். (கூ)

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்வாய்ச்சொற்க… *
ளென்ன பயனு மில …………… …. ……………………. …. …. *

[இதுவுமது.]- இ-ள். (காமத்திற்குரிய இருவருள்) - கண்ணொடு (ஒருவரது) கண்களோடு - கணணிணை, (ஒருவர்கணகள்-நோக்கொக்கின்,பார்வையால் ஒக்குமாயின் - வாய்ச்சொற்கள் (உண்மை தோன்றச்சொல்லுகின்ற) வாய்ச்சொற்கள்! - என்னபயனும், ஒருபயனும்-இல, உடையனவல்ல. எ-று. (கருத்து) இருவர்பார்வையுமொக்குமாயின் வாய்ச்சொற்கள் பயனில்லன என்பதாம். ※பார்வையாலொத்தல்.- ஆசைப்பார்வை யுடையனவாதல்.- வாய்ச்சொற்கள், மனத்தில்லாமல் வாயளவிலே தோன்றுகின்ற சொற்கள். (ய)

ளயக-ஆம்-அதி-புணர்ச்சிமகிழ்தல்.

அஃதாவது- அப்படிக் குறிப்பறிந்து புணர்ந்த தலைவன் அப்புணர்ச்சியை மகிழ்ந்து சொல்லுதல். அதிகாரமுறைமையும் இதனு

லேவிளங்கும். (உ-ம்.)-அகப்பொருள்விளக்கம். இரந்துபின்னிற்றற் கெண்ணலு மிரந்து - பின்னிலைநிற்றலு முன்னிலையாக்கலு - மெய்தொட்டுப்பயிறலும் பொய்பாராட்டலு - மிடம்பெற்றுத் தழாஅலும் வழிபாடுமறுத்தலு - மிடையூறுகிளத்தலு நீடுநினைந் திரங்கலு- மறுத்தெதிர்கோடலும்வறிதுநகைதோற்றலு- முறுவற்குறிப்புணர்த்தலு முயங்குதலுறுத்தலும்- புணர்ச்சியின் மகிழ்தலும்புகழ்தலும் பிறவு - முணர்த்திய தலைவியிற் புணர்ச்சியின் விரியே

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு……………. *
மொண்டொடி கண்ணே யுள ……………… ………… … *

[இது தலைவன் * இயற்கைப் புணர்ச்சி முடிவிலே சொல்லியது.]
இ-ள். கண்டு, (கண்ணாலே) கண்டும்- கேட்டு, (செவியாலே)கேட்டும்- உண்டு, (நாவாலே) உண்டும்- உயிர்த்து, (மூக்காலே) மோந்தும்- உற்று, (மெய்யாலே) தீண்டியும்- அறிய[illegible]அனுபவிக்கப்படுகிற- ஐம்புலனும், ஐம்புலனும்- ஒண்டொடிகண்ணே [illegible] இவ்வொளி பொருந்திய வளையையுடையவளிடத்தே -உள, உ[illegible]-று. ❋ உம்மை, முற்றும்மை. - தே[illegible] விளங்க நின்றது. -வேறுவேறு [illegible] பொறிகளாலே அனுபவிக்கப்படுகிற புலன்களெல்லாம் ஒரோகாலத்தே இவளிடத்தே என்றால் அனுபவிக்கப்பட்டன வென்பதாம். (௧)

பிணிக்கு மருந்து பிறமன் னணியிழை ... .*
தன்னோய்க்குத் தானே மருந்து .... *

[இது, தலைவன் ✡ இடந்தலைப்பாட்டிலே சொல்லியது.] - இ-ள். பிணிக்கு, (வாதமுதலாகிய) பிணிகளுக்கு- மருந்து, மருந்தாவன!- பிற, (அவைகளுக்கு நிதானமானவையல்லாமல்) விரோதமாகிய குணத்தையுடையவையாம். - (அப்படியல்லாமல்) - அணியிழை, இவ்வணியினையுடையவள்! - தன்னோய்க்கு, தன்னாலாகியபிணிக்கு - தானேமருந்து, தானேமருந்துமாயினாள். எ-று. ❋ இயற்கைப்புணர்ச்சியை நினைத்து முன்வருந்தினானாகலால், தன்னோயென்றும்- அவ்வருத்தம் தனித்துவந்து நின்ற அவளை முன்கூடியவிடத்தே சென்

---

* இயற்கைப்புணர்ச்சி- ஒரு ராசகுமாரன் வேட்டைக்குப்போய்மலைச்சோலையிலே விளையாடவந்து தனித்துநின்ற குறக்கன்னியைக் கண்டுகூடியது.

✡ இடந்தலைப்பாடு இரண்டாந்தடவை முன்கூடியவிடத்தே தலைவன் தலைவியைக் குறித்துச் சென்று கூடியது.

[illegible]-புணர்ச்சிமகிழ்தல்.

று கதிர்மப்[illegible]லால், தானேமருந்தென்றும்-சொல்லி ருன். இ[illegible]வியவைகளால் நீரப்பெற்றில மென்பது படறி ன்றமை[illegible]திஸைபிலே, வந்தது. (உ-ம். அகப்பொருள் விளக்[illegible]றைக் புணர்ச்சி தெய்வத்தி னெய்துழி, முயற்சியி ன்றி[illegible]ரும். (உ)

[illegible]வார் மென்றோட் டுயிலி னினிதுகொ ....*
[illegible]க் கண்ணு னுலகு..... .... *

[பேரின்பத்திற்குரியநீ இச்சிற்றின்பத்துக்கு இப்படிப்பட்டவ ளு[illegible] தகாதென்ற பாங்கனுக்குத் தலைவன் சொல்லியது.] -இ-ள். (ஐம்புலன்களையும் அநுபவிப்பவர்க்கு) - தாம்வீழ்வார், தாம் விரு ம்புமகளிரது- மென்றோள், மெல்லியதோள்களிடத்துத் துயிலும்- துயிலின், துயில்போல்-தாமரைக்கண்ணுனுலகு (அவைகளைத் துற ந்தயோகிகளால் அடையப்படுவதாகிய) கமலக்கண்ணனது உலகம்! இனிதுகொல், வருந்தாமலடையக்கூடுவதோ. எ-று. ❀ அநுபவிப் பவர்க்கென்பது, வருவிக்கப்பட்டது. இப்படிப்பட்ட|துயிலைவிட்டு த் தவயோகங்களால் வருந்தவேண்டுதலாலே,எம்போல்வார்க்குஆகா தென்னுங் கருத்தால் இனிதுகொலென்றான். (ரு)

நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந் ....*
தீயாண்டுப் பெற்றா ளிவள் .... *

[தலைவன் * பாங்கற்கூட்டமுடிவிலே சொல்லியது.] -இ-ள். நீங் கின், (தன்னை) நீங்கியபோது - தெறூஉம், சுடாநிற்கும். - குறுகுங் கால், நெருங்கும்போது- தண்ணென்னும்,குளிராநிற்கும்.-தீ,(இப் படிப்பட்ட) தீயை- (எனக்குத் தருவதற்கு) -யாண்டு,எவ்வுலகத்தி லே - இவள், இவள்!- பெற்றாள், அடைந்தாள். எ-று. ❀ கூடாமுன் துன்பமடைதலால், நீங்கிற்றெறூஉமென்றும் கூடியபின் இன்ப மடைதலால் குறுகுங்காற் றண்ணென்னுமென்றும்- இப்படிப்பட்ட தீ உலகிலில்லாமையால், யாண்டுப்பெற்றாளென்றும்-|சொல்லினுன்.

வேட்ட பொழுதி னவையவை போலுமே .... *

தோட்டார் கதுப்புறு டோள் ... . *

* பாங்கற்கூட்டம்- மூன்றாந்தடவை தலைவன் தனதுதோழனைத் துணையாகக்கொண்டு தலைவியைக்கூடியது.
* பாங்கியிற்கூட்டம்- நாலாந்தடவை தோழியைத்துணையாகக்கொண்டு கூடியது.

[௧௭]

(௬௫௰) ராமக- ஆம்- அதி-

புணர்ச்சிமகிழ்தல்

[இது தலைவன் * பாங்கியிற்கூட்டமுடிவிலே சொல்லியது.] இ-ள். (எப்பொழுது பெற்றுக்கூடினும்) தோட்டார் கதுப்பினுள் மலரா னிறைந்த கூந்தலையுடையவளுடைய தோள், தோள்கள்- வேட்ட பொழுதின், (மிகவும் இனிய பொருள்களைப்பெற) விரும்பியபொழுது- அவையவைபோலுமே, [illegible]ருள்கள்போல்வந்து இன்பஞ் செய்யும். எ-று. ❀ தோள் [illegible] பூவுக்கு ஆகுதலால் ஆகு பெயர். இயற்கைப்புணர்ச்சி- [illegible]- பாங்கற்கூட்டம்- இவைகளிலே முன்னமே அத்தோள் [illegible]பவிக்கப்பட்டிருந்தும்- பின்னும் புதியவைபோலிருந்து [illegible]த்தலால் அவ்வாரா மைபற்றி இப்படிச்சொல்லினன். (௫)

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் [illegible] .... *
கமிழ்தி னியன்றன தோள் .... [illegible] ..... *

[இதுவுமது.] இ-ள். உயிர், (தன்னைப்பெற்ற [illegible]ளன்) னுயிர்.- உறுதோறு, (பெற்று) உறுந்தோறும்- தளிர்[illegible]க்கும்படி தீண்டலால், தீண்டுதலால்- பேதைக்கு. இ[illegible], தோள்கள்,- அமிழ்தினியன்றன, (இவைப்பி[illegible]) [illegible]செய்யப் பட்டன-எ-று. ❀ எதுவாகலால் [illegible] அமிழ்தினாகும் பொருத்தியது- வாடியவுயிரைத் தளிர்ப்பித்தல்பற்றி- அத்தோள்களை அமிழ்தினியன்றனவென்றான். தளிர்த்தல்- இன்பத்தாலே தழைத்தல். (௬)

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்று .... *
லம்மா வரிவை முயக்கு .... *

[இது நீ இவளைக் கல்யாணஞ்செய்துகொண்டு உலகோர் தம்மில் லிருந்து தமதுபங்கை உண்கிற இல்லறத்தோடு பொருந்தல் வேண்டுமென்ற தோழிக்குத்தலைவன்சொல்லியது.] இ-ள். அம்மாவரிவைமுயக்கு, அழகியமாமைநிறத்தைஉடைய மாதின்புணர்ச்சியானது!-(இன்பந்தருதலில்)- தம்மிலிருந்து, தமக்குரியமனையிலிருந்து-தமது, (உலகோர்)தம்முயற்சியால்வந்தபொருளைப் பாத்தி, (தென்புலத்தார்-முதலாகிய ஐவர்க்கும்) பகுந்துகொடுத்து-உண்டற்று,(தமதுபங்கை) உண்டதுபோல் இன்பஞ்செய்கின்றது.எ-று.ஆல்அசைதொழிலுவமம். இல்லறஞ்செய்தாரடையும் சுவர்க்க வின்பத்தைஎனக்கு இப்புணர்ச்சியே தருமென்று கல்யாணத்திற்கு உடன்படாதவன் சொல்லியபடியாயிற்று. மாமை பொன்னிறம். (எ)

வீழு மிருவர்க் கினிதே வளியிடை .... *
போழப் படாஅ முயக்கு .... *

நாயக-ஆம்-அதி-புணர்ச்சிமகிழ்தல். (சருக)

[இது- ஒத்த அன்புடைய உமக்கு ஒருபோதும் விடாத புணர்ச்சியே இனிதாகலால் விவாகஞ் செய்துகொள்ளென்ற தோழிக்குச் சொல்லியது.] இ-ள். (நீசொல்லுகின்றது ஒக்கும்) வரியிடைபோழப்படாத ஒருபொழுதும்(நெகிழாலமையால்)காற்றால் இடையறுக்கப்படாத முயக்கு, புணர்ச்சியானது!- வீழுமிருவர்க்கு (ஒருவரையொருவர்) விரும்புகிற இருவர்க்கும்- இனிதே,இனிதாகும். எ-று. ❋ முயக்கமென்பது விகாரத்தாற்றொக்கது- ஏகாரம்- தேற்றம். இங்கே இருவரில்லாமையால் அது ஒவ்வாதென்பது கருத்து. களவுப் புணர்ச்சியை மகிழ்ந்து விவாகத்துக்கு உடன்படாதவன் சொல்லியபடி.

ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன் .... ❋

[இது மறைக்கவேண்டாமையால் நடுநீங்கலில்லாத புணர்ச்சியே இன்பப்பயனுடையதாகலால் விவாகஞ்செய்துகொள்ளென்றதோழிக்குச்சொல்லியது.] இ-ள். ஊடல், (புணர்ச்சி இனிதாதற் பொருட்டுவேண்டு) ஊடலும் - உணர்தல், (அதனை அளவறிந்து) நீங்குதலும்- புணர்தல், அதன்பின் உண்டாகின்ற) அப்புணர்ச்சியும் என்கிற- இவை, இவையல்லவா- காமங்கூடியார், (விவாகஞ் செய்துகொண்டு) காமத்தை இடைவிடா தடைந்தவர்!- பெற்றபயன், பெற்றபயன்கள். எ-று. ❋ ஆடவர்க்குப் பிரிவென்பதொன்று உண்டாவதல்லமல், அதுதான் பரத்தைய ரிடத்தாதலும், அதனை அறிந்துமகளிர்ஊடிநிற்றலும், அவ்வூடலைத்தவறுசெய்தஅவர்தாமே தந்தவறில்லாமை சொல்லிநீக்கலும், பின்னும் அவ்விருவரும் ஒத்த வன்பினராய்க்கூடலும், அல்லவா. முன்விவாகஞ்செய்துகொண்டு அடைந்தவர் பெற்றபயன். அப்பயன் இருதலைப்புள்ளிளோருயிராகியமாறுவன்புடைய எமக்கு வேண்டாவென அவ்விவாகஞ்செய்து அடைதலை இகழ்ந்துசொல்லியபடி. (கூ)

அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ் .... *
செறிதோறுஞ் சேயிழை மாட்டு .... *

[இது- தலைவியைப்புணர்ந்து உடன்கொண்டுபோகின்றதலைவன் தன்னுள்ளே சொலலியது.] இ-ள். செறிதோறும், புணரப்புணர- சேயிழைமாட்டு, செய்ய ஆபரணத்தையுடைய இவளிடத்து- காமம், காதல்;- அறிதோறு (நூல்களாலும் நுட்பவறிவாலும் பொருள்களை) அறியவறிய - அறியாமை, (முன்னை) யறியாமை! கண்டற்று, காணப்படுதல் போலே காணப்படுகின்றது. எ-று. ❋களவிலேபலவிடை யீடுகளால் தன்கருத்தின்படி அனுபவிக்கப் பெறுமல் வருத்

(சஙுஉ) ய௯-ஆம்,அதி-புணர்ச்சிமகிழ்தல்.

தமுற்றவன் உடன்கொண்டுபோம்போது அது தீர்தலால், செறிதோறுமென்றான். அறிவிற்கு எல்லையில்லாமையால் மேலுமேலும் அறியவறிய முன்னையறிவு அறியாமையாய் முடியுதல்போல் புணர்தற்கு எல்லையில்லாமல் மேலுமேலும் புணரப்புணர முன்னைப்புணர்வு புணராமையாய் மூடுகின்றதெனத் தன்னுள்ளாமைசொல்லியபடி. இப்புணர்ச்சி மகிழ்தல் தலைவியிடத்துக் குறிப்பா லல்லதுசொல்லால் நிகழாது.ஆல்-அசை. (ய)

௱ய௨-ஆம்-அதி-நலம்புனைந்துரைத்தல்.

அஃதாவது, தலைவன் தலைவி நலத்தினை வருணித்துச்சொல்லிய து. இது புணர்ச்சியின் மகிழ்ந்தவிடத்து நிகழ்வதாகலால் அத ன்பின்வைக்கப்பட்டது,(உ-ம், அகப்பொருள்விளக்கம்.) கலந்து ழிமகிழ்தலு நலம்பாராட்டலு, மெற்புறவணிதலு மென்னும் [illegible]றும்,போற்றியதெய்வப் புணர்ச்சியின்விரியே.

நன்னீரை வாழி யனிச்சமே நின்னினு... .... *
மென்னீரள் யாம்வீழ் பவள் ... . *

[இது - தலைவன் இயற்கைப்புணர்ச்சி முடிவிலே சொல்லியது.] இ-ள். அனிச்சமே, அனிச்சப்பூவே-வாழி, வாழ்வாயாக. நன்னீரை, (மென்மையாலே நீ எல்லாப்பூவினும்) நல்ல குணமுடையை.(அப் படியிருந்தாலும்) - யாம்வீழ்பவள், எம்மால் விரும்பப்பட்டவள்.- நின்னினுமென்னீரள். உன்னினுமெல்லியகுணத்தையுடையள்.எ-று. ❊ அனிச்சம், ஆகுபெயர். வாழியென்பது உடன்பாட்டுக் குறிப்பு. இனிநானே மெல்லியகுணமுடையேனென்னுஞ் செருக்கையொழிவா யாக வென்பதாம். அப்பொழுது பரிசித்து அறிந்தானாதலால், பரிச த்தினினிமையையே பாராட்டினான். (க)

மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்..... .. .. *
பலர்காணும் பூவொக்கு மென்று .... *

[இது-தலைவன் இடந்தலைப்பாட்டிலே சொல்லியது.] இ-ள்.நெஞ் சே, மனமே -"இவள்கண், (யானேகாணப்பெற்ற) இவள் கண்களை- பலர்காணும், பலராலும்காணப்படுகிற-பூவொக்குமென் று.மலர்கள் ஒக்குமென்று நினைத்து-மலர்காணின்,(தாமரை குவளை நீலமுதலாகி ய) மலர்களைக் கண்டால்-மையாத்தி, மயங்காநின்றாய். [உனக்குஅறி

ஈயஉ-ஆம்-அதி-நலம்புனைந்துரைத்தல்.

விருத்தவிதம் அன்ன]. எ-து: ஒப்புமையாதல், இங்கே ஒப்பாகாதவைகளை ஒத்தவென்றுகொள்ளுதல். இயற்கைப்புணர்ச்சி நீங்கியது முதலாகத் தலைவி கண்களைக் காணப் பெறுமையால் அவைகளோடு சிறிதொத்திருக்கிற மலர்களைக் கண்டவிடத்தெல்லாம் அவைகளிடத்து ஆசைவைத்து வந்ததலைவன் இப்பொழுது அக்கண்களினலமுழுதும் அவளோடுதனியாளே இடத்தெதிர்ப்பட்டு அனுபவித்தானாகலால அம்மலர்கள் ஒப்பாகாமைகண்டு ஒப்புமை கருதிய நெஞ்சை இகழ்ந்து சொல்லியபடி. (உ)

முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம் .... *
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு ... . *

[இது கூட்டுதலுற்ற பாங்கனுக்குத் தலைவன் தலைவியினியல்புசொல்லியது.] இ-ள். வேய்த்தோ ளவட்கு, மூங்கில்போலுந் தோள்களையுடையவளுக்கு-மேனி, நிறம்!- முறி, தளிர் நிறமாயிருக்கும். முறுவல், பல்லானது!- முத்தம், முத்தாயிருக்கும். நாற்றம், இயற்கைவாசனையானது!- வெறி, நல்லவாசனையாயிருக்கும். உண்கண், மையுண்டகண்கள்!- வேல், வேல்களாயிருக்கும். எ-று. முறி முறுவல் ஆகுபெயர். உருவகவகையாலே சொல்லினமையால், புணர்ந்துரையாயிற்று. உன்னாலே நினைக்கப்பட்டவளை அறியேனென்று தாரப்படுத்திய தோழிக்குத் தலைவன் சொல்லியதுமாம். (௩)

காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கு .... *

மாணிழை கண்ணொவ்வே மென்று .... *

இது பாங்கற் கூட்டத்திலே சென்றுசார்ந்துறுந் தலைவன் சொல்லியது.] இ-ள். குவளை, குவளைமலர்களே! காணின், பார்க்கிற தொழிலை உடையவையாயிருந்தால்- மாணிழைகண், மாட்சிமைப்பட்ட ஆபரணங்களையுடையவளது கண்களை- ஒவ்வேமென்று; நிகரோமென்று நினைத்து- கவிழ்ந்து, (அந்நாணத்தினாலே) தலைகுனிந்து- நிலன், நிலத்தை- நோக்கும், பார்க்கும். எ-று. ❊நிறத்தாலேயன்றி,தொழிலாலும் ஒவ்வாதென்றற்கு, காணினென்றும் - கண்டால் அவ்வொவ்வாமையால் நாணுடையவா மென்பது தோன்ற, கவிழ்ந்தென்றும் - சொல்லினன். காணலும் நாணலும் இல்லாமையால்இறுமாந்து ஆகாயத்தைநோக்கின வென்பதாம். (௪)

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாணுசுப்பிற்கு...... *

நல்ல படாஅ பறை ... ... *

[இது-தலைவன் ✲ பகற்குறியிலே பூவணிகண்டு சொல்லியது.]இ-

✲பகற்குறி பகலிலே ஓரிடம் குறிவைத்து வந்து கூடல்.

(௪௫௪)

௱௰௨-ஆம்-அதி-நலம்புனைந்துரைத்தல். ள். (இவள்! தன்மென்மை

நினையாமல்) அனிச்சப்பூ, அனிச்சமலரை

கால்களையாள், தாள்களையாளாகி- பெய்தாள்,

குடிஜள். நுசுப்பிற்கு
(இனியிவ) ளிடைக்கு-நல்ல, நல்லவையாகிய- பறை, பறைகள்!படா
அ, ஒலியா. எ-று.❊இம்மலர்த்தாளின் பாரம்பொறுமையால்இடை
முரியும் முரிந்தால் அதற்குச் செத்தவர்க்கு உரியநெய்தற்பறையே
ஒலிக்கு மென்பதாம் .மனிதர்க்கு உரியசாவும்-பறையொலித்தலும்
குறிப்பால் இடையின்மேல் ஏற்றப்பட்டன. (ஙு)

மதியு மடந்தை முகனு மறியா ....*
பதியிற் கலங்கிய மீன் ....*

[இது- * இரவுக்குறியிலே தலைவன் சந்திரனைக்கண்டு சொல்லி
து.] இ-ள். மீன், தாரகைகள்!(வேறுபாடு பெரிதாயிருக்கவும்) மதி
யும், (தமது) சந்திரனையும் - மடந்தைமுகனும், (எமது) மாதுமுக
த்தையும்- அறியா, இது சந்திரன் இது முகமென்று அறியமாட்டா
மல் - பதியின், (தந்) நிலைபினின்றும் - கலங்கிய-கலங்கித் திரியா நின்
றன. எ-று. ❊ ஒரிடத்து நில்லாமல் எப்போதும் உலாவுதல்பற்றி,
பதியிற்கலங்கியவென்றான். வேறுபாடு பின்பாட்டிற்சொல்லப்படும்,

அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல ....*
மறுவுண்டோ மாதர் முகத்து ....*

[இதுவுமது] இ-ள். (அத்தாரகைகள் அப்படிக்கலங்குதற்குக்கா
ரணம்! யாது) அறுவாய்நிறைந்த, மூன் குறைந்தவிடம் வந்து நிறை
ந்த- அவிர், விளங்குகிற - மதிக்குப்போல, சந்திரனிடத்துப்போல-
மாதர்முகத்து, இம்மாதர்முகத்தினிடத்து - மறு, களங்கமான்து!
உண்டோ,உண்டோ- எ-று.❊தேய்ந்துவளர்தலும்-களங்கமும்- இல்
லாமைபற்றி, வேறுபாடு அறியலாயிருக்க அறிந்திலவென்று இகழ்ந்
து சொல்லியபடி.] (எ)

மாதர் முகம்போ லொளிவிட
வல்லையேற் .... *
காதலை வாழி மதி ....

.... *

[இதுவுமது.] இ-ள். மதி, சந்திரனே- வாழி, வாழ்வாயாக. மாதர் முகம்போல்- பெண்கள்முகம்போல - ஒளிவிடவல்லையேல், (நான்மகிழும்படி) ஒளிவீசவல்லாயாகில் - காதலை, (நீயும் என்றால்) இச்சிக்கப்படுதலையுடையையாவாய். எ-று. ❁ மநு:, உன்னிடத்திருத்தலால் அதுமாட்டாய் மாட்டாமையால் என்றால் இச்சிக்கவும்படா யென்பதாம். வாழி, இகழ்ச்சிக்குறிப்பு. (அ)

* இரவுக்குறிஇரவிலேதலைவி மனையருகுள்வந்துகூடல்.

ஙயஉ-ஆம்-அதி-

நலம்புனைந்துரைத்தல். (சுருடு)

மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயிற் .... *
பலர்காணத் தோன்றன் மதி .... *

[இ-பொருள்] இ-ள். மதி, சந்திரனே- மலரன்னகண்ணாள், இப்மலர்போலும் கண்களையுடையவளது- முகம், முகத்தைஒத்தியாயின் ஒக்கவேண்டுமவையாகில்- (இதுபோல் யான்காணத்தோன்று) பலர்காணத்தோன்றல், பலர்காணத்தோன்றுதே- எ-று. ❋ தானே முகத்தினலமுழுதும் கண்டு அனுபவித்தானாகலால் இங்கேயும் பலர்காணத்தோன்றலை இழிவுபடுத்திச் சொல்லினான். பலர்காணத்தோன்றிலுமுனக்கு அம்முகத்தோடு ஒப்பு உண்டாகாதென்பதாம். (௯)

அனிச்சமு மன்னத்தின் றூவியு மாத .... *
ரடிக்கு நெருஞ்சிப் பழம். .... *

[இது- உடன்போக்குமென்னன் தோழிக்குத் தலைவன் அதனருமைசொல்லிச் செலவு மறுத்தது.]-இ-ள். (உலகத்தாரால் மென்மைக்கு எடுக்கப்பட்ட)- அனிச்சமும், அனிச்சமலரும்!- அன்னத்தின் றூவியும், அன்னப்பறவையினிறகும்!- மாதரடிக்கு, மாதர்களடிக்கு- நெருஞ்சிப்பழம், நெருஞ்சிப்பழம்போல் வருத்தஞ்செய்யும் எ-று. ❋ முள்வலிதாதலால்- பழமென்றார். இப்படிப்பட்ட அடிகள் கூர்ங்கல்லும் வெப்பமுமுள்ளபாலைவழியைப்படிக்கப்பாளென்பதுகுறிப்பாலேபெறப்பட்டது. செம்பொருளேயன்றிக்குறிப்புப்பொருளும் அடி நலனழியாமையாகலின் இதுவும் இவ்வதிகாரத்ததாயது.

௱௰௩-ஆ

ம்-அதி-காதற்சிறப்புரைத்தல்.

அஃதாவது தலைவன் தன்னுசைமிகுதியைச்சொல்லலும், தலைவிதன்னுசை மிகுதியைச்சொல்லலும், ஆம். இதுபுணர்ச்சியும்நலனும்பற்றி நிகழ்கின்றதாகலால். அவற்றினதிகாரங்களின்பின்வைக்கப்பட்டது.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி... ....
வாலெயி றூறிய நீர் ....

*

*
[இது- தலைவன் இயற்கைப் புணர்ச்சிமுடிவிலே தன்னயப்பை அறிவித்தது.]- இ-ள். பணிமொழி, இம்மெல்லியசொல்லையுடையவளது- வாலெயிறூறியநீர், வெண்பல்லிலூறியநீரானது!- பாலொடு

---

*உடன்போக்கு தலைவன்விட்டார அறியாமல் தலைவனுடன் செல்லுதல்.

(௬௫௩)

௱௰௩-ஆம்-அதி-காதற்சிறப்புரைத்தல்.

தேன்கலந்தற்றே, பாலுடனே தேனைக்கலந்த கலவைப்போலும்- எ-று. * பாலொடு தேனென்றதனுல்- அதன்சுவைபோலுஞ் சுவையுடைத்தென்பதாயிற்று. வேறுவேறாகிய சுவையையுடைய பாலும் தேனும் கலந்தவிடத்து அக்கலவை இன்னதென்று அறியக்கூடாத இனியசுவையையுடையதாமாகலால்- அச்சுவை நீர்க்கும்அடைவிக்க.] (௧)

உடம்போ டுயிரிடை யென்ன மற்றன்ன .... *
மடந்தையோ டெம்மிடை நட்பு .... *

[இது- தலைவன் பிரிவிலுண்டாகிய அச்சத்தைச்சொல்லியது.]

இ-ள், மடந்தையோடெம்மிடை, இம்மாதோடு எம்மிடத்து உண்டாகிய- நட்பு' நட்புக்கள்- உடம்போடுயிரிடை, உடம்போடு உயிரிடத்து- என்ன, எப்படிப்பட்டவை!- அன்ன, அப்படிப்பட்டவையாகும். எ-று. ❁

எப்படிப்பட்டவையெனப் பன்மையாற் சொல்லியது. இருவகைநட்புக்களும் ஆதிதொடங்கி வேறுபாடில்லாமல் கலந்துவருதல் இன்பத்துன்பங்களை ஒக்க அனுபவித்தல். அவசியம் வேண்டுதல் என்றிவைகளைநோக்கி- ஊழினாலே கூட்டப்பட்டபுணர்ச்சியாகலால் அப்பொழுது புணர்ச்சியில்லாதிருந்தவள் பின்னை உடையாளாமென்றே ஆகியவிடத்தே இவன் எவனோவென்றும், என்னிடத்தே அன்புடையனோவென்றும், பின்னும் இவளைக் கலத்தல் கூடுமோவென்றும் அவளுள்ளத்தேதோன்றும் அவைகுறிப்பால் அறிந்து அவை தீரச்சொல்லியபடி. மற்று- அசை. (உ)

கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந் ....*
திருநுதற் கில்லை யிடம் ....*

[இது- இடந்தலைப்பாட்டின்கண் தலைவி நீங்கும்போது தலைவன் சொல்லியது.] இ-ள். கருமணியிற்பாவாய், (என்கண்ணிற்) கருமணியிலிருக்கின்றபாவையே- நீ, நீ- போதாய், (அவ்விடம்விட்டுப் போவாயாக- (போகாதிருப்பாயாகில்) யாம்வீழும், எம்மால் விரும்பப்படுகின்ற- திருநுதற்கு, அழகிய நெற்றியை யுடையவளுக்கு- இடம், இடம்- இல்லை, இல்லை. எ-று.❋நான் காணமல் இருக்கமாட்டாமையால் இவள் புறத்துப்போந் தன்மையளல்லாமல் என்கண்ணுள் இருக்குந்தன்மையள் இருக்கும்போது உன்னோடு கூடியிருக்க இடம் போதாமையால் உன்னினுஞ் சிறந்தஇவளுக்கு அவ்விடத்தைக்கொடுத்து நீ போய்விடுவாயாகவென்பதாம்.] (௩)

வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத ....*
லதற்கன்ன ணீங்கு மிடத்து
............*

௱௰௩-ஆம், அதி-காதற் சிறப்புரைத்தல். (சருள)

[இது- பகற்குறியிலே புணர்ந்து நீங்குந் தலைவன் சொல்லியது.]

இ-ள். (எனக்கு) ஆயிழை, ஆராய்ந்து கொள்ளப்பட்ட ஆபரணத்தையுடையவள்!- (புணருமிடத்து) உயிர்க்கு, உயிருக்கு- வாழ்தலன்னள், (உடம்போடுகூடி) வாழ்தல்போலாகின்றாள்- நீங்குமிடத்து, பிரியுமிடத்து- அதற்கு, அவ்வுயிர்க்கு- சாதலன்னள், அவ்வுடம்பினீங்கிப்போதல்போலாகின்றாள். எ-று. ❄ எனக்கென்பதும், புணருமிடத்தென்பதும், அவாய்நிலையால்வந்தன. வாழுங்காலத்து வேறுபாடில்லாமல்வழிநிற்றலானும், சாங்காலத்து வருத்தஞ் செய்தலானும் அவைகளை அவள்புணர்வுபிரிவுகளுக்கு உவமையாக்கினான். (௪)

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே ……… ❋
ஒள்ளமர்க் கண்ணாள் குணம் …… ❋

[இது- ✿ஒருவழித் தணந்துவந்தபோது எம்மைநினைத்துமறிவீரோவென்ற தோழிக்குத் தலைவன்சொல்லியது.] இ-ள். யான், நான்!- ஒள்ளமர்க்கண்ணாள்குணம், ஒளியினவாகிப் போர்செய்கிற கண்களையுடையவளது குணங்களை- மறப்பின், மறந்தேனாயின்- உள்ளுவன், நினைப்பேன்- மறப்பறியேன், (ஒருபோதும்) மறத்தலறியேன். [ஆகலால் நினைத்தலுமறியேன்] எ-று. ❄ நினைத்தலு மறியேனென்னும் பொருள்கொள்ள நிற்கையால் மன்ஒழியிசையில்வந்தது. இதுவரைக்கும் தலைவன்சொல்லியது பின் தலைவிசொல்வது.] (௫)

கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார் .... *
நுண்ணிய ரெங்காத லவர் .... *

[இது- ஒருவழித்தணத்தலில் தலைவனைத் தோழி இயற்பழிப்பா ளென்று அஞ்சி அவள்கேட்கத் தலைவி தன்னுள்ளே சொல்லியது.] இ-ள். (தாம் காணாமைப்பற்றித் தூரத்திலே போயினரென்று நினைப்பவர் நினைக்கக்கடவர்.) எங்காதலவர், எம்முடைய தலைவர்!-கண்ணுள்ளில், (எமதுகண்ணுள்ளே நின்றும்) போகார், போகார்-இமைப்பின், (அறியாமல்) இமைத்தோமாயின்-பருவரார், (அதனால்) வருந்துவது ஞ்செய்யார்- (ஆதலாலே) நுண்ணியர், (காணப்படாத) நுண்ணியர். எ-று. ✲ இடைவிடாத நினைவின்முதிர்ச்சியால்எப்போதும்முன்னே தோன்றலால் கண்ணுள்ளிற்போகாரென்றும், இமைத்த போதும் அறுநிற்றலால்-இமைப்பிற் பருவராரென்றும், சொல்லினள். (ரு)

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு .... *
மெழுதேங் கரப்பாக் கறிந்து ..
.... *

✲ஒருவழி தணத்தல் தலைவன்யாதேனுமொருகாரியங்குறித்துப்பிரி [தல்.

[ருஅ]

(ர ருஅ)

ரயரு-ஆய்-அதி-காதற்சிறப்புரைத்தல்.

[இதுவுமது.] இ-ள். காதலவர், எம்மேலாசையுள்ள தலைவர்!-கண்ணுள்ளாராக, (எங்) கண்ணுள் இருக்கின்றாராகலால்- கண்ணுமெழுதேம், கண்ணினை (மையினால்)எழுதுவதுஞ்செய்யேம்-கரப்பாக்கறிந்து, (அவ்வளவுகாலமும் அவர்) மறைதலைஅறிந்து .எ-று.✲எம்மால்இடைவிடாமற் காணப்படுகின்றவரைப்பிரிந்தாரென்று நினைக்கும் விதம் என்னவென்பது குறிப்பெச்சம். (எ)

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டே...... .... *
லஞ்சுதும் வேபாக் கறிந்து .... *

[இதுவுமது.]இ-ள். காதலவர்,எமது தலைவர்-நெஞ்சத்தாராக,நெஞ்சுளிருக்கின்றாராதலால் (உணணும்போது) வெய்துண்டல்,சூடுள்ளதாக உண்ணுதற்கு- அஞ்சுதும்,அஞ்சாநின்றேம்-வேபாக்கறிந்து,(அவர் அதனாலே) சூடுறுதலை அறிந்து. எ-று. ❀ எப்பொழுதுமென்னெஞ்சி லிருக்கிறவனைப்பிரிந்தானென்று நினைக்கும் விதம் என்னென்பது குறிப்பெச்சம். (அ)

இமைப்பிற் கரப்பாக் கறிவ லனைத்திற்கே........ .... *
யேதில னென்னு மிவ்வூர்........ .... *

[இது-ஜ வரைவிடைவைத்துப் பொருள் வயிற்கட்பிரிந்த விடத்துத் தலைவி பொறுத்திறுத்தற் பொருட்டுத் தோழி தலைவனை இயற்பழித்தவிடத்தே அவள் இயற்படச்சொல்லியது.] இ-ள். இமைப்பின், (என்கண்) இமைக்குமாயின்- கரப்பாக்கறிவல்,(உள்ளிருக்கிறகாதலர்) மறைதலறிந்து இமையேன்- அனைத்திற்கே,அவ்வளவுக்கே-இவ்வூர், இவ்வூர்!-- ஏதிலனென்னும், (தூங்காதநோய்செய்தார்) அன்பிலனென்னும். எ-று. ❀ தன்கருத்தறியாமைபற்றிக்கோபித்துச்சொல்லலால் தோழியை வேறுபடுத்திஊரென்றாள். ஒருபோதும்பிரியாதவனைப்பிரிந்தானென்றுபழிக்குந்தன்மையையல்லையென்பதாம்.௯

உவந் துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவ .... *
ரேதில ரென்னு மிவ்வூர் .... *

[இதுவுமது.]இ-ள். (காதலர்!)உள்ளத்துள், மனதுள்- என்றும்,எப்பொழுதும்- உவந்து, மகிழ்ந்து- உறைவர்- வாசஞ்செய்யாநிற்பர்- (அதனையறியாமல்)-இவ்வூர், இவ்வூர் - இகந்துறைவர், பிரிந்திராநின்றார்- ஏதிலரென்னும், அன்பிலரென்று (அவரைச்) சொல்லுகின்றது. எ-று. ❀ உவந் துறைவரென்றதனால் அன்புடைமை கூறினு

ஜ வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல் கல்யாணத்துக்குப் பொருள் சம்பாதிக்கப்பிரிதல்.

ராயஉ-ஆம்-அதி-காதற்சிறப்புரைத்தல்.
(சருக)

ள். பிரியாமையும் அன்பும் உடையவரா
மையை யல்லையென்பதாம்.
இலமொன்றுபடழிக்குந் தன்

(ய)

ராயச-ஆ ம்-அதி-
நாணுத்துறவுரைத்தல்.

*
அஃதாவது- நாரப்படுத்தப்பட்டுப் பொருதவருகிய தலைவனும் அறத்தொடு நிற்பிக்கதிதொடங்கிய தலைவியும், தமது நாணமிழத் தலைச்சொல்லுதலாம் இது காதல்மிகுந்தவிடத்து காதற்சிறப்புரைத்தலின்பின்வைக்கப்பட்டது.

நிகழ்வதாகலால்

காம முழந்து வருந்தினார்க் கேம ....

.... *
மடலல்ல தில்லைவலி ....

.... *

[தூரப்படுத்தப்பட்டுப் பொறுதவனாகிய தலைவன் சொல்லியது. இ-ள். காமமுழந்து - (அரியமகளிரோடு) காமத்தை அனுபவித்து-(பின் அதுபெறுமல்)- வருந்தினர்க்கு, துன்பமடைந்த ஆடவர்க்கு-ஏமமடலல்லது,(முன்னும்) காப்பாய்வருகின்ற * மடன்மாவல்லது வலி, வலியது! இல்லை, (இனி எனக்கு) இல்லை. எ-று. ❁ ஏமமாதல், அத்துன்ப நீங்கும்வகை அவ்வனுபவத்தைக் கொடுத்தல். வலி, ஆகுபெயர். முன்னும் ஆடவராயினர் இன்பமடைந்து வருகிறவழியிருக்கவும் உன்னை அதற்குத் துணையென்று நினைத்து வினைக முயன்ற நான் இப்போது துணையல்லாமை அறிந்தேனாகலால் இனியாயினும் அவ்வழியால் அதனையடைவேனென்பது கருத்து. (க)

நோனா வுடம்பு முயிரு மடலேறு.......... .... *
நாணினை நீக்கி நிறுத்து................... ....*

[இது- நாணமுடைய உமக்கு மடன்மாவேறுகை முடியாதென்று அதனை விலக்கலுற்ற தோழிக்குத்தலைவன் சொல்லியது.] இ-ள் நோனா, (அவ்வருத்தத்தைப்) பொறுத - உடம்புமுயிரும், உடலும் உயிரும்-! மடலேறும், (அதற்குக்காப்பாகியமடன்மாவை)ஏறநினையாநின்றன. நாணினை, (அதனைவிலக்குவதாகிய)நாணத்தை- நீக்கிநிறுத்து, ஒழித்துவிட்டு. எ-று. ❁ அறிவுமுதலானவை முன்னே நீங்கவும் நாண நீங்காது நின்றது. அதுவும் இப்பொழுது நீங்கிற்றென்றற்கு, உடம்புமுயிருமென்றான். அவைதாம் தம்முள் நீங்காமையைப் பொருட்டு மடலேறுமென்றது, அவள் தன் பொறுமையறிந்து கடிதிலே உடன் படுதல்குறித்து. (உ)

* மடன்மா. பனைமடலாலே செய்யப்பட்ட குதிரை.

(சகஉ) ளயச-ஆம், அதி-
நாணுத்துறவுரைத்தல்.

நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்*
காமுற்றா ரேறுமடல் ... . *

[இது நாணமேயன்றி நல்லாண்மையும் உடைமையால் மடலேறுகை முடியாதென்ற தோழிக்குச்சொல்லியது.] இ-ள். நாணொடு நல்லாண்மை, நாணத்தையும் மிகுந்த ஆண்மையையுமே-பண்டு,முன்னே- உடையேன், உடையேன்- (அவைகாமத்தால் நீங்குதலால்)காமுற்றாரேறுமடல், காமமிகுந்தவரேறுமடலையே- இன்று,இப்போது- உடையேன், உடையேன். எ-று. ❈ நாண், இழிவானவை செய்யுமிடத்து விலக்குவது. ஆண்மை, ஒன்றுக்குந் தளராது நிற்றல். அவை முன்னுள்ளன. இன்றுள்ளது இதுவேயாகலால், கடிதிலே முடியுமென்றபடி. (ரு)

காமக் கடும்புன லுய்க்குமே நாணொடு
.... *
நல்லாண்மை யென்னும் புணை . ... *

[இது- நாணமும் நல்லாண்மையும் காமவெள்ளத்திற்குப்புணையாதலால் அதனால் அவைநீங்குவன வல்லவென்றதோழிக்குத் தலைவன் சொல்லியது] இ-ள். (நான் தன்னைக்கடத்தற்குக்கொண்ட) நாணொடு நல்லாண்மை யென்னும்புணை, நாணமும் நல்லாண்மையும் ஆகிய புணைகளையே- காமக்கடும்புனல்,காமமாகியகடிய வெள்ளமானது!-உய்க்குமே, (என்னிற்பிரித்துக்) கொண்டுபோகின்றது. எ-று. ❈அவை செய்யமாட்டாத மற்றை நீரினீக்குதற்கு, கடும்புனலென்றான். இந்நீர்க்கு அவைபுணையாகா அதனால் அவை நீங்குமென்பதாம். (சு)

தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு ...... ,...... *
மாலை யுழக்குந் துயர் .. .. *

[இது இப்பொறுக்கமாட்டாமையும்- மடலும்-உமக்கு எப்படி வந்தனவென்ற தோழிக்குத்தலைவன்சொல்லியது.] இ-ள். மாலையுழக்குந்துயர் - மாலைக்காலத்து அனுபவிக்குந் துன்பத்தையும் - மடலொடு, அதற்கு மருந்தாகிய)மடன்மாவையும்ஐ- (முன்அறியேன்) தொடலைக்குறுந்தொடி, மாலைபோல் தொடர்ந்தசிறிய வளையலை யுடையவள்! தந்தாள், (இப்பொழுது எனக்குத் தந்தாள். எ-று. ❋காமம், மற்றைப்பொழுதுகளிலும் உண்டாயினும் மாலையிலே மலர்தலால், மாலையுழக்குந்துயரொன்றும் - மடலும் அதுபற்றிவந்த தாகலால் அவ்விரிவும் அவளாலே தரப்பட்டவென்றும் - அவள்தான் நீ சொல்லியதே சொல்லுகிற இளமையளென்பது தோன்ற, தொடலைக் குறுந் தொடியென்றும், சொன்னான். இவை அவள் தந்தவையாகலால் உன்றால் நீங்குமென்பது கருத்து. (ங)

ருயச-ஆம், அதி-

நாணுத்துறவுரைத்தல். (சகுக)

மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற .... *
படலொல்லா பேதைக்கென் கண்..... .... *

[இது, மடலூரும்பொழுது இன்றைக்கும் கழிந்ததென்றதோழிக்குத்தலைவன் சொல்லியது.] இ-ள். பேதைக்கு, (உன்மாது காரணமாக) என்கண், எனது கண்கள்! படலொல்லா, (ஒருபோதும்) தூங்குதல் பொருந்தாவாம். (அதனால்) யாமத்தும், (எல்லாரும் தூங்குகிற) பாதியிரவிலும்- மன்றமடலூர்தல், மடல்மாவேறலையே- உள்ளுவேன், நினைப்பேன். எ-று. ❁ பேதையென்றது, மடமைபற்றி. இனிக்குறைமுடிப்பது நாளையெனல் வேண்டாவென்பதாம்.] (௬)

ஆடலன்ன காம முழந்து மடலேறுப் .... *
பெண்ணிற் பெருந்தக்க தில் .... *

[இது, முன்பாட்டிலே பேதையென்றது பற்றி அறிவில்லாதமகளிரினும் அறிவுடைய ஆடவரன்றே பொறுக்கத்தக்கவரென்ற தோழிக்குத் தலைவன்சொல்லியது.] இ-ள். கடலன்னகாமமுழந்தும், கடல்போற் கரையற்ற காமநோயை அனுபவித்தும்- மடலேறு, மடன்மாவேறுமல் (பொறுத்திருக்கிற) பெண்ணின், பெண் (பிறப்புப்) போல்- பெருந்தக்கது, மிகுந்த தகுதியையுடையபிறப்பு! இல்-(உலகத்தில்) இல்லை. எ-று. ❁ பிறப்புவிசேடத்தால் அவ்வடக்கம் எனக்கு இல்லையாகின்றது. நீ அதை அறிகின்றிலை யென்பதாம். இதுவரைக்குந் தலைவன் சொல்லியது. பின்னே தலைவிசொல்வது. (௭)

நிறையரியர் மன்னளிய ரென்னாது காம .. .. *
மறையிறந்து மன்று படும் ... . *

[இது, காப்புச்சிறை அதிகப்பட்டுக் காமம்பெருகியபோது தலைவிசொல்லியது.] இ-ள். (இவர்) நிறையரிய (வொன்றாது) நிறையால் (நாம்மேற்கொள்ளுதற்கு) அரியவொன்று அஞ்சாமலும்- மன்னளிய வொன்றாது, மிகவும் அளிக்கத்தக்கவொன்று இரங்காமலும்- காமம், (மகளிரது) காமமும்- மறைபிறந்து, (அவர்) மறைத்தலைக்கடந்து- மன்றுபடும், சபையிடத்து வெளிப்படுவதாயிருந்தது எ-று. ❋ என்றுதென்பது மூன்றுங்கூட்டி, மகளிரென்பது வருவிக்கப்பட்டது. இங்கே மன்றென்றது, தந்தைமுதலாகிய தன்குடும்பத்தார் கூட்டத்தை. உலகத்துப் பெண்களது காமத்தியல்பு சொல்லுவாள்போல் தன்காமம் பெருகியபடிசொல்லி இனி அறத்தொடுநிற்றல் வேண்டுமென்பது குறிப்பித்தபடியாயிற்று.] (அ)

(சகஉ) ரயகச-ஆம்,அதி-
நாணுத்துறவுரைத்தல்.

அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காம.......... .... ❋
மறுகின் மறுகு மருண்டு - .... ❋

[இதுவுமது.] இ-ள். (நான்முன் அடங்கியிருக்கையால்) எல்லாரும், யாவரும்- அறிகிலாரென்று, (என்னை) அறிந்திலர்- (இனி அப்படி அடங்கியிராமல் நானேவெளிப்பட்டு அறிவிப்பே)னென்று நினைத்து- என்காமம், எனதுகாமமானது! மறுகில்,) இவ்வூர்வீதியில்- மருண்டு, மயங்கி- மறுகும்,சுழல்கின்றது. எ-று.❋ மயங்குதல் ❋அம்பலாதல். மறுகுதல் ❋ அலராதல் இவ்விரண்டுமாயிற்று. இனிஅறத்தொடு நிற்றல்வேண்டுமென்பதாம். (க)

யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்........ ....❋
யாம்பட்ட தாம்படா வாறு .. ..

...., .. ✱

[இது- ✱ செவிலிக்கு அறத்தொடு நின்றுவைத்து நான் நிற்கும் விதம் என்னென்று நகைசெய்ததோழியோடு புலந்துதலைவிதன்னுள்ளே சொல்லியது.] இ-ள். யாம், நாம்- கண்ணிற்காண, (கேட்கும்படியுமன்றிக்) கண்ணுற்காணும்படி-அறிவில்லார், புத்தியிலலாதவர்! நகுப,(எம்மைச்)சிரிக்கின்றார்.(அவர் அப்படிச்செய்கின்றது) யாம்பட்ட, யாம்அடைந்தநோய்களை-தாம்படாவாறு,தாம்அடையாமையால். எ-று.✱கண்ணினென்றது,முன்கண்டறியாமையுணரநின்றது அறத்தொடுநின்றமை யறியாமல் மணஞ்செயுமாட்சிமைப் படுகின்றிலளென்று பிணங்குகின்றாளாகலால், அயலாளாக்கிச் சொல்லினாள்.

௱௰௫-ஆ

ம்-அதி-அலரறிவுறுத்தல்.

அஃதாவது - களவொழுக்கம் வேண்டிய தலைவன் பிறர்சொல்லுகின்ற அலர்தனக்குஆகின்றவிதத்தைத்தோழிக்கு அறிவித்தலும், மணமாக உடன்போக்காக ஒன்று வேண்டியதலைவியும் தோழியும் அவ்வலரை அவனுக்கு அறிவுறுத்தலும், ஆம். இது நாணுத்துறந்த வழி நிகழ்வதாகலால் அதன்பின் வைக்கப்பட்டது.

✱ அம்பல்-சிலரறிந்து தம்மிற்பேசல். ✱அலர் - பலரறிந்துதூற்றல்

✱ அறத்தொடு நிற்றல் காமத்தைவெளிப்படுத்தல்.

✱ செவிலி- வளர்த்ததாய்.

ஈ௱௯௩-ஆம்-அதி-அலரறிவுறுத்தல்.

(௲௱௩)

அலரொழ வாருயிர் நிற்கு மதனைப் .... ✻
பலரறியார் பாக்கியத் தால்... ✻

[இது - இரவுக்குறி தப்பிப்போய் மறுநாள்வந்த தலைவனை அலர் கூறி மணம்வினவியவிடத்துத் தோழிக்குத் தலைவன் சொல்லியது. இ-ள். அலரொழ, (உன்மாதுக்கும் எமக்கும்உண்டாகிய நட்பு) அலரொழ, (இவ்வூரில்) அலராயெழுதலால்- ஆருயிர், (அவளைப்பெறாது வருந்துகிற என்) னரியவுயிரானது! நிற்கும், (அவளைப் பெற்றது போல்) நிலைபெறும். அதனை, அந்நிலைபேற்றை- பாக்கியத்தால்,நல்லூழால்- (நானே அறிவதல்லது) பலர், (தூற்றுகின்ற)பலரும்! அறியார், தெரியார். எ- று. ✻ இரவுக்குறிதப்பித் தலைவியை அடையப் பெறாத வருத்தமெல்லாம் தோன்ற, ஆருயிரொன்றும்-அப்படி அரியவளை எளியவளாக்கி எடுக்கின்றமையால் அது அவ்வாருயிர்க்குப் பற்றுக்கோடாய் நிற்கின்றதென்றதற்கு, அலரொழவாருயிர் நிற்குமென்றும், பற்றுக்கோடாதலை அவ்வயலார். அறிந்தால் தூற்றுதொழிவர் ஒழியவே ஆருயிர்போ மாகலால் அவரறியாதிருக்கிறது,பாக்கியத்தாலென்றும்- சொல்லினான். பலருமென்கிற முற்றும்மைவிகாரத்தால்தொக்கது. (௧)

மலரன்ன கண்ணு ளருமை யறியா .... *
தலரொடிக் கீந்ததிவ் வூர் .... *

[இதுவுமது.] இ-ள், மலரன்ன கண்ணாள். மலர்போலுங் கண்களையுடையவளது- அருமை, (அடைதற் கருமையை)-அறியாது, தெரியாது- இவ்வூர்!-(அவளை எளியவளாக்கி) அலர்,இந்தவூரானது (அவளோடு)அலர்கூறலை- எமக்கு, எமக்கு ஈந்தது, உபகரித்தது. எ-று.※அருமை-குறியிழைத்தலாலும்,இடையீடுகளாலும்,ஆகியது ஈந்ததென்றான் அதற்குச் சார்பாகலால். அலர்தூற்றுவாரை அவர் செய்தஉதவிபற்றி இவ்வூரென்றான்.] (௨)

உறுவதோ வூரறிந்த கௌவை யதனைப் .... *
பெறாஅது பெற்றன்ன நீர்த்து .... *

[இதுவுமது.]ஊரறிந்தகௌவை,(எங்களுக்குப் புணர்ச்சி உண்டாயிருக்கையை) இவ்வூர் அறிதலால் விளைந்த அலரானது!- உறுவதோ, எனக்கு உறுவதொன்றன்றோ-(அதுகேட்டஎன்மனமானது) பெறாஅது, (புணர்ச்சியைப்) பெறாதிருந்தே- பெற்றன்னநீர்த்து, பெற்றதுபோலுங்குணமுடைத்து. (ஆகலால்) எ-று,※பெற்றன்ன நீர்மை- பெற்றவழிஉண்டாகிற இன்பம்போலு மின்பமுடைமை-நீர்த்தென்பதற்கு ஏற்கமனம் வருவிக்கப்பட்டது. (௩)

(௱௪௪) ஙயடு-ஆம்,

அதி-அலரறிவுறுத்தல்.

கௌவையாற் கௌவிது காம
மதுவின்றேற் ....*
றவ்வென்னுந் தன்மை யிழந்து .....

.. .. *

[இதுவுமது] இ-ள். காமம்- (என்)காமம்!- கௌவையால்- (இவ்வூர்) எடுக்கின்ற அலரால் கௌவிது-அலர்தலை யுடைத்தாயிற்று- அதுவின்றேல். அவ்வலர் இல்லையாயின், தன்மையிழந்து தனது தன்மையிழந்து தவ்வென்னும் சுருங்கிப்போகு. எ-று, ❊ அலர்தல்-மேலுமேலு மிகுதல்.- தன்மை-இன்பந்தருதல்- தவ்வென்னுமென்றது குறிப்புமொழி. (ஏ)

களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம் .... *
வெளிப்படுந் தோறு மினிது ... . *

[இதுவுமது.] இ-ள். (கள்ளுண்பார்க்கு)- களித்தொறும், களிக்குந்தோறும்- கள்ளுண்டல், கள்ளுண்டல்- வேட்டற்று, இனிதாம் விதம்போல்- (எனக்கு)- காமம், காமமானது!- வெளிப்படுந்தோறும், அலாந்தோறும்- இனிது, இனிதாகாநின்றது- எ-று. ❊ வேட்கப்பட்டதற்றெலென்பது- வேட்டற்றலெனநின்றது. வேட்கை மிகுதியால் அலரும் இன்பம்செய்கிறதென்பதாம். (௯)

கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந் .. .. *
திங்களைப் பாம்புகொண டற்று . ... *

இது- இடையீடுகளாலும், இரவுக்குறிதப்பலாலும், தலைவனைக்கூடப் பெறுததலைவி அவன் * சிறைப்புறத்தானுசத் தோழிக்குச்சொல்லுவாளாய் அலரை அறிவித்து மணஞ்செயல் விரும்வியது.] இ-ள். கண்டது, (தலைவனை நான்)காணப்பெற்றது - ஒருநாள், ஒருநாளேயாகும்- அலர், (அதனாலுண்டாகிய)அலரானது!- (அவ்வளவினதன்றி) -திங்களைப் பாம்புகொண்டற்று, சந்திரனைப் பாம்புகொண்டஅலர்போல் உலகெங்கும் பரந்தது. எ-று. ❊ அலராகியகாரியத்தைக் கா

ரணமாக உபசரித்து, பாம்புகொண்டற்றென்றாள்.- பூமிநிழல்பாம்பெனப்பட்டது. இராகுவென்னும் வடநூல் வழக்குப்பற்றி. அதுசந்திரனைமறைத்தல், கணிதசித்தாந்தங்களிலேகாண்க.-இருவழியும் மன்னும் உம்மும் அசைநிலைகள் - காட்சியின்றியும்அலர்பரக்கின்றஇவ்வொழுக்கம் இனியாகாது மணஞ்செய்து, கொள்ளுதல வேண்டுமென்பதாம். (கூ)

ஊரவர்கௌவை பெருவாகவன்னைசொன் .... *
னீராகநீளுழிந்நோய் .... *
[இது-மணஞ்செயல் நீளப்பொறாத தலைவியைத் தலைவன்சிறைப்

* சிறைப்புறம் தலைவியைக்காவல்செய்தவிடத்தின்புறம்.

௱௪௫-ஆம், அதி-அலரறிவுறுத்தல்.

(௬௬௫)

புறத்தானாதலறிந்த தோழிஊரவரலரையும். தாய்சொல்லையும் நோக்கி நீபொறுத்தல் வேண்டுமெனச் சொல்லெழுப்பியவிடத்து அவள் சொல்லியது,]இ-ள். இந்நோய், இக்காமநோயாகிய (பயிர்!) ஊரவர்கௌவை- இவ்வூரிலுள்ள மகளிர் எடுக்கின்ற அலரானது - எருவாக,எருவாக-அன்னைசொல், (அதுகேட்டுக்கோபித்துத்)தாய்சொல்லுகின்ற கடுஞ்சொல்லானது- நீராக, தண்ணீராக-நீளும், வளராநின்றது. எ-று. ❋ ஊரவரென்பது, தொழிலால் ஆணொழித்து நின்றது. [ஏகதேசவுருவகம்.] சுருங்குதற்கு ஏதுவாகின்றவை தாமேவிரிதற்கு ஏதுவாகின்றன வென்பதாம். மணஞ்செய்வோனாதல் பயன். (எ)

நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற் .. *
காம நுதுப்பே மெனல்...... .... *

[இதுவுமஃது.]இ-ள். கௌவையால், (அயலவர் எடுக்கின்ற)அலரா லுண்டாகின்ற - காமம், காமத்தை - நுதுப்பேமெனல், அவிப்பே மென்று நினைத்தல்! நெய்யால்,நெய்யினாலே-எரி, நெருப்பை-நுது ப்பேமென்றற்று, அவிப்பேமென்று நினைத்தலோடொக்கும்.எ-று. ❁ காமம் வளர்தற்குக்காரணமாகிய அலரால்அதைஅவித்தல்கூடா தென்பதாம். (அ)

அலர்நாண வொல்வதோ வஞ்சலோம் பென்றார் ....
பலர்நாண நீத்தக் கடை ....

*

*

[இது-மணஞ்செயற்குப்பொருள் சம்பாதிக்கத் தலைவன் பிரிந்த போது பொறுதவளாகியதலைவிஅவன்வந்துசிறைப்புறத்தானாதலறி ந்து அலரஞ்சிப்பொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லி யது.] இ-ள். (தம்மைக்கண்டநாளில்) அஞ்சலோம்பென்றார், (உன் னைவிட்டு நீங்கேன்) அஞ்சுதலொழியென்றவரோ-பலர்நாண, (இன்று கண்டவர் பலரும் நாணும்வகை- நீத்தக்கடை, (நம்மைவிட்டு) நீங்கி யபின்- அலா, (அயலவர் தூற்றுகிற) அலருக்கு-நாணவொல்வதோ, (நாம்) நாணக்கூடுமோ. எ-று.❁கண்டார் நாணுகிறநிலைமையேமா கிய நாம் நாணுதல் எவ்விடத்த தென்பதாம். (கூ)

தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டுங் .... *
கௌவை யெடுக்கு மிவ்வூர் ... . *

[இது- தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைவிக்குச் சொல் வாளாய் அலரறிவித்து அவனுடன்போதற்கு ஆசைகொள்ளச்சொ ல்லியது.] இ-ள். யாம், நாம்-வேண்டுங் கௌவை, (உடன்போதற்கு க் காரணமாதல் பற்றி முன்னமே)இச்சிப்பதாகிய அலரை-இவ்வூர்

இந்தவூர்! எடுக்கும், (தானே) எடுக்கின்றது.
காதலர், (இனித்) தலைவர்
வேண்டின், (நாம்) வேண்டினால்- தாம், தாமும்- நல்குவர், அதற்கு
உடன்படுவர். (ஆதலால்இவ்வலர்நமக்குநன்றாய்வந்தது)எ-று. ❋உம்
மை வருவிக்கப்பட்டது. நம்மிடத்து ஆசையுடைமையால் மறுமொ
ன்பதுதோன்ற, காதலனென்றாள். (ம)

களவியல் முற்றிற்று.

கற்பியல்.

இனிக்கற்புப் பதினெட்டதிகாரத்தாலே சொல்லத்தொடங்கி முதலி
லே பிரிவாற்றாமை சொல்லுகின்றார். (உ-ம்) இறையனாரகப்பொரு
ள், கற்பினுட்பிறவே கடிவரையின்றே, ஓதல்காவல் பகைதணிவினை
யே-வேந்தர்க்குற்றுழிப்பொருட்பிணிபரத்தையென்-றாங்கவ்வாறே
யவ்வயிற்பிரிவே. தொல்காப்பியம்- கற்பெனப்படுவது கரணமொடு
புணரக்- கொளற்குரிமரபிற் கிழவன்கிழத்தியைக் - கொடைக்குரி
மரபினோர் கொடுப்பக்கொள்வதுவே.அகப்பொருள்விளக்கம்-பொ
ற்பமைசிறப்பிற் கற்பெனப்படுவது- மகிழ்வுமூடலு மூடலுணர்த்த
லும்-பிரிவும்பிறவுமருவியதாகும்.

ஈயசு-ஆம். அதி. பிரிவாற்றாமை

அஃதாவது-மணம் செய்துகொண்டபின்
தலைவன் அறம்பொரு

ருளின்பங்களின் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து தூரத்திலு
ம், அவ்விடத்திலும், செல்லுநாளில் அப்பிரிவை அவள் பொ
றுக்க மாட்டாதவளாந் தன்மையாம். அது இங்கேபிரிவைஅறி
வித்த தலைவனுக்குத் தோழிசொல்லலும், தோழிக்குத் தலைவி
அவன்குறிப்பால் அறிந்துசொல்லலும், பிரிவை அறிவித்தவிட
த்துச் சொல்லலும், பிரிந்தவிடத்து
ஆற்றுவிக்குமிடத்துத்தோ
ழிக்குச் சொல்லலும், எனநால்வகையாலே
சொல்லப்படும்.

செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்

.... *

வல்வரவு வாழ்வார்க் குரை ....

...., ... *

[இது-பிரிந்துகடிதில் வருவேனென்ற
தலைவனுக்குத்தோழிசொல்லியது.] இ-ள்.
செல்லாமையுண்டேல், (நீஎம்மைப்) பிரியாமைஉண்
டாயின், எனக்கு, எனக்கு- உரை, (அதனைச்)
சொல்லு. மற்று அது நீங்க- நின்வல்வரவு,
(பிரிந்துபோய்) நின்விரைந்துவருதலை-வாழ்வா
ரயக்கு-ஆம், அதி- பிரிவாற்றுமை.

(சகரு)

ர்க்கு, (அப்பொழுது) உயிர்வாழ்வார்க்கு- உரை, சொல்லு.எ-று.❁ தலைவியையொழித்து எனக்கென்றாள் தான் அவள் என்கிற வேற்றுமையில்லாமையால். நீ பிரிந்திருக்குங்காலமெல்லாம் பொறுத்திருந்து அவ்வரவுகாணும் வலிமையுடையளல்லள் பிரிந்தபொழுதே இறந்துபடுவளென்பதாம். அழுங்குவித்தல்,பயன். (க)

இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும் .... ❋
புன்க ணுடைத்தாற் புணர்வு ... . ❋

[இது - தலைவனது பிரிவைக் குறிப்பால் அறிந்த தலைவி தோழிக்குச்சொல்லியது.] இ-ள். (தழைபுமாலையுங் கொண்டுபின் னின்றநாளில்) அவர்பார்வல், அவரது பார்வைமாத்திரமும்! (புணர்ச்சிக்குறித்தமையால்) இன்கணுடைத்து, (நமக்கு) இன்பமுடைத்தாயிருந்தது. (இன்று அப்புணர்ச்சிதான் நடந்துகொண்டிருக்கவும்) புணர்வு, அப்புணர்ச்சி. பிரிவஞ்சும், பிரிவொன்றஞ்சுகிற - புன்கண், அச்சத்தினை- உடைத்து, உடைத்தாயிற்று. (அவரன்பினிலைமைஇது) எ-று. ❁ ஆல், அசை. பார்வலென்றவதனாலே, புணர்ச்சிபெறாமல்தலைவன் பின்னின்றகாலம் பெறப்பட்டது. புன்கண், துன்பம். அது காரணத்தின்மே லாயிற்று. அவ்வச்சத்தினை புடைத்தாதலாவது, புணரும்போது தன்னை மிகப்புகழ்தலானும்- அணிதிருத்தலானும், தலைவன் பிரிதற் குறிப்புக் காட்டி அச்சஞ்செய்த லுடைமை. அழுங்குவித்தல்பயன். (உ)

அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்............... ❋
பிரிவோ ரிடத்துண்மை யான் .... ❋

[இதுவுமது.] இ-ள். அறிவுடையார்கண்ணும், (பிரியேனென்றதஞ்சொல்லையும்- நம்பிரிவு பொறாமையையும்) அறிதலுடையவராகிய காதலரிடத்தும் - ஓரிடத்து, ஒரோவழி- பிரிவு, பிரிவானது! உண்மையான், உணடாதலால் - தேற்றம், (அவர்சொல்லும் தலையளியும் பற்றி நம்மேல் அன்புடையரென்றுதெளியுந்) தெளிவு! அரிது,அரிதாயிருந்தது. எ-று. ❁ அரோ, அசைநிலை. உம்மை,உயர்வு சிறப்பு,

அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற் .... *
றேறியார்க் குண்டோ தவறு ...., ... *

[இதுவுமது.] இ-ள். அளித்து,(எதிர்ப்பட்டநாளே)தலையளிசெய்து- அஞ்சலென்றவர், (உன்னைவிட்டுப்பிரியேன்) அஞ்சாதிருவென்றவர்தாமே - நீப்பின், (பின்னே) பிரிவாராயின் - (அவர்க்கல்லாமல்) தெளித்தசொல், (அவரால்) தெளிவிக்கப்பட்டசொல்லை-தேறியார்க்(கு,மெய்யென்று) தெளிந்தவர்க்கு-தவறு, குற்றம்! உண்டோ,உண்

டாகுமோ. எ-று.❆ தேறியாரென்றது, தன்னைப் பிறர்போற் சொல்லியது. சொல்லும் செயலும் ஒத்திராமைக்குற்றம் அவர்க்குஉண்டாம் அது உண்டாகாதபடி அழுங்கச்செய்யென்பது கருத்து. (௪)

ஓம்பி னமைத்தார் பிரிவோம்பன் மற்றவர் .... *
நீங்கி னரிதாற் புணர்வு .. .. *

[இதுவுமது.] இ-ள். ஓம்பின், (என்னுயிரைச்செல்லாமற்) காப்பாற்றுவையாயின்- அமைத்தார், (அதனை ஆளுதற்கு) அமைந்தவரது- பிரிவு, செலவை- ஓம்பல், அழுங்குவிப்பாயாக. மற்று, அழுங்குவிப்பாரில்லாமல்- அவர், அவர்- நீங்கின், செல்வாராயின்- (அவரால் ஆளப்பட்ட உயிரும்செல்லுமாதலால்- புணர்வு-(பின்பு அவரைக்) கூடுதல்! அரிது, (எனக்கு) அரிதாம். எ-று. ❋ ஆல், அசை- ஆளுதற்கமைதல், தலைவராதற்கு ஊழால் ஏற்புடையராதல். (௫)

பிரிவுரைக்கும் வன்கண்ண ராயி னரிதவர் .... *
நல்குவ ரென்னு நசை ... ... *

[இது- தலைவன் பிரிவை அறிவித்தவாறுவந்து சொல்லிய தோழிக்குத்தலைவிசொல்லியது.] இ-ள். அவர், (நமதுபிரிவு பொறுமையறிந்த) அத்தலைவர்தாமே, (நம்முன்னின்றும்) பிரிவுரைக்கும், (தம் பிரிவை அறிவிக்கும்- வன்கண்ணராயின், அருளில்லாமையையுடையராயின் -(அத்தன்மைய ரானபின்பு) நல்குவரென்னுநசை, (நம் பொறுமையை அறிந்துவந்து) தலையளிசெய்வாரென்னுமாசை! அரிது, விடப்படும். எ- று. ❋ அருமை, பயன்படுதலில்லாமை. கூடியிருந்தே அன்பில்லாமற் பிரிவெண்ணுதலும்- அறிவித்தலும்,வல்லராயினர், பிரிந்துபோய் அன்புடையராகி நம்மை நினைந்துவந்து அளித்தல் எவ்விடத்ததென்பதாம். அழுங்குவித்தல்பயன். (௬)

துறைவன் றுறந்தமை தூற்றுகொன் முன்கை ... ... *
யிறையிறவா நின்ற வளை .. .. *

[இதுவுமது.] இ-ள். துறைவன்,நெய்தநிலத்தலைவன்-துறந்தமை (என்னைப்) பிரியலுற்றமையை- (அவன் அறிவிக்காமல்தாமேஅறிந்து)முன்கையிறை,(என்)முன்கையிறையினின்றும்-இறவாநின்றவளை, கழலாநின்றவளையல்கள்! தூற்றுகொல்,(எனக்கு)அறிவியாவோ. [அவன் அறிவிக்க அறிந்துவந்து நீஅறிவித்தல்வேண்டுமோ.]எ-று. ※ முன்னே நிகழ்ந்தமையால், துறந்தமையென்றும் - கேட்டவளவில் மெலிந்துபொருமையால் இறவாநின்றவென்றும் - சொல்லினள் அழுங்குவித்து அதுவந்து சொல்லுந்தன்மையையல்லாதநீயும்இவ்வளை செய்தனவேசெய்தாயென்று பிணங்கிச்சொல்லியபடி. (எ)

ளஎஅ-ஆம்-அதி-பிரிவாற்றுமை.

(சஎஅ)

இன்னு தினனில்லூர் வாழ்த லதனினு ... ... *
பின்னு தினியார்ப் பிரிவு ... ... *

[இதுவுமது.]இ-ள். இனனில்லூர், (மகளிர்க்குத் தங்குறிப்பறிகிற தோழியரில்லாத வேற்றூரினிடத்து- வாழ்தல், வாழுதல்!-இன்னது, துன்பஞ்செய்வதாகும்-(அதன்மேலும்)இனியார்ப்பிரிவு-(தங்)காதலரைப்பிரிதல்!- அதனினும், அவ்வாழ்தலைக்காட்டிலும்- இன்னது, துன்பஞ்செய்வதாகும்- எ-று.※ தலைவன்செல்லுதலை அழுங்குவித்துவாராது உடன்பட்டு வந்தமைபற்றிப் பிணங்குகின்றாளாகலால்-இனனில்லூரொன்றுள்.உலகநடைசொல்லுகின்றாள்போல் தனக்கு அவ்வாழ்வும் பிரிவும் உண்டாயிருக்கை சொல்லியபடி, (அ)

தொடிற்சுடி னல்லது காமநோய் போல............ *
விடிற்சுட லாற்றுமோ தீ .... *

[இது காமம் தீயேபோல் நின்றவிடத்தைச் சுடுமாதலால் நீபொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைவிசொல்லியது.] இ-ள். தீ, நெருப்பானது!- தொடின், (தன்னைத்) தொட்டால்- சுடில் (சுட)லல்லது, சுட்டாற்சுடலல்லது- காமநோய்போல, காமமாகிய நோயைப்போல- விடின், (தன்னை)விட்டுநீங்கினால்- சுடலாற்றுமோ, (தப்பாது)சுடல்வல்லதோ. எ-று. ❋சுடினென்றது-மந்திரமருந்துகளாலே தம்பிக்கப்படாதாயினென்றபடி. காமத்திற்கு அதுவும் இல்லையென்றற்கு- சும்மாசுடலென்றாள். நீங்கல்-அனுபவியாமை.சுடல்-முன்னும்கூட்டப்பட்டது. தீயினும் கொடியதனை நான்பொறுக்கும்விதம் என்னையென்பதாம். (௯)

அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப் .... *
பின்னிருந்து வாழ்வார் பலர் .... *

[இது தலைவியர் பலரும் பிரிவைப் பொறுத்திருப்பர் நீஅது செய்கின்றிலையென்ற தோழிக்குத் தலைவிசொல்லியது.] இ-ள். நீசொல்லுகின்றது ஒக்கும்.)அரிதாற்றி, பிரிவை அறிவித்த விடத்துஅதற்கு உடன்பட்டு-அல்லனோய்,(பிரியும்போதுஉண்டாகிற)துன்பநோயையும்- நீக்கி, ஒழித்து- பிரிவாற்றி, (பிரிந்தால்) அப்பிரிவையும் பொறுத்து- பின்னிருந்து,பின்னும்இருந்து- வாழ்வார்,உயிர்வாழுமகளிர்!-பலர், (உலகத்திற்)பலர். எ-று. ❋ முன்னிலுஞ்சிறக்கத்தலையளிபெற்று இன்பத்தை அனுபவிக்கிற சமயத்தில் அதனை இழந்து துன்பத்தை அனுபவித்தற்கு உடன்படுதல் அரியதொன்றாகலால்- அரிதாற்றியென்றும், செல்லுந் தேசத்திலே அவருக்கு யாதுசம்பவிக்குமோவென்றும், அவர் வருமளவும் நாம்பொறுத்திருக்கும் வி

தம் என்னென்றும் அவர்வரவுதான் மறுபடி என்றைக்குவந்து இடைக்குமோவென்றும் இவ்விதங்களாலே தோன்றுகிறகவலை மனத்தைவிட்டு நீங்காதாதலால் அல்லனோய் நீக்கியென்றும், பிரிந்தால்வருமளவும் உள்ளே தோன்றுகிற காமவேதனையும் புறத்தில் வீணையிசை சந்திரன் தென்றல் இவைமுதலாய்வந்து அதனைவளர்ப்பவையும் பொறுத்தல் அருமையாகலால் பிரிவாற்றியென்றும், தாம்காதலனைவிட்டிருக்கமாட்டாத மகளிருள் இவையெல்லாம் பொறுத்துப் பின்னும் இருந்து உயிர்வாழவல்லவர் ஒருவரும் இல்லையென்பது குறிப்பினாலேதோன்ற- பின்னிருந்துவாழ்வார்பலரென்றும்சொல்லினாள். பிரிவிலே நிகழ்பவைகளைப் பிரிவென்றாள். ஆற்றிநீக்கி 'ஆற்றிஎன்பவை ஓசைவகையால் அவைகளினருமையுணர நின்றன. பிரிவையுமென்னு மும்மை விகாரத்தாற்றொக்கது யானும்இறந்துபடுவேனென்பதுகருத்து. (௰)

௱௰௭-ஆம்-அதி-படர்மெலிந்திரங்கல்.

அஃதாவது - பிரிவுபொறுக்கமாட்டாதவளாகிய தலைவி தான் உறுகின்ற துன்பதனை எப்போதும் நினைத்தலின் அந்நினைவால்மெலிந்து இரங்கலாம். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

மறைப்பேன்மன் யானிஃதோ நோயை
யிறைப்பவர்க்..... *

ஊற்றுநீர் போல மிகும் ....*

[இது- காமநோயை வெளிப்படுத்துதல் உன்னுணத்திற்குத் தகாதென்ற தோழிக்குச் சொல்லியது] இ-ள். யான், நான்!-நோயை, இந்நோயை-ஃமறைப்பேன், (பிறரறிதற்குநாணி) மறையாநின்றேன்- (நிற்கவும்)- இஃதோ, இந்நோயோ- இறைப்பவர்க்கு, (நீர்வேண்டுமென்று இறைப்போர்க்கு- ஊற்றுநீர்போல, ஊற்றுநீரைப்போல- மிகும்,மிகும்- எ-று. ❋ அம்மறைத்தலாலே பயன்படாதென்பதுபட நிற்கையால் மன்-ஒழியிசை இனி அதற்கு அடுத்தது செயல் வேண்டுமென்பதாம். (சு)

கரத்தலு மாற்றேனிந் நோயைநோய் செய்தார்க் ....*
உரைத்தலு நாணுத் தரும் ....*

[இது- இவ்விடத்தோர் அறியாமல் மறைத்தலாயினும் அவ்விடத்தோர் அறியத் தூதுவிடுதலாயினும் செயல்வேண்டுமென்ற தோ

ருயஎ-ஆம், அதி-படர்மெலிந்திரங்கல்.

(சஎக)

ழிக்குத் தலைவிசொல்லியது.]இ-ள். இந்நோயை,இக்காமநோயை-ஃகரத்தலுமாற்றேன், (இவ்விடத்தோர் அறியாமல்) மறைத்தலும் வல்லேனாகின்றிலேன்- (ஆகாக்கால்)- நோய்செய்தார்க்கு,இந்நோயைச்செய்தார்க்கு- (சொல்லென்னபயாயின்) உரைத்தலும்,சொல்லலும்!- நாணுத்தரும், (எனக்கு) நாணந்தரும், (இனி என்செய்வேன்) எ-று. ❋ ஒருவேளைக்கு ஒருவேளை மிகுதலால்கரத்தலுமாற்றேனென்றும், தூரதேசத்திலே போயிருப்பவர்க்கு இது சொல்லித் தூதுவிட்டால் இன்னும் சர்வாதிருக்கிறு ளென்பது தோன்றுமென்னுங் கருத்தால் நாணுத்தருமென்றும்சொல்லினள். (உ)

காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென் .... *
னோனா வுடம்பி னகத்து .... *

[இதுவுமது.] இ-ள். காமமும்,காமநோயும்!-நாணும்,(அதுசெய்தவர்க்குச்) சொல்லவொட்டாதநாணும்! என்னோனாவுடம்பினகத்து, (தம்மைப்)பொறாத என்னுடம்பினிடத்து- உயிர்,உயிர்- காவா, காவடித்தண்டாகத்தூங்கும்,(அதனிருதலையிலும் தொங்குகின்றன. எ-று. ❊ பொறுமை, மெலிவினாலாகிய து.-தூங்குமென்றது,ஒன்றினொன் றுமிகாமல் இரண்டும்ஒத்த சீரவென்பது தோன்றநின்றது- தூதுவிடப்பண்ணுகிற காமமும் ஒழியப்பண்ணுகிற நாணும்தம்முள் ஒத்து உயிரை இறச்செய்கின்றன. யான்அவைகளுள் ஒன்றில் நிற்கமாட்டாமையால் இது இற்றே விடுமென்பதாம் (௪)

காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்து
.... *
மேமப் புணைமன்னு மில் .. ..
.... *

[இது-தலைவியர் காமக்கடலில் வீழார் வீழினும் அதற்கு ஏற்றபுணையால் நீந்திக்கடப்பரென்ற தோழிக்குச்சொல்லியது.]இ-ள். (யாவர்க்கும்) உண்டாய்வருகின்ற (இரண்டிலுள்ளும்) -காமக்கடல்,காமககடலே.-உண்டு, (எனக்கு)உண்டாகின்றது.- அதுநீந்தும். அக்கடலைக்கடக்கும்- ஏமப்புணை, காப்பாகியபுணை- இல்,(எனக்கு) இல்லை எ-று.❊ மன்னிரண்டும் உம்மிரண்டும் அசைநிலைகள்.தூதுவிட்டு இதற்குப் புணையாதற்குரிய நீயும் ஆனாயில்லையென்பதுகருத்து. (௪)

துப்பி னெவனாவர் மற்கொ றுயர்வரவு .... *
நட்பினு ளாற்று பவர் .. .. *

[இது தூதுவிடாமைநோக்கித் தோழியோடு

தலைவி பிணங்கிச்

சொல்லியது] இ-ள். நட்பினுள், (இன்பஞ்செய்தற்கு உரிய) நட்பினிடத்து - துயர்வரவு, துன்பத்தின்வரவினை-ஆற்றுபவர், செய்யவல்லவர்!- நட்பின், (துன்பஞ்செய்தற்குஉரிய-) பகைமையிடத்து-எ

(௬௭௨)

ராயஎ-ஆம், அதி-படர்மெலிந்திரங்கல்.

வருவர்கொல், என்னசெய்வாரோ-எ-று. ❁ அப்பகை இங்கே காணுமையால் அவர்செய்வதும் அறியப்பெற்றிலனென்பதுபட்டநிற்கையால்-மன்-ஒழிபிசை. துயர்வருதலை விலக்கலாயிருக்கஅதுசெல்கின்றிலையென்று பிணங்குகின்றமையால்- தோழியைத் துயர்வரவு செய்தவளாக்கியும் பிறளாக்கியும் சொல்லினுள், (ரு)

இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்கால் .... *
றுன்ப மதனிற் பெரிது .... *

(இது- காமத்தினால் இன்பமடைந்தவர்க்கு அதனினாகிய துன்பமும் வருமென்றதோழிக்குச் சொல்லியது.] இ-ள். காமம், காமம்-(புணர்ச்சியால் இன்பஞ்செய்யும்போது),இன்பம்,அவ்வின்பம்!- கடல், கடல்போல்- (பெரிதாம்) மற்றஃது - இனி, அக்காமந்தானே-

அடுங்கால் (பிரிவினாலே) துன்பஞ்செய்யும்போது- துன்பம் அத்துன்பம்!-அதனிற்பெரிது- அக்கடலினும் பெரிதாம்.எ-று-✻அடுங்காலென வந்தமையால் அதற்கெதிரான இன்பஞ்செய்யும்போது என்கிற சொல்வருவிக்கப்பட்டது. பெற்றவின்பத்தோடு ஒத்துவரிற் பொறுக்கக்கூடும் இது அப்படிப்பட்டதல்லவென்பதுகருத்து.(௬

காமக் கடும்புன லீந்திக் கரைகாணேன்.......... *
யாமத்தும் யானே யுளன் .... *

[இது- காமக்கடலை நிறைபுணையாக நீந்தலாமென்றதோழிக்குத் தலைவிசொல்லியது.] இ-ள். காமக்கடும்புனல், காமமாகியகடலை-நீந்தி(யும்) கரைகாணேன், (அதற்குக்) கரைகாண்கின்றிலேன். (அக்காஞமைக்காலந்தான் எல்லாரும் நித்திரைசெய்யும் பாதியிரவாயிற்று யாமத்தும், அப்பாதியிரவிலும்- யானே, (அதற்குஒருதுணையில்லாமல்) யானேயாயினேன் - (ஆகியும்) உளேன், இறவாதிருக்கிறேன். (௬தொரு தீவினைப்பயன் இருந்தவிதம் என்.) எ-று.✻உம்மை முன்னுங்கூட்டப்பட்டது. யானே யாயினே னென்றது. நீ துணையாயினு யில்லையென்னுங் குறிப்பிற்று. (எ)

மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா.......... *
லென்னல்ல தில்லை துணை .... *

[இது - தலைவி இரவின் கொடுமை சொல்லி இரங்கியது.] இ-ள். இரா, இவ்விரவு! அளித்து- அன்புடைத்தா யிருந்தது. மன்னுயிரெல்லாம், (உலகத்தி) னிலைபெற்ற உயிர்களையெல்லாம்- துயிற்றி, (தானே) தூங்கச்செய்தலால்- என்னல்லது, என்னையல்லது- துணை,(வேறு) துணையை- இல்லை, (உடைத்தாயிற்) றில்லை. எ-று.✻ துணையோடு ஒன்றுகின்ற உயிர்களையெல்லாம் விட்டு இறந்துபடுஞ்சமயமுடை

௱௰௭-ஆம்,அதி-படர்மெலிந்திரங்கல்.
(௬௭௬)

யேனுகிய என்னையே துணையாகக்
றென்பதுபற்றி, அளித்தென்றாள்.
கொள்ளுதலால் அறிவுடைத்தன்
இகழ்ச்சிக்குறிப்பு. (அ)

கொடியார் கொடுமையிற் றாங்கொடிய விந்நா .... *
னெடிய கழியு மிரா.... .... *

[இதுவுமது.] இ-ள். (காதலரோடுநாம் இன்புற்றநாள்களிலே குறியவையாயிருந்து) இந்நாள், (அவர்பிரிவைப்பொறுக்கமாட்டாத)

இந்நாள்களிலே நெடிய,நெடியவையாய்-கழியும், செல்கின்ற-இரா, இரவுகள்! கொடியார்,அக்கொடியவரது-கொடுமையின், கொடுமைக்குமேலே- தாம், தாம்- கொடிய, கொடுமைசெய்யாநின்றன. எ-று. ❋ தன்பொறுமை நினையாது பிரிதலால், கொடியாரென்றாள். கொடுமை, கடிதிலே வாராமல் நீட்டித்தல். அவர்பிரிவாலும்- நீட்டிப்பாலும், உண்டாகிய பொறுமைக்கு முகங்கொடாமையன்றி முன்னையினெடியவாய்க் கொடியவாகா நின்றனவேன்பதாம். (க)

உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர் ... ... *
நீந்தல மன்னோவென் கண்... .... *

[இது - நின்கண்களின்பேரழகு அழிதலால் அழா திருவென்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.] இ-ள். உள்ளம் போன்று, மனம் போன்று- உள்வழி, (காதலர்) இருக்கிற நாட்டிற்கு - செல்கிற்பின், (கடிதிலே) செல்லவல்லனவாயின்- என்கண், எனதுகண்கள்! வெள்ளநீர்,வெள்ளமாகிய (தந்) நீரை- நீந்தல, நீந்தா. எ-று. ❋ அதுமாட்டாமையால் இனி அவைகளுக்கு நீந்துதலே உள்ளதென்பது படநின்றமையால், மன், ஒழியிசை. ஓ, அசை. மனத்திற்குச்செலவு நினைவேயாகலால், உள்ளம்போன்றென்றும்- மெய்க்குநடந்துசெல்லவே

ண்டுதலால், கண்கள் அதனோடு போய்க் காதலனைக்காணல்கூடாமையி
ன்னுங் கருத்தால், செல்கிற்பினென்றும்- சொல்லினள். இதனல்வரு
கிற அதிகாரமும் தோற்றுவாய்செயப்பட்டது. (ய)

ஈயஅ-ஆம்- அதி-கண்விதுப்பழிதல்.

அஃதாவது-கண்கள் தலைவனைக்காணுதற்கு விரைதலாலே வரு

ந்துதல். இதுபடராமலே மெலிந்தவிடத்து நிகழ்வதாகலால்

அதன்பின்வைக்கப்பட்டது.

கண்டாங் கலுழ்வ தெ[illegible]ன் கொலோ
தண்டாநோய் .... *

தாங்காட்ட யாங்கண் டது ....
[சாய]•

.... *

(சா எசா)
ஈயஅ-ஆம், அதி-கண்விதுப்பழிதல்.

[இது-நின்கண்கள் அழுது அழகை இழக்கின்றன நீபொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.] இ - ள். தணடா நோய், இத்திராத (காம) நோயை- யாம், நாம்- கண்டது, அறிந்தது - தாம், தாம் - காட்ட, (காதலனையெமக்குக்) காட்டலாலன்றோ- கணடாம், (அன்றுஅதுசெய்த) கண்கள்தாம்- கலுழ்வது, (இன்றுஎம்மைமக்காட்டச்சொல்லி) அழுகிறது! எவன்கொல், யாதுநினைத்து. எ-று. ❀ காட்ட வென்பதற்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. இன்றுந்தாமே காட்டுத லல்லது;யாம் காட்டுதல் எவ்விடத்ததென்பதாம். (க)

தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப்..... ..❀
பைத லுழப்ப தெவன் ... . ❀

[இதுவுமது.] இ ள். தெரிந்துணரா, (மேல்விளைவதனை) ஆராய்ந்தறியாமல் - நோக்கிய, (அன்று தலைவனைப்) பார்த்த - உண்கண், (மை) புண்டகண்கள்! (இன்றுஇதுநம்மால்வந்ததாதலால் பொறுத்தல்வேண்டுமென்று) பரிந்துணரா, கூறுபடுத்தி அறியாமல்-பைதலுழப்பது, துன்பமனுபவிப்பது! எவன்,யாதுநினைத்து.எ-று ❀விளைவது பிரிந்துபோய் வராமையால், காணுதற் கரியாக வருந்துதல். முன்னேவருவதை அறிந்து காவாதார்க்கு அதுவந்த வழிப்பொறுத்தலன்றே உள்ளது அதுவும் செய்யாது வருந்துதல் மிகுந்த அறியாமையாலாகிய செயலென்பதாம். (உ)

கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழ ....❀

மிறுநகத் தக்க துடைத்து .... *

[இதுவுமது.] இ-ள். (இக்கண்கள்) கதுமெனத்தாநோக்கி,(அன்றுகாதலரைத்) தாமேவிரைந்துநோக்கி- தாமேகலுழும்,(இன்றும்) தாமேயிருந்து அழுகின்ற- இது, இவ்வறியாமைச்செயல்!நகத்தக்கது, (நம்மாலே) சிரிக்கத்தக்க இயல்பை- உடைத்து,உடையது.எ-று ※கண்களென்பது, அதிகாரத்தால் வந்தது- அச்செயல், வருமுன்னே காப்பார்க்கு நகைவிளைக்குமாதலால், நகத்தக்க துடைத்தென்றாள். (ரு)

பெயலாற்ரு நீருலர்ந்த வுண்க ணுயலாற்ரு . . ..*
உய்வினோ யென்க ணிறுத்து .. .. *

[இதுவுமது.] இ-ள். உண்கண், (இந்தமை) யுண்டகண்கள்!உயலாற்ரு, (நான்) பிழைக்கமாட்டாமைக்கு ●துவாகிய-உய்வினோய்,ஒழிவில்லாத நோயை- என்கண், என்னிடத்து- நிறுத்து, நிறுத்தி-பெயலாற்ரு, (தாமும்) அழமாட்டாதவண்ணம்- நீருலர்ந்த, நீர்வற்றிவிட்

ளஎஅ-ஆம்,அதி- கண்விதுப்பழிதல்.

(சஎரு)

டன. எ-று.※நிறுத்தல்,பிரிதலும் பின்கூடாமையுமுடையானை எனக்குக் காட்டி அதனால் நோயை நிலைபெறச்செய்தல். முன் எமக்குத் துன்பங்கள் செய்தலால் பின் தமக்குந் துன்பங்கள் தாமே வந்தனவென்பதாம், (சு)

படலாற்ரு பைத லுழக்குங் கடலாற்ருக் .... *
காமநோய் செய்தவென் கண்........ .... *

[இதுவுமது.] இ-ள். (எனக்கு) கடலாற்ரு, கடலுஞ் சிறிதாம்வண்ணம் (பெரிதாகிய) காமநோய், காமநோயை- செய்த, செய்த- என் கண், எனதுகணகள்! (அத்தீவினையாலே) படலாற்ரு, (தாமும்) தூங்குகிலவாகி - பைதுழக்கும் - துன்பத்தையும் அனுபவிககின்றன. எ- று. ❊ காமநோய் * காட்சியால் வந்ததாகலால், அதனைக்கண்கள் செய்ததாக்கிச்சொல்லினுள். துன்பம்- அழுதலாலாகியது. (௫)

ஓ வினிதே யெமக்கிந்நோய் செய்த கண் .. .. *
டாஅ மிதற் பட்டது .... *

[இதுவுமது.] இ-ள். எமக்கு, எமக்கு- இந்நோய், இக்காமநோயை- செய்த, செய்த- கண், கணகள்- தாம், தாமும்- இதற்பட்டது, இத்தூங்காமல் அழுதலிலேபட்டது! ஓஒவினிதே, மிகவும் இனிதாயிற்று. எ-று. ❊ ஓ ஒ வென்பது, மிகுதிப்பொருளில் வந்தகுறிப்புச் சொல். தம்மால் வுருத்தமடைந்த எமக்கு அவ்வருத்தம் தீர்ந்தது போன்ற தென்பதாம், (௬)

உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து .. .. *
வேண்டி யவர்க்கண்ட கண் .... *

[இதுவுமது.] இ-ள். விழைந்து, விரும்பி- இழைந்து, உட்குழைந்து- வேண்டி, வேணடி- அவர்க்கண்டகண், (அன்று) அத்தலைவரைப் பார்த்தகண்கள்! உழந்துழந்து; (இன்று தூங்காமல அழுதற்றுன்பத்தை) அனுபவித்து அனுபவித்து- உண்ணீர், (தம்) முள்ளிருகுற நீர்- அறுக, அற்றுப்போகுக. எ-று. ❊ அடுக்கு, இடைவிடாமையில் வந்தது. (௭)

பேணுது பெட்டா ருளர்மன்னோ மற்றவர்க்...... ....*
காணு தமைவில கண் . ..   .*
[இது- காதலர் பிரிந்துபோகவில்லை அவர் இங்கேஇருக்கிறார்அவரைப் பார்க்குமளவும் நீ பொறுத்தல் வேணடுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.] இ-ள். பேணுது, (மனத்தால்) விரும்பாதிருந்

காட்சி-காறுதில

(சஎசா)

ருஎஅ-ஆம்,அதி-கண்விதுப்பழிதல்.

து - பெட்டார், (சொல்லுமாத்திரத்தால்) விரும்பியவர். உளர்மன், (இங்கே)யிருக்கின்றார்.அவ்விருத்தலாலே பயன்யாது-கண்,கண்கள்! மற்று- அவர்க்காணுது, அவரைக்காணுமல்- அமைவில,பொறுக்கின்றில. எ- று. ❁ செயலாற்பிரிந்து நின்றமையால், பேணுதென்றும்- முன்னே நலம்பாராட்டி * பிரிவச்சமும், * வன்புறையும் சொல்லிஞராதலால், பெட்டாரென்றும்- சொல்லினாள். மன், ஒழியிசை. மற்று, வினைமாற்று. ஓ, அசைநிலை - யான் பொறுக்கவும் கண்கள் அவரைக்காணுதற்கு விரும்புகின்றனவென்பதாம். (அ)

வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை .... *
யாரஞ ருற்றன கண் .... *
[இது- நீயும்பொறுத்து உன்கண்களும் தூங்கல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.] இ-ள்.வாராக்கால், (காதலர்) வாராதநாள்களிலே- துஞ்சா, (அவர்வரவுபார்த்துத்) தூங்காவாம். வரின்,வந்த நாள்களிலே- துஞ்சா, (அவர்பிரிவொன்று . அஞ்சித்) தூங்காவாம். (ஆகலால்) ஆயிடை, அவ்விருவழியும் - கண், எனதுகண்கள்! ஆரஞருற்றன,பொறுத்தற்கரிய துன்பத்தையுடையனவாம். எ-று.❁இனி அக்கண்களுக்குத் தூக்கம் ஒருநாளும் இல்லையென்பதாம். (க)

மறைபெற லூரார்க் கரிதன்றா லெம்போ............ . ..... *

லறைபறை கணஞ ரகத்து .... *

[இது - காதலனா இவ்வூரார் இயற்பழியாமல் அவர்கொடுமையை மறைத்தல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.] இ-ள். எம்போல், எம்மைப்போலும்- அறைபுறை கண்ணர், அறைபறையாகிய கண்ணையுடையவர் - ஆகத்து, (தமது) நெஞ்சிலடக்கிய - மறைபெறல், இரகசியத்தை அறிதல்! ஊரார்க்கு, இவ்வூரி லுள்ளவர்க்கு- அரிதன்று, எளிது, எ-று. ஆல், அசை.மறையென்றது- இவ்விடத்து மறைக்கப்படுவதனை. உள்ளே நிகழ்வதைப் புறத்தி லுள்ளார்க்கு அறிவித்தலாகிய தொழிலாலே பறையோடு ஒற்றுமையுடைமையால் அறைபறையாகிய கண்ணென்றாள். யான் மறைக்கவும் இவைவெளிப்படுத்துகின்றன வென்பதாம். (ய)

ாயகூ-ஆ ம்-அதி-

பசப்புறுபருவரல்

*

அஃதாவது

- பசப்புறுதலாலாகிய வருத்தம். பசப்பாவது-

*பிரிவச்சம்- பிரிதற்கு அஞ்சுதல் * வன்புறை - கைவிடேனென்று பலவிதவுறுதி சொல்லல்.

*

ாயகூ-ஆம்,அதி-பசப்புறுபருவால். (சஎஎ)

பிரிவுபொறாமையால் வருவதோர் நிறவேறுபாடு. இது தலைவ னைக் காணப்பெறாத விடத்து நிகழ்வதாகலால் கண்விதுப் ப ழிதலின் பின்வைக்கப்பட்டது.

நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென் ...... *
பண்பியார்க் குரைக்கோ பிற .... *

[இது, முன்பிரிவிற்கு உடன்பட்ட தலைவி அதுபொறாமல் பசப் புநிற மடைந்தவிடத்துத் தன்னுள்ளேசொல்லியது.] இ-ள். நயந்த வர்க்கு, (என்னை) விரும்பியதலைவர்க்கு- நல்காமை, பிரிவை- நேர்ந் தேன் (அப்போது; உடன்பட்ட நான்- பசந்த, "(அதனைப் பொறு மல் இப்பொழுது) பசப்புநிறமடைந்த- என்பணபு-என்னியல்பை யார்க்கு, எவர்க்கு- உரைக்கோ, சொல்வேன். எ-று ※ பிறவென்ற து, அசைநிலை, தான் உடன்படாதவிடத்துப் பிரிவொழிதல் குறித் துப் பிரிவைத் தனக்கு அறிவித்தா ராகலால், அவ ரன்புடையரென் னுங் கருத்தால், நயந்தவரென்றும்- இதுவே உடன்பாடாக மேலும் பிரிவு நிகழுமாகலால் இனி அவரைக்கூடுதல் அரிதென்னுங் கருத்தா ல், நல்காமையென்றும், முன்னே உடன்படுதலும் பின்னே பொறு மல் பசத்தலும் பிறர்செய்தவை யல்லவென்றற்கு,பசந்தவென்பண பென்றும், யான் செய்துகொண்ட துன்பத்தை இனி ஒருவர்க்குச் சொல்லுதலும் பழியாமென்னுங் கருத்தால், யார்க்குரைக்கோவெ ன்றும், சொல்லினள். (க)

அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென் ...... *
மேனிமே லூரும் பசப்பு .... *

[இது- பொறுளென்று கவலையுற்ற தோழிக்குத்தலைவி பொறுப் பேனென்பது தோன்றச்சொல்லியது.] இ-ள். (நான்பொறுத்திருக் கவும்) பசப்பு, இப்பசப்புநிறம்! அவர், அவர்-தந்தாரென்னுந்தகை யால், (என்னை)உண்டாக்கினு ரென்னுங் களிப்புமிகுதியால்- என்மே னிமேல், என்னுடம்பின்மேல்- இவர்தந்து, ஏறி- ஊரும், செலுத்தா நின்றது. எ-று. ※ இது உரிமைபற்றி ஊர்கின்றது இதற்கு நீ கவலை

ட்படாதே யென்பதாம். (உ)

சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு .... *
நோயும் பசலையுந் தந்து ... . *
[இது - அழகுநாணமுங் கெடாமல் நீ பொறுத்தல் வேண்டுமெ

ன்ற தோழிக்குத் தலைவிசொல்லியது.] இ-ள்.(பிரிகின்றபொழுதே) கைம்மாறு, (அவ்விரண்டிற்கும்) தலைமாறுக-நோயும்பசலையும்,இக் காமநோயையும் பசலையையும்- தந்து, (எனக்குத்) தந்து-சாயலுநா (சஎஅ) ா

யகூ-ஆம்-அதி-பசப்புறுபருவரல்.

னும், (என்மேனி) யழகையும்ஜ- நாணத்தையும்ஜ- அவர்,அவர் கொ ண்டார், கொண்டுபோயினர். எ-று. * நோய்க்கு,நாணும்- பசலைக் கு, சாயலும்- ஆதலால்,எதிர் திரணிறை.அடக்குந் தோறுமிகுதலால் நோய், நாணுக்குத் தலைமாறுயிற்று,இனி அவர்தந்தாலல்லதுஅவை உண்டாதலும், இவை இல்வாதலும்- கூடாவென்பதாம். (ரு)

உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாற்...... ....*
கள்ளம் பிறவோ பசப்பு. .... *
[இது- பிரிகின்றவர் தெளிவித்த சொற்களையும், அவர் நற்குணங் களையும், அறிவாயாகையால் அவர் விரைந்து வருவாரென்ற தோழி க்குத் தலைவிசொல்லியது.] இ-ள். யான், நான்!- உள்ளுவன், (அவர் சொற்களை மனத்தால்) நினைக்கின்றேன்- உரைப்பது, (வாயால்சொ ல்லப்படுவதும்)- அவர்திறம், அவர்நற்குணமே- (அப்படிச்செய்யா நிற்கவும்) பசப்பு, பசலைநிறம்! (வந்து நின்றது)- கள்ளம், (இது!)வ ஞ்சனையா யிருந்தது, எ-று. * பிறவும், ஓவும், அசைநிலைகள்.-மெ ய்-மற்றைமனவாக்குகளின் வழியுள்ளதாகலால்- அதனிடத்தும் வரு ந்தன்மையதன்றுயிருக்க வந்தபடியால் இதன்செயல் கள்ளமாயிரு ந்ததென்று தான்பொறுக்கின்றமை சொல்லியபடியாயிற்று. (ச)

உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென் .... *
மேனி பசப்பூர் வது .... *

[இது- தலைவர் பிரிந்து சமீபமாயிருக்கவும் நீபொறுக்கின்றிலை யென்ற தோழிக்குத் தலைவிமுன்னே நிகழ்ந்தது சொல்லியது.] இ-ள். உவக்காண், அக்காலத்து- எங்காதலர், எமது தலைவர்- செல்வார், (பிரிந்து) செல்வாராக- என்மேனி, எனது வடிவம்- பசப்பூர்வது பசலைநிறமடைவது!- இவக்காண், இங்கேயன்றோ. (அப்படிப்பட்டது இன்று வேறொன்றுமோ) எ-று. ❁ உவக்காண் இவக்காணென் பன ஒட்டிநின்ற விடைச்சொற்கள். அவர்செலவும் பசப்பினது வரவும் பகலிரவுகளின் செலவு வரவுகள் போல்வதை அறிந்திருந்தும் அறியாதாய்போல் நீ சொல்லுகின்றது எ[illegible]னயென்பதாம் (ரு)

விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன் .... *
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு....... .. .. *

[இதுவுமது.] இ-ள். விளக்கு, விளக்கினது- அற்றம்பார்க்கும், சோர்வுபார்த்து நெருங்கிவருகிற- இருளேபோல், இருளைப்போலவே- பசப்பு!, இப்பசலைநிறம்- கொண்கன். தலைவனது- முயக்கு, புணர்ச்சியினது- அற்றம்பார்க்கும், சோர்வுபார்த்து நெருங்கிவரு

௱௰௯-ஆம்-அதி-பசப்புறுபருவரல்.

(சஎக)

ம்.எ-று. ❁ முன் பிரியாதிருக்கவும் தனக்குச் சமயம்பார்த்துவருகிறபசப்புப் பிரிவுபெற்றால் என்னசெய்யாதென்பதாம். (சு)

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி........ *
லள்ளிக்கொள் வற்றே பசப்பு .... *

[இதுவுமது.] இ-ள். புல்லிக்கிடந்தேன், (முன்னொருநாளிலேகாதலரைத்), தழுவிக்கிடந்தநான்!- புடைபெயர்ந்தேன், (அறியாது) சற்றுவிலங்கினேன்.- அவ்வளவில், அவ்விலங்கிய வளவிலே- பசப்பு, ப

சலைநிறமானது!- அள்ளிக்கொள்வற்றே, அள்ளிக் கொள்ளப்படும் பொருள்போல்வந்து நிறைந்து. எ-று. ✲ கொள்ளவென்பது- குறைந்துநின்றது- அப்புடைபெயர்ச்சி மாத்திரத்திற்கு அப்படியாகியது- இப்பிரிவிடத்துஆகும்விதம்சொல்லவேண்டுமோவென்பதாம்

பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத் .... *
துறந்தா ரவரென்பா ரில் .... *

[இது- நீ இப்படிப்பசப்புநிறமடைவது தகாதென்றதோழியோடு பிணங்கிச்சொல்லியது.] இ-ள். இவள், இவள்- பசந்தாளென்பதல்லால், (பொறுத்திராமல்) பசலைநிறமடைந்தாளென்று (என்னைப்)பழிசொல்லுவதல்து- இவளை, இம்மாதை- அவர், அவர்- துறந்தாரென்பார், துறந்துபோனாரென்றுசொல்லுவார்! இல், இல்லை- எ-று.✲ தன்னையே நெருங்குதல்பற்றிப் பிணங்குகின்றமையால் என்பாரென வேறுபடுத்திச்சொல்லினுள். (அ)

பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார் .... *
நன்னிலைய ராவ ரெனின் .... *

[இதுவுமது.] இ-ள்.நயப்பித்தார்,(இப்பிரிவையானே);உடன்படும்-வகைசொல்லியவர்-நன்னிலையராவரெனின்-(இன்றுஉன்கருத்தால்-நல்லநிலையினராவராயின்- என்மேனி!, என்னுடம்பு-பட்டாங் (காக பட்டதுபட- பசக்க, பசலைநிறமடையக்கடவது. எ-று. ✲நன்னிலையராதல், நன்மைக் கண்ணே நிற்றலையுடையராதல்- பட்டாங்காகவென ஆக்கம் வருவித்துச் சொல்லப்பட்டது.- முன், இப்பிரிவின் கொடுமையறியாத என்னைஇதற்கு உடன்படுத்திப்பிரிந்தவர் தவறிலராகவேவேண்டுவதுஎன்மேனியும் பசப்பும் யாதுசெய்யில் என்னவென்பது படநிற்கையால் மன் ஒழியிலசையில்வந்தது. (கூ)

பசப்பெனப் பேர்பெறுத லன்றே நயப்பித்தார் .... *
நல்காமை தூற்று ரெனின் .... *

[இது- தலைவிபொறுத்தற்பொருட்டுத்.தோழிதலைவனை இயற்பழி

த்தவிடத்து அவள் இயற்படச்சொல்லியது.] இ-ள். நயப்பித்தார், (அன்று) குறைநயப்பித்துக் கூடினவர்க்கு- நல்காமை,(இன்று) அருளாமையை-தூற்றாரெனின், நட்புற்றோர்)-தூற்றாராயின் - பசப்பென,பசப்புத் தாமுயினும்என்று (ஒற்றுமையால் தாம்) சொல்ல- பேர்பெற்றல், பேரைப்பெறுதல்!- நன்றே,-(எனக்கு) நன்றாம் எ-று.※ நட்புற்றாரென்பது வருவிக்கப்பட்டது, பாங்கி பழித்தற்குப் பொறாமற் பிணங்குகின்றாளாதலால் இகழ்ச்சிக்குறிப்பால் சொல்லினள். அவரை அருளிலரென்றது இன்னும் பசலை அடைந்தாள்இவளென்பதே தான்பொறுக்கும் வழியென்பதாம்　　　(௰)

௩௰௨-ஆம்-அதி- தனிப்படர்மிகுதி.

அஃதாவது　தனியாகிய　துன்பமிகுதியாம்.

அதுபசப்பு
ற்று

வருந்தினவளுக்கு உரியதாகலால் பசப்புறுபருவரலின் பின்வைக்கப்பட்டது.

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றரோ .... *
காமத்துக் காழில் கனி . ... *

[இது-காதலர் உன்னினும் பொருதவராய்க் கடிதிலே வருவார் நீ அவரோடு பேரின்பத்தை அனுபவிப்பா யென்றதோழிக்குச்சொல் லியது.] இ-ள். தாம்வீழ்வார், தம்மாலே விரும்பப்பட்டகணவர்- த ம்வீழ, தம்மைவிரும்ப-பெற்றவர், பெற்றமகளிர்!-காமத்து,காமா னுபவத்தினது காழில், வித்தில்லாத-கனி, பழத்தை-3- பெற்றரோ பெற்றரன்றே, எ-று. ❋ காமம் ஆகுபெயர் காமத்தினதுகனியெ ன்றதில்எனதுயிரொன்பதுபோல் ஆறுவது ஒற்றுமைப் பொருளில் வந்தது, முன்னை நல்வினையில்லாதவிடத்துப் பெறக்கூடாமையால், பெற்றரொன்றும், அவராலே தடையில்லாமல் அனுபவிக்கப் படுத லால் காழில்கனியென்றும், சொல்லினள். ... நங்காதலர் பிரிதலேயல் லாமல் பின்வாராமையு முடைமையால் ...கனி நாம்பெற்றிலேமெ ன்பதாயிற்று- (க)

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு .... *
வீழ்வா ரளிக்கு மளி .... *

[இதுவுமது.] -இ-ள். (அறமும் பொருளும் இன்பமும்நோக்கி ப்பிரிந்தால்) வீழ்வார்க்கு, தம்மை) விட்டிருக்கமாட்டாத மகளிர்க் கு- வீழ்வார், (அவரை) விட்டிருக்கமாட்டாதகணவர்-அளிக்கும்,அ

...ம்-ஆம், அதி-தனிப்படர்மி

குறி. (சஅக)

ளவறிந்தவந்துசெய்கிற- அளி- தலையளி-!வாழ்வார்க்கு,(தன்னையே நோக்கி) உயிர்வாழ்வார்க்கு- வானம் மழை-பயந்தற்று,அளவறிந்து வந்துபெய்வதுபோலும். எ - று. ❊ நங்காதலர் நம்மை விரும்பாமையால் அத்தலையளியில்லையாகலால மழைவறந்தவிடத்து அதனால் வாழாதார்போல் இறத்தலே நமக்கு உள்ளதென்பதாம். (உ)

வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே .... *
வாழுந மென்னுஞ் செருக்கு .... *

[இதுவுமது.] இ-ள். வீழுநர் - (தம்மால்) விரும்பப்படுகிற கணவரால்-வீழப்படுவார்க்கு, விரும்பப்படுகிற மகளிர்க்கு- (காதலர்பிரிந்தாலும் நம்மை நினைந்து கடிதில் வருவார்)வாழுநமென்னும்,(வந்தால் நாம் இன்புற்று) வாழ்வோமென்றிருக்கிற- செருக்கு, தருக்கு! அமையுமே, ஏற்புடைத்தாம். எ- று. ❊ நாம் அவரால் விரும்பப்படாமையால் நமக்கு அமைவு இறந்து படுதலேயென்பதாம். (ரு)

வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார் .... *
வீழப் படாஅ ரெனின் .... *

[இது-காதலரை இயற்பழித்தலுக்கு அஞ்சி அவரது அருளில்லாமையை மறைத்தால் நீ தெய்வத்தன்மை பொருந்திய கற்புடையையாகலால் கற்புடைமகளிரால் நன்குமதிக்கப்படுவாயென்ற தோழிக்குத் தலைவிசொல்லியது.] இ-ள். வீழப்படுவார்,(கற்புடைமகளிராலே) நன்குமதிக்கப்படுவாரும்! தாம் வீழ்வார், தம்மால் விரும்பப்படுகிற கணவரால் - வீழப்படாஅரெனின், விரும்பப்படாராயின்-கெழீஇயிலர், தீவினையுடையரேயாவர். எ-று.❊ உம்மை விகாரத்தால் தொக்கது. கெழீஇயின்மை, நல்வினையில்லாமை. தீவினையுடையேனுக்கு அந்நன்கு மதிப்பால் பயனில்லையென்பதாம். (சு)

நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ. .... *
தாங்காதல் கொள்ளாக் கடை .... *

[இது-அவர்மேலேகாதலுடைமையால்அவர்கருத்தறிந்துபோறுத்தாயென்றதோழிக்குச்சொல்லியது. இ-ள். நாங்காதல்கொண்டார், நம்மாலே காதல்கொள்ளப்பட்டவர்! நமக்கு, நமக்கு- எவன்,என்ன வின்பத்தைச் செய்ப, செய்வார்.(அப்படியே) தாங்காதல்கொள்ளாக்கடை, தாமும் (நம்மிடத்துக்) காதல்செய்யாதவிடத்து. எ-று. *
அக்காதலுடைமையால் நாம்பெற்றது துன்பமே யென்பதாம்(ரு)

ஒருதலையா னின்னாது காமங்காப் போல .... *
விருதலை யானு மினிது .... *

[கூக]

(ச௱அ௨) ௱௨ய-ஆம் அதி -
தனிப்படர்மிகுதி:

[இதுவுமது.] இ-ள். (மகளிர் ஆடவர் எனப்படுகிற இரண்டிடங்களிலும்) காமம், ஆசையானது! ஒருதலையான், ஓரிடத்தில் (உண்டாயின்) இன்னாது, துன்பஞ்செய்வதாம். காப்போல, காவடிப்பாரம்போல- இருதலையானும், இரண்டிடங்களிலும் (ஒத்திருக்குமாயின்) (அது) இனிது, இன்பஞ்செய்வதாம். எ-று. ❀ ஆனுருபுகள், கண்ணுருபின் பொருளில்வந்தன. கா, அதன்பாரத்துக்கு ஆகுபெயர் என்னிடத்து உண்டாகியவாசை அவரிடத்தும் உண்டாயின் நான் இப்படித்துன்பமனுபவித்தல் கூடுமோ வென்பதாம். (௬)

பருவரலும் பைதலுங் காணான்கொல் காம .... *
ஒருவர்க ணின்றொழுகு வான். . . .. *

[இதுவுமது.] இ-ள். (காமத்தை அனுபவித்தற்குரிய இருவரிடத்தும் ஒத்து நில்லாமல்) ஒருவர்கணின்று, ஒருவரிடத்தே நின்று-ஒழுகுவான், போர்செய்கின்றவனாகிய- காமன்! (அவ்விடத்துப் பசப்பாலாகிய) பருவரலும், நோயையும்- பைதலும், துன்பமிகுதியையுங் காணான்கொல், அறியானோ. எ-று.❀ விருப்பு வெறுப்பில்லாமலெல்லாரிடத்தும் நிகழ்ந்தவை அறிதற்குரிய காமக்கடவுளும் என்னிடத்து வேறுபட்டான் இனிப்பிழைக்கும்வழி யாதென்பதாம். (௭)

வீழ்வாரி னின்சொற் பெறாஅ துலகத்து .... *
வாழ்வாரின் வன்கண ரில் .... *

[இது-தலைவனது தூதுவரக் காணாத தலைவி சொல்லியது.] இ-ள். வீழ்வாரின், (தம்மால்) விரும்பப்படுங் காதலரிடத்திருந்து-இன்சொல், ஓரின்சொலளவும்- பெறாஅது, பெறாது, வாழ்வாரின் (பிரிவுபொறுத்து) உயிர்வாழ்கின்ற மகளிர்போல்-வன்கணர், தைரியமுடையவர்! உலகத்து, உலகில் - இல், இல்லை. எ - று. ❀ காதலரிடத்துச்சொல்லேதுவாயினும் எனக்கு இனிதாமென்னுங் கருத்தால், இன்சொலென்றாள். உம்மை விகாரத்தால் தொக்கது. நான்வன்கணேனாதலால் அதுவும் பெறாது உயிர்வாழ்கின்றேனென்பதாம். (௮)

நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட் .... *

டிசையு மினிய செவிக்கு .... *

[இதுவுமது.] இ-ள். நசைஇயார், (என்னால்) விரும்பப்பட்ட தலைவர்- நல்காரெனினும், (எனக்கு) அருள்செய்யாராயினும்- அவர்மாட்டு, அவரிடத்து- இசையும், எச்சொற்களும்! செவிக்கு,என்காதுகளுக்கு- இனிய, இன்பஞ்செய்வனவாம். எ - று. ✻ இழிவு சிறப்பும்மை, அவர் வாராரென்னுஞ்சொல்லாயினும் இனிதாய் அமையுமென்பது படநின்றது. அச்சொல்லுங் கேட்பிலே னென்பதாம். (௯)

௱௨௰-ஆம்,அதி - தனிப்படர்மிகுதி.

(௲௨௱)

உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச் .... *

செறாஅஅய் வாழிய நெஞ்சு .... *

[இது - தலைவனது தூதுவரப்பெறாமல் தான் தூதுவிடநினைத்தவள் நெஞ்சொடு சொல்லியது.] இ-ள். உறாஅர்க்கு,(உன்னோடு) உறாதவர்க்கு- உறுநோய், (உனது) மிகுந்தநோயை உரைப்பாய், சொல்லலுற்ற- நெஞ்சு, நெஞ்சே- (நீபொருமையாயினும் அரிதாகிய அதனைவிட்டு) கடலை, (உனக்குத் துயரஞ்செய்கின்ற) கடலை-செறாஅஅய், தூர்க்கமுயற்சிசெய். (அது! எளிது) எ-று. ✻ சொல்லலுற்றது. அளவிறந்த நோயாகலாலும்- கேட்போர் உறவிலராகலாலும்-அது முடியாது முடிந்தாலும்பயன் இல்லையென்பது கருதாமல் முயல்கின்றாய் என்கிற குறிப்பால் வாழியவென்றார். (௰)

௱௨௧-ஆம்.அதி. நினைந்தவர்புலம்பல்.

அஃதாவது- முன்கூடிய காலத்தினின்பத்தை நினைந்து * பாசறையிடத்துத் தலைவன் தனிமையடைதலும்- தலைவிதனிமையடைதலும்.- ஆம். இது புடர்மிருதி தன்னிடத்ததாக நினைந்த தலைவிக்கும் உரித்தாகலால் இச்சம்பந்தம் பற்றித் தனிப்படர் மிகுதியின் பின் வைக்கப்பட்டது.

உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற் .... *
கள்ளினுங் காம மினிது .... *

[இது- தூதாய்ச்செல்லும் பாங்கனுக்குத் தலைவன் சொல்லியது. இ-ள். (முன் அனுபவித்தநாளையின்பத்தை) உள்ளினும்,(பிரிந்தவிடத்து) நினைத்தாலும்- (அப்பொழுது பெற்றதுபோல்) தீராப்பெருமகிழ்செய்தலால்,நீங்காப்பெருமகிழ்ச்சியைத்தருதலால்-கள்ளினும், (உண்டபோதல்லது மகிழ்ச்சிசெய்யாத) கள்ளைப்பார்க்கிலும்- காமம், காமமானது! இனிது, இன்பந்தருதலையுடைத்து. எ-று. தனது தனிமையும்- தலைவியை மறவாமையும்- சொல்லியபடி. (க)

எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார் ... . *
நினைப்ப வருவதொன் றில் .... *

[இதுவுமது.] இ-ள். தாம்வீழ்வார், தம்மால்விரும்பப்படுவாரை -நினைப்ப, (பிரிவினிடத்து) நினைந்தால்- (அந்நினைந்தவர்க்கு) - வரு

* பாசறை - பகைமேற்சென்றோ ருறையிடம்.

(௬அ௪)

௱௨௧-ஆம்,அதி- நினைந்தவர்புலம்பல்.

வதொன்று, (அப்பிரிவால்) வருவதோர் துன்பம்!-இல், இல்லையாம்- (அதனால்) காமம், காமம்-! எனைத்து,எவ்வளவாயினும்-ஒன்றினிதே காண், இன்பந்தருவதொன்றேகாண். எ-று. ❋ புணர்ந்தவிடத்தும் பிரிந்தவிடத்தும், சமமாகஇனிதென்றற்கு-எனைத்துமினிதென்றான் உம்மைதொக்கது. தான்பொறுத்திருந்தவகை சொல்லியபடி. (உ)

நினைப்பவர் போன்று நினையார்கொ றும்மல் .... ❋
சினைப்பது போன்று கெடும் .... ❋

[இது தலைவனை நினைந்து வருந்துகின்ற தலைவி தோழிக்குச்சொல்லியது.] இ-ள். (எனக்கு) தும்மல், தும்மல்- சினைப்பதுபோன்று அரும்புதல் போலேதோன்றி- கெடும், கெடுகின்றது- (அதனால்)-நினைப்பவர்போன்று, (தலைவர்) என்னைநினைப்பவர்போன்று-நினையார்கொல், நினையாராகல்வேண்டும். எ-று. ❋ தூரத்துள்ளாராகிய உறவினர் நினைந்தவிடத்து நினைக்கப்பட்டவர்க்குத் தும்மல் தோன்றுமென்கிற உலகநடைபற்றித் தலைவன் எடுத்துக்கொண்டதொழில்முடிவதுபோன்று முடியாமையறிந்தவள் சொல்லியதாயிற்று. (ரு)

யாமு முளேங்கொ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்.................❋
தோஒ வுளரோ யவர் .... ❋

[இதுவுமது.] இ-ள். எந்நெஞ்சத்து, எமதுநெஞ்சத்தில்- அவர், அவர்- ஓவுளரோ,(எப்பொழுதும்) உள்ளவராயே யிருக்கின்றார்.-(அப்படியே) அவர்நெஞ்சத்து- அவரதுநெஞ்சிலும்- யாமும்,நாமும் உளேங்கொல், உள்ளேமாகின்றேமோ (ஆகேமோ)எ-று.❋ஓகாரம் இங்கே இடைவிடாமையை உணர்த்திநின்றது. யாம்இருந்தும்தொழில் முடியாமையால் வரவில்லையோஅதுமுடிந்தும்யாம்இல்லாமையால் வரவில்லையோ வென்பது கருத்து. (சு)

தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொ ... *
லெந்நெஞ்சத் தோவா வரல் .... *

[இதுவமது.] இ-ள். தந்நெஞ்சத்து, தமது நெஞ்சிடத்து- (யாம்செல்லாமல்) எம்மை, எம்மை- கடிகொண்டார், காவல்கொண்டதலைவர்!- எந்நெஞ்சத்து, எமது நெஞ்சினிடத்து- ஓவாவரல், ஒழியாமல் (தாம்) வருதலுக்கு- நாணார்கொல், நாணாரோ. எ-று. ❁ ஒருவரைத்தம்மிடத்துவர ஒருகாலும் உடன்படாமல் தாம் அவரிடத்துப் பலகாலும் செல்லுதல் நாணுடையார் செயலல்லாமையால் நாணார் கொலென்றார். (௫)

பற்றியா னென்னுளேன் மன்னோ வவரோடியா .... *
னுற்றநா ளுள்ள வுளேன் .... *

௱௨௧-ஆம், அதி- நினைந்தவர்புலம்பல்.

(௬அ௫)

[இது அவரோடு கூடியநாளை யின்பத்தைநினைந்து வருந்துகின்றாய் அதுமறத்தல் வேண்டுமென்றதோழிக்குத்தலைவிசொல்லியது]
இ-ள். யான், நான்-அவரோடு, அவரோடு- உற்றநாள், புணர்ந்தநாளை இன்பத்தை - உள்ள நினைத்தலால் - உளேன், (இத்துன்பவெள்ளத்தில்) உயிர்வாழ்கின்றேன்- மற்று, அது இல்லையாயின்- யான்,நான் என்னுளேன், வேறே எத்தால் உயிர்வாழ்வேன். எ-று. ※நாள்ஆகுபெயர். உயிர் வாழ்தற்கு வேறுமுண்டு அவை பெற்றிலேனென்பது படநின்றமையால் மன்- ஒழியிசை. அவை அவனது தூதுவருதல் தனதூது செல்லுதல் முதலானவை. அவை யாவும் இல்லாமையால் அதுவல்லாமல் எனக்குப் பற்றுக்கோடு இல்லையென்பது கருத்து. (௬)

மறப்பி னெவனுவன் மற்கொன் மறப்பறியே.............. *
னுள்ளினு முள்ளஞ் சுடும் .... *

[இதுவுமது.] மறப்பறியேன், (அவ்வின்பத்தை) மறத்தலறியேனாகி- உள்ளினும்,இன்று நினையாநிற்கவும்-(பிரிவானது!,உள்ளம்,(என்)னுள்ளத்தைச்-சுடும், சுடுகின்றது.(அப்படிப்பிரிவுபொறாதநான்) மறப்பின், மறந்தால்- எவனுவன், எத்தால் இறவாதிருப்பேன் எ-று ※ மன்னென்பது-இங்கேயும் அவ்வொழியிசை. கொல்-அசை. (௭)

எனைத்து நினைப்பினுங் காயா ரனைத்தன்றோ .... *
காதலர் செய்யுஞ் சிறப்பு .... *

[இது- இத்துன்பமறீந்துவந்து தலைவர் உனக்கு இன்பஞ் செய்வாரென்ற தோழிக்குச்சொல்லியது.] இ-ள். காதலர், தலைவரானவர்!- எனைத்துநினைப்பினும், (நான்தம்மை) எவ்வளவுமிகநினைத்தாலும் காயார், அதற்குக் கோபியார்- செய்யுஞ்சிறப்பு, (அவர்எனக்குச்செய்யுமின்பமாவது!- அனைத்தன்றோ, அவ்வளவன்றோ, எ-று. ※கோபியாமை அந்நினைத்தற்கு உடன்பட்டு நெஞ்சினிற்றல். தனக்கு அவ்வின்பத்திலும் சிறந்தது இல்லாமையால் அதனைச் சிறப்பென்றாள். தோழிசொல்லியவதனைக் குறிப்பால் இகழ்ந்துசொல்லியபடி.(அ)

விளியுமென் னின்னுயிர் வேறல்ல மென்பா .... ※
ரளியின்மை யாற்ற நினைந்து .... ※

[இது-தலைவன் தூதுவரக்காணுதுவருந்துகின்றவள்நிடஞ்சொல்லுகிற தோழிக்குச் சொல்லியது.] - இ-ள். வேறல்லமென்பார், (முன்னெல்லா நாமிருவரும்) வேறலலேமென்றுசொலலுவாரது - அளியின்மை, அருளில்லாமையை - ஆற்றநினைந்து,மிகவும்நினைந்து- என்னின்னுயிர், எனதுஇனிதாகிய வுயிர்!- விளியும் - கழிகின்றது.

(சஅக) ௱உக- ஆம்- அதி-
நினைந்தவர்புலம்பல்.

எ-று. ※ அளியின்மை- பின்வருவாராதலுமாய்ப் பிரிதலும், பிரிந்துவாராமையும், அங்கே நின்றவிடத்துத் தூதுவிடாமையும், முதலாயின. பிரிவு பொறுத்தல்வேணடுமென்று நிடஞ்சொன்னவளுக்கு என்னுயிர் பிரிவைக் குறித்தல்ல அவரன்பிலலாமையைக் குறித்துக் கழிக்கின்றதென்று எதிரழித்து சொல்லியபடி. (௯)

விடாஅது சென்றாைக் கண்ணிறாற் காணப் .... *
படாஅதி வாழி மதி .... *

[இது- அத்திடஞ்சொல்லியவளுக்கு எதிர்நிந்தவள் காமமிக்கஅதிக துக்கத்தினாலே சொல்லியது.] இ-ள்- மதி,சந்திரனே-விடாஅது (என்னெஞ்சை)விடாதிருந்தே-சென்றாை-(விட்டுப்)போயினாரை கண்ணிறால், கண்ணளவாலாயினும்-காண,எதிர்ப்படும்வகை படாஅதி(நீ)மறையாதிருப்பாயாக.எ-று. கண்ணளவாலெதிர்ப்படுவதாவது மதியிருவராலும் பார்க்கப்படுதலால் இருவர்கண்களும் அதனிடத்தேசேர்தல். குறையுறுகின்றாளாகலின் வாழியென்றாள். (ய)

௱உஉ-ஆம்-அதி- கனவுநிலையுரைத்தல்.

அஃதாவது- தலைவி தான்கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச் சொல்லியது அக்கனவு * நனவினிடத்து நினைவு மிகுதியாலே கண்டதாகலால் இது நினைந்தவர்புலம்பலின்பின் வைக்கப்பட்டது.

காதலர் தூதொடு வந்த கனவினுக் .... *
கியாதுசெய் வேன்கொல் விருந்து .... *

[இது- தலைவன் தூதுவரக்கண்ட தலைவிசொல்லியது.] இ ள்.(யான் வருந்துகிறதை அறிந்து அதுதீரவிடுத்த) காதலர், தலைவரது-தூதொடு,தூதைக்கொண்டு- வந்த, (என்னிடத்து)வந்த-கனவினுக்கு,கனவினுக்கு-விருந்து,விருந்தாக-யாதுசெய்வேன், யாதுசெய்வேன். கொல்- அசை. விருந்தென்றது-விருந்திற்குச்செய்யும் உபசாரத்தை அது நனவிலேகாணாமையால் யாதுசெய்வேனென்றாள். (க)

கயலுண்கண் யானிரப்புத் துஞ்சிற் கலந்தார்க் .... *
குயலுண்மை சாற்றுவேன் மன் ....
.... *

[இது - தூது விட நினைத்த தலைவி சொல்லியது.] இ-ள். கய ஞுண்கு

---

* கனவு-சாக்கிரம் அதிவிழித்திருக்குங்காலம்.

௱௨௨-ஆம்-அதி-கனவுநிலையுரைத்தல்

ண், (தூங்காதழுகின்ற) என்கயல்போலு முண்கண்கள்- யான்,நான் இரப்ப, இரந்தால்- துஞ்சின், தூங்குமாயின்- கலந்தார்க்கு(கனவிலேகாணப்பட்ட) தலைவர்க்கு- உயலுண்மை, பொறுத்திருக்கிற தன்மையை- சாற்றுவேன், யானே விரியச்சொல்லுவேன். எ-று. ❋கயலுண்கணென்றாள்- கழிந்த நலத்திற்கிரங்கித் தூதர்க்குயாம்சொல்லாமல் அடக்கப்படுவனவும், சொலலுமவைகளுள்ளும்சுருக்கப் படுவனவும், ஆகிய இவைகளின் பரப்பெல்லாம்தோன்றச்சொலலுவேனென்னுங் கருத்தால் சாற்றுவேனென்றாள். இனி அவையுந் துஞ்சுவன வல்ல சாற்றுவதும் கூடாதென்பது படநின்றமையால் உடன் ஒழியிசை. மூன்றுங் கண்டவள் சொல்லியதாகலால் கனவுநிலை யுரைத்தலாயிற்று. (௨)

நனவினா னல்கா தவரைக் கனவினாற்........................ ❋
காண்டலி னுண்டென் னுயிர் .... ❋

[இது பொறுக்கமாட்டாளென்று கவலையுற்ற தோழிக்குப் பொறுப்பேனென்பதுதோன்றத் தலைவிசொலலியது.] இ-ள். நனவினான், நனவில்வந்து- நல்காதவரை, அருள்செய்யாததலைவரை- கனவினான் கனவிடத்து- காண்டலின், காணுதலால்- என்னுயிர், என்னுயிரானது!- உண்டு, நீங்காதிருக்கின்றது. எ-று. ❋ ஆனுருபுகள் கண்ணுருபுப்பொருளில்வந்தன. அக்காணுதலாலே பொறுத்திருக்கின்றேனென்கிறேன். நீ கவலவேண்டாவென்பதாம். (௩)

கனவினா னுண்டாகுங் காம நனவினா........................ ❋
னல்காரை நாடித் தரற்கு .... ❋

(இதுவுமது.) இ-ள். நனவினான், நனவில் வந்து- நல்காரை, அருள்செய்யாதவரை- நாடித்தரற்கு, (அவர்போனவிடந்) தேடிக்கொண்டுவந்து தருதலால்- கனவினான், அக்கனவில்-காமம். இன்பமானது! உண்டாகும், (எனக்கு) உண்டாகின்றது. எ-று. ❋ காமம்,ஆகுபெயர். இயல்பாக அருள்செய்யாரை அவர்போனதேயம் அறிந்து போய்க் கொண்டுவந்து அருள்செய்வித்த கனவால் பொறுப்பனென்பதாம். (௪)

நனவினாற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான் .... *
கண்டபொழுதே யினிது .... *

[இதுவுமது.] இ-ள். நனவினான், (முன்னே) நனவினிடத்து-கண்டதூஉம், (தலைவரைக்) கண்டு அனுபவித்த வின்பமும்! ஆங்கே,அக்கண்டபொழுதே- (இனிது) இனிதாயிற்று. கனவுந்தான், (இன்று) கனவினிடத்துக் (கண்டு அனுபவித்தவின்பமும்!) கண்டபொழுதே

(௬அஅ)

௱௨௨-ஆம்,அதி-கனவுநிலையுரைத்தல்.

இக்கண்டபொழுதே- இனிது, இனிதாயிற்று. (அதனால் எனக்குஇரண்டும் ஒத்தன.) எ-று. ✲இனிதென்பது மூன்றும்கூட்டப்பட்டது. கனவு, ஆகுபெயர். முன்னும் யான்பெற்றது இவ்வளவே இன்னும் அதுகொண்டு பொறுப்பேனென்பதாம். (௫)

நனவென வொன்றில்லை யாயிற் கனவினாற் .... *
காதலர் நீங்கலர் மன் ... . *

[இதுவுமது.] இ-ள். நனவெனவொன்று, நனவென்றுசொல்லப்படுகின்ற ஒருபாவி- இல்லையாயின், இல்லாவிட்டால்-கனவினான்,கனவினிடத்து வந்துகூடிய-காதலர், தலைவர்! நீங்கலர், (என்னைப்) பிரியார். எ - று. ✲ஒன்றென்பது, அதன்கொடுமை விளக்கி நின்றது. அதுநடுவே புகுந்துகனவைப் போக்கி அவரைப் பிரிவித்ததென்பது படநின்றமையால். மன், ஒழியிசை. கனவிலே பெற்றுப்பொறுக்கின்றமைசொல்லியபடி. (௬)

நனவினு னல்காக் கொடியார் கனவினு ....*
னென் னெம்மைப் பீழிப் பது ....*

[இது. விழித்துத் தலைவனைக்காணாத தலைவிகனவிற் புணர்ச்சிநினைந்து பொருமற் சொல்லியது.] இ-ள். நனவினான்(ஒருதினமாயினும்) நனவில்வந்து - நல்கா, அருள்செய்யாத - கொடியார், பாதகர்! கனவினான், (தினந்தோறும்) கனவில்வந்து- எம்மை, எம்மை- பீழிப்பது, வருத்துவது! என், எந்தச்சம்பந்தம்பற்றி. எ-று. ❋ தன்னைத்தனியே விட்டுப் பிரிதலும், பின்னினைந்து வாராமையும்- நோக்கி கொடியாரென்றும்- கனவிலே தோளின்மேலராய் விழித்தபோது மறைதலால் அதனாலும் துன்பமாகின்ற தென்றற்கு.பீழிப்பதென்றும் - சொல்லினள். உலகத்தார், நனவிலே இல்லாதது கனவிலும் இல்லையென்பார் யாம் அதுகண்டில மென்பதாம். (எ)

துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கா..................*
னெஞ்சத்த ராவர் விரைந்து ....*

[இது-தான்பொறுத்தற் பொருட்டுத் தலைவனைஇயற்பழித்ததோழிக்குத் தலைவி இயற்பட்டச்சொல்லியது.] இ-ள். (என்னெஞ்சுவிடாமல் உறைகின்றகாதலர்) துஞ்சுங்கால், (யான்)தூங்கும்போது-தோண்மேலராகி.தோளின்மேலுள்ளவராகி- விழிக்குங்கால், (பின)விழிக்கும்போது - விரைந்து, விலைவுற்று - நெஞ்சத்தராவர், (பழைய) நெஞ்சினுள்ளவராவர். எ - று. ❋ புணர்ச்சிவிட்டு மறைகிற கொடுமைபற்றி விரைந்தென்றாள். ஒருகாலும் என்னைவிட்டு நீங்கியதியாதவரை நீநோவதுதகாதென்பதாம். (அ)

௱௨௨-ஆம்-அதி-கனவுநிலையுரைத்தல்.

(௪ அகு)

நனவினு னல்கானா நோவர் கனவினாற் ....*
காதலர்க் காணா தவர் .... *

[இதுவுமது.] இ-ள். (தமக்கு ஒருகாதலர்இல்லாமையாலே-கனவினான், கனவிலே- காதலர்க்காணாதவர், அக்காதலனைக் காணலறியாதமகளிர்! நனவினால், (தாம் அறிய)நனவில்வந்து- நல்கானை,அருள்செய்யாத(எனது) காதலனை- நோவர், (அன்பிலனென்று)நோவாநிற்பர். எ-று. ❀ இயற்பழித்தது பொருது.பிணங்குகின்றாளாகலால், பன்மைதோன்றச்சொல்லினாள். தமக்கும் தலைவருளராகஅவரைக் கனவிலே கண்டு அறிவாராயின் நமதுதலைவர் கனவினிடத்துநாம் அறியவந்து அருள்செய்தலறிந்து நோகாரென்பதாம். . (௬)

நனவினா னந்நீத்தா ரென்பர் கனவினாற் .... *
காணார்கொ லிவ்வூ ரவர்........ .... *

[இதுவுமது.] இ-ள். இவ்வூரவர்,இவ்வூரின்மகளிர்-நனவினால்,நனவினிடத்து-நந்நீத்தாரென்பர், நம்மைவிட்டுநீங்கினாரென்று (தலைவர்மேலேகொடுமை) சொல்லாநிற்பர். கனவினான், கனவினிடத்து-காணார்கொல், (அவர்நீங்காதுவருதலைக்) கண்டறியாரோ. எ-று.❀ எனக்குந் தனக்கும்வேற்றுமையில்லையாயின்யான்கண்டது,தானும் கண்டு அமைவள் அதுகாணாது அவர்மேலேகொடுமைசொல்லுகின்றமையால்-அயலாளே யாமென்னுங்கருத்தால் இவ்வூரவரென்றாள்.

௱௨௩-ஆம் அதி- பொழுதுகண்டிரங்கல்.

அஃதாவது - மாலைப்பொழுது வந்தவிடத்து அதனைக் கண்டு தலைவி இரங்குதல். கனவுமுந்துறுத வினையில்லையென்பது பற்றிப் பகற்பொழுது பொறுத்திருந்த தலைவிக்குஉரியதாகலால் இதுகனவுநிலையுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்

.... *

வேலைநீ வாழி பொழுது.......... ....

.... *

[இது-பொழுதொடு பிணங்கிச் சொல்லியது.] இ-ள். பொழுது, பொழுதே-நீ, நீ! -மாலையோவல்லை, (முன்னாள்களின்வந்த) மாலையோவல்லை.-மணந்தார், (அந்நாள்களிலே காதலரைக்கூடிய) மகளிரது-உயிருண்ணும், உயிரையுண்ணுகிற-வேலை, முடிவுகாலமாயிருந்தாய். எ-று. ❁ முன்னாள்-கூடியிருந்தநாள். அந்நாள் மணந்தாரெ

[௬௨]

(சு கூ ய)

௱உ௩-ஆம்-அதி-பொழுதுகண்டிரங்கல்

ணவே பின்பிரிந்தாராதல் பெறப்பட்டது.

புச்சொல்.

வாழியென்பது - குறிப்

(க)

புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல் ..... *
வன்கண்ண தோநின் றுணை ... . *

[இது-தலைவி தன்னு ளனுபவத்தை மாலைப்பொழுதின் மேலிட்டுச்சொல்லியது.] இ-ள். மருண்மாலை, மயங்கியமாலையே - (நீயும்!)-புன் கணணை, (எம்போல்) ஒளியிழப்பை யுடையையா யிருந்தாய்.-வாழி, வாழ்வாயாக - நின்றுணை, உனது துணையும்!- எங்கேள்போல், எமது துணைபோல்-வன்கண்ணதோ, இரக்கமில்லாமையுடையதோ. (சொல்லு.) எ-று. ❁ மயங்குதல்-பகலும், இரவும், தம்முள்ளே கலத்தல்.-ஒளியிழத்தல் பற்றித் துணையும் உண்டாக்கிச் சொல்லினாள்,-துணையுமென்னு மும்மைவிகாரத்தால் தொக்கது.-எமக்குத் துன்பஞ்செய்தாய் நீயும் இன்பமுற்றிலையென்னுங் குறிப்பால் வாழியென்றாள். (உ)

பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்..... *
துன்பம் வளர வரும்.......... .... *

[இது - பொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.] இ-ள். (தலைவர் கூடியநாளெல்லாம்) - பனியரும்பி, (என்முன்னே) நடுக்கமடைந்து-பைதல்கொண்மாலை, பசந்துவந்தமாலையானது!-துனியரும்பி, (எனக்கு) உயிர்வாழ்தலில் வெறுப்புண்டாகி-துன்பம், (அதற்கு உண்டாகிற) துன்பம்-வளர, (ஒருகாலைக்கொருகால்) மிக-வரும், வருகின்றது. எ-று. ❁ குளிர்ச்சிதோன்ற மயங்கிவரு மாலையென்னுஞ் செம்பொருள்-குறிப்பால் அறியநின்றது. யான் பொறுக்கும்வழி என்னென்பது குறிப்பெச்சம். (ஙு)

காதல ரில்வழி மாலை கொலைக்களத் ... . *
தேதிலர் போல வரும் .... *

[இதுவுமது] இ-ள். மாலை, (தலைவர் உள்ளபொழுதெல்லாம் என் னுயிர்தளிக்கவந்த) மாலை!-காதலரில்வழி, தலைவரில்லாத இப்பொழு து-கொலைக்களத்து, கொலைசெய்கிறகளத்து - ஏதிலர்போல, கொலை ஞர்போல-வரும், (அவ்வுயிரைக்கொள்ளுதற்கு) வருகின்றது.எ-று. ❋ ஏதிலர்-அருள்யாதுமிலார். முன்னெல்லாம் எனக்கு நட்பாயின் பஞ்செய்துவந்தபொழுதும் இன்று என்மேல்பகையாய்த்துன்பஞ் செய்துவருகின்றது யான்பொறுக்கும்வழி என்னென்பதாம். (௪)

காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன் கொல்யான்...... *
மாலைக்குச் செய்த பகை... *

௱உரு-ஆம், அதி-பொழுதுகண்டிரங்கல்.

(சகூக)

[இதுவுமது] இ-ள். (காலையும், மாலையும், அவர் கூடிய நாள் போலல்லாமல் இன்று வேறுபட்டு வருகின்றன. அவைகளுள் -காலை க்கு, காலைப்பொழுதிற்கு-செய்த, (என்னாலே) செயப்பட்ட-நன்று, உபகாரம்!-என், யாது-யான்,நான்-மாலைக்கு, மாலைப்பொழுதிற்கு- செய்த், செயப்பட்ட-பகை, அபகாரம்!-எவன்யாது. எ-று.❋ கொ ல்லிரண்டும்-அசைகள். கூடியநாளிலே பிரிவாமென்று அஞ்சப்பண் ணியகாலை அது நீங்கி இந்நாளிலே கங்குல்வெள்ளத்திற்குக் கரையா ய்வருகின்றதென்னுங்கருத்தால்- நன்றென்கொலென்றும், கூடிய நாளிலே இன்புஞ்செய்தமாலை அது நீங்கி இந்நாளிலே அளவில்லா த துன்புஞ் செய்யாநின்றதென்னுங் கருத்தால் - பகையென்கொலெ ன்றும், சொல்லினள், பகை-ஆகுபெயர். தன்னோடு ஒத்தகாலைபோ லிராமல் மாலை-தன்கொடுமையால் துன்பஞ்செய்கின்றதென்பதாம்.

மாலைநோய் செய்தன் மணத்தா ரகலாத .... *
காலை யறிந்த திலேன் .... *

[இது-இன்றுஇப்படிப்பட்டவளாகின்றநீ அன்றுஅவர்பிரிவிற்கு எப்படி உடன்பட்டாயென்ற தோழிக்குத்தலைவிசொல்லியது.] இ-ள் மாலை, (முன்னெல்லாம் எனக்குநட்பாய் இன்பஞ்செய்துவந்த) மாலை - நோயசெய்தல், (இன்றுபகையாய்த்) துன்பஞ்செய்தலை-மணந்தார், தலைவர், அகலாதகாலை, பிரிதற்குமுன்னே - அறிந்ததிலேன், அறியப்பெற்றிலேன். எ-று. ❀ இப்படி வேறுபடுதல்அறிந்திலேன் அறிந்தேனாயின் அவர் பிரிவிற்கு உடன்படேனென்பதாம். (சு)

காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி.. .. .. *
மாலை மலருமிந் நோய் .... *

[இது - மாலைப்பொழுதில் இப்படிப்பட்டவளாகுதற்குக்காரணம் யாதென்ற தோழிக்குத்தலைவிசொல்லியது.] இ-ள். இந்நோய் இக்காமநோயாகிய (பூ) ! - காலையரும்பி, காலைப்பொழுதில் அரும்பி - பகலெல்லாம் போதாகி, பகற்பொழுதெல்லாம் பெரியஅரும்பாய்முதிர்ந்து - மாலைமலரும், மாலைப்பொழுதில் மலர்கின்றது. எ-று. ❀ தூங்கியெழுந்தபொழுதாகலால், கனவிலேபுணர்ந்தமை நினைந்து பொறுத்தல்பற்றி- காலையரும்பியென்றும், பின்பொழுது செல்லச்செல்ல அதுமறந்து பிரிவுநினைத்துப் பொறுளாதல்பற்றி- பகலெல்லாம்போதாகியென்றும், தத்தந்துணைகளை நினைத்துவந்து சேரும் விலங்குகளையும், மக்களையும், கண்டு தான்அக்காலத்துஅனுபவித்த இன்பத்தை நினைந்து பொறுமைமிகுதல்பற்றி-மாலைமலருமென்றும், சொல்லினாள். (எ)

(சகஉ)

ஙஉரு-ஆம், அதி-பொழுதுகண்டிரங்கல்.

அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன் .... *
குழல்போலுங் கொல்லும் படை ... . *

[இதுவுமது.] இ-ள். ஆயன் குழல், (முன்னெல்லாம் இன்பஞ்செய்த) இடையனது வேணுநாதம்! அழல்போலும், (இப்போது) நெருப்புப்போலே சுடுவதாகி- மாலைக்குத்தூதாகி, மாலைக்குத்தூதுமாகி-(அம்மாலைவந்து என்னைக்கொல்லுமிடத்து) கொல்லும்படை, கொலைசெய்யும் படையுமாயிற்று. எ-று. ❀ பின்வந்தபோலுமென்பது, உவமையசை. - முன்னே வரவை அறிவித்தலால் தூதாயிற்று. - கொல்லுதற்கருவியாதலால்,படையாயிற்று.- தானே சுடவல்லமாலை இந்தத்துணையையும் பெற்றால் என்னசெய்யாதென்பதாம். (அ)

பதிமருண்டு பைத லுழக்கு மதிமருண்டு .... *
மாலை படர்தரும் போழ்து .... *

[இதுவுமது.] இ-ள். (இதற்குமுன்னெல்லாம் யானேமதிமயங்கி நோயுழந்தேன்) மதிமருண்டு, (இனிக்கண்டாரும்) மதிமருளும் வகை-மாலை, மாலைக்காலம் - படர்தரும்போழ்து, வரும்பொழுது- பதி, இவ்வூரெல்லாம்! மருண்டு, மயங்கி - பைதலுழக்கும், நோயை அனுபவிக்கும் எ-று. ❀ பின்மருண்டென்பது, மருளவென்பதன் பொருளில்வந்தது. கூற்றமாகநினைத்துச்சொல்லினளாகலால்,மாலை படர்தரும் போழ்தென்றாள்-யான் இறந்துபடுவனென்பதாம். (க)

பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை .... *
மாயுமென் மாயா வுயிர் .... *

[இதுவுமது.] இ-ள். என்மாயாவுயிர், (பிரிவைப்பொறுத்து) இறவாதிருந்த என்னுயிரானது ஓ - பொருண்மாலையாளனை, பொருளியல் பேதமக்கியல்பாக வுடையவனை-உள்ளி, நினைந்து-மருண்மாலை, இம்மயங்குமாலையிலே-மாயும், மாய்கின்றது. எ-று. ✲ வருதற்குக் குறித்த பருவம் கழியவும் பொருண்முடிவுநோக்கி வாராமையால், சொல்வேறு படாமையாகிய தம்மியல்பொழிந்தவர் அப்பொருளியல்பே தம்மியல்பாயினர். காலம் இதுவாயிற்று. இனிச்சொலலுகின்ற விதத்தால், பயன் இல்லை யென்பதாம். (ய)

௲உச-ஆம்-அதி-உறுப்புநலனழிதல்.

அஃதாவது-தலைவியினுடைய கண்ணும், தோளும், நெற்றியும், முதலாகிய அவயவங்கள் தம்மழகழிதல். இஃது ௲உச-ஆம், அதி-உறுப்புநலனழிதல். (சகொ௬)

இரக்கமிகுந்தவிடத்து நிகழ்வதாகலால்-பொழுதுகண்டிரங்கலின் பின்வைக்கப்பட்டது.

சிறுமை நமக்கொழியச் சேட்சென்றா ருள்ளி
.... ✲
நறுமலர் நாணின கண் ....
.... ✲

[இது- பொருமை மிகுதியால் வேறுபட்ட தலைவிக்குத் தோழி சொல்லியது.] இ-ள். சிறுமை, இப்பொருமை- நமகமகொழிய,நம் மிடத்துநிற்க- சேட்சென்றார், நெடுந்தூரத்திலே சென்றதலைவரை- உள்ளி, நினைத் தழுதலால்)- கண், (உன் கண்கள்!-(ஒளியிழந்து - நறுமலர், (முன்னே தமக்குநாணின), நல்ல மலர்களுக்கு- நாணின, (இன்று)நாணிவிட்டன. எ-று. ❁ உள்ளுதலென்பது- காரியத்துக்கு ஆகுதலால்-ஆகுபெயர்.- இவைகண்டோர் அவரைக் கொடியரென்று சொல்லுவர் நீ பொறுத்தல் வேண்டுமென்பதுகருத்து. (க)

நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும் .... *
பசந்து பனிவாருங் கண் ... . *

[இதுவுமது.]இ-ள். பசந்து, நிறம்வேறுபட்டு- பனிவாருங்கண், நீர்வார்கின்றகண்கள்!- நயந்தவர், (நம்மால்)விரும்பப்பட்டவரது- நல்காமை, அருள்செய்யாமையை-சொல்லுவபோலும், (பிறர்க்குச்சொல்லுவ)போல்கின்றன-(இனி நீ பொறுத்தல்வேண்டும்). எ-று. ❁ சொலலுவபோலல் அதனை அவர் அறிதற்கு அனுமானமாக்குதல்.

தணந்தமை சால வறிவிப்ப போலு ... . *
மணந்தநாள் வீங்கிய தோள்......... .... *

[இதுவுமது] இ-ள்.மணந்தநாள்,(தலைவர்) கூடியநாளில்-வீங்கிய (இன்பமிகுதியால்பூரித்த)தோள்,(நினது)தோள்கள்!-தணந்தமை, (இன்றுஅவர்)பிரிந்தமையை-சாலவறிவிப்பபோலும், விளங்கஅறிவிப்பவைபோல் வாடுகின்றன.(இதுதகாது) எ-று. ❁ அன்றும் அப்படி பூரித்து.இன்றும் இப்படிமெலிந்தால் இரண்டுங்கண்டவர்கழிவில் அறிந்து அவரை அயோக்கியரென்பாரென்பதாம். (ரு)

பணைநீங்கிப் பைந்தொடி சோருந்
துணைநீங்கித்..... .... *
தொல்கவின் வாடிய தோள்............ ... .
.... *

[இ-துவுமது.] இ-ள். துணை நீங்கி,(அன்றும்) துணைவர் நீங்குதலால்- (அவராலே பெற்ற செயற்கையழகுமாத்திரமல்லாமல்)- தொல்கவின், பழைய இயற்கையழகும்-வாடியதோள்,இழந்தஇத்தொள்கள்!- (இன்று அதற்குமேலே)- பணை நீங்கி, (தம்) பெருமையிழந்து- பைந்தொடி, பசும்பொன்வளைகள்- சோரும், கழலுகின்றன.

(௬௬௬) ௱௨௬-ஆம்,அதி-

உறுப்புநலனழிதல்.

(இவை இப்படிச்செய்யுந்தன்மையனவல்ல.) எ-று.❁ அன்றும்பிரிந்தாரொன்று அவரன்பில்லாமையுணர்த்தி இன்றும் குறித்த பருவத்திலவத்திலொன்று அவர் பொய்மை புணர்த்துகின்றன. இனிஅவைகளைச் சொல்லுகிறவர்மேல் குறையுண்டோவென்பதாம். (௬)

கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு .... ❋
தொல்கவின் வாடிய தோள் ....
.... ❋

[இ-துவுமது.] இ-ள். கொடியார், (தழுவுங் கைவிலகினும் பொறுதவளுக்கு இப்படிக் காலநீட்டிப்பில் என்னுமென்றுநினையாத, கொடியவராது- கொடுமை, பொல்லாங்கை-உரைக்கும், சொல்லுகின்றன- தொடியொடு, வளைகளுங்கழன்று- தொல்கவின்வாடியதோள் பழைய இயற்கையழகு மிழந்த இத்தோள்கள்! (இனி அதனைமறக்கும்வழியாது.) எ-று.❁ அவரோடு கலந்ததோள்களே சொன்னால் அயலார் சொல்லுதல் சொல்லவேண்டுமோவென்பதாம்.] (௭)

தொடியொடு தோணெகிழ நோவ லவரைக் .... ❋
கொடிய ரெனக்கூற னொந்து ....❋

[இது- தான்பொறுத்தற் பொருட்டுத் தலைவனை இயற்பழித்த தோழிக்குத் தலைவிசொல்லியது.] இ-ள், (யான்பொறுக்கவும் என் வசப்படாமல்) தொடியொடு, வளைகள் கழலும்படி- தோணெகிழ, தோள்கள்வாட-(அவற்றைக்கண்டு)-அவரை, அவரை- கொடிய செனக்கூறல்,(நீ) கொடியவரொன்றுசொல்லலை- நொந்து, பொருமல்- நோவல், (என்னுள்ளே) நோகின்றேன். எ-று. ❊ யான் பொருது வாாகின்றது- அவர்வாரா திருத்தற்கல்ல நீசொல்லுகின்றதற் கென்பதாம். (௬)

பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென் .... *
வாடுதோட் பூச லுரைத்து .... *

[இது அவ்வியற்பழித்தல்பொறுது தலைவிதன்னெஞ்சிற்குச்சொல்லியது.] இ-ள். நெஞ்சே, மனமே - கொடியார்க்கு, (இவளாலே கொடியாரொன்று சொல்லப்பட்டவர்க்கு- என்வாடுதோள், என்வாடுகின்ற தோளினுல் விளைகிற- பூசல், ஆரவாரத்தை- உரைத்து,சொல்லி- பாடு, ஒருமேன்பாட்டை பெறுதியோ,அடையவல்லையோ-(வல்லையாயின் அதனையொப்பது இல்லை. எ-று. ❊ கொடியார்க் கென்பது- கொடியரல்லரென்பது தோன்றநின்ற குறிப்புச்சொல். வாடு தோளென்பது-அவைதாமே வாடாநின்றவென்பது தோன்றநின்றது. உன்சொல்லைக் கேட்டவுடன் அவர்வருவர் வந்தால் இவையெல்

௱௨௪-ஆம்,அதி-

ஊறுப்புநலனழிதல். (௬௰௫)

லாம் நீங்கும் நீங்கலால் அது எனக்குக் காலத்திறுற்செய்த நன்றியாம் ஆகலால் அதன்பயனெல்லாம் அடைவாயென்னுங் கருத்தால் பாடுபெறுதியோவென்றாள். (௭)

முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது .... *
பைந்தொடிப் பேதை நுதல் .... *

[இது- தொழிலை முடித்துத் திரும்பிவருதலுற்ற தலைவன் முன்னடந்ததை நினைத்துத் தன்னுள்ளே சொல்லியது.]-இ-ள். முயங்கிய கைகளை(தன்னைஇறுகத்) தழுவியகைகளை- (இவளுக்கு நோமென்று நினைத்து)-ஊக்க, (ஒருதினம்) தளர்த்தினேனாக(அம்மாத்திரமும் பொறாமல்) பைந்தொடிப்பேதைநுதல், பசியவளைகளையணிந்தபேதையது நெற்றியானது! பசந்தது, நிறம்வேறுபட்டது.[அப்படிப் பட்டநெற்றி இப்பிரிவிற்கு யாதுசெய்யுமோ)எ-று. ❁ இனிக்கடிதிலே செல்லவேண்டுமென்பது கருத்து. (௮)

முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற .... *
பேதை பெருமழைக் கண் .... *

[இதுவுமது.] இ-ள். அப்படித் தழுவியகைகளைத் தளர்த்தலால்)- முயக்கிடை, அப்புணர்ச்சிக்கு நடுவே-தண்வளிபோழ, சிறுகாற்று நுழைந்ததாக-(அவ்வளவிடையூடும்பொறாமல்,பேதைபெருமழைக்கண், பேதையினது பெரியகுளிர்ந்தகண்கள்! பசப்புற்ற, பசலைநிறமடைந்தன.(அப்படிப்பட்டகண்கள்- மலைகளும் காடுகளும் நாடுகளும் ஆகிய இவ்விடையீடுகளையெல்லாம் எப்படிப் பொறுத்தன.) எ-று. ❁ தண்மை இங்கே மென்மைமேல்நின்றது. போழவென்றது- உடம்பிரண்டும் ஒன்றானது தோன்றநின்றது.] (௯)

கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே .... *
யொண்ணுதல் செய்தது கண்டு .... *

[இதுவுமது.] இ-ள். கண்ணின்பசப்போ, (சிறுகாற்று நுழையவிந்த) கண்களின்பசப்போ!- பருவரலெய்தின்று, துன்பமடைந்தது. ஒண்ணுதல், (தனக்கு அயலாகிய) ஒளிபொருந்திய நெற்றியால்-செய்தது, விளைக்கப்பட்ட பசப்பை- கண்டு, பார்த்து. எ-று ❁ அஃது கைகளைத்தளர்த்திய வளவிலே பசந்தது. யான்- கைகளையும்தளர்த்தி மெய்களும் நீங்கி அக்காற்று உள்ளே நுழையுமட்டும்பசந்திலேனென்றுதன்வன்மையும், அதன்மென்மையும், கருதி வெள்கிற்றென்ப ... நலனழிய

தாம. ஆகமவ அவருருப்பு...

ம் யாம்கடிதிலே செல்லுவோமென்பது கருத்தாயிற்று. (ய)

௱௨௫-ஆம்-அதி-

நெஞ்சொடுகிளத்தல்.

அஃதாவது- பிரிவுபொறுமை யேற்படத் தனக்கு ஓர்பற்றுக் கோடு காணாததலைவி தன்னெஞ்சொடு செய்திறன் அறியாது சொல்லுதல. இஃது உறுப்புக்கள் தமது நலனழிந்தவழி நிக ழ்வதாகலால் அதன்பின்வைக்கப்பட்டது.

நினைத்தொன்று சொல்லாயோநெஞ்சேயெனைத்தொன்று
மெவ்வநோய் தீர்க்கு மருந்து .... *

]இது- தன்பொறுமை தீருந்திறநாடியது.] இ-ள். நெஞ்சே, ம ணமே- எவ்வநோய், ஒன்றாலுந் தீராதநோயை- தீர்க்குமருந்து,தீர் க்குமருந்தாவது- ஒன்று, ஒன்றைநீ-(நான் அறியும்படியாக) எனை த்தொன்றும், எப்படிப்பட்டதொன்றாயினும்- நினைத்து, அறிந்து- சொல்லாயோ, (எனக்குச்)சொல்லாயோ. எ-று.* உயிரினுஞ் சிற ந்த நாணினைவிட்டுச் செய்வது யாதொன்றாயினு மமன்றற்கு எனை த்தொன்று மென்றாள். (க)

காதலவரில ராகநீ நோவது .... *

*பேதைமை வாழியென் னெஞ்சு .... *

[இது- தலைவிதலைவனைக்காணுதலிலே ஆசைமிகுதியால் சொல்லியது.] இ-ள். என்னெஞ்சு, எனதுநெஞ்சே- வாழி, வாழ்வாயாக- அவர், அத்தலைவர்- காதலிலராக, (நம்மேல்)ஆசையிலராகவும்-நீநோவது, நீ (அவர் வரவுபார்த்து)வருந்துதற்குக்காரணம்!-பேதைமை (உன்) னறியாமையேயாம். (வேறொன்று இல்லை) எ-று ※ நம்மை நினையாமையால் நம்மிடத்து ஆசையிலரென்பதறியலாம் அதை யறியாமை மேலும் அவரிடத்துப்போக நினையாது அவர் வரவுபார்த்து வருந்துகின்றாய் இது நீ செய்துகொள்ளுகின்றதென்னுங் கருத்தால் பேதைமையென்றாள். வாழி இகழ்ச்சிக்குறிப்பு. யாம் அவரிடத்துச் செல்லுதலே அறிவாவதென்பதாம். (உ)

*இருந்துள்ளி யென்பரிதனெஞ்சே பரிந்துள்ளல் .... *
பைதனோய் செய்தார்கணில் .... *

[இதுவுமது.] இ-ள். நெஞ்சே, மனதே- இருந்து, (அவரிடத்துக்கும்போகாமல் இங்கேயும் இறந்திடாமல்)இருந்து- உள்ளி, (அவர் வரவை) நினைந்து- பரிதல் (நீ) வருந்துகின்றது!- என், என்னை- பைதநோய்செய்தார்கண் இத்துன்பநோய் செய்தவரிடத்து- பரிந்து, (நமக்கு)இரங்கி உள்ளல், (வர) நினைத்தல்!-இல், உண்டாகாது.,எ-று. ※ நம்மிடத்து அருளுடையவ ரல்லாமையால் தாமாகவாரார்

ஙஉரு-ஆம்,அதி[illegible]நெஞ்சொடுகிளத்தல்.

(சுகூஎ)

நாம் அவரிடத்துக்குச்செல்லுதலே இனித்தருவதென்பதாம்.

கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத் ...... *

(௩)

தின்னு மவர்க்காண லுற்று .... *

[இதுவுமது.] இ-ள். நெஞ்சே,மனதே (நீ அவரிடத்துச் செல்லலுற்றாயாயின்)-கண்ணுங் கொளச்சேறி, இக்கண்களையும்உடன்கொண்டுசெல்லு-(அல்லாமல் நீ மாத்திரம்செல்வாயானல்) இவை, இக்கணகள்!-அவர்க்காண லுற்று, அவரைக்காணல்வேணடி- என்னைத்-தின்னும், (நீ காட்டென்று)தின்பவைபோல்வருத்தும். எ-று ❄ கொளவென்பது- கொண்டென் பொருளில்வந்தது அந்நலிவுதீர்க்கவேண்டுமென்பதாம். என்றது

தான்செல்லல்குறித்து. (ச)

செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா......... .. *

யுற்றா லுறாஅ தவர் .... *

[இதுவுமது.] நெஞ்சே, மனமே- யாம்,நாம்-உற்றால்,(தம்மை) விரும்ப- உறாஅதவர், (நம்மை) விரும்பாத தலைவரை - செற்றாரென, வெறுத்தாரென்று நினைந்து- கைவிடல், (பிணங்கிக்) கைவிட்டிருக்கும்வழி!- உண்டோ, (நமக்கு)உண்டோ- (இல்லை) எ-று.❄அவ்வலியில்லாமையால் அவரிடத்துக்குச் செல்வதே நமக்குத் தகுவதென்பதாம். (ரு)

கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணராய் ... *

பொய்க்காய்வு காய்திஎன் னெஞ்சு .... *

[இது- தலைவன் கொடுமை நினைந்து செல்லுதற்கு உடன்படாத நெஞ்சினைக் கோபித்துச் சொல்லியது.] இ-ள்! என்னெஞ்சு,எனதுநெஞ்சே- (யான் தம்மோடு பிணங்கினுல்)- கலந்து, புணர்தலால்- உணர்த்துங்காதலர், (அப்பிணக்கை) நீக்கவல்லதலைவரை-கண்டால், பார்த்தால்- புலந்து (பொய்யாகவாயினும் ஒருதரம்) பிணங்கி- உணராய், (பின்) அதனை நீங்கமாட்டாய் - (அதுவுமாட்டாதநீ இப்போது) பொய்க்காய்வு காய்தி, (அவரைக் கொடியரென்று)பொய்க்காய்வாகக்காய்கின்றாய்- (இனி அதனையொழிந்து) அவரிடத்துச் செல்லத்துணி.) எ-று ❄ புணர்தலால்

உணர்த்தலாவது கலவியின்ப
த்தைக்காட்டி அதனால் மயக்கிப் புலவிக்குறிப்பையொழித்தல். கண்டால் வெறுக்கமாட்டாத நீகாணுதவழி வெறுக்கின்றதனால் பயன் இல்லை யென்பதாம்.] (௬)

காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே .... ※
யானோ பொறேனிவ் விரண்டு .... ※
[௬௫]

(௬௬அ) ௱௨௫- ஆம்-

அதி-நெஞ்சொடுகிளத்தல்.

[இது- நாணம் தடுத்தலாலே அச்செல்லுதலொழியுந்தலைவிசொல்லியது.] இ-ள். நன்னெஞ்சே, நல்லமனமே- காமம்விடுவொன்று ஒன்று (நாணம்விடமாட்டாயாகில்) காமவிருப்பத்தைவிடு- நாண் விடொன்று) ஒன்று (காமவிருப்பத்தைவிடமாட்டாயாகில்) நாணத்தைவிடு- (இரண்டும் விடாமை உன்கருத்தாகில்)இவ்விரண்டு(ஒன்றற்கொன்று பகையாகிய) இவ்விரணடையும் யானோ, நானோ!- பொறேன், (ஒருசேரத்) தாங்கவல்லேனல்லேன். எ-று. ※ யானோ வென்னும் பிரிநிலை யோகாரம். நீ பொறுப்பினுமென்பதுபடநின்றது. நன்னெஞ்சேயென்றது, இரண்டையும் விடாமல் பெண்மையை நிலைபெறச்செய்தலால் நல்லை யென்னுங்குறிப்பாயிற்று. அது நன்றேயெனினும் என் னுயிருண்டாதல போதாமையால் அதற்கு ஆகின்றிலே னென்பதாம். இரண்டுமென்பதன் முற்றும்மைவிகாரத்த ால்தொக்கது.

(எ)

பரிந்தவர் நல்காரொன் றேங்கிப் பிரிந்தவர்

.... *

பின்செல்வாய் பேதையென் னெஞ்சு ...., ... *

[இதுவுமது.] இ-ள். என்னெஞ்சு, எனதுநெஞ்சே- அவர், அவர்- (இப்பொருமை அறியாமையால்) பரிந்து, நொந்துவந்து - நல்கா ரொன்று- அருள் செய்யா ராயினுரென்று நினைந்து- (அதை அறிவித்தற்பொருட்டு)-பிரிந்தவர்பின், (நம்மைப்) பிரிந்துபோகிய தலைவர்பின்னே ஏங்கி, துன்பமுற்று- செல்வாய், போகலுற்றநீ! பேதை, ஒன்றுமறியாய் எ-று. ❁ பொருமையறிந்திருந்தும் அருள்செய்யாமல் போயினரைக் காணுதவிடத்தே நாம்போய்அறிவித்தமாத்திரத்தில்அருள்செயவருவாரொன்று நினைத்தமையால்பேதையென்ருள்.

உள்ளத்தார் காத லவராக வுள்ளிநீ..... .... *

யாருழைச் சேறியென் னெஞ்சு ... . *

[இதுவுமது.] இ-ள். என்னெஞ்சு, எனதுநெஞ்சே-காதலவர், அன்பர்- உள்ளத்தாராக, (உன்)னுள்ளிருப்பவராக-(முன்னெல்லாங் கண்டிருந்தும்) நீ! உள்ளி, (இப்பொழுதுபுறத்தேதேடி) யாருழை, யாரிடத்து- சேறி, செல்லுகிருய். எ-று. ❁ உன்னுளிருக்கிறவரைப்புறத்துத்தேடிச்செல்லல் நகையுடைத்து அதையொழியென்பதாம். (௯)

துன்னுத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா .... *

வின்னு மிழத்துங் கவின் ... . *

[இது- அவரைமறந்து பொறுத்தல்வேண்டு மென்பது தோன்றச்சொல்லியது.] இ-ள். துன்னு, (நம்மைக்) கூடாத வணணம்- துறந்தாரை, துறந்துபோயினரை- நெஞ்சத்துடையேமா, (நாம்)உள்

ளுடையேமாக- (முன்னிழந்தபுறத்தழகேயன்றி) இன்னும், இன்னமும்- கவின், (அகத்)தழகையும்- இழத்துப் இழப்போம். எ-று❁

அவர்நம்மைக்கூடாமல் துறந்தாராகவும்- நாம்
அவரை மறக்கமாட் டேமாகவும்-
போனமெய்யநூகேயன்றி நின்ற நிறையும்
இழப்போ மென்பதாம்.

(ய)

ளஉசு-ஆம்-அதி-நிறைய ழிதல்.

அஃதாவது- தலைவிமனதிலே
அடக்கப்படுமவைகளை ஆசைமி
குதியால் அடக்கமாட்டாமல் வாய்விடுதல். அது
அழிதற்குக்
காரணம் நெஞ்சொடுசொல்லுதலால் - இது
நெஞ்சொடு கிள
த்தலின்பின் வைக்கப்பட்டது.

காமக் கணிச்சி யுடைக்கு
நிறையென்னு .... *

நாணுத்தாழ் வீழ்த்த கதவு ... .*

[இது- நாணும் நிறையும் அழியாமல் நீ பொறுத்தல்வேண்டுமெ ன்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.] இ-ள். நாணுத்தாழ்வீழ்த்த நாணாகிய தாழினைக்கோத்த - நிறையென்னுங்கதவு, நிறையென்று சொல்லப்படுகிற கதவை- காமக்கணிச்சி, காமவேட்கையாகிய குந்தாலி! உடைக்கும், முறிக்கின்றது. (இனி அவைநிற்றலும் இலலை யான்பொறுத்தலும் இல்லை.) எ-று. ❁ நாணுள்ளவரைக்கும்நிறை அழியாதாகலால் அதனைத்தாழாக்கியும்- உள்ளிருப்பவைகளைப் பிறர்கொள்ளாமற் காத்தலால், நிறையைக்கதவாக்கியும்- வலியவையாய்த் தாமாக நீங்காத அவ்விரண்டினையும் ஒருசேர நீக்கலால் தன் காமவேட்கையைக் கணிச்சியாக்கியும்- சொல்லினாள். (௧)

காம மெனவொன்றோ கண்ணின்றென்

னெஞ்சத்தை .. *

யாமத்து மாளுந் தொழில் . ... *

[இது- நெஞ்சினிடத்துத் தோன்றிய காமம் நெஞ்சால் அடக்கப்படுமென்ற தோழிக்குத்தலைவிசொல்லியது.] இ-ள்.யாமத்தும்.(எல்லாருந்தொழிலொழிகிற) நடுராத்திரியிலும்-என்னெஞ்சத்தை, என் மனத்தை- தொழில, தொழிலிலே- ஆளும், (தண்டித்து) ஆளுகின்றது- (ஆதலால்) காமமெனவொன்று, காமமென்று சொலலப்பட்ட ஒன்று! ஓ,ஐயோ- கண்ணின்று, கண்ணோட்ட மில்லாதாயிருந்தது. எ- று. ❁ தொழிலிலே ஆளுதல், தலைவனிடத்துச் செல்லவிடுதல- தாயைத்தொழில்கொள்ளுதல், உலகநடையல்லாமையால், காமமெனவொன்றென்றும்- அது தன்னைக் கொள்ளுகின்றது அளவறியாது

(ரு௩) ௲உ௬-ஆம், அதி- நிறையழிதல்.

ளொள்ளுதலால், கண்ணின்றென்றும் -

மேல அடக்கப்படாமைசொல்லியபடி.
சொல்லினள். காமம் தன்னு

(உ)

மறைப்பேன்மற் காமத்தை யானோ குறிப்பின்றித் ...... *
தும்மல்போற் றோன்றி விடும் .. ..*

[இது- மகளிர்காமம் மறைக்கப்படுமென்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.] இ - ள். காமத்தை, இக்காமத்தைநீ- யான், நான்-ஓ, ஐயோ- மறைப்பேன், (என்னுள்ளே) மறைக்கநினைப்பேன்.(அதனுல்) குறிப்பின்றி, (இது) என்கருத்தின்வழிவாராமல்- தும்மல்போல், தும்மலைப்போல- தோன்றிவிடும், வெளிப்பட்டேவிடுகின்றது.எ-று ❊ மன், ஒழிபிசையில்வந்தது. எப்படித்தும்மல் அடங்குகின்ற தில்லையோ அப்படியே காமம் அடங்குகின்றதில்லையென்பதாம். [(ரு)

நிறையுடையே னென்பேன்மன் யானோவென் காம .. .. *
மறையிறந்து மன்றுபடும் .. .. *

[இதுவுமது] இ-ள். யான், நான்: ஓ,ஐயோ- நிறையுடையேனென்பேன், (இதுவரையும் என்ன) நிறையுடையேனென்று நினைத்திருப்பேன். (அதனுல்) என்காமம், எனது காமம்! மறைபிறந்து,மறைத்தலைக்கடந்து- மன்றுபடும் பலருமறியப்படுகின்றது-எ-று.❊மன் ஒழிபிசையில் வந்தது இனி இக்காமமானது என்னளவின் தல்லவெல்பதாம். (சு)

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைத்தன்மை காமநோ...... *
யுற்றா ரறிவதொன் றன்று ...... *

[இது- நம்மை மறந்தவரை நாமும்மறந்து விடுவேமென்ற தோழிக் குத் தலைவி சொல்லியது.] இ-ள். செற்றார்பின், தம்மை நீங்கிப் போனவர்பின்- செல்லா, செல்லாது தாமும் நீங்கிநிற்கிற- பெருந்தகைமை, நிறையுடைமையானது!- காமநோயுற்றார், காமநோயடைந்தவரால் அறிவதொன்றன்று அறியப்படுவதொன்றன்று. எ-று.❊ இன்பத்தோடு கழியுங்காலத்தைத் துன்பத்தோடு கழியும்படி செய்தலாலே, செற்றாரென்றாள். பின்செல்லுதல், மனத்தால் இடைவிடாது நினைத்தல். பெருந்தகைமை, ஆகுபெயர். காமநோயுறாதார், மானமுடையார். தன்றெனவறியாரிடத்தும்சென்றேநிற்கும்யான் அறிவதொன்றன்றென்பதாம். (௫)

செற்றவர் பின்சேறல் வேண்டியளித்தரோ...... *
வெற்றென்னை யுற்ற துயர் ...... *

[இதுவுமது.] இ-ள். செற்றவர்பின், (என்னை நீங்கிச்) சென்றவர் பின்னே - சேறல்வேண்டி, (யான்) செல்லல்வேண்டுதலால் - என்னை

௱உ௬-ஆம், அதி- நிறையழிதல்.

(௬௱௫)

யுற்றதுயர், என்னை யடைந்ததுன்பமானது! எற்று, எத்தன்மையது அளித்து, மிகநன்று. எ-று.❊ அரோ அசை. அளித்தென்பது, இகழ்ச்சிக்குறிப்பு இக்காமநோயானது, நான் சொல்லவும் கேட்கவும் ஆவதொன்றன்று மிகக்கொடியதென்பதாம். (௬)

நாணென வொன்றோ வறியலங் காமத்தாற் ...... *
பேணியார் பெட்ப செயின் ...... *

[இது-பரத்தையிடத்துப் பிரிந்துவந்த தலைவனோடு நிறையழிவினாலே கூடியதலைவி நீ பிணங்காமைக்குக் காரணம் யாதென்ற தோழிக்குச்சொல்லியது.] இ-ள். பேணியார், (நம்மால்) விரும்பப்பட்ட தலைவர்- (வந்து) காமத்தால், காமத்தினாலே- பெட்ப, (நாம்) விரும்பியவைகளை- செயின், செய்யுமளவில் நாமெனவொன்றோ, நாமென்று சொல்லப்பட்ட ஒன்றையுமோ? அறியலம், அறியமாட்டோமாயிருந்தது. எ-று. ❋ விரும்பியவை, வேட்கைமிகுதியினாலே நினைத்திருந்த கலவிகள். நிறையழிவால் அறியாமற்கூடியதன்குற்றநோக்கி அவளையுந் தன்னோடு சேர்த்துக்கொண்டு சொன்னாள். (எ)

பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம் ……… *
பெண்மை யுடைக்கும்படை ……… *

[இதுவுமது.] இ-ள். நம்பெண்மை, நமது நிறையாகிய (அரணத்தை) உடைக்கும், அழிக்கிற- படை, ஆயுதம்! பன்மாயக்கள்வன். பல பொய்கள் பேசவல்ல கள்வனுடைய- பணிமொழியன்றோ, தாழ்ந்த சொற்களன்றோ, (ஆனபின் அது நிற்கும் விதம்யாது) எ-று. ❋ பெண்மை, இங்கே தலைமைபற்றிநிறைமேல்நின்றது. வந்தால், பிணங்கக்கடவேமென்றும், பிணங்கினால்அவன் சொற்களாலும் செயல்களாலும் நீங்கேமென்றும் - இவைமுதலாக எண்ணிக் கொண்டிருந்த யாவையும் காணாமல் கலவியிலேதன்னினும் முற்படும்படிவந்து தோன்றினானென்றற்கு, பன்மாயக்கள்வனென்றாள். பணிமொழி தம்மினும் அதிக வன்புடையோனாகச்சொல்லுஞ் சொற்கள் - அவன் அப்படிப்பட்டவனாகச் சொற்கள்அனவயாக நமது நிறைஅழியா தொழியுமோ வென்பதாம். (அ)

புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங் ……… *
கலத்த லுறுவது கண்டு ……… *

[இதுவுமது.] இ-ள். (அவர் வந்தபொழுது) புலப்பலென, பிணங்கக்கடவேனென்று நினைத்து- சென்றேன், (அவரெதிர் நில்லாமல்வேறோரிடத்திலே) போயினேன். (போகியும்) நெஞ்சம், (என்)னெஞ்சமானது- (நிறையினில்லாமல் கீழறுத்துக்கொண்டுபோய்) கலத்தலு

றுவது, (அவரோடு) கலத்தலைத்தொடங்குவதை - கண்டு, அறிந்து- புல்லினேன், (இனி அதுவாயாதென்று) தழுவினேன். எ-று. ❋ வாயாமை, பிணங்குதற்குக் காரணமாகிய நெஞ்சுதானே கலத்தற்குக் காரணமாய் நிற்றலால் அந்நினைப்பு முடியாமை. (௯)

நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ .... ❋
புணர்ந்தூடி நிற்பே மெனல் ... . ❋

[இதுவுமது.] இ-ள். நிணந்தீயிலிட்டன்ன, நிணத்தைத் தீயிலிட்டால் அது உருகுமாறுபோல் தந்தலைவரைக்கண்டால்நிறையழிந்து உருகுகின்ற - நெஞ்சினார்க்கு, நெஞ்சினையுடையமகளிர்க்கு - ஊடி, (யாம்) பிணங்கி- புணர்ந்து, (பின்) புணர்ந்து-நிற்பேமெனல், (அந்நிலையிலே நிற்கக்கடவேமென்று நினைத்தல்! உண்டோ, உண்டாகுமோ- எ-று. ❋ யான் அத்தன்மையேனுகலால்! எனக்கு அது இல்லையாயிற்றென்பதாம். (௰)

௱௨௭-ஆம்-அதி-
அவர்வயின்விதும்பல்.

அஃதாவது - தூரதேசப் பிரிவிலே தலைவனும், தலைவியும், ஆசை மிகுதியால் ஒருவரையொருவர் காணுதற்கு விரைதல். இதனுள் தலைவிசொல் நிறையழிவால் உண்டாதலால் அச்சம்பந்தம்பற்றி அதன்பின்வைக்கப்பட்டது.

வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற

.... ❋

நாளொற்றித் தேய்ந்த விரல் ... .

.... ❋

[இது- தலைவிகாணற்கு விளைதலாற்சொல்லியது.] இ-ள். விரல், என்) விரல்கள்! அவர் சென்றநாள், அவர் (தம்மைப் பிரிந்துபோயநாள்களை- ஒற்றி, (சுவரிலே குறிவைத்துத்)தொட்டெண்ணுதலால்- தேய்ந்த, தேய்ந்தன. (அதுவேயன்றி) கண்ணும்,(என்) கண்களும்! வாளற்று, (அவர்வரும் வழிபார்த்து) ஒளியிழந்து - புற்கென்ற, புல்லியவாயின. (இவ்வாறாகியும் அவர்வரவுஉண்டாயிற்றில்லை) எ-று ❋ நாள், ஆகுபெயர். புல்லியவாதல், நுட்பமானவைகளைக் காணமாட்டாமை. இனியான்காணும்விதம் யாதென்பதாம். 'நாளெண்ணலும்- வழிபார்த்தலும்-ஒருகாற்செய்தொழியாமல் எப்போதும்செய்தலால் விதுப்பாயிற்று.] (க)

இலங்கிழா யின்று மறப்பினென் றோண்மேற் .... ❋

கலங்கழியுங் காரிகை நீத்து .... ❋

௱௨௭-ஆம் அதி -அவர்வயின்விதும்பல்.

(௫௱௫)

[இது- பொருமைமிகுதலால் எப்பொழுதும் நினையாதேசிறிது மறக்கல்வேண்டுமென்ற தோழிக்குத்தலைவி சொல்லியது.]இ-ள். இலங்கிழாய், விளங்காநின்ற ஆபரண முடையாய்- இன்று, (இறந்துபடுகின்ற) இந்நாளில்- மறப்பின், (தலைவரை) மறப்பேனாயின் - மேல், மறுபிறப்பிலும்- காரிகை, அழகானது! நீத்து, என்னைவிட்டு (நீங்க-என்றேள், எனதுதோள்கள்! கலங்கழியும், வளையல்கள்கழலப்பெறுவனவாம். எ-று. ❊ இலங்கிழாயென்பது, இதற்குநீயாதும் பரிகின்றுயில்லையென்னுங் குறிப்பிற்று. நீத்தென்பது,நீப்பவென்பொருளில் வந்தது. இச்சமயத்திலே அவரை நினைந்தால் மறுமையிலே அவரை அடைந்து இன்புறலாம் அதனுல் மறக்குந் தன்மையே னல்லேனென்பதாம். (உ)

உ னைசஇ யுள்ளந் துணையாகச் சென்றார் .... ❊
வரனைசஇ யின்னு முளேன் .... ❊

[இதுவுமது.] இ-ள்.உரனைசஇ,(இன்பத்தைவிரும்பாமல்,வெற்றியைவிரும்பி- உள்ளந்துணையாக, (நாம்துணையாதலைஇழந்து) தம்மனவெழுச்சிதுணையாக - சென்றார், போயினவர்!-வரனைசஇ,(அவைகளை இழந்து இங்கு) வருதலை விரும்புதலால்- இன்னும், இவ்வெல்லையிலும்- உளேன், உயிரோடிருக்கிறேன். எ-று. ❊ உரன்-ஆகுபெயர். அவ்வாசையால் உயிர்வாழ்கிறேன் அதுஇல்லையாயின்இறந்து படுவேனென்பதாம். (௩)

கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக் ....
.... ❊
கோடுகொ டேறுமென் னெஞ்சு .... ❊

[இதுவுமது.] இ-ள். பிரிந்தார், நீங்கிய காமத்தாராகி நம்மைப்) பிரிந்துபோனவர்!- கூடியகாமம், கூடிய காமத்துடனே வரவுள்ளி, (நம்மிடத்து) வருதலை நினைத்தலால்- என்னெஞ்சு, எனதுமனமானது!- வருத்தமொழிந்து- கோடுகொடேறும், மேன்மேலும் பருத்

தெழுகின்றது. எ-று. ❁ போர்க்குப்பிரியும்போதுகாமவின்பநோக்காமையும், அதுமுடிந்தவிடத்து அதுவே நோக்கலும் தலைவனுக்கு இயல்பாதலால்- கூடிய காமமோடென்றாள் - பருத்தெழுதல்॥ இய காமத்தினது தொழில்- நெஞ்சின்மேல ஏற்றப்பட்டது. அவ்வரவை நினையாமற் போவேனாயின் இறந்து படுவே னென்பதாம். (௮)

காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபி... .. .. ❋
நீங்குமென் மென்றோட் பசப்பு .... ❋

[இது- தலைவனது வரவுசொல்லிப் பொருந்தவளாய் நிறம்வேறுபடாதே என்ற தோழிக்குச்சொல்லியது.] இ-ள். கண்ணார, (என்) கண்

(௲௨௬)

௱உ௭-ஆம்-அதி-அவர்வயின்விதும்பல்.

களாரும்வகை- கொண்கனை- (என்) கணவனை- காண்க, (நான்!) காண்பேனாக-கண்டபின்-(அப்படிக்)கண்டபின்பு-என்மென்றோள்,என் மெல்லிய தோளிலுள்ள- பசப்பு,! பசலை- நீங்கும், (தானே) நீங்கும் எ-று. ❁ காண்கவென்றது. இங்கே வேண்டிக்கொள்ளுதற் பொருளிலே வந்தது. அதுவேண்டுமென்பது படநின்றமையால் மன்னொழியிசை. கேட்டவளவிலே நீங்காதென்பதாம். (௬)

வருகமற் கொண்க னொருநாட் பருகுவன்... .... ❋
பைதனோ யெல்லாங் கெட .... ❋

[இதுவுமது.] இ-ள். கொண்கன்! (இத்தனைநாளாக வாராதிருந்த தலைவன்! ஒருநாள், ஒருதினம்-வருக, (என்னிடத்து) வருவ[illegible]க,(வந்தால்) பைதனோயெல்லாம், துன்பஞ்செய்கின்ற இந்நோயெல்லாம்- கெட, நீங்க- அவ்வமிர்தத்தை-பருகுவன் (ஐம்பொறிகளாலும்) உண்பேன். எ-று. ❋ வருகவென்றதற்கும், மன்னென்றதற்கும், முன்சொல்லப்பட்டபடியேகொள்க. அக்குறிப்பு அவ்வொருநாளைக்குள்ளே இனிவரக்கடவநோய்களையும் கெடுப்பனென்பதாம். (௬)

புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின் .... ❋

[இதுவுமது.] இ-ள். கண்ணன்னகேளிர், கண்போற் சிறந்த நண்பர்- வரின், வருவாராயின்- புலப்பேன்கொல், (அவர்வரவு) நீட்டித்ததைக்குறித்துப்) பிணங்குவேனோ-புல்லுவேன்கொல், (என்பொறுக்கமாட்டாமையைக்குறித்துத்) தழுவுவேனோ- கலப்பேன்கொல், (இவ்விரண்டும் வேண்டுதலால் இவ்விருசெயல்களையும்) கலப்பேனோ (யாதுசெய்யக்கடவேன் எ-று. ❋ ஓ-அசை. பிணங்குதலும், தழுவுதலும், ஒருபொழுதிலே கூடாமையால் கலப்பேன்கொ லென்றாள். மூன்றனையுஞ் செய்தல் கருத்தாகலால் விதுப்பாயிற்று. (௭)

வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து ... . ❋
மாலை யயர்கம் விருந்து

.... ❋

வு

[இது- அரசனுக்குத் துணையாகப்பிரிந்ததலைவன் தொழின்முடி நீட்டித்தவிடத்தே தலைவியைநினைந்து தன்னுள்ளே சொல்லியது.] இ-ள். வேந்தன், அரசன்!- வினைகலந்து, போர்செய்தல்புரிந்து வென்றீக வெல்வானாக-(யாமும்!) மனைகலந்து, மனைவியைச்சென்று கூடி- மாலை-(அவ்விடத்து) மாலைக்கு- விருந்து விருந்தினை- அயர்கம், செய்யக் கடவேம். எ-று. ❋ மனை-ஆகுபெயர். போர்செய்தற்கண்வந்த மாலைக்கு எதிர்கொள்ளுதல் அலங்கரித்தல் முதலியவை இவ்

(௧௨௬)

லாமையால் மனங்கலந்து மாலைக்குவிருந்தயர்கமென்றான். இதுதொழின் முடிபுமுன் சொல்லலால் விதுப்பாயிற்று. (அ)

ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்...... *
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு .. .. *

[இதுமது.] இ-ள். சேட்சென்றார், தூரதேசத்திற்சென்றதங்காதலர்- வருநாளைவைத்து, (திரும்பி) வரக்குறித்தநாளை உட்கொண்டு- ஏங்குபவர்க்கு- (அதுவருமளவும் உயிரைத்தாங்கி வருந்துமடிகளிர்க்கு) ஒருநாள்! ஒருநாளானது- எழுநாள்போல், பல்நாள்போல்- செல்லும், நெடிதாகக்காட்டும். எ-று. ❁ ஏழெனபது அதற்குமேலாய் மிக்கபன்மை குறித்துநின்றது. தலைவிவருத்தம் பிறர்மேலிட்டுச் சொல்லியபடி. (௬)

பெறினென்னும் பெற்றக்கா லென்னா முறினென்னும்..... *
முள்ள முடைந்துக்கக் கால், ... *

[இதுவுமது.] இ-ள், காதலி- உள்ளமுடைந்து, நம்பிரிவுபொறாமல்) உள்ளமுடைந்து- உக்கக்கால், இறந்தவிடத்து- பெறினென்னும், (நம்மைப்)பெறக்கடவளானால் என்னபயன்!. பெற்றக்கா லென்னும், (அன்றிப்)பெற்றால்என்னபயன்- உறினென்னும். (அன்றி)மெய்யுறக்கலந்தால் என்னபயன்- (இவையொன்றாலும்பயன்! இல்லை.) எ-று ❁ இம்மூன்றும் உடம்போடுணர்த்திச்சொல்லப்பட்டன. அதன்மேலும் முன்னைவழக்க மிருத்தலால் அதற்குமுன்னே நாம்! செல்லவேண்டுமென்பது கருத்தாகலால் விதுப்பாயிற்று. (ய)

௲உஅ-ஆம்- அதி-குறிப்பறிவுறுத்தல்.

அஃதாவது, தலைவன் தலைவிதோழிஎன்றிவர்கள் ஒருவர்குறிப்பை ஒருவர்க்கு அறிவுறுத்தல். இதுபிரிந்து போகியதலைவன் வந்துகூடியவிடத்தே நிகழ்வதாகலால் அவர்வயின் விதும்பலின்பின் வைக்கப்பட்டது.

கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்க .... *
ணுரைக்க லுறுவதொன் றுண்டு .... *

[இது- பிரிந்து கூடியதலைவன் ஆசைமிகுதியினாலே புணர்ச்சித் தொழிலைப் புதிது புதிதாகப் பலநாளும் பாராட்டல் கண்டு தலைவி இன்னும் பிரிவொன்று அஞ்ச அதை அவன் குறிப்பால் அறிந்து அவளுக்குச்சொல்லியது.] இ-ள். கரப்பினும், (சொல்லாது) மறைத்தா

[௲உசு]

(ரு.௱க)

௲உஅ-ஆம், அதி-குறிப்பறிவுறுத்தல்

யாயினும்- ஒல்லா, அதற்கு உடன்படாமல்- கையிகந்து, (உன்னைக்) கைகடந்து- நின்னுண்கண், உன் (மை)யுண்டகண்களே- உரைக்கலுறுவது, (எனக்குச்) சொல்வது- ஒன்று ஒருகாரியம்!- உண்டு, உண்டாயிருக்கின்றது- (இனி அதனை நீயேதெளியச்சொல்லு.) எ-று. கரத்தல் நாணால் அடக்குதல். தன்னிடத்துப் பிரிதற்குறிப்பு இருக்கிறதாக நினைந்து வேறுபட்டவளது வேறுபாடு குறிப்பால் அறிந்து அவளுக்குத் தன்பிரியாமைக் குறிப்பை அறிவுறுத்தபடி. (க)

கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்*
பெண்ணிறைந்த நீர்மை பெரிது .. ..
.. .. *

[இது- நாணத்தால் அவள் அது சொல்லாதவிடத்துஅவன்தோழிக்குச் சொல்லியது] இ-ள். கண்ணிறைந்தகாரிகை,(என்) கண்ணிறைந்த அழகையும்- காம்பேர்தோள், மூங்கில் போன்ற தோள்களையும்உடைய- பேதைக்கு, (உன்னுடையமாதுக்கு- பெண்ணிறைந்த நீர்மை, பெண்பாலாரிடத்து நிறைந்த அறியாமை!-பெரிது, (அவ்வளவினதன்றி)

த் தன்னிடத்து

மிகுந்தது. எ-று. ❋ தன்னிடத்து இல்லாதபிரிவினைவற்றி அதற்கு அஞ்சுதலால் இப்படிச் சொல்கிறான்

மணியிற் றிகழ்தரு நூல்போல் மடந்தை……… ………
யணியிற் றிகழ்வதொன் றுண்டு … … … ………… …… .

❋

❋

[இதுவமது.] இ-ள். மணியில், கோக்கப்பட்ட படிகமணிக்குளிருந்து - திகழ்தரும், (புறத்தே) காணப்படுகிற-நூல்போல், நூலைப்போல- மடந்தை, இம்மடந்தையினது- அணியில், அழகுக்கு விருந்து- இகழ்வது, (புறத்தே) காணப்படுவதாகிய- ஒன்று,ஒருகுறிப்பு உண்டு, உண்டு- எ-று. ❋ அணிப்புணர்ச்சியாலாகிய அழகு. அதற்கு

விருத்தலாவது- அதனோடு உடனிகழ்வதல்லாதிருந்தும் உடனிகழ்தல். அதனையான் அறிகின்றிலேன் நீ அறிந்து சொல்லல்வேண்டு மென் பதுகருத்து.

(௬)

முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை ...... *
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு ... . *

[இதுவுமது.] இ-ள். முகைமொக்குள், அரும்பினதுமுகிழ்ப்பினு ளுள்- உள்ளது, உளதாய்ப்- (புறந்தோன்றாத) நாற்றம்போல், வாசனைபோல்- பேதை- (உன்)மாதினது- நகைமொக்குள், (என்னோடு நகைக்க எண்ணுகிற) நகையது முகிழ்ப்பினுள்- உள்ளது, உளதாய்ப் (புறந்தோன்றாத) ஒன்று, ஒருகுறிப்பு!- உணடு, உண்டு. எ-று. ❁முகிழ்ப்பு முதிர்ச்சியாற் புடைபடுதல். நகை-புணர்ச்சியின்பத்தால் நிகழ்வது. (௪)

௱உஅ-ஆம், அதி-குறிப்பறிவுறுத்தல்.

(ருாஎ)

செறிதொடி செய்திறந்த கள்ள முறுதுயர் .... *
தீர்க்கு மருந்தொன் றுடைத்து .. .. *

[இதுவுமது.] இ-ள். செறிதொடி, நெருங்கிய வளைகளை யுடையவள்- செய்து-(என்னிடத்து இல்லாத[illegible]வை) நினைந்து- இறந்த கள்ளம், (அதுகாரணமாக என்னை மறைத்துப்) போனகுறிப்பு!-உறுதுயர், (என்) மிகுந்த துயரை- தீர்க்குமருந்தொன்று, தீர்க்கா நின்றமருந்தொன்றுநீ- உடைத்து- உடையது. எ-று. ❁மறைத்தற்குறிப்பு தானும்உடன்போகஉட்கொண்டது.- உறுதுயர்- நன்றிசெய்யத்தீங்கு விளைதலாலும், அதுதான்தீர்க்குந்திறம்பெருமையாலும், உளதாயது: மருந்து- பிரியாமைதோழியால் தெளிவித்தல். நீ அது செயதல் வேணடுமென்பதாம். (௫)

பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி .... *

யன்பின்மை சூழ்வ துடைத்து ... . *

[இது- தலைவன் குறிப்பறிந்த தலைவி அதனை அது தெளிவிக்கச் சென்றதோழிக்கு அறிவித்தது.] இ-ள். பெரிதாற்றி, (தலைவர்வந்து நம்பிரிவினுலாகிய துன்பத்தை) மிகவுமாற்றி-பெட்பக்கலத்தல்(நாம்) மகிழும் வண்ணம் கூடுகின்ற புணர்ச்சியானது!- அரிதாற்றி, (பின்னும் அத்துன்பத்தை) அரிதாகப் பொறுத்திருந்து- அன்பின்மை (அவரது) அன்பில்லாமையை-சூழ்வது, நினையுந் தன்மையைஉடைத்து, உடையது. எ-று. ❋ பிரிதற் குறிப்பினுலேசெய்கின்றதாகலால் முடிவிலே துன்பஞ் செய்வதாகின்ற தென்பதாம். (சு)

தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினு ....*
முன்ன முணர்ந்த வளை .... *

[இதுவுமது.] இ-ள். தண்ணந்துறைவன், குளிர்ந்த துறையையுடையவன்- தணந்தமை, (நம்மை மெய்யினுலே கூடியிருந்தே மனத்தினுலே) பிரித்தமையை- நம்மினும், (அவன்குறிப்பால் அறிதற்குரிய) நம்மினும்- வளை, இவ்வளையல்கள்!- முன்னம், முன்னமே-உணர்ந்த, அறிந்தன. எ-று.❋ கருத்து நிகழ்ந்ததாகலால்தணந்தமையென்றும், யான் தெளிய அறிதற்குமுன்னே தோள்கள்மெலிந்தனவென்றற்கு- அதனைவளைமேலேற்றி அதையும் உணர்வுடைத்தாக்கிச்சொல்லினுள். (எ)

நெருநற்றுச் சென்ரு ரெங் காதலர் யாமு ....*
மெழுநாளே மேனிபசந்து ....*

[இதுவுமது.] இ-ள். எங்காதலர், எமதுதலைவர்! நெருநற்று,நேற்றே- சென்ருர்; பிரிந்துபோயினர். யாமும், நாமும்! மேனிபசந்

(ருா அ) ராஉஅ-ஆம்,
அதி-குறிப்பறிவுறுத்தல்.

து, (அப்பிரிவுக்கு) உடம்பு வேற்றுநிறமடைந்து-எழுநாளேம, எழு நாளுடையேமாயினேம். எ-று ❊ நேற்றுச்செய்த அருளினால் பிரிவு நிச்சயிக்கப்பட்டதென்றற்கு, நெருநற்றுச் சென்றொன்றும்-அதனைச் சந்தேகித்துச் செ[illegible]ன்றது எழுநாள் உண்டாகலால் அன்றே மேனி பசந்ததென்றற்கு, மேனிபசந்தெழு நாளேமென்றும் சொல்லினாள். இவை தலைவனது பிரிதற்குறிப்பை அறிவித்து நின்றது

தொடிநோக்கி மென்றோளு நோக்கி யடிநோக்கி ..... ❊
யஃதாண் டவள்செய்தது .... ❊

[இது-தலைவி குறிப்பறிந்த தோழி அதனைத் தலைவனுக்கு அறிவித்தது.] இ-ள். (யான் அது தெளிவித்தவிடத்தே தெளியாதவர் பிரியநான் இங்கேயிருந்தால்) தொடிநோக்கி, (இவை நில்லாவென்றுதன்) வளையல்களைப்பார்த்து - மென்றோணோக்கி, (அதற்கு ஏதுவாக இவை மெலியுமென்று) மெல்லியதோள்களையும்பார்த்து-அடிநோக்கி, (பின் இவ்விரண்டும் உண்டாகாமல் நீர்நடந்து காத்தல்வேண்டுமென்று தன்) னடிகளையும் பார்த்து- ஆண்டு, அவ்விடத்து-அவள்செய்தது, அவள்செய்தகுறிப்பு! அஃது, உடன்போக்காயிருந்தது. எ-று. ❊ செய்தகுறிப்பு, செய்தற்கேதுவானகுறிப்பு. அஃதென்றாள், செறிதொடி செய்திறந்த கள்ளமென்றுணைகலின். பிரிதற்குறிப்புணடாயின் அது அழுங்குதல்பயன். (௯)

பெண்ணினாற் பெண்மை யுடைத்தென்ப கண்ணினாற் . ❊
காமநோய் சொல்லி யிரவு . ... ❊

[இது - தன்பிரியாமைக் குறிப்பினைத் தோழிக்குத் தலைவன் அறிவித்தது.] இ-ள். (மகளிர்) காமநோய், (தங்) காமநோயை - கண்ணினாற்சொல்லி,(தோழியர்க்கும் வாயாற்சொல்லாது) கண்ணினாற்சொல்லி- இரவு, (அதுதீர்த்தல்வேண்டுமென்று அவரையிரவாமல் உடன்போதல்குறித்துத் தம்மடியினை) யிரத்தல்- பெண்ணினால், (தமக்கு இயல்பாகிய) பெண்மைமேலும்-பெண்மையுடைத்தென்ப, ஒருபெண்மையை யுடைத்தென்று (அறிந்தோர்) சொல்லுவர் எ-று ❀தலைமகளது, உடன்போதற்றுணிவு தோழியாலே தெளிதலால் தான்பிரியாதிருக்குங் குறிப்பினை அறிவித்தற்கு அவள் பெண்மையைப் பிறர்மேலிட்டு வியந்து சொல்லினான்.] (ய)

௱௨௰-ஆம்.அதி.புணர்ச்சிவிதும்பல்.

அஃதாவது -தலைவனும் தலைவியும் புணர்ச்சிக்கண்ணே விரைதல். மேலேபுணர்ச்சிக்குறிப்பறிந்த தலைவன் பிரிதற் குறிப்பை.

௱௨௰-ஆம்.அதி - புணர்ச்சிவிதும்பல்.

(௬௱௯)

அறிவுறுத்த தலைவி அவனிடத்தே நிகழாது ஆசை மிகுதியினாலே பின்னும் தன்னிடத்தே நிகழ்தலால் இது குறிப்பறிவுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

உ ள்ளக் களித்தலுங் காண

மகிழ்தலுங் .... *

கள்ளுக்கில் காமத்திற் குண்டு .. .. *

[இது- பிரிதற்குறிப்பினனாகிய தலைவனோடு நீ பிணங்காமைக்குக் காரணம் யாதென்று நகையாடிய தோழிக்குத் தலைவி சொல்லியது. இ-ள். உள்ளங்களித்தலும், நினைத்தவளவிலே களிப்படைதலும்! காணமகிழ்தலும், கண்டவளவிலே மகிழ்ச்சி யடைதலும்! கள்ளுக்கு, கள்ளுண்டார்க்கு - இல், இல்லை. காமத்திற்கு, காமமுடையார்க்கு- உண்டு, உண்டு- எ-று. ☼ களித்தல், உணர்வழியாதது. மகிழ்தல், அவ்வுணர்வழிந்தது. இவ்விரண்டும் உண்டவிடத்திலே யல்லாமல் இல்லாமையினாலே, கள்ளுக்கில்லென்றாள். அப்படிப்பட்ட காமமுடைய நான் பிணங்கல் எவ்விடத்த தென்பதாம். (க)

தினைத் துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையுங் *

காம நிறைய வரின் .... *

[இதுவுமது.] இ-ள். காமம், காமமானது- பனைத்துணையு நிறைய பனையளவினுமிக - வரின், (மகளிர்க்கு) உண்டாமாயின் - தினைத்துணையும், தினையளவும்- ஊடாமை, (தந்தலைவரோடு) பிணங்காமை- வேண்டும், (அவரால்) விரும்பப்படும். எ- று. ☼ ஊடினால் வருத்தமிகுமென்று பிறர்க்கு உறுதிசொல்லுவாள் போன்று தன் விரைவு சொல்லியபடி. (உ)

பேணாது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்.... ..... *

காணா தமையல கண் .... *

[இதுவுமது- இ-ள். பேணாது, (நம்மை) அவமதித்து-பெட்பவே (தான்) வேண்டுமவைகளையே- செய்யினும், செய்தாலும் - கொண்கனை, கணவனை- கண், (என்) கண்கள்! காணாது, பாராமல்- அமையல, அமைகின்றனவில்லை. எ-று. ☼ தன்விரைவு கண்களின்மேல் ஏற்றப்பட்டது. அத்தன்மையேன் அவனோடு பிணங்குமவழியாதென்பதாம்.

உளடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து .... *
கூடற்கட் சென்றதென் னெஞ்சு.... .... *

[இதுவுமது]இ-ள். தோழி, தோழியே-(அன்பரைக்காணுதற்கு முன் அவர்செய்தகுற்றத்தைத் தன்னோடு எண்ணி) ஊடற்கட்சென்றேன், (அவரோடு) பிணங்குதலிலே சென்றேன். என்னெஞ்சு, என் மனது! (கண்டபின்) அதுமறந்து, அதைமறந்து - கூடற்கட்சென்

(இ.ாய)

ாஉகூ-ஆம்,அதி-புணர்ச்சிவிதும்பல்.

றது, புணர்தலிலே சென்றது.

எ-று.❋செல்லுதற்றொழிலினது நீக்

ம்ச்சி, நினைத்தநெஞ்சிற்கும் ஒத்தலால், அது மறந்தென்றாள். அச் செல்லுதலால் பயன் ஒன்றும் இல்லையென்பது படநின்றமையால். மன், ஒழியிசை. அச்சமயத்திலே நெஞ்சு கீழறுத்துக்கொண்டுபோ கலால் அது முடிந்ததில்லையென்பதாம்.]

(௪)

எழுதுங்காற் கோல்காணக் கண்ணேபோற்கொண்கன் · *
பழிகாணேன் கண்ட விடத்து .... *

[இதுவுமது.]இ-ள்.(முன்னெல்லாம்கண்டிருந்தும்)எழுதுங்கால் எழுதும்போது- கோல், அஞ்சனக்கோலினியல்பை-காணு,காணமாட்டாத- கண்ணேபோல், நேத்திரம்போல் - கொண்கன்பழி, கணவனதுகுற்றத்தை- (அவனைக் காணுதவிடத்தெல்லாங் கண்டிருந்தும்)

கண்டவிடத்து, (அவனைக்) கண்டவிடத்து - காணேன், காணமாட்டேன். எ - று. ※ கோல், அதனியல்புக்கு ஆகுதலால் ஆகுபெயர். இயல்பு, கருமை. என்னியல்பு இதுவாகலால், மேலும் அதுமுடியாதென்பதாம்.] (ரு)

காணுங்காற் காணேன் றவறாய காணாக்காற் ....
காணேன் றவறல் லவை ....

※
※

[இதுவுமது] இ- ள். (நான்) காணுங்கால், (கணவனைக்) காணும்பொழுது- தவறாய, (அவன்) குற்றங்களானவைகளை- காணேன், காண்கின்றிலேன். காணாக்கால், (அவனைக்) காணாதபொழுது- தவறல்லவை, குற்றங்களல்லாதவைகளை- காணேன், காண்கின்றிலேன். எ-று. ※ கணவனென்பது, அதிகாரத்தால்வந்தது. முன்பு நான் உன்னோடு சொல்லிய தவறுகள் இப்போது காணாமையாலே பிணங்கிலேனென்பதாம்.]
(சா)

உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற் ....*
பொய்த்த லறிந்தென் புலந்து .... *

[இதுவுமது.] இ-ள். உய்த்தலறிந்து, (தம்மை)யீர்த்துக்கொண்டு போதலறிந்திருந்து- புனல்பாய்பவரேபோல், (ஓடுகின்ற) நீரிலேபாய்வோர்செயல்போல் - பொய்த்தலறிந்து, (பிணக்கு) முடிவுபோகாமையறிந்திருந்து- புலந்து, (கணவனோடு) பிணங்கி- என், (பெறுவது) யாது. எ- று. ※ பாய்பவரென்பது ஆகுபெயர் - பொய்த்தல்,

புடைபடுதல். பிணங்கினும் பயன் இல்லையென்பதாம். (எ)

இளித்தக்க வின்னு செயினுங் களித்தார்க்குக் .... *
கள்ளற்றே கள்வநின் மார்பு .... *

[இது- தலைவிபுணர்ச்சி விரைவறிந்ததோழி தலைவனுக்குச்சொல்

ாஉ௬ -ஆம், அதி-
புணர்ச்சிவிதும்பல். (நாயக)

லியது.] இ-ள். கள்வ, கள்வனே- நின்மார்பு, (எங்களுக்கு) உனதுமார்பு! களித்தார்க்கு, (தன்னையுண்டு) களித்தவர்க்கு இளித்தக்க,அவமானமடையத்தக்க-இன்னு செயினும், இனிமையில்லவைகளைச்செய்தாலும்- கள்ளற்றே, (அவராலேமேலும்மேலும் விரும்பப்படுவதாகிய) கள்ளுப்போலும். எ-று.※ அவ்வினிமையில்லவை, நாணில்லாமை, ஒழுக்கமின்லாமை, உணர்வில்லாமை, நிறையில்லாமை, இவைமுதலாயின. எங்களுக்கு நாணில்லாமை முதலியவைகளைச் செய்யினும் எங்களாலே மேன்மேலும் விரும்பப்படுகின்றதென்பதாம். கள்வவென்றதும்,அதுநோக்கி.] (அ)

மலரினு மெல்லிது காமஞ் சிலரதன்.. .... *
செவ்வி தலைப்படு வார்
.... *

[இது- தீராப்பிணக்கிலே தலைவன் சொல்லியது.] இ-ள். காமம், காமவின்பம்! மலரினும்,பூவினும்-மெல்லிது,மெல்லியதாயிருக்கும் (அப்படி மெல்லியதாயிருக்கையை அறிந்து) அதன்செவ்வி, அதன்பக்குவத்தை - தலைப்படுவார், பெறுவோர்! சிலர், (உலகத்திலே) சிலர். எ-று. ❋ தொட்டவளவிலே வாசனைப்பக்குவம் அழிவதாகிய மலர் எல்லாவற்றினும் மெல்லியதென்பதை விளக்கலால்உம்மைசிறப்பின்கண்வந்தது. குறிப்பும்- வேட்கையும்- அனுபவிப்பும், இன்பமும் - ஒருகாலத்திலே ஒத்து அனுபவித்தற்குரியவரிருவர், அதற்கு ஏற்றகாலமும்- இடமும், உபகரணங்களும்- பெற்றுக்கூடி அனுபவிக்கவேண்டுதலால், அதன்செவ்வி தலைப்படுவார் சிலரென்றும்-அவைகளுள் யாதானும் ஒன்றாலே சிறிதுவேறுபடினும் வாடுதலால்,மலரினுமெல்லிதென்றும் சொல்லினன். குறிப்பு, ஒவ்வாமையால் யான் அதுபெறுகின்றிலேனென்பதாம். தலைமகள் ஊடலொழிவதுபயன்,

கண்ணிற் றுனித்தே கலங்கினாள் புல்லுத........ .... ❋
லென்னினுந் தான்விதுப் புற்று.................... .... ❋

[இதுவுமது.] இ-ள். (என்காதலி! முன்னொருநாள் புணரச்சென்ற என்னோடு) கண்ணிற்றுனித்தே, (தன்)கணமாத்திரத்தாலேபிணங்கி- புல்லுதல், புணர்தலிலே- என்னினும்,என்னைப்பார்க்கினும் -தான்விதுப்புற்று, தான்விரைவுற்று- கலங்கினாள், (அதனையும்அப்பொழுதே) மறந்துகூடிவிட்டாள்.(அதனால் நான் இப்படிவருந்தவும் விரையாமல் பிணங்கி நிற்கின்ற இவள் அவளல்லள்) எ-று. ❋ கணமாத்திரத்தாலே பிணங்கல், சொன்னிகழ்ச்சியில்லாமல் அது சிவந்தவளவேயாதல்.அவளாயின்இப்படிஊடற்கண்ணேநீடாளென்பதுடன்.

௱௩௰-ஆ

ம்-அதி-நெஞ்சொடுபுலத்தல்.

அஃதாவது - காரணம் உண்டாகிய விடத்தும் பிணங்க நினையாமல் புணர்ச்சியை விரும்புகின்ற நெஞ்சுடனே தலைவிபிணங்குதலும், தலைவன் பிணங்குதலுமாம். அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே ....*
நீயெமக் காகா தது ... ... *

[இது தலைவனிடத்துத் தவறு உண்டாகியவிடத்தும் பிணங்க நினையாத நெஞ்சிற்குத் தலைவிசொல்லியது.] இ-ள். நெஞ்சே, (எனது) மனமே-அவர்நெஞ்சு, அவரது மனம்-"அவர்க்காதல் கண்டும், (நம்மைநினையாமல்) அவர்க்காய்நிற்றல்கண்டிருந்தும்-நீயெமக்காகாதது, நீ (அவரையேநினைத்து) எமக்காய் நில்லாமைக்குக்காரணம்!-எவன், யாது. வி-ரை. அவர்க்காதல்- அவர் நினைத்தற்கு உடன்படுதல். எமக்காகாததென்றது பிணங்கற்கு உடன்படாமையை. ஒருகாரியம் தாமாக அறிந்து செய்யமாட்டாதவர் செய்வாரைக்கண்டாயினும் செய்வர் நீ அதுவும் செய்கின்றிலை யென்பதாம். (க)

உறூஅ தவர்க்கண்ட கண்ணு மவரைச் .... *
செறூஉனச் சேறியென் னெஞ்சு .... *

[இதுவுமது.]இ-ள். என்னெஞ்சு, எனதுமனமே- உறூஅதவர்க்கண்டகண்ணும், (நம்மிடத்து) அன்பில்லாததலைவரை (உள்ளபடி)அறிந்தவிடத்தும்- செறூஉஎன, (நாம்போனால்) கோபியாரென்பதுபற்றி- அவரை, அவரிடத்து- சேறி, செல்கின்றாய்- (உனக்கு இப்படிப்பட்டதும் ஓரறியாமையுண்டோ.) எ-று.❁அவரையென்பது-வேற்றுமைமயக்கம். பழமையான தாக்ஷிணியம் பற்றிக் கோபியாரென்பதுகருத்தாகச் சென்றால் நீ நினைத்தது முடியுமோவென்பதாம்

கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ ....*
பெட்டாங் கவர்பின் செலல் .... *

[இதுவுமது.] இ-ள். நெஞ்சே நீ, மனமே நீ- (என்னிடத்து நில்லாமல்) பெட்டாங்கு, விரும்பியபடியே- அவர்பின்செலல், அவரிடத்தேசெல்லுதற்குக் (காரணம்) கெட்டார்க்கு நாட்டாரில்லென்பதோ, கெட்டவர்க்கு நட்புற்றவர் (உலகத்திலே)இல்லையென்கிறநினைவோ. (உன்னியல்போசொல்லு.)எ-று ❁ என்னைக்கைவிட்டவரிடத்தேசெல்லுதல் நீ முன்னமே பழகியதென்றற்கு - பெட்டாங்கென்றும், தான் இப்பொழுது மானமிலளாதலாலே கெட்டார்க்கென்று

௱௩௰-ஆம் அதி-நெஞ்சொடுபுலத்தல்.

(௲௨௱௯௰௱)

ற, சொல்லினுள். செலல் ஆகுபெயர். தளர்விடத்துஉடன்வருந்துரு த மூடாது தொடர்பாயிற்று. உனது தொடர்பென்பதாம், (ங)

இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே.... ... .*
துனிசெய்து நவ்வாய்காண் மற்று .. .. *

[இஃதுவுமது.] இ-ள். நெஞ்சே,மனமே- (நீஅவரைக்கண்டபொழுதே இன்பமனுபவிக்க நினைப்பதல்லது) துனிசெய்து, (அவர்தவறுநோக்கிப்) பிணக்கைஉண்டாக்கி- மற்றுநவ்வாய்- (அதனை அளவறிந்து) பின் அனுபவிக்கநினையாய்- (ஆதலால்) இனி, இனி- அன்ன, அப்படிப்பட்டவைகளை- நின்னொடு,உன்னுடனே-சூழ்வார்,எண்ணுவோர்!- யார்,யாவர் (நான்அதுசெய்யேன்) எ-று.❊அப்படிப்பட்டவை பிணக்குந்திறங்கள். காண் - உரையசை. முன்னெல்லாம் பிணங்க எண்ணியிருந்து பின் புணர்ச்சிக்குவிரைதலால்இப்படிச்சொல்லினுள். (ச)

பெரு அமை யஞ்சும் பெரிற்பிரி வஞ்சு.................... *
மருஅ விடும்பைத்தென் னெஞ்சு..... .... *

[இது- தூதாகச் சென்றதோழி கேட்கத் தலைவிசொல்லியது.] இ-ள். (தலைவரைப் பெறுதநாளிலும்) பெருஅமையஞ்சும், அப்பெருமைக்கு அஞ்சாநிற்கும். பெறின்- பெற்றநாளிலும்- பிரிவஞ்சும், (அவரது) பிரிவைநினைந்து அஞ்சாநிற்கும். (ஆதலால்) என்னெஞ்சு என்மனமானது- அருஅவிடும்பைத்து, (எந்நாளும்) நீங்காத துன்பமுடைத்தாயிற்று. எ-று. ❊ காதலரைப்பெற்றிருந்துபுணர்ச்சியை இழத்தல் உறுதியன்று என்கிற கருத்தால் - தூதுக்கு உடன்படுகின்றுளாகலால் பெருமையஞ்சுமென்றும், புணர்ச்சி யாருமையினுல் இன்னும் இவர்பிரிவாராயின் யாதுசெய்வோமென்பது நிகழ்தலால்- பெரிற்பிரிவஞ்சுமென்றும், இவ்விரண்டுமல்லாமல்வேறேயில்லாமையால் அருவிடும்பைத்தென்றும்,சொல்லினுள். (ரு)

தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்..... .... *
தினிய விருந்ததென் னெஞ்சு ....*

[இதுவுமது.] இ-ள். என்னெஞ்சு, என்மனமானது!- இருந்தது, (இங்கே)இருந்தது!-தனியேயிருந்தது, அன்பரைப் பிரிந்திருந்தநினைத்தக்கால், (அவர்கொடுமைகளை நான் தன்னொடு) நினைத்தக்கால் (அச்சமயமறிந்து) என்னை, என்னை- தினிய, தின்பதுபோல் துன்பஞ்செய்தற்பொருட்டே. எ-று. ❊ என்னிடத்திருந்தது அப்போது

[௯௫]

(ருாஎச) ௱௩௰- ஆம்-அதி
நெஞ்சொடுபுலத்தல்.

அவர்கொடுமைகளை உட்கொண்டு எனக்குப்
பொறுத்தமாட்டாமை

யைச்செய்தற்கே இப்போது அவைநோக்கி
ற்கன்றென்பதாம்.]
அவரோடு பிணங்குதி

(௭)

நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென் ....
மாணா மடநெஞ்சிற் பட்டு ....

❊

❊

[இதுவுமது.] இ-ள். அவர்மறக்கல்லா, (தன்னைமறந்த) அவரைமறக்கமாட்டாத- மாணா- மாட்சியில்லாத-என்மடநெஞ்சிற்பட்டு,என்னு அறிவில்லாத மனத்தோடுகூடி- நாணும்,(என்னுயிரினுஞ்,சிறந்

த) நாணத்தையுமே-மறந்தேன், மறந்துவிட்டேன். எ-று. ❋மடமை கண்டவிடத்து நினைந்து காணாதவிடத்து-மறத்தல்- நாண, எந்நாளும் கூடிப்பொழுகினும் அந்நாள் கண்டார்போல் ஒடுங்குதல். கண்டபொ

ழுதே புணர்ச்சிக்கு விரைதலால் அதனைமறந்தேனென்றாள்.

எள்ளி னிளிவாமென் றெண்ணி யவர்திற .... ❋
(எ)

முள்ளு முயிர்க்காத னெஞ்சு .... ❋

[இதுவமது.]- இ-ள். உயிர்க்காதனெஞ்சு, உயிர்மேல்ஆசையுடைய(என்) னெஞ்சு!-(நம்மை இகழ்ந்துசென்றாரொன்று)- எள்ளின், (நாமும்) இகழ்வோமாயின்- இளிவாமென்றெண்ணி, (பின்பு நமக்கு) அவமானமாமென்று நினைத்து- அவர்திறம்- அவர்திறத்தையே- உள்ளும், நினைக்கின்றது. எ-று. ❋ எள்ளுதல், தூதுமறுத்தல். இளிவு, வழிபடாமையாலும்- பிரிவுபொறாமையாலும்- நாணிறைமுதலியவை இழத்தலாலும்- உண்டாவது- திறம், தூதுக்குடன்படலும், வருதலும், கூடலும், முதலானவை. இளிவிற்கு அஞ்சலாலும், இறந்துபடமாட்டாமையாலும், கூடநினைக்கின்றதென்பதாம், (அ)

துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய .... ❋
நெஞ்சந் துணையல் வழி .... ❋

[இது- ஒழித்தற்கு வாராதபிணக்கிலே தலைவன் சொல்லியது.] இ-ள். (துன்பத்திற்கு) (ஒருவர்க்குத்) துன்பம்வந்தவிடத்து (அதை நீக்குதற்கு)-தாமுடைய, தாம்உரித்தாகப்பெற்ற-நெஞ்சம், (தமது) மனமானது துணையல்வழி. துணையாகாதவிடத்து - துணையாவார், யாரோ. (ஒருவரும் இல்லை.) எ-று. ※ இங்கேதுன்பமாவது ஒழித்தற்குவாராத பிணக்கு. நெஞ்சந் துணையாகாமையாவது அவளை அன்பிலளென்றொழியாது கூடற்கணணே விரைதல். ஒருதுணைஇல்லாமையால் இத்துன்பமுற்றுவிடுதலே உள்ளதென்பதாம். (கூ)

௱௩௰-ஆம் அதி-நெஞ்சொடு புலத்தல்.

(௲௩௱)

தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய .... *
நெஞ்சந் தமரல் வழி .... *

[இதுவுமது.] இ-ள். தாமுடைய, தாம் உரித்தாகவுடைய- நெஞ்சம், மனம்- தமரல்வழி, (ஒருவர்க்குத்) தம்மவராகாதவிடத்து-ஏதிலார், அயலார்- தமரல்லர், தம்மவரல்லராகுதல்!- தஞ்சம், எளிதன்றோ. எ-று. ※ வேறொருத்தியைக் காதலியென்று நினைத்துஎன்னெஞ்சமே என்னை வருத்துகின்றபின்பு வேறொருத்தி பிணங்குகின்றது எளிதென்பதாம். (ய)

௱௩௧-ஆம்-அதி-புலவி.

அஃதாவது- இருவர்நெஞ்சும் புணர்ச்சி விரும்பாது பிணங்க நினைத்தவிடத்து ஒருவரோடு ஒருவர் பிணங்கல். அதிகாரமுறைமையும் இதனால் விளங்கும்.

புல்லா திராஅப் புலத்தை யவருறு ... ... *
மல்லனோய் காண்கஞ் சிறிது ... ... *

[இது-தூதாகச் சென்றதோழி தலைவி தூதுக்கு உடன்படுதற் பொருட்டு அவளோடு நகைத்துச் சொல்லியது.] இ-ள். அவருறும் அக்காதலரடையும்- அல்லனோய், துன்பநோயினைச் சிறிது, சிறிது- காண்கம், காணக்கடவோம் புல்லாது, (நீ அவரைவிலாத்துப்போய்த் தழுவாமல்- இரா, (இத்தொழிலைமேலிட்டுக்கொண்டு)இருந்து- புலத்தை, பிணங்கு. எ-று. ❊ அல்லனோய், துன்பஞ்செய்யுங் காமநோய்- சிறிதென்றாள், பிணக்கை நீளவிடலாகாதென்பதுபற்றி புலவிக் குறிப்புக்கண்டு அவள்வழியளாய்நின்று நாம்உற்ற வருத்தம் சிறிது உறலறிதல் வேண்டுமென நகைசெய்து நேர்வித்தபடி. (௧)

உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது ... ... *
மிக்கற்றா னீள விடல் ... ... *

[இது- பிணக்குத்தீர்த்து தூதுக்கு உடன்படும் வகைசொல்லியது.] இ-ள். புலவி, பிணக்கு (புணர்ச்சியின்பஞ்செய்தற்கு வேண்டுமளவினதாகுதல்!(உப்பமைந்தற்று, உப்பானது (உணவுகளை இன்சுவையாக்குதற்கு) வேண்டுமளவின தாகுதல்போலும், நீளவிடல், (இனி அதனை அவ்வளவிற்சிறிது) மிகவிடுதல்!- அதுசிறிது மிக்கற்று அவ்வுப்பளவு சிறிதுமிகுந்ததுபோலும். எ-று. ❊ நீளவிடுதல், அளவறிந்து ஒழியாமல் புணர்ச்சிமேலெழுந்த குறிப்பு அழுங்கு

மளவுஞ்செலுத்தல். சிறிதும் நீளவிடலாகாதென்றாள். நேர்விக்கின்றாளாகலால். உப்புமிகுந்தவிடத்து உணவு சுவையில்லாமற் போதல் போல் பிணக்கு மிகுந்தவிடத்துப் புணர்ச்சி இன்பமில்லாமற்போமென்றமையால் இதுபண்புவமை. (உ)

அலந்தாரை யல்லனோய் செய்தற்றாற் றம்மைப்...... ✱
புலந்தாரைப் புல்லா விடல் .... ✱

[இது- பரத்தையிடத்திருந்து வந்ததலைவனோடு தலைவிபிணங்கிச் சொல்லியது.] இ-ள். (ஆடவர்) தம்மைப்புலந்தாரை, தம்மைப்பெறாது பிணங்கியமகளிரை (அப்பிணக்குநீக்கி)- புல்லாவிடல், புணராமல்விடுதல்!-அலந்தாரை, (முன்னமேதுன்பமுற்று) அழிந்தவர்க்கு- அல்லனோய்செய்தற்று. (அதன்மேலும் மிகுந்ததுன்பநோய் செய்ததுபோலும். எ-று. ❁ பிறரிடத்துச் செல்லுதலால் உம்மைப் பெறாது பிணங்கியிருக்கின்ற பரத்தையரைப்போய்ப் பிணக்குநீக்கிப்புணரீராயின் அவர்பொறாரென்பதாம். (ங)

ஊடி யவரை யுணர்த்தாமை வாடிய

.... ✱
வள்ளி முதலரிந் தற்று .... ✱

[இதுவுமது.] இ-ள். ஊடியவரை, (உம்மோடு) பிணங்கிய பரத்தையரை- உணர்த்தாமை, பிணக்குத்தீர்த்துக் கூடாமை! - வாடிய, (முன்னமேநீர்பெறாமல்) வாடிய-
று, அடியிலே அறுத்தல்போலும்.

வள்ளி, கொடியை-முதலரிந்தற்
எ-று. ❁ நீர் பரத்தையரிடத்தி
ருக்கும்பொது எம்புதல்வரைக்கண்டு பொறுத்திருக்கவல்லையாம்உம்மோடு பிணங்குதற்கு உரியேமல்லேம் ஆகையால் எமக்குப் பிணக்

குத்தீர்த்தலும் வேண்டாம் ஊரியராய்ப்பிணங்கிய பரத்தையருக்கே பிணக்குத்தீர்க்கவேண்டுவது அதனால் அங்கே செல்லுமென்பதாம்,

நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை.....

.... *

பூவன்ன கண்ணா ரகத்து ....

.... *

[இது- தலைவியைப் பிணக்குத்தீர்த்துக்

கூடியதலைவன் தன்னுள்

ளேசொல்லியது.] இ-ள். நலத்தகை,

நற்குணங்களாலேதகுதியுடை-

ய- நல்லவர்க்கு, தலைவர்க்கும்- ஏர், அழகாவது!- பூவன்னகண்ணாரக த்து, மலர்போலுங் கண்ணியர் நெஞ்சிலுண்டாகின்ற-புலத்தகை, பி ணக்கின் மிகுதியன்றே. எ-று. ❄ தலைவர்க்குமென்கின்ற சிறப்பும் மை விகாரத்தால் தொக்கது. தவறில்லாதார்க்கும் அப்பிணக்குஇனி தென்றற்கு நலத்தகைநல்லவர்க்கு மென்றான். அழகு-இன்பப் பய

ரங்க-ஆம், அதி-புலவி.

(௫௱௰௭)

னைப்பெறுதல். தான் அனுபவித்த

லையியந்துசொல்லியபடி.]

இன்பத்திற்கு ஏதுவாகிய பிணக்

(௫)

துனியும் புலவியு மில்லாயிற் காமங் .... *
கனியுங் கருக்காயு மற்று .... *

[இதுவுமது.] இ-ள். துனியும், பெரும்பிணக்கும்- புலவியும், சிறு பிணக்கும்- இல்லாயின், இல்லையாயின்- காமம், காமமானது.- கனியும், பக்குவமுதிர்ந்தபழமும்-கருக்காயுமற்று, இளங்காயும்போலும். எ-று. ❁ மிகமுதிர்ந்து இறுமளவினதாகிய பழம்அனுபவிப்பார்க்கு மிகவும் இன்பஞ்செய்தலால்- பெரும்பிணக்கு இல்லையாயிற் கனியற்றென்றும், கட்டிளமைத்தாகிய காய்தின்னப்படுகிற பக்குவத்ததன்றாகலால் சிறுபிணக்கு இல்லையாயின்- கருக்காயற்றென்றும், சொல்லினன். இரண்டும் வேண்டுமென்று வியந்து சொல்லியபடி.]

ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது .... *
நீடுவ தன்றுகொ லென்று .... *

[இதுவுமது.] இ-ள். புணர்வது, புணர்ச்சியானது - நீடுவதுகொல், நீட்டிக்குமோ- அன்றுகொல், நீட்டியாதோ- என்று,என்று நினைத்தால்- ஊடலின் (இன்பத்திற்கு அவசியம்வேண்டும்) பிணக்கிலேயும்- ஓர் துன்பம், ஒருதுன்பம்! உண்டு, உண்டாம். எ-று.❁ஊடலினுமென்கிற சிறப்பும்மை விகாரத்தாலே தொக்கது. கொல்லென்பதனை நீடுவதென்பதனுடனுங் கூட்டப்பட்டது.ஆங்கென்பது,அசைநிலை. ஊடலானது, கூடலிலே விளைவித்தல் சொல்லியபடி.] (எ)

நோதல லெவன்மற்று நொந்தாரென் றஃதறியுங் .... *
காதல ரில்லா வழி .... *

[இது-ஒழித்தற்கு வாராதபிணக்கிலே தலைவன் தலைவியோடுபிணங்கிச்சொல்லியது.] இ-ள். நொந்தாரென்று, (இவர் நம்பொருட்டு) நொந்தாரென்று- அஃதறியும், அந்நோயை அறிகிற- காதலர்,அன்புடையவரா- இல்லாவழி, பெருதவிடத்து- நோதல், (ஒருவர்)நோகின்றவதனுல் - எவன்மற்று, (பயன்) யாது. எ-று. ❁ இவள் நமது தலைவியல்லள் அல்லாமையால் இந்நோவறியாள் அறியாமையால்நாம் பிணங்குதலாலே பயன் இல்லையென்று தன் தடட்டி.]

பொருமை அறிவித்

(௮)

நீருநிழல இனிதே புலவியும்......

.... *

வீழுநர் கண்ணே யினிது.....

.... *

[இதுவுமது:]இ-ள். நீரும், (உயிர்க்கு அவசியம்வேண்டும்) நீரும் (ஞாயது) ாகுக-ஆம், அதி-புலவி.

நிழலதே, நிழலினுள்ளதே! இனிது, இனிதாகும். (அதுபோல்) புலவியும், (புணர்ச்சிக்கு அவசியம்வேண்டும்) பிணக்கும்! வீழுநர்கண்ணேயினிது, அன்புடையவரிடத்தே இனிதாகும் (மற்றையன்பிலாரிடத்து ஆகாது!) எ - று. ❀ நிழலிடத்துள்ள நீர் மிகுந்த குளிர்ச்சியுடையதாய்த் தாகந் தணித்தலால், இனிதாயிற்று. அன்புடையவர் பொறுமைக்கு நோகுதலும்- கூடுதலிலே ஆசையும்-உடையராவர். இவளிடத்து அவ்விரண்டும் இல்லாமையால் இப்பிணங்குதலும் துன்பஞ்செய்கின்றதென்பதாம்.] (௬)

ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சந் .... *

கூடுவே மென்ப தவா .... *

[இதுவுமது.] இ-ள். ஊடலுணங்க, (தான்) பிணங்கலிலே வருந்தா நிற்கவும்- விடுவாரோடு, (தன்னை) விட்டிருக்கவல்லாரோடு - என்னெஞ்சம், என்மனம்- கூடுவேமென்பது, கூடக்கடவேமென்றுமுயற்சி செய்தற்குக்காரணம்! அவா, (தன்) ஆசையே (வேறில்லை.) எ-று அன்பும் அருளும் இல்லாமை உடையரொன்றும் - அவரோடுயாம் பொருந்துவேமென்றும்- நினைத்து அதற்குமுயலுதல் அவாவுந்தூர்செயலாகலால் கூடுவேமென்பது அவாவென்றான். இக்கூட்டம் முடியாதென்பதாம்.] (ம)

௱௩௨-ஆம்-அதி-புலவி நுணுக்கம்

அஃதாவது- தலைவனும் தலைவியும் ஒருபடுக்கையிலே கூடியிருந்தவிடத்து அவனிடத்துப் பிணங்குதற்குக் காரணமில்லாதிருக்கவும் ஆசை அதிகப்படுதலால் நுட்பமாகிய ஒரு காரணம் இருக்கிறதாக உட்கொண்டு அதனை அவன்மேல் ஏற்றி அவள் பிணங்குதல். காரணத்தின் நுணுக்கம். காரியத்தின்மேனின்றது. அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர் ... *

நண்ணேன் பரத்தநின் மார்பு .... *

[இது- உலாப்போய் வந்த தலைவன் படுக்கையிடத்துவந்தபோது தலைவிசொல்லியது.] இ-ள். பரத்த, பரத்தையரிடத்துச் செல்லுதலுடையாய்- பெண்ணியலாரெல்லாரும், பெண்ணியல்பினையுடையாரெல்லாரும்! கண்ணின், (தமது) கண்களால் - பொதுவுண்பர், பொதுவாக (உன்னை) அனுபவிப்பார். (அதனால்) நின்மார்பு, நின்மார்பு -

[அவரெச்சிலாகிய நின்மார்பைதீ-நண்ணேன், பொருந்தேன். எ-று. ❀ கற்புநாண்முதலாகிய நற்குணங்கள் இல்லாமையால், பரத்தையர்க்கு உள்ளது பெண்ணுயிருக்கைமாத்திரமேஎன்கிறகருத்தால், பெண்ணியலாரென்றாள்- பொதுவாகவுண்டல், தமது சேரியிலே செல்லுகையில்-முறையாலன்றி ஒருகாலத்து ஒருசேரநோக்குதல், அதுவும் ஓர்.குற்றம் தான்நோக்கி இன்புற்றபடியே அவரும்நோக்கிஇன்புறுவரொன்று ஆசங்கித்து அவள் அவரிடத்துப் பொறாமை யடைதலால்,-நுணுக்கமாயிற்று.] (க)

ஊடி யிருந்தேமாத் தும்மினர் யாந்தம்மை .... ❋
நீடுவாழ் கென்பாக் கறிந்து .. .. ❋

இது - தலைவன் நீங்கியபோதுசென்ற தோழிக்குத் தலைவி புடக்கையிடத்து நடந்ததுசொல்லியது.] இ-ள். ஊடி,(யாம் தம்மோடு) பிணங்கி- இருந்தேமா, (பேசா)திருந்தேமாக-தும்மினர், (காதலர்) தும்மினார். (அப்பிணக்கு நீங்கி- யாம், நாம்- தம்மை, தம்மை- நீடுவாழ்கென்பாக்கறிந்து, நெடுங்காலம்வாழ்கவென்று சொல்லுவேமாக நினைத்து. எ-று. ❀ தும்மியக்கால் வாழ்த்துதல் மரபாகலால் பேசவேண்டியதாயிற்றென்பதாம். இயல்பாக உண்டாகிய தும்மலைக் குறிப்பால் உண்டாகியதாகக் கொள்ளுதலால், நுணுக்கமாயிற்று..(உ)

கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக் .... *
காட்டிய சூடினீ ரென்று ... . *

[இது தலைவியது பிணக்குக் குறிப்பைக் கண்டு நீர் கூடியொழுகாதிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம்யாதென்றதோழிக்குத்தலைவன் சொல்லியது.] இ-ள். கோட்டுப்பூவளைவாகியபூமாலையை. சூடினும், சூடினேனாயினும் - ஒருத்தியை, (உம்மால் இச்சிக்கப்பட்ட) ஒருத்திக்கு - காட்டிய, (இப்பூவலங்கரிப்பைக்) காட்டுதல் வேணடி-சூடினீரென்று, அணிந்தீரென்று - காயும், கோபியாநிற்பள். (இப்படிப்பட்டவளுக்கு ஒருகாரணம் வேணடுமோ.) எ-று. ❊ பூஆகுபெயர். வளையமாக வெனினுமாம்] (௩)

யாரினுங் காதல மென்றேனா வூடினாள் .... *
யாரினும் யாரினு மென்று .... *

[இதுவுமது] இ-ள். (காமம்அனுபவித்தற்கு உரிய இருவராயுள்ளவர் எவரினும் தாம் மிகுந்த காதலையுடையேமென்பதுநினைத்து) யாரினுங்காதலமென்றேனா, யாரினும் மிகுந்தகாதலுடையேமென்று சொன்னேனாக- (உனதுதோழி அதுநினையாமல் உன்னால் விரும்பப்பட்ட மகளிர்பலருள்ளும் உன்னிடத்து மிகுந்தகாதலையுடையே

(௲௱உ௰) ௱௩௨-ஆம்,
அதி-புலவிநுணுக்கம்.

மென்றேனுக நினைத்து) யாரினும் யாரினுமென்று, யாரினும் யாரினும் (என்னிடத்துக் காதலையுடையீர்) என்றுசொல்லி - ஊடினாள், பிணங்கினாள். எ-று. ❁ தலைவிகருத்துக்குக் காதலம் என்றதன்மைப் பன்மை தலைவன் தன்னை உயர்த்திச்சொல்லியதாகவந்தது.யான் அன்புமி நதியினாலே சொல்லியதைக் கருத்துவேறுபடக் கொண்டதல்லது வேறொருகாரணம் இல்லையென்பதாம்.] (சு)

இம்மைப் பிறப்பிற் பிரியல னென்றேனாக் .... *
கண்ணிறை நீர்கொண் டனள் .... *

[இதுவுமது] இ-ள்.(காதன்மிகுதியால்) இம்மைப்பிறப்பில்,இப்பிறப்பிலே - பிரியலனென்றேன், பிரியேனென்று சொன்னேனாக - (அதனால் என்னை மறுபிறப்பிலே பிரிவேன் என்கிற கருத்துடையேனாக நினைத்து- கண்ணிறைநீர்கொண்டனள், (அவள்) கண்ணிறைந்த நீரைக்கொண்டாள். எ-று. ❁ வெளிப்படுசொல்லைக் குறிப்புச்சொல்லாகக் கொள்கின்றதல்லது என்னிடத்துத் தவறில்லையென்பதாம்.

உள்ளினே னென்றேன்மற் றென்மறந்தீ ரென்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள் .... *

[இதுவுமது.] இ-ள்.உள்ளினேனென்றேன், (பிரிவில்இடைவிடாமல் உன்னை நினைந்தேன். என்கிறகருத்தால்) நினைந்தேனென்றேன். (அவள் அதனைஒருகால்மறந்து பின் நினைந்தேனென்று சொல்லியதாகஎண்ணி) மற்று, அதற்குவிரோதமாக என்மறந்தீரென்று, என்னைமறந்தீரென்றுசொல்லி-முன்னேதழுவுதற்கு அமைந்தவள்)என்னை, என்னை - புல்லாள், தழுவாளாகி - புலத்தக்கனள், பிணங்கற்கு அமைந்தாள். எ-று. ❁ மற்றுவினைமாற்று. அருத்தாபத்திவகையால் மறத்தலை உட்கொண்டுபிணங்கினாளென்பதாம்.] (கூ

வழுத்தினுடும்மினே ளாக வழித்தழுதாள் ....*
யாருள்ளித் தும்மினீ ரென்று .. ..*

[இதுவுமது.] இ-ள். (கூடியிருக்கின்றவள்) தும்மினேனாக,(யான் தும்மினேனாக - வழுத்தினாள், (தன்னியற்கைபற்றி) வாழ்த்தினாள். (அப்படி வாழ்த்தியதானே) அழித்து, (அக்கருத்தை)மறித்து-(உம்மை நினைந்து வருந்துகின்ற மகளிருள்) யாருள்ளி,'யார்நினைத்தலால் தும்மினீரென்று, தும்மினீரென்று- அழுதாள், (பிணங்கி அழுதாள் எ - று. ❋ வாழ்த்தலோடு பிணங்கல் பொருந்தாமையால், அழித்தென்றான். அன்புடையார்நினைத்தவழி,நினைக்கப்பட்டவர்க்குத் தும்மல் தோன்றுமென்பது, மகளிர்வழக்கு. இவ்வழக்கையுமுள்ளதாக நினைத்துப் பிணங்கினாளென்பதாம். (எ)

௱௩௨-ஆம்,அதி- புலவி நுணுக்கம்.

(௲௩௨௧)

தும்முச் செறுப்ப வழுதா ணுமருள்ள ....*
லெம்மை மறைத்திரோ வென்று . ... *

[இதுவுமது.] இ-ள். (எனக்குத் தும்மல் தோன்றியவிடத்தே யார்நினைத்தலால் தும்மினீரென்று பிணங்குதற்கு அஞ்சி) தும்முச்செறுப்ப, அத்தும்மலை அடக்கவும், நுமருள்ளல், உம்மவர் (உம்மை) நினைத்தலை-எம்மைமறைத்திரோவென்று (உம்மோடு ஒருசம்பந்தமும் இல்லாத எமக்கு மறைக்கலுற்றீரோவென்று சொல்லி - அழுதாள், (பிணங்கி. அழுதாள். எ-று. ❋ செறுப்பவும்என்பதினும்மை,விகாரத்தால்தொக்கது. தும்மினுங்குற்றம் ஒழியினுங்குற்றம் ஆகியக்கால் இனியான் செய்தற்றன்மையது யாதென்பதாம்.] (அ)

தன்னை யுணர்த்தினுங் காயும்பிறர்க்குநீ ....
ரித்தீர யாகுதி யொன்று ....

[இதுவுமது.] இ-ள். தன்னை, இவ்விதத்தாலே பிணங்கிய தன்னை- உணர்த்தினும், (நான்வணங்கிப்) பிணக்குத்தீர்க்கும்போது- காயும், கோபியாநிற்பள். பிறர்க்கும், பிறமகளிர்க்கும்-நீர், நீர்-இந்நீரராகுதி யொன்று, (அவர்பிணங்கியபோது) இப்படியே வணங்கிப் பிணக்குத் தீர்க்குந் தன்மையீராகின்றீரென்றுசொல்லி. எ-று. ❊ இவள் தெளிவித்தவழியும் தெளியா ளென்பதுபற்றி, என்மேல் ஏற்றிக்கொண்ட அக்குற்றங்களுக்கு உடன்பட்டு வணங்கினேன் வணங்கஅதுவும்பிணங்குதற்கு ஏதுவாய் முடிந்தது இனி இவளிடத்துச்செய்யத்தகுவது யாதென்பதாம். (௬)

நினைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர் ....
யாருள்ளி நோக்கினீ ரென்று ....

[இதுவுமது.] இ-ள். (என்சொற்களும் செயல்களும்பற்றித்தான் கோபித்தலால்) இருந்து, (அவைகளையொழிந்து) இருந்து- நினைத்து, (தன்னவயவங்களின் ஒப்பில்லாமையை) நினைத்து- நோக்கினும் (அவைகளையே)பார்த்துக்கொண்டிருந்தாலும்-காயும்.(என்னைக்) கோபியாநிற்பள். அனைத்தும், (என்னவயவ) மெல்லாம்- நீர்,நீர்-யாருள்ளிநோக்கினீரென்று, (அவைகளினுட்புமையால்) யாவரை நினைத்துப்பார்த்தீரென்று சொல்லி. எ-று. ❊ யான்எல்லாவவயவங்களாலும் ஒருத்தியோடு ஒத்தல் கூடாமையால் ஒன்றால் ஒருவராகப் பலரையும் நினைக்கவேண்டும் அவரெல்லாரையும் யான் அறியச்சொல்லுமென்கிறகருத்தால், அனைத்துநோக்கினீர் யாருள்ளியென்றார். சும்மாவிருத்தலும் குற்றமாயிற்றென்பதாம். (௭)

[௯௯]

௩௨௩-ஆம்-அதி- ஊடலுவகை.

அஃதாவது-அப்படிப்பட்ட ஊடலால் தமக்குக்கூடலின்பம் சிறந்த விடத்து அச்சிறப்புக்கு ஏதுவாகிய அவ்வூடலைத்தலைவி மகிழ்தலும், தலைவன்மகிழ்தலும், ஆம்-அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

இல்லை தவறவர்க் காயினு மூடுதல் .... *
வல்ல தவரளிக்கு மாறு .... *

[இது- தலைவிகாரணம் இல்லாமற் பிணங்குகின்றமை கேட்டு அப்படி நீ பிணங்குகின்றது என்னவென்ற தோழிக்கு அவள்சொல்லியது.] இ-ள். அவர்க்கு, அவரிடத்து- தவறு,பிழைகள்- இல்லையாயினும், இல்லாதிருந்தாலும் - அவரளிக்குமாறு, (நமக்கு) அவர் அருள் செய்கின்றவிதம்! ஊடுதல்வல்லது பிணங்கலை (விளைக்க) வல்லதாகின்றது. எ-று. ❋ அவர்க்கென்பது,வேற்றுமைமயக்கம். அளவிறந்த இன்பத்ததாகலால் யான், அடைதற்றன்மையதாகியஇத்தலையளிமறந்தவரும் அடைவொன்று நினைத்து அதுபொறாமையால் ஊடல் நிகழ்கின்றதென்பதாம். (௧)

<u>ஊட</u>லிற் றோன்றுஞ் சிறுதுனி நல்லளி......................... *
வாடினும் பாடு பெறும் .... *

[இது- பிணங்காதிருக்கின்ற போதும் அத்தலை யளிபெறலாயிருக்க அதையிழந்து பிணக்கினால் வருந்துவது என்னென்றதோழிக்குத் தலைவிசொல்லியது.] இ - ள். ஊடலிற்றோன்றும், (பிணங்குதலாலேநம்மிடத்துத்) தோன்றுகின்ற-சிறுதுனி,சிறிய துன்பத்தால்-நல்லளி, (தலைவர்செய்கிற)நல்லருள்-வாடினும், வாடுமாயினும் - பாடு, பெருமையை- பெறும், பெறும்.எ-று.❋ தவறில்லாமல் நிகழ்கின்ற ஊடல், கடிது நீங்கலால் அத்துன்பமும் நில்லாதென்றற்கு, சிறுதுனியென்றும்- ஆராமை பற்றி நிகழ்தலால் அதனால் நல்லளிவாடாதென்றற்கு, வாடினுமென்றும்-பின் பேரின்பந்தருமென்றற்கு,பாடுபெறுமென்றும் - சொல்லினாள். அது வருத்தமெனப்படாதென்பதாம். (௨)

புலத்தலிற் புத்தேளு டுண்டோ நிலத்தொடு .... *
நீரியைந் தன்ன ரகத்து .... *

[இதுவுமது.] இ-ள். நிலத்தொடு, நிலத்தினோடு - நீர், நீரானது- இயந்தன்னரகத்து, கலந்ததுபோல் ஒற்றுமையுடையகாதலரிடத்து புலத்தலின், பிணங்குதல்போல் (நமக்குஇன்பஞ்செய்வது) புத்தேளுடு, ஒருதெய்வலோகம்! உண்டோ, உண்டோ. எ- று. ❋ எப்படி

ளகூ-ஆம், அதி - ஊட லுவகை. (ளாஉக)

நீரானது, தானின்ற நிலத்தியல்பின தாமோ அப்படியே காதலரும் தாம் கூடிய மகளிரியல்பின ராதலால் .அதுபற்றி அவரோடு பிணங்குதல் நிகழுமென்றற்கு, நிலத்தொடு நீரியைந்தன்னரகத்தென்றும், அவர் நமக்கும் அப்ப டிப்பட்டவராதலால் அப்பிணக்குப் பின்னே பேரின்பம் தருகின்றதென்றற்கு,புலத்தலிற்புத்தேளுமுண்டோவென்றும்- சொல்லினாள். உவமம், பயன்பற்றிவந்தது. (ங)

புல்லி விடா அப் புலவியுட் டோன்றுமென் .... *
னுள்ள முடைக்கும் படை .... *

[இது-அப்பிணக்கு இனி எதனால் நீங்குமென்றதோழிக்குச்சொல்லியது.] இ - ள். புல்லி, (அன்பரைத்) தழுவிக்கொண்டு - விடாஅ, (பின்) விடாமைக்கு ஏதுவாகிய- புலவியுள், அப்பிணக்கி னுள்ளே- என்னுள்ளமுடைக்கும், (தன்மேற்சென்ற) என்னுள்ளத்தைச் சிதைக்கிற- படை, ஆயுதம்! தோன்றும். உளதாகும். எ- று. ❋ வணக்கத்தையும் - பண்மொழியையும் - உள்ளமுடைக்கும் படையென்றாள் அவற்றால் அப்பிணக்குள்ளம் அழிதலால். பிணக்கு நீங்கும் விதம் சொல்லியபடி. (ச)

தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோ .... *
ளகறலி னாங்கொன் றுடைத்து .... *

[இது தலைவியைப் பிணக்குநீக்கிக் கூடியதலைவன் அதிக மகிழ்ச்சி யடைந்தவனாய்த் தன்னுள்ளே சொல்லியது.] இ-ள். தவறிலராயினும்,(ஆடவர்தம்மிடத்துப் பிழையில்லாதவராயிருந்தாலும்-(உடையோர்போல் பிணங்கப்பட்டு) தாம்வீழ்வார், தம்மால் விரும்பப்படு மகளிரது-மென்றோள், மெல்லியதோள்களை - அகறலின்,கூடப்பெறாத சமயத்தில்- ஆங்கொன்று, (அவர்க்கு) அப்படிப்பட்டதோரின்பம்! உடைத்து, (பயத்த) லுடைத்து. எ - று. ☸ தவறுடையார்க்கு ஊடிக்கால் இறந்தவின்பத்தோடு வருமின்பமும் அடைவராகலால். அதுமிகவும் நன்று. மற்றைத் தவறிலார்க்கும் ஊடுமின்பத்தை இகழ்ந்ததில்லையென்னுங் கருத்தால் தவறிலராயினும் ஆங்கொன்றுடைத்தென்றான். ஊடலினாலாகிய இன்பம் அளவிறத்தலால், சொல்லுதற்கு அரிதென்றற்கு, அப்படிப்பட்டதொன்றென்றான். தவறில்லாமல் ஊடியதுவும் எனக்கு இன்பமாயிற்றென்பதாம்.] (௫)

உணலினு முண்ட தறலினிது காமம் .. .. *
புணர்தலி னூட லினிது ... . *

[இதுவுமது,] இ-ள். உயிர்களுக்கு) உணலினும், (மேலே) உண்ணுதலினும்- உண்டதறல், முன்னுணப்பட்டது சீரணித்தல்! இனிது

இன்பந்தரும். (அதுபோல்) காமம்,காமத்துக்கு-புணர்தலின், (மே லே) புணர்தலினும்-ஊடல், (முன்னைத்தவறுபற்றிப் பிணங்கல்) இனி து, இன்பந்தரும். எ - று. ❋ காமத்திற்கு என்பதிலே சாரியையும் நான்காம் வேற்றுமையுருபும் விகாரத்தால் தொக்கன. பசித்துண்ணும்வழி, மிகவுண்ணலுமாய் இன்சுவையதுமாம் அதுபோல அகன்று கூடும்வழி, ஆராதனுமாய்ப் பேரின்பத்ததுமாமென்றுதன்னனுபவம்பற்றிச் சொல்லியபடி.] (கூ)

ஊடலிற் றோற்றவர் வென்றா ரதுமன்னுங் ……… ……… ❋

கூடலிற் காணப் படும் ……………………………… ❋

[இதுவுமது.] இ - ள். (காமம் அனுபவித்தற்குரிய இருவருள்) ஊடலிற்றோற்றவர், பிணக்கில் தோற்றவர் - வென்றார், வென்றோ ராவார்- அது, (அப்பொழுது அறியப்படாதாயினும்) கூடலிற்காணப்படும், (பின்னை) புணர்ச்சியிலே (அவரால்) அறியப்படும்.எ-று. ❋ தோற்றவர், எதிரிடமாட்டாமல் சாய்ந்தவர். அவர்புணர்ச்சியிடத்தே பேரின்பத்தை அடைதலால் வென்றாராயினர். மன், உம், அசைநிலைகள். யான் அதுபொழுதுசாய்தலால் இதுபொழுது பேரின்பம் பெற்றேனென்பதாம்.] (எ)

ஊடடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வியர்ப்பக் ……… ❋

கூடலிற் றோன்றிய வுப்பு ……………………………… ❋

[இதுவுமது.] இ-ள். நுதல்வியர்ப்ப, (இப்போது இவளது) நெற்றிவெயர்வரும்படிவகை- கூடலிற்றோன்றிய,புணர்ச்சியிடத்துஉளதாகிய- உப்பு, இனிமையை- (இன்னுமொருகால்) ஊடி, (இவள்) பிணங்கி- பெறுகுவங்கொல், (யாம்) பெறவல்லமோ. எ-று. ❋ புணர்ச்சியினது விசேஷம்பற்றி, நுதல் வியர்ப்பவென்றான். இனிமை, கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றதனால் ஆகிய இன்பம். இனி அப்பேறு கிடைப்பது அரிதென்று பெற்றதன்சிறப்புச் சொல்லியபடி. (அ)

ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப .... *
நீடுக மன்னோ விரா ... . *

[இதுவுமது.] இ-ள். ஒளியிழை, விளங்குகின்ற ஆபரணத்தை யுடையவள்.- ஊடுகமன், (இன்னும் எம்மோடு பிணங்குவாளாக)(அப்படிப்பிணங்கிநிற்றற்கும், அதனைத்தீர்த்தற்பொருட்டும்)-யாம்,நாம்- இரப்ப, இரந்துநிற்றற்குக் (காலம்பெறும்வகை) இரா,இவ்விரவு!-நீடுகமன், (விடியாது) நீட்டித்தல்வேண்டுக. எ-று ❊ ஊடுக நீடுகவென்பன - வேண்டிக்கொள்ளுதற் பொருளில்வந்தன. மன்னிரண்டும் - ஆக்கத்தில்வந்தன. ஓகாரங்கள் அசைநிலைகள். (௬)

௱௩௰ - ஆம், அதி-ஊடலுவகை.

(௱௩௰௫)

ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
.... *
கூடி முயங்கப் பெறின் ....
.... *

[இதுவுமது.] இ-ள். காமத்திற்கு, காமவனுபவத்திற்கு-இன்பம், இன்பமாவது!-ஊடுதல்- (அதனை அனுபவித்தற்குரியோர்ஆராமை பற்றித்தம்முள்) ஊடுதலாம். அதற்கு, அவ்வூடுதற்கு-இன்பம்-இன்பமாவது!- கூடி, (அதனை அளவறிந்துநீங்கித் தம்முள்) கப்பெறின், புணர்தல்கூடுமாயின் (அப்புணர்ச்சியாம்.)

கூடி-முயங்

கூடுதல்-ஒத்தவளவினராதல்.முதிர்ந்துபெரும்பிணக்காகியவிடத்தே துன்பஞ்செய்தலாலும், முதிராது சிறுபிணக்காகியவிடத்துப்புணர்ச்சியின்பம் செய்யாமையாலும், இரண்டற்கும், நடுவாகிய அளவறிந்து நீங்குதல்அரிதென்பதுபற்றிக்கூடிமுயங்கப்பெறினென்றான் அவ்வூடலின்பமும் கூடலின்பமும் யான்பெற்றேனென்பதாம்.(ய)

கற்பியல் முற்றிற்று.

காமத்துப்பால் - முற்றிற்று.

திருவள்ளுவர்என்கிறதிருக்குறண்மூலமும்,இதற்குப்பதவுரையும், கருத்துரையும், விசேடவுரையும், நிறைவேறின.
ஆ பால்-௩-அதிகாரம் - ௱௩௰௩ - திருக்குறள்-௲௩௱௩௰.

இக்காமத்துப்பாலுக்குக் காமத்தைக்குறித்துச் செம்பொருளாகச் சொல்லப்பட்ட இசசிற்றின்பப் பொருளன்றி - மோக்ஷத்தைக்குறித்துக் குறிப்புப் பொருளாகச் சொல்லப்பட்ட பேரின்பப்பொருளும் உண்டு.

திருவள்ளுவநாயனார்திருவடிவாழ்க.
திருப்போரூர்ச்-சுப்பிரமணியசுவாமிகள்திருவடிவாழ்க.
சிவனடியார்கள் திருவடிவாழ்க.

☞ இத்திருக்குறளுக்கு - மூவகை யுரைகளும்
களத்தூர்-தமிழ்ப்புலவர் - வேதகிரிமுதலியாரவர்களாற்
செய்யப்பட்டன.

கடவுடுணை.

திருவள்ளுவமாலை.

(அசரீரி.)

திருத்தகு தெய்வத் திருவள்ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க - விருக்க
வுருத்திர சன்ம னெனவுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோர் சொல்

இ-ள். திரு, அருட்செல்வத்தையும்- த
குதெய்வம், (அதற்குத்)த
க்க தெய்வத்தன்மையையும் உடைய- திருவள்ளுவரோடு, திருவள்ளுவருடன்- உருத்தகு நற்பலகை, உருவத்தினாலேதக்க நல்ல சங்கப்பலகையிடத்து உருத்திரசன்மர்- ஒக்கவிருக்கவெனவுரைத்து, சமானராயிருக்கக்கடவரென்றுசொல்லி- வானில, ஆகாயத்திலிருந்து ஒருக்க, ஒற்றுமைசெய்யும்படி-ஓர்சொல், ஒருவாக்கியம்- ஓ டென்றது, ஓடென்று இரைந்தெழுந்தது. எ - று. ❋ திருவள்ளுவ ரென்னும் பெயருள், திருவென்பது உயர்வையும், வள்ளுவரென்பது வண்மையையுடையரென்பதையும், விளக்கிநின்றனவாதலின்- அது வேதத்தில இலைமறைகாய்கள்போற் பலவிடங்களினு மறைந்து வெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களையெல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக் கொடுத்தருள்செய்தவரென்னுங் காரணம்பற்றிவந்தபெயராயிற்று. வள், முதனிலை. அர், இறுதிநிலை. உ, சாரியை. அம்முதனிலைக்குப்பொருள், ஈகை- உருத்திரசன்மர், உருத்திரனால் சன்மத்தை அடைந்தவரெனவிரியும். அவர் முருகக்கடவுளது திருவவதாரமாய் வணிகர் மரபிற்றோன்றிய மூங்கைப்பிள்ளையார். அசரீரி- அருவமாயெங்கு நிறைந்துள்ள முதற்றெய்வம்- அரங்கேற்றத்தொடங்கியகாலத்துத் தெய்வப்புலவரோடு ஒப்பாயிருந்து கேட்டற்குத் தகுதியுடையோர்யாரென யாவரும் எண்ணமுற்று நின்றவழி இவ்வசரீரிவாக்கியம்பிறந்தது. என்ற தெனப்படர்க்கை வினையாகக்கூறலால் அவ்விடத்து நின்றுகேட்ட புலவர்களில் ஒருவர் அதனை இங்ஙனம் பாடலாகச் செய்தனரென்றறிக. (௧)

திருவள்ளுவமாலை.

(௫௨௭)

(நாமகள்.)

நாடா முதனான் மறைநான் முகனாவிற் .... *
பாடா விடைபாரதம் பகர்ந்தேன் - கூடாரை *
யெள்ளியவென்றி யிலங்கிலைவேன்
மாறபின் .... *
வள்ளுவன் வாயதென் வாக்கு .... *

இ-ள். கூடாரையெள்ளியவென்றியிலங்கிலைவேன்மாற, பகைவரைப் புறங்கொடுக்கச்செய்து) இகழ்ந்த வெற்றியையுண்டாக்கி விளங்கா நின்றதகட்டுவடிவாயுள்ளவேற்படையையுடைய பாண்டியராசனே- நாடா, (உலகத்தார் விதிவிலக்குகளை அறிந்து உட்யும்வழியை)நாடி- முதல், படைப்புக்காலத்திலே- நான்முகனாவில் - பிரமனது நாவிலி ருந்து- நான்மறைபாடா. (இருக்கு முதலாகிய நான்குவேதங்களை யும்) பாடி- இடை, (இதற்கும் அதற்கும்) நடுவானகாலத்திலே- பா ரதம்பகர்ந்தேன், பாரதமாகியவேதத்தைச்சொல்லினேன்- பின், அ தற்குப்பிற்பட்ட இக்காலத்திலே- என்வாக்கு, என்னுடையவாக்கு- வள்ளுவன்வாயது, (திருக்குறளாகிய வேதத்தைச்சொல்லி)- வள்ளு வன்வாயின் கண்ணதாயிற்று. எ-று. * வேதமும் சந்தோரூபமா கையால், படாவென்றாள். தன் கணவனுதலின், நான்முகனாவிலிருந் தென்றும். அவனவதாரமாதலின், வள்ளுவன்வாயதென் வாக்கெ ன்றும் கூறினாள். பாரதம் வியாசனைக்கொண்டு சொல்லப்பட்டது. இதனால் நான்மறை- பூர்வவேதமும், பாரதம்- மத்தியவேதமும், தி ருக்குறள்- உத்தரவேதமும்- என்றதாயிற்று. பூர்வவேதம்பின்வியா சராலே நான்காகவகுக்கப்பட்டமைபற்றி நான்மறையெனப்பட்ட து. அன்றி நாவெனப் பிரித்து எழுவாயாக்கினுமாம். (உ)

(இறையனார்.)

என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினு .... *

நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க்-குன்ருத
செந்தளிர்க் கற்பகத்தின் றெய்வத்திருமலர்போன்....

❋

❋

மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல் .... ❋

இ-ள். மன்புலவன் வள்ளுவன்வாய்ச்சொல், புலவர்க்கரசனுகிய வள்ளுவன் வாயிற்பிறந்த திருக்குறளானது- என்றும்யாணர்புலராது எக்காலத்துந் தன்னழகு கெடாமல்- நாட்செல்லுகினு நின்றலாந்து, நெடுங்காலங் கழியினும் நிலைபெற்றுமலர்ந்து-ம்தேன்பிலிற்று நீர்மை யதாய், தேனைச்சொரிகின்ற குணமுடையதாய் (விளங்குமாதலால்-

குன்ருத செந்தளிர்க்கற்பகத்தின், குறைவுபடாத செய்யதளிர்களையுடைய கற்பகத்தினது- தெய்வத்திருமலர்போன், தெய்வத்தன்மை பொருந்திய உயர்வாகியமலர்போலும். எ-று. ❋ திருக்குறளுக்கு

அழகு சொன்முடிபு பொருண்முடிபின் குணங்களும், அலர்தல்-எங்கும் பரவுதலும், தேன்பிலிற்றல் - இருமையின்பங்களும் விளைத்தலும், ஆம். சொல் - ஆகுபெயர். இறையனார் கடவுளாதலின் - இனி இதிற் சிறப்பதொன்றுள் தாவதின்றென்னுந் துணிவுதோன்ற- என்றுமென்றும்- பின்னும் அதனைவலியுறுத்தற்கு-நாட்செல்லுகினுநின்றென்றும், வாழ்த்துப்பொருள்பட இவ்வாறு கூறினார். (ரு)

(உக்கிரப்பெருவழுதியார்)

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த- நூன்முறையை ...
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ் .. ..

... *

... *
சிந்திக்க கேட்க செவி ....
.... *

இ-ள். வள்ளுவனாய்-திருவள்ளுவனாய்- தான்மறைந்து - தனது திருமேனியைமறைத்து- நான்மறையின் மெய்ப்பொருளை- நான்குவேதங்களி னுண்மைப்பொருளை- தந்து - (இவ்வுலகத்திலே) கொணர்ந்து- முப்பொருளா, (அறம்பொருளின்பமென்னும்)முப்பாற்பொருளதாக- நான்முகத்தோன், பிரமனால்- உரைத்த, திருவாய் மலர்ந்த நூல். நூலினது- முறையை, புத்தகத்தை சென்னிவந்திக்க (எனது) தலையானது தொழக்கடவது. வாய்வாழ்த்துக வாயானது வாழ்த்தக்கடவது. நன்னெஞ்சஞ்சிந்திக்க நல்லமனமானது நினைக்கக்கடவது. செவிகேட்க- காதுகளானவை கேட்கக்கடவன. எ-று. * முப்பொருள் ஆகுபெயர். இவ்வேதப்பொருள் ஆதியிலே வேதஞ் சொல்லியோனாலேயே சொல்லப்பட்டமையால்மெய்ப்பொருளென்றார்.(ச)

(கபிலர்)

தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட

.... *
பனையளவு காட்டும் படித்தான் - மனையளகு

.... *
வள்ளைக் குறங்கும் வளநாட-
வெள்ளைக் குறட்பா விரி ...

வள்ளுவனார் .... *

.... *

இ-ள், மனையளகு வள்ளைக் குறங்கும் வளநாட, மனையில் வளர்க்கப்படுகின்ற பறவைப்பேடுகள் உலக்கைப்பாட்டால்கண்ணுறங்குகின்ற வளம்பொருந்திய நாட்டையுடைய அரசனே- வள்ளுவனார் வெள்ளைக்குறட்பாவிரி, திருவள்ளுவரால் அருளிச்செய்யப்பட்ட குறள் வெண்பா (மிகப்பெரிய பொருளைத்) தன்னுட் கொண்டுகாட்டுதல்- தினையளவுபோதாச் சிறுபுன்னீர், தினையரிசியினளவுக்கும் போதாதசிறிய புல்லினதுநுனியின்கணுள்ள பனிநீரானது- நீண்டபனை யள வுகாட்டுபடித்து உயர்ந்த பனையினளவான அதன்சாயையைத் தன்னுட்கொண்டு காட்டுங் குணம்போலுள்ள குணத்தையுடைத்து.எ-று

திருவள்ளுவமாலை.

(௬உ௬)

பனை- ஆகுபெயர். ஆல்- அசை. பறவை-கிளிமுதலியன. உலக்கைப்பாட்டு- விரி- விரித்தல். எப்படி மிகச்சிறிய பனித்துளியிலே மிக

ப்பெரிய பனைமரத்தின் சாயை அடங்கி
விளங்குகின்றதோ அப்படி
யே மிகச்சிறிய இக்குறள் வெண்பாவில்
ங்கி விளங்குகின்றதென்பதாம்.

மிகப்பெரியபொருள் அட

(ரு)

(பரணர்.)

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு
மாணடியான் ... .*
ஞால முழுது நயந்தளந்தான் - வாலறிவின்
... .*
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தா ..
ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து - ....

*

*

இ-ள்.மாலும்,திருமாலும்
-குறளாய்,குறளாய்ப்பிறந்து- வளர்ந்து
வளர்ந்து- இரணடுமாணடியால், இரண்டுபெரியஅடிகளால் ஞாலமு
ழுதும், உலகமனைத்தையும்- நயந்து, விரும்பி-அளந்தான், அளவிட்
டான்- வாலறிவின்வள்ளுவரும், மெய்யறிவினையுடைய திருவள்ளுவ
ரும்- தங்குறள்வெண்பாவடியால், தம்மினின்றுந்தோன்றி(.அந்நிலை

திற்கின்ற) வெண்பாக்குறளின் (இரண்டுசிறிய) அடிகளால்- வையத்தாருள் ளுவமெல்லாம், அவ்வுலகமனைத்தினுமுள்ளோரால் நினைக்கப்பட்டவற்றையெல்லாம்-ஓர்ந்து, ஆராய்ந்து- அளந்தார், அளந்தார். எ-று. ※ உம்மையிரண்டும் முறையே தேவரிற் பெரியோனாகிய வென்றும், மனிதரிற் சிறியராய்க்காணப்பட்டவென்றும், பொருள்

படநின்றன. உபமானத்திலேவளர்தலும்பெருமையுஞ்சொல்லுதலால் உபமேயத்திலே அவற்றுக்குமுறணாகியநிலைநிற்றலும்சிறுமையும் வருவிக்கப்பட்டன. மாலுக்கு - தானேகுறளாதலும் பின்பு அந்நிலை நிலலாது வளர்தலும் பேரடிகளால் அளவுபட்ட உலகத்தை யளந்த

லும், திருவள்ளுவருக்கு- தம்மினின்றுங்குறளை உண்டாக்குதலும் அது தன்னிலைநிற்றலும் அதன் சிற்றடிகளால் அளவுபடாத நினைப்பின் விடயங்களை அளத்தலும், சொல்லப்படுதலாலும் வேற்றுமையறிக.

(நக்கீரர்.)

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா... ※
லானு வறமுதலா வந்நான்கு - மேனோருக் ... ※
கூழி னுணாத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும் .... ※
வாழியுல கென்னாற்று மற்று .... ※

இ-ள். தானே, தானே- முழுதுணர்ந்து, (வேதப்பொரு) ளனைத்தையுமறிந்து- தண்டமிழின் தண்ணிய தமிழின் கண-வெணகுறளால், குறள்வெண்பாக்களால்- அறமுதலாவந்நான்கும், விட்டுநீங்

[கூள]

(ருகூய) திருவள்ளுவமாலை.

குதல்கூடாத அறமுதலாகிய அந்நான்குபொருள்களையும்- ஏனோரு
க்கு- அவற்றையறியாதவர்களுக்கு - (அவர் எளிதினறிய) ஊழின்,
முறையால்- உலகத்தார்க்கும், சொல்லியருளிய திருவள்ளுவருக்கும்
ஒளாணீர்முகிலுக்கும், ஒள்ளிய தீலாத்சுந்த மேகத்துக்கும்- உலகு.
இவ்வுலகமானது-மற்றொன்றாற்றும்,எதிர்நன்றியாது செய்யும்-(செ
யக்கிடந்தது ஒன்றும் இல்லை.),வாழி,(அவரும்அதுவும்-வாழ்க.எ-று.
அறாமை- நீங்காமை. தானே முழுதுணர்ந்தெனவே- ஆசாரியரா
யிருந்து பிறரறிவிக்க அறிந்திலரென்றதாயிற்று. முழுதுமென்னு
மும்மைதொக்கது. ஒண்மை- இனிமைமேல்நின்றது. முறை- நூ
லின் முப்பொருள்களின் கிடக்கையொழுங்கு. (எ)

(மாமூலனார்.)

அறம்பொரு ளின்பம் வீடென்னு மந்நான்கின் .. .... *
திறந்தெரிந்து செப்பிய தேவை - மறந்தேயும் ... ... *
வள்ளுவ னென்பானோர் பேதையவன் வாய்ச்சொற் .. *
கொள்ளா றறிவுடை யார் .... *

இ-ள், அறம்பொரு ளின்பம் விடென்னு மந்நான்கும், அறமுதலாகச்சொல்லப்பட்ட அவ்வேதப் பொருள்களாகிய நான்கானது- திறம், கூறுபாட்டையும்- தெரிந்து, அறிந்து- செப்பிய, (உலகத்தார்க்குச்) சொல்லிய- தேவை. தேவனை- மறந்தேயும், மறந்தாயினும்- வள்ளுவனென்பான், (ஒருமனிதனை உட்கொண்டு) வள்ளுவ னென்றுசொல்லுதற்கு ஒருவனுளனாயின்- அவன், அவன்- பேதை, அறிவில்லாதவனுவன்- அறிவுடையார், விவேகமுடையார்- கொள்ளார், கொள்ளார்கள். எ-று. ❊ அறமுதலியவற்றின் கூறுபாடு - அவற்றின து தொகைவகைவிரிகள். மறந்தேயுமென்றதனல் நினைப்புடன்சொல்லுவோன் பேதையிற் பேதையாயென்றதாயிற்று. முன்னும் பின்னுமுள்ளபாட்டுக்களில் இப்பெயர் தெய்வத்தன்மையைக் குறிப்பிக்கும்படி நன்குமதித்து உயர்த்திச் சொல்லப்படுதலால் ஒருமனிதனைவுட்கொண்டென்பது வருவிக்கப்பட்டது. அன்றிஒலிக்குறிப்பினுலே- சாதி இழிவதோன்ற வள்ளுவனென்பானெனினுமமையும். இக்குறிப்பொலியை வடநூலார் காருகாரமென்பர். (அ)

● (கல்லாடர்.)

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி ... ❊
னன்றென்ப வாறு சமயத்தார் - நன்றென்ன .... ❊
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனர் .... ❊
முப்பான் மொழிந்த மொழி .... ❊

இ-ள். ஆறுசமயத்தார், அறுவகை மதத்தோரும்- ஒன்றேபொருளென்னின், ஒருமதத்தார் தமது நூலிலே உலகமும் உயிரும் கடவுளுமாகிய பொருள்கள் ஒன்றேயென்று நாட்டுவராயின் -வேறென்ப, (மற்றொருமதத்தோர் தமது நூலிலே அதனைமறுத்து அவை) வேறுமென்று நாட்டுவர்- வேறெனின், (அப்படி) வேறென்று நாட்டின்- அன்றென்ப(பின்னொருமதத்தோர் அதனை ஒன்றென்று மறுப்பர்- (ஆதலாற்சமய நூல்களெல்லாம் இவ்வாறு மறுக்கப்படுகின்றன.)· வள்ளுவனார் முப்பான்மொழிந்தமொழி, திருவள்ளுவநாயனாரால் முப்பாலாகச்சொல்லப்பட்ட நூலை நன்றென்ன- நன்றென்று கொள்ளுதற்கு- எப்பாலவரும், எவ்வகைப்பட்ட மதத்தோரும்- இயைப உடன்படுவார். எ-று. ❋ மொழி- ஆகுபெயர். ஆறுமதமாவன, வியாசமதம்- சைமினிமதம்- பதஞ்சலிமதம்- கபிலமதம்- கணாதமதம்-அக்ஷபாதமதம்- அன்றிச் சைவ வைணவமுதலியவற்றைக் கூறினுமாம். எச்சமயத்தாரு மென்னாது- எப்பாலவருமென்றதனால் வேதத்துக்கு உட்பட்ட சமயத்தாரேயன்றிப் புறப்பட்ட சைனம்-பௌத்தம்- சார்வாகம்-முதலியமதத்தாரும், பலவகைப்பட்ட சாதியாரும், தேயத்தாரும், காலத்தாரும், பிறரும், தழுவப்படுதலறிக. (கூ)

(சீத்தலைச்சாத்தனார்.)

மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு .... *
மும்முரசு முத்தமிழு முக்கொடியு - மும்மாவுந் ..... *
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றாமன்றோ .... *
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால் ... ... *

இ-ள். வள்ளுவர், திருவள்ளுவரது - பாமுறைதேர்முப்பால், பாக்களின் முன்பின்) முறைதெரிதற் கிடனாகிய திருக்குறளானது- மும்மலையும், (கொல்லிமலை நேரிமலை பொதியமலை எனப்படுகின்ற) மூன்றுமலைகளையும்- முந்நாடும், (குடநாடு புனநாடு தென்னாடு எனப்படுகின்ற) மூன்றுநாடுகளையும்- முந்நதியும்,(பொருநைநதி காவிரிநதி வையைநதி எனப்படுகின்ற) மூன்றுநதிகளையும்- முப்பதியும், (கருவூர் உறையூர் மதுரை எனப்படுகின்ற) மூன்றுபதிகளையும் - மும்முரசும்,(மங்கலமுரசு வெற்றிமுரசு கொடைமுரசு எனப்படு) மூன்று [illegible]

முரசுகளையும்-முத்தமிழும்,(இயற்றமிழிசைத்தமிழ் நாடகத்தமிழ்
எனப்படும்) மூன்றுதமிழ்களையும்- முக்கொடியும். (விற்கொடி புலிக்
கொடி மீனக்கொடி எனப்படுகின்ற) மூன்றுகொடிகளையும் - மும்
மாவும், (கனவட்டம் பாடலம் கோரம் எனப்படுகின்ற மூன்றுகுதி
ரைகளையும்- தாமுடையமன்னர், தாமுறைமையுடைய சேர சோழ
பாண்டியர் எனப்படுகின்ற) மூவரசருடையவும்- தடமுடிமேல், பெ

ரியமுடிகளின்மேலே கொள்ளப்பட்ட - தாரன்றோ, மாலையன்றோ
ஈ-று. ❁ அன்றோ வென்றது- பலரறிதேற்றம். முப்பால்- ஊருபெ
யர். மும்முரசும் முத்தமிழும் அம்மூவரசர்க்கும் பொதுமையவா
யினும் இம்முறையுரிமை அவர் குடிமரபிற்கியைந்தவாறேபாலும்(ய)

(மருத்துவன்றாமோதரனார்.)

சிந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளாய்..... .. .. ❋
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில் - காந்தி

.... ❋
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாற்
றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு ... . ..

.. .. ❋
.. .. ❋

(ரு)
இ-ள். காந்திமலைக்குத்துமால்யானை, (தன்பகையென) வெகுண்
மலையைக் குத்துகின்ற பெரியகளிறுபோலுள்ள வரசனே- சிந்தி

நீர்க்கண்டம், சிந்திநீர்ச் சருக்கரையையும் - தெரிசுக்கு, சிதைக்கப்பட்டசுக்கையும் - தேனளாய், தேனெனுங்கலந்து - மோந்தபின், மோந்தபிண்டி - (அதனால்) யார்க்கும், தலைக்குத்துடையோர் யாவர்க்கும் - தலைக்குத்து, தலையிடி - இல், இல்லையாம் - வள்ளுவர்முப்பாலால், திருவள்ளுவர் குறளால் - சாத்தற்கு, சித்தலைச்சாத்தனார்க்கு - தலைக்குத்து, தலையிடி - தீர்வு, இல்லையாயிற்று. எ-று. ❁ யூனைபோல் பவனையானமையால் ஆகுபெயர். முன்கேட்கப்பட்ட நூல்களிலெல்லாம் பலசொற்குற்றங்களும், பொருட்குற்றங்களும், கலைடுபொருமல் தலையில் அறைந்துகொண்டு வந்தமையால் புண்பட்டுக் குத்தல உண்டாயிருந்தது. இதன்கண் ஓர்குற்றமுங் காணப்பெருமையால் அது நீங்கிற்றெங்க. எப்படி அம்மூன்றுசரக்கும் அதற்குமருந்தாமோ அப்படியேயிதற் த இம்மூன்றுபாலும் மருந்தாயின வென்பதாம். தீர்வென்னுந்தொழிற்பெயர் முற்றுப்பொருளில்வந்தது. (௩௧)

தா ளா ர்

(நாகன்றேவனார்.)

மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணீரை .*

வேளா தொழிதல் வியப்பன்று - வாளாதா

.... ❋

மப்பா லொருபாவை யாய்பவோ வள்ளுவனார் .. ..❋

முபபான் மொழிமூழ்கு வார் .. .. ❋

இ-ள். தாளார்மலர்ப்பொய்கை, நாளத்தோடுபொருந்திய தாமரைமலர்களையுடைய ஒருகுளத்து நீரின்கண்ணே- குடைவார், மூழ்குவோர்- தண்ணீரை, வேறுதண்ணீரைநீ- வேளாதொழிதல், விரும்பாதொழிதல்-வியப்பன்று, வியப்பைச்செய்வதன்று - வள்ளுவர்முப்பான்மொழி, திருவள்ளுவரது முப்பால்களையுடைய நூலின்கண்ணே- மூழ்குவார், மூழ்குவோர்- தாம், தாம்- வாளா, பிறகு- அப்பால, அப்பால்- ஒருபாவை, ஒருநூலை- ஆய்பவோ, விரும்புவாரோ.

திருவள்ளுவமாலை. (௫௱௩௩)

(விரும்பார் ஆதலின் இதுவே வியப்பைச்செய்வதாம்.) - எ- று. ❋ தாளார்மலரெனலால்- தாமரைமலரென்றுரைக்கப்பட்டது. வியப்பைச்செய்வதை வியப்பென்றார். மூழ்குதல், இங்கேகருத்து முழுதும் அழுந்திநிற்றன்மேனின்றது. மொழி- ஆகுபெயர். ஓகாரம்- எதிர்மறை. விரும்புதலாகியகாரணத்தை ஆய்பவோவெனக்காரியமாகஉபசரித்தார்-அதுவியப்பன்றென்றமையாலெஇதுவியப்பென்றதாயிற்று.

(அரிசிற்கிழார்).

பரந்தபொருளெல்லாம் பாரறியவேறு .... ❋

தெரிந்து திறந்தொறுஞ் சேரச் - சுருங்கிய .... ❋

சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல் .... ❋

வல்லாரார் வள்ளுவரல் லால் … …………………………… *

இ-ள். பரந்த பொருளெல்லாம், (வேதத்திலே)ஒன்றோடொன்று மயங்கிநின்ற நால்வகைப் பொருள்களையும்- பாரபிய, இப்பூமியிலுள்ளோர் அறிதற்பொருட்டு- வேறுதெரிந்து,வேறாகப்பிரித்து-திறந்தொறுஞ்சேர, (அது அது தனது தனது)வகையோடுசேரும்படி- சுருங்கியசொல்லால் சுருக்கமான சொல்லாலே - பொருள்விளங்க, பொருள்விளங்க- விரித்துச்சொல்லுதல், விரியும்படி வைத்துச்சொல்லுதல்- வல்லார்- வள்ளுவரல்லால்- ஆர், ஒருவரும் இல்லை. எ-று. ❋

யார், ஆகுபெயர். திறம்,அறமுதலியவற்றின்கூறுபாடு.சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் முதலிய அழகுகள் எப்படி இவரால் அமைக்கப்பட்டனவோ அப்படிப்பிறரால் அமைக்கப்படுதல்கூடாமைகாட்டியதாயிற்று. (ரு)

(பொன்முடியார்.)

கானின்ற தொங்கலாய் காசிபனூர் தந்ததுமுன் ………… *

கூநின்றளந்த குறளென்ப-

நூன்முறையான் ………… *

வானின்று மண்ணின்றளந்ததே

வள்ளுவனூர் . . …… *

தா நின்றளந்த குறள் …… …… …… . ……

……… *

இ-ள். கானின்றதொங்கலாய்,

மணந்தங்கப்பெற்றமாலையையுடைய பாண்டியராசனே-

முன்-முன்-காசிபனார்தந்தது, காசிபனாராலே தரப்பட்டகுறளை - கூநின்று, மண்ணின்கண்ணே நின்று - அளந்த, (உலகத்தை) அளந்த - குறளென்ப, குறளென்றுசொல்லுவர். தாநின்று, தாம் (இங்கே) எழுந்தருளி - வள்ளுவனாரளந்தகுறள், திருவள்ளுவராலே தரப்பட்டகுறள் - நூல்முறையான், நூலின்முறையோடுகூடி- வானின்று, விண்ணின் கண்ணே நின்றும்- மண்ணின்று, மண்ணின்கண்ணே நின்றும் - அளந்தது, (உலகத்தை) அளந்தது. ஏ-று.

❁ கூ, கூ எனநீண்டது. ஆனுருபு ஒப்புருபின் பொருளில் வந்தது. (ருாகச)

திருவள்ளுவமாலை.

அக் குறள் வஞ்சித்துப் பெற்றளத்தலால் நான்முறையோடு கூடாத தாயிற்று. இக்குறளுக்கு, ஒலிவடிவும் வரிவடிவுமெனை இரண்டுவடி வுண்மையால் ஒலிவடிவுக்கிடம் வாரதலின் வானின்றென்றும் - வரி வடிவுக்கிடம் மண்ணாதலின் மண்ணின்றென்றும், கூறினர். இக்குற ளுக்கு நான்முறையோடு கூடலும் வாணிற்றலும் மிகுத்துச் சொல் வி வேற்றுமை செய்யப்பட்டது. (௰௪)

(கோதமனர்)

ஆற்ற லழியுமென் றந்தணாக ணான்மறையைப் .... *
போற்றி யுரைத்தேட்டின் புறத்தெழுதா, ரேட்டெழுதி ... *
வல்லுந ரும் வல்லாரும் வள்ளுவனர் முப்பாலைச்... .... *
சொல்லிடினு மாற்றலசோர் வின்று .. . . *

இ-ள். அந்தணாகள்- நான்மறையும்,நான்குவேதங்களையும்-உரை த்து, வாய்ப்பாடமாக- போற்றி, காப்பாற்றி - ஆற்றலழியுமென்று, (ஏட்டின்கண எழுதிவைத்தால வலியில்லாரும் ஓதுவாராதலின் இவ. ற்றின்) வலிமைகுறையுமென்று - ஏட்டின்புறத்து, ஏட்டின்கண எழுதார், எழுதார்கள்- வள்ளுவனர் முப்பாலை,திருவள்ளுவர து திரு க்குறளை ஏட்டெழுதி, ஏட்டின்க ணெழுதிவைத்து - வல்லுநரும், வலியுடையவரும்- வல்லாரும், வலியில்லாரும் - சொல்லிடினும், ஓதி னும்- ஆற்றல சோர்வின்று, வலிமைகுறைதலில்லை. எ-று. ※ அவ் வேதத்துக்கு உதாத்தம் அனுதாத்தம் எனப்பட்டசுரங்களில் வழுவா மலாதல் வேண்டுமென்னும் விதியுளதாதலின் அதற்குத் தகுதியு டைய அந்தணரே அதிகாரிகளாயினர். இதற்கு அவ்விதியிலாமையால் யாவரும் அதிகாரிகளாவரென்றறிக. சொல்லிடினுமென்றதனுல்பொ ருளுணர்ச்சிக்கு இதற்கும் வலிமைவேண்டுமென்பது பெறப்பட்ட து. ஆற்றல், சொற்செறிவின் றிட்பம்- இங்ஙனங்கூறவே அவ்வேதம் சொல்லின்கணே தலைமையுடைத்தென்பதூஉம்- இவ்வேதம்பொ ருளின்கண்ணே தலைமையுடைத்தென்பதூஉம்பெறப்பட்டன. (௰௫)

(நத்தத்தனர்.)

ஆயிரத்து மூந்நூற்று முப்பதருங் குறளும் ... . *
பாயிரத்தி னேடு பகர்ந்ததற்பின், போயொருத்தர் .... *
வாய்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ ... .. *

ராய்க்கேட்க வீற்றிருக்க லாம் .... ❊

இ - ள். பாயிரத்திறனும், பாயிர நான்கதிகாரங்களோடு சேர்ந்து தொகையாகிய-ஆயிரத்துமுந்நூற்று முப்பதருங்குறளும்-துணாய குறளும்- பகர்ந்ததற்பின்,ஓதியுணர்ந்தபின்பு-போய்-போய் ஒருத்தர்வாய், ஒருவரதுவாயாலே-கேட்க-கேட்க,நூலுளவோ, இல்லை-மன்

திருவள்ளுவமாலை. (ஞாகூ(

)

று தமிழ்ப்புலவராய், நிலைபெற்றதமிழிலே புலமை நிரம்பியோராகி- கேட்க, (பிறர் தம்மிடத்துவந்து) கேட்க- வீற்றிருக்கலாம் வீற்றிருக்கலதும் எ-று. ❊ இவற்றாட் பலவகைப்பட்ட நூல்களின் கருத்துக்களெல்லாம் விளங்கி நிற்றலின், கேட்க, நூலுளவோவென்றார் புலவராவெனவே புலமை நிரம்புதற்கு இவைஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களும் போதுமென்பது பெறப்பட்டது. (௰௬)

(முகையலூர்ச்சிறுகருந்தும்பியார்.)

உள்ளுந ருள்ளிய வுரைத்த லுரைத்ததனைத் .... ❊
தெள்ளுத லன்றே செயற்பால- வள்ளுவனார் .... ❊
முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வா.......... ❊
ரொப்பா வலரினு மில் .. .. ❊

இ-ள். வள்ளுவனார் முப்பாலின்மிக்க, திருவள்ளுவரது திருக்குற ளின்மேற்பட்ட- மொழி, நூலொன்று - உணடெனப் பகர்வார், உள தென்று சொல்லவல்லவர் - எப்பாவலரினும், எவ்வகைப்பட்ட புலவ ருள்ளும்- இல், இல்லை (ஆதலால்) செயற்பால, நாம் இந்நூலைக்குறித் துச் செயக்கடவன- உள்ளுதல், நாம் இதன் பொருளைச்) சிந்தித்துக் கொள்ளுதலும்- உள்ளியுரைத்தல, சிந்தித்துப் (பிறர்க்கு) அதனைச் சொல்லுதலும்- உரைத்ததனைத்தெள்ளுதல், (பிறரால்) சொல்லப் பட்ட அதனைத் தெளிதலும்- அன்றே அல்லவா. எ - று. ❊ மொழி, ஆகுபெயர். ஒப்பது வடமொழிவேதமிருத்தலின் மிக்கமொழியெ ன்றும்- தமிழின்மாத்திரமன்றி வடமொழிமுதலியவற்றினுள்ள புல வரையுந் தழுவுதற்கு எப்பாவலரினுமென்றும்- அறிவொப்புக்காண் டற்கு உரைத்ததனைத் தெள்ளுதலென்றும் கூறினர். உள்ளுதலென வே கேட்டலும்- தெளிதலெனவே அவ்வாறொழுகலும்- அடங்கின.

(ஆசிரியர்நல்லந்துவனார்.)

சாற்றிய பல்கலையுந் தப்பா வருமறையும் .... ❊
போற்றி யுரைத்த பொருளெல்லாந்- தோற்றவே ..... ❊
மூப்பான் மொழிந்த முதற்பா வலரொப்பா......... ... ❊
ரொப்பா வலரினு மில் . . .. ❊

இ - ள். சாற்றியபல்கலையும், அறிவுடையோரால்) சொல்லப்பட்ட பலநூல்களாலும் - தப்பாவருமறையும், தப்பாத அரிய வேதத்தினு லும்-போற்றி, காப்பாற்றிவைத்திருந்து-உரைத்த,(உலகத்தார்களுச) சொல்லப்பட்ட- பொருளெல்லாம், விடயங்களெலாம் - தோற்ற, (தன்னிடத்தே) காட்டும்படி - மூப்பான்மொழிந்த, திருக்குறளைச் சொல்லிய- முதற்பாவலரொப்பார்,திருவள்ளுவரையொப்பவர்-எப் பாவலரினும், எவ்வகைப்பட்டபாவலருள்ளும்- இல், இல்லை. எ-று ❊

தம்மாலே சொல்லப்பட்டவற்றில் வழுவுருமையால்,தப்பாவென்று- பொருணுணர்தற்கேயன்றி ஓதுதற்கும் எளிதன்றாகலின் அருமென்றும்- விசேடணஞ்செய்யப்பட்டது எப்பாவலரினுமில்இதற்குமுன் னுரைக்கப்பட்டபடியே கொள்க. முதற்பாவலர் முதன்மையையுடைய பாவலர். (௰அ)

(கீரந்தையார்.)

தப்பா முதற்பாவாற் றமாண்ட பாடலினன் .... *
முப்பாலி னாற்பான் மொழிந்தவ- ரெப்பாலும் .... *
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத ... . *
தெய்வத் திருவள் ளுவர் .... *

இ-ள். எப்பாலும் வைவைத்தகூர்வேல்வழுதி- எவ்விடத்திலும்கூர்மை வைத்த சிறப்புப் பொருந்திய வேலையுடைய பாண்டியராசன்- மனமகிழ இருதயமகிழ தப்பா, (சொல்லப்படும்பொருள்)வழுவாமல்- முதற்பாவால், முதன்மையுடையபாவாகிய குறள் வெண்பாக்களாலே - தாமாணடபாடலினால்,தாம்மாட்சிபெற்ற பாடற்றொழிலினாலே- முப்பாலின், மூன்றுபாலகளிலே- நாற்பால், (அறமுதலிய) நான்குபகுதிப் பொருள்களையும்- மொழிந்தவர்,திருவாய்மலர்ந்தவர் தெய்வத்திருவள்ளுவர் தெய்வப்புலமைத்திருவள்ளுவர். எ-று. ❋கூர் சிறப்பு. நான்கனுள் மூன்றடங்குவதன்றி மூன்றனுள் நான்கடங்காமையின், விபரீதமாகக் கூறப்பட்டதாயிற்று. நாலஞ்செய்த சிறப்பும் அதனால் அரசன மகிழ்வித்தமையும் சொல்லியபடி. (௰௧)

(சிறுமேதாவியார்.)

வீடொன்று பாயிர நான்கு விராங்கற ... ' .... *
நாடிய முப்பத்து மூன்றொன்றாம்- கூடுபொரு ....,.... *
ளெள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்

.... *

வள்ளுவர் சொன்ன வகை ... ... *

இ-ள். வள்ளுவர்சொன்னவகை, திருவள்ளுவராலே சொல்லப்பட்ட திருக்குறளின் அதிகாரவகை- பாயிரநான்கு பாயிரம். ச- அறமுப்பத்துமூன்று அறம்- ௩௩- ஊழொன்று ஊழ்-௧- பொருளெழுபது பொருள். எ௰- இன்பமிருபத்தைந்து இன்பம். உ௰ரு-எ-று. அறத்துப்பாலுளடங்காது அதனைவிட்டு நாற்கெல்லாம் பொதுவாய் நிற்றலின் வீடொன்று பாயிரமென்றும் இம்மைமறுமைவீடுமூன்றும் பயத்தற்சிறப்பிற்றாய் மூன்றனுள்ளுமுதனிற்றலின், விளங்கறமென்றும்-யாவர்க்கும் பொதுப்படநாடித் தொகுக்கப்பட்ட அறத்தின் கூறுபாடு இவையேயாகலின், நாடியமுப்பத்துமூன்றென்றும்-முன்னின்ற அறமும் பின்னின்ற இன்பமும் கைகூடுதற்குத் துணையாய்

திருவள்ளுவமாலை.

(௫௩)

நிற்றலின், கூடுபொருளென்றும்- அப்பொருளின்பாகுபாடுகளெல்லாம் இவற்றினடங்குதலின், எள்ளிலெழுபதென்றும் கூறினார். எள்ளல், இகழ்தல். (௨௰)

(நல்கூர்வேள்வியார்)

உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தா .... *
னுத்தர மாமதுரைக் கச்சென்ப - விப்பக்க .... *
மாதானு பங்கி மறுவில புலச்செந்நாப் .... *
போதார் புனற்கூடற் கச்சு . .. .

.... *

இ-ள். உப்பக்கநோக்கி, அப்பக்கத்தைக் குறித்துச்சொல்லுறுகிய- உபகேசி தோண்மணந்தான், உமாதேவியினது தோளை மணந்

தகடவுளை- உத்தரமாமதுரைக்கு, வடமதுரை
க்கு- அச்செல்ப,
ஆதாரமென்றுசொல்லுவர்- இப்பக்கம், இப்பக்கம்-மாதானுபங்கி,
மாதானுபங்கியெனப்படுகின்ற- மறுவில்புலம், குற்றமற்றபுலமை
யாகிய தேனைச்சொரிகின்ற- செந்நாப்போதார்,செவ்வியநாவாகிய
மலரையுடையவர்- புணர்கூட்டு,
நீர்வளத்தையுடைய தென்மதுரைக்கு-
அச்சு,ஆதாரமாவர். எ-று.❋ உப்பக்கம்-
இடைக்காடர்..அரசன் தம்பாடலை
அவமதித்தமைபற்றிப் பிணங்கிச் சென்றபக்கம்.
உப்பக்கநோக்கியென்றது- வையையாலணையிட்டபெ
ர். கேசி- திருமா
ல் இது அக்கடவுள் சகசிர நாமத்திற்கண்டது. கேசிக்குப்பின்னே
பிறந்தவள் உபகேசியென்றாயது. உபேந்திரனென்பதுபோல். மா
தாஅனுபங்கி- மாதாவை நிகராகக்கொண்டு நடக்கின்ற ஒழுங்கின
னெனப்படுதலின் அவள்பிள்ளையேபோல் இவர்உலகத்தார்மே
ல் அருள்செய்தல் சொல்லப்பட்டதாயிற்று. நாப்போ தென்றதற்
கேற்க- புலமையிலே தேன் ஆரோபிக்கப்பட்டது. அச்சுப்போற்று
ங்குதலால் அச்சென்றார், (உக)

(தொடித்தலைவிழுத்தண்டினார்.)

அறநான் கறிபொரு ளேழொன்று காமத் .... ❋
திறமூன் றெனப்பகுதி செய்து- பெறலரிய .. .. ❋
நாலு மொழிந்தபெரு நாவலரோ நன்றுலார்வார் .... ❋
போலு மொழிந்த பொருள்.

இ-ள். அறநான்கு- (பாயிரம் இல்லறம் துறவறம் ஊழ்என) அறப்பாலினுட்பிரிவுகணான்கு- அரிபொருளேழ், (அரசு அமைச்சு அரண் கூழ் படை நட்பு ஒழிபு) என அறியப்பட்ட பொருட்பாலினுட் பிரிவுகளேழு, காமத்திறமூன்று, (ஆண்பால் பெண்பால் அவ்விருபால்) எனக் காமத்துப்பாலி னுட்பிரிவுகண்மூன்று. எனப்படுதி

[கூஅ]

(குஎ) [illegible]

செய்து, என்றுபருகிசெய்து- பெறலரியநாளும், பெறுதற்கரிய (அறம் பொருள் இன்பம் வீடு எனப்படுகிற) நான்கு பொருள்களையும் மொழிந்த, சொல்லிய- பெருநாவலரே, பெரியநாவலரோ- ஒழிந்தபொருள்-(அறத்துள் அடங்காமல்) ஒழிந்தபொருள் உளதாயின் அறியேம்- நன்றுணரார்போலும், நன்றாக அறியவல்லவர் போலும்- எ-று ❊ திறமையாய் அறம்- அறமுதலியவற்றேயடங்கப் பட்டது நாலவற்றே பெற்றமையால் பிறரால் அறியப்படுவதொன்றே ஒன்பதாயிற்று முப்பாலிற்றொகையும், இவற்றினடங்காதது ஒன்றிலையென்பது மிஞ்சொல்லியபடி.

(உஉ)

(வெள்ளிவீதியார்.)

செய் யா

மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த .... ர

பொய்யா மொழிக்கும் பொருளொன்றே -

செய்யா *

வதற்குரியா ரந்தணரே யாராயி னேனை .. .. *

யிதற்குரியா ரல்லாதா ரில் .. .. *

இ-ள். செய்யாமொழிக்கும், (ஒருவராலே செய்யப்படாதமொழியாகியவேதத்துக்கும்- திருவள்ளுவர்மொழிந்த, திருவள்ளுவரால் அருளிச்செய்யப்பட்ட- பொய்யாமொழிக்கும், (தம்வழியி லொழுகுவோர்க்குப் பயன்விளைவிலே) பொய்படாத மொழியாகியதிருக்குறளுக்கும்- பொருளொன்றே, பொருளொன்றாம்- ஆராயின், ஆராயில்- செய்யாவதற்குரியார், செய்யப்படாத அவ்வேதமோதுதற்குரியவர்- அந்தணரே, அந்தணரேயாம்- ஏனையிதற்குரியா ரல்லாதார், பொய்படாத இத்திருக்குறளோதுதற்குரியவரல்லாதவர்- இல், உலகத்திலில்லை எ-று. பூர்வவேதத்தை நித்தியமென்பார் மதம்பற்றிச்-செய்யாமொழியென்றார் அது வடமொழியும் இதுதென்மொழியுமாயிருத்தலில் வேறுபாடு பயனோக்கின் றெனினும் நுண்ணுணர்வாளருக்குவார்க்குக்கருத்துவேறுபடாமையின்-பொருளொன்றேயென்று ஏகாரங் கொடுத்துக்கூறினார். செய்யாமொழிபொய்யாமொழி அன்மொழித்தொகைகள். இதற்குரியா ரல்லாதா ரில்லென்றமையாற் பொதுவேதமாதலறிக. அதற்கும் இதற்கும் பொருள் வேறுபடுமென்னும், இதனை யோதற் கதிகாரிகளாவார் யாவரோவெனும் நிகழ்கின்ற ஐயமொழித்தபடி. (௨௧)

(மாங்குடிமருதனார்.)

ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி

வேதப் பொருளாய் மிகவிளங்கித்

.. .. *

- தீதற்றோ .... *
ருள்ளுதோ றுள்ளுதோ றுள்ள முருக்குமே .... *
வள்ளுவர் வாய்மொழி மாண்பு .... *

திருவள்ளுவமாலை.

(ரு௩)

இ-ள். வள்ளுவர்வாய்மொழி, திருவள்ளுவநாயனார் வாயினின்றுந்தோன்றிய திருக்குறளினது- மாண்பு- மாட்சிமைச்சொல்லின்-(அது) ஓதற்கெளிதாய்- ஓதப்படுதற்கெளிய சொற்களையுடையதாகியும்- உணர்தற்கரிதாகி, அறியப்படுதற்கரிய பொருள்களையுடையதாகியும்- வேதப்பொருளாய், வேதங்களைப் பற்றிநின்ற பொருளாகியும்- மிகவிளங்கி (அவ்வேதத்தின்) மிகவிளங்கி- தீதற்றோர், குற்றமற்றோர்- உள்ளுதோறுள்ளுதோறு, நினைக்குந்தோறு நினைக்குந்தோறும் உள்ளம், அவர்களுடையமனத்தை- உருக்கும், கரைக்கும். எ-று. ஓதற்கெளிதாயெனவே- நவின்றோர்க்கினிமை நன்மொழி புணர்த்தல்களும், உணர்தற்கரிதாகியெனவே - ஆழமுடைமையும், வேதப்பொருளாயெனவே - விழுமியது பயத்தலும், பிறவுமாகிய அழகுகளினமைதி சொல்லப்பட்டதாயிற்று. தீதற்றோர்பொருளாராய்ச்சிக்கேற்ற நுண்ணறிவுடையோர் உள்ளுதோறுள்ளுதோறுமுருகுதமெனவே முன்காணப்பட்டிலும் பின்காணப்படும் பொருள் சிறத்தலும் விரிந்துநீண்டு அகலுடைமை பெறப்பட்டது. (உ௯)

(எரிச்சலூர்மலாடனார்.)

பாயிர நான்கில் லறமிருபான் பஃறுமூன்றே..
....*

தூய துறவறமொன் றூழாக - வாய .. ..
.... *

வறத்துப்பா ஞால்லகைபா வாய்ந்துவெத்தார்
நூலின்.. *

திறத்துப்பால் வள்ளுவனர் தேர்ந்து ....
. .. . *

இ ள். வள்ளுவனர், திருவள்ளுவனார்- ஆய்ந்து,
ருத்துகளை) யாராய்ந்து-நூலின் திறத்துப்பால்

(அவ்வேதத்தின் க
(நம்மால்செப்ப
ப்பட்ட) நூலினது திறத்திற்குத்தகக
நன்மையுடைமையால் தேர்ந்து, (இவையே உரிய
மையெனறு தெரிந்து பாயிரம், பாயிரம் நான்கு,
நான்கு- இல்லறம், இல்லறம்- இருபான், இருபது-
[illegible], துறவறம்- பன்மூன்று, பதின்மூன்று-
[illegible] [illegible]- ஒன்று, [illegible] று
ஆகவாய, ஆகககூடியபாலிய-
நாலவகைப, [illegible] [illegible] (மூதலிய) நால்வ
கையுடைத்தாக- அறக்குப்பால், அறப்பால்- [illegible]
[illegible], [illegible]-
உரைத்தார், கூறினார்-று. நான்குமுதல்ப தொகைகளால் அதி
காரமுடைத்தெனபது கூட்டுக. முப்பாற்பொருள்களுக்கு
க்காரணமாதற் சிறப்பு
டைமையின், தாயது[illegible] மைசிறுரி. [illegible]-
நன்மை. அது

எல்லாவருளுக்கிரமங்களுக்கும்பொ
துவாயிருக்குமென.

(போக்கியார்.)

அரசியலையற்றமைச்சியலின்றாய்.

.... ✻

'திருவள்ளுவநாயனார் செய்தருளிய

... . ✻

(குறள்) திருவள்ளுவமாலை.

திண்படை நட்புப் பதினேழ் குடிபதின் மூன்

.... ✻

றெனைப்பொருளேழா மிவை ... ... ✻

இ-ள். அரசியல், அரசியல்- ஐயைந்து, இருபத்தைந்து- அமைச்சியல், அமைச்சியல்- ஈரைந்து, பத்து- அரணிரண்டு, அரணிரண்டு- கூழொன்று, கூழொன்று-படையிருவியல், படையிரண்டியல்-நட்புப்பதினேழ், நட்புப்பதினேழ்- குடிபதின்மூன்று, குடிபதின்மூன்று- எண்பொருள், எண்ணப்பட்ட பொருட்பாலுக்கு-இவையேழாம், இவ்வியல்களேழாம். எ-று. ✻ இத்தொகைகளெல்லாம் முன்சொல்லப்பட்டபடியே கூட்டுக. அரணுக்கு உருத்திட்பம் சிறந்ததலின் உருவரணென்றும், பொருளுடையார்க்கே ஒளி அமைவதாதலின் ஒண்பொருளென்றும், படைகள் தக்கிப் போர்க்குப் பின்கொடாத திண்மையுரித்தாதலின் திண்படையென்றும் கூறினர். ஓரிதிகாலத்தார் அமைச்சு முதலியவைந்தையும் அங்கமென்ப.

(மோசிகீரனார்.)

ரியலாக்கிப்புட்டவழங்குட.

ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா
லவித்தல்பு ....*
பூண்பா விருபாலோ ராறாக - மாண்பாய
.. .. *
காமத்தின் பக்கமொரு மூன்றாகக்
கட்டுரைத்தார். .... *
நாமத்தின் வள்ளுவனார் நன்கு .... *

இ-ள். ஆண்பால், ஆண்பால்- எழு, ஏழு- பெண்பால், பெண்பால்- ஆறிரண்டு, பன்னிரண்டு- அவித்தல்புபுல் பால், (ஒருவனையொருவர்) ஒப்பற்ற, அணியைப் பூணுதற்பகுதியுடைய- இருபால், அவ்விருபால் ஓராறாக, ஆறாக- மாண்பாய காமத்தின்பக்கம், மாட்சிமையான காமத்துப்பாலியல்கள் - ஒருமூன்றாக, ஒருமூன்றாக- நாமம், பெயர்பெற்ற- வள்ளுவர், திருவள்ளுவர்-கட்டுரைத்தார், சொல்லினார் எ-று ※ இயற்றமிழ் பொருளிலக்கணத்துக்களவியல கற்பியலெனவிரண்டாக்கப்பட்டன. இத்தொகைகளுக்கும்முன்கூறப்பட்டுக்கொள்க. (உஎ)

(காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக்கண்ணனார்)

ஐயாறு நூறு மதிகார மூன்றுமா . ...
.... *
மெய்யாயவேதப் பொருள் விளங்கப் -
பொய்யாது .. *
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவராகி ...
.... *
யந்தா மரைமேல யன் ....
.... *

இ-ள். அதிகாரம், அதிகாரம்- நூறுமையாறு

மூன்றுமா, நாற்
றுமுப்பத்துமூன்றுமாம் - மெய்யாய, உவமையான - வேதப்
பொருள், வேதப்பொருள்- பொய்யாதுவிளங்க, மெய்யாவிளங்க-
அந்தாமரைமேலயன், அழகிய தாமரைமலர்மேல் வீற்றிருக்கின்ற

திருவள்ளுவமாலை.

(செசு)

நான்முகக்கடவுள்- தான்வள்ளுவராகி, தான்வள்ளுவராகி உலகிற்குத்தந்தான். எ-று. ❊ உலகு- இங்கேமக்களையுணர்த்திநின்றது. மெய்யாயவேதப்பொருள் பொய்யாதுவிளங்கவெனவே- இதற்குமுன் மெய்யாயபொருள் பொய்யாய்மறைந்தும், பொய்யாய பொருள் மெய்யாய்விளங்கியும். கிடந்தமைசொல்லப்பட்டதாயிற்று. அங்காரத்தொகையோடு நூற்பொருளியல்பு சொல்லியபடி. (உ-அ)

(மதுரைத்தமிழ் நாகனார்.)

எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பா
... . ❊
லில்லாத வெப்பொருளு
மில்லையாற்-சொல்லாற் . . . ❊
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார் ......
.... ❊
சுரந்தபா வையத் துணை . . ..
... . ❊

இ-ள். எல்லாப் பொருளும், (பல்வகை நூல்களாலுஞ் சொல்லப்பட்ட) எல்லாப்பொருள்களும்- இதன்பாலுள, இந்நூலகத் தடங்கியிருக்கின்றன. இதன்பாலில்லாத வெப்பொருளும், இதனிடத் தில்லாத யாதொருபொருளும்- இல்லை, (எந்நூலகத்தும்) இல்லை. (ஆதலால) சொல்லாற்பரந்தபாவால, சொல்லால்விரிந்த நூல்களால்-பயனென் பயனென் - வள்ளுவனார் சுரந்தபா, திருவள்ளுவராலே சுரக்கப் பட்ட இந்நூலொன்றே-வையத்துணை, மண்ணுலகத்தாருக்குத் துணை யாதலமையும். எ- று. ❀ எல்லாப்பொருள்களுமாவன, முதல்வழி சார்பென மூவகைப்பட்ட அறநூல், பொருணூல், இன்பநூல், வீட்டுநூல், என்பவற்றில், செம்பொருள், ஆக்கப்பொருள், ஊட்டுப் பொருளென இம்மூவகையாற் கொள்ளக்கிடந்த காட்சிப் பொருள்களும் கருத்துப் பொருள்களுமாம். தொழிலும் பண்பும் ஒன்றாவழிப் பொருளெனற் கேற்புடைமையின் அவையும் இவற்றுள் அடங்குமாறறிக. பின்னும் அதனைவலியுறுத்தற்கு, இதன்பாலில்லாத வெப்பொருளு மில்லையென்றார். சொல்லாற் பரந்தவெனவே, அவை பொருளாற் பரப்பின்மை பெறப்பட்டது. பரத்தல், பதினாயிரம் நூறாயிரமுதலிய கிரந்தவளவையால்விரிதல்-சொல்லாற்பரந்த நூல்களை ஆய்வார் மலையகழ்ந்து எலிபிடித்தல்போல மிகவுழைத்துச் சிறு பயன் கொள்ளுதலால் என்பயனென்றார். ஆல், அசை. பா, வையம், ஆகுபெயர்கள். சின்னாட் பல்பிணிச் சிற்றறிவுடையோர்க்கு இதுவிலக்குகண் முற்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோற்கண்டு தெளியுமாறு உணர்த்தித் தம்மாற்றந் தீர்த்தலின், வையத்துணையென்றார். (௨௯)

(பாரதம்பாடிய பெருந்தேவனார்.)

எப்பொருளும் யாரு மியல்பி னறிவுறச் . .. . ❀
செப்பிய வள்ளுவர்தாஞ்செப்பவரு- முப்பாற்குப்... ❀

பாரதஞ்சீ ராம கதைமனுப்
பண்டைமறை.... ... . ❋
நேர்வனமற் றிவ்லை நிகர் ....
.... ❋

இ-ள். பாரதஞ் சீராமகதை மனுப்பண்டைமறைநேர்வன. பாரதம் பழைய சிராமகதையையும்-மனுஸ்மிருதி பழைய வேதத்தையும் - ஒப்பனவாகும். எப்பொருளும், எவ்வகைப்பட்ட பொருள்களையும்- யாரும், எவ்வகையோரும் - இயல்பின், (அவற்றின்) நன்மையோடு- அறிவுற, அறிய- செப்பிய, (அவர்க்குச் சொல்லும்படிக்கு), வள்ளுவர்செப்பவரு, திருவள்ளுவர் சொல்லால்வந்த - முப்பாற்கு, திருக்குறளுக்கு - நிகர், உபமானமாகத்தக்கது - இல்லை, ஒன்றில்லை. எ-று. ❋ மற்று, அசை. அறிநற்கரிய வேதாந்தப் பொருளுமென்றற்கு, எப்பொருளுமென்றும் - உயர்குலத்தாரேயன்றி எளியோருமென்றற்கு, யாருமென்றும்- ஐயந்திரிபின்றி யறியவென்றற்கு, இயல்பி னறிவுறவென்றும்- இதுவே சுருதிருவிரண்டுமா மென்றற்கு, செப்பியவென்றும்- கூறினார். பண்டையென்பது, சிராமகதைக்குங் கூட்டுக. கதாரூபமாயிருந்து பாரத ராமாயணமெனவும் - விதிரூபமாயிருந்து சுருதிஸ்மிருதியெனவும் - கூட்டிச் சொல்லப்பட்டதலால், உபமான உபமேயங்களாதலறிக. (கூ௰)

மனத்திலாக்க

(உருத்திரசன்மகண்ணர்.)
நீறுறு மைந்தர்கள் வாய்வைத் ....❋

துணைசுரக்குந் தாய்முலை பொன்பால்- பிணைக்கிலா
வாய்மொழி வள்ளுவா முப்பான் மதிப்புலவோர்க். ..

❋

❋

காய்தொறு மூறு மறிவு. . ...

ள். மணற்கிணற்க, மணல்த்தோண்டுந்தோறும்-

.... ❋

நீரூறும், நீர்

பெருகும். மைந்தர்கள் வாய்வைத்துண்ண, புதல்வர்கள் வாய்வைத்து உண்ணுந்தோறும்- தாய்முலை, தாயினது முலைக்கண் - ஒண்பாலசுரக்கும், நல்ல பாலைப்பெருக்கும். (அவைபோல்) பிணக்கிலாவாய்மொழி, பிணங்குதற்கு ஏதுவில்லாத வாய்மைச்சொல்லையுடைய - வள்ளுவர் முப்பால், திருவள்ளுவரது திருக்குறளை-ஆய்தொறும், ஆராயுந்தோறும்- மதிநுட்பலவோர்க்கு, அறிவுடையபுலவர்க்கு, அறிவூறும், அறிவுவளரும். எ-று. ❋ கற்பிதமாகிய சாதிசமயங்களின் மானம்பற்றி உள்ளதை இல்லதாகவும் இல்லதை உள்ளதாகவும்- சிறிதைப் பெரிதாகவும் பெரியதைச் சிறிதாகவும்- தீயதை நல்லதாகவும்- நல்லதைத் தீயதாகவும்-புனைந்து பிறர்பிணங்கும்படி சொல்லப்பட்ட நூல்களைப் போல, பிணக்கிலாவாய்மொழியென்றார். மதிநுட்பலவோர்க்கறிவூறுமெனவே அவர் அவ்வியல்வுங்கொண்டு பிறர்க்கெல்லாம் விதிவிலக்குகளைக் கற்பித்தல வேண்டுமென்பதாயிற்று. (௩௩)

(பெருஞ்சித்தனார்)

ஏதமில் வள்ளுவ ரின்குறள்வெண் பாவினு .... *
லோதிய வொண்பொரு ளெல்லா முரைத்தனாற் ..... *
றாதவிழ் தார்மாற தாமே தலைமப்பயந்த .... *
வேதமே மேதக் கன .... *

இ-ள். தாதவிழ்தார்மாற, பொடிபொடுவிரிந்த பூமாலையையுடைய பாண்டியராசனே- ஏதமில்வள்ளுவர், குற்றமில்லாத திருவள்ளுவர்- இன்குறள்வெண்பாவினால், இனியகுறள் வெண்பாக்களாலே- ஓதிய, (நான்குவேதங்களாலுஞ் சொல்லப்பட்ட - ஒண்பொருளெல்லாம், ஒள்ளிய பொருள்களையெல்லாம்- உரைத்தனால், சொல்லினமையால்- மேதக்கன, மேன்பாட்டுக்குத்தக்கவை - தாமே, அக்குறள் வெண்பாக்களோ. தலைமப்பயந்தவேதமே, (முதனூலாய்நின்று) அவற்றைப் பயந்தவேதங்களோ. (நீ சொல்லுவாயாக) எ-று. ※தாம் தம்மை எனப்பட்டவை அவை அவற்றையென்னும்பொருளைத்தந்துநின்றன. ஏகாரம் இரண்டும்வினா. பிறநூலாசிரியர்க்கெல்லாம் அஃவாதிரிகளாலே மறுக்கப்பட்டுவருங் குற்றம்போல்வது இவர்க்கு இல்லையென்றற்கு, ஏதமில்வள்ளுவரென்றும் - தாங் கூறியவாய்நின்று கற்போர்க்கு வருத்தஞ் விளையாமையைபற்றி, இன்குறளென்றும்- உணர்வுடையோராலே விரும்பப்பட்ட நற்குணமுடைமைபற்றி, ஒண்பொருளென்றும்- கூறினார். நூலாசிரியர்க்கும்- நூலுக்கும்- நூனுதலிய பொருளுக்கும்-தகுதி தோன்றச்சொல்லப்பட்ட விசேடணங்களாலே இவ்வேதம் அவ்வேதத்தினுஞ்சிறப்புடைமைகுறிப்பித்தபடி.

(நரிவெருத்தலையார்)

இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு ..... *
முன்பறியச் சொன்ன முதுமொழி நூல் - மன்பதைகட்
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங் .... *
கொள்ள மொழிந்தார் குறள் .... *

இ-ள். இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கும், இன்பமுதலிய இந்நாற்பொருளியல்புகளையும்- மன்பதைகட்கு, மக்கட்பரப்புக்கு- முன்பு, அக்காலத்தில் - அறியச்சொன்ன, அறியும்வண்ணஞ் சொல்லப்பட்ட - முதுமொழி நூல்- பழமொழிவேதமான நூ- உள்ள

சொல்லப்பட்ட- ...

வரிபெதன்று, ஓதியுணரப்படு நற்கவிசெல்லுறு- வள்ளுவர் திருவள்ளுவர்-
அவை, அவற்றை- உலகங்கொள்ள, உலகத்தார் எளிதினுணருப்படி-
குறள், திருக்குறளை- மொழிந்தார், சொல்லினர். எ-று. ※ முன்ப
தியவெனவே உற்சர்ப்பிணியாதலின் அக்காலத்தோர்க்கு உணர்தற்
கேற்ற ஆயுணீட்சியும் உணர்வுவலியும் இருந்தனவென்பதூஉம்- அவ

சர்ப்பிணியாதலின் இக்காலத்தோர்க்கு அவையில வென்பதூஉம் –
பெறப்பட்டன. இவ்விரண்டும் அவாவறுத்தன் மூன்றும்பாட்டுரை
யிற்காணெக. தேயவழக்கிற்படாததும் வருந்திக் கற்போர்க்குமாத்திர
ம் புலப்படுவதுமாய் எல்லாமொழிகட்குமூற்பட்டுக்கடவுண மொழி
யாய் நிற்றலின் முதுமொழியென்றார். அறமுதலியநான்கும் பிரிவு
பட்டுத் தோன்றுமையை யுடைத்தாதலின் உள்ளவரிதாயிற்று.(௫௫)

(மதுரைத்தமிழாசிரியர் செங்குன்றூர்க்கிழார்.)

புலவர் திருவள்ளுவரன்றிப் பூமேற் ... ... ※
சிலவர் புலவரெனச் செப்ப - னிலவு ... ... ※

பிறங்கொளிமாலைக்கும் பெயர்மாலை மற்றுங் .... *
சுறங்கிருண் மாலைக்கும் பெயர்... .... *

இ-ள். பூமேல், பூவுலகின்கண்ணே- புலவர்திருவள்ளுவரன்றி,புல வரொனத்திருவள்ளுவரையன்றி- சில்வர்புலவரொனச்செப்பல், வேறு சிலரையும் புலவரென்று சொல்லுதல்- மாலை, மாலையென்பது - நில வுபிறங்கொளி மாலைக்கும்பெயர், நிலவால் விளங்குகின்ற அந்திக்க ம்பெயராக- மற்றும்-கறங்கிருண்மாலைக்கும்பெயர், சூழ்கின்ற விரு ளையுடைய அந்திக்கும்பெயராக- (செப்பல்) சொல்லுதல்போலும். எ-று. ❀ செப்பலென்றது பின்னுங்கூட்டப்பட்டது. (௩௪)

(மதுரையறுவைவாணிகர் இளவேட்டனார்)

இன்பமுந் துன்பமு மென்னு மிவையிரண்டு .... *
மன்பதைக் கெல்லா மனமகிழ - வன்பொழியா.... .... *
துள்ளி யுணர வுரைத்தாரோ யோதுசீர் ... .
.... *
வள்ளுவர் வாயுறை வாழ்த்து ....
.... *

இ-ள், இன்பமுந் துன்பமு மென்னுமிவை, (பின்வரக்கடவனவா ய) சுகமுந்துக்கமு மெனப்பட்ட விவற்றினுடைய- இரண்டும், இரு வகைக் காரணங்களையும்- உள்ளியுணர,ஆராய்ந்தறியவும்- அன்பொ ழியாது (தம்மே) லன்புநீங்காமல்- மனமகிழ, உள்ளங் களிகூரவும்- மன்பதைக்கெல்லாம், மக்கட் பரப்புக்கெல்லாம்- ஓதுசீர்வள்ளுவர், புகழப்படுஞ் சீரையுடைய திருவள்ளுவர் - வாயுறைவாழ்த்து, வாயு றைவாழ்த்தாக- உரைத்தார், (திருக்குறளைச்) சொல்லினார். எ-று.❀ இன்பத்தின்காரணம்விதிக்குறளாலும்-துன்பத்தின்காரணம்விலக்கு க்குறளாலும் சொல்லப்பட்டன. முன்பறிதற்குப்பயன் அவற்றைச் செய்த லும்தவிர்தலுமாம்.வேண்டுவனவெல்லாந்தொகுத்துணர்த் தலின் மனமகிழ்தல் சொல்லப்பட்டது. அவ்வேதம்போலாது பல ர்க்கும் உபயோகியாகச் சொல்லலின் மன்பதைக் கெல்லாமென்றார் வாயுறைவாழ்த்தினியல்பு- வாயுறைவாழ்த்தே வயங்கதாடின் வேம்பு

திருவள்ளுவமாலை.

(௫௪௫)

ங் கடுவும்போல வெஞ்சொற் றுங்குதலின்றி வழிநனி பயக்குமென்
றோம் படைக்கிளவியின் வாயுறுத்தற்றே- என்னுந்தொல்காப்பியச்
சூத்திரத்தாலறிக. எதிர்கால வினைவுணர்ச்சி பயத்தல்சொல்லியபடி.

(கவிசாகரப்பெருந்தேவனார்.)

பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனதம் ..... *
மாவிற் கருமுனியா யானைக்- கமரரும்ப .... *
றேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே. .... *
பாவிற்கு வள்ளுவர் வெண்பா .... *

இ - ள். பூவிற்குத்தாமரை - மலர்களுக்குள்ளே தாமரைமலரும் - பொன்னுக்குச்சாம்புனதம், பொன்களுக்குள்ளே சாம்புனதப்பொன்னும்- ஆவிற்கருமுனியா, பசுக்களுக்குள்ளே காமதேனுவும் - யானைக்கமரரும்பல், யானைகளுக்குள்ளே, ஐராவதமும்- தேவிற்றிருமாலென, தேவர்களுக்குள்ளே திருமாலும்போல் - பாவிற்குவள்ளுவர் வெண்பா, நூல்களுக்குள்ளே திருவள்ளுவரது குறள்வெண்பா - சிறந்தது, சிறப்புடையது - என்ப, என்று (அறிவுடையோர்) சொல்லுவர். எ- று. ❄ ஏ, அசை. பா, ஆகுபெயர். பொன், ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்புனதம், எனநால்வகைப்படும். காமதேனுவசிட்டமுனியிடத் துள்ளதாகலின் அருமுனியாவென்றார். லென்பது விகாரப்பட்டு நின்றது.

அமரரும்ப

(௬௯)

(மதுரைப்பெருமருதனார்.)

அறமுப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத் .... *
திறமிருபத் தைந்தாற் றெளிய - முறைமையால் .... *
வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனு ..... *
ரோதவழுக் கற்ற துலகு .... *

இ-ள். அறம், அறத்தின்கூறுபாடு - மூப்பத்தெட்டால், ௩௮, அதிகாரங்களாலும்- பொருள், பொருட்கூறுபாடு-எழுபதால், எ௰-அதிகாரங்களாலும்-இன்பத்திறம்-காமத்தின்கூறுபாடு- இருபத்தைந்தால் உ௫-அதிகாரங்களாலும்,தெளிய, முறைமையால்,(காரணகாரிய) வொழுங்கால் தெளிய-வேதவிழுப்பொருளை, வேதத்தினுயர்வாகிய பொருளை-வெண்குறளால்,குறள்வெண்பாக்களால்-வள்ளுவனார்-திருவள்ளுவர்-ஓத, ஓதலால்- உலகு,உலகமானது- வழுக்கற்றது-வழுவுதலினின்றும்நீங்கிற்று. எ-று. ❁ திறமும் ஆலும், முன்னுங்கூட்டப்பட்டன.உயர்வாகியபொருள், கருமகாண்டம்பிரமகாண்டமிரண்டினுள்ளும்சிறந்தபொருள். வழுக்குதல், விதியை விலக்கென்றும் விலக்

கை விதியென்றும்கோடல் - உலகூடக்களை யுணர்த்தி நின்றது. அணிவுபற்றி அற்றதெனை இறந்த காலத்தாற்கூறினார். (௩௨)

(கோவூர்க்கிழார்.)

அறமுத லான்கு மகலிடத்தோ ரெல்லாந் .... *
திறமுறத் தேர்ந்து தெளியக்-குறள்வெண்பாப் ...... *
பன்னிய வள்ளுவனார் பான்முறைதே ரெவ்வாதே... *
முன்னை முதுவோர் மொழி .... *

இ-ள். அறமுதனான்கும் அறம்-பொருள்-இன்பம்-வீடு- எனநான்கும்- அகலிடத்தோரெல்லாம்,மண்ணுலகத்திலுள்ளோரெல்லாம்-திறமுறத்தேர்ந்து, வகைப்பட அறிந்து- தெளிய,கலக்கர் தீர-குறள்வெணபாப் பன்னிய, குறள்வெண்பாக்களாலே சொல்லப்பட்ட-வள்ளுவனார், நாயனாரது- பான்முறை, முப்பால்களையுடைய புத்தகத்தின்கண்ணே- முன்னைமுதுவோர்மொழி,முற்காலத்துள்ள பெரியோரது நூல்களுக்கு- நேரொவ்வாது, நேர்தல் பொருந்தாது.எ-று.※ மொழி, ஆகுபெயர். பெரியோராவார், வடமொழியிலும், தென்மொழியிலும், பிறமொழிகளிலும்,நூல்செய்த முனிவரும்-புலவரும்- பிறரும். (௬௮)

(உறையூர் முதுகூற்றனார்.)

தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண் .... ※
பாவிற் சிறந்திடுமுப் பால்பகரார் - நாவிற் .... ※
குயவில்லை சொற்சுவை யோர்வில்லை மற்றுஞ் .... ※
செயலில்லை யென்னுந் திரு .... ※

இ-ள். தேவிற்சிறந்த திருவள்ளுவர், தெய்வத்தன்மையாற் சிறந்த திருவள்ளுவரது- குறள்வெண்பாவிற் சிறந்திடு, குறள் வெண்பாக்களோடு கூடிச்சிறந்து தோன்றுநின்ற - முப்பால், முப்பால்களையும்-பகரார், ஓதாரது- நாவிற்கு, வாக்கிற்கு-உய்வில்லை,(இன்சொற்சொல்லி) வாழ்தலுண்டாகாது. சொற்சுவையோர்வில்லை,(மனத்திற்குச்) சொற்களின் சுவையை அறிதலுண்டாகாது. மற்றும், இவையன்றியும்- செயலில்லை, (காயத்துக்கு) நல்ல செயலுண்டாகாது. என்னுந்திரு, என்றுநினைத்துத் திருமகள் அவரிடத்துச்சேராள்.எ-று. (௬௯)

(இழிகட்பெருங்கண்ணனார்.)

இம்மை மறுமை யிரண்டு மெழுமைக்குஞ் .... ※
செம்மை நெறியிற் றெளிவுபெற- மும்மையின்..........※
வீடவற்றி னுன்கின் விதிவழங்க வள்ளுவனார் .... ※
பாடின ரின்குறள்வெண் பா .... ※

(௩௯௩)

இ-ள். இம்மை மறுமை யிரண்டும், இகபரங்கட்காவனவிரண்டை

யும்- எழுமைக்கும், (வினைப்பயன் றொடர்தற்குரிய) ஏழ்பிறப்பிற்கு மாக- செம்மைநெறியின், செவ்வையானவழியால் - தெளிவுபெற, (யாவரும்) தெளிதல்பெறவும்- மும்மையின், (அறம்பொரு ளின்ப மென்னு)முப்பால்களுள்- அவற்றின், அம்முப்பாற் பொருள்களோடு வீடு, வீடுமாகிய- நான்கின்விதி, நாற்பொருள்களது விதிகளும்- வழங்க, வழங்கவும்- வள்ளுவனார்- திருவள்ளுவர் - இன் குறள் வெண்பா, இனிய குறள் வெண்பாவை -பாடினர் -பாடினார். எ-று. ❁ செவ்வை யானவழி, விதியும்- பத்தியும்- ஞானமும்- நோயாளிக்கு மருந்து ம் அனுபானமும் பத்தியமும்போல் ஒன்றற்கொன்று டிநிற்கும்வழி. வீட்டுவிதி துறவறத்திற் காண்க.

(செயிர்க்காவிரியார்மகனார்சாத்தனார்.)

மூரணுதுக-

(௩௰)

ஆவனவு மாகா தனவு மறிவுடையார் .... ❋
யாவரும் வல்லா ரெடுத்தியம்பத்- தேவர் .... ❋
திருவள் ளுவர்தாமுஞ் செப்பியவே செய்வார் .... ❋
பொருவி லொழுக்கம் பூண்டார் ... . ❋

இ-ள். (மக்களுக்கு) ஆவனவும், ஆவனவற்றையும்-ஆகாதனவும், ஆகாதவற்றையும் - அறிவுடையார் யாவரும் - எடுத்‌ தியம்ப, (இனி இதிலிருந்து) எடுத்துச்சொல்லுதற்கு- வல்லார், வல்லவராவார்.' ஆதலால்) தேவர் திருவள்ளுவர், தேவராகிய திருவள்ளுவராலே-செப்பியவே, சொல்லப்பட்டவற்றையே- பொருவி லொழுக்கம் பூண்டார், ஒப்பில்லாத ஒழுக்கத்தை மேற்கொண்டவர். செய்வார்- செய்வார். எ-று.❋ தாம், உம், அசைகள். ஆவன, இன்பத்தைத்தருவன,ஆகாதன, துன்பத்தைத்தருவன- ஒப்பில்லாதவொழுக்கம்,கொல்லாமைமுதலியன. (சக)

(செயலூர்க்கொடுஞ்செங்கண்ணனார்.)

வேதப் பொருளை-விரகால் விரித்துலகோ .... ❋
ரோதத் தமிழா லுரைசெய்தா,ராதலா .... ❋
லுள்ளுந ருள்ளும் பொருளெல்லா முண்டென்ப .... ❋
வள்ளுவர் வாய்மொழி மாட்டு .... ❋

இ-ள் வேதப்பொருளை-வேதப்பொருளை-உலகோரோத-உலகத்தோரோத - விரகால், உபாயத்தால்- விரித்துத் தமிழாலுரைசெய்தார். ஆதலால்-உள்ளுநருள்ளும் பொருளெல்லாம், நினைப்பவர்நினைக்கும் பொருள்களெல்லாம்-வள்ளுவர்வாய்மொழிமாட்டு, திருவள்ளுவர் திருவாயிற்பிறந்த திருக்குறளின்கண்ணே உண்டென்ப,உண்டெ

ன்று (அறிவுடையோர்) சொல்லுவர். எ-று. ※ உபாயத்தால்விரித்தல் — சொற்சுருக்கத்தால் ஓதற்கெளிமைதன யனவெழுச்சியுண்டாக்கிக் கற்போரது அறிவளவிற்கேற்கப் பொருளளவு விரியவைத்தல். (சஉ)

(வண்ணக்கஞ்சாத்தனார்.)

ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது ………. ….*
சீரிய தென்றொன்றைச் செப்பரிதா- லாரியம் ………. *
வேத முடைத்துத் தமிழ்திரு வள்ளுவனா ……….. ….*
ரோது குறட்பா வுடைத்து ……………………. *

இ-ள். ஆரியமுஞ்செந்தமிழு மாராய்ந்து, வடமொழியையுந் தென்மொழியையு மாராய்ந்து-இதனினிது இதிலுமினிது சீரியதென்று, இதைக்காட்டிலும் இது சிறப்புடைத்தென்று- ஒன்றைச்செப்பரிது, ஒன்றைத் தெரிந்துசொல்லுதல்கூடாது. ஆரியம், வடமொழி வேதமுடைத்து, வேதமுடையது - தமிழ் - தமிழ் - திருவள்ளுவனோது குறட்பாவுடைத்து. (ஆதலால்) எ-று. ❋ ஆல், அசை - வடமொழியும் தென்மொழியும் பிறமொழிகள்போலாது பாணினியாரும் அகத்தியனாருமுதலாகிய முனிவர்களாலே செயப்பட்ட இலக்கணநூல்களாலே சீர்திருந்தி நிற்றன்முதலிய குணங்களுடைமையாலும் - அது பிராகிருத முதலியவற்றுக்குப்போல் இது ஆந்திரமுதலியவற்றுக்கு முதலாய்நிற்றலாலும்- ஒன்றற்கொன்று குறைபாடுடைத்தன்றேனும் வேதமுடைமைபற்றி வடமொழிக்குச் சொல்லப்பட்ட உயர்வு தென்மொழிக்கணணே திருக்குறள் உண்டாதலின் இனி இல்லையென்றற்கு, இதனினிது சீரியதென்றொன்றைச் செப்பரிதென்றார். (௬௫)

(களத்தூர்க்கிழார்.)

ஒருவ ரிருகுறளே முப்பாலி னோதுந் .... ❋
தருமமுதலனைத்துஞ் சாலு- மருமறைக .... ❋
ளைந்துஞ் சமய நூ லாறுநம் வள்ளுவனார் .... ❋
புந்தி மொழிந்த பொருள். .... ❋

இ-ள். அருமறைகளைந்தும், (இருக்குமுதற் பாரதமீறாகிய) அரியவேதங்களைந்தும்- சமய நூலாறும், (அவ்வேதத்தின் வழிப்பட்ட) சமய நூல்களாறும்- நம்வள்ளுவனார், நம்முடைய திருவள்ளுவரால்- புந்திமொழிந்தபொருள், (உலகத்தார்க்குப்) புத்தியாகச்சொல்லப்பட்ட நூலிலடங்கும்- (ஆதலால் - ஒருவர், ஒருவர்- இருகுறளே, (ஒருவிகற்பமும் இருவிகற்பமுமாகிய) இருவகைக்குறள்களையுமே-முப்பாலின், முப்பால்களில்- ஓதும், அத்தியயனஞ்செய்து அறியப்ப

)

டுகின்ற- தருமமுதனைக்கும், அறமுதலிய நாற்பொருள்களும் - சாலும், (அவருக்குப்)போதும். எ-று. ❋ ஒருவனுக்கே ஐந்தும் ஒதிபுணர முடிவுபோகாது வேறுவேறான அதிகாரிகளுடைமைபற்றி அருமறைகளைந்துமென்றார். சமயநூலாறும்- ஒன்றே பொருளென்னும் பாட்டினாயிற்காணக. நமக்கெல்லாம் அறிவொழுக்கங்கொளுத்தி நல்வழிப்படுத்தவர்த பரமாசாரியர் இவரே யென்னு முரிமைதோன்றற்கு நம்வள்ளுவனுமென்றார். மனறகளைந்துஞ்சமய நூலாறு நம்வள்ளுவனார் புந்திமொழிந்த பொருளெனலால்- அவைபலவற்றினும் வேறுவேறு வகைப்பட்டுச் சிறந்துநின்ற கருத்துக்களெல்லாம் இவ்வொருநூற்கண்ணே அடங்கி நிற்கின்றமை சொல்லப்பட்டதாயிற்று. பொருள்- ஆகுபெயர். ஒருவனெனப் பொதுப்படக்கூறலால், இதனையோதுதற்குப் பெண்பாலாருக்கும் அதிகார முண்டென்பது கொள்ளப்பட்டது. (சுச)

(நச்சுமனார்.)

எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு .... ❋
வழுக்கில் வனப்பணி வண்ண - மிழுக்கின்றி............... ❋
லென்றெவர் செய்தன வெல்லா மியம்பின................. ❋
வின்றிவ ரின்குறள் வெண பா....................
.... ❋

இ-ள். எழுத்தசை சீரடி சொற் பொருள்யாப்புவழுக்கில்வனப்பணிவண்ணம், எழுத்துமுதல் வண்ணமீறாகச்சொல்லப்பட்டஇவற்றுள்- இழுக்கின்றி, வழுவுதலில்லாமல்- என்றெவர்செய்தன, எக்காலத்தில் எவரால்எவைசெய்யப்பட்டன-எல்லாம்,(அவை)யெல்லாம்-இன்றிவரின்குறள்வெண்பா, இக்காலத்து இத்திருவள்ளுவாாலே செய்யப்பட்ட இவ்வினிய குறள்வெண்பாக்களில் இயம்பின, சொல்லப்பட்

டன. எ-று. ❋ வனப்பு- அம்மை- அழகு-தொன்மை-தோல்-விருந்து-இயைபு- புலன் -இழைபு-அணி- சொல்லணி-பொருளணி-ஒலியணி-வண்ணகுறில்கவற்றாங்கிசை-வண்ணமுதலியன.ஒவ்வொருகாலத்தில்-ஒவ்வொருபாவலர் ஒவ்வொருகுணத்திலே சிறந்துவிளங்க நூல்செய்தனர்.இவரோவெனின் எல்லாக்குணங்களாலும் நிறைந்து சிறந்து விளங்கச்செய்தமையின் இவ்வாறுகூறினர். (௪௫)

(அக்காரக்கனிநச்சுமனார்.)

கலைநிரம்பிக் காண்டற் கினிதாகிக்
கணணி.......... ❋
னிலைநிரம்பு நீர்மைத் தெளிவுந்
தொலைவிலா...... .... ❋
வானூர் மதியந் தனக்குண்டோ
வள்ளுவர்பூட் .... ❋
பானூ
லையத்தின் பயன் .... ❋

(௩௩௰) திருவள்ளுவமாலை.

இ-ள். (மதியமும் முப்பானூலும்)- கலை, பதினாறு கலைகளாலும், அறுபத்துநாலு கலைகளாலும்- நிரம்பி, நிறைந்து-காண்டற்கு, நோக்குதற்கு,- ஆராய்ச்சி செய்தற்கு,- இனிதாகி, இனியதாகி- கண்ணினிலை, முகக்கண்ணினிலையில்,- அகக்கண்ணினிலையில்,- நிரம்பு, நிரம்புகின்ற-நீர்மைத்தெளிவும், தன்மையுடைத்தாயினும், குணமுடைத்

தாயினும்வள்ளுவர்முப்பாலால்,திருவள்ளுவரது முப்பாலினது நயத்து,நயத்தால்விளைவதாகிய-இன்பயன்,இனியபயனை து- தொலைவிலாவானூர்மதியந்தனக்கு, ஒழிவின்றி ஆகாயத்தின்கண்ணே திரிகின்றமதியினிடத்து- உண்டோ, உண்டோ. எ-று. ※ மதியந்தனக்கென்றது- வேற்றுமைமயக்கம். ஓகாரம்- எதிர்மறை. ஆதாரமாகக் கொள்ளுதற்குஎற்புடைத்தல்லாதவானை ஆதாரமாகக் கோடலினிழிவுதோன்ற,தொலைவிலா வானூர்மதியமென்றார். நயம்மறுப்படாமை மழுங்காமை தறைவுறாமை முதலியன. பயன், இம்மை மறுமைவீட்டின்பங்கள்.

(நப்பாலத்தனார்.)

அறந்தகளி யான்ற பொருடிரி யின்பு .... ※
சிறந்தநெய் செஞ்சொற்றீத் தண்டு- குறும்பாவா...... ※
வள்ளுவனா ரேற்றினார் வையத்து வாழ்வார்க .... ※
ளுள்ளிரு ணீக்கும் விளக்கு...... ... .
.... ※

இ-ள். அறம்,தருமம்- தகளி, அகலும்- பொருள்,பொருள்- திரி, திரியும்- இன்பு, இன்பம்- நெய், நெய்யும்- செஞ்சொல், செவ்விய சொல்-தீ, நெருப்பும் குறும்பா, குறட்பா- தண்டு, தண்டும்-ஆ,ஆக வள்ளுவனார், திருவள்ளுவர்- வையத்து வாழ்வார்கள், பூமியின்கண்ணே வாழ்வோரது- உள்ளிருள் அகத்திருளை- நீக்கும், ஒழிப்பதாகிய- விளக்கு, விளக்கு- ஏற்றினார், ஏற்றினார். எ-று. அகத்திருள் அஞ்ஞானம். தீச்சுடர் தகளிமுதலியவற்றோடுகூடிப் புறத்திருளைஎப்படியோட்டுமோ அப்படி நாயனாரது திருவாயிற்பிறந்த செஞ்சொல்

அறமுதலியவற்றொடுகூடி அகத்திருளைக் கெடுத்தலின் இங்ஙனம் உருவகஞ்செயலாயிற்று. மனையகற் தேற்றப்படுகிறவிளக்கு அம்மனையகத்துள்ளார்க்கு மாத்திரமே உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருளைக்கெடுக்கவல்ல தன்மையாலும், இஃது உலகத்துவாழ்வோர்பலர்க்கும் உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருள் கெடுத்தலாலும் அதனின் இதுபலகோடிமடங்கு மிக்குச்சிறந்தது. (சஎ)

திருவள்ளுவமாலை. (ருருக)

(குலபதிநாயனார்.)

உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள ... . *
தள்ளற் கரியவிரு டள்ளுதலால்- வள்ளுவனார் .... *
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரு மொக்குமெனக், . *
கொள்ளத்தகுங் குணத்தைக் கொண்டு........... .... *

இ-ள். உள்ளக்கமலமலர்த்தி, நெஞ்சமாகிய தாமரைமலரைமலர்த்தி- உளத்துள்ள, (மக்களது) அகத்திலுள்ள- தள்ளற்கரியவிருள், (பிறிதொன்றனாலே) நீக்கப்படாத அஞ்ஞானவிருளை- தள்ளுதலால், நீக்குதலால்- வள்ளுவனார் வெள்ளைக்குறட்பாவும், திருவள்ளுவரது குறள்வெண்பாவும்- வெங்கதிரும், (புறத்துத் தாமரைமலரை மலர்த்திப் புறத்திருளை நீக்குகின்ற) சூரியனும்- குணத்தைக்கொண்டு, அச்செய்கையைக்கொண்டு- ஒக்குமெனக்கொள்ளத்தகும், ஒப்பெனக்கொள்ளத்தகும். எ-று. ❋ செயலும் தொழிற்பண்பெனப் படுதலின்-குணமெனப்பட்டது. அது மலர்த்தலும், தள்ளுதலும், ஆம். குணத்தைக்கொணமெடனவே செயப்படுபொருளைக்கொண்டு ஒக்குமெனக்கொள்ளத்தகாதென்றதாயிற்று. உலகுக்கெல்லாம்பேரொளியாகிய சூரியனும் இதற்கு ஒருபுடை யொப்பாமென்றபடி. (௬அ)

(தேனீக்குடிக்கீரனார்.)

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே - முப்பாலிற் ... ❋
றெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால் .... ❋
வையத்து வாழ்வார் மனத்து ....❋

இ-ள்- தெய்வத்திருவள்ளுவர், தெய்வத்தன்மையுடைய திருவள்ளுவர்- முப்பாலின்- மூன்றுபால்களுடையதாக- செப்பியகுறளால், சொல்லப்பட்ட குறணூலைக்கேட்டறிதலால்- வையத்து வாழ்வார்மனத்து, பூமியில் வாழ்வார்மனதில்-பொய்ப்பால, பொய்யின் பகுதியிற்பட்டவையெல்லாம்- பொய்யேயாய்ப்போயின, பொய்யாய்ப் போயின-பொய்யல்லாத,பொய்யல்லாத- மெய்ப்பால,மெய்யின்பகுதியிற்பட்டவையெல்லாம்-மெய்யேயாய்விளங்கின, மெய்யாய்விளங்கின. எ-று. ❋ குறளால்-பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின மெய்ப்பால மெய்யேயாய் விளங்கின. எனவே- இதற்குமுன்னெல்லாம் உண்மைதுணியப்படாமையின் பொய்ப்பால மெய்ப்பால போன் மேற்கொள்ளப்படும். மெய்ப்பால பொய்ப்பாலபோற்கைவிடப்படும். மயங்கிக்கிடந்தனவென்றதாயிற்று. (௬௯)

(கொடிஞாழன்மாணிபூதனார்.)

அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின் .... *
திறனறிந்தேம் வீடு தெளிந்தே - மறனெறிந்த .... *
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற் .... *
கேளா தனவெல்லாங் கேட்டு .... *

இ-ள் மறனெறிந்த வாளார்நெடுமாற, பகைவரையெறிந்த வீரப் படைதங்கியவீரமுங்கும்பாண்டியனே- வள்ளுவனார் தம்வாயால், திருவள்ளுவர் வாயால்- கேளாதனவெல்லாம், இதற்குமுன் கேட்கப்படாதவையெல்லாம்- கேட்டு, (இப்போது) கேட்டு-அறனறிந்தேம், தருமமறிந்தோம்- பொருளறிந்தேம், பொருளையறிந்தோம்- இன்பின் திறனறிந்தேம், இன்பமறிந்தோம்- வீடுதெளிந்தேம், வீட்டுத்திறன்றெளிந்தோம். எ-று. ❊ திறன்-கூறுபாடு. அது அறமுதலியவற்றோடுங் கூட்டப்பட்டது. மறன்- ஆகுபெயர். கேளாதன-பிற நூலாசிரியர்க்கெல்லாம் அறிந்து சொல்லுதற்கெட்டாதிருந்த அறமுதலியவற்றினுட்பங்கள். (கூ௰)

(கவுணியனார்.)

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய .... *

வந்த விருவினைக்கு மாமருந்து - மூத்திய .... *
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார் .... *
பன்னிய வின்குறள்வெண் பா .... *

இ-ள் மூத்தியநன்னெறிநாமறிய, மூற்பட்டதாகியநல்வழியைநாமறிய- நாப்புலமைவள்ளுவனார், நாவால் விளங்குகின்ற புலமையையுடைய திருவள்ளுவனாரால்- பன்னிய, சொல்லப்பட்ட- இன்குறள்வெண்பா, இனிய்குறள்வெண்பாக்கள்- சிந்தைக்கினிய,(நினைத்தால்) மனத்திற்கின்பஞ்செய்வன. செவிக்கினிய, (கேட்டால்) காதுக்கின்பஞ்செய்வன. வாய்க்கினிய (ஓதினால்) வாய்க்கின்பஞ்செய்வன. வந்த விருவினைக்கு, தொடர்ந்து வருகின்ற இருவினைகளாகியநோய்களுக்கு- மாமருந்து, பெரியமருந்துகளாவன. எ-று. ❄ குறட்பாவை மருந்தென்றமைக்கு ஏற்கவினையைநோயென்னமையால்-ஏகதேசரூபகம். நல்வினையும் பிறவிக்கு ஏதுவாகலால் இருவினையென்றார். மூற்பட்ட நல்வழி நன்மக்களுக்கு அநாதியாயமைந்துள்ளது. அது சமயத்தாரது பலவகைப்பட்ட கற்பனையினாலேமறைபட்டுநின்றமையின்- நாமறிய வென்றார். (௫௪)

(மதுரைப்பாலாசிரியனார்,)

வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள் .... *
பொள்ளென நீக்கும் புறவிருளைத் - தெள்ளிய ....*

திருவள்ளுவமாலை. (௫௫௩)

வள்ளுவ ரின் குறள் வெண்பா வகிலத்தோ .... *
ருள்ளிரு ணீக்கு மொளி .... *

இ-ள். வெள்ளிவியாழம் விளங்கிரவி வெண்டிங்கள், சுக்கிரன் சுர, குரு சூரியன் சந்திரன் எனப்படுகின்ற இவ்வொளிகள்- புறவிருளை புறத்திருளை- பொள்ளென நீக்கும், விரைவிலே நீக்கும்- ஆதலின்புற விருணீக்குதற்கு உண்டாகிய ஒளிகளாம்.) தெள்ளிய, தெளிவாகிய முற்றுணர்ந்த, முழுதுமுணர்ந்த-வள்ளுவரின்குறள்வெண்பா,திருவள்ளுவரினியகுறள்வெண்பா- அகிலத்தோர், உலகத்தோரது- உள்ளிருணீக்கும், உள்ளிருளை நீக்குதற்குண்டாகிய- ஒளி,ஒளி. எ-று. ❋ இங்ஙனங்கூறவே புறத்திருளுக்கு அவைபலவுள அகத்திருளுக்கு இஃதொன்றேயுளதென்றதாயிற்று.

(ஆலங்குடிவங்கனர்)

வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந் .. ... *
தெள்ளமுதின் தீஞ்சுவையு மொவ்வாதாற் றெள்ளமுத *
முண்டறிவார் தேவருலகடைய வுண்ணுமால் . ... *
வண்டமிழின் முப்பான் மகிழ்ந்து .... *

இ-ள். வள்ளுவர்பாட்டின்வளம்,திருவள்ளுவரது பாட்டினதுதீஞ்சுவையை- உரைக்கின், சொல்லுமிடத்து-வாய்மடுக்குந்தெள்ளமுதின், உண்ணப்படுகின்ற தெள்ளிய அமுதினது- தீஞ்சுவையும் இனிய சுவையும்- ஒவ்வாது- ஒப்பாகாது- தெள்ளமுதமுண்டு, அத்தெள்ளிய வமுதையுண்டு- அறிவார், (அதன்சுவையை) யறிபவர்- தேவர் தேவர்- வண்டமிழின், வளம்பொருந்திய தமிழ்க்கண்ணதாகிய-முப்பால், முப்பாலாகிய அதின்மும்மடி சிறந்தபாலை- மகிழ்ந்து-மகிழ்ந்து உலகடைய, எல்லாவுலகத்தாரும்-உண்ணும் உண்டுதீஞ்சுவையறிவார் எ-று. ❋ வளம், ஆகுபெயர். ஆல், அசை. அவ்வமிர்தம், வாயுட்பெய்தவழி நாவிற்பட்ட சிறிதுபொழுதளவே தீஞ்சுவைபயப்பது.இப்பாட்டு நெஞ்சின்கணிலைபெற்று ஒழிவின்றித் தீஞ்சுவைபயத்தலின், ஒவ்வாதென்றார். முப்பால், சிலேடைரூபகம். இனிஎவ்வுலகத்தாருக்கும் கருமபூமியாகிய இவ்வுலகத்துட்டோன்றி மெய்ப்பொருளுணர்ந்தன்றி வீட்டின்பம்பெறுதல் கூடாமையின், உலகடைய வுண்ணு

(ஙூ)

திருவள்ளுவமாலையுரை - முற்றிற்று.

(இடைக்காடர்பாடல்.)

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் ……… *
குறுகத் தறித்த
குறள் ……… *

[௭௰]

(௫௫௪) திருவள்ளுவமாலை.

இ-ள். குறள், (நாயனாரது நூலினாயிரத்து முந்நூற்றுமுப்பது) குறள்வெண்பாக்களும் - கடுகை - கடுகை - துளைத்து (அதனடுவே) துளைசெய்து- ஏழ்கடலை, ஏழுகடனீரையும்- புகட்டி, (அத்துளையுட்- பெய்து -குறுக. (தன்னளவிற்)குறுகும்வண்ணம் -தறித்த. தறித்து வைத்தால்அதுபோல்வனவாகும்-எ-று-*மிக்கசிற்றளவிற்குஎடுத்து ச்சொல்லப்படுவதொருநுண்பொருளாதலின் கடுகுசொல்லப்பட்ட து .இரண்டனுருபுதறித்த வென்வினைகொண்டது. துளைத்தல், உள் வீடுபோக்குதல். புகவிடென்பது, புகட்டென விகாரப்பட்டு முத னிலையாய் நிற்றலின், புகட்டியென்றாயது. துளையினிடை வெளிக்கு ம் அதன் புறவடிக்கும் கொள்ளப்பட்ட பங்கு சிறிதாக ஒழிந்தபங் கு பெரிதாகலின், குறுகவென்றார். தறித்தாலன்ன வெனற்பாலது,

தறித்தவென இடைக்குறைந்து நின்றது. இல்லாதபொருளை உடமானமாகக் கூறலின், இல்பொருளுவமை. குறட்பாக்களுள் ஒவ்வொன்றும் அது போறலின், தறித்தவெனப் பன்மையாற் கூறலாயிற்று. குறள், பால்பகா அஃறிணைப்பெயராதலின்- இங்கே பன்மைக்காயது இங்ஙனங் கூறவே குறட்பாவின் சொற்சுருக்கமும் அதனுள் அடக்கப்பட்ட பொருள்விரிவும் நோக்கும்வழி அக்கடுகும் எழ்கடனீரும் போலு மென்றதாயிற்று.

இப்பாட்டிலே அணுவைத் துளைத்தேழ் கடலைப்புகட்டிக் குறுகத்தறித்த குறள். என முதற்சொல்லைமாற்றி, ஒளவையாரால் புகழ்ச்சிசெயப்பட்டது.

திருவள்ளுவமாலை

முற்றும்.

உ

சிவமயம்.

திருவள்ளுவர்சரித்திரம்.

உலகத்துள் மஹாசிறப்புப் பொருந்திய கைலாயகிரியிலே அரசிருக்கைமண்டபத்தில் பிர்மாதி முப்பத்துமுக்கோடி தேவர்கள்- நாற்பத்தெண்ணாயிர முனிவர்கள் கின்னரர்- கிம்புருடர்- கருடர்-காந்தர்வர்- சித்தர்- வித்தியாதரர்- முதலானவர்கள் வணங்கிச் சூழும்படி பார்ப்பதிசமேதராய்ப் பரமசிவன் திருவோலக்கமாக எழுந்தருளியிருந்தார். அப்போது தேவியானவள் எழுந்து வணங்கிநின்று ஸ்வாமீ திரிலோகத்திலே இல்லறம் வழுவாது நடந்துகதியடைந்தவருண்டோவென்றுவினவ, ஸ்வாமி திருவுளம்பற்றுகிறார். உமையவளே! தெய்வலோகத்தில்- வசிஷ்டர்- அகஸ்தியர்- அயன்- புயங்கசன்- சம்பு- என்றைந்துபேருண்டு. பூலோகத்தில் திருவள்ளுவனொன்றொருவருண்டு. இவர்கள் தென்புலத்தார்கடன்-தேவர்கடன்-விருந்தோம்பல்-சுற்றந்தழுவல்- கபிலைபூசைசெய்தல்- முதலிய இல்லறத்தில் கற்பின்வழுவாத நற்குண நற்செய்கையுள்ள மனைவியரோடிருந்து இல்லறக்கடன் நடத்திக் கதியடைந்தாரென்று திருவாய்மலர்ந்தருளப் பூலோகத்திலே திருவள்ளுவர் என்பவர்-யாரென்றுகேட்க, பூர்வத்திலே ஒருபிரளயம் வந்தது. அதுவருமென்று பிர்மா முன்னமே தெரிந்து அதிலே யிறவாது பிழைக்கும்படி வேற்றுவடிவமாய் ஒருசுரைக்கூட்டைத் தனக்கிடமாகக்கொண்டு அதிற்புகுந்து அவ்வெள்ளத்தின்மேல் மிதந்துவந்தான் அதுகண்டு, நாம் அறியாதவர்போ

ல் இதற்குளிருப்பவன் யாரென்றுகேட்டோம். தான்வருங்காலமறிந்து செய்தற்கேற்ப வள்ளுவனென்றார். இப்பிரளயத்தில்நீரெப்படிப்பிழைத்திருந்தீரெனக்கேட்க, ஸ்வாமியென்றுதெரிந்து, மிகுந்தபேரானந்தத்தையடைந்து, பரமசிவனே உமது திருவருளினல் பிழைத்திருந்தேன் ஆயினும், இந்தப்பிரளயத்தைநீக்கியருளவேண்டுமென்றுவேண்டிக்கொள்ள, நாம் அந்த அதிகாரம் உமக்கேகொடுத்தோ

பெற்று அவராலே

முன்புபோல்உலகத்தைச்செய்வித்தோம். அத்தன்மையுடைய அவர் பூமியிலே பிறந்தகாரணமுஞ்சொல்லுகிறேம்.

ஆதிகாலத்தில் பூமியிலே பாண்டிநாட்டில் மதுரைமாநகரத்திலிருந்த சங்கப்புலவர்கள் நம்மை அவமதிப்புச் செய்ததின் பொருட்டு, அவர்கள் கர்வபங்கமாகும்படி பிரமஸ்வரூபராகிய திருவள்ளுவரையும், மஹாவிஷ்ணுவையும், சரஸ்வதியையும்,பூமியில்அவதரிக்கும்படி அனுப்பினேம். அவருள் மஹாவிஷ்ணு, இடைக்காடராய்ப்பிறந்தார். சரஸ்வதியும், திருவள்ளுவரும் வந்தமரபுங்கேட்பாயாக.

ஆதியிலே பிர்மபுத்திரர்களாகிய காசிபர் முதலிய நவப்பிர்மாக்களில் காசியர் ஊர்வசியைச்சேர்ந்து வசிஷ்டரைப்பெற்றார். அவர் அருந்ததியைச்சேர்ந்து சத்திரியரைப்பெற்றார். அவர் புங்கனூர்ப்புலைச்சியைச்சேர்ந்து பராசரரைப்பெற்றார்.அவர்மச்சகந்தியைச்சேர்ந்து வியாசரைப்பெற்றார். இவர்கள் நால்வரும் வேதங்களுக்குரியவரானார்கள்.

பின்பு பிர்ம்மாவானவன்

இன்னுஞ்சிலபுத்திரரால்வடமொழியை யுந்

தென்மொழியையும் விளங்கச்செய்ய

வேண்டுமென் றெண்ணி வேதவிதிப்படி ஒருயாகஞ்செய்ய, அதன்கண் வைத்திருந்த கும்பத்திருந்து கலைமகளவதரித்தனள். அவளைப் பிரமன் விவாகஞ்செய்துகொண்டான். பின்பு அகஸ்தியர் குறியவடிவோடு அக்கும்பத்துதித்தனர். அவர் சமுத்திர கன்னிகையை மணந்து பெருஞ்சாகரனென்பவனைப்பெற்றார். அவர் திருவாரூர்ப் புலைச்சியைச்சேர்ந்து பகவனென்பவனைப்பெற்று அவர்க்குச் சகலசாஸ்திரங்களையுங் கற்பித்தார். அந்நாளில் பிர்மவம்சத்தில் தவமுனியென்பவர் அருண்மங்கை யென்னும் பிராமணமாதைச்சேர்ந்து ஒருபுத்திரியைப்பெற்றுவைத்து விராலிமலையில் தவஞ்செய்யச்சென்றனர். அக்குழந்தையை உறையூர்ப்பெரும்பறையன் கண்டெடுத்துச்சிலகாலம்வளர்த்துவருகையில், மேல்நடக்கப்போகிற காரணத்தினால் இந்தப்பெண்தவிர மற்றவர்கள்யாவரும் இறக்கும்படி அந்தச்சேரியில் யாதுகாரணமோமண்மாரிபெய்தது. பின்பு அந்தப்பெண் அதற்கடுத்த மேலூர் அகரத்திலே நீதியையன் வீட்டில் வளர்ந்திருந்தனள்.

அப்போது பகவனென்பவர் சகலசாஸ்திர

பண்டிதராய்க் கண்

டவர் யாவரும் மரியாதைபண ணும்படி பிராமணகிர்த்தியத்தில்வழு வாதவராயிருக்கையில், யாத்திரைபண்ணும்படியிச்சைகொண்டு, காசிக்குப்போகும்போது இவ்வகரத்துக்கடுத்த ஒருசத்திரத்தி லிறங்கி நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு சமையல் செய்திருந்தார். அவ்விடத்திலே அந்தப்பெண்வர அவளைக்கண்டு நீயார் புலைச்சியோ! வ

லைச்சியோ! இங்கே வந்தாயென்று அதட்டி மிகுந்த கோபங்கொண்டு சட்டுவத்தால் அவளது தலையிலே உதிரஞ்சோரஅடித்தோட்டினார். அவள் அழுதுகொண்டு தன்னிடத்துக்குப் போய்விட்டாள்.

மறுபடியும் பகவனென்பவர்ஸ்நானஞ்செய்துபோசனம்பண்ணி அதிசீக்கிரத்தில் வழிக்கொண்டு சிலநாளிற் காசிக்குப்போய்க் கங்காஸ்நானஞ்செய்து பிரயாகையிலிருந்து தீர்த்தக்காவடி சுட்டிக்கொண்டு வரும்போது ய பெண்ணுனவள்

அந்தச்சத்திரத்தில்வந்திறங்கினார். மேற்சொல்லி அப்போது மகாலட்சுமிடைப்போலும் அழகும்,

எவ்வர்னபருவமும் உடையவளாய், அங்கேவந்தாள். பகவனென்பவ
ர் இவளுடைய சௌந்தரியமுதலிய குணங்களைப்பார்த்து, மோகங்
கொண்டார். அச்சத்திரத்துக்கு அதிபராகிய நீதி யையரென்பவர்
அக்குறிப்பினைக்கண்டு, என்பெண்ணை விவாகம்பண்ணிக்கொண்டுஇங்
கேயிருமென்றுசொல்ல, அதற்கவர் தான்கொண்டுவந்த காவடியை
இராமேசுரத்திற் செலுத்திவந்து அப்படியே
அவரிடத்திலே செலவுபெற்றுக்கொண்டுபோய்

செய்கிறேனென்று
இராமலிங்கத்துக்கு
அபிஷேகம்பண்ணித் திரும்பிவந்தார். அப்போது நீதியையர் விவா
க எத்தனம்பண்ணிப் பந்துக்களோடிருந்து விசேஷமாய் நாலுநாள்

சடங்குகளும் செய்து ஐந்தாநாள் மங்களஸ்நானஞ் செய்விக்கும்
போது பகவனென்பவர் அந்தப் பெண்ணினுடைய தலையில் எண்
ணெயைப் பெய்யும்படி மயிரைவகிர்ந்தா ர்.
அப்போது தாம் முன் பு சட்டுவத்தாலடித்த
வடுவைக்கண்டு அநுமானித்து, இந்தப் பெண்
ணினது வரலாற்றையும் விசாரித்து,
விசனங்கொண்டு நீ ஆதியாள் ளாவென்று
சொல்லிவிட்டுஓடினார். அதுவே அவளுக்கு
ஆதியென் று காரணப்பெயராயிற்று.

அப்படியோடிய பகவனென்பவர் பொழுதுபோகையால் எதிரே கண்ட பாணர்சேரியிலிருந்த ஒருமண்டபத்திலே தங்கினார். ஆதியென்பவளும் அவர்பின்னேதொடர்ந்து அவரைக்கண்டு தெய்வச்செயலால் உமக்கும் எனக்கும் இந்தக்காரியம் நடந்திருக்க, நீர் என்னைவிட்டுப்போகுதல் உமக்குத் தகுமோ அல்லது தருமமோவென்றாய்,

உம்மை நீங்கினால் உயிர்வாழேனென்றாய், மிகவும் இரக்கத்துடன் சொல்லப் பிராரத்துவத்தால் இவர் புத்தியிலும்அதுசரியென்றுபட்

டுப் பெண்ணே என்னிடத்தில் உனக்கு அன்பிருக்குமானால் யான் சொன்னபடி கேட்கவேண்டும், அஃதென்னெனில்,உனக்குப்பிள்ளைகள் எங்கெங்கே பிறக்கிறதோ அங்கங்கே அவைகளை அப்பொழுதே விட்டு வருவையானால் யான் உன்னைக்கூடச் சம்மதிப்பேனென்று

(௯௮௮) , திருவள்ளுவர்சரித்திரம்.

சொல்ல, அவளதற்கு உடன் பட்டபடியால், அன்றிரவில் அம்மண்டபத்திலிருவருங்கூடினார்கள்.

ஔவை.

அப்போது பரமசிவன் உத்தரவின்படி

சரஸ்வதியாவராலும்புக

ழப்பட்ட ஔவையாகிப் பிறந்தாள். இந்தக்குழந்தையை யாவர்கா ப்பாற்றுவாரென்று விட்டுநீங்கத் தாய் வருந்தும்போது அதுசொல்லியது.

(வெண்பா.)

இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி . ....
விட்டசிவனுஞ் செத்துவிட்டானோ- முட்டமுட்டப், ...

❋

❋

பஞ்சமேயானாலும் பாரமவனுக்கன்றோய்.......... ....
நெஞ்சமே யஞ்சாதே நீ..... ....

❋

❋

அதுகேட்டு மனந்துணிந்துபோயினள். பின்பு அக்குழந்தையை அச்சேரியிலுள்ள பாணர்களெடுத்துவளர்க்க வளர்ந்து - சரஸ்வதியா கையால் இயல்பாகவே கலைமுழுதும் அறிந்து, சிதக்களபவென்னுங் கணபதி அகவல்பாடி அவரை உபாசித்து லோகோபகாரமாக, ஆத்திசூடி-கொன்றைவேய்ந்தன்-மூதுரை- நல்வழி- ஞானக்குறள்-அசதிக்கோவை- நன்னூற்கோவை- நான்மணிக்கோவை- பந்தனந்தாதி அருந்தமிழ்மாலை- தரிசனப்பத்து - முதலியவுஞ்செய்து, ஔவோர் காரியத்தின்பொருட்டுத் தனிக்கவிதைகளனேகமும் பாடி அனேக அற்புதங்களெல்லாஞ்செய்து முடித்துவருநாளில், ஒருநாள் கணபதி பூசை விரைவாகச்செய்தாள், அவர் வழக்கப்படியன்றி விரைந்துசெய்வது ஏனென்றுகேட்கச் சுவாமீ சுந்தரமூர்த்தியாரும் சேரமான் பெருமாளும் கைலாயத்துக்குப் போகின்றார்கள். என்னையும் அழைத்தார்களென்ன, அவர்களுக்குமுன்னே உன்னை அங்கேவிடுவேன் நீ பூசையை வழக்கப்படி முடியென்றார். தன்பூசையைக் கிரமப்படி முடித்தாள். உடனே கணபதி துதிக்கையாலெடுத்துவிடக் கைலாயமடைந்தாள். பின்புபோன அவ்விருவரும் அவ்வையைக்கண்டு அதிசயப்பட்டார்கள்.

உப்பை.

இதுநிற்க முன்புபோன இருவர்களும் தொண்டைநாட்டில் ஊற்றுக்காடென்னும் ஊரிலுள்ளதோர் மடத்திற் சென்று கூடினார்கள். அப்பொழுது உப்பையென்பவள் பிறந்தாள். இந்தக் குழந்தையை யாவர்காப்பாற்றுவாரென்று அதைவிட்டு நீங்கத்தாய்வருந்தும்போது அந்த சொல்லியது.

திருவள்ளுவர்சரித்திரம்.

(௫௫௯)

(வெண்பா.)

அத்திமுதலெறும்பீ றானவுயி ரத்தனைக்குஞ் .... *
சித்தமகிழ்ந் தளிக்குந் தேசிகன்-முற்றவே .... *
கற்பித்தான் போனானோ காக்கக் கடனிலையோ....... *
வற்பமோ வன்னா யரன் .... *

அதுகேட்டு மனந்துணிந்து போயினள். அவ்வுப்பை முற்பிறப்பில் யாரெனில், பிருகுவின் பத்தினியாகிய நாகவல்லியென்பவள் திரிமூர்த்திகளும் அவள் அழகின்மிக்கவளென்று கேள்விப்பட்டுப் பார்க்க மாறுவேஷங்கொண்டுபோய் நிர்வாணபிக்ஷைகேட்டார்கள். அவள் மகாபதிவிரதையாகையால், இவர்களைப் பாலராக்கி அப்படியே பால்கொடுத்துத் தன்னைப் பரிசோதித்ததற்குக் கோபங்கொண்டு அவர்களை மூன்றுசனனம் எடுக்கும்படி சொன்னாள். அதுகண்டதிரிமூர்த்திகளுந் தங்களை அவள் மதிக்காமல் பாலராக்கி மூன்றுசனனம்பண்ணும்படி சொன்னதற்காகச் சினங்கொண்டு நீ அழகின்றிமாறுவடிவாகக் கடவையென்று சபித்துப்போயினர். பின்பு பிருகுவானவர் இவள் வேற்றுவடிவைக்கண்டு நீ பூமியில் பிறக்கக் கடவையென்றனர். அவள் கணவனுத்தரவின்படி உப்பையென்னவந்தவரித்துவண்ணார்வளர்க்க வளர்ந்து, மாரியம்மையாய் உலகமெல்லாந் தன்னைப் போற்ற இப்பொழுதும் அவ்வூரில் தெய்வமாயிருக்கின்றனள்.

அதிகமான்.

இது நிற்கமுன்புபோன அவ்விருவருஞ் சோழதேயத்திற் கருவூ ரிலடைந்து ஒருசோலையிற்கூட அதிகமானென்பவர் பிறந்தார். இந் தக்குழந்தையை யாவர்காப்பாற்றுவாரென்று அதைவிட்டுநீங்கத்தா ய்வருந்தும்போது அதுசொல்லியது.

(வெண்பா.)

கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும் *
விருப்புற் றமுதளிக்கு மெய்ய – னுருப்பெற்ற .... *
னூட்டி வளர்க்கானோ வோகெடுவா யன்னாய்கேள் ..... *
வாட்ட முனக்கேன் மகிழ் .... *

அதுகேட்டு மனதுந்தணிந்துபோயினள். அந்தக்குழந்தையை ச் சேரமானெடுத்து வளர்க்க வளர்ந்து, வில்வேதம் – மறுவிக்யான முதலியவுங்கற்று முடிசூட்டப்பெற்றுச் சொக்கநாதர் திருமுக மெ ழுதிகொடுக்கப் பாணபத்திரருக்கு வேண்டியதிரவியங்கள் கொடுத் துப் பொன்வண்ணத்தந்தாதி யென்றோர்பிரபந்தம்பாடிச் சிதம்பர த்தி லரங்கேற்றி அரசுசெலுத்திச் சுந்தரமூர்த்தியார் நட்புப்பெற்றி ருந்து அவர் கைலைக்குப்போகும்போது உடனேபோய் அங்கேதா

(௭௯) திருவள்ளுவர்சரித்திரம்.

ம்பாடியருளிய ஆதியுலாவை

அரங்கேற்றிச்சிவானுக்கிரகம்பெற்று

வீற்றிருந்தார்.

முன்புபோன அவ்விருவரும் காவிரிப்பூம் பட்டினத்தடைந்து ஒருமண்டபத்திற் கூடினார்கள். உறுவையென்பவள் பிறந்தாள். இந்த க்குழந்தையை யாவர் காப்பாற்றுவாரென்றுஅதைவிட்டுநீங்கத்தாய் வருந்தும்போது அதுசொல்லியது.

(வெண்பா.)

சண்டைப்பைக் குள்ளுயிர்தன் றுயருந்தத்தானருந்தும்
அண்டத் துயிர்பிழைப்ப தாச்சிரிய - மண்டி ... . *
யலைகின்ற வன்று யரனுடைய வுணமை .... ..
... ... *
நிலைகண்டு நீயறிந்து நில் .. .. *

அதுகேட்டுத் தாய்மனந்துணிந்து போயினள். பின்பு அக்குழந்தையைக்கள்விற்போரெடுத்து வளர்க்க வளர்ந்து தவஞ்செய்து பத்திரகாளியாய்த் தாருகனைக்கொன்று திருவாலங்காட்டில் சபாநாயகருடனே நிருத்தஞ்செய்து அதிலேதோற்று, அகோரவீரபத்திரனை விவாகம்பண்ணிக்கொண் டவ்விடத்திருந்தாள்.

கபிலர்.

இதுநிற்கமுன்பு அவ்விடம் விட்டுப்போன இருவரும் திருவாரூரையடைந்து ஒருமடத்திற்கூடக்கபிலரென்பவர் பிறந்தார். இந்தக் குழந்தையை யாவர்காப்பாற்றுவாரென்று அதைவிட்டு நீங்கத்தாய்வருந்தும்போது அதுசொல்லியது.

(வெண்பா.)

கன்னுழைபாக் காட்டிற் கருங்கற் றவளைக்கு......... *
முன்னுணும் படியறிந் தூட்டுமவர் - நண்ணு ....
நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர் ... .
*
*

தமக்குத் தொழிலென்ன தான் ... . *

அதுகேட்டிமனந்துணிந்து போயினள். அக்குழந்தையைத் தனக்குப் பிள்ளையில்லாத பாப்பையனென்னும் ஒருபிராமணனெடுத்து வளர்த்து ஏழுவயதில் உபநயனஞ்செய்யத் தொடங்குகையில், பிராமணர்கள் ஒத்துக்கொள்ள மாட்டோமென்றுசொல்ல, அதைக்கண்ட கபிலர் அவர்களைப்பார்த்து நான்மூகத்தோனென்றோர் அகவல்சொல்லிக் கர்மத்தினுல்சாதியன்றிச் சென்மத்தால் இல்லையென்று சாதிக்க, அதற்குப் பிரதியுத்திரஞ்சொல்லமாட்டாமல் இதுவேவிதியென்று யாவரும் ஒத்துக்கொண்டு அச்சடங்குமுதலானவை முடித்தார்கள். அக்கபிலர் இன்னும் பாதாளவுலகத்தில் தவம்பண்ணிக்கொண்டிருக்கின்றனர்.

திருவள்ளுவர்சரித்திரம்.

(௫௬௧)

வள்ளியம்மை.

இதுநிற்க முன்புபோன அவ்விருவரும் வேளின் மலைச்சாரலில் வந்துகூட, அப்பொழுது வள்ளியம்மை பிறந்தனள். இந்தக் குழந்தையை யாவர் காப்பாற்றுவாரென்று அதை விட்டுநீங்கத் தாய்வருந்தும்போது அது சொல்லியது.

(வெண்பா.)

அன்னைவயிற்றி லருத்தி வளர்த்தவன்று .... *
னின்னும் வளர்க்கானோ வென்றாயே - மின்னரவஞ்···· *

சூடும்பெருமான் சுடுகாட்டி னின்றுவிளை ....
யாடும் பெருமா னவன்... ....,..... ....

* -

*
அதுகேட்டு மனந்துணிந்து போயினள். பின்பு அக்குழந்தையை மலைக்குறவர் வளர்த்தார்கள். அவள் மூற்பிறப்பில் யாரொன்னில் மஹாவிஷ்ணுவினால் மோகிக்கப்பட்ட விபுதையென்பவளிடத்திற் பிறந்த குமரியென்பவள் குமாரக்கடவுளைக் குறித்துத் தவஞ்செய்தபோது அவர் வரப்படி தொண்டைமண்டலத்தில் வள்ளிமலையிலிருந்தக் கடவுளுக்கு நாயகியானாள்.

திருவள்ளுவர்.

முன்புபோன அவ்விருவரும் மயிலாப்பூரில் இலுப்பைத் தோப்பிற் கூடினார்கள். அப்பொழுது திருவள்ளுவர் பிறந்தனர். இந்தக்குழந்தையை யாவர்காப்பாற்றுவாரொன்று அதைவிட்டு நீங்கத் தாய்வருந்தும்போது அதுசொல்லியது.

(வெண்பா.)

எவ்வுயிருங் காக்கவொரு வீசனுண்டோ வில்லையோ .. *
வவ்வுயிரில் யானொருவ னல்லவோ - வவ்வி .... *
யருகுவது கொண்டிங் கலைவதே னன்னே .... *
வருகுவது தானே வரும்..... .... *

அதுகண்டு மனந்துணிந்து அவ்விருவருந் தீர்த்தயாத்திரைக்குப் போயினர். பின்பு சிவாலயத்தின் அருகேயுள்ள இலுப்பைமரத்தின் கீழிருந்த குழந்தை அவ்விலுப்பைமலரிற் றுளிக்குந் தேனை யுண்டு, பூர்வம்பிர்மாவாதலால் சிகை எக்யோபவீதம்சதுர்வேத புஸ்தகமுங் கொண்டு வளர்கையில், கங்காகுல சிரேஷ்டனாகிய ஒரு வேளாளன் மனைவி புத்திரனைக்குறித்து அச்சிவாலய சந்நிதியில் தவஞ்செய்திருந்தாள். அப்பொழுது உமாதேவி அவளுடைய தவத்துக்கிரங்கி, தெய்வச்செயலாலுண்டாகிய இக்குழந்தையை நீஎடுத்துக்கொள்ளென்றருள்செய்து, திருவள்ளுவனென்று பூர்வ நாமகரணமுஞ் செய்தாள்.

அவளும் அந்தக் குழந்தையையெடுத்து மகிழ்ச்சியடைந்துகொண் டுபோய்த் தன்புருஷன்கையிற் கொடுத்தாள். அவனுந் தன் கையில் வாங்கிப் பேரானந்தம் பெற்று, அதுவந்த வரலாறுங்கேட்டு இப்படி.

யிருவரும் அந்தப்பிள்ளையை நாளொருமேனியாக வளர்க்குங்காலத்
தில், அவர்சுற்றத்தார்கள் எந்தா ஒரு பிள்ளையைவளர்க்கிறீர்களென்
று இவர்களை இகழ்ச்சிபண்ண, அதற்கு அவர்களஞ்சிப் புறத்திலுள்
ளவோர் பெருமூங்கிலே தொட்டிலிட்டு அதில் அக்குழந்தையைக்கி
டத்திப் பலவனைக்காரரைக் காவல் வைத்துவளர்த்தார்கள். பின்பு திரு
வள்ளுவரும் ஐந்துவயதானகாலத்துத் தன்பொருட்டுத் தாயுந் தகப்
பனுஞ் சுற்றத்தார்களால் நிந்தைசெய்யப்படுகிறார்களென்று அவர்க
ளைப்பார்த்து, என்னால் உங்களுக்கு வருத்தம் வேண்டுவதில்லை நான்
வேறிடத்தி லிருக்கின்றேன் நீங்கள் வருந்தாதிருங்களென்றுசொல்ல,
அவர்கள் ஐயோ உன்னைப் பிள்ளைகலி தீர்க்கவந்த, பெருமானென்
றெண்ணியிருந்தோமே நீ இப்படிச் சொல்லலாமாவென்ன, நாய
னார் நீங்கள் என்னை நினைக்கும்போதுவந் துங்களுக்கு வேண்டியதை
ச் செய்வேனென்று சொல்லிப் புறப்பட்டுஅவ்வூர்க்கருகே ஒருபனை
மரத்தி னிழலிலேயிருந்தார். அப்பனைமரம் தன்னடிவிட்டு நிழல்சா
யாதிருக்கக் கண்டவர்கள், இப்பிள்ளை தேவனோ முனிவனோ கடவு
ளோ இவ்வுருவோடு வந்ததென்று துதிக்க, அவர்களைப்பார்த்து,நா
யனார் இங்கே தவமேது மகிமையேது யாதொன்றும் என்னிடத்தி
லில்லை போமென்று தாம் அவ்விடத்தைவிட்டுநீங்கித்திருமூலர்-போ
கர்- முதலாகிய சித்தர்களும், மாதவர்களும்,வாசஞ்செய்கின்ற மலை
க்கெழுந்தருளித் தவஞ்செய்வார்களோடு கூடியிருந்தார். அங்கிருந்த
திருமூல ரிவரைக்கண்டு, வள்ளுவரோ பூர்வத்தில் நந்தி எனக்கனுக்கிர
கம் பண்ணும்போ தங்கே யிருந்தீரோ, உலகத்தாருக்குச் சித்திமுத்தி
யருளும்படிக்கும், அறம் பொருளின்பமென்னு முப்பாலையுந் தமி
ழில் அருளிச்செய்யும்படிக்கும் இங்குவந் தவதரித்தீரோவென்று
துதிக்க, நாயனாருமகிழ்ந்து, அங்கே தவஞ்செய்வோரில் ஒருவராயி
ருந்து சகல சாஸ்திர பண்டிதரானார். அக்காலத்தில் தொண்டைமண்
டலத்திலொருவேதாளமானது பயிர்களை அழித்தும்உயிர்களைவதை
த்தும், அனேகந் துன்பஞ்செய்துவந்தது. அப்பொழுது காவேரிப்
பாக்கமென்னும் ஓரூரில் ஆயிரம் ஏர்கொண்டுழுதுபயிர்செய்கின்ற
மார்க்கசகாயனென்னும் ஒரு வேளாளன் இந்தவேதாளத்தை அடக்
கினவருக்கு அளவற்ற திரவியமும் ஓரூரும் வேண்டியவைகளையுந்

தருகிறேமென்று பிரதிக்ஞை பண்ணினான். அது ஒருவராலும ஆகா
மலிருந்தது. பின்பு அவ்வேளாளன் திருமூலராதியர் வாசஞ்செய்யு

திருவள்ளுவர்சரித்திரம்.

(ரு - ரு)

ம் மலையிலே யிருக்கும்
பெரியோர்களை அடுத்துச்சொல்ல, ...
திருவள்ளுவரோடுசொல்லென்றார்கள். அவனை வணங்கிச்சொன்னான்
அப்போது சிவகாருணியராகிய திருவள்ளுவர் அவ்வேளாளன்வேண்
டிக்கொள்வதை நிறைவேற்றும்பொருட்டு அவ்வேதாளத்தை விபூதி

பஞ்சாக்ஷரத்தால் வென்று யாவரையும் ரக்ஷித்தார். பின்பு அவ்வே
ளாளன் ஒன்றும் அளவற்ற திரவியமுமல்லாமலும் நாயனார் யோக்கி
யத்தையும் மகத்துவத்தையும் பார்த்து, வாசுகியென்னும் தன்பெ
ண்ணையுங் கொடுக்கும்படி நிச்சயித்து நாயனா ரிடத்தில்வந்து என்
பெண்ணைத் தேவரீருக்குக் கொடுக்கநினைத்திருக்கிறேன் அப்படியே
அங்கீகரிக்கவேண்டுமென்றுசொன்னான். நாயனார் உலகத்தாருக்கில்
லற நடத்திக்காட்டவேண்டுங் காரணத்தை யோசித்து, அந்தப்பெண்
நான்கொடுக்கு மணலை அன்னமாக்கி எனக்கிடுமானால், விவாகஞ்செ
ய்துகொள்வேனென்றார். அந்தப்பெண் அப்படியே சம்மதித்துச்
சமைத்துப்படைத்தனள். நாயனாரும் அங்கீகரித்து விதிப்படி வாசுகி
யை விவாகஞ்செய்து சிலநாளங்கிருந்து பின்பு மனைவியுடன் மயிலை
யில்வந்தோரில்லாசுகிக்கொண்டு இல்லறஞ்செய்து நெய்தற்றொழில்
பாபமில்லாததென்று ஏலேலசிங்கனென்னும் வர்த்தகனிடத்தில் நூல்
வாங்கி ஆடைநெய்து அக்கூலியால் ஜீவனஞ்செய்திருந்தனர். பின்
பொருகாலத்தில் திருவாலங்காட்டில் சபாநாயகர் மைடசங்காரஞ்
செய்து கெர்வித்திருந்த பத்திரகாளி கெர்வபங்கமாகப் பலவிதநட

ணஞ்செய்ய அவளுந்தோல்வியடையாமலாடிவந்தாள். பின்பஸ்வாமி குண்டலங்கழன்றதைக் காதிலேதானேசேரும்படி ஊர்த்துவடாதமாக நடனஞ்செய்தார். அவளு மப்படியாட நாணித்தோற்றாள். அப்பொழுது தேவர்கள் சுவாமி தேவரீ ரூர்த்துவதாண்டவம் பண்ணியதென்னகாரணமோ தெரியவில்லையென்றுகேட்க, நீர் திருமயிலையிலிருக்குந் திருவள்ளுவரைக் கேட்டீர்களானால் தெரியுமென்று சொல்ல, தேவர்களங்கேபோ யவரைக்கேட்க, அவர்சொல்லியது.

(வெண்பா.)

பூவிலயனும் புரந்தரனும் பூவுலகைத்.................... *
தாவியளந்தோனுந் தாமிருக்க - நாவி.............. *
விழைநங்கி நாணொருடு மேன ழயநீவேறோ.............. *
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து .... *

அதிலேதெரிந்து தங்கள் சந்தேகந்தெளிந்தார்கள். ஒருநாள் நூல்வாங்கும்பொருட்டு ஏலேலசிங்கன் வீட்டுக்குப்போய் செட்டியார் எங்கேயென்றுகேட்க, அவர் சிவபூசைசெய்கிறாரென்றார்கள் அவர் சிவபூசை இங்குசெய்கிறாரோ குப்பத்திற் செய்கிறாரோ வென்ன,

அப்பது அவர்பத்தினி உள்ளேபோய் அவருக்குச்சொல்ல, அவர்கேட்டுச் சிவபூசையைவிட்டுத் திடுக்கிட்டோடிவந்து நாயனாருடைய உபயபாதங்களில் வணங்கி ஸ்வாமீ என்னைப் பந்தசாகரததினின்று மெடுத்துக் கரையேற்றவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, நாயனார் அவரதுபக்குவத்தையும் இன்னுஞ்சில மாணாக்கர் பக்குவத்தையும் சோதிக்கவெண்ணி, ஒருநாள் அவர்களை யழைத்துக்கொண்டு ஒருவனத்திற்சென்று அங்கு வெள்ளம்பெருகிவரச்செய்தனர்.' அவர்கள் பயந்து மனோதிடமின்றி யிக்கரையிலிருந்துடன்போகமாட்டாமல் விழிக்க, ஏலேலசிங்கர்மாத்திரம் தம்மைத்தொடர்ந்துவர, அவ்வெள்ளம் வழிவிட்டது. பின்பு உயர்ந்த ஒருமரத்தினுனியி லேறென்று சொல்ல, ஏலேலசிங்கரேறினர். பின்பு பிடித்தகொம்பையும் நின்றகொம்பையும் விட்டுவிடென்றருள, யோசியாமல விட்டனர். விட்டும் ஒரு அபாயமில்லாதிருந்த ஏலேலசிங்கரைத் தமது மடியின்மேல்வைத்து ஞானோபதேசம்பண்ணி எப்படிப்பட்ட சௌந்தரியமுள்ள மங்கையர்கள் மயக்கினுமயங்காத திடசித்தத்தையும் அனுக்கிர

கித்தார். பின்பு தம்மிடத்துக்குவந்துவிட்டார்கள். அப்படி யிருக்கு நாளில், அந்நாட்டுக்கரசனாகிய அச்சுதராசன் ஒருநாள் ஏலேலசிங்க ரோடு பேசிக்கொண்டிருக்கும்போது உமக்குப் புத்திரப்பேறில்லை யே உம்முடைய ஞானாசிரியரை அப்பேறுண்டாகக்கேட்கலாகாதா மென்ன, அவர் நலமென்றுபோய் மற்றொருநாள் நாயனாரைக்க ண்டு விண்ணப்பஞ்செய்ய, அவர் ஸ்வாமிகடாக்ஷப்பாமென்று அனு க்கிரகம் பண்ணினார். பின்பு ஒருநாள் பரமசிவமே சிறுகுழவியாய் ஏலேலசிங்கரும் அவர்மனைவியும் நித்தியந்தரிசிக்குப்பசுவின்வாலின் புறத்திற்கிடந் தழுவதைக்கண்டு அவ்விருவரும் இக்குழந்தையை எதெனவெடுத்தார்கள். உடனே அந்த அம்மாள் ஸ்தனங்களிலே பா ல்சுரந்துபெருக, அக்குழந்தைக்குப் பால்கொடுத்து ஞானகுருவா கிய நாயனார் சந்நிதானத்திற் கொண்டுபோனார்கள். அவர் அக்குழ ந்தைக்கு அழகானந்தனென நாமகரணம்பண்ணினார். உடனேஏலே லசிங்கர் அச்சுதராசனென்னும் அரசனிடத்திற் சென்று எனக்குத் தைவிகத்தினால் குழந்தையுண்டாயிற்றென்றுசொல்ல, அவன் அப் படி தைவிகமானால் என்னிடத்திலும் அது வரலாமேயென்றான். அவ்விருவரும் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது அக்குழ ந்தை அரசனது மடியில்வந்திருந்தது.

அதை அவன் கண்டு இது அழகானந்தமோவென்று ஆனந்த மடைந்து அணைத்துக்கொண்டு தன்மனைவிகையிற்கொடுக்க அவள் வாங்கினவுடனே ஸ்தனங்களினின்றுபால்பெருக,அதனைக்குழந்தை

திருவள்ளுவர்சரித்திரம்.

(௩௬௫)

க்குப் புகட்டினாள். இப்படி யற்புதமாய்வளர்ந்து பின்பு அனேகருக்கு ஞானோபதேசஞ்செய்து மகிமையோடுமிருந்தனர். மற்றொரு தினத்தில் ஏலேலசிங்கரது கப்பல் கரைதட்டிப்போக அதைக் கேள்விப்பட்டு அவர்தம்மரசனுடனேசொல்ல, அவன் நம்மாலாவதென்ன உம்முடைய ஆசாரியருடனே சொல்லுமென்ன, அவர்போய் விண்ணப்பம்பண்ணிக்கொள்வதற்குமுன்னமே நாயனாரறிந்து ஏலேலசிங்கரை அழைப்பித்துக் கூட்டிக்கொண்டுபோய்க் கட்டிலிற் கயிறுபூட்டி அனேகம்பட்வுகாரரிழுத்திழுத்தெவ்வளவும் அசையாமற்பதிந்திருப்பதனால் அவர்களெல்லாஞ்சோர்ந்து கிடப்பதைக்கண்டு, நாயனார் அதனருகிற்சென்று தமது திருக்கையாற்றொட்டு ஏலேலையாவென்றிழுங்களென்று கட்டளையிட, அப்படியேயிழுத்தார்கள். உடனேநிற்கவேண்டியபடி கப்பல் நின்றது.

பின்பொருகாலம் மழையில்லாமையால்உலகத்திற்றானியங்கொள்ளக்கிடையாமல்அனேகரிறந்துபோவதைக்கண்டு நாயனார்தமக்குஅளக்கின்புள்ளமாணாக்கனாகியஏலேலசிங்கரைப்பார்த்து,நீர்இந்தப்பஞ்சகாலமாறுகிறவரைக்கும் வாங்கிக் கட்டிவைத்திருக்கிற நெல்லையெல்லாம் வாங்கினவிலைக்கு குறுணியேற்றமாக விற்கக் கடவையென்றருள, அவரது சொல்லை ஆகமமாகக்கொண்டு விற்றார். பொருள் அபிவிர்த்தியாய் மலைபோலுங்குவிந்தன அவர்கட்டிவைத்திருந்தநெல்லு எழுவருஷங்குறைந்ததில்லை. பின்பு மழைபெய்து உலகம் க்ஷேமமடைந்தது. மறுபடி யவலாயமழைத்துக் குறுணிகுறையவில்லென்றார். அப்படியேவிற்றார். அவரிடத்திருந்தநெல்லெல்லாம்மறுநாள்அஸ்தமயத்துக்குள்ளே செலவாய்ப்போய்விட்டன. பின்புநாயனார் நீர் நெல்லுவிற்று விர்த்தியான பொருளையெல்லாம் உருக்கித்திரட்டிக் கடலிற்போட்டுவிடுமென, அவர்அப்படியேசெய்தார்.அதையொரு பெருமீன் விழுங்கிற்று. சிலநாளைக்குப்பின்பு அம்மீன் வலைக்காரர் கையிலகப்பட்டது. அதனை அவர்கள் சேதிக்கும்போது அதன்வயிற்றில் மலினமும் பாசியும்படிந்ததொரு ஸ்தம்பமிருக்கஅதனைஏலேலசிங்கருக்குக் கொடுத்தார்கள் அவர் கருங்கல்லென்றெண்ணிஸ்நானம்பண்ணுமிடத்திற் போடுவித்தார். அதன்மேல் நடத்தல்முதலியபயிற்சியால் மலினநீங்கிப்பிரகாசிக்க. அதில் தமதுபேர்மெட்டும.

யிருத்தலால் திம்பொருளென்றறிந்து, குருவருளென்று அற்புத மடைந்தார். இப்படி யிருக்குங்காலத்தில் அளவில்லாத மகிமை செய்து லோகப்ரசித்தமாயிருக்கிறவரும் ஏலேலசிங்கருடையபுத்திர நிர்பாக்கியத்தை நீக்கினவருமாகிய அழகானந்தரும் சிலபெரியோர்களும் திருவள்ளுவரைப்பார்த்துக் கற்றற்கெளிதாய்

இம்மையாதி மூ (ருசு)

திருவள்ளுவர்சரித்திரம்.

ம்மைக்கு மூலவியாய் லோகோபகாரமாய் உமதுபெயரால்ஒருநூல்செய்யவேண்டுமென்று சொல்ல- நாயனார் வேதாகம சாஸ்திரங்களைத்திரட்டி - அறம்- பொருள்-இன்பமென முப்பாலாக்கி, ஆகாய

குறள் வெண்பாவாற்

யியற்றினர் நாயனாரோ!

பாடியருளினர். பின்பு அழகானந்தர் முதலா

இருக்கிகொண்டு சங்கத்தாரைச் செயிக்கலாம்

போமென்ன, அப்போதே நாயனார் புறப்பட்டுத் தமதுமனைவியை இல்லின்கணிருத்தித் தாம்வழிக்கொண்டுநடந்து இடைக்காட்டர் வசிக்கி

ற இடைக்கழிநாட்டை

அணுகச்சேர்கையில், ஒளவைநேர்பட- அவ

ரோடும் இடைக்காடரைக்கண்டு

தாம்செல்லும்வகையைச்சொல்ல,

இடைக்காடரும் நாயனாரை நோக்கி இடையானுங்கடையானு மழிய
க்கடவதென்று ஸ்வாமி தம்மைநிராகரித்த நக்கீரராதி சங்கத்தாரை
ச்சபித்திருக்கிறார். ஆதலால் என்றும் முப்பாலு மழிவுபடப்போகி
றதாகையால், நாமும் வருகிறோம் வாருமென்று இடைக்காடரும்
ஔவையுங் கூடவரப்பெற்று மதுரையையடைந்து சொக்கலிங்கஸ்
வாமியினுடைய ஆலயத்தைப்பிரதக்ஷணம்பண்ணி, ஸ்வாமியையும்
அம்மனையும் தரிசனஞ்செய்து. ஸ்வாமி
சந்நிதானத்தில் பாண்டிய
ராசா மந்திரிபிரதானிகள்மற்றச்சனங்கள் ஔவைஇடைக்காடர்முத
லானபெரியோர்களிருந்துகேட்கும்படிதாமருளிச்செய்த திருக்குற
ள் முப்பாலையும் சங்கத்தார்நெஞ்சிற் றிகிலேறவும்,ஏனையர்நெஞ்சிற்
களிப்பேறவும், அரங்கேற்றிமுடித்தனர். அதனைக்கேட்டோர்களியா
வரும் மிகுந்த சந்தோஷமடைந்து ஆனந்தமாகி, நாயனாரைப்புக
ழ்ந்து [illegible]னர்.

பின்பு நாயனார் இடைக்காடரும் ஔவையும் மற்றவர்களுஞ்சூ
ழ்ந்துவரப் பொற்றாமரைத் தீர்த்தத்தின் கணுள்ள சங்கப்பலகையின்
க[illegible] [illegible]க் கரசராகவீற்றிருக்கின்றவர்களும் தவத்திலும் ஞானத்
தி[illegible]லுஞ் செந்தமிழ்வாக்கிலும் அமைந்த பெரியோராகிய திருவாதவூர
[illegible]ரும் மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த திருக்கோவை
[illegible] நானூற்றுக்கும் நூறுகுற்றங் கூறினவர்களும், சொக்கலிங்கஸ்
[illegible] தமதன்பனாகிய தருமியென்னும் பிராமணனுக்குப் பொற்கி
ழி கொடுத்தற்பொருட்டு அருளிச்செய்த, கொங்குதேரென்னும்பா
டலிற் குற்றங் கூறச் சோமசுந்தரனே வித்வானு
வெழுந்தருளிவர,
நெற்றிக்கண்காட்டினுங் குற்றங்குற்றமேயென்று கூறினவர்களும்,
மற்றப் புலவர்கள்பாடிய பாடலையெல்லாங் கொள்ளையிட்டு, அகஸ்
தியனையும் வெற்றிகொள்ளாநிற்க

விலக்கணவிலக்கியவாராய்ச்சியுள் ளவர்களுமாகிய
நக்கீராதிப் புலவர்களுடைய தைரியமும் தருக்கு
ம் புத்தியுங்கலங்கிச் சோ ர்வடையும்படி
ஆட்டுக்கூட்டத்தில் புலிபகு

திருவள்ளுவர்சரித்திரம்.

(ரு௱எ)

ந்தாற்போலும், அராக்கூட்டத்தில் கருடனடைந்தாற்போலும், யா
னைக்கூட்டத்தில் சிங்கவேறு சென்றாற்போலும்- மூங்கில வனத்திற்

தீப்பற்றியதுபோலவும், அவர்களிடத்திற்சென்று அவர்கள் தம்மை!
விலைவின அசதிவினாவிற்கெல்லாஞ் செந்தமிழ்ப்பாவாலுத்தரங்கொ
டுத்தார்.

பின்பு சங்கத்தார் நாயனாரைநோக்கி வள்ளுவரே! நீர்பாடிய குற
ளை நாங்களொப்புக்கொள்வதற்கு ஐயமொன்றுளது. அஃதியாதெ
னின், நாங்களிருக்குமிந்தப்பலகை தெள்ளியசெந்தமிழ் நூலிற்கண்
டாலிடங்கொடுக்குமாதலால் அது ஒப்புக்கொள்ளுமாகில் எங்களுக்
கெல்லாஞ்சம்மதியென்றுசொல்ல, அவ்வாறே நாயனார்தம்மாலரு
ளிச்செய்யப்பட்ட திருக்குறள்முறையை அச்சங்கப்பலகைமீதுவை
த்தார். உடனே அப்பலகை தன்னிடத்திருந்த சங்கத்தார்யாவரும்
பொற்றாமரையில் விழும்படி தெய்வத்தன்மைபொருந்திய திருக்கு
றட்புத்தகத்தினளவாய்ச்சுருங்கி, அதற்குமாத்திர மிடங்கொடுக்கக்க
ண்டவர்கள் யாவருங் களிகூர்ந்தனர். அவருட்சிலர் இதுதைவீகமாகி
ய வேதமென்றுஞ், சிலர் அங்கங்களென்றுஞ், சிலர் ஞானநூலென்
றுஞ், சிலர் ஆகமமென்றுஞ், சிலர் புராணங்களென்றுஞ் சிலர் வாலி
பர் மதனாகமமென்றுந் தந்தமக்குத்தோன்றியவாறே சொல்லிதுதி
த்தனர். அன்றியும், அநேக விசேஷமான தெலுங்காதி சாஸ்திரங்
களும், கிரந்தமுதலான பாஷைகளிலிருக்கின்ற பலநூல்களும், இத்
திருக்குறளினது பாயிரத்தி லோர்பாடலின் பொருளுக்கு மொவ்வா
தென்றும், இதுவே வித்வான்களுடையபாக்கியமென்றும், இந்தப்
பயன் அநேகமாயிரம் அகஸ்தியர்கள் ஒருருவாகிவந்து பாடப்பட்ட
தோவென்றும், பலவித இலக்கண இலக்கியங்கட்கும் இஃதங்கத்தை
யொக்குமென்றும், விஷ்ணுவானவ ரிவ்வுலகை யிரண்டடியா லளந்
தார். இது எல்லாருளத்தையு மீரடியாலளந்ததென்றும், இதுசட்ச
மயத்துக்கும்பொது நூலென்றும், உட்சமயத்துக்கேயுரிய நூலென்
றும், இப்படிக்கல்விமான்களும் அரசர்களும் மற்றவரும் கொண்டா
டித் துதிக்கும்போது பொற்றாமரையில் விழுந்து தடுமாறி வருந்தி
யபுலவர் நாற்பத்தொன்பதின்மரும் மிகக்கலங்கிக்கரையேறிநாயனா
ரையும் திருக்குறளையும் புகழ்ந்து துதித்துநாற்பத்தொன்பதின்மரு
ம் நாற்பத்தொன்பதுபாடல அருளிசசெய்தனர். அஃதுதிருவள்ளு
வமாலையெனப்பெயர்பெறலும்.

அச்சங்கத்தாரும் உக்கிரப் பெருவழுதியென்னும் பாண்டியன் முதலானவர்களும் அத்யந்தம் ஆனந்தமடைந்து வெகுபூசிதம்பண்ணி இந்நூலை அகஸ்தியரும் ஒப்புக்கொளவில் நல்லதென்னவிடைபெ

(ருகூஅ) திருவள்ளுவர்சரித்திரம்,

ற்றுப் பொதியமலைக்குப்போய் அகஸ்தியர் முதலானவர்களைக்கண்டு தாஞ்செய்த நூலைக்காண்பிக்க, அவர்கள் அடைந்தசந்தோஷத்தையும் புகழ்ந்தபாடலையும் அனந்தநாளுஞ்சொல்லமுடியாது. அவ்விட த்தில் கொங்கணசித்தர்வழிபட, அவருக்கனுக்கிரகித்து நாயனர் அவர்களிடத்தில் உத்தரவுபெற்றுத் தாம் முன்புபோம்போது வழியினேர்படாத ஸ்தலங்களையெல்லாந் தரிசனம்பண்ணிக்கொண்டு, திரு

மயிலைக்குச் சமீபமாகவருவதை ள்விப்பட்டு எதிர்கொண்டுபோய்

அப்பதியாரும் ஏலேலசிங்கருங்கே அழைத்துவந்தார்கள். அவரும்வந்

து தமதில்லறத்தில் வாசுகிமாதினேடு மிருந்தார்.

இப்படி இருக்கையில், ஒருபெரியவர் அவரில்லின்கட்சென்று ஸ்வாமீ இல்லறம்பெரிதோ துறவறம்பெரிதோ அடியேனுக்கனுக்கி

ரகிக்க வேண்டுமென்று பலநாள்பணிசெய்து காத்திருக்க, நாயனார் அவருக் குத்தரமொன்றுஞ்சொல்லாமல் அவரே அறிந்துபோகும் படி ஒருநாள் தமதுவாசுகியென்னும் மனையாள் கிணற்றில் சலந்தூக்கிக்கொண்டிருக்கையில் அழைக்க, அந்தம்மாள் பாதிகிணற்றளவினில் தூக்கினகுடத்தை அப்படியே நிற்கவிட்டுவந்ததையும், மற்றொருநாள் அந்தம்மாள் நாயனாருக்குப் பழையது பரிமாறிநிற்கையில் நாயனாரெனக்கிச்சாதஞ் சுடுகின்றதென, அந்தம்மாள் சீக்கிரம் விசிறிகொண்டு விசிறியதையு, மற்றொருநாள் நல்லமத்தியானத்தில் சிறிது மிருளணுகாவிடத்தில் தாம்நெய்யும்போது கையிலிருந்த குழல் தவறிவீழ்ந்ததையெடுக்க மனையாளைநோக்கித்தீபங்கொண்டுவாவெனக் கொண்டுவந்ததையும், வந்திருந்தவர்கண்டு இப்படிப்பட்டமனையாள் வாய்க்கில் இல்லறம்பெரிதென்றும், இல்லையேல் துறவறமே பெரிதென்றுமெண்ணிக்கொண்டு,ஒன்றுங்கேளாமற் போய்விட்டார்

இப்படி நாயனாருந் திருமனைவியும் இல்லறநடத்தி வருங்காலத் தில் வாசுகியம்மாள் மோக்ஷமடையும்போது நாயனார்திருமுகத்தைப்பார்க்க, நாயனாரும் என்னென்றார்.என்னைமணஞ்செய்வன்றுதேவரீருக்கு யானன்னம்பரிமாறும்போது ஒருசிறுபாத்திரத்திற் சலமும் ஊசியும் வையெனக்கட்டளையிட்ட தின்னகாரணமெனத் தெரியவில்லையென்று விண்ணப்பஞ்செய்ய, அதற்குநாயனார் அன்னம்புறத்திற் சிதறில் எடுத்துப் பரிசுத்தஞ்செய்வதற் கென்றுசொல்ல உடனேமோக்ஷமடைந்தனள்.

அப்போது நாயனார் சொல்லியது.

(வெண்பா.)

அடிசிற் கினியாளே யன்புடை யாளே.......................*

படிசொற் றவரூத பாவி -
யடிவருடிப் ....*

பின்றூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ.....*
வென்றூங்கு மென்கணிரா ....*

என்றருளி அந்த அம்மாள் திருமேனியைச் சமாதி பண்ணினார். நாயனார் பின்னும் அநேகநாளிருந்து அநேக மகிமைகள்செய்து ஏலேலசிங்கர் முதலாகிய சிஷர்களுக்குப் பூரண அனுக்கிரகம்பண்ணிப் பின்பு ஏலேலசிங்கரையழைத்து, நமக்குப் பரிபூரணதிசைநேரிட்டிருக்கின்றதால், நாம்பரிபூரணமானபின்பு நமதுதேகத்தைப் புரிகட்டிஇழுத்து ஊர்க்குப்புறத்தில்புதரிற்போட்டுவிடுமென்றனுக்கிரகஞ்செய்து நிஷ்டைகூடிப்பரிபூரணமானவர்போலிருக்கக்கண்டு ஏலேலசிங்கர் பொற்பெட்டியில் வைத்தடக்கம்பண்ண வெத்தனித்ததை அறிந்துடனே நாயனார் விழித்துப்பார்த்து, அப்பா நான்சொன்னசொல்லைக் கடவாதையென்று அனுக்கிரகித்து உடனேபரிபூரணமானார். ஏலேலசிங்கரும் நாயனார்கட்டளைப்படி செய்யுமளவில், திருமேனியிற்சிதறிய தசைகளைக் காகமுதலானதுகளருந்திப் பொன்மயமானதைக்கண்டு பெரிதான ஆச்சரியமடைந்து அவர்திருமேனியிருந்தவிடத் தாலயமெடுப்பித்துப் பூசித்துவந்தார்கள்.

திருவள்ளுவநாயனார்சரித்திர முற்றிற்று.

மேற்படிசரித்திரத்தினுட்பட்டபாட்டுக்கள்சொக்கநாதர் தருமியென்னும் பிராமணனுக்கு அருளிச்செய்தது.

(திருமுகப்பாசுரம்- அகவல்.)

கொங்குதேர்வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி - காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ- பயிலியதுகெழீஇய்நட்பின்- மயிலியற்செறி

யெயிற் றருவைகூந்தலி- னறியவுமுளவோநீயறியும்பூவே. *

சொக்கநாதர்-நக்கீரனைப்பார்த்துச்சொல்லியது-வெண்பா.

அங்கங் குலைய வரிவாளி னெய்பூசிப் ... . *
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச் - சங்கதனைக் ... *
கீர்கீ ரெனவறுக்குங் கீரனோ வென்கவிதை .... *
யாராயு முள்ளத் தவன் .... *

சொக்கநாதரைப்பார்த்து - நக்கீரர்சொல்லியது - வெண்பா.

சங்கறுப்ப தெங்கள் குலஞ் சங்கரனார்க் கேது குலம் *
பங்கமறச் சொன்னால் பழுதாமே- சங்கை .... *
யரிந்துண்டு வாழ்வோ மரனேநின்போல..... .... *
விரந்துண்டு வாழ்வ திலை........ ....

[எஉ]

.... *

(ருஎ௨) திருவள்ளுவர்சரித்திரம்.

சங்கத்தாரை வெல்லவேண்டி ஔவைஞானக்குறியாற்கைசைகைகள் பண்ணி இவையென்னென்றுகேட்கச் சங்கத்தார் சொல்லியது.

(வெண்பா.)

இவ்வளவு கண்ணிறு ளிவ்வளவு சிற்றிடையா ....*
ளிவ்வளவுபோன்ற விளமுலையா- ளிவ்வளவாய்க் .... *

காமத்தலைவனையுங் காணாது கலிநீறு ....
.... *

ஞமத்தை காட்டுகுறி நன்கு

.... *

இஃது தகுதியான

உத்தரவன்றென்று

அக்குறிகளுக்கு

மாவைசொல்லியது.

(வெண்பா.)

ஐய மிடுமி னறநெறியைக் கைப்பிடுமி

.... *

னிவ்வளவே னும்மனத்தை யிட்டமின் -

றெய்வ ... *

மொருவனே யென்ன வுணர வல்லீரோ ....

.. .. *

லருவினைக ளைந்து மறும் ....

.... *

இப்படியென்று ஔவைசொல்லச் சங்கத்தார் நாணமுற்று இவளை வெல்லப்படாதென்று திருவள்ளுவரைப் பார்த்து நீ ரொந்தலூ ரொன்ற தற்கு அவர் சொல்லியது - வெண்பா.

எந்தலூ ரொன்றீ ரிருந்தலூர் நீர்கேளீ .... *
ரந்தலூர்செய்தி யறியீரோ- வந்தலூர் ....*
முப்பாழும் பாழாய் முடிவிலொருசூனியமா............ .*
யப்பாலும் பாழா யறும்.... ....

.... *

என்றிதுமுதலான ஞானார்த்தமான செய்யுட்களா லவர் வினவியவை களுக் கெல்லாம் உத்தரவு சொல்ல, இவரையும் வெல்வ தரிதென்று இடைக்காடருடனேபேசஅவரருளியது-வெண்பா.

ஆற்றங் கரையி னருகிருந்த மாமரத்திற்.......... ....
சாக்கை யிருந்து கஃகஃகெனக் - காக்கைதனை ....

*

*

யெய்யக்கோ வில்லாம லிச்சிச்
செனவெய்தான்.. —.... *
வையக் கோனூர்தன் மகன் ... .
....*

இதுபோன்றஅநேகஞ்செய்யுட்களை
அவர்களாலெழுதப்படாமலும்
கற்றுக்கொள்ளப்படாமலுஞ்
சொல்லநாணித் தோற்
படைந்தார்கள்

பா லி ய ல தி
காரவகராதிகள்.

இத்திருக்குறளுக்குத் திருவள்ளுவமாலையேசிறப்புப்பாயிரமா தலின் - ஆக்கியோன்பெயரே வழியேயெல்லை நூற்பெயர் யாப்பே நுதலியபொருளே கேட்போர்பயனோடா யெண்பொருளும் வாய்ப் பக்காட்டல் பாயிரத்தியல்பே. காலங்களனே காரணமென் றிம் மூவகையேற்றி மொழிநருமுளரே. என்றுகூறப்பட்ட ஆக்கியோன்பெயர் முதலியனவெல்லாம் அப்பாயிரத்திற்காண்க,

இந்நூலுரைவாசகங்கள் கற்றோர் மற்றோர் யாவர்க்கும் பொதுப்படப் பயன்படுதற் பொருட்டுப் பெரும்பாலும் புணர்ச்சிவிகாரங்களை நீக்கிப் பதம்பதமாகப் பிரித்துக் காட்டப்பட்டன. தெளிவுக்காக ஓரோவிடத்து வடசொற்களுக்கு, வடசிறப்பெழுத்துக்களும் கூட்டப்பட்டன.

இந்நூலுரையிலே வைக்கப்பட்ட குறிகள்.

ஃ இச்சிறுகீற்றுப் பதத்துக்குப்பின்னும்.

— இப்பெருங்கீற்று அதனுரைக்குப்பின்னும்.

() இவ்விருதலைப்பிறை-வருவிக்கப்பட்டசொற்களுக்கும்- கருத்துக்
!இவ்வம்பு- வினைமுதலுக்குப்பின்னும். [கும்

3 இப்புட்சிறை-செயப்படுபொருளுக்குப்பின்னும்.

. இக்குத்து- தோற்றச்சொல்லுக்குப்பின்னும்.

✲ இவ்வுரு பதவுரைக்கும் விசேஷவுரைக்கும் இடையிலும்.

[] இவ்விருதலைப்பக்ரம்- கருத்துரையினிருபுறத்தும்.

, இம்மூளை- கூட்டிச்சொன்முதலியவற்றின்பின்னும். [பட்டன.
† இப்புள்ளடி முதலியன அடியிற்காட்டப்பட்டவற்றிற்கும்வைக்கப்

இந்நூலாசிரியர்வணக்கம்

சீர்கொள்சிரமேற்சிகழிகைசேர்தெய்வப்புலவன்கழல்சரணந் *
திரிபுண்டரஞ்சார்ந்திலகுநுதற்சென்னப்போதன்கழல்சரணந் *
திகழுவடிந்ததிருச்செவியெந்தேவன்கமலக்கழல்சரணஞ் *
சிறந்தமுகத்திலருணோக்கஞ்செய்வோன்செம்பொற்கழல்சரணந் *
தார்கொளுநல்லைமகிழ்விக்குந்தாடியழகன்றாள்சரணஞ் *
சாத்தப்பெறுமுத்திரைக்கைத்தருமக்கடலான்றாள்சரணந் *
தரித்தசெபமாலிகையாலெல்லனைக்கின்பளித்தோன்றாள்சரணஞ் *
சங்கப்புலவர்தலைக்கணிப்பாந் தமிழ்வேதத்தோன்றாள்சரணம் [ணம்
பேர்கொள்யோகப்பட்டிகைத்தோள்பிறங்கும்பெரியோன்பதஞ்ச
பேசுமறைக்கோவணக்கீளெம்பெருமானருமைப்பதஞ்சரணம்
பெற்றகமலத்தவிசமர்ந்தபிரமஞானன்பதஞ்சரணம்
பேதாபேதங்கடந்தென்றும்பிறவாநெறியுன்பதஞ்சரணம்
தேர்கொள்வீதித்திருமயிலைச்சீவன்முத்தனடிசரணஞ்
செப்புமவாநந்தமெனுந்தேனீந்தருள்வோனடிசரணஞ்
சித்தைத்தரிசித்திடக்காட்டுஞ்சிவதேசிகன்றனடிசரணந்
திருவள்ளுவனென்றொருநாமதேயனருட்சேவடிசரணம்

ஆசிரியர்திருநாமங்கள் ௯	நூலின்றிருநாமங்கள் ௯
திருவள்ளுவர் .... *	திருக்குறள் .... *
நாயனார் .... *	முப்பானூல் .... *
தேவர் .... *	உத்தரவேதம் .... *
முதற்பாவலர் .... *	தெய்வநூல் .... *
தெய்வப்புலவர் .... *	திருவள்ளுவர் .... *
நான்முகனார் .... *	பொய்யாமொழி .... *
மாதானுபங்கி .... *	வாயுறைவாழ்த்து ....
செந்நாப்போதார் .... *	தமிழ்மறை ....
பெருநாவலர் .... *	பொதுமறை ....